Koviloor Digital Library

இராமாயண வெண்பா



AC.NO: 1235
R65.9

Koviloor Digital Library

Koviloor Digital Library

அண்ணாமலையார் துணை.

இராமாயண வெண்பா

இஃது

கோட்டையூர்

பிரம்மஸ்ரீ மீனாக்ஷி சுந்தரமய்யர் அவர்கள் புத்திரன்

வித்வான் சுப்ரமண்ய ஐயரவர்களால்

பாடப்பெற்று

ஸ்ரீமான் க. வீ. அள. ராம. முத்தைய்யா செட்டியார்

அவர்கள் குமாரன்

ஸ்ரீமான் ராமநாதன் செட்டியார்

அவர்கள் பொருளுதவியினால்

நூலாசிரியர் முதன்மாணாக்கர்

ஸ்ரீ வெங்கட்டராம ஐயரால்

பிரசுரிக்கப்பட்டது.

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

காபிரைட் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது.

Koviloor Digital Library

சென்னை
ஹிந்தி பிரச்சார் அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.
1930

Koviloor Digital Library

18-5

முகவுரை.

பூவுலகத்தில் அநேக தலங்களுக்குள் இப் பரதகண்டத்தில்தான் வேதசாஸ்திர புராண விதிகா சாதிகளுடைய ஆராச்சியும் வர்ணுச்சிரம தன்மங்களும் மற்ற நலன்களும் தொன்றுதொட்டு நடந்து வருவது ஆஸ்திக மகான்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே, ஆகையால் எந்தப் பாஷையிலும் படித்திருக்கும் வித்வான்கள் செய்வது சப்த கீர்த்திகளிலும் முதன்மை பெற்றது பிரபந்த நிர்மாணம் என்றதினுலும், அதுவும் படிப்புடன் வாக்குதவி யுள்ளவர்களே பாடவேண்டிய தாகையாலும், இந்நூலாசிரியர் ஆதி தொடங்கிப் படிப்பின் யேற்றமுள்ளவராய் தமிழ் பாஷையிலே அதிக சிரத்தையுடையவராய் ஸ்ரீ விஷ்ணுபுராணம் நேர் தமிழ் மொழியில் தர்ச்சமமாய் பாடியவரும் இலக்கண விலக்கியக் கடலாகவுமுள்ள ஸ்ரீ சாமிக் குட்டிராய ரவர்களென்ற சுப்பராயரவர்களிடத்திலும் அவர்கள் சகோதரர் கல்வித்திறத்திற் சிறந்த ஸ்ரீமான் வீம கவியவர்களிடத்திலும் முறையாகப் படித்து நல்ல வாக்குடையவர்களாய் சுத்தமாதி குணங்கள் நிறைந்தவராக விளங்கி வருவதால் இகபர சாதனத்தைக் கருதி ஏதேனும் ஒரு நூல் செய்ய வேண்டுமென்று கவனித்து எல்லா நூல்களினும் சிறந்தவை இதிகாசங்களே, அதினும் ஸ்ரீ இராமாயண மிகவும் சிறந்தது புருஷார்த் தங்களையும் அடையலாம். முன்னும் அநேக முனிபுங்கவர்களும் அனேக வித்வான்களும் எந்தப் பாஷைகளினும் முறையாகப் பாடிக்கொண்டு வருகிறுர்கள் அதுவே மிகவும் சிறந்தது என்று தெரிந்தவராயும் மகாகவி கம்பரால் தமிழில் செய்யப்பெற்று கம்பராமாயணமென்று சிறப்புப் பேர்பெற்றிருக்கும் செய்யுளை குருமொழியாகப் பாடங்கேட்டுத் தேர்ச்சியுள்ளவராகையால் நாமும் இந்த ராமாயணமே செய்யவேண்டுமென்றும் அதிலும் மற்றெவர்களுடைய கருத்துமின்றி கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பன் சொல்லிய வழியே நாம் செய்ய வேண்டுமென்று துணிவுடையவராய் கம்ப கவி விருத்தப் பாவானபடியால் நாம் வெண்பா

Koviloor Digital Library

வாகப் பாட வேண்டுமென்று உத்தேசித்து கடவுளை பிரார்த்தித்துக்கொண்டு பெரும்பாலும் நேரிசையும் இன்னிசையுமாகவே ஆறு காண்டங்களும் செய்யுள்களினால் பாடி முடித்தார். இத்தகைய பெரு நூலைப் பாடிமுடித்து அச்சியற்றி மகான்களுக்கு கொடுத்துப் பெருமை யடைவதற்குத் தகுந்த பொருளுதவி வேண்டுமென்று கருதி எந்நாட்டினும் சிறந்த பாண்டிநாட்டில் தலைமைபெற்ற நகரங்களின் முதன்மை பெற்றதாய், சகல அயிசுவரியங்களுக்கும் ஆகாமாய் சகல தன்மங்களும் நிறைந்ததாய் தான் வசிக்கும் நகரமேயாகிய புகழ் பெற்ற கோட்டையூரென்னும் திருநகர் கண் சகல தன்மங்களையும் பரிபாலனஞ் செய்யும் மகுட தனவசியர் குலத்தில் சிறந்தவரும், உத்தம தர்மங்களைச் சிரத்தையுடன் செய்பவரும், மிகுந்த திரவிய சம்பன்னரும் சுமுக வதனரும் மாதுரியமான மிருது பாஷியரும், சத்ய வாசகரும் உலகின் பொதுமைபெற்ற கோபத்தைச் செயித்த சாந்த குணசீலரும் ஸ்ரீ மாத்தூர் ஐஞ்ஞூத்தீசர் சரண கோத்திர வுற்பன்னரும் திருவண்ணாமலை யென்ற உத்தம க்ஷேத்திரத்திற் பல தன்ம பரிபாலனரும் நல்ல இல்லறத்தை யுடையவரும் மிக நயப்புள்ள க. வீ. அள.ராம. மு.என்ற பெரிய விலாச முள்ளவரும் ஸ்ரீமான் பெரிய வள்ளலாகிய முத்தையா செட்டியாரவர்கள் தபோ பலத்தினாலுதித்த வருமாகிய ஸ்ரீமான் இராமனாதச் செட்டியாரவர்களுடைய பெரும் பொருளுதவியுடன் மற்றெல்லா உதவியினாலும் இப்பெரிய இராமாயண வெண்பா பாடி அச்சியற்றி முடிந்தது. இப்பதிப்பு முதன்முறையாதலால் அச்சுப்பிழை முதலிய அனேக குற்றங்களிருப்பினும் அவைகளைப் பொருத் தருளும்படி வித்வான்களைப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன். சுபம். சுபம். சுபம்.

இந்நூலாசிரியர் முதன்மாணாக்கனும் பெருமை சிறந்த ஸ்ரீநிவாசய்யரவர்கள் புத்திரனுமாகிய

வேங்கிட்டராமய்யன்.

Koviloor Digital Library

ஸ்ரீராமஜெயம்.

சாத்துக் கவிகள்.

ஸ்ரீமத் ஸங்கீதஸாஹித்ய வித்வான் கோட்டையூர்
அண்ணஸாமி பாகவதர் அவர்கள் குமாரர்
ராமச்சந்திர சாஸ்திரிகளவர்களால்
இயற்றப்பெற்ற ஸ்துதிஶ்லோகம்

ஸுராஸுரார்சிதா பாபநாஶகாரிகா,
ஸதா ஸதாஶ்ரிதா(அ)மிதா(அ)த்யஸத்3கு3ணார்சிதா ।
தி3நே தி3நே ஶுப4ம் ஶுபா4ர்யஸாரஸாரஸத்க்ருதா, [தா ॥
ஶுப4ம் ஶுப4ங்கரோது ஸா கதா ஸூர்யவம்ஶஜ

கருத்து

தேவாசுரர்களால் மிகவும் பூஜிக்கப்பட்டதாயும், அதிக பாபத்தை நாசம் செய்கிறதாயும், யெப்பொழுதும் வித்வான்களால் ஆச்ரயிக்கப் பட்டதாயும், அளவில்லாததாயும், அதிகமான சத்குணங்களால் பூஜிக்கப்பட்டதாயும், வாசாமகோசரமாயும், சுப்பையர் என்ற ஆர்யராலே செய்யப்பட்டதாயும் இருக்கிற சூரிய வம்சத்திலுண்டான மனோக்ஞனை ஸ்ரீராமனுடைய சத்கதையானது தினந்தோரும் அதிகமான சுபத்தை செய்யட்டும்.

ஸுவஶா ஸுசந்த்3ரவல்லபா4-
ஶ்ரீராமநாமத்வதீ3ய ஹ்ருத3யகமலாஹா3 ।
ஸுஸ்வப்ந த்ருப்திதா3ந ஸதமாயா-
கோஶந்தரோது ரகு4வரமா ॥

Koviloor Digital Library

கருத்து

நல்ல பதமுள்ளதும் வித்வான்களால் ஸேவிக்கத் தகுந்ததும் சுகுணமானதும், தேன் கரும்பினுடைய கர்வத்தை போக்கடித்ததும், சுப்பய்யரால் செய்யப்பட்டதும் ஸ்ரீராம சம்மந்தமான அத்புத சரித்திரம் சந்தோஷத்தை செய்யட்டும்.

ப்ரஹ்மஸ்ரீ கோட்டையூர் கிரீச பாகவதர்
அவர்களால் இயற்றப்பெற்ற
ஸூக்திஶ்லோகம்

நம்ராபீஷ்டதாயி நாமாக்ஷரரவிகுலஸத்
ராமஸம்வ்ருத்தவ்ருத்தா,
பீயூஷாஸ்வாத்யமாதுர்யதரமதுரஸூக்தி
வ்யாஹாரஹாரா ।
வ்யாதஶ்ரீ ராமநாமப்ரஸபமுகநவஸாஹாய்யத
ஶ்லோகாநா,
ஶ்ரீஸுப்ரஹ்மண்யவித்வத்குணிக்ருதிரநவா ஸந்ததம்
ஶோபிதாம் ॥

கருத்து

வணங்கியவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்யும் நாமாக்ஷரமுடைய ராமனது கதையால் பரிசுத்தையாயும் அமிர்த தாரையைப் போல் ருஜியைத் தரும் உயர்ந்த கவிகளால் அமைக்கப் பெற்றதும் கீர்த்திவாய்ந்த லெக்ஷ்மி கடாக்ஷமுள்ள ராமனுதனென்ற தனவைசிய பிரபுவின் அதிகமான திரவிய உதவியால் பிரகாசிக்கப்பட்டதுமான, சுப்பிரமண்யரென பெயர்பெற்ற வித்வ. சிரேஷ்டரின் பிரபந்தமானது தோஷ மில்லாததாக லோகத்தில் மிகவும் விளங்கட்டும்.

Koviloor Digital Library

இந்நூலாசிரியன் வித்யாகுரு ஸ்ரீமான் பிரம்மஸ்ரீ வீம கவிராயரவர்கள் புத்திரர் வீமசேஷ கவியாரவர்கள் இயற்றியவை.

கோதிலிரா மாயணத்தைக் கோட்டையூர் சுப்ரமண்ய
வேதியனு ராய்ந்துதந்த வெண்பாவை யோதி
மனத்துளவா வைக்கின் மகிழ்ந்திடுநீ டூழி
புனத்துளவான் பாதம் புகும். (1)

புகழேந்தி நின்ற புலவர் திலகன்
புகழேந்தி வெண்பாவைப் போல மிகவழகாய்க்
கோட்டையூர் மேவும் குணநிதியாம் சுப்ரமண்யன்
நாட்டமுறச் செய்தா னயந்து. (2)

வீமகவி தன்பால் விரும்பித் தமிழ்பயின்று
தாமகவி லாசந் தழைத்தோங்கப் பூமகளார்
கோட்டையூர்ச் சுப்ரமண்யன் கூறுமிரா மாயணத்தை
வேட்டவர்தாங் கொள்வார் வியப்பு. (3)

வெண்பாவி னாலே விளங்குமிரா மாயணத்தை
நண்பா வுரைத்தருளி நன்மையுற்றான் கண்போலச்
செந்திருமா லீசன் செழித்த மனமுவந்து
வந்தருளைச் செய்ய மகிழ்ந்து. (4)

இப்புகழ்சேர் வெண்பா வியற்றியச்சி னேற்றுதற்குச் [யப்
செப்புகவின் சேர்பொருளைத் தேர்ந்தளித்தான் மைப்புயலா
போற்றுபுகழ் முத்தையா புண்ணியச்சேய் வள்ளலெனச்
சாற்றுபுகழ் ராமனு தன். (5)

Koviloor Digital Library

ஆவிடையார் கோவில் வாசி மகா காளி யேந்தல் க. சுப்பிரமணிய ஐயரியற்றியவை.

பூவிலுறை யன்னம் போறிவண்டு பூம்பொழிலார்
மாவிருளை யுண்டு மதுநுகர மாவிரும்பு
மாடஞ்சூழ் கோட்டையூர் மாதொருபாகன்பணியைத்
தேடுந் தனவணிகர் தேம். (1)

முன்னாட்டு நன்னகர்வாழ் முத்தமிழி னற்பாவிற்
றென்னாட் டகத்தியனே தேறுங்கால் சொன்னாட்டு
நாமக் கவிக்கிறைவ னற்சுப் பிரமணியன்
பூமன்வெண் பாவிற் புவி. (2)

எண்பாவிற் கம்ப னிசைத்தவிரா மாயணத்தை
வெண்பாவிற் றந்தான் விளங்கவதைப் பண்பாரச்
சேற்றுந் தனவணிக வேனர்கவிஞர் கற்பகமாச்
சாற்று மிராமணு தன். (3)

இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவரான கோட்டையூர் திருப்பணிக் காரியம் வே. இராமசாமி ஐயரியற்றியவை.

சீர்புனை வளங்கொள் பாண்டிநன் னாட்டிற்
திருவளர் செழிப்பினாற் செழித்த
கார்புனை பொழில்சூழ் கோட்டையூ ரென்னும்
கவினுறு கடிநக ரதனில்
ஏர்புனை மறையோன் மீனாட்சி சுந்தரன்
ஏற்றமெய்த் தவப்பொருள் கமலத்
தார்புனை திருவன் சுப்பிர மணியன்
தமிழியற் கலைபல தெரிந்தோன். (1)

Koviloor Digital Library

இப்பெரும் புலவன் மெய்ப்பொரு ளென்கும்
இசைந்ததெக் கலையென நாடி
மூப்பரம் பொருளா யொப்பரும் பரமாம்
மூர்த்தியே யிராமனென் றறிந்து
செப்பிய விராம சரிதமே யியம்பச்
செழித்தருள் பொருணலம் வேண்டி
ஒப்புறு புகழான் முத்தையா தவத்தான்
ஓங்கிய பொருளென வுதித்தோன். (2)

மேவரு தனவ சியர்குலச் செம்மல்
மேம்படு குணத்தையா முறைக்கின்
பாவலர் பலர்க்கும் காவலர் தமக்கும்
பண்புடை யிரவலர் பலர்க்கும்
நாவலர் மதிப்பத் தேவருந் துதிப்ப
நன்கொடை யளிக்குமா வள்ளல்
நேவல மிகுத்து தன்குலப் படியே
நிகழ்ந்திடு மீகையின் வழக்கே. (3)

பேரிய விராம ளுதனின் பொருளாற்
பிரமமா மிராமனின் சரிதம்
ஆரிய மொழிந்த முனியுரை தெரிந்த
அருந்தமிழ்க் கம்பரைத் தழுவிச்
சீரிய வெண்பா மாலையாற் றொடுத்துச்
செண்விசும் பனைத்தையும் வளைத்துப்
பாரியல் பெறும்பேர் பெற்றனன் பலநூல்
படித்ததின் பாங்கு பாவலனே. (3)

நேரிசை வெண்பா

மன்னுபுகழ்க் கம்பரா மாயணத்தை வெண்பாவிற்
றுன்னுபுகழ்ச் சுப்ரமண்யன் சொற்றனன் பன்னும்
இவிக்கமுதர் முன்னுத் தெவிட்டவமு தண்டோர்
செவிக்கமுத மென்னத் தெரிந்து.

Koviloor Digital Library

பூவுலகிற் புகழுடைய தீர்த்தமூர்த்தி தலம் மூன்றும்
பொருந்திய இளையாத்தக் குடி நித்ய கல்யாணியம்
பாள் சமேத ஸ்ரீ கயிலாய நாதரை ஆத்மார்த்த
மாகப் பூஜைபுரியும்

ஆகம நிபுணரான ஸ்ரீமான் இராமசாமிக் குருக்களய்யர்
சகோதரர் வரகவி ஸ்ரீ பரமேஸ்வரக்
குருக்களையரியற்றிய
நிலைமண்டில ஆசிரியப்பா.

சீர்மலி வளத்தால் வார்மலி திளைத்துப்
பார்மலிந் தோங்கும் பேர்பதி னெட்டாம்
புராதன மானதாற் புராணமென் றுரைக்கும்
இனுமுப புராணம் நனியிவை கணக்காம்
உலகிலாம் பெருமை யலகிலா தோங்கும்
இதிகாசங்களுந் துதிமான் மியங்கொளும்
அப்பெரு நூற்களுண் மெய்ப்பொருள் மேற்கொளும்
செப்பறு நன்மை சார்ந் தொப்பறு தன்மைசால்
இராமா யணமே தராதல மதனில்
இகபரத் தேதுவாய் அகமறுத் தோதுவார்
பராவரு பெரியோர் விராவிய கருத்தால்
புகழ்த்துணை கொண்டு நிகழ்த்துவ தாகும்
மெத்துமற் புதமுடன் சித்தசுத் தியையருள்
அத்தகை நூலை வித்தக மேலோன்
வான்மீகி முனிவன் மான்மியம் பொருந்த
வடமொழித் தரத்தான் மடமொழித் துரைத்தான்.
அத்திறப் பொருளைத் தத்துவத் தெருளான்
கவிச்சக்ர வர்த்தி செவிக்கற் புதம்புரி
கம்பனென் றுரைக்கும் நம்பெரும் புலவன்
பொருத்தமிக் குயர்ந்த விருத்தமென் பாவாற்

Koviloor Digital Library

பரத்துவம் திருந்த விரித்தருள் புரிந்தான்
பண்பார் கவிப்படி வெண்பா நயப்படி
கம்பனின் கவிக்குப் பம்புமன் கருத்தாய்
இம்பரிற் புகலச் செம்பொரு ளறிந்த
நலத்துறு மேலாம் புலத்துறை தெளிந்தோர்
உன்னையல் லாது பின்னை வல்லவரார்
என்னயப் புலவர் சொன்னயத் திணங்க
முத்தமிழ்த் திறத்தாம் நத்துமெய்ப் பொருளும்
ஆய்ந்திடு புலத்தான் வாய்ந்திட முடித்தான்
அன்னவன் பெருமை நன்னல முறைத்தற்
கென்னலந் தருநா சொன்னலந் தருமா
மதிமலி புரிசை நிதிமலிந் தோங்கும்
வந்துவந் துலவு நந்தனஞ் சுலவி
மந்திர நிகர்த்தாம் சுந்தர மாடம்
வரிசைகொள் பெருக்கந் திருவளஞ் சிறக்கும்
பல்வளச் செல்வம் நல்வளத் துயர்ந்த
கோட்டையூ ரென்ன நாட்டமா நகரான்
அந்தணர் குலத்தின் வந்தவ தரித்தோன்
மீனாட்சி சுந்தரம் தானாட்சி செய்த
தவந்தர வுதித்த நவந்தரு புலத்தன்
விப்பிரர் மதிக்கும் சுப்பிர மணியனென்
றொப்பறு பெயராற் செப்பறு குணத்தான்
கல்விக் களஞ்சியம் கருணைப் பெருங்கடல்
மாணாக்கர் தமக்குப் பேணாக்க முடனே
நயந்தரு கல்வி வியந்தரப் புரிவோன்
பாண்டிய நாட்டிற் காண்டகு நல்வளம்
சிறந்துயர் பெருமை யறந்தரச் செழித்துப்
புண்ணிய தீர்த்தம் நண்ணிய சீர்த்தாய்
வேதமா றங்கமு மோதுபா ரங்கதர்
ஆகமந் தேர்ந்த யோகமார் பெரியோர்

Koviloor Digital Library

நிறைந்திடு மூளத்தார் சிறந்திடு வளத்தாம்
கற்பகச் சோலைகள் பொற்புறச் சூழ்தர
விளைவயல் சுலவு மிளைசையம் பதிக்கண்
அறம்பொரு ளின்பம் சிறந்தபே ரின்பம்
வேண்டினர்க் களிக்கு மாண்டகு பொருளாய்
சத்தியுத் தமிசிவை நித்தியகல் யாணியை
இடந்தர வணியும் படந்தரு பணியான்
கயிலாய நாதர் வியலாய பாதம்
புனைந்தருண் மனத்தாற் கனந்தரு பெரியோன்
இந்நூல் முடித்தச் செயற்றி யீந்திடுதல்
பொன்னூற்ற லன்றி யென்னூற்ற லொன்றும்
என்றுள மதித்து நன்றுள வளத்த
தன்னுடை நகரான் பொன்னுடை வசியர்
குலந்தனிற் சிறந்த நலந்தரு புகழான்
தனபதி யுளத்தாம் கனநிதி வளத்தான்
ஈகையிற் சிறந்த வாகைகொள் திறத்தான்
நாத்தேர் புகழ்மலி மாத்தூர்க் கோயிலான்
நத்தய்யா வென்ன நயவிலக் கணத்தான்
முத்தையா மைந்தன் முதல்வள்ள லானோன்
தராதலம் போற்று மிராமனு தப்பெயர்
சார்ந்தருள் சீமான் தேர்ந்தருள் நிதியாற்
பெருங்காப் பியத்தைத் திருந்தவச் சியற்றி
உலக மதிக்கும் நிலையுடைத் தாகித்
தந்தனன் புகழே சந்ததம் வாழி.

(நேரிசை வெண்பா)

பண்பாவிற் கம்பன் பகருமிரா மாயணத்தை
வெண்பாவிற் பம்ப விளம்பினேன் வண்பாவும்
விப்ரகண்ய னுமனருள் மீனாட்சி சுந்தரன்சேய்
சுப்ரமண்ய நாமன் துதித்து.

Koviloor Digital Library

இளையாத்தங்குடி மகா-ள-ள-ஸ்ரீ கயிலாசமாசாரியவர்கள் புத்திரனும் இந்நூலாசிரியர் மாணக்கனுமாகிய க. யி. வினைதீர்த்தாணுசாரி இயற்றியவை.

கன்ன லுங்கமு குந்தழை தெரியொணுக் கழனிச்
சென்னெ லின்களை தேனளி நுகர்செழுங் குவளை
அன்ன மம்புயத் தமர்ந்திடு தடம்பல வணிசேர்
பன்ன லங்களும் பரவுநற் பாண்டிய ஞடே. (1)

அன்ன நாட்டினிற் பொன்னக ரனந்தமுண் டவற்றுட்
சொன்ன நாட்டிய வரையெனச் சூழ்தரு மாடம்
கன்ன ஞட்டிய விரதமார் கம்புனே தடாக
மன்ன நாட்டிய வளம்பல வயங்கவா மன்ஞே. (2)

வேறு.

பொன்னுலவு நன்னகரே பூமாது வதனமெனப்
புலவார் போற்றுஞ்
சொன்னமணி கோட்டையூ ரன்னகர்க்கண வளமருவு
சோதி ஞானம்
மன்னுமுப நிடதமெனும் மறைமொழியுந் தமிழ்நூலும்
வழங்கு நாவான்
சொன்னலமும் பொருணலமுஞ் சுவைபெருகக் குருமுனி
போற்ரெருக்கு மேலோன். (3)

பூதவுடல் தனினுமிகப் புகழுடலான் சுப்ரமண்யப்
புலவ ரேறு
வேதியர் சிகாமணிமா மேவிதய மெய்ப்பொருளாய்
விளங்கி ராம
காதைமுனங் கம்பனருள் கவிவழியே முனிமொழியுங்
கலந்தி யாரும்
ஒதரிய மாதுரிய சாதுரிய வெண்பாவி
னுவப்பச் சொன்ஞன். (4)

Koviloor Digital Library

அப்பெருங்காப் பியம்புரியப் பொருளுதவி யருளுதவி
யளிப்பான் வேண்டி
யொப்பரிய தன்னகர்க்கண் மகுடதன வசியர்குலத்
தோங்கு மேலோன்
செப்பரிய தனபதிநேர் முத்தையா தவத்துதித்த
செல்வன் சீமான்
மைப்புயனேர் கொடைக்காத்தி ராமனு தப்பெயரான்
மகிழ்சேர் வள்ளல். (5)

கனஞ்செழித்த தவந்தனத்தார் மனஞ்செழித்த வசந்தனென
கவினு மேலோன்
மனஞ்செழித்துப் புரிந்தபெருந் தனஞ்செழித்த வுதவியினல்
வளமா மின்னூல்
இனஞ்செழித்த வக்காங்கொ ளச்சியற்றி யுரியவர்கட்
கீந்தான் மேலோன்
தினஞ்செழித்த புகழ்நலத்த திருமருவு கீர்த்தியென்றுஞ்
செழிப்பாம் வாழி. (6)

நேரிசை வெண்பா.

கல்விக் கடலமுதோ கண்டோ கனிரசமோ
பல்விதநூற் பாவலர்தம் பாக்கியமோ செல்வியுர
மேவினிய ராமகதை வேதசுப்ர மண்யனருள்
பாவினிய லாகியவெண் பா. (7)

உன்னப் பவம்போக்கு மோங்குபுகழ் செல்வநல்கும்
பன்னப் பதஞானம் பாலிக்கும் பொன்னெப்பும்
தண்ணளிசேர் சுப்ரமண்யன் சாற்றுமிரா மாயணத்தாம்
பண்ணளிசேர் புண்ணியவெண் பா. (8)

கங்கைவேணி கவுரிக்கியம்பு—பூ
மங்கையாடன் மணாளனிராமப்—பே
ரெங்குமேவவெண் பாவிரிசைத்தருள்
பொங்கவே யிப்புவிக்களித்தானரோ. (9)

தண்டுமேல்கு வெண்டாமரையாடவம்
பண்டுசெய்தபயன் முழுதோருருக்
கொண்டுவந்தென்குரு வெனமேவாதவுங்
கண்டசுப்ரமண்யக் கவிவள்ளலே. (10)

Koviloor Digital Library

இந்நூலாசிரியர் மாணாக்கரி லொருவராகிய
இளையாற்றுக்குடி சோ. முத்தய்யா பிள்ளை இயற்றியவை.

பொன்மணஞ் செழிக்கு மின்மணி கொழிக்கும்
புகழுடைக் கடற்கலை தாங்கும்
மன்மணஞ் செழிக்கும் புவனிமான் வதன
வான்பிறை நுதற்றிகழ் திலக
மென்மணஞ் செழிக்கும் பாண்டிநன் னாட்டின்
மிகுபுகழ்க் காகர மாகி
நன்மணஞ் செழிக்கும் பன்மலர்ப் பொழில்சூழ்
நலத்துறு புலத்தது மன்னோ. (1)

சேண்கலந் தோங்கு மாண்புடைச் செல்வச்
செழிப்பினாற் சிறந்துசெந் திருநேர்
நாண்கலந் தோங்கு நகைமுக மடவார்
நலத்தக வறத்தினாற் பொருந்து
மாண்கலந் தோங்கு மாடங்கள் சூழ்ந்து
வளர்புகழ்க் கோட்டையூ ரதனில்
எண்கலந் தோங்கு மறையவர் திலகன்
ஏற்றமீ னாட்சிசுந் தரமால். (2)

செய்தருள் தவத்தின் மெய்தரு பொருளான்
செந்திரு வளர்தரு புயத்தான்
மெய்தரு கலைகள் படித்துநற் புலவோர்
வியப்புறக் கவிபொழி கொண்டல்
பைதரு பணத்தாம் பன்னக சயனன்
பதமலர் புனைந்திடு சிரத்தான்
நெய்திகழ் வேள்விச் செல்வரா மறையோர்
நிறைந்திடு மிளசைமா நகர்க்கண். (3)

Koviloor Digital Library

பண்ணவர் போற்ற வரந்தருங் கயிலைப்
பரம்பொருள் நித்யகல் யாணி
வண்ணமா மலர்த்தாள் மலர்திரு மனத்தான்
வளர்புகழ்ச் சுப்பிர மணியன்
செண்ணமார் பெயரான் சிறந்தமா ணைக்கர்
செழிப்புறக் கல்விநன் கருளும்
அண்ணலாம் பெரியோன் எனக்கருள் ஆசான்
அறந்தரு மறிவனல் லருளான். (4)

வேறு.

சீர்பூத்த கலைமகளின் புலமதிக்கச் சிறந்தகவி
செழித்த நாவான்
ஏர்பூத்த திருமறையோன் இகபரசா தகந்தருதற்
கேற்ற நூலைப்
பார்பூத்த தமிழ்மொழியிற் பகர்தாற்கு மகிழ்வளித்துப்
பரிவு நல்கும்
கார்பூத்த கடல்வண்ணன் இராமனருள் புகழுலகிற்
காந்த மென்றே. (5)

அப்பெரு ராமாயணத்தை அளக்கரெனுங் கல்வியினன்
அளக்கா வாற்றல்
ஒப்பரிய கம்பனெனும் நம்புலவன் விருத்தமென்பா
வோங்கச் செய்தான்
செப்பரிய வப்புகழான் பண்பாவை வெண்பாவென்
தென்பாச் செய்தான்
இப்பெரிய புகழுலகிற் புருடார்த்த நான்கிசைய
விசைந்த மன்னே. (6)

நலம்படைத்த புகழுடையா னன்குமுடித் தச்சியற்றி
நலத்தோர்க் கீந்து
வலம்படைத்த புகழ்பெறற்குப் பொலம்படைத்த
பொருணலந்தான் வாய்ந்த தென்று

Koviloor Digital Library

நலம்படைத்த நன்னகரிற் தனம்படைத்த புகழுடையான்
தரும சீலன்
குலம்படைத்த மகுடதன வசியர்மர பினிற்சிறந்த
குபேரன் மாதோ. (7)

செந்திருவாழ் திருப்புயத்தான் கந்தரமார் கொடைக்கரத்தான்
திருநா வேறும்
நந்திருவாம் வாணியருள் நலம்படைத்த கல்வியினன்
நயக்கும் சீமான்
நந்திடையார் பந்திடையுந் தனத்தவத்தார் மனத்தவத்தைத்
தளர்த்து மேரான்
சுந்தரமால் முத்தையா தவத்துதித்துப் புகழ்படைத்த
தோன்றல் மன்னே. (8)

சந்தான மெனத்தருமி ராமனு தன்புகழே
சார்ந்த மேலோன்
தந்தான பொருணலத்தாற் திருநூலை யச்சியற்றித்
தாத்தோர்க் கீந்து
நந்தான காத்துவில்லை நாட்டியுல களித்தவள்ளல்
நயத்த வீரன்
சிந்தான கருணைகொண்டான் நந்தாத புகழுலகிற்
செழிக்க வாழி. (9)

வேறு.

சவிதழை கன்னல் சர்க்கரை கண்டு
சம்மன்செய்முக் கனியிர தம்பால்
அவிதெளி தேனு மமைவுறக் கூட்டி
அட்டிளம் பாகெனத் திறட்டிக்
கவிமழை பொழிவார் செவிமடுத் துவப்பக்
காகுத்தன் சரிதம்வெண் பாவிற்
புவிமகிழ் கோட்டை யூர்ச்சுப்ர மண்யப்
பூசுரன் புகன்றனன் மாதோ. (10)

Koviloor Digital Library

நேரிசை வெண்பா.

கம்பனிரா மாயணத்திற் காட்டுங் கருத்தையெலாம்
கம்பனருள் வெண்பாவி னூட்டினான் வம்பலர்பூஞ்
சோலைதிகழ் கோட்டையூர்ச் சுப்பிரமண்ய விற்பனன்சீர்
வேலைதிகழ் பூவின் மிகும். (11)

இந்நூலாசிரியர் முதன்மாணாக்கனும் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாசய்யரவர்கள் புத்திரனுமாகிய வேங்கிட்டராமய்யர் இயற்றியவை.

சீர்பூத்த நவமணிகள் திரைகொழிக்குங் கடல்செழிக்குஞ்
சிறந்த வாசத்
தேர்பூத்த புவிமடந்தை திருமுகம்போல் வரைவளத்தா
யெழின்மிக் கேற்ற
பார்பூத்த பலவளஞ்சேர் பாண்டியனா டென்னாட்டும்
பண்பு வாய்ந்து
கார்பூத்த வளஞ்சிறந்து கவினுமெனப் பனுவல்களின்
கருத்தா மன்னோ. (1)

அப்பெரிய வளநாட்டின் அளவளவா வளமுளவாம்
அறத்தார் போற்றும்
எப்பெருமை களுநாட்டித் தனதனிகர் தனவசியர்
ஏற்றந் தாங்கிச்
செப்பரிய கொடைசிறந்து பலகலைதேர் புலவர்களாற்
சிறப்பு நாட்டும்
ஒப்பரிய கோட்டையூர் உலகமதிற் றிலகமதா
யோங்கு மன்றே. (2)

அத்தகைய திருமலிந்தோர் வெற்றிபுரி திருநகரின்
அமல மிக்க
முத்தகைய தனஞ்செயனை நத்துமறை யவர்குலத்தான்
முதன்மை பூண்ட

Koviloor Digital Library

சித்தநயங் தருபுகழான் மீனாட்சி சுந்தரமால்
சேழிக்கச் செய்த
மெத்தநயந் தருதவச்சேய் சுப்ரமண்ய கவிவாதன்
மேலாஞ் சீலன். (3)

பலகலையுந் தெரிந்தவற்றின் பயனறிந்த மாணாக்கர்
பலர்க்குஞ் சொல்லும்
நலமுடையான் கருணைவள்ளல் நயந்தெனக்குச் சிறந்தகல்வி
நாட்டும் ஆசான்
பலமுறுசுப் பராயகவி வீமகவி வரர்களன்பாற்
படித்த மேலோன்
புலமுறுநற் புராணமொன்று தமிழ்மொழியிற் செயவினைந்து
புரிந்தான் மன்னோ. (4)

கராவணைய வாழிதொட்டுக் கசேந்திரனைக் காத்த பெருங்
கருணைக் கொண்டல்
அராவணைய ஞாழிமுதல் அமரர்பெற வரமருளி
அயோத்தி வந்தான்
இராவணனா மிராவணனை யிராவணமா யிறுத்தரக்க
ரேற்றந் தீர்த்த
இராமனரு ளிசையுமிரா மாயணமே யிதிகாசத்
தேற்ற மென்றே. (5)

தருமார்த்த முதனான்குந் தருமார்க்க மெனமுனிவன்
சாற்று நன்னூற்
பரமார்த்தந் தனையறிந்து பாத்துவத்தை மறைத்தலின்றிப்
பகருங் கம்பன்
திருமாற்றந் தமிழ்விருத்தம் பெருமாற்ற னுடன்படித்துத்
திகழ்வெண் பாவாற்
கருமாற்றந் தாமுடைத்தாய்ப் புகன்றனனா மவன்பெருமை
கணித்தற் பாற்றோ. (6)

பல்வளத்தா மிந்நூலைப் பாடியச்சிற் பதித்ததனைப்
பலர்க்கு நல்கி
கல்வளத்த கொடைச்சிறப்பா னலம்பெறற்குப் பொருளுதவி
காடித் தன்னூர்

Koviloor Digital Library

எல்வளத்த மணிமகுட தனவசியர் குலநிதியா
யேற்றங் கொண்ட
மல்வளத்த புயமுடையான் றனையடுத்தா னவன்பெருமை
வழங்கற் பாற்றே. (7)

சேத்தாரும் பணிலமணி திறத்தாரு மள்ளர் கரை
சேர்த்துச் செந்நெல்
நாத்தூர முப்போகம் விளைகழனி வளைவுடைத்தாய்
நலஞ்சேர் தென்றற்
காத்தாரும் பொழிலொடுபாற் கடலேறுந் தடஞ்செழித்துக்
கனஞ்சேர் மாட
மாத்தூரந் தேத்தேரைஞ் ஞாத்தீசர் மலர்ச்சரண
மனத்தான் மாண்பான். (8)

நிதிவளத்தா னிதிக்கோனை நிகர்படையான் கொடைவளத்தி
னேரான் கன்னன்
மதிவளத்தாற் பொன்மதிக்கும் வாய்மையினன் வள்ளல்களு
மனத்திற் கொள்ளுந்
துதிவளத்தான் அதிகலத்தான் முத்தையா தவப்பொருளாத்
தோன்றுஞ் சீமான்
பதிவளத்தாந் திருவண்ணா மலைத்தலத்து நிலைத்தவறம்
பாங்காச் செய்வோன். (9

வல்லேறுங் கனதனத்தார் மனமேறும் புயவனப்பான்
மகிமை வாய்ந்த
வில்லேறுங் காதலத்தி ராமனுதப் பெயரான்
மேன்மை வாய்ந்த
சொல்லேறும் பிரபுவருள் பெரும்பொருளி னறம்புகழாற்
றுதிக்கு மிந்நால்
எல்லேறும் புலவர்கட்கோர் நவநிதியா யச்சியற்றி
யீந்தான் வாழி. (10)

நேரிசை வெண்பா.

நாட்டுகம்ப ராமாய ணப்படியாம் வெண்பாவைக்
கேட்டகம்ப ராவலர்க்கு கேண்மை செய்தான் கோட்டையூர்
மீனாட்சி சுந்தரம்சேய் விப்ரகண்யன் சுப்ரமண்யன்
தானாட்சி தந்தருள்பு தன்.

Koviloor Digital Library

உ

அண்ணாமலையார் துணை.

இராமாயண வெண்பா

பால காண்டம்.

பாயிரப் படலம்.

(கடவுள் வாழ்த்து)

திருமால்.

உலகம் படைத்தளித்து மொன்றுபுரி தேவன்
திலகம் படைந்தநுதற் சீமா னலககலு
மாற்றலுடைப் பாத வணிமலரைச் சூடிநிதம்
போற்றலுடைத் திந்நூற் புகழ். (1)

களபம் புனைந்து கமழீ ரிருதோட்
டுளபம் புனைந்து துலங்கித் தளபந்
திகழிலகு தாமரையிற் செந்திருவைச் சார்ந்து
புகழிலகு வானே புகல். (2)

நவநீத முண்டு நகும்பவழ வாய்மா
தவநீத முண்டகத் தாமா தவனீ
எனக்கருள வேண்டு மெழிற்கருடனேறி
மனக்கவலை மாற்றி வரம். (3)

Koviloor Digital Library

விநாயகன்.

காகுத்த வள்ளல் கருணைத் திருப்புகழைப்
பாகொத்த வெண்பாவாற் பாடவே வாகொத்த
நெஞ்சத் தருளுதவு நேயத்தாற் றண்ணளிசெய்
பஞ்சக் கரத்தான் பதம். (4)

சிவபெருமான்

கங்கை மகிழ்ந்தசடைக் கண்ணுதலா னெண்ணுதற்குப்
பங்கை மகிழ்ந்தளித்த பாகத்தா னங்கை
மழுவா தரிக்கும் வரதன் சரணின்
வழுவா திருக்கும் மனம் (5)

உமாதேவி

கயிலை மலைக்குழகன் காதலியாய்க் கூர்த்த
வயிலை மலர்விழியா யாக்கும் புயலைமலை
யைம்பாலாள் பொன்னடியை யாதரிக்கி னென்னலமுந்
தம்பாலா வந்தணையா தா (6)

முருகக்கடவுள்

தேசுடைய தெய்வானை சேர்ந்துந் தினைப்புனத்திற்
காசுடைய கொங்கைவள்ளி காதலினு லாசடையாப்
பொற்கணியா நின்ற புகழ்சேர் பதமலரென்
சொற்கணியா நிற்குந் துணை. (7)

பிரமன்

சிருட்டிதிதி சங்காரன் செந்தா மரைக்க
ணருட்டிகழி ராமன்ற்ரே ளாண்மை தெருட்டியருஞ்
சிந்தைவரச் செய்யுந் திருமாலி னுந்திவந்த
தந்தைவரன் கந்தமலர்த் தாள். (8)

Koviloor Digital Library

(நாமகள்)

வெண்டா மரையாள் விமலை யமலனுந்தித்
தண்டா மரையாள் சதுமுகனுங் கொண்டாடு
மாரணங்கே வாணி யடியேனு வந்தமுத
லாரணங்கள் பேணி யருள். (9)

(இலக்குமி)

வானமுத லானபொழில் வாழப் பெருஞ்செல்வம்
ஞானமுத லானவரு ளுயகியா டானுந்
திருமா லமலிதயஞ் சேர்ந்தருள்செய் தேவி
தருமா லமலவரந் தான். (10)

(அனுமான்)

பூமனிரா மன்சரணம் போற்றுந் திருமனத்தாய்
காமனரு வேயறியாக் காட்சியாய் பூமருவும்
விந்தைதனிச் சீதை விசனமட்ட மாருதியென்
சிந்தையினிற் பந்தமறச் செய். (11)

(கருடாழ்வார்)

அமுதகடந் தந்தபுனே யாற்றலாய் மாற்று
தெமதுகடந் தந்தவினை யேற்ற மமதைகெடத்
தார்க்கியநின் பாத சலசந் தருமன்றி
யார்க்கியலு நின்று ளருள் (12)

அவை யடக்கம்

தாமரைமென் தந்துகொண்டு தாமரையைக் கொந்துகொண்ட
காமரமுன் கட்டுங் கருத்தெனலா மாமருவு
சீர்பெறிரா மாயணத்தைச் செய்யவெண்பா வாற்பாடி
ஏர்பெறயா னெண்ணு மிது. (13)

ஆக்கியோன் பெயர்

நாட்டுமிரா மாயணத்தை நண்பருள்செய் வெண்பாவிற்
கேட்டுமிரா நல்வளத்த கீதமுடன் கோட்டையூர்
விப்ரகண்யன் மேற்புலவர் வேண்டும் விசயமணி
சுப்ரமண்யன் சொற்றான் தொகுத்து. (14)

பாயிரப்படலம் முற்றும்.

Koviloor Digital Library

ஆற்றுப் படலம்.

ஆசலம்பு மைம்பொறிக ளாகு மடலம்புங்
காசலம்பு கொங்கையவர் கண்ணென்ற பூசலம்பும்
வேற்றணியிற் செல்லா வியன்கோச லம்புனைந்த
வாற்றணியைச் சொல்வா மமைந்து. (1)

நீறணிந்த சோதி நிறத்தெழிலி மேற்றோன்றி
யாறணிந்த வார்கலிமேய்ந் தாரகிலின் சேறணிந்த
கொங்கைத் திருமடந்தை கூடவரு மால்வடிவு
பொங்கத் திருமலைமேற் போம். (2)

புள்ளிவரை தன்னைப் பொலமாப் புலமாக்கி
வெள்ளிவரை தாரை விழுவவென வுள்ளி
யுவந்தியும் வள்ளியரி ணோங்க வழங்கும்
பவந்தியு மேகம் பசந்து (3)

அறநோக்கி வாழு மரசன் புகழும்
புறநோக்கில் மின்னார் புகழுந் திறனோக்கு
நான்மறையோர் கையி னயந்தளித்த தானமும்போன்
மேன்முறையா நீத்த மிகுந்து. (4)

தலையுமுடல் தாளுந் தழுவி வழுவாய்
நிலையுமுட னில்லாமை நேர்ந்து சிலையாம்
மலையினுலை வெய்த வரன்றிவரு வாரி
நிலையினுலை வேசியர்க ணேர். (5)

பூநிறைத்துத் தாது பொருந்தி நறவளவி
மேனிறைத்துச் செம்பொன் வரவியே யானைமத
மாற்றோ டளாவி யலைத்து வருவாரி
மேற்றோன்று வானவில்லா மே. (6)

Koviloor Digital Library

மலைநிலத்தி னுள்ளகொண்டு மாமுல்லை சென்று
தலைநிலத்தி னுள்ளவயல் சார்ந்து மலைசுழற்றும்
நெய்தலுற்ற நீத்தம் நிகரி லுலகோர்க்குச்
செய்தலுற்ற நன்மை சிறந்து. (7)

தாதவிழுஞ் சோலை தருநிறைகொள் சண்பகக்கா
போதவிழும் பொய்கை புனற்றடங்கள் மாதவமும்
பூகத் துறுவயல்கள் போந்து நிறைநீத்த
மாகத் துறுமுயிர்போ லாம். (8)

ஆற்றுப்படல முற்றும்.

நாட்டுப் படலம்

கவியிற் சிறந்தபுகழ்க் கம்பன் புகழ்ந்த
புவியிற் சிறந்தவளம் போற்றுஞ் சவிமிகுந்த
தேங்கமழுஞ் சோலைத் திருநாட்டை யான்புகழ்த
லீங்குவியப் பென்னு மிது. (1)

முத்தம் வரம்பெல்லா முன்னும் பணிலமடை
தத்துங் குரம்பெல்லாஞ் சாரும்பொன் னொத்தமணப்
பூவெல்லாம் பொற்றூது போற்று குயிலகவு
காவெல்லாம் வண்டின் களி. (2)

ஆறுபா யோதையொடு மாலைக் கரும்பையடு
சாறுபா யோதைகடற் சங்கோதை யேறு
தயங்குந் தமரந் தகைந்தொன்றி னொன்றாய்
வயங்கும் மருத வளம். (3)

மாமயில்க ளாட மரைவிளக்கந் தாங்கிவரக்
கோமுழவிற் கொண்டல் குமுறவே காமரியாழ்
வண்டினிது பாட மருதஞ் சிறந்தவளம்
தெண்டிரையார் மாவெழினி சேர்ந்து. (4)

Koviloor Digital Library

தாமரைக்காம் வண்டுந் தகைசேர் திருவுந்தார்க்
காமுகர்க்கா மாதர்விழி காமனம்பும் மாமுகிற்காம்
வாரிப் பவளம் வயங்குமுத்தும் நாமுதற்காம்
சீரினுற்ற மெய்நூற் றிறம். (5)

நீருறங்குஞ் சங்க நிழலுறங்கு மேதிமலர்த்
தாருறங்கும் வண்டுசெய்யா டாமரையாந் தூருறங்கும்
ஆமை துறையுறங்கு மங்கணிப்பி போருறங்கும்
மாமையன்னங் காவா மயில். (6)

புதுப்புனலி னீராடும் பொன்னனையார் தென்னூர்
கதுப்புநலி வாசங் கடற்சேர் புதுத்தரங்கம்
கொண்டுவரு மென்றூற் குயிலனூர் தம்மிகுதி
கண்டுவரு வோர்யார் கணக்கு. (7)

குயில்வதுவை செய்யக் குனிக்கு மயில்க
ளயில்விழியா ராடு மரங்காப் பயில்சிறைய
வன்னமலர்ப் பள்ளியெழ வந்திலெழுஞ் செவ்வழிப்பண்
பன்னுமலர் வண்டு பரிந்து. (8)

பருவ மடவார் பயிலு முகத்தி
னுருவ விழியை யுவந்து மருவிவரு
பெண்வண்டா மென்று பிரியாம லாண்வண்டு
வண்கொண்ட பண்ணை வரும். (9)

நீரிற் படிந்து நிலத்துவரு கார்மேதி
யூரிற் குழக்கன்றை யுள்ளமுலைத் தாரைகொண்டு
வண்டலிட்ட பண்ணை வழிந்து பொழிபாலாற்
கொண்டலெட்டிச் சாலிதழைக் கும். (10)

நாடவரைத் தோளினிய நங்கையர்கள் கொங்கையிணை
ஆடவரைத் தேடிவரு மங்கொருபாற் சேடுடைய
பாளைதந்த தேனைப் பருகிச் சினமிகுந்த
வாளைகொந்த ளிக்கும் வயல், (11)

Koviloor Digital Library

தெள்விளி யாழ்ப்பாணர் தேற லதுமாந்தி
வள்வார் கருவி வளர்பாடல் வெள்ளியுற்ற
மாடந் துறுபள்ளி மன்னு மயிலடுத்துக்
கூடுந் துயிலெழுப்புங் கொண்டு. (12)

ஆலைக் கழைத்தே னரிதலைப் பாளைத்தேன்
சோலைக் கனியிருல் தோயுந்தேன் மாலை
யுகுதேன் வரம்புகடந் தோடிவங்க வேலை
மிகுமீன்க ளுண்ணும் விழைந்து. (13)

பண்வாய்க் கடைசியர்கள் பாத மிணைக்கரங்கள்
கண்வாய் களையல்லாற் காணுதா லுண்வாய்கள்
மள்ளர்களை யாதுநிற்பார் மங்கையர்கண் ணேயமிக
வுள்ள சிறியார்பிழைப்ப ரோ. (14)

புதுப்புனலிற் றோய்மாதர் பூவினொடு நாவி
கதுப்புவெறி யாகுங் கடலும் விதுப்புடைய
வாட்கண்ணின் மைந்தர் மருவுகுறிப் பேற்றமின்னு
ராட்கொள் கணக்கே தவண். (15)

வெண்டளத்தாஞ் சேறும் விரைக்குங் குமச்சாந்தும்
குண்டலத்தார் மைந்தர் குடைசாற்றில் தண்டலையும்
சாலியண்ணும் வைப்புமுடன் சார்ந்துவண்ட விட்டுவரும்
கோலமண்ணும் வண்டுகள்மொய்க் கும். (16)

சேற்கண்ணு ரன்னத் திகழன்னந் தாமரையின்
ஆக்குபிள்ளை மேதிகன்றை யாங்குள்ள வீக்கும்பா
லுண்டுதுயில் செய்ய வுகள்தேரை தாலாட்டும்
வண்டுதுயில் பண்ணை வளத்து. (17)

கறத்துருத்துக் காணுமனங் கண்சிவப்பக் காட்டிச்
செறுத்துருப்பி னும்படையாற் சிறிப் பொருத்தமுற்ற
காரணமின் றிப்பகைத்துக் காலாயு தத்தடர்க்கும்
வாரணமொன் றிப்பொருத்து வார். (18)

Koviloor Digital Library

முள்ளார் முளரி முளைமுத்தும் பொன்னினொடு
தள்ளா வளைபுலம்பச் சாலடுத்த தெள்ளியதாய்த்
துள்ளிவரு மீனம் துடிப்ப வராலொளிப்ப
மள்ளர் பகடேரப்பு வார். 19

முந்தவரு முக்கனியின் முன்னும் முழுத்தநெய்யிற்
செந்தயிரின் கண்டஞ் செறிசோற்றின் தந்தம்
விருந்து தமருடனே வேதியர்க ளுண்டி
யருந்துதல்செய் கூடமெமகு மாம். 20

சும்மையொடு சேர்த்துத் தொடுத்தபோர் வானமுட்டச்
செம்மையொடு நெற்குவியல் செய்வாரு மிம்மை
வறியோர்க் களித்து மனையினுய்ப்பார் பண்டி
நெறியோங்கக் கொண்டு நிறைத்து. 21

கதிர்வயலி னுள்ள கடிபொழிலி னுள்ள
முதிர்மரங்க ளுள்ள முதிரை பதிகொடியி
னுள்ளகொண்டு மள்ள ருகத்தல் மதுமலரிற்
கொள்ளைகொண்ட வண்டைநிகர்க் கும். 22

சூட்டுடைய நாட்டமிகு தூநிறத்த வாரணத்தின்
தாட்டுணையிற் சோருந் தகைமணிகண் மேட்டிமைத்த
மின்மினியா மென்று விழைந்து குருவியுய்ப்ப
நன்மனையாங் கூட்டி னகும். 23

தோயுமளை மத்தொலியுஞ் சுந்தரஞ்சேர் செங்கைமிசை
யேயும் வளையொலியு மேத்தெடுப்ப வாயர்குல
மங்கையர்கள் கொங்கை வருத்த விடைநுடங்கத்
தங்கை கடையுந் தயிர். 24

பிறைநுதலார்க் கென்றும் பெருஞ்செல்வங் கல்வி
நிறையு நலத்தா னிதமும் வறைவின்றி
வந்தவர்கட் கியும் வளமும் விருந்தினர்க்குத்
தந்தவரைப் போற்றுதலுந் தாம். 25

Koviloor Digital Library

பந்தை யிளைஞர் பயிலிடங்கண் மாமயிலூர்
கந்த னனையர் கலைக்கழகம் சிந்தை
மயலென்று மில்லார் மருவு மவையே
அயலெங்கு மன்னாட்டி னும். 26

காவெல்லாங் கற்பகமாங் காமர் வயலோடைப்
பூவெல்லாம் பொன்வளர்செய் பூவெனலா மாவெல்லாம்
பொன்னாட்டின் தேனுவெனப் போற்ற வருமேற்ற
மன்னாட்டின் றன்மையவை யாம். 27

கலஞ்சுரக்கு மாநிதியங் காணுங் கணக்கோ
நிலஞ்சுரக்கு நல்வளங்க ணேருங் குலஞ்சுரக்கும்
நல்லொழுக்க மத்தகைய நாட்டுவளந் தெய்வமவர்
சொல்லொழுக்கி னிற்குந் துணை. 28

கூற்றமில்லை யேற்றுவரு குற்றமில்லை மற்றதொல்லைச்
சீற்றமில்லை தம்சிந்தைச் செய்கையினு லாற்றலுடை
நல்லறமல் லாது நலிவேயல் லாமையினு
லில்லறிவி லாமைக் கிடம். 29

நெறிகடந்து சென்றனவு நீத்தம் நெருங்கும்
குறிகடந்த மங்கையர்மின் கொங்கை சிறியனவு
நங்கையர்க டேயு நடுவே வெறியனவு
மங்கவர்க ளைம்பாலே யாம். 30

வேலைநிறை சோலைவளம் விண்டடுத்த முல்லைவளம்
மாலைநிறை மேலை வயல்வளங்கள் மேலும்
பகர்வளங்கொ ணுடு பகர்ந்தோ மினிய
நகர்வளங்கள் சொல்வாம் நயந்து. 31

நாட்டுப்படல முற்றும்.

Koviloor Digital Library

நகரப் படலம்.

செய்ய கவிஞர் சிறந்தவட நூன்முனிவர்
ஐயமிலா மற்புகழ்ந்த வன்னகர மெய்யாம்
தவஞ்செய்து போமுலகர் தாமா தரிக்கும்
திவஞ்செய் நகரமயோத் தி. 1

நிலமகட னானனமோ நேத்திரமோ நெற்றித்
திலகமோ செந்திருவாழ் செய்ய மலர்தானோ
செங்கணருண் மான்மார்பிற் சேர்மணியோ வென்று ரைத்தற்
கங்கணக ரான்றவள மாம். 2

மன்னும் புலவர் வடநூன் முனிவரரு
மின்னும் புகழ விருக்குநகர் முன்னுதவம்
பண்ணிப் புகுமுலகோர் பார்த்திங்கு வந்தடைதற்
கெண்ணிப் புகுநகரா மே. 3

சூழ்ந்து வருமாரை சுற்றுமுற்றும் பாரெல்லாம்
போழ்ந்த கிடங்கினிடை பொங்கிடங்கர் தாழ்ந்தவங்க
வாரி தனில்மதத்தால் வந்தாழ்ந் தெழுந்தழுந்து
வாரணம தென்றுபுகல் வாம். 4

ஈறும்வாள் வாலெயிறு மேற்றபிறை வாயைவிதிர்த்
தோருங்கட் டீசோர வொன்றையொன்று நேர
விடங்கா ணிடங்க ரெறிபோ ரரக்கர்
அடங்காணும் போரைங்க ராம். 5

விளிம்படுத்து முற்றுவர வெள்ளிகட்டி யுள்ளே
பளிங்கடுத்துப் பொன்பரப்பும் பாங்கர் தளிந்தகல்லிற்
சார்ந்த சலத்தைத் தனித்துத் தெளிந்துணர்தல்
தேர்ந்தவர்க்கு மாகாத் திறன். 6

Koviloor Digital Library

அன்ன கிடங்காழி யாமடுத்துச் சூழ்வேறு
துன்னு மிருட்பிழம்பு சூழ்தலென மன்னவரு
சோலையது பொன்மதிற்குச் சூழ்ந்து சிறந்துடுத்த
நீலவுடை யொக்கும் நிதம். 7

தேவநகர் கோவளகை சேரப் படைத்தபின்னர்
மாவனக ஞனபிர மன்படைத்து மேவுமெழில்
கொண்ட நகர்ப்பெருமை கூறந் திறமையதோ
வண்டமிழோர்க் கென்றும் மதித்து. 8

முத்தொழிலு முற்றருளு முப்பொருளு முத்தர்தொழு
நத்தெழிலி ராம னயந்தரசா யுற்றுநின்ற
சொந்தநக ராகுந் துணையி லயோத்திநகர்க்
கெந்தநக ராகு மிணை. 9

அரசெல்லா மன்னகர்க்க ஞன்றநிதி யங்ஙன்
விரசெல்லா நன்மைகளு மேவும் பரசுபெறு
சங்கநகு கையான் றனிக்கோல் பிடித்தளித்த
துங்கநகர்க் கெங்காந் துணை. 10

கண்டுமொழி வண்டுவிழிக் காரிகையார் சேர்மாடங்
கொண்டமதில் வானளக்குங் கொள்கைதான் மண்டுமெழிற்
தேவாகக ரெற்குச் சிறந்ததோ காண்டுமெனப்
போவதனை யொக்கும் பொலிந்து. 11

செங்கோ லளத்தலாற் சேரார் முடிதெறலாற்
பொங்கோதம் போலறிஞர் போற்றலா லெங்குஞ்
சிலைவாள் பயிற்றலாற் சேருமதில் செங்கண்
தலைவர்தமை யொத்துளது தான். 12

தோமரம்வாள் தண்டுதவர் சொல்லும் படையடைவா
லாமரவு போலு மடையலரை நேமி
எறியுளதாஞ் செய்கையா லேற்ற மிகுந்த
பொறியுளதா மாமதிற் பொற்பு. 13

Koviloor Digital Library

அன்ன மதிலை யலைகடல்தான் சூழ்ந்ததெனக்
கன்னியர்க ளல்குலெனக் காப்புடைத்தாய் நன்னெறியைப்
போக்குங் கராமிருந்து புன்கவியைப் போற்கலங்கி
யாக்கு மகழி யது. 14

நாகமொன்ற வாழ்கிடங்கை நாட்டுங் கடலென்று
மேகமொண்டு கொண்டெழுந்து விண்டொடர்ந்த நாக
மாமதிற்க ணேறி வழங்குஞ் சரதாரை [மென்று
மாமதிக்கும் பூவகழி வாய். 15

மதிலின் புறத்தகழின் மாலர்கள் சீர்சால்
பதியின் புறவிளங்கு பண்பார் திதியென்ற
மாதர்முகத் துக்குடைந்து வந்து மலைப்பதற்குப்
போதருத லொக்கும் பொலிந்து. 16

அன்னங் குடையா யரியகரா யானையாய்
மன்னூர் தரங்கம் வயப்பரியா மின்னும்
கயல்மீனம் வேல்வாளாக் காணு மரசர்க்
கயல்மீளாச் சேனை யகழ். 17

கோவுயிர்த்த மேற்றலத்திற் கோமளப்பொன் வேய்ந்தடுத்த
பூவுயிர்த்த கற்பகத்தின் புக்கொதுங்கி யாவியொத்தே
யூடுகின்ற பேடையென வோவியப்பு ருவருகே
கூடுகின்ற சேவலொதுங் கும். 18

திங்கள் கரியதெனச் சேர்வெண்மை தீற்றியொளிர்
சங்கச் சுதைத்தவளத் தாமாடம் வெங்கடுங்கால்
போக்கடலான் மேக்குவரப் பொங்கிவர மேலோங்கும்
பாற்கடலின் சீரலையொப் பாம். 19

எழ்பொழிற்கு மேழ்தலங்க ளேற்பச் சமைத்தென்று
மூழிற் குவித்தும்ப ரொண்பொனிட்டுச் சூழ்சிரத்துப்
பொன்மணித்த சும்பு பொருந்தல் புவிமடந்தை
பொன்மகுட மாங்கோ புரம். 20

Koviloor Digital Library

வெங்கட் சுதையணிந்த மேன்மா ளிகைமீது
தங்கத் தகடிலகு தன்மையாற் கங்குலடு
மெள்ளரிய சூர னிளவெயிற்கு ழாஞ்சூழ்ந்த
வெள்ளிமலை யொக்கும் வியப்பு. 21

பாடகக்கால் தாமரையாப் பாங்கா யுடனணைந்து
சேடமைத்த ழியனவாஞ் செய்யவா யாடுந்
தொழிலாய் நடுவுதுய்ய தூயசுவ ணத்தா
லழியாத வோவியங்க ளாம் 22

அணியு மிழைமகளி ராமலங்கல் வீரர்
தணியும் அறந்தான் தணிபா மணியாலும்
பொன்னணியிற் றுமே புனைந்த பணியலது
மன்னுபணி வேறுகு மா. 23

வானுயருஞ் சீர்சால் வரம்பிலவாஞ் செல்வமுற்றோர்
தானுயருஞ் சீர்போற் றயங்கியே தானும்
அறமெய்ப் படியாண்ட வான்ற வரசர்
திறமெய்க் குடிநிறைந்த தே. 24

அதிருங் கழலொலிப்ப வான்ற பெருமை
முதிரு மணியொளிகள் மொய்ப்பத் துதிமிகுந்த
மான்மதஞ்சேர் வாச மதுகரஞ்செய் கானமொடு
தான்வருஞ்சீர் மைந்தர் தழைத்து. 25

வளையொலியும் யாழொலியும் மத்தளத்தி னுருங்
கிளையொலியு மேன்மேற் கெழுமுர் தொளையொலியும்
பல்லியங்க ளார்க்கும் பலவொலியுஞ் சேர்ந்துகடல்
மெல்லியதென் றூர்க்கும் விரைந்து. 26

மன்னர்திரை கொண்டளக்கு மண்டபமுங் கண்டுமொழி
மின்னடுவர் பொன்னடன மேவரங்கு மன்னும்
மறையோது மண்டபமு மட்டில் கலையாற்
குறையோதாச் சோலைகளெங் கும் 27

Koviloor Digital Library

இரவியெனத் தோரணத்தி னேற்ற மணிசூழ்
தெருவிற் சிறிய திசைகள் அருவிதமி
லானைத்தா னம்பெரிதா மாடங் கடற்றிறையை
மானத்தான் கோடை வரும் 28

சூளிகையின் மேகந் தொடக்கவரு தோரணத்தாம்
மாளிகையின் மேவு மகளிர்முகம் வாளியன்ன
கண்கள் மலர்வ கணவர் புயமென்று
மெண்கொள் மலையி னிடை. 29

உளடுதற்குங் கூடுதற்கு மோக்குமிசை பாடுதற்குங்
கேடில் விரலியர்பாற் கேட்பதற்கு மாடும்
அகன்புனலி னாடி யளிமலரைச் சூடி
மிகும்பொழுது போஞ்சிலர்க்கு மேல் 30

முழங்குவரை போற்கரியை முன்பின்னு மூர
வெழுங்குதிரை யேற்றிரத மேறப் பழங்கணுடன்
வந்திரந்தோர்க் கீய வளர்பொழுது செல்வதனால்
சிந்தைகளி சேருஞ் சிலர்க்கு. 31

கரியி னொடுகரியைக் காணப் பொருத்தி
வரிசிலையைத் தான்வழங்கி மன்னுந் தரமாம்
புரவிச்சென் டாடிமிகும் போர்க்கலையிற் போகும்
உரவுற்ற போழ்துசிலர்க் கு. 32

நந்தவனத் தாமலரை நாடிநவ்வி போல்வாவி
வந்திளைய ரோடாடி வாய்வெளுக்கக் கொந்தளிக்கும்
தேறலது மாந்திச் செழித்தகு துந்தலினாற்
தேறுபொழு தேகுஞ் சிலர்க்கு. 33

காடும் புனமுங் கடற்கிடங்கு மாதர்புகழ்
கோடுங் குளஞ்சுனையுங் குன்றுமும்பர் வீடும்
விரவு மணிப்பந்தர் வீணைவண்டு பாடும்.
பரவுமலர்ப் பள்ளியையொப் பாம். 34

Koviloor Digital Library

வள்வார் முரசமதிர் மாநகர்வாழ் மாக்களிலே
கள்வாரில் லாமையினாற் காவலிலை கொள்வார்க
ளில்லாமை யாலெடுத்தீ வார்க ளுமில்லை
எல்லாரும் நல்லவர்க ளே. 35

கல்லாரு மில்லையெனக் காணாதாற் கல்விமுற்ற
வல்லாரு மில்லை வளர்செல்வம் எல்லாரு
மெய்தவரு தன்மையினா ரில்லா தவரில்லை
கைதவமி லாதநகர்க் கண், 36

கல்வி முளைத்தெழுந்து காணவரு கேள்வியென
வொல்லும் பணைபோ யுயர்தவத்தின் மெல்லிணர்கொள்
சாகந் தழைத்தமரம் தன்ம மலர்மலர்ந்து
போகங் கனிபழுத்த போல். 37

நகரப்படல முற்றும்.

அரசியற் படலம்

அம்மா ணகர்க்கரச னன்றவர சர்க்கரசன்
செம்மாண்கோ லேழுலகுஞ் செலநின்றோ னிம்மாண்
கதைக்கிறையி ராமனவன் கான்முளையே யானால்
மதிக்கின்றவற் காரிணையா மன். 1

ஆதி மதியருளு மன்பும் அறனுடனே
நீதி மிடல்வீரம் நேர்கொடையு மோதுமிவை
நேமியர்க்குப் பாதி நிகரிலிவற் கேமுழுது
மாமியற்கை சொல்வதெனைத் தாம். 2

ஆர்கலிசூழ் பாரி னரசன்செய் தானவரா
னேர்கலவாக் கையார் நிகழ்த்தரிதாந் சீர்கலிசெய்
கேள்வியெலாம் வேதங் கிளத்து பொருண்மிகுந்த
வேள்வியெலாஞ் செய்தான் விழைந்து. 3

Koviloor Digital Library

தாயொக்கு மன்பிற் றவமொக்கு நற்கருணை
சேயொக்கு மார்க்குமருள் செய்கதியால் ஆயப்
புகுங்கா லறிவொக்கும் பூவுலகோர்க் கென்றுந்
தகுங்காவல் செய்யுமர சன். 4

ஈந்தே கடந்தா னிரப்போர் கடனுண்ணூல்
ஆய்ந்தே கடந்தா னறிவளக்கர் காய்ந்தே
கடந்தான் பகைப்பவ்வங் கண்டுமுற்றத் தோய்ந்து
கடந்தான்மன் போகக் கடல். 5

வெள்ளம் பரவை விலங்கினொடு வேசியர்த
முள்ள மொருவழியி னோடநின்றோன் வள்ளல்
சகமதிக்குஞ் சீமான் தயரதனும் பூமான்
அகமதிக்கு நேயத் தவன். 6

நேமி வரைமதிலா நீள்புறக்க டல்கிடங்கா
வாமமிகு மாளிகையே மாமலையா மாமருவும்
மாமிசையுந் தாருடைய வள்ள லரசர்கட்குப்
பூமியும யோத்திநகர் போன்ம் 7

நேரலர்க்குத் தீட்டலா னீண்ட புகழ்க்கரஞ்சேர்
கூரலர்வேல் தேயுமடற் கோமகற்கு வாரலரும்
அற்கழலும் பொற்பூ ணரசர் மகுடத்தாற்
பொற்கழலுந் தேயும் பொலிந்து. 8

பூவினுயிர் தோறும் பொருந்தி யருளடுத்துத்
தாவிநீழ லாவிருளைத் தள்ளுதற்குக் கோவினொடு
மண்மதிக்கு மண்ணல் மதிக்குடை யாமென்றால்
விண்மதிக்கு முண்டோ வியப்பு. 9

வயிரமுற்ற மாமணிப்பூண் மாவளர்செய் மார்பன்
உயிரனைத்துந் தன்னுயிர்போ லோம்பல் பயிலுலகிற்
சென்றுநின்று வாழ்வு செறியுமுயிர் கட்குடலா
யொன்றுமர சன்றனுடம் பு. 10

Koviloor Digital Library

குன்றிற் றிகழ்புயத்தான் கோமளச்செங் கோலுடையான்
வென்றித் திகிரி மிளிர்பரிதி யொன்றின்
படியி னுயிரைப் பரவி யளிக்கும்
கொடியிற் கலியை நுகர்ந்து. (11)

எய்யும் பகையான தெங்கு மிலையாகச்
செய்யுந் தினவு செறிதோளான் கையடையாய்
வையத்தை முற்றும் வரிஞனொரு வன்காக்கும்
செய்யொத்துக் காத்தான் சிறந்து. (12)

அரசியற்படலம் முற்றிற்று.

திருவவதாரப் படலம்.

ஆய வரசொருநா ளாசிரிய னைப்பணிந்து
தூயகுரு தாய்தந்தை தொல்தவமு நேயக்
கடவுளரு நீயென் கருத்தை வருத்தும்
படருளதென் னென்றான் பரிந்து. (1)

எங்குலத்தின் மேலோ ரிரவி தனினுமொளிர்
தங்குலத்தின் சீர்த்தரணி தாங்கினர் மங்குனர்க
ளில்லையதை யொல்வதென வின்றைவரை நின்றளித்தே
னல்லையது நின்னருளா னன். (2)

அறுபதி னாயிரமா மாண்டளித்தே னெற்பி
னுறுபகையை யோட்டி யுலகாள் சிறுவரிலாத்
தாழ்வொன்றே யென்றான் தரணி யொருகுடைக்கண்
வாழ்வொன்ற வைத்த வரன். (3)

அருந்தவத்தா மாமுனிவ ரந்தணர்கள் சிந்தை
வருந்துவத்தாம் வாழ்வின் மகிழ்ந்தார் பொருந்து
மகத்தை வருத்துதுய ரன்னார்க்கா மென்றென்
னகத்தை வருத்துமென்று னய்ந்து. (4)

Koviloor Digital Library

முரசுடைய கோமான் முடிமன் னவர்கட்
கரசுடைய சொல்லை யறிந்து விரைசெறியுந்
தாமரையான் மைந்தன் தனிமால் சுரர்க்குரைத்த
மாமறையை நாடும் மனத்து. (5)

அலையார் கடலி னனந்தன் மிசைநீள்
மலையாய் விழிதுயில்செய் மாயோன் கொலையார்
அரக்கரழி தீமை யகற்றுவதாய்த் தேவர்க்
குரைத்தமொழி தேர்ந்தா னுளத்து. (6)

சுடுவா ரரக்கர்த் தொலைக்கச் சுரர்கள்
கடுவார் களன்பாற் கரைந்தார் நடுவனடு
சீலனவர் தம்மையடல் தேறே னெனவரவார்
கோலனவர் தம்முடனே கும். (7)

கறைவரம்பார் கண்டன் கடவுளர்க ளோடு
மறைவரன்பால் வந்தான் மகிழ்ந்து முறையிற்
கடவசெயல் முற்றிக் கடவுளர்கள் சூழ
வடவரைக்கண் வந்தார் மதித்து. (8)

இந்திரனைப் பாசமதி னேற்றரக்கன் மைந்தனவன்
இந்திரசித் தென்றபெய றேற்றவன்னுட் டந்தை
இலங்கைசென்று பட்ட விடரை யுரைத்தான்
கலங்குசிந்தைத் தேவர் களுக்கு. (9)

இருபதுகை கம்பத் திசையரக்க னுகுந்
திருவிலிக்க ணெங்கடிரந் தீர்ந்த கருமுகிலாய்ப்
பாற்கடலிற் கண்வளரும் பண்ணவனே தீர்த்தளித்தற்
கேற்குமென நின்று ரிசைந்து. (10)

திரையார் பயோததியிற் செங்கண் வளரும்
விரையார் துளபத்தார் வேந்தை நிரையாகத்
தோத்திரஞ்செய் காலை துதிப்போர்க் கருளனகன்
கோத்திரஞ்சேர்ந் துற்றன் குறித்து. (11)

Koviloor Digital Library

கருமுகில்தான் தாமரையார் காடு மிகப்பூத்
திருசுடரைப் பக்கமிரண் டேர்தித் திருவிஞெடு
செம்பொற்குன் றேறித் திகழ்வ தெனவந்தான்
வம்பர்க்கு நல்கா வரன். (12)

எழுந்தார் சுரர்க ளெழுந்து பணிந்தார்
தொழுந்தா ளரசைத் துதித்தார் செழுந்திருவந்
துற்றதென நண்ணிஞ ரோங்கரக்கர் வல்லமையின்
றிற்றதென வெண்ண மிசைந்து. (13)

ஆடி யுவந்தா ரடுத்தடுத்தங் கண்ணலிடை
யோடி யுவகைநற வுண்டடுத்தார் வீடினர்கள்
வல்லரக்க ரென்ருர் மகிழ்ந்தார் புகழ்ந்துரைத்தார்
எல்லரக்கு மேனி யிஞர். (14)

பொன்வரைமேல் வந்த புயலின் வயக்கலுழன்
தன்வரைதோ ணீங்கித் தனிக்கடவுள் சென்னிவரை
யான்றவர மண்டபத்தி ஞனவரி யாசனத்திற்
சான்றவர்கள் போற்றவிருந் தான். (15)

விதிசேர் முனிவரொடு விண்ணு ளவரு
மதிசேர் மனத்தான் மலர்த்தாள் மதிசேர்த்துப்
பக்கமதிற் சேர்ந்து பரியா ரரக்கர்புரி
மிக்கதுயர் சொற்ருர் மெலிந்து. (16)

ஐயிரண்டு சேகரத்தா ஞன்ற துணைவரெனு
மெய்வலியி ராக்கதரால் விண்ணுமண்ணுஞ் செய்தவந்தான்
தீர்ந்ததைய மேலாஞ் செயலறியா வெங்கட்கு
நேர்ந்ததைய மென்ருர் நினைந்து. (17)

துங்க வரங்கொடுக்கத் துன்பே யெமக்களித்துப்
பொங்குலக மூன்றும் புடைத்தழித்தார் செங்க
ணருட்கடலே தீர்த்த லலதேன் முடிப்பர்
பொருட்படுத்தா ரெவ்வுலகும் போம். (18)

Koviloor Digital Library

என்றா ரிடரி னிறைஞ்சினா ரேத்துதலும்
மன்றார் துளவோன் வருந்தலென்னே யொன்றாரைப்
போக்கி யிடர்தணிப்பேன் பூவி லவதரித்து
மீக்கிளரும் வானரமா மின். (19)

வானோ ரெவருமிக வானரங்க ளாயடுத்துக்
கானார் வரையுங் கடிதடத்துஞ் சேனை
யுடனடைவீ ரென்றா னுளத்தை வருத்து
மடனடையார் போற்றும் வலன். (20)

மசரதத்தை நேரரக்கர் வாழ்வும் வரனும்
நிசரதத்தா மேவினட நேரே கசரதத்தாம்
சேனைத் தயரதற்குத் தேரும் பொருளாக
நானித் தலத்தனென்ற னன். (21)

வளைதிகிரி பொங்கும் வடவையடல் மங்க
விளைகடவார் பாயல் விரவு மிளைஞர்களாய்ப்
பாதத்தைப் போற்றப் பரவு மயோத்திதனிற்
சாதத்தைப் போற்றுதுமென் றான். (22)

என்றுரைத்த போதி னெழுந்து பணிந்துவந்தார்
நன்றுரைத்த மங்கலங்க ளோடுசுரர் மன்ற
லமைதுளவத் தாரா னமைத்தான் முதத்தை
எமதுளமுற் றென்றா ரிசைந்து. (23)

போய பொருமலெனப் பொன்னாட்டு மன்புகழ்ந்தான்
தூய மலர்க்கடவு டொல்லமரர் நேயமுற்றுத்
தீர்ந்த முரணென்றார் திருவன் கலுழன்மிசை
வார்ந்தசரண் வைத்தான் மகிழ்ந்து. (24)

என்னைப் பொருளாக வேற்றான் கலுழனிற்போம்
பின்னைச் சுரர்க்குப் பிதாமகன்றான் முன்னைத்தா
னெண்கெனயா னேற்றே னியைந்த படிநீவிர்
மண்கண்வர வென்றான் மதித்து. (25)

Koviloor Digital Library

தருவுடைத்தே கூறுந் தனியெனது கூறு
மருவலர்க்கொல் வாலி மகனு மிரவி
யவற்கிளையா னென்ன வனலி யுரைக்கும்
எவர்க்குமுயர் நீல னென. (26)

வாயுவென்றன் கூறுதிறல் மாருதியா மென்னமற்றோர்
காயுமென்ற மற்கடமாக் காசினிக்க ணேயமொன்றப்
போய்நிலைப்பா மென்றார் புராரியா னேவாத
சேய்நினைப்பீ ரென்றான் சிறந்து. (27)

அருளார் கமலக்க ணாதி யருளாற்
றெருளார் கமலன்முதற் றேறவர் மருளார்
வனத்திடை மண்ணகத்து வானரர்க ளானார்
சினத்தினடு வீரர் தெரிந்து. (28)

ஈதடுத்த முன்ன மிமையோர்க் கருட்கடலான்
தாதடுத்த முல்லைகுல்லைத் தாரினொடு மாதர்
கமலைகொண்ட மார்பன் கடவுண் மொழியை
அமலனண்டித் தேர்ந்துரைப்பா னங்கு. (29)

மன்னவனே யுந்தன் மரபைப் புரப்பதற்கு
முன்னவனே வந்து முறைபுரியும் பொன்னும்
புதல்வர் தமைக்கொண்ட பொற்புடைய வேள்வி
முதல்வர்தமைக் கொண்டுபுரி முன். (30)

என்னமுனி கூற வெழுந்த வுவகையுடன்
மன்னவனு மாமுனிதாள் வந்தனஞ்செய் தென்னை
இனியான் புரிவ திசையென்றான் காட்சிக்
கினியான் பரிவொ டெழுந்து. (31)

திருகலைக்கொள் பூவார் செயலறியாச் சீல
னொருகலைக்கொம் புற்றமுனி யோங்கு முருகலைக்குந்
தேஞ்செய் பொழிலங்க தேசத்தின் வந்தளித்தான்
வாஞ்சை மொழியை மணம். (32)

Koviloor Digital Library

வறுமைபோய் வானம் வழங்க வருந்துஞ்
சிறுமைபோய்த் தேயஞ் செழிக்கச் செறிகுழலாள்
போற்றமகிழ் செய்யும் புரிதவனே யீங்குவரின்
ஏற்றமகஞ் செய்யு மிசைந்து. (33)

என்றமுனி வல்லவனை யேற்றி மகிழ்ந்துமனத்
தென்றமுனி வில்லவனை யீண்டழைப்பே னென்றுமனன்
மாமணித்தே ரேற வழுத்தினார் வானவர்கள்
பூமழைத்தேன் பூவிற் பொழிந்து. (34)

செங்கோலான் வந்த செயலறிந்து ரோமபதன்
பொங்கோதம் போலறிஞர் போற்றிவரத் தங்கோன்
எதிர்கொண்ட மேலானுக் கெண்ண முரைத்தான்
கதிர்கொண்ட வேலான் கதித்து. (35)

அருந்தவனை யானழைத்தங் காக்குவே னாக்கம்
பொருந்தவென மன்னவனைப் போக்கிப் பெருந்தவனைப்
பாதம் பணிந்தான் பரிந்தவர மென்னென்றான்
போதம் நிறைந்த பொருள். (36)

புறவொன்று பொற்றலையிற் புக்கவனைப் போல
வறனொன்று நன்மனத்தா னை திறனொன்று
செங்கோற் றயரதவேள் செல்வநகர் சென்றுவரல்
பொங்குவர மென்றான் புகழ்ந்து. (37)

என்றுபணி மன்னனுரை யேற்ற வருட்கடலான்
என்றுபணி தேசி னியறவனு நன்று
வரந்தந்தோ மென்றான் வரதற் புகழ்ந்தா
னுரந்தந்த தோளா னுகந்து. (38)

தேர்கொணர வந்த திருவினொடு மேறி
ஏர்கொணகர் வந்த விசைமுனியைச் சீர்கொணரும்
தாமான் சிருங்கமுடைத் தாபதனைச் சார்ந்துவந்தான்
பூமான் பொருந்தவெதிர் போய். (39)

Koviloor Digital Library

கசட்டு வினைத்தொழிலர் கள்வரா மைவர்
அசட்டர் களையறுவ ராக்கும் வசிட்டனுடன்
மாதவன்கால் போற்றி மரபரசு வாழுமென்றான்
ஆதவன்கால் போற்று மரசு. (40)

என்றரசன் வாய்மைக் கிரங்கிமுனி யிவ்வுலக
மொன்றரசோ வீரே ழுலகரசாம் நன்றரச
மைந்த ரளிக்கும் மகத்தைப் புரியென்றான்
சிந்தை களிக்குந் திறன். (41)

வேண்டுங் கலப்பைகொண்டு வேள்வித் தலம்புரிந்து
மீண்டும் புனல்படிந்து வேதமுறை யாண்டரச
னீராறு திங்க ளியற்ற நபத்தமரர்
சீரேற வந்தார் தெளிந்து. (42)

மகவருளு மாகுதியை மன்னி வழங்கத்
தகவருளும் பிண்டமதைத் தாங்கி மிகவருளி
வைத்தகன்ற பூதம் வளருந் தனஞ்சயனில்
முத்தனென்ற மாமுனிவன் முன். (43)

சிருங்க முனிபணியாற் றேவியர்க்குத் தேர்மன்
தருங்கனகத் தட்டுறுசா தத்தைப் பரிந்தளிக்கப்
பாதியங்கு கொண்டாள் பரவி யமரர்தொழத்
தாதியங்கு தார்க்கோ சலை. (44)

கைகயன்றன் மாது கரத்து மதிற்பாதி
செய்கையொன்று மன்பாற் சிறந்தளித்தான் பொய்கை
நதிசேர் பொழிலு நகுமோதி மஞ்சார்
துதிசேர யோத்தியர சு. (45)

நமித்திரரை யட்டு நலங்கொண்ட மொய்ம்பான்
நிமித்திருவி னேர்மரபா னேயச் சுமித்திரைக்கு
முன்போ லளித்து முதிர்விற் பிதிர்ந்ததையும்
அன்போ டளித்தா னவட்கு. (46)

Koviloor Digital Library

பல்லியங்க ளார்ப்பப் பரிந்தரசன் வேள்விமுடித்
தெல்லியங்கு பேரவைக்க ணெய்தியே சொல்லியங்கு
மந்தணர்க்கு மாரியர்க்கு மான்ற பெருநிதியந்
தந்தளிக்கு மாரியெனத் தான். (47)

அரியகலைக் கோன்வதிட்ட னாணையினாற் காணும்
பெரியகலைக் கோட்டுமுனி பேணுந் துரியநிலைத்
தாள்வணங்கிப் போற்றித் தவமுடைய னென்றான்
வேள்வணங்கிப் போற்றுமெழில் வேந்து. (48)

வந்த முனிவரொடு மாமுனிவன் சென்றபின்றை
சந்த முனிவரர்க டாள்வணங்கிச் சுந்தரஞ்சேர்
மன்னுவகை கொண்டு வழிமுறைசெய் தானுலக
மின்னுவகை கொள்ள விழைந்து. (49)

தெரிவையர்கள் மூவர் சிறிதுநாட் சென்று
மருவும் வயாவின் வருந்தித் திருவார்
மதியொப்ப தாமுகமுன் மன்னு தனுவுந்
ததியொப்ப தாகவிருந் தார். (50)

இலகுங் கழைகடக மேற்றம் பொருந்த
வலகின் மறைகட் கறியா னுலகாள்
பெருமனையே யீன்றாள் பிறங்கரசற் காக்கந்
தருமனையே யாங்கோ சலை. (51)

ஆசையொடு விண்ணு மமரர் பணிந்தேத்தப்
பூசமொடு மீனம் பொலிவெய்த நேசமுடன்
நல்கினாள் கைகயன்ற னங்கை யருட்சேயைப்
பல்குநாள் பார்த்துப் பரிந்து. (52)

ஆயிலியங் கற்கடக மான்ற பெருமையுற
வாயிலிய மெங்கு மளக்கவே வேயை
விளையவனை தோளாள் விமலை யிளையா
ளிளையவனை யீன்றா ளிசைந்து (53)

Koviloor Digital Library

ACC. NO: 1235

பாரோங்கத் தொன்மைப் பலமறைகள் போற்றமிகு
சீரோங்க நன்மை செழிக்கவே நேராம்
மடங்கலொடு மாமகமும் வாழப்பின் னீன்றாள்
விடங்கலுழ்வேற் கண்ணாள் விழைந்து. (54)

அந்தணர்கள் சாதகத்தை யன்றே வரையவும்பர்
வந்தனஞ்செய் தேவகுரு வாழ்த்தெடுப்பச் சிந்தை
யுவந்தரச னீராடி யொண்பொருளும் வித்தும்
நிவந்தளித்தான் பூசுரர்க்கு நேர்ந்து. (55)

தவிர விறைசமையேழ் சாலைபொன்றுழ் நீக்கிக்
கவர வறியோர் கடலாய்த் தவருடைய
தானை செலவொழியத் தாரரச ரேகவென்றான்
வானை நிலவுபுகழ் மன். (56)

ஆலயங்க ளந்தணர்கட் காக்கக் கடவுளர்க்குக்
காலையங்க மாலையங்கங் காத்தலொடு மேலும்
திருவிழவு செய்கவென்றான் செல்வக் கொடையாற்
றருவிழைவு செய்கையர சன். (57)

ஆர்த்தார் முறைமுறையா யன்பிற் புளகமுடல்
போர்த்தார் பொருளைப் புகன்றவர்க்குச் சீர்த்த
வருளுடைய ராயுதவி யன்படுத்து நின்றார்
தெருளுடைய சிந்தை செழித்து. (58)

இத்தகையே மாநகர மீராறு நாள்களினுஞ்
சித்தமகிழ் சேரச் சிறந்தநாள் மெய்த்தவனும்
நாமம் விதிப்ப நயந்தான் சுயந்தரவே
ஆமுன் விதியை யறிந்து. (59)

கராமலையக் கைக்கரிக்குக் காட்சி யளித்த
வராவணைய னான வரிதா னிராமனெனப்
பேரளித்தான் கோசலைமான் பெற்ற பரம்பொருட்குச்
சீரளித்த மாமுனிவன் றேர்ந்து. (60)

Koviloor Digital Library

கரதலத்தார் நெல்லிக் கனிநே ரிதையன்
சுரதலத்தார் போற்றுஞ் சுமுகன் வரதனுக்குப்
பன்னிஞ் ஞமம் பரத னெனவரனே
மன்னிஞ் ஞமமுனி வன். (61)

வஞ்சமருள் வாளர்கெட வானோர் துயர்தணிபத்
தஞ்சமருள் வானரசன் றன்பகையை எஞ்ச
விலக்குவநா மென்ற விளங்கொளியி ஞம
மிலக்குவனு மென்று னிசைந்து. (62)

இவ்வொளியா லெவ்வுலகு மேத்து வருத்துகொடுந்
தெவ்வொழியு மென்று தெரிந்தருளி மௌவலொடு
முத்துருக்கொள் புன்முறுவல் மொய்ம்ப னபிதானஞ்
சத்துருக்க னென்றான் தவன். (63)

காவியிடை தாமரையே காட்டிச் சிறந்ததென
மேவியிடை யாவெழிலார் வீரனையே யாவியிவன்
என்றிருந்து வாழ்ந்தா னிசைகொ ளரசுபுரி
பொன்றிருந்து தாரான் புகழ்ந்து. (64)

அரிய முனிவ ரமர ரவனிப்
பெரியர் முதலோர் பிறழ்செய் யிருவினையும்
போக்கிநலஞ் செய்யும் புனித ரிவரென்று
வாக்குமன மொன்றவருள் வார். (65)

கைதவத்தார்க் கெய்தாக் கடவு ளிளவலுடன்
செய்தவத்தாற் பொய்கைநதி தீரமெங்கும் நெய்யும்
குழலூ மிழையுமெனக் கூடி வருவார்
மழலை மழவார் மகிழ்ந்து. (66)

பரத னிளவலிவர் பாங்கிற் பிரியா
ரிரத மிவுளிமறை யேற்ற வரைபொழுதும்
வள்ள லிலையாள் வரத னிளவலென
வுள்ள வருவா ருகந்து. (67)

Koviloor Digital Library

அமுதந் தருகுதலை யஞ்சொ லழகார்
குமுதந் தருவாய்க் குமரர் தமதெனக்கொள்
வேதமொடு நற்கலைகள் மேலா முபநயனம்
போதமொடு கொண்டார் புகழ்ந்து. (68)

இப்பரிசின் மாநகர மேற்ற மகிழ்வுடனே
மெய்ப்புகழ்சேர் தாரிளைய வீரவரர் தப்பில்
அடிபோற்ற முப்பொருளா மாதி சிறந்தான்
படிபோற்ற மேலாம் பரன். (69)

படைக்கலங்க ளெல்லாம் பயின்று பரமாம்
அடைக்கலங்காத் தன்பருளி யாய்ந்தோர் விடைக்கருளி
மேலாம் பதமருளும் மேன்மையொடு தேன்மலிதார்
நாலாங் குமரர்வளர் நாள். (70)

திருவவதாரப்படலம் முற்றிற்று.

கையடைப் படலம்.

கற்பகநாட் டார்களிக்கக் காமருசிம் மாசனமே
லற்பகநாட் டாரரசற் கன்றளிக்கப் பொற்பார்
சுரர்முனிவர் தங்தைபொழி ற்றேன்றச் சினந்த
வரமுனிவன் வந்தான் மதித்து. (1)

வந்தறத்தா னெய்துதலு மார்பி னணியார
மந்தரத்தா ளுமிரவி யஞ்சவொளி யுந்தப்
புகலப் பிரமன் புகவெதிர்ந்த போகி
நிகரப் பணிந்தா னினைந்து. (2)

பணிந்து மணிகுயிற்று பைம்பொற் றவிசி
னிணைந்த மலர்ச்சரண மேத்தித் துணிந்தகொடும்
பந்தமலி தொந்தவினைப் பற்றுவிட்ட முற்றமென்றான்
சந்தமலி சிந்தையர சன். (3)

Koviloor Digital Library

என்போன் முனிவர்சுர ரேதொரிடை யூரடைந்தா
லன்போ டடையுமிட மாவதெவை யின்போழும்
காரரசேர் கையாய் கலைசே ரயோத்தியெனுந்
தாரரசர் போற்றுநகர் தான். (4)

இந்திரனைக் காத்த விசையாய் விசையமிகு
முந்திரனை யொப்பவரை யோதென்றான் சிந்தை
மகிழ்ந்தரச னன்புரிய வந்ததெனை யென்றான்
புகழ்ந்தரச மாமுனிமுன் பு. (5)

தருவனத்தி யான்செய் தவவேள்வி தன்னைப்
பெருவனத்தஞ் செய்து பிழைப்பார் நிருதர்முற்றக்
கொன்றழித்துக் காப்பதற்குக் கோவாமி ராமனையே
நன்றளித்தி யென்றா னயந்து. (6)

எண்ணி றவத்தோ னியம்ப மருமத்துப்
புண்ணி னனல் போற் புகச்செவியிற் கண்ணில்லான்
பெற்றிழந்தான் முற்றுமெனப் பேரான் றுயர்க்கடலி
னுற்றிழந்தான் முற்றுமுயி ரோய்ந்து. (7)

தொடையேற்ற தாரான் றுயர மொருவிப்
படையூற்றந் தேராத பாலன் விடையேற்றேன்
வந்துதடை யொன்றிடினு மாமுனிவ யான்முடிப்பன்
சிந்தைதடை யின்றிமகஞ் செய். (8)

என்றான் முனிவொ டெழுந்தான் முனியிறுதி
யின்றாகு மென்றுசுர ரேங்கினார் குன்றாத்
தவந்தனமாக் கொண்டமுனி தாழாச் சினத்திற்
சிவந்தனகண் டிக்கிருண்ட தே, (9)

கருத்தமுனி வன்சிந்தை கண்டு வசிட்டன்
பொருத்தலுன தென்று புகன்று வருத்தமென்கோ
நன்றடுத்த நின்மகற்கு நாட்டு முருதியெலா
மின்றடுத்த தென்றா னெடுத்து. (10)

Koviloor Digital Library

பெய்யு மழையாற் பெருகி வருவெள்ளம்
மொய்கொள் கடலின் முடுகலெனச் செய்யபுகழ்
நன்றான் மகற்கு நலமருவு விஞ்சைவர
வென்றான் முனிவன் வியந்து. (11)

குருவா சகத்தாற் குமர ரிருவர்
வருவாரைக் காட்டிமுனி வள்ளால் திருவாரும்
தாய்தந்தை நீயிவர்க்குச் சார்ந்தவெலாஞ் செய்கவென்றான்
ஆய்தந்த நேய வரசு. (12)

முந்தையமை மோன முனிவன் முகமலர்ந்து
சிந்தையமை வேள்வி செயற்குறித்து விந்தையமை
வாளெடுத்து விற்றாங்கி வந்த விருவரொடுந்
தாளெடுத்துச் சென்றான் தவன். (13)

மன்னனய மன்னுயிரே மால்கொண்டு வந்தெனவுந்
தன்னனைய மாமுனிவன் சாயையெனப் பொன்னனைய
தம்பியொடு தானுஞ் சரயு நதிகடந்து
தும்பியடர் சோலைவந்தான் சூழ்ந்து. (14)

மாதவனைப் போற்றி மறையோர் மகம்புரியும்
சோதிவனை தூமமுற்ற சோலையெய்தி யோதும்
பெருமையுரை செய்கவென்றான் பேராண்மை கொண்ட
தருமதுரை மால்காகுத் தன். (15)

கையடைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

தாடகை வதைப் படலம்.

திங்கள் மருவுசடைத் தேவன் மதனனைமுன்
அங்க மெரிகொளச்செய் அங்கணு டெங்குமல
ரோதிமிகு மாதவர்க ளோங்கத் தவம்புரியுஞ்
சோதிமிகு தேமென்றான் சூழ்ந்து. (1)

பற்றறிந்தோர் போற்றும் பரனிருந்த தேத்திருந்து
கற்றறிந்தோர் போற்றவரு காலையிலே முற்றறிந்தோர்
வேணிலென்ற கானலொன்றே மேலரிது வேரிருது
தாணிலென்ற காணிலடைந் தார். (2)

வான்மழைமே லம்பும் வடிவேன் முதற்படைக
டான்பொழிய வாகவத்திற் றுக்கலின்றி மேன்மையிலா
வஞ்சர்வினை மிஞ்சிவர மானமணி யானதிழந்
தஞ்சினவர் நெஞ்செனவே யாம். (3)

பேய்பிளந்த தொத்த பெருங்கள்ளிக் காரகிலும்
வேய்பிளந்த முத்தும் விடவரா வாய்பிளந்த
செம்மணியுந் தம்மிற் செறிந்த வனமெங்கு
மம்மணியும் பேய்த்தேரி னும். (4)

புழுங்கும் பசியாற் புரளு மரவு
விழுங்க வெதிர்விரித்த வேவாய் முழங்குகரி
போய்ப்புகுந்த துய்யப் பொரியு மெரிசுரத்திற்
றீப்புகுந்த செய்கை தெரிந்து. (5)

இருவினையு முப்பகையு மேற்றலின்றி யோகம்
புரிவினையர் தம்மனமும் பொன்னை வருவிலைகொள்
பூவையர்க டம்மனமும் போலப் பசைவறந்த
தாவமிகு பாலைவனந் தான். (6)

Koviloor Digital Library

எரிந்ததுனி வெஞ்சுரத்தி னேகு மளவி
லருந்தவனு மாற்ற லதிகம் பொருந்தினர்க
ளொன்றுலு மென்றேக ரென்றிரண்டு விஞ்சைதனே
ஈன்றான தென்று னவின்று. (7)

தாவத்தைக் கொண்டநெறி தண்புனலிற் சாரலொத்த
மாவித்தை கண்டு மகிழ்வள்ளல், பூவி
னிழிவான திந்தநில மெந்தவித மென்ன
மொழிவா னமல முனி. (8)

இயக்கர் குலத்தா னெழிலுடையான் வெம்மை
மயக்கில் சுகேதுவெனு மாண்பான் நயக்கவரு
புத்திரனு மென்று புரிந்தான் றவம்வேதன்
புத்திரியா மென்றான் புனேந்து. (9)

பூமடமான் பொற்பும் புகர்மலேயீ ரைஞ்ஞூறு!
தாமடன்மா வல்லமையுந் தாங்கியே கோமடங்காக் [கொண்ட
கொங்கையெழில் கூரகலங் கொள்ளேகொண்டு கொள்ளே
மங்கையெழில் கண்டான் மகிழ்ந்து. (10)

தன்கிளேக்குச் சுந்தன் றகுதி யெனவளித்தான்
பொன்கிளேக்கும் பூணுள் புரிவயினின் கொன்கிளேக்கும்
மாரீச னென்று மருட்டுஞ் சுபாகுவென்றும்
பேர்நீசர் வந்தார் பிறந்து. (11)

மாயமக்க டன்பால் மகிழ்ந்த வியக்கனிகல்
தூயகத்தி யன்பாற் றுடைவையண்டித் தாய
வழைவிழையு மான்முதல மாய்ப்ப மடித்தான்
தழல்விழியிற் சாம்பரெனத் தான். (12)

மற்றவனு மிற்றவுடன் மைந்தரொடு பைந்தொடியு
நற்றவனே யெற்றுமினி நாமென்று பற்றவுடன்
வேலே குடங்கையிடு மேலோன் முனியநின்றார்
சால கடங்கடராய்த் தான். (13)

Koviloor Digital Library

அஃறனேது மின்றியவரான்றே னெதிர் செய்
திறனேது மின்றியுடன் சென்று மறனேர்
சுமாலியிடை நிற்கியாந் தோன்றலென வேன்று
ரமானியிடை நிற்கு மவர். (14)

வசைமுகந்தார் வாழுதலம் வாடி வருந்தித்
தசமுகன்றன் சார்ந்தபின்னர்ச் சார்ந்து நிசிசரராம்
பாதகத்தைச் செய்வதன்றிப் பாருலகெ லாம்வருத்தக்
கோதகத்திற் கொண்டார் குறித்து. (15)

இலங்கை யரசுபணி யேற்றெனது வேள்வி
விலங்க லரசுவலி மேயாள் கலக்கவட்டா
ளங்கநில மெங்கு மழித்தா ளரசுசெயுங்
கங்கநில வும்பேய்க் கணம். (16)

முன்னுலகி னின்ற முறையா முயிரெவையுந்
தன்னுயிர்போற் றங்குந் தயாநிதியே யென்னினியான்
பேசும் வயினென்னும் பேரா துயிரனைத்து
மேசும் வயினி னிடும். (17)

அங்கிறைவன் பன்ன வதுகேட்டி ராமனுடன்
கொங்குறைபூஞ் சென்னி குலுக்கியே யெங்குறைவ
தித்தொழிலா ளென்று னிதுவரையென் றுனங்கி
முத்தொழிலா னின்றான் முனி. (18)

சிலம்பு சிலம்பிற் செறித்த கழலாள்
சலம்புகவே யந்தகனுந் தாழ விலங்கலடுங்
கால்கொண்டு வந்ததெனக் கண்டோர் நடுங்கநெடுங்
கால்கொண்டு வந்தாள் கலித்து. (19)

கண்டா னிராமன் கடுந்தொழிலா ளென்றாலும்
பெண்டா னெனமதித்த பெற்றிதனைக் கண்டமுனி
தூவெடுத்த வாயாள் சுரர்முனிவர்க் கோர்கூற்றும்
ஏவெடுத்தெய் யென்று னிசைந்து. (20)

Koviloor Digital Library

சொல்லொத்த வேகச் சுடுசரமெய்ச் சோதிவள்ளல்
அல்லொத்த மேனியண்மே லாக்கவே கல்லொத்த
நெஞ்சிற்றங் காது செறித்துப் புகுமேலோர்
வஞ்சர்க்குச் சொற்றமொழி வாய்ந்து. (21)

பொடியியற்றுங் கானமெங்கும் பொங்கிரத்தம் போர்ப்பத்
தடியெயிற்றுத் தாடகையாள் சாய்தல் முடியரக்கன்
வெற்றிவிழு மென்றுக மேவுந் துவசமடி
யற்றுவிழு மென்று மடித்து. (22)

இருக்கைபெற்றே மின்னே யிடையூரே துன்பா
விருக்கைபெற்ற வாயுதங்க ளெல்லாந் திருக்கைபெற்ற
வள்ளலிரா மற்கு வழங்கென் றுரைத்தகன்றார்
உள்ளலினுந் தேவ ருகந்து. (23)

தாடகை வதைப்படலம் முற்றிற்று.

வேள்விப் படலம்.

நாட்டமுற்ற தேவர் நயந்தருளிச் சென்றபின்னர்
கோட்டமற்ற மாமுனிவன் கோமகற்குக் கோட்டையூர்
முத்தையா மைந்தன் முதல்வனிரா மன்மொழிபோற்
சத்திமிக்க வாயுதந்தந் தான். (1)

மேவியினி நீங்ககிலேம் வீர விதியினெம்மை
ஏவினவை செய்து மிளையவன்போ லேவும்
தரமுடைய தேவவெனச் சார்ந்து பணிந்த
பரமுடைய தெய்வப் படை. (2)

இனைய நிகழ விருகாதஞ் சென்றார்
துனைய வரவமிதென் சொல்வாய் முனைவவென
மானதத்திற் றேன்றி வருசரயு கோமதியோ
டானதித்தா னந்தானென் றான். (3)

Koviloor Digital Library

போனாதன் பின் புனிதநதி கண்டுவள்ளல்
தேனுறு மின்னதியா தென்னமுனி கோனும்
பிரமன்றன் மைந்தன் பெரியோன் குசன்பாற்
றரமைந்தர் நால்வர்கள்வந் தார். (4)

குசனும் குசனுபன் கோமான தூர்த்தன்
இசைவாய் வசுவென் றிவருட் குசநாபன்
நூறுபெண்கள் பெற்று னொடிவரையின் வந்துவந்து
கூறுபெண்கட் காக்கினன் கூன். (5)

பிரமதத்தற் கீந்தான் பெரியோ னருளாற்
றரமதித்த பேரழகு சார்ந்தார் வரமனுற்ற
வேள்விதனைச் செய்ய விரைந்தடுத்தான் காதியெனும்
வாள்விசயக் கொண்ட வலன். (6)

அன்னவற்கி யானு மமலை கவுசிகையு
முன்னுதிக்க வந்த முதன்மகளுந் தன்கணவன்
சொல்லா னதியாகித் தோன்று மிதுவென்று
நல்லா னுரைதந்த னன். (7)

மைம்மலியுஞ் சோலைகண்டு வள்ளற் கெடுத்துரைப்பான்
பொய்ம்மலியு நெஞ்சிற் புகுதலிலாச் செம்மல்
அரிபெரிது நூறூழி யான்றதவஞ் செய்தான்
தெரிவரிது சீமான் செயல். (8)

மாவலியா மன்னன் மகம்புரிந்து மாதவர்பா
லோவலிலா வள்ளியரி னேங்கினன் தேவர்தொழ
மாமனமாம் பூமருவு மாலறிந்து காசிபன்பால்
வாமனமாப் பூமருவு வான். (9)

முப்புரிநூல் முஞ்சியொடு முன்விஞ்சை கற்றுவரு
செப்பரிய வங்கியுறு, செங்கரத்தா னெப்பரியார்
போற்றுபுகழ் மெய்யன் புரிதான மேற்றவற்கும்
ஆற்றுபுகழ் செய்தா னறிந்து. (10)

Koviloor Digital Library

ஓரடியா லிவ்வுலகு மோரடியா லவ்வுலகுஞ்
சீரடியா லன்பன் சிரமுமாய் நேரடையும்
பாதலத்திற் சேர்த்தான் பரிவுற்ற விந்திரனை
மீதலத்திற் சேர்த்தான் விரைந்து. (11)

என்றுரைத்து வேள்விக் கிடமிதென வீரர்தமை
நன்றுரைத்து நற்காவ லூட்டியே துன்றும்
பொருள்கொண்டு மாமுனிவர் போற்றப் புரிந்தான்
தெருள்கொண்ட மாமுனிவன் றேர்ந்து. (12)

எண்ணவர்க்கச் செய்யபுக ழேற்றவிரு மூன்றுதினம்
விண்ணவர்க்குச் செய்முனிவன் வேள்விதனை வண்ண
விழிக்கிமைபோற் காவல் விழைந்தார் மனுநூல்
வழிக்கமைமா மன்னன் மகார். (13)

காத்து வருமினிய காளையரின் வேளையயா
னேத்து வருமுனியை யேத்தினு ளூர்த்துவரு
நோய்திறலார் வந்து நொடித்தலெந்த நாளென்றான்
வாய்திறவான் மோனமுனி வன். (14)

பார்த்தான் விசும்பைப் பருவ வெழிலியெனப்
போர்த்தா ரரக்கர் புரிமாயந் தூர்த்தார்
வரக்கூடு மென்றுரைத்தார் மாமுனிவர் வள்ளல்
சரக்கூட மொன்றுதகைந் தான். (15)

கவித்தனன்கை வள்ளல் கலங்குவதென் னென்று
செவித்தலங்கை சேர்த்தான் சிலைநாண் புவித்தலத்தைச்
சேறாக்கி னுன்குருதி சிந்த வரக்கர்சிரங்
கூறாக்கி னுன்மலையாக் கொண்டு. (16)

தெய்வத்தை யொத்தசரஞ் சேர்த்தொருவ னைக்கடலிற்
பொய்வைத்த சித்தம் புகப்போக்கி மெய்வைத்த
வாளி யொருவனையே மன்னவையின் வைத்தகளங்
காளியொடு பேய்கணடிக் க. (17)

Koviloor Digital Library

மாதவர்க ளாசி வசன மழைபொழிந்தார்
பாதவமும் பூமழையைப் பாலித்த வேத
முனியு மகத்தை முடித்துத் துதித்தான்
கனியு மகத்திற் களித்து (18)

எனக்குரிய பாக்கியமென் றெண்ணலன்றி வென்றி
யுனக்குரிய தொன்றோ வுலகம் தனக்குரிய
வாழ்வுதனைச் செய்யும் வரத சரதமிந்த
வேழ்விதனைக் காத்த விதம். (19)

அரிய தெனவுனக்கொன் றுமோ வுலகிற்
பெரிய தெனமுடித்தல் பின்னர் விரிமருதம்
சூழ்மிதிலை செல்லின் சுரர்க்கு நன்மை யென்றடைந்தார்
தாழ்வதிலை யான வனந் தான். (20)

வேள்விப் படலம் முற்றிற்று.

அகலிகைப் படலம்.

துன்றுபொழில் கண்டிதனைச் சொல்லவென வல்லமுனி
யன்றுதிதி காசிபனை யண்ணியே யென்று
மவம்புரிந்த தேவ ரடுசுதனை யாக்கத்
தவம்புரிந்த சோலையென்றான் சார்ந்து. (1)

என்றுமுனி கூற வெழுந்த வுவகையுடன்
நன்றுபுனை தேவர் நலிவெய்த வென்றிபுனை
புத்திரரை வேண்டிப் புரிந்ததவ மென்னென்றான்
மித்திரரை யாண்டதிறல் வேள். (2)

பொன்னிருக்கை சென்று புகழ்பாடி மாலை கொண்டு
மின்னிருக்கும் யாழினிடை வீக்கியே தன்னிருக்கை
வந்தமுத விஞ்சை மகளை வணங்கி முனி
கந்தமுதன் மாலைகொண்டான் கை. (3)

Koviloor Digital Library

தெய்வத் திருமுடியிற் சேர்தெரியல் சேர்ந்ததுமென்
மெய்வைத்த வாழ்விதென விண்ணுலகிற் பெய்யும்
மதமலைமேல் வந்த மகவானுக் கீந்தான்
கதமலையாந் தூர்வாசன் கண்டு. (4)

இந்திரன்கை மாலைதனை யேற்ற பகடடியாற்
சிந்திவரல் கண்டமுனி சீற்றத்தாற் சிந்து
புகுந்தொளிக்கச் செல்வம் புருடோத் தமன்பின்
பகுந்தளிக்கக் கொண்டனரும் பர். (5)

பின்னு மமுதுண்ட பெற்றியினாற் றானவரைப்
பன்னு மமரரடப் பார்த்ததிதி யின்னும்
அமரர்க் கரியா யகட்டிற் புதல் வன்
அமரத் தவம்புரிந்தா ளாங்கு (6)

வாட்டந் தவத்துணர்ந்து வானரச னுட்புகுந்தா
னீட்டுந் தவத்தி னெழுகூறாய் வீட்டி
மருத்துவர்க ளென்றவரை வானோரிற் கூட்டி
மருத்துவன்றான் சென்றான் மகிழ்ந்து. (7)

அந்தவிட மாகு மனக னரனுதற்கண்
தந்தபொறி கங்கைவழி சாரவன்னி வந்து
சிரவணக்கங் கொண்ட திருமுருகன் சேர்ந்த
சரவணக்கஞ் சாரலிது தான். (8)

என்று முனிவ னிசைத்தான் சுரநதியை
நன்றுமுனங் கண்டு நவிலென்ன வுன்றன்
குலத்தான் பகிரதனுங் கோமான் றவத்தி
னலத்தால் வருமின் னதி. (9)

அறனில்லா ராறயுத ரான்ற கபிலன்
புறனில்லார் தீவிழியாற் பொன்று மறனெல்லை
யோர்ந்துலையு மன்ன னுவந்து தவம்புரியச்
சார்ந்துலகின் வந்த சரித்து. (10)

Koviloor Digital Library

அண்டத்தி னப்பா லகில மளந்துநின்ற
அண்டர்க் கருள் செய்'யரிசரணிற் புண்டரிகன்
போற்றிநீ ராட்டப் புகழ்ந்து சிவனருளை
யேற்றநீ ரிந்தநதி யே. (11)

அன்னந் துடர வரிவையர்க ணீராடும்
வன்னந் துறுமலரார் வாவிகளுஞ் செந்நெல்
வயன்மருதஞ் சூழ வளமிதிலை நாட்டி
னயன்மருவு வெள்ளிடைகண் டார். (12)

கண்ட கருங்கல்லைக் காகுத்தன் காற்றூளி
பண்டுதரு பெண்வடிவம் பண்ணவுடன் அண்டித்
துதித்தா னிராமன் றுகண்மகிமை கண்டு
மதித்தா னிராசைமுனி வன். (13)

தீயிரங்கத் தீவினைசெய் தேவர்க் கரசனங்கத்
தாயிரங்கண் ணுக்கு மகிலிகையா ணேயந்
தருமுனிவன் கோதமன்றன் தன்மபன்னி யென்றான்
திருமுனிவன் சீர்க்கோ சிகன். (14)

முதல்வன் மொழியை முழுதறிந்த மன்னன்
புதல்வன் மொழிவான் புலவன் மதிமாழ்கல்
முன்னைபுக நின்ற முடிவின் வினைப்பயனோ
வென்னைபுக லென்றா னெடுத்து (15)

தையல் விழியுமதன் தன்சரமுங் கொன்புரிய
வுய்ய வழியின்றி யோர்நாளின் மையலுடன்
மான்முனிவ னண்ட மகிழுந்தா ளவளுமுடன்
கோன்முனிவன் கண்டான் குறித்து. (16)

சரமடக்குஞ் சாபமல்லாற் றாங்கரிய சாப
வரமடக்கும் வல்லன் வரவை வெருவிப்
பழிபடைத்தான் பாக்கனெனப் பாய்ந்தான் பதும
விழிபடைத்தா னின்றூண் மெலிந்து. (17)

Koviloor Digital Library

தீச்சிந்த நோக்கிச் செயலுணர்ந்து செய்யமுனி
தூச்சிந்து நின்கணைபோற் சொல்லதனா லேச்சில்லா
வாயிரமா மாதரறிகுறியுன் னூகமென்றான்
தீயுரமாஞ் சிந்தை செயிர்த்து. (18)

நாணத்தால் வேண்டரிக்கு நாட்டமவை யென்றருளி
ஏணத்தாய் கற்றனுநீ யேற்கவென்றான் மாணத்தாள்
மாமுனிவ தீமகதனை மாற்றியரு ளென்றவட்குக்
கோமுனிவு நீங்கியுரைக் கும். (19)

காகுத்தன் செய்ய கழற்றுகளை யேற்றவன்றே
வாகொத்த மெய்யாய் வருமென்றான் ஆகத்தான்
கல்லுடைய மேனி கலைந்து கவுதமன்ற
னில்லுடைய ளானா ளிவள். (20)

இவ்வண்ண முண்டா மிகலடுத்த தாடகைபாற்
கைவண்ணங் கண்டேன் கடலுண்ட மைவண்ண
மால்வண்ண வள்ளால் மதியி லகலிகைபாற்
கல்வண்ணங் கண்டேன் களித்து. (21)

தவனுறையுட் கேளுந் தருணத் தவனு
மிவனுழைவந் தேற்க விகலும் பவத்தைத்
தவப்படையாற் செற்றமுனி சாருமிரா மன்சீ
ருவப்படையச் சொற்றா னுவந்து. (22)

அஞ்சனத்தாம் வண்ண னடித்தா ளடைந்ததனாற்
கஞ்சநத்துங் கண்ணாள் கவினுற்றா ணெஞ்சிற்
குறியா தியற்றுபிழை கோதிலவ ளென்றான்
பொறியாதி வென்றான் புகழ்ந்து. (23)

குணங்க ணிறையண்ணல் கோதமன்றன் றாளின்
வணங்கி வலம்வந்து வண்ண வணங்கையவன்
கையீர்ந்து கண்டான் கவினு முனிவனொடு
மையேந்து கொண்ட மதில். (24)

அகலிகைப்படல முற்றிற்று.

Koviloor Digital Library

மிதிலைக்காட்சிப் படலம்.

மாமலர்மா யான்புரிந்த மாதவத்தாற் போதலுற்றாள்
நீமணந்து கொள்கவென நேர்ந்தழைத்துக் காமர்கொடி
கைகாட்டு மாபோற் கவினு நகர்வந்தான்
மெய்காட்டும் வீரன் விழைந்து (1)

மாதர்க் கணிமடந்தை வந்து வளர்வதனாற்
போதிற் கணியாகப் போற்றிவரு தாதிற்
கமலமெனத் தோன்றுங் கவினார் மிதிலை
விமலநகர் வந்தார் விழைந்து. (2)

கலைமுனிவ னுண்ட கடலும் பலமீன்
நிலைபெறுநல் வானுமென நேருஞ் சிலைநுதலார்
பொற்கலையா ரூடற் புகன்றமணி வீதிவந்தார்
விற்கலையார் வீரர் விழைந்து. (3)

பன்னாட் பிரிந்தணைந்து பன்னு கலவியொசி
மின்னாங் கொடிபோல் மிளிர்ந்திடுவ முன்னாங்கு
மானார் புலர்ந்தெரிந்த மாலை'மலர்தெருவிற்
போனார் புனிதர் புகழ்ந்து. (4)

போகமுட னுண்டு பொருள்கொள்ளும் வேசியர்தம்
பாகமிலா நெஞ்சம் பளிக்கும்போல் வாகைமிகும்
நோக்கம் படக்கருதி நொய்திற் கரமதிற்சே
யாக்கவரு கந்துகங்கண் டார். (5)

கடகங் குழையிழைகள் காதலொட்டம் வைத்து
வடகங் குழைய மணிக்கை யிடைகவரால்
வட்டாடல் செய்யும் வநுவரரைக் கண்டுவந்தார்
கட்டாண்மை வீரர் களித்து. (6)

Koviloor Digital Library

பங்கயமன் றாம்பல் பவளம் பணிநீலம்
செங்கயல்சேர் நெட்டி சினைவரால் பொங்கு
முவமமிகு மங்க முயர்ந்தபெண்க ளாடும்
புவனமிகு வாவிகண்டார் போந்து. (7)

பாகொத்த சொல்லின் பயனுடைய நங்கையர்கள்
வாகொத்த மேனி மலர்கொய்யும் பாகத்தார்
தண்டலையிற் சென்று தனிக்கன்னி மாடமது
கண்டயலி னின்றார் களித்து. (8)

எண்ணற் கரியவெழி லேந்திழையாள் சேர்ந்திருக்கும்
நண்ணற் கரியதனி நாடியே யண்ணலுட
னேக்கினன் மார னுதிசேர் மலர்க்கணையி
னக்கினன் மைய லகத்து. (9)

அணங்கமலை பொற்புறுநோக் காமலர்வண் டண்ண
லிணங்குமலைப் பொற்புயத்தி னேற மணங்கமழும்
கூந்தலாள் கொங்கைக் குலமலையைக் கொண்டடுத்த
ஏந்தலான் கண்வண் டினம். (10)

பருகிய நோக்கமெனும் பாசம் பிணித்தங்
கொருவ ரொருவர்தமை யுள்ளத் திருவரையு
மாறிப் புகுத்த வரிசிலையான் வாட்கணங்கை
தேறிப் புகுந்தார் சிறந்து. (11)

திரண்டதன நங்கை திருமருவு மையன்
இரண்டுதனு வொன்றுயிரென் றேற்றார் கருங்கடலிற்
பள்ளிக் கலவி பரிந்து பிரிந்தவர்க
ளுள்ளிக் கலப்பெ னுவப்பு. (12)

மைந்தொடியை வள்ளல் மருவியணை யாததனாற்
பைந்தொடியு மாவி பதைத்துருகிச் சிந்தை
நிறையைப் புலர்த்தும் நிகரில் வரனும்
மறையப் புலர்ந்தாள் மனம். (13)

Koviloor Digital Library

சோர்ந்தாள் துடித்தாள் துயரக் கடலினிடை
சேர்ந்தாள் திகைத்தாள் தெருமந்தாள் தேர்ந்தாஞ்
மலங்குழைபோற் றோழியர்கள் மாற்றினார் சோகம்
பொலங்குழையைக் கொண்டரிதிற் போய். (14)

கன்னி நகரிற் கமழ்சேக்கை யுள்ளிருந்த
வன்ன மனையா ளவசமுற மின்னும்
வடிவத்தைக் கண்டு மகிழவரு கொண்டற்
படிவத்த னுற்றதுரைப் பாம். (15)

மன்னனெதிர் கொண்டு வரவேற்றல் கண்டுவந்தார்
பொன்னுலவு மாடம் பொருந்தினார் துன்னுமெழில்
வீர னடித்துகளான் மெய்யடைந்த தையலள்கு
மார னடுத்தான் மதித்து. (16)

வந்தசதா னந்தனடி வள்ளல் வணங்கவுடன்
சந்தமறை யாசி தனைப்புகன்று வந்தமுனி
கோசிகன்றான் போற்றிக் குலவு மிதிலைநகர்
மாசிகந்த வென்றான் மகிழ்ந்து. (17)

மாதவத்தோய் கேட்டி வருவள்ளல் தாடகையின்
பூதியத்தை வாட்டிப் புரிதவர்க்கா மேதம்
முடித்தனனுன் னன்னை முதிர்சாபந் தன்னை
முடித்தனனென் வேள்வி முடித்து. (18)

என்றுமுனி கூற விரும்பு தடைந்தவனு
மென்று முனதருளே யேற்றவர்செய் வென்றி
யுரைப்பா ரெவரென்று னுற்றசெயல் வள்ளற்
குரைப்பா னுளத்தி னுவந்து. (19)

முன்னிம் முனிவரன்றான் மூதுலகை யாண்டவரன்
பின்னிம் முனிவதிட்டன் பெற்றிகண்டு மன்னர்க்
குரியதவ மந்தணரே யோங்குவா ரென்னப்
பெரியதவஞ் செய்தான் பெயர்ந்து. (20)

Koviloor Digital Library

கீட்டிசைக்க ணேற்றதவங் கேடார் திலோத்தமையால்
வாட்டமுற வாற்ற மதிமயங்கி நாட்டமுற்ற
தென்றிசைக்கண் வந்து சிறந்த தவம்புரிந்தான்
நன்றிசைக்கண் சிந்தை நயந்து. (21)

திரிசங்கா மன்னன் றெருள்வதிட்டன் சாபந்
தருசங்கை தீரவெனச் சார்ந்தான் வருசங்கை
யின்றியுனை யித்தனுவோ டேற்றுவன்வா னென்றுசெய்தான்
வென்றியுனை வேள்வி விரைந்து. (22)

பண்ணவர்க ளேற்காப் பரிசறிந்தும் பார்த்திபனை
விண்ணுலகி னேற்ற விரைந்தமர ரெண்ணமின்றிக்
கீழாக்க நன்றாக் கெழுமு முவணைதனைப்
பாழாக்க நின்றான் பகைத்து. (23)

பிரம னமரர் பிரிதுடுக்க ளோடு
வரம னமரவைத்து வாழ்த்தி யரசமுனி
யென்றார் முனிமகிழா தேற்றுங் குடதிசையிற்
சென்றான் முனிவைச் செகுத்து. (24)

ஆங்காஞ் சுனச்சேப னம்பரிடன் வேள்விக்குப்
பாங்காம் பசுவாய்ப் பரிந்துவந்தா னீங்காமான்
தன்னைப் பணிந்தான் சரணளித்தான் மன்னவற்கு
மன்னப் பணித்தான் மகம். (25)

வடதிசையிற் சென்று மதிக்குந் தவத்தைத்
திடமிசையச் செய்யுந் திறத்தா லிடமுழுதும்
அக்கினிசென் றேற வமரர்திரி மூர்த்திகளும்
புக்கினிதன் றேற்றார் புகழ்ந்து. (26)

வந்தவர்கள் சந்த மறைமுனிவ னென்றுவரந்
தந்தவர்கள் முந்தத் தவமுனியுஞ் சிந்தை
யுவந்தான் பணிந்தா னுயரமரர் சென்றார்
தவந்தான் புரிந்தான் சகித்து. (27(

Koviloor Digital Library

ஈது நிகழ்ந்த திவன்றுணையா மாமுனிவ
ரேது புகழ்ந்த திவன்சரித மாதவத்தா
னன்னலஞ்சேர் மாமுனிவ னுட்டம் பொழிகருணைக்
கென்னலமு மாகு மிசைந்து. (28)

என்றுளங்கொண் மாமுனிவ னேற்று மொழிகேட்டுப்
பொன்றுளங்கு தாரார் புனிதன்முன் னின்று
துதித்தார் மகிழ்ந்தார் துணையடியை நெஞ்சிற்
பதித்தார் புகழ்ந்தார் பரிந்து. (29)

முனிவரனுஞ் சோதரனு மொய்ம்முரையாற் றங்கட்
கினிய சயனங்க ளேற்றார் தனியே
விரகத்தாற் சோர்ந்தான் விரிபாற் கடலி
னுரகத்தாற் சேக்கையனன் று. (30)

அண்ணலவ னேற்ற வருந்துயர மாற்றவெனப்
பண்ணவர்கள் போற்றப் பனவரெலா நண்ணிக்
கரத்திற்கந் தாங்கக் கவினு முதயன்
தரத்திற்கந் தாங்கிரிவந் தான். (31)

ஊழி தனையடுத்த வோங்குமிரா நீங்கவுடன்
வாழி வினைமுடித்து மாதவன்றாள் தாழ்ந்து
மனக்கினிய தம்பியொடு வந்து சனகன்
தனக்கினிய நம்பியிருந் தான். (32)

சனகர் பெருமான் தவவேள்வி முற்றி
யனகர் முனிவ ரரசர் மனமுவந்து
சூழ விருந்தான் சுருதிப் பொருட்குமரர்
வாழ விருந்தாய் வர. (33)

இருந்தவனை சீரரரு ளேற்ற சனகன்
அருந்தவனைப் போற்ற வவனும் விருந்தவர்நின்
வில்லறிவான் வ...ரார் விரற்றயர தன்குமரர்
நல்லறிவா ரென்று ...னயந்து. (34)

மிதிலைக்காட்சிப்படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

குலமுறைகிளத்து படலம்.

ஆதியெல்லை சேய்மனுவை யாரறியார் சீரறியுஞ்
சோதிவில்லாற் கோவாஞ் சுரபிதன்பா லோது
முயிரனைத்து மோங்க வுயர்ந்த மவனுஞ்
செயிரகத்து மிக்குலத்தாந் தேர். (1)

வேண்டி யளந்தறியா வேத முதல்விபுலை
தாண்டி யளந்த தனிச்சுடரை யீண்ட
வணியரங்கந் தந்த வவனு மிவர்சே
ரணியரங்கஞ் சொந்த வரசு. (2)

தானவர்க்கு முன்னந் தலைகுனிய லானதென
வானவர்க்கு மன்னன் வளர்விடையாய் ஆனான்
கருத்ததனி னின்று கடவுளரைக் காத்த
கருத்தனிவன் முன்னோனாங் காண். (3)

அரசனவன் பின்னோரை யாரளப்பார் சீர்த்தி
விரசனகன் தன்குலத்து வேந்த னரைதிரையு
மல்லானும் போகிக் கமுதங் கடைந்தளித்த
வல்லானு மென்றறிகு வாய். (4)

பெருமைக் கொருமுதல்வர் பேசுமிவர் முன்னோ
ரருமைக் கொருமனுவை யன்னா ரொருவன்
புலிப்போத்தும் புல்வாயும் போந்துநீ ருண்ணத்
தலப்பேற்றை யாண்டதரத் தான். (5)

தானவரும் வானவருந் தாக்குஞ் சமரினிடை
வானவருக் கேற்ற வரைப்புயத்தான் மேனாட்
கரங்கொண்ட விற்பிடித்துக் காத்தா னொருவன்
வரங்கொண்ட விக்குலத்து மன். (6)

Koviloor Digital Library

இன்னுயிர்க்கு மின்னுயிரா யேத்தநிலங் காத்தவரைப்
பொன்னுயிர்க்கும் பூணாய் புகலரிது மின்னுயிர்க்கும்
வேலா னிவர்குலத்தோன் மேற்பரவைக் கேற்றளித்தான்
மாலா யுயிரை மகிழ்ந்து. (7)

மலைத்திடரை மாற்றி மகியைத் திருத்தி
யலைத்திடரைத் தோண்டி யளித்தும் நிலத்திடரைப்
போக்கி யுலகளித்தார் போரிற் பகைவர்தமைத்
தாக்கி யுலகளித்தார் தாம். (8)

தூநின்ற வேலாய் சுடர்செய் யிவர்குலத்தான்
றானென்ற மன்னன் சலசமுறை கோனு
முலகத்திற் பூத்த வுயர்கங்கை யைப்பூ
வுலகத்திற் சேர்த்தா னுகந்து. (9)

சந்திரனை யொத்த தனிக்குடையான் றூர்வேந்த
னிந்திரனை யொத்த விசையுடையான் முந்திச்
செயற்கரிய மாவேள்வி செய்தான் சதந்தான்
புயற்கரிய கையாய் புனைந்து. (10)

சந்திரனை வென்ற தரனு முருத்திரனுஞ்
சுந்தரனை வென்ற சுதந்திரனுந் துந்துவெனுந்
தானவனைச் சாய்த்தவனுஞ் சார்ந்த குலத்துதித்தான்
மானவனை வானிரகு மன். (11)

வில்லென் வரையதனுல் வேர்தென் கடல்கலக்கி
யெல்லென் மணிமுறுவ லிந்துமதி வல்லென்னும்
கொங்கைத் திருவைக் குலமணித்தோள் வைத்தபுய
லங்கைத் திருவ னசன். (12)

அயன்சேய் தசரதனை யாரறிபார் கூறும்
பயன்சேர் குமரரவன் பாலர் நயன்சேர்
இவர்பெருமை யேற்ற வெளிதி லிவர்கைத்
தவர்பெருமை சாற்றவரி தாம். (13)

Koviloor Digital Library

துனியின்றி மன்னுலகைத் தோன்ற வளிப்போன்
தனிவென்றி வில்லான் தருமன் மனுவென்ற
நீதியுடை மன்ன னெடுநாண் மகவிலதா
லோதியுடைந் தின்ன வுளன். (14)

மலைக்கோட்டுக் கொங்கை மடவா ரிரண்டு
கலைக்கோட்ட ரென்று கருதுங் கலைக்கோட்டு
முன்னோன் கருணை முனிவ னடிபணிந்து
சொன்னா னரசன் றுயர். (15)

தார்காத்த குஞ்சித் தனையர் புனையுமணி
வார்காத்த கொங்கை மடவார்பா னீர்காத்த
வேலா வலையுஞ்சூழ் மேதினியைக் காப்பதற்கு
மாலா வருளென்றான் மன். (16)

அவ்வுரையை யாக்கு மனக னருள்புரிந்தா
னிவ்வுலகைக் காக்கு மிசையொன்றோ வெவ்வுலகும்
காக்குந் தனையர்வரு காமர்மகஞ் செய்யென்றா
னாக்குஞ் சமய மறிந்து. (17)

காதலரை யாக்குங் கவினா குதியளித்தான்
போதலரும் வேதன் புகழவே யோதலறுஞ்
பொற்கலத்தார் வெண்சுவைதையோர் பூதந் தரக்கொண்டான்
விற்கலத்தாந் தோளான் விரைந்து. (18)

பொன்னிற் புகலும் புரிகலத்தாம் போனகத்தைத்
தன்னிற் பெரிய தவன்பணியின் மன்னவனு
நன்னுதலார் மூவர்கட்கு நாலுகூ றிட்டளித்தான்
பன்னுதலார் வேந்தன் பயன். (19)

உலகம் புரிபெருக்கத் தோங்குந் தவத்தாற்
கலகம் புரியரக்கர்க் காய்ந்து பலகலைகள்
தேர்ந்தரங்கு போற்றுமிந்தச் சீமானைத் தந்தளித்தாள்
சார்ந்தறங்க டேர்கோ சலை. (20)

Koviloor Digital Library

சரதன் மறைப் பொருளைத் தாங்கு மனத்தான்
பரதன் மறைப்போருளாம் பண்பான் வரதனிந்த
வள்ளலென்ன வுற்றனை மன்கே கயன்மகடா
னுள்ளமொடு பெற்ற ளுகந்து. (21)

அறங்கெடுக்கும் வல்லரக்க ராற்றல் சிதைய
மறங்கெடுக்கும் வில்லெடுத்த மாண்பார் புறங்கொடுக்கும்
ஆற்றலடை யார்க்கருளு மாற்ற லிருவர்தமை
எற்றிளையாள் பெற்ற ளிசைந்து. (22)

கலையாம் பொருளிற் கலைமகட்கு மிக்கார்
சிலையா மறைக்கிவராஞ் செல்வர் நிலையாக
வோங்குமறை காண்பரியார் யோகர் மனத்துறைவோர்
தாங்குமறை நான்கையுமோத் தார். (23)

செங்கோலார் தேரரசன் செல்வர் சிறந்தவரர்
பொங்கோதம் போலும் பொதுமறைகள் பொங்கு
முளத்தா னுபநயன மோங்கமுடித் தோதி
வளத்தான் வதிட்டன் மதித்து. (24)

வேள்விக் கிடையூறு வேட்ட வரக்கர்களை
வாள்வித் தகரிவரால் வாட்டவென்றே நாளுற்ற
தோடகையேய் தாரருடன் தோன்றினேன் தோன்றுமுனம்
தாடகையே நின்ற டலை. (25)

கடலுருவத் தாண்டகைதன் காணும் புயத்தி
னடலுறுவ நோக்கி யறிவாய் மிடலுடையே
தாடகைமா மார்புருவிச் சாரு மலையுருவிக்
கூடகமாஞ் சேரார்க் குறைத்து. (26)

அரக்க ருடற்குருதி யாறடுக்கத் தேரார்
சிரக்குவைசெய் பல்லத் திறலா லரக்கிதரு
மக்களிலே யங்கொருவன் வான்புக்கான் மற்றொருவன்
புக்கவிடங் கண்டவரார் போய். (27)

Koviloor Digital Library

அயனு மறியா தனைத்து மழிக்கும்
பயனு நெறியாம் படைகள் வியனுலகிற்
காய்ந்தாரைச் செற்றுக் கருதியவை முடிக்கு
மீங்கேனு முட்க விவர்க்கு. (28)

கோதமன்றன் பன்னிக்குக் கோல வுருவளித்தான்
போதமொன்று பாதப் பொடியதனல் ஞாதந்
தரலா லுயிர்க்குயிராந் தாதா விவனும்
வரலாறி தென்ருன் மதித்து. (29)

குலமுறை கிளத்து படலம் முற்றிற்று.

கார்முகப் படலம்.

மாற்றமீ தென்புகல்வன் மாயச் சிலைக்குயான்
தோற்றவா ருகத் துள்ங்குமனம் போற்றவென்னே
நோற்றனளா நங்கை நொடிவரைநா ணேற்றினெனே
யேற்றினனும் பவ்வத் திடர். (1)

என்றெதிர்நின் ருரை யெடுத்து வருகவெனக்
குன்றெதிர்நின் ரேராங் குலவீரர் நின்ற
வறுபதி னுயிரவ ராற்ற லுடையார்
தறிமடுத்துத் தாங்கினர்தந் தார். (2)

பூமி முதுகுளுக்கப் போந்த சிலைகண்டு
நேமி முதுசங்கம் நேர்கரத்துச் சாமியன்றி
யெங்கொருவ னுற்று மிவனே யவனென்பார்
மங்கைமணங் காண மகிழ்ந்து. (3)

மேரு மலையடரன் வில்லான தொல்லையென்பார்
சாரு மலைகடையச் சார்ந்ததென்பார் சேரும்
அரவுக் கரசென்பா ரம்பரவில் லென்பார்
வரமிக்க வில்லை மதித்து. (4)

Koviloor Digital Library

என்னிவர்கள் வில்லை யெடுத்துவரச் சொன்னதென்பார்
மன்னிவர்கட் கேது மதியென்பார் சொன்னபடி
செய்யுந் தரத்தனென்பார் சேரார்க் கரியாகு
மையன் றிறத்தை யறிந்து. (5)

போதகத்தைப் போல்வான் பொலிவுஞ் சனகனருள்
மாதகத்தை நோக்கி மகிழ்மனமுந் தீதகற்றுங்
கோதமன்றன் மைந்தன் குறித்து நயந்துரைக்கு
மாதவன்றன் முன்ன மதித்து. (6)

தக்கனன்று செய்வேள்வி தன்னிற் சயம்படைத்த
முக்கணன்கைக் கொண்ட முரட்டனுவை யிக்குலத்தின்
மன்னனன்பால் வைக்க வரபூசை செய்துவந்தார்
மன்னனன்பான் மிக்கார் மதித்து. (7)

கார்முகத்தின் மைந்து கழறுந் திரமுடைத்தோ
வார்முகத்தின் வந்து வளர்தனத்தாள் சீர்முகத்தாள்
பந்தயமா வைத்த பரிசென்றூற் பன்னுமங்கை
வந்தவகை சொல்வாம் வரைந்து. (8)

வேள்வித் தலத்தை விளங்கு மிலாங்கலியாற்
றாழ்வித்த வின்றியுழத் தாத்திரியின் வாழ்வித்த
பெண்ணரசி வந்தாள் பெருமையுறு பாற்கடலின்
விண்ணரசி வந்தாள் விதம். (9)

சித்திரமொன் றுண்டோ தெரிவை யெழிலமையும்
அத்திருவைக் கண்டமர ராதரித்தா ரொத்து
நிலமேந்து வேந்தர் நிகரில் திருவைப்
புலமேந்தி யாய்ந்தார் புகழ்ந்து. (10)

தானைக் கடனெருங்கத் தானக் களிற்றரசன்
மானைக் கருதிவந்த மன்னர்தமை மானைத்
தரித்தான் சிலைநாண் தரித்தானிம் மங்கை
வரித்தாம் வரனென்றே மற்று. (11)

Koviloor Digital Library

வல்வில்லுக் காற்றார் மதனன் வளைகருப்பு
மெல்வில்லுக் கேற்று மெலிந்தரசர் நல்ல
கணங்குழையைக் காதலித்துக் காதுதிறற் போர்செய்
தணங்குழைய ராணு ரகம். (12)

மற்காக்குந் திண்புயத்து மன்னன் மழவிடையோன்
விற்காக்கும் வண்மை விரும்பியே யெற்கால்
படையளித்தார் வானோர் பரந்த பகைக்கு
விடையளித்தான் வேந்தன் விரைந்து. (13)

அன்றுமுத லின்றுவரை யாருஞ் சிலையருகு
சென்றுமிலர் குன்றுவரை நேர்வேந்த ரென்றும்
மணமாகா தென்றிருந்தேம் வள்ளல் வளைத்தால்
மணமாகு மென்றான் மதித்து. (14)

முகம்பார்த் துரைக்கு முனிமொழியை முன்னி
முகம்பார்த்தான் வள்ளல்தனை முன்னோ னகஞ்சேர்
கடுஞ்சிலையைக் காற்றுகளாற் காரிகையாக் கண்டோன்
நெடுஞ்சிலையைக் கண்டா னிமிர்ந்து. (15)

பொழிந்தகன நெய்வழியே பொங்கி முழங்கி
யெழுந்தகன லென்ன வெழுந்தா னழிந்ததுவில்
லென்றிமையோ ரார்த்தா ரிலங்கு தவர்மகிழ்ந்தார்
நன்றமையு மாசி நவின்று. (16)

நாணுடைய வில்லிதுவோ நாட்டு மலையென்பார்
எணுடைய வல்லி யெழின்மலரும் பாணியிவன்
செங்கையிடை சேரிற் சிறந்த புகழென்பார்
மங்கையர்கள் சூழ்ந்து மதித்து. (17)

வள்ளல் மணத்தால் மகிழ்ந்தால் மனமுவந்து
கொள்ள னயந்து கொடுப்பதலாற் பிள்ளைமுன
மாதமையும் பாதி வடிவன் தடிகாட்ட
வேதமையு மென்பா ரிகழ்ந்து. (18)

Koviloor Digital Library

ஞானமுனி நாளு னயந்திருந்த தென்னென்பார்
கோனைமுனி வாரார் குறித்ததென்பார் மானவனு
மிச்சிலைநா ணேற்று மிபமழைத்த மூலமென்பார்
நச்சிலைவேற் கண்ணார் நவிந்து. (19)

தோகை யிளங்கொடியார் சொல்லித் துதிக்கநல்லோ
ரோகை விளம்ப வுவப்பவும்பர் மாக
மடங்கலர சேய்க்கு மகிழ்விடைபோல் வந்தான்
அடங்கலரை மாய்க்கு மரன். (20)

தங்கமலை நேரும் தனுவைத் தரமுடைய
செங்கமலக் கையான் சிறந்தெடுத்தான் அங்கமல
மாதுடைய சீதை மகிழப் புனைபொன்னும்
தாதுடைய கோதையெனத் தான். (21)

தடுத்திமையா நாட்டத்தார் தாமுமொரு தாளிற்
படுத்தமையா நாணேட்டப் பாரா ரெடுத்தகரத்
துற்றதனைக் கண்டா ருடனே வெடியொலியி
னிற்றதனைக் கேட்டா ரிரிந்து. (22)

அமரர் கமலவர னண்டம் வெடித்த
தமரமிது வென்று தளர்ந்தார் நமர்கதியைப்
போற்றலெனை பாதலத்திற் பூமுடிக்கும் போகியிடி
யாற்றலெனக் கொள்ளு மகத்து. (23)

தயரதன்றன் பாலனென்பார் தாமரைக்கண் சாமி
புயலிவன்றன் மேனியென்பார் பொன்னார் பயமார்
கடலுற்றான் தந்திமிசைக் காட்டுஞ் சயனன்
அடலுற்றா னென்பா ரறிந்து. (24)

நம்பியைக்காண் நங்கைக்கு நாட்டம் பலவேண்டுங்
கொம்புதனைக் காண்வாற்குங் கோப்பலதான் தம்பிதனைக்
காணுமென்பார் மேலோர் கருது முனிபதத்தைப்
பூணுமென்பார் மேலோர் புகழ்ந்து. (25)

Koviloor Digital Library

வடங்குழையக் குண்டலங்கள் வானவில்லி னுகத்
தொடங்கு கலைகுழலுஞ் சோர நுடங்கிடைமின்
பூண்டவெழின் மாது புகுந்தாள் கயலிணையி
னீண்டவிழி மாதை நினைந்து. (26)

வந்தாள் வணங்காள் வலத்தா மகிழ்வுடையாள்
எந்தாய் சிறந்தமகி ழென்னென்றாள் சுந்தரிமுன்
சொல்வா ணயந்து துதித்கும் புகழனைத்தும்
வெல்வா ணயனி லிழைந்து. (27)

கல்விக் கடலான் கருணைத் திருவுருவான்
செல்வத் தயரதவேள் சீர்க்குமரன் வில்வாய்
கரும்பன் விரும்புங் கவினுடையா னாற்றல்
வரம்பன்று மென்றாள் மதித்து. (28)

கராமடியச் சக்கரத்தாற் காய்ந்திபத்தைக் காத்த
வராவணையா னென்ன வளிக்கு மிராமனெனும்
பேருடையான் தம்பி பெரியான் முனிவனொடு
சீருடையான் வந்தான் சிறந்து. (29)

பூணியலு மொய்ம்பான் புராரி புகழ்த்தனுவைக்
காணியலு மென்றான் கடல்வண்ண னாணி
பிடித்தா னடுவிற் பெரிதாற்ற றன்னு
லொடித்தா னடுங்கிற் றுலகு. (30)

கோமறைக்கண் மாமுனிவன் கூடவரு கொண்டலென்றுந்
தாமரைக்கண் சாமியென்றுஞ் சாற்றியதா னேமனத்தா
னென்றுமனங் கொண்டா ளெழிலல்குன் மேகலையி
னின்றுகனங் கொண்ட நிமிர்ந்து. (31)

ஆசைச் சனகியின்ன தாக மகிழவரு
நேசச் சனக னினைந்துடனே தேசி
னரியசெயல் கொண்டா னடிவணங்கிச் சாற்று
முரியசெய லொன்றை யுணர்ந்து. (32)

Koviloor Digital Library

உரைசெய் பெரும வுளத்தூற்றான் வேள்வி
விரைவிற் புரிய விருப்போ வரசுமிங்கு
வந்தபின்பு செய்ய மதிப்போ வருளென்றான்
சிந்தையன்பு கொண்டு சிறந்து. (33)

சனக னுரையைத் தவமுனிவன் றேர்ந்தான்
அனக னரசுவர லான்ற பெருமையென
வாழ்வுடையான் வீரம் வரைந்த நிருபமுடன்
தாழ்வடையாத் தூதரடைந் தார். (34)

கார்முகப்படலம் முற்றிற்று.

எழுச்சிப் படலம்.

காற்றெனச்சென் றுற்றார் கடுகி யயோத்திநகர்
ஏற்றனர்கண் மன்ன ரிடைவாயில் போற்று
பவர்க்குரைப்ப மன்னனவை பண்ணுமவர் பின்னு
மிவர்க்குரைப்பச் சென்றா ரெழுந்து. (1)

திருவருண்முன் னெய்திச் சிறந்தபதம் போற்றிக்
குருவருள்செய் கோசிகன்பின் கொண்ட விருவர்களின்
முன்னனகன் செய்கை மொழிந்தார் திருமுகத்தை
மன்னனவை வைத்து மகிழ்ந்து. (2)

இலைமலிந்த பட்டத் தெழுதியவர் தந்த
கலைமலிந்த மைந்தனடல் காட்டுஞ் சிலைவலியைக்
கேட்டு வயிரங் கிளர்வலைய நீங்கமலை
காட்டுமர சன்றோன் களை. (3)

தக்கன் றிடமகத்தைச் சாய்த்த கணிச்சிசிலை
யிக்கென் றிடமுரித்த வேற்றத்தான் மிக்க
தமரத்தா னேற்ற வெடி தாழ்ந்ததெனச் சொற்றான்
சமரத்தார் வேற்கையர சன். (4)

Koviloor Digital Library

வானோங்கு சூரன் வழியா மெமதுமகன்
தானோங்கு மாமிதிலை சார்கவெனத் தேனோங்கு
தார்மன்னர்க் காக்குந் தனிமுரசைச் சாற்றவென்றான்.
தேர்மன்னன் சிந்தை செழித்து. (5)

முரசொலியைக் கேட்டு முழங்கு நகரார்
அரசர் மகளிர்மைந்த ரான்றோர் விரசிவரு
காற்றெறியு மத்தியெனக் காசினியைச் சூழ்ந்துகொண்ட
மாற்றறிய சேனை வளம். (6)

உலகி னிடமிலையா யோங்கு படைமுன்
அலகி லருள் சே ரரசன் நிலவுபொழி
பொன்னகர வாயில் புகுமுன் மிதிலையெனும்
நன்னகர வாயாம் நடந்து. (7)

குடையுடையர் குண்டிகையர் குந்தியடி போற்று
நடையுடையர் நாசியிற்கை நாட்டும் திடமுடையர்
வாரணங்க ளோதியர்கள் வந்தால் வழிவிலகி
ஆரணங்க ளோதியகன் றார். (8)

தேரரசும் யானைத் திரளுங் குதிரைகளும்
வார்முரசும் வேறான வாச்சியமும் சேர
விரைத்த வொலியா லிடையா வருமொன்
றுரைத்த துணரா ருவந்து. (9)

கடலினிடை வந்த கவினார் திருவார்
மடலினொடு சேர்தா மரைபோல் வடுகோக்கங்
கண்டிரைக்கு மாடவர்கள் கண்ணுங் களிவண்டு
வண்டிரைக்கு மானை மதம். (10)

குசைப்பரியுந் தேருங் குலயானை வீரர்
விசைப்பினொடு செல்ல விரிதூள் மிசைப்பரந்து
மாதிரமார் யானை மதத்தொளையைப் போர்த்ததென்று
லோதரிதச் சேனை யுரை. (11)

Koviloor Digital Library

கேடகக்கை வாளுங் கிளரொருகை பற்றிமின்னார்
சூடகக்கை மற்றொருகை தொட்டணைத்து மாடகத்தாற்
சூழியுடை யானைமதத் தொய்யில் கடத்துவராம்
வாழியுடை யாராட வர். (12)

செய்த மடுநீர் சிறைகணிறை யப்பூத்த
நெய்தல் குமுதம் நிகழ்கமலம் செய்ய
விணைசெ யவயவங்கட் கேற்றதென்றார் மாதர்
துணைசெய் கொழுநர்த் தொழுது. (13)

குடைமிடையத் தொங்கற் குழாங்கொடியின் காடு
மிடைமிடைய வெங்கு மிருள முடிபூண்
பணிக்குண் மணிகள் பகலொளியைச் செய்யக்
கணிக்கு மிரவுபகல் காண். (14)

அறலியலுங் கூந்த லமுதுகுக்குஞ் செவ்வாய்
விறலி செயிரியரும் வீணை நறைகாதிற்
பன்னுவர்கள் மேகமெனும் பாடல் பலவகையாய்க்
கின்னரரை யொப்பார் கிளர்ந்து, (15)

நிறைமதியைக் கண்ட நெடுங்கடலிற் றாகிப்
பறைமதிப்பத் தேர்யானை பாய்மா பொறையுடைய
கோமங் கையர்மைந்தர் கூடிச் செலவரச
னேமங் கையர்சென்றார் நேர்ந்து. (16)

கணிசேர் கணிகையர்கள் கார்கோளிற் சூழ
வணிகே கயவரச னன்னம் மணிசேர்
சிவிகைமிசைச் சென்றா டிருவனைய பெண்கள்
குவிகைமிசை கொள்ளக் குறித்து. (17)

தார்பூண்ட வேசரியின் றன்முதுகிற் றேன்றுபயக்
கார்பூண்ட கூந்தலவர் காத்துவரச் சீரார்
குருமணிசேர் பல்லக்கிற் கொண்டுமின்போல் வந்தாள்
இருமணிசே யின்றா ளிசைந்து. (18)

Koviloor Digital Library

செங்கைமயி லன்னஞ் சிறுகிளிகள் பூம்பாவை
சங்கையுறை நீக்கியன்ன சாமரைகள் செங்கைதமிற்
தாங்கிவரு மங்கையரைச் சார்ந்து குமரர்வந்தா
ரோங்கிவருங் காவ லுகந்து. (19)

தூய வதனந் துதிசேர் மதியமென
நேய மதினுடுக்க ணோர்ந்தவென வாயமிகு
மங்கையர்கள் சூழ வரதன் றனைப்பயந்த
நங்கையவள் சென்றா ளயந்து. (20)

கூனிறமாஞ் சிந்துங் குறளுங் குழாங்கொள்ளப்
பானிறமா வன்னம் படர்வவெனத் தேனிறமா
வண்டுதொடர் கூந்தலார் மன்னுபிடி போனடந்தார்
கண்டுதொடர் தேன்மொழியைக் காத்து. (21)

ஆறுபதி னாயிரத்த ராற்றலர சர்க்குறியார்
கூறுமதி மாமுகத்தார் கோதையர்கள் மாறின்றிப்
பாரினிடை வந்த பனிவிசும்பின் மங்கையர்போற்
றேரினிடை வந்தார் சிறந்து. (22)

தேவர்க் கவியமுதஞ் சேரத் தருபெரியோர்
மேவிக் கணக்கிலராய் வேண்டிவரப் பூவை
அருந்ததியின் கேள்வன் அயனென்ன வெண்மை
தருஞ்சிவிகை தன்மிசைவந் தான். (23)

சுற்று முனிவர்குழாஞ் சூழ வருவதிட்டர்ப்
பற்றி வருகுமரர் பான்மைகண்டால் மற்றும்
பொருவரிய மாமுனிபின் போந்த புகழ்சே
ரிருவரியல் பாமு னிசைந்து (24)

நித்தரிய மம்முடித்து நேமியன்றாள் சிந்தைவைத்துச்
சுத்தமறை யோர்க்குநிதி சூழ்ந்தளித்து முத்தணிசேர்
செங்கலசம் பன்னுதனச் சேயிழையார் வாழ்த்தவந்தான்
மங்கலசம் பன்னமன்ன வன். (25)

Koviloor Digital Library

வேதியரெண் ணாயிரவர் மேலாங் கலசமறை
யோதி யுதகமுட னேங்கிவர மேதினியாள்
சீரரசர் போற்றத் திருத்தேர் தனிற்சிறந்த
தேரரசன் சென்ருன் செழித்து. (26)

கண்டிலனு மெம்மையென்பார் கண்டனனு மெம்மையென்
மண்டிலமா னேற்றபுகழ் மன்வரவை யெண்டிசையுஞ் [பார்
சாற்றுமொழி யென்னவரு சங்கந் தொனித்ததென்பார்
போற்றுமொழி மாதர் புகழ்ந்து. (27)

மங்கையர்கள் கண்ணு மலர்மலர மன்னவர்பொற்
செங்கைமலர் சேரத் திகழரசன் புங்கமிகு
கந்தரஞ்சேர் கையான் கலையமைச்சர் போற்றவந்தான்
மந்தரஞ்சேர் தேரின் மகிழ்ந்து. (28)

தேருங் களிறுபரி சேனைவளஞ் சேரவரப்
பாரும் பொறையாற் பரிந்ததனுற் சீரரசன்
பூபாரம் போக்கும் புனித னெனவங்கித்து
மாபார மாக்கு மகிக்கு. (29)

இன்னணமா மன்ன னிரண்டடுத்த யோசனைதான்
பொன்னணவு மிந்துவரை போயடுத்தான் தன்னி
னெருங்கினர் மன்மதனை நேர்மைந்த ரோடில்
மருங்கினர் மாதர் மகிழ்ந்து. (30)

எழுச்சிப்படல முற்றிற்று.

Koviloor Digital Library

வரைக்காட்சிப் படலம்.

கோவைத் தொடர்ந்தவடக் கோடரத்தின் மும்மதத்த
மாவைத் தொடர்ப்படுத்தி மங்கையரை மேவியுற்ற
வந்தனத்தைச் சார வணைந்திறக்கிக் கூடுதற்குச்
சந்தனத்தின் சாரலடைந் தார். (1)

கதங்கொளுவா தேறக் கழறு மிதத்தாற்
பதங்கொ ளமைச்சனெத்தான் பாக னிதங்கொள்ளா
மன்னவனை யொத்த மருண்ட தொருகளிறு
தன்னைவனை யுன்மத்தத் தால். (2)

அலகிலவாம் யானை யளவில் பிடிகள்
திலக மணிகுருளை சேர்ந்த வுலவைவனத்
தூதமே யொத்தனவவ் வூதத் தலைவனென
வாதுமே சந்த்ரசயி லம். (3)

தெருண்ட பெரியோர் சிறியவரைச் சேரின்
மருண்டதர மாற்றல் வழக்கே யுருண்டதன்வாய்
தோறுமெல்லைப் பொன்னுருளை தொட்டுறைத்த லாற்கருமை
கூறுகல்லைப் பொன்னிறமாக் கும். (4)

வாசிகளி னின்றிழிந்து வானன்னம் போலொதுங்கித்
தேசிகவா வாபரணஞ் சேர்ந்திலங்க வாசமிகு
மாத்தளிர்பூச் சேரு மரநிழல்சேர் மங்கையர்கள்
பூத்தலர்கொம் பொத்தார் பொலிந்து. (5)

தாமரைதா னென்னத் தளிரடியி னும்முகத்துங்
காமருவண் டார்ப்பக் கலங்கினராய் வாமவுருப்
பாரைப் பளிங்கினுறப் பார்த்துவரு தோழியர்கள்
சோரத் துயின்றார் துடர்ந்து. (6)

Koviloor Digital Library

மின்போ லிடையார் விளங்குமயி லாஞ்சாயல்
பொன்போற் பரிபுரங்கால் போற்றிவந்தா ரன்பாய்க்
கடிபுகுந்த தாமரையாள் காமர்மலர் நீங்கிக்
குடிபுகுந்த தாகக் குறித்து. (7)

உண்ணமுத மூட்டி யுரியோர் நகர்கொணர்ந்த
துண்ணென் முழக்கமொடு தோன்றிவந்த மண்மகடன்
மார்பினணி வன்னசர மாக வயப்பரிகள்
யார்பிலகு பந்திநிறைத் தார். (8)

ரலேக மென்ன நிகரில் திரைநிரைத்தார்
ஆர்கலிபோற் றந்தனர்க ளாவணங்கள் காரிற்
களிறகைத்தார் வேறு கடுகிவரு வேகத்
தளிர்சிறத்த வாசிநிறைத் தார். (9)

நடிக்கு மயிலன்ன நங்கையருஞ் செங்கை
வடிக்குமயி லாரு மயங்கி யிடிக்கும்
முரசக் குரலின் முரல்சங்கி னலும்
அரசர்க் குறுநகர்கண் டார். (10)

மிதிக்கவரு தூளியினல் மேவிவரு மெய்யைச்
சுதைக்கனுரை யொத்தவளத் தூசா லுதிர்த்தார்
இளங்குமர ரோவியங்க ளேற்றுப் புதுக்கும்
வளங்குலவ மாதர் பொலி வார். (11)

தாளார் கிரியிழிந்து தன்தரைசேர் கோளரிபோல்
வாளார் கரியிழிந்த மன்னவர்கள் பாளைவிரி
யொத்துலவு சாமரைக ளோங்க விரைந்கடுத்தார்
தத்துபட மாடந் தமில். (12)

காமர் பொருப்பிற் கவினுறற விஞ்சையர்கள்
தாமறியார் தம்மினத்தைச் சார்ந்துற்றார் கோமலரு
மங்கையரு மாந்தர்களும் வானோ ருடன்வரலா
லங்கமலர் நாடென்ன லாம். (13)

Koviloor Digital Library

வெயிலி னிறங்குறைய மின்னலொளி மேவப்
பயிலு முருவுடைய பண்பார் குயிலுடனே
பேசிச் சிலம்பிற் பிரதித் தொனிமருவ
மாசின் மயிலின்வரு வார். (14)

தாளிற் கழல்சிலம்பத் தாரி லளிசிலம்ப
வாளிற் புடைதுலங்க வாகைமிக்க வாளரிபோல்
மாமலைப்பாங் குள்ள வளங்க டமைநோக்கித்
தாமலைப்பார் மைந்தர்தரத் தார். (15)

பொங்கு மதுநுகரும் பூஞ்சிமிரா மென்றுரைக்க
வெங்குமைந்தர் மாதர்களு மீண்டியே துங்கவரைச்
சூழலக மெங்குஞ் சுழன்றுதிரிந் தாடினார்
வாழுலக லீலை மகிழ்ந்து. (16)

சுற்றிவளைத் தன்னவங்கள் சூழ்கனகக் குன்றதனைப்
பற்றிவளைத் தென்னப் படர்சேனைக் கொற்றவர்கள்
தேவியர்கள் மற்றவருஞ் சேர்ந்து மலைகாணு
மோவியந்தாஞ் சொல்வா முகந்து. (17)

வான்பணைத்த கோட்டின் வளருந் தருவினிடை
தான்பணைக்கை நீட்டித் தழையொடித்துக் கான்பணைத்த
தும்பியுயி ரன்ன துணைசேர் மடப்பிடிக்குப்
பம்பிக் கொடுக்கும் பரிந்து. (18)

பண்மலருஞ் செவ்வாய் படியுங் கொடிச்சியர்க்குக்
கண்மலரும் வேங்கை கணிபுரியும் விண்மலரும்
பொற்றருவிற் றேன்சேர் புதியமல ரென்றுவண்ட
ருற்றருகு தாரகைதா வும். (19)

மீன் பிடிக ளோடு விளங்கு மதிவேழம்
கூன்படியுங் கோடுகுத்தக் கொண்டுடன்பாய் தேனின்
மடையையுடைத் துக்குறவர் வானூறு பாய்ச்சி
மிடையை வனம் வளர்ப்பார் மேல். (20)

Koviloor Digital Library

ஓங்குவரைச் சார லுடுபதியா மாடியின்சண்
பாங்குவரை வாங்குறவர் பண்மாதர் தாங்குவரை,
இப்புறத்திற் காண்பா ரியல்பி னரம்பையர்க
ளப்புறத்திற் காண்பா ரழகு. (21)

கொதிநுதிவேற் கண்ணார் குறத்தியர்கள் வாய்ந்த
துதிநுதலை யொப்பாகத் தோன்று மதியெனவே
கண்டடுத்து நோக்குவார் காணுங் குரவரெனும்
விண்டடுத்த தோளார் விழைந்து. (22)

சீயக் குருளை சிறந்த கயமுனிபா
னேயத் துடனுடு நேர்குன்றிற் றூயசுதைத்
திங்கட் குழவி செறியுங் குறவர்மகார்
தங்களொடு தாழுந் தவழ்ந்து. (23)

செங்கயலா நாட்டஞ் செவிக்காய் முறுவலுறக்
கொங்கியலுங் கூந்தல் குழையவரை மங்கையர்கள்
பொன்னரங்கும் யாழிற் புரிபாடல் கேட்டுவந்து
கின்னரங்கள் கொள்ளுங் கிளை. (24)

வரைக்காட்சிப்படலம் முற்றிற்று.

பூக்கொய் படலம்.

கங்குற் கனகனைமுன் காய்ந்து கதிர்களெனுஞ்
செங்கைத் தலம்பரப்பிச் சேருதயம் பொங்கும்
தனத்தறியு ணின்று தகைசேர் மடங்க
லெனச்செறியுஞ் சேந்த வினன். (1)

முறையோம்பிச் சேனையுடன் மூரித்தேர் மேற்கொண்
டிறையோர் வணங்க வெழுந்து குறையோங்கும்
சோலைகொண்ட வேலையெனுஞ் சோணைநதி வந்தடைந்தான்
மாலைகொண்ட தாலமன்ன வன். (2)

Koviloor Digital Library

அடைந்தா னரச னருக்கனும்பர்ச் சேர்ந்தான்
மடந்தையர்கள் சூழவர மைந்தர் குடைந்துவண்டு
தேனருந்தும் போதுகொய்து தேர்ந்தாடப் பொற்றடங்கள்
தானறிந்து வேலையிற்சார்ந் தார். (3)

மங்கையர்கள் சாயல் மதித்துமஞ்ஞை தானகலு
மங்கையருஞ் சொற்கேட் டமர்கீரம் பொங்குஞ்
சிலம்பார்க்க வன்னஞ் செறியா தொதுங்கு
நலம்பார்க்கு நற்றடத்தன் ஞள். (4)

நஞ்சிற் கடுநாட்டம் நல்லமுதாய் நொக்கிவந்து
செஞ்சக் கமலக்கை தீண்டலுமே தஞ்சமெனத்
தன்னடியிற் சாய்ந்து தணிகொம்பர் பூச்சொரிந்தால்
மின்னிடையார்க் கார்வணங்கார் மேல். (5)

அணங்கினன்ன மங்கையர்க ளம்மலர்க்கை தீண்ட
மணங்கிளரு மைந்தர் மலையா மிணங்குபுயந்
தாழுமென்றூற் பூங்கொம்பர் தாழ்ந்து மலரளித்தல்
தாழுமென்ற லென்னதரந் தான். (6)

குளநதியிற் பூவாக் குவளை நளினம்
குளநுதலார் வல்லியிடைக் கொள்ள விளையு
மதிசயத்தைக் கண்டங் ககலாவாம் வண்டர்
புதுமையுற்ற போதடுப்பார் போல். (7)

பூவெல்லாங் கொள்ளப் பொலிவிழந்த பூங்கொம்பர்
காவெல்லாங் கண்டு கனிவெய்தி மேவுமெழிற்
பொன்னணியைப் பூட்டிப் பொருந்த வெழில்பார்த்தார்
வன்னமயி லன்னமட வார். (8)

பைங்கோ மளையாள் பளிங்கிற்றன் மேனிகண்டா
ளெங்கோ மகற்கா மினியளென்றே தங்கோதில்
கைப்போதாற் சூழ்ந்தநெடுங் கண்ணீர் பனிக்கநின்று
ளொப்போதா மங்கை யொசிந்து. (9)

Koviloor Digital Library

கோளுண்ட திங்களெனக் கோல வதனி மன்னன்
தோளுண்ட தொங்கறங்கை சூட்டல்கண்டு தாளுண்ட
கச்சையுண்ட கொங்கைவரை கான்ற வருவியொடு
மிச்சைகொண்டு நின்றா ளெதிர். (10)

மயில்போல் வருவாள் மனங்காணு மன்னன்
செயிர்தீர் மலர்க்காவிற் சேரப் பயில்வாளும்
பண்டு பிரியாள் பதைத்தா ளுயிருடலி
னுண்டு பிரிகிலவென் றேய்ந்து. (11)

போரென்ன வீங்கும் பொருப்பென்னும் பொற்புயத்தான்
சீரென்னும் பூக்கொய்யுஞ் செம்மறனைக் காரென்னுங்
கூந்தலமான் கண்புதைப்பக் கோமகனு ரென்னநின்றாள்
சேந்தலமாங் கண்கள் செயிர்த்து. (12)

தெங்கிளநீர் தன்னையொரு செம்ம லவனோக்கி
மங்கையர்கள் கொங்கைதமை மானுமெனப் பொங்கிச்
செயிர்த்தாள் கரத்திற் செறிமலரை மோந்தா
ளுயிர்த்தாள் கரிந்த துடன். (13)

மீனோக்கி தன்பால் விருப்புடைமன் மாற்றவளாம்
வேனோக்கி தன்பேர் விளம்பவே மேனோக்கம்
கூடலது கொள்ளக் குறித்த மனமதுதா
னூடலது கொள்வா ளுயிர்த்து. (14)

தேரரசன் றன்குலத்துத் தேவியர்கள் கண்களெலா
மார்வமுடன் றன்னை யடுக்கநின்றே னேர்மையுடன்
மாமதத்தைக் கவ்வியுண்ண வண்டா தரிக்கநின்ற
தாமதத்த யானையையொத் தான். (15)

விண்மதிக்கு மிந்துநுதல் மின்னவட்கும் பின்னவட்கு
மண்மதிக்கு மன்னன் மகிழ்ந்தளித்துங் கண்கலுழி
சிந்திக் கலாபம் சிதறிச் செயிர்த்துநின்றார்
வந்திக்க லாகுமட வார். (16)

Koviloor Digital Library

வந்தெங்குஞ் சூழ்வோர்த மன்னுயிரோ பின்னைவையோ
கந்தங் குழல்சேர் கலைபேணா ரந்தமுடன்
மாமலரு முத்தம் வளைந்த விழல் காணார்
தேமலரை நாடுவார் தேர்ந்து. (17)

யாழொக்குஞ் சொல்லையுடை யாளோ ரிகல்மன்னன்
தாழத்தா ழாறுபின்னர்த் தாழ்மனத்தா ளாழத்துங்
கள்ள நினைப்பாள் கருதியவன் பால்விடுத்தாள்
கிள்ளைதனை யுள்ளங் கிளைத்து. (18)

ஐந்தாமின் வாளிகிளைத் தாயிரமா மூழ்கமருள்
சிந்தா குலத்தான் செயல்தேறான் மந்தாரங்
கொண்டீ குதியோ குலமா தவியென்றான்.
தண்டார் குழலா டனை. (19)

நாடினாள் குற்ற நயந்தாள் முனிவாற்றான்
ஊடினாள் பின்னு முடனில்லாள் தேடிச்செய்
தண்ணளிக்கு மாலை தரித்தாள் எழில்பார்த்துக்
கண்ணடிக்குந் தந்தாள் கவின். (20)

வம்பிற் பொலிகோங்கை வாட்ட வலியின்றிக்
கம்பித் திடைநோவக் காய்வாரும் பைம்பொன்னின்
கிண்ணமதுதாங்கிக் கிள்ளை யழைப்பாரும்
வண்ணமயி லன்னமட வார். (21)

தன்னிலைசேர் மென்னடையைச் சார்ந்து தமர்போலத்
துன்னிவரக் கண்டு துணையென்றா ளுன்னைக்கண்
டெள்ளுவர்கள் பொல்லா தெடுத்தணியென் றாளன்னங்
கொள்ளநறு மாடை கொடுத்து. (22)

வாடுமிடை மாதர் வளர்நுண் கலைக்குளல்கு
லாடுபட மீதா ரரவென்ன வோடுமயி
லஞ்சாமற் சேர வடுத்தகொம்பர் வந்திரிந்தார்
மஞ்சாமற் கூந்தன்மட வார். (23)

Koviloor Digital Library

ஊக்கவரு முள்ளத் துடைய முனிவரராற்
காக்கவருங் காமன்கைக் காண்டிபமென் வாக்கன்றி
வல்லிதன்னிற் பூக்கொய் மடவார் நுதற்றனுமுன்
செல்லினென்னு மன்னுர் திறம். (24)

வீறு தனத்தொருத்தி மேலான புன்னையுற்றே
னேறு மனத்தும்ப ரேறினு டேறுமொரு
ஞானமனத் தாரெனினு நாட்டு மலையைநிக
ரானதனத் தாரைவெல்லவ தார். (25)

சினையதனிற் சேர்ந்தவரன் றேவர்க்குந் தேடி
வினையவரா மங்கை வனப்பிற் றனதாம்
நினைவுடனே நோக்கமது நீங்காது கையா
னினைமுறியுங் கொய்துநல்கி னான். (26)

வண்டுசெறி யற்குழலாள் வாண்முகத்தை நோக்கியொரு
தண்டுசெறி பொற்புயத்தான் றள்ளாடி யுண்டுசின
மென்றுணரான் றெண்டை யிதழ்துடிப்பக் கண்டுமன
நன்றுணரான் சிந்தை நலிந்து. (27)

ஏயதன்மை கொண்டடுத்த விவ்வகையா மாதரெலாந்
தூயநிழற் சோலைத் துறுமலரை வேயவரு
செய்கையுறத் தீர்ந்தார் திகழ்புனல் சேர்ட்டண்ணை
யுய்கையுறச் சேர்ந்தா ருவந்து. (28)

பூக்கொய்படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

நீர்விளையாட்டுப் படலம்.

மலர்த்தடங்க ளோக்கி வரிவண்டு பொங்க
நலத்துறக்க நாட்டமரர் நாண வலக்கயங்கள்
வான்பிடிகளோடு வருவனபோல் வந்தடுத்தார்
தேன்படிதார் மைந்தர் சிறந்து. (1)

அங்கவர்கள் பண்ணைநன்னீ ராட வமைதோற்றம்
புங்கமுனி கோபத்தாற் பொன்னாட்டிற் றங்கமிகு
மிந்திரன்றன் செல்வ மியைந்துவரு பாற்கடலின்
வந்திருந்த தன்மையொத்த வாம். (2)

கருங்குவளை மாதரெழிற் கண்மலர்கள் பூத்த
நெருங்குவளைக் கையார்கண் ணீல மொருங்குவளை
தாமரைகள் தையலவர் சார்வதனம் பூத்தமுகம்
தாமரைகள் பூத்த தகைந்து. (3)

தாளையடுத் தாங்கமலத் தாளகலஞ் சேர்ப்பாருந்
தோளையடுத் துத்திருவாய்த் தோன்றுவரும் வாளையெனு
மீனுகள வஞ்சிவரர் மேனி தழுவுவரும்
தேனுகளங் கூந்தலவர் சேர்ந்து. (4)

வண்டெதிருஞ் சுண்ணமொடு வாசநெய்யு நானமுடன்
கொண்டெதிர நண்ணிமலர் கொண்டோச்சித் தொண்டை
தூநீர் கொழுநர்மேற் றூகின்றார் கைகூப்பி [யிதழ்
யாநீர் முகத்திறைப்பா ராய். (5)

மின்னொத்த வாளிடையார் வேயொத்த தோளுடையார்
அன்னத்தை நோக்கி யழகுடனே யென்னும்
வருதிவிளை யாடவென வந்தழைப்பார் கொங்கை
யுருதிவிளை பூவொத்த வோய்ந்து. (6)

Koviloor Digital Library

பண்சேர் பவளவாய்ப் பங்கயத்தா நன்முகத்தார்
தண்சேர் தடக்கயலைத் தாம்பார்த்து மண்சேர்ந்திங்
காடவரை நீர்த்தடங்கட் காங்கணுள வோவெனவே
யாடவரைக் கேட்பா ரயிர்த்து. (7)

தேனகுவார் மாலை செறிகுழலார் தம்மேனி
கானகுவா ரோடைதனிற் கண்டடுத்து நானகவே
தானிலையி னின்று டனித்தோழி யென்றளிப்பாள்
மேனிலையி னூரம் விழைந்து. (8)

கண்டடுத்த நன்மொழியார் காணு மெழிலுடையார்
விண்டடுத்து வந்தகண மென்மயில்போல் வண்டடுத்த
கோதைமலர் மைந்தர் குலத்தோ டழுவிநின்றார்
தாதைமலர் தந்தடுக்கத் தான். (9)

அங்கயலாங் கோட்ட மடுத்த வகையறியோம்
செங்கயலா நாட்டஞ் சிவக்கவே மங்கையலர்
தாமரையஞ் சூழ றமைச்சார்ந்து நிற்கவரன்
கோமுகங்கா ணுறுமயங் கும். (10)

சங்கவளை பொங்கலஞ் சார்ந்துநீ ராடிவரு
மங்கையர்கள் மேகலைகால் வார்ந்துசுற்றப் பொங்குமல்குல்
சுற்றிவரு நாகம் தொடர்ந்த தெனத்துடித்தார்
எற்றிவரு முற்றுபுன லின். (11)

நீர்குடைந்து மாதர் நெருங்கிப் புடைசூழத்
தார்குடைந்த தோண்மன் றனிநிற்றல் சீர்குலவு
நாளமுத முந்தவரு நங்கையர்கள் சூழநின்ற
கோளமுத மந்தரமொக் கும். (12)

மின்மருங்கு நல்லார் விழையுங் குழாத்தினொடு
கன்னெருங்குந் தோளரசன் கண்டுநிற்றல் பொன்னெருங்கும்
வானுகு மாற்றில் வயங்குமீன் சூழநின்ற
கோனுகுந் திங்களையொக் கும். (13)

Koviloor Digital Library

தொடிநெருங்குஞ் செங்கையுடைத் தூநகையார் சூழத்
தடிநெடுங்கை மன்னனிற்குந் தன்மை கடிநெருங்கும்
கண்ணகன்கால் யாற்றிற் கவின்பிடிகள் சூழநின்ற
தண்ணமத யானையையொத் தாம். (14)

வேழவிற்கை வீரற்கே வேண்டுகணை காட்டுகண்ணே
ரேழைவிற்கொள் வாணுதலா ரேற்கநிற்றல் வாழுமற்றைப்
பூமறையாப் பொய்கை பொலியு மலர்க்குணின்ற
தாமரையா மாமலரொத் தாள். (15)

வேலநிகர் கண்ணுடைய மெல்லியலா ணல்லியலாங்
கோலமிகு தோகையர்கள் கூடநிற்றல் மேலாய்
மடலுற்ற போதின் வளர்கொடிகள் சூழக்
கடலுற்ற கற்பவல்லி காண். (16)

மலைகடந்த பொற்புயங்கள் மங்கையர்கள் பொங்கும்
கலைகடந்த வல்குல் கவின்செய் முலைகடந்தம்
முந்திவர வுந்தலினுன் முற்றும் நிலைகடந்து
சிந்திவரு நீத்தஞ் செழித்து. (17)

செய்யதுவர் வாய்வெளுப்பச் சேந்துவரக் கண்மலர்கள்
துய்ய துடியிடையார் தூசுநெகத் தொய்யின்
முலையுடையர் தோய்தலினுல் முற்றுநீர்ப் பொய்கை
நிலையுடைய காதலரை நேர். (18)

ஆன பெரியோ ரவர்ச்சார்ந்த மேலவரும்
ஞான முரியோரா நண்ணுதல்போற் றேனளவி
நாவியகி லாவியதி னன்மீனு நாறுமலர்த்
தேவியலு மாதரடுத் தே, (19)

மிக்கநல வேந்தரணி மெய்யழிந்த சாந்தமுடன்
புக்கநலார் குங்குமமும் போர்த்தலா லொக்கவரு
நீலநிறங் காட்டுமுகில் னேரோடுஞ் செக்கரது
போலநிறங் காட்டும் புனல். (20)

Koviloor Digital Library

காகதுண்டம் நல்ல கலவை கவினவரு
மாகமுண்ட வெல்லா மகலவே பாகடர்ந்த
செங்கனிவாய்ச் சொல்லியர்கள் சேரவரு வேகடஞ்செய்
பொங்குமணி யானுர் பொலிந்து. (21)

பாயரிக்கும் வல்லான் பசுஞ்சாந்தி னுன்மிகவுந்
தூயரிக்கொள் பொற்புயத்தாம் தூக்குறிதான் மீயரித்து
மேல்வெளுக்க வால்வளைக்கை மெல்லியலா ளெல்லியல்கண்
சேல்சிவக்க நின்ருள் சினந்து. (22)

கதம்பத்தாம் நல்விரையுங் கள்ளவிழ்தா தோடு
ததும்பத்தாம் சூடுபுனல் தாக்கும் நிதம்பத்தாம்
பாரமுற்ற மங்கை பரிந்துவரு காமத்தாம்
நீரமுற்ற வெப்பம் நிறைந்து. (23)

தையலவ டன்னைமணத் தாரணிதோள் வீரமன்னன்
நெய்யணியு மோதியின்மே னீர்முகந்து பெய்யவது
செய்யமரைச் செல்விதனைத் தீம்புனல்கை யாலாட்டும்
வெய்யகளி றொத்த விழைந்து. (24)

வேறடையு மென்னடைக்கு மேலே நடந்தவர்கள்
கூறடியை யொத்தனவாங் கோமலரென் றேறி
விளிதலுற்ற தென்ன மிதிப்பதனைப் போன்ற
நளினமுற்ற நாகிளவன் னம். (25)

எரிந்தமனத் தாடவர்க ளெத்தனையென் கேனே
அரிந்தவுகி ராற்சாந் தழிந்து தெரிந்தகொங்கை
செவ்வியதா னூல்புடையிற் சேர்ந்த கலசங்க
ளொவ்வியதாங் கண்டார்க் குவந்து. (26)

தாழநின்ற தேசார் ததைமலர்க்கை தன்னிலரு
ளாழிகொண்ட மன்னுரைத்தா னுங்கதனை வீழிக்
கனிவாயோர் மங்கைக்குக் காட்டினு டோழி
இனிதாகக் கண்ணி னெடுத்து. (27)

Koviloor Digital Library

தள்ளிவரு பேர்தரங்கந் தாக்கத் தடுமாறித்
தெள்ளிவரு நீர்முழுகு செங்கமலம் புள்ளிவரு
மானனையா ரானனநேர் வாராத தானுணிப்
பூநனையு நீரொளிப்ப போல். (28)

இனையவெய்தி யந்த விரும்புனலி னாடி
வினையகழன் மைந்தரொடு மாதர் அனையநிலை
வல்லதட மல்லலுற வந்தேறி வேலைதனில்
நல்லபடம் பூண்டாங்கி னார். (29)

மேவிப் பிரிந்தார்க்கவ் வீங்கு சலிலந்தான்
தாவுமதி தன்னோடு தாரகையு மோவிக்
குடிபோன வானும் குலமலர்க ளெல்லாம்
குடிபோன வாவியுமொக் கும். (30)

மானனத்தா நோக்கநடை மன்னு மதியனைய
வானனத்தார் மைந்தருட னாடறனைத் தானுநத்திக்
காதரத்தா னென்னக் கதிரோனும் வேலைதனி
லாதரத்தான் சேர்ந்தா னறிந்து. (31)

ஆற்றலின்மை தன்னா லழிந்தோ டியபின்னும்
வேற்றுமன்னர் மேலடுத்த வேந்தரென வேற்றமிகு
சுந்தரந்தா மாதர் சுமுகமுகத் தாற்றோற்ற
சந்திரன்றான் மீளவுதித் தான். (32)

நீர் விளையாட்டுப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

உண்டாட்டுப் படலம்.

வெண்ணிறத்தா னன்னறைசேர் வெள்ள மடுத்தெனவும்
பண்ணிறத்தாம் பாடல் பரந்தெனவு முண்ணிறைந்த
காமமொழுகிக் கலந்த தெனவு மெழிற்
சோம னொளி கலந்த து. (1)

கலந்தவர்க்குச் சேர்ந்தினிய கள்ளாய்ப் பிரிந்தங்
குலந்தவர்க்குச் சேர்விடமா யோங்கிப் புலந்தவர்க்குக்
காமதனங் காட்டக் கருதி வருதூதாம்
மாமதனன் வேண்ட மதி. (2)

ஆறெல்லாங் கங்கை யடுத்த வலையாழிக்
கூறெல்லாம் பாற்கடலாங் குன்றெல்லா மீறில்லான்
மாகயிலை யாக மதிக்கநின்ற மாகமுற்ற
வேகநில வாக மிகுந்து. (3)

எள்ளரிய திக்குகளி னெங்கும் பரவிவரு
விள்ளரிய வெண்ணிலவு மேவுதலால் வள்ளுரைவாள்
மாமகர கேதனற்கு மன்வெள் ளணியொத்த
தாமகர வேலைநிலந் தான். (4)

தயங்கவரு தாரகைநேர் தண்டரள நீழல்
இயங்கவரு காரெழினி யேற்கை கயங்களென
வெண்பளிக்குச் சேர்த்தி விரிகானம் பூம்பந்தர்
நண்பளிக்கு மாதரெய்தி னர். (5)

பூக்கமழு மோதியர்கள் போதுதமைப் போக்கிவரு
சேக்கைமல ரின்பமணி சிந்தையினர் வாக்கு
மமுதமாய்ப் பொன்வள்ளத் தாக்குபசுந் தேறல்
குமுதவாய்க் கொள்வார் குறித்து. (6)

Koviloor Digital Library

மீனுடைய வானுடைய விஞ்சையநாட் டன்னவரு
மூனுடைய மேனிதனை யொப்பில்லார் மானுடைய
தான்மலரு நோக்கினூர் தன்வாயின் மாந்தினூர்
தேன்மலரிற் றேன்பெய் தென. (7)

உக்கபா லொத்தநிலா வுண்டதொரு வள்ளமுடன்
கைக்கொ ளொளிசிவந்து காட்டத்தான் மைக்கண்
சிவந்த மடந்தைவாய்ச் சென்றநறுந் தேனு
நிவந்த வமுதை நிகர்த்து. (8)

தாமமொடு நானந் ததைந்துநறுந் தண்ணகிலின்
தூமமடு கூந்தலருண் டேறைதான் நேமமுடை
யோமக் கனல்விளைத்த வொண்கிருதத் துள்ளுறையுங்
காமக் கனல்விளைத்தற் காம். (9)

விடனுக்கு நோக்கின் விளங்கமுதச் சொல்லார்
மடனுக்கும் நோக்கின் மதிப்பென் தடனுக்கும்
தன்னிழலை நோக்கித் தனிவள்ளத் தேறலுண்ண
வுன்னினைவா வென்று ளுவந்து. (10)

அச்சவிடை கங்கு லளகத்தி னொருத்தி
யிச்சைவத னம்மதுவி னேற்கவே பிச்சி நீ
யின்னாற விங்கிருக்க வெச்சிலையே னுண்டதென
மின்னநகை செய்தாள் விழைந்து. (11)

மாற்றவர்க ளேச மதிமுகத்தாள் மற்றொருத்தி
யேற்றமதி வள்ளமதி னேற்றநிலே தோற்றம்
நிறைநிலவு பாய்வ நிறைந்தவெனத் தோன்று
நறையெனவாய் வைத்தா ணகைத்து. (12)

யாழ்க்கு மினிமையதை யாங்களிக்கு மென்மொழியாள்
தாட்குவளை தோய்ந்தநறைச் சாடியுள்ளே வாட்கணிழல்
கண்டதனை வண்டெனவே காய்ந்தடுத்துக் கையோச்சும்
தண்டதனைக் கொண்டு தடுத்து. (13)

Koviloor Digital Library

கண்மதர்ப்பக் காணூர் கனங்குழலாள் கள்ளினுள்ளே
தண்மதிக்க ணின்னிழலைத் தான்கண்டே யெண்ணே
லளித்திருப்பே நல்லபய மாடரவிற் கஞ்சா
தொளித்திருப்பா யென்றா ளுவந்து. (14)

அழிவொன்று தன்னறிவோ வல்லவைதான் வேறோ
மொழியொன்று கண்டுடையாள் மொய்ந்தேன் பொழிகின்ற
பூநறுமென் பந்தர் புரைத்துப் பொழிநிலவை
மாநறவென் றேற்றாண் மகிழ்ந்து. (15)

மின்னுதொடை பொன்னிடையாண் மேகலையை நீக்கிமலர்
துன்னுதொடை யல்குலிடைச் சூழ்ந்தனளாய்ப் பொனனரி
மாலைகொண்டு கூந்தல் வனைந்தா ளவள் புரிந்த [யம்
வேலைகண்டான் கண்டன் வியந்து. (16)

கண்மதிக்கும் வள்ளமதிற் காணு முகமதனை
விண்மதிக்கும் வேந்தனென மெல்லிழையா ளெண்மதிக்கும்
நாயகனே டுமென்று ணன்மைதரி னிம்மதுவை
நேயகனே டவனென்றா ணோர். (17)

எள்ளொத்த நாசியுடை யேந்திழையாள் சோர்ந்தமுன்கை
தள்ளத்தன் றேனைத் தவிசுகுத்து முள்ளம்
மயக்கத்தா லுட்புறத்தை மாற்றிவைத்தாள் வள்ளம்
வியக்கத்தாம் வாயில் விழைந்து. (18)

வான்றனையே நீங்காத வண்டினங்கள் வச்சையர்முன்
னேன்றனைய யாசகர்க ளென்றார்ப்பத் தேன்றருபூச்
செவ்வாய் திறந்தருந்தாள் செங்கழுநீர் நாளத்தா
லவ்வாய்த் துளைவழியுண் டாள். (19)

கண்ணிறையும் வண்ணமுடைக் காரிகையார் போற்றவரு
பெண்ணிறையுஞ் சீரார் பெருந்தகையா ளுண்ணிறையு
மன்பனுகர்ந் துண்ணெனென் றன்னெ ணறவதனை
யின்பநுகர்ந் துண்ணெ னெடுத்து. (20)

Koviloor Digital Library

கூற்றுறழுங் கண்சிவப்பக் கூனுதலை மாநுதலி
னேற்றி யெயிரதுக்கி யின்றளிர்போல் மாற்றறிய
செய்ய கரமறிப்பாள் சீற்ற வபினயத்தை
மையலுடன் காட்டும் வகை. (21)

துடித்த துவரிதழ்வாய் தொண்டை நிலவு
கடித்த வெயிரதுக்கிக் கண்ணால் வடித்தநெய்த்தோர்
வேல்விழிக்கு மங்கையவள் மெய்யிற் பொடித்தவேர்
மேலுகுத்த கள்ளென்ன வே. (22)

செங்குமுத வாய்வெளுக்க சேரெயிறு தேனுகத்தான்
கொங்கையணி காசுகலை கோதுறவே மங்குல்
அலைகுழலுஞ் சோர வசதி தரலாற்
கலவிசெயுங் கண்டனெத்த கள். (23)

கனைகடலாங் கள்வன் கலக்கு மதையென்
அனகனிடஞ் சொல்லென் றனுப்பு மினமணிசேர்
மேகலையா டோழியினி வீணாக வென்மனம்போ
லாகலையாய் வந்துரையென் றாள். (24)

மானமரு நோக்கி மதுகையுடை மன்னவன்பாற்
றேனமரும் வாக்கியராஞ் சேடியர்கள் போனவர்கள்
போனவர்க ளாய்த்தொடரப் போக்கினள் போக்கியபின்
தானவர்கள் பின்புதொடர்ந் தாள். (25)

விரைசெய்யுஞ் சேக்கை விழைந்தடுத்து மேலே
கரைசெய்யா வாசைக் கடலாள் பிரசமெனும்
மென்குதலை கொண்கன் விரும்பும் பொருளுரைசெய்
நன்கிளியைச் சார்ந்துபுல்லி னாள். (26)

மணமருவு மோரணைசேர் வாணுதலி தன்பாற்
குணமருவு கிள்ளைதனைக் கொண்டென் கணவனை நீ
யின்றிலொத்துத் தாராயே லென்னை யினிநீயு
மன்றிலொத்தி யென்றா ளடுத்து. (27)

Koviloor Digital Library

வளைபயிலு முன்கை மயிலாள்தன் முன்னே
இளையவள்தன் பேரைவர னேந்த முளையெயிறு
காண முறுவல் கலந்த கயற்கண்ணீர்
நாணமொடு வந்த நயந்து. (28)

செற்றமுற்ற செம்மலவன் சேரும் விருப்பத்தால்
பற்றவல்குன் மேகலைதான் பாறியே முற்றியநூல்
அற்றொடிகண் முத்த மவனியடை முன்னடையும்
பொற்றொடிகண் முத்தம் புரிந்து. (29)

தோடவிழுங் கூந்தலொரு தோகை துணைவனுட
னூடுகெனோ வுள்ளழிநோ யோடவுடன் கூடுகெனோ
கோமான் குணங்கள் குறிப்பனோ வென்றுரைத்தாள்
தாமான் விழியா டனித்து. (30)

மாடகத்தைப் பற்றி மகரவர வீணைதனைத்
தோடுமலர்க் கைசிவப்பத் தொட்டனளாய்ப் பாடு
மொருத்திபாங் குள்ளவரோ டேலுரை செய்யாள்
கருத்திலாய் நின்றாள் கனன்று. (31)

குழைத்தபூங் கொம்பனையாள் கூடற் சுழியை
யிழைத்தபோ தெல்லா மிகந்து பிழைத்தலுமே
மன்மதவே ளம்பால் மயங்கி யுழைத்துயிர்த்தாள்
நன்மதிவேய் மாமுகத்தி னள். (32)

பந்தணியும் பொன்விரலாள் பையுளுடை யாளொருத்தி
சுந்தரன்பாற் றூதனுப்பிச் சேர்ந்திருந்தாள் வந்தனனோ
மென்னக் கடையடைத்தா ளேதோ வவளிதயம்
கன்னக் கடைசிவந்த கண். (33)

உய்த்தசய னத்தொருத்தி யூட றணியநின்ற
சித்தநய னத்தியன்பன் றேர்ந்திலனாற் பொய்த்ததொரு
சூரியதாற் போக்குவாள் முன்கடிகை போனதென்றாள்
கூரியவேற் கண்ணாள் குழைந்து. (34)

Koviloor Digital Library

விதைத்தனமென்காதல் வித்து நிறையச்
சுதைப்புனலி னன்முளைத்த ரென்றப் பதைத்த
வொருத்தன் சிரத்தி னொருத்தி யுதைத்தாள்
பொருத்தனவு ரோமம் புடைத்து. (35)

பொலிந்த வதனத்தான் பொற்புடையான் றன்னை
நலிந்துவரு மாற்றார் நலிய மலிந்தவென்றி
யாடவனோர் நங்கைகொங்கை யன்று மெலிந்ததனை
நாடிவனை தோள்கள்விம்மி னன். (36)

ஏய்ந்தனவா நல்லெழிலா னெய்தினன் றன்மேனி
வேய்ந்தனபோ லெங்குமதன் வெங்கணைகள் பாய்ந்தனபூம்
பள்ளிதனை நன்கடுத்த பல்லவங்க டந்தகண்டு
முள்ளிதனை யெண்ணியுரு கும். (37)

ஊட்டிய சாந்துலர வோய்ந்தடுத்த வெம்மையுக
நாட்டை யளித்தியென நல்லவரா லாட்டிநின்ற
நீர்க்குடத்தை யொக்கும் நிகரி லெழில்வரனுக்
கேற்குமவள் கொங்கை யிணை. (38)

மின்கிளைக்குங் கிண்கிணியு மேகலையு மாவயிரம்
பொன்கிளைக்கும் பூண்வாங்கிப் போகமுன்னி யன்புடனே
தன்கணவன் பாற்செல்லுந் தையலவள் மையறருந்
திங்கணக நோக்குந் திகைத்து. (39)

ஏலுமிந்த வன்மைதனை யென்ன வெனவுரைப்பேன்
நீலமைந்த வேழம் நிகர்வாற்குச் சோலைவந்த
மென்குயிலாள் சுற்றிவர வீக்கநின்ற மாலைதனைத்
தன்குவடாந் தோணிமிர்க்கா தாம். (40)

சோருங் குழலொருத்தி சொல்லுவா டன்வருத்தம்
மாரனையு நோக்கிவரு மாதையுங்காண் காரிகையாள்
தன்கருத்தை நோக்கியோர் தார்மன்னன் வீடுதனைப்
பொன்பொருந்த நோக்கும் புனைந்து. (41)

Koviloor Digital Library

மின்னனைய வாட்கையுடை வேந்தன்பா லன்புடைய
பொன்னனைய மின்கடிது போயினாள் துன்னும்
மனங்கொ ணறவமோ மாலைப் பொழுதோ
வனங்கனோ தூது சென்ற நார். (42)

தொகுதிதரு காதற்குத் தோற்றுவரு சீற்ற
வகிர்மதியா ணொற்றி மழைக்கண் ணுகுமாலி
யுக்கவளை யோர்ந்தரச னேங்கி நகைத்தவுட
னக்கவளு நாணீங்கி னாள். (43)

பொய்யடுத்த பொன்னிடையாள் புல்லி யணைத்திருந்த
கையெடுத்தாள் காமம் கருத்துடையாள் மெய்யடுக்காள்
போன்றசெய ரேன்றற்குப் பொன்மார்பிற் சந்திரந்தைத்
தான்றசெயல் போன்ற தடுத்து. (44)

மெல்லியகல் லாளொருத்தி வேண்டிவரு சேடிதனைப்
புல்லியகை யாதே போதியெனச் சொல்லிவர
வுற்றபொழு தேநாணா லொன்றுமுறை யாதிருந்தா
ளற்றபொழு தெல்லா மயிர்த்து. (45)

உளறுமனத் தன்பா ளொருத்தி தனதுயிரின்
ஆறுமகி ணற்கதனை யாய்ந்தளிப்ப நாறுமலர்க்
கோதை யிடைநவிலக் கொண்டானா னல்வேறு
காதையிடைச் சொற்றான் கருத்து. (46)

உருத்தெரியுந் தன்மை யுயிரதுவு மொன்று
மருத்தியது மத்துணைபா மன்பா ரொருத்தியுட
னொத்த வொருத்த னுடம்புமொன்றென் றெண்ணவர
வொத்தி யணைத்தா னுவந்து. (47)

வெதிரடுத்த தோளொருத்தி வேந்தன் வரவை
யெதிரடுத்துத் தன்மனமுன் னேக மதிமுகத்தைக்
கண்டான் வணங்கினாள் காதலனு மச்சமுடன்
கொண்டான் புதுமை குறித்து. (48)

Koviloor Digital Library

தொக்க நலத்துடனே சோர்வடுத்த பொன்னனைய
தக்கநுத லிக்குவல்லன் தானின்றி வெட்கித்
தனிவருபொன் றேழிநறுந் தாயனைய ளானாள்
நனிவருதென் காலிரவென் றும். (49)

ஆக்கியதாங் காத லவளொருத்தி யந்திதனிற்
றாக்கியதே யுண்டென்னுந் தன்மையா நோக்கியதாய்
நின்று நுவன்ற நினைந்தறியா தேதெனு
நன்றுமுணர் வும்போக்கி னாள். (50)

மறப்பில் கொழுநன் வரவுதனை நோக்கிப்
பிறப்பிற் பெறுசிந்தை பேணித் துறப்பரிதாய்
மேகத்திற் றோன்றுமின்போல் வெள்ளிடையின் வந்துபுகும்
பாகொத்த சொல்லாள் பரிந்து. (51)

எழுதரிய கொங்கை யினிலனங்க னேவா
லுழுதரிய புண்ணிற்கை யொற்றி யழுதாள்
சிரித்தற்றஞ் சொல்லினாள் சேடிதனை விட்டா
ளொருத்தற்குத் தூதா யுகந்து. (52)

ஆர்த்தியு முற்றதையு மாரரசர்க் கற்றந்தான்
வார்த்தை யுணர்த்தரிதாய் மாமனது வேர்த்தாள்
வெதும்பினாள் வாடினாள் வேறாகக் கண்ணீர்
ததும்பினாள் பாங்கியைப்பார்த் தாள். (53)

தனங்கொ ளிளையவர்க ளம்மினுமுப் பங்கு
கனங்கொளமு தாய்க்களிக்குங் கள்வன் மனங்கொளவாய்ச்
சேர்ந்தவர்கள் மாந்துகின்ற தேறனலங் கொள்வதனால்
மாந்தர்கட்கு மேலான் மதன். (54)

நறைகமழு மாலை நளிர்குஞ்சி மைந்தர்
துறைகலவித் தோகையர்க ளேசி ளிறையகல
வீசியக லல்குல் விளங்கு கலன்கழித்தா
ராசையக லாக்காத லால். (55)

Koviloor Digital Library

பொன்னுதலுந் தூசும் புறத்துளவை நீத்தொன்றே
நன்னுதலி தன்னகத்தி னுணர்த்தான் மன்னுந்
துறவி னுணர்வுடைய தூயனெனத் தன்னைத்
துறவுதரல் காமமுடைத் து. (56)

பொருமதனைப் போல்வானும் பூந்தவிசின் மேலாந்
திருமகளைப் போல்வாளுஞ் சேர்ந்தா ரொருவரெனத்
தோலா திவர்கலவி தோற்று முயிருமொன்றே
ஏலா திவர்கட் கிணை. (57)

வாட்கண்ணா ளங்குதைக்க மாரனனை யானகலந்
தாட்கையான் மூடு தலைக்கண்டு வேட்கையுடை
யுள்ளத்தா ணன்றா யுதைபடுமென் றஞ்சினையோ
கள்ளத்தா யென்றாள் கனன்று. (58)

புனத்துளவா மாமயிலாள் பொற்கொழுநன் பொய்யை
நினைத்துளவா மூடலது நீடச் சினத்தடுத்துங்
காதலன்றன் சேக்கைநலங் காணுங் கருத்துடைய
காதலன்றே கொண்டதுவா கை. (59)

கொலையுருவஞ் சேர்ந்த கொடியவயி னுட்டங்
கலையுருவ வல்குலவள் கண்டன் மலையாம்
மதுகையவன் மார்புருவு மாமுலையென் றெண்ணி
முதுகையவ னோக்கு மொழிந்து. (60)

குங்குமமுங் கொங்கைவிட்ட கோதைவளம் பங்கமுற்ற
சங்கினங்க ளார்த்தகலை சாரினவாம் பொங்குஞ்
சிலம்புகலம் பூசலிட்ட சிற்றிடையா ரின்ப
நலம்புகலு மைந்தருண்ணு நாள். (61)

புலவிதனைக் காதல் பொருந்து சுடர்த்தே
நிலவுபனி நீக்கியபோ ணீக்கக் கலவிதனிற்
புந்திகொண்ட பொன்மயிலாள் பொய்யுறங்கு வாள்கனவாற்
சந்திகொண்டு காயகற்சேர்ந் தாள். (62)

Koviloor Digital Library

வட்டமதி வாண்முகமா மாமயிலு மன்னவனும்
கிட்டினர்கள் புல்லுங் கிளர்ச்சியினர் விட்டிலராய்க்
கங்குலது சோர்வதனைக் காணார்க ளொட்டுமுட
லங்குலவு நேயத் தடுத்து. (63)

அருங்களிமால் யானை யனைய வரர்க்கும்
கருங்குழலார்க் குங்கலவிக் காதல் நெருங்கு
முலைசுமக்க லாற்றாத முற்றிடைபோற் றேய்ந்த
கலைசுமக்குங் கங்குல் கரந்து. (64)

காணுமெனு நன்னெறியைக் காணா தவர்க்கிடையே
நாணுதிரு வாகவிர்ந்து நந்திடவே பேணுமொரு
பாற்கடற்றே மார்பிற் பருமணிமன் னுமதனை
யேற்கவரு மென்றா ழியைந்து. (65)

உண்டாட்டுப் படல முற்றிற்று.

எதிர்கோட் படலம்.

அடாநெறியிற் செல்லா வருமறைசொல் நீதி
விடாநெறிக்கோல் வெண்குடையார் வேந்தன் றடாத
வடலினொடு வந்த வளப்பரிய சேனைக்
கடலினொடு கண்டனன்கங் கை. (1)

நாக ருலகடுக்க நண்ணுங் கிடங்குடைத்தாய்
வேகவதி யாங்கங்கை மேவியநீ ரேகிக்
கடல்பருகு முன்னங் கருதரசன் சேனைக்
கடல்பருகு முன்னங் களித்து. (2)

ஆண்டெழுந்து சென்ற வரசன் மிதிலையெனும்
வேண்டுநகர்ப் பாங்கர் விரைந்துவரத் தாண்டியமாத்
தானைவளத் தான்சனகன் சந்திசெய்த லாமுதல
வேனைவளஞ் சொல்வா மெடுத்து. (3)

Koviloor Digital Library

வந்தா னரசனென மன்னு முவகைபொங்கச்
சிந்தா னரலையெனச் சேனைவர விந்தானன்
ஆதித் தனையெதிர்கொ ளங்கமென வந்தடைந்தான்
நீதித் தரத்தரச னேர். (4)

தேரரசன் சேனை திரைக்கடல்க ளொன்றிவந்து
சார்வதெனச் சாரத் தலத்தரச னேர்தானை
பாற்றடங்க டற்குநிகர் பங்கயமா னுற்றநக
ரேற்றடங்க வந்தடுத்த தே. (5)

இலைசே ரயிலா னிகலனிக மேழாய்
நிலைசேர் கடலெல்லாம் நேரா யலகில்லா
மாகளிக்குந் தோறேரான் வந்த வெனவந்த
வாகளிக்கு மன்னை மதித்து. (6)

கொடியினிலோ போற்றங் குடைய தனிலோ
படியினிலோ மிக்கபடைப் பாங்கோ மடிதலிலா
மன்னனவா மார்போ மலரா ளிருக்குமிட
மின்னனவா மென்றறிகி லேம். (7)

வார்முகத்தை நோக்குதன மங்கையர்கள் கூந்தலளி
யோர்முழக்க மேழிசையி னின்பமொழி தேர்முழக்குஞ்
சீரரவஞ் செய்ய திரையரவங் காயமதிற்
காரரவஞ் செய்யுங் கரி. (8)

சூழுங் கடலடையத் தூளித் துகடவழ்ந்தே
யேழுலக முற்று மெனற்கெளிதோ வாழியரி
பொன்னுலகைத் தாண்டும் புனிதத்தாள் சென்றவழி
தன்னிலுமப் பாற்பொடித்த தாம். (9)

தாவில்லா மன்னர்பிரான் சாரச் சனகனெனு
மாவில்லான் வந்த வளநெறியிற் றூவுதண்ணஞ்
சுண்ணத் தொடுகனகத் தூளியுமென் பூந்தாதின்
வண்ணப் பொடிபொடியா மால். (10)

Koviloor Digital Library

நறியவிரைத் தேனுன நற்குங் குமமும்
செறியகிலு மான்மதமுஞ் சேர்ந்து வெறியார்
கலவைசேர் சாந்தங் கரியின் மதமும்
நிலவுசே றாகும் நிலத்து. (11)

அனக னரச னனிகமதின் மேலே
சனக னனிகமது சார்தல் கனகமழை
வேறடுத்த வோதை மிகுத்தகடன் மீதுகங்கை
யாறடுத்த வோதையனைத் தாம். (12)

மன்னர் புகழ்சனகன் மாமனத்தாங் காதலொடு
முன்னவரு தன்மை யுலகோரை மன்னவருள்
தந்தை யனைய தகவான் முனமெய்தும்
சிந்தைநிகர் தேரான் சிறந்து. (13)

எய்தவரு தேரி னிழிந்தினைய சேனைவெள்ளம்
மொய்தவரு தாகிநிற்க முன்சேர்ந்தா னையனும்வந்
தேறுவாய் மேலோ யெனவிரத மேற்சென்றான்
பாறுவாய் வேலான் பரிந்து. (14)

தழுவிநின்ற மன்கிளைஞர் தம்மை வினவி
முழுதுணர்ந்தான் செய்வரிசை முற்றித் தொழுதடைந்து
முந்தை யெழுகவென முன்னமுடன் வந்தடைந்தான்
சிந்தை யெழுகளிப்பான் றேர்ந்து. (15)

இன்னவகை மன்ன ரிருவர் கருமேகத்
துன்னுநகர் நின்றெழுந்து தோன்றினன் மின்னவரு
கற்சிலையைக் கொண்டவரன் காத லொடுவாங்கும்
பொற்சிலையைப் போக்கும் புயன். (16)

தம்பியொடு நம்பினெடுந் தானைச் சனகனகர்
பம்புபடை சூழ்ந்து பரவிவரச் செம்பொன்
விரவுமணித் தேர்வந்தான் விண்ணுலகு மண்ணும்
டிரவுமணி மேனியதி பன். (17)

Koviloor Digital Library

காவியொத்த கார்குவளை காயா வெனும்வடிவன்
ஓவியத்திற் கொண்ணு வுருவத்தன் கோவியற்றும்
அன்பிருந்த வீர னருண்மன்னன் பாலணைந்தான்
தன்பிரிந்த வாவிவந்த தாய். (18)

சேனைக் கடல்பெருகச் சென்றணைந்து தாள்வணங்க
வானைக் கடவுவலன் மார்பணைத்தான் தேனைக்கொள்
மார்பின் மறைந்த மழுவாளி பொற்றனுவைச்
சார்பின் மறைத்தனபு சம். (19)

பொன்னிளைய வீரன் பொருந்தியடி வந்துதொழத்
தன்னிணையின் மார்பிற் றழுவினன் மன்னர்மன்னர்
போற்றுஞ் சரணயுகன் பூவுலகெ லாம்சிழற்ற
வேற்றுஞ் சரதத் திறை. (20)

கற்றைப் புரிசடையான் கைத்தனுவை முற்றிவரக்
கொற்றப் புயநிமிர்த்த கோமான்பின் பெற்றவளைத்
தாயர்தமைக் கைதொழும்போ தாமவர்கட் காழுவகை
யாயதனை நேருரைப்ப தார். (21)

உன்னுமொரு பேரன்பா லொத்தொளிர்கண் ணீரருவி
துன்னத் தொழும்பரதத் தோன்றறனைப் பொன்னணியுங்
கோதை தழுவகலங் கொண்டணைத்தான் றன்னைமுனந்
தாதை தழுவகலந் தான். (22)

கரியவன்றன் பின்புவந்தோன் கண்ணனிடை காதற்
பெரியவன்றன் தம்பியெனும் பேரான் தெரியவரு
கோக்குமரன் குஞ்சி குலவு மிருவர்கழல்
சேக்கவர நின்றான் சிறந்து. (23)

கோல்வந்த செம்மை குடைவந்த தண்மையுடன்
மால்வந்த செல்வ மகிபன்போ லால்வந்த
நின்மறைபோங் காந்தி நிமலனொடு நால்வர்களும்
நான்மறைபோ னன்னடையி னார். (24)

Koviloor Digital Library

மற்றூரும் போற்ற மகிழ்கோலான் மன்னுயிர்க
ணற்று யெனக்கருது நல்லருளான் முற்றுத
செல்வமெலாஞ் சேரத் திருமகனை முன்னழைத்துச்
செல்கவெனச் சொற்றான் சிறந்து. (25)

ஏற்றமிகு தம்பியர்க ளின்பா யிரண்டருகும்
தோற்றமிகு மாமிசையோர் தோன்றிவரச் சாற்றும்
பணைதழுவச் சென்றான் பரம்பொருளா மைய
னிணைதழுவாத் தேரி னிவர்ந்து. (26)

பஞ்சடியார் பாவையர்கள் பண்ணையுடன் விண்ணமரும்
மஞ்சடையு மாளிகைக்கீழ் வந்தடைந்தார் நஞ்சடையும்
கோகனக வேல்விழியார் கூடி மகிழவந்தான்
மாகனக வீதியதன் வாய். (27)

பேதையர்க ளேமுதல பேரிளம்பெண் ணீறாகும்
கோதையர்கள் வேளேவக் கூடினார் வீதிதனில்
வானவர்கள் போற்ற வரதன் வரவுவந்தார்
தேனனையார் சிந்தைகளித் தே. (28)

எதிர்கோட்படலம் முற்றிற்று.

உலாவியற் படலம்.

மானினங்கண் மன்னு மயிலினங்கள் வந்தவென
மீனினங்கண் மின்னும் மிடைவவெனத் தேனினங்கள்
தம்மி னெருங்கச் சரிவளைக்கை மாதரெலாம்
பொம்மெனவே மொய்த்தார் புனைந்து. (1)

விரிந்த குழல்பாரார் மேகலையை நோக்கார்
சரிந்ததுகில் தாங்கார் ததைந்து பொருந்தினராய்
நீங்குமின்க ளென்றுவந்த நீல விழிமாதர்
பாங்குமின்கள போன்றார் பரிந்து. (2)

Koviloor Digital Library

கண்ணுற் கருதுபொருள் காண்கின்றோம் பெண்ணீர்மை
எண்ணுற் பெரிதுபய னென்றுரைப்பார் மண்ணுகும்
நீர்புலர வானமழை நின்றவன்ஞட் பாணிகண்டு
சார்புவரு பேருழையொத் தார். (3)

பள்ளத்துப் பாயவரு பாணியனூர் பானலுறு
வெள்ளத்துக் கண்ணூர் விரைந்தோட நள்ளத்தம்
மின்னிடைக ளேவ விழைந்தவன்பாற் செல்லுமனம்
தன்னடியைச் சார்பவரொத் தார். (4)

மாதை யகலிகைக்கு வாழ்வளித்த பாதமலர்
சீதை யணையவிற்றாள் செய்புயமுங் காதலொடு
கண்டுவந்த மாதர் கருதியமிழ் தின்மொய்க்கப்
பண்டுவந்த வீயினமொப் பார். (5)

விதியிற்செல் வான்போல் விழித்திமைத்த லின்றிநின்ற
மாதர்கண்க ளூடு வருமவைதான் யாதும்
உயர்ந்தவரன் கண்ணனென வோதும் பெயர்க்கு
வியந்தபொருள் காட்டும் விதம். (6)

எண்கடந்த வில்லா ரிவனிரத மென்றெழிலார்
பண்கடந்த சொல்லார் பரிவெய்தி மண்கடந்து
வான்கடந்த வள்ளலைத்தன் மான்விழிக்கண் வாழவைத்தாள்
தேன்கடந்த சொல்லியென்றூர் தேர்ந்து. (7)

பொற்கலையுஞ் சங்கும் பொருந்து நலன்பண்பும்
விற்கலையு மேனி விளங்கிழையு நிற்கும்
பயிரொன்று நாணும் பறித்தொருபெண் ணின்றாள்
உயிரொன்றுங் காணு முலைந்து. (8)

மாந்தளிர்போன் மேனி மடவார் புகல்வரிதென்
பூந்துணைராம் வாளிமதன் பூசலென்னே வேந்துணரு
மானைதனை யாக்கலிலா ணுண்மையரு ளாய்ந்தறியான்
மாணிழையார் மாலுறவெய் வான். (9)

Koviloor Digital Library

சொன்னலஞ்சேர் காமச் சுவையுருவ மாகுமின்ன
ளின்னலஞ்சே ரோவ மெனநின்றாள் பொன்னலஞ்சேர்
பூவொன்றுந் தாங்காள் புனைதுகிலைத் தாங்கிநின்றாள்
நாவொன்றும் பாங்கா நலிந்து. (10)

விற்றங்கு நெற்றி வியர்க்கப் பசலைவிம்மக்
கொற்றஞ்செய் வேலாங் கொடுங்கண்ணாள் மற்றொன்றுங்
காணாத வார்த்தியினாள் கண்ணன் றனியனென்றாள்
நாணாத வார்த்தை நயந்து. (11)

மைக்கரிய கூந்தலொளி வாணுதலொ ருத்தியுள்ளம்
நெக்குருகி நெஞ்சினிடை னேர்ந்தவள்ளல் புக்குவெளி
போகாத வண்ணம் புலனடைத்தேன் தோழியினி
யாகாத வெண்ணமென் னென்றாள். (12)

தாக்கணங்காந் தம்மேனி தைத்த சரம்பாராள்
வீக்குகலன் றூசடைதல் வேறெண்ணா ளாக்கியதோர்
பாவைபொற்பா ளண்ணறனைப் பார்க்கு மவரையெலாந்
தீவரக்கண் ணோக்குஞ் சினந்து. (13)

வெள்ள மெனமதர்த்த வேல்விழியாள் பான்மொழியாள்
வள்ளறனைக் கண்டு மகிழடைய வுள்ளம்
குளிர்ப்பொன்றி வந்தாள் குலமனைசெல் போது
களிப்பின்றிச் சென்றாள் கரைந்து. (14)

கற்றைக் குழலுங் கடத்தனமுங் காண்பிறையாம்
நெற்றி மறைப்பவொரு நேரிழையாள் வெற்றிகொண்ட
வள்ளறனைக் காணும் வழக்கா லிடைவெளியி
னுள்ளமுறக் கண்டா ளுவந்து. (15)

மன்மதன்றன் வாளி மனங்கழன்ற மாதர்கொங்கை
தன்மதர்த்த சாந்துஞ் சரிகலையு மின்மணியுஞ்
சங்கமுந்தாழ் கூந்தல் தனித்தொடையு மேவீதி
யெங்குமுந்த வில்வெள் ளிடை. (16)

Koviloor Digital Library

தோள்கண்டார் கண்டார் தொடுகழலார் தாமரையாந்
தாள்கண்டார் கண்டார தன்றியே வாள்கொண்ட
கண்ணெழில ரேவர் கருத்தின் படிகண்டார்
அண்ணலெழில் தன்னை யடுத்து. (17)

தையலளிக் கண்ணாள் சரியுங் குழலொருத்தி
யுய்யவவ ளுள்ளத் தொடுக்கினாள் வையமுற்றும்
செய்யனவன் பொன்வயிற்றிற் சேர வடக்கியரு
ளய்யனவன் றன்னை யமைத்து. (18)

அரும்பை நிகர்தனத்தா ளங்கொருத்தி சொல்வாள்
கரும்பை நிகர்மொழியாள் காணப் பெரும்பொருப்பு
வில்லைப் பொடித்த விரகா மதன்கருப்பு
வில்லைப் பொடித்தாள் விழைந்து. (19)

பாரக் குழலியொரு பண்மொழியாள் மேகலையுஞ்
சேரச் சிலம்புமொலி செய்திடவே நேருமணத்
தாதியல்செய் பூங்கொம்பிற் சார்ந்தடுத்துப் போம்போது
தாதியர்கை தாங்கவடைந் தாள். (20)

மைதவழ்ந்த கண்ணாள் மருவு பிறைநுதலி
வைதவழ்ந்த வேல்வள்ளல் வையம்விட்டுச் செய்தவத்தா
லென்னெதிரி நின்றா னிதுவென்றுங் கைதவங்கொல்
மன்னுகன வென்றாண் மதித்து. (21)

மாதொருத்தி பின்னு மனத்தினையல் லாதுவரு
தூதொருத்தி யில்லையெனச் சோர்கின்றாண் மாதரத்தாஞ்
சீதைமன மெத்தவத்தைச் செய்தனவோ வென்றுரைத்தாள்.
வாதைமன மெத்தவத்தை மான். (22)

பழுதுயிர்த்தாம் பாவையன்னாள் பார்த்துப் பதைத்தே
யழுதுயிர்த்துத் தன்றோழி யைக்கை தொழுதயிர்த்துச்
சோர்ந்தெழுவா ளிவ்வரனைத் தோன்று மதற்காமோ
கூர்ந்தெழுத வென்றாள் குறித்து. (23)

Koviloor Digital Library

வண்ணவாய் மாதொருத்தி வாணுதலி மானிடர்க்கிங்
கெண்ணவா யெய்து மிலக்கணங்கள் நண்ணவா
மீதுணர்த்த லென்னே யிவன்கமலக் கண்ணனென்ருள்
மாதுணர்த்தார் மன்னை மதித்து. (24)

கனகமிகு நூபுரமுங் கைவளையுஞ் சோர
மனநெகிழ வாடியொரு மங்கை யனகனிவ
னின்னகரி னெய்தியது மேற்ற சனகர்புரி
மன்னுதவ மென்ருண் மதித்து. (25)

நனிவருந்திச் சோர நலங்குடிபோய்த் தீரப்
பனிவருங்க ணோர்மடந்தை பாங்காய் முனிவருடன்
மன்னவரு மெய்தா வகையா வருங்கனவி
லென்னவுரை செய்தா ளெடுத்து. (26)

இணைசேர் நெடுங்க ணிமையா ளொருத்தி
யணைசே ரிடிகொ ளரவாய்ப் புணைசேர்ந்த
கொங்கை புழுங்கக் குறிக்கு மறிவுகெட
மங்கை யழுங்கு மனத்து. (27)

ஆம்பலொத்து நல்ல வமுதூறும் வாயுடையார்
தாம்பதைத்து நின்று தளர்வாராந் தேம்பலச்சொற்
சீதைதனைப் போலச் சிறிதேம்பல் பெற்றிலரால்
மாதரெனைத் தாகியுய்கு வார். (28)

வேர்த்தியற்று மெய்யாள் மிகத்தளர்ந்து விம்மலினே
டார்த்தியுற்ற மங்கையர்க ளாறையுமே சீர்த்தியுற்ருன்
சிந்தைகொண்டு பாரான் திருந்தும் பரிவிலனே
விந்தைகொண்டா னென்ருள் விழைந்து. (29)

வையமது பற்றிவரு மங்கையர்க ளெண்ணிலவ
ரையனது பொற்புக் களவேதா மெய்யுமொரு [வா
பொற்சிலைக்கை வேள்செயலென் போற்றுகையம் பற்றுடை
ளிற்சிலைக்கை வைத்தா னிசைந்து. (30)

Koviloor Digital Library

நானத்தாம் வார்குழலார் நங்கையரோ டல்லாது
பூநத்தும் வேள்சரம்போய்ப் பொன்னுலகோர் மேனத்தும்
பூச லறியோம் புகழ்வான நாடியருந்
தேசலறி நின்றார் திகைத்து. (31)

மயங்கு மடந்தையர்கள் மாட்டோர் பொருளு
நயந்திலனுச் செல்லுமிவ னூட்டும் வியன்கருணை
யென்பதனைக் கண்டறியா னேற்றும் பரிணதன்கொல்
துன்பதனைச் செய்வான் றுணிந்து. (32)

பூகத்தி னூசல் புரிபவளைப் போலுமொரு
பாகொத்த சொல்லாள் பதமலர்கள் வாகொத்த
சேவகன்றேர்ப் பின்னேகுஞ் சென்று திரும்பிவரு
மாவகன்ற கன்றெனலு மாம். (33)

காதலினூற் பேதமைகொள் காம ரெழின்மாது
வீதலினூற் கேட்க விரும்புவாள் பேதையவள்
என்கருத்து மங்கே யியைந்துவரக் கண்டதுண்டோ
வுன்கருத்தெங் கென்று ளுயிர்த்து. (34)

நங்கை யொருத்திசொல்வா ளூடி யடைவோர்க்குத்
தங்களுயிர் தந்தார் தமர்முன்னு ளெங்களுயி
ரெங்களுக்குத் தாரா னிரக்கமிலா தென்னென்றாள்
திங்களுக்கு நேர்முகத்தா டேர்ந்து. (35)

நாமத்தார் மையல் நலியவரு நன்னுதலாள்
சேமத்தார் வில்லிறுத்த நேறுங்கால் வாமத்தார்ச்
செல்வியினுங் காமச் செருக்காற் புரிந்ததன்று
கல்வியினு லென்றாள் களித்து. (36)

ஆரந் துகிலு மணிகலன்க ளானவெலாஞ்
சோர வுயிர்சோருஞ் சோர்குழலாள் கோரவில்லி
முன்னியலு மென்னை முடிக்கு மதன்செய்கை
யென்னியலு மென்று ளெடுத்து. (37)

Koviloor Digital Library

மாதரியா ரும்மகிழ மன்னர் புகழ்வரதன்
சோதரியா வாசானுங் கோசிகனும் வேதியர்கள்
மேவியொத்த மண்டபத்தின் மிக்கமன்னர் வர்க்கமுடன்
ஆவியொத்த வள்ளலடைந் தான். (38)

திருமதிக்கு நாயகன்மால் தேவர்கட்குத் தேவன்
தருமதிக்குங் கையான் தவத்தான் பருவமுற்ற
மேகம் படிந்ததென மேலோர் சரணமலர்
ஆகம் படிந்தா னமைத்து. (39)

இறைஞ்ச விருவர்களு மேத்தினரா யேவ
நிறைஞ்ச தவிசி நிழல்போற் புறஞ்செய்யும்
தம்பியருட் சேர்ந்திருந்தான் தாங்கியற மோங்கநின்ற
நம்பியருட் கண்ண னயந்து. (40)

ஆனமணிப் பூண்மார்ப னன்றவர சர்க்கரசாந்
தானமணி மன்னன் றமருடனே மீனடுத்துத்
தம்பினுற வேகுந் தனிமதிபோல் வந்தடைந்தான்
பம்புதிரு வாழ்மண்ட பம். (41)

மாதவர்கள் பாதம் வணங்கிவெளி மேற்சிந்தும்
சீதமலர் மாரி சிறந்திடவே வேதியர்கள்
ஆசிகொண்டு போற்ற வடைந்தான் மணித்தவிசிற்
தேசுகொண்டி ராமன் சிறந்து. (42)

கங்கரொடு கொங்கர் கலிங்கர் குலிங்கர்களும்
சிங்களவர் அங்கர் தெலுங்கரொடு மங்கவர்கள்
போற்றும் படியிருந்தான் பொற்றவிசின் மூவுலகு
மேற்றும் படியா மிறை. (43)

தீங்கரும்பி னுங்குதலை தித்திக்கு மின்சொனல்லார்
தாங்கிவரு சாமரைதாஞ் சார்ந்துவர லோங்கி
வளர்ந்துயருஞ் சீர்த்தி மருவுங் கொழுந்து
விளைந்துபொலிந் தென்ன மிகும். (44)

Koviloor Digital Library

சுழலுமது வண்டுஞ் சுரும்பும் விரும்பி
யுழலு மதுமலர்சே ரோதி குழன்மொழியார்
கூறிவரு பல்லாண்டு கோமருவும் வீணையினோ
டேறிவரு மெங்கு மிசைந்து. (45)

வெங்கட் செறியானை வேந்தன் றணிக்குடைதான்
திங்கட் டமகுலத்துச் சீதையெனு மங்கைமணம்
தாங்கித் தழைப்பதனைத் தாம்கா ணியமேலே
யோங்கித் தழைப்பதுபோ லும். (46)

ஊடு படுமிடஞ்சேர்ந் தோன்றும் வகையாக
நீடுகடற் றானை நெருங்குதலா லாடன்மா
வானைச் சனகர்கோ னாண்டுவரு நாடெல்லா
மேனைத் தனிநகரா மே. (47)

உலாவியற் படலம் முற்றிற்று.

கோலங்காண் படலம்.

தேவியர்கள் சூழவரத் தேரரசன் வீற்றிருந்தான்
தாவியலாச் சேனைச் சனகனைப்பார்த் தோவியமாந்
தையறனைச் செய்ய சபையி னழைக்கவென்று
னையனகன் ஞானவதிட் டன். (1)

உரைபுரியக் கேட்டுவந்த வுள்ளத்தன் பெண்ணுக்
கரசிதனைச் சேர்மினென வாங்கே கறைசெறியாக்
காதலொடு சொற்றான் கனிமொழியார் பெண்ணரசி
தாதியரிற் சொற்றார் தளிர்த்து. (2)

கண்ணற் கணியான காதலிதன் பேரழகைப்
பண்ணு மிழைமறைத்தல் பாராதார் விண்ணோர்
அமிழ்தாந்த மேனி யணியான் மறைத்தார்
கமழ்கூந்தற் காரிகையார் கள். (3)

Koviloor Digital Library

கண்ணன் வடிவைக் கருது மழையெனக்காண்
வண்ணமயில் கூந்தல் வலயத்து ளெண்ணிநுழை
மாமதியா மென்ன மலர்மாலை சூட்டினார்
தாமதியாச் சேடியர்க டாம். (4)

வெள்ளத்தார் பொற்சடையான் வில்விறுத்தான் வேறோ
னுள்ளத்தா னோவென் றுயிரூசல் கொள்ளும் [வென்
மனத்தவட்குக் காதின் மருவுகுழை சேர்த்தா
ரினத்தவர்க்கத் தாதியர்க ளேய்ந்து. (5)

கோனணியுஞ் சங்கங் குடியிருக்குங் கண்டமதிற்
கானவணி பூட்டி யணிசெய்தார் மானனையார்
தங்குலவு கண்டந் தமக்கெல்லா மங்கலமாங்
கொங்குலவு கூந்தலவட் கு. (6)

கோண்பிறவில் வாண்மீனாற் கோத்த வடமென்கோ
மாண்பிறையைக் கொண்டு வஃகிர்ந்ததென்கோ நாணும்
நகையினிறை வெண்ணிலவு நாட்டமென்கோ கொங்கை
முகையினிறை முத்தணியை முன். (7)

தையலணி மேனி தழுவுஞ் சிறப்பதனால்
வெய்யதனஞ் சேர்ந்தவணி வெண்முத்துஞ் செய்யனவாயச்
சேர்ந்து திகழ்ந்தனவாஞ் செய்யவரைச் சேர்ந்தவர்க
டேர்ந்து திகழ்வரென்ப தே. (8)

கொங்கை யமைபாரங் கொண்டு துவளுமிடை
நங்கை யமையுயத்தி னாகரிகந் தங்கும்
பதுமரா கத்திற் படர்மாலை சேர்த்தார்
மதுவாரூக் கூந்தன்மட வார். (9)

நங்கையத்தத் தாமரைதா னாட்டு மிராமன்கைப்
பங்கயத்தைத் தாங்கும் பரிசதனாற் றங்கமுற்ற
மையணிந்த வைம்பால் மடவார்க ளையையெழிற்
கையணிந்தார் செய்யகட கம். (10)

Koviloor Digital Library

சில்லியலு மோதி திறள்கனகக் கொங்கைதமின்
வல்லிமதன் வில்லும் வரைந்தெழுதி நல்ல
நடைக்கனத்தை வாட்டு நளினத்தா ளேங்கு
மிடைக்கனத்தஞ் செய்தா ரெடுத்து. (11)

நஞ்ச மமுதமிடை நாட்டியே தாட்டிகமாய்
வஞ்ச மலராத வாள்விழிக்கே எஞ்சலிலா
வஞ்சனத்தைப் போற்றி யணிந்தா ரிகுளையராங்
கஞ்சனத்துஞ் சீரடியார் கள். (12)

செம்பஞ் சணியாது செய்ய திருவுடைத்தாய்
வம்பஞ்சுங் கொங்கை மலர்ப்பதத்திற் பம்புஞ்செம்
பொற்சிலம்பு சேர்த்தார் பொருவுந் திருமகட்கு
நச்சிலம்பு போல்விழி னார். (13)

இங்குலிகச் செப்பனைய வேற்ற மிகுகொங்கை
மங்குலிகச் செய்யோதி மாதவட்குத் துங்கமணிப்
பூண்செய்யுந் தோளிற் புனைந்தா ரரதனமு
மேண்செய்யு முத்து மிசைந்து. (14)

குவளை மலர்முளரி கொண்ட முகத்திற்
றுவளு மதிநாப்பட் டோன்று நவமனைய
நெற்றித் திலதமிட்டார் நேரிழையர் சீரடியைப்
பற்றித் துதித்தார் பணிந்து. (15)

நெய்விளக்க மாட்டிவள நீரொடுபூத் தூவிநின்ற
தெய்வம் பராவித் தெருண்மறையோர் கைவழியே
பொன்னளித்து மாரதிநீர் போற்றி நுதற்கணிந்தார்
மின்னளிக்கும் பூணார் விழைந்து. (16)

கஞ்சத்துக் கள்ளைக் கவர்ந்துண் களிவண்டின்
மஞ்சொத்த கூந்தலெழின் மாந்திநின்றார் மிஞ்சுந்
தனமென் கொடியார்க்குஞ் சார்ந்த வரற்கு
மனமென்ப தொன்று மகிழ். (17)

Koviloor Digital Library

இழைகளிக்குங் கொங்கையெழி லேந்திழையைக் கண்டா
ருழைகளிக்குங் கண்ணு ருவந்தார் மழைகளிக்குங்
கூந்தலவர்க் கொவ்வொன்றே கூறு மெழிலெல்லாம்
வாய்ந்ததிவட் கென்று மதித்து. (18)

சங்கங்கை யேற்றதினுந் தாமரைக்க ணேன்றதினு
மெங்கெங்கு முள்ளமதி னேற்றதென வங்கங்கே
தோன்றலினுங் கற்புடைய தோகை மயிலாளுந்
தோன்றலிரா மற்கிணையாச் சொல். (19)

மேகலையு நூபுரமு மேலுஞ் சிலம்பலொடு
பாகலையும் வண்டும் பரிந்தார்ப்ப மாகலைசே
ரிந்திரற்காங் கோயி லெழிலரம்பை மாதரென
வந்திரைத்தார் சூழ்ந்துமட வார். (20)

சிந்துங் குறளுஞ் சிலதியர்கள் கூட்டமொடு
வந்து வணங்கி வரக்குடைக்கீ ழிந்துநிறை
விண்மீ னினத்திரெடு வேண்டி வருவதெனக்
கண்மீ னினத்திவந்தாள் காண். (21)

வல்லிதனைப் பெற்றபுவி மங்கை யிவள்பாத
மெல்லியவென் றுன்னி வெளியின்றிப் பல்லவம்பூ
வெங்கும் படியிடல்போ லேற்று மணிச்சுடர்க
டங்கும் படிமினடந் தாள். (22)

தொழுந்தகைய மென்னடைக்குத் தோற்றகளி யன்ன
மெழுந்தயர்வ வென்ன வெழில்சேர் கொழுந்துடைய
சாமரங்கண் மேவத் தனிமயில்போல் வந்தடைந்தாள்
காமரங்கொள் சொல்லாள் களித்து. (23)

மண்மணியா மற்றுலக மங்கையர்க்கு மங்கலஞ்செய்
கண்மணியாங் கன்னியெழில் காணவென்றே விண்மணிதான்
விற்சுடர வந்த விதான நிழல்வந்தா
ளற்சுடரு மைம்பா லவள். (24)

Koviloor Digital Library

பொன்னொளிபூ வாசம் புனைசாந்தின் சீதமொடு
மின்னொளிசே ரன்னவடன் மேனியெனக் கன்னி
யரம்பையரு நாண வவையோர்முன் வந்தாள்
கரும்பயருஞ் சொல்லி களித்து. (25)

பண்டா மறைபுகலும் பண்ணவர்கள் போற்றநின்ற
தண்டா மரையா டணிவடிவைக் கண்டார்
அமைத்திரள்கொ டோளியரு மாடவரு நின்று
ரிமைத்திறமில் சித்திரமென் றே. (26)

என்னிதயத் தல்லவளோ வேற்றவளோ வென்றயிர்த்துக்
கன்னிதனைக் கண்ட கடல்வண்ண னன்னிலைசேர்
பொற்பதத்தா னின்றான் புணரி யமுதெழக்காண்
பொற்பதத்தா னிந்திரனைப் போல். (27)

மிக்க சுவையுடைத்தாய் மேலா மமுதறத்தின்
தக்க விளைவுடைத்தாய்த் தானுகிச் செக்கர்
நிறத்துவரி தழ்க்குயிலாள் நெஞ்சினிடை யல்லாற்
புறத்துமுள தென்றான் புனைந்து. (28)

எங்க டவத்தா விராம னெனவந்தோன்
சங்கந் திகிரி தரித்தவனே மங்கை
யதிட்ட மளிக்கு மலர்மகளே யென்றான்
வதிட்ட முனிவன் மகிழ்ந்து. (29)

கோதையெழில் காணுஞ்செங் கோலுடையான் மாலுடை
ஓதுந் தனித்திகிரி யோங்கிவர மாதவத்தால் யான்
என்றுமுல கெய்தி யிருந்தாலு மின்றடைந்தேன்
நன்றுதிரு வென்று னயந்து. (30)

நைவளஞ்சேர் நன்மொழிமா னண்ண வரலோடு
மையனவன் மாதவனு மல்லாதார் கைகடலை
புக்கவுடன் சிந்தைப் பொருட்டெய்வ மானதனுற்
றக்கவுடல் சிந்தைவசந் தான். (31)

Koviloor Digital Library

மாதவரை முன்னம் வணங்கி வளர்மன்னன்
பாதமலர் தன்னைப் பணிந்தடுத்துத் தாதையரு
ளிட்ட தவிசி னினிதிருந்தானை மன்னரிற்கா
வட்டமலர் விட்டமலர் மான். (32)

இச்சைநிலை மெச்சுதவ மேற்ற வதிட்டனெண்ணும்
பச்சைமலை யொத்த பரந்தாம னிச்சைகொண்ட
நங்கையிவ ளென்றுரைக்கி னாட்டு மலையேழுஞ்
செங்கையிவன் வாங்குஞ் சிலை. (33)

கன்னி மடத்திருந்து கண்டவுட னெஞ்சினுற்ற
மன்ன னிவனென்னு மாண்பதனை யுன்னும்
படைக்கண்ணாள் கைவளையைப் பாங்காய்த் திருத்துங்
கடைக்கண்ணாற் கண்டாள் களித்து. (34)

வில்லிறுத்த வல்லமையான் மேலென் மனத்துவந்த
மல்லிறுக்குந் தோளிம் மகிபனென்றே வல்லிருக்கும் [ண்ட
கொங்கையொன்று பொற்கொடியாள் கொள்ளு மனங்கொ
சங்கையொன்று மின்றிமகிழ்ந் தாள். (35)

மல்லுயருந் தோளரசர் மன்னவனுங் கோசிகன்ற
னெல்லுயருந் தாளை யெடுத்தேற்றி வல்லிபொரு
சிற்றிடைய மங்கைமணஞ் செய்யுந் தினமெற்றைக்
குற்றுடைய தென்றா னுவந்து. (36)

பாளைவாய் சந்திப் பழமுதிர மேற்றாவி
வாளைபாய் பண்ணை வளநாட நாளையே
யுற்றடுத்த தென்றா னுவந்தா னருட்கரசன்
மற்றடுத்தார் கொண்டார் மகிழ். (37)

சொற்ற பொழுதரசர் தோன்றித் துதித்துவர
வொற்றைவரி சங்கி னொலிகலிக்கக் கொற்ற
முடிவெயிலைச் செய்ய முளரிவர னுச்சி
தொடுமனைம னுற்றான் றுதித்து. (38)

Koviloor Digital Library

அன்னமரி திற்பிரிய வண்ண லவைநீங்கிப்
பொன்னமரு மாடம் புகுந்தபின்னர் மன்னவர்கள்
மாதவர்கள் சென்ருர் மருவுசுடர் நாயகனும்
ஆதவனு மேருவடைந் தான். (39)

கோலங்காண்படலம் முற்றிற்று.

கடிமணப் படலம்.

இடஞ்சேர் புகழ்ச்சனக னேற்றமொடு பேணக்
கடஞ்சேர் களிற்றரசர் கண்டோர் தடஞ்சேர்
புயத்துடைய தம்பியர்கள் போற்று முவணை
நயத்துடம்போ டொத்தவரா ஞர். (1)

தேடற் கரும்புனலிற் சேராசை கொண்டவர்கள்
மாடுதடங் கண்டெய்தும் வாழ்வின்றி யீடழிவு
முந்தைகொண்டு வாடு முடிவி லவர்போலச்
சிந்தைகொண்டு தேடுந் திகைத்து. (2)

சந்திரனைக் கண்டுந் தனித்தென்றற் காற்குடைந்துஞ்
சுந்தரியாள் கொண்ட துயரதிக மிந்தவகை
யண்ண லடைந்தா னளவில்லா வேட்கையது
மெண்ணலடைக் தாங்கணக்கு மில். (3)

வானோர் பெருமான் மனநினைப்பி ஞஞ்சனகன்
தேஞர் குழலா டிருமணமுந் தாஞளை
நன்னகரை முற்றுமெழி ஞடி யணிகவென
மன்னுமுர செற்று மகிழ்ந்து. (4)

முரசறையக் கேட்ட முதியோ ரிளையோர்
விரைசெறியுங் கூந்தலவர் வேட்டா ருரைசேர்
கிளையுறவு கொண்டார் கிளர்ந்து சிறந்தார்
விளையிரவு நீங்க விரைந்து. (5)

Koviloor Digital Library

அஞ்சனமாம் வண்ண னலர்மே லுறைபுனிதை
யெஞ்சலிலார் நாளைமண மேற்பரென்றே செஞ்சுடரும்
வானிருளைக் கீறி வருவா னொருதேர்மேற்
றானுமணங் காணத் தனித்து. (6)

தோரணங்க ளூட்டுவார் தாணுறையைப் போற்றுவார்
பூரணங்கொள் கும்பம் பொருத்துவார் தாரணியு
மாட மலங்கரிப்பார் மாமறையோர்க் காமமுதைத்
தேடி யளிப்பார் சிறந்து. (7)

அன்னநடை யேன்றவரு மான்றவிடை போன்றவருங்
கன்னிநகர் வாழை கமுகுநட்டார் வன்ன
மணியா லலங்கரித்தார் மற்று மெழிலார்
தணியா நலந்தரித்தார் தாம். (8)

தளங்கிளரு மாமணியாற் றன்சுடர்செய் தீபம்
வளங்கிளரும் பாலிகையும் வைத்தா ரிளங்குதலைச்
சொல்லார் மகிழ்ந்தார் துதித்தார் மலருறையு
நல்லாண் மணத்தை நயந்து. (9)

பண்டிநிறை வாசமலர் பாங்கு கொணர்வாரும்
தண்டலைகொ டேங்கனியாற் சார்வாருங் குண்டலத்தாம்
மேலொளிகள் வீச மிழற்றுங் குரவைகொண்டார்
சேலொளிக்குங் கண்ணார் சிறந்து. (10)

கலவை புனைவார் கலைக ளணிவார்
மலருங் குழற்கணிவார் வாசந் திலகஞ்
சிறந்தநுத றீட்டுவார் சேயிழையார் நாட்டும்
அறந்தழுவு நன்மணத்தை யாய்ந்து. (11)

தப்பரிய காசுமணி சங்க மயிலன்ன
ரொப்பனைசெய் போதி னுகுபோதுந் துப்பிதழார்
சுண்ணமுதிர் தாதுஞ் சுரந்தகுப்பை தான்வாரி
வண்ணமுதார் கொண்டணைகு வார். (12)

Koviloor Digital Library

மன்னர் வருவார் மறையோர் நிறைந்திடுவார்
இன்னியமாம் யாழினிசை யேற்றுநகர் சென்னியர்கள்
சேர்ந்துவரு மன்பார் திருமணஞ்செய் நாழிகையுஞ்
சார்ந்துவரு மென்பார் தளிர்த்து. (13)

உண்ணிறையுஞ் செல்வ மொருங்கே தெரியவென்றுற்
கண்ணான் மனத்தாற் கருதரிதா மெண்ணரிய
கேளொத்த விந்திரற்குக் கேடில் முடிசூட்டு
நாளொத்த திந்தமண நாள். (14)

கரைதெரியாக் காட்சி கனகத்தால் வேய்ந்து
வரையென் றுயர்ந்து மணியாற் செறியு
நிரைசெய் மணத்தொழிலி னோர்மண்ட பத்தி
னரசர்க் கரசனடைந் தான். (15)

குடைநிலவு காணக் குறிக்குமின்னல் போல
மிடைநிலவு மாமணிகள் வீச வடையவரு
வண்டிபத்தை நாட மறையோர் துதிகூட
மண்டபத்தை நாடிவரு வான். (16)

பரிந்துவரு தேர்களிறு பாய்புரவி காலாள்
விரைந்து வருதானை வேந்தை நிரந்தரமாய்
நேமிமன்னர் சூழ்ந்தார் நிகரில் புரந்தரற்சூழ்
நேமருவு தேவர் நிகர்த்து. (17)

அனைய திறலா னடைந்துமண்ட பத்தைப்
புனையுமணிப் பீடம் பொலிந்தான் சனகன்
அரசர் புடைசூழ வாய்முனிவ ரேத்திப்
பரசுமொழி கூறவந்தான் பாங்கு. (18)

மன்னவர்கள் மாமுனிவர் வானுறைவோர் மாதர்களுந்
துன்னவர நேர்ந்த சுடர்க்கூடம் நன்னர்மிகும்
வானடுத்த பொற்சுடர்கள் வாழவரு பொன்மலையைத்
தானடுத்து நின்றதரத் தாம். (19)

Koviloor Digital Library

மின்புயலு மீனுமுள வேண்டும் மணியுமுள
பொன்போற் சுடரிரண்டு போற்றியுள கொன்னூர்
மயன்முதலிற் செய்யு மணிமண்ட பந்தா
னயன்முதலிற் செய்தவண்ட மாம். (20)

எண்ணவரு மாமுனிவ ரேற்கு மிறைவர்களும்
விண்ணவரும் புக்கடங்கு மேன்மையதால் வண்ணமிகு
வையகமும் வானுலகும் வாயின் மடுத்துண்ட
வையனுத ரம்போன்ற தாம். (21)

உலக முழுது மொருங்கா யமர்ந்த
நிலைமை யுரைப்பதென்னே நேரும் தலைமை
யராவணையை நீங்கி யயோத்தி யடைந்த
விராமனருள் சொல்வா மெடுத்து. (22)

சங்கந் தவழ்செய் சமுத்திரமே ழிற்றந்த
பொங்குமறைத் தீர்த்தம் பொருந்தவே கங்கைமுத
லெஞ்சலிலா நன்மை யிலையைந்தநதி நீராலும்
மஞ்சனமா டிப்பொலிந்தான் மன். (23)

ஞானநல மாகி நவில்வோர்க் கருள்பரமாந்
தானநலத் தன்னுமஞ் சாற்றியே மேனிலவும்
புண்டரத்தைச் சாற்றினன் பொன்மருவு நெற்றிமிசை
யண்டரத்த னவம லன். (24)

கோதில் தவத்தார் குலத்தார் தொழும்புசெயு
மாதிப் பரம னடிவணங்கி வேதியர்க்குக்
கெண்டைவிழிக் கன்னியரைக் கேளாம் மறைமொழியாற்
கொண்டவிதி யாலளித்தான் கோ. (25)

அழியாத் தவத்தா லறத்தை யளிப்பா
னொழியாக் கருணை யுருவா னெழுதரிய
தன்வடிவு கொண்ட தனிமேகஞ் சார்நிலவா
மின்கலவை சாத்தினன் மேல். (26)

Koviloor Digital Library

மங்கி னிலவு மலர்ந்த மதியதனைப்
பொங்கு கருங்கடலுான் பூத்ததெனத் துங்கவெழில்
பொற்சிகழி கைச்செம்பொன் பூமாலை தொங்கலொடு
நற்சுழியந் தான்சூடி னன். (27)

ஏதமிலி ரண்டுகுழை யேற்றவிர வும்பகலுங்
காதலது கண்டு கதிர்திங்கள் சிதைமலர்
தன்கருத்தி னைச்செவியிற் றாழ்ந்துள் ளுறத்தூது
சென்றுரைத்தல் போற்செழித்த தே. (28)

விடக்கறையைக் கொண்ட விசையக் கணிச்சி
சடைப்புறத்தி னோர்மதியைத் தாங்கிச் சுடர்க்குலத்தைச்
சூடும் நிலவவெனத் தோய்ந்துவரு வீரபட்டம்
சூடுந் திலகத் துடன். (29)

பந்தி செயும்வயிரம் பாங்கிற் பொரியெனவே
சந்த மணியழலிற் றானுறவே சுந்தரஞ்சேர்
தோள்வலயந் தொல்லைநாள் தோன்றிவரு மந்தரஞ்சூழ்
கோளரவை மானுங் குறித்து. (30)

கோவை வருவடத்திற் கோத்தனவா முத்தமது
காவல்புரி கைநடுவிற் காந்துவன மூவல்
லுலகிற் கொருமுதல்வ னேங்கு மிவனென்
றலகிற் குறியா மனைத்து. (31)

மாண்டபொன்னின் மாமணியா மன்னுஞ் சுடர்வலயம்
வேண்டநல்கக் கற்பகந்தான் மேல்விரும்பி யீண்டுவந்து
கொம்பினிடை யீன்ற குணம்போலக் கையணியு
நம்பிகட கத்தி னலம். (32)

தேனுடைய மாமலராள் சேருந் திருமார்பிற்
தானுடைய தாருந் தனியாரம் வானுடைய
மின்சுடரி னேடு விளங்கிவரு மேகத்து
வான்சுடரி னேடுவில்லா மால். (33)

Koviloor Digital Library

பொன்விளங்கு மார்பிற் புரிந்து வருநூல்தான்
தன்விளங்கற் கெல்லோருஞ் சார்மினெனச் சொன்னதுவாம்
தேவருந்தாம் மாமுனிவர் தேருக் கடவுளர்கள்
மூவருந்தா மென்னு மொழி. (34)

சுற்று மணிந்தமணிச் சோதிபொங்க மேலொற்றை
பற்றுமணி யோங்குதர பந்தனந்தான் நற்றவத்தான்
மற்றுமோ ரண்டம் மருவுமயன் வந்தருளப்
பொற்று மரைபூத்த போல். (35)

மண்ணுதலைக் கொண்ட மணியைப் பெரியருளத்
தெண்ணுதலைக் கொண்ட விருங்கடலை நண்ணுதலைப்
பாற்கடல்தான் சேர்ந்த பரிசணிவெண் பட்டதனை
யேற்க வணிந்தா ரிசைந்து. (36)

இனிமேற் பரந்துலகை யெங்களப்ப தென்ன
கனிமேற் பொருந்தி நலத்தாம் தொனிபோற்று
மாமறையைச் சாற்றி வருகழ்கள் சீர்பாத
தாமரையைப் போற்றுந் தகைத்து. (37)

இன்னநய வீர னிமையோர் தமையருளத்
தன்னனைய கோலமதைத் தாங்கின னன்னயமார்
தேவுலகம் போற்றத் திறற்பன் னகநீங்கிப்
பூவுலகம் போற்றும் பொருள். (38)

மூன்றோ ரடைவுடைய முன்னும் பரம்பொருளைச்
சான்றோ ரடையுந் தனிமுதலை வான்றோயும்
அப்பனையப் புள்ளா மமிர்தந் தனைப்புரியு
மொப்பனையொப் புள்ளதெவை யோ. (39)

பதினா யிரஞ்சுரபி பைம்பொ னிதியந்
துதிநாடும் பூமணிக டொக்க விதிநாடு
நல்லோர்க்குத் தந்து நலத்தா மிரதமிசை
வல்லார்க்கு வல்லான் வரும். (40)

Koviloor Digital Library

பொற்றிரண்ட வச்சும் புகழ்வெள்ளிச் சில்லியதும்
உற்ற வயிரத் தொளிர்தட்டும் சுற்று
மணிசுடருந் தோற்றத்த வாவவனே ராழி
மணிசுடரும் வையமொக்கு மாம். (41)

சாத்திரத்தா னன்மை தருமா விலக்கணத்தாய்
நாத்திரத்தாந் தன்மமுத னன்கினையுஞ் சேத்தணைத்துத்
தத்திவரு பத்திரியாய்ச் சான்றோர் புகன்றனராம்
அத்தனிர தப்பரியை யாய்ந்து. (42)

அத்தன்மை வையத் தருணன் விளங்குவபோ
னத்தன் பரதன்கோ னட்டிவர வொத்தவிரு
தம்பியர்கள் பொற்கவரி தாங்கிவர விருபா
னம்பிவருந் தேரி னயந்து. (43)

ஆன்றவரு மேனி யழகிற்று னயதுவோ
தோன்றுமனத் தாற்கருதத் தோய்ந்ததுவோ வேன்ற
சமய வரவறியோந் தக்க வியலா
விமையவர்க ளானு ரிவர். (44)

வரம்பி லுலகை வலிந்துமாய் வின்றித்
திரம்பயிலா வல்லரக்கர் தேய்வாம் பரம்பு
நிரம்பியதாய்க் கொண்டு நிறைந்துவரு தேவர்
அரம்பையரோ டாடிமகிழ்ந் தார். (45)

பூமழையைப் போற்றினர் பொற்சுண்ணந் தூவிவந்தார்
மாமழையாய்க் காசுபொன்னும் வாரிவிட்டார் காமம்
பரிந்தழகு தன்னைப் பருகினர் கொல்லோ
தெரிந்ததன்று மாதர் செயல். (46)

வள்ளறமை நோக்கி மகளிர்திரு மேனிதனி
லெள்ளரிய பூண்க ளிரியநின்று ருள்ளமொடு
பொற்பிற் கொடுத்துத்தாம் பூண்டனவும் வேண்டிவரு
மற்பிற் கொடுக்குமவ ராய். (47)

Koviloor Digital Library

எஞ்சலிலாப் பூவுலகி னேற்றரசர் போற்றிவரத்
துஞ்சலிலாத் தேவர் துதித்தோங்க வஞ்சலிலா
வல்லார்கள் போற்ற வரையிற் செறிசுடர்போல்
வில்லாளன் வந்தான் விரைந்து. (48)

வையமொத்து நின்றிடத்து மன்னினைஞர் போற்றிவரச்
சையமொத்த மண்டபத்துச் சார்ந்தடுத்துச் செய்யபுகழ்
மாதவனைச் சிந்தை மதித்தரசன் பாலிருந்தான்
போதவனைத் தந்த புதன். (49)

பாலாங் கடலுதித்த பாவை யதன்பின்னர்
நாலாங் கடலுலக நங்கையாய் மேலாம்
மலையினுதிக் கின்றதென மண்டபம்வந் தாளென்
தலையினுதிக் கின்றபதத் தாய். (50)

நன்றிமிகு வானவர்க ணம்பி தனைப்பார்த்து
வென்றிமிகு பாற்கடலின் வேண்டிவரு மன்றலணி
கோதைமண நன்று குறித்த தினத்துமின்று
மேதைமண மென்றார் விரைந்து. (51)

ஒலிகடல்சூழ் பூவுலகி னும்பரொடு நாகர்
பொலிவதிவள் பொற்பென்றாற் போற்றா மலியும்
வளம்பொருந்து நற்றிருவை மாண்பில் சிறியேன்
உளம்பொருந்தச் சொல்வதெவ னோ. (52)

இந்திரமால் சுந்தரியோ டெய்தினு னேற்றவிளஞ்
சந்திரமா மோலியனுந் தையலொடு வந்திருந்தான்
மாமணக்கு மாமலரான் வாணியொடு மாகமுற்றான்
மாமணத்தைக் காண மகிழ்ந்து. (53)

ஏய்ந்தசீர் வேலையென வேற்றடுத்த வேதியர்கள்
தோய்ந்தநூன் மார்பர்சுற்றத் தொன்னெறியின் வாய்ந்தவர
வேள்வித் தலத்தை விரிக்கும் வதிட்டனெனுங்
கேள்வித் தலத்தன் கிளர்ந்து. (54)

Koviloor Digital Library

தண்டுலத்தை மாலாந் தகைமைபுரிந் தாந்தருப்பை
மண்டலத்தை மேலா வகுத்துமலர் கொண்ட
நிறையெரியை மூட்டி நிறையும் பெருமை
மறையறைவான் செய்தான் மதித்து. (55)

மன்றலிடை வந்து மணந்தவிசின் வீரனுடன்
நின்று மலர்க்கொடிதான் தோன்றிடத லொன்றவரு
போகமுடன் யோகம் பொருந்து தரமதென
மாகதர்கள் போற்றிமகிழ் வார். (56)

கோமகனைப் போற்றிக் குளிர்பாணி யைச்சனகன்
பூமகளும் பொற்பார் பொருளுமென நீமனதாய்
மாமறையா மாமகளை வாழ்வுபுரி யென்றளித்தான்
தாமரையா மால்கைத் தலத்து. (57)

அந்தணர்க ளாசி யணங்கனையர் சிந்தைமகிழ்
தந்தனபல் லாண்டு தரமன்னர் வந்தனையும்
வானிவரும் வானவர்கள் வாழ்த்தொலியு மானதெனக்
கோனிவருஞ் சங்கமுழங் கும். (58)

வானவர்கள் பூமழையும் மன்னவர்பொற் பூமழையு
மேனையர்க வேு மினமணியும் ஆனதனால்
வானுடுக்கள் சேர மலர்வான் தனைநிகரும்
கானுடுத்த பூவினுல கம். (59)

மேலான் தனஞ்சயன்முன் வீரன் விளங்குமன்னாள்
நூலான மந்திரத்தாம் நோன்மையுடன் பாலான
நெய்யடுத்த வாகுதிக்கண் ணோர்ந்து சனகிதரும்
கையடுத்துச் சேர்த்தான் கரம். (60)

இடம்படுதோண் மன்னே டியைந்தபெரு வேள்வி
தொடங்கிவரு வெங்கனலைச் சூழ்போ தடங்காத்
தடம்படுபொற் கொங்கையவள் சார்ந்த பிறப்பி
னுடம்பொடுயி ரொத்தா னுவந்து. (61)

Koviloor Digital Library

வலம்பொறிகொ டுடையை வணங்கினர்கள் வந்து
பொலம்பொரியைச் சிந்திப் பொருந்த விலங்கொளிசே
ரம்மிமிதித் தேறி யருந்ததியைக் கண்டுவந்தார்
தம்மினிதி பெற்றதரத் தார். (62)

மற்றுளவாஞ் செய்கை மகிழ்ந்து முடித்ததற்பின்
முற்றுளவா மாதவர்தாள் முன்வணங்கிக் கொற்றவனை
வேண்டிப் பணிந்து விமலை கரம்பிடித்துக்
காண்டகைய நன்மனைபுக் கான். (63)

ஆர்த்தனவாம் பேரி யணிசங்க மார்த்தனவா
மார்த்தனவாம் வேத மமலவர ரார்த்தனவாம்
பல்கலையும் பல்லாண்டும் பாங்கடுத்த பூமாலை
மல்கலுறு வண்டும் மகிழ்ந்து. (64)

நேயமுறு கேகயர்மான் நித்திலமா வெண்ணகையைத்
தாயினுமிக் கன்பினொடு தாள்வணங்கித் தூயவன்னை
தன்னைப் பணிந்து தரத்தாம் சுமித்திரையாம்
பொன்னைப் பணிந்தான் புகழ்ந்து. (65)

அன்னமுந்தா னன்னவர்க ளம்பொற் சரணமலர் [வளாப்
சென்னிகொண்டா ளன்னவருஞ் சிந்தைகொண்டு பொன்ன
போற்றவளர் பொற்பாள் புனிதவரன் பொற்பதனுக்
கேற்றவளா மென்பா ரெடுத்து. (66)

எண்ணவரு கோடி யியைநிதியும் பல்கலையும்
வண்ணவரு பொன்னணியு மாதரொடு கண்ணகலும்
நாடுயர்ந்த காசும் நளினை பெறுகவென்றார்
சேடுயர்ந்த நேசம் சிறந்து. (67)

நூற்கடலை யன்னார் நுவல்சொற் கடனோக்கி
மாற்கடலை யன்ன மனத்தளுட னுற்றன்மிகு
கார்க்கடலாம் வண்ணன் கருணைக் கடலடைந்தான்
பாற்கடலாம் பாயல் பரிந்து. (68)

Koviloor Digital Library

பங்குனி யுத்தரநாள் பன்னு பகற்பொழுதி
லங்கணிருக் காயிரத்தா லாம்நாமச் சிங்கம்
மணத்தொழிலை நேர்ந்ததனால் மங்கலத்தா மங்கி
புணர்த்தும் வதிட்டன் புகுந்து. (69)

வள்ளற் கரியதம்பி மார்களுக்குஞ் சீர்ச்சனகன்
எள்ளற் கரியதம்பி யேற்றளித்த வுள்ளம்
நலத்தவரா மங்கையரை நாடி யளிக்கக்
குலத்தவராற் கொண்டான் குறிப்பு. (70)

கொய்நிறையுந் தாரான் குசத்துவசன் பெற்றவெழின்
மெய்நிறையுஞ் சீரார் விரவினார் மைநிறையுங்
கண்ணியர்கள் மூவர் கருதுவரர் மூவரையு
முண்ணிவர வேட்டா ருவந்து. (71)

வேட்டவர்கள் வேட்டபினர் வேந்தடுத்து மேனளிற்
கூட்டவரு சீர்த்தி கொடுத்திலனா லீட்டவரு
கைப்பொருளை யுள்ளங் கருதா மளவளித்தான்
மெய்ப்பொருளை யுள்ளம் விழைந்து. (72)

ஈந்தளவி லாதுநிறை யின்பமுட னன்படையும்
ஆய்ந்தளவில் கேள்வி யனகருடன் வேந்தளவி
லன்னகரின் வீற்றிருந்தா னாதரவா யன்னளிற்
பன்னவரு செய்கையுரைப் பாம். (73)

கடிமணப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

பரசுராமப் படலம்.

தானும் பரனுஞ் சனகன் றருதையலும்
நானு வகைப்போக நண்ணுமன்னுள் ஆனுத்
திடமிசையுங் கோசிகன்றான் சென்று னருளி
வடதிசையிற் பொன்மால் வரை. (1)

அப்போது மன்ன னணிமா நகர்செலற்கா
மிப்போது சேனை யெழுகவென்று னெப்போதாக்
காவலர்கள் சூழக் கவினிரத மேலிவர்ந்தான்
பூவலயங் காக்கும் புதன். (2)

தன்மக்கள் பொன்மக்கள் தன்கழலைச் சார்ந்துவர
மன்மக்கள் மற்றவரும் வாழ்த்தெடுப்ப நன்மிதிலை
மாநகரார் தாம்பிரிய மாட்டா துயங்கவந்தான்
வானகரார் போற்ற மகிழ்ந்து. (3)

முன்னையத் தார்மன் முறையிற் செலமிதிலை
நன்னையத் தார் போற்ற நாப்பணிடை தன்னையத்
தம்பியர்கள் சூழத் தகைசேர் சனகியுடன்
நம்பியவன் வந்தா னயந்து. (4)

எக மயில்வலமே மேற்ற விடமதனிற்
காக முதலதடை கண்டரசன் போகற்
கிடையூ றெனநடவா னேறு மிரதந்
தடையூர்த லென்றுதகைந் தான். (5)

நின்றநெறி செல்வா னினைவாளற் பார்த்திதுதா
நன்றநெறி யாமோ வென் னுட்டென்று னின்றே
வருமிடையூ றேனும் மகிழ்வாக்கு மென்றான்
திருமிடையுஞ் செல்வற் செறிந்து, (6)

Koviloor Digital Library

என்னு மளவி னிருள்கீற வல்லொளியாய்
மின்னு சடையான் மிடைமழுவான் பொன்னின்
மலைவருதல் போல வருவான் கனற்கண்
ணுலைவருதீ யென்ன வுயிர்த்து. (7)

கம்பித் தலைக்குங் கடலிற் கலமொத்துத்
தம்பித் தலைத்துலகந் தாழ்வடையச் செம்பொற்
சிலைதரித்தான் வாளியினாற் றிக்கனைத்துந் தீய்க்கும்
கொலைதரித்தான் வந்தான் கொதித்து. (8)

விண்கீ ழுறவென்றோ மேலுலகஞ் சேரவென்றோ
எண்கீ றுயிரெமன்வா யேற்றவென்றோ புண்கீறும்
நெய்த்தோர் விழிக ணெருப்பைப் பொழியுமெனிற்
கைத்தோன் சினமெதற்கோ காண். (9)

போரிற் சிறந்தமழுப் போர்க்குஞ் சிகைபுகையத்
தேரிற் கதிருந் திசைதிரிய நீரின்
வடவைக் கனல்முடுகி வந்ததென வந்தான்
புடவிக்கண் சிந்தை புகைந்து. (10)

பாழிப் புயந்திசையிற் பாரப் புடைபடரும்
வாழிச் சடைவிண் மதிபுனைய வூழிக்
கடைமுடிவிற் காணுங் கனலுருத்தி ரன்போற்
படைமழுவான் வந்தான் பழித்து. (11)

மாநிலத்தைச் சேர மலைக்கு மடலுடையான்
கோனலத்த மன்னர் குலதிலகன் எனை
உயிருற்ற தொன்மரம்போ லோரா யிரமாம்
வயிரத்தோள் வெட்டும் வலன். (12)

மன்னர்த் தொலைக்கு மறலி யெனவந்தோன்
முன்னத்தன் சேரவெண்ணீர் தானளித்தான் றுன்று
மிருபத் தொருபடிகா லேற்றரசர்க் கொன்ற
குருதிப் புனலிற் குளித்து. (13)

Koviloor Digital Library

கமையார் தவமுங் கனலாஞ் சினமும்
சமையப் பெரிய தரந்தான் சிமையக்
கிரியுருவா வாளி கிளைக்கும் புயத்தா
னெரியுருவா வந்தா னெதிர். (14)

சையம் புகநிமிர்ந்து சார்ந்த வுயிரைவதை
செய்யுஞ் சினமழுவான் சீறிவந்தா னையன்
றனையரிதிற் றந்த தயரதமால் கண்டான்
வினையரிதிற் கண்ட விதம். (15)

பொங்குபடை யேற்றுப் புருவங் கடைநெரிய
வெங்கணுரு மேற்றின் விடைத்தடர்த்துச் சிங்கமெனத்
தேருடைய சேவகன்மேற் சீறி யெதிர்சென்றான்
தாருடை ய மன்கலங்கத் தான். (16)

அரச னவனிடைவந் தாரா தனையான்
விரைசெய் முடிபடிய வீழ்ந்துங் கரைசெய்யான்
கோரனெதிர் பேரியெனக் கூறிச் சினந்துபுகழ்
வீரனெதிர் வந்தான் விரைந்து. (17)

இற்றோடும் வில்லி னியற்கை யறிவேனின்
பொற்றோள் வலியைப் பொருட்படுத்தேன் செற்றோங்குந்
தோளிற் றினவுடையேன் சோதனைக்கு வந்ததென்றான்
கோளிற் கொடியான் குறித்து. (18)

மேவு மவன்புகல வேந்தயர்ந்து வீழ்ந்துரைப்பான்
பூவுலகை வென்றளித்தாய் பொன்முனிக்கே மேவும்
சிவனோ வரியோ சிறியோர் பொருளோ
விவனோ தரமருளற் கெண். (19)

மிக்கவலி மேலோய் வினையுடையார் பக்கலன்றோ
தக்கவலி காட்டுந் தரமுடைத்துச் செக்க
ரொளியார் படைமழுவா யுன்வல் லமையை
யெளியா ரிடைகாட்டி னென். (20)

Koviloor Digital Library

கனிமா தவமுடைய நாதா வுலகம்
தனிநா யகத்தாய் தகுமோ முனியாய்
நரபா லரையருளி னுட்டுங் கருணை
மரபா லருளேன்றான் மன். (21)

சலத்தோடு சார்வில்லான் றானென் றனைய
னுலத்தோடு சார்வில்லா யோங்கு நலத்தாம்
நிறைகொண்ட மாதவத்தோய் நேரு மடியேன்
குறைகொண்டே னென்றான் குறித்து. (22)

என்று வடிபணிந்த வேந்த றமையிகழ்ந்து
பொன்னூர் கலையனெதிர் போயடர்த்தான் றன்னு
லொருசெயலு மின்றெனவே யோய்ந்தா னரசன்
வருசெயலைக் கண்டு மருண்டு (23)

மான முடைமன் மதிசோர் வுறன்மதியான்
தான முடையான் தவிரானு யூனமுடை
மன்முறிய நீமுன் மணத்தின் முறித்தசிலை
முன்முரித்த தென்றான் முனிந்து. (24)

சையமெனத் தாங்குந் தரமுடைத்தாய் விற்பிடித்தோர்
எய்யமன மேங்கு மியல்புடைத்தாய் வையம்
அருகா வகைபுரிவா னன்று புரிந்தா
னிருகார் முகந்தா னியைந்து. (25)

ஒன்றையுமை கேள்வ னுவந்தெடுத்தான் மற்றொன்றை
நின்றநெடு மாயோ னினைந்தெடுத்தா னென்றறிந்த
விண்ணோ ரிரண்டினிலு மிக்கவலி யேதென்றார்
பண்ணூர் பிரமற் பணிந்து. (26)

சிரிதுவாந் தேவருயர் சிந்தனை யென்றெண்ணி
வேரிதவா மாமலரோன் வேண்டினன் ஆரினுமே
மூலத் தவரிருவர் மூரிச் சிலைவலியை
மேலிட் டமர்வினைக்க வே. (27)

Koviloor Digital Library

இருவ ரிரண்டுதவ ரேற்று ருலகம்
வெருவரவா யெத்திசையும் வேவச் செருமலையும்
போழ்திற் புராந்தகன்வில் போகு நிலைகாட்டத்
தாழ்வித் திலனுளத்தெண் டான். (28)

மீட்டும்போர் வேண்ட விபுதர் விலக்கவுடன்
நீட்டும்போர் வில்லரிகை நெற்றியக்கன் காட்டுவெற்றி
மாலுந்தா னேற்றசிலை வாழ்த்து மிரிசிகற்குத்
தாலந்தா னேற்றவளித் தான். (29)

இரிசிகனெந் தைக்கீய வெந்தையெற்குத் தந்த
வரிசிலையாம் நீயிதனை வாங்கிற் குரிசிலவர்
நின்னொப்பா ரில்லையென்று னேரடுத்த போரதனிற்
றன்னொப்பா ரில்லாத் தவன். (30)

ஊனத்தாம் வில்லிறுத்த வூக்கமதை நோக்கவென்னே
மானத்தாய் கேளாய் வழிப்பகையேன் வானத்தாந்
தானவனை மானுமன்னென் றந்தைக் கிடர்விளைத்தான்
ஆனவனை யட்டே னறிந்து. (31)

மூவேழ் முறையுலக முற்றுமுள வேந்தையெலா
மேவிவன் மழுப்படையின் வீட்டியவர் தூவிரத்த
வெள்ளத்தின் மூழ்கி விரைந்தேனென் றந்தைகடன்
உள்ளத்திற் காழி னுருத்து. (32)

உலகை முனிக்களித்தே னுற்றபகை போக்கி
யலகில் தவத்தா யமர்ந்தேன் சிலையதனை
நீயிறுத்தல் கேட்டுன் னிலையறிய வந்ததென்றான்
ஆயிரத்திண் கையனையட் டான். (33)

என்றுரைக்க நின்ற விராமன் முறுவலெய்தி
நன்றுரைக்கும் நாரணன்கை நாட்டுவில்லை யின்று
தருகவென வாங்கித் தனதாய் வளைத்து
வருகவென வோங்கிமொழி வான். (34)

Koviloor Digital Library

பூதலத்தாம் வேந்தைப் பொடித்த கதனெனினும்
வேதவித்தா யேய்ந்த விரதத்தா யாதலிற்றன்
கொல்லற்கெண் ணின்றும் குறித்த கணைக்கிலக்கஞ்
சொல்லற்கெண் ணென்றான் றுணிந்து. (35)

நீதி யுடையாய் நிகரில்லா யெப்பொருட்கு
மாதி யுடையாய் அறிந்தடுத்தேன் வேதியா
யிற்றிரண்ட தாவதலா விந்து முடியான்வில்
பற்றிலென்னு மென்றான் பரிந்து. (36)

பொன்னுடைய தோளாய் புகழும் கழலுடையாய்
மின்னுடைய நேமியணீ மெய்யாகு முன்னுடைய
வில்லிதுவா மென்றாலும் வீரப் புயமலைக்குப்
புல்லிதுவா மென்றான் புகழ்ந்து. (37)

எய்தவத்தை செய்பகழிக் கேதாகு மென்னுடைய
செய்தவத்தை யேற்றல் சிறப்பென்றான் கைதவிர்த்த
வன்றே கடுங்கணைதா னன்னான் தவமனைத்துஞ்
சென்றே கவர்ந்த செறிந்து. (38)

எண்ணும் பொருள்க ளினிதாக முற்றுகவாம்
மண்ணும் மணிநிறத்த வண்டுழாய்க் கண்ணியபொன்
னேற்றவிடை யேற்றவன்போ லேற்ற முடையவெனப்
போற்றிவிடை கொண்டான் புகழ்ந்து. (39)

அழிந்தவன்றான் போனபின்ன ரையுணர்வுஞ் சிந்தை
யொழிந்தவனுந் தந்தைக் குணர்வு பொழிந்தமலன்
பேரன்பி னோடு பெரிது பணிந்துவந்தான்
சீரன்பை நாடுந் திறன். (40)

மெய்யுணர்வு கொண்டு விழுமந் தணிர்தரசன்
செய்யுணர்வான் செய்செயலைச் சிந்தித்து மெய்முன்
குளிக்குந் துயர்க்கடற்கு கோடுகொண்டு வீழும்
களிக்குந் திருவார் கடல். (41)

Koviloor Digital Library

பரிவிலையாஞ் சிந்தைப் பரசுரா மன்கை
வரிசிலையை வாங்கி வசையா லிரிசெயல்செய்
கோமகனைச் சேர்த்துக் குலவுமுச்சி கொண்டணைத்தான்
பூமகளைப் போற்றும் புயன். (42)

பொய்ம்மை சிறுமை புரியாத வாண்டொழிலை
மும்மை யுலக முடிக்குமோ மெய்ம்மைச்
சிறவன் சிறந்தோர்க்குச் சேருமிம்மை யோடு
மறுமைதரு மென்றான் மதித்து. (43)

பூமழையைப் போற்றிப் பொழிந்துவரு தேவரிடை
வாம வருணன்பால் வன்சிலையைச் சேமித்த
வேவித்த விற்றிறத்த வேந்த லுடனடைந்தான்
மாவித் தககர்க்கு மன். (44)

நண்ணினரா யின்ப நயந்து வருநாளி
லண்ணல் பரதற் களியுடனே யெண்ணி
யுரைசெய்யு நற்புலத்தா னுற்றவரைக் காக்கும்
வரைசெய்யும் பொற்புயத்து மன். (45)

ஆனைநின்றன் மூதாதை யைய நினையன்பாற்
காணநின்றா னுதல் கவினவாம் கேணிதனிற்
சங்கடுத்த கேகயத்தைச் சார்ந்து வருகவென்றான்
கங்கடுத்த வேலான் கனித்து. (46)

ஏவச் சிறந்த விராமன் சரணயுகப்
பூவைச் சிரம்புனைந்து போயினா னவியவ
னல்லவுள வேறென்னு தாக வுயிர்பிரிந்த
நல்லவுடல் போல நயந்து. (47)

உளைபுரவித் தாரா னுதாசித்தென் றெண்ணும்
வளைமுரல்செய் தானை வலனு மிளையவனுங்
கூடவர வந்தான் குலவு நகரனகர்
தேடவர வந்தான் சிறந்து. (48)

Koviloor Digital Library

ஆனவர்கள் போனபின ரான்ற வரசன்பா
லூனமிலாப் பேரரசி ஞேங்குநாள் வானவர்செய்
மாதவமுண் டாக வளரு மயோத்திநகர்
மீதுசெயல் சொல்வாம் விழைந்து. (49)

பரசுராமப் படலம் முற்றிற்று.

ஆ படலம் 23—செய்யுள் 768.

அண்ணுமலையார் துணை.

பால காண்டம் முற்றிற்று.

Koviloor Digital Library

இரண்டாவது

அயோத்தியா காண்டம்.

மந்திரப் படலம்.

வானவரைக் காக்க வரமருளி வந்துலக
மானவரைக் காக்க மகிழரசாய்க் கூனிவரை
வங்கணத்தாங் கைகை வரத்தா லரக்கரடங்
கங்கணத்தா னங்களுக்கோர் காப்பு. (1)

முரசங் கறங்க முடிமன்னர் போற்ற
வரசங்க நின்று வழங்க வரசங்க
மெண்ணுற்ற சூழ்ச்சி யிருக்கை தனிலிருந்தான்
விண்ணுற்ற தேவர்புகழ் வேந்து. (2)

புக்கபெரு வேந்தர் பொருவிலவாஞ் சுற்றமுடன்
பக்கமுற வேகப் பரிந்தருளி யொக்கநிறைந்
தோங்குமுல கம்பரித்தி யோகினெய்து நேமியன்போற்
றூங்குமுலர் தோளனிருந் தான். (3)

சந்திரற்கு மேலாந் தவளக் குடைநிழற்ற
வந்தரத்து மைந்தளித்த வானையா னிந்திரற்குச்
சார்ந்துவரு பொன்னேர் தனிமந் திரக்கிழவர்
சேர்ந்துவரு கென்றான் சிறந்து. (4)

கோனைக் களிற்றரசன் கூறு முலகளிக்கு
மானைக் கடவுளிவ னென்ன மானுற்ற
வான்முகத்தாந் தேவர் வணங்கு முனிவந்தா
னான்முகத்தாந் தேவி னயந்து. (5)

Koviloor Digital Library

குலமுதலாந் தொன்மை குறையாக் கலையும்
பலமுதலாங் கேள்விப் பயனும் நலமுடையார்
நன்மை நலிவுறினும் ஞாயந் தவராதார்
தனம மலியுமமைச் சர். (6)

உற்றகொண்டு மேல்வந் துறுபொருளைத் தேர்கருத்தர்
மற்றகொண்டு வல்வினையு மாற்றலுறும் பெற்றிப்
பிறப்பிற் பெரியோர் பெருமையுறு நூலும்
சிறப்பிற் றெரிந்தோர் தெளிந்து. (7)

காலமிட மேற்ற கருவி தெரிந்துகற்ற
நூலுமுற நோக்கியறம் நுண்மைகண்டோர் சீலம்
புகழ்க்குவரு செய்கை புகன்ற வுறுதி
நிகழ்த்துவரா மன்னர்க்கு நேர். (8)

தம்முயிர்க்கு நன்மையெண்ணார் தார்மன் வெகுண்டிடினும்
வெம்மையின்றி நீதி விளக்குவார் செம்மைத்
திறம்பார்த்துச் சொல்லுஞ் செறிகால மூன்று
மறம்பார்த்துச் சொல்வா ரறிந்து. (9)

நல்லனவு மல்லனவு நாடியரு ளுயகற்கா
மெல்லையிலா வின்பமுற வெண்ணியே தொல்லையிலாம்
பல்வினையும் போக்கிப் பரிந்தளிக்குந் தேற்றத்தார்
நல்வினையிற் செய்வார் நலம். (10)

அறுபதி னாயிரத்த வாண்டகையா ரண்ணற்
குறுபயனு வோங்கு முரவோர் பெறலரிய
சூட்சியர்கள் சந்தச் சுருதிப் பொருளறிந்த
காட்சியர்கள் வந்தார் களித்து. (11)

முறைமையுட னெய்தியபின் முந்தியந்த மின்று
மறிவனடி போற்றி யரசை நெறிமுறையிற்
கைதொழுது மன்னன் கருது முறையிருந்தார்
செய்தொழுகு நன்மை சிறந்து. (12)

Koviloor Digital Library

அத்தகவா மாதி யமைச்ச ரமைந்திருக்க
வித்தகனு மன்னன் விளம்புவான் நத்தும்
அரியபெற லாக்கநிலை யாகு மதனைத்
தெரியவுரை செய்வீர் தெளிந்து. (13)

வெய்யோன் விமலகுல வேந்தர் விழைந்தளித்த
செய்யோர் திறமுறையிற் றேம்பலின்றி வையறுகால்
மாயிரங்குந் தாரீர் மகியதையா ளுண்டசமை
யாயிரங்கொ ளாறுபத்தென் றும். (14)

கன்னியர்க்குக் காக்கவரு கற்பிற் கடலுலகம்
என்னியர்க்கைக் கேற்க வியைந்தளித்து மன்னுயிர்க்கு
வேண்டுவதே செய்தேன் விருப்ப முடனெனக்கு
வேண்டுவதுஞ் செய்யவெண் ணுவேன். (15)

விரும்பிவரு மூப்பென்னும் வீடுகெண்ட யானே
யிரும்பியலுஞ் சேட னிபமும் பெருங்கிரியும்
தாங்குமடற் பூவுலகந் தாங்க வரிதினிமே
லேங்குமுட லென்று னிறை. (16)

நங்குலத்து மேலோர் நவைநீங்கு நற்றவத்தாந்
தங்குலத்துக் கான்முளையே தாங்கப்போய்ப் பொங்குபுல
மொன்றடுக்க நற்றவத்தா லோங்கு பதமடைந்தார்
என்றடுக்கு மாமுடியா ரேய்ந்து. (17)

வெள்ளக் கடலுலகின் விண்ணுலகி னுகமுதற்
கள்ளப் பகைதவிர்த்துக் காத்தயா னுள்ளத்திற்
காணிற் கரந்துறையுங் காமாதி யாம்பகைக்கு
நாணிக் கரந்துறைவெந் நாம். (18)

மனத்தவளாந் தேவி வரைந்துகோல் கொள்ளச்
சினத்தவுணர் தேர்பத்துந் தீர்த்த வினத்தவனுன்
வஞ்சமன மேறும் வளமில்லா விந்தியமா
மஞ்சிரதம் வெல்வதறி தா. (19)

Koviloor Digital Library

போரிற் பகைஞராற் பொன்றி னவரன்றேற்
சீரிற் பரஞானந் தெட்டரலேற் பாரிற்சேர்
செல்வமெலா மீண்டுவிட்ட சீரியரல் லாரெவரே
நல்வளமாம் வீடுநண்ணி னார். (20)

இறப்பென்னு மெய்ம்மைதனை யிம்மையிலே யார்க்கும்
மறப்பன்றிக் கேடுண்டோ மற்றுந் துறப்பென்னுந்
தெப்பந் துணையன்றிச் சேரும் பிறவியெனு
மப்புந்தி யைக்கடப்ப தார். (21)

இனிவருமோ விவ்வரசை யின்பமென வெண்ணு
நனிவருமை நாடாது நாட்டந் துனிவருமோர்
சென்மப் பிணிதவிர்த்துச் சேர்வரிய மோக்கமெனு
நன்மைக் குருகுமெனம னம். (22)

உம்மையுடை யேனா னுலகந் தனிற்புரியுஞ்
செம்மையுடை நல்லறமுஞ் செய்தளித்தே னிம்மை
யுதவியிசை தந்த வுரியோர் தருவீர்
பதவியிசை யென்றான் பரிந்து. (23)

தீவினையைத் தீர்த்தல் சிறந்த தவமன்றிக்
கோவினையிற் கூடுமெனக் கொள்வதெவன் மேவிக்
குழைத்த வமுதமுடைக் கோரத்தை நீக்கித்
தழைத்த விடமருந்த றான். (24)

கச்சைக் கரியெருத்திற் காணுங் கவிகைநிழ
லிச்சைக் குறியதன்றி யென்புரியும் விச்சைத்
துறவறத்தி னாகுந் துரியந் தருமோ
வறவருத்து மென்றா னறிந்து. (25)

மைந்தரின்மை கண்டு வருந்து மெனதுகவல்
சிந்தவந்தான் சீமான் செயராமன் முந்த
வருந்தவத்தை யன்னவன்பால் வைத்துச் சிறந்த
பெருந்தவத்தைச் செய்வேன் பிரிந்து. (26)

Koviloor Digital Library

செருக்களத்தி ராமனத்தன் றீர்ந்திலனுற் பின்னும்
வருத்தமுற்ற மூப்படைந்தும் வாழ்வின் பொருத்தம்
துறந்ததனுல் வந்த துதியடையா னென்னிற்
பிறந்ததனு லென்ன பெறும். (27)

பரந்தாமன் சேயாயென் பால்வந்த தாலே
தரந்தாமன் னென்னுட்டத் தான்முன் னிரந்த
திருமணமுங் கண்டு செழித்தே னவனிப்
பெருமணமுங் கண்டு செழிப் பேன். (27)

நிலனென்னும் பேரா னிரம்புந் திருவு
மலர்மன்னு மாமகளும் வாய்ந்து குலவி
யுவப்ப வருவரனே யோருயிர்போ லெய்துந்
தவப்பயனைத் தாழ்த்தலென்னை தான். (29)

ஆதலிற்முன் காகுத்தற் கான்ற வரசுநல்கிச்
சாதமுற்று நீக்குந் தவமதனைச் சீத
வனத்திருந்து செய்வேற்கு மந்திரர்நீர் சொல்வீர்
மனத்திருந்த தென்முன் மதித்து. (30)

மன்னுரையால் மந்திரர்கொள் வள்ளற் கரசென்ற
மன்னுவகைத் தண்கடலை வாட்டியதான் மன்னன்
பிரிவா னெனக்கொண்ட வெற்றியதால் வந்த
வரிதாங் துயர வனல். (31)

அன்னவகை யாத லரசற் குறுதியதே
பின்னவகை யாதல் பிறவென்று மன்னு
முயிர்க்குயிரி ராம னுலகருள்வோ னென்று
மயிர்க்குதவி லாதறிந்தா ராய்ந்து. (23)

இருந்தமதி மந்திரிய ரெண்ணமுந் தன்பாற்
பரிந்தமதி மன்னன் பயனும் பொருந்திவரு
மன்னுயிர்க்கு நன்மை மதித்துவதிட் டன்புகலுங்
கொன்னுயிர்க்கும் வேலாற் குறித்து. (33)

Koviloor Digital Library

நிருபவெற்றி நின்குலத்தோர் நேமி யுடையோர்
பெருமைபெற்றி ராமனையார் பெற்றார் தருமமுற்றுங்
கற்றுணர்ந்தோய் நிற்குக் கடமை யிவையென்றான்
முற்றுணர்ந்த முன்னோன் முனி. (34)

பொருந்தவரு வேள்வி புரிந்த திருவ
வருந்தவமுஞ் செய்ய வடக்குந் திருந்து
நிலமகளு நன்மையுற நேயத் தரசன்
குலமகனுஞ் செய்யுங் குறித்து. (35)

வேறு பொருள்புகல வேண்டுமோ மெய்ம்மையறங்
கூறுபொருள் வள்ளலெனக் கூறுமறை தேறுமுன்செய்
காத்தளித்து வெல்லுங் கடவுளர்கள் மூவர்செய
லேத்தளிக்கும் வில்லோனென் றெண். (36)

பொன்னுயிர்த்த பூமான் புவிமா னிருவர்கட்கு
மின்னுயிர்த்தாஞ் சீமானி ராமனையே மன்னுயிர்க்கா
மெல்லாந் தருங்கடவு ளெண்ணும் பரம்பொருளாம்
வல்லான் தனித்தெண் மனத்து. (37)

வாரமென்ன சொல்லுவது வள்ளல் பெயருறைக்கத்
திருமின்ன வெல்லாஞ் செகத்தவர்க்கே யாரு
முவப்பவரு மைந்தனைத்தா னெண்பொருடேர் மேலோர்
தவப்பயனென் றெண்ணியிருந் தார். (38)

மாமலர்வாழ் கோமளையே மண்ணுலகர் செய்தவத்தாற்
பூமலர்வாள் சீதையெனப் போற்றிநின்றாள் கோமலரோ
னண்ணுமுந்தி நாயகனே நற்றவத்தோர் நத்துசித்தா
யெண்ணுமுதன் மைந்தனென வெண். (39)

மன்னுயிரைக் காக்கு மறைப்பொருளி ராமனினி
யுன்னுயிரைக் காக்கு முறுதிகொண்டு பொன்னுயிர்க்கு
மாதவத்தை யுன்னி மகிழ்வா யெனவுரைத்தான்
ஓதவத்தை யுன்னா னுவந்து. (40)

Koviloor Digital Library

மற்றுமுனி சொற்கேட்டு மைந்தனைமுன் தந்ததினும்
முற்றுமுடிப் போன்வில் முறித்ததினும் வெற்றி
மழுவா ளிழுக்க மடித்ததினு மேலாம்
வழுவா விழுப்பமுற்றான் மன். (41)

இனிதா முவகை யியைந்த வரசன்
முனிதாள் வணங்கி முறையாய் மனதுமகிழ்ந்
தெம்பெருமா னுன்னருளை யேற்றுலகைப் போற்றிவரு
மெம்பெருமைக் கேதா மிணை. (42)

எந்தை யிதம்புகல வெங்குலத்து மன்னவர்கள்
அந்தமிலா வெற்றி யடைந்தவராய் முந்துபல
வேழ்வி முடித்தார் விழைந்தவரு ளெந்தனுக்குந்
தாழ்விலவாய் வந்த தழைத்து. (43)

மாதவன்பின் னொன்றும் வழங்கா திருந்ததற்பி
னீதிமுறை மந்திரியர் நேர்முகத்தா லோதுமொழி
இங்கிதமி ராசனுளத் தேறச் சுமந்திரனுந்
துங்கனுரை சொல்லுந் துதித்து. (44)

பூமனிரா மன்முடியைப் போற்று மகிழ்ச்சிதனை
நீமனிரா மற்றுறக்கை நீக்கிவிடு மாமுன்
திறத்திற் குலமுதலோர் செய்த வழக்காம்
அறத்திற் கொடிதெவையென் றான். (45)

சந்திரற்கும் விந்தை தருகுடையார் மன்னவர்க்கு
மந்திரர்க்குஞ் சந்த மறையவர்க்குஞ் சிந்தை
முரசார்க்க நின்றன் முதற்குமரன் றன்னை
யரசாக்க வென்றா னறிந்து. (46)

என்ற சுமந்திரன்சொல் லேற்றரசன் றேற்றமுடன்
துன்றுமுடி சூட்டுவதுஞ் சொல்வதுநீ நன்று
திருமணக்கு நாயகனைச் சென்றழைப்பா யென்றான்
மருமணக்குந் தாரான் மகிழ்ந்து. (47)

Koviloor Digital Library

மன்னை யடிதொழுது மற்றவனும் வையமுடன்
பொன்னையிடும் வீதிநிறை போய்ப்புகுந்து தன்னனைய
பண்கவருஞ் சொல்லியொடு பாங்கிருக்குஞ் செல்வனைத்தன்
கண்கவரக் கண்டான் களித்து. (48)

கண்டு வணங்கிக் களித்துக் களிற்றரசன்
பண்டைவணங் காக்கப் பரிந்தழைத்தான் கொண்டலெனக்
கண்ணவரன் சென்று கவினிரத மேலிவர்ந்தான்
விண்ணவரன் றேற்ற விழைந்து. (49)

முரசங்க ளார்ப்ப முனிவரர்கள் வாழ்த்த
வரசங்க மேற்ப வழங்கச் சுரர்சங்கம்
சிந்தைகொண்ட கெவ்வருயிர் தீர்ந்த வெனமகிழத்
தந்தைகொண்ட பேரவைசார்ந் தான். (50)

வந்து முனிதாள் வணங்கித் துதித்துமகிழ்
தந்தை பதம்பணியத் தார்மன்னன் சிந்தைகொண்டு
பொன்மார் பனையனைத்தான் பூமி நிலையிடற்காத்
தன்மார்பு கொண்டளந்த தாய். (51)

தொழுதுடைய சேயைத் துதித்தணைத்து மன்னர்ப்
பழுதடையச் செற்ற பனவன் மழுவுடையான்
நீண்ட திறல்குறுக நீண்டபுக ழையவுனை
வேண்டவர முண்டென்றான் வேந்து. (52)

சாலப் பெருவருத்தந் தாழ்மூப்பி னலடைந்தேன்
தாலப் பெரும்பரத்தைத் தாங்ககிலே னலுஞ்
சிறைதுறந்து செய்ய திருத்தவந்தாற் சேரு
நெறிசிறந்து செய்வாய் நினைந்து. (53)

உரிமைப் புதல்வர்களை யுற்றோர் நலத்தாம்
இருமைப் பயனடைவா ரென்பர் தருமத்தாம்
நிற்றந்த யான்றளர்தல் நீதியோ வென்றுரைத்தான்
மற்றந்த தோள்குலவு மன். (54)

Koviloor Digital Library

சந்தமிக்க நம்குலத்துத் தார்மன்னர் தாரணியைத்
தந்தமக்க டாங்கத் தவம்புரிந்து சிந்தைமிக்க
நாட்டும் பதமடைந்த நல்லோர் தமைக்கணித்துக்
காட்டும் பரிசேது காண். (55)

நல்வினையின் சாதகமும் நாடிச்செய் வேள்விதந்த
நல்வினையின் சார்பும் நலத்தானும் வல்லமைசேர்
உன்னைப் பொருளென் றுலகளிக்க மேன்மைகொண்ட
வென்னைப் பொருவுவரா ரெண். (56)

ஒருத்தலையாம் பாரத் தொருத்தலைப்பங் கூர்தி
யெருத்தி னிடருழக்கு மெற்கிவ் வருத்தமின்றி
மாசற்ற தாகி மருவு திருவினுறு
தேசெற்குச் செய்வாய் சிறந்து. (57)

ஆளும் நெறியி னமைந்தரசை யான்றளித்து
நாளுங் குலநாத னற்கமலத் தாளுலவு
கங்கைதந்து தந்தையரைக் காத்துக் கதியளித்தான்
மங்களஞ்சேர் நங்குலத்து மன். (58)

மன்னவர்க ளல்லர் மருவும் புரந்தரன்போற்
சொன்னவர்க ளல்லர் துயர்துறந்தார் மன்னுதந்தை
சொற்கேட்டு நன்மைபுரி தோன்ற லளித்தவர்தாம்
மற்காட்டுந் தோளாய் மதி. (59)

ஆதலினுற் றந்தை யரியபொறை தந்தனனென்
றோதலினுன் றந்தை யுயர்வன்றாற் காதல்
புரிந்தா ளரசைப் புதியதல வெற்கிவ்
வரந்தா னருளென்றான் மன். (60)

தாதை யுரைசெய்யத் தாமரைக்க ணெம்மானும்
காதலுறான் றள்ளான் கடமையென்றே யாது பிதா
வோதியவை செய்வதன்றோ வுத்தமமென் றுற்றிருந்தா
னேதியவை நின்றா ருளன். (61)

Koviloor Digital Library

குரிசில் மனமறிந்த கொற்றக் குடையான்
தருதிவர மென்று தழுவிச் சுருதிவர
மந்திரத்தார் சுற்றமுடன் வந்தானு மற்றொரவை
மந்திரத்தார் தோளான் மகிழ்ந்து. (62)

அந்தணர்கள் மன்ன ரமையு நகரவரர்
மைந்தர் மடவார் வழுத்திவரத் தந்தையருள்
தாங்கிவரு சீமானுந் தன்மந் திரத்திருந்தான்
பாங்கிவருஞ் சீதையொடன் பாய். (63)

வேந்தர் தமைவருக வென்றுவணம் வீற்றிருந்த
வேந்துபொன்னிற் செய்த விலச்சினையைச் சார்ந்தனுப்பி
மாண்டமுனி வன்பதத்தை வாழ்த்தி முடிசூட்ட
வேண்டுவன செய்மினென்றான் வேந்து. (64)

சிந்தை யுவந்துமுனி தேரேறி யந்தணர்கள்
முந்தி யுவந்துவர முன்சென்றான் வந்த
வரசர்க்குச் சொற்றான்மன் னண்ணற் கரசு
விரசுற்ற நன்மை விழைந்து. (65)

இறையொன்று சொல்லென் றினியமது வுண்டு
முறையொன்று மன்னர் முதந்தான் அறைகின்ற
மண்ணுலகங் கொண்டதிறன் மன்னு முடலுடனே
விண்ணுலகங் கொண்ட விதம். (66)

ஒத்தசிந்தை கொண்டா ருவகைக் கடன்மூழ்கித்
தத்தமக்கு வந்தபுகழ் தாமென்னச் சித்தமுற்று
மன்னுமன்ன னைத்தொழுது வாசாம கோசரமாய்ப்
பன்னுமன்பிற் சொல்வார் பரிந்து. (67)

எங்கள் குலத்தை யிருபத் தொருமுறைதான்
பொங்கு மழுவாற் பொருதழித்த சிங்கமன்ன
சேகனுயர் வீரஞ் செகுத்த திறலோற்கே
ராகவுல கென்று ரறிந்து. (68)

Koviloor Digital Library

வேறுதிறன் மன்னர் விரும்பி யிவைபுகலக்
கூறுதிறல் கொண்டவரன் கொற்றவனும் தேறுபொருள்
சிந்தையுறை யுந்திறத்தைச் செப்பாது வேறொரு
விந்தையுரை செய்வான் விழைந்து. (69)

மகவின் வழியின் மயங்கியான் சொற்ற
தகவின் மொழிந்தீர் தரத்தீ ருவகைமொழி
யெந்தனுள நோக்கியோ வெண்ணி மொழிந்ததுவோ
சிந்தையுள சொல்கவென்றான் றேர்ந்து. (70)

இவ்வகையா மன்ன னிசைத்தமொழி தேர்ந்தரச
ரவ்வகையோ நின்மகனுக் காமரசு செவ்வி
யவரவர்க்கு வந்தவென வாற்ற லுடையே
மெவரெவர்க்குஞ் சிந்தையென்றா ரேற்று. (71)

தானந் தருமந் தகவினொடு மேன்மை
ஞானந் தருகல்வி நன்மைமுத லானவையு
நின்மகற்குச் சேர நிதியும் நிறைகவென
மன்மதிக்கச் சொற்றார் மகிழ்ந்து. (72)

ஊருணியி னீர்நிறைய வுற்ற மரம்பழுக்கக்
காரணியும் வாரி கடுகிவரு பேராம்
நதியுடைய நல்வரவை நாடி மறுக்கும்
விதியுடைய ருண்டோ விளம்பு. (73)

மன்னவனே நின்னுடைய மைந்த னுயிர்களிடை
யென்னவகை யன்பை யியற்றுவனோ வன்னவகை
மன்னுயிர்க்கும் சிந்தை மகிழ்ந்து மதிக்குமென்றார்
பொன்னுயிர்க்கும் பூணார் புகழ்ந்து. (74)

உரைத்த மொழிகேட் டவேந்தரச னெஞ்சிற்
பரித்த முதத்தான் பரிந்து விரித்துரைப்பான்
என்மகனென் றெண்ணுவதே னெல்லார்க்கு நன்மகன்றான்
பொன்மகளாற் போற்றும் புயன். (75)

Koviloor Digital Library

அரசுபெறு வாரை யனுப்பி யமலர்
விரசுபெறு மண்டபத்தை மேவி யுரைதெரிந்து
பொன்னவனைப் போலும் புகழ்க்கணித ரோடுவந்தான்
மன்னவர்கள் மன்னன் மகிழ்ந்து. (76)

ஆண்டம் மொழியறிந்தா ரன்புடையா ரம்பைநிகர்
நீண்ட விழியுடைய நேரிழையார் காண்டலைய
ரோடினார் நால்வ ருவந்து கவுசலைதாள்
சூடினார் சொற்றார் துதித்து. (77)

மன்னர் கழல்வணங்க மந்திரியர் சூழ்ந்திருப்ப
வின்ன வுலகை யியைந்தளிப்பா யென்னைப்
புதல்வற்குத் தந்தரசு போற்றுதவஞ் செய்ய
முதலிற்று வேந்து துவன்று. (78)

செல்வமெலா நன்மகற்குச் சேர்ந்தவெனத் தாதியர்சொல்
நல்வரவான் வந்தமுத நற்கடலை யொல்லை
வறக்கும் வடவையென மன்னியது மன்னன்
திறக்குந் துணுக்கத் துயர். (79)

அன்னவகை பன்னுமவர்க் கான்ற நிதியளித்துச்
சொன்ன சுமித்திரையாந் தோழியுடன் மன்னுமத
வேள்வணங்குந் தந்தை விமல மலரிணைந்த
தாள்வணங்கி நின்றுதுதித் தாள். (80)

என்வயிற்று மைந்தற் கினிய வருள்புரித
லுன்வயிற்று மென்று முலகெவையு மன்வயிற்றின்
வைத்திருந்த மாயவனை மன்னுந் திருவயிற்றின்
வைத்திருந்த கோசலையா மான். (81)

என்றடியைப் போற்றிமல ரிந்திரைசேர் நாயகற்கு
நன்றுடைய பூசை நலமருளிக் கன்றுடைய
கோதானஞ் சொன்னக் குவியலொடுமளித்தாள்
தாதாநம் மாயவற்குத் தாய். (82)

Koviloor Digital Library

நல்கிப் பரம்பொருளா நாத னடிபோற்றிப்
புல்கிப் பரிந்து பொறையுடையாள் செல்வமிகும்
கோயில் வலங்கொண்டு கோதில்லா நோன்பதனை
யாயுநலங் கொண்டா ளறிந்து. (83)

மந்திரப் படலம் முற்றிற்று.

மந்தரை சூழ்ச்சிப் படலம்.

கடிகமழுந் தாரான் கணிதர்களை நோக்கி
வடிமழுவான் மைந்தலைத்த மைந்தன் முடிபுனையும்
நாழிகையி லக்கினஞ்சேர் நாண்மொழிமி னென்றுரைத்தா
ஞழிகையி லாக்கு மரசு. (1)

நேர்பொருந்து நாளை நின்புதல்வற் கென்றுரைத்தார்
சீர்பொருந்து மேலோர் திருந்தினு ரேர்பொருந்து
மன்னறிந்து போற்ற வதிட்டனென மாதவத்தாற்
றன்னறிந்த மாமுனிவந் தான். (2)

நல்லியலு மங்கலநாள் நாளை யதனுலே
வில்லியலுந் தோளாற்கு வேண்டுவன வொல்லையினி
னல்லுறுதி வாய்மை நலத்த மனுமுதல
சொல்லுறுதி யென்ருன் றுதித்து. (3)

முனிகுலத்தார் மேலோன் மொழிந்து நடந்து
மனுகுலத்தா னற்றளியின் வந்தான் புனிதன்
வரமகிழ்ந்த வீரன் வணங்கித் துதித்துத்
தரமணைந்த பீடிகைதந் தான். (4)

தத்துவந்தேர் மேலவரிற் ருன்முனமா மாமுனிவன்
நத்துவந்த வஃத்தனிடை நாடியே முஃத்தர்மனம்
புல்குநலக் காதற் பொருள்வில்லாய் நிற்குமன்னன்
நல்குநிலம் நாளையென்ற னன். (5)

Koviloor Digital Library

என்றுபின்னு மாமுனியி ராமன் றனைநோக்கி
யொன்றுபன்ன வேண்டு முறுதியது நன்றாய்க்
கடைப்பிடிப்பா யென்று கமலவிழி வள்ளற்
கெடுத்துரைப்பான் மேலோ னிசைந்து. (6)

கரியமால் கண்ணுதலான் கஞ்சத்தான் காண
விரியுமால் பூதமைந்து மெய்யிற் பெரியவர்க
ளந்தணர்க ளென்றே யறிவாய் திருவுளத்தின்
மந்தணமா மிச்சொன் மதி. (7)

அந்தணர்கள் முந்து மரிய சினத்துமவர்
சிந்தை யருள் செய்யத் தேவரினும் நொந்தவரும்
வண்ணவரங் கொண்டு மகிழ்ந்தவரு மைந்தநினைந்
தெண்ணவரம் பாமோ விசை. (8)

அனையதன்மை யாதலினு லையனே வெய்ய
வினையதன்மை யார்தானை வேண்டிப் புனைந்து
புகழ்ந்தினிமை கூறிப் பொருந்தி மனது
மகிழ்ந்தினிய செய்வாய் மதித்து. (9)

ஆவதற்கு மன்றி யழிவதற்கு மன்னவர்க
ளேவநிற்கு மெவ்விதியு மென்றுரைக்கின் மேவறத்தா
யிம்மையினு மம்மையினு மேற்றவும்பர்ப் போற்றலது
செம்மையினு நல்லறந்தான் றேர். (10)

நேமிவரன் சூலதர னேமருவு வாணிவரன்
ஆமிவர்கள் மூவர்க்கு மாளுலுஞ் சேமம்
தெருளுமொன்று நல்லறமுஞ் செம்மையு நல்ல
வருளுமன்றி யாவதெவை யாம். (11)

சூதமைந்த மாதுயரஞ் சோதி யறநிலைசேர்
நீதிமைந்த நிற்கிலையாம் நேர்ந்துவரு மேதமென்ப
தெல்லாம் வளத்தற் கியைந்தவொரு மூலமென
மல்லார் புயத்தாய் மதி. (12)

Koviloor Digital Library

யாரொடுங்கொள் ளான்பகைமை யண்ண லெனவுரைக்கிற்
போரொடுங்குஞ் சீரார் புகழ்பெருகுங் காரொடுங்குங்
கையுடையா யின்சொல் கருது புகழ்பூண்ட
மெய்யுடையார்க் கேற்ற மிகும். (13)

கோளும் பொறியுங் குறையப் பொருளதனை
நாளும் அறிந்து நடுக்கலின்றி நீளுதலாய்
ஆளு மரசே யரசாகு மன்னதுவும்
வாளின் வருமாத வம். (14)

உமைக்குறிய நாயகற்கு மோங்குதிரு மாற்கு
மிமைக்குதலி னெண்கணற்கு மேற்றஞ் சமைக்குமுரன்
தாங்கினவ ராமெனினுஞ் சாரு மமைச்சர்சொல்லி
னேங்கினவ ராகுமுயர்ந் தோர். (15)

என்புறுதோ லுள்ளவர்க்கு மில்லவர்க்கு மேற்றுவரு
வன்புறுதோம் புன்புலத்தை மாய்ப்பதெனின் அன்பலது
வேறுக்க முண்டோ விளம்பு மிருமைக்கும்
ஆறுக்கு மன்பென் றறி. (16)

வையத்தா மன்னுயிர்கள் வாழ மருக்கமின்றி
யுய்யத்தாங் கும்முடலா மோரரசன் செய்யுந்
தருமங்கண் மிக்கவனேற் சார்ந்துபுரி வேள்வி
தருமங்க மென்னுந் தகைத்து. (17)

இனியசொல்ல னீகையுள்ளா னெண்ண முடையன்
விநயவில்லன் மேலாம் விசைய னினையவரு
நீதிமொழி நேரவரு நேர்மைமிகு நேயரசர்க்
கோதிமொழி யாமலடக் கும். (18)

சீலமன்ன செய்கை சிறந்துவரு பொற்றுலையின்
தாலமன்ன தாங்குந் தனிநிலைசேர் ஞாலமன்னும்
மன்னர்க்கு நல்லோர் வழிநோக்குங் காலமன்றி
என்னிற்கும் கண்ணு யிசைந்து. (19)

Koviloor Digital Library

புவிமிகுந்த சங்கையுறப் போர்தூம கேது
சவிமிகுந்த மங்கையராய்ச் சார்ந்தோர் நவமிகுந்த
காமமில்லை யென்னிற் கடுங்கே டெனுநரக
நாமமில்லை யாகு நயந்து. (20)

வினையுற்ற நீதி யினையானி வையகமாம்
போனகற்கங் கோதிப் புலன்கொளீ யானவனோ
டாயிரமா மோலி யவனடியிற் செய்யநின்றான்
பாயிரமா நோன்பு பணிந்து. (21)

நண்ணியமா நாகவனை நாயகனை நான்மறையாற்
புண்ணியமாங் கும்பப் புனலாட்டி யெண்ணிவரு
நல்வினையைச் செய்யு நளினப் பதம்பணிந்து
பல்வினையுஞ் செய்யும் பரிந்து. (22)

எற்றும் பெருந்தகைத்தே யின்ன வகைபுரிய
வாற்றும் பெருந்தவத்தோ னுங்குவந்தா னுற்றலுடை
மன்னவற்குச் சொற்றான் மகிழ்ந்து நகரணியு
மன்னவர்க்குச் சொற்றா னரசு. (23)

ஏமமுறு வள்ளுவர்க வெந்தையிரா மன்னனை
மாகுடங் கொள்ள மகிழ்தருநாண் மாமருவு
கோனகரை யெங்குங் குறித்தணிக வென்றுரைப்ப
தானகரை பேரியடித் தார். (24)

கவியமைந்த கீர்த்திக் கமலாக்க னனைப்
புவியமைந்த மோலி புனைதல் செவியமைந்த
சொல்லான தென்றிடினுந் தூயவமு தானதுவாம்
நல்லோர் நிறைந்த நகர்க்கு. (25)

ஆர்த்தார் களிகொண்டா ராடினர் பாடினர்
வேர்த்தார் புளகமது மெய்போர்த்தார் சேர்த்ததிறன்
மன்னவற்கு நன்மை வழங்கினர் நீணிதியஞ்
சொன்னவர்க்குத் தந்தார் துதித்து. (26)

Koviloor Digital Library

திணிசுடர்செய் யாதவனைச் சீர்திருத்து மாபோன்
மணியரவப் பாயலான் மார்பின் மணியகனை
வேகடஞ்செய் வார்போல் விமல நகரணிந்தார்
மாகடஞ்செய் வார்தனத்த வர். (27)

செம்மணித்தூ ணீறணிந்த செவ்வி யுமைபாகச்
செம்மல் வடிவு சிறந்தொளிரும் விம்மும்
உறைபொதிந்து தோன்று முயர்பவளத் தூண்கள்
நிறைபனியால் மூடுமென்றாழ் நேர். (28)

வெண்மை கருமைசெய்ய வேறான வான்கொடிகள்
விண்ணிற் பறக்கும் விதம்பார்க்கின் கண்ணனருள்
ஏற்றுமுடி காண வியைந்துவரு புள்ளெவையும்
போற்றுநகர் வந்தணைந்த போல். (29)

மங்கையர்க ளொருவென வாழை வகுத்தனவா
மங்கவர்கள் கண்டமென வார்ந்தகந்தி பொங்குமொளி
தங்கு முறுவலெனத் தாமஞ் சிறந்தனவாங்
கொங்கைகளைக் கும்பநிகர்க் கும். (30)

அன்னகர மோங்க வணியு மமலையதும்
பொன்னகர மோங்கப் பொலிபோழ்தி னின்ன
வரக்கரினுந் தீமைக் கமைந்த பயனுத்
தரக்குறைவாங் கூனியெதிர்ந் தாள். (31)

தோன்றிவரு கூனி துடிக்கு மனமுடையா
ளூன்றி வருவெகுளி யுள்ளத்தாள் கான்றெரியுங்
கண்ணாள் கதித்தசொல்லாள் காணு முலகமிக
நண்ணுமிடர்க் காகரமா னாள். (32)

தொண்டையிதழ்க் கைகேயி தூயமணி மாளிகையின்
மண்டிவிழித் தாண்மடித்த வாயுடையாள் பண்டை
இராமன்கை வில்லுண்டை யேற்ற சினத்தா
லராமன்னுந் தோற்றத் தவள். (33)

Koviloor Digital Library

மலரணையும் பொற்சயன மன்னித் துயிலு
மலரணையா வல்லிதனை யண்டிப் பலரணையக்
கொள்ளுங் கவலைக்கோர் கொள்கலமாங் கூனிசினங்
கொள்ளு மவளைக் குறித்து. (34)

பொற்று மரைவனத்திற் போந்து தவமதுசெய்
துற்று மவள்சரணத் தோங்குவமை பெற்று
மெனமகிழ்ந்த நங்கை யிருசரண மான
தனையிகழ்ந்து கூனிபிடித் தாள். (35)

தீண்ட வுணர்ந்த திருமகிழ்செய் கற்புடையாள்
நீண்ட விழியனந்தர் நீங்ககிலாண் மூண்ட
பழிமுடிக்கும் பாதகியாள் பார்த்தாள் பதைத்த
மொழிமுடிக்குஞ் சொல்லறைவாண் முன். (36)

அணங்கா மரவ மணுகு மளவுங்
குணங்கா மதிபோற் குளிர்ந்தாய் வணங்காய்
கறங்குவாய் பேரிடர்கிற் கட்ட தறியா
யுறங்குவா யென்று ளுறுத்து. (37)

விடமுடையாள் சொல்லறிந்து வேற்கண்ணி சொல்வாள்
திடமுடையா ரென்சிறுவர் செய்ய நடையுடையார்
அத்தகைய வன்பி னறந்திறம்பா ராதலினு
லெத்தகைய வெற்கா மிடர். (38)

புகழ்சேர்ந்த புத்திரரைப் போற்றும் புவியோ
ரிகழ்சேர்ந்த தென்னையவ ரேற்பார் மகிழ்சேர்ந்த
சிந்தையுடை வள்ளலையான் செல்வமக ளுப்புரிந்தே
னெந்தவிட ரெற்கா மிசை. (39)

பேரன்பி னிந்தவிதம் பேசுதலுந் தீவினையாற்
சீரன்பில் மந்தரையுஞ் செப்புவாள் பேரும்போய்
வீழ்ந்த நினதுநல மென்கோ சலைவாழ்ந்தா
ளாழ்ந்த மதிநலத்தென் றுள். (40)

Koviloor Digital Library

அன்னவள்சொற கேட்ட வரிவை தெரிந்துரைக்கு
மன்னவர்கள் மன்னன் வரன்புதல்வன் பன்னும்
பகுத்தறிவு கொண்ட பரதனவட் கென்னின்
மிகுத்ததெனே வாழ்வென்றாண் மின். (41)

ஆடவர்கட் காக்கமின்றி யாண்மை யவமடையத்
தாடகைப்போர்த் தையல் தரைவீழக் கோடும்
வரிசிலையி ராமன் மகுடம் புனைந்து
குரிசிலையா மென்றாள் குறித்து. (42)

மாற்றமுரை செய்ய மடந்தை திருவுளமும்
சாற்றவரு கோசலைமான் றன்னறிவு மேற்றதுவாம்
வீரன் சனகன் விரும்பு மவளிதயஞ்
சேரு நலத்தாற் சிறந்து. (43)

பேரார் மகிழ்ச்சி பெரிது முளஞ்சேரச்
சீரார் முகமதியுந் தேசுறவே நேராகுந்
தூயகத்தாள் கைகேயி தோற்றுஞ் சுடர்க்கெல்லா
நாயகத்தா மாலைநல்கி னள். (44)

தெழித்தா ளரப்பினள் சீறினள் செந்தீ
விழித்தாள் பழித்தெடுத்து வீசிக் குழித்தா
ணிலத்தைக் கொடுத்த நிகராரந் தன்னற்
குலத்தைக் கெடுத்தாள் கொதித்து. (45)

வேதனைசெய் கூனி வெகுண்டுரைப்பாள் பித்திநின்றன்
கோதனையா மைந்தனெடுங் கூர்துயரத் தாதலுற்றாய்
வாட்செய்யுங் கண்ணையுன் மாற்றவடன் றாதியருக்
காட்செய்ய நண்ணே னறி. (46)

சீதையொடி ராமனுயர் சிம்மா சனத்திருக்க
வாதையொடு நின்சேய் மகிதலத்திற் பேதையாய்
வீற்றிருக்க வேண்டி விமலற் பணிந்துமுன்னி
நோற்றிருக்க வேண்டியதின் றே. (47)

Koviloor Digital Library

மறந்திலளாங் கோசலையு மைந்தற் குறுதி
சிறந்திலகுஞ் செல்வமெலாஞ் சேர்த்தாள் பிறந்த
பயனடைந்தா னன்றேன் பரதன் பிறந்து
நயனடையா னிந்தவத்தி னால். (48)

இப்புவியைத் தம்பியொடு மேந்தலிரா மன்காக்கி
னெப்புவியைக் காக்குநின்சே யில்லிழந்து மொப்பில்
பரதனினித் தம்பியொடு பாராசை விட்டுத்
திரிதனல மென்று டெழித்து. (49)

தன்னிலைமை தானறியாய் தாயெனநீ சார்ந்ததனாற்
பொன்னிலைமை துன்னும் புகழுடைய மன்னுப்
பிறத்தலினாற் பேறடையாப் பிள்ளை பரதன்
இறத்தலினாற் பேறு மினி. (50)

பாக்கியந்தாம் பண்ணுப் பரதன் றனைப்பரிவாய்த்
தேக்கியங்குங் கல்லதரிற் செல்லெனப்பின் றுக்குதற்கே
யன்றறிந்து போக்கு மரச னபிமதத்தை
யின்றறிந்தே னென்று ளெடுத்து. (51)

மந்தரையாம் பேயாள் வரைந்து பரிந்துரைப்பாள்
அந்தரமில் லாதுலகை யாள்வதனாற் றந்தையொடு
தாயுங் கொடியர் தரமார் பரதவென்றுள்
காயுங் கொடியாள் கதித்து. (52)

அரசிற் பிறந்து மரசின் வளர்ந்து
மரசிற் புகுந்தரசி யானுய் பரிசுரைக்கு
மென்பக்கல் சேரா யிரிந்து விழுந்ததுசிர்
துன்பக் கடற்குட் பணிந்து. (53)

கல்வி யிளமை கணக்கில்லா வாற்றலொடு
வில்விழைவு நல்லழகு வீரமுத லொல்லும்
குணங்கள் பரதற்குக் கூடியது வீணே
கணங்குழைநீ பெற்றதனாற் காண். (54)

Koviloor Digital Library

வாய்கயப்பக் கூனி வழங்கு மொழிகேட்டுக்
காய்கனற்கண் ணெய்யிற் கதங்கனற்றத் தோய்கயற்கண்
கோபத் தழல்பொழியக் கூறுவாள் கேகயர்மான்
பாபத் திழிவாளைப் பார்த்து. (55)

கதிரோங்கு நற்குலத்தார் காக்கு முயிரின்
மதியோங்க மன்னுலகின் வாழ்வார் விதியாம்
மயில்முறையா மிக்குலத்தார் வந்த மரபைப்
பயில்முறையா லென்னநினைப் பாய். (56)

எனக்குநல்லை யல்லை யினியென் பரதன்
தனக்குநல்லை யல்லை தனித்தா யுனக்குநல்ல
தல்லாது சொன்ன யழிவினையாய் நீயென்முன்
னில்லாது போக நினை. (57)

பிறந்திறந்து போந்தும் பெறுதல் புகழே
சிறந்திறம்பா ஞாய நெறியுந் திறம்பலிலா
மெய்யுடையாய் வாய்மை விழைவோர் வரன்முறையைப்
பொய்யுடையாய் சொல்வதென்னை போ. (58)

போதிப் பதுதவிருன் புன்பொறிசேர் நாவதனைச்
சேதிப் பதுதவிர்ந்தேன் சென்றிடுதி நீதியில்லா
நின்சொற் சிலரறியி னேயங் கெடுமென்றாள்
வன்சொற் புலனறியா மான். (59)

அஞ்சியந்தக் கூனி யகலாள் புகல்வாள்பின்
நஞ்சிவர்ந்து தீர்ந்து நலிந்தென்ன வஞ்சி.
யுனக்குறுதி சொல்லு முரைதவிரே னென்று
ளெனக்கிறுதி வந்ததனு லென். (60)

மூத்தவற்குத் தானு முறையி னெனிலுலகங்
காத்தவற்கு மூத்தவனே காகுத்த னேத்துமுடி
சூடுவதற் கேற்குமெனிற் றேன்றல் பரதன்முடி
சூடுவதற் கேற்காதென் சொல். (61)

Koviloor Digital Library

அறநிறம்பு மான்றோர்க ளானாலு மந்தத்
திறநிறம்பு செல்வமுற்றாற் செய்கை மறநிரம்பு
வெந்தொழிலைச் செய்வரன்றி வேறு நயம்புரியார்
சிந்தைமயல் கொண்டாய் திகைத்து. (62)

தன்சே யரசனெனிற் றங்கு முலகமெலா
மன்சேருங் கோசலைக்கா மற்றனக்கு முன்சேய்க்கு
மன்னவளாற் றந்த வளவன்றி வேறனக்கிங்
கென்னவள மென்றா ளெடுத்து. (63)

வறுமைத் துயரத்தால் வந்திரந்த வர்க்குச்
சிறுமைப் படுநீயென் செய்வாய் திறமுற்ற
வன்னவளை வேண்டி யளித்தியோ மாளுதியோ
வென்னவினை வென்பதனை யெண். (64)

சிந்தைசெய்கை சிந்தத் திகைத்தாய் சிலநாளிற்
றந்தமின்மை நின்னூற் றவிர்க்கநினைந் துந்தையன்னை
யேற்ற கிளைஞ ரெதிர்வந்து காண்பதெவை
மாற்றவள்செல் வந்தான் மதி. (65)

காதலுந்த ஞயகனைக் கண்டு சனகனுமுன்
தாதைசிந்தத் தெட்டலின்றித் தாங்கினான் சீதைகொண்கன்
மாதுலனு மன்னோன் மதத்தாலுன் றந்தைகெடும்
பேதையுன்போ லார்பிறந்தார் பெண். (66)

மற்றமுந்தன் றந்தைக்கு மன்னும் பகைபெரிதாஞ்
செற்றவந்த போதிவர்கள் சென்றுதவார் கொற்றமினித்
தோற்றுவது மெங்கேயுன் சுற்றங் கெடுந்துயரை
மாற்றுவது மெங்கே மதி. (67)

உன்புதல்வற் கின்றி யொலிக்குங் கடலுலகம்
அன்புதவிர் காகுத்தற் காகுமெனிற் பின்புங்
கொடுத்தவர சன்னான் குலமைந்தர்க் காகு
மடுத்ததம்பிக் காமுனக்கென் னும். (68)

Koviloor Digital Library

தீயவுரை மந்தரையாள் செப்பவரு தேவிசிந்தை
தூயவுரை சிந்தித் துகளடைந்த நேய
விமையோர் வரத்தாலு மேற்ற தவத்தாற்
கமையோ ரறத்தானுங் காண். (69)

அரக்க ரடுபவமு மல்லா ரறமுந்
துரக்க வருடுறந்தா யோ ளிரக்கமின்மை
தானேயி ராமன் றனியுலகைத் தாங்கநின்ற
கோனேர் புகழையழிக் கும். (70)

அனையமொழிக் கான வறிவழிகை கேயி
வினையபழிக் கூனி விரும்ப வெனையுவந்தா
யெல்லுறுதி கொண்டமுடி யென்மகற்குச் சூட்டுதற்குச்
சொல்லுறுதி யென்று ணிந்து. (71)

மையுண்ட கண்ணியுரை மந்தரைதான் கேட்டுவந்து
பொய்யுண்ட வெண்ணம் பொருந்தியே செய்யும்
பெருமையுற்ற வென்னுரையைப் பேணி னுலகுன்
னருமையுற்ற நன்மகற்கே யாம். (72)

நாடியொன்று சொல்வே னளின வதனத்தாய்
கூடியொன்று சம்பரனைக் கொன்றவன்னா ளாடல் வென்றி
வள்ளன்முனங் கொண்ட வரயுகத்தை நாட்டென்று
ளுள்ளமுனங் கோடுமவ ளோர்ந்து. (73)

இருவரத்தி னொன்றரசை யேற்றுன் றிராமன்
பெருவனத்தி னேழிரண்டு பேர்த்தாம் பருவம்
திரிதலுற்று னென்னிற் செழித்த வுலகம்
பரதனுற்று னென்றுள் பரிந்து. (74)

உரைத்தகொடுங் கூனிதனை யுற்றுத் தழுவி
நிறைத்தமணி மாலைநிதி நீட்டி யிரைத்தகடல்
சூழுலக மென்மகற்குச் சூழ்ந்தளித்தாய் நீயேதா
னேழுலக மன்று யிசைந்து. (75)

Koviloor Digital Library

நன்றுரைத்தாய் நம்பிக்கு நண்ணு முடிசூட்டல்
என்றுரைத்த கானி லிராமனையே துன்றத்
துறத்தலிவை சோரிற் றுகளரசற் காக்கி
யிறத்தலிவை யென்ற ளெடுத்து. (76)

கூனிசென்ற பின்னர் குலமலரி னின்றிழிந்தாள்
சோனையென்ற கூந்தற் சொருகியபொன் வான
மழைநுழையு மாமதியை மத்திப்பாண் மானத்
தழையுமலர் மாலைசிதைத் தாள். (77)

தன்புகழார் வல்லி தனைவேர் களைந்ததெனப்
பொன்புகழா மேகலையைப் போக்கின ளின்ப
மதியின் மருத்துடைக்கு மாண்பா நுதலிற்
பதியுந் திலகமழிப் பாள். (78)

மாமணியா லாமணிகள் மற்றுஞ் சிதறிநிறை
பூமலரு மைம்பால் புவிபரப்பிக் கோமலரு
மஞ்சனங் கால வழுது மலருதிர்ந்த
வஞ்சி யெனப்புரண்டாள் மான். (79)

நவ்வி விழுந்ததெனவு நாட்டுமயில் சோர்ந்ததெனவுஞ்
செவ்விவிளை தேன்மொழித்தாய் சீதையெனுந் தெய்வமல
ரவ்வையினி நீங்குமென வன்னகரி னன்றடைந்த
தௌவையெனக் கைகைகிடந் தாள். (80)

மந்தரை சூழ்ச்சிப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

கைகேயி சூழ்வினைப் படலம்.

நாழிகையுங் கங்கு னடுவடைந்த வேளைதனில்
யாழிசையுஞ் சொல்லா ளமர்கோயில் வாழிசெயும்
மன்னர்துன்ன வந்தான் மடங்க லனையவலன்
மன்னர்மன்னன் சிந்தை மகிழ்ந்து. (1)

வாயிலினு மன்னர் வணங்கிநிற்ப வந்தடுத்தாங்
கேயினசெய் மாதரொடு மேகியே பாயல்
துறந்தபடைக் கண்ணாள் துயரத்தைக் கண்டான்
சிறந்தகொடைக் கையான் றிகைத்து. (2)

அடைந்தநிலை கண்டா னரந்தையென்கொல் வந்து
தொடர்ந்ததெனக் கொண்ட துயரான் மடந்தைதனை
மானெடுக்கு மானையென வந்து கொடைக்கரத்தாற்
றானெடுக்குஞ் சிந்தை தளர்ந்து. (3)

நின்றுதொடர் கைத்தலத்தை நீக்கித் தமைத்துறந்து
மின்றுவள்த லென்றுபுவி வீழ்ந்தடுத்தா ளொன்று
மியம்பாள் பெருமூச் செறிவா ளவள்கொள்
சயம்பார்த்தான் மன்னன் சலித்து. (4)

அன்னதனைக் கண்ட வலங்க லரசனஞ்சி
யுன்னைநினை யாதிகழ்ந்தா ருண்டெலகி லுன்னிதயஞ்
சொன்னபின்பு காண்டி துயரமவர்க் காவதென்றான்
மன்னனன்பு கொண்டு மனத்து. (5)

வண்டுளருந் தாரான் வழங்கு முறைகேட்டுக்
கொண்டனெடுங் கண்ணாலி கொங்கைமுற்ற வுண்டுகொலா
மென்கண்மெய் யன்பிருக்கி னேற்ற தருளென்றாள்
வன்கண்மை கொண்டமட வாள். (6)

Koviloor Digital Library

கள்ளவிழுங் கோதை கருத்துணராக் காரணத்தா
லுள்ளவிழு நெஞ்சி னுவப்பெய்தி வள்ளலுந்தன்
மைந்தனிரா மன்னறிய மாருது செய்வனென்ருன்
செந்தனிக்கோன் மன்னன் றிகைத்து. (7)

ஆன்ற வரசுரைகேட் டையமிலாள் வையமன்ன
தோன்றிவரு துன்பந் துடைப்பதுண்டேற் சான்றிமையோ
ராகமுன்ன நீயெற் களித்த வரந்தந்தா
லேகுமின்ன லென்ரு ளிசைந்து. (8)

கொந்தணையுங் கோதை குறித்தவரங் கொள்வதற்கு
மந்தணமென் றந்தேன் வழங்கென்ருன் கந்தமலர்க்
கஞ்சமன காலாள் கருதுங் கடியநெடு
வஞ்சமனந் தேரு மனன். (9)

ஏய வரமிரண்டி னென்சே யரசாள
லாயவனி ராம னரசில்லான் மேய
வனமாளு மென்று வரைந்து புகன்ருள்
சினமாளுந் தீயாள் செயிர்த்து. (10)

நாகமடங் குங்கொடியா ளுவிற் குறித்தீன்ற
சோகவிடங் கொண்டரசு தோமெய்தி யாகமுடன்
வெந்தழிந்த தந்தியினுல் வேகமடங் குந்துதிக்கைத்
தந்தியெனச் சாய்ந்தான் றளர்ந்து. (11)

பூதுயர மோதிப் புரண்டு விழுமன்னன்
மாதுயர மோதி வகுப்பதெவர் மீதுயரால்
வெந்துயிர்த்த கொல்லன் மிகுந்தூ துலைக்கனலில்
நொந்துயிர்க்க வந்ததந்த நோய். (12)

உலர்ந்ததுமென் னுவு முயிரோட வுள்ளம்
புலர்ந்ததுகண் சோரி பொடித்த தலந்துவரு
செற்றமது கொள்ளுந் திறமன் றெனவுள்ளு
முற்றபுல னேயு முலைந்து. (13)

Koviloor Digital Library

மேவி நிலத்திருக்கும் வீழு முடனிற்கு
மோவு முயிர்ப்படங்கு மோவியமாம் பாவிதனைப்
பற்றியெற்ற வெண்ணும் பதைக்கு முயிர்சோரு
முற்றபெற்றி யொன்றே வுள. (14)

பெண்ணென்ற வொப்பாம் பெரும்பழிக்கு நாணமுறு
முண்ணின்ற வெப்போ டுயிர்த்துலவுங் கண்ணெருப்பி
னூக்குமன முன்னு நுதிவே லுழைந்தபுண்ணி
னூக்குமன வென்ன வயர்ந்து. (15)

கம்பக் களியானைக் காவலன்ற னின்னலறிந்
தும்பர்க்கு முள்ள மொடுங்கியதா லம்பொக்குங்
கண்ணுடையா ளெண்ணங் கலங்கலையென் றூலுண்டோ
பெண்ணுடையா ரெண்ணிற் பெரிது. (16)

அஞ்சா மடக்கொடியா ளண்ணனிலை கண்டயராள்
நஞ்சா மடந்தையர்க்கென் றுண்டு வஞ்சம்
மடந்தையர்கள் வேடமென மாதர்களை யுள்ளார்
கடந்தநிலை காண்பெரியோர் கள். (17)

இன்னிலையி னின்றாளை யேந்த லறிந்துரைப்பான்
நின்னிலையி னீதிகைத்தல் நேருண்டோ வன்னிலையர்
போர்த்தமன வஞ்சம் பொருந்தியவோ சொல்லென்றான்
சீர்த்தமன மஞ்சித் திகைத்து. (18)

திகைத்தது வு மில்லையெற்குத் தீயோர் தெரிய
விசைத்ததுவு மில்லைமுன மீந்தாய் நகைத்தவர
னின்றுதர நன்று மிலையேல் வசையாக்கிப்
பொன்றுதலா மென்றாள் பொரிந்து. (19)

இந்த நெடுமாற்ற மேழை வழங்குதன்முன்
வெந்த கொடும்புண்ணின் வேலென்னச் சிந்தை
திரிந்துசெயிர் கொண்டான் சிறந்தமக னன்றி
வருந்துமுயிர் வேறறியா மன். (20)

Koviloor Digital Library

ஆகொடியா யென்றுரைக்கு மாவி திரியுமந்தோ
வோகொடிதே தன்மமெனு முற்றழைக்குஞ் சாகவெனத்
தள்ளாடி வீழுஞ் சலிக்கு முலகைவென்ற
புள்ளாடு வேலான் புகைந்து. (21)

நாரியரே யில்லையிந்த நானிலத்தி னென்றுரைக்கக்
கூரியவாள் கொண்டடர்த்துக் கொன்றியான் பூரியர்க
ளெண்ணிடையே வீழ்வனென வெண்ணும் பகைவர்தமை
மண்ணிடையே வீழ்வனசெய் வான். (22)

கையறையு மண்ணிற் கடிக்கு மெயிறுபினும்
பொய்யுரையுங் குற்றமெனப் போக்கினையு நெய்யெரியிற்
பெய்யமுற்றுந் தீபோற் பெருக மனமழலும்
வையமுற்றும் வாய்மைமன்ன வன். (23)

குற்றங்கொள் ளாது குறிக்கொண்டு மற்றென்பாற்
செற்றங்கொள் ளாமலருள் செய்யென்று பற்றலர்க
டன்னடியில் வீழத் தனியருள்செய் மன்னனவள்
பொன்னடியில் வீழும் புலர்ந்து. (24)

கொள்ளானுன் சேயரசு கொண்டாலு நன்மையென
நள்ளாது நானிலந்தான் ஞாலமதி லுள்ளார்க
ளோதங்கங் கொண்டபுக ழோங்கி யடையென்றான்
ஆதங்கங் கொண்ட வரசு. (25)

வானோர் மதியார் மகிதலமும் வாழ்வடுக்கா
தேனோ ரொடுமொள்வா யிவ்வரசு யானே
தரக்கொண்டான் முன்னந் தருமுன் மகற்கும்
வரக்கொண்டல் வண்ணன் மகிழ்ந்து. (26)

கண்வேண்டு மென்னிற் கடவேன் தருவனின்றே
பண்வேண் டுயிருமுன் பாங்கன்றோ பெண்வேண்டுங்
கைகேயன் மானே கருதி யதுமுடிக்கின்
வையகங்கொண் மற்றை மறந்து. (27)

Koviloor Digital Library

வாய்தந் தனைய வழங்கி யதுமாற்றேன்
நோய்தந் தனைய நுவலாதே யாய்தந்த
தன்னை யிரந்தாற் றழல்வெங்கட் பேயீயு
முன்னை யிரந்தே னுயிர். (28)

இன்னநயம் பன்னி யிரந்தா னிகல்வேந்தன்
தன்னனைய தீயாள் தடுமாறுள் சொன்னவுரை
மாற்றத் துணிந்தனையேன் மன்னு வினிவாய்மை
ஏற்றத்து ணின்று ரெவர். (29)

அச்சொல்லைக் கேட்டவுட னுவி யயர்ந்தழுங்கும்
பொய்ச்சொல்லைக் கேளாப் புகழரச னச்சுத்தீப்
பெண்ணுருவ மென்று பெருநா ணடைந்துபினு
மெண்ணுருவச் சொல்வா னெடுத்து. (30)

நின்மகனு நீயு நிலமெவையு நேராள
வுன்மகற்குத் தந்தே னுரைகுன்றே னென்மகனை
நாடிரங்கா வண்ணம் நயவென்று னல்லறுகால்
தோடிரங்குந் தாரான் றுதித்து. (31)

பூவுலகின் மெய்யறத்தைப் போக்கிப் புகழ்குறுகே
னுவுலர்ந்தேன் செய்ய நளினம்போன் மேவுதிருக்
கையானென் கண்ணெதிரே கானம் புகுவனெனி
லுய்யேனு னென்று னுயிர்த்து. (32)

இரந்தான்றன் இன்னுரையை யேற்காண் முனிந்தாள்
மரந்தான்றன் நெஞ்சாள் வசையாள் சரந்தாங்கும்
வில்வலத்தாய் தந்தவரம் வீண்புரியி னின்னுடைய
சொல்வலத்தாய் நின்றதென்று டோம். (33)

கொடிசூலி கூற்றைக் குலவேந்தன் கேட்டு
முடிசூட லின்றெனினு மொய்கான் நெடியோனைச்
செல்லாமல் வாழ்ந்தாந் திறமன் றெனவுயிரும்
இல்லாமல் வீழ்ந்தா னிலம். (34)

Koviloor Digital Library

வீழ்ந்தான் றுயர்வாரி வேலை யறியாமன்
தாழ்ந்தான் றவித்தான் றரமில்லாள் சூழ்ந்தகொடும்
சொற்கேட்ட நெஞ்சந் துடித்துருகிச் சொல்கின்றான்
மற்காட்டுந் தோளான் மருண்டு. (35)

நன்மையுற்ற நங்கையர்க ணாயகர்க்கு நாளடுக்கிற்
றன்மையுற்றுச் சார்வார் சகமரணம் வன்மையுற்ற
வல்வாய் விடத்தாய் வலித்து மறித்தெனைநீ
கொல்வாய் கொடியாய் குறித்து. (36)

இனமுறையை நோக்கா யிகழ்ந்தா யறத்தை
மனமுறையா நல்லருளை மாய்த்தாய் சினமுறையாம்
நாவம்பா லென்னுயிரை நாட்டியுண்டாய் வாட்டிவரும்
பாவம்பா ராது பகைத்து. (37)

மண்ணாள் வலத்தால் மருவலரை மாய்த்தடுத்து
விண்ணாள் வலத்தரிக்கும் வெற்றிதந்த கண்ணானை
மாவினைசெய் வாண்மனைவி மாய்த்தாள் வருந்தவெனுந்
தீவினைசெய் தேற்றாய் சினந்து. (38)

என்றென்று பன்னு மிரக்கு மிடருழக்கு
மொன்றொன்றாத் துன்பத் துயிருண்டோ வின்றென்னும்
வண்ண மயங்கும் மலைப்புயத்தான் கொண்டதுய
ரெண்ண மயங்கு மிசைந்து. (39)

ஆழிபெற்ற தேர்மன் னயர்வெய்தி யிவ்வாறாய்ப்
பூழிபொற்றோண் முற்றப் புரள்போழ்தி னூழென்
னுரைபொய்த்தா வின்றெ னுயிர்பொய்த்த தென்றாள்
நிரைபொய்த்து நின்றா ணினைந்து. (40)

அரிந்தான்முன் னோர்மன் னவனுடலம் புட்கா
வரிந்தார்வின் மன்னா வரந்தந் திரிந்தாலென்
னாமென்றாள் பாயு மனல்போ லரசனுயிர்
நாமென்றாள் பாரா ணலிந்து. (41)

Koviloor Digital Library

ஈந்தேன் வரமுனக்கே யென்சேய் வனமடைவான்
மாய்ந்தேன் மகிபரவு வாழ்வைவிட்டு மீந்தாய்
வசைவெள்ளங் கொண்டாய் மகனோடு மென்று
னிசைவெள்ளங் கொண்டா னிரிந்து. (42)

கூறுமுன் கூறு கொடுக்குங் கொலைவாளி
னேறுந் துயரத் திடைமூழ்கித் தேறுமன்
செய்கை மறந்தான் றிருவிலவ ளுந்துயின்றாள்
செய்கை மறந்து திகைத்து. (43)

நாளுடைய தாமுயிர்க்காம் நாயகனின் னற்கிரங்காக்
கோளுடையாள் கொள்கை குறித்தறிந்தே யாளுடைய
நம்பிமுன்னே நிற்பதற்கு நாணடைந்த கங்குனங்கை
வெம்பிமுன்னே சென்றாள் விரைந்து. (44)

தம்பி தொடர்ந்துவரச் சானகியா டன்னுடனே
நம்பி நடந்தகட நாடுமென்றே வெம்பி
நடுங்கு மனத்தவாய் நாமுன்னு மென்று
தொடங்கு மதமாத் துணிந்து. (45)

யாமங் கடைசென்ற யாது மிறங்காண்மின்
மாமன் மயங்கும் வகைகண்டு காமர்சிறைக்
கையா லகட்டிற் கலந்தடித்த போன்றவே
நையாத கோழி நலிந்து. (46)

கண்ணன் முடிசூடுங் காலந் தெரிந்துரைக்கும்
வண்ணமெனப் பேரி வழங்கலால் வண்ணமிக்க
மாமயிலின் சிந்தை மலர்ந்தார் வனிதையர்கள்
காமனிகர் மைந்தர்க் கலந்து. (47)

மன்னனின்னல் கண்டு மனமிரங்காப் பாதகியா
மின்னனையாள் செய்கை விளித்துமிக வின்னலொடு
கோபத்தாற் சேர்ந்து குணக்குன் றினனடைந்தான்
தாபத்தா லெங்குஞ் சரித்து. (48)

Koviloor Digital Library

மூவர்க்கு முன்னவனு முக்கணரன் மூரிவில்லை
மேவற்கு முன்னொடித்த வேள்முடியிற் பூவைக்குந்
துங்கமுடி காணவரு தோகையர்கண் மாமுகம் போற்
பங்கயங்கள் பார்க்கும் பரிந்து. (49)

மன்னன் முடிசூடும் வைக லிது வென்றே
யன்னகரார் கொண்டமுத மார்சொல்வா ரென்னு
லுரைக்க வரிதேனு முற்றபெற்றி தன்னை
யுரைக்க வருவே னுவந்து. (50)

கோதையர்கள் கற்புடையார் கோசலைமான் சிந்தையொத்தார்
வேதியரொத் தார்வதிட்டன் வேறுமின்னார் சீதையொத்தார்
அன்னகர மாந்தரவ ரன்புடைமை யாலரசன்
தன்னனைய ரானார் தகைந்து. (51)

சீதை கணவன் றிருமுடியைக் காண்பதற்குப்
போது மரசர்குழாம் பொன்னுலகோ ரோது
மமிழ்தமுண வந்தடைந்த வாமென்ன வந்தார்
தமதுநகர் நின்று தணந்து. (52)

பாகியலுஞ் செவ்வாய் பணைமுலைதே ரல்குலுடைத்
தோகையரு மைந்தர்களுந் தோன்றியே யேகுமின்க
ளேகுமின்க ளென்றே யிடையிடையி னிற்பதலாற்
போகிலர்கள் வீதி புகுந்து. (53)

வேந்தர்பெரி தென்பாரும் வீரர்பெரி தென்பாரும்
மாந்தர்பெரி தென்பாரு மாதர்வெள்ளம் போந்த
பெரிதென் றுரைப்பாரும் பேசுவதே யல்லா
லரிதென் றுரைப்பரெவ ராம். (54)

குவளைவையாம் வேலின் கொடுமையொடு கூட்டித்
திவளுமையா நஞ்சினையுந் தீட்டித் தவள
மதியினிடை வைத்தகண்ணார் மாமயில்கள் போலத்
துதியினொடு தொக்கார் தொடர்ந்து. (55)

Koviloor Digital Library

நலங்கிளரும் பூமியெனு நங்கைதனைக் குல்லை
யலங்கலுடை யான்மணக்க வாங்கே யிலங்கை
நிருதரொத்தார் வாரார் நிகரி னுலகின்
வருதரத்தார் வந்தார் மகிழ்ந்து. (56)

சந்திரர்க ளென்னத் தரளக் குடையோங்க
வந்தரத்தி லன்னமெலா மார்ந்தவென வந்துநிரை
கொண்ட கவரிதுள்ளக் கோவேந்தர் மங்கலமார்
மண்டபத்திற் புக்கார் மதித்து. (57)

முப்பொருளாய்த் தேவர் முதற்பொருளாய் நன்மைதரு
மப்பொருளுக் காக்குமுடி யற்புதங்கண் டொப்பவர
வான்மறைய வானவர்கள் வாழ்த்தவர மண்டபத்தி
னுன்மறையோர் வந்தார் நயந்து. (58)

ஆய வமைதியின்க ணையன் முடிசூடற்
கேயவரு மங்கலங்க ளேற்றகொண்டு தூய
மறையோர்கள் சூழ வதிட்டமுனி வந்தா
னிறையோங்கு தந்தை யியைந்து. (59)

விண்ணோர் விசும்படுத்தார் வேலா வலையமணி
மண்ணோர் திசையடுத்தார் மங்கலச்சங் கெண்ணுந்
தனிமுரசி னோதை தயங்குசெவி தூர்த்த
கனகநிறை தூர்த்த கடல். (60)

கங்கைமுதற் கன்னிவரை காணும் புனலினொடு
பொங்கமுத மாகடனீர் பூரித்து மங்கிமுற்றிச்
சிங்கா தனம்புரிந்து செய்வனவெ லாஞ்செய்தான்
பங்கேரு கன்சேய் பரிந்து. (61)

கணித முரைத்தவரர் கால முரைத்தார்
பணியுஞ் சுமந்திரனைப் பார்த்து மணிமுடிகொள்
வேந்தன் றனைநீ விரைவி னழையென்றான்
சார்ந்தந் தனைக்கொள் தவன். (62)

Koviloor Digital Library

போந்த சுமந்திரனும் பொன்வேந்தை நாடிவந்து
மாய்ந்தகொடுங் கைகேசி வாழ்மனையிற் சேர்தவுடன் [ருள்
பெண்டிர்தமிற் கூற்றமன்னாள் பிள்ளைதனைச் சேர்க்கவென்
அண்டர்தமக் கன்புடையா ளாய். (63)

என்றவுரை கேட்டா னெழுந்த வுவகையுடன்
மன்றவர வள்ளலருண் மாளிகையிற் சென்றவரன்
தன்றிருவுள் ளத்தே தனைநினைந்தி யோகமுற்ற
வென்றியனைக் கண்டான் விரைந்து. (64)

கொற்றவர்கண் மற்றுங் குவலயத்து மாந்தரெலாம்
பெற்றவனைப் போற்பரிந்து பேணிநின்றார் சிற்றவைதா
னங்கழைத்தா ளன்று மணிமகுடஞ் சூடிமகிழ்ந்
தெங்களைத்தாங் கென்று ணிசைந்து. (65)

ஐய னருண்மொழிகேட் டாயிரமா மோலியனைக்
கைதொழுது மன்னர் கவிந்துவர நைவளஞ்சேர்
மாடகத்தாம் பாடன் மகிழ்ந்திரத மீதுவந்தா
ளுடகத்தாம் வீதி யணைந்து. (66)

திருமகுடஞ் சூடவரு சேவகனைக் காணப்
பெருமைகொடு வீதிவந்தார் பேணி மருவுந்
திறத்திடையா நல்லுயிரைச் சேர்ந்தெவரு மொன்றாய்ப்
புறத்திடையாய்க் கண்டவரைப் போல். (67)

துண்ணென்ற சொல்லுடையாள் சொல்லத் துறந்துமுடி
கண்ணென்ற கானமது காண்பதன்முன் பண்ணென்ற
சொல்லுடையார் தோளாந் துதியுடைய வேய்க்கானம்
வில்லுடையான் சென்றான் விரைந்து. (68)

சுண்ணமலர் சாந்துஞ் சுவணமொடு தூவவந்து
வண்ணமலர் சங்கம் வழங்குவார் கிண்ணமலர்
கொங்கையிணை மாரன் கொடுங்கணையான் விம்மவரு
மங்கையர்கள் செய்கை மறந்து. (69)

Koviloor Digital Library

அங்கணனுஞ் சீமா னவனி யளிக்குமனன்
நங்கணருள் செய்யாத நாட்டமென்னே பொங்கெழிலிக்
கோலமொடு தேருங் குலவி யெதிர்கண்டோஞ்
சாலவரு ளென்றார் தகைந்து. (70)

மகளிரெலா மின்ன வரைந்து நிறைந்தார்
புகலுநகர் மாக்கள் புனிதர் தகவுடையான்
மேனிதனைக் கண்டு விழைந்துரைத்த மாற்றமதி
ஞானிதனைச் சொல்வே னயந்து. (71)

உய்ந்த துலகென்பா ரூழிகாண் பாயென்பார்
மைந்தனீ கோடியெங்கள் வாழ்வென்பா ரைந்தவித்துச்
செய்தவமுன் றண்ணளிக்கே சேரவென்பார் நல்வினைக
ளெய்தவரு மென்பா ரிசைந்து. (72)

கண்ணியைந்த பொற்கமலங் கார்நிறத்துக் காக்கவென்ன
புண்ணியந்தான் செய்தவெனப் போற்றுவார் மண்ணியைந்த
தெம்மாறச் சேயளித்த செல்வன் தயரதற்குக்
கைம்மாறே தென்பார் களித்து. (73)

வாரணந்தான் போற்ற வரமளித்த வாழியங்கை
நாரணன்தான் நம்பியரு ளுட்டமென்பா ராரணந்தான்
தேருத சீமானைச் சிந்தைகொண்டு கண்கலுழி
யாருக நிற்பா ரறிந்து. (74)

நீலமுகில் வண்ண னிறையோ டறிவுதருஞ்
சீலமுடன் றேவர்க்குந் தோர்வரிதாங் காலங்
கணக்குங் கடந்துநின்ற காரணனு மென்று
வணக்கம் புரிவார் மகிழ்ந்து. (75)

ஆர்கலிக்கும் பேரளித்தோ ரன்றுலகிற் கங்கைதந்தோர்
சீர்கலிக்குந் தேவர்பகை சீறிவென்றோர் நேர்கலித்து
வந்தபுகழ் சோர்ந்துநின்ற வள்ள லிவன்கொண்டு
தந்தபுகழ் சார்ந்துநின்ற தான். (76)

Koviloor Digital Library

சந்தமுறு பொன்மணியுந் தாவி னிதியுடனே
சிந்துரமுங் கந்துகமுஞ் சேர்த்திவற்றை மைந்த
வறியோர்கொள் பொற்பாய் வழங்குவா யென்று
நெறியோர்க ணிற்பார் நிறைந்து. (77)

மின்பொருவு தேரின்கண் வீரன் வருபோழ்திற்
றன்பொருவில் கன்றுநனி தாவிவர வென்புருகு
மாவரவு போலெவரு மன்பு சிறந்தடைந்தார்
கோவரவு கண்டு குளிர்ந்து. (78)

சத்திரமா நீழலுடைத் தார்மன் தயரதன்போற்
புத்திரமாப் பேறுடையார் போற்றரிதென் றுத்தி
மிகுத்தபொற்பார் வேளனைய மேலோனைக் கண்டு
திகைத்துநிற்பா ரோவியமொத் தே. (79)

காரடுத்த மேனிக் கடவு டிருமார்பன்
தேரடுத்து வந்ததினிச் சேறுமதாற் சீரடுத்த
கூர்மின் கனகக் குவிய னெடுவீதி
தூர்மின்க ளென்பார் தொகுத்து. (80)

தாய்கை வளந்திலனாற் றூங்கினள் கைகேயி
யாய்கை வளஞால மாள்வதற்கு மீகைகொண்டு
தானுவந்தா ளன்ன டவமே தவமென்றார்
தேனுவந்த சொல்லார் திரண்டு. (81)

பாவ மருந்துயரும் பற்றுவிட்ட முற்றுமென்பார்
பூவும் பொதுநீங்கிப் போந்ததென்பார் தேவர்பகை
யுள்ளவெலாம் வள்ள லுவந்து தெறுமென்பார்
கள்ளவிழுங் கூந்தலவர் கண்டு. (82)

ஆண்டினைய கூற வடல்வீரன் சுந்தரத்தேர்
நீண்டகொடி மாட நிறைவீதி தாண்டிவர
மன்னனைய மாளிகையின் வந்தான் வலனுரைக்கிற்
றன்னனைய வேளனையான் தான். (83)

Koviloor Digital Library

ஆங்கிவர்ந்த வண்ண லரசர் கவரியிட
வோங்கிவந்த வீர ருவந்தளிக்கத் தாங்கிவரு
காதலொடு பீடமிசை காமர் முடிசூடி
மாதர்நடங் காணுன் மகிழ்ந்து. (84)

வேந்தவையின் மாந்தர் விரும்புங் களிப்பிலையா
லேந்தவையி ராம னினிதெய்தான் சாந்தமுற்ற
நற்றவர்க ளுள்ள நடுவிருப்பான் வந்தடைந்தான்
சிற்றவையி னுள்ளந் தெரிந்து. (85)

புக்கவனை நோக்கிப் புரவலர்கள் மாமுனிவர்
தக்கரினைந் தான்றுதை தாள்சூடித் திக்கனைத்து
மேற்றுபுகழ் போற்றரச னேய்ந்து முடிசூட்ட
லாற்றுபுக ழென்று ரறிந்து. (86)

ஆயவன்சொல் லானதனை யாய்ந்தாள் வனமேக
நாயகன்சொல் லானதனை நானறைவேன் போயெனவே
தாயென்று வந்தான் றனிவள்ளல் தாயெவர்க்கும்
நோயென்று வந்தா ளுவன்று. (87)

நிந்தைகொண்டு வந்தாளை நேராய்வணங்கி வள்ளல் [ண்ட
சிந்தைகொண்டு வாய்பொத்திச் சேர்கரத்தால் விந்தைகொ
தானையடக் கித்துவன்று சார்ந்துநின்று னந்திவந்த
வானையடுத் துத்துவள்கன் றுய். (88)

நின்றவனை நோக்கி நெறியா ரருளில்லாள்
கொன்றதொழிற் கூற்றின் கொடுமையா ளின்றே
எனக்குரைத்தான் மன்ன னியல்பி னவையுன்
றனக்குரைத்தே னென்று டகைந்து. (89)

எந்தையுவர் தேவ விசைப்பதற்கு நீரிசைந்தான்
முந்தையுவர் தேவு முதற்றவமே தந்தையொடு
தாயும்பே ரன்பகத்திர் சார்ந்தே னருள்கவென்றுன்
ஆயும்பே ரன்பரகத் தான். (90)

Koviloor Digital Library

ஆழிகொண்ட பார்பரத னுளத் தவத்துடனீ
ஏழிரண்டு வற்சரங்கா னேகியே வாழி
வரவேண்டு மென்று வழங்குமர சென்றாள்
கரவாண்ட நெஞ்சாள் களித்து. (91)

எம்மனத்திற் கேற வியம்பற் கெளிதாமோ
செம்மனத்தி ராமன் றிருமுகத்தை யம்மலர்தான்
ஒப்பாதல் முன்பா முயர்வரத்தைக் கேட்டபின்னர்
தப்பாத வெற்றிகொண்ட தாம். (92)

மன்னேவத் தாந்திறம்ப மாட்டா துலகளிக்கும்
பின்னேயத் தாம்பிணியும் பேணிநின்று னின்னே
யருளுடையா னீக்க வகமகிழ்ந்தா னன்பர்
தெருளுடைய சிந்தைவருந் தே. (93)

மன்னவன்சொ லன்றேல் மறுப்பனோ நின்பணியென் [தின்
பின்னவன்றன் செல்வமியான் பெற்றதன்றோ வென்னவி
செல்வாம் வனமின்றெ சேரவிடை தாவென்றான்
சொல்வாள் மலர்த்தாள் துதித்து. (94)

கைகேயி சூழ்வினைப் படலம் முற்றிற்று.

நகர் நீங்கு படலம்.

என்றுதல் கூறி யிணையடியை யேத்துவந்து
தன்றாதை சார்திசையிற் றாள்பணிந்து நன்றாளும்
விசலைமான் பூவும் விரும்ப வருசேயைக்
கோசலைமான் கண்டாள் குறித்து. (1)

குழைக்குங் கவரிகுடை கொள்ளான் விதியாற்
றழைக்குந் தருமந் தளர மழைக்குன்றான்
பொன்னடுத்த மௌலி புனையாமற் றாய்முன்னே
மன்னடுத்தான் வந்தான் மகிழ்ந்து. (2)

Koviloor Digital Library

முடிசூடான் மஞ்சமீர் மூற்று நனையான்
படிசூடும் பாதத்தான் பாங்கா வடிவுடைய
வண்ணையடி சூட வமல முடிபுனைதற்
கென்னைமுடி யென்று ளெடுத்து. (3)

தாயம் மொழியுரைக்கத் தானைப் பணிந்துரைக்கு
நேயம் மொழிதவறு நின்காதற் சேயாகும்
கொங்கடுத்த தார்ப்பரதன் கோல முடிசூடற்
கிங்கடுத்த தென்று ளிசைந்து. (4)

முறையன்று மென்பார் முதியோ ரதன்றி
நிறையொன்று நின்போல நேயன் குறைவின்று
மென்றுரைக்கு நால்வரினு மேற்றந்தாழ் வில்லாது
நன்றுரைக்கு நற்றாய் நயந்து. (5)

என்றடுத்துச் சொல்வா ளியம்பு மரசனுரை
நன்றடுத்துச் செய்வதுதா னட்டும்அறன் நின்றடுத்த
பூமகற்குத் தந்தவனைப் போற்றியுடன் வாழென்றான்
மாமகற்குச் சிந்தை மகிழ்ந்து. (6)

தாயறிந்து சொல்லுந் தழைத்த வுரைகேட்டுத்
தூயசிந்தை நல்லான் றுதித்துரைக்கு நாயகன்றான்
நன்னெறியைத் தேற்றும் நலத்தவுரை யுண்டென்றான்
மன்னெறியைப் போற்றும் வரன். (7)

ஈண்டோது நற்பணிதா னென்னையென நன்னயமா
யாண்டேழி ரேடே ழகன்கானிற் பூண்டதவ
மாதவர்க ளொத்து வசித்துவர லென்றுரைத்தான்
மாதவர்கொ ளத்தன் மகிழ்ந்து. (8)

ஆங்குபுகல் வார்த்தை யனலென்ன வன்னைகுழை
தூங்குசெவி தன்னிற் றொடராமுன் னேங்கி
யிளைத்தா டிகைத்தா ளிதுவென்ன மென்று
ளுளைத்தாள் விழுந்தா ளுயிர்த்து. (9)

Koviloor Digital Library

மாமகனே வஞ்சகமோ மன்னன் வரவழைத்துக்
கோமகனே யென்று குறித்தவுரை யாமகனே
அஞ்சுமஞ்சு மென்னுயிரு மஞ்சுமென வாவலித்தா
ணஞ்சமுண்டா லென்ன நலிந்து. (10)

கையை நெறிக்குந்தன் காதலன்வாழ் மாதவஞ்சேர்
செய்ய வயிரதுக்குஞ் சேர்கரத்தாற் பெய்வளைதான்
ஆருதாள் சோகமெனு மன்னவந்தி ஞழ்ந்துகரை
யேருதாள் வேகு மெரிந்து. (11)

நன்றுமன்ன வன்கருணை நாட்ட மெனநகைக்கு
நின்றுமன்ன நன்மகனை நீண்டசுர மென்றுமன்னப்
போவதென வாடும் புழுங்கும் பொருமியழுஞ்
சாவதென நாடுஞ் சலித்து. (12)

அன்பிழைத்த சிந்தை யரசற்குத் தக்கதன்றி
யென்பிழைத்தாய் மைந்த வெனவேங்கு முன்பிழைத்த
நல்குரவின் முற்றியவர் நாட்டும் பொருள்பிழைக்க
வொல்குமவர் போல வொழிந்து. (13)

அறத்தினரு டாணிலையோ வாவிநைந்த தென்னுந்
திறத்தினரு டெய்வமெனத் தேடுங் குறித்துவரு
கன்று பிரிந்த கரவை யெனக்கரையு
மன்று பிரிந்த தறிந்து. (14)

இத்திறத்தி னேங்கி யிடருற்ற தாயைவள்ளல்
கைத்திறத்தி னேந்தியருங் கற்புடையோய் பொய்த்திறத்தின்
ஆக்குதியோ வேந்தை யருளி னறத்தைமுற்றுங்
காக்குதியோ வென்ருன் கவன்று. (15)

சிறந்ததம்பி செல்வமுறச் செய்யவெந்தை தன்னை
யறந்ததும்பு மன்பருளத்தாக்கி நிறைந்த
வனத்திருந்து மாதவஞ்செய் வானுறுதி பெற்றேன்
எனக்கிதன்றி யென்ன மிசை. (16)

Koviloor Digital Library

விண்ணிவரு மண்ணுலகும் வேலைவரு காலரியோ
டெண்ணிவரு பூதமெலா மேகிடினுந் தண்ணளிசேர்
வள்ளலுரை மாற்ற வழக்குளதோ நீயிதனுக்
குள்ளழியே லென்று னுவந்து. (17)

ஆகலதே யான்ற வரசனரு ளாணைமறுத்
தேகலதை யானு மிசைக்ககிலேன் சாகா
வுயிர்தாங்க வல்லேனை யுன்னுடனே கூடச்
செயிர்தாங்கக் கானதைத்துச் செல். (18)

என்னைப் பிரியு மிடர்க்கடலிற் சேர்ந்தழியு
மன்னைப் பிரியமன முடைத்தா யென்னைப்பின்
கானந் தொடர்ந்தாற் களித்தவற மன்றென்றான்
ஞானந் தொடர்ந்தார்ம னன். (19)

வரிவிலெம்பி மன்னரசா வந்ததற்பின் சந்தத்
தருவலம்பு கையரசன் சார்ந்து பரிவலம்பு
மாதவத்தைச் செய்ய வனத்தின் வருநாளிற்
கோதகற்று நோன்புசெய்து கொள். (20)

சித்தமவஞ் செய்வதென்னே தேவர் திருமுனிவ
ரொத்ததவஞ் செய்துயர்ந்தா ரென்றோதா மெத்தனையா
மாண்டே ழிரண்டே யவையும் பகலலவோ
வீண்டேன் கவலை யிதற்கு (21)

முன்னருள நாளின் முனிவரனுங் கோசிகமான்
தன்னருளைத் தாங்கிவிஞ்சை சார்ந்ததுவும் பின்னருள
பேரும் பிழைத்தனவோ பேசரிய நன்மையுண்டாஞ்
சாருந் தழைத்தவறன் தான். (22)

மாதவர்க்குச் சார்ந்த வழிபா டியற்றிவரும்
போதவர்க்க ஞானம் பொலிவடைந்து ஞாதமுற்றுந்
தாங்கிவரு பண்ணவர்கள் சார்ந்தருளுங் காதலுட
னேங்கிவரல் காண்பா யுவந்து. (23)

Koviloor Digital Library

மகரக் கடலேற்ட்ட வண்டாடு தாரார்
சகரர்தனித் தாதையரு டாங்கிப் புகரில்லா
வாக்கையுயிர் போக்கு மவர்புகழ்பூ நின்றதன்றே
நீக்கமிலை யாகி நிரந்து. (24)

மான்மறிக்கை வள்ளல் மழுவேந்து ஞானவரன்
தான்மறுக்கான் றுதையுரை தாயைத்தா னானைக்
குறைத்தலுண்டா மேலாங் குரவன் மொழியை
மறைத்தலுண்டோ நீயே வழங்கு. (25)

இத்திறத்த வாக விசைத்தபல வாசகங்க
ளுய்த்துரைத்த சேயுரையை யுட்கொள்ளா வெத்திறத்து
மின்னுட்டை நீங்கு மெனவருந்தி னுண்மனது
தன்னுட்ட நீர்பொழியத் தாய். (26)

பாரைப் புரத்தல் பரதற்கே யாகவளர்
சீரைத் துறந்து செறிகானிற் காரொத்தான்
செல்லாமற் காப்பேன் சிறந்தரசற் போற்றியென
நல்லாள் நடந்தா ணலிந்து. (27)

போகின்ற தாய்சரணம் போற்றிப் புரவலன்போ
லாகின்ற வன்னைக் கடுத்துவரு சோகந்
தணிப்பாள் சுமித்திரையாந் தாயென்று சென்றான்
பணிப்பாயல் கொண்ட பரன். (28)

நடந்த கவுசலைமா னுடிக்கை கேசி
படர்ந்த தளியெய்திப் பார்மன் கிடந்த
படிவிழுந்து தேம்பிப் பதைத்தா னுயிர்மே
லுடல்விழுந்த தென்ன வுழைத்து. (29)

பேச்சில்லை யேபெரியோய் பேசாத தென்னையெனு
மூச்சில்லை யேதெரியேன் மோசமெனு மேச்சில்லா
மன்னவனே யென்று மதியை மனத்தாக்கு
முன்னவனே தன்சேயா மோய். (30)

Koviloor Digital Library

வேலா வலயஞ்சூழ் மேதினியோர் மாதவமே
யாலால முண்டதென வானதென்னே மேலாந்
தருமத் திருவுருவே தாரணியா ளுந்தன்
பெருமைக் கிதுதகவோ பேசு. (31)

மின்னின்ற மேனி வெறிதாய் விடநீயு
முன்னுந் தகைமைக்கு முற்றதிலை யின்னிலையாங்
கோமகனைக் கண்டு குறிக்காது செல்வதெனை
மாமகனே யென்பாள் மருண்டு. (32)

இவ்வா றழுவா ளிரியற் குரலிசைக்க
வொவ்வா தெனமுனிவ ரோங்கரச ரவ்வா
றறிவா யெனவாந் தருண்முனிவன் கண்டா
னெறிவா யரசன் நிலை. (33)

இறந்தா னிலன்பின் னிறவா தொழியான்
மறந்தா னறிவு மகிபன் றுறந்தாளாம்
கேகயர்கோன் மங்கை கிளருந் துயரமெனை
தோகையர்கோள் சொல்வதரி து. (34)

என்னவரு மாமுனியை யேற்றி யடிபோற்றிப்
பன்னவரு கைகேசி பார்த்தவுடன் தன்னால்
நடந்ததனைச் சொற்று ணகையின் முகத்தாள்
மடந்தையெனப் பேசநின்ற வள். (35)

சொற்றமுறையாற் சுடர்வா ளரசைநறும்
பொற்று மரைக்கை புனைந்தெடுத்துக் கற்றாய்
திருமணக்குஞ் செல்வற்குத் தேர்ந்தளிக்கு மென்றான்
கருமணக்காச் செல்வன் கரைந்து. (36)

சீதப் பனிநீர் தெளித்துநறுங் காலுதவிப்
போதத் தளவே புகன்றவுட னேதத்தாம்
நஞ்சனையாள் சொல்லும் நலிவு தணிந்துயிரை
மஞ்சனையான் கண்டான் வரைந்து. (37)

Koviloor Digital Library

முனிவனுரை கேட்டு மொழியு மரசன்
இனியெனுரை கோளுமெ லென்சேய் கனிவனத்திற்
போகாமற் கொண்ட புகழெனக்கு நல்கென்றான்
வாகாமற் கொண்ட வரன். (38)

முனியுங் கொடியாண் முகநோக்கிச் சொல்வா
னினியுன் மகற்கரசு மேனை மனுவழியாம்
நாயகற்கு நல்லுயிரும் நாட்டி நலமடைத
னீயகத்துக் கொள்ளென்று னேர்ந்து. (39)

ஆளரச மெய்த்தவன்சொ லாய்ந்தாள் விழுந்தழுதாள்
வாளரசன் மெய்த்தவுரை மாற்றுமெனிற் கோளளவா
வென்சொற் றவர விருக்கே னுயிரென்றாள்
வன்சொற் றவராத வள். (40)

நாயகனை மாய்க்குமென் றும் நாட்டும் பழியென் றுந்
தூய வுலகடையுந் துன்பமென் றுந் தீய
வொழிவதில னென் றுரைக்கி னோகோ கொடியாய்
மொழிவதிலென் னென்றான் முனி. (41)

கண்ணோட்ட மின்றிக் கணவ னிடர்கருதா
துண்ணோட்ட மின்றி யுரைத்தனையாம் பெண்ணோட்டம்
பேயோ கொடியாய் பிரியி னுலகென்னுந்
தீயோ கொடிதுன் செயல். (42)

வாயான் மகனை வனமடைய மன்னுரைமுன்
நீயோ புகன்றாய் நிமிர்கானம் போயாதல்
நீங்கான வன்றா னிகரி லுலகுக்கோர்
தீங்கான தன்றன் செயல். (43)

தாவின் முனிபுகலத் தாங்கரிய மன்னவனும்
நாவின் ஈனிநஞ்சம் நாட்டிவரு பாவிதனை
வெங்கானென் கான்முளையை மேவ வுரைத்தனையோ
வெங்கோனும் சென்றானே வேய்ந்து. (44)

Koviloor Digital Library

கண்டே னுனது கனிவாய் விடநெடுநா
ளுண்டே னுடனென் னுயிருண்டாய் பண்டேயான்
எற்றமுடன் றேவியென வேற்றேன லேனெரிமுன்
கூற்றமுடன் றேடினேன் கொண்டு. (45)

விழிக்குங்கண் வேறில்லா வெங்கானென் சேயைச்
சுழிக்கும் வினைபோற் றுரந்தாய் பழிக்கும்
கழுத்தினு னுன்மகற்குக் காப்புநா ணென்றான்
வழுத்தினர் தம்மையருள் வான். (46)

இன்னபல பன்னி யிரங்கா டனைநோக்கிச்
சொன்னவிவள் பன்னிபல தூய்முனிவ மன்னு
வருவான் பரதன் மகனலனு மென்றால்
மருவா னுரிமைக்க வன். (47)

என்னைக்கண் டேகற் கிடையூ ரடையான்தா
யுன்னைக்கண் டேகற் குவந்தனனோ பின்னைக்கண்
டானனையா னீங்கிற் றரியே னுயிரென்றான்
மானனையாள் கண்டாள் மருண்டு. (48)

மாற்றாள் செயலென்று மன்னன் வரமீந்து
மாற்றா தயர்ந்தானென் றுய்ந்தரசன் தோற்றான் மெய்
யென்று லுலகுக் கிழிவா மென் றேங்கிநைந்தாள்
நன்றாளுங் கோசலைமா னள். (49)

மெய்யதனைக் காக்க மெலிவடையின் வேறவகை
உய்வதனைக் காணு ளுயரரசே செய்ய
மகன்மீதி லன்பேன் வழிவந்த நன்மைப்
புகழேகு மென்றாள் பொருத்து. (50)

போத லொழியான் புதல்வன் புகழரசன்
சாத லொழியான் தனியன்பான் ஓதும்
மொழியுடையான் மன்னன் முகங்கண்டு நைந்தாள்
பழியடையா ணெஞ்சம் பதைத்து. (51)

Koviloor Digital Library

உணர்வா னவளுரையா லுற்றரசன் மைந்தன்
புணரா னிலம்வனமே போவான் றனியானென்
றேங்குங் குரலுடனே யென்மைந்த வென்றழைத்தா
னேங்கும் புகழரச னேய்ந்து. (52)

எண்ணு மறையோ ரெரிமு னுனையாட்ட
மண்ணும் புனலை மடியுமெற்கே யுண்ணுமொரு
நீராயிப் போதுதவி நேர்கானஞ் சேரவழி
பாராயப் பாவென்றான் பார்த்து. (53)

படைமா வரசர்ப் படுத்த மழுவான்
மிடைமா வலிகவர்ந்த வில்லா யுடையரசர்
மாமகுடங் கொள்ள வரைந்தப் பொழுதுசடை
மாமகுடந் தந்தேன் மருண்டு. (54)

கண்ணு மணிவண்ணு காமாரி கைத்தனுவை
விண்ணோர் மகிழ விரைந்தெடுத்தே யெண்ணு
திறுத்தாய் தமியேனை யிம்மூப் பிடையே
வெறுத்தாயென் வாணாள் விடும். (55)

பொன்னிறெளி போற்றும் புகழ்சேர்ந்த புண்ணியனே
மின்னிறெளிர் வில்லாய் விழுப்பொருளே யென்னின்முன்
கான்புகுவா யென்றாற் கருதுவனோ யான்முன்னே
வான்புகுவே னென்றான் மருண்டு. (56)

நெகுதற்காம் நெஞ்சுடையே னேயத்தா லாவி
யுகுதற்கா மஞ்சே னுனைப்போற் றகுமனதோ
சானகியா டன்கரத்தைத் தாங்கிவரக் கண்டகண்ணாற்
கானகமே கக்காணேன் காண். (57)

என்கண்ணே பொன்னே யெளியோர்க் கிருநிதியே
நன்கண்ணும் வேள்வி நடத்தியே வன்கண்ணேன்
பெற்ற வருமையென்னும் பேருலகை நிபிரிந்தால்
மற்றவரோ வாழேன்.மதி. (58)

Koviloor Digital Library

பள்ளக் கடல்சுலவு பாரா ளரசுரிமை
கொள்ளவரு செல்வக் குவைமுதலா வள்வாட்
படைக்கண்டா கைகேசிப் பாவிக்கு நல்குன்
கொடைக்கண்டா னென்னையழிக் கும். (59)

கேட்டே னெனினுங் கிளர்வானின் றேயடைய
மாட்டே னெனிலன்றோ வன்கண்ணன் காட்டேயாம்
நீயென்றாற் கைகேசி நீலியுட னின்னாட்டிற்
தாயின்றி நானிருப்ப தா. (60)

பூணார் திருமுடியும் பொன்னா சனத்துடனே
காணாதி யானுமென்றன் கண்ணாலே மாணாமா
வற்கலையு மானுரியும் வள்ளலுந்தன் மேற்காணிற்
கற்கலையு மென்னெஞ்சைக் கண்டு. (61)

சொல்வாய்மை கொண்ட துயரத் தரசனுயிர்
செல்வா னெனவெண்ணித் தேய்பொழுதி னெல்வாய்ந்த
மாமுநிவன் கோமகனை வன்கடத்தி னேகாம
னேமனஞ்செய் வேனென்றா னோர்ந்து. (62)

மோனமுனி சொல்லால் முடிதாங்கு நல்லரசன்
போனவுயிர் தாங்கிப் பொருளறிந்த மானவனா
மாமறையோன் சென்றால் மருவான் வனமென்னாத்
தாமறைவான் தன்னைமறந் தான். (63)

மறந்தா னினைவு மகிபனென மாழ்கி
யிறந்தா னெனவே யிடர்கொண் டறந்தா
னிதுவாமோ வென்றுகலுழ்ந் தேங்கி விழுந்தாள்
விதுவாமோ வென்றமுக மின். (64)

வேந்தர்க்கு வேந்தே மெலிவடைந்து நின்னுயிரை
யேந்தற்கி லாதிகழி னென்னாகும் போந்தமுனி
தன்னுடனே நம்புதல்வன் சார்ந்துவர நேருமென்றாண்
மன்னுடைய துன்ப மதித்து. (65)

Koviloor Digital Library

மன்மாய்க்கும் கைகேசி வாக்கா லெனதுயிரை
முன்மாய்க்குங் கூனி மொழியதனாற் றன்மகற்குத்
தான்பெறுவ தன்றிச் சதிகாரி யென்மகனைக்
கான்பெறுக வென்றாள் கடுத்து. (66)

பொன்னுயிர்க்குந் தோளான் புகுவான் வனந்தவிரான்
என்னுயிர்க்குந் தீங்கா மிவைமுன்னாட் டன்னனைய
மாமுனிவன் சாப வழிவந்த தென்றுரைத்தான்
மாமுனிமுன் கோசலைக்கு மன். (67)

வெங்காடு தன்னிலுள வேட்டைக் கடுத்துநதித்
தங்கோடு தன்னிலொளி சார்ந்திருந்தே னங்கோர்
முனிமகனுங் கெண்டிகைநீர் மொண்டடுத்து வீழ்ந்தான்
றனிமருவு மென்பாணத் தால் (68)

போதகமென் றேவுமென்கை போதுகணை யால்வீழ்ந்த
மாதவனைக் கண்டு மனந்திகைத்து மாதரவாய்
நொந்துயிர்த்துக் கேட்டே னுவன்றா னவனுந்தன்
சிந்தைவந்த செய்கை திகைத்து. (69)

கண்ணீர்மை யில்லார் கருதுந் தவம்புரிவோர்
தண்ணீர் நசையுடைய தாய்தந்தைக் கெண்ணரிய
தாகவிடாய் தீர்க்கவந்து சார்ந்தேன் வினைமுடிந்த
தாகவிவை சொல்வே னடுத்து. (70)

உண்ணீரின் வேட்கையினா லோய்வடைதாய் தந்தையர்க்குத்
தண்ணீ ரளித்தெந்தன் சாவுரைத்து நண்ணித்
தொழுந்தாளை யென்றெடுத்துச் சொல்லென்று விண்ணி
னெழுந்தான் விமானத் தினன். (71)

மைந்தன் வரவை மதித்த முனிபாற்சென்
றந்தண் புனலளித்தே னய்யாவெம் சிந்தை
வழுவியதா விவ்வரைதான் வாராத தென்னை
தழுவியவா வென்றான் சலித்து. (72)

Koviloor Digital Library

ஐயாநா னோர்மன் னயோத்தி நகரத்தேன்
மையார் களப மறைந்தெய்தேன் கையம்பு
காதலன்மேற் பட்டுக் கலங்கிவிழக் கண்டழிந்தே
னுதலினு லென்னை யருள். (73)

காணுமற் செய்தபிழை காத்தல் கடனென்றேன்
வாணுள் விடுவோன் மனந்தளர்ந்து நாணுமற்
காத்தளிப்பா யென்றுய் கடுஞ்சாபஞ் சொல்லகிலே
னேத்தளித்தே னென்று னெடுத்து. (74)

தாவா தொளிருந் தனிக்குடையாய் நின்சரணங்
காவா யெனவுரைத்த காரணத்தா லேவா
மகவைப் பிரிந்து வருமரண மென்றுன்
அகவைப் பறிந்தபெரி யான். (75)

சிந்தை தளர்வு சிறிது மிலனுனேன்
மைந்த னுளவா மகிழ்ச்சியா லந்தமுனி
சொற்றபடி கானடைவான் தாய்மைந்த னென்னுயிர்மு
னுற்றபடி யென்று னுலைந்து. (76)

இம்மொழியைத் தந்தா னிடருற்ற பொன்னரச
னம்மொழியைக் கோசலையு மாற்றகிலாள் விம்மா
வழுதாக நொந்தா ளருண்முனியுஞ் சிந்தை
பழுதாக நின்றுன் பதைத்து. (77)

உரைசெய் பெருமை யுயர்தவத்தோ ரோங்கல்
கரைசெய்யாப் பேருவகைக் காட்சி யரசர்முதல்
வல்லவர்கள் சிந்தை மகிழ்ந்து முடிசூட்டும்
நல்லவையில் வந்தா னலிந்து. (78)

வந்தமுனி சிந்தை மதிநோக்கி வாள்வேந்த
ரெந்தை புகுதற் கிடையூரென் னந்தமிலாச்
சோகத்தாந் துன்பந் தொடர்ந்தசெய லென்னென்றார்
சேகத்தான் சொல்வான் தெரிந்து. (79)

Koviloor Digital Library

கொண்டாள் வரமிரண்டு கோதடுத்த கைகேசி
தண்டா ரரசன்மருள் சார்ந்தளித்தான் வண்டார்
முகிலேவனம் போக முடுக்கினள் மன்னு
மிகலேமனங் கொண்டா ளிசைந்து. (80)

காந்தன் பணித்ததனுற் கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தண் மணித்தலைப்பார்ப் பார்த்திவனும் எந்துதடந்
தோளாணி ராமன் றுடர்வனத்தின் மாமுனிவர்
கேளாவ னென்றான் கிளைத்து (81)

வாரார் தனத்தாரு மைந்தர் மறையோரு
மாராத காத லரசர்களும் பேராத
வாய்மையோன் சொல்லால் வருந்தித் தயரதன்போ
லாய்மையோர் வீழ்ந்தா ரயர்ந்து. (82)

புண்ணுற்ற தீயிற் புகுந்து முயிர்பதைப்ப
மண்ணுற் றயர்ந்து மறுக்கத்தாற் கண்ணுற்ற
வாரி கலுழ மயங்கி யழுமோசை
சேரு நபத்திற் செறிந்து. (83)

மங்கையர்க ணன்கலமு மங்கலமுஞ் சிந்தித்தம்
கொங்கை புடைத்தவிழ்ந்த கூந்தலுடன் செங்கமலப்
பாதஞ் சிவப்பப் பதைபதைத்துப் பார்சேர்ந்தா
ரூதையெறி பூங்கொடியை யொத்து. (84)

ஆவா வரச னருளிலனே யாமென்பார்
காவா வறமென்ன கைத்ததென்பார் தாவாத
மன்னரெழுந் தேங்கினர் மாவாதஞ் சாய்த்தமர
மென்னவிழுந் தாரலறி யே. (85)

கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யுருவறியாப் பிள்ளை
மனம்புழுங்கி வாடுமெனின் மற்றோரென் வள்ளல்
வனம்புகுவா னென்று மலைத்து. (86)

Koviloor Digital Library

சேதாம்பற் போதனைய செங்கனிவாய் வெண்டளவப்
போதாம்பற் றோன்றப் புணர்தனமேற் சீத
மழைக்கண்ணீ ராலியுக மங்கையர்க ளேங்கு
மழைக்கையான் செல்ல மருண்டு. (87)

ஆவு மழுத வதன்கன் றழுதவலர்
பூவு மழுதபுனற் புள்ளழுத காவு
மழுத களிறழுத வாகும் [illegible]
மழுத வரசனென வாயு[illegible] (88)

ஞானியு முய்கலா நாயகனை யுன்னது
கானியு மென்றகொலோங் கைகேசி கூனி
யிருவரலான் மற்றொ ரிரங்கினர் சிந்தை
பருவரலாம் பவ்வம் படிந்து. (89)

மண்செய்த பாவ மகத்தென்பார் மாமலர்மேற்
பெண்செய்த பாவம் பெரிதென்பார் புண்செய்த
நெஞ்சமல தென்வலிது நீணிலத்தோர் கண்பாவம்
கொஞ்சமல வென்பார் குறித்து. (90)

ஆளான் பரத னரசென்பா ரையனினி
மீளான் புரத்தின் விழைந்தென்பார் கோளாகி
வந்தவா கொற்றமுடி மைந்தற் கெனவுரைப்பார்
சிந்தியா நின்று திகைத்து. (91)

ஆதற் கரசன் அறிவழிந்த கைகையின்மேற்,
காதற் கரசாய்க் கருத்தழிந்தான் சீதை
மணவாள னோடு வளர்கானம் போத
றணவாதா மென்பார் தளர்ந்து. (92)

தள்ளூறு வேறில்லாத் தன்மகற்குப் பார்கொள்வான்
எள்ளூறு நற்கரும மெய்ந்தனளாங் கள்ளூறு
செவ்வாய்க் கணிகையோ சேரவரு கைகேசி
யொவ்வாதா ளென்பா ருருத்து. (93)

Koviloor Digital Library

நின்று தவமியற்றி நேர வடுத்ததுவோ
வன்று தவவுலக வாருயிரைக் கொன்று
களையக் குறித்ததோ காதும் வரத்தை
யுளையக் கொடுத்ததென்பா ரோய்ந்து. (94)

பெற்றுடைய மண்ணதனைப் பேணி யவட்கீந்த
முற்றுடைய வண்ணலைநா மொய்த்தீண்டிற் பற்றுடைய
நாடடுக்கும் காடு நலத்த புகழ்நாடு
காடடுக்கு மென்றார் கனன்று. (95)

என்னே நிருப ரியற்கை யிருந்தவா
தன்னோர் சரியில் தலைமகற்கு முன்னே
கொடுத்தமொழி ஞட்டைப்பின் கூறுதம்பி கொண்டா
லெடுத்தமொழிக் கென்னு மிசை. (96)

வரிவிற் குமரற்கு மாநிலமுன் தந்து
புரிவிற் பிறர்க்களிக்கப் போமோ பரிவில்லாப்
பேதை சிறுவனைத்தான் பின்பார்த்து நிற்குமோ
சீதை பிரிந்துந் திரு. (97)

கேட்டா னிளையோன் கிளர்ஞாலந் தன்வரத்தால்
மீட்டாள் இளவனமுன் மேவவெனத் தீட்டாத
வேற்கட் சிறுதாய் விளித்தா ளெனக்கடுமை
யேற்கச் சினந்தா னெழுந்து. (98)

கண்ணிற் சுடர்க்கற்றை கான்ற கதங்கண்டு
விண்ணிற் சுடரும் வெருக்கொள்ள வுண்ணிற்கு
மூதை பிறக்க வொழிக்கவரு காலமடு
மாதி யுருத்திரனே யாம். (99)

சிங்கக் குருளைக்காந் தீஞ்சுவையூ னுய்தந்த
வெங்கட் குருளைக்கு வேண்டினள் நங்கை
திடமிக்க செய்கை சிறந்ததெனச் சீறித்
தடமிக்க கையையடித் தான். (100)

Koviloor Digital Library

வடிவாள் புடைவிசித்து வாளி தொடுத்துத்
தடிவான் தடிகரத்திற் றாங்கிக் கொடிவாள்
கவசத் தொடுதரித்துக் கற்றுணையா மேனி
யவசத் துடனெழுந்தா னார்த்து. (101)

அடியிற் சுடர்செய்கழ லார்கலிநே ரார்க்க
முடியிற் சுடர்க்கற்றை முற்ற விடியுற்ற
வின்னா ணொலித்தான் விரைந்தான் சரந்தொடுக்கக்
கன்னாண் புயத்தான் கனன்று. (102)

புவிப்பாரம் போக்கிப் பொரவந்தோர் தம்மை
யவிப்பான் றொடர்ந்தண்ண லாள்கை தவிர்ப்பாரைப்
போக்குவதாய் நின்றேன் பொருவி லெனைவிலக்கிக்
காக்குவதா ரென்றான் கனன்று. (103)

மண்ணுலகோர் விண்ணுலகோர் மற்றுதிற னுகர்நிற்க
வெண்ணுமொரு மூவ ரெனவியைந்து கண்ணருளால்
மண்ணாட்டிக் காட்டி மறைக்குனர்கள் வந்தாலும்
பெண்ணாட்ட மேதென்றான் பின். (104)

காலைக் கதிர்நடுவிற் காட்டிவரு முக்கிரத்தால்
ஞாலத் தவர்நடுங்க நாப்பணகர் மாலைச்
சிகரவரை போலத் திரிந்தான் கதத்தைப்
பகரவரை யின்றிப் பகைத்து. (105)

வேற்றுக் கொடியாள் விளைத்த வினைக்குவிம்மித்
தேற்றத் தெளியாத சிற்றவையைத் தேற்றிநின்றான்
கேட்டான் றுணைத்தம்பி கேடிலவாம் விற்புயலிற்
காட்டா மிடியைக் கனன்று. (106)

வீறாக்கும் பொற்கழல்கள் வில்லிடவு மாரமின்ன
மாறாச்சொன் மாரி வழங்கிவந்தான் காறாக்கக்
காய்ந்துபுகை தந்து கனன்ற கனலாற்ற
வேய்ந்தபுனல் மேகமென வேந்து. (107)

Koviloor Digital Library

மின்னொத்த சீற்றம் விலகி விளங்கிநின்ற
பொன்னொத்த மேனியனைப் போர்ப்புயலான் மன்னும்
மனுவேந்த னொத்தாய் மனமருண்டு கொற்றத்
தனுவேந்தற் கென்னென்றான் சார்ந்து. (108)

மெய்யைச் சிதைத்து விழைந்த முறைநீத்த
மைய்யிற் கரியாள் மனங்கருகச் செய்யமுடி
சூட்டற் கடுத்துநின்றேன் சூழ்வோர்க் கெமசதனம்
காட்டற் கெடுத்த தென்றான் காய்ந்து. (109)

கார்முகத்தை யின்று கரம்பிடித்தேன் காக்குனர்கள்
போர்முகத்தி னின்று புகழுடையார் சீர்முகத்தாம்
பொன்முடியைச் சூட்டிப் பொருந்து மரசளித்தற்
கென்முடிவா மென்று னெடுத்து. (110)

இளையா னிவைபுகல வேற்றவள்ளல் சொல்லும்
வளையா நெறியிருக்க மாறாய் விளையா
நிலத்துனக்கு வந்த நெடுஞ்சீற்ற மென்றால்
நலத்தினுக்கென் னென்று நகைத்து. (111)

நீண்டா னுரைக்க நிகரரிய தம்பிசொல்லும்
தாண்டாது மானிலமுன் தந்தைசொல்லாற் பூண்டாய்
பகையாதோ நீவனத்தைப் பார்ப்பதுவா மென்றுற்
தகையாதோ சீற்றமென்றான் தான். (112)

நின்கட் பரிவில்லார் நீள்வனத்து நீக்கவுடன்
புன்கட் பொறியாக்கை போற்றுவனோ வென்கட்
புலமுன் னுனக்கீந்து பூமியில்லை யென்ற
குலமன்னோ வென்றான் கொதித்து. (113)

பின்குற்ற மன்னும் பெரிதரசைப் பேணிநின்று
முன்கொற்ற மன்னும் முடிகொண்ட தென்குற்ற
மல்லாதா மன்னற் கடுத்தகுற்ற மென்னையென்றான்
கல்லாதார் காணுக் கனன். (114)

Koviloor Digital Library

நதியின் பிழையன்று நன்னீரில் லாமை
பதியின் பிழையோ பயந்தோர் மதியின்
பிழையன்று மைந்தன் பிழையோ விதியின்
பிழையென்றான் வீரன் பிரித்து. (115)

உதிக்கு முலையி னுறுதீயை யொத்துக்
கொதிக்கு மனமென்னுங் கோள்செய் மதிக்கு
மதியாகி நின்றபெரு வானவர்க்கு மென்வில்
விதியாகு மென்றான் விரைந்து. (116)

நேதந்த வீர னிகரிலுறை கேட்டவையன்
வாய்தந்த கூறல் வழக்கன்றாற் றாய்தந்த
நீதந்த தன்றே நெறியி னமையின்ற
தாய்தந்தை மேலென் சலிப்பு. (117)

நற்றாதை நீதானென் நாயகனு நீவயிற்றிற்
பெற்றாயு நீதான் பிறரில்லை கற்றா
யிதுகா ணுதியா மெனக்கை மறித்தான்
மதிகாண் துதிவதனன் மற்று. (118)

வரதன் பகர்வான் வரமடுத்த வையம்
சரதம் பெறுதாதை சாற்றப் பரதன்
பெறுவா னினியான் பெறுகின்ற செல்வ
முறுகான மென்று னுகந்து. (119)

ஆன்றான் பகர்வான்பின் னய்யசெய வையமயல்
தோன்றாது சோதரனைத் தோர்க்கவைத்தோ சான்றோர்
புகழுந் தவத்தாதை பொற்பைக் கெடுத்தோ
நிகழுங் கதந்திர்வை நீ. (120)

செல்லுஞ்சொல் வல்லனெதிர் சீர்த்ததம்பி தெவ்வர்புகல்
சொல்லுஞ் சுமந்திருத் தோளென்னுங் கல்லுஞ்
சுமந்தேன் கணையுந் துகளடையும் வில்லுஞ்
சுமந்தேன் வெகுண்டென்னை சொல். (121)

Koviloor Digital Library

நன்சொற்க டந்தாண்டு நாளும் வளர்த்ததந்தை
தன்சொற்க டந்தரசு தக்கதன்று லென்சொற்
கடந்தா லுனக்கினங் காண்பதிலே நன்மை
மடந்தா னெதற்கென்றான் மன். (122)

அன்னான் றனைக்கோப மாற்றி யருளளித்துப்
பொன்னுடை யானும் புராரியும்போற் பன்னு
நமித்திரரை வாட்டு நலங்கொண்ட மொய்ம்பார்
சுமித்திரைபால் வந்தார் துதித்து. (123)

கண்டாள் மகனு மகனுந்தங் கண்போல்வார்
தண்டா வனஞ்செல்லத் தாமமைந்தார் கொண்ட
செயலறிந்து வீழ்ந்து தியங்கு மவட
னியலறிந்து சொல்வ தெனைத்து. (124)

சோர்வாளை யோடித் தொழுதேந்தித் துன்பமெனு
மீர்வாளை வாங்க வெடுத்துரைப்பான் போர்வாள்
அரசனைப்பொய் யாக்கவிலே னம்மா கடத்தின்
விரசிவரற் கென்ன வெறுப்பு. (125)

கான்புக் கிடினுங் கடல்புக் கிடினுமொலி
வான்புக் கிடினுமெற்கு மாநகராம் யான்புக்கி
னென்னை வருத்த வெவருண் டுலகிலிதற்
கன்னை வருத்தமெதற் காம். (126)

தாயாற்று கில்லாளைத் தாங்குந் தனிமுதன்முன்
னோயாற்று கில்லா னுவன்றனுப்பத் தூயாற்றும்
பொற்கலையைப் போற்றும் புருடோத்த மன்புனைய
வற்கலையைத் தந்தார் மருண்டு. (127)

அன்னா னவர்தந்த தாதரத்தி னுற்கொண்டான்.
இன்னா விடரின்றி யேகெனத்தாய் சொன்னா
லதுவே மறையென்று னன்பிற்பணிந்தான்
மதுவேய் மலரடியை வாய்ந்து. (128)

Koviloor Digital Library

ஆகாத தன்று னுனக்குவன மய்யோத்தி
மாகாதன் மன்னனிரா மன்றாளும் போகா
வுயிர்த்தாயர் சீதை யுவந்து வனஞ்செல்
அயிர்த்தாய லில்லையென்று ளாய். (129)

ஒன்றும் படிசொல்வா ளொத்ததம்பி யென்றெண்ணு
தென்று மடியாரி னேவல்புரி தின்றுவளப்
பொன்னகர்க்கு வந்தாற் பொருந்திவா வன்றெனிலோ
முன்னவர்க்கு முன்ன முடி. (130)

இருவர் பணிந்தா ரிரண்டுகன்றை நீங்கி
வெருவருமா விற்றும் விம்மப் பொருவில்
குமரவரர் சென்றார் குறித்த வரையி
னமரவரு சீரை யணிந்து. (131)

தான்புனையுஞ் சீரைதனைத் தம்பி யுடன்சாத்தி
வான்புனைஞ் சீரை மதித்துவந்தான் கான்புனையுஞ்
சீருறுதி கொண்டான் சிறந்தோ னெனவள்ள
லோருறுதி கொண்டா னுளத்து. (132)

அன்னையர்க ளானவரு மாழி வரவேந்தும்
முன்னையர்க ளல்லர்துயர் மூழ்கினு ரென்னைப்
பிரிந்திடர்க்கா மன்னவர்கள் பெற்றிதனை மாற்ற
விருந்திடற்கா மென்று னிறை (133)

ஆண்டகைசொற் கேட்ட வறிவ னடுக்கமுற்றுத்
தூண்டகுதோள் சோரத் துயரடைந்து வேண்டும்
தழைத்தவருள் கொண்டோய் தளரு மடியேன்
பிழைத்தவரு ளென்றான் பிரித்து. (134)

நீரிருக்கு மவ்வளவே நீல மொடுமீனும்
பாரிக்கு மவ்வளவே பார்ப்பதெலா நாரிருக்கும்
வில்லுடையா யானும் விழைந்தவன்னை சானகியு
மொல்லுடையே முன்னையன்றி யோ. (135)

Koviloor Digital Library

பெண்ணொருத்தி சொல்லாற் பெரும்பிழையை நோக்கலின்றி
மண்ணிருக்குஞ் சீவர் மனமறுக வெண்ணி
வனமடையச் சொற்றான் மகனலவோ நீயென்
மனமிடையச் சொற்றாய் மதித்து. (136)

மாறினியென் சொல்வேன் வனமுனக்கா மென்றதனு
லேறினவென் சீற்றமதை யேற்றடுத்துச் சீறல்
தவிர்கென் றுரைத்த தனிமொழியி னின்று
மிவர்கின்ற சொல்லா மிது. (137)

செய்துடைத்தாஞ் செல்வநலந் தீர்ந்தா யெனையுமின்றே
கைதுடைத்தாஞ் செல்லக் கடமையோ வெய்தாம்
வயங்கொண்ட மாற்றலரை மாற்றி யளிக்கும்
செயங்கொண்ட வில்லாய் தெரிந்து. (138)

உரைத்தபின்ன ரொன்று முரைப்ப தறியான்
வரைத்தடந்தோ ளானை மதித்து விரைத்தளிசேர்
தாமரையாங் கண்ணீர் ததும்பி வரநின்றான்
மாமறையாங் கண்ணும் வரன். (139)

அந்த வமைய மரச ரவைநின்று
வந்த முனிசரணம் வந்தனித்தார் சிந்தைநொந்து
கவ்வைப் பெருங்கடலிற் கால்வைத்தான் மாமுனிவன்
செவ்வைக் குமரர்செயல் தேர்ந்து. (140)

அன்னவரைக் கண்டா னறிந்தான் மனநிலையைப்
பொன்னரையிற் சீரை பொலியநின்றா ரென்னினித்தான்
சொல்லுவதே யென்றான் துயரத் தழுந்தினன்
நல்லுவகைச் சிந்தை நலிந்து. (141)

வாழ்வை நுதலிவரு மங்கலஞ்சேர் நாளதனில்
தாழ்வைநுத லிச்சீரை சாத்தினன் சூழ்வினைதான்
வானவர்க்குத் தள்ள வழக்கிலையென் றாலுலக
மானவர்க்குத் தள்ளவரு மா. (142)

Koviloor Digital Library

வெவ்வினையாள் செய்ய விளைந்த வினையன்று
மிவ்வினையிவ் வீரர்தமக் கேற்றதன்றூற் றெவ்வினையோ
விம்முறையு நேர்ந்தசெய லேவரெண்ண மென்றறியு
மம்முறையும் பின்னென் றனன். (143)

விற்றடக்கை வீரன் விளைழ்ந்தகண்டு வேதமுனி
பற்றடக்கு மேலோய் பரிவென்னீ கற்றடமால்
தாழ்கிலனு மென்றூற் றலையரச னிவ்வுலகின்
வாழ்கிலனு மென்றான் மதித்து. (144)

அன்னபணி யேற்றதனை யாற்ற லெனதுகடன்
மன்னனிடர் மாற்றலுந்தன் மாண்பதுதா னின்ன
நெறியாகு மென்றான் நிகரடுத்த யோகர்
குறியாக நின்றான் குறித்து. (145)

வெங்கானந் தன்னில் விரவென்று சொற்றனனே
கொங்காருங் கூந்தல் கொடுமைதனைத் துங்க
வரமடுத்த வேலரச னாய்த லின்றி
வரமடுத்த தென்றான் மருண்டு. (146)

என்றவனு மெந்தை யிசைத்தவர மேவினு
னீன்றவளாஞ் சிந்தை யிசைந்தனேன் சான்றனவா
நீதடுக்கா தாளென்று னித்தியமா நல்லறத்தைக்
கோதடுக்கா தாளென்றுங் கோ. (147)

என்றுரைத்தான் வள்ள லியம்பான் முனிவனென்றும்
நின்றிரைத்தான் கண்ணீர் நிலத்துகவே யென்றுரைத்த
குன்றணிந்த தோளான் குறித்த வெளிவந்தான்
பொன்றிணிந்த கோயிற் புறம். (148)

சுற்றிவரு சீரையுடைத் தோற்றத்தான் றம்பியொடு
முற்றிவரு சீரான் முளரிமல ருற்றுவரு
குற்றமிலா மாமுகத்தான் கொள்கை குறித்தவர்கட்
குற்றவெலாஞ் சொல்வா மூலைந்து. (149)

Koviloor Digital Library

அந்தணர்க ளான்ற வருந்தவர்க ளாமரசர்
நந்தலிலா நன்னகரார் நாட்டுள்ளார் சிந்தைநொந்த
சீலமென்ன சொல்வேன் தெரிந்துவரு தேவர்களும்
மேலுமின்னல் கொண்டார் மெலிந்து. (150)

ஐயன் றனைக்கண்ட வங்கனையார் செங்கையினல்
மையுண்ட கண்ணறைந்து மாழ்கினர் நையார்
பெரும் பொருளைத் தாமிழந்த பெற்றியர்போ'னின்று
றிரும்புமன மென்ன வியைந்து. (151)

இருகைக் கரிநிகரா ரெண்ணிறந்த வீரர்
பெருகைக் கரத்தினுவ்வில் பேர்த்தார் சுரிகையினற்
கண்மலரைச் சூன்றூர் கடிந்தார் தமதுயிரைப்
பண்மலரு மன்பாற் பரிந்து. (152)

அறுபத்தி னுயிரவ ராளரசற் கான்ற
மறுவற்ற கற்புடைய மாதர் சிறுவற்
றொடர்ந்தார் தளியைத் துறந்தார் வெளியிற்
படர்ந்தா ரளியிற் பரிந்து. (153)

கன்னி மயிலுங் கருதுங் குயிற்கணமு
மன்னஞ் சிறையிழந்த தாமென்னத் துன்னிவரு
மித்திரர்க ளெல்லாமி ராமனன்றி வேறுமொரு
புத்திரர்க ளில்லார் புரிந்து. (154)

தண்டாத கோசலையா டாரரசன் றேவியரைக்
கண்டா னிரவி கமலமுகம் விண்டாங்கும்
வேந்தரென்ற போதும் விதியை வெலற்கிலெனின்
மாந்தரென்ற போதென் வரும். (155)

தாயர் கிளைஞர்களுஞ் சார்ந்துள்ள மாதர்களுஞ்
சேய ரணியர் சிறந்தவருங் காயெரியை
யுற்றுவரு கொள்கையினு ரோங்கிவரு வாயின்முன்றில்
முற்றுவருவார் மறைத்தார் முன். (156)

Koviloor Digital Library

இரைத்தா ரிரைத்தெழுந்தா ரேங்கினு ரேங்கித்
திரைத்தார் கடலெனப்பின் சேர்ந்தா ருரைத்தவுரை
யொன்று முணரா ெனுழிப்பதரி யாதமலன்
சென்றுமனே நோக்கினன் றீர்ந்து. (157)

பொன்னெடுமா மோலி புனைந்து வரவென்று
நன்னெடுமான் றேரி னடந்தவர னின்னெடுஞ்சீர்ச்
சீரைசுற்றி மீண்டுந் தெருவி னிடைவந்தான்
காரையொத்தா னென்றூர் கரைந்து. (158)

அஞ்சனமா மேனி யழகற் கடுத்துவந்த
வஞ்சனையைக் கண்டபினும் வாழ்வுண்டோ நெஞ்சின்
வலிய துயிர்நிலையாம் வாட்டமிலை யென்றூர்
வலியதுயர் கொண்டு மலைத்து. (159)

மாமுடியைச் சூடி வரலன்றி மன்னுசடை
மாமுடியைச் சூட வரல்கண்டோ மேமமிலாப்
பெண்ணூற் கொடுவினைசெய் பெற்றி யுடைநாட்டிற்
கண்ணூற் பிறத்தல் கடை. (160)

உலகுடைய சீமா னுழுவை யுறுகா
னிலகுடைய தெற்காமென் றெண்ணி விலகி
யெழுவதனைக் கண்டதினு மேகா திருந்திங்
கழுவதெனை யென்று ரயர்ந்து. (161)

திருவரையிற் சுற்றிவரு சீரை யுடையன்
பொருவரையிற் றோன்றிமுனம் போவா னிருவரைத்தான்
பெற்றநங்கை யீன்ற பெரியோ னொருவனே
வுற்றவுற வென்று ருடைந்து. (162)

பொன்னுன் மணியிற் பொலிந்த வணிநீக்கி
மின்னுன் விளங்குமணி மேகலைசூழ் பன்னிறத்துச்
சேலைகளை மாற்றியிடை சின்னத் துகிலணிந்தார்
மாலைகளை மாற்றி மலைத்து. (163)

Koviloor Digital Library

பேரா மகவுடையார் பின்ன மதற்குவரின்
நேராய்க் கொடுப்பருயிர் நீணிலத்தே சீராம்
முறைமகன்கா னேக மொழியதனைக் காக்கு
மிறைமகன்கார்ச் சிந்தை யிரும்பு. (164)

வாங்கு மருங்குலார் வைத்தகொங்கை மானனையார்
பூங்கொடியைப் போலொதுங்கிப் போற்றினு ரோங்கிவரா
தேங்கி யழுங்குரலா ரேந்திவரு காந்தளினுற்
றூங்கியகை வைத்தார் தலை. (165)

தலைக்குவட்டின் பக்கல் தழுவுமதி மாட
நிலைக்குவட்டி னேரிடைந்து நின்றூர் முலைக்குவட்டின்
நேரிரங்கும் கண்ணீர் நிறைய மலைக்குவட்டிற்
சீரிரங்குங் கேகயம்போற் சேர்ந்து. (166)

சேண்டிகழு மேற்றலத்தே சேர்மாதர் கண்டுளிக
டாண்டிவருந் தாரை தளம்வீழ்த லீண்டுங்
கொடிமாட முங்குமரன் கொள்கைகண்டு கண்ணீர்
விடுமாறு காணு மிகுந்து. (167)

மக்க டமைமறந்தார் மாதர் மயங்கியதாய்
புக்கவிடங் காணூர் புதல்வர்தாம் துக்க
மறிவைத் தடுக்க வயர்ந்து விழுந்தார்
மறிவைத்த கண்மடந்தை மார். (168)

காமரங்கள் சேர்ந்து கனிந்த மொழியுடைய
மாமடந்தை மார்கள் மறுகுறலாற் பூமடந்தை
யில்லா மலர்போ லிழிவடையு மாடமெலாம்
வல்லான் பிரிவை மதித்து. (169)

கொடியடங்கு மாளிகையாங் குன்ற முரசி
னிடியடங்கும் வேறியங்க ளேற்கா வடியாற்
படியடங்க வந்தோர் பசுங்கண்ணின் மாரி
பொடியடங்கும் வீதிப் புறம். (170)

Koviloor Digital Library

அட்டி விழுந்த வடுபுகையை யவ்வகையே
நெட்டி விழுந்தவகி னோர்புகையை வட்டிலிடு
பாலிழந்த கிள்ளை பரிந்து வருமகளிர்
காலிழந்த செம்பஞ்சு காண். (171)

மங்கையர்கள் கொங்கை மகிழுடுத்த வாடவர்கள்
செங்கையுகிர் சேர்குறியைச் சேர்ந்ததிலை துங்க
வனஞ்செறியுங் காமனடு வாளி மலர்கள்
தனஞ்சயனைச் சாராத தால். (172)

தாரொலியை நீத்த தனிப்புரவி தண்ணுமைதான்
வாரொலியை நீத்த மழையொலியாந் தேரொலியை
நீத்த தெருக்க ணிகரி லலையொலியை
நீத்த கடலை நிகர்த்து. (173)

மத்தளத்தின் சும்மையிலை மாணுர் விரனடத்திச்
சித்தனத்திப் பாடுமியாழ்ச் சேக்கையிலை சுத்த
விழவெழுந்த வோசை விரிவில்லை வீதி
யழவெழுந்த வோசை யடைத்து. (174)

செய்மறந்த தண்புனலைச் சேய விதழ்மாதர்
கைமறந்த பாலர்களைக் காந்தெரியு நெய்மறந்த
நேரொளிகாண் யோகர் நினைவு மறந்ததுபோற்
சாரொலியை நீத்தனவே தம். (175)

ஆடி னவரழுதா ராங்குவரு நல்லிசைகள்
பாடி னவரழுதார் பாங்குமல ராடவரைச்
சேர்ந்தா ரழுதார் திருவார் பிரிந்ததினல்
கூர்ந்தா ரழுதார் கொதித்து. (176)

நீரிற்கை நீட்டாது நேர்களிறு பாய்புரவி
ஓரிற் புதல்வாயிற் சேர்க்காது பார்ப்பினுக்கா
யீட்டிலவாம் புள்ளுமிரை யேற்றகன்றை யாற்றலொடு
மூட்டிலவாங் கோவு முகந்து. (177)

Koviloor Digital Library

தீவினையா ஞெந்து சிறந்த நலமளிக்கு
மாவினையாற் சிந்தை மகிழ்வார்க்கென் கோவினையும்
சோகமுந்து நன்மையொன்றுத் தோன்றி மதிக்கவரு
யோகருந்தாங் கொண்டா ருளம். (178)

ஓவி லுயிர்ப்பா லுடலம் பதைத்துலைய
மேவி யழகுகெட விம்மலுடன் தாவில்லா
வைம்பொறியுஞ் சோர வழுவார் தயரதன்போற்
கம்பிதந்தான் கொள்ளுமுல கம். (179)

உயங்கி நகருலைய வொண்டொடியர் சுற்ற
மயங்கி நடுங்கிவர மற்ருே ரியங்கிவரு
பல்லுயிரா நாதன் பரிந்து சனகியுழை
நல்லுயிரா நாடிவந்த னன். (180)

தாயர்களு மந்தணருஞ் சார்ந்த வரசர்களுந்
தீயெரியிற் சேர்ந்தவர்போற் சேர்ந்துவரத் தோயவரு
சீரை யுடையானைச் சீதைகண்டு கண்டுளித்தா
ளாரை யடையா தலம். (181)

எழுந்துவரு தாய ரெடுத்தாட்டி நின்றுர்
பொழிந்துவரு கண்ணீர்ப் புனலா லழிந்தமனத்
தன்ன மறியா ளறிவன் தனையடுத்தா
ளென்னவர வென்று ளிரிந்து. (182)

பொன்னையுற்ற பூங்கழலாய் போந்த செயலென்னே
மன்னையுற்ற துண்டோ மறுக்கந்தா னென்ன
தொடக்க மிதுவென்ருள் சோதிமின்போன் மேனி
நடுக்கமுடை மாது நலிந்து. (183)

பாரளித்த வெம்பி பரிந்ததந்தை தாய்பணியாற்
சீரளித்த கானடுத்துச் சேர்ந்தசின்னுள் பேராய்
வருந்தலைமைக் கெண்ணி வளர்விரதங் கொண்டேன்
வருந்தலைமைக் கண்ணியென்றுன் மன். (184)

Koviloor Digital Library

கண்ணனைத்தாம் நாதன கடம்புகுவா னென்பதினு
மண்ணனைத்து நீங்க வருந்தகிலாள் பெண்ணவட்கு
மற்காட்டுங் தோளான் வருந்தலைநீ யென்றுரைத்த
சொற்காட்டுங் துன்பத் தொடர். (185)

துறந்துகடம் போவதென்ற சொல்லடுக்கு மோமுன்
னுறைந்தகடற் சேக்கை யொருவிச் சிறந்த
வயோத்தியமர் காந்த னருளைக் குறித்துச்
சயோத்தியமாய்ச் சார்ந்தா டனக்கு. (186)

அன்னையத்தர் சொல்லா லரசடைதல் கைவிட்டுப்
பின்னையொத்த கானடைதல் பேராண்மை யென்னை
இருவென்ற தென்னு மென் றேங்கினள் கஞ்சத்
திருவென்ற மின்னு டிகைத்து. (187)

வல்லரக்க ரென்ன வரைக ளடுத்தவழி
கல்லரக்குங் காடு கடுஞ்சுரமாம் வில்லரக்கு
மேவடுத்த கண்ணு மிசையும் வலுவிலைநின்
சேவடிப்போ தென்றான் றெரிந்து. (188)

பரிவினின்ற சிந்தையின்று பற்றில்லா தென்னை
யொருவிநின்று லூழி யொளியு மெரிவதின்று
லுன்னைப் பிரியி னுயிர்வாழ்த லேதென்றாள்
மன்னைப் பிரியா மயில். (189)

அண்ணலவள் சொற்கேட்ட தன்றி மனங்கொண்ட
வெண்ணலனுங் கண்டோன் றியம்பகிலான் வண்ணமணிக்
காரையொத்தான் பின்னே கடத்தி னடக்கவெண்ணிச்
சீரைசுற்றி வந்தாள் சிறந்து. (190)

ஏழைசெயல் கண்டா ரிரிந்தார் புவிவீழ்ந்தார்
வாழுஞ் செயலறியார் மாழ்கினர் வாழ்நாளு
முண்டா யிருக்க வொழிவரோ சிபழிந்து
கண்டா ரிடராழ் கடல். (191)

Koviloor Digital Library

தாயர்களுந் தவ்வையருந் தன்றுணையாஞ் சேடியரும்
ஆய மகளிரன்பி னனைவருந் தீயின்
விழுந்தவரை யொத்தார் விசையை யிடத்தாம்
அழுந்தவரை யன்பி னடுத்து. (192)

முல்லை மலர்கடலின் முத்து மெதிர்ந்திடினும்
வெல்லும் நகையாய் விளைவறியாய் வல்லையுடன்
போத லமைந்தனையேற் புன்னெறிசே ரன்னெறியின்
வாதையிடர் நந்தனையா வாய். (193)

கொற்றவன்றன் மாற்றங் குறித்து மனமழன்று
ளெற்றுரந்த பின்னோதா னின்பமென்றாள் பொற்றமலர்ப்
போதுவாய் நின்ற புகழுடையாள் சோர்ந்துபினு
மோதுவாள் நின்று ளுயிர்த்து. (194)

பிறிதொன் றுரையான் பெருந்தகையா னன்பின்
மறுகியழு மாதர்கண்ணீர் வார்ந்து செறுவாக்கும்
வீதிதனிற் சென்றான் விளங்குந் தவமுடையா
ரோதிதனிற் சென்று னுவந்து. (195)

சீரைசுற்றிச் சேர்ந்து திருமகள்பின் செல்லவுடன்
மூரிவிற்கைத் தம்பிவரன் முன்செல்லக் காரையொத்தான்
போம்படியே கண்ட புரியார் படுந்துயரை
யாம்படியே யாய்ந்துரைப்பா ரார். (196)

ஆருமுனஞ் சென்று ரழுதவலஞ் செய்தடுத்துச்
சோருமன மில்லார் தொடர்ந்தனராய் வீரனுடன்
வன்கடத்துஞ் செல்ல மனது வலித்திருந்தார்
மின்கடத்தும் பூணர் விழைந்து. (197)

தாதை தனிவாயில் சார்ந்தவுடன் தாயர்தமைக்
கோதை புனைவில்லான் கும்பிட்டா னுதிமன்னை
யாற்றிநீர் சேருமென்று னன்னை யருஞ்சோர்ந்தார்
தேற்றினு னன்பர்தெளி தே. (198)

Koviloor Digital Library

ஏத்தினர் தம்மகனை யேற்ற மருமகளை
வாழ்த்தினர் தம்பிதனை வாழ்த்தெடுத்தார் காத்துநல்குந்
தெய்வதங்கா ளென்றார் சிறந்த நலஞ்சோர்ந்து
மெய்வதங்குந் தாயர் மெலிந்து. (199)

அன்னபெருந் தாய ரரிதிற் பிரிந்ததஃற்பின்
தன்னனைய மாமுனிவன் றாள்பணிந்து பொன்னுடனே
தம்பியொடு தானும் தனியிரத மேற்சென்றான்
வெம்புகடம் வீரன் விரைந்து. (200)

நகர் நீங்கு படலம் முற்றிற்று.

தைல மாட்டு படலம்.

ஏவியபொன் வீரனுட னேகா தவரெவரே
மாவியலுந் தானைவள மன்னைவிடாத் தேவியர்கள்
சென்றதிலை யன்னகரிற் சேரவரு மோவியங்கள்
நின்றவுயி ரில்லையென நேர்ந்து. (1)

மீன்மேல் விளங்க வெயிலொதுங்க மேதியொடு
மான்மேவச் சூரியனு மத்தமுற்றான் கான்மேவல்
காணக் கடனோ கதிரோனு னென்றுமனம்
நாணிக் கடலி னடந்து. (2)

பகுத்த மதியாற் பதுமத்தான் முன்னம்
வகுத்தநுத லார்வதன மாக வுகுத்தநறும்
கண்ணீ ரொடுமொளிபோய்க் கான்று முகிழ்த்தனவா
மெண்ணீர் முளரி யினம். (3)

அந்தி வெயிலொழிய வாகாய மானவெலா
நந்தலிலாக் கைகேசி நன்மனது மந்தரையின்
வார்த்தை யெனுங்கடுவின் மட்கி யிருண்டதனை
நேர்த்ததுவாஞ் செம்மை நெரிந்து. (4)

Koviloor Digital Library

கரந்தை முடிக்கணிந்த கண்ணுதலா னென்ன
வரந்தைமுனி சாபத்தா லாகம் நிரந்தரமு
நீளிமைத்த வில்லா நெடுங்கண் புரந்தரன்போல்
வாளிமைத்த வானமுடி வால். (5)

திருநகர்க்கி யோசனைதான் சேரிரண்டு சென்று
விரைசெறித்த சோலை விழைந்தே யிரதமுற்று
நின்றிரங்கும் வள்ள னிகரின் முனிவரொடும்
அன்றுரைந்தான் அந்தி லடுத்து. (6)

வட்டமுடன் காதம் வளைந்து நடுவதனி
லெட்டனையு மேற்கு மிடமின்றி மட்டவிழுஞ்
சோலைமன்னிச் சூழ்ந்து தொடுத்த வரதனையம்
மாலைமன்னன் சேனை வளைத்து. (7)

குயின்றமணி மாநதியின் கூலத்தி னெங்கும்
பயின்றுவளர் வாலுகத்தின் பாங்கின் வயின்றோறும்
வைகினவா மொன்றேனும் வாய்மடுத்த தின்றிவரும்
வெய்யதுயர் சேர விரிந்து. (8)

வாவிவிரி தாமரையா மாமலரின் வாசமிகு
காவிவிரி கண்ணார் கலுழ்ந்தனரா யாவிவிரி
பானுரையி னுய படுக்கை யணைமீது
தேனுரையார் சேர்ந்தார் திகைத்து. (9)

பூவகத்திற் சேர்ந்த புளினத் தடந்தோறும்
மாவகற்றும் கண்ணார் மயங்கினார் சேவகத்திற்
சேர்ந்தகரி யென்னத் திறலுடைய மைந்தரெலாஞ்
சோர்ந்து கிடந்தார் துயின்று. (10)

மாகமணி வேதிகையின் மாதவிசெய் பந்தரிடை
தோகைமயி லாகுமெனச் சோர்ந்தடுத்தார் பூகவன
மூடுபடு கர்ப்புளின முன்றி றயின்றார்கள்
வாடுமெயி லானமட வார். (11)

Koviloor Digital Library

குங்குமத்தாங் குன்றிற் குழுமு பனியென்னத்
துங்ககில் தாதுவிறைற் சோரவே யங்கையணை
மீது துயின்றார் விழையு மனமுடையா
ரோதி குழைய வுலர்ந்து. (12)

தொடுத்தகல்லிற் சில்லோர் துவண்டு துயின்று
ரடுத்தபுல்லிற் சில்லோ ரயர்ந்தா ருடுத்ததுகிற்
சுற்றிற் சிலர் துயின்றார் சோகத்தாற் சோர்ந்தவர்கள்
பெற்றி யுரைத்தல் பெரிது. (13)

ஏனயவ ரின்னணமா யேற்றதுயர் கொண்டிரங்க
மானவனு மந்திரிசு மந்திரனை மேனிலையா
யுன்விரத மென்சொ லுவந்தளிக்கி ஞேங்கிவரு
மென்விரத மென்று னெடுத்து. (14)

பூண்டபே ரன்பினரைப் போக்கரிது போகவிடா
தீண்டேக லென்னுகு மெந்தைநீ தூண்டிவரு
வையத்தான் மீண்டும் வழிகாட்டின் வந்திடுவர்
செய்யத்தான் வேண்டுஞ் செயல். (15)

செவ்வியதா மண்ணலுரை தேர்வலவன் கேட்டொர்ந்து
வெவ்வியதா யிற்றீமை மேற்கொண்டே னிவ்விதியை
யிங்கடைந்தே னென்றே யிடருற் றெழுந்துசென்று
மங்கடைந்து காண்ப தலம். (16)

தேவி யிளவலொடு செல்வக் குமரவனைப்
பூவியலுங் கானம் புகவுய்த்தே னாவி
தரிக்கானம் மன்னவற்குச் சார்ந்தென்ன சொல்வே
னெரிக்கான மென்ன வெடுத்து. (17)

தாருடைய மென்மலருந் தாங்காத் திருவடியாள்
வாருடைய கொங்கையொடு மைந்தரையும் பாரிடையே
போக்கினேன் வையம் புகுந்துவரு வேனென்கோ
வாக்கினேர் மன்ன வனுக்கு (18)

Koviloor Digital Library

வன்புலக்கன் மாமதியேன் வஞ்சனைகொ ணெஞ்சுடையேன்
என்புலக்கு மன்னற்கின் றேகியா னுன்புலத்திற்
கேற்றமைந்தன் சென்றா னெனவுரைக்குங் கூற்றமொன்றே
கூற்றமைந்த தென்றான் குறித்து. (19)

நாற்றிசையின் மாந்தர் நலமுணரும் வேந்தரொடு
தேற்றினரா யுன்செல்வர் சேருமென வாற்றினர்க்கு
முன்னின்றி யானென் முழுமோசச் சொல்லதனை
லென்னின்று சொல்வே னெடுத்து. (20)

அங்கிமேல் வேள்வி யரிதாய்ப் புரிந்துபெற்ற
சிங்கவேள் சென்றதெனச் செப்புவனேற் பொங்கருள்சேர்
கோமுறையாற் கென்னிற் கொடியவளோ கைகேசி
யாமுறையா னல்லவளே யாம். (21)

முடிவுற்ற வின்ன மொழிதந்த பின்னும்
அடியுற்று வீழ்ந்தா னழுங்கி யிடியுற்ற
நாகமெனக் கொண்டு நடுக்கினு னாகமுற்றும்
சோகமெனும் வாரி தொடர்ந்து. (22)

கையா லெடுத்தணைத்துக் கண்ணீர் துடைத்தருளி
யையா வுனைப்போ லறிஞரெவர் மெய்யாகு
முன்மொழியா னன்மை யுளவென் றுரைத்தனனும்
மன்மொழியான் தன்மை மதித்து. (23)

பிறத்த லென வுற்றாற் பெறுவனவா மெல்லாம்
திறத்திற் றெரிந்தவுள்ளச் செம்மை யறத்தினையாய்
நீமறந்தால் வேறே நினைப்ப தெவரையா
மாமருந்து போல்வாய் மதி. (24)

முன்புமிசை தந்து முடிவாக முற்றியநின்
பின்புமிசை தந்தளிக்கும் பேரறத்தை யின்பம்
வருமே லினிதாய் மதித்துமிகு துன்பம்
வருமேல் முனியவரு மா. (25)

Koviloor Digital Library

நிறத்திற் பெரும்படைக ணேரவெதிர் நின்று
மறத்திற் றிறம்பாது வன்மைத் திறத்தினன்று
கோர மிகுமரணங் கூர்ந்துநிதி போனாலுஞ்
சூரற நீங்கார் துணிந்து. (26)

கான்புறத்திற் சேரல் கடுமை யெனநீங்கில்
வான்புறத்துங் கீர்த்திகொண்ட மன்னர்குலம் யான்பிறந்து
நல்லறத்தி னின்று நடுங்கிற் றெனவுலகிற்
சொல்லிருக்கி னென்னாஞ் சுகம். (27)

மெய்ம்மொழியான் மைந்தனையும் விட்டான் வனத்தினெனு
மிம்மொழியே மன்னவனுக் கேற்றவறஞ் செம்மைகொண்டு
தாங்கலெனைத் தாங்கறமாந் தன்மந் தெரிந்தநீ
யேங்கலெனைத் தென்றா னெடுத்து. (28)

அனகன் முனிவனொடு மன்பினெனைத் தந்த
சனகன் தனித்தவிடஞ் சார்ந்து புனிதசரண்
போற்றினா னென்றென் புரிவுரைத்துச் சோகவன
லாற்றினா னன்றென் றறி. (29)

வெவ்வியது மன்னை விளைவென்று கொள்ளாம
லெவ்வருளை யென்னிடத்தி லேற்றியதோ வவ்வருளைச்
சார்ந்தெனது தம்பி தனையளிக்க மாமுனிதாள்
சேர்ந்தெனது வந்தனத்தைச் சேர் (30)

வேண்டினே னிவ்வரந்தான் மேலவன்றாள் போற்றிசெய்து
மீண்டருளை யெம்பி யிடைநிறுவி யாண்டதந்தை
யாதங்கம் போக்கி யளிக்க வெனமுனிவன்
பாதங்கம் ஆக்கினனென் பாய். (31)

ஏழிரண்டாம் ஆண்டு மெவையா மவைமுடித்து
வாழிரண்டாந் தாளை வணங்குவேன் சூழவென்று
மெந்தைக்குச் சேர்ந்த விசைமுனிவன் சொன்னலத்தாற்
சிந்தைக்குச் சேர்ந்தநலஞ் செய். (32)

Koviloor Digital Library

முறைமையா லெற்பயந்த மூன்றன்னை மார்க்கும்
திறமையாம் வந்தனத்தைச் செப்பி யிறைமகனைத்
தேற்றியிடுஞ் செய்கைதனைச் செப்புவா யென்றுரைத்தான்
சாற்றியிடும் வேதத் தலை. (33)

முன்வினையை மாற்ற முடியா தெனமதித்துத்
தன்னனைய தேர்வலவன் சார்ந்தறத்தின் முன்னவன்றாள்
போற்றிப் புகழ்ந்தருள்சேர் பொன்னடியைப் போற்றமகிழ்
சாற்றிப் புகழ்ந்துரைக்குந் தாய். (34)

அன்னவளுஞ் சொல்வா ளரசற்கு மத்தையர்க்கு
மென்னுடைய வந்தனத்தை யேத்தியே பொன்னிறத்தாம்
பூவையுரை யஞ்சுகங்கள் போற்றுகெனத் தங்கையர்பால்
மேவியுரை யென்றாள் விழைந்து. (35)

தேர்வல்லா னவ்வுரையாற் றேங்கித் தியக்கமுற்றுப்
போர்வில்லான் செவ்வுரைத்தும் பொங்கினான் சோர்வில்லாள்
கொண்டதுன்பந் தன்னைக் குறித்து மதிமயங்கி
யெண்டதும்ப நின்றா னிரிந்து. (36)

ஆறினவன் போற்சிறிது மாவலித்தல் மாறியுடன்
வேறிலவா மன்பான் விடைகொண்டான் றேறிவரு
தம்பியுரை செய்யென்னச் சார்ந்து வணங்கினான்
வெம்பியுரை செய்யும் வெகுண்டு. (37)

உரைசெய்தெங் கோமகனுக் குற்ற வளத்தாந்
தரைசெய்யுஞ் செல்வந் தவிர்த்து விரைசெய்யுங்
கூந்தலாள் கொள்ளக் கொடுத்த வரசனையு
மேந்தலா யெண்ணுவது மென். (38)

கானகத்திற் பொற்புதல்வன் காயுங் கிழங்குமுண்ண
வானகத்திற் சேராத மன்னவற்கு மானம்
நலியுமுயிர் கொண்டடுத்து நாட்டத் துடனாள்
வலியுமுரை செய்வாய் மதித்து. (39)

Koviloor Digital Library

மின்னுடைய வாட்பரத வேந்தர்க்கு மேலான
மன்னுடைய தம்பியெனும் வாழ்வுமிலேன் என்னுடைய
தம்பிக்கு முன்னல்லேன் தானே பிறந்தயான்
வெம்பிக் குறையேன் விளம்பு. (40)

ஆரியவல் லானிளவ லான்ற முகநோக்கிச்
சீரியவல் லாதனசொற் செப்பலென்றான் பாரின்
வணங்கினன் வாழ்த்தி வலங்கொண்ட நெஞ்சா
னிணங்கினன் போதற் கியைந்து. (41)

கூட்டினன் றேர்ப்பொரியைக் கூட்டியே கொன்முறையிற்
பூட்டினன் கோரமதைப் போம்வழியைக் காட்டினன்
தன்னகத்தாம் கல்வியினற் றூனொருவர் காணது
மின்னகர்க்கண் வந்தான் விரைந்து. (42)

தையலாள் கற்புந் தகவுந் திருத்தம்பி
செய்யலா மற்புமிகு சேமமாச் சையமாம்
வில்லுடைய கோமான் விரைந்து வழிநடந்தான்
அல்லுடைய நாப்ப ணதின். (43)

பொய்க்குதவும் வாழ்க்கை புரியரக்கர் நட்பதனுல்
மெய்க்குதவு வார்த்தடுக்கும் வேலையென மொய்த்துவரு
மைவிளக்கு மாலிருளை மாற்றுதற்கு வானெடுத்த
கைவிளக்கு மானது திங் கள். (44)

மருமத்துத் தன்னை மதித்தவர்க்கு நல்கு
முருமொத்த வில்லார்க்கு மொன்றுங் கருமத்தின்
ஓங்குதலை யெண்ணி யுவந்த தருமமுகம்
தாங்குதலை யொத்தமதி தான். (45)

அஞ்சனக்குன் றன்ன வழக னவன்றேவி
எஞ்சலிற்பொன் மேனி யிளவலொடு விஞ்சுமதி
மெல்லடிக்குப் பஞ்சி விரித்தா லெனச்சென்று
ரெல்லடிக்கு முன்ன மியைந்து. (46)

Koviloor Digital Library

சிறுமருங்குற் சீதை செழித்த சரணம்
நறுமைகொண்டு சேர்ந்து நடந்த வுறுதிகொண்டு
நாட்டமிகு மன்பைவிட நாடி மொழிவதற்குக்
கேட்டறியோம் பின்னுமொரு கேள். (47)

பரிதியவன் கீழ்பாற் பருவரைசேர் முன்னம்
வருதிருவான் றென்பாலின் வந்தான் அருவிபொழி
கண்ணுமவ னெஞ்சினொடு காணு மிரதத்திற்
பண்ணுமவன் செய்கையுரைப் பாம். (48)

கடிகை யிரண்டிற் கருதுாகர் கண்டா
னடியிற் றொழுமுனியு மாய்ந்து முடிவதனைக்
கேட்டுமன்னுந் துன்பங் கிளர முடிவனினி
நாட்டுமன்ன னென்று னலிர்ந்து. (49)

நின்றுந் தடுக்கவள்ள னேரான் பழியஞ்சி
யொன்றுந் தருமத் துறுதிகண்டு வென்றவரார்
மேலைவிதி யென்றமுனி வேண்டு மமைச்சனொடு
தாலமனன் கோயிலடைந் தான். (50)

தேர்கொண்டு வள்ளலுடன் சேர்ந்தா னெனவுழையர்
தார்கொண்ட மன்னவனைச் சார்ந்தவராய்க் கார்கொண்ட
மேனியனைக் காணுது வீழ்ந்தார் துயர்க்கடலிற்
றேனிலமுந் தீயிற் செறிந்து. (51)

இரதம் வரலு மிருந்தவர்கள் சொல்ல
வரதன் வருமென்று மன்னன் விரைகமல
நாட்டந் திறந்து நயமுனியைக் கண்டுவள்ளல்
மீட்டனனோ வென்றுன் விழைந்து. (52)

இல்லையென்று சொல்லா திரங்கினன் மாமுனிவன்
நல்லவன்றன் மாமுகமே நம்பிசெயல் சொல்லவன்றே
சோர்ந்தா னரசன் றுயர்காணே னென்றமுனி
சேர்ந்தான் வெளியிற் றெரிந்து. (53)

Koviloor Digital Library

வாய்மையனும் பாகன் மலக்குமுகங் கண்டுவள்ளல்
சேய்மையனே சேர்ந்தனனே செப்பென்றான் வேய்மருவு
காட்டினுற்றா னென்றான் கருதும் பரமபத
வீட்டினுற்றான் மன்னன் விரைந்து. (54)

இந்திரனே ராக விமையவர்க ளீண்டிவரு
சந்திரனேர் மானமதிற் றாங்கியே வந்தனனு
மெந்தைநந்தை யென்றுபணிந் தேத்திப் பரமபதஞ்
சிந்தைதந்து சேர்த்தார் சிறந்து. (55)

உயிர்ப்பில்லை யென்ன வுணர்ந்துருவந் தீண்டி
யயிர்ப்பில்லை யாயழுங்கி யன்பற் குயிரில்லை
யென்றறிந்து கோடைதனி லென்பிலுயி ராய்வீழ்ந்தாள்
நன்றறிந்த கோசலைமா னள். (56)

அந்தணனே டெல்லா மளித்தவனை யீன்றளிக்க
மந்தணமுன் செய்தாள் மகனினின்றி வந்த
துணைபிரிந்த வன்றிலெனச் சோர்ந்தா ளழுதாள்
இணைபிரிந்த நங்கை யிரிந்து. (57)

தானேதான் றஞ்சமிலா தான்தகைவில் லான்தானே
போனு னெனமைநீத்திப் போதென்று வானீர்
வறந்துமண்ணீர் வற்றி மறுகுற்ற மீன்போல்
அறிந்துமண்ணில் வீழ்ந்தா ளடித்து. (58)

ஒன்றாநன் ஞட்டினிடை யுய்ப்ப ருயிர்காப்பர்
நன்றாநன் மக்கடா நன்மையுற்றா ரின்றேவந்
தஞ்சலெனு தெம்மகன்றா னத்தன் றனையழித்தா
னெஞ்சலிலா னென்றா ளிரிந்து. (59)

நோயுமின்றி நோன்கதிர்வாள் நண்ணியவேல் கோலுமின்றி
மாயுமின்றே மக்களினன் மன்னவனும் காயுமென்ற
கற்கடக நாகங் கனிவாழை வேய்போன்றான்
பொற்கடகக் கையான் புலர்ந்து. (60)

Koviloor Digital Library

தாழ்கூந்தற் கைகேயி தன்மதியா லின்மைதர
வாழ்வார்ந்து பெற்றுயிம் மண்ணுலகந் தாழ்வாகாக்
காந்தனுலந் தானதனைக் காணென் றலரிஞள்
வேந்தனுலந் தோளதனில் வீழ்ந்து. (61)

சம்பரனை வென்று சயமடைந்த த்தேர்வேந்தே
யும்பரனை வோரு முயர்ந்தாரா நம்பி
விருந்தாம் படியென்ருள் வேழத் தரசைப்
பிரிந்தாம் பிடியென்ருள் பேர்ந்து. (62)

வேழ்விச்செல் வந்தானோ மெய்மைத் துணையின்மை
சூழிச்செல் வந்தானோ தொன்மநூல் வாழிநல்குந்
துய்த்ததெவை முன்னென்ரு டோன்றலென வள்ளலுற
மெய்த்ததவஞ் செய்தாள் மெலிந்து. (63)

ஆழியர சன்றேவி யன்ன வரற்றவரு
தோழி சுமித்திரைமெய் சோர்ந்துவிழ மாழையுண்கட்
டேவியரா மற்றைத் திருவனார் சூழ்ந்திருந்தா
ரோவியமாச் செய்கை யுலர்ந்து. (64)

துஞ்சுமன்னைக் கண்டுந் துணைத்தே வியர்நடுங்கி
யஞ்சிமன னையா ரழுதிலரால் விஞ்சுமணி
தேனிற் ளொடர்மாலைத் தேர்வேந்தன் றன்னுடனே
வானிற் ளொடர்வான் மதித்து. (65)

கைத்தசொல்லாற் சீவன் கலைந்துங் கடையோட
மெய்த்தசொல்லும் வேந்தை விடுகிலராம் சுத்த
மனத்தாற் பிறவியெனும் வாரி கடக்க
வினத்தாற் பெறுமம்பி யென்று. (66)

ஆறயுதர் மாதர்களு மன்பிற் றொடர்ந்திருப்ப
மாறவிலாக் கோசலையு மாழ்கிநிற்கத் தேறவிலாச்
சோதிமணித் தேரான் சுமந்திரனுஞ் சொல்லவந்தான்
வேதமுனி விம்மி விரைந்து. (67)

Koviloor Digital Library

செய்யக் கடவ சிறுவரிலை செய்வதுதான்
மையற் கொடியாண் மகனென்று தையற்
கடலினிடை நின்றெடுத்துக் காணுந் தயிலக்
கடலினிடை யிட்டான் கசிந்து. (68)

தேவியரைப் பார்த்துரிமை செய்யுநாட் செந்தீயி
னுவிவிடு மென்றருளி யன்றேதான் தாவில்
பரதற்கு மன்னேலைப் பாங்கா யனுப்பும்
வரதர்க்கு முன்னேன் மதித்து. (69)

போனவருங் கேகயர்கோன் பொன்மா நகரெய்த
வானவழி வன்பள்ளி யன்றடைந்தான் மேனுள்
தொடர்ந்தடுத்த மாந்தர் துயிலெழுந்த பின்னர்
நடந்தடுத்த செய்கைசொல்வா நாம். (70)

வேலை முரசியம்ப விண்ணேற்ற மண்ணிறைஞ்சக்
கோல விரதமிசை கொண்டலரி காலைவரை
வான்புக்கான் மைந்தன் வனம்புக்கார் மைந்தரெனத்
தான்புக்கான் காக்கத் தகைந்து. (71)

தம்மை மறந்தவர்கள் தாமரைக்கண் ணுற்காணு
ரெம்மை மறந்தானென் றேங்கினுர் செம்மையின்றிக்
கண்டுயின்ரு ரெல்லாங் கலங்கினுர் வல்விடத்தைக்
கொண்டயின்ரு ரென்னக் குறித்து. (72)

எட்டாசை கொள்ளா வெழுவ ரிடர்க்கடலுள்
விட்டாசை கொள்ளான் விமலனென்பார் மட்டார்ந்த
தண்டகமு மிவ்வுலகிற் ருனுளது தேர்ச்சுவடு
கண்டறியு மென்பார் கரைந்து. (73)

தேர்ச்சுவடு கண்டு திருமா நகர்க்கென்றே
ஆர்த்துவரு மன்னவம தாமென்னப் பார்த்தறிவோ
மென்றெழுந்து சென்ரு ரெழினகரைக் கண்டறிந்தா
ரென்றெழுந்து சென்மு னிரிந்து. (74)

Koviloor Digital Library

புக்கா ரரசுலந்து போன பொருள்கேட்டா
ருக்கார் வருத்த முரைப்பரிதாற் றக்கான்
வனம்போனு னென்ற வகையு முணர்ந்தார்
மனம்போனுர் வன்றுயரின் வாய்ந்து. (75)

மன்னற் கலது வனஞ்சேரு மைந்தர்க்கோ
வின்னற் சிறையி னிடைப்பட்டார் பன்னற்
கரியமுனி யாணையினு லன்றடுத்த துன்பம்
பரியமுனி யாரிருந்தார் பார்த்து. (76)

அனற்கஞ்சி வேலை யடையாக் கடலின்
முனிக்கஞ்சி வைகநகர் முன்னம் பணித்த
குரிசிலையா மன்வரத்தைக் கொண்டு கடஞ்செல்
வரிசிலையான் செய்கைபுகல் வாம். (77)

தைல மாட்டு படலம் முற்றிற்று.

கங்கைப் படலம்.

வெய்யோன் சுடர்தனது மேனியொளி யான்மறையப்
பொய்யோ வெனுமிடையாள் போற்றிவர மையோ
மரகதமோ வென்னும் வடிவுடையான் சென்றுன்
புரகதனைப் போலப் பொலிந்து. (1)

அளிதுன்னு மைம்பா லமுதென்னுஞ் சொல்லாள்
வெளிதுன்னு மின்னிடையாண் மேவு களிகொண்ட
நன்னர்நடைச் சானகியா ளுட்டுநடை கண்டுவரு
மன்னநடை கண்டா னணிந்து. (2)

அஞ்சம்பு மைய னகலம் பையுமளந்த
நஞ்சம்பாய் மையுண்ட நாட்டத்தாண் மஞ்சன்
கழல்கண்டு கஞ்சங் கலங்குவது கண்டாள்
குழல்கண்டு நேர்சொற் கொடி. (3)

Koviloor Digital Library

மாகந்தந் தாதளக மாதர் மதிநுதிகொள்
பாகந்தந் தாநுதலாள் பாங்குவரல் மேகந்தான்
மின்னேடு வந்தெனவும் வேழ மணைபிடியின்
தன்னேடு வந்தெனவுந் தான். (4)

தொளைகட்டுங் கானச் சுவையமுதச் சொல்லார்
வளைகட்டுங் கையார் வழங்குங் களைகட்டும்
பெண்களிக்குங் கண்போற் பெருங்குவளை கண்டடுத்தான்
மண்களிக்குங் கோமான் மதித்து. (5)

பொற்கலைக்குட் புத்தமுதம் பூரித்த கொங்கையினுள்
அற்கலைக்கு மைம்பாலா ளாங்காகும் விற்கொள்
கருப்பேந் திரமுதல கண்டிடரைக் காணுள்
பொருப்பேந்துந் தோளனுடன் போய். (6)

பன்னந்தின் முத்தாற் படுத்த புளினமுடன்
அன்னந் துயின்ற மலர்த்தடமும் பொன்னந்தும்
தண்டுறைசேர் மானதியைத் தானடுத்தார் தேனடுத்து
வண்டுறையுந் தாரார் மகிழ்ந்து. (7)

மேதிசினைத் தண்கதிரை மேயக் கடைவாய்பால்
போதவனை பூவினளி போந்திசைக்கச் சீத
வயலிற் கயல்பாய் வளநாடு கண்டார்
புயலிற் கரத்தார் புகழ்ந்து. (8)

பரிதிபற்று நல்லணியார் பாங்கிற் செழித்த
மருதவைப்பு நீங்கி மலரும் சுருதிகற்ற
மாமறையோர் போற்ற வளமருவு கங்கைகண்டார்
மாமருவு தாரார் மகிழ்ந்து. (9)

கங்கையென்று போற்றுங் கடவு ணதிவேலை
தங்கிநின்ற தாபதர்க டாங்கண்டா ரெங்கள்புலம்
செல்லுங் கதிநேரிற் சேர்ந்த தெனவடைந்தா
ரல்லும் பகலு மறிந்து. (10)

Koviloor Digital Library

பெண்ணிற் சிறந்த பெருங்கருணைப் பேராளை
மண்ணிற் பிறந்த மணியாளை விண்ணோர்
பரவமுதங் கண்டார் பரிந்தன்பி ளுகி
விரவமுதங் கொண்டார் விழைந்து. (11)

எதிர்கொண் டழைத்தா ரிசையை யிசைத்தார்
வெதிர்கொண்ட கோலுடையார் வீரன் கதிர்கொண்ட
தாமரைக்கண் கோமகனோர் தங்கண்ணின் மாந்துவார்
மாமறைக்கண் கொண்டார் மகிழ்ந்து. (12)

மனையுடைய மக்கள் மருதேயஞ் சென்றோர்
நினைவுடையர் தஙகட்கு நேரா யனையர்வரக்
கண்டணைந்தார் போலக் கவினுர் தவப்பள்ளி
கொண்டணைந்தார் மேலோர் குறித்து. (13)

பொழிகின்ற கண்ணிற் புதுப்புனலி னூட்டி
மொழிகின்ற சொற்பூ முடித்து வழிகின்ற
அன்பாகு நல்லமுத மாக்கி வழிவந்த
துன்பேகச் செய்தார் துதித்து. (14)

காயுங் கனிமலருங் கந்த மொடுதேடி
யாயுங் கனிவி னமைத்தேமாற் றூயகங்கை
யாடித்தீ யோம்பி யமுதுசெயற் காமென்றூர்
நாடித்தி மூன்றுநண்ணி னூர். (15)

மங்கையர்க்குத் தூய மணிவிளக்கா மானனையாள்
செங்கைபற்றித் தேவர் செழிப்படையப் பங்கயத்தான்.
பண்டுதென்பா தத்திற் பரிந்தாட்டுங் கங்கைதனின்
மண்டுமென்பா லாடு மகிழ்ந்து. (16)

கங்கையென்றூங் கன்னி கரமெடுத்துக் காசினியோர்
சங்கையின்றும் பாவமென்மேற் றூக்கினூர் மங்கையுட
னுன்பரிசத் தாலளிக்க வோங்கினனென் றுளுலகைத்
தன்பரிசத் தாலளிக்குந் தாய். (17)

Koviloor Digital Library

வெங்கண்ணு கக்கரத்தான் வெண்ணிறத்தின் மேலான
கங்கைகொண்ட வார்சடையான் கற்புடைய மங்கைகண்டு
போற்றப் படிவான் புரியு மதிசடிலத்
தேற்றப் படுவா னென. (18)

தள்ளுநீர்க் கங்கைத் தரங்கத்தால் வள்ளலவன்
வள்ளியிடை மாமலராள் வாழவரும் ஒள்ளியவாம்
வெண்ணிறத்த பாற்கடலின் மேலேநாட் பள்ளிநின்று
நண்ணியெழல் போற்றேன்றி ஞன். (19)

வஞ்சியிடை கண்டு மடங்க மடநடைகண்
டஞ்சியன நாண வடிகண்டு கஞ்சமலர்
நீருடைய தாக நிகரி லவளாடுஞ்
சீருடைய நீரிற் சிறந்து. (20)

தேவர்க்குந் தேவன் செறிசடையிற் சேர்ந்தநறுங்
கோவர்க்கம் பூவினெடு கொன்றைமலர் பூவு
மணக்குதலில் சீதை மலர்க்குழலி ஞவி
மணக்குதலாங் கங்கை வனம். (21)

மாதுகுழற் கற்றை மழைக்குலமன் னீரினிடை
மீதுகுழை வாக விரவிவரல் சீதமிகும்
கங்கையொடு காளிந்தி காண்க வருவதெனப்
பொங்குசுழி கொள்ளும் புனைந்து. (22)

சுழிபட்டுத் தோன்றிவரு தூங்கொலியாற் றூத்தன்
விழிபட்டுச் சேலுகளும் வெள்ளத் துழியின்
முழுகிவரு மன்னே முதற்பாற் கடலி
னெழுகவரு பின்னே யிசைந்து. (23)

செந்தா மரைப்பாதஞ் சேர்ந்துவர லாலெவர்க்கு
மந்தா கினித்தாய்நல் வாழ்வுதருஞ் சிந்தையுடன்
மெய்திறமார் மேனி விழைந்துமுழு தந்தழுவி
னுய்திறமார் சொல்வா ருவந்து. (24)

Koviloor Digital Library

தூய புனல்படிந்து தோன்றி மகிழ்பெரியோர்
மேய வுறையுளெய்தி மேலாகு நேய
விறைவற் ஞெழுதங் கெரியோம் பியபி
னறிவர்க் கமைவிருந்தா ஞன். (25)

வருந்தத்தான் றந்தமுதை வானவர்க்கு முன்ன
மருந்தத்தான் றந்தமுத வண்ணல் பொருந்த
விருந்திஞன் மெல்லடகு வேண்டி விரும்புந்
திருந்திஞர் செய்யுந் திறம். (26)

ஆயகவின் காலைதனி லாயிரமா மம்பிக்கு
நாயகவன் காலைநிகர் நாமகுகன் றாயகங்கைப்
பொன்றந்த பாரம் புளிஞர்த் தலைமையுளான்
கொன்றந்த வில்லான் குறித்து. (27)

துடியுடைய ஞுடையான் தோற்செருப்பிற் போர்த்த
வடியுடைய னற்சிறந்தா லன்ன வடிவுடையன்
தானைப் பெருக்கான் தனித முகிற்கரத்தான்
ஞானப் பெருக்கா னலன். (28)

பெண்ணைச் செறும்பிற் பிறங்கி வலுமைகொண்ட
வண்ணத் துறுமயிரின் வார்கையான் கண்ணகன்ற
மார்பா மலையான் வலமுற்ற வேடுவர்க்குச்
சார்பாந் தலைமைத் தரன். (29)

கொம்புடனே துத்தரியுங் கொட்டு முறைமையிஞன்
பம்புடனேர் பண்ணும் படையுடையா னம்புடையா
னம்பிதரு நாத னழிகவுளி ஞண்மைகொண்ட
தும்பிபுரை சுற்றத்தான் சூழ்ந்து. (30)

பற்றொடுத்த தன்ன பலசூற் கவடியிஞன்
கற்றொடுத்த தன்ன கழலிஞ னற்றொடுத்த
குஞ்சி யுடையான் கொடுங்காலற் கண்டாலு
மஞ்சி யிடையா னகம். (31)

Koviloor Digital Library

கச்சரையி னார்த்த கரைக்கதிர்சேர் வாளுடையான்
நச்சரவி னேக்கி நடுக்குவான் பிச்சரெனப்
பேச்சுடையான் கோபதிகைப் பெற்றவர வச்சிரம்போ
லேச்சடையா வன்மருங்கா னேய்ந்து. (32)

சிருங்கிபுர மென்னத் திரைக்கங்கைப் பார
மருங்கினகர் வாழு மன்ன னெருங்கினமாஞ்
சேனை வனைவுடனே தேன்மீ னுடனடுத்தான்
மானவனைக் காண மதித்து. (33)

சுற்றம் புறத்தாச் சுடர்க்கணையைக் கொண்டபெரு
விற்றுறந்து வாளொழித்து வேண்டிவரு பற்றுடையான்
முற்றவத்தை போக்கு முனிவருடன் வீற்றிருக்கும்
நற்றவத்தான் பள்ளிநண்ணி னான். (34)

கூவாமுன் தம்பி குறுகி வெளிவந்து
கோவாமுன் தன்மை குறிக்கென்றான் தேவாநின்
றாட்டுவந்தாந் தாழவந்தேன் றண்ணதியி னம்பிவிடு
வேட்டுவன்று னென்றான் விழைந்து. (35)

நிற்றியெனப் புக்கு நெடியோற் றொழுதுதம்பி
கொற்றவநிற் காணக் குறுகிநிமிர் சுற்றமுடன்
உள்ளத்தாற் றூய னுவந்தகுகன் கங்கைவிடும்
வள்ளத்தான் வந்தான் மதித்து. (36)

அண்ணலவ னேர வழைத்தியெனவனைய
வண்ணவரன் கூற மகிழ்ந்துவந்து கண்ணன்
தனைவணங்கி யன்பு தழைத்துநின்றான் முன்னை
வினைவணங்கிப் போற்ற விழைந்து. (37)

இருத்தியுட னென்ன விருந்திலனான் மிக்க
வருத்தியுடன் தேன்மீ னமைத்தேன் விருத்தருட
னாகாரஞ் செய்தெற் கருளளிக்க வேண்டுமென்றான்
பாகாருஞ் சொல்லாற் பரிந்து. (38)

Koviloor Digital Library

அன்புடைமைக் காக்க மளவடுக்கா வாதலினு
லின்புடைமை கொண்டதனை யேற்றதுவா மென்புடைநீ
நாவாயி னேடுமிங்கு நாளை வருகவென்ருன்
தேவாதி தேவன் றெரிந்து. (39)

கார்நிறத்தான் கூறக் கருதுமன்பன் றேர்ந்துரைப்பான்
பார்பரிக்குஞ் செல்வனைப் பார்த்துமியான் பேர்வதுண்டோ
வீற்றிருந்து போற்றி விழைபவத்தைத் தீர்ப்பலென்ருன்
கூற்றிருந்த வேலான் குறித்து. (40)

கோதைவில்லான் கேட்டுக் குறிப்புடைய தம்பியுடன்
சீதைமுக நோக்கிச் சிறந்துரைப்பான் காத
லுடையானே யென்னுடனீ யுற்றிருப்பா யென்ருன்
விடையானே யென்னவரு வேள். (41)

திருநகரைத் தீர்ந்தவண்ணந் தேவவுரை யென்னப்
பருவரலைத் தம்பி பகர வெருவியன்பிற்
கண்ணீர் பொழிந்தான் கருதுலக மங்கைதவந்
தெண்ணீர்மை யின்மை தெரிந்து. (42)

பகையிருளை யோட்டிப் பரிந்துலகை யாளும்
வகையருளு மன்னன் வரவாய்த் தகையு
மிருட்பகையைக் காய்ந்த விரவிவரை சென்று
னெருப்பையர சாக்கி நிமிர்ந்து. (43)

மாலைவரு கால மருவுஞ் செயல்முடித்துக்
கோலமுடை யான்சயனங் கூர்ந்தருளும் வேலையிடை
காத்துநின்ருன் தம்பி கதிரோன் வருமளவு
மேத்திநின்ற வில்லா னியைந்து. (44)

தும்பிக் குழாமெனவே சுற்றவரு சேனையுட
னம்பிக்கு நாயகனு மத்தன்மை வெம்பிக்கை
விற்பிடித்த வீரன் விரும்பி யெதிர்நின்ற
தற்பிடித்த னிங்குமள வாம். (45)

Koviloor Digital Library

சேற்றினூறு செங்கமலஞ் செங்கதிரோன் மேனியைக்கண்
டாற்றலொடு பூத்தனவா மன்னவைபோ லேற்றவரு
மஞ்சனைய ஞாயிறெனு மன்வதனங் கண்டலர்ந்த
வஞ்சிவத னத்தா மரை. (46)

நாளடுத்துச் செய்ய நயந்த கடனியற்றித்
தோளடுத்து விற்றழும்பு தோய்கொண்ட ளுளடுத்த
பூவாய் வரன்போற்றும் பூமா னவணிருந்தா
னூவாய் வரச்சொ னவின்று. (47)

ஏவுமொழி கேளா விழிந்த புனற்கண்ணு
னுவியுலை கோளா னடிபிரியான் தேவியொடுஞ்
சுந்தரன்ருள் போற்றித் துதித்து மனமுரைப்பான்
மந்தரந்தான் ருேள்வேட்டு வன். (48)

பொய்ம்முரைக ளில்லேம் புகலிடமுங் கானகந்தான்
கொய்ம்முறைசேர் தாராய் குறைவில்லேஞ் செய்ம்முறைசேர்
குற்றேவல் செய்வேம் குமரன் கமலையொடு
நற்றேவ செய்வாய் நலம். (49)

தேனுந் தினையுண்டாந் தேவர் நுகர்தற்கு
மானுஞ் சுவையுண்டு மாமையுண்டு வானுலவு
கங்கையுண்டு நீராடக் காமர் கமலமலர்
மங்கையுட னிங்கருள்செய் வாய். (50)

தோலுந் துகிலாந் தொடுத்தமஞ்சம் போற்பரணு
மேலுந் துலங்கும் விரைந்தோடுங் காலாய்
வரைவிற் பொருளெவையும் வானுறைவ தேனும்
விரைவிற் கொணர்வேம் விழைந்து. (51)

ஐயஞ் சிலவுடைத்தோ வாயிரம னேகர்தொழில்
செய்யுஞ் சிலைவேடர் சேர்வலியா ருய்யு
மடித்தொழிலைச் செய்வே மடியேம் பவத்தை
மடித்தொழியச் செய்வாய் மகிழ்ந்து. (52)

Koviloor Digital Library

அண்ணலவை கேட்டருளி யன்பி னகைசெய்து
விண்ணவரும் போற்ற விரைந்துகான் வண்ண
நதியாடி நல்லோரை நாடிப்பி னண்ணல்
விதியாகு மென்றான் விழைந்து. (53)

சிந்தனையைத் தேர்ந்தான் சிறந்த குகன்றொழுது
தந்தனனும் நாவாய் தனிமுதலு மிந்து
நுதலிதனித் தம்பியொடு நுண்ணறிவான் சென்றான்
நுதலியது செய்ய நுவன்று. (54)

பாலுடைய நன்மொழியும் பாங்கான நாயகனுஞ்
சேலுடைய நீர்சிந்தித் தேர்ந்துவரத் தோலுடைய
கோலிற்போம் நன்மைகுறித்து வருநாவாய்
காலிற்போம் ஞெண்டிற் கலந்து. (55)

புளினத்தாம் பொற்றனத்தாற் போற்றுகங்கை தானு
நளினத்தா ளைதனெனு நம்பி களிநத்தத்
தெண்டிரையாங் கையாற் சிறந்தேந்தித் தந்தணைத்தான்
வண்டிசையாம் பாரம் வரைந்து. (56)

அத்திசையின் வள்ள லறிவன் முகநோக்கிச்
சித்திரகூ டத்திற் செறிநெறிசொல் னத்தியென
மன்னுவகை கொண்ட மதிமனத்தான் றாள்பரவித்
தன்னுவகை சொல்வான் தடுத்து. (57)

வழியறிந்து சொல்வேன் மலைக்கவலை கெல்வேன்
மொழியறிந்து செய்கை முடிப்பே னெழில்சிறந்த
சீமா னுளமிருக்கிற் சேர்ந்தபடை யோடடுப்பே
னுமா றருளென்று னுய்ந்து. (58)

அன்னவன்சொற் கேட்ட வமல னுரைசெய்வான்
பின்னவனுன் தம்பியிவள் பேண்மதனி மன்னும்
பெருமை யுலகுனதென் பின்னவ.ளி நானுன்
னுரிமையுள னென்று னுகந்து. (59)

Koviloor Digital Library

துன்புளதா மென்னிற் சுகமுளதா மச்சுகமும்
பின்புளதா மன்னும் பிரிவுன்னேல் முன்புளவர்
நாலுடைய ரேனை நலத்தவுந்த ஞேடைவர்
சீலுடைய ராஞேம் சிறந்து. (60)

அங்குகிளை காவற் கமைதி யுளனும்பி
யிங்குகிளை காவற் கெவருண்டு பொங்குகிளை
என்னதென வார மிசைந்தகிளை காவென்முன்
மன்னதனு வீரன் மதித்து. (61)

பணித்தமொழி செய்வான் பருவரலி னென்றும்
பிணித்தவனு மென்னப் பெயர்ந்தான் கணித்ததம்பி
முன்னடக்கக் கன்னல் மொழியி ஞெடுநடந்தான்
மின்னடக்கு மேகமென வேள். (62)

கங்கைப்படலம் முற்றிற்று.

வனம்புகு படலம்.

பூரியர்சேர் மாதர் பொதுமனது போலமன்னு
மீரமுள தில்லென் றிளவேனி லாரியனும்
வந்தகுறி யாலமுத மாறுது சீதக்கால்
தந்தகுறி காட்டுந் தணந்து. (1)

வெய்யி னிலவாய் விரித்த கதிர்வீசச்
செய்ய தருநிழலச் சேர்துளியை மைய
புயல்கொடுக்க மென்கால் புதுமலர்க ளோங்க
மயில்நடக்கச் சென்றார் வழி. (2)

மன்றலணி கோதை மயிலே யிளமானே
இன்றுவதி கோபத் தினமேந்தும் கொன்றைசொரி
மன்னு மலரின் வயங்கு வதுபாராய்
பொன்னு மணிபொதிந்த போல். (3)

Koviloor Digital Library

பாணியலும் வண்டு பணையா மழைமயிலும்
நாணியலுந் தோகையது நட்டமிடல் பூணியலுஞ்
சாயலாய் நின்னைத் தகுதி பெறக்கண்டு
வேயலாய் வந்த விதம். (4)

சேந்தேறு வாய்க்கீரஞ் செங்கோலக் காந்தளின்மேற்
போந்தேறிக் கோதும் புனல்பரவி யேய்ந்தபுகை
மையேந்துங் கூந்தலணி மாதே யுனதுமுன்னங்
கையேந்தி நின்றதெனக் காண். (5)

நீண்டசின வேலை நிகர்விழியாய் நின்னையன்பு
பூண்டவின மென்று பொருந்தியே காண்டலொடு
மெஞ்ஞிறையுஞ் சாயல் விழியு முடன்கண்டு
மஞ்ஞையுடன் மானும் வரும். (6)

ஏந்து நகிலி னினந்தாங்கு நுண்ணிடையாய்
காந்தண் முகையைக் களிமஞ்ஞை பாந்தளென
வுன்னியதைக் கவ்வு முயர்தளவு கண்டடுத்துப்
புன்னகைசெய் தொக்கும் புனைந்து. (7)

கன்னியர்கள் கோலமதைக் கற்றறிவா னென்னவொளிர்
பொன்னிறத்த வேங்கைப் புதுக்கொம்பர் வன்னமலர்
அன்னநடை மின்னே யளகநுதலப்புஞ்
சின்னமலர் காணுமதைத் தேர். (8)

குன்றின் வயமாக் குருளை யிருள்சிந்திப்
பின்றியென யானைப் பிடிக்கன்று மென்றுமுட
னண்டர்மனை மேவுபுனிற் றுன்கன்றி னோடுநேயங்
கண்டுவிளை யாடுவதைக் காண். (9)

அகில்புனையுங் கூந்த லணியிழையே காண்பாய்
நகுமலரின் கொம்பர் நதியிற் புகமூழ்கித்
தோய்வதனைக் கண்டாற் றொடிக்கை மடவார்நீ
ரேய்வதனை யொக்கு மிசைந்து. (10)

Koviloor Digital Library

நறைவாயிற் கொண்டு நகுங்களியி னாலே
பொறைவாய்கண் மூடிப் புகுந்து துறைவாய்ந்தே
யாடுசிறை வண்டுவரு மந்த ரெனமுன்னம்
பாடுபெடை கண்டுவரும் பார். (11)

எங்குமிடை மாமயிலே யிந்த வதிசயம்பார்
கோங்குமலர் மேலே குறிக்கொண்டு பாங்குடனே
சுற்றுமல ரேறித் துயிலும் பலவண்டும்
பொற்றகட்டி னீலமுற்றாற் போல். (12)

வாசமலர்ப் பூதிதனை மாருதம்வந் தேத்தெடுத்து
நேசமுடன் கல்வி னிரைத்துவைத்த லாசை
யணங்கினியா யுன்ற னணிதனத்தின் முன்றில்
சுணங்கினியல் காணுமடுத் து. (13)

பாதமல ருந்துவது பார்த்து வழிமரங்கள்
சீதமலர் சிந்துவது சீர்கொடியே யோதுமலர்க்
கொம்பரெலா முந்தன் கொடியிடைக்கு நாணியடுத்
திம்பர்வரும் பாங்க ரிணைந்து. (14)

என்றான் மடவரலோ டேன்று விளையாடிச்
சென்றா னடியர்மனஞ் சேர்பதத்தான் என்றுங்
குடமேவிச் சென்றான் குறித்த பெரியோ
ரிடமேவிச் சென்றா னிவன். (15)

அருத்தியொடு விம்மு மகத்தி னெடுநாள்
திருத்து வினை முற்றித் தெரிந்து பரத்துவனும்
நாமன் பவப்பிணிக்கு நண்ணு மருந்தாமி
ராமன் வரவெதிர்ந்த னன். (16)

குடையுடையான் கோலமுள குண்டிகையான் மூரிச்
சடையுடையான் மானின் சரும னிடைபெயரா
நாலுமறை யோங்கி நடநவிலு நாவுடையான்
சீலமறை யோதிவந்தான் றேர்ந்து. (17)

Koviloor Digital Library

தீயோம்புஞ் செல்வன் திசைமுகத்தா னல்குயிரைத்
தாயோம்பிக் காக்குந் தரமுடையான் மாயோன் பூ
வுந்தியிஞ லன்றி யுரிய வுயிரெவையும்
சிந்தையிஞ னல்குந் திறன். (18)

அன்பா முனியை யடுத்தெதிர்ந்தி ராமனவன்
செம்பாதந் தன்னிற் சிரஞ்சேர்த்தா னம்பியினி
மண்ணளிக்குஞ் செல்வ மருவாத தென்னென்ருன்
தண்ணளிக்குத் தாயாந் தவன். (19)

அகலிடத்தைக் காக்கு மமைதியினெங் கட்குப்
புகலிடத்தை யாக்கும் பொருளே தகவிலவாம்
வேடந் தழுவி விரைந்துவர லென்னென்ருன்
கோடந் தழுவுமறைக் கோன். (20)

உற்றதனை நன்கி னுரைத்தா னதுகேட்ட
நற்றவனுஞ் சிந்தை நலிவெய்தி முற்றவனம்
இன்றணைவ ஞேவொற் கெவ்வா றிசைந்திருந்தா
னென்றணைவ னென்ரு னெடுத்து. (21)

அல்லலுள தென்ரு லணுகு முடனின்ப
மில்லையிட ரென்னிவற்றிற் கேங்கலென நல்லவனுஞ்
சிந்தை யுவந்தான் செழித்ததவப் பள்ளிவந்து
மைந்த ருவந்தார் வனத்து. (22)

வைகினரா மங்கே மறையோ னிவரோடு
முய்குவது மேலென் றுவந்துடனே நைதலின்றித்
தேறுவதுண் டென்று தெளிந்த மனமுடையான்
கூறுவதுண் டென்ருன் குறித்து. (23)

நிறையிலகாய் பூகனியு நேர்ந்தபொழில் சேருங்
குறையிலகா ணெம்முடனே கூடிக் கறையுடைய
தெவ்விடத்தாம் வில்லாய் செறிந்த தவம்புரிவா
யிவ்விடத்தா மென்ரு னெடுத்து. (24)

Koviloor Digital Library

தங்கையொடு வாணி கரியவளுஞ் சேர்ந்தடுத்துச்
சங்கமுறு மிந்தத் தலமகிமை துங்க
வயனுக்கு நன்றா மரியபெறற் றீர்த்தம்
பயனுய்க்கு மென்றான் பரிந்து. (25)

பூண்டதவ மேலோன் புகலக் கடவுள்சொலு
நீண்டபுன னூடடுக்க நேருடைத்தாங் காண்டலொடு
மிவ்வழியின் வைகி னியனூட்டி னுள்ளவர்கள்
செவ்வழியி னேர்வர் தெரிந்து. (26)

ஆவதன்பா மையவினி யைய்யிரண்ட தாகவனை
காவதம்பின் சென்றடைந்து காண்டியென்றுந் தேவரன்பி
னெத்திரகூ டத்தவரு மேய்ந்து தவம்புரியுஞ்
சித்திரகூ டத்தையென்றான் றேர்ந்து. (27)

என்றுரைத்த நற்றவனை யேத்தி யடிபணிந்து
நன்றுரைத்த முல்லைநில நாடியே குன்றடுத்து
நாளுந்து செங்கதிரோ னண்ணி நடுவடையக்
காளிந்தி சென்றார் கவிந்து. (28)

ஆறுகண்டு சேர்ந்தா ரகமகிழ்ச்சி கொண்டணைந்தார்
நீறுகண்ட மேனியவர் நீர்படிந்தார் கூறும்
வளையோங்கு மாற்றின் வழிதாண்டுஞ் செய்கை
இளையோன் குறிக்கு மிசைந்து. (29)

வாங்குங் கழைத்துணியின் மாணைக் கொடிமடுத்த
தோங்குந் தனித்தெப்ப மொன்றாக்கி மாங்குயிலான்
தேவியொடு வள்ளலையுஞ் சேர்த்தான் கரமடுத்துத்
தாவியிடு மைந்தன் சரித்து. (30)

அனையபுன லேறி யகன்கரையைச் சார்ந்து
புனையவனை வற்கலையர் போனார் சினையொடுவேர்
வெந்துநிலந் தீய்ந்த விரிசுரத்திற் சென்றடைந்தார்
சிந்தைநலஞ் சேர்ந்தார் திகழ்ந்து. (31)

Koviloor Digital Library

ஆற்ருள் சனகியென வண்ண லறிந்தவுடன்
மாற்ரும் பரிதி மதியெனவாங் தோற்ருது
பட்ட மரந்துளிர்த்த பங்கயத்தா நல்வனம் போற்
தட்ட வனல் குளிர்ந்த தாம். (32)

வறுத்தும் பரல்கள் மலர்போற் குழைந்த
விறுத்ததொரு வல்லிதளி ரீன்ற கறுத்ததொரு
வாளரவின் பற்கள் மருவு மமுதுகுத்த
தாளறவர் வந்த தறிந்து. (33)

கூடினவா மேகங் குளிருந் துளிகொணர்ந்த
வேடரெலா மாதவர்போல் மேன்மைகொண்டா ராடுங்
கலிப்பாலே மானுடைய கன்றுதுள்ளி வந்து
புலிப்பாலே யுண்ணும் பொலிந்து. (34)

கல்லணையிற் சேர்ந்து கடுவோ டயரகியு
மல்லலின்றித் தண்புனல்சேர்ந் தானதொக்கும் வல்லேயுற்ற
வேய்க்கா னெரிதலின்றி மேலா மடந்தையர்தோள்
ஆய்க்காட்டு மிக்க வமல் (35)

பாங்குபடர் புல்லும் பசியகிறக் கம்பலத்தை
யோங்குவிரி செய்த வொளியடக்கு மாங்குயிலாய்
மாணிழையார் போல மயில்க ணடனமிடும்
பாணிழைக்கும் வண்டு பரிந்து. (36)

காலமின்றி யேயுங் கனியுடனுங் காய்கந்தம்
மூலமின்றி யேய முகிழ்த்தனவாங் கோலமங்கை
யொத்தனவாங் கொம்ப ருயரு மிவையெல்லாம்
அத்தனவன் வந்த தடுத்து. (37)

தோன்று மெயினரிடந் தூயமுனி வோரிடமா
மேன்றமணி போற்கோப மேய்ந்தவெங்குந் தேன்றுளிக்கும்
வண்டினிது பாட மகிழ்ந்து மயினடிக்கக்
கண்டினிது சென்ருர் கடம். (38)

Koviloor Digital Library

பாசறையிற் சென்ற பருவமுற்ற நாயகர்மே
னேசமுற்ற மாதர்மன நேர்ந்தவனம் பேசுமவர்
வந்தபினர்ச் சிந்தை மகிழ்ந்த தரமடுத்த
சந்தவன நந்தனமாய்த் தான். (39)

மேகத்தைக் கண்டு விழையும் பிடியென்று
மாகத்திற் கைநீட்டு மால்யானை வாகொத்த
சித்திரகூ டப்பேர்த் திருமலையைக் கண்டடுத்தார்
சித்திரவில் வீரர் சிறந்து. (40)

வனம்புகு படலம் முற்றிற்று.

சித்திரகூடப் படலம்.

பாயிரமா மேலோர் பரிந்தன்பி னுற்காணும்
ஆயிரமாம் பேரா னமலனலர்ச் சேயிழைக்குச்
சந்தவனஞ் சேர்ந்த தனிமால் வரைவளத்தைச்
சிந்தையொடு காட்டுஞ் சிறந்து. (1)

வாளினடை கண்ணாய் மயிலே வளம்பாராய்
தாளினடை யேலந் தழைசாரல் நீளுமலை
மேற்றுயிலு நீருண்ட மேகமொடு நாகமது
வேற்றுமையைக் காணா விதம். (2)

நீண்டகண்ணி னேரிழையே நீளு மலையும்பர்
பூண்ட மரகதத்தின் பொற்பாரை யீண்டி
விசும்பிற் குதிக்கின்ற மின்வருடை தேசின்
பசும்பொற் பரிநிகர்க்கும் பார். (3)

வடங்கொ ணகிலாய் மலையரவு காலுந்
தடங்கொ ளுரியமையிற் சார்ந்து தொடங்கிநின்றே
யாடுவது கண்டா லயோத்திநகர் மாடமிசை
யாடுகொடி போலா மறி. (4)

Koviloor Digital Library

உவரியன்றிப் பாற்கடலி னுற்ற வமுதே
துவரியொன்று நற்றடத்திற் றோன்றுங் கவரிமான்
வால்புடையின் வீசல் மருவும் பவளவரைச்
சால்புடைய மாலருவி தான். (5)

சலந்தலைக்கொள் சீயத்தாற் சாய்ந்த மதமா
வுலர்ந்த வுதிரத்தி னோங்கிப் புலந்தபெண்கள்
குங்குமத்திற் சேர்ந்த குலமுத் தொளிசிறக்கும்
வெங்கயத்தின் முத்தம் விரிந்து. (6)

மணிக்குடங்கள் தாங்கி வளர்கின்ற தென்னக்
குணிக்குமிடைக் கோமளமென் கொம்பே கணித்து
விழைந்தசந்தச் சோலை வியன்கதியைத் தட்ட
நுழைந்தசந்த மாமதியை நோக்கு. (7)

காதலொடு வண்டோச்சிக் கானு மலைத்தேனைப்
போதகமொன் றொன்று புழைக்கையால் வேதனைச்சூல்
கொண்டடுக்கு நற்பிடிக்குக் கூறுமன்பி னுலளித்தல்
கண்டடுக்கு நன்மொழியே காண். (8)

வாங்குசிலை யென்ன வளைந்த நுதல்விளக்கே
யோங்குகழை தாக்க வுயர்பிரச மாங்குறவர்
கல்வி யெடுத்த கவலைக் குழிநிறைக்கும்
வல்லி யடுத்து மதி. (9)

ஆடுகின்ற மாமயிலி னன்ற வெழிற்குயிலே
கூடுகின்ற நீங்குங் கொடிச்சியர்க ளூடல்விட்டுக்
கொன்னரங்கல் கொண்ட குறவர் தமைநோக்கக்
கின்னரங்கள் பாடுவது கேள். (10)

மருவி வருகாதன் மந்தியுட னூடி
யருவி யரல் வீச வணைந்து கருவி
மழையுதிர்க்கு மாகடுவன் வந்தடுத்துக் காண்பாய்
உழையுதிக்குங் கண்ணு யுவந்து. (11)

Koviloor Digital Library

சில மருந்ததிக்குஞ் செய்யுந் திருவுடையாய்
கோலமிகு வண்டாற் குனிந்துநிமிர் மாலைகொண்ட
சோலைக் கனிக்கொம்பர் தூவியிடு பொன்மலருன்
காலிற் றொழுவதெனக் காண். (12)

விற்கொ ணுதலாய் விளங்கு மலையதன்மே
லெற்கொள் புனங்காவ லேந்திழையார் கற்கொள்
குருவிந்தம் வீசுகவண் கோமீன் விழும்போன்
வருவிந்தை காண்பாய் மகிழ்ந்து. (13)

எதியுடை வேட ரெரிக்கு மகிற்புகைதான்
வேதியர்கள் வேள்வி விரிபுகையின் மோதிவந்து
மால்வரையி னக்கிரம்போல் வானடுத்துச் செல்வதுகாண்
சேல்வரையுங் கண்ணாய் தெளிந்து. (14)

சிலைக்குறவர் காவல் செழித்த பறைகொண்
டலைக்குங் கடுவ னடிக்குங் கலைப்பிறையை
யெட்டிப் பிடித்தங் கியைந்து மறுத்துடைக்கு
மட்டிப்பெண் செய்கை மதி. (15)

நினைந்த வுடனமுத நேருந் திருவே
வினைந்தவொரு வேங்கை வயினிற் புனைந்த
கொடிச்சியர்கள் பாடல் குறித்தசுண நாடும்
படர்ச்சியது பாராய் பரிந்து. (16)

இந்திரகோ பம்போ விதழாய் மலையருவி
வந்தரம்பை மாதர் வினைந்தாடச் சிந்துங்
கலவைசெறி கற்பகப்பூக் கான்றகுங்கு மங்கள்
பலவும் பரிமளிக்கும் பார். (17)

அம்பொன் வரையினுச்சி யான்றகதி ரேன்றணுகச்
செம்பொன் முடிவரைக்குச் சேர்த்ததென விம்பவொளி
கொண்டதனைப் பாராய் கொடியிடையே யென்றுரைத்தான்
கண்டகரைப் போக்குங் கனன். (18)

Koviloor Digital Library

மடந்தையர்க்கு நாயகமே மன்னு மணிக்கல்
தொடர்ந்தயற்கண் வேயாற் சொரியும் படர்ந்தமணி
எக்கிளவாஞ் செக்க ரிடைவிளக்குந் தாரகைபோன்
மிக்கொளியைக் காட்டும் விரிந்து. (19)

நுண்டொளைசேர் வேய்போ னுனித்த குயின்மொழியாய்
கொண்டு மலர்விரியக் கொண்முருக்கு மண்டும்
பழுவத்தி னங்கி பரவியது போலக்
குழுவுற்றுக் காட்டுநமக் கு. (20)

விளைகொண்ட லைம்பால் விளங்கிழையாய் மூப்பின்
தளைகொண்ட நற்றவர்க்குத் தானே கிளைகொண்டு
குண்டிகையி னீரைக் கொடுக்குங் களபமதைக்
கண்டிகையி னேர்கரத்தாய் காண். (21)

வடுவனைய கண்ணாய் வளர்மூப் படுக்க
விடுகிவரு கண்முனிவர்க் கேற்ற கடுவன்
கழிகாட்டு மாண்பாக் கசிந்தடுத்து வாலால்
வழிகாட்டுங் காண்பாய் மகிழ்ந்து. (22)

பாந்தட் படத்தைப் படுத்த பருநிதம்பத்
தேந்து மிடையா யினமயில்கள் வாய்ந்த
நெடுஞ்சிறையைக் கோலி நிகரோம குண்டம்
படுஞ்சிகையைப் பண்ணுமது பார். (23)

கார்மருவு மோதிக் கனங்குழையே நீதமுடன்
சீர்மருவு வேதியர்க்குச் சேரன்பின் னேரும்
சிலந்திதரு நூலதனைத் தேர்ந்தெடுத்து மந்தி
கலந்திதய மொத்தளிக்குங் காண். (24)

ஐவனத்தி னூன்ற வரிசி மலைமருவிச்
செய்வனத்தின் மூங்கிலிடை சேரரிசி மெய்வனத்தாற்
பொய்வணக்கு மையர் புரையிற் புகுந்தனது
கைவணத்த கிள்ளைதருங் காண். (25)

Koviloor Digital Library

தெரிவைமார்க் கெல்லாந் திருவே யினிய
பெரியமா வாழை பிலாதாந் தருகனியை
மந்திகொண்டு சந்த மறையோர்க் களிப்பதனைக்
கந்திகொண்ட கந்தரத்தாய் காண். (26)

வேழத்தை முற்ற விழுங்கு மலையரவு
கேழொத்த கற்றவரிற் கேடின்றித் தாழச்
சடையுடைய சென்னிவரர் தாங்கிமிதித் தேறப்
படியுடைய தாய்க்கிடத்தல் பார். (27)

வார்ந்த தவமுடித்த மாமறையோர்க் காமெனவே
நேர்ந்ததனி மோக்க நிலையடையச் சேர்ந்த
விசும்பதனைத் தூர்த்து வெயில்போல் விளங்கும்
பசும்பொனிடு மானமதைப் பார். (28)

கடுவை நடுவைத்துக் காட்டு மமுதாம்
வடிவை யுடையவிழி மானே யடியுடைய
மெய்நோகு மாப்பிடியை வேண்டி வருவேழம்
கைநோகா தாய்த்தாங்குங் காண். (29)

இனைய வகையான தேந்திழைக்குக் காட்டி
யனைய வரையி னருள்சேர் வினைமுடித்த
மாதவர்கள் போற்ற மகிழ்செய் விருந்தானன்
மாதவர்கை யேற்ற வலன். (30)

சீர்த்ததகை வானவனுஞ் செல்வத் துளபவரன்
போர்த்த பகையவுணர்ப் போக்கிமே லார்த்த
குடக்கால நேமியின்மேற் கொண்ட திகிரி
படத்தரணி சென்றான் பரிந்து. (31)

தானனுடறன்னிலடு சக்கரந்தாக் கச்சொரிந்த
தானமிகு சோரிசெக்கர் தன்னையொக்கும் வானவிந்து
தீயவன்றன் வாயினின்று தீந்து விழுந்தவெயி
ராயவென்று சொல்வா மறிந்து. (32)

Koviloor Digital Library

மந்தி கடுவன் மரங்க டமைநோக்குந்
தந்தி பிடியுந் தடநோக்கும் வந்து
சகுந்தங்க ணீளந் தமைநோக்கு மந்தி
புகுந்தங்க ணீளப் புனைந்து. (33)

முகிழ்த்தனவாஞ் சின்மலர்கள் மொய்த்த விதழ்கள்
நெகிழ்த்தனவாஞ் சின்மலர்க ணேயம் மகிழ்ச்சிதரு
மையன் விமலவனை யாமவர்க்குக் கண்களொடு
கையுங் கமலமெனக் காண். (34)

மாலைவந்து நீங்க மருங்கில்லா நங்கையொடு
வேலைவந்த சீமான் விழைவினொடுங் கோலிவந்து
தம்பிசெய்த சாலைதனிற் சார்ந்தான் தசரதனும்
நம்பிசெய்த நற்றவத்தா னன். (35)

நெடுங்கழையைத் துண்டா நிறுவி நிறைத்து
மொடுங்கலிலா வொண்முகடை யோச்சி இடுங்கலிலாக்
கைகள் விசித்துக் கனவரிச்சு மேல்விரித்துச்
செய்கைதரச் செய்தான் சிறந்து. (36)

தேக்கடையை மேலே செறிவு தரச்செய்து
பூக்கிளரு நாணலுடைப் புல்வேய்ந்து தூக்கியவேய்
சுற்றுசுவர் செய்து தொடுத்ததன்மேல் மண்பூசி
யெற்றுபுனல் தீற்றி யிசைத்து. (37)

வேறு முறைவிடமும் வேலடுத்த சேல்விழிக்குக்
கூறு முறைகுயிற்றிக் குங்குமத்தின் சேறுகொண்டு
மேன்மையுறச் செய்து விளங்கு மணிச்சுவரைப்
பான்மையுறச் செய்தான் பரிந்து. (38)

மென்மயிலின் பீலியினுல் மேற்கட்டி யுஞ்சேர்த்துத்
தொன்மைச் சுரிகையினுற் றூக்கரிந்து நன்மைப்
புதுமலர்த்தா யெங்கும் புனைந்தா னிராமன்
மதுமலர்த்தா டாங்கு மனன். (39)

Koviloor Digital Library

மேயநல்லோர் சிந்தனையு மேன்மையுறு மாமறையுந்
தூயகடல் வைகுந்தஞ் சொல்லலா மாயதம்பி
அன்பினொடு செய்த வமலப் பெருஞ்சாலை
யின்பினொடு சென்று னிறை. (40)

மேவிற் சிறந்தகடம் மேன்மைச் சனகிநறும்
பூவிற் சிறந்தவடி போந்தனவாந் தாவிலெம்பி
கையறுவுஞ் சாலை கருதி யமைத்தவென்று
லெய்தலரி தென்னு மெனக்கு. (41)

என்றெடுத்துப் போற்றி யிளையோன் றனைப்பார்த்துக்
குன்றெடுத்த தோளாய் குறித்தவிவை நன்றடுத்துக்
கற்றதுநன் றென்றான் கமலத் தடங்கண்ணீ
ருற்றதுநன் றன்பி னுவந்து. (42)

செல்வ மளித்த சிறந்தமன்ன னுணையினல்
நல்லறத்தை நாட்டி நலத்தாகும் பல்கும்
சுடரும் புகழுடுத்துச் சூடினே னென்று
மிடரும் புகவுனக்காக் கி. (43)

அந்தமொழி தன்னை யனக னியம்பமனம்
நொந்தவிளை யோனவனை நோக்கினன் முந்த
விடரினுக்கே யங்குரமின் றேன்றுவந்த தென்றான்
படரினுக்கே யானுன் பரிந்து. (44)

பின்னவனைப் பார்த்துப் பெரியோ னுரைசெய்வான்
மன்னவனை செல்வம் வரம்புண்டு நன்னயமாய்
ஏதமற்ற வின்ப மியையு மிவைபின்னு
னூதியத்தா மென்று னுவந்து. (45)

தேவர் விரும்பத் திருத்தம் பியைநோக்கி
மூவர்தர வள்ளல் மொழிந்திருந்தான் மேவுதவத்
தாற்றினுற்ற மாமுனிவ னுணையினுந் தூதுவர்கள்
கூற்றினுற்ற சொல்வாங் குறித்து. (46)

சித்திரகூடப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

பள்ளியடைப் படலம்.

பொருவிலவாந் தூதுவர்கள் பொய்யில்லார் போனார்
இரவு பகலாக வேகிப் பரதனுற்ற
கோயிலவர் சென்றார் குறிக்குந் தமவரவை
வாயிலவர் கேட்க வரைந்து. (1)

தூதரவர் சேர்ந்தாரை சொல்லோ டெனமொழியக்
காதரவாஞ் சிந்தை களித்தவுட னாதரவாய்ப்
புக்கவர்கள் போற்றப் பொருவி லருட்டந்தை
மிக்கவனே வென்றான் விழைந்து. (2)

வலியனெனக் கூற மகிழ்ந்தா னிராமன்
தலைமைதனைச் சாற்றவெனத் தாங்கு நிலைமைகொண்ட
செல்வத்த னமென்னச் சேர்ந்தகர முச்சிவைத்தான்
மல்வைத்த தோளான் மதித்து. (3)

உற்றநிலை கேட்டுவந்தா னுற்றருடன் கொற்றவன்றன்
வெற்றிநிலை யோலையிது வென்றுரைத்தார் நற்றவத்தான்
வாங்கிப் படித்தணிந்தான் வந்தடுத்த தூதுவர்க்குத்
தாங்குநிதி கோடியளித் தான். (4)

புன்னகையுந் தோன்றப் புளக முடல்போர்ப்பக்
கன்னகையுந் தோளான் கருத்துவந்தான் றென்னதெனப்
பாணிவரும் வண்டு பரிந்துழுதார் முன்னவனைக்
காணவரு மென்று களித்து. (5)

எழுகவளச் சேனையென வேவினு னேவித்
தொழுதுநலக் கேகயர்கோன் சொல்லிற் றழுவிரதந்
தம்பியொடு சென்றான் தனிப்பொழுது நாள்குறியான்
நம்பிதனைக் காண நயந்து. (6)

Koviloor Digital Library

கொடிநெருங்கத் தொங்கல் குழும நிலவும்
வடிநெடுங்கண் மங்கையர்கள் வந்தார் பிடிநெருங்கப்
பூணொளிகள் செய்த புகழ்சேர் கனருசியு
நாணொடுவான் மேவ நயந்து. (7)

பண்டியங்க ளெங்கும் பரந்த பலவியங்கள் [பும்
கொண்டியம்புங் கொண்டலெனக் கோதைதனில் வண்டியம்
வாளியெண்ணி வாவிவரும் வாசி கலித்துவரும்
தூளிவிண்ணிற் செல்லத் தொடர்ந்து. (8)

வில்லெடுத்த வீரர் விளங்குகர வாளரொடு
மல்லெடுத்த தோளர் மகிழ்ந்துவரச் சொல்லடுக்குங்
குந்தங்கை கொண்டடுத்த கொற்றவர்க ணற்றவர்கள்
வந்தங்கு சூழ்ந்தார் மருங்கு. (9)

எறியும் பகட்டினங்க ளேறுழுத லேற்ற
குறிகொள்ளுங் கோழி குறும்பூழ் பொறிமயிர்கொள்
புள்ளிக் கவுதாரி போற்றி வருமாக்கள்
உள்ளிக் கலந்தா ருகந்து. (10)

ஊறுகொண்ட மாமுரசி னோசை யதனைமிக
வீறுகொண்ட வேதியர்தம் வேதவொலி ஏறுகொண்ட
மல்ல ரிடிப்பதனை மாறுகொண்ட நேரணவும்
சொல்லரிய வந்திகரேத் து. (11)

ஆறுமகன் கானு மமித மலைகடந்தே
யேறுபக லேழுசெல வெந்திரத்தி னூறிவரு
பாகு மடையுடைத்துப் பாயும்வயற் கோசலையாம்
நாகுமடை நாடுநண்ணி னான். (12)

ஏர்துறந்த பண்ணை யிளமைந்தர் தோள்துறந்த
தார்சிறந்த தண்டலைநெற் றூங்கிவரு நீர்துறந்த
தாமரையை நீத்ததெனத் தண்பழ கயச்செல்வி
சீர்மருவும் பார்நீத்த தே. (13)

Koviloor Digital Library

பிதிர்ந்துவரு சாறு பெருந்துரையின் மண்டச்
சிதர்ந்துசிந்தித் தேங்கனிகள் சேர்ந்த முதிர்ந்துகொய்யும்
மாந்தர்களில் லாத வறுமையினுல் முக்குமிழ்த்துக்
காய்ந்தலர்ந்த மாமலர் தண்கா. (14)

ஏய்ந்துவரு கால மிதுவாமென் றெண்ணியடுத்
தாய்ந்தறியு மள்ள ரறிதுறலாற் பாய்ந்தநறுஞ்
சூதத்தாந் தேறலது தோய்ந்ததனுற் சாய்ந்தொசிந்து
கோதற்றுஞ் சாலிமுளைக் கும். (15)

ஓதுகின்ற கிள்ளை யொடுங்கியவா மோதியர்கள்
தூதுசென்று வந்திலவாந் தோழரிடம் மோதுகின்ற
மின்னணியும் பேரி விழாவடுத்து வந்திலவாம்
பொன்னணியும் வீதி புனைந்து. (16)

பாடலது நீத்தனவாம் பண்டொடரும் பண்குழல்கள்
ஆடலது நீத்த வரங்குபுனல் சூடலில்லை
சூடிகையும் சூளிகையும் தொன்மாடம் நீத்தனவாம்
ஆடிவரு மங்கலவள் ளை. (17)

நகையிழந்த வாண்முகங்கள் நாறு மகிலின்
புகையிழந்த மாளிகையும் பொன்றீச் சிகையிழந்த
தீவிகையுந் தேமலரின் சேருந் தொகையிழந்த
பாவையர்கள் பூமலரைம் பால். (18)

அலர்ந்துவரு பைங்கூ ழகன்குளத்தின் கீழாய்
மலர்ந்துவரு வாய்நீர் வழங்கா துலர்ந்த
துரிசினரு லோபர் துயர்வாயி னிற்கும்
பரிசிலரா மென்னப் பரிந்து. (19)

நல்வளங்கள் கொண்டதிரு நாடு பொலிவிழந்த
பல்வளங்க ளல்கும் பனிமலர்சேர் செல்வியெழிற்
றேவியுட னித்தடருஞ் சேணெறியிற் சென்றதனு
லாவியுட னித்ததென லாம். (20)

Koviloor Digital Library

என்றடுத்த நாட்டை யிடருழந்து நோக்கியடுத்
தொன்றடுத்த செய்கை யுணராதா னின்றடுத்துக்
கேட்பதுவுந் தீங்கெனவே கேடில்லான் சென்றனனன்
ஞட்பதுமை நீங்கு நகர். (21)

மீண்டவழி யெய்தினன் மெய்யென்று நல்லணியைப்
பூண்டவர சன்மைந்தன் புந்திதான் தூண்டிவரு
தேரணியின் முந்திவரச் சென்றான் சனங்களுறு
பேரணியின் முந்திப் பெயர்ந்து. (22)

அண்டமுற்றுஞ் சென்று யயர்ந்தா யமுததனை [ந்து
யுண்டபின்னர்ப் போதியென வொண்கதிரை விண்டொடர்
கைகாட்டிக் கூப்பிடலாய்க் காணான் கொடிக்கானம்
நெய்காட்டும் வேலா னிமிர்ந்து. (23)

ஈட்ட மொடுபுகழ்க்கே ஈட்டு பொருளெல்லாம்
வேட்டவர்கள் கொண்மின் விரைந்தென்னக் கோட்டியரைக்
கூவுமொலி போலக் குமுறி வருமுரசின்
மேவுமொலி கேளான் விழைந்து. (24)

கள்ளை யறுகால் கவர்கண்ணி யான்காணான்
பிள்ளை யறுகு பிடியீட்டம் வெள்ள
நிதிமருவப் பாடகர்கள் நேர்ந்தடுத்துச் செல்லும்
துதிமருவுஞ் சீரைத் தொடர்ந்து. (25)

காவல் புரிமன்னன் கான்முளையுங் கண்டிலனால்
ஆவினொடு யானை யடர்நிதியும் கோவுடைய
மாசுரர்கொண் டாட மகிழும் பெருமைகொண்ட
பூசுரர்கொண் டாடும் புகழ். (26)

சூழமைந்த தான சுரும்பு நரம்புந்த
மேழமைந்த கான மிசையாவாம் மாழையுண்கண்
மாமயிலாஞ் சாயல் வனிதையர்கள் கூந்தலெனக்
காமர் பொருநர்குழாங் கள். (27)

Koviloor Digital Library

தேரும் களிமாச் சிவிகை யொடுபண்டி
யூரும் களியா ரொருவரின்றி நேரும்
எழிலழிந்த வீதி யிலங்குநீ ரில்லா
தழியுமண லாற்றைநிக ராம். (28)

அன்னதன்மை யாகு மகனகரை நோக்கினன்
என்னதன்மை யாகு மிவைகாணின் மன்னதன்மை
மாநகரா மென்ன வழங்குமிளை யோயென்றான்
வானகரார் போற்றும் வரன். (29)

வேற்றடங்க லாரையட்டு விண்ணடைய வென்றுவரு
கூற்றடங்கச் சீறுநெடுந் தோளுடையாய் சேற்றடங்கண்
மாமாது நீங்க வளமில்லாப் பாற்கடலை
யாமாது நீணகரென் றான். (30)

குருமணிப்பூண் மன்னரிளங் கோளரியு நோக்கி
யிருமணிக்கை சேர விறைஞ்சி யொருவகைத்தோ
விம்மா நகர்த்திருமா தேகினு ளென்றுரைத்தான்
செம்மாறு வேலான் றிகைத்து. (31)

அனையதொரு வேலை யகன்றோ ரணைத்தா
மனையினெடு வீதிவிட்டு மன்னன் றனையனுடன்
சிந்தைகொண்ட வெந்துயராற் றேரான் வருந்திமகிழ்
தந்தைகொண்ட நல்லிடஞ்சார்ந் தான். (32)

விருப்பினெய்தி வேந்தன் விரும்பி விளங்கு
மிருப்பிடங்க டேடி யெதிரா னருப்பமன்றி
தென்றுபய மன்றடைந்தா னெப்பொருப்பு நாணவலி
துன்றுபுய நன்றுபடைத் தோன். (33)

ஆயவரத் தானதுல வையன் றனைநாடித்
தூயவரத் தாதொழச்செல் தோன்றலையே கூயளன்னை
ஈண்டுவர வென்றிசைத்தா ளேயடுத்த தோய்கயற்கண்
பூண்டவரைத் தோளி புகழ்ந்து. (34)

Koviloor Digital Library

வந்துதிருத் தாய்சரணம் மைந்தன் வணங்கவுடன்
சிந்தைதிருந் தத்தழுவித் தீதிலர்கொ லெந்தையன்னை
யெங்கையர்க ளென்றா ளினனுமவை யாமென்றான்
மங்கையவள் கொண்டாள் மகிழ். (35)

மூண்டெழுந்த காதல் முளரிப் பதம் பணிய
வீண்டெழுந்தே னுள்ள மிரிந்தேங்கு மாண்ட
மணித்திரண்ட தோளுடைய மன்னவனைக் காணேன்
பணித்திரென்றான் றாளிற் பணிந்து. (36)

ஆனவுரை கேட்ட வழிவில்லாச் சிந்தையினா
டானவரை வாட்டுந் தனிமன்னன் வானுலகந்
தேவர்தொழச் சென்றான் றியங்கா திருவென்றா
டாவமெனுஞ் சொல்லாற் றகைந்து. (37)

எறிந்தனவாஞ் சொற்செவியி னேறாத முன்னம்
மறிந்தனவாய் வீழ்ந்தான் மகியிற் செறிந்த
வசனித் தலையி னடுத்தமலை யானான்
வசனித் தலையு மறந்து. (38)

வாயொளியு மாழ்க மலர்ந்த மரைமலரே
யாயொளிய கண்க ளருவிதரத் தீயொளிபோற்
காதிற்காய் கின்ற கடுவுரையை நீயலது
மோதற்கா ரென்றா னுறுத்து. (39)

எழுந்தா னிரங்கினா னேங்கினான் பின்னும்
விழுந்தா னுயிர்த்தான் வெதும்பி யழிந்தான்
அரற்றினா னென்றோ வரசன் றவத்தின்
தரத்தினாற் றந்தபர தன். (40)

அறந்தனைவோர் போக்கி யருளை யழித்துச்
சிறந்த வளி மாற்றித் தேசு மிறந்திறைவ
நீதி மறந்தனையே நேயத்தா யென்றரற்றும்
ஓதிமறந் தோங்கி யுழைத்து. (41)

Koviloor Digital Library

முன்னோர்கள் செய்கை முதலாம் பழங்கதையைப்
பின்னே புதிதாக்கும் பேரறிவான் மன்னருஞ்
சித்திரவில் வீரன் சிவதனுசை யேன்றொடித்த
புத்திரனை விட்டதுமன் போ. (42)

செவ்வழியிற் சேர்க்குந் திகிரியுடை மன்னவனே
எவ்வழியும் போற்று மிரவலர்க ளிவ்வழியி
னில்லைவர வென்றுமதித் தேகினையோ தேவுலகின்
வல்லவரங் குண்டோ வழங்கு. (43)

பற்பகலா நீழல் பரந்த கவிகைநிற்கும்
நிற்பனவாம் பல்லுயிரு நீமனதிற் கற்பகத்தாம்
நீழலிடைக் காதல் நினைத்தனையே பூவுலகின்
வாழலிடைக் காதல் மறந்து. (44)

இம்பரிரிந் தேகினையே யேற்றுவரு சார்பிழந்த
வும்பரிரிந் துன்னிடத்தி னோதினரோ வம்பரி
சம்பரன்போற் றானவரைச் சாய்த்ததுவெற்றி நாட்டுதுமென்
றம்பரம்போய்ச் சேர்ந்தா யயர்ந்து. (45)

ஏழுயர்ந்த யானை யிறைவவிவ னில்லாது
பாழியந்தோள் வீர பரிவுடனே ஆழிதனை
நின்மகற்குச் சேர்க்க நினைந்து புரிந்ததிதோ
மன்மகர்க்குண் மேலோய் வழங்கு. (46)

பற்றுடைய நற்றவத்திற் பான்மைபெறு மேன்மகற்கு
முற்றுடைய வெற்றி முழுதெய்துங் கொற்ற
முடிமணத்தைக் காணு முறைபெற் றிலையால்
படிமணக்குஞ் செல்வா பரிந்து. (47)

ஆற்றலனு யின்னபன்னி யன்பி னொடுகண்ணீர்
உளற்றெடுத்த கண்ணு னுருகியவன் தேற்றும்
பரிசிலையாய் நின்று பரிந்தன்பி னோடு
வரிசிலையான் நன்றுமொழி வான். (48)

Koviloor Digital Library

எந்தையன்னை யெம்பிரா னென்முன்னோ னென்றெடுத்த
சிந்தைமன்னி ராமனெனத் தேர்ந்தருள்சேர் வந்தனையை
யன்னவன்பால் வைத்தாலன் றாகு மனக்கின்ப
மென்னவன்பாற் சென்றா னெழுந்து. (49)

அவ்வுரையைக் கேட்டா ளசனி யெனக்கொடிய
வெவ்வுரையை மீட்டும் விளம்புவாள் தெவ்விடையான்
மானத்தான் மிக்கதம்பி மங்கை யவளோடுங்
கானத்தா னென்றாள் கதித்து. (50)

வனத்தா னவனென்ற மாற்றமதைக் கேட்டு
நினைத்தா னெருப்புண்டா னென்ன வினைத்தானம்
என்னவினை வின்னம் எனைத்துளயான் கேட்பதென்றான்
தன்னனையான் தம்பிபர தன். (51)

ஆங்கழலாம் வெம்மை யடைந்தா னனகனருள்
பூங்கழலான் கானம் புகுந்ததுவுந் தீங்கிழைத்தோ
தெய்வமது சீறியோ தேறும் விதிதானோ
மெய்வரைவீ ரென்றான் விரைந்து. (52)

தீயடுத்த செய்கையண்ணல் செய்யி னவையெல்லாம்
தாயடுத்த செய்கை தலத்தினுக்கே போயடுத்தல்
தாதைசென்ற பின்னோதன் றாதை செலுமுன்னோ
வோதவென்றான் சிந்தை யுலைந்து. (53)

குருக்க டமையிகழ்ந்த குற்றத்தா லன்று
செருக்கினன்று தெய்வச் செயலன் றருக்கனிகர்
கோமகனுங் காணக் குறித்த செயலாலே
யாமகனுங் காணும் வனம். (54)

குற்றமொன்று மில்லை கொதித்துமிக வேறுள்ளார்
செற்றதொன்று மில்லைதெய்வஞ் சீறியன்றேற் பெற்ற
தவனிருக்கப் பிள்ளை தனிச்சென்ற தென்னை
யவனிருக்கா தென்னை யணித்து. (55)

Koviloor Digital Library

வாக்கினுற் பேரும் வரங்கொண்டு மைந்தனைக்கான்
போக்கினேன் பாருன் புரத்தாக்கிக் காக்குமன்னன்
அன்னபொருக் காமையினு லன்றே யுவனைசென்று
னின்னபொரு ளென்று ளெடுத்து. (56)

சூடு மலர்க்கரங்கள் சொல்லுதற்கு முன்செவியிற்
கூடும் புருவங் குதித்துநின்றே யாடும்
உயிர்ப்படைந்த வொண்புலிங்க மோங்குதிரங் கண்ணுச்
செயிர்ப்படைந்த சிந்தை தெரிந்து. (57)

துடித்த கபோலஞ் சுடர்தீப் பொடித்த
மடித்தவாய் வான மழைக்கை யடித்தனவா
மொன்ருேடு மொன்றசனி யோடி வெருக்கொள்ள
நின்ருேடு குன்றை நிகர்த்து. (58)

அஞ்சினரா மண்டர் அவுணர்களு மச்சத்தாற்
துஞ்சினராந் திக்கயங்கள் சோர்ந்தனவாய் வெஞ்சினங்கொள்
கூற்றத்தைக் கண்டு குலவுமுயிர் போற்பரதன்
சீற்றத்தைக் கண்டு திகைத்து. (59)

கொடியகடுங் கோபத்தாற் கோளரிபோற் சீறிக்
கடியவடா யென்று கருதான் நெடியோன்
முனியுமென வெண்ணி முனிந்தா னவளைத்
துனியுமனற் சொல்லாற் ருெடர்ந்து. (60)

மாண்டனனு மெந்தை மகனுந் தவவேடம்
பூண்டனனு முந்தன் புணர்ப்பினென்னிற் கீண்டிலன்வாய்
கேட்டுநின்றேன் யானே இளரரசு மாள்வதற்கு
வேட்டுநின்ற போல விரைந்து. (61)

நீயின்ன நேர்ந்திருந்தாய் நின்றேனு னின்னையின்னே
ஏயென்னு மாத்திரையி னெற்றகிலேன் தாயென்னும்
சொற்றடுத்த துண்டோ துணைவன் முனியுமென்றல்
முற்றடுத்த தென்ருன் முனிந்து. (62)

Koviloor Digital Library

மாளவுளன் மன்னன் மதியிலிநின் வாய்க்கடுவால்
மீளவுளன் கானம் விறன்மைந்தன் ஆளவுளன்
வஞ்சப் பரதன் மகியென்றால் மன்னறந்தான்
எஞ்சப் படற்குவழக் கென். (63)

சுழியுடைத்தாம் தாய்கொடிய சூழ்ச்சியாற் காட்சி
வழியுடைத்தாம் மன்மரபை மாய்த்துப் பழியுடைத்தாய்
ஆக்கப் பரத னடுத்தா னெனுங்கடுஞ்சொல்
ஏற்கப் படுத லெனக்கு. (64)

நோயீரு மல்லீரே நுங்கணவன் சீவனுண்டீர்
பேயீரே நீரிருக்கப் பெற்றீரே மாயீராய்
வன்பழியைத் தந்தீர் வலிய தனந்தந்தீர்
என்பழியைத் தாரீ ரினி. (65)

ஒன்றும்பொய் யாத வரவோ னுயிர்மடுத்துத்
தின்றும்பொய் யான திருவெய்தி யென்றுநீர்
வாழ்வுவந்த தென்றுவந்தீர் மன்னேகப் பின்னடையுந்
தாழ்வுவந்த தென்றறியீர் தான். (66)

இறந்தான் வரந்தந்தா னீந்ததென வெண்ணி
யறந்தானென் றண்ண லரசைத் துறந்தான்பின்
தாயுடைய சூழ்ச்சியினுற் றம்பியடைந் தானென்று
லாயுடைய தன்றே யறம். (67)

தந்தைதனை மாளத் தடுத்து வசைகொண்டாள்
மைந்தனிவ னென்று மதிந்தனரோ சிந்தையன்றேல்
மீளுமன்றே யென்னையுடன் மெய்யே யுலகமினி
யாளுமென்றே சென்று னறன். (68)

தாதா குலமன்னன் றன்னுணர்வை யென்னுரைப்பேன்
யாதானு மாக வினையாள்வான் தீதான
சிந்தைசெய்தா னன்றோ திருத்தாய்செய் தீமையினல்
வந்தசெய லென்றான் மருண்டு. (69)

Koviloor Digital Library

உய்ந்துகொண்டே னின்ன முடன்வந்தான் புல்லடகு
சிந்தைகொண்டு கல்லுந் திறங்கண்டும் புந்திகொண்டு
வெய்யோனு னின்சாலி வெண்சோ றமுதமென
நெய்யோடு முண்பே னினைந்து. (70)

வில்லாருந் தோளான் விரைந்தான்கான் மெய்யரசன்
நில்லாது சென்று னினைப்பிலனைக் கொல்லாதேன்
மாயேன் பழியுந்தி மாழ்கினே னென்பதனை
யாயே னழுகின்றேன் யான். (71)

பாரோருங் கொள்ளார் பரந்தபழி யான்பூணேன்
தீராத விவ்வூர்த் திருநில்லாள் யாரோடு
மெண்ணிமுடித் தாயிதனை யேய்ந்த பழியதனை
நண்ணிமுடித் தேனடுத்து நான். (72)

கொன்றேனு னெந்தையையுங் கோனைக் கொலைவாயா
லொன்றேகா னுய்த்தே னுலகாள்வா னின்றேனுன்
நின்பிழையு முண்டோ நினைப்பில் பழியடைதற்
கென்பிழையுண் டென்று னெடுத்து. (73)

கண்ணாலென் செய்பிழையைக் காணுஞ் சிலபேர்கள்
மண்ணோரென் னும்பழியை வந்தடைந்தா யுண்ணாத
நஞ்சங்கொல் லாதென்று நம்பி யுயிரடைந்தேன்
எஞ்சுங்கொ லில்லை யெனின். (74)

ஏன்றுகும் பாவிவயி ரேற்ற பழிதீரச்
சான்றுகுஞ் சார்ந்தவறந் தான்ஞால மூன்றுக
நல்லதவஞ் செய்து நலமடைவ தல்லாது
வல்லதுவும் வேறுகு மா. (75)

சிறந்தார் தெளிந்தவுரை செப்பினேன் செய்கை
மறந்தாய் மதியில்லாய் மாண்டு துறந்தாயேற்
றூயவனு மாதியினித் தொல்லுயிரைப் போக்கலன்றி
யாயவழி வேறென்னை யாம். (76)

Koviloor Digital Library

இன்ன வியம்பி யினிமேலி யானுமிந்தப்
பன்னு கொடும்பாவி பக்கலிறேன் துன்னுந்
துயர்பறிக்கும் கோசலையா பேய மலரா
முயர்பதத்தைச் சேர்வே னுவந்து. (77)

ஆண்டகையுங் கோசலைதா ளண்டிப் பணிந்தடுத்து
மீண்டும் படிகிழிய வீழ்ந்துகிளர் காண்டகுசீர்
கையாற் கமலநிகர் கான்மலரைத் தாங்கிநின்று
நையாப் புலம்பும் நலிந்து. (78)

எந்தையெங்கே யெவ்வுலகா னெம்முன் னிருப்பதெங்கே
வந்ததிங்கே காணும் வகையிவையோ சிந்தைகொண்ட
வெந்துயரைத் தீர்த்திரென வேண்டி விழுந்தேங்குங்
கந்துயருந் தோளான் கரைந்து. (79)

அடித்தலத்தைக் காணே னரசன் றனையான்
படித்தலத்தைக் காக்கும் பரனைப் பிடித்திலிரா
லென்னவகை செய்திர்க ளென்று புரண்டழுதான்
மன்னவர்கண் மன்னன் மகன். (80)

கொடியவர்கள் சேருங் குலங்கண் முடிய
நொடியவணிற் செய்வே னுவன்றென் கடியவளாந்
தாய்வயிற்றின் வந்த தரமில்லாக் கள்வனியான்
ஆய்வடுக்கின் வீவடுத்த தாம். (81)

இரதமொன்று மூர்ந்தே யிருட்பிழம்பை நீக்கும்
வரதனென்று வான்குலந்தான் மற்றும் பரதனென்று
மோர்பழியாற் காய்ந்ததெனு முற்ற மரகதத்தின்
சார்பொழியாக் காந்திபடைத் தான். (82)

வாட்டானை மன்னனுயர் வானுலகு சென்றிடவும்
நாட்டானை வீர னடக்கவுங்கான் கேட்டானி
நைவதே யென்னு நடந்தசெயல் நன்றென்னுஞ்
செய்வதே தென்னுந் தெரிந்து. (83)

Koviloor Digital Library

புலம்புற்ற வீரன் புலர்வுதனை நோக்கிக்
குலங்கற்பார் கோசலையுங் கூர்ந்த நிலம்பற்றி
யாற்றுஞ் செயல்புரியா னன்புடையா னென்றெடுத்துச்
சாற்றுஞ் செயலிற் றளர்ந்து. (84)

மையற்ற நன்மனதான் மாசடையாத் தேசுடையான்
செய்யுற்ற நன்மையனென் சிந்தையினுள் கைகயர்கோ
மான்மகள்செய் வஞ்சகத்தை மற்று மறிந்திலனீ
தான்மகனே யென்று டளர்ந்து. (85)

தாளுற்ற பொற்குரிசில் தாய்சொல்லைக் கேட்டவுடன்
கோளுற்று விம்மிக் குமுறியே நாளுற்ற
நல்லவறஞ் சோர நடுங்கவரு நாவதனல்
சொல்லவருங் கட்டுரையைச் சோர்ந்து. (86)

அறங்கெடுக்கும் பாவி யருளில்லா நெஞ்சன்
பிறங்கடைக்குத் தீங்குபுரி பேயன் மறங்கெடுத்து
மன்னுயிரைக் கொன்றடர்த்து மாதவரை வாட்டுமவன்
தன்னரக மென்னரகந் தான். (87)

குரவரையும் பெண்களையும் கொன்றுள்ளோன் வாளிற்
புரவலன்பொன் வாரும் புரையன் விரவலர்கள்
வென்விழிக்க மீண்டோன் விதியி லிரவலர்க்குத்
துன்பிழைத்தோன் சேர்கதியெய் தும். (88)

தழைத்த துளவோன் தலைவனல்ல வென்று
மழைத்தோ னறத்தினன்பை யாற்றுன் பிழைப்பில்லா
மாமறையைப் பேணு மடவோன் மருள்பொய்யைத்
தாமறையுஞ் சிந்தைச் சடன். (89)

தாய்பசியாற் றள்ளாடத் தன்வயிற்றி னுக்குமந்தத்
தீயவனு நாயகற்குத் தீங்குவரப் போயவனும்
செல்லுநர கென்னதுவாஞ் சீதா பதியிடத்தி
னெல்லுமனம் பொல்லாங் குறின். (90)

Koviloor Digital Library

தாளடையுந் தீனர்களைத் தாங்கான் றனக்கென்றுங்
கோளடையு மென்று கொடுத்தோனு நாளும்
அறமறந்தோன் சேரு மரிய நரகிற்
றிறமறந்து சேர்வேன் றிகைத்து. (91)

பொய்ச்சாட்சி சொல்பவனும் போர்க்கஞ்சிச் செல்பவனும்
கைச்சா ரடைக்கலத்தைக் காவானு மெய்த்திடத்திற்
சேர்ந்துதுயர் செய்வானுஞ் சேரு நரகினிடை
நேர்ந்துதுய ராவே னிலைத்து. (92)

அந்தணர்க ளில்லை யனலிக்குத் தந்தமடன்
மந்தணமில் மைந்தரைக்கொல் வான்புலைய னிந்தனைதான்
தேவர்கட்குச் செய்தோன் செறியு நரகிடையான்
பாவர்கட்கு முன்னிற் பவன். (93)

கன்றொடுங்கப் பாலைக் கறந்தோன் பிறர்பொருளை
மன்றொடுங்கத் தான்மறைத்த மட்டியஞ்ஞன் நன்றி
தனைமறந்த சிந்தைத் தரக்கேட ராய்நல்
வினைமறந்தோர் சேரிடஞ்சேர் வேன். (94)

ஆறலைக்கா தாகிவரு மஞ்சொலிள வஞ்சியரை
உளறலைக்கத் தன்னுயிர்கொண் டோடுமடன் சோறும்
அயலோர் பசிக்க வருந்து மடவோன்
இயலாங் கதியென்ன தே. (95)

எஃகெறியும் யுத்தமுகத் தேற்றுவரு தெவ்வருக்கே
யொஃகி யுயிரை யுவந்துண்போ னஃகலிலாத்
தன்மநெறி யாக்கியான் தன்பொருளை வெஃகுமன்னன்
புன்மைநர கெற்காம் புகல். (96)

அழியு மரசியலை யாகுமென வெண்ணி
யிழியு மொருதொழிலை யெய்தி வழிவந்த
தன்மத்தை விட்டுத் தவறும் பதகன்சேர்
வன்மத்தைக் கொள்நரகா வாம். (97)

Koviloor Digital Library

கன்னிதனை நோக்குங் கசடன் கருதுகுருப்
பன்னிதனை நோக்கும் பதகனுடன் பொன்னைக்
களவுசெய்தோ னென்னக் கருது மிவர்கட்
களவுசெய்த கும்பியெனக் காம். (98)

ஊணல்லா வூனை யொருநா யெனவுண்டோன்
ஆணல்ல பெண்ணல்ல வார்கொலென நாணன்
நரகமுள வென்றடுத்த நல்லுணர்வைப் பேணு
விரகமுளன் செல்வழிசெல் வேன். (99)

மறுவிலையார் தம்குலத்தை மாசடையச் செய்தோன்
சிறுவிலையோர் தம்முணவைச் சிந்துங் குறிய
னயலார்கா நீர்வரவே யான்றபத நுங்குஞ்
செயலானுர் கும்பியென்ன தே. (100)

வில்லுடனே வாளின் விரிந்த தொழிலதனைப்
புல்லுடனே போக்கிப் பொறியுடலை எல்லுடனே
சில்பகலே யோம்புவான் சீறுஞ் செருநருறு
மில்லினிடை யேற்கவென்கை யே. (101)

எற்றவர்கட் கோர்பொருளை யெண்ணியுள தில்லையென
மாற்றவரா னுகி வரம்பிலகா ளாற்ற
வுழற்றுமோ ராதனெய்த லுற்ற தரத்தி
னழற்றுமோர் மாநரகெற் காம். (102)

பிணிக்கிடமாம் பேருடலைப் பேணிச் செறுநர்த்
துணிக்கும் வயிரவா டேக்கி மணிக்குகிகர்
புன்னகையார் கண்முன் பொருந்திப் பகையுடையர்
தன்னடியிற் ருழ்க தலை. (103)

கரும்பலருஞ் செங்கெற் கழனி யுடைநா
டரும்பகைவர் கொள்ள வழிந்தே விரும்பலர்முன்
நீண்டதளைக் காவினொடு நின்றவர்கண் முன்னடுத்து
வேண்டுதலைச் செய்க விரைந்து. (104)

Koviloor Digital Library

கொடியாள் செயலைக் குறித்தறியி னுயேன்
படியார் கொ ணன்னெறியைப் பார்க்கும் வடிவுடைய
தூயவர்க்குத் துன்பிழைத்த தோமுடையர் தோன்றுகதி
யாயவர்க்கு முன்னடுக்க யான். (105)

தூயதொரு வாசகங்கள் சொல்லுந் துகளிலனைத்
தீயதொரு கானந் திருவுடனே போயசெம்மல்
வந்துகண்டான் போல மலர்க்கண்ணி னீர்பொழிந்தா
ளிந்துகண்டாள் காந்த மென. (106)

செம்மைமனத் தண்ண றெளிவுடைய செய்கையையு
மம்மைமனத் தீயு மறிவித்தாள் கொம்மைமாகில்
பால்கரக்க விம்மிப் பரிந்தழுது தேம்பினுள்
வேல்கரக்குங் கண்ணுள் விழைந்து. (107)

முன்னையர்க ளின்குலத்து'மூதறிஞ ராயவர்க
ளின்னையெவர் நேர்வார் நிகரில்லாய் மன்னர்மன்ன
வாவென்று வாழ்த்தினுள் வள்ளல் குணமருவுங்
கோவென்ற மன்னன் குணி. (108)

உன்னவுன்ன நைந்தே யுருகும் கருணைபொழி
யன்னைசரண் வீழ்ந்திளைய வண்ணலுமுன் சொன்னபடி
போற்றினு னந்தப் பொழுதி னவர்துயரை
மாற்றினுன் வந்தமுனி வன். (109)

வந்தமுனி தாளிணையின் வள்ள லுடனேவீழ்ந்
தெந்தைதனைக் காணே னியம்புமென நொந்தவனு
மாழ்கினுன் றன்னை மறந்துவரு கண்ணீரின்
மூழ்கினுன் சிந்தை முதிர்ந்து. (110)

உறுதியெய்து மைந்த வுனதுசெய்ய தந்தை
யிறுதியெய்தி நாளே ழிரண்டாஞ் சிறுவர்செயுஞ்
செய்கையது செய்தியெனத் தேர்ந்துரைத்தான் மாதவத்தா
லுய்கையது செய்வோ னுவந்து. (111)

Koviloor Digital Library

அன்னான்றன் தாயி னடியிறைஞ்சி யன்புடனே
பொன்னார் சடைப்புனிதன் போந்திடப்போய்த் தன்னைத்
திறப்படியே யாக்குந் திருவ னுருவாம்
அறப்படிவம் நோக்கும் அயர்ந்து. (112)

மண்ணின் விழுந்தான் மயங்கி யறிவிழந்தான்
அண்ண லவனிதனை யாளரசன் எண்ணையுண்ட
பொன்னெழிலார் மேனிதனைப் போற்றுகண்ணீ ராற்கழுவி
இன்னெழிலைச் செய்தா னியைந்து. (113)

பற்றுதலாய் முற்றும் பரிவினொடு வாங்கினார்
சுற்று மறையோர் தொடர்ந்தடுத்தார் கொற்றமிகு
மண்கனைகள் கோடமுடன் வைத்தார் விமானமிசை
கண்கனைநீர் கொள்ளக் கரைந்து. (114)

கரைசெய்யும் வேலை கடுக்கு நகரார்
உரைசெய் யுயிரொடுங்க வோய்ந்தே யரசவெள்ளஞ்
சூழ்ந்தழுது கைதொழவே தொல்யானை யேற்றிவந்தார்
வாழ்ந்தவர மன்னை மதித்து. (115)

உந்துதடந் தேர்வலவ னோடும் பெருந்திறல்சேர்
மந்திரியர் தந்திரியர் மற்றுள்ளோர் சிந்தைநொந்து
மன்னவனைச் சூழ்ந்தார் மருண்டு மனமழிந்தார்
முன்னவனைச் சூழ்ந்த முறை. (116)

சங்குமுதற் பேரி தழுவுகின்ற சின்னமுடன்
எங்குமுரன் றேங்கி யிரங்குவன மங்குலணி
விண்புடைத்த மாடநகர் மேவு மகளிர்மலர்க்
கண்புடைத்துச் சோர்வதொக்கும் காண். (117)

மாவுடனே யானை வயங்குதிருத் தேர்களொடு
கோவுடனே நான்மறையோர் கூடிவரத் தேவியர்கள்
சார்ந்துவரக் கொண்டு சரயுநதி வந்தடைந்தார்
சேர்ந்துவரு மேலோர் தெளிந்து. (118)

Koviloor Digital Library

எய்திவரு நூலுள்ளோ ரேற்று மொழிந்தபடி
செய்தீக் கலந்திருத்திச் செல்வனையே வெய்தினுட
னேற்றினர் வீரநுந்தைக் கேற்றவிதி செய்யென்று
ராற்றினர் மேலோ ரறிந்து. (119)

என்னுஞ் சமயத் தெழுந்த பரதனைமுன்
அன்னை கொடுஞ்செயலி னுலரசன் றன்னவரு
துன்புற்ற நீராற் றுரந்தான் முனமென்று
னன்புற்ற மாமுனிவ னுய்ந்து. (120)

இடிக்க ணரவ மிடைந்த செயல்போற்
படிக்கண் விழுந்து பதைத்தான் தடுக்கவர
வாகாத் துயரத் தழுந்தினன் சிந்தையென்று
மேகாத் துயரத் திரிந்து. (121)

உரைசெய்யு மன்ன ருளரோ வெனைப்போல்
இரவிகுலத் தெந்தையர்கட் கெண்ணும் பிரதமுறு
பூசனைக்கு முந்தேன் புரிந்தரசு போற்றுமென்ற
யோசனைக்கு வந்தே னுவந்து. (122)

பூவினுறை மேலோன் புதல்வனை யாதிகொண்ட
கோவினிறை மன்னர் குலவறத்தாற் றேவினிறை
யாயினர் யான்சிறுவ னாகிப் பிறந்தவத்த
னாயினேன் என்றான் அழுது. (123)

துன்னு தலையாற் சுமந்து வருதாழை
பன்னு குலையிற் பதடியான் என்னைநக
வீனறளித்த தாய்புரிந்த வேற்ற மிவையென்றான்
தேன்றளித்த தாரான் றிகைத்து. (124)

என்றெடுத்துக் கூறி யிடரி னிடைமூழ்கும்
நன்றடுத்தான் றம்பிகையால் நாட்டமுடன் அன்று
கடனமையச் செய்தான் கருதுலகை யாக்கும்
திடனமையு நான்முகத்தோன் சேய். (125)

Koviloor Digital Library

இழையுமல ராா மிடையுமினல் செய்யக்
குழையுமலர்க் கொம்பனையர் கூடித் தழையில்லா
முண்டகத்தார் கானினிடை மூழ்குமயில் போலெரியைக்
கண்டகத்தார் மூழ்குங் களித்து. (126)

அங்கியது நீரி னதிகங் குளிரமகிழ்
திங்கண் முகந்திருவிற் றேசுரவே தங்கணவர்
சேருலகஞ் சேர்ந்த திருவனையார் வாழநின்ற
சீருலகஞ் சேர்ந்தார் செழித்து. (127)

அனைய செயலா லரசன் றனக்கே
இனைய செயலிவைவ தேற்றி மனையினெய்தி
வந்தா னுயர்மரபின் வாழுஞ் செயலெல்லாஞ்
சிந்தா குலத்திற் செறித்து. (128)

ஐந்துமைந்து நாளுழி யாமெனவே தீர்ந்தடுத்து
மைந்தனைந்து மாத்துயரின் மாழ்கினன் தந்தைவயின்
செய்ய வருதருமஞ் செய்தான் முறையினொடு
மைய னனக னடுத்து. (129)

முற்று முடித்து முறையடுத்த மும்மைநூற்
சுற்றந் தொடரவந்து தோன்றினன் வெற்றிபுனை
மாதவனுந் தன்வினையை வாழ முடித்தடுத்த
போதவனைக் கூடினன் போய். (130)

மன்னரின்றி வையம் மயங்கி வருமிவைதான்
தொன்மையன்று மென்றுவரு தோற்றத்தார் அன்ன
நிலத்தா ரறிஞருட னேரடுத்துச் சேர்ந்தார்
குலத்தா ரமைச்சர் குழாம். (131)

பள்ளியடைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஆற்றுப் படலம்.

வரன்முறையை வாய்ந்துணர்ந்த மாதவத்தாம் வள்ள
லருமறையை யாய்ந்தமுனி யாங்கே விரவினனென்
றீண்டிவந்தா ரெல்லா மினனேர் பரதனடி
பூண்டிவர்ந்தா ரொன்றிப் புகழ்ந்து. (1)

மந்திரத்தார் சுற்றம் மருவு நகரவரர்
தந்திரத்தார் தானைத் தரணிபரு மந்தரத்தார்
மாமறையோ ராமுனிவர் வந்து குரிசிறனை
யாமுறையாய்ச் சூழ்ந்தா ரடுத்து. (2)

சுற்றுழியின் மேலோர் சுமந்திரனும் பேருடையான்
பொற்றடந்தேர்ப் பாகன் புலமையான் கொற்றவர்க்குக்
கொள்ளரிய மேன்மை குறிப்போன் முனிமுகத்தை
யுள்ளறிய நோக்கு முவந்து. (3)

நோக்கிற் சுமந்திரனு னோக்கும் பொருளதனை
வாக்கிற்சொல் லாதறிந்த மாதவனும் காக்குமுல
குன்கடமை யென்ற வுரைதெரியச் சொற்றனனும்
மன்கடமை போற்றும் வரன். (4)

வேதியர்கள் மாதவர்கள் மேவு விருத்தர்மன்ன
ராதியர்க ணின்வயினு மாதரவு நீதியொடு
நற்றருமம் போற்ற நயந்தார்க் கருளென்றான்
பற்றருமம் மாமுனிவன் பார்த்து. (5)

வள்ளுற்ற வச்சிரத்தின் வாளரசின் வையகந்தா
னள்ளுற்ற ஞாயரிலா நண்பகலுந் தெள்ளு
மதியி லிரவும் வளரு முயிரின்
கதியி லுடலுமெனக் காண். (6)

Koviloor Digital Library

தேவருல கந்தனிலுந் தீமை புரியசுர
ராவருல கந்தனிலு மான்றபெருங் கோவை
யுலகமென்ற வெவ்விடையு மோங்கரச ரின்றி
யிலகுமென்ற லெண்ணற் கில. (7)

முறையோங் கொருவகையை முன்னி யறிந்தால்
மறையோன் புரிமகியின் வானின் இறையோங்குந்
தன்மையறப் பொற்பதுவுந் தாழ்ந்த செயனிற்பதுவுந்
பொன்மையர சர்க்காம் புகழ். (8)

பூத்தபுகழ் வேதா பொருந்திவரு புண்ணியர்க
ளேத்துபுகழ் மீதா ரிதுவரைகூ காத்தனர்கள்
பின்னோர் களைகணின்மை பேருலக நீருடைந்த
தன்னோர் கலமான தால். (9)

உந்தைசிறந் தானிறந்தா னுன்முன் வனமடைந்தான்
வந்தசிறப் பன்னை வரமைந்த வந்தமிலாப்
பேரரசை யாளல் பெரிதுமெந்தன் சிந்தனையென்
றோரறமுன் சொன்னு னுகந்து. (10)

தஞ்சமுன தாமுலகந் தாங்குவாய் சார்ந்தெனவே
செஞ்சமுனி செப்புதலுஞ் சிந்தையுற்று நஞ்சை
நுகர்வா யெனநடுங்கு நோன்மை யவரிற்
பகர்வான் விழிநீர் படிந்து. (11)

நடுங்கித் தடுமாறி நாவுலர்ந்து நாட்ட
மிடுங்கி மகளிரென வேங்கி யொடுங்கியுயி
ரோய்ந்தவைக்கு மேலே யுணர்வு நலமளிக்க
வாய்ந்தவைக்குச் சொல்லு மனம். (12)

மூன்றுலகுங் காக்கு முதல்வன் குலமுதலாத்
தோன்றிவர யான்மகுடஞ் சூடவெனச் சான்றோ
ருரைசெய் தருமமெனி லோர்கொடியாள் செய்கை
தரைசெய் தருமமென்றுந் தான். (13)

Koviloor Digital Library

அடையுற்ற வெங்கொடுமை யன்னைபுரி செய்கை
நடையுற்ற நீர்நன்றி நாட்டி லிடையுற்ற
கால மிரண்டுங் கழியக் கடையினுறு
சால விரண்டகலி தான். (14)

வேத்தவையி னுள்ளீர் விமல னமலவுந்தி
பூத்தவனை முன்னும் புவியுடையோர் மூத்தோ
ரிருக்கநில மாண்ட விறையுண்டேற் சொல்வீர்
பெருக்கநில மாண்டபிறப் பீர். (15)

நன்னெறியை நாட்டுகினு நானிந்த நானிலத்தி
னின்னெறியி னுமுயிரோ டேங்கியிறே னன்ன
வரசை யழைத்தே யமலமுடி சூட்ட
விரசி யிழைத்தலென்று மேல். (16)

அன்றெனிலோ யானு மரிய வனத்தினென்று
நின்றெனினு மாற்றல் நிலைத்தவந்தான் ஒன்று
முரையெடுத்துச் சொல்லி னுயிருகுப்ப னென்றான்
வரையடுத்த தோளான் மதித்து. (17)

பேரரசன் சொல்லாற் பெருமை யுறுவள்ளல்
சீரரசன் றேன்றான் சிறந்திடுநீ தாரரசர்க்
கேன்றாண்மைச் செல்வத் திசைந்திலையேன் மன்னவருட்
சான்றாண்மை நின்னிலெவர் தான். (18)

ஆழி யுருட்டி யறங்க டமைப்போற்றி
வேழ்வி யியற்றிவர வேண்டுமோ வேழினொடு
மேழுமென வாழுலகு மெஞ்சிடினு நின்புகழ்தாம்
வாழுமெனச் சொற்றார் மகிழ்ந்து. (19)

குரிசிலுந்தம் பின்னவனைக் கூவியே கொண்டன்
முரசறைந்தி னன்னகர்க்கு முன்னு மரசைத்
தருகவெனச் சாற்றிவரு தானை விரைவின்
வருகவெனச் சொல்வாய் வரைந்து. (20)

Koviloor Digital Library

நல்லோ னுரையை நயந்தநம்பி நாட்டிவர
அல்லோவெ னல்ல லழுங்குநக ரொல்லென்றல்
சீவனில்லா யாக்கைதனிற் சேருமயிர் தத்துளியா
மேவநல்லாஞ் சொல்லாம் விழைந்து. (21)

அவித்த புலத்தவர்க ளாதியா யுள்ள
புவித்தலையார் வள்ளல் புகழான் கவிக்குமுடி
என்றளிக்க வேகளித்த வேற்றுஞ் செவிப்புலத்தி
னன்றளிக்குந் தேனு நயந்து. (22)

முரசறையக் கேட்டு முடிமன்னைச் சேர்க்க
விரசுநெடுஞ் சேனை விழைந்து பரசுதல்தான்
கோல மிகுநகரங் கோவா முடிபெறிவான்
வேலையுத யம்போன்ற வே. (23)

எழுந்த பெரும்படைதா னேழான வேலை
மொழிந்து வருமூழி மொய்ப்ப வழிந்ததுவாம்
கைகேசி யாசை கழிந்த துயரடுத்த
செய்காத லன்றே திகைத்து. (24)

பண்ணும் பகடிரதம் பண்டி பரிகளிவை
மண்ணும் மறைத்த வளர்கொடிகள் விண்ணு
மறைத்த விரிந்தநுகள் வன்காய மெல்லாம்
நிறைத்த விடமின்றி நேர்ந்து. (25)

தேர்மிசையோர் சிந்துசென்ற செம்முகக்கார் மீதுசென்ற
தார்கலியாங் கார்க்கடல தாங்குதிரை நேர்பொருந்திப்
பார்மிசையிற் சென்ற பதாதியொரு பவ்வமெனச்
சேரவருஞ் சேனைத் திரள். (26)

தாரைசங்கந் தாளந் தழங்கி வருகொம்பு
வாரசங்கும் பம்பைதுடி மற்றவையுஞ் சிரசங்காப்
பேரியுமி யம்பலவாப் பேர்ந்ததுவும் பேதமைசேர்
பூரியர்கு ழாத்தறிஞர் போல். (27)

Koviloor Digital Library

தாவருநாண் முன்னணியைத் தாங்கி வருவதன்றி
மேவருபூண் வேறணியா மேனியர்க டேவர்களும்
போற்றநின்ற மாமகளிர் பூவுதிர்ந்த கொம்பெனவே
தேற்றமின்றிச் சென்றார் திகைத்து. (28)

அதிர்கடல்சூழ் வைய மனைத்து மளித்தோன்
விதிகடவும் வெண்குடைதான் மேவா துதிசேர்
பொதியுலவும் பல்கவிகை பூத்த வெனினு
மதியுலவாக் கங்குலென வாம். (29)

செல்லுஞ் செலவாற் சிறியதுதான் திக்கென்னச்
சொல்லவரு சேனை சுமந்தெனி லொல்லுங்
கலியகடல் சூழுலகைக் கன்னியவ ளென்றோர்
மெலியவர்க ளென்றும் மிகுந்து. (30)

செஞ்சாந் தகில்கலவை சேர்ந்தவிரை குங்குமத்தி
னஞ்சாந்து சேரா தணிமுகத்தாற் றுஞ்சாது
பொங்கிளமைக் கொங்கை புதுமையது வேறிலதாற்
தெங்கிளநீர் போலாஞ் செறிந்து. (31)

நறையுற்ற கோதையர்க ளுட்செய்யுங் கோலத்
துறையற்ற கண்க டொடுத்த கறையற்ற
கொற்றமது முற்றிக் குறித்துக் கழுவிவருங்
கொற்றமுறு வேலைநிகர்க் கும். (32)

இன்றுணையா மாதனத்தா லேற்று வருசாந்தின்
மன்றலந்தா ரானு மறைத்தலின்றித் துன்றிவரு
தாசுகொடி நீக்குந் துணைக்குன் றெனப்பொலிந்த
தேசுடைய தோள்கள் சிறந்து. (33)

சேர்கலியின் மேகலைதான் சேராத் திறமையினல்
ஆர்கலியில் தேரையொன்று மல்குலது நேரும்
பரிபுரமார்க் காப்பவளப் பாங்கா மடிகள்
அரிபுரமார்க் காக்கமல மாம். (34)

Koviloor Digital Library

கோமருவு மன்னன் குறித்துப் பிரிந்ததினற்
தாமரையின் மன்னுர் தவஞ்சார்ந்தாள் காமன்
துயர்க்காங் கடன்மூழ்குஞ் சோர்ந்துவரு சேனை
யயிர்க்காது சென்ற தறிந்து. (35)

அலைபெற்ற நீர்குடித்து மான்ற வகத்தை
நிலைபெற்று நிற்க நிறுத்தி மலைபற்றி
மண்ணி லழுத்தலினல் வார்ந்து வருசேனை
எண்ணி லகத்திய ஞ மே. (36)

ஆன்றறிஞ ராஞ்சிறிய ராதியந்த மாகவந்தில்
தோன்றிவரு சேனைவளந் தோயாமற் கான்றதனற்
கும்ப முனிபுனலைங் கொண்ட கடலடுக்கும்
வெம்பு மயோத்தி விரைந்து. (37)

மத்தளமாஞ் சுத்த மயங்கிவரு பல்லியமும்
ஒத்தளவாய் முற்று முரையிலதாற் சித்திரத்தாற்
பித்திதனிற்றீட்டும் பெருஞ்சேனை தானடுத்த
பத்திதனை யொத்திடுமென் ப. (38)

இன்னணமா நீண்டபடை யேக வருமேந்தல்
தன்னரையிற் சீரைதனைச் சாத்தினன் பின்னிளையோன்
தன்னடைவான் வந்து தனியிரத மேற்சென்ருன்
மன்னடைகான் றேடி மருண்டு. (39)

தாயர் தவத்தவருந் தந்தையரின் முந்துவர
ராயதிரு மந்திரிய ரான்றசுற்றந் தூயதிரு
வந்தணர்க ளாசி யடுத்தளிக்க வாங்கடுத்தான்
வந்தணவுஞ் சோலைமதில் வாய். (40)

மந்தரையாங் கூற்றம் வழிச்செல் பவருடனே
யுந்திவரல் கண்டிளையோ ஞேடியே யந்தரத்தி
னெற்ற வழன்றுபற்ற வேற்றதம்பி யைத்தடுத்துக்
கொற்றவள வீரனுரைக் கும். (41)

Koviloor Digital Library

முன்னமன்னர் செய்த முறைகெடுத்த பாவிதனைச்
சின்னபின்னஞ் செய்தென் சினந்தீர்வேன் மன்னன்
துறக்குமென்று கொள்வதலாற் றேன்றுமன்னை யாஞ்சொல்
வறக்குமென்று கொள்வாய் மனம். (42)

ஆதலினு னம்மையின்னு மையன் முனியுமிந்த
வேதனைசெய் கூனை வெகுண்குடினுங் கோதில்
மறைகுலவு நூல்வல்லாய் வாவென் றணைந்தான்
கறைகுலவு வேல்வற் கலன். (43)

மொய்கலந்த சேனையுடன் மூரி யுலகமுடன்
கைகலந்து சுற்றக் கடலெனவே யையனுமுன்
தேவி யிளவலொடு சென்றிருந்த சோலைதனில்
மேவி யிருந்தான் விழைந்து. (44)

அல்லணையுங் கண்ணி ரருவி தனிற்படிந்தான்
கல்லணையுங் கந்தங் கனியுண்ணுன் வில்லணையும்
தோளுடையான் வைகத் தொகும்புல் லணைப்பாங்கர்
தாளடியிற் சார்ந்துபடுத் தான். (45)

ஆண்டுநின்றே யாண்டகையு மன்பி னுெடுகடந்தா
னீண்டுநெறி யென்னத்தா னேகினுன் றூண்டிவரு
தேருங் கரிதுரகஞ் சேர்ந்துவரச் சோர்ந்துருகிச்
சாருங் கடுநடையிற் றுன். (46)

ஆற்றுப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

குகப் படலம்.

பொன்னூர் கழலணிந்த பொற்புடைய தானையினு
னன்னுடாம் வைகைபுனை நாட்டையொத்த பொன்னுடு
கண்டுவந்து சென்றான் கருதுமுன்னோர் பூவுலகிற்
கொணடுவந்த கங்கைநதிக் கு. (1)

எண்ணற் கருஞ்சுரும்பா மேற்றுமினத் திற்கலது
நண்ணற் கருங்கங்கை நாடியெங்கும் வண்ணக்
கரிமதநீர் பாய்ந்து கருத்து வரலா
லுரியதன்று முண்ணற் குவந்து. (2)

பாலையுற்ற மானிலத்தாற் பண்டு படர்ந்தமிகு
மோலையுற்ற கார்க்கடலி னேடிலையால் மாலை
முடிமன்னன் சேனையென மொய்த்தகட லுண்ட
படிமன்னுங் கங்கை படர்ந்து. (3)

கான்றலையி னண்ணிநின்ற காளை தனைத்தொடர்ந்த
தோன்றலையின் றெண்ணித் துடர்ந்தனவா மான்ற
வறுபதி னுயிரமா மக்ரோணி யென்ன
வுறுதிபெறு சேனை யுவந்து. (4)

அப்படையுங் கங்கை யடைந்த தருணமதி
லப்படையுங் கொண்டனிற வண்ணலுட னிப்படையாற்
சீறிவந்தான் போர்செய் திறத்தா னெனமதித்துக்
கூறிவந்தான் போரைக் குறித்து. (5)

குகனென்னும் பேரான் கொடுங்கூற்றி னூற்றல்
மிகமன்னுஞ் சீரான் வெகுண்டான் தொகைமன்னுச்
சேனைதனைத் தூசிதமிற் சேர்ந்தகண்ணு னேக்கிவர
லானதனைக் கண்டா னடுத்து. (6)

Koviloor Digital Library

மையி லுயிரெல்லாம் வாங்கு மிறுதிகொண்ட
கையி லயிறரித்த காலன்றா னையிரு
ருயிரமாம் பெருருவ மான படைப்பெருக்கான்
ஆயிரமாம் நாமனன்ப னும். (7)

கட்டுஞ் சுரிகை கடித்த விதழ்வாயன்
வெட்டு மொழியன் விழிதீயன் கொட்டுந்
துடியுடையன் கொம்புடையன் தோன்றுமம ரென்று
கெடியுடைய ஞனன் கிளர்ந்து. (8)

எலியாகு மிப்படைதான் யானரவ மென்ன
வொலியாகுஞ் சேனை யுவந்தான் வலியா
முலகினில்வாழ் வள்ளுகிர்க ளோங்கு புலிக
ளலகிலவாய் வந்த தனைத்து. (9)

மருங்கடையுந் தென்கரையின் வந்து புகுந்தா
னொருங்கடையு மப்படையோ டொல்லென் றருங்கடையில்
வந்த கருங்கடல்போல் வார்ந்துவரு சேனையுடன்
சிந்தையுற நின்றான் செறுத்து. (10)

தோன்றிவரு வேடர் துரிதமுகம் பார்த்துரைப்பான்
ஆன்ற படையை யடுத்தடர்த்தே யென்றுலகைக்
காரமையுஞ் சீரார் கடல்வண்ணற் காக்கநின்றே
னீரமையு மென்றா னிரந்து. (11)

சானவியைச் சாருந் தடங்கரைசேர் வம்பர்களை
மேனிலையிற் சேர்ப்ப விரும்பகிலீர் மானும்
கரைவந்த பேரைக் கடிந்துவிடு மென்றான்
விரைவந்த தாரான் விளித்து. (12)

அஞ்சனமா வண்ணனென தாருயிரா னுளதலை
வஞ்சனையான் மாற்றமன்னர் வந்தாரே செஞ்சரந்தான்
தீயிற் கடியனவும் செல்லாவோ சேர்வரெனின்
நாயிற் கடையலவோ நான். (13)

Koviloor Digital Library

ஆழப் படுமிந்த வாறு கடப்பதெங்கே
வேழப் படைக்குவில்லாண் மீண்டிடுமோ தோழனென்று
சொல்லியநா வொன்றலவோ சோர்ந்து விடுவேனேல்
மெல்லியனு வேடன் வியப்பு. (14)

முன்னோ னெனநினையான் மொய்புலியை யன்னதம்பி
பின்னோ னெனநினைவும் பேர்ந்திடுமோ மன்னர்நெஞ்சில்
வேடர்சரம் வாயாவோ மேலு மடுப்பதற்கிங்
கோடம்விடுப் பாரா ருளர். (15)

பாவம் பழியும் பகைநண்பி னோடிவைக
ளேவ முலகாள்வோ ரென்னுரோ மேவுமிவன்
என்னு ருயிர்த்துணைமே லேக விசையுமென்றல்
தன்னுரு யிர்தரித்தாற் ரூன். (16)

அருந்தவத்தை யென்றுணைவ னாளவிவன் மன்னோ
மருந்துயிர்க்கோ வண்புகழின் மாய்வேன் பொருந்திவரு
கேண்மை நயந்தோர்பின் கிட்டா திருத்தநன்ரூ
மாண்மை நயந்தே னறிந்து. (17)

தும்பிப் பெரும்படைகள் சூழ்வோர் சரித்ததனை
யெம்பிப் படர்வதெங்கே யேற்றவில்லி ரம்பிகளை
யோட்டுவதென் கேண்மை யுவந்தவர்க்கு முன்னுயிரை
வீட்டுவதே யாண்மை வினை. (18)

போனபடை வீரர்கட்குப் போதாவிச் சேனையென்னும்
வானவர்கள் தானவர்கள் வந்தாலென் ரூனைபடக்
கொல்வதலால் வேறு குறிக்கும் வகையுளவோ
வெல்வதறிந் தீர்விளம்பு வீர். (19)

கொடைகொடுத்த வீரமுதற் கோமான் கடஞ்செல்
விடைகொடுத்தாண் மைந்தர்திறல் வீணும் படிமடுத்துக்
கொன்றுகட மென்னக் குவித்தபிணங் கொண்டுகங்கை
துன்றுகடல் தூர்க்குந் தொகுத்து. (20)

Koviloor Digital Library

ஆடுபடை சாடி யறத்தவரே யாளவொரு
வேடுவிடை தந்தபுகழ் மேவீரோ நாடு
கொடுத்தவர்க்குக் காடுங் கொடுக்காத கொள்கை
எடுத்தவர்க்குச் செய்வ தெனைத்து. (21)

மாமுனிவர் கேளாய் வனத்திடையே வாழவரும்
கோமுனியு மென்று குறிக்காதீர் ஏமுனையில்
ஏழெனவா மத்திபடை என்றாலு மாமுனையிற்
கூடேழனவாங் கொள்வீர் குறித்து. (22)

என்பனவுஞ் சொல்லி யிரும்பனவா மேனியனோர்
வன்பனையிற் றேருளுடையன் வாள்வீரற் கன்பனுமுன்
நின்றதனைக் கண்டு நெறித்தேரான் நம்பியுறை
மன்றதனை யண்டிமொழி வான். (23)

கங்கை யிருகரையான் கப்பல் கணக்கில்லா
னுங்கள் குலநாதற் கோர்துணைவன் செங்கையிடை
விற்கொள் குகனென்னும் வேடர்க் கதிபனின்றான்
மற்கொள் புயத்தாய் மதித்து. (24)

கல்லேர் புயமுடையான் காதல் கரையில்லான்
அல்லேர் நயவடிவா னன்றபடை வல்லேரும்
வெள்ளத்தான் நின்றான் விருப்புடைய னிற்காணு
முள்ளத்தான் என்றா னுவந்து. (25)

தன்முன் னவன்தன்மை தன்றுணைவன் முந்துரைத்த
சொன்முன் னவன்றன்பாற் றேய்மனதான் மன்முன்
தழிக்கொள் துணைவனெனிற் றனேயான் முன்னே
வழிக்கொள்து மென்றான் மதித்து. (26)

என்றுநின்று தம்பியொடு மேகிக் கரையடுத்துச்
சென்றுநின்று கண்டான் திறலவனும் நின்று
திருமேனி கண்டு திகைத்தான் மனது
கருமேனி கொண்டணைகு கன். (27)

Koviloor Digital Library

வற்கலையின் றானையனை மாசடைந்த மேனியனை
நற்கலையின் மாமதியா நன்முகனை நிற்கும்
துயரானைக் கண்டான் றுணிந்தெடுத்த வில்லும்
அயராமைக் கென்னும் அறிவு. (28)

நம்பியுமென் னாயகனை நாடநின்றான் கூடநின்றான்
தம்பியுமென் றன்னத் தலைநின்றான் வெம்பியுறு
மென்பிறந்தார்க் கின்ன வியல்பிருக்கு மென்னினவன்
பின்பிறந்தார்க் கென்னும் பிழை. (29)

உண்டிடுக்க ணொன்றுடையா னோங்கிவள ரன்புடையான்
கொண்டிருக்கும் வேடமிவன் கொண்டிருந்தான் கண்டு
பெயர்கின்றேன் காமினெனாப் பேசிப் படவி
னயர்கின்றான் வந்தா னறிந்து. (30)

வந்தெதிரே வாழ்த்தி வணங்கினான் மாமலர்மே
லந்தணனும் போற்று மவன்பணிந்தான் தந்தை
தனைப்போற் றழுவினான் சாருமன்பி னெஞ்சி
னினைப்போர்க் கருளு நிபன். (31)

தழுவு புளிஞர்மன்னன் தாமரைக்கண் ணானை
எழுவுறழ்தோ ளாய்வரவென் னென்றான் முழுதுலகம்
போற்றுதந்தை முன்முறையைப் போக்கினா னாக்கமன்னை
எற்றுவந்தே னென்றா னெடுத்து. (32)

கேட்டான் மகிழ்ந்தான் கிளைக்கும் பவப்பிணியை
மீட்டான் பணிந்தான் விரும்பினான் தீட்டரிய
மேனிமைந்தன் றாளை விரைந்து பிடித்துரைப்பான்
தூநிமிர்ந்த வாளான் றுதித்து. (33)

தாய்வினையாற் சாய்ந்ததந்தை தந்த தரணிதனைத்
தீவினையாற் சேர்ந்ததெனச் சிந்தனையாய் மேவினையே
லாயிரமி ராமர்நின்கே ளாவரோ வென்றுரைத்தான்
ஆயிரமாம் வள்ளத் தரசு. (34)

Koviloor Digital Library

என்புகழ்வ தேழை யெயினை னிரவியொளி
மன்புகழ்செய் மற்றொளியை மாற்றுவபோ லுன்பொன்
மரபோர் புகழையுந்தன் வான்புகழாய்க் கொண்டா
யுரவோயென் றுற்று னுவந்து. (35)

வண்ணமலர் வந்த வரனும் பணிவரதன்
வண்ணமலர் சிந்தை வருபெரியோன் அண்ணலவ
னெவ்வழியி னன்றிருந்தா னென்னக் குகன்மகிழ்ந்தா
னிவ்வழியி னென்று னெழுந்து. (36)

கார்நிலையாஞ் சீருடையான் கல்விற் படுத்தபுல்லின்
வார்சிலையான் பள்ளிகண்டு மாழ்கினுன் பாரிற்
பதைத்தான்மெய் சோர்ந்தான் பருவரலைச் சார்ந்தான்
கதத்தான்றன் தாய்செயலைக் கண்டு. (37)

இயன்றதுவு மிவ்விடர்தா னென்னுற்காய் கந்த
மயின்றதுவும் புல்லி னமளி துயின்றதுவு
மென்பொருட்டா லென்று விடரடையா வஞ்சனினு
மன்பொருட்டு மாவேன் மதித்து. (38)

தூணுற்ற தோளான் றுதித்துரைக்குந் தோகையுட
னேணுற்ற வன்றாங் கிடமிதுவேல் மாணுற்ற
தம்பி துயிலான் றனுவினெடு காத்தவிடம்
நம்பியுரை யென்று னயந்து. (39)

அல்லமைந்த மேனி யழகனவ ளோடுதுஞ்ச
வில்லமைந்த கையான் வெகுண்டுயிர்த்தா னெல்லமைந்த
கண்கலுழக் கங்குல் கழியு மளவுநின்றான்
எண்கலுழ மில்லா னியைந்து. (40)

என்றுரைக்கக் கேட்டா னிராமற்குத் தம்பியரி
னின்றுரைக்க யாவொருவ னேர்ந்தனேன் கொன்றரக்குந்
துன்பத்தைச் செய்தேன் துயர்துடைத்துத் தோன்றுமின்பம்
அன்பொத்துச் செய்தா னவன். (41)

Koviloor Digital Library

அவ்விடையி னண்ண லரிய பொடிகைகித்
தெவ்விடைய நின்ற செறிகழலா யிவ்விடையிற்
கங்கையென்ற வாற்றைக் கடத்திற் பவக்கடலைச்
சங்கையின்றி யேற்றுவித்த ரூன். (42)

நன்றடுத்த நன்றமரை நண்ணினன் நாவாயைச்
சென்றடுத்துச் சேர்த்திரெனக் சேர்ந்ததுவாங் குன்றடுத்து
நம்பி பகிரதன்முன் னடிவந்த கங்கைமுற்ற
வம்பிபகி ரங்கமென வாம். (43)

வந்தனவாம் வள்ளம் மகிப வரமருவு
சிந்தனையா தென்றுகுகன் செப்பவே வந்த
சுமந்திரனை நோக்கத் துடர்ந்துவரு சேனை
யமைந்தபடி யேற்று மறிந்து. (44)

குரிசில் கருத்தறிந்த கோவிரத வல்லான்
வரிசை தெரிந்தேற்ற வந்த பரியிரதம்
காலாள் கணக்கிலவாய்க் கங்கைக் கரையடுத்த
வேலா வலயமென வே. (45)

இடியு முகப்ப வெழிலி கடலை
முடிய முகப்பதென மொய்த்துக் கொடியினொடு
வங்கமது வேலை மருவிப் படர்ந்தவென
துங்கமத வேழந் தொகும். (46)

மீன்றரளந் தள்ளி விரைந்தலையின் வங்கமொடு
வான்றருமா வேலை வரன்மான வான்ற
கடக்களிறு தூக்கக் கரையொரீக் கங்கை
நடக்குமிரா மற்காண நட்டு. (47)

கொடிஞ்சினொடு தட்டுமச்சுங் கோத்தமொட்டு மாழி
நெடுஞ்சுவரி யாவுமுறை நீக்கி மடிஞ்சபின்னர்க்
கூட்டும் வினையெனவே கொண்டு கரைசேர்த்துக்
காட்டும் புனையிரதங் கள். (48)

Koviloor Digital Library

மண்ணிற் குடிலமுதல் மற்று முலகினிடை
எண்ணிற் றவமன்றி யேற்றமுண்டோ விண்ணின்
வழிய'டைந்தா ரம்பியின்மேல் வாரார்கள் ஞான
விழியடைந்தார் மேலோர் விழைந்து. (49)

அறுபதி னயிரமா மக்ரோணி யான
வுறுபதிசேர் சேனை யுடனே செறிநகர்வாழ்
மாக்கள் மகளிர்வெள்ளம் வான்கங்கை தான்பின்னுத்
தேக்கிவழிச் சென்ற தெழித்து. (50)

சுழித்துவரு நீர்யாற்றைச் சூழ்படைக ளேறிக்
கழித்துவர வாசைதனைக் கால வழித்து
மவனிதனை யாண்ட வரசர்க்கு மேலாந்
தவனிதனைத் தாண்டவினைத் தான். (51)

தன்னனைய தம்பியொடுந் தாயரொரு மூவருடன்
சொன்ன விரதவலன் ருேழனுட னின்னவர்க
ளேறத் துடுப்பென்னு மிங்கிதக்கா லானடந்து
தேறித் தெளிந்தோன் செலும். (52)

தேவர் தொழவாந் திருமாது கோசலையை
மேவுங் குகன்றெழுது வேண்டவுடன் கோவரசர்
முற்றத்தான் றேவி முதலவன்று யென்றுரைத்தான்
பற்றத்தார் தேவாம் பரன். (53)

என்றவுடன் பாதத் திரங்குவனி யாரென்ன
மன்றலந்தாய் கேட்ப வரனுரைக்குங் குன்றனையான்
செங்கட் கருணைவள்ளல் சேர்த்ததம்பி சீர்த்தகுகன்
எங்கட்கு முன்னென்று னேற்று. (54)

கைவீ ரவீர்மைந்தீர் நாடுறைந்து காடுறைந்த
மெய்வீரர் செய்யபுகழ் வேய்ந்தடுப்பார் செய்வீரென்
ளுளுமுள நல்லறத்தை நாட்டினீ ரைவீரும்
ஆளுமுல கென்று ளனே. (55)

Koviloor Digital Library

அறந்தானே யாகி யயல்நின்று ளன்பி
னிறந்தாளைச் சொல்லென்ன நீர்மை திறம்பாதாள்
மெய்யசங்கா தாக்கி விளிந்தா னிளந்தேவி
செய்யதம்பி யைப்பயந்த தே. (56)

சுடுமயா னந்துணைக்குந் தோன்றல் துயர்க்குங்
கடுமையார் கானங் கருணைக் கடற்குமென
முன்னினைந்து தந்த முதல்வி யறியாயோ
என்னினைந்தா யென்தா யிவள். (57)

என்னவுரை கேட்டு மிரக்கமிலா டன்னையெனப்
பன்னுகுகன் கைவணக்கம் பண்ணினன் அன்னஞ்
சிறையிலதாய்ச் செய்கரையிற் சேர்ந்ததெனச் சேர்ந்த
நிறையிலகு மம்பி நிமிர்ந்து. (58)

தாயர் சிவிகைமிசை தாங்கிச் செலமிகுந்த
நேய விழி நீர் நிலத்துகவே தூயதம்பி
யானன் குகனு மடுத்தணைய வாய்ந்தடுத்தான்
காணும் வழியைக் கடந்து. (59)

பாரத்தி னீங்கும் பரத்துவச மாமுனிவன்
சீரத்தி நோர்வனத்தைச் சேர்ந்தவுடன் நேரும்
அருத்தி யுடனே யணுகின னன்னன்
விருத்த ருடனே விழைந்து. (60)

குகப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

கிளைகண்டு நீங்கு படலம்.

வந்தமுனி சந்த வரவின் மனமகிழ்ந்து
தந்தையெனக் கந்தமலர்த் தாள்பணிந்தான் சிந்தை
யுவந்தான் புரிந்தாசி யுற்றடுத்துத் தந்தான்
தவந்தான் புரிந்தான் தழைந்து. (1)

எடுத்தவர தன்முடியை யேற்றிச் சிரத்தி
னடுத்தவர சானதிலை யையா முடித்த
சடையு மரவுரியுந் தாங்கியதென் னென்றான்
சடையும் வினைவெல் தவன். (2)

கேட்டவுடன் கோபங் கிளர மனமெலிந்து
வாட்டமுடன் மாதவனை வாழ்த்தியே கேட்டி
எனக்கடுத்த தன்மை யியம்பிலையே மேலோ
யுனக்கடுத்த தன்மையென்றா னோர்ந்து. (3)

மறைமுதல்வன் மன்னும் வளரிளையோன் பின்னும்
முறைமுதல்வன் யானுதல் மோச மிறையுலகங்
காக்கிலனு மென்னிற் கடத்தி விருப்பதுதான் (4)
போக்கிலனு மன்னிற் புகுந்து.

உரைத்த மொழிகேட் டுவந்தார்க ணெஞ்சம்
பொருத்த மொழியார் புரிந்து சிரத்தை
விரதங்கொண் மாதவர்கள் மேனி குளிர்ந்தார் (5)
பரதன்கொண் மாதவத்தைப் பார்த்து.

ஈடு

ஆயதன்மை மாமுனிவ னையன் றனைக்கொண்
தூயபன்ன சாலையிடந் துன்னியே மேய
விருந்தமைப்பே னென்று விளங்குமரி (6)
இருந்தமைப்பா னுகுதியை யீங்கு.

Koviloor Digital Library

துறந்ததவன் வேண்டத் துறக்கம் படிந்து
பறந்ததவண் வேண்டவளம் பார்த்துப் பிறந்தவர்
வேறுலகு பெற்று விழைந்தார் சேர்த்தாரார்
மாறுலவு செல்வத்த வர். (7)

சுந்தரஞ்சேர் மேலாஞ் சுவர்க்கந் தனினின்று
வந்தரம்பை மாதர் வழுத்தியே மைந்தரன்பு
சேர வணைத்தார் திருவுடையார் பூங்கணைகொள்
மாரணிணைத்தாய் மதித்து. (8)

நானமுறை பொற்றனத்தார் நாட்டுகங்கை யாட்டினார்
தானமுறை கற்பகத்தார் சாத்தினார் மேனிமிரும்
ஆடை யுடுத்தி யமுதளித்தா ரன்பினொடு
மேடை யடுத்தார் விழைந்து. (9)

அஞ்சடுத்த பஞ்சணையி னன்பினொடுமணைத்து
நஞ்சடுத்த கண்ணார் நயக்கலவி விஞ்சவுடன்
மைந்தர் புகழ்ந்து மதித்தார் மருவியணை
சிந்தை மகிழ்ந்து செழித்து. (10)

ஏந்துசெல்வம் வாய்ந்த விமையவர்க ளாமென்னக்
கூந்த லரமகளிர் கொண்டாட வேந்தர்புதற்
பொற்சிவிகை தாங்கும் புருடர் வரைதுய்த்தார்
நற்சுகம தோங்க நயந்து. (11)

மங்கையர்க டுங்கமிகு வானவர்க டேவியர்கள்
பொங்குபுகழ்ச் செல்வம் பொருந்தமணந் தங்குமலர்த்
தாதியலுங் கூந்தலார் சார்ந்தவர்கட் கேற்றபடி
தாதியர்போற் டேற்றமகிழ்ந் தார். (12)

இன்னணமா யாவர்களு மிந்திரன்போற் செல்வநலந்
துன்னநிறை போகங் கடுய்க்கவே மன்னவன்சேய்
காயுங் கனிகந்தங் கண்டுண்டு பூமிதனிற்
றேயும் புனிதற் றொழுது. (13)

Koviloor Digital Library

நீலவிரு ணீங்கலுமே நீங்குங் கனவெனவும்
ஏலவரு நல்வினையோர்க் கீறுசெயுங் காலமென
வந்தித்த சூரன் வரவே வளர்செல்வம்
நந்தித்தஞ் சிந்தையரா னார். (14)

காலையென்று மேலெழுந்த கண்டு கடவுளர்கள்
வேலையன்று சேனையென்று விம்மவே சோலைகுன்று
சுண்ணமெழ வந்து தொடர்ந்ததே பாலைநிலம்
பண்ணும் பரதன் படை. (15)

எழுந்த துகளி னெரியுங் கதிரோன்
அழுந்த வரு வெம்மை யாறப் பொழிந்த
கரிமதத்தாந் தொய்யல் கடந்தேகொ ளுமற்
குரகதத்தின் காலைவழுக் கும். (16)

பெருகிய செல்வம் பிடியென்ற தாய்மேற்
திருகிய சீற்றஞ்செய் செம்மல் வரலாற்
களிக்கு மூலகரெனக் கானலுறு பாலை
தளிர்க்கு முலவை தழைந்து. (17)

பாலைநிலந் தன்னைவளப் பண்ணை கொளச்செய்து
கோலநில வுஞ்சித்ர கூடத்தைக் கோலிவரு
மொன்றுரைத்து நின்ற வொழுக்கம் பெரியதென
நன்றுரைத்த மன்னவன்சே னை. (18)

தூளி படலந் துரகதந் தேரோடு
மூளுங் கரிமுழக்க முன்னிவரு மாளும்
கொடிமிடையுஞ் சேனைக் குழுவை யிளையோர்
படிமிடையக் கண்டான் பகைத்து. (19)

எழுந்தா னிலக்குமண னேறிஞ்ஞ் கூவின்
கொழுந்தா மெனக்குலவு குன்றின் செழுந்திரைசேர்
வேலைக் கடலடைந்த வீறடக்கு மென்றுகண்டான்
கோலப் படையைக் குறித்து. (20)

Koviloor Digital Library

பரதன் படைகொண்டு பாருலகை யாள
வரதன் தடையென்று வந்தான் சரதந்தான்
என்று னிகழ்ந்தா னிசைந்தா னெதிர்க்கவென
நின்றான் சினத்தி னிமிர்ந்து. (21)

குதித்தான் புவனியிடை கொற்றவன்மு னுற்றான்
மதித்தா னிலைபரதன் வந்தான் பதிப்பெயர்ந்து
தானையொடு சார்ந்தான் றடுக்கா திருக்கினென்னும்
ஏனையட லென்றா னெழுந்து. (22)

கட்டினான் வீரக் கழலுஞ் சுரிகைகளைப்
புட்டினான் சாலியொடு பூட்டினான் சிட்டர்தொழும்
பாதம் பணிந்து பரவிக் கனன்றுரைப்பான்
வாதம் பணிந்தவிசை வாய்ந்து. (23)

இருமைப் பதமு மிழந்த பரதன்
பெருமைப் படைவலியும் பின்னென் னருமையுறு
வல்லமையுங் கண்டு மதிக்கக் கதிக்குமென்கை
வில்லமையு மென்றான் விளித்து. (24)

கருவியொடு கையுங் கவசமொடு மார்பு
முருவி யுயிரினொடு மோடி வெருவிவரு
பாணக் கடலாசைப் பண்களிற்றை வாட்டுவது
காணக் கடவதென்றான் காய்ந்து. (25)

தழைத்த சிறைய தசைகவ்வும் வாய
வுழைத்த பரவை யொருங்கே புழைத்த
விருவ ரகலத்தி னேய்ந்தோடிப் பின்னர்
வருவதனைக் காணப்பாய் வரைந்து. (26)

மங்கை யொருத்தி படியலிற் றருமரசு
மிங்கு பரதற் கிசையுமோ பொங்கு
மரசாக்குஞ் செய்கையின் றி யன்றி நரகின்
பரிசாக்கு மென்கணையெ காண் பான். (27)

Koviloor Digital Library

வையந் துறந்து வனத்தில் வருந்துபதந்
தெய்ய வுனக்கென்று தேர்ந்தவன்னை நைவதனைக்
கண்டுவக்குங் கைகை கதறி விழுந்தாற்றல்
வண்டுவக்குந் தாராய் மதி. (28)

வள்ளலுன்னிற் சீறி வருபெரிய சேனையொடு
மெள்ளலுன்னிச் சேரு மிவனடலை யுள்ளு
முரம்பொடிக்கு மேயுடையா னுற்றடுவே னென்றான்
புரம்பொடிக்குஞ் சேயுடையான் போல். (29)

இலக்குவனீ யேற்றசினத் தீரே ழுலகும்
கலக்குவனு னென்று கருதின் விலக்குவதார்
நங்குலத்தின் மேலோர் நலத்தினர்க ளன்றியெவர்
தங்குலத்தின் மேன்மைதவிர்ந் தார். (30)

எனைத்திறத்தாம் வேத மியம்புவன வெல்லாம்
பனைத்திறத்தாங் கைமாப் பரதன் நினைத்துளவாஞ்
செய்கையே யாமதனைத் தேர்ந்திலைநீ யென்வயினே
யுய்கையேய் நேயத் துவந்து. (31)

பேராத காதல் பிறங்கு பரதனெண்ணிற்
றீராத சேனையென்பாற் சேர்த்திடவும் நேராம்
வசுந்தரையை யென்பால் வழங்கவுமா மன்றி
இசைந்தரியா யேற்கவரற் கென். (32)

பொன்னைப் பொருசுழலான் போற்றும் பரதனவன்
நன்னர்ப் பெரும்படையை நல்கலன்றி யென்னைப்பின்
போர்புரியு மென்றல் புலமைத்தோ சிந்தையொத்து
நேர்புரியு நீயே நினை. (33)

சேனுயரு நல்லறத்தின் றேவைத் திறல்செம்மைக்
காணிதனை யன்னவெண்ண லாகுமோ மாணமையு
மென்பின்னுன் போந்த தெனைக்காண வேண்டிமிகு
மன்பின்னு மென்று னறிந்து. (34)

Koviloor Digital Library

என்றான் வரத னிளவல் வரவறிந்து
நின்றான் பரத னிமிர்படையைப் பின்றாழ
வென்றடுத்த தம்பியொடு மேற்றமிகு மன்பினொடு
நன்றடுத்த தான்முந்தி னான். (35)

தொழுதகரன் மேனி துவண்ட வடிவன்
அழுதகலுங் கோல னவலமெழுதும்
படிவமென வந்த பரத னுருவை
வடிவமனன் கண்டான் வரைந்து. (36)

கண்ண னவன்வரவு கண்டு கவலைகொண்டான்
அண்ண லிளையவனை யன்புடையோய் பண்ணமையுந்
தேர்க்கோலச் சேனையொடுஞ் சீறி வருபரதன்
போர்க்கோலம் பாரென்றான் போய். (37)

மொழியிடையுஞ் சோக முகத்திளவ னின்றான்
பழியடையான் றன்னைப் பழிக்கும் வழியடையாச்
சொல்லொடுங்க நல்லுணர்வு சோர்ந்து கரம்பிடித்த
வில்லொடுங் கண்ணீர்பூ விழ. (38)

கோதில் தவத்தாற் குறிப்பின் மகிழ்ந்தடைந்த
நாதன் பிரிய நலிங்கி வேதனைகொள்
எந்தாய் திருமடந்தை யேற்றபெருந் தூதனென
வந்தான் பரதன் மதித்து. (39)

அறந்தாய் நினையா யருளதனை நீத்தாய்
துறந்தாய் முறையையெனுஞ் சொல்லன் மறந்துதனை
வந்தடியின் வீழ்ந்தான் மறிந்தபிதா வந்தவன்றாள்
சிந்தையுடன் வீழ்ந்த தென. (40)

உண்டோ வுயிரென் றொடுங்கினான் றன்னுருவைக்
கண்டான் பெருமனிரு கண்ணென்னுங் கொண்டல்
பொழிந்தவரல் சேர்ந்த புரிசடையி னின்று
வழிந்துவரப் புல்லி மதித்து. (41)

Koviloor Digital Library

நன்முறையான் நம்பி நயந்த திருவுருவைப்
பன்முறையா னோக்கிப் பலநினைந்தா னென்முறைதான்
வாடினையே யையா வரதனிலை யென்னென்றான்
றோடினிய தாரான் றுவண்டு. (42)

பரிவா னுரைக்கப் பரத னினது
பிரிவாம் பிணியாலெற் பெற்ற கரியாள்
வரமென்னுங் காலான் மகிமெய் நிறுவி
வரமன்னன் சென்றடைந்தான் வான். (43)

விண்ணடைந்தான் றந்தையென்ற வெய்ய வுரைசெவியிற்
புண்ணடைந்த வேல்போற் புகுமுன்னம் கண்ணும்
மனமுஞ் சுழல மகிதலத்தின் வீழ்ந்தான்
தினமுஞ் சுரர்பணியுந் தே. (44)

இருநிலத்திற் சேர்ந்தா னிறையுயிர்ப்பு மில்லான்
பெருநலத்த பேருணர்வும் பேணான் ஒருநலத்தி
னாகு முயிரு மருமையொடு வந்தடைய
வேகு முயிர்த்து வெறுத்து. (45)

நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் றாயாகு மெந்தாய்
இகல்வேந்த ரேறே யிறந்தனையே நீயும்
நகல் வேய்ந்து கொண்டவெந்த னால். (46)

சொற்பெற்ற கோன்பின் றுறையோ னருள்வேண்டி
நற்பெற்ற வேள்வி நயந்தியற்றி யெற்பெற்ற
துன்னுயிர்போய் நீங்கவோ வுற்றேன் தவமிதுவோ
பொன்னுயிர்போற் பூணாய் புகல். (47)

மண்பாரம் நான்சுமக்க வைத்துப் பரந்தவிர்த்துப்
பண்பாக நீதவஞ்செய் பான்மையிதோ விண்பார்க்கு
முன்னுயிர்க்குங் கூற்றா யுலகாள லுற்றேனோ
மின்னுயிர்க்கும் வேலாய் விழைந்து. (48)

Koviloor Digital Library

என்பரத்த தாக்கியர சிந்தியம்போம் நற்றவத்தால்
வெம்பவத்தைப் போக்கி விளைத்ததிதோ சம்பரப்பேர்த்
தானவனை வீட்டிச் சதமகனைச் சூட்டிமுடி
வானவனே யாளுய் வரைந்து. (49)

தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்த வென்பிரிவாற் காவலனீ வானடைந்தா
யின்னு மிருந்தே னிழிவுடைய வாழ்வுகந்தே
மன்னுமினி யாவேன் மதித்து. (50)

வேண்டு திறத்தார் விரும்பா வரசாட்சி
பூண்டு மிடர்கொடுத்த புல்லனினி மாண்டன்றி
வார்முகத்தை நோக்குதன மங்கையுடன் மாநகர்வந்
தார்முகத்தை நோக்குவதை யா. (51)

என்றெடுத்துப் பன்னி யிடருழக்கு மேந்தறனைக்
குன்றடுத்த வொக்குங் குலவுத்தோள் வன்றடக்கைத்
தம்பியரு மற்றுந் தரணிபருந் தாங்கினர்
நம்பிவதிட் டன்றேற்றி னன். (52)

பன்னரிய நோன்பின் பரத்துவச னுதியாம்
மன்னுசடை மாதவரு மற்றுலக மன்னவரு
மந்திரிய ரெல்லாரும் வந்தடைந்தார் மன்னுரிமைத்
தந்திரிய ரோடு தளர்ந்து. (53)

மற்றும் வரற்பாலர் வந்தடைந்தார் சிந்தனையாய்ச்
சுற்று மிருந்தவிடை துன்புழக்குங் கொற்றக்
குரிசின் முகநோக்கிக் கூறுவான் சீரார்
திருசின் முனிவன் றுதித்து. (54)

துறத்தலனை நல்லறத்தின் றாய்மையுமல் லாது
புறத்ததுனை யேதுயிர்க்குப் பொன்றி யிறத்தல்
பிறத்தலியல் யாக்கையென்றே பேருலகங் கூறல்
மறத்தலியல் பாமோ மதி. (55)

Koviloor Digital Library

உண்மையிலாச் சன்ம முலப்பிலவாங் கோடியுண்டு
தண்மையிலும் வெம்மையினுந் தாந்தழுவும் வண்மையுற
முன்னோக்க மின்றி யொலித்துவரு கூற்றினுக்குங்
கண்ணோட்ட முண்டோ கருது. (56)

பெறுவதின்முன் சீவன் பிறிவதனைக் காண்டி
மறுவகன்ற கற்புலக மன்ன வறுபதெனு
மாயிரமா மாண்டளவு மாண்டமன்னற் காயிரங்கல்
ஆயிரமாம் நாமமுடை யாய். (57)

சீலந் தருமஞ் சிதைவில்லாச் செய்கையொடு
சூலந் திகிரிசெறி சொற்றூங்கு மூலமென
வந்துதவு மூவர்க்கும் வன்கால மாம்வலையைச்
சிந்துதலு மாமோ தெரிந்து. (58)

கண்முதலாங் காட்சி கரையிலவாம் நீளத்த
விண்முதலாங் கொண்டு விரிந்தபெரு மண்முதலாம்
பூதங்கள் பொன்றிற் பொருந்தி வருமுயிருக்
கேதங்க மாகு மிசை. (59)

புண்ணியமாம் நெய்யிற் புகல்கால மாந்திரியி
னண்ணிய மாவிதியா நற்றீயி னெண்ணும்
விளக்கிரண்டு மெஞ்சின் விளியாது நிற்குந்
துளக்கமுண்டோ சொல்வாய் துணிந்து. (60)

இவ்வுலகந் தன்னி லிடரிற் கிடந்தலைந்து
மவ்வுலகந் தன்னினர காழ்ந்துபினும் வெவ்வினையைத்
துய்ப்ப வருசனனஞ் சொல்லு மளவறித
லெப்பரிசி னகு மிசை. (61)

நீசெய்த பேருதவி நீணிலத்தி னூர்செய்தார்
ஆசெய்தாத் தாதையுனக் கானதனுன் மாசெய்தாப்
புண்டரிகத் தாதைக்கும் போக வரிதாய
விண்டலகத் தாகும் விழைந்து. (62)

Koviloor Digital Library

ஐயனீ யாதொன்று மாவலிப்பா யல்லையினி
யுய்திறந்தான் மேலுமினி யூக்குண்டோ செய்யும்
வரன்முறையைச் செய்து மலர்க்கை யுதகம்
பரன்முறையைச் சேரவிடப் பாய். (63)

நீர்க்குமிழி யென்ன நிலையில்லா யாக்கைதனை
யார்க்குறுதி யென்றுநினைந் தாவலித்தாய் பார்க்குறிய
கண்ணீ ருகுத்தலினாற் கண்டதிலை யண்டர்தொழ
மண்ணீருன் கையால் வழக்கு. (64)

என்றபின்ன ரேந்த லிரங்கிவரு வேந்தரொடு
நன்றபின்ன மாமுனிதா ளுடியே மன்றல்
செறியுந் திரைப்புனலிற் செய்கவெனச் சிந்தை
நெறியுந்தி னேக்கின னின்று. (65)

புக்கவுட னீராடிப் போந்தான் மறையவனுந்
தக்கபடி காட்டச் சடங்கடுத்து முக்கையினீர்
ஈந்தான் விதிமுறையி னெவ்வுயிர்க்கு மவ்வுயிராய்
வாய்ந்தான் வரதன் மகிழ்ந்து. (66)

செய்யத் தகுஞ்சடங்கு செய்தபின்னர் செய்தவரும்
வையத் தரசர்களும் மந்திரரு மையர்களும்
ஏனையர்கள் சூழ விசைந்த பரந்தாமன்
சானகிவாழ் சாலையடைந் தான். (67)

எய்துஞ் சமயமதி லெய்திவருஞ் செய்யவளாந்
தையலையுங் கண்டுறையுஞ் சாலைகண்டான் கைகளினாற்
கண்புடைத்துச் சோர்ந்தான் கதறிவிழுந் தான்பரத
னண்புடைத்தாஞ் சிந்தை நயந்து. (68)

அந்நெடிய துன்ப மடைந்த பரதனைமன்
தன்னெடிய கையணைத்துத் தாங்கினான் பொன்னுடைய
சானகிக்குச் சாற்றினான் தார்மன்னன் றன்பிரிவான்
வானகர்க்குச் சார்ந்த வகை. (69)

Koviloor Digital Library

கன்னகருந் திண்டோட் கணவனுடன் வந்ததனல்
நன்னகர மான நடந்தகான் மன்னவன்ருன்
துஞ்சினு னென்றவுடன் றுன்பக் கடலினிடை
யஞ்சினுள் வைத்தா ளடி. (70)

அன்னை யனைய வருண்முனிவர் பன்னியர்கள்
பொன்னை யெடுத்தணைத்துப் போற்றினுர் மன்னுநதித்
தூயநீ ராட்டித் துயரந் தனைக்களைந்து
நாயகன்பாற் சேர்த்தார் நயந்து. (71)

தேன்றருதார் மேலாந் திறலுடைய நால்வர்தமை
யீன்றவர்கள் மூவரொடு மேற்றமிக்க சான்ருேர்
சுமந்திறமார் மாமுனிவர் காவலர்க ளோடுஞ்
சுமந்திரமான் வந்தான் ருெழுது. (72)

வந்தவன்னை மார்கள் வயங்கு திருவடியின்
சிந்திநின்ற கண்ணீரான் சேயவெந்தை முந்திவந்த
கான்முகத்த னைவெனைக் கைவிட்ட தென்னையென்ருன்
நான்முகத்த னைநல்கி னன். (73)

பின்னுமந்த வீரர்தமைப் பெற்றெடுத்த நற்ருயர்
பொன்னமைந்த சானகியைப் போற்றினுர் பின்னுமனைத்
தின்புற்ரு ரேங்கினு ரென்னைவினை யென்றுரைத்தார்
அன்புற்ரு ரோங்கி யழுது. (74)

சேந்துவரு வீரர் திருமா நகரினுள்ள
மாந்தர்களு மற்றும் வரற்பால ராய்ந்துவரு
சேனையெய்தி னுருந் திறல்வேந்த ரும்பிறருங்
கோனையெய்தி னுர்கள் குறித்து. (75)

நாகணையி னீங்கி நளிர்பொழில யோத்திவந்தான்
வாகணையுந் தன்குலத்து வள்ளலென்றே யேகுந்
தடஞ்செய்வான் றேரோன் தயாதற்குத் தானும்
கடஞ்செய்வான் மூழ்குங் கடல். (76)

Koviloor Digital Library

அன் றடுத்த நாளி னரசரெனு மன்னவமும்
நன் றடுத்த சுற்றமுட னற்றவருந் தன் றுணையார்
தம்பியரும் போற்றுந் தரத்திருந்த சீராமன்
வெம்பியதம் பிக்குணர்த்து மேல். (77)

வரதன் பரமடைந்தான் வையம் வரத்தாற்
சரதம் நினதுமுடி தாங்காய் விரதமுடி
தாங்கி வருதகைமை சாற்றென்று ஞற்றலொடு
மோங்கி வரு புகழா னோர்ந்து. (78)

என்ற வுரைகேட் டெழுந்து பதைபதைத்து
நின் று தொழுது நெடிதுயிர்த்து மன் றலணி
நீயன்றி யாவர் நிறுத்துவார் நல்லறத்தைத்
தாயென்றி யார்க்குமளித் தாய். (79)

மனக்கிசையா மன்வரத்தால் மன்னர்ப் புரக்கும்
நினக்கிசையாச் செய்து நிருபன் தனக்கிசையாள்
தந்தசுதன் செய்ய தவமடுக்கா தென் றுரைக்கி
னெந்தவித முய்வே னிசை. (80)

நோவதில்லா விவ்வுலகை நோய்செய்த தீயகொடும்
பாவவில்லாந் தாய்வயிற்றும் பாவியேன் மேவும்
தவஞ்செய்வே னல்லேன் தவவேட மொல்லேன்
அவஞ்செய் பழிதீர் வருள். (81)

நாணமில்லா நங்கைகற்பும் நற்பொறையி லார்தவமும்
பேணு மருளின் பெருமையுடன் காணுந்
துறைநீங் கறமிவைகள் தொல்லையோர் கொண்ட
முறைநீங் கரசைமுந்து மோ. (82)

பிறந்துநீ கொண்ட பிறிவில் பதத்தைத்
துறந்து தவந்தொடங்கத் தொன்மை மறந்துநய
நீதியின்றி வாளா னிகரறத்தைக் கொன்றதுபோ
லோதரசு நான்புரிவ தோ. (83)

Koviloor Digital Library

தொகையோங்கு மன்பாற் றுயர்த்தரசன் றுஞ்சப்
புகையோங்கு வெஞ்சுரநீ போகப் பகையோங்கு
வஞ்சகமா யானரசு வவ்வ வழக்கேதென்
னெஞ்சகமாம் நீயே நிகழ்த்து. (84)

உந்தைபுரி செய்கை யுலகோர்க்காம் நோயதனைத்
தந்தபெருந் தாய்தீமை தாமகல வந்துன்
அரசு புரிகவென வண்ணலடி வீழ்ந்து
பரசும் பரதன் பரிந்து. (85)

சொற்ற வசனத் துணிவுணர்ந்து தோன்றனினைந்
திற்ற திவணிதய மென்றெண்ணி வெற்றிவனை
வீரயான் சொல்லும் விதமறிவா யென்றுபுனை
சீரையான் சொல்லுந் தெரிந்து. (86)

முறையுற்ற வாய்மை முயலுற்ற நீதி
யறையுற்ற மேன்மை யறனுந் துறையுற்ற
யாவுஞ் சுருதிவிடா அன்பிறைவ ரேவலினால்
மேவுங் கருது விழைந்து. (87)

கேள்வியொடு ஞானங் கிளத்து பெருவேள்வி
தாழ்விலவா மேன்மை தரம்ருவு வாழ்வு
முரவர் தொழற்குரிய வுத்தமராந் தேவர்
குரவ ரெனமனதிற் கொள். (88)

அந்தப் பெருங்குரவ ராரென்று சீரொன்று
சிந்தைத் தரம்பெருகத் தேர்ந்துரைக்கிற் றந்தையொடு
தாயவரா மன்றித் தனித்தெண்ண வேறொருவ
ரேயவரா தென்று ணெடுத்து. (89)

தாய்வரத்தால் நேயமுற்ற தந்தை யிசைமேவ
வோய்வறத்தா ஞன்றரும மோங்கினை ளிவரத்தாற்
கொள்ளத் தவிர்தல் குணமுடைத்தோ நின்னுடைய
வுள்ளத்தெண் ணென்று ணுகந்து. (90)

Koviloor Digital Library

தனையரென்ற பேருடையார் தாய்தந்தை யாரை
வினையினல்ல தோரிசையை வேய்வோ நினையலொவ்வா
வன்பழியாம் செய்கை வரச்செயலோ சிந்தைமிகும்
அன்பொழியாய் நீயுரைத்தற் காம். (91)

இம்மையிலே பொய்யுரையா லெந்தை யிகமிழந்து
மம்மையிலே வெந்நரகி லாழ்ந்திடயான் செம்மையிலா
வாழ்வடையே னையா வனத்தே வருத்த முற்றுத்
தாழ்வடையேன் தாங்குந் தவம். (92)

வரனிலுந்தை சொற்ற மரபால் வழங்குந்
தரணிநின்ன துற்ற தரத்தா லுரனுடைய
நீபுரந்த தாலுரிமை நேரவரு பார்த்திவத்தைக்
கோபுரந்த ரற்கினையாக் கொள். (93)

மூன்றுலகும் போற்றவரு முன்னவனீ முன்னுதித்துச்
சான்றுலகஞ் சாற்றவரு தாரணியை யென்றளியா
தென்னதெனப் பன்னுவையே லின்றளித்தே னன்றளிப்பாய்
மன்னமுடி சூடியென்றான் மான். (94)

வைய மயக்கி வருந்திவர வைகலுநீ
செய்ய தியங்குதவஞ் செய்வதெனே செய்யாள்
நலங்குலவக் காத்திமறை நாதவென நாட்டும்
பொலங்குலவு தாமரைத்தாள் பூண்டு. (95)

பசைந்தசிந்தை நீபரிவாற் பாரை யெனது
வசந்தருத லொன்றோ வசையி லசைந்தசிந்தை
எந்தை யருள விசைந்தவாண் டின்றளவின்
முந்தையரு ளாய்முடியு மோ. (96)

தந்தைசொலால் வந்த சதுர்த்தசமா மாண்டு முற்று
நிந்தைசொலாக் கானமியா னேர்ந்துவரத் தந்தெனைநீ
மீண்டளிப்பா யென்ற வியனுலகவ் வாண்டுவரை
யாண்டளிப்பா யென்றனை யால். (97)

Koviloor Digital Library

மன்னனிசைந் தென்னை மணிமகுடஞ் சூடுகென
வன்னதிசைந் தேனுணைக் கஞ்சியே யென்னதுரை
நீமதிக்க வேண்டுமையா நெஞ்சிற் கவலையடு
மாமதிக்குந் தாராய் மகிழ். (98)

மாலான வள்ளல் வழங்குரையின் மெய்ப்பரதன்
மாலான சிந்தைகண்டு மாற்றியே மேலாம்
விசிட்டனென வந்த விரைமலரோன் மைந்தன்
வசிட்டனெனு மாமுனிசொல் வான். (99)

அன்றரியின் வந்த வயனளித்த பூவதனி
லின்றைவரை யுன்குலத்தி னெண்ணுமிக்கோ ரொன்று
முறையிகந்தா ரில்லை முதல்வனீ யான்சொல்
மறையுகந்து கேட்டருள் செய்வாய். (100)

எற்ற குரவ ரெவர்க்கு மிசையறிந்து
சாற்று மிருமை தருபயனும் போற்றும்
பெருமை யுடைய பெரியோ ரொருவர்
அருமை யுடையகுரு வாம். (101)

என்றதனுல் நானுனக்கிங் கேற்றமிகு விஞ்சைதந்த
வொன்றதனுல் ஞான முயர்ந்ததுண்மை நன்றதனுல்
என்னுரையா லிவ்வுலகை யேற்றளித்த லாற்றலென்ருன்
தன்னுரையால் மேன்மைத் தவன். (102)

ஆன்ற முனிவரனை யன்பிற் ெருழுதுரைப்பான்
சான்றவரா யேன்றவரர் தாமாக வேன்றவறஞ்
செய்யத் துணிந்ததனைச் செய்யாது மற்ெருன்றைச்
செய்யத் துணிவதென்னை சீர். (103)

தாய்பணித்து வந்தமொழி தந்தைகொள யானறிந்து
வேய்பணித்த கானம் விழைந்தபின்னர் நீபணித்தாய்
யான்செய்யத் தக்கபணி யாததனை யோதென்ருன்
வான்செய்யத் தக்கபணி மன். (104)

Koviloor Digital Library.

முனியு முரைக்கு முறைமை யறியோ
மினியென் றிருக்க விளையோ னனையதெனில்
நாடாள்வார் நண்ணவினி நானும் நணுகின்று
காடாள்வே னென்றான் கனித்து. (105)

அவ்வழியிற் றேவ ரறிந்து பரதனன்பா
லிவ்வழியி னின்றுவள்ள லேகலின்றித் தெவ்வழிக்கும்
நேயமொழி தன்னை நினைவின் வரவுரைத்தார்
காயமொழி தன்னிற் கலந்து. (106)

ஏத்தும் பெருங்குணத்தி ராமனிருந் திவ்வழியே
சாத்தும் பிதாவறத்தைத் தாங்குவா னூத்தவாண்
டேழிரண்டே டேழு மிசைந்தளித்த லாம்பரதன்
வாழியென்றார் வானோர் வரைந்து. (107)

வானவர்கள் சொல்லை மறுத்தல் வழக்கன்று
லானபக லென்மொழியா லாளரசை யானுமுடன்
வந்தளிப்பேன் சிந்தை வருந்தாது போதியெனத்
தந்தளித்தான் மெய்க்கருணை தான். (108)

ஆமுறையே யாண்டிரண்டி னய்ய வயோத்திவந்து
கோமுறையைக் கொள்கலையேற் கூடெரியிற் சாமுறைதான்
சாற்றினே னின்னாணை சார்ந்த மொழியென்று
போற்றினான் நின்றான் புகழ்ந்து. (109)

என்பதனைச் சொல்பரத னேதுமொரு துன்பிலனா
மன்பதனைக் கண்டன்ன தாமென்றான் துன்ப
மொழிந்தா னுவந்தா னுகளமலர்க் கண்ணாற்
பொழிந்தான் கருணைப் புனல். (110)

விம்மிப் பரதனினி வேறுசெய்வ தில்லையெனத்
தம்மிற் பரிந்து தனித்தெண்ணிச் செம்மைதரு
பாதுகையைத் தந்து பதமளிக்க வேண்டுமென்றான்
மேதகையான் தந்தான் விழைந்து. (111)

Koviloor Digital Library

அடித்தலத்தைச் சேர்த்தா னமுதபுனற் கண்ணன்
முடித்தலத்திற் சூடி முறையாற் படித்தலத்தின்
வீழ்ந்தா னிறைஞ்சி விரும்பினன் சென்றிசைக்கண்
வாழ்ந்தான் பரதன் மகான். (112)

ஈன்றவர்கள் தாமுதல வெண்ணிலவாஞ் சுற்றமுடன்
சான்றவர்கள் தாங்குந் தவமுடையோ ரேன்றுவர
வான்ற தவத்தா னமரர் தொழச்சென்றான்
மூன்றுநூன் மார்பன் முனி. (113)

பண்டைநூ லாய்ந்த பரத்துவனும் போயினன்
மண்டுநகர் மாந்தர் வழிச்சென்றார் விண்டுறையும்
பண்ணவருஞ் சென்றார் பரந்தாமன் சொல்வழியா
னண்ணுங் குகனு நடந்து. (114)

பாதுகங்கள் தாங்கிப் பரதன் புனல்கரையின்
மோதுகங்கை நீங்கி முகமலரும் போதார்
கடியொழில யோத்திபுகான் கங்கு றனிலும்
நெடிதுறக்கங் கொள்ளா னினைந்து. (115)

நந்திப் பதியினிடை நாதன் சரணயுகம்
முந்தித் தனிக்கோல் முறைபுரியச் சந்திதரும்
அந்தி பகலு மனவரதம் நோற்றிருந்தான்
சிந்தை யரிசரணிற் சேர்த்து. (116)

குன்றிருந்த கோமான் குறிக்குந் திருநகரார்
நன்றுவந்து சேர்வரென ணாடியே தன்றுணையாம்
வென்றிசெயுந் தம்பியொடு மேலான நங்கையொடும்
தென்றிசையை நோக்கும் சிறந்து. (117)

கிளைகண்டு நீங்கு படலம் முற்றிற்று.

ஆகூ படலம் 12—செய்யுள் 1036.

அண்ணாமலையார் துணை

அயோத்யா காண்டம் முற்றிற்று.

Koviloor Digital Library

மூன்றாவது

ஆரண்ய காண்டம்.

விராதன் வதைப் படலம்.

ஆதிபயற் றந்தவுந்தி யண்ண லடியவற்காச்
சோதியபொற் கந்திவர்ந்து தோனறுவள்ளல் வேதியர்க்கு
முன்றன்று மேலோன் முளரிப் பதமணிந்தால்
என்றென்றும் வாரா திடர். (1)

தத்துவந்தேர் மேலோர் சமரசமா மாமனத்தான்
நத்துவந்தே ரத்தமிசை நாட்டுவில்லான் பத்துவந்த
கந்தரத்தாற் காய்ந்து கடவுளரைக் காத்தவள்ளல்
சுந்தரத்தாள் சிந்தையுடைத் து. (2)

முத்தனைய மொய்சகையாள் மூன்றுலகு மீன்றவன்னை
நித்தநிய மத்தர்மனம் நேர்ந்தளிக்குஞ் சத்தியுடன்
அத்திரிப்பே ரந்தணன்ற ணச்சிரமத் துற்றடைந்தார்
அத்திரிப்பேர் வில்லா ரறிந்து. (3)

சுத்தமறைத் தத்துவத்தின் சோதிவரன் ஞானவரர்
சித்தமறைப் பைத்தவிர்க்குஞ் செஞ்சுடரோன் வெத்திசெயா
முக்குறும்பை வீசு முனிவன் சரணமலர்
புக்கிறைஞ்சப் போதன்விளம் பும். (4)

குமர ரிவணடைந்த கொள்கை யெளிதோ
வமர ரிவணடைந்த வான வெமரின்
தவமுயனறோர் யாரென்றான் தத்துவந்தேர் சிந்தை
யுவமையன்று மாமுனிவ னோர்ந்து. (5)

Koviloor Digital Library

அன்ன முனியோ டவணுறைந்தம் மாமுனிவன்
பன்னி யனசூயை பண்பணியாற் பொன்னுடையுங்
கொண்டகன கத்தணிகொள் கோதை குமரனுடன்
தண்டகவ னத்தையடைந் தான். (6)

எட்டொடெட்டு யானை யிரட்டி யரிமாவும்
வட்டமிட்ட வெங்கண் வரையாளி கிட்டிவிட்ட
முத்தலைவன் சூல முரண்கை யுடையரக்க
னத்தலைவந் தார்த்தா னடர்த்து. (7)

செஞ்சுடரை யொத்துச் செறியு மயிர்ச்செனியன்
நஞ்சுருவம் பெற்று நடந்ததென மஞ்சுருவு
மின்கிரிகள் பாத விசையிற் படமுடுக்கித்
தன்கிரிகை சாரவடைந் தான். (8)

கண்கடற்றீப் பொங்கக் கவினு மழையடுத்து
விண்கடத்து மாமலைகள் மேற்குலுங்க வெண்கடத்தும்
அந்தகனு முட்க வலைகடல்சூழ் மண்டுளங்க
வந்தகனல் மட்கவரு வான். (9)

வாளுழையர் பாய்புரவி மால்யானை தேரினொடு
கோளுமுவை வாளரிகள் கொண்டவெலாம் நீளும்
அடைகுலவ வாரி யரவா லசைத்த
தொடைகுலவுந் தோளையடுத் து. (10)

குன்றடுத்த தென்னக் குறிக்குமத மாவடுக்கிக்
கொன்றடுத்த வோர்கை கொடுத்துதவ வொன்றும்
வழியாப் பிலமனைய வாயடுத்துத் தின்று
மழியாப் பசியையுடை யான். (11)

பன்னகத்தின் மன்னர் பணங்கொள் மணிபறித்து
மின்னகத்தின் மானமிடை விட்டரவின் துன்னகத்தின்
கோளினொடு தாரகையைக் கொண்டு தொடுத்தவட
மாளுதட மார்பையுடை யான். (12)

Koviloor Digital Library

பம்புசெக்க ரொக்குமயிர் பக்க மெரியவரு
கும்பமுற்ற நெற்றி குலவுநலத் தும்பர்மன்னன்
மால்கரியி னோடை வயங்குமொரு கிம்புரியை
மால்வளையாத் தோள்வளைகொள் வான். (13)

தங்குபெருங் காளிமையுந் தானே தழைந்துவரப்
பொங்குகொடுந் தீமை புழுங்கியெழ மங்கிவரு
பாவவிட மாவனலி பற்றுகங்கு பூசியெங்கும்
வாவுகலி போலவரு வான். (14)

புலித்தோல் திருகுறவே போர்வா ரணத்தின்
கலித்தவுரி நீவி கஞல வலித்ததிசை
வச்சணிந்த யானை மணிமா சுணத்தமைத்த
தச்சணிந்த தானைமிடுக் கன். (15)

செங்க ணரவிற் செறிமணியாற் செய்யவொளி
வெங்கண் வலையம் விளங்கவே சங்காம்
சலஞ்சலத்தி னுகுந் தவள வளையா
லலஞ்சலத்தி னங்கையட லான். (16)

முந்துவெள்ளி வெற்பும் முதன்மையணி தங்கவெற்பும்
பந்துமுந்து பாடு படப்படர்வோன் வந்தவிரி
மண்ணிடைய னென்றாலும் வானவர்கள் கண்ணினுள்ளு
மெண்ணிடைய நின்றோ னிவன். (17)

பூதமெல்லா மொத்துப் பொருந்து வடிவத்த
னோதமெலா மொத்தகுர லோனயனு லோதுவரம்
பாதலக்கம் யானை படைத்தவலி யானிவனற்
காதலக்க னுற்றதுல கம். (18)

சாரத் திரிவிலங்குந் தாருநிரை யுந்தரையின்
பேரக் கிரிகள் பிளந்துகவே வீரமுற்ற
வெஞ்சிலையார் முன்னம் விராத னெனவெவர்க்கும்
அஞ்சிலையான் வந்தா னடுத்து. (19)

Koviloor Digital Library

நில்லுநில்லு மென்று நிணமுண்டு நீண்டகொடும்
வல்லெயிறு மின்னுபகு வாய்திறந்தே யல்லிபுல்லும்
அன்ன மனையாளை யங்கை யெடுத்தகன்றான்
துன்னு விசும்பு தொடர்ந்து. (20)

காளைமைந்தர் கண்டு கதத்தார் மதித்தபெருந்
தோளமைந்த வில்லைத் தொடுத்தகையார் வாளி
வலக்கையர் வஞ்சகனை மாளவந்தா யெங்கே
விலக்கையே யென்றார் விரைந்து. (21)

ஆதியயன் தந்தவரத் தாவியக லாவலியே
னேதியதொன் றென்னுடலை யென்புரியு மாதிவளை
விட்டோடு மென்று விரைந்தா னமரர்புகழ்
கட்டோடு தின்றகடன். (22)

வீரன் சிறிதடுத்த வெண்முறுவல் கொண்டிவனும்
போரென் சிறிதறியான் பொற்புரனுந் தீருமெனப்
பூணொலிக்கும் வில்லதனை போற்றுமிடக் கைப்பிடித்து
நாணொலித்து நின்றா னகைத்து. (23)

வஞ்சக் கொடும்பூசை வாய்க்கொண் டெனமறுகு
செஞ்சொற் கிளியைவிட்டுத் தோற்றமின்றி நெஞ்சுளுக்கி
நின்றா னிமிர்ந்தா னிகரில்லா னேரடுத்துச்
சென்றான் புகன்றான் திறல். (24)

தீய்முகத்தாஞ் சூலந் திரித்தெறிந்தா னன்னதனைத்
தீமுகத்த கோலாற் சிதைத்திடவே நோய்முகத்தான்
போரொடுங்க வின்றிப் பொருப்பென் றவையெல்லாம்
வேரொடுங்கொண் டோச்சும் விரைந்து. (25)

விட்டமைந்த மாமலைகள் வீரன் வயிரமணிக்
கட்டமைந்த வாளி கடவுதலால் முட்டமைந்து
மாறுபட நின்று மறித்துமவன் மேற்படலால்
ஊறுபட நின்றா னொருத்து. (26)

Koviloor Digital Library

வேதத்தைத் தந்த விழுப்பொருளை ஞானியர்க்குப்
பாதத்தைத் தந்த பரஞ்சுடரை யோது
மராவனையி னீங்கு மமலன் றனையோர்
மராமரங்கொண் டெற்றவரு வான். (27)

எற்றிவரு வீர னிரண்டு கணையதனால்
மாற்றி மரத்தை மயக்கமுளான் கூற்றடுத்த
தோளிடையு மார்பிடையுந் தோன்றுபனி ரெண்டுகணை
வாளிடையான் விட்டான் மதித்து. (28)

எரிவகணை யேற்றடுத்தோ னெங்குநிலை யின்றி
யுருவநிலை யில்லா வுணர்வான் அருவி
வரைமீதி ரத்தம் வழிய மருவித்
தரைமீ திருக்குந் தளர்ந்து. (29)

மெய்வரத்தைக் கொண்டோன் விடுபடையை மாற்றுமெனச்
செய்வரத்த ரத்தர் சினவாளாற் கைதுணித்து
மென்றிவர்கள் தோளி னிவர்தல் தமையறிந்தாற்
குன்றிவருங் கோளரியொக் கும். (30)

இந்தடுத்த சூர னிவர்ந்துவரு மைமலைபோல்
வந்தடுத்த கோர வடிவுடையான் சிந்தைவலி
தாழ்குவனோ வென்னத் தனித்துவரு சாரிவந்தான்
வீழ்குருதி மன்ன விரைந்து. (31)

மாதருவார் தன்கணவன் வஞ்சன் வினையதனாற்
போதருவான் கண்டு புலம்பியே யூதையெறி
கொள்கொம் பெனவீழ்ந்தாள் கோமகற்கு வந்தசெய
லுள்கின்ற சீதை யொசிந்து. (32)

எறுமுத லானதுணை யில்லா ளலமந்தாள்
திறுமுத லானபவந் தீர்த்துலகிற் காதிமுதல்
அன்னை யனைய வறவோர் தமைவிடுத்திங்
கென்னைவிழுங் கென்று ளெடுத்து. (33)

Koviloor Digital Library

அழுதுணங்கிப் பின்றொடரு மன்னைசெயல் கண்டு
முழுதுணர்ந்த தம்பி மொழிவான் பழுதடையாத்
தேவிதுயர் தீரவினிச் செய்யாத தென்னையென்றான்
பாவிதுயர் கூரவதைப் பான். (34)

என்றிளையான் கூறநமக் கேகு நெறியிடையே
சென்றிளையா னென்றதனாற் சேர்ந்திருந்தே னன்றாகிற்
சாகவடற் கென்னென்று தன்கழலா லுந்துதலு
மாகபடன் வீழ்ந்தான் மறிந்து. (35)

தோளிரண்டும் வாளாற் றுணித்து விசையாலே
மீளிரண்டு வீரர் விளங்குதலுங் கோளிரண்டைச்
செங்கணர வந்தொடர்ந்த செய்கை யடுத்ததனை
அங்கணவர் கண்டா ரயிர்த்து. (36)

புண்ணிற் புதுநீர் பொழிய வவனுயிரும்
விண்ணிற் படரா விகற்பத்தான் மண்ணினிடை
பொத்துவதுண் டென்று புகன்றா னிளையவனும்
அத்தவதுண் டென்றா னறிந்து. (37)

மதயானை யன்னான் வகிர்ந்த குழிவா
யதமா வழுந்த வவனுஞ் சதமாகு
மன்பரித யத்துவள ரண்ண லடிமலராற்
தன்பரிவு தத்தமலிந் தான். (38)

பட்டதன்மை கண்டு படர்சாபந் தன்னால்முன்
கட்டவன்மை கொண்ட கடையுடலை விட்டுவிண்ணிற்
தோன்றும் விரிஞ்சனெனுந் தூயமுட்டை தந்ததனிற்
தோன்றும் பரம்பொருளொத் து. (39)

பொறியொன்றிச் சென்றடுத்த புந்தி யுணரா
னெறியொன்றி நின்ற நிலையான் பிறிவின்றிப்
பண்டுடைய வன்பான் பகர்வான் பரம்பொருளைக்
கண்டுடைய தன்பாற் கசிந்து. (40)

Koviloor Digital Library

வேதங்க டோருநிறை மெய்ப்பொருளே யெய்ப்புடைய
மாதங்கம் போற்றி வருந்துமன்னு ளோதுங்
கராவணைய நேமிதொட்ட கார்வண்ணு மாலே
யராவணைய வென்னையடுத் தாள். (41)

உலகெல்லாங் கொண்ட துனசரண மென்று
லலகில்லா வுன்வடிவென் ஞமோ வுலைவில்லாய்
பூதங்க டோறும் புனைவாய் பொறுக்குமோ
வாதங்க மின்றி யவை. (42)

ஓயாத வேதன் முதலா வுளராகி
மாயாத வானவர்க்கு மற்றுயிர்க்கும் நீயாகுந்
தாதை யெனின்முறையே தாயாகி ஞரெவரே
யாதியெனுஞ் சோதி யருள். (43)

நீயாய்ச் சமையமெலா நின்று யுலகெவையு
மாயாச் சமயநினக் கன்னியமோ தீயாரி
னன்றொளித்தி யால்வெளியி ஞடிவரிற் கேடுமுண்டோ
வன்றொளித்த மாயையுடை யாய். (44)

தாயறியாக் கன்றில்லை தன்கன் றறியாத
தாயரிதா நீயுலகின் றுயாகி நேயமுடன்
எப்பொருளு நீயறிந்தா யெல்லாமா முன்னிலையை
எப்பொருளுங் காணுத தென். (45)

அரவாய்ச் சுமந்து மயிலெயிற்றி னேந்தி
யொருவாயி னின்று மொளித்து மொருதாளிற்
பூமங்கைக் கின்னவகை போற்றுவையே லேற்றமலர்
மாமங்கைக் கென்ன மனம். (46)

எல்லாச் சமயத்து மேத்துங் கடவுளரும்
வல்லாராய் நின்றுந்த வம்புரிவார் நல்லாய்நீ
எற்ற தொருவினையு மில்லா தவர்போல
மாற்றமுரை யாதுறங்கு வாய். (47)

Koviloor Digital Library

அன்னமாய்ப் பன்னு மயனுக் கறைந்தமறை
முன்னமார் சொன்னார் முதலோனே தன்னமாய்ப்
பின்னமா யொன்றாய்ப் பிறங்குந் தனிமுதலே
என்னமா மாய மிவை. (48)

ஒப்பிறையு மில்லா வொருவ வுவந்துறையு
மப்புறையுள் விட்டென் னருந்தவத்தா லிப்பிறவி
யன்னவத்தைத் தாற்றி யருள்புரிந்தாய் நாயடியேன்
முன்னவற்கென் செய்யு முறை. (49)

இற்றியம்பி ஞானையுனக் கிவ்வாறு வந்ததனை
முற்றியம்பு மென்றவவன் முன்னுரைத்தான் வெற்றிமிக்காய்
தும்புருவென் பேரேன் துகளில் தனதன்சூழ்
அம்பரத்தி னுள்ளே னமர்ந்து. (50)

ஆடு மரம்பைதனக் காங்கானம் பாடுவேன்
உளடுவந்து கூட வுவந்ததனால் வாடிக்
கரக்கவந்த காமக் கனலின் செயலா
லரக்கன்மைந்த ஞானே னழிந்து. (51)

அன்னயக்க னன்றளித்தா னாதிப் பரம்பொருளா
நின்னயக்குந் தாளதனில் நீங்குமென மன்னி
நலிஞ்ச வுயிரதனை நன்றடுத்துத் தின்னும்
கிலிஞ்சன் மகனா கினேன். (52)

அன்றுமுத லின்றளவு மான்ற மனத்தொன்று
நன்றுமுதற் றீதெனவு நாடகிலே னின்றுன்
திருவடியிற் சிந்தை தெளிந்ததெனச் சொற்றான்
கருவடியைக் காணான் கமழ்ந்து. (53)

தெறுத்துவந்த தீதெல்லாஞ் சிந்தையிற்கொள் ளாது
பொறுத்துவந்து காக்கவெனப் போனான் அறத்துவந்த
வள்ளலடற் றம்பியொடு மங்கை சனகியொடு
முள்ளமுடன் சென்றா னுவந்து. (54)

விராதன் வதைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்.

குரவங் குவிகோங்கு கூடுகொம்பி னோடு
மிரவங்க ணுற்றபொழு தேகிச் சரவங்கன்
போற்று தவத்தான் புரியுமலர்ச் சோலைவந்தான்
ஏற்றுதவத் தார்க் கிறை. (1)

செவ்வேலைத் தாங்குகரர் சென்றனர்கள் சேரலுறு
மவ்வேலை வந்தடைந்தா னுயிரமாம் தவ்வா
திரவும் பொலிகமலத் தேற்றமிகு கண்ணான்
விரவும் மொலிவிண்ணோர் வேந்து. (2)

வானிற் பொலிவுதரு மங்கையர்கள் கண்மலராம்
கானிற் பொலிகட் களிவண்டு மேனிலைசேர்
நாரதனார் வீணையிசை நற்றேனை யுண்டுமகிழ்
ஆர்செவியாம் வண்டுமுடை யான். (3)

நற்றுறைசேர் வேள்வி நலத்தவொரு நூறுடையான்
விற்றுறைசேர் தேவர்கட்கு மேலானோன் நற்றவர்கள்
காணுமுதற் றேவரலாற் காம ரமுதர்பணி
மாணுமலர்ச் சேவடிகொள் வான். (4)

செம்மலர்மா னென்னவரு தேவி யுடனளிசேர்
மும்மதமும் வெண்ணிறமும் முன்னுயர்தாள் வெம்மா
மிசையா னிசைவெள்ளி மேவுமலை யண்ண
லசையா வுவமையுடை யான். (5)

தானின் றயலிற் றயங்குமொளி தண்கதிரோன்
யானின்ற தென்னவொளி யெஞ்சிடமா வானின்ற
பொற்பதமே வந்துருவாய்ப் பொன்னினொளி மேலாகி
நிற்பதென வெண்குடையா னோ. (6)

Koviloor Digital Library

திசைகட்டு மால்கரியாற் றெட்ட வமுதம்
பசைகட்டிக் கட்டும் பலபோர் விசைகட்டும்
தானவர்கள் கீர்த்தியெலாந் தாங்கி முடிந்ததென
மேனிவருஞ் சாமரையா மே. (7)

செங்கதிரைச் சேரத் திகழுந் திருமுடியான்
மங்குலிடை மின்போலும் மாலையினன் துங்கமிகு
செம்மணியின் கஞ்சுகியான் சேர்திருவின் வெண்ணகைபோல்
வண்மைமிகு தோள்வளைச்செல் வன். (8)

மாமணியாற் பாட மருவு மிழையொளிதான்
கோமருவ வெங்குங் குவிந்தெழலாற் பாமருவு
வில்லாருங் காந்திமழை மேக மெனப்பொலிவா
னெல்லாரும் போற்று மிறை. (9)

தேனுடன் தொங்கல் செறிந்த திருமார்பின்
வானுடு மங்கையர்கண் வண்டுடையான் மேனுடும்
காய்சினத்தி ராவணன்றே கத்திற் படிந்துமடல்
வாய்மடிக்கா வச்சிரங்கொள் வான். (10)

நின்று னெதிரடுத்து நின்ற நெடுந்தவனும்
சென்று னெதிரிற் சிறப்பமையா நன்றுவ
தெய்தியவா றென்னென்று னேற்ற படியுரைப்பான்
மெய்திறலான் வானவர்கள் வேந்து. (11)

நின்னு லியம்பரிதாம் நீதி நெடுந்தவநின்
றென்னு லியம்பரிதா மென்றுணர்வா னன்னுன்
முகனுடையான் தந்தளித்தான் முன்னுமுலகம்
தகவுடையாய் வந்தருளென் றுன். (12)

எல்லா வுலகினையு மெவ்வுயிருந் தந்தருளும்
வல்லா னுலகம் வழங்கினன் வில்லாரும்
நந்தாப் பெருந்தவஞ்சேர் நன்னு டதுநீயும்
வந்தாற் பெருமை வரும். (13)

Koviloor Digital Library

எல்லா வகையுலகுக் கேற்ற மிகுந்தமையான்
சொல்லா வகையுணருந் தொல்லறத்தாய் நல்லா
யுடனீ நடவெனலு முற்றுரைப்பான் முற்றுங்
கடனீ தலவாங் கருத்து. (14)

சொற்பொங்கு மேன்மை தொழில்வாய் செயல்வாய்ந்து
சிற்பங்கள் வீவாகுஞ் சேர்குவனே லற்பங்
கருதே னருந்தவமோ கற்பம் பலவாங்
கருதேன் பிரிதொருல கம். (15)

சொற்றுந் தரமன்று சூழ்கழலாய் வாழ்வடையப்
பெற்றும் பெறுகில்லாப் பெற்றியதே மற்றுமவை
சொல்லுவதென் வல்லதவந் தோய்ந்து பலமுடித்தேன்
ஒல்லுவதெ னிவ்வுலகொன் றோ. (16)

சிறுகாலை யில்லா திரியா நிலையாம்
குறுகா குணம்வேறு கொள்ளா வுறுகாலும்
பூதமெல்லா மொன்றிடினும் போகா நெறியடைவேன்
சாதமெல்லா மொன்றுதென் றான். (17)

என்றின்ன சொல்லி யிருக்குந் தருவாயின்
வன்றிண் சிலையார் மருங்கெய்தி யொன்றுங்
கிளரவரு மோதையினுற் கேடில்லாச் செய்கை
வளரவரு மென்றார் வரைந்து. (18)

கொம்பத் தகைநாலுங் கோள்வயிரங் கொண்டடுத்த
கம்பத்த கைக்கரியைக் கண்டனமால் பம்பு
பரசடைந்த தேவர் பரவவரு தங்க
வரசடைந்தா னென்று ரவர். (19)

மாநேருங் கண்ணியையு மைந்தனையுந் தண்ணளியார்
பூநேருஞ் சோலைப் புறநிறுவி யானேறே
வாளரியே றென்ன வருவான் வளர்பொழில்வாய்
தாளறிஞர் போற்றுந் தவன். (20)

Koviloor Digital Library

கண்ணு யிரத்தான் கடவு ளரசுமறைப்
பண்ணு யிரத்தாம் பரம்பொருளை மண்ணோர்க்
கரசா மகிழ்ந்தளிக்கு மண்ண லடியைப்
பரசா மகிழ்ந்தான் பரிந்து. (21)

நல்லறத்தின் தேவே நளினை யணைகோவே
வில்லறத்தின் வாய்ந்த விழுப்பொருளே சொல்லறத்தார்க்
குற்ற துணையே யுனதடியை யல்லாது
மற்றதுணை யேதென்றான் மன். (22)

ஆதியந்தந் தேரு வனகா வருட்கடலே
வேதியர்கள் போற்றவரு மேலோனே சோதியொடு
மாமதியைத் தாரையென வைத்தவர வித்தகனே
தாமதியா தென்னையளித் தாள். (23)

ஒன்றாகி மூலத் துருவம் பலவாகி
நின்றாய் சமையமெலா நீயேயாய்க் குன்றாத
கானநத்தி வந்தெங் களைக்காக்குங் கண்ணமதி
யானனத்தா யானடியே னும். (24)

இன்னபல பன்னியறிந் தேத்தி யருளடைந்து
பொன்னுலகஞ் சென்றான் புரந்தரனு மன்னும்
பனகவணைப் பண்ணவனும் பாங்கிற் றெழுதான்
கனகவண மாதவனைக் கண்டு. (25)

ஏந்திழையுந் தம்பி யினிது வருகவென
வாய்ந்த தலைவன் வரவெதிர்ந்தான் ஆய்ந்தோ
னடிதொழலு மன்பா னருளி னமர்ந்தான்
படிதொழநேர் செய்தவப்பண் பான். (26)

அவ்விடையி னண்ண லமர்ந்தா னறிவனுந்தான்
செவ்வியுறு காதை செவிக்குதவ நவ்விவிழி
நங்கையொடு கேட்டிருந்தா னுதன் பகையிருளுங்
கங்குலதுந் திரக் கவின்று. (27)

Koviloor Digital Library

ஆயிடையிற் பேரறிஞ னன்றோ னெதிரழுவத்
தீயிடையிற் சேருந் தெளிவுடையான் நீவிடைதான்
தாவென் றருணெறியாற் சார்ந்தான் றவத்தொழிலின்
கோவென்ற மேலோன் குறித்து. (28)

வரிசிலையான் வள்ளல் மறைய வினைநீ
புரிதொழிறா னென்னையெனப் போற்றித் திருமா
மகடலைவா நீயின் வழியுலகஞ் சேரும்
வகையருள்வா யென்றான் மகிழ்ந்து. (29)

யான்சே ரமைதி யதனிற் செயலென்றே
மான்சே ருரிகொண்ட மார்பவென மீன்சேர்
கொடியோன் விறலையடு கோமுனிவன் கூறும்
முடியோன் மகற்கிம் மொழி. (30)

ஆயிரஞ்சா ராமுகத்தா லான்ற தவமயர்வேன்
நீயிவண்சேர் நேய நிலையுடையேன் போயினவா
மென்சே ரிருவினையு மேற்ற பிறவியிலை
பொன்சேர் புயத்தாய் புகல். (31)

இந்திரமால் வந்துரைத்தா னேற்றமிகு போற்றலொடு
வந்திருந்து வாழ்வாய் வரனுலகந் தந்திருந்தா
னென்னவது சார விசையேன் பரமபத
மன்னவது கொண்டேன் மனம். (32)

ஆதலினாற் காண வருளா யெனவுரையா
காதலியா ளோடு கனல்மூழ்கிப் போதமிகும்
வானும் பரம வழியாக வந்தடைந்தான்
தானும் பரனுருப தம். (33)

சரபங்கர் பிறப்பு நீங்கு படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

அகத்தியப் படலம்.

அனையா னிறுதி யறிந்தமைவி னேக்கிப்
புனையா மகிழ்ச்சி புரிந்து தனையாகும்
திண்சிலையார் கொம்பினொடு சேர்ந்தார் திகழ்கனக
வண்சிலையார் சாரல் வழி. (1)

மலைசேர் நதிகள் மலைக்கல்லின் பாரை
யலைசேர் கதிகொ ளருவி யிலைசேர்ந்த
மேம்பழுவஞ் சூழல் விளங்கு நிலைத்தடங்கள்
தாம்பழகு மாவழிசென் றார். (2)

பண்டயனுற் போற்றவரு பாலகில்லர் ஞானவல்லர்
முண்டர்களு மோன முதலோர்கள் கொண்டுவளர்
தண்டகத்தைச் சேர்ந்தார் தவத்தோ ரிராமனைத்தான்
கண்டகத்திற் றேர்ந்தார் களி. (3)

ஆய்வலிக்க ணாரரக்கர் ஆனவர்க ளால்வருத்து
மாய்மறுக்க மேக மனமகிழ்ந்தார் தீய
வனத்தகன்ற தாயின் வரவான் மகிழ்ந்த
வினத்தகன்ற தாக விருந்து. (4)

கரக்கரிய கோபக் கனலரக்கர் காயப்
பொரற்கிடமில் லாது புழுங்கி யரக்கரென்றுழ்
அப்பரவை வீழ்ந்தோ ரடுத்தாரி ராமனெனுங்
கப்பறனைக் கண்டு களித்து. (5)

வேண்டுவன வேண்ட விழைந்தளிக்கு மெய்த்தவத்தைப்
பூண்டுவரு மேலோர் பொறைச்செருக்கால் மூண்டுவரு
கோபத்தைச் சாரார் குறிக்கு மரக்கர்செயு
மாபத்தைச் சார்வா ரறிந்து. (6)

Koviloor Digital Library

எழுந்தனரா யெய்தி யிருண்டவர மேகக்
கொழுந்தனவாக் கொண்டவண்ணக் கோவை யழுந்துமனக்
காதலினாற் சேர்ந்தார் கருத்து மவன்சரணிற்
போதலினா லாசி புகன்று. (7)

இனியதவச் சாலையிற்கொண் டேகினா ரீங்கே
நனியுதவச் சார்தியென நாட்டுந் தனியிடத்தைத்
தந்தார்க ணல்ல தனிமா தவரெவரும்
வந்தார்க ளல்லலறை வான். (8)

எய்து முனிவரரை யேத்துவந்து காத்தவரன்
ஐயனரு ளென்னையென வந்தரந்தார் வையகத்தைக்
காவலன்றன் மைந்த கருத்து கொடுந்தொழிலின்
றீவலங்கே ளென்றார் திகைத்து. (9)

இரக்க மிருக்கா விதயர் கொடிய
வரக்க ரறத்தா றறியார் நெருக்கவதால்
நல்ல தவத்துறைவார் நாட்டம் விடுத்தடுத்தோ
மல்லதவத் துறைவா ராய். (10)

வல்லியங்க ளாடும் வனத்துறையு மான்களென
வல்லியங்கு மெல்லியினு மாற்றகிலேம் சொல்லும்
அறநெறியு நீங்கினே மான்றோர்க் கருள்வாய்
மறநெறியும் விடுதரு மா. (11)

மாதவங்கள் செய்யகிலே மாமறைக டாமுறையின்
ஓதகிலேஞ் சீடர்க் குதவகிலே மூதெரியை
மந்தணமா யேனும் வளர்க்ககிலே மாதலினா
லந்தணரு மல்லேமென் றாம். (12)

இந்திரனு மென்னி லிகலரக்க ரேயினவை
சிந்தையொடு சென்னி சிறந்தணிவா னெந்தையிவண்
போந்கடவி யண்டிப் புரிந்தாய் நலமதுவு
மேகடவ மென்றா ரெடுத்து. (13)

Koviloor Digital Library

உருளுடைய நேமி யுலகை யளிக்கும்
பொருளுடைய மன்னன் புதல்வ விருளுடைய
வைகலே மாறு வளரிரவி யாளவந்தாய்
செய்கலேம் வீறுஞ் செயல். (14)

புகல்புகுந்தா ரல்லாற் புறத்தண்டந் தன்னி
லகல்வரென்றால் வீழ்வரென தம்பால் தகவிலவாந்
துன்பந் தவிருதிர்நீர் தூய்மையுடை யீரென்று
முன்பன் பணிப்பான் முனிந்து. (15)

வேந்தன் விளிந்திடவு மெய்த்தாய் வரங்கொளவு
மேந்தலெம்பி யேங்க வெனதுநகர் மாந்தரெலாம்
நண்ணியத்தாந் துன்பம் நவிலவனம் வந்ததெந்தன்
புண்ணியத்தா லென்றான் புகழ்ந்து. (16)

அறந்தவறு நீதியுடன் அன்பும் அருளும்
சிறந்தவராம் வேதியர்தம் செய்கைத் திறந்தான்
மறந்தபுல்ல ரைத்தொலைக்க மாட்டா திருந்தாற்
பிறந்ததொல்லை யாலென் பெறும். (17)

நிவந்தமறை யாலுயர்ந்த நீவிர்களுந் தீயர்
கவர்ந்தநிறை மாநடனங் காண வுவந்திலனேல்
அம்பமைந்த தூணியொடு மாம்பெருவி லேந்தியதோ
ணம்புமைந்திற் கென்னும் நலம். (18)

ஆவுக்கா னுமகி ழந்தணர்கட் கானு
மேவர்க்கா னு மெளியோர்க்காச் சாவத்தான்
பெற்றவரே யானுற் பெரிது மமரர்தொழ
வுற்றவரே யாவ ருவந்து. (19)

சூரறுத்த வேளுஞ் சுடர்நேமித் தண்முகிலு
மூரறுத்து வேளுறுத்தோ னுற்றிடினு மாரறத்தின்
வேறுபட்டா ரன்னோர் விடவே ரறுத்திலனே
லேறுபட்ட மெய்வலியா லென். (20)

Koviloor Digital Library

உரைத்தமொழி கேட்டா ருவந்துவரு காத
விரைத்துவரு மின்னலிலா ரேன்று திரித்துவரு
கோலினர்கள் பாடினார் கோமறையை மாமனது
மாலினர்க ளாய்விளம்பு வார். (21)

தோன்றலெனா நீமுனியிற் றொன்மைப் புவனங்கள்
மூன்றலவே கோடி முடுகிடினுந் தோன்றிவரு
மேதந் தவறுடைத்தா மென்பதற்குச் சான்றுமெங்கள்
வேதந் தவஞான மே. (22)

அன்னவகை யாகி னாண்டெல்லா மெங்களுக்கா
மின்னலுக வேயிங் கிருக்கவெனச் சொன்னவர
மாதவரைப் போற்றி மகிழ்ந்தா னரக்கரடு
மாதவரைப் போற்று மகான். (23)

ஐந்துமைந்து மாண்டா மமைதி யமலமிகு
மைந்தமைந்தார் போற்ற மகிழ்முனிவர் சிந்தித்
தகத்தியன்றன் பால்விடுக்க வாங்கடுத்தார் கொங்கை
நகத்தியன்ற நங்கையொடன் னாள். (24)

விடருஞ் செறியவரு வேய்சிறந்த கானும்
படரு நெறிநீங்கிப் பையச் சுடருடைய
மேனிச்சு தீக்கணனா மேலோன் வனமடைந்தார்
தானச் சுருதிவரத் தார். (25)

அருக்க னிகர்முனியை யாங்கடைந்த வீரர்
மருக்கொண் மலர்த்தாள் வணங்க விருக்கவிவ
னென்றினிய கூற விருந்தார் மலர்ச்சோலை
வென்றிநய வில்லார் விழைந்து. (26)

சொல்வலத்தா னன்னர்ச் சுதீக்கணனா மாமுனிவன்
வில்வலத்தான் முன்னர் விரைந்திருந்து நல்வரத்தாய்
எய்தவர யான்புரிந்த தெத்தவமோ வென்றுரைத்தான்
மெய்தவராச் சொல்லான் விழைந்து. (27)

Koviloor Digital Library

அன்னையரு னான்முகத்தா னண்ண லருள்வழிசேர்
முன்னையரு ளான்போல் முதிர்ந்ததவ மன்னவரும்
யாவருள ருன்னருளை யாண்டடைந்தே னென்றுணைதா
னேவருள ரென்றா னிசைந்து. (28)

உவமையிலாத் தோன்ற லுரைப்பதனைக் கேட்ட
நவமையிலா நற்றவத்தா னாட்டு மவமையிலா
விக்கணையுஞ் சொல்லியுட னென்னுழையின் வந்ததனாற்
றக்கணையா மென்றான் தவம். (29)

மறைவலவன் சொல்லை மகிழ்ந்துரைப்பான் வள்ள
லிறைவனரு ளத்தவந்தா னென்னும் முறைசே
ரகத்தியனைப் போற்றி யருளடைவ தெந்த
னகத்தியல்பா மென்றா னறிந்து. (30)

நல்வதன நாதனினை நானும் நயத்தவழி
சொல்வதனை யேநினைந்தேன் தோன்றனீ யெல்லமையும்
வல்லா னவனை வழிபாடு செய்யவரும்
எல்லா நலமு மிசைந்து. (31)

அன்றமையு நின்வரவை யாதரித்தே காதரத்தி
னின்றமையு மந்த நெடுந்தவனும் நன்றமையச்
சேருநல மொன்றாலெத் தேவர்க்கு மேவர்க்குஞ்
சாருநல மென்றான் தவன். (32)

வழியுமுனங் கூறி வரம்பகலு மாசி
மொழியு முனிதானை முன்னிப் பிழியுமலர்த்
தேனிற் பிறங்கருவி சேரக் கடம் பொழில்சூழ்
கானிற் சிறந்தார் கடந்து. (33)

ஆண்டகைய ராங்கே யடைந்த செயலறிந்தான்
ஈண்டுவகை வேலை யெனவெய்த வேண்ட
வரதன் சரண்வழங்க வந்தா னெதிரிற்
சரதந் தமிழையனாந் தான். (34)

Koviloor Digital Library

பண்டவுணர் சூழ்கிப் படர்ந்தா ரவர்மறித்தற்
கெண்டவனே யெங்கட் கிசையென்னக் கொண்டொருகை
வாரிக் கடலையுண்டு வானோர் வணங்கவலை
வாரிக் கடலையருள் வான். (35)

தூயகட லுண்டுதந்த தொன்மைத் தவத்தமலன்
சேயகடங் கொண்டமைந்த செல்வமுனி மாயகடங்
கொண்டடுத்த தானவனைக் கொண்டவயிற் றன்மலைய
விண்டடுத்த தானமுனி வேந்து. (36)

யோக நெறியோ ருலைவு பொருந்தாம
லேக நெறியி னினிதேறி மேகநெறி
மாலையிலை விந்தை மலையதனைச் சேர்த்தளித்தான்
தாலமிலை யாம்பா தலம். (37)

மூசரவு சூடு முதலோ னுரைெ ாண்டு
பேசரிய வுத்தரந்தான் பே றவே தேசுடைய
மாமலைய சேர்ந்து மருெ லகெவையும்
தாமலையா தாக்குந் த . (38)

உழக்கா மறைக்கு ர்ந்துலக மோதும்
வழக்கான் மதித் ரபி னிழற்கணிச்சி
கொண்டலத்தை யாக்குகளன் கூறுந் தமிழதனல்
மண்டலத்தை யாக்கும் வரன். (39)

விண்ணி னிலத்தின் விகற்ப வுலகினிற்பே
ரெண்ணி லிருக்கு மெனத்தவர்க ளுண்ணினையும்
மாதவத்தாற் போற்று மறைப்பொருளைக் காண்பனெனக்
காதலித்த சிந்தைகடக் கான். (40)

இறைத்தமறை நான்கோ டியைந்த பிறவு
நிறைத்ததிரு ஞான நிமிர்கல் லறைத்தயனுங்
காண்பரிய மெய்ப்பொருளைக் கண்டுலகங் காத்தளிக்கு
மாண்பரிவே னென்று மகிழ் வான். (41)

Koviloor Digital Library

உய்ந்தனர்க டேவ ருயிர்த்தார் தவத்தினர்கள்
அந்தணர்கள் மேவு மறத்தானூர் வெந்திறலார்
வேரறுத்துக் காக்கும் விமல னடைந்தானென்
றோருளத்திற் கொண்டா னுவப்பு. (42)

ஏனை யுயிர்முதலி யாவு மிடைதொலைத்தே
யூனை நுகரரக்க ரோங்குருமாய் நானிலத்தி
லானவனத் தாவத்தை யாற்றி யுலகளிக்கும்
வானவனங் கண்டுமகிழ் வான். (43)

கண்டா னிராமன் கருணைத் திருவுருவைப்
புண்டரிகக் கண்ணீர் பொழியநின்று னெண்டிசையும்
போற்றும் புகழ்த்தவத்தோன் பொன்னிப் புதுப்புனலை
யேற்றுங் கரகத் தினன். (44)

நின்றவனை வந்த நெடியோ னடிபணிந்தா
னன்றவனு மன்பி னடுத்தணைத்தான் நன்றுவர
வென்று புகழ்ந்தா னிசைமிகுந்த தென்றமிழை
மன்று புகச்செய் மகான். (45)

வேதியர்கள் வேதமொழி வேண்டிப் பலபுகன்று
காதலொடு போற்றக் கமண்டலநீர் மாதவர்கள்
மாமலருந் தூவ மலர்ச்சோலை கொண்டணைந்தான்
மாமலருந் தேவை மகிழ்ந்து. (46)

பொருந்தவத்தன் போற்றும் பொழிலகத்திற் புக்கான்
விருந்தமைத்த பின்னர் விரும்பி யிருந்தவத்தைச்
செய்தவென தில்லிடையிற் சேர்ந்து தவமுடித்தாய்
நெய்தவழும் வேலாய் நினைந்து. (47)

என்றமுனி யைத்தொழுதி ராம னிமையோரு
நின்றதவ முற்று நெடியோரு முன்றனருள்
பெற்றிலர்க ளுன்னதருள் பெற்றேன் பெரிதுவரு
வெற்றியென தென்றான் விழைந்து. (48)

Koviloor Digital Library

தண்டகத்தைச் சார்ந்த தவத்தர்க் கருளிவர
வுண்டகத்தி னென்றவங்கே ளேங்களிசே ரண்டர்புக
ழெண்குணத்தா யென்று னினிதேத்தி மாலடைந்தான்
வண்குணத்தான் வாய்ந்தமுனி வன். (49)

ஈண்டுறைதி யைய வினிமையுடை நீயிருந்தால்
வேண்டுதவ மேன்மை வினைமுடிப்பாய் தூண்டுசின
வாணிருத ரேவர் வரினு மடிந்திடுவர்
நாணிருதாண் வில்வலத்தி னல். (50)

வாழுமறை வாழு மனுநீதி வாழுமறந்
தாழுமறை யோருயர்வர் தானவர்கீ ழாழிவர
மன்புதல்வ நேயமிக்காய் வாழு முலகேழும்
அன்புதவும் நீயிருப்ப தால். (51)

செருக்கடையி ராக்கதர்கள் தீமை சிதைந்து
தருக்கழியக் கோறல் சமைந்தேன் பொருக்குந்
தவமுடையோ யானுந் தனுசரடை தாரி
யவமடையா தேற்ற லறம். (52)

விழுமியது சொற்றனவும் வில்லிதிவண் மேனள்
முழுமுதல்வன் வைத்துளது முற்றும் குழுவழுவில்
வள்வாய்நீ ளம்புடனே மன்ன விவையெடுத்துக்
கொள்வாய்நீ யென்றான் குறித்து. (53)

இப்புவன முற்றும் மிடையிஞெரு தட்டினிட்டா
லொப்புவன விற்றென் றுயர்வாளும் வெப்புருவம்
பெற்றவரன் வில்லும் பெருமையுடன் கொள்கவென்றான்
கொற்றவரப் பாணங் கொடுத்து. (54)

ஓங்குமர ளேங்கிமலை யோங்கிமண லோங்கிவளர்
பூங்குலைசேர் சோலை புடைசூழ்ந்தி யாங்குவரு
தூங்குதிரை யாறுதவழ் சூழ லடுத்தகுன்றின்
பாங்குதரு பஞ்சவடி பார். (55)

Koviloor Digital Library

கன்னியிள வாழை கனியீ வதுகதிர்வால்
செந்நெலுள தேன்போது சேர்ந்துளவா மன்னுதெய்வப்
பொன்னிவள மான புனலாறு முள்ளதவண்
அன்னமுள பொன்னிவட்கன் பாம். (56)

எகியினி யாங்கே யினிதுறைமி னென்றுரைத்தான்
மேகமென வண்ணண விடைகொண்டான் பாகனைய
சொல்லியொடு தம்பி துடர்ந்துவரப் பல்லமுற்ற
வில்லியுடன் சென்றான் விரைந்து. (57)

அகத்தியப் படலம் முற்றிற்று.

சடாயுகாண் படலம்.

நடந்தார் பலகாதம் நன்னதிகள் கேண்மை
கிடந்தாக நின்ற கிரிகள் தொடர்ந்த
தருவைக் கணிக்காத் தனிச்சூழற் கண்டார்
எருவைக் கரசை யிசைந்து. (1)

உருக்குஞ் சுவணமதை யொத்த வுதைய
அருக்க னகல்திசையி னாகி நெருக்கிவரு
செஞ்சுடராற் போற்று சிறைவிரித்த தென்னபண்பா
னஞ்சுடரான் மிஞ்சுசிறை யான். (2)

மூந்தி வரையகட்டின் முன்றி றனையடுத்துச்
சந்தி ரனையொளியாற் சாற்றுமந்த விந்தைசெறி
பாற்கடலி னாட்டும் பருமந் தரமதனை
எற்கநிலை கண்டா ரிசைந்து. (3)

தூய்மை யுடையன் துதிக்குங் கலையுடையன்
வாய்மை யுடையன் மதியுடையன் ஆய்மையுடை
மந்திரரா மென்ன மதிக்குந் திறலுடையான்
அந்தரமார் சிந்தையுடை யான். (4)

Koviloor Digital Library

வீட்டி யவுணர் விருந்ததனைக் கூற்றினுக்கே
யூட்டி விழுமிச்சி லுண்டடுத்து வாட்டிறல்சே
ரிந்திரன்றன் யானைக் கிசைந்துவரு தோட்டியென
வந்திறலார் துண்டமுடை யான். (5)

கோளிருநா லொன்று குறித்தடுத்துக் கூடவபோ
லாளிருநா லார மணிந்தவனை நீளுருவாம்
மேருமுடி முற்றி விளங்கு மிரவியெனச்
சாருமுடி கொண்டான் றனை. (6)

சொற்பங்க மில்லிசையின் சும்மை யுடையானை
அற்பகஞ் சேரருணற் காஞ்சுதனைச் சிற்பங்கள்
சேர்ந்தபக லென்னச் செறிந்துவரு கற்பங்கள்
வார்ந்தபல கண்ட வனை. (7)

வாங்கா நெடிய வரைமடுத்து நின்றதுவுந்
தாங்கா முடியாத் தரணிவர வோங்கு
வலியோ டிருந்தவெரு வைக்கரசைக் கண்டார்
கலியோடச் செய்விற் கரர். (8)

இறுதி தனக்கே யியற்ற வியைந்த
வறிவி லரக்க னலதே லெறுழ்வலியார்
தார்க்கியனே யென்றுந் தனிவீர மற்றுலகின்
ஆர்க்கியனே ரென்று ரறிந்து. (9)

வனையுங் கழன்மதுகை மைந்த ரிவரைப்
புனையுங் கழுகரசன் போற்றி வினையகலு
னோன்பரவ ரல்லர் னுவல வருவில்லார்
வான்பரவு வானவரா வார். (10)

புரந்தரனே மேலாம் புலவர் தமையான்
நிரந்தரனோர் காண்பே னெடியோன் வரந்தருபேர்
மற்றையன வாகன் மழுவாள னுங்கரவார்
எற்றையினுங் காண்பே னெதிர். (11)

Koviloor Digital Library

காமனைக்கண் முன்னங் கருதுங் கவின்கண்டேன்
தாமரைக்கண் மன்னித் தனிவீரர் பூமதிக்கும்
பொற்பகத்தாட் பூழியெனப் போற்று மெழிலடையா
னற்புதத்தார் வீரரிவ ரார். (12)

உலகெல்லாந் தம்முடைத்தா யோங்க வளிக்கு
மலகில்லா வாண்மை யமைந்தோர் மலர்மகட்கு
நேராகு மங்கையுடன் நேர்ந்து வருவீரர்
ஆராகு மென்று னடுத்து. (13)

கருமலையுஞ் செம்மலையுங் காட்சியர்க ளேற்றுந்
திருமருவு மார்பர் திறலார் அருமைசெயு
மென் றுணைவ ருழிவர னேற்ற வெழில்கொண்டா
ரின் றுணைவ ரென்று னிசைந்து. (14)

என்னப் பலநலமு மேற்ற மனதிளுேடு
பன்னிப் படைவரரைப் பார்த்தடுப்பான் வன்ன
வரிசிலையீர் யார்க்கு மதிக்கு மகவாம்
பரிசிலையீந் தீரென்றான் பாங்கு. (15)

வினவியத்தா மாமொழிக்கு மெய்மை யுரைக்கும்
புனைமலர்த்தார் வீரர் புகல்வார் கனைகடற்சூழ்
மானிலத்தார் மன்னன் வரதன் தயரதனென்
றூநலத்தான் மைந்தர்களென் றூர். (16)

உரைத்தலைமுன் கேட்ட வுவகைக் கடலான்
தரைத்தலையிற் சேர்ந்த தரத்தான் விரைத்தடந்தார்
வேந்தன் புயவரைகள் வெற்றிமிக்கோ வென் றுரைத்தான்
சேந்தன் புயருந் திறன். (17)

மறக்கமுற்று வாய்மை வரைந்தளித்த வள்ளல்
துறக்கமுற்று னென்னவரு சொல்லா லிறக்கமுற்று
னென்றேக்க முற்று னிரங்கி யறிவழிந்தான்
நன்றேய்க்கு நல்லறிவி னன். (18)

Koviloor Digital Library

தழுவி யெடுத்தார் தடக்கையான் முற்றும்
பொழிவிழியாம் நீராற் புரிந்தார் வழுவினவா
மின்னுயிரும் வந்த வியல்பி னெடுத்துரைக்கும்
மன்னுயிரா மன்னை மதித்து. (19)

கற்பகஞ்சேர் கையாய் கவினு மதிக்குடையாய்
வெற்பகஞ்சேர் பொற்றோள் விறல்வேந்தே பொற்புமிகு
முன்னையுல கஞ்சேர்த் துயிர்வாழ்ந் திருப்பவனு
மென்னையுல கஞ்சொல்வ தே. (20)

சம்பரனை வென்ற சமயத்திற் றானளித்தாய்
நம்பரனே நீயுடல நாணுவி யிம்பரென்று
சொன்ன வுரையிருக்கத் தூய்மையிலாக் கூற்றனுடல்
தன்னையுல குய்த்தான் றனி. (21)

எழுவதெனை யானு மிதுபொழுதே தீயில்
விழுவதனை நீக்கி விழைந்தே யழுவதெனை
என்றெழுந்த வீர னெனதுரிலை கேண்மினென்றான்
நன்றெழுந்த நாயகர்முன் னம். (22)

தக்கன் புதல்வியர்கள் தாமைம்ப தின்மர்கட்குட்
டொக்கபதின் மூவர் துவந்தமறை மிக்கவரன்
காசிபனை வேட்டார் கருது மவர்வழியி
லேசி லுலகுதித்த தே. (23)

தேவ ரசுரர் திறலார் மனிதரொடு
தாவரசங் கங்க டனித்தனியே மேவுமவர்
கோவயிற்றின் வந்து குலவு மொருசிருட்டி
பூவுலகி லான புனைந்து. (24)

விநதை சுதனருணன் மேலா மரம்பை
வநிதை தனையணைய வாய்ந்து புனிதமிகு
சம்பாதி யென்றுஞ் சரிக்குஞ் சடாயுவென்றும்
நம்பாதி ருந்தவந்த நம். (25)

Koviloor Digital Library

அருணற்குப் புத்திரனு ஞழி யரசன்
கருணைக்கு வித்தாய்க் கவினும் தருணத்தன்
என்னிலைமை யின்ன தெனவே யெடுத்துரைத்தான்
தன்னிலைமை மன்னுந் தவன். (26)

ஆண்டவுரை கேட்ட வருட்கடலா மையரவர்
மாண்டவர ஞக மகிழ்தந்தை மீண்டுந்
திரும்பிவரக் கண்ட திருவனைய ராஞர்
விரும்பிவரு வீரர் விரைந்து. (27)

சற்குணத்தின் மிக்கோர் தமைத்தழுவித் தக்ககடன்
நற்குணத்தி ரெற்கும் நயந்தளிப்பீர் மிக்க
வுடரிரண்டுக் கொன்ரு முயிரனையன் சென்ருன்
படரிருக்கி னென்ருன் பரிந்து. (28)

என்றுரைத்த மேலா மெருவைக் கரசனடி
நன்றுரைத்த வீரர் நயந்தருளி யொன்றுமுத்தம்
கண்ணிற் பெருகக் கசிந்துரைப்பார் ஞானவரர்
எண்ணிற் பெருகு மிவர். (29)

உய்விடத்தி னென்று முதவி புரிதாதை
மெய்விடத்தி யங்கி விழைபதத்தா னிவ்விடத்திற்
சீர்களையெங் கட்குதவுஞ் செய்யதந்தை நீயுமுறின்
யார்களைகண் ணுள்ளா ரருள். (30)

தாயினின்று நீங்கியருட் டந்தை பிரிந்துநகர்
வாயினின்று நீங்கி வனம்புகுந்த நோயினின்று
நீங்கு திருவுடையேம் நேயமுடைத் தந்தையெம்மை
நீங்குதியோ நீயும் நினைந்து. (31)

என்றெடுத்த சிந்தை யிரந்தழியுஞ் சொல்லினரை
நன்றெடுத்த தந்தை நயந்துரைப்பான் வென்றெடுத்த
பொற்றவரீர் நீவிர் புரத்தி னடுத்தபின
ருற்றவரஞ் செல்வே னுவந்து. (32)

Koviloor Digital Library

வேந்த னடைந்தான் வியனுலக மென்றுரைக்கி
னேந்து புவியளிக்கா திவ்விடையே காந்தையுடன்
வந்துடையீ ரிந்த வனம்புகுந்த காரணமென்
மைந்துடையீ ரென்றான் மதித்து. (33)

தேவ ரசுரரொடு திண்டிறலார் நாகர்முத
லேவ ரிடரிழைத்தா ரென்றாலு மேவும்
பொலந்தருவேற் கையுடையீர் போந்த துரைக்கி
னலந்தருவேற் கென்றடையிந் நாள். (34)

தாதை பணிகேட்டுத் தம்பி தனைநோக்கச்
சீதை பணிவேட்டோன் சிற்றவையா மாதர்பணி
வந்தசெய்கை தம்மை வரன்முறையாற் சொற்றனனுஞ்
சிந்தைசெய்கை யொன்றுந் திறன். (35)

உந்தைசொல்லை யுண்மை யுவந்துவரு சிற்றவைதான்
தந்தசொல்லை யண்மித் தரணிதனை வந்தநல்ல
தம்பிக்குத் தந்தவள்ளல் தன்பெருமை நோக்கினுண்டோ
நம்பிக்குத் தந்திணையா னர். (36)

அல்லிக் கமலவெழி லங்கணனை யன்புடனே
புல்லிக் கமலம் பொழிகண்ணன் வல்லைமைந்த
மன்னுடனே யென்னை வளர்புக ழெய்துவித்தாய்
பொன்னுடைநீ யென்றான் புகழ்ந்து. (37)

பின்னும் பெருந்தகையான் பெய்வளைக்கை யன்னமென்ன
மன்னும் பெருந்தகைசேர் மங்கைதனை யின்னளென
விந்தை மகிழ்ந்தபுய வேண்டி யுரையென்னச்
சிந்தை மகிழ்ந்துரைத்தான் சேய். (38)

அல்லிறுத்த தாடகையை யன்றழித்த தாதியாய்
வில்லிறுத்த தாக விளம்பினான் அல்லிறுத்துத்
தோன்றுமதி யானனத்துத் தோன்றல் சகோதரனு
மேன்றமதி யாள னெடுத்து. (39)

Koviloor Digital Library

கேட்டுவந்தான் சிந்தை கிளரு மவுலியண்ணல்
தோட்டுவந்த மாலைவரர் தோகையொடிக் காட்டுவந்தாற்
காசுடைய பூணீர் கருத்துடனே காப்பவென்றான்
தேசுடைய சொல்லாற் சிறந்து. (40)

இறைவ வகத்தியனு ரெண்ணப் படியே
யுறையு மணியா றடுத்தே யுறைது மென்றான்
கள்ளத் துறைவார் கருத்தனுகான் மேலவர்த
முள்ளத் துறைவா னுவந்து. (41)

பெரிது நலமாம் பெருந்துறையின் வைகிப்
புரிதுந் தவத்தைப் புரையான் தெரிவிப்பே
னென்றுசிறை விட்டகிழ லேற்றத்திற் காத்துவந்தான்
துன்றுசிறை விட்டமனத் தோன். (42)

ஆயதொரு சூழ லரிய வுணர்த்தியபின்
தூயவரன் சென்றான் சுதந்திரரு நேயமுடன்
கோலமன்னுஞ் சோலை குறித்துத் திறத்தடைந்தார்
தாலமன்னர் கோலத் தவர். (43)

வாரணிந்த கொங்கை மருகியையு மக்களையும்
சீரணிந்த சிந்தைத் திருவுடையா னேரணிந்த
பார்ப்பை யளிக்கும் பரவையெனப் பார்க்கின்று
னோர்ப்பவரு சிந்தை யிசைந்து. (44)

சடாயுகாண் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

சூர்ப்பநகைப் படலம்.

புவிக்கணியா யான்ற பொருடந்து போற்று
மவித்துறைக டாங்கி யமலத் தவத்துறைசேர்
சான்றோர் கவியாய்த் தழைக்குங்கோ தாவரியை
ஆன்றோர்கள் கண்டா ரடுத்து. (1)

தாமரையா மாமுகத்திற் றண்குவளைக் கண்ணெடுத்தி
ராமனையே நோக்கி நயந்துவரு காமரலைக்
கையும் மலர்தூவிக் கண்டு பணிவதெனச்
செய்யுஞ் சரித்துச் சிறந்து. (2)

காதலினு லேங்கிக் கசிந்து குவளையென
வோதுகணீ ரோட வுவந்தநதி நீதி
வழுவதனைத் தாங்கார் வனத்துறைத ஞேக்கி
யழுவதனைப் பாங்காம் அடுத்து. (3)

பங்கயத்தின் பள்ளி படர்சக்ர வாகமங்கை
யங்குயத்திற் கண்டா னகமகிழ்ந்தா னங்கை
கணித்தடங்கான் ருேட்சிலம்பு கண்டதனைப் போலு
மணித்தடங்கள் கண்டாள் மதித்து. (4)

ஓதிமங்கள் கண்டொ ருங்க வுத்தமனு முற்றிழையாஞ்
சீதைநடை கண்டு சிரித்தனஞு மாதனத்தாள்
நீருண்ட போதகத்தை நேர்கண்டி ராமனடைக்
கேர்கொண்ட தென்று ளெடுத்து. (5)

வில்லியலு மங்கை விமலனதிப் பாங்கர்வல்லி
வல்லியலுங் கொங்கை மருங்குலென்றன் மெல்லியலுந்
தேங்குவளைக் காட்டிற் செறிமலரைக் கண்டதனைத்
தாங்குவளை யான்வடி வென் றுள். (6)

Koviloor Digital Library

அனையதன்மை யாற்றி னகன்கரையின் பாங்கர்
வனையநின்ற பஞ்ச வடியாம் பனியமைந்த
சோலையெய்தித் தம்பி சுரர்மகிழச் செய்தபன்ன
சாலையெய்தி வள்ளலிருந் தான். (7)

நீலமருங் குன்று நிருதர் குலவேந்தை
மூலமறப் பொன்ற முடிக்குமொய்ம்பாள் மேலை
யுயிரடுத்து வந்தே யொடுக்குவது நோக்குஞ்
செயிரடுத்த நோயாள் செறிந்து. (8)

செம்பரா கம்போற் செறிவுடைய கூந்தலினள்
வெம்பரா குக்கிணையா மெய்யுடையா ளும்பரா
யானவர்க்கு மொண்டவர்க்கு மாகுமிம்ப ரானவர்க்கு
மேனவர்க்குஞ் செய்வா ளிடர். (9)

வெய்ய தொழிலை விரும்பிப் புரிகொடியாள்
வையமெலாஞ் சூழ்வாள் வனத்துறைவாள் நொய்தி
னுலகத்தை நோய்செய் யொருத்தி யடுத்தா
ளலகற்ற வாசைமனத் தாள். (10`

எண்ணடைந்த தேவ ரெரியி னரக்கரெங்கள்
விண்ணடைந்து செற்றார் விலக்கவென மண்ணடைந்து
போற்றுவனைக் கண்டடுத்தல் பொங்கிவரு தன்கிளைக்கோர்
கூற்றுவனைக் கண்டதையொக் கும். (11)

சிந்தையுற்றோ னல்லுருவந் தீர்ந்த தமரர்புக
ழிந்திரற்கா மாயிரங்க ணீசற்கு மூந்தும்
மலர்க்கமைகண் மூன்றடுக்கும் மாயவற்கு நான்கு
சிலைக்கமைதோ ளென்று டிகைத்து. :12)

கற்றைச் சடைக்கடவுள் கண்ணதனுற் காய்ந்தமத
னெற்றைக்கு நல்லுருவை யேற்பதற்கு முற்றத்
தவம்புரிந்து கொண்ட தனுவென்றுண் முற்று
மவம்புரிந்து கொண்டமனத் தாள். (13)

Koviloor Digital Library

வின்மலையார் பொன்மலியும் வீரப் புயத்துடனே
கன்மலையா நேருங் கவினில நன்மலையே
வாகாகு மன்றி வளிகுறைத்த பொன்மலையோ
சேகாகு மென்றாள் தெரிந்து. (14)

தாளுயருந் தாமரையைச் சார்ந்தவிதழ் தம்பியொடு
கேளுயரு நாட்டக் கிரியெனவே யாளவரு
தோளியொடு தோளைத் தொடர்ந்து செலநோக்கம்
நீளியதோ நீளும் நிறம். (15)

அதிக மொளிரு மழகன் முகந்தான்
பொதியவிழுந் தாமரையோர் போதாம் மதியமெனில்
கண்டாங் களங்கம் கலைதேயு மிம்முகத்திற்
கெண்டாங் குவமை யெவை. (16)

எவன்செய்ய விம்மா னினிய வழகை
யவன்செய்ய நோற்ப தடுக்கும் நவன்செய்யு
மின்னனின நாட்டத்தா னேற்ற தவஞ்செய்ய
வன்னதவஞ் செய்ததென்னென் றாள். (17)

கடல்சூழு மாடை கவினு முலகாள்
நடைசூழும் பெண்மையது நன்றா மடலான்
அடித்தலநேர் சேர வவனிக் குரோமம்
பொடித்தலதே ராமென்றாள் புல். (18)

வாணிலையான் பொன்றா மணிச்சோதி தன்னையுற்றுக்
காணிலையா நின்றான் கதிரவனுஞ் சேணிலையிற்
புல்லொளியைக் காட்டப் புகுநா ணிலனென்றாள்
அல்லொளியைக் காட்டு மவள். (19)

நற்கலைசேர் மாமதிபோ னட்டும் வதனநம்பி
எற்கலையும் பொன்மருங்கை யெய்துதற்கு வற்கலைதான்
கோற்றதுவே யன்றி நுவலுமொரு பொற்கலைதான்
எற்றதுவே யாகாத தென். (20)

Koviloor Digital Library

தொடையமைந்த மாமழையின் றொங்கலா மென்னக்
கடைகுழன்ற குஞ்சிதனைக் காணுஞ் சடையாய்ப்
புனைந்திலனே யென்னிலெழிற் பொன்னா ருயிரை
வனைந்திலனோ வென்றாண் மலைத்து. (21)

நாறியவா நற்பணிக ணல்லபுல்லி னுலவைதா
மேறியவாஞ் செவ்விக் கியற்றுமோ மாறில்
மணிக்கரசின் மாட்சிமைதான் மற்றோர் மணியால்
கணிக்கவரா தென்றாள் கசிந்து. (22)

கரந்தவழி யிவ்வழகைக் காட்டும் பிரமன்
பரந்தபழி பெற்றதன்றிப் பண்பென் னரந்தையணி
இந்திரனு மைந்த னிணையடித்தா ளேற்காதான்
அந்தரனுங் காப்பவனென் றாள். (23)

நீத்தங் குறுகவரு நெஞ்சினிடை கோத்தவன்பு
மீத்தவறி வைக்கெடுத்து மீக்கொள்ள வேத்தவறஞ்
செய்யான் பொருளெனவே தேய்ந்தகற்பா ளோய்ந்துமிற்பாள்
பொய்யாம் மனத்தாள் புலர்ந்து. (24)

வான்றனிலே சேர்த்து வரைந்ததிரு வோவியத்தைப்
போன்றனளாய் நெஞ்சு புழுங்கினள் தோன்றல்
படர்புயத்தி னுட்டம் பதித்தாள் பறிக்குந்
திடமடுக்காள் நின்றாள் நிகைத்து. (25)

நின்றா ளிருந்தா னெடியோ னிவன்மார்ப
மொன்றாத போதமுத முண்டினுந்தான் பொன்றேஞோ
போதவகை யில்லேன் புனிதனவன் முன்னடுத்தற்
கேதுவகை யென்றா ளெடுத்து. (26)

எயிறுடைய பேயரக்கி யெவ்வுயிரு மிட்ட
வயிறுடையா ளென்று மறுக்கும் குயிலொடரும்
நன்மொழியாம் சாயல் நலத்தா னடுக்கினன்றி
மன்மொழியா தென்றாண் மதித்து. (27)

Koviloor Digital Library

பங்கயத்தாள் செவ்விதனைப் பாவனைசெய் தாண்மனத்தி
னங்கமுற்ற மந்திரத்தை யாய்ந்தவுடன் திங்களொத்த
செவ்வி முகத்தாள் சிறந்த வெழிலுடைய
நவ்வி நிகர்த்தா ளயர்ந்து. (28)

பஞ்சியொளி விஞ்சுகுளிர் பல்லவங்க டாமனுங்க
செஞ்சவொளிர் கஞ்சநிகர் சீரடியா ளஞ்சொலிள
வஞ்சியென வன்னமென மன்னு மயிலிதென
வஞ்சமகள் வந்தாள் மகிழ்ந்து. (29)

பொன்னொழுகு பூவினுறை பூவை யெழில்பூவை
பின்னெழிலா மென்னப் பிறங்குவாள் கன்னியெழில்
நண்ணுமல்குற் றேரினொடு நாட்டு மதிமுகத்தாள்
விண்ணுமல்க நின்றாள் விழைந்து. (30)

கானினுயர் கற்பகந்தான் கான்ற கதிர்வல்லி
மேனிநனி பொற்ப விளங்கிழையா டேனின்மொழி
பெற்றுமிணை யின்றிப் பெருமை யொடுவந்தாள்
மற்றுமிணை யின்றி மகிழ்ந்து. (31)

பாதத்துந் தண்டையொலி பண்மே கலையோதிப்
பூதத்தும் வண்டொலியும் பொற்பவே சீதத்தாம்
மாமகளை நேரெழிலார் மங்கைவரு மென்றுரைக்கக்
கோமகனு மத்திசைநோக் கும். (32)

விண்ணருள வந்து விளக்கு மமுதென்ன
வண்ணமுலைப் பாரத்தால் மாழ்குமிடைப் பெண்ணவளும்
வாழியுடை யானை வரஞானக் கண்ணருளும்
ஆழியுடை யானையடுத் தாள். (33)

பேருழைய நாகர் பிறங்கு தருவானிற்
பாருழையி னில்வடிவு பார்த்தவுட னுருழையிற்
சேரு மழகினுக்குத் திரும் வரம்புளதோ
நேரிழையார் யாவரென்றா னேர். (34)

Koviloor Digital Library

அவ்வயினத் தாசை யகத்துடைய வன்னவளுஞ்
செவ்வயினற் றுளதனைச் சேர்ந்திறைஞ்சி நவ்வியிற்கண்
வேலதனை வீசி விரும்பி யயல்பாராக்
கோலமொடு நின்றாள் குறித்து. (35)

நீதறவா நின்வரவு சேய வுளதிருநீ
போதரவாம் புண்ணியமென் பொற்பினவே யேதுபதி
யேதுபெயர் யாருறவா மென்று னிருக்குறைவோன்
பேதையவள் சொல்வாள் பிரித்து. (36)

வேதன் வழிப்புதல்வி வெற்றியரன் றோழனென
வோதுமதி தங்கை யுயர்திசைசேர் மாதங்க
வல்லமையைத் தீர்த்து மலையெடுத்தோன் பின்னைகன்னி
எல்லமையுங் காமவல்லி யே. (37)

அவ்வுரையைக் கேட்டவண்ண லையமனத் தான்செய்கை
செவ்வுரையோ வன்றென்னச் சேர்செங்கண் வெவ்வுருவம்
கொண்டவன்றன் தங்கையெனிற் கூசாம லிவ்வடிவம்
அண்டுவதென் னென்று னயிர்த்து. (38)

தூயான் பணிக்குமுனஞ் சொல்வலத்தாள் சோர்வில்லாள்
மாயா மயவரக்கர் வாழ்வடையேன் ஆயும்
மனத்தை யடைந்து வழிநிற்ப தானேன்
கனத்தை யடைந்தகையாய் காண். (39)

இமையவரும் போற்றுமன்னை யேவல்கொண்டோன் தங்கை
அமையவரு மென்னி னழகார் தமையடுத்துத்
தோன்றுதலில் லாது துணையின்றி நீவருதற்
கேன்றதுசொல் லென்று னிறை. (40)

வீரியனவ் வாறுரைக்க மெய்யி லவளுரைப்பாள்
சீரியரல் லார்மாட்டுச் சேரகிலே னாரியரா
மாமுனிவ ரேவல் மதித்துப் புரிந்துபெற்றேன்
காமனுமால் கொள்ளுங் கவின். (41)

Koviloor Digital Library

அன்னவள்சொற் கேட்ட அறிவ னறியவொணு
நன்னுதலி சிந்தை நலமன்றும் பின்னுமிது
காணுமென்ற லெண்ணிக் கழைத்தோளி யான்புரிவல்
வேணுமென்ற சொல்லியையு மேல். (42)

தாமுற்ற காமமதைத் தாமே யுரைத்துமென்றல்
மாமுற்ற மங்கையர்க்கு வாராதா லேமுற்ற
காமன்செய் வஞ்சனையைக் காத்தியெனப் போற்றிநின்றாள்
கோமஞ்சன் றன்னைக் குறித்து. (43)

சேணுற்று நீண்டளிபோற் செவ்வரிசேர் கண்ணுடையாள்
பூணுற்ற கொங்கை புகன்றதனை நாணுற்ற
செய்கையிலாள் வஞ்சத் தெரிவை யெனமதித்த
வையனுரை செய்யா னறிந்து. (44)

பேசா திருந்த பெருமான் மனமறியாள்
கூசா திருந்த கொடியாளு மாசையினல்
வாட்டு முளத்தாள் மதியடையாள் மாமயலால்
மீட்டு முரைப்பாள் விழைந்து. (45)

எழுதரிய வள்ள லிவணடைந்த காணேன்
முழுதரிவோ ரேவல் முடித்துப் பழுதரியாப்
பெண்மையிலாம் நன்மை பிறங்காது சென்றதெனக்
கண்மையிலாள் சொற்றாள் கதித்து. (46)

நிந்தனைகொள் பேயரக்கி நீதியிலாள் காமமெண்ணி
வந்தனளா மென்று மனங்கொண்டு சுந்தரிநீ
அந்தணர்தம் பாவை யடுக்கா தரசனியான்
மந்தணமில் லென்றான் மதித்து. (47)

ஆரணனு மெந்தை யருந்ததியாங் கற்பினெம்மோய்
தாரணியாள் சால கடர் தையலவள் போரணியும்
வேலா யிகழ்தற்கு வேண்டுவையே லென்னுயிர்க்கும்
காலாகு மென்றான் கவன்று. (48)

Koviloor Digital Library

அருத்தியினள் கூற வரிவ னுரைப்பான்
வருத்தமிலி ராக்கதர்தம் மாது பொருத்தமிலா
மானுடனு மென்னை மணக்க நினைக்கினெனன்னுந்
தானுடனு காதுபொருத் தம். (49)

என்றவுரை கேட்டா ளிராவணனுக் கேற்றதங்கை
என்றவுரை குற்ற மெனவெண்ணி நன்றடுத்த
மாதவரைப் போற்றி மகிழ்ந்தே னெனவுரைத்தா
ளோதவரை வில்லா ளுகந்து. (50)

ஒருவன் திரியுலகுக் கோங்கு தலைவன்
ஒருவன் குபேர னுடையார் தருவரெனிற்
கோடுமைதை யல்லாற் குறிக்கிற் பெரும்பயமாம்
வாடுமன மென்றான் மதித்து. (51)

காந்தர்ப்ப மென்பதுண்டாற் காதற் கலந்தசிந்தை
மாந்தர்க்குங் காந்தையர்க்கு மாமறைச்சொ லேந்தற்பொற்
தோளுடையாய் நாமுஞ் சுருதிவழி தோய்ந்தால்
வாளுடையார் கேட்டுமகிழ் வார். (52)

முனிவர்ப் பகையுடையார் முன்முறையை நோக்கார்
தனியை யவருடனுந் தன்மை வினையமிதின்
அல்லதிலை விண்ணு மரசாட்சி நிற்கமைப்பேன்
வல்லரக்க ருன்வழியா வார். (53)

நிருதரருள் பெற்றே னினதுநலம் பெற்றேன்
ஒருதரமாம் செல்வத் துயர்ந்தேன் திருநகரைத்
தீர்ந்தபின்ன ரேய்ந்ததவச் செய்கை பலித்ததென்றான்
வார்ந்தசடை வள்ளல் மதித்து. (54)

விண்ணினிம்பர் நாகர் விரிஞ்சன் முதலோர்க்குங்
கண்ணினின்ற தேசி கவினுடையாள் மண்ணினின்று
வந்த மணியனையாள் வந்தாள் வரமருவுஞ்
சந்த மணியனையாற் சார்ந்து. (55)

Koviloor Digital Library

மீன்சுடரும் விண்ணோர் வெருவு மரக்கரெனுங்
கான்சுடவென் றேங்குங் கனலாகி வான்சுடருங்
கற்படுத்த மெய்யாங் கனங்குழையைக் கண்டுவந்தாள்
பொற்படுத்த பொய்யாள் புனைந்து. (56)

மருவொன்று கூந்தலளை மாவனத்திற் சேர்க்கான்
உருவொன்று மின்னவள்போ லுண்டோ திருவொன்று
மாமலரு ணின்று மலரடிபூத் தோயவந்து
மாமலரு மென்றாண் மதித்து. (57)

பண்புறவே நோக்கிப் படைப்போர் சிறுமையன்றி
எண்பிறங்கு பேரழகுக் கெதெல்லை கண்பிறவிற்
செல்லா தெனக்கென்றாற் சேயிழையைக் காணினென்னும்
மல்லார் புயத்தார் மதி. (58)

வள்ளலையு நோக்கி வனிதையையு நோக்கிநின்றாள்
எள்ளலையா மாண்பெண் ணிருவரெழி லுள்ளலையா
தோரிடத்தே காண வுயர்பிரமன் செய்தளித்தா
னோரிடத்தாம் பேரெழிலென் றாள். (59)

பொன்னுடைய மார்பனெழிற் பூவைப்பூ வண்ணனிந்த
மின்னிடையா ளோடுவன மேவுவனோ வென்னை
யிகழ்விப்பான் வந்த விடையா ளிவளை
யிகழ்விப்பே னென்றா ளெதிர். (60)

வந்தவிவள் மாயம் வகுத்து வருமரக்கி
சிந்தைகொளல் சேராது தீர்த்தனலம் சொந்த
வுருவுமன மாயமிந்த வூனுகர்வாட் கண்டு
வெருவுமன மென்றாண் மெலிந்து. (61)

ஒள்ளிதினு முன்னுணர்வு முன்னை யொளிப்பவரார்
தெள்ளிதினுஞ் சிந்தை தெரிந்ததம்மா கள்ள
வரக்கி யிவ ளாகு மறிந்தனையா மென்று
சிரிக்குமவள் செய்கை தெரிந்து. (62)

Koviloor Digital Library

ஆயிடையின் வந்த வருந்ததியாங் கற்புடைய
சேயிடையாள் வீரனிடை சேர்வேலை நீயிடையின்
வந்ததென்னை நியார் மகளரக்கி யாமென்று
வந்தபொன்னை நேர்சீறு வாள். (63)

அஞ்சினளா மன்ன மலச விடைசோரப்
பஞ்சினடி நோவப் பதைத்தனளாய் நஞ்சினடு
வாடமுழுவுங் கண்ணாள் மருண்டோடி வள்ளன்மணித்
தோடமுழுவிக் கொண்டா டுதித்து. (64)

வளையெயிற்று ரோடு வருவிளையாட் டேனும்
விளைவனவாந் தீமையென வீர னுளைவனவாஞ்
செய்கைதனைச் செய்யிற் செருக்கு மிளையோன்பின்
னுய்கைதனைச் செய்யா னுருத்து. (65)

பொற்பா ரரக்கி புகல்வாள் புகழ்சேரு
மற்பாரு முள்ளத் தனங்கனுள்ளோ ரெற்சேர
நற்றவத்தைச் செய்வார் நலித்தலெனை நன்றன்று
கற்றவித்தை யென்னுருகுங் காண். (66)

தன்மனத்தி னெல்லுந் தகைமை யிலையேனுங்
கன்மனத்தி சொல்லுங் கபடமென மின்மணத்த
மேகமெனச் சென்றான் விரும்புஞ் சனகியுடன்
ஏகமனன் யோகர்க் கிறை. (67)

புக்கவுடன் போய புலத்தாள் பொறைநீங்கி
யுக்கவுயி ரோய வொடுங்கினாள் மைக்கரிய
கூந்தலவட் கன்புடையான் கூறுந் தவமுடைய
வேந்தலவ னென்று ளெடுத்து. (68)

நின்றிணையி னின்மலனை நேரும் நெறிநினைவா
ளின்றணையே னென்னிலுயி ரில்லையெனப் பொன்றிணியும்
சோலைப் பளிக்கறையிற் சோர்ந்துபுகுந் தாள்பரிதி
மேலைக் கடற்புகுத வே. (69)

Koviloor Digital Library

அழிந்தமனங் கொண்டா ளயர்வாள் வயினே
மொழிந்த கனற்காம மூண்ட வழிந்துவரு
நாகத்தின் வன்றுளைசேர் நச்செயிற்றின் வந்தவிட
மாகத்தின் வந்ததென வாய். (70)

தாடகையாங் கேடுடையாள் சாரத் தடமார்பி
ஞடவர்க்கு நாத னடுகணைபோற் பாடவத்தாம்
மன்மதன்பூ வாளி மருமத்தைத் தாக்கவுட்கித்
தன்மதன்போய் வெம்மையடைந் தாள். (71)

கலைமதியை மன்னு கரியாகக் கொண்டு
சிலைமதனைத் தின்னுந் திறத்தாள் மலைமருவு
மாருதமாங் காலவயில் மார்பி னிடையூன்ற
வோருதவி யில்லா ளுடைந்து. (72)

அலைக்குலத்தி னுங்கடலை யங்கையினுற் பற்றி
மலைக்குலத்திற் றூர்க்கு மனத்தாள் கலைக்குலத்து
மாமதியு நீணிலவை வாரி வழங்கலினுற்
கோமதியு நீங்கிமலைக் கும். (73)

பூவைப் பொடியாக்கிப் பூவிடையக் கோவடைந்த
காவைப் பொடியாக்கக் காந்துவாள் சேவலொடு
செந்தலைய வன்றில் சிறுநாவி னுனடுங்கி
வெந்தலைய நின்று விழுந்து. (74)

அணவிலவாந் திங்கடனை யள்ளிநுங்கக் கோளைக்
கொணர்வலியா னென்று கொதிக்கும் பணைமுலைமேல்
வந்து கலங்க மலைய நிலையழிந்த
சிந்தை கலங்குந் திகைத்து. (75)

கையதனுற் செய்ய கதிரிளமைக் கொங்கைதனி
லையபனி நீரையள்ளி யப்புவாள் வெய்யகனல்
வெந்துவரு பாரையின்மேல் வெண்ணை நிகர்த்ததனு
னைந்துவரும் பேரை நுவன்று. (76)

Koviloor Digital Library

அளிக்கு முயிர்கான் றழல வடுத்துக்
குளிக்க வருநீர் கொதித்து மளிக்கவரா
வேலைதனை மன்மதனை வேறா யொளிப்பதற்குச்
சோலைதனைக் காணா டிடித்து. (77)

வந்துமழை தோன்றிடினு மாநீலத் தான்மருவு
கந்துமலை காண்டிடினுங் கைகூப்பு மிந்துபொழி
காந்தத்தி னீரநெடுங் காலுந் துயரநிற்குங்
காந்தத்திண் மேனி கரிந்து. (78)

வாம மதியும் வளர்பனியும் வாடைகங்குல்
காமமதி யாடன்னைக் காணாது நாமநுதி
வாளெயிற்றோர் நாகம் வளர்மால் வரைமுழையிற்
கோளெயிற்றாள் சென்றாள் கொதித்து. (79)

அன்ன சமயத் தழன்மிகுந்த தென்றலது
முன்னையினு மும்மடியாய் மோதலினா லின்னவகை
செய்வதெனத் தேறாள் திறமறியாள் சீவனினி
யுய்வதெனக் கோறா ளுயிர்த்து. (80)

வீரன்றன் மேனி வெளியுருவிற் றோன்றவெழிற்
காரென்ற மேனி கலந்தவள்போற் சோரும்
நடுக்கும் துதித்தடுக்கும் நல்வடிவம் பேர்ந்தால்
அடுக்குந் துயர்க்கடலி னாழ்ந்து. (81)

ஆகத்தாங் கொங்கைதமி னையனென வஞ்சனத்தா [கண்
மேகத்தாந் தண்மைகொண்டாள் வெந்தனவாய்ப் போகக்
டஞ்சும் புலம்பு மவளடைந்த மோகமதிற்
கெஞ்சும் புகலேது மில். (82)

ஊழிக் கனலதனை யுற்றனளா யொத்துவரு
மேழைக் குயிரேக வில்லையென்பா ராழியான்
தன்னையடைந் தின்னுந் தணப்பின்றி வாழலா
மென்னவிடை கொண்டவெண்ண மே. (83)

Koviloor Digital Library

வஞ்சமிக்க மாயை வளர்க்குங் கொடியவெந்த
னெஞ்சுபுக்கெ னுபத்தை நீக்கவெனு மஞ்சனத்தாம்
மாமலையே நீமருவ வாவென்னு நஞ்சமுண்டு
தாமலைவார் போலத் தளர்ந்து. (84)

காவி தருகயலாங் காமர்கணை கொண்டகண்ணுள்
தேவி திருமகளிற் செவ்வியாள் பாவியெனைப்
பார்க்குமோ வென்னும் பரிந்தவென்மே லன்பின்மை
ஏர்க்குமோ வென்னு மிரிந்து. (85)

ஆன்றலவு காத லவையா மரக்கரென
மூன்றுலகு மூடுதம மொய்நீங்க வேன்றலவி
ராமனுதித் தானென்ன நாட்டு முதயகிரி
பூமனுதித் தான்பொருந்து பு. (86)

விடியலது கண்டு விழைவினெடு முன்னுங்
கொடியினிடை யுள்ளளவுங் கொள்ளான் கடிதிமைப்பி
னேடியெடுத் தொல்லை யொளித்து மகிணனுடன்
கூடியடுப் பேனென்றுள் கூர்ந்து. (87)

வந்திதனை நோக்கினுள் வள்ளல் மணித்தடத்தான்
சந்திதனை நோக்கினன் றம்பிவலன் விந்தைதனைக்
காத்தயலாஞ் சோலை கருதி யுறல் காணுள்
பார்த்தயலா வந்தாள் பழித்து. (88)

தனியிருந்தா னெண்ணம் சமைந்ததினித் தாழ
வினியிருந்திங் கெண்ணுவதென் னென்று துனியிருந்த
வன்மனத்தான் தோகைதனை வந்தடர்த்துப் பற்றுதலும்
நன்மனத்தான் கண்டா னகைத்து. (89)

நில்லடீ யென்றான் நினைந்தான் வனிதையென
வில்லெடான் கையால் விரைந்திடுதிச் சில்லோதி
பற்றுடையான் றீயாள் பதைக்க வயிற்றுதைத்தான்
சுற்றுடைவாள் கொண்டான் றுணிந்து (90)

Koviloor Digital Library

ஊக்கி யெடுத்துவிண்ணி னேங்க வுயர்வாளை
நூக்கி யிடித்து நுவன்றபெரு மூக்கினொடு
காதறுத்தான் முன்னங் கருதுதனக் கண்ணறுத்தான்
மாதொருத்தி யென்ன மதித்து. (91)

அக்கணத்தி னன்னா ளாற்று மமலையது
திக்கனைத்துந் தேவர் செவிப்புலத்தும் புக்கனத்தஞ்
சொல்லுவதார் மூக்கினின் றுஞ் சோரி யுலகமெலாம்
புல்லுவதாய் நின்றாள் புலர்ந்து. (92)

கொலைதுமித்த வாளாற் கொடியா னெடிய
முலைதுமித்து நின்ற முகுர்த்தம் மலைதுமித்த
சேகடைந்த பேயரக்கன் சென்னி துணிக்கமுனம்
வாகடைந்த நாளாய் வரும். (93)

அதிர வடிபதைக்கு மான்ற வரக்கி
கதிர வடிவேற் கரனே ரெதிரில்லார்
போனிமித்தாய் வந்து பொழியிரத்த மேகமதைத்
தானிகர்த்தாள் மோகநிறைத் தாள். (94)

விண்ணி னுயரும் விழுந்துழைக்கு மண்ணினிடை
யெண்ணுங் கரங்குலைக்கு மேங்கிவிழும் பெண்பிறந்து
பட்டநல மென்னும் பருவரலு மஞ்சிமுனம்
விட்டகுலம் வந்துதித்த மின். (95)

ஒற்றுமுயர் மூக்கை யுலையுறுதீ யென்றுயிர்க்கு
மெற்றுமுயர் கையா லிணைக்கொங்கை பற்றிநின்று
பார்க்கும் வியர்க்கும் பருவலிக்கால் கொண்டுசுற்றும்
போர்க்கு மிரத்தம் பொழிந்து. (96)

உளற்றுமிக்க நீரருவி யோடு முதிரவெள்ளச்
சேற்றுமிக்க நீரிற் றிளைத்திரிந்து கூற்றுமுட்கத்
தன்குலத்தி னோர்பெயரைச் சாற்றி யறிவழியும்
வன்குலத்தி னூகுமட வாள். (97)

Koviloor Digital Library

நிலையெடுத்து நீயிருக்க நீணிலத்தி னேரார்
சிலையெடுத்த தென்னோ சிவன்சேர் மலையெடுத்த
தோளாயோ வெற்கடுத்த துன்ப மறியாயோ
ஆளாயோ வென்பா ளடுத்து. (98)

புலிபுறத்த தேனும் பொலிபறழைக் காக்கும்
கெலியிருக்கு மென்றவுரை கேழோ வலியிருக்கும்
மூவருக்கு மேலவனீ முன்னோ னெனவிருக்கத்
தாவிருக்கை யெற்கடுப்ப தா. (99)

காற்றைப் புனலைக் கனலைக் கடுங்காலக்
கூற்றைப் பணிகொண்ட கோமானே மாற்றினையோ
வுன்வலத்தை யின்னே யுயர்ந்தார் மனிதரென்னே
தன்வலத்தைத் தாங்கா தவர். (100)

மன்மதனின் மிக்க வனப்புடைய ரென்றிடினும்
வின்மதனி னுற்கு மிகுத்தவரோ தன்மதத்தா
ரென்னைச் சதித்தாரென் றேகாதிருக்கி னென்னும்
உன்னைச் சதிப்ப ரொருத்து. (101)

தேனுடைய மாலைத் திறலா ரிராவணற்குத்
தானுடைய வாற்ற றவிர்ந்ததோ கோனுடைய
வெங்குலத்தின் மேலோர்க் கிரையாய மானுடவர்
தங்குலத்தின் மைந்துமிக்க தா. (102)

மரனேயுங் கானில் மறைந்துவரு மின்னோ
ருரனே யுலகமதி னேங்குங் கரனேயோ
யான்பட்டகையறவு மார்க்கென் றிருக்கினென்னுந்
தேன்பட்ட தாராய் தெரிந்து. (103)

இந்திரனும் வேத னிமையோர் பணிகேட்பச்
சந்திரனு மாதுந் தனிக்குடைக்கீழ் வந்து
முகங்காட்ட வல்லேனோ முன்முடித்தேன் வாழ்வை
நகங்காட்டும் பொற்புயத்தாய் நான். (104)

Koviloor Digital Library

உரனொரிந்து வீழ வுருட்டி யுதைத்த
நரனிருந்து காண நலிந்தேன் கரனிருந்த
மாவனமீ தன்றோ மலையெடுத்த பொற்புயத்தாய்
சாவனமீ வந்ததெதற்குத் தான். (105)

நசையாலே மூக்கிழந்த நாணமிலா வெற்காம்
வசையாலே நின்புகழ்க்கு மாசாம் திசையானை
யோடத் திறலகற்றி யொண்மருப்பை வீசியுற்ற
வாடற் றிறலகற்றா தாய். (106)

கானமதிற் றோர்ந்தநரர் காதிஞெடு மூக்கரிய
மானமதிற் றீந்து மடிவேனே தானவரைச்
சாய்த்துச் சதமகனைத் தள்ளிச் சிறையினிடை
காய்த்துப் பொருதமரு கா. (107)

கல்லீர் படைக்கைக் கரது டணன்முதலாம்
அல்லீர் மணிப்பூண் அரக்கரெலாங் கொல்லீர்
படைக்கும்ப கன்னனைமுன் பார்த்துறங்கி னீரென்
விடைக்கும் பகர்தல் விடுத்து. (108)

என்றின்ன பன்னி யிகலரக்கி யேக்கமுற்றுப்
பொன்றுன்னு பூமி புரள்போழ்தி னன்று
நதியிற் குறைமுடித்து நாடினன் மேலோர்
மதியிற் குறைமுடிக்கு மன். (109)

வந்தானை நோக்கி வயிரவலத்துக் கண்ணீராம்
செந்தாரை யானிலத்தைச் சேறாக்கி அந்தோயான்
உன்மேனிக் கன்பிழைத்த ஆற்றத்தா லிக்கதியென்
றன்மேனிக் கென்றுவிழுந் தாள். (110)

விரிந்தாய கூந்தலாள் வெய்யவினை யாதோ
புரிந்தாய தென்று புழைமூக் கரிந்தானு
மானவனுந் தம்பியென மாமதியி னுக்கியுழல்
தானவளை நீயாரென் றான். (111)

Koviloor Digital Library

அவ்வுரையைக் கேட்ட வரக்கி யறியாயோ
தெவ்வுரையைக் கேளாத சீற்றத்தான் எவ்வுலகு
மேவல் புரியு மிராவணற்குத் தங்கையென்று
ளாவல் புரியு மவள். (112)

தாமிருந்த தானமன்றிச் சான்றோர் தவம்புரியும்
யாமிருந்த தானமுற்று யாரென்றான் மாமருந்தே
னென்னலினும் வந்திலனோ நேருமெனை யாரென்றாய்
கன்னலினு வந்தசொல்லாய் காண். (113)

செங்கயலாம் நாட்டஞ் செழித்த மலரமல
நங்கையரா வந்தவரோ நாமென்று னங்க
ணரசே யொருவ ரழகை யழித்தால்
விரசே ரெதற்காம் விளம்பு. (114)

மூர லொடுமிளைய மொய்ம்பான் முகநோக்கி
வீர குழைக்காது மேன்மூக்கு மீரவிவள்
செய்தபிழை யென்னென்றான் தேவர்க் கருள்புரிய
எய்துமழை வண்ண னிசைந்து. (115)

தேட்டந்தான் வாளெயிற்றிற் றின்னவோ தீவினையோர்
கூட்டந்தான் வேறே குறித்தறியே னூட்டந்தான்
தீயுமிழ நல்லாளைச் சீறித் தொடருமென்னே
காயுமிவள் கொண்ட கருத்து. (116)

ஏற்றவளை வில்லோ னியம்பா முனமரக்கி
மாற்றவளைக் கண்டால் மனமென்னும் சூற்றவளை
நீருழக்கு நன்றுடா னென்னவுரைத் தே னிவடன்
சீருழக்குஞ் செய்கை தெரிந்து. (117)

பேடிப்போர் வல்லரக்கர் பேராங் குலமவிப்பான்
தேடிப்போந் தோரி தெரியாது வீடிப்போ
காமலிந்தத் தானங் கடந்துபோ வென்றுரைத்தான்
மாமலிந்த தாரான் வரைந்து. (118)

Koviloor Digital Library

நரைதிரையென் றில்லாத நான்முகனே மேலோர்
கரையிலரி ராவணன்சீர் கற்பார் விரையுமிது
நன்றன்று முங்கட்கு நானடுத்தாற் றனடுக்கு
மொன்றன்று நன்மை யுகந்து. (119)

ஆக்கரிய மூக்கரிந்தா ராமுங்கைக் கென்றுரை
நாக்கரியு மென்பதனை நாடாது மூக்கரிந்து
சொல்லிகத்த நுங்குலத்தைத் தோற்றீ ரழகையெலாம்
புல்லுகுத்தீ ரென்றாள் புகழ்ந்து. (120)

வான்காப்போர் மண்காப்போர் மாநகர் வாழுலகந்
தான்காப்போர் தங்க டலைகாத்து மூன்காக்கு
முங்களையார் காப்பா ருறவெனக்குத் தந்திடினே
தங்களையான் காப்பேன் றகைந்து. (121)

காவற்றிண் கற்பார் கழரார்க டம்பெருமை
யாவற்பே ரன்பா லறைகின்றேன் தேவர்க்கும்
வல்லான் திருத்தங்கை வாழ்விப்பா யென்றுதம்பி
வில்லான் தனக்கு விளம்பு. (122)

மாப்போரிற் காப்பதுடன் வானிற் சுமந்துசெல்வேன்
தூப்போற் கனிக டொகுத்தளிப்பேன் காப்போரைக்
கைத்ததிற லென்னுங் கவினு மடவாள்வந்
துய்த்ததிற மென்று முமக்கு. (123)

குலத்தா னலத்தாற் குறித்த கொணரும்
வலத்தாற் புலத்தால் வடிவால் நிலத்தாரும்
விண்ணடுத்த நேரிழையார் வேண்டி வரினென்போ
லெண்ணடுத்தற் குண்டோ வியம்பு. (124)

போக்கிநீர் மூக்கைப் புரிந்தென் பொறுக்குவிரேல்
ஆக்குவேன் கோல மருள்கூறும் பாக்கியந்தா
னுண்டாகு மென்னகுறை யொண்மூக்கு மங்கையர்க்கு
விண்டாகுந் தோளீர் மிகை. (125)

Koviloor Digital Library

சிவனுமொன்று மாலுந் திசைமுகனென் றேது
மவனுமொன்று நின்றவழகா புவனமொன்றப்
பூங்கணையால் வாங்கும் புனித மதனுமுந்தன்
பாங்கணையுஞ் சோதரனுப் பா. (126)

பொன்னுருவத் தோளீர் புழைமூக் கரிந்தபொருள்
இன்னுருவத் தோடிங் கிருப்பளென்றும் பின்னொருவர்
பாராரென் றீர்ந்தீர் பகையோ மனங்களித்தேன்
நேராரு மன்பை நினைந்து. (127)

வெப்பழியா நெஞ்சரக்கர் மேலும் வெகுண்டடுத்தா
லப்பழியால் மிஞ்சு மழிவெய்து மிப்பழியைப்
போக்கி யெனையளித்தாற் பொறப்புடையீ ரன்னவரைத்
தாக்கி யுலகளிப்பீர் தான். (128)

நாடரியத் துன்ப நவையரக்கி யுன்னுதிமுன்
தாடகையைக் கொன்ற சரமுளது தோடகைதார்
வல்லரக்கர் தம்மை வதைக்குந் தொழில்பூண்டோம்
எல்லரக்கும் பல்லத் திரித்து. (129)

தரையளித்த நேமித் தசரதன்றன் பாலர்
விரையளித்த கானை விழைந்தோம் கரையளித்த
வேதியரு மாதவரும் வேண்ட வரக்கர்தமைக்
காதியட நின்றோம் கறுத்து. (130)

தேவர்தமை வாட்டு திறலா ரரக்கரென
வேவர்தமை யெண்ணுதியோ யேற்றவரை மேவிவரக்
காட்டுதியே லுன்னெதிரே காதி முடித்தமரர்
நாட்டுதியே கொள்வோம் நயந்து. (131)

கொல்லலா மாயங் குறித்தவற்றைக் கொண்டுபினும்
வெல்லலாம் வெற்றி மிகுத்திடலாம் பல்லெலாந்
தோன்றவரு வாயாள் துகளுடையா ளென்னுமல்
என்றவெனைத் தாங்கி னிசைந்து. (132)

Koviloor Digital Library

காம்பறியுந் தோளாளேக் காத்திடினும் யான்மிகையோ
வாம்பொறிசெய் மாய மரக்கர்செயின் பாம்பறியும்
பாம்பின்கா லென்ற பழமொழியா யான்றடுப்பேன்
ஆம்பலவி ராக்கதரை யாய். (133)

உந்தன் மனத்தை யொருத்தி வசப்படுத்தின்
எந்தன் மனத்தி னிசைந்தபடி சந்த
விளங்கோவோ டென்னே யிமைத்தங் கிருத்தில்
விளங்கோடா தென்ருள் மதித்து. (134)

விரும்பு நகர்க்கேகின் வேண்டுருவங் கொள்வேன்
கரும்ப னென்கின்ற காளே பெரும்புழையாம்
மூக்கையுற்ரு ளென்று மொழியி னடுவிலளென்
சேக்கையுற்ரு ளென்பதுரை செய். (135)

என்றவளேத் தம்பி யிலங்கிலேவேல் காதலித்துக்
கொன்றிவளேப் போக்கவருள் கோவென்ருன் நன்றதுவே
போகிலளே லென்ருன் பொருந்தா ரிவரென்று
வாகிலவள் கொண்டாள் மனம். (136)

ஏற்றுவன கொங்கையிருகாதும் மூக்குமற்றும்
ஆற்றுவனே வஞ்சத் தறிந்ததன்றிப் போற்றுவதென்
கூற்றுவனு குங்கரனுற் கோளுடைய வுங்களுயிர்
மாற்றுவனு னென்ருேடு வாள். (137)

சூர்ப்பநகை படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

கரன்வதைப் படலம்.

இருந்த கரன்சரணத் தேற்ரு ளடுத்துச்
சொரிந்து வருசோரி சோர விரிந்தமயிர்
ஆகமொடு மாக மடுத்து வருசெக்கர்
மேகமெனச் சேர்ந்தாள் விழுந்து. (1)

அழுங்குநா ளென்றடுத்த வந்தகன்ற ஞணை
வழங்கவரு பேரியென வாய்ந்து முழங்கிவரு
மேக நனிமுடித்த வெந்தீயி ஞற்புழுங்கும்
நாகமென வீழ்ந்தேங்கி ஞள். (2)

வாக்கிற் புகைமுந்து வாயுடையா னேயுமுனே
நோக்கிக் கனன்று நொடிவரையி ஞக்கிவழிச்
சென்றதர ஞரென்ருன் தியந்தசினத் தாற்றுடித்துக்
கன்றதர ஞகுங் கரன். (3)

இருவல்லார் மாமனித ரேற்ற தவத்தார்
வரிவில்லார் மன்மதனும் வண்ணர் பொருவில்
தயரதன்றன் பாலர் தகைசே ரரக்கர்
அயரவென்ற வாற்றலுடை யார். (4)

ஒன்றடுத்து நோக்கா ருனது வலியறத்தை
நின்றடுத்து நோக்கு நெறியுடையார் வென்றெடுத்த
மேலோர் நிருதர்களை வேரறுத்துப் போர்முடிக்கும்
காலார் கணைவிற் கரர். (5)

மண்ணிற் பெருவானில் மற்றை யுலகினிலு
மெண்ணிற் சிறந்த வெழிலுடைய பெண்ணணங்கைக்
கண்டேன் கவரக் கருத்தினுறு பேராசை
கொண்டேன் மிகவுங் குனித்து. (6)

Koviloor Digital Library

நோக்கரிய பெண்ணை நுவலு மிலங்கையர்கள்
கோக்குரிய ளென்று குறித்துடனே சேக்கைநின்று
விண்டெடுக்க மேலே விழுந்தே னவர்மூக்கைத்
துண்டெடுத்தா ரென்று டுணிந்து. (7)

கேட்டவுடன் கோபங் கிளரவரு கேடினர்கள்
தோட்டதொரு நுங்கிற் றொளெமுக்கைக் காட்டென்
றெழுந்தா னெதிர்கண்டோ ரேங்கித் துடித்து
விழுந்தார் பயத்தின் மெலிந்து. (8)

நின்றுலக மேழும் நெருப்பா யெரிக்கவரு
துன்று சினக்கனலித் தோற்றத்தான் வென்றிகொண்ட
மானுடரை யென்செயினு வந்தபழிதீரத்
தானுறுமோ வென்றான் சலித்து. (9)

வருக விரதமெனு மாத்திரையின் வந்தார்
இருகைவரை யேழினுட னேழா ரொருகையினல்
வேலையிடத் தாமுலகை வேய்ந்தெடுக்கு மூற்றத்தார்
ஆலவிடத் தாமாக்கை யார். (10)

வெம்புகின்ற கோப விசையர் விலக்கினர்
நம்புகின்ற வெங்கள்வலி நன்றென்றார் உம்பரன்று
மோங்குடைய நீயே யுருத்தால் மனிதர்களோ
தாங்குடைய நீரரென்றார் தான். (11)

நன்றுசொன்னீர் நீவிரிது நாணிச் சிறார்மேற்போர்
சென்றுசெய்யிற் றேவர் சிறித்திடுவர் கொன்றுசெய
வல்லியலோர்ப் போக்கி வருவீர் சினந்தடுத்த
மெல்லியலோ டென்றான் விரைந்து. (12)

என்னவளங் கேட்டா ரிறைஞ்சி யெழுந்தனர்முன்
சொன்னவளு மந்தகனர் தூதென்ன வன்னவட்குப்
பின்செல்வா ரானர் பிரளயத்திற் றீர்க்குநமன்
முன்செல்வா ராகி முயன்று. (13)

Koviloor Digital Library

துமிலப்போர் வல்லரக்கர் தோன்றினர்க்குச் சொற்றாள்
அமலத்தொல் லாயிரம்பே ராழி நிமலத்தான்
பாத நினைத்திருந்த பண்ணவனைக் காட்டினள்கை
ஏதம் நினைப்பா ளியைந்து. (14)

எற்றுவாங் கையி னிடித்துப் பிடித்துமென்பார்
பற்றுவாம் பாசத்திற் பாய்ந்தென்பார் முற்றுவா
மேற்றவிறை சொன்முறையா லென்றடுத்துச் சுற்றினார்
சீற்றவரை யென்னத் தெழித்து. (15)

ஏத்தநின்ற வாய்மை யிராம னிளவலைநீ
காத்தியென்று தையலைத்தான் கற்பகம்போற் பூத்தகையால்
வாங்கினான் நாணி வரைந்தான் சிறந்தவும்ப
ரேங்கினார் நாணி னிரிந்து. (16)

வாங்கினான் வாளியொடு வாளிபெயும் புட்டிலொடு
தாங்கினான் தாசரதி சாலநின்று நீங்கினா
னிவ்வழியி னேர்மினடா வென்றா னிகலடுத்த
தெவ்வழியச் செய்யுந் திறன். (17)

வாளு மழுவும் வயங்கொளி முச்சிகைவேல்
காளவிடங் கொண்டதெனக் காந்துவார் நீளும்
எழுநான்கு கையினையு மேற்றநிலஞ் சேர்த்தான்
முழுநான்கு வேத முதல். (18)

மரங்களென நீண்ட வாளொடுதோள் வீழ
வுரங்களினு லேற்றவர்கட் கோடும் சரங்களட
வன்சிரங்க ளோடினவாம் வந்த கொடியள்கரந்
தன்சிரங்கொண் டோடிவிழுந் தாள். (19)

ஒளிரநின்ற வேற்காரனுக் குற்ற துரைத்தாள்
மிளிரநின்ற கோளரியால் வீட்டக் களிறனைத்தும்
போன வுடன்றலையிற் புற்பதிக்கை வைத்தோட
லானபிடி யென்ன வடுத்து. (20)

Koviloor Digital Library

அங்கரக்கர் வீந்த தறிந்த கரன்சினத்தாற்
பொங்கரத்தங் கண்வழியிற் போந்துகவே மங்கி
விடுப்பரிய கோப விடைச்சங் கரற்குந்
தடுப்பரிய கோபமடைந் தான். (21)

அழையெனது வையமதை யாக்கு படையை
உழைய ரொருநொடியி னேங்கல் மழைமுரசை
எற்றுதிர்வல் லென்று னிடியு நடுநடுங்கி
முற்றுதிருஞ் சொல்லான் முனிந்து. (22)

பேரியிடி யோசை பிறத்தலுமே பெட்புமிக்க
மாரி மழைவரம்பில் வந்தவெனத் தேருடனே
சேனை திறண்டனவாந் தேவ ருலகமுத
லேனையுல குங்கலங்க வேற்று. (23)

போர்ப்பணைகள் மேன்மேலும் பொம்மென் முழக்கமதாய்
நீர்த்தரங்க நீண்டதட நேர்தோளா யார்த்தெழுந்த
மால்கிளந்த மாவிறுதி மன்னுங் கருங்கடல்போற்
கால்கிளந்த சேனைக் கடல். (24)

காடுதுன்றி நீடுங் கரந்த விசும்பதென
நீடுதுன்றி மேனிமிர்ந்த நீள்கொடிக ளோடுமினி
எங்க ளடுபேசியென் றேற்றடு கங்கமொடு
பொங்க வருமலகை போல். (25)

முருடிரண்டு சேர்ந்து முழங்கு மொலியு
முருடிரண்ட தேரொலியு மோங்க வருடிரண்ட
வாதவங்கால் சூறை யடர்க்குமிரு ளென்னவந்த
பாதவங்கான் கொள்ளாப் படை. (26)

தலையி னரவு தரிக்குந் தரணி
நிலையின் முதுகை நெளிக்க வுலைதலின்றி
எழுலகி னேங்குமலை யெல்லா மடுத்தவென
வாழுலகிற் றனைவந்த வாம். (27,

Koviloor Digital Library

வல்லியத்தின் கூட்டமோ மாமழையி னீட்டமோ
வொல்லிபத்தி ளுந்தொகுதி யோங்கலோ வல்லமற்று
மாகு மரிக ளனிகமே யாமென்ன
வேகும் படைக ளெடுத்து. (28)

ஆளிகளாற் பூண்ட வரிக ளுடன்பூண்ட
மீளிகளாற்பூண்ட விறல் வேங்கை ஞாளிகளும்
பூண்டநரி கூளி புகல்குதிரை பூண்டனவாய்த்
தாண்டிவரு தேரளவிற் றும். (29)

ஏற்றினங்க ளார்த்தனவாம் ஏன முடனூர்த்த
காற்றினங்க ளொத்த கழுதையினம் தோற்றினதின்
மாத்திரத்தி லேயுலகு மாகமுறச் சூழவரும்
காத்திரத்தி னுகுறகவ் கம். (30)

தேர்துவன்று மேருவெனச் செங்கண்ணுஞ் செம்முகத்தாங்
கார்துவன்று மால்கரிகள் காலினொடு சீர்துவன்று
தாரினங்கள் சூழ்ந்தபரி சார்கூற்றங் காலாளே
சேரினங்கொள் சூழ்படையின் சீர். (31)

மழுக்களொடு வாள்வயிர வாட்க ளயில்கள்
எழுக்களொடு தோமரங்க ளீட்டி கழுக்களுடன்
பாசங் கடைகுலிசம் பண்ணுஞ் சரமாழி
வீசும் படைநெருங்கு மே. (32)

ஆதி யருக்க னனலுமஞ்சுஞ் சோதிவிடு
மேதி மிடைந்த விமையோர்க்கே வேதனையை
யென்றுங் கொடுத்தனவா மேன்றவரு வாகைதனைத்
துன்றும் படிபுனைந்த து. (33)

ஆயிரமா மாயிரஞ்சே ரானைகொண்ட வாற்றலினர்
மாயிருஞா லம்விழுங்கும் வாயுடையார் தீயெரியும்
கண்ணுடையர் சேனைக் கடற்குப் பதிபதினொன்
கெண்ணுடைய ரேற்று ரிடித்து. (34)

Koviloor Digital Library

உரத்திற் பெரிய ருருமொத்த வாயர்
கரத்திற் படையர் கமலன் வரத்தின்
மலையடுத்த தோற்றத்தர் மன்னி னிறைந்தார்
கொலையடுத்த கைத்துர்க் குணர். (35)

விண்ணளக்க நின்ற விரற்றனுவர் வெற்பெனவே
கண்ணளக்க நின்ற கடிமார்பர் மண்ணளக்கும்
வல்லமையார் வானோர் மறுக்கமுற வந்தனரா
மெல்லமையுந் தேர ரெதிர்த்து. (36)

இந்திரனும் வானோ ரெறிந்த படைகளெலாஞ்
சிந்தியிறக் கொண்ட செறிபுயத்தார் அந்தகனும்
போற்றுதிற லானைப் புரிவுடையார் செந்தழலை
யாற்றுதிறன் மேனி யுடை யார். (37)

சூலமொடு பாசந் தொடர்ந்தவனற் செம்மயிரின்
சாலமொடு கோபக்கண் தாங்கினார் ஆலமது
போலு நிறத்தார் பொருகாலன் காலனெனச்
சாலுந் திறத்துவரத் தார். (38)

கழலுற்ற காலர் கவசத்தார் மார்பர்
நிழலுற்ற பூணெறித்த நெற்றி யழலுற்ற
குஞ்சியர்கள் வெஞ்சமரைக் கொண்டெழுந்த சிந்தையினார்
எஞ்சியதில் வீரத் தினர். (39)

மத்தக் கனிற்றமரர் மன்னன் சினத்தெதிர்ந்தாற்
சித்தக் களிப்பறவெந் சேர்க்கும்வலர் நித்த
முருப்பெரிய வல்ல வுயர்கால னோடு
செருப்பெறினுந் தோலாத் திறா. (40)

குஞ்சரங்கள் வாசி குரங்குபேய் கோளரியும்
வெஞ்சினங்கொ ளெண்கொடுநாய் வேங்கையென வஞ்சும்
கனல்புரைய மானனத்தார் கார்க்கடலின் வந்த
வனல்புரைய மானநத்து வார். (41)

Koviloor Digital Library

எண்கை யெழுகைய ரேழுமெட்டு மாகுமெனக்
கண்கனல்கொள் தீமுகத்தர் காலினர்கள் வண்கையால்
வாரிவரும் பேருயிர்கள் மண்டும் பெருவயிரார்
சாரிவரும் பேய்வடிவத் தார். (42)

இயக்கரிற் றந்த திகலவுண ரிட்ட
மயக்கரிய தேவரிடை வந்த துயக்கிலவாம்
கந்தர்ப் பரைத்துரந்து காட்டழல்போல் வாரிவந்த
சந்தப் பணிகளணிந் தார். (43)

எழுவ ருடனெழுவ ரேழுலகும் வென்றி
தழுவிவரு தானைத் தலைவர் மழுவருகை
வாளரியும் வென்றி வயக்கு மயிலுடையர்
ஆளரியின் சீற்றத் தவர். (44)

வில்லினர்கள் வாளினர்கள் மேலிதழின் மேலிவரும்
பல்லினர்கள் மேற்கொள் பருவலியர் புல்லுந்
திசைசேர் புரவியுடைத் தேர ரடர்த்தார்
விசைசேர் புகழர் விரிந்து. (45)

தூடணனு முச்சிரத்துத் தோன்றலவ ராதியர்கள்
கோடணையு மாமுரசின் கோச்சேனை யாடவர்க்கு
வெற்றிதரும் வீரர் விசையக் கரன்றேரைச்
சுற்றினர்கள் முற்றுந் துணிந்து. (46)

ஆன்றமைந்த சேனை யழுவத்தா மார்கலிதாம்
வான்றொடர்ந்த மேரு வளைத்தவெனத் தோன்றினனும்
பொன்னுலகோர் நெஞ்சிற் புகுந்த நடுக்கமென்று
லின்னுலகோர்க் கென்னு மினைவ. (47)

மாலான யானை வயமாவுந் தேர்வீரர்
மேலான தாளின் மிடைதூளி யாலான
பாற்கரன்றே ரீர்க்கவரு பச்சைப் புரவிதர
மேற்கவரும் வெள்ளை யியைந்து. (48)

Koviloor Digital Library

வனந்துகளிற் சேர மலையி னிவரும்
கனந்துகளிற் சாரக் கடல்தூர்ந் தினந்தொகுத்த
தூளிதனைச் செல்வதென்னே தொல்லுலகை மூடிநின்ற
வாளிதனைப் போல்வா ரடைந்து. (49)

வந்ததுவாஞ் சேனை வரம்பிலவாய் வள்ளியன்முன்
னுந்தரிதா யோங்கி யுடனுரைந்து மந்தகர்க்குத்
தந்தளிக்கும் நோய்போற் றனியரக்கி முன்னேகக்
கொந்தளிக்குஞ் சிந்தை கொதித்து. (50)

தூரியத்தி னோசை துணுக்கங் கொளமுகில்கள்
வார்சிலையி னொலொடுங்க மாகடலும் ஆர்கலியிற்
சேரவரு சேனைத் திரளடைந்த சேவகராம்
வீரவரர் காண விரைந்து. (51)

மெய்யின் வருத்தம் விளையக் குலைந்தலைந்து
முய்யும் வழியி னுலைவிலங்கும் நைதல்கண்டாற்
றீயவர்கள் சேனை திரண்டு வருவதென
வேயவர்கள் சொல்லும் விதம். (52)

தூளிப் படலை தொடரமரந் தூருடனே
தாளொடியு மோசை சடசடென வாளியரி
யஞ்சிவரக் கண்ட வனக ரடுசேனை
மிஞ்சிவரக் கண்டார் விழைந்து. (53)

வீரக் கவசத்தன் வெற்றிவிற்கை வாளுடையன்
போரைக் குறித்துப் புகைநெஞ்சன் கோரமுடன்
முன்னின்ற தம்பி முகநோக் கியவீர
மன்னின்று சொல்லும் மதித்து. (54)

நெறிக்கொள் தவர்முன் னிருத ருயிரைப்
பறிக்கும் வகைமொழிந்த பண்பால் வெறிக்கொண்ட
மைக்குழலைக் காத்தி வரைந்து படுக்குவனு
னிக்குழுவை யென்று னெடுத்து. (55)

Koviloor Digital Library

கானமுறச் சூழ்ந்து கவிந்து வருசேனை
யானகரன் சேனைவெள்ள மாகுமென மானவனும்
புட்டி லொடுகவசம் பூட்டி யுடைவாளுங்
கட்டிமுனி கொண்டான் கரம். (56)

மீளரிய போரினிடை விண்ணுமண்ணு நண்ணிடினும்
நாளுலரு மென்பதனை நானுரைத்தென் கோளிறெடு
மிஞ்சிவரு சேனை விரிவெஃற் கருளென்றான்
அஞ்சலிசெய் தம்பி யடுத்து. (57)

என்று னிளையா னிசையானி ராமனவன்
குன்றுன தோளாற்றல் கொண்டனறு மென்றாலும்
வண்ணவளை யான்சொன் மறுத்தறியா னம்பன்ன
கண்ணவளைக் காத்தான் கரைந்து. (58)

குழைமதியம் பூத்தபொலங் கொம்பனையாள் சோர
மழையனையான் சாலைநின்றும் வந்தான் மழையாய்
முழங்கரக்கர் காண முழைநின் றெழுந்து
தழங்கரிக்கு நேராய்த் தனித்து. (59)

தோன்றவரு சேவகனைச் சுட்டினளாய் வெங்கரற்கு
வான்றொடரும் வேயின் வயங்கெரிபோற் றுன்தொடரும்
வன்குலத்தை மாய்க்கும் வகைவந்தாள் கட்டுரைத்தாள்
மன்குலத்தா னென்று மருண்டு. (60)

கண்டனனுந் தேர்மேற் கதிரவனுந் தான்கலங்க
மண்டனலா வந்த வயக்கரனு மண்டமரில்
ஓகைகொள்வேன் யானே ஒருமா னிடற்றடுத்து
வாகைகொள்வே னென்றான் வரைந்து. (61)

மானிடனுந் தானொருவன் வந்த திறற்படைக்குக்
கானிடனுந் தானறிதேற் கண்டதெவன் யானிவனை
வென்றிடுவே னென்றவுரை வீணே விலங்கிடுநீர்
கொன்றிடுவே னென்றான் கொதித்து. (62)

Koviloor Digital Library

அவ்வுரையைக் கேட்டா னகம்ப னமைந்தகல்விச்
செவ்வுரையன் சொல்வான் செருவலியா யிவ்வயினே
தீயனவாந் துன்னிமித்தந் தேர்ந்தருள வேண்டுமென்றான்
தூயனவாஞ் சொல்லாற் றுணிந்து. (63)

குருதி மழைசொரிந்த கொண்டல் குமுறிப்
பரிதிதனை யூர்வளைத்தல் பாராய் கருதிநின்ற
வீரவரு கேதனத்தில் வீழுங் கொடியினங்கள்
சேரவரு மென்றான் றிகைத்து. (64)

வாளின்வா யீகள் வளைக்கின் றனவயவர்
தோளிடமுங் கண்ணுந் துடிப்பனபார் மீளிமொய்ம்பர்
வாளிவரு மாவீழும் வந்தூளை யிட்டுவரும்
ஞாளியொடு கேளா நரி. (65)

பிடியுமதம் பெய்யும் பெருங்கயத்தின் கொம்பு
மொடியுங் கதலித்தண் டொக்க விடியுமுடன்
வீழ்ந்துலகங் கம்பிக்கு மேலுந் திசையெரியுஞ்
சூழ்ந்தபுலால் மாலையுடைத் து. (66)

இத்தன்மைத் தாக விவனொருவன் மானுடனென்
றத்தன்மை யெண்ணி லவையென்று மொத்த
வினைமுழுதுஞ் செய்தும் வெலற்கரிய னாகும்
நினைமுழுது மென்றான் நிரந்து. (67)

உரைத்த மொழிகேட் டுலக முலையச்
சிரித்தெ னடல்தேவர் தேய வரைத்தவம்மி
யாமலங்கற் றிண்டோ ளமர்வேண்டி யேவிளையு
நாமலங்கற் குண்டோ நவில். (68)

என்ன வுடனே யெரியும் படையிடித்து
மன்னவனைச் சூழ்ந்து வளைந்தனவா மின்னு
மினமடங்கற் சூழ்ந்த விபவினங்க ளென்னச்
சினமடங்கா வீரர்தொகு தி. (69)

Koviloor Digital Library

வளைந்தவுடன் சூழ்ந்த வரதன் வரிவில்
விளைந்தவடற் போரை விரித்தும் புளைந்த
பரிபுரண்ட யானை படிந்த விடியால்
வரைபுரண்டு வீழ்ந்த வகை. (70)

சூலங்க ளற்ற சுடர்மழுக்க ளற்றபிண்டி
பாலங்க ளற்றமழுப் பன்மையற்ற மூலங்கொண்
டற்றனவாம் பாண மகலு மயிலினொடு
மற்றனவாம் வில்லொடுபெல் லம். (71)

தொடிதுணிந்த தோளினொடு தோமரமும் போன
அடிதுணிந்த யானை யடற் றேர்க் கொடிதுணிந்த
கோரந் துணிந்த குலவீரர் தாளினொடு
வீரந் துணிந்த விழுந்து. (72)

வாரணத்தைத் தீர்த்து மலையருவி போலிரத்தம்
தாரணிக்க ணீர்த்துச் சகடிறுத்துப் போரணிகொள்
கொய்யுளையைக் கொன்று குவிக்கும் சிரக்குவைகள்
கையுளையான் செய்யவிசி கம். (73)

ஒன்றுபத்துக் கோடியென வோங்குமிரா மன்கணைகள்
சென்றிபத்தைச் சேர்த்துத் திரட்டிமலை யென்று
குவித்தடுத்து நேரே குருதிப் புனலைப்
புவித்தலத்தா ருக்கும் புளைந்து. (74)

காடுகொண்ட காருலவை காயெரியாற் காய்ந்தடுத்துச்
சூடுகொண்ட வாய்க்குருதி தோன்றவே யாடி
யயரு மறுகுரைக ளம்புவிண்மேற் பாய்த
லுயருமுயி ரைத்தொடர்வொத் து. (75)

கைக்கவசஞ் செய்து கழுத்தறுத்துக் காறரித்து
மெய்க்கவசங் கொய்து விறலுடைய மைக்கசமு
மாத்தலையாச் சிந்தி மகிதலத்தை முற்றுவிக்குங்
காத்தலையாஞ் சீமான் கணை. (76)

Koviloor Digital Library

மாரியெனக் கொண்டகணை மாமலையை நேர்நிருதர்
பேருடலால் வேலை பிறங்கவட்டுச் சோரி
தனையேரி யாறுசெய்த தானே மறையும்
வனமான தொல்லை வழக்கு. (77)

ஆயதொரு காலை யனலாய் விழித்தரக்கர்
தீயகணை சிந்தித் திறப்படைகள் மேய
மலைவளைத்த மேகமென மாரி பொழிந்தார்
சிலைவளைத்த தீயர் சினந்து. (78)

சொரிந்த படையைத் துணித்துச் சரத்தால்
விரிந்த திசையை விளக்கிப் பெருந்தருவார்
மாவனத்தை முற்றுவித்தான் வாளரக்கர் தந்தலையாற்
பூவனத்தன் வெற்றி புனைந்து. (79)

கவந்தங் களித்த கரமலைகண் மூழ்கிச்
சிவந்த குருதியிடைச் சேர நிவந்த
செயிர்சுமந்த தீயூன் றெவிட்டுங் கழுது
முயிர்சுமந்த தும்ப ருவந்து. (80)

வஞ்சனஞ்சார் வாளரக்கர் மாய்ந்தவர்கள் கண்மணியை
அஞ்சனஞ்சார் காக மழித்துண்ட மிஞ்சும்
மறனென்றி யாக்குமவர் வாழ்வுகெடற் கென்னே
அறனன்றி யாக்கமெவர்க் காம். (81)

பல்லா யிரமிருளைப் பாற்றும் பகலவனும்
வில்லா ளனைமுனிந்த வேலரக்க ரெல்லாம்
பொருதொடையா ராகிப் பொழிமா முகில்போ
லொருதொடையா லெய்தா ருறுத்து. (82)

எறிந்தவரு மெய்தவரு மெய்யு மியல்பை
யறிந்தவருந் தீர வறுத்தான் செறிந்த
புலைபிடித்த வஞ்சகரைப் பொன்ற விடக்கைச்
சிலைபிடித்த வள்ளல் செறுத்து. (83)

Koviloor Digital Library

வானத் தனகடலின் வாரத் தனமதில்சூழ்
தானத் தனமலையின் சார்புற்ற கானத்தாம்
காய்ந்தெடுத்த வில்லுடைய காகுத்தன் கைக்கணைகள்
சேர்ந்தெடுத்து வீழ்த்துஞ் சிரம். (84)

மண்மேல் மலைமேல் மழைமேன் மதிதோயு
விண்மேன் விரிவேலை மேன்மிடலோர் எண்மேலும்
கூர்ந்துவரு தாவரக்கர் கொண்ட பழிமேலுஞ்
சார்ந்துவரும் வள்ளல் சரம். (85)

கனலின் சிகைபொதிந்த கண்ணு ரெவரும்
மினலின் படைகள் விடுவா ருனலின்முனர்
தானவர்க ளோடிச் சலித்துவிழல் கண்டடுத்தார்
வானவர்க ளாடி மகிழ்ந்து. (86)

ஈரச் செறிகமல மேற்றவிர தம்புளினம்
வீரக் கரிமுதலை மேலுதிக்கும் பாரக்
குடர்மிடையும் பாசடையாக் கூறு மிரத்தக்
கடல்குடையு மூரிக் கழுது. (87)

அழைத்தார் சிலரயர்ந்தா ரன்றே கழிந்தா
ருழைத்தார் சிலருயிர்த்தா ரோடிப் பிழைத்தார்
குருதிக் கடலிற் குளித்தார் கொலையால்
வருதிக் கடவீழ்ந்தா வார். (88)

உடைந்தார் களைநகைத்தா ருருகின்ற தேரார்
அடைந்தார் படைத்தலைவ ராஞேர் மிடைந்த
கடற்றனை வீரர் கடுவை நிகர்ப்பார்
படற்றுன் முனைந்தார் பழித்து. (89)

நாகமுற்ற வில்லிதனை நாட்டும் புரத்தார்முன்னாள்
மாகமுற்றுச் சூழ்ந்த வகையேபோல் வேகமுற்ற
கண்கவர்ந்துண் சேய கனல்பொழிய வந்தடுத்தார்
மண்கவர்ந்துண் மாலை வளைத்து. (90)

Koviloor Digital Library

எய்தா ரெறிந்தா ரெழுமழுவை யேற்றெறிந்தார்
பெய்தார் மழைபோற் பெரும்பொருப்பை வைதார்
தெழித்தா ருரப்பினர் சேர்வரைபோற் சூழ்ந்து
பழித்தார் வெறித்தார் பகைத்து. (91)

தேர்பூண்ட வல்விலங்கு செஞ்சிலையான் செய்கொலையாற்
பார்பூண்ட யானை பரிமாண்ட நேரும்
உடல்பூண் டிலதலைக ளோடுமுயிர் மாக
மடல்பூண்ட பல்லவங்க ளால். (92)

மாலடைந்த வீரர் மழைபோல் வழியிரத்தங்
காலடைந்த மானதிபோற் கான்றடுத்த மேலடைந்த
விண்ணோர் விழியடைத்தார் மேலடுத்த காற்றாதர்
எண்ணோவ நின்று ரிரிந்து. (93)

பேயே றினசெருவிற் பித்தே றினமறவோர்
நாயே றினதலைமே. ஞடியே தீயேறும்
வாளியினல் வீரர் மடிந்தார் வளைந்தனர்கள்
ஆளியினும் வீர ரடர்த்து. (94)

தலைசிந்தும் வீரருடல் தாவுமழல் சிந்துங்
கொலைசிந்து வீரர் கொடுங்கண் சிலையிற்
கடுங்கணைகள் சிந்தக் கடுத்த மறவோ
ரொடுங்கினர்க ளோய்ந்தா ருயிர். (95)

படைத்தலைவர் தாமும் படைத்து வருதேர்
உடைத்தலையாஞ் சேனை யொழிய விடைத்தடர்த்து
வந்தடுத்தார் வீரனடு வாளி மழைமூழ்கிச்
சிந்தடுத்தார் நொந்தார் திகைத்து. (96)

சுற்றிவர நோக்கித் தொடர்ந்துவரு சேனைதமி
லற்றசிரத் தாக்கையன்றி யார்கண்டார் முற்றவரும்
அற்பிடித்த மெய்யா ரடுத்தா ரிராமனிடை
விற்பிடித்த கையார் விரைந்து. (97)

Koviloor Digital Library

எழிரண்டு தேரு மிமைப்பி னிடைதேசா
ராழிகொண்ட வத்தத் தடற்சிலைகொள் வாழிகொண்ட
வீரனடு வாளிமழை வீழத் தகர்ந்தனவாங்
கோரமொடு மாளுங் குலைந்து. (98)

அழிந்தனவாந் தேர்க ளவனி யதனி
விழிந்தனவாய் வில்லை யெடுத்தார் பொழிந்த
மினல் பொடிக்கும் வாளிமழை வீசினர் கோபக்
கனல் பொடிக்குங்கண்ணர் கவிந்து. (99)

நூறிவரு பாணமெலா நுண்பொடியாய் வ்ண்சரத்தா
லீறுவரச் செய்துவில்லீ ரேழுடனேழ் கூறும்
அமர்க்கொழியா வன்மை யழித்தான் செழித்த
தமர்க்கொழியா நன்மையளித் தான். (100)

வில்லிழந்த வீரர் வெகுளி விளைந்தடர்த்தார்
எல்லிழந்து கல்வரைக ளேற்றெறிந்தா ரால்லை
யுருத்தார் விசும்பினிடை யோங்கினர் நின்று
சிரித்தார் செறித்தார் சினந்து. (101)

கல்விப் பெருங்கடலான் கண்டுபதி னொன்குபல்லம்
வில்லிற் றொடுத்து விடுத்தவுடன் ஒல்லை
எறிந்தமலை யோடு மெடுத்தலை மண்ணின்
மறிந்தமலை தீர்ந்த மடிந்து. (102)

படைத்தலைவர் பாறிப் படலும் படையார்
விடைத்தடைந்து தீயோர் விழியா ரடைத்த
சமரமிஞ்சிச் சூழ்ந்தார் தடுத்தா ருலகை
அமராஞ்சித் தாழ்ந்தா ரயர்ந்து. (103)

முழங்கும் பெரும்பணைகள் மூரிக் களிறு
முழங்கும் வரிசிலைகள் முற்றித் தழங்கிவரு
சங்கம் புரவியொடு சார்ந்தார் படைவீர
ரெங்கும் பரவுமுகி லேய்ந்து. (104)

Koviloor Digital Library

படைமிடைந்தார் வீசும் படைமிடைந்த வீரன்
தொடைமிடைந்த வம்பே துறக்கு மிடைமிடைந்த
வும்பர்க் ககம்வெறுத்தங் கோட்டினு ராசைநின்ற
கம்பக் களிறிமைத்த கண். (105)

அத்தலையான் றனை யளவில்லா வாற்றலினன்
முத்தலையான் பொன்முடியன் முக்கண்ணன் கைத்தலையார்
சூலமெனத் தோற்றத்தான் சோதிப் பகழியினு
ஞலமெனவேற்று னடர்த்து. (106)

அன்னவனை நாப்பனுற ஆழவுந்தி யூழிவந்த
தென்னவரு சேனைக் கிடையடுத்தான் றன்னும்
இருளிரியத் தோன்று மின்னென்ன வன்பர்
மருளிரியத் தோன்றும் வரன். (107)

ஓங்கொளிய வாள னுருமுவென வார்ப்புடையன்
வீங்கொளிய சாலியுடை வெய்யகண்ண னங்கவன்றன்
றனையணி யாகவந்தான் தாங்கினன் வள்ளலுந்தன்
தானையணி யாகச் சரம். (108)

தாளிடையு மற்ற தலையற்ற வெற்றியுற்ற
தோளிடையு மற்ற தொடையற்ற வாளிடையு
மற்றமழு வற்றமுடி யாக முழுதுமற்ற
வற்றகுடை முற்று மழிந்து. (109)

கொடியுங் கொடுஞ்சினத்தாங் கோரமொடு மற்றும்
படியிற் பட்டத்தடிந்து பண்ணும் நெடிய
கடகரியை வீழ்த்தும் கனத்தாய் முழங்கும்
மிடிகடவு குன்ற மென. (110)

அற்றதலை யாக மறியார் கரம் பிடித்த
கொற்றவில்லிற் கூர்சரத்தைக் கோர்த்திழுப்பா ரிற்றே
ருழையா ருடனெழுந்தே யோங்கிவிண்ணி னின்று
மழையாய்ப் படைவழங்கு வார். (111)

Koviloor Digital Library

கேடகத்தாங் கையர் கிரிபுரையுந் தோற்றமிக்க
வாடகத்தாஞ் சாலி யடற்கவந்த மாடல்கண்டாற்
றெய்வரம்பை யார்பூச் சிறந்துவரு செந்நீரின்
மெய்வரம்பி னுடலொத்த வே. (112)

சண்டமுற்ற வெங்கணைக டாமடுக்க வானடுத்த
திண்டிறத்தார் வல்லரக்கர் தேவருற்றார் வண்டிரைக்கும்
கூந்தலவர் தம்முடனே கூடித்தம கவந்தஞ்
சேர்ந்தாடங் காண்பார் சிரித்து. (113)

ஆய மகளிருட னுகுமும்ப ரீட்டமுடன்
தாய கணைதுணித்த தந்தோளைப் பேயொருபாற்
கொள்ளுவதுங் கண்டார் குறைக்கும் ஞமலியுற்று
விள்ளுவதுங் கண்டார் வியந்து. (114)

தெரிகணைகள் மூழ்கத் திறந்ததிறன் மார்ப
ரிருவினையைப் போக்கியும்ப ரெய்தி நிருதர்
பெரும்படையி னின்ற பெருமா னிவனே
யரும்பரம னென்று ரறிந்து. (115)

கைக்கரியன் றன்பகழி கண்டகர்க ளண்டிநிறை [ரிய
பொய்க்குலத்தை வேர்பறித்துப் போக்கவெண்ணின் மைக்க
வஞ்சமனத் தாலொருவன் மாண்பில்லான் பொய்க்கரியை
நெஞ்சொடுரைத் தான்குலத்தை நேர். (116)

அஞ்சிறைசே ராறுபத மண்டியடை கீடமதைத்
தஞ்சிறையிற் றன்மயஞ்செய் தன்மையென வஞ்சமன
வல்லரக்கர் தம்மை வளைத்துவள்ளல் வான்சரத்தால்
நல்லறக்கண் ணோராக்கி னன் (117)

வல்லமைப்போர் மானுடவன் வாளரக்கர் மாளவட்டல்
சொல்லுறுமி ராவணற்குத் தூதென்றே யல்லலடை
போரிலங்க ரக்கருடல் போர்த்த விரத்தநதி
சீரிலங்கை சேர்ந்த தெழித்து. (118)

Koviloor Digital Library

சூழ்ந்து வருபடையைச் சுற்றி வருபகழி
போழ்ந்து முயிர்போக்கப் பொங்கினான் தாழ்ந்துவரு
பம்பரத்திற் றேரதனைப் பாரித்த முத்தலையன்
அம்பரத்தின் விட்டா னதிர்த்து. (119)

ஊன்றிவரு தேர னுருமினடு வெங்கணையை
வான்றொடரு மாமழையாய் வாய்மையார் சான்றெனவாய்
நின்றதிரு மார்புடைய நேமியனைத் தாமறைத்தான்
வென்றதிறல் காட்டி விரைந்து. (120)

தூவியவா மேவைத் துணித்துவரு தாவமதை
ஏவியவா மேழிரண்டா மென்னவட லோவியவாம்
வாளியினாற் றேரழித்து மாய்த்தான் வலவனையும்
ஆளியினும் வீர னடர்த்து. (121)

அக்கணத்தின் மேலா மமரர் குமுறியெழ
மைக்கணத்தி னீலாம் வடிவுடையான் கைக்கணையால்
வன்றொழிற்செய் தீய மகுடத் தலையுருட்டு
மொன்றொழித் திரண்டை யுருத்து. (122)

தேரழிந்து தோற்றுந் திரிசிரனாச் செப்பநின்ற
பேரழிந்து மாற்றல் பிழைத்திலனாற் காரிழிந்த
தென்னக் கணைபொழிந்தா னேற்ற கருணைபொழி
மன்னைக் கணத்தின் மறைத்து. (123)

எற்று தனுவா னிருண்டுவரு கார்மழையிற்
தோற்று தனுவான் றொடர்ந்தடுத்தான் காற்றுநவப்
போனதெனக் கார்முகத்தைப் போக்கினான் மாற்றவர்க்கு
வானதனைக் காட்டும் வரன். (124)

வில்லிழந்தா னென்றால் விழித்துவரு வாண்முகத்தி
னெல்லிழந்தா னல்ல னிடிக்குநிகர் சொல்லிழந்து
தோற்றா னிறங்கான் றொடிக்கைச்சிலைவருடத்
தேற்றான் கறங்கி னிலைசர்ந்து. (125)

Koviloor Digital Library

ஆளிரண்டு நூறெனவே யந்தரத்தி லேயொருவன்
கேளிரண்டா மாயப்போர்க் கேடிலனைத் தாளிரண்டு
வெங்கணைக ளாற்றடிந்து வெற்பிணைத்த மற்புயத்தைச்
செங்கணையாற் றீர்த்தான் செறுத்து. (126)

அற்றனதாள் தோள னயிலி னெயிறிலங்கும்
பொற்றைமுழை வாயாற் புகுந்துடனே பற்ற
வருவான் றலையை மடித்தான் சரத்தாற்
றருவான் றலைமைத் தரன். (127)

திரிசிரத்த ஞஞ்சிகரந் தீர்த்தவுடன் மண்ணி
னிருதர்முற்றும் வெங்கொடுத்தார் நில்லார் குருதியக்கன்
தூடணனும் வீரன் றடர்ந்து விலக்கியுந்தாம்
காடணைவா ரானார் கடந்து. (128)

கணத்தின்மேல் வானவர்கள் கையெடுத்தா ரார்த்தார்
நிணத்தின்மேல் வீழ்ந்து நெளித்தார் பிணத்தின்மேல்
வீழ்ந்தா ரரக்கர் வெறித்தார் பயம்பிடித்துத்
தாழ்ந்தார் சிலர்க டவித்து. (129)

வேய்ந்தகொலை வாளினொடு வேன்மிடைந்து வெட்டுவதா
லோய்ந்தகொடுங் காலுதிர மோடுமடுப் பாய்ந்துவரு
கால்பறித்து நின்றார் கருத்திற் சிலர் பயத்தால்
மேல்வெறுத்துச் சென்றார் விரைந்து. (130)

கச்சினொடு வாளுங் கழலீர்த்தல் காணாதா
ரச்சமொடு மீளு மறிவழிந்தார் மெச்சவரு
வீரவரன் பாணம் விடைத்தரக்கர் நெஞ்சுருவச்
சாரவழி காணார் தவித்து. (131)

மண்டிறந்து வீழ்வர்சிலர் மாய்ந்த கரிவயிற்றிற்
புண்டிறந்து வீழ்முழையிற் போவர்சிலர் பண்டிறந்து
நிக்குங் கவந்தங்கா ணீங்களுரை யாதெம்மைத்
தாங்குங்க ளென்பார் தளர்ந்து. (132)

Koviloor Digital Library

அனைய வரக்கர்களை யாண்டொழிலிற் றீர்ந்த
வினையமிலா மானுடர்க்கு வேண்டி யினையன்மின்
என்றடுத்தி யானே யிவனைப் படுப்பனெனத்
தான்றடுத்தான் றாடணன்வந் தான். (133)

வச்சையரா யச்ச மனத்துண் டெனவாழுங்
கொச்சையர்பாற் கோல்வளையர் கூசார்கள் நிச்சயந்தா
னென்னுமினை யில்கவச மேற்றநிலை யன்றியச்ச
மன்னுதுணை வேறுயிர்க்கா மா. (134)

தாவிரவு மிந்திரனைத் தாக்கி யழிதலிலா
மூவரொடு மேற்ற முனையமரின் மேவிநின்ற
வோவலிலி ராக்கதர்நீ ருங்கட் கிடைந்தோடும்
தேவரொடு கற்றீர் தெளிந்து. (135)

இங்கொருவன் மானுடற்கா யித்தனைபேர் தாமிடைந்தீ
ருங்கையயி லோடவிழுந் தூர்புகுந்தீர் கொங்கையினை
மார்பிற் குளிக்க மருவுவிரோ மங்கையரைச்
சோர்புற்ற நீவிர் துணிந்து. (136)

செம்புவனஞ் சேர்ந்தகண்கள் சேர்பா லெனத்தெளிந்தீர்
வெம்புவனத் தேநுழைந்தீர் வெங்பாய்ந்த கொம்புதனைக்
காட்டுதிரோ மார்பிற் கடுத்தவம்பு பாய்ந்தபுண்ணைக்
காட்டுதிரோ மாதர் களுக்கு. (137)

எக்கமிதி னுண்டோ விகல்மனிதன் வெஞ்சமத்தி
னுக்கமது தேவர்க் கரிதெனினு நோக்குங்
குலத்தலைவன் றங்கை கொடிமூக்கோ டன்றி
நிலைத்தபழி யென்காட்டி னீர். (138)

ஆன்ற வணிகரா யானீரோ வீரமுற்றீர்
தோன்றும் வாட் கொண்டுழுது சோர்வீரோ வேன்றநீ
ரங்ஙனமாம் வீரத் தமைந்தீ ரினிப்பிழைத்தா
லெங்ஙனமா வாழ்வீ ரிருந்து. (139)

Koviloor Digital Library

என்றுரைத்துத் தானு மெறிகடனேர் சேனையுட
னின்றிரைத்துக் காண்டிரென நேர்சிலையான் சென்றடுத்துத்
தாக்கினான் றேவர் தலைநடுக்கங் கொண்டிரிந்தார்
உளக்கினான் சீமா னுளத்து. (140)

உளடறுப்புண் டோங்கு முயர்மலைபோற் கைம்மலைகள்
காடறுப்புண் டென்னக் கலந்தபடை கோடாய்
வழுத்தரிய தேர்பொடிந்த வண்சாலி போலக்
கழுத்தறுந்து வீழ்ந்ததுர கம். (141)

ஆய்ந்தகந்த ரங்கரிந்த வாகத் தரக்கர்களை
வேய்ந்தகந்த ரந்துணித்து வீழிரத்தந் தோய்ந்தகந்த
வெஞ்சரங்கள் சென்று விசயப் பரிகளொடு
குஞ்சரங்க ளெஞ்சவடுக் கும். (142)

தூடணன்றான் விட்ட சுடுகணைகள் போய்த்துணிய
மாடணைந்தோர் விட்டனவு மாற்றியே யாடல்கொண்ட
போரரக்கர் கெட்டவலி போக்கிப் படைக்கடலாம்
பேரிருக்க வொட்டான் பிளந்து. (143)

ஆர்த்தெழுந்தார் தேவ ரரிய வரைமரத்தோ
டார்த்தெழுந்த நெய்த்தோ ரிராமபிரான் றூர்த்தகணை
தீய்க்குந் திசைதொறுஞ் சென்றரக்கர் வன்றலையைப்
போக்கும் புரட்டும் புகுந்து. (144)

தோன்றுவரை போலத் துவன்ற நிணச்சேற்றி
னான்றவரைச் சொல்லே மமரையடுத் தூன்றினவர்
மேலு முலைந்தார் விரும்பி யுயிரையடுங்
காலுமுலைந்த கவர்ந்து. (145)

ஓங்குந் தமதுலத்தி னுற்றரக்க ரிற்றிறக்கத்
தேங்குங் குருதிநிணச் சேற்றினிடை பாங்கிவரும்
காரோட்ட மென்னக் கடும்பரித்தேர்த் தூடணனுந்
தேரோட்டி வந்தான் றெழித்து. (146)

Koviloor Digital Library

அறமடுக்கா வஞ்சர்தமை யையன் சரங்கள்
மறமடுக்க நின்று வதைத்துத் திறமடுக்கல்
ஆக்கும் வழியி னலேந்திரதஞ் சென்றிடித்துத்
தாக்கும் பழியுரைப்ப தார். (147)

மருளாழி கொண்டமனன் மாவிருபத் தைந்தா
லுருளாழி கொண்டவையத் தோங்கி யருளாழி
யேற்றெதிரி நின்ற விராமன் றனையடுத்தல்
கூற்றெதிரி நின்றவுயிர்க் கோள். (148)

சென்றெடுத்த தேர்மேற் சிலையுடைய மாமலைபோல்
நின்றடுத்த தூடணனை நேர்நிமல னன்றடுத்த
நின்னிலையே தென்று னிமிடந் தனிலவனும்
தன்னிலையே மூன்றுதொடுத் தான். (149)

நாடளிக்க மாபரத னற்குணத்தைக் கண்டன்பாற்
சேடனெனும் பாதுகையைச் சேரவிட்ட நீடளியான்
நெற்றியுயர் வீரபட்டம் நீக்கினன் தேவரெலாம்
உற்றதுயர் கொள்ள வுறுத்து. (150)

எய்தான் வலியதனை யெண்ணித் திருவுளத்திற்
செய்தான் முறுவல் திகழிரதம் நொய்தாகக்
கைச்சிலையைப் போக்கிக் கவசத்தைக் கட்டழித்தான்
நச்சிலைய வெங்கணையி னல். (151)

தேவர் துதிப்பத் திகழ்தவத்தோர் சிந்தைகொண்ட
தேவர் மதிப்ப விசைந்தாகும் காவடா
வல்லைதனி லென்று வடித்தகணை யொன்றுதொட்டா
னொல்லைதலை கொண்ட துடன். (152)

தம்பிதலை யற்றபடி தானுந் தயரதன்சே
யம்புபடை யைப்படுத்த வாற்றலையும் வெம்புபடை
விற்கொண்ட கையான் விசையக் கரன்கண்டான்
அற்கொண்ட சிந்தை யழிந்து. (153)

Koviloor Digital Library

அந்தகனு வுட்க வரக்கர் படைக்கடலாஞ்
சிந்துரமா தேரும் திசைபரப்பி யிந்துவைத்தான்
அற்றடுத்த தென்ன வடுத்தா னரக்கர்களை
முற்றடுத்த முன்னோன் முனம். (154)

அடங்கார் கொடுந்தொழில ராமரக்க ரார்த்து
விடங்கால் பகழி விடுத்தார் கடங்காலும்
மாகளிறு தேர்புரவி மாளக் கணைதொடுத்தான்
வாகளிசேர் தாரான் வரைந்து. (155)

துடித்தனவாம் யானை துடித்த பரித்தேர்
துடித்தனவா முவ்விதிர டோள்கள் துடித்தனவா
மாக்குடலி னோடு மருவுங் கழற்றுணைகள்
தாக்குடைய வள்ளல்சரத் தால். (156)

வாளின்வனம் வேலின்வனம் வார்சிலையி னும்வனந்திண்
டோளின்வனத் தோடு துவன்றியே யாளின்வன
நின்றவற்றை யம்பா நிகரில் வனமதனைற்
கொன்றவற்றைக் கோவாக்குங் கோ. (157)

தானுருவு கொண்ட தருமந் தெரிசரந்தான்
மீனுருவும் மேருதனை வேட்டுருவும் வானுருவும்
மண்ணுருவும் வாளுருவி வந்தா ருடலுருவி
எண்ணுருவு மென்று மிசைந்து. (158)

அன்றவளைத் திட்ட வரக்கர் குலமடங்கச்
சென்றவளைத் தட்ட சிலகணைகள் மன்றில்
வலியா வெளியாரை வாட்டும் பொருளிற்
றொலையா வுயிரைநிகர்த் து. (159)

கடுங்கரனும் வீரன் கருது மரக்கர்
அடங்கலுந்தாக் திர வழன்றான் ஒடுங்கலிலா
நெய்த்தோர் நிணக்கடலி னின்றான் கடலிடையின்
வைத்தோங்கு மந்தரம்போல் வான். (160)

Koviloor Digital Library

செங்கணெறி சிந்தச் செருவிற் பகழிசிந்தப்
பொங்குங் குருதிப் புணரியான் கங்கமொடு
காகமிடையக் கடலோடும் வங்கமென
மாகமிடை தேரின் வரும். (161)

செறுத்திறுதி யிற்புவனி தீயவெழு தீயின்
மறத்தின் வயிரமுற்று வந்தான் கறுத்தமணி
கண்ட னடுசிலையைக் கையா லிறுத்தவரன்
கண்டவுடன் கொண்டான் கணை. (162)

தீயுருவ கால்விசைய செவ்வியன வெவ்வாய
வாயிரமாம் வாளி யரக்கனெய்தான் தீயுருவ
கால்விசைய செவ்வி கணக்காகும் வாளியினால்
மாலிசைய வெட்டுமிரா மன். (163)

ஊழியெரி யிற்கொடிதா யுற்ற பகழியொன்பான்
ஏழிசையும் பேருலகுக் கீசனெய்தான் சூழும்
வடிக்கணையைக் கொண்டு வழியின் முறித்தான்
இடிக்கணையுஞ் சொல்லா னெதிர்த்து. (164)

கள்ளவினை மாயமவர் கல்வியத னல்விளைத்தான்
வள்ளலுரு வைப்பகழி மாரிசெய்தா னுள்ளமுலை
வுற்றமர ரோடி யொளித்தா ரிதழ்ப்பவள
முற்றவர னுற்றான் முனிந்து. (165)

முடிப்பனொரு மொய்கணையால் முன்னென் றுரைத்துத்
தொடுத்துநின்று தோடுவக்கித் தொட்டான் பிடித்தசிலை
பேரக் கடிவான் பிறங்கு மிடியோதை
சேரக் கடிதிற்ற தே. (166)

வெத்திசெயும் வீரனடு வில்லிற்ற கண்டமரர்
எத்திசையு மானவரா யேங்கினார் முத்திசெய
அஞ்சிலையில் லாமை அறிந்துமிக வாவலித்தார்
நெஞ்சிலைய ராகி நிரந்து. (167)

Koviloor Digital Library

என்னவுடன் கையி னெடுத்தேந்து கார்முகந்தான்
சின்னமுட ஞந்தனிமை சிந்தையிலான் மன்னவரன்
காதலனும் பின்னுறத்தன் கைநீட்டி ஞன்கரத்தின்
ஏதிலனுங் காணு னெதிர். (168)

கண்டறிந்து வேண்டுங் கருத்துணர்ந்தா னென்னவுட
னண்டர் சிந்தை மன்கரத்தி னத்துணையே பண்டடுத்த
போர்மழுவான் தந்தவில்லைப் போற்றியளித் தான்வருணன்
சீர்வழுவான் செய்கை தெரிந்து. (169)

கொடுத்த வரத்தனுவைக் கொண்டணிறத் தண்ணல்
எடுத்த வலங்கொ ளிடக்கை பிடித்தவுடன்
நன்னிமித்தம் நீங்கினர்க்கு நாட்டுமிடக் கண்ணிடத்தோள்
துன்னிமித்தங் காட்டுந் துடித்து. (170)

ஏற்றிஞ ஞணி யிமைத்தற்கு முன்னெடுத்துக்
கூற்றினர் போற்றக் குறித்தெதிரே யாற்றியவன்
கண்படியாத் தேரைக் கடுத்த சரமதனல்
நுண்பொடியாச் செய்தா னுவன்று. (171)

எந்திரத்தாந் தேர்பொடியா யிற்றவுடன் முற்றுமுனிந்
தந்தரத்தா ஞர்த்தெழுந்தா னம்புமழை சுந்தரத்தாம்
வில்லிதன தோளென்னும் வெற்பிற் பொழிந்தடுத்தான்
கல்லிதெனும் வில்லான் கரன். (172)

தாங்கிநின்ற கோமான் றயரதன்சேய் சீமானுந்
தூங்கிநின்ற தூணிகொண்ட தொல்சரத்தை வாங்கும்
வலக்கையை வாளியினல் வன்றேளி னேடு
விலக்கிநிலம் வீழ்த்தான் விரைந்து. (173)

வலக்கையது வீழ்தலுமே மற்றைக் கரத்தா
லுலக்கையதை யோச்சி யுறுத்தா னிலக்குவற்கு
முன்வந்த கோமான் முடுகிப் பொடியடித்தான்
மின்வந்த வாளி விடுத்து. (174)

Koviloor Digital Library

விராவ வரியகடு வெள்ளெயிறு போய
வராவழன் றதன்ன வனையான் மராமரங்கை
வாங்கினன் வந்தான் மனுகுலத்தான் விற்கரத்திற்
றூங்கினன் விட்டான் சரம். (175)

வரமரக்கன் கொண்ட வளத்தானு மாயை
யுரமுடைத்தா மானு முலகைப் பரமுறுக்கி
வாவுற்ற தானும் வலக்கரமாய்க் கண்டமுற்றுந்
தாவத்திற் காய்ந்த சரம். (176)

ஆர்த்தெழுந்தார் ஞானவர ராடினர் பாடினர்
தூர்த்தெழுந்தார் வானவர்க ளேய்மலரைத் தீர்த்தன்
பொலிந்தான் பரிதிதனைப் போர்த்தபனி போக்கி
மலிந்தா லெனத்தான் மகிழ்ந்து. (177)

முனிவரர்கள் வந்து முறைமுறையே மொய்ப்ப
வினியவர வள்ளலடுத் தேகும் அனிகமதில்
ஆருயிரைப் போக்கி யடுத்துத் தனியிருந்த
பாருயிராந் தையலவள் பால். (178)

விண்ணடுத்து நீங்கிவரு வெய்யவர்கள் மேனிதனில்
புண்ணடுத்த நீரும் பொடியுமுக வண்ணவிற்கை
வீரனைத்தாந் தம்பி விசையையிவர் கண்ணீராம்
நாரினிற்பா தங்கழுவி னர். (179)

மூத்தமொன் றி னேடி முடிந்த வரக்கர்புண்ணீர்
நீத்தமொன்றி யோடி நெடுந்திசைநேர் கோத்தடுத்த
வேலைக் குரலெனவே வேண்டிவரு வானவர்கள்
சாலத் துதிக்கமகிழ்ந் தான். (180)

இங்கு வருவ திசைத்து மிராவணன்றன்
தங்கை வயிறு தகர்த்தனளாய்க் கங்குலன்ன
மேனிக் கரன்மேல் விழுந்து தழீயழுதாள்
ஆனிக்கு வித்தா மவள். (181)

Koviloor Digital Library

ஆக்கினே ஞசை யகத்தி னதுவுமெந்தன்
மூக்கினேர் போக முடிந்திலஞ நீக்கமிலா
வாக்கிஞ லுங்கட்காம் வாழ்நாளை முற்றமுண்டு
போக்கினே னென்ருள் புரண்டு. (182)

அலங்கல்வேற் கையா ரரக்கர்களைக் கொன்றுங்
குலங்க ளறுப்பான் குறித்தாள் வலங்கொண்ட
கூறைகொண்ட மாருதமாய்த் தோன்றிஞள் வள்ளல்சரம்
கூறைகொள்ளு மூரைத் தொடர்ந்து. (183)

கரன்வதைப் படலம் முற்றிற்று.

மாரீசன் வதைப் படலம்

அரக்கர்க்காந் தீமைகண்டு மண்ணைல்புயத் தாசைப்
பெருக்கத்தாற் சீதையெழில் பேச வரக்கன்
றனையடுத்தாள் மன்னன் தனியரசு செய்யும்
புனையடுத்துச் சொல்வாம் புகழ்ந்து. (1)

பண்டுலகு தந்தவரன் பண்ண வரிதாகிக்
கண்டுமலைக் கச்சுரர்க்காங் காமர்தச்சன் கொண்டு
நலத்தாற் புரிந்த நவமண்ட பத்தின்
வலத்தா னிருந்தான் மதித்து. (2)

திசைக்களிற்றின் கோடொடித்த தீரமிகு பொற்ருேள்
இசைக்கு முதயவரை யென்ன விசைக்கிரவி
நண்டலங்கள் பன்னிரெண்டு நாலைந்தாய் வந்தவெனக்
குண்டலங்கள் கொண்டுவிளங் கும். (3)

ஆரங் குலவு மடற்ருேள் புடையிலங்க
வீரங் குலவ விசையமுடன் சாரும்
பெருவலிய ராமரக்கர் பெம்மா னிருந்தான்
செருவலியர் போற்றச் சிறந்து. (4)

Koviloor Digital Library

மூவகைய மாவுலக முன்னோ ரெனுமுறையோர்
ஓவிலுத வும்பரிசி லோங்கலெனத் தேவரொடு
தானவர்க ளேவும் தனிமா மலர்க்குவியல்
மானவரை போல்விளங்க வாங்கு. (5)

இன்ன பொழு திவ்வழியி னேற்றுவரு நோக்கமென
வுன்னலர்கள் கைசுமந்த வுச்சியரா மின்னவிரும்
மாமுடிசேர் விஞ்சையர்கள் மற்று முரியோர்கள்
தாமருவ மாலினிருந் தான். (6)

மங்கையரை நோக்கியொரு மாற்றம் வரைந்திடினுந்
தங்களையா மென்று தணிசிரத்தா ரங்கையுடன்
உள்ளங் குவிந்தங் கொடுங்கி வருசித்தர்
தள்ளரியர் போற்றவிருந் தான். (7)

அன்னா னமைச்சர்களை யாங்கு வரனோக்கி
நன்னு மொழிக்கு நடுங்குவார் என்னை
பணியென் றிரைஞ்சிப் பயங்கொண்ட நெஞ்சர்
தணிவின்றுங் கின்னரர்சூழ்ந் தார். (8)

பிரகரங்கொ டண்டப் பெருந்தண்டைக் கொண்ட
கரதலங்கொள் சண்டனடல் காணும் நரகினரா
மென்னநடுங் கும்முரக ரேற்றச் சிறந்திருந்தான்
பன்னகர்கள் போற்றப் பரிந்து. (9)

திசைக்கரியைச் செற்றுமகா தேவ னுடனே
விசைக்கயிலை தன்னை யெடுத்தும் அசைக்கரிய
விந்திரனை மாற்று மிசையதனைத் தும்புருதான்
தந்திரியிற் சாற்றவிருந் தான். (10)

சேனுயரு மார்க்கந் திறம்பா வகையாகப்
பாணி பணிசெய்யப் பண்செறிந்த வீணை
நரம்பு தருதேனை நாரதன்றான் வார்க்க
நிரம்புசெவியானிருந்தா னேர்ந்து. (11)

Koviloor Digital Library

மேகத் துருத்திகொண்டு விண்ணோர் தருத்தேனை
யாகப் புனலோ டளாவியே தோகையர்கள்
மென்றுகிலிற் றோயவரு மென்று துணுக்கமுடன்
சன்றெடுத்துச் சிந்தவரு ணன். (12)

நறைமலர்த்தேன் தாது நளிர்மகுட கோடி
முறையறையச் சிந்துமணி முத்துந் தறையிடையு
காதமுன்ன தாகக் கவிந்து துறைதோறும்
வாதமுன்னித் தீர்க்கமகிழ் வான். (13)

மின்னுடைய வேத்திரக்கை வீரர் விளங்குமெய்யிற்
றுன்னுடைய கஞ்சுகத்தர் சோர்வில்லார் பொன்னுடனே
வெள்ளியசே ராசனங்கள் மேலோர்க்குத் தாமுதவ
வள்ளலென வீற்றிருந்தான் மன். (14)

சூலமுத லானபடை தோன்றாது சுற்றிவரு
சேலையுடன் வாய்புதைத்த செங்கையொடு தோலுடைய
தாட்பணையை யாக்குந் தருணந் தொருங்காலன்
நாட்கடிகை கூறமன்று ளன். (15)

நயங்கிளரு நானகெய்யின் நந்தலில்கற் பூரம்
வியன்கிளரும் பஞ்சடுத்து மேவுங் கயங்களிலே
தாமரைகள் பூத்தவெனத் தாங்கு மெரிக்கடவுள்
காமர்விளக் கேற்றக் கலந்து. (16)

அதிசயம தாயளிப்ப தற்கா யருள்சேர்
புதிதலருங் கற்பகமும் பொன்சேர் கதிர்மணியு
மானு நிதிக ளடுத்தருளைக் கண்டுதந்த
தானவர்கள் போற்றவிருந் தான். (17)

குண்டலங்க ளாமுதல கோல வணிகளெலாங்
கொண்டலங்கு மின்னொளிகள் கூடுதலா லெண்டிசையும்
போர்க்கு மிருளனைவயும் போய்ப்புகுத வீற்றிருந்தான்
ஏர்க்கையிரு ளில்லா விடத்து. (18)

Koviloor Digital Library

கங்கை முதற்றீர்த்தக் கன்னியர்கள் மன்னிலைசேர்
கொங்கை சுமந்த கொடியேபோற் செங்கையினாற்
பொன்னரிசி யும்மலரும் போற்றிச் சிதரிவர
மன்னிலையான் வீற்றிருந்தான் மற்று. (19)

ஏர்கொண்ட வூர்வசியு மேந்திழைய ரம்பையரும்
கார்கொண்ட மஞ்ஞை களிப்பதென நேர்தான்
வடிக்குமிசைப் பாணி வகுத்த சதியின்
நடிக்குமிசை கண்டா னயர்ந்து. (20)

இருந்தா னுலக மிரண்டொடொன்று மேற்ற
வருந்தவத்தி னற்ற லதனல் பெருந்தனத்தார்
வெங்கணர மங்கையர்கள் வெள்ள மதி னுற்றான்
வன்கணரக் கர்க்குமன்ன வன். (21)

தங்கையவ ளேலுந் தலையடுத்துத் தாங்கிவரு
செங்கையவ ளோலந் தெரிகுரலான் கொங்கைபெரு
மூக்கினொடு காது மூரணற் றவணடுத்தாள்
தூக்குமங்குல் போலவொலித் து. (22)

முடிமிடையும் வாயில் முறையிட்டாள் வந்து
கடைமிடையு மார்கலிபோற் காந்திக் குடதிசையிற்
செக்கரெனச் சேர்ந்த செறிகூந்த லாயுடலும்
மிக்கவிரத் தத்தான் மெலிந்து. (23)

தோன்றலுறுந் தொன்னகரிற் சூழரக்கர்தோகையர்கள்
என்று வயிறலைத்தங் கேங்கினர் மூன்றுலக
நாயகன்றன் தங்கை நடுமூக் கிழந்துவர
வாயகண்டு தான்றரிப்பா ரார். (24)

பொருக்கென்று நோக்கிப் புகல்வதனை யோரார்
அரக்க ரிரைத்தா ரசனி கரக்கநெடுங்
கையோடு கையடித்துக் கண்கள் நெருப்படுத்த
மெய்யோடு நின்றார் வெறுத்து. (25)

Koviloor Digital Library

இந்திரன்றன் மேலதுவோ வெவ்வுலகு மீன்றவர
வந்தணன்றன் மேலோவன் ரூழியற்கோ சந்திரன்சேர்
மோலியன்றன் மேற்றான் முடியுமோ வென்றழன்றார்
வேலியன்ற கண்ணார் விழித்து. (26)

செப்புதற்குச் சேர்ந்துவரு தெவ்வர் செறிந்ததிலை
முப்புரத்தர் மூவுலகு மூடமட லிப்புரத்த
தண்டத்தோர்க் காவதன்று மாகுமெனில் வேறுபெரு
மண்டத்தோர்க் காகுமிதென் றார். (27)

என்னை யிராவணனுக் கேற்றதங்கை யென்றுரைக்கின்
அன்னையிவ ளென்றடிக்கீ ழாவதன்றி யுன்னவே
யொண்ணுமோ தானே யொறுத்ததலால் வேறெவர்க்கு
நண்ணுமோ வென்றார் நலிந்து. (28)

போரடுக்கா னிந்திரனும் பூண்டனனு மேவறலை
நீரடுத்தா னேமியனும் நெற்றியக்க ணரடுத்த
பொற்சடையான் சென்றான் பொருப்பை யிடமாக
மற்றிடையா ரென்றார் மதித்து. (29)

சொற்பிறந்தார்க் கிச்செயல்தான் தோன்றுமோ வேன்றடுத்து
மிற்பிறந்தார் போற்றுசெய லில்லாதாள் அற்பிருந்த
கற்பிறந்தா ளென்று கரனே யடுத்திவளைப்
பொற்பிறந்தா ளாக்கும் புகன்று. (30)

தத்துற் றயர்ந்து தளர வருதேவர்
பித்துற் றயர்ந்தோர் பிழைசெய்யார் கொத்துற்ற
மூவுலகு மொன்றாய் முடிக்கும் வினையுடைய
ரேவர்செய வென்று ரெடுத்து. (31)

இனியு மொருகற்ப மேற்றினுண்டா மன்றி
வினையகழல் வீரர் வலரோ பனிவருங்கான்
மேவகத்தை நீங்கும் வெகுளி முனிவரர்கள்
சேவகந்தா னென்றார் சிலர். (32)

Koviloor Digital Library

கறையுற்ற வேலாங் கருங்கண் மடவார்
நிறையும் வளைக்கை நெறித்துப் பிறையுற்ற
பாலடுத்த சிந்தையினர் பண்ணும் வகையறியார்
மேலடுத்து வந்தார் விரைந்து. (33)

முழவதனில் வீணை முரளியாழ் தம்மிற்
றழுவுகுழல் சங்கினொடு தாரை யெழுகுரல்கள்
இன்றிலங்குங் கான மிசையா தழுகையொலி
யன்றிலங்கைக் கான வடுத்து. (34)

கள்ளுடைய வள்ளங் களித்துவரு தும்பியுட
னுள்ளுடைய நின்றவழி யோடினர் வெள்ளமுட
நாண விரிந்தகண்ணார் நண்ணுசுப்பா ரன்னவள்கண்
காண விழுந்தார் கலித்து. (35)

நாந்தகங்கொள் வீரர்தமை நாட்டிவரு தண்டத்தர்
காந்தகத்தர் சீர்புலவி கைம்மிகவே சேந்தகண்கள்
மேலுங் கடைசிவக்க வேந்தற் கிளையவடன்
காலின் விழுந்தழுதார் கள். (36)

பொற்ற மரகதத்தாம் பூக மதினேரே
சுற்று மணிவடத்திற் றேய்ந்தூசல் முற்றியதோ
ராட விழந்தா ரணியிழையார் வாடினைந்தா
ரோடி விழுந்தா ருருண்டு. (37)

எழுவும் மலையு மியைந்த புயத்தைத்
தழுவுந் தளிர்க்கை தளர முழுமதியிற்
சேலடுக்குங் கண்ணார் தெருவி னிடைவந்தார்
மேலடுக்குஞ் சோகம் விரிந்து. (37)

நெய்ந்நிலைய வேலரச னேராரைச் சேராதா [யைத்
னின்னிலையைத் தேர்ந்தபொழு தென்னிலையோ பொய்நிலை
தாங்கு மருங்குடையார் தத்தையென மாழ்கினு
ரேங்கு மருங்கி னிடைந்து. (39)

Koviloor Digital Library

கணவ ரடுத்துக் களித்தல் மறந்தார்
மணமருவு கூந்தலதும் வாரப் புணருமிணைக்
கொங்கை ததும்பக் குமுறி நடந்தடுத்து
மங்கையவண் முன்புலம்பு வார். (40)

அங்கை யரன்கயிலை யாக்குந் திறலையன்
தங்கைநிலை யிங்கிதெனத் தானறிவார் கொங்கையிணை
கையடித்துச் சோர்ந்து கலங்கிப் புலர்ந்துவருந்
தையலடி வந்துவிழுந் தார். (41)

இலங்கை தனில்விலங்கு மித்துயர மேற்கா
வலங்கை யயிலுடையான் வாழ்நாள் நலங்கை
யகன்றதுகொ னம்மினென வாய்ந்தா ரெடுத்துப்
புகன்று ரரக்கர் பொரிந்து. (42)

என்றிணைய வன்றுயர மேற்ற நகரெய்த
நின்றவர்க ளோட நெறிதேடக் குன்றினடி
வந்துபடி கொண்டலென மன்ன னடித்தலத்தின்
வந்துபடி வீழ்ந்தான் மருண்டு. (43)

மூடு மிருட்படலை மூவுலக முற்றிவரச்
சேடன் வெருவிச் சிரந்துளக்க வாடும்
குலக்கிரிகள் சூரன் குறையத் திசையின்
நிலைக்கரியும் பேரும் நினைந்து. (44)

விரிந்த வலைய மிடைதோள் படர
எரிந்த நயனங்க ளேற நெரிந்த
புருவநிறை நெற்றிமுற்றப் போக்க வருமைந்
தருவிநிறை தேவரயிர்த் தார். (45)

தென்றிசைக்கோன் றன்னுடனே தேவர் குலமெல்லாம்
இன்றிசைக்க வந்த விறுதியென நின்று
நடுங்கி யுயிர்விம்மி நன்னிலையி னில்லா
ரொடுங்கி யயர் துன்ப முழந்து. (46)

Koviloor Digital Library

மடித்தபில வாய்கடொரும் வந்துபுகை முந்தத்
துடித்ததுடர் மீசை சுடரக் கடித்தகதிர்
வாளெயிறு மின்ன மழையி னிடித்தூரறி
ஆளரியி னூர்செயலென் றான். (47)

கானிடையிற் சேர்ந்துபுவி காவல் புரிகின்றார்
மீனுடைய கேதனற்கு மேலெழிலா ருனார்
உடம்புடையர் பேருவமை யொவ்வா மனிதர்
தடிந்தனர்கள் வாளெடுத்தென் றாள். (48)

செய்தனவு மானுடர்பாற் செல்லத் திசையனைத்து
மெய்தநகை வந்தகண்க ளேற்றவெரி நொய்தாம்
வலித்தகைமை சொல்லேல் மனமறுக்கம் விட்டுச்
சலித்ததுசொல் லென்றான் றடுத்து. (49)

மன்மதனை மாற்று மணிமேனி வான்மேருத்
தன்மதனை மாற்றுந் தடந்தோளார் என்னதனை
இப்போழ்தி சைப்பதுல கேழின் வலியதனை
யப்போழ்தின் மாற்றுசிலை யார். (50)

முனித்தலைவர் பாத முடியேற்ற மெய்யர்
பனித்தமதி மாமுகத்தர் பண்பார் புனற்றடத்தாம்
கந்தமல ரைப்பொருவு கண்ணர் கழல்கையர்
அந்தமில தானதவத் தார். (51)

வற்கலையர் வார்கழலர் மார்பி னணிநூலர்
விற்கலையர் வேதமுறை மெய்நாவ ருற்கலைய
ருன்னைத் துகளளவு முன்னூர் சுமந்தனரா
மின்னத்துந் தூணி விசைந்து. (52)

ஆறுபுல னஞ்சு மரக்கரைக்கண் டென்றுநல
மேறுபுல னந்தணர்க டேத்தெடுப்ப வேறுமெனும்
கோளுறவா முங்கள் குலத்தைத் தலைத்துமெனச்
சூளுறவாங் குற்றார் துணிந்து. (53)

Koviloor Digital Library

மாரருள ரேயிருவர் மண்ணுலகி னண்ணுபவர்
வீரருள ரேயவரின் வில்லுடையா ராரொருவர்
அன்னவரை யொப்பவர்தா மாக்குந் தொழின்மூவர்
தன்னவரை யொப்பரிவர் தாம். (54)

தரையளிக்கும் நேமித் தயரதன்றன் பாலர்
விரையளிக்குங் கானே விழைந்தார் புரையி
லிராம னிலக்குவன்பே ரென்றான் விடஞ்சே
ரராம னிலக் காந்தோற்றத் தான். (55)

மருந்தனைய தங்கை மணிநாசி வாளால்
அரிந்தவரு மானுடவ ரானார் விருந்தனைய
வாளிநெடி ராவணனும் வாளா விழித்திருந்தேன்
கேளிநெடு மிம்மொழியைக் கேட்டு. (56)

கொற்றமது முற்றிவரக் கொண்டேன் வலியரசு
முற்றபயன் மற்றிதுவு முள்ளதுவே முற்ற
வுலகத்து வீரர்முடி யொன்றப் பொரினு
மலகற்ற விப்பழிக்கென் னாம். (57)

மூளுமுள தாயபழி முற்றுவித்தா ரென்வயினே
ஆளுமுள வாமவர்கட் காயுளுண்டாம் வாளுமுள
வோதவிட முண்ட வொருவன் வரமதனல்
நாதனென நானுமுளே னாம். (58)

புத்துறவு கொண்டு புகுந்த பழியென்று
தத்துறவு தென்னே தளர்மனமே எத்துயர
மாகும் பழிசுமக்க வான்றதலை பத்துடனே
வாருமிரு பத்தாம் மதி. (59)

என்றுரைத்து நக்கா னெரிசிந்தும் வாள்விழியான்
வன்றனையில் லாவிருவர் மானுடரைக் கொன்றிலரா
வென்றுறையும் வாழ்க்கை விசையக் கரன்முதலோர்
குன்றுறைவா ரென்றான் குறித்து. (60)

Koviloor Digital Library

அற்ற துரைக்க வழுதிழியுங் கண்ணவளும்
எற்றி வயிற்றினடித் தேங்கினாள் சுற்றம்
துலைந்ததையா வென்றாள் துடித்து விழுந்தாள்
உலைந்ததைமுன் சொல்வா ளுடன். (61)

சொல்லொலித்தேன் கேட்டார் தொடர்ந்துவரு சேனையுடன்
கல்லொலித்துச் சென்றார் கரன்முதலோர் வில்லொலிக்கை
வண்ணடுத்த வள்ளலட வான்கடிகை மூன்றினவர்
விண்ணடுத்தா ரென்றாள் விரைந்து. (62)

தானைவளத் தம்பியர்கள் தாம்தமியன் சார்சமரில்
வானைவளைத் தாரென்ற மாற்றத்தால் மேனிமிர்ந்த
காரொடுவிண் ணேறு கனலினொடு வந்தெதன
நீரொடுகண் சிந்தும் நெருப்பு. (63)

ஆயிடையிற் சீற்ற மழுந்தியது துன்பாழித்
தீயிடையி னெய்யிற் செழிக்கவே நீயிடையின்
நொய்தடுத்த குற்றம் நுவலென்று னுன்னையவர்
வெய்தடுத்த செய்ய விரைந்து. (64)

என்வயினுங் குற்ற மெவர்க்கு மெழுதவொணுத்
தன்மயனும் வள்ளலொடு தான்போந்தாள் பொன்வடிவாள்
பண்பொருட்டாஞ் சொல்லாள் பகரு மெழிலுடைய
பெண்பொருட்டா லென்றாள் பிரித்து. (65)

ஆரவடா னென்ன வரக்கி யடுத்துரைப்ரபா
டேரவடன் கொங்கை திரண்டசெப்பு பாரவடன்
பாதயுகந் தாங்கமிகு பாக்கியந்தான் கொண்டபெயர்
சீதையகந் தாங்கென்றாள் தேர்ந்து. (66)

காமரமார் பாடல் கனிந்து வருமின்சொல்
தேமலர்சேர் கூந்தலவள் தெய்வப்பெண் தாமரைவாழ்
தையலவள் சேடித் தரமுமில ளென்றால்
மெய்யெழிலார் சொல்வார் விழைந்து. (67)

Koviloor Digital Library

மஞ்சொக்கு மோதி மழைவடித்த கூந்தலுஞ்செம்
பஞ்சொக்கும் பாதம் பவளவிரல் அஞ்சொல்
அமுதிலள்ளிக் கொண்ட தவள்வதன மைதீர்
கமலமென்னிற் கண்கடலாங் காண். (68)

ஈசனார் கண்ணி னெரிந்தான் மதனெனலென்
வாசநா ரேறுதியைக்காண் மாமயலாற் றேசுடைய
வாசையினாற் பேசுமெய்யா ளன்பிற் பிணிபிணிக்கு
மாசையினாற் றேய்ந்தனங்க னும். (69)

தெவ்வுலகிற் காண்டி சிரத்திற் பணத்தினர்க
ளவ்வுலகிற் காண்டி யவனியிற்காண் வெவ்வுலையி
னேற்கும் வேற் கண்ணுடையா ளிவ்வுலகாள் சித்திரத்தி
னார்க்கும் யெழுதற் கரிது. (70)

தோளைத்தான் சொல்லுகேனோ சோதி முகத்துலவு
வாளைத்தான் சொல்லி வழுத்துகேனோ மீளத்
திகைத்தனனாற் கூறத் தெளியாது நாளை
மிகைத்த கண்ணாற் காண்டி விழைந்து. (71)

வில்லொக்கு மாநுதல்செவ் வேலொக்குங் கண்களெனிற்
பல்லொக்கு முத்தோ பவழமிதழ் சொல்லொக்கும்
சொல்லு முவமையுண்டோ தோன்று பொருளொவ்வா
நெல்லொக்கும் புல்லென்ற னேர். (72)

இந்திரனு மின்சசியை யேற்றா னரனுமையைச்
சொந்தமென்றான் முன்னோன் சுதந்தரன்மால் விந்தைதனைச்
சிந்தை கொளவடைந்தான் சீதையெழில் நீயடைந்தா
யந்தமவர்க் கில்லையுனக் காம். (73)

பாகம்வைத் தானொருவன் பங்கயத்திற் பொங்குபொன்னை
யாகம்வைத் தானொருவ னந்தணனா மேகம்வைத்த
மின்னைவென்ற நுண்ணிடையை வீரபெற்றா யெவ்விடையிற்
பொன்னைமன்ற வைப்பாய் பொலிந்து. (74)

Koviloor Digital Library

பிள்ளையெனும் பேச்சினளைப் பெற்றாற் பிழைக்கலாய்
கொள்ளைகொண்ட செல்வங் கொடுத்தியவட் குள்ள
முனக்குநல்லே னல்லா லுனது மனையார்
மனக்குநல்லே னல்லேன் மதி. (75)

தேர்தந்த வல்குலுடைச் சீதையும்ப ரிம்பரிடை
வார்தந்த கொங்கை வயிற்றளல்ல சீரார்
கமலத்தா ளைப்பாற் கடல்தந்த வென்ற
தமலத்தா ளைப்பா ரளித்து. (76)

மீன்கொண்ட தாந்தடமார் வேலை யுலகேத்தத்
தேன்கொண்ட கூந்தலுடைச் சீதையெனும் வான்கொண்ட
வேய்தந்த தோளியுடன் வீற்றிருக்கும் நீயெனக்கே
ஆய்தந்த வள்ளலைத்தந் தாள். (77)

தருவ விதியே தவம்பெரிய தேனும்
வருவவரு நாளன்றி. வாரா வொருபதெனும்
மாமுகம்பொற் றேளிரட்டி வார்கண்ணுங் கொண்டப்பயன்
தாமுகக்குஞ் செல்வமினித் தான். (78)

இன்னவளை யெண்ணி யெடுக்கத் துணிந்தவெனை
மன்னவளைத் தந்தவிரா மன்றம்பி கன்னமுடன்
மூக்கரிந்து விட்டான் முடிந்ததினி வாழ்வென்றாள்
வாக்கரிந்து பேசாத வள். (79)

கோபமுற்ற மானக் கொதிப்பென் றினையவெலாம்
பாபமுற்ற புண்ணியம் போற் பற்றுவிட்ட தீபமுற்ற
தொன்றடுத்த தொன்றா வுயர்காமந் தாபமுடன்
வென்றெடுத்த சீவனுற்ற வே. (80)

கரனைமறந் தான்றங்கை காதறுத்த வீர
னுரனைமறந் தான்பழியை யுன்னான் அரனையுங்கொள்
காமன்கை யம்பாற் கருதுவர மறந்தான்
மாமங்கை தன்னை மதித்து. (81)

Koviloor Digital Library

சிற்றிடையாள் சீதையெனுஞ் செந்திருவுஞ் சிந்தையது
முற்றிடைய நின்றான்மற் றென்னையுன்ன மற்றோர்மனம்
பொற்பிலதேல் வேறு பொறுக்க வகையுளதோ
கற்பிலதேற் காமமடங் கா. (82)

மயிலுடைத்தாம் சாயலளே வஞ்சியா முன்ன
மெயிறுடைத்தான் வைத்தா னிதயம் அயிலுடையி
ராக்கதன்ற னுள்ள மழன்றவெயில் வெண்ணெயெனத்
தாக்கதன்றி மெள்ளவுடைந் தாம். (83)

விதியுற்ற தன்மையினும் மேல்விளைவி னாலும்
பதியுற்ற கேட்டின் பயத்தாற் றதியுற்ற
காமநோய் கற்பில் கசடன் மறைந்துபுரி
தீமைநே ரான தெரிந்து. (84)

பொன்மயமா நங்கைமனம் புக்கசெய லோவரக்கன்
தன்மையதோ வென்ன தகைமையோ மன்மதன்றன்
வாளியவன் மார்பின் வலுவை யடர்த்த வென்றான்
வேளியல்பு சொல்ல வியப்பு. (85)

எழுந்தா னிருக்கைநின்றாண் டேழுலக ராசி
மொழிந்தார்கள் சங்க முழங்கப் பொழிந்துவரும்
பூமாரி போர்க்கப் பொலிவிழந்த புந்தியுடன்
தாமறிக் கோயிலடைந் தான். (86)

பூவிருல் வேய்ந்துமணம் பொங்கமளி மீதுகொங்கைத்
தேவிமார் நீங்கவந்து சேர்ந்தவுடன் காவிநா
ளேறுநிவ்வி கண்ணு முயர்தனமும் பாவையின்
வேதனையைத் தந்த விரைந்து. (87)

தூக்கவிலாக் காதலது நூறடுத்த கோடியதாப்
பூக்கவினுற் சீதநீர் போற்றுமென்பூச் சேக்கைநின்ற
வீகரிந்து திக்கயத்தை வென்ற புயத்தரக்கன்
வேகநின்றா னுவி மெலிந்து. (88)

Koviloor Digital Library

தாதுகொண்ட சீதமலர் சந்துசந்த மென்றளிரும்
போதுகொண்ட போதுந்தீப் பொங்கிவரு வேதுகொண்ட
தென்னவுடல் வெந்துநொந்தா னேற்ற வுலேத்துருத்தி
யென்னவுயிர்ப் புற்று னெடுத்து. (89)

தாவித்தா னெஞ்சமதிற் றையலவள் மெய்யணுகப்
பாவித்த போதுமவை பானல்வேல் காவியிணை
ஆனகண்ணி மேனியைக்கா ணுசைதனே யேற்றிருந்தான்
போனவுயிர் வந்தவனைப் போல். (90)

பரங்கிடந்த வாசை பரித்த பகடின்
கரங்கிடந்த கொம்பொடித்த காலன் மரக்குடைந்த
தும்பி யெனவனங்கன் றூவே யுரக்குடைய
வெம்பி யுயிர்த்தான் மெலிந்து. (91)

கொன்றைதுன்றுகோதையொடோர்கொம்புவந்தெ நெஞ்சினி
நின்றதென்று நெஞ்சழுங்கு நீர்மையான் வென்றதெனே[டை
வீறுமதன் வாளியென மேலடுக்குந் தென்றல் வரச்
சிறுமதன் செய்கை தெரிந்து. (92)

அன்ன பொழுதி னழுங்கவரு சிந்தையினுன்
இன்னவகை செய்வதெனு மெண்ணமிலான் நன்னயஞ்சேர்
தீப வரிசைதமைத் தேமொழியார் கொண்டடுக்கத்
தாபமொடு சோலேயடைந் தான். (93)

மாணிக்க மாம்பனசம் வாழை மரகதமா
மாணிப்பொன் வேங்கையென வாமரங்கள் சேணுய்க்க
நின்றடுத்த சோலே நிகரில் சயனத்தான்
சென்றடுத்தா னீமமெனச் சேர்ந்து. (94)

கனிகள் மலரடுத்த கள்ளுண்டு வண்டு
மினிய குயில்கிள்ளை யேற்று நனியிசைகள்
செய்யாது வாயடங்குந் தென்னிலங்கை வேந்தனேக்கண்
டுய்யாது வந்துபயந் து. (95)

Koviloor Digital Library

பருவத்தால் வாடை படவனங்கள் பாண
முருவத்தாம் நொந்தங் குயிர்த்தா னிருதுத்தான்
யாதடா வென்று னடுத்த சிசிரம்போய்த்
தீதடா வேனில்வந்த தே. (96)

வன்பனைக்கான் றீய மலேயுங் குளிர்ந்தடுத்த
மென்பனிக்காம் வெம்மை யென்றால் வேனிலென்னும் அன்
விடமடுத்த பேரை விலக்கமருந் துண்டோ [பாம்
மடமடுத்த தன்றியென்னு மால். (97)

மாதிரத்தின் காறு மனத்தெழுந்த மையறரு
வேதனைத்தாய் வேனில் வெதுப்பவே யோதும்
எனைக்கொடுமை செய்சிசிர மேற்காது கூதிர்
தனைக்கொணர்தி ரென்றான் தடுத்து. (98)

கூதிர் வருகால் கொதித்த குவவுத்தோள்
சீதஞ் சுடுமோ சிசிரமென்றான் ஆதியா
யஞ்சுமன்றே யென்று ரடுக்கா திருதுக்கள்
மிஞ்சுமன்றே போகவென்றான் வேந்து. (99)

என்ன விருதுக்க ளேகினவாம் யோகியர்போற்
பன்னும் பருவமின்றிப் பற்றுவிட்ட பின்னும்
உலகங்க ளெல்லா முயர்பாசம் வீசி
இலகுந் துறக்க மிசைந்து. (100)

கூவரக்க நின்ற குளிர்வெதுப்பு நீங்கியுமவ்
வேவரக்கன் மேனி யெரிந்ததா மேவரச்செய்
காலத்தா லொன்றோ கருதவரு காமவெந்தீ
சீலத்தா லன்றியெங்காந் தீர்வு. (101)

நாரமுண்ட மேக நளின வளையமொடு
சாரமுண்ட சீதத் தளிர்த்தாதோ டாரமுண்ட
சிந்தையயர் கின்றான் செறிந்தயலி னின்றாரை
இந்துவா வென்று னெடுத்து. (102)

Koviloor Digital Library

வெஞ்சினத்தி னுமரக்கன் மேதைநகர் மீதுவர
நெஞ்சிநத்தி நில்லா நெடுமதியை யஞ்சலைவா
நின்னைமதித் தானரச னேரென்றார் சஞ்சலம்போய்
அன்னமதி வந்தா னடுத்து. (103)

காய்வுடைய தன்பகையைக் கண்டு பயந்தவர்கள்
தேய்வடையும் போது செகுப்பமென வோயும்
சமயமது கண்டு சதிசெய்யுஞ் செய்கை
யமையமதி வந்தா னடுத்து. (104)

அண்டர் முத லோ ரலறக் கொடுந்தொழில்செய்
கண்டகனி ராவணனைக் காய்வதற்கு மண்டு
மரவணையான் விட்ட வடலாழி யென்ன
விரவணையு மிந்து வியைந்து. (105)

பாலி னமுதைப் பருகும் நிலாக்கற்றை
நீலி னிராவணற்கு நேர்நெருப்பிற் கோலமுடை
வெள்ளி தனையுருக்கி மேலு மடுத்ததனை
யள்ளியணை யிற்சொரிந்த தாம். (106)

மின்னலொத்த நன்னிலவு மேலா மிதிலைவந்த
கன்னலொத்த சொல்லாள் கவின்கேட்டு மன்னும்
நலமிடையச் சோரும் நயமி லரக்கன்
அலமடையச் சுட்ட தடுத்து. (107)

காலனஞ்சுங் காலன் கருதியுரைப் பான்றிரையார்
சீலமிஞ்சுஞ் சந்திரனைச் சேர்மினென வேலை
விடத்தை நிகர்கிரண வெய்யோனைத் தந்திர்
மடத்தைநிக ரேதென்றான் மன். (108)

அவ்வழியிற் சொல்வா ரடுத்து வருமுழையார் [யும்
செவ்வியநின் னேக்கமன்றிச் செய்வதுண்டோ வெவ்விடை
பொங்குதயன் வையமன்றிப் போகான் விமானமதிற்
தங்குமதி யென்றார் தகைந்து. (109)

Koviloor Digital Library

பணர்தாழு மல்குற் பனிமொழியார் காமக்
குணர்தா னறியான் கொதித்தான் மணர்தாங்கும்
தாமரைக்குச் சேர்பகைவன் ருனென்று காய்ந்துரைப்பான்
வேமனத்தி ேனாடு மெலிந்து. (110)

தேய்ந்தாய் வெளுத்தடுத்தாய் சீதை யெழிலைமனத்
தாய்ந்தாய் மடஞ்சே ரவிர்மதியே காய்ந்துவரு
மன்மதனு மேவான் மயக்கு முடனடுத்தா
யுன்மதனுங் காட்ட வுவந்து. (111)

ஆருயிர்க்குக் கூற்று யடுத்த சனகிமுகம்
நேருயிர்க்க மாட்டாய் நிறங்கரிந்தாய் சீருயிர்க்கும்
மாற்ருர்கள் செல்வ மதித்துப் பொருதசெயல்
ஆற்ருர் தொழிலிதுவென் ருன். (112)

என்ன விடருற் றிரவோ டிவனைவிட்டு
வன்ன வினனை வருகவென மன்னு
மிகலவனு மிந்து விரவோ டொழியப்
பகலவனும் வந்தான் பரிந்து. (113)

பொன்னனைய செங்கமலப் போது விரிந்தனவாந்
தன்னனைய செங்கதிரைத் தான்கண்டு மன்னும்
திருவிழந்த சிந்தைச் சிறியோ ரெனவா
யுருவிழந்த தாம்ப லுடன். (114)

நாணி மழுங்கி நடுங்கு முடம்பினனுச்
சேணி னிழிந்தான் சிறுமதியோன் ஆணைகொண்ட
திக்கு விசயஞ்செய் தோரரசைக் கண்டவுட
னுக்குங் குறும்பா யொளித்து. (115)

மணந்துவரு மன்பர்தமை மாமலரின் சேக்கை
புணர்ந்துவரு முன்வெகுளி பொங்க வுணர்ந்திடுமுன்
கங்குலுட னிங்கக் கனவுகண்ட போலடுத்தார்
மங்குலடு மைம்பால வர். (116)

Koviloor Digital Library

உயிரடுத்த தங்கணவ ருற்றுப் பிரியச்
செயிரடுத்த மங்கையர்க டேறு ரயிரடுத்த
வண்ணக் குவளை மலர்கள் ளுகுப்பனபோற்
கண்ணிற் பொழிந்திருந்தார் கம். (117)

அணைதழுவுஞ் சேக்கைதனி லாடலது முற்றிப்
பணைதழுவும் வல்லியெனப் பாங்க ரிணைதழுவுங்
கையணைத்துச் சேர்ந்த கணவர் தமையணைத்துச்
செய்யதுயில் செய்தார் சிலர். (118)

கடமதனில் வண்டார்ப்பக் காயுங் கதிர்மேற்
படமதனத் தாலுறங்கும் பாங்கர் மடமை
தெளிவிலவா யின்றுயிலைச் சேக்கையிடை செய்யும்
களிகளென வாங்களிறு கள். (119)

விரிந்ததுறை தோறும் விரவும் விளக்கம்
எரிந்தவொளி சாரா திழந்த வருந்து
முயிரடுத்த நாயகரை யுற்றுப் பிரிந்து
செயிரடுத்த மாதர் திறத்து. (120)

செய்ய கதிரவனுஞ் சேர்ந்த கதிரனைத்தும்
வைகறையிற் பூக்கு மலர்மலரா தெய்தும்
நனந்தலைய சேக்கைதுயில் நங்கையர்கள் பொங்கும்
அனந்தர்தரு கண்ணை யடுத்து. (121)

துணைவர்ப் பிரிந்தோர் துயர மகலக்
கணைவ ரடுத்தோர் கவல வணைவி
யொளித்தனவா மல்லு முதயனவிர் கண்டு
களித்தனவாம் நேமிப்புட் கள். (122)

நாண்மதியைத் தள்ளி நடுவடைந்த வென்றாழாற்
பாண்மலராப் பூவிற் பரவிவரும் மாண்வினையில்
மாந்தர்கடை சேர்பாணர் வாழ்விற் றளர்ந்தனவாம்
சேர்ந்தகடைத் தும்பி திரிந்து. (123)

Koviloor Digital Library

அருமணிசேர் சாளரத்தி னூடிவரு மென்றாழ்
எரிகதிரி னுலெழுப்பி யேற்றும் மருளினெடு
நின்றார்க ணங்கையர்கள் நேருந் தெருளில்லார்
பொன்றாப் பொருளறியார் போல். (124)

ஏவலினும் வன்மைதனை எண்ணு தவராகி
நாவலர்கள் செய்கணித நாமனால் காவலினு
லேற்ற கணிதர்களு மின்றுயில்கொண் டார்கோழி
போற்றுதுயில் கொண்ட பொலிந்து. (125)

இனைய வுலகமதி லேற்றடுக்கு மெல்லை
கனைகழலி ராவணனுங் கண்டு நினையு
மனத்தைநெருப் பாக்கு மதிதானி தென்றான்
சினத்தைநெருப் பாக்கிச் சிரித்து. (126)

திங்களிது வன்றுசெல்வ செங்கதிரே பச்சைநிறம்
பொங்குளை மாக் கொண்டிரதம் போந்ததாம் வெங்கதிரே
தான்சுடுவ தன்றிமெய்யாய்த் தண்ணங் கதிர்சுடுமோ
வான்சுடர்தா மென்றார் மருண்டு. (127)

நீலச் சிகரியன்னு னோர்நின்ற வர்க்குரைக்கும்
ஆலத்தாம் வெய்யோ னகற்றியே வேலைக்காம்
சத்தத்தை மாற்றித் தனிப்பிறையைத் தாருமென்றான்
அத்தத்தை யேற்றி யடித்து. (128)

சொன்னு னிருதரிறை சொற்ற கணந்தனிலே
யந்நா ளிரம்புமதி யப்பொழுதே முன்னு
ளிளம்பிறையா மென்று லெடுத்ததவத் தன்றி
வளம்பிறவு முண்டோவி வண். (129)

குடதிசையிற் கண்ட கொடியோ னுரைப்பான்
வடவனலோ காளமிதோ மற்றும் அடவேண்டி
மாலைமற வாளுருவி வந்தனவோ வென்றுரைத்தான்
வேலைமதி தன்னை விளித்து. (130)

Koviloor Digital Library

தாதுண் சடிலத்தான் தண்பிறையின் வெம்மையினைச்
சீதப் புனலாற் சிதைத்தனனே யோது
மதனுற் களத்தை யடுத்த களத்து
மதனுற் களங்கனென்றான் மன். (131)

நிறைந்தமதி யோடின் னிறையாப் பிறையுங்
குறைந்தமதி யில்லை கொடுமை சிறந்தவிடப்
பாம்பிற் பெரிதென்றும் பார்க்கிற் சிறிதென்று
மேம்படுமோ காளமொன்றா மே. (132)

கன்னக் கனியிருளைக் காட்டு மிதற்குமுன்னும்
வன்னக் கதிர்நன்றாம் வாட்டுமிதே யென்னைச்
சுடுமென்றால் வேறார் சுகமடைவ ரென்றான்
கடுமென்றாஞ் சொல்லான் கடுத்து. (133)

ஆண்டப் பிறைநீங்க வானதந்த காரமது
தீண்டற் கெளிதாந் திறத்தனவாய் வேண்டிற்
கரபத்தி'ரத்தீர்த்துக் காண்டற் கினிதாய்
அரவத் திறள்விடம்போ லாங்கு. (134)

அடரும் வலியா லகற்றி விளக்கும்
சுடரும் புகுதாத் தொடரின் அடல்சேர்
இருளெல்லா மொன்றா யிருந்த தெனலாம்
அருளில்லார் நெஞ்சை யடுத்து. (135)

வேலைத் தலையொருவன் வேண்ட விழுங்கிநின்ற
வாலத் தடங்கா தறிந்துணர்ந்தேன் ஞாலத்தை
விண்ணி னெடுவிழுங்கும் வேலைக் கனல்தானே
யண்ணி யிருண்டதுவென் றாம். (136)

அம்பன லுஞ் சென்றடுக்கா வந்தகா ரந்தனிலே
யும்பர்மழை கொண்டயலி னொப்பரிதாய்க் கொம்பர்
குரும்பைக் குலமெடுத்து கோத்திங்க டாங்கி
வரம்பினெழில் கொண்டு வரும். (137)

Koviloor Digital Library

மருளூடு வந்த மயக்கோ மனமோ
தெருளாதி தென்னோ சிறுமை யிருளூடு
குண்டலங்கள் கொண்டிருண்ட கூந்த லூடனேதான்
மண்டலமாய்த் தோன்று மதி. (138)

புடைகொண் டெழுந்தகொங்கை புல்குமல்கு லோடு
மிடைகண் டிலமுலக மெங்குந் தடைகொண்ட
சங்கையற்ற நல்லெழிலிற் சார்ந்தடுத்த வார்கமல
மங்கையுற்றா ரென்றான் மனத்து. (139)

பண்டுலக மேழினுள்ள பங்கயக்கட் பாவையரைக்
கண்டுளனா னிவ்வெழிலைக் காணகிலே னுண்டுளதே
லெவ்விடையி னேனு மிதுவரையான் கண்டதுண்டோ
நொவ்விடைக்கு நேரிலையென் னும். (140)

உலகமதி லில்லா வொருத்தி யிவளாம்
திலகநுதற் செவ்வித் திருவை யிலகமுனம்
தங்கையவள் சொற்றவணஞ் சார்ந்திருத்த லான்மதித்த
நங்கையிவ ளாகுமென்ற னன். (141)

பூண்டிகழு நன்னலஞ்சேர் பொன்னவளை யின்னளெனத்
தேண்டிவந்தாள் கைமாறு செய்வதுண்டோ மாண்டிகழும்
கொங்கைதமைத் தாங்குமிடை கூறுநலங் கொண்டுரைத்தற்
கெங்கைதனைத் தாருமென்றா னீங்கு. (142)

என்றா னடுத்தவர்க ளேகினராய்க் கூவுமெல்லை
வன்றா ணிருதர்குலம் மாய்ப்பதற்கு நன்றாகுங்
காமக் கனல்தெறலாற் காதினொடு மூக்கிழந்தா
ளாமக் கடியளடைந் தாள். (143)

பொய்ந்நின்ற நெஞ்சிற் புகுந்த கொடியாளை
நெய்ந்நின்ற வேலுடையான் நேர்நோக்காய் மைநின்ற
கண்ணுடையா ளெண்ணுடைய காமர் மதுரமொழிப்
பண்ணுடையாள் சீதையிவள் பார். (144)

Koviloor Digital Library

செந்தா மரைக்கண்ணுஞ் செங்கனிவாய் பொங்குமெழிற்
சந்தார் தடம்புயமும் தார்மார்பும் கொந்தாருஞ்
செய்யசடை மேவுந் திருமாலி ராமனிவன்
ஐயமிலை யென்றா ளடுத்து. (145)

பெண்பா லுருக்கண்டேன் பேதையிங்கு நீயடுத்து
மண்பா லுருக்கு மனிதனென்றாய் கண்பாலாம்
மாயைகற்ற நம்மை மயக்கு பவர்மனித
ராயகற்ற னன்றிதுவென் றான். (146)

ஊன்றுமுணர் வப்புறத்தி னோடலின்றி யாடலொன்றி
என்றுமுள வாசை யியைந்துநின்றா யான்று
மெதிரேகண் காணா மிடமடுத்துத் தோன்று
மதிரேக நல்லெழிலென் றாள். (147)

அன்னா ளதுமொழிய வான்ற வரக்கனதாம்
நின்னா லிராமனைக்காண் நேயமென்னே யெந்நாளின்
மின்மதித்த வாளெடுத்து வெட்டினனோ வற்றைமுதல்
மன்மதித்த தென்றாள் மருண்டு. (148)

ஆமா மடுக்குமென தாக்கையொடு மாவிநைய
வேமாம் வினைக்கென் விடிவென்னக் கோமானும்
நன்றடுத்த நாயகனீ நாட்டு மெழிலவளைச்
சென்றெடுத்துச் சேரென்றா டேர்ந்து. (149)

என்றுரைத்தாள் சென்றா ளெதிரரக்க னீடழிந்தா
னென்றுரைத்தா னன்றிமன முட்கினா னன்றுரைத்து
நின்றார் நடுங்கினார் நின்றுளவாம் வாழ்நாளாற்
பொன்றாது நின்றான் பொறுத்து. (150)

இறந்தார் பிறந்தவர்போ லின்னுயிரைப் பெற்றான்
மறந்தா னுணர்வை மதியீர் சிறந்தடுத்துத்
தண்டபத்தை மாற்றுமெழிற் சந்திரகாந் தத்துவளர்
மண்டபத்தை யாற்றுமென்றான் மன். (151)

Koviloor Digital Library

வந்தா னபத்தபதி மாயனத்தி னுய்ந்துணர்ந்தான்
சிந்தா வினையன்றிச் செய்கையினும் நந்தாத
மாமருவு மண்டபத்தின் வாரெழிலைக் கண்டுவந்து
தாமரையோ னணமடைந் தான். (152)

காந்தமமு தத்துளிகள் கால்வனவாய் மேலடுத்த
வேந்தனொளி யானும் விரிந்தபுனல் வாய்ந்ததென்றன்
மீதளத்தா மண்டபத்தை வேண்டியமைத் தான்பொருந்து
சீதளத்தாங் காவிற் சிறந்து. (153)

ஆன்ற மணியிழையி னன சுடர்விளக்கம்
தோன்றுமிருள் சீப்பத் துடியிடையா ரேன்றுவர
மாணிக்க மானமிசை வந்தடுத்தான் மண்டபத்தைக்
காணக்கண் கொண்டவரக் கன். (154)

அல்லா யிரமா யடுக்கியதை யொத்தெனினும்
பல்லா யிரந்திங்கட் பான்மையென நல்லோர்
உளமாகு மென்ன வுயருஞ் சிறப்பின்
வளமாகச் செய்தான் மதித்து. (155)

பொற்புற்ற மாமணியாற் பூரித்துப் பூவினின்ற
கற்பத் தருவின் கதிர்நாண வற்பற்
றழியப் பகலாக்கி யான்றமண்ட பச்சீர்
மொழியப் படலாகு மோ. (156)

உளரேசை யாமுதல வுற்றபொறி யாவுமொன்றித்
தேரு நிலையுற்ற சிந்தையுளான் வேரும்
வரப்படையா வேட்கை வலித்திர்ப்ப வந்தான்
பரப்புடைய தாமண்ட பம். (157)

தண்டலிலா நற்றவத்தார் தாமடுத்துக் கேட்டநல்கும்
பண்டமுத மோடுவந்த பான்மையெனப் பண்டருசீர்
மாதடுத்த நற்றளிரும் மன்று மலர்நிறையும்
தாதடுத்த சேக்கையமைத் தான். (158)

Koviloor Digital Library

நேரிழையா ரம்பா னிறைமணத்தி னீந்திக்கா
வேரிமல ரம்பான் விருந்தளிக்க வார்கலிசேர்
மன்ற லடைந்த மருந்தா யுயிரளிக்கும்
தென்ற லடைந்த தெளிந்து. (159)

சாளரத்தின் வந்து தவழத் தரிக்காது
நீளரத்தஞ் சிந்த நெருப்புயிர்த்துக் காளமுற்ற
மாசுணமாந் தென்றல் வரவிடுத்த தென்னையென்றான்
ஆசுணருஞ் சிந்தை யவன். (160)

அவ்வழியிற் காவலரை யாண்டுகொணர்ந் தாருழையர்
வெவ்வழியா னேக்க விரைந்துரைப்பா ரிவ்வழியிற்
சாளரந்தா னேரிற் றடைதென்றற் கேதென்றார்
வாளரந்தா னேர்படையார் வந்து. (161)

காற்றினேன் றன்னைக் கருத்ததினாற் கண்டதென்னே
கூற்றினேன் றன்னைக் குறுகுமினி யேற்றிருந்த
செந்திருநேர் சீதைதனைச் சேர்வதற்குச் சூழுரைக்கும்
மந்திரரைத் தாருமென்றான் மன். (162)

வந்த வமைச்சரொடு மன்னுசிந்தை வாய்ந்தெண்ணிச்
சிந்தைவந்த செய்யுந் திறலுடையான் அந்தரத்திற்
செல்லலுடை மானமதிற் சேர்ந்தெவரு மின்றிவந்தா
னல்லலுடை மாரிசன்முன் னம். (163)

இருந்தமா ரீச னிராவணனைக் கண்டு
பொருந்தும் பயத்தாற் பொருமி வருந்துமுடல்
காரடுத்தான் காணக் கடன்புரிந்து போற்றிநின்றான்
சீரடுத்த சிந்தை திகைத்து. (164)

சந்தமலர்க் கற்பகத்தைச் சார்ந்த தலைவற்கும்
அந்தகற்கு மச்ச மருளரசே யிந்த
வனத்தென் னிருக்கை மதித்ததெனை யென்றான்
மனத்தின் பயத்தான் மருண்டு. (165)

Koviloor Digital Library

ஆன தனைத்துமினி யாவி தரித்தயர்வேன்
போன தனைத்தும் புகழுடனே யானதனை
எவ்வ னுரைக்கு மினியென்ஞ நாணுமென
வவ்வ னுரைக்கு மறிந்து. (166)

வன்மையுளார் மானுடவர் மற்றவர்கள் வாளதனுல்
நின்மருகி நாசி நிலையிழந்தாள் என்மரபும்
நின்மரபும் வேறே நிகரில்லாப் புன்மைகொண்ட
தென்மரபிற் சொல்வா மெடுத்து. (167)

திருகு சினத்தார் சிறந்தவர்கள் வாழ்நாள்
பருகினரேல் வென்றநலம் பாழே இருகை
சுமந்தபடி நீயிருந்தாய் தூய்மருகர்க் கொன்ருன்
அமைந்தபடி வில்லா னடுத்து. (168)

நெஞ்சுலர்ந்து நேரே நெருங்கிச் சமர்புரிய
வஞ்சுகின்றே னெப்பழிவென் ருனதாற் செஞ்செவிய
துப்பழியுஞ் செவ்வாய்த் துடியிடையைக் கொண்டுவரி
னிப்பழிநிற் றீருமென்ரு னெய்ந்து. (169)

இச்சிறிய சொல்லை யிசைத்தரக்க னேற்றழிக்கு
கிச்சினுருக் கென்னக் கிளராமுன் சிச்சியெனத்
தன்செவியைப் பொத்தித் தளர்ந்தா னறைகின்ருன்
மன்செவியைப் பொத்தும் வகை. (170)

மன்னுநின் வாழ்வை மதியாய் மதியற்ரு
யுன்னுலன் ருழ்வினையென் றன்னினே னின்னுச்செய்
நெஞ்சுடைய னேனும் நிகழ்த்து மிதமென்னுத்
துஞ்சுதலான் சொற்ருன் றுணிந்து. (171)

அற்ற கரந்தலையு மன்றனலின் முன்றிலிடைப்
பற்றுந் தவத்தாற் பசிகூர வுற்றபுயிருந்
தேய வுலந்தாய் திருவடைந்த செய்யுமிது
மாய வுலந்தாம் வகை. (172)

Koviloor Digital Library

திறத்திறத்தி ளுலோதான் செய்தாய் தவத்தை
மறத்திறத்திளுலோ மதியாய் அறத்திறத்தி
னெய்துந் திருவை யிகல மறத்தழித்தா
லுய்துந் திருவே துரை. (173)

நாரமுற்ருர் நாடுகவர் நாட்டத்தார் நன்னடையில்
வாரமுற்ருர் மற்றவர்க்கா மாறுமனைத் தாரமுற்றுக்
கொண்டவரென் ருரைக் குறிக்குந் தருமமடுங்
கண்டகருயந் தாரெவராங் காட்டு. (174)

அந்தரநேர்மன்ன னகலிகைபொற் பாலழிந்தான்
இந்திரனே ரெத்தனையோ ரேற்றமற்ருர் செந்திருநேர்
எத்தனையோர் நின்றிருவுக் கேற்றிருப்பார் நீயிழைப்பாய்
பித்தனையோர் செய்கைப் பிழை. (175)

செய்தா யெனினுந் திறத்தபழி தீவினைதான்
எய்தாவா மெய்தி னிராமனவன் வைதாவும்
வாளிகொண்டு நின்குலத்தை வாட்டும் பெருந்திறலான்
கேளிரண்டார் முற்றுங் கெடும். (176)

என்றுலென் னெண்ணலைநீ ஏற்ற கரனென்பான்
நின்றனை மேலும் நிலையுடையான் தன்றனை
யுற்றடுத்து மாள வொருதனுவி னுற்றொலைத்தான்
மற்றடுத்தா லென்னு மதி. (177)

வெய்யோ ரெவரே விராதன் றுணைபுகல
வையோ அழிந்தா னவனென்று லுய்யவகை
நம்மினத்தி லுண்டோ நலிந்தேன் வருத்தினையா
லெம்மனத்தை யென்று னிகழ்ந்து. (178)

மாண்டா ரினிமேல் மரணமடை வார்தொழிலேன்
வேண்டாஞ் செயினும் விதியுண்டோ வாண்டார்க
ளெத்தனைபே ரென்கே னிழந்த வறமதனு
லத்தனைபேர் போனு ரழிந்து. (179)

Koviloor Digital Library

எம்பிக்கு மென்னனைக்கு மேற்கு மிறுதிக்கோ
ரம்புய்க்கும் வில்லிக் கயனிற்குந் தம்பிக்கும்
அஞ்சுகவல் லாதிருக்கி ணண்மையெங்கா மென்றெனது
நெஞ்சுகவல் கின்றே ளினை. (180)

நின்றுசெறி வாழ்வு நிலையா துடலடுத்துப்
பொன்றுமென்றல் மெய்மை புலையாடற் கொன்றுமுன்னு
தென்னுரையைத் தள்ளா திருக்கிற் புகழென்றான்
மன்னுரையை மாற்ற மலைத்து. (181)

கங்கைசடை வைத்தவனைக் காணுங் கயிலையுட
னங்கைதனிற் கொண்டடர்த்த வாண்மைத்தோ ளிங்கோர்
மனிதர்க் கெளியையென்றாய் மன்னுமெனை யென்ற
தனிதத்தான் கொண்டான் சலம். (182)

நிகழ்ந்தா யதைநினையாய் நெஞ்சினிலை யஞ்சா
திகழ்ந்தாய் பகைவர்தமை யேற்றிப் புகழ்ந்தாய்
தனிப்பிழையைச் செய்தாய் தடுத்தேன் படுப்பேன்
இனிப்பிழையைச் செய்தா யெனின். (183)

தன்னை முனியுந் தறுகட் டகவிலனைப்
பின்னை முனியுமெனல் பேணும லுன்னைமுனி
வுற்றான் குலத்தை யொறுத்தா யிதுவல்லால்
மற்றென்னை செய்தாய் மதி. (184)

எடுத்தமலை நீநினைத்தா யெம்மானி ராமன்
ஒடித்தமலை யின்னதென வுன்னாய் கடுக்கையரன்
சந்தமலை யன்று தனிமேரு வன்றனந்தம்
விந்தமலை யென்று விளம்பு. (185)

ஏதுமறி யாயுரைப்ப தேற்கா யிராமன்கை
கோதைபுனை யாமுனுயிர் கொள்ளைபடுஞ் சீதையுருப்
பாவனையாற் பெண்ணுருவம் பார்க்கி னரக்கர்புரி
தீனவியாற் பண்ணுபெருந் தீ. (186)

Koviloor Digital Library

உஞ்சு பிழையா யுரவி னொடுமென்னா
நெஞ்சு கவலுமதை நீங்கினையாய் அஞ்சுமுயிர்
அன்றெனவா நஞ்சை யடுத்து நுகர்வாரை
நன்றெனலு நன்றோ நவில். (187)

ஏசுதவி லாத விமையோ ரிலங்குபல
தேசமுற்று மோரிமைப்பிற் றீக்குமடற் கோசிகனா
ரன்றுகணிப் பாம்படைக ளாசிலவி ராமனருட்
கென்றுகணிப் பாகு மியைந்து. (188)

ஆயிரமா மங்கையுடை யானை யடன்மழுவா
லேயிறமுன் செற்ற வெதிரில்லோன் மேயவிறல்
உற்றவரி வெஞ்சிலையி னோடும் வலித்தகைமை
இற்றுவரச் செய்தா னிவன். (189)

வேதனைசெய் காம விடத்தின் மெலிவடைந்தாய்
தீதனைய சிந்தை சிதைவன்றோ மாதுலனா
முந்தையுற வந்தேன் மொழிந்தே னிழிந்தசெயல்
சிந்தைவிடற் கென்றான் றிகைத்து. (190)

என்னா வுரைக்க வெடுத்த சினத்துடனே
சொன்னா னரக்கர்பதி சூழ்வில்லான் அன்னையுயிர்
செற்றவனை யஞ்சித் திரிந்தா யுனையுமொரு
வெற்றிவனை வீரனென்றல் வீண். (191)

திக்கயங்க ளோடச் சிறந்தோர் நிலைகெடவான்
புக்கவர்க டம்மிருக்கை போக்கியே மிக்குலகஞ்
சக்கரத்தி னேற்றவெனைத் தானோ தயரதன்றன்
மக்கணலி கிற்கும் வகை. (192)

மூவுலகு மேற்ற முடித்தேன் தலைமையினி
மேவலர்க ளேற்கும் விழைவுண்டோ வேவல்செயுஞ்
செய்கை யுனதன்றித் தேர்ச்சிக்கு மந்திரியோ
வுய்கையினி யுண்டோ வுனக்கு. (193)

Koviloor Digital Library

மறுத்தென் பெறுவை வடிவாளி னுன்னை
யொறுத்தென் குறைமுடிப்ப னோர்வாய் வெறுத்தென்னு
மித்தொழிலை விட்டுயிருக் கேதமின்றி யானறையு
மத்தொழிலைச் செய்யென்று ஞர்த்து. (194)

அரக்க னறைய வயிர்ந்தா னடங்கித்
தருக்கர் கெடுவரெனத் தாழ்ந்தே யுருக்கிவரு
செம்பினுற்ற நீரான் றெரிந்தா னுரைக்கலுற்றான்
அம்பினுற்ற சிந்தை யலர்ந்து. (195)

உன்னிறுதி நோக்கி யுரைத்த துளதன்றி
என்னிறுதி நோக்கி யிசைத்தன்று னன்மையது
முய்தலுறு நாச முளதே லுனக்கினியான்
செய்தலுரை யென்றான் றிகைத்து. (196)

என்றவுடன் புல்லி யெடுத்தணைத்து மாரனம்பால்
பொன்றலினி ராமனம்பாற் பொன்றல்புகழ் தென்றல்
தனைப்பகைசெய் சீதை தனைத்தருவா யென்றான்
வினைப்பகையாற் சிந்தை மெலிந்து. (197)

ஆண்டயான் கூற வரக்க ரிருவரோடும்
பூண்டயான் மானமுகப் போம்போழ்திற் றாண்டித்
தொடங்கியவே தன்னுற் றுணைவர்பட வஞ்சி
யடங்கியயான் செய்வதெனைத் தாம். (198)

ஆயதவன் கூற வரக்கர்கோ னையவுன்றன்
தாயையுயி ருண்டான் றனைக்கொல்வான் மாயையினுல்
வஞ்சிதனைக் கொள்ள மதித்தேன் புரியென்றான்
நஞ்சதனைக் கொள்வா னயந்து. (199)

புறத்தினையான் சொல்வதெவன் பொன்னனையா டன்னைத்
திறத்தினிலா வஞ்சமுற தீமை யறத்தலைக்கும்
ஆரீச னீயே யடுத்தடர்த்து வென்றிடென
மாரீசன் சொற்றான் மதித்து. (200)

Koviloor Digital Library

ஆனவன்றான் சொல்ல வரக்க னவரைவெல்லத்
தானையொன்று கைவா டகுதியே யேனையரை
யாங்குவதை செய்யி னவளிறக்கு மென்மாயை
தாங்குவதா மென்றான் றடுத்து. (201)

தேவிதனைத் தீண்டாமுன் சிந்தித் தலைதிசையிற்
போவதனை யெண்ணிப் புகல்வேற்கு மாவதிலை
என்றெண்ணி னைந்தா னினியெடுத்து வேறுசெய
லின்றென்ன வந்தா னிசைந்து. (202)

என்மாயஞ் செய்வ தியம்பென்ன வன்னவனும்
பொன்மானாய்ப் பொன்மால் புணர்த்தென்று னன்மாமன்
செய்வனெனச் சென்றான் றிறலரக்கன் வேறுவழி
யுய்வனெனச் சென்று னுவந்து. (203)

மேனுளின் வள்ளல் விடுகணையின் மீண்டமையாற்
தானாக மாயை சமைந்திலனும் மானாக
வென்றமனன் வாய்மொழியின் எகு மவன்செயலி
நின்றமனஞ் சொல்வாம் நினைந்து. (204)

சுற்ற நினைந்து துயராந் திறலுடைய
ருற்ற னினைந்து முளமாழ்கு நற்குழிநீர்
நஞ்சடுத்த மீனி னடுங்கும் பொறிபுலன்க
ளஞ்சடுத்த சோரு மழிந்து. (205)

அக்காலம் வேள்விதனி லன்றி யிவருடனே
எக்காலுஞ் சென்றடுத்தோ ரீறுபெறான் முக்கால்
முடிந்திடுவான் சென்றான் முரணு ரரக்கர்த்
தடிந்திடுவா னின்றவனந் தான். (206)

தன்மான மில்லாத் தயங்கொளியி னாலடுத்து
மின்வானு மண்ணும் விளங்குவதோர் பொன்மா
னுருவெடுத்துச் சென்று னுயர்வா ரரக்கர்
திருவடுத்துத் தீரச் செறிந்து. (207)

Koviloor Digital Library

கலைமான் முதலான கண்டவெலா மொன்ற
வலைமானுற் ருசையினு லான நிலையா
மனத்தினெடு வஞ்சவிலை மாத ரடுத்த
வினத்தினர்க ளென்ன விசைந்து. (208)

பொய்யா யுடைய புறஞ்சொல்லி னலடுத்த
னையா விடைநோவ நாடியே செய்யாளும்
மின்மலரும் வால்வளையார் மென்கரத்தி னலடுத்த
பொன்மலரைக் கொய்யும் புனைந்து. (209)

உண்டாகுங் கேடுடையா ருற்றதுயிற் றீக்கனவு
கண்டார்க ளென்னக் கவன்றனளாற் பண்டாரும்
கொள்ளா விடரடைவாள் கொண்டனளாற் பேராசை
யுள்ளாவி னைய வுலைந்து. (210)

காணு விதுநலமோ கைதவமோ வென்றுணராள்
பேணு நலமெடுத்துப் பேணினுள் வாணு
ளிராவணற்கு மாளுதலா லேற்றவறம் பூவி
னராவணையா னுட்ட வடுத்து. (211)

நெற்றிப் பிறையாண்முன் னின்றிடலுஞ் சென்றடுத்து
முற்றிப் பொழிகாதன் முந்திடுவான் பற்றித்
தருகென்பே னென்ரு டயங்கி யடுத்தாண்
முருகென்பே ராற்றலுளான் முன். (212)

ஆணிப்பொன் மேனி யடைந்த கதிரொளியாற்
சேணிற் றொடர்கின்ற திண்செவிகால் மாணிக்க
மென்னவெழின் மானுளதங் கேன்றடுத்துக் காணலுறு
மன்னவெனக் கைதொழுதாண் மான். (213)

இம்மா னிலத்தி னிலையென்ற வேந்திழைசொ
லெம்மானு மேற்றுமனத் தெண்ணமுருன் செம்மானுள்
சொற்கொண் டருத்திகொண்டான் றூயவரற் றந்தவுந்தி
மற்கொண்ட தோளான் மகிழ்ந்து. (214)

Koviloor Digital Library

ஆண்டங் கிளையோ னடுத்துரைப்பா னம்மணியும்
வேண்டுமென லாலதனை மேலோனும் பூண்டுஞ்சும்
தெள்ளமுதே யாமதனைத் தேர்வோ மெனவுரைக்கும்
வள்ளன்மனங் கண்டு மதித்து. (215)

காய முறுகனகங் கால்செவிவால் மாணிக்கம்
பாயுமுருக் கொண்டவிது பண்பெனலான் மாய
மெனத்தெளிவு தன்றி யிசைப்பதெனை யென்றான்
மனத்தெளிவு கொண்டிலக்கு வன். (216)

உலகிற் சராசரங்க ளோர்நிலைத்தா யன்று
இலகுற்ற தன்மையினு லெல்லாம் புலமுற்ற
பல்லா யிரமாய்ப் பரந்துவரு தன்மையிஞ
லில்லாத தில்லைமனத் தெண். (217)

என்னவிதஞ் சொல்வ திளையோய் பொருளுலகிற்
கன்னமதிற் கேட்பதெலாங் காண்பதுதான் பொன்னினொளி
பெற்றடுத்த வன்னங்கள் பேணச் செழித்ததனை
மற்றடுத்த தோளாய் மதி. (218)

முறையும் முடிவுமிலை மொய்யுருவிருக் கென்றல்
இறையு மிளையாற் கியம்பப் பறைதலென்னே
அன்னதுவும் பன்னெறிக்க ணுதுமென வேழைநொந்தாள்
மன்னதனைக் கொண்டான் மனம். (219)

அனையா ளகத்தை யறிந்த வழகன்
இனையாது காட்டென் றெழுந்தான் கனைகழலார்
தம்பியுடன் சென்றான் தடுக்கவரா வல்வினைபோல்
வெம்பியுழை நோக்கும் வெறித்து. (220)

நோக்கிய மான்றன்னை நுண்மதியி னோக்கலின்றி
யாக்கியமா னன்றென்று ஞதல்சொல்வேன் பாக்கியந்தான்
தேவரொன்றிச் செய்யத் திருந்தரவச் சேக்கைநின்று
மூவரொன்றி வந்த முதல். (221)

Koviloor Digital Library

என்னெனுக்கு மிம்மா னிளையோ யடுத்தறிவாய்
தன்னெனுக்கு மேலுவமை தானேது மின்னெனுக்கும்
செம்பொன்னு மேனி செறிபுள்ளி வெள்ளியதே
அம்பொன்னு ரார்மயங்கா தார். (222)

வரிசிலையோ யிம்மான் வடிவதனைக் கண்ட
வரிவையரோ வாசைகொள்ளா ரார்தா னுருகியவா
யூர்வ பரப்பவெலா மொண்விளக்கின் விட்டிலென
நேர்வதுபா ரென்று னினைந்து. (223)

ஆரியன்றான் கூற வதனைத் தெரிந்ததம்பி
சீரியவன் றென்றுசிந்தை தேர்ந்துரைப்பான் வீரியமான்
கண்டதுதான் சொன்னமெனிற் காரியமென் னுமீண்டு
விண்டதுதா னன்மையென்றான் வேள். (224)

அன்னவன்றான் சொல்ல வழகி யெடுத்துரைப்பாள்
மன்னுமுழை தன்னை வழங்குவையே னன்னகர்வாய்
போம்போது கொண்டுசென்றாற் போற்று நகரென்றாள்
தேம்போது கொண்டாள் சிறந்து. (225)

ஐயவிடை நங்கை யவையுரைக்க வையனது
செய்யவிடை சேரத் தெளிந்ததம்பி வெய்யகொடு
வல்லரக்கர் வஞ்ச வழக்கால் வருமானென்
சொல்லரக்கா தென்றான் றுதித்து. (226)

மாய மெனின்மடித்தும் வாளியினல் மாய்ந்தவெனிற்
காயு மரக்கரைக்கொல் கட்டுரையாம் தூயவெனிற்
பற்றிவந்து சேர்தும் பகரு மிரண்டுநன்றும்
வெற்றிவந்த வென்றான் விழைந்து. (227)

பின்னின்றார் யாவர் பிடித்து வருமாயம்
என்னென்றுந் தேற்று மிவையென்னே முன்னின்றார்
போற்றலுடைத் தன்றும் புலவேட்டை யென்றுரைத்தான்
ஆற்றலுடைத் தம்பி யறிந்து. (228)

Koviloor Digital Library

பகையுடைய ரென்றும் பலரென்று மாயம்
மிகையுடைய ரென்றும் விடுதல் நகையுடைத்தாம்
ஆதலினல் நன்றென்ரு னண்ண லயனையருள்
காதலினுற் றந்தோன் களித்து. (229)

அடுத்தசெய லெண்ண லமைதி யதுதான்
விடுத்தவர்பின் னின்ருர் வெருளத் தொடுத்த
கணையொன்ருற் காய்வேன் கருதவரு நல்ல
பிணையென்ருற் சேர்வேன் பிடித்து. (230)

ஆயிடையி னன்ன மமுதுக்குஞ் சொல்லதனை
வாயிடையிற் சோர வழங்கியே நாயகனீ
பற்றிவர வில்லையெனப் பங்கயக்கண் முத்தமது
முற்றிவரச் சொன்னுண் முனிந்து. (231)

போனதனை நோக்கிப் புரவலனுந் தம்பிதனை
மானிதனைப் பற்றி வருவனின்றே மானவளைக்
காத்தியென்று வில்லுங் கணையு முடன்கொண்டான்
ஆர்த்திகொண்டாள் சிந்தை யறிந்து. (232)

முன்னமகர் தன்னிலடு மூவரிற்சென் ருெருவன்
அன்னவனு மாரீச னுமயிர்த்தே னின்னமிது
காண்டியெனச் சிதைதனைக் காத்திருந்தான் தம்பியவன்
வேண்டியன சொல்லி விரைந்து. (233)

மந்திரத்தான் வாழிளையோன் வாய்மை மதியாதான்
சுந்தரத்தாள் சொன்ன துயர்மொழியால் வந்தரற்று
மானைத் தொடரகற்றி யன்றளித்த வென்றிவரன்
மானைத் தொடரகத்தன் மற்று. (234)

மிதித்ததுவா மெல்ல வெறித்து வெருவிக்
குதித்ததுவா மேலே குரத்தாற் றுநித்தெழுந்த
ஆதையுள மென்றிவைதா மொன்றினுமெட் டாதடுத்த
மேதையுலே வாக மிகுந்து. (235)

Koviloor Digital Library

நீட்டினு னெவ்வுலகு நின்றளந்த பாதமதை
மீட்டு முரைப்பவண்டம் வேறுளதோ வோட்டித்
தொடர்ந்த தனையொழியாத் தோற்றமது காட்டிப்
படர்ந்தான் பரமன் பரிந்து. (236)

குன்றிவரு மேகக் குழுவிற் குதிக்குமுடன்
சென்றிடிற்போர் தாழினுடன் நீண்டவரு நின்றதென
நீக்கு நிதிவழியி நேய நிலைநிறுத்தும்
பூக்குழலா ரைப்பொருந்து பு. (237)

காயமது வேருய்க் கருமம்வே ருயதன்மேற
ஏயு மிளவலுரை யென்றுரைத்து மாயம்
வருந்தினேன் வந்த வழியதிக மென்று
திருந்தினுன் சிந்தை செயிர்த்து. (238)

பற்றுவா னல்லன் பகழி விடுத்தினிமேற்
செற்றுவான் றன்னிற் செலுத்துமென மற்றதனை
மண்டலத்திற் கொண்டு மதிமயக்கி மாழ்கியுடன்
குண்டலத்திற் கொண்டான் குதி. (239)

அக்கணத்தி னைய னறிந்து செறிந்துவரு
சக்கரத்தி னும்பகழி தன்னைவிட்டான் பொக்கன்
செயிரகத்த தியன் செறிந்த வழிசென்
றுயிரற்று வாயென் றுருத்து. (240)

விட்டசரஞ் சென்று விரலரக்க னெஞ்சமதிற்
பட்ட பொழுதே பகுவாயால் அட்டதிக்கும்
அப்புறத்துஞ் செல்ல வழைத்துமலை போல்வீழ்ந்தான்
தப்புரத்த சிந்தை தவிர்ந்து. (241)

வெய்யனுருக் கொண்டு விழுந்ததனைக் கண்டுமுனஞ்
செய்யனல வென்றதம்பி தேற்றமென்னே யையனவன்
சிந்தைக்கு வந்த தெளிவுடையா னென்றுரைத்தான்
தந்தைக்கு வந்ததந்தை தான். (242)

Koviloor Digital Library

ஆசையுடை னீளத் தரற்றி விழுந்ததிறல்
நீச னுடலதனை நின்றுகண்டான் மாசணையா
மாதவத்தோன் வேள்வியிடை வந்தடர்த்த மாரீச
னேதவத்த னென்று னுருத்து. (243)

உழைத்துவரு வாளி யுரத்திற் புகவே
இழைத்துவரு மாயை யெனைப்போ லழைத்தமொழி
கேட்டு வருந்துங் கிளிமொழியா ளென்றெடுத்து
வாட்டு பெருந்துயரான் மன். (244)

வில்லொலிதான் செய்திருந்தும் வீயு மரக்கனிட்ட
சொல்லொலிதான் கேட்டுத் துயரடைவாள் வல்லதம்பி
தேற்றுவா னென்று தெளிந்தா னடியர்துயர்
மாற்றுவா னைபர மன். (245)

மாள்வதனை யெண்ணி வருந்திவந்தா னல்லனிவன்
சூள்வதனை யெண்ணிற் றுயருண்டாம் மூள்வதுவா
மேதமுடி யாதமுன மேற்பதுவே நன்மையென
நாதனடி மீண்டுவந்த னன். (246)

மாரீசன் வதைப் படல முற்றிற்று.

சடாயுவதைப் படலம்.

சங்கடுத்துப் பொங்குந் தனிக்கடலா மேனிவரற்
கங்கடுத்த தன்மை யறைந்தனமாற் கொங்கடுத்த
பூமடுத்த பாதப் புனையிழையாட் குற்றதனை
யாமெடுத்துச் சொல்வா மறிந்து. (1)

எயிறலைத்த மாமுழைவா.ர யேங்கி யிசைத்த
செயிறலைக்கொள் சொற்செவியிற் சேரக் குயிலறத்தி
லுற்றதெனுங் கொள்கை யுடையாளென் வாழ்வுமினி
இற்றதென வீழ்ந்தா ளிரிந்து. (2)

Koviloor Digital Library

பிடித்து வரவென்ற பேருழையி ஞலே
முடித்துவரும் வாழ்வென்று மோதிக் கொடிப்படிந்த
தென்னவெழுங் கோளரா வேற்ற விடிக்குடைந்த
தென்னவிழுந் தேங்கு மிரிந்து. (3)

குற்ற மரக்குங் குணநிதியென் கோமகன்ருன்
மற்றை யரக்கன்செய் வஞ்சனையா லிற்று
விழுந்தசெயல் கேட்டும் வெருவலைநீ யென்ருள்
கொழுந்தனைப்பார்த் துள்ளங் கொதித்து. (4)

எண்மை யுலகி னிராமன் றனக்கேற்றந்
திண்மை யுளரென்று செப்பலுண்டோ பெண்மையினுற்
சொல்லடுத்தீ ரென்று துதித்தா னிளவீரன்
வில்லெடுத்தான் வீரம் விழைந்து. (5)

எழுகடல் சூழுலக மேழு மவையடுத்துச்
சூழுமலை யேழ்தொடர்ந்த சூழல்வாய் வாழவரு
மேழையர்க டம்வலிக்கிங் கேற்றவிரா மன்வலிதான்
தாழுமென்ற லென்னுந் தரம். (6)

பாராய்க் கனலாய்ப் பரவு புனல்வளியென்
பேரா யவைமுனியிற் பேருமே காராகக்
கானுதலா குங்கமலக் கண்ணனையா ரென்றுரைத்தீர்
வானுதலீ ரென்ருன் மதித்து. (7)

இடைந்து மிராம னிராக்கதரா லேதம்
அடைந்து மதற்கழைக்கு மாயின் மிடைந்துவரு
மண்டங்கள் மேல்கீழாய் ஆகு மவையல்லா
லுண்டெங்கு மாமோ வுயிர். (8)

மாற்றம் பகர்வதென்னே மண்ணும் வரவானும்
போற்றும் புரமெரித்த புங்கவன்வில் லேற்றவுட
னிற்றதிறல் கண்ட விமையோருங் கொண்டபய
மற்றறியீ ரென்ருன் மதித்து. (9)

Koviloor Digital Library

காவலனு ரும்மாற் கருதியவை யெய்துமெனின்
மூவுலகு முற்றுமுடன் மூர்த்தியுள தேவர்
முனியிலுயர் முன்னோர் முடிவா ரறமும்
பனியிலுறு நுண்மை படும். (10)

பரக்கப் பகர்வதென்னே பண்ணவன்றன் பாணம்
துரக்கத் தொலைந்துயிர்தான் சோரும் அரக்கன்
உரைமீ தரற்று முரையா லுமக்கென்
தரைமீ தரற்றுவருத் தம். (11)

என்று னியம்ப வெடுத்தா ளிகற்சீற்றக்
கொன்றுன வின்னல் கொதிக்குமுளம் நின்றுன
நன்னெறியில் லென்றுள் நலிந்து மிகவயிர்த்துத்
தொன்னெறியிற் கூறு டுணிந்து. (12)

ஒருநாட் பழகி னுயிரை யளிப்பார்
பெருமாற் குலைவுவரப் பெற்றும் வெருவாது
நின்றனைவே றென்னை நெருப்பின் விழுவனெனச்
சென்றணைவாள் தாவஞ் செறிந்து. (13)

தாமரைக்கான் றன்னையண்டித் தாவிவரு மன்னமெனத்
தூமமிக்க தாவந் தொடர்வாளைச் சேமம்
வலம்புல்லும் வில்லான் வணங்கித் தடுத்து
நிலம்புல்லிச் சொல்லு நினைந்து. (14)

துஞ்சுவதென் விந்தை துயரத் தடுத்தமொழிக்
கஞ்சுவதென் சிந்தை யவலமின்றி யிஞ்சிருப்பீர்
செல்கின்றேன் பாரேன் றிருகும் விதியதனை
வெல்கின்றார் யாரே விரைந்து. (15)

போகின்றேன் யானும் பொருந்தி வருகேடு
மாகின்ற தாமரச ஞானமறுத் தேகென்றீர்
தாமே யிருந்தீர் தமியனெனச் சிந்தைநொந்து
போமே யிளையோன் புகன்று. (16)

Koviloor Digital Library

இருப்பனயான் செய்யி னிவரெரியின் வீழ்வர்
பொருப்பனையான் றன்னிடையான் போகி லருப்பமிலாக்
கேடுமுனஞ் சேருங் கிளரு முயிர்விரும்பி
வாடுமெனக் கென்னும் வகை. (17)

அறந்தா னழியாம லாக்கினு லாக்கும்
இறந்தாற் பழியா மிதனிற் சிறந்தான்முன்
போவதனைச் செய்வன் பொருந்தா வினைவழியின்
ஆவதனைச் செய்வதென்னை யாம். (18)

போவதனைச் செய்வேன் புகுந்துளது தீங்கெனிலோ
காவறனைச் செய்யுங் கழுகரச னுவதுதான்
காக்குமெனச் சொல்லிக் கடவுளர்கள் செய்தவத்தா
னிக்கமிலான் சென்று னினைந்து. (19)

இளையவள்ள லேக விறவுதனைப் பார்க்கும்
வளையெயிற்றி ராவணனும் வஞ்சன் முளைவரித்த
மூன்றடுத்த தண்டத்தான் முப்பகையை வென்றவன்போல்
என்றெடுத்து வந்தா னியன்று. (20)

உளணிலனு மென்ன வுலந்த வுருவத்தான்
சேணெறிசேர் வான்வருத்தச் செய்கையான் பாணி
இசையிலகுஞ் சீரா னிசைந்துவரு நாவின்
வசையிலக வேதமொழி வான். (21)

பூமலர்ந்த தென்னப் பொருந்து நடையுடையான்
தீமலர்ந்த தாமிதிக்குஞ் செய்கையா னும
நடுக்குற்ற கால னனியடுத்த மூப்பாற்
றடுக்குற்ற தாம்பருவத் தான். (22)

தாமரையின் மாமணியாற் றுங்குதவ மாலையினன்
ஆமையெனச் சேர்ந்துவளை யாக்கையான் நாமமுடை
முப்புரிநூல் மார்பன் முதிர்நடையான் வந்தடுத்தான்
தப்பரியாள் சூழ றனித்து. (23)

Koviloor Digital Library

சேகடுத்த தீவழியிற் செல்லாப் பெரியரிவர்
வாகடுத்த நோன்பரென வந்தடுத்தாள் பாகடுத்த
சொல்லாள் துடியிடையாள் சோதிசிறந் தாளடுத்த
பொல்லா னெதிர் பொருந்து பு. (24)

வெற்பிற் சிறந்தமத வேர்வைகொண்ட மேனியினு
னற்பிற் றிரைவேலை யாசையினுன் பொற்புற்ற
பெண்மணியை யண்ணற் பெரியோ னுளத்தமைந்த
கண்மணியைக் கண்டான் கரைந்து. (25)

தூங்கலிலா நல்லெழிலைச் சூர்ப்பநகை சொன்னதினும்
மோங்கலிலாந் தோளா னுருக்கண்டான் எங்கும்
மனநிலையை யென்னென்பா மன்னுபுயங்க
ளினமெலியும் வீங்கு மெடுத்து. (26)

புனமடுத்த தோகை பொருந்து மெழிற்றேன்
சுனைமடுத்துப் பண்ணிசைக்குந் தும்பி யினமாய்க்
களித்துளதா மென்பதெவன் காணு மனம்போற்
களித்துளவாங் கண்மாலை கள். (27)

சேயிதழார் செங்கமலச் சேக்கைநின் றுஞ் சேந்தவிவண்
மேயமணி மேனிகண்டு மேம்படற்குத் தூயனவென்
றேயு மிருபதுகண் ணென்னு மிமைப்பிலகண்
ணூயிரமின் றென்று னடுத்து. (28)

அரைகடையா முக்கோடி ஆயுள் தவத்தாற்
புரைதபயான் கொண்டதுதான் போதா நிரைவளையார்
கையுடையா ணல்லெழிலைக் கண்டு திளைப்பதற்கு
மெய்யுடையே னென்றான் விழைந்து. (29)

பண்ணவர்க ளோடு பரவு மசுரர்களும்
நண்ணவரு மேவ னயர்ந்துசெய வண்ணமுடை
மூவுலகு நன்று முறையி னிவளாள
வேவல்செய்வே னென்று னெடுத்து. (30)

Koviloor Digital Library

உளையுந் துயர்முகத்தி னுற்றவொளி யீதேல்
விளையு முறுவலென்னும் விந்தை தளையவிழும்
கூந்தலளி தாங்குங் குணநிதியைத் தந்தபின்னை
சார்ந்தளிக்கச் செய்வனர சை. (31)

ஆண்டையா னன்னவுன்னி யாசை யதிகமென
மூண்டதோர் சிந்தை முறையிலனைக் காண்டலுந்தன்
கண்ணீர் துடைத்துக் கடுகி யுபசரித்தாள்
பண்ணீர் மொழியாள் பரிந்து. (32)

எத்தினா ளெய்தி யிருந்தி ரெனவுரைத்து
வேத்திரத்தி னாசனந்தான் வேண்டிநல்க மாத்திரித்த
தண்டயலின் வைத்தவஞ்சன் சாலையினிற் சார்ந்ததனைக்
கண்டவெலாங் கொண்டகலக் கம். (33)

நடுங்கு மலைமரனும் நாவவிந்து நேரா
தடங்கும் பரவைவிலங் கஞ்சும் படங்குரைந்து
பாம்பு மொதுங்கும் பதகன் றனைக்கண்டு
தேம்பு முயிர்க டிகைத்து. (34)

யாவதுவா மிவ்விருக்கை யாவ ருறை வதிவண்
கோவிதுவா மாமுகத்தாய் கூறென்ன மேவும்
விருந்தினத்தா ரிவ்வழியை வேண்டினா ரென்னப்
பெருந்தனத்தாள் பேசும் பிரித்து. (35)

தயரதத்தார் மன்பாலன் தம்பி யுடனே
யுயர்நலத்தாய் சொல்லி னுயர்வோன் அபர்விலவா
யிவ்வழியிற் சேர யியைந்தா னவன்பெயரைச்
செவ்வழியிர் கொள்ளுந் தெரிந்து. (36)

கேட்டதுண்டு காணேன் கெழுவுகங்கை நீரடுத்த
நாட்டையண்டி யோர்கால் நயந்திருந்தே னாட்டுமதி
யானனத்தி ரேவ ரரும்பகலை விணாக்கிக்
கானனத்தி னின்றீர் கழித்து. (37)

Koviloor Digital Library

அனகநெறி கொண்ட வடிக ளுமையே
நினைவதொரு தெய்வமெனு நெஞ்சன் சனகன்
புகழ்மகள்பேர் சானகியாம் பொற்புடைக்கா குத்தன்
மகிழ்மனைவி யென்றாண் மதித்து. (38)

அவ்வழியி னுன்னி யவையுரைத்த வாயிழையாள்
வெவ்வழியா மூப்பின் விளைந்திடுநீ ரிவ்வழியி
னேற்ற வினைகடக்க வெண்ணியடுத் தீர்பெரியீர்
ஆற்றவிட முன்னெதுவென் றாள். (39)

இந்திரனுக் கிந்திர னுமேந்த லெழுதவொணாச்
சுந்தரனும் போதன்வழித் தோன்றினேன் அந்தரத்தோ
டெவ்வுலகு மாள்வா னிலங்கு மறைநாவான்
தெவ்வுலகி னேற்காத் திறன். (40)

ஈச னிருக்கு மிசைசேர் கயிலைதனைப்
பேசி யெடுத்த பெருவலியா னுசை
யடுத்த கயத்தி னளவின் மருப்பை
யொடித்த புயத்த னுருத்து. (41)

நிற்போர் கடைத்தலையி னேர்புரியுந் தேவர்களே
சொற்பா டவன்பெருமை சொல்லுங்காற் கற்பகந்தான்
பொன்னுடைய நன்னிதிகள் போற்றவளர் செல்வம்
மன்னுடைய தென்னிலங்கை மன். (42)

மேனகைப்பொன் தானமுற்று மேவு மரம்பையர்கள்
வானகத்தை விட்டவன்றன் மாட்சியினால் மானமுற்றிக்
கான்ற தொழிலடைப்பை கால்வருட லேமுதல
வேன்றதொழில் செய்வா ரெடுத்து. (43)

சந்திரனுஞ் சூரியனுந் தாங்கும் பெருமையவன்
சிந்தனையி னிற்பார் சிறந்தடுத்த விந்திரனும்
மேவலர்க ளானார் விசைய னவன்கோயிற்
காவலர்க ளானார் கதித்து. (44)

Koviloor Digital Library

பொன்னகர மின்னும் பொலங்கொண்ட நாகருறை
தொன்னகரம் பூவிற் றலங்கிவரு மின்னகரி
னென்னகர மாளுலு மேற்ற பெருமையுளான்
நன்னகர மாமோ நவில். (45)

தாளடுத்த தண்மலரான் றந்த தரமுடைய
நாளடுத்த நல்வளத்தா ளுட்டுமரன் வாளடுத்த
வத்தத்தான் மேலோ ரடுத்துவர நன்மைகொண்ட
சித்தத்தான் பத்துச் சிரன். (46)

ஏனை யுலகு மெழிலமைந்த பூந்திருநேர்
மானை யனையார் மதித்தடுத்து மேனோர்
நினைத்துருக நேரா னிகரில் தனது
மனத்துருகு மாதை மதித்து. (47)

ஆண்டையா ளுகு மரச னுரைநகரை
வேண்டியான் சின்னாள் விழைந்தனனு மீண்டு
பிரிந்த வருத்தத்தாற் பேதுறுவே னென்றான்.
விரிந்த வினையம் விழைந்து. (48)

வேதமுற்ற வேதியர்கள் வேண்டும் பொருளறியாப்
பாதகத்தாஞ் சோரர் பதியிருந்தீ ரேதாம்
உடலா னதுமிகையென் னுன்னுவீர் சிந்தை
கெடலான செய்கை கிளைத்து. (49)

வனமடுத்து மாதவர்கள் மன்னுமிடஞ் சேரீர்
கனமடுத்த நன்னாட்டைக் காணீர் சினமடுத்த
பொல்லா நெறியார் புகலிடமே கொண்டிருந்தீர்
நல்லார் நெறிமிகவு நன்று. (50)

மங்கை யுரைக்க வரம்பி லவனுரைப்பான்
வெங்க ணரக்கரென வேண்டகிலேம் திங்களெனும்
மாமுகத்தாய் தேவர் மதிக்கவரு தீயரெங்கள்
மாமதிக்கு நன்மைபுரி வார். (51)

Koviloor Digital Library

சேயிழையா டேர்ந்துரைப்பா ணயவரைச் சேர்ந்தவருந்
தூயரல ரென்பதுதான் றொன்மையென்றாண் மாயரக்கர்
காதலினல் வேண்டுமுருக் காணுவரென் றெண்ணுதா
ளாதலினற் சொற்றா ளறம். (52)

அயிர்த்தா ளனந்தன் னகத்தின் மதித்துப்
பெயர்த்தாம் பிறிதெடுத்துப் பேசும் செயிர்த்தனவாம்
வல்லோ ரியர்க்கை வழிநின்றா லன்றியொன் றுஞ்
செல்லாதா மென்றான் சிரித்து. (53)

வஞ்சனச்சொற் சொல்ல வனிதை யெடுத்துரைப்பா
ளஞ்சனத்தாம் வண்ண னறமுடையான் னெஞ்சிற்
படரடுத்த வல்லரக்கர் பாறத் தொலைப்பா
னிடரடுக்கா தென்றா ளெடுத்து. (54)

அன்னவள்சொற் கேட்ட வனையா னரக்கர்தமை
மின்னவளே மானுடவர் வெல்வரென்கை தன்னமுயல்
கானடுத்துக் காரிபத்தைக் காது மடங்கறனை
மானடுத்துக் காதலொக்கு மாம். (55)

மின்றிரண்ட பங்கி விராத னிராவகையும்
கன்றிவரு சேனைக் கரன்முதலோர் பொன்றிவரு
பூசலொன்றுந் தேராத பூசுரரோ நீரென்றாள்
ஏசலொன் று மில்லா ளெடுத்து. (56)

வாளரியாம் வள்ளல் மடிக்க நிருதரடுங்
கோளரியா தோடுமெண்டர் கொற்றமிகும் நாளையே
காண்டலுறு மென்னை கருதீர் பெரும்பாவ
மூண்டவறந் தன்னைமுற்று மோ. (57)

தேனுடைய தெள்ளமுதந் தீம்பாகாந் தென்சொலது
தானுடைய காதடுத்துச் சார்முதத்தை மானுடரை
வல்லரவ ரென்றுரைத்த மாற்றத்தாம் சிற்றமுண்ணக்
கொல்லரவ மானன் கொதித்து. (58)

Koviloor Digital Library

சிறியுரை செய்வான் சிலைவலியி லார்க்கனர்த்தம்
ஈடொருருவன் செய்தா னெனவிசைத்தாய் வீறு
மிருபதுதோள் வாடை யெடுத்த பொழுதே
பொருவ்திலாப் பூளையெனப் போம். (59)

மேருத் தனையெடுக்க விண்ணைத் தடிந்திடிக்க
நீரைக் கலக்க நிமிர்ந்தவுடல் வீரமுற்றோர்
யாவரென்பா யேழா யிராவணற்குத் தாயரிதென்
மூவரென்பார் தாமிணையா மோ. (60)

தோளடுத்த தொன்மை தொடங்குவ்தி னுற்றலுண்டோ
கோளடுத்த தென்னிலங்கைக் கோன்றனையே நீள்சிறைசெய்
மற்றவனைத் தோளாம் வனத்தை மழுப்படையாற்
செற்றவனை மானுடனைத் தேர். (61)

என்றனசொற் கேட்டா னெரிந்தனகண் டிக்கடுத்துச்
சென்றனதோள் வானகத்தைத் தீண்டினகம் ஒன்றொடொ
கையடித்துப் பற்கடித்துக் கண்டு திகைக்கநின்றான் [ன்று
பொய்யடுத்த மாயமுடன் போய். (62)

இருவினையும் செற்றோ ரிவரல்ல வென்று
வெருவினையும் வேலை விளம்பும் பொருவில்
மணம்விரித்த கூந்தலள்முன் மன்னு மரவம்
பணம்விரித்த வொத்தான் பகைத்து. (63)

ஆற்ற துயரடுத்த வன்னு ளலக்கணதற்
கேற்றதுவா மென்னு வெதிரியம்பு மாற்றமிலை
செய்யும் வினையில்லை சேரவரு கூற்றடுக்க
னையு முயிரா ணவிந்து. (64)

விண்ணவர்க ளேவல் விழைக்குந் திறலரியாய்
மண்ணவரா மானுடரை வல்லரென்றாய் பெண்ணவளா
மன்றேற் பிழையா யடுத்தெடுத்துத் தின்பனென
நின்றான் சினத்தி னிமிர்ந்து. (65)

Koviloor Digital Library

குலைதலெனை யார்க்குங் குனியாத வென்றன்
தலைதனிலே தாங்குமுடி தானாய் அலகில்
அரம்பையரு னம்பொ னடிவருடச் சார்வாய்
தரம்பயிலுஞ் செல்வமென்றான் தான். (66)

செவிகைத் தலமதனாற் சிக்குறச்சே மித்துக்
கவிகைச் சயமுடையான் கற்பாள் புவிகைக்க
நல்லொழுக்க மில்லாதாய் நாயவியை வேட்டதெனப்
புல்லரக்க வென்புகன்றாய் போந்து. (67)

புன்னுனிநீர் போலநொய்தாப் போதல் புரிந்துநின்ற
வின்னுயிருக் கஞ்சுவதோ விற்பிறப்பு மின்னுயிர்த்துச்
சீறியட வாங்கணைகள் சேர்முன் னுயிர்க்குறுதி
தேறியடா தோடு தெளிந்து. (68)

என்றவடான் சொல்ல விரக்க மிலியுரைப்பான்
உன்றுணைவ னம்பவ் வுயர்திசைமா வென்றிபுனை
வன்றிறல்சேர் கொம்படர்த்த மார்பி னடுக்கினவை
குன்றிலுறு பூங்கணையொக் கும். (69)

அணங்கிற் கணங்கன்ன யாசை யகத்தா
யுணங்கினற்குத் தந்தே யுயிரைக் கணங்குழையார்
மாமகளிர்க் கெல்லா மருவுபதங் கைக்கொளெனக்
கோமகடாள் வந்துவணங் கும். (70)

தறைவா யவனடியிற் றாழக் கொடிய
கறைவாளி னாவி கலங்கி இறைவா
இளையோ யெனவேங்கு மேற்ற பொறைதான்
விளையா வுயிர்போல் விழுந்து. (71)

ஆண்டான தீயனுட னாயிழையை நேரடுத்துத்
தீண்டான மேலுரைதான் சிந்தைசெயத் தூண்டா
னெனமுற்று தோள்வலியா லேற்றநிலங் கீண்டான்
மனமுற்ற யோசனைகீழ் வாய்ந்து. (72)

Koviloor Digital Library

கொண்டா னுயர்தேரிற் கோல்வளையும் வேல்விழியிற்
கண்டா ளுயிரிருக்கக் காணுதாள் மண்டா
னுறுமின்னின் வீழ்ந்தா ளுயிர்த்தாள் மயங்குஞ்
செறுமன்னு மான்போற் றிகைத்து. (73)

விடுதேரை யென்ன விளங்கு மெரியிற்
கொடிசேர லென்னக் குழைந்தா ணெடிதுயிர்த்து
வீழ்வா டயர்க்கடலின் வெய்ய வறனேயான்
தாழ்வானே னென்ற டவித்து. (74)

மாமலையே காமரனே மன்மயிலே பொன்குயிலே
காமருவு யானை கலைபிணையே சேமம்
நிலையா வுயிரே னிலைதேறி மைந்தி
னுலையார்க் குறைப்பீ ருவந்து. (75)

செஞ்சே வகனுர் திறமறிவீர் நீவிர்கன
மஞ்சே பொழிலே வனதேயே யஞ்சலெனச்
சொல்லீரி யானுந் துயர்க்கடலின் வீழ்ந்திறக்கின்
நல்லீருங் கட்கென் னலம். (76)

வருதாரை வீசி வருநிருதர் மேனி
சரதாரை வீசினராய்ச் சாரீர் வரதா
விளையோய் மருவேது மில்லாப் பரதா
விளையோய் பழிபடைத்த லென். (77)

கோதா விரியே குளிர்வாய் குழைவாய்நீ
மாதா வனையாய் மனந்தெளிவா யோதா
துணர்வா ருழையோடி யோதலையே நீயும்
துணர்வார் குழலென் றுயர். (78)

முந்து சுனைகாள் முழையரிகாள் முந்நீர்சூ
ழிந்தநில மோடா மிருபதுகை கொந்துடைய
பத்துத் தலையும் பரிந்து குலைந்துலையத்
தத்துற் றலைக்காண்பீர் தான். (79)

Koviloor Digital Library

என்றின்ன பன்னி யிரிந்தரற்று மன்னவளைப்
பொன்றுன்னு மாதனத்தாய் போரிலெனைக் கொன்றுன்னை
மீட்பரன்பாற் ருபதர்கள் வெல்க. வெனவுரைத்தான்
வாட்பரன்பாற் கொண்டவத மன். (80)

வாக்கினுற் சொல்லவவண் மாயவஞ்ச மானதனை
யாக்கினு யாக்கி யடுகூற்றைப் போக்கிப்
புகுந்துகொண்டு போவாய் பொருதுநினைக் காக்கின்
வகுந்துகொண்ட தேரை மடக்கு. (81)

மீட்டு முரை செய்வாள் வீரனேல் மற்றுன்று
கூட்டர்தமைக் கொன்றுங்கை கோண்மூக்கும் வாட்டினவர்
மாவனத்தா ரென்றறிந்து மாயம் புரிந்ததெனை
தாவனத்தும் வீரமதாற் ருன். (82)

மொழியு மளவின் முரணில்லா யாக்கை
யிழியு மனிதருட னேற்றல் அழிவில்
விழிதந்த நெற்றியன்றன் வெற்படுத்த தோட்குப்
பழிதந்த தென்னப் படும். (83)

பாவையது கேளா பகைவ ரிடநேரிற்
போவதுவுங் கோளாம் பொருவதுநாண் ஆவதுவும்
கற்பினரை வஞ்சிக்குங் கண்டகர்க்குப் பாவமென்னை
அற்பிலர்க்கென் னென்று ளனை. (84)

என்னநின்ற வெல்லை யெடுத்தெங்கு போவதடா
நின்னிலென்ற சொல்ல னெறுப்புறுகண் மின்னலென்ற
வீரமுற்ற துண்டத்தன் மேருவரை வானினிடைச்
சாரலுற்ற தென்னவடைந் தான். (85)

பாழி வரைகள் பறித்தெழுந்து சேரமுற்றும்
பூழிபட விண்ணிற் பொருந்தியே வாழி
யுலகமொன்ற தாக வுகாந்தக்கால் சேர
விலகுசிறை வந்தா னிசைந்து. (86)

Koviloor Digital Library

சாகை மிசைமரங்க டாழத் தலையடுத்து
மேக மிசைவிண்ணின் மேற்செல்ல மாகமிசை
வந்தான் கலுழனென வாளரவ முற்றிடைய
வந்தா னெருவையிறை வன். (87)

யானை முதன் மற்றை யாளியொடி யாவையுமே
கானெடுமாச் சேர்ந்தடுத்த கல்லிவைகள் மேனிறைந்த
தானச் சிறைவீச்சிற் றூனேற லால்வனந்தான்
வானத் தொடும்பகைத்த வாம். (88)

உத்தமன்றன் றேவிதனை யோங்கு முலகொடுதேர்
வைத்தமந்த செல்வதெங்கு வானினுட னெத்தனைய
வாசைமறைப் பேனெனவே யான்றபத்தி ரச்சிறையை
வீசியெடுத் தேற்றும் விசித்து. (89)

வந்தா னெருவைமன்னன் மாண்பி லரக்கனுடை
எந்திரத்தேர் செல்லொழிக்கு மெண்ணினன் சிந்துரக்கால்
சேகரத்தான் செக்கர் செறியுங் கயிலையெனும்
ஆகரத்தான் வந்தா னடர்த்து. (90)

ஆண்டுற்ற பொன்னனங்கை யஞசலென வஞ்சிதனைத்
தீண்டுற்ற தில்லையெனுஞ் சிந்தையினன் மூண்டுற்ற
வெங்கதத்தான் வெற்றியினன் வேண்டியுரையாடு
மங்கதத்தான் முன்ன மடைந்து. (91)

பேதாய் பிழைசெய்தாய் பேருலக மாதாவை
ஏதாய் விழைந்தா யியல்பில்லா யாதார
மாராவா ரண்ண லடுகணைகள் வந்தடுத்தாம்
பேராவோ நின்சிரங்கள் பேசு. (92)

கெட்டாய் கிளையோடுங் கேடிலவாம் வாழ்வையெலாஞ்
சுட்டா யிதுவென் தொடங்கினைநீ பட்டாயென்
றேற்றனையே பத்தினியை யிவ்வயின்விட் டேகுதியேற்
றோற்றனையாய்ச் சாகாய் துலைந்து. (93)

Koviloor Digital Library

உய்யாமற் போரி னுமரா ருயிரையெலாம்
மெய்யாயி ராமன் விருந்திடவே கையால்
முகந்ததனை யந்தகனுர் முன்னருந்தி யின்னம்
உகந்ததனை நீயறியா யோ. (94)

கொடுவெங் கரியடுத்துக் கொல்ல வருங்கால்
விடுமுண்டை சேர்க்க விருப்போ வடுமென்ப
தெண்ணுமற் போனுலு மேற்ற கடுவை யுண்டு
நண்ணு துயிர்மனத்தி னுட்டு. (95)

எல்லா வுலகமுட னிந்திரரு மந்தரரு
மல்லா தவர்மூவ ரந்தகனும் புல்வாய்
புலிகண்ட போதென்னும் போற்றுவலி வில்லின்
ஒலிகண்ட போதே யுகும். (96)

இம்மைக் குறவோ டிறந்தழியு மேலடுத்த
வெம்மைத் தொழிலிதன்மேல் வேறிலையா மம்மைக்
கருநரக மாக்கு மதனை யெதற்குப்
பெருமையெனக் கொண்டாய் பிடித்து. (97)

முத்தேவ ராவார்க்கு மூல முதற்பொருளா
மத்தேவ ரிம்மனித ரானதனு லெத்தேவ
ராக மதித்தா யறிவிலிபித் தேறினையாற்
சோகமணித் தாகுந் தொடர்ந்து. (98)

புரம்பற்றும் போர்விடையாற் போற்றும் புகழால்
வரம்பெற்ற வஞ்சமுதல் மற்று முரம்பெற்ற
வாவனவு மாண்மையினும் அண்ண லறம்பற்று
மேவடுக்கு முன்னமெரன வெண். (99)

வானுன் வரதன் வரச்சேய் வளைத்தவில்லான்
தானு வரினுர் தடுப்பவர்கள் நானே
யவனுய்ப்பே னன்னுதலை யண்டாது போனீ
யிவணுற்ற வாழ்வா மிசைந்து. (100)

Koviloor Digital Library

கேட்டா ளிருநரிறை கேட்டுக் கிளரொளிசெய்
வாட்டாரை தியுகத்தன் வாய்மடியா வோட்டாய்
இனியுரைநீ செய்வதனுக் கேற்றவரை யேற்ருற்
புனிபுரையு மென்றாழ்முன் பார். (101)

வரும்புண் டரவாளி மார்படுத்துச் சேர்ந்து
பெரும்புண் டிரவாது பேர்வா யிரும்புண்ட
நீரடுத்து மீண்டிடினு நித்திலத்தாம் பொன்னகைசேர்
சீரடுத்தாள் மீண்டிடுமோ தேர். (102)

என்னத்தாம் கேட்டாங் கிரட்டி பயமெய்தும்
அன்னத்தை நோக்கி யரக்கனுடல் சின்னத்தாம்
வில்வீரர் சேர விலையென்று நீவருந்தேல்
கொல்வீர மெற்கென்ருன் கோன். (103)

முத்துறல்போ லாலி முலைக்கண் விழவயர்ந்து
தத்துறவென் ருலபலந் தான்றலைகள் பத்துறவாங்
திக்கினுக்கும் யான்பலிசெய் தீரமதைப் பாரென்ருன்
அக்கினிக்கு நேராற்ற லான். (104)

இடிப்பொத்த பேர்முழக்கி னெற்றிச் சிதையா
முடிப்பத்தி தள்ளி முழங்கிக் கடிப்பத்தான்
காண்டகுயாழ்க் கேதனத்தைக் காதுதுண்டத் தாவொடித்து
மாண்டவர ராசிகொண்டான் மன். (105)

அக்கா லரக்க னரக்குருக்கை யன்னகண்ண
னெக்காலு மின்னவகை யீடழியான் கைக்கார்
முகத்தோடு வார்புருவம் முன்னங் குனித்தான்
நகைத்தா னடுங்கு நகம். (106)

சண்டப் பிறையெயிற்ருன் தாக்குஞ் சரமாரி
மண்டச் சிறகடித்தான் வள்ளுகிராற் கண்டப்
படுத்தான் சிலகணையைப் பல்லாற் கடித்துத்
தடுத்தான் சிலகணையைத் தான். (107)

Koviloor Digital Library

நீட்டு மணுகிநெடு வெங்கணர வங்களையே
வாட்டுங் கலுழனென வன்றலைமேல் நீட்டிநின்ற
மண்டலத்தாம் வில்லை வளைப்பதன்முன் வார்காதிற்
குண்டலத்தைக் கொண்டெழுந்தான் கோ. (108)

எழுந்தான் றடமார்பி னேழோடேழ் வாளி
அழுந்தாம லோட வரக்கன் பொழிந்ததனை
எஞ்சினவாச் செய்தா னெதிர்த்தான் சடாயுவைக்கண்
டஞ்சினவாம் விண்ணோ ரகம். (109)

புண்ணிற் புறுநீர் பொழியவரு புள்வேந்தன்
கண்ணிற் கரன்முதலோர் கான்றநெய்த்தோர் மண்ணதனில்
வாரி யெனநுகர்ந்து வானடுத்த வெண்மேகம்
சோரிபொழிந் தொத்த சுழன்று. (110)

ஒத்தா னுடனே யுயிர்த்தான் அவன்றோளாம்
பத்தான பத்தினிடை பாய்ந்தடுத்துக் கொத்தி
அவசத்தைச் செய்தா னணியகலங் கொண்ட
கவசத்தைக் கொய்தான் கடித்து. (111)

அறுத்தா னரக்க னடுத்தசதத் தம்பாற்
செறித்தான் றடமார்பிற் றேவர் வெறித்தார்
வெறித்தாரி ராவணன்றன் வில்லதனைப் பல்லாற்
பறித்தான் பறவையிறை பாய்ந்து. (112)

எல்லிட்ட வெள்ளிமலை ஈச னொடுமெடுத்தான்
மல்லிட்ட தோட்சிலைவாய் வாங்கியே வில்லிட்ட
மேகமுற்ற தென்னநின்ற வீரன் றனைத்துதித்தார்
மாகமுற்ற தேவர் மதித்து. (113)

ஆயிரங்கண் ணானை யடர்த்தவரக் கன்சிலையை
வாயினின்று வாங்கி வலமருவு சேயமணித்
தாளா லிறுத்தான் தழல்வண்ணன் றன்சிலையைத்
தோளா லிறுத்தான் றனை. (114)

Koviloor Digital Library

ஞால மெடுப்பா னகுமாற்றற் கேற்றவல்வில்
மூல மொடிக்க முனிந்தநெஞ்ச னுலமிடற்
றைய னெரிந்துபுர மட்டவம்ப தாஞ்சூலம்
வெய்யனெறிந் தான்பரவை மேல். (115)

ஆற்றுனென் றெண்ணுதென் ஞற்ற லறிதியென
வேற்றுனன் மார்பத் தெருவையிறை மேற்ரு
னிதுசெய்தா ரேவ ரென வெடுத்துப் போற்றித்
துதிசெய்தார் தேவர் துணிந்து. (116)

பொன்னுக்கு மாதர் புலனுக்கும் புனகணரும்
இன்னுக்க ரின்மனையி னேய்விருந்தும் தன்னுக்கும்
யோகியரைச் சார்ந்த யுவதியர்தந் நோக்கமும்போ
லாகியதா மவ்வே லடைந்து. (117)

வேகமுடன் வேலிழந்தான் வேறுபடை வேண்டுமுன
மாகமுட னீண்டு வயங்கிரதப் பாகன்
தலையைத் தடிந்தான் சழக்க னிவன்ற
னிலையைத் தெரிந்தா னினைந்து. (118)

அறிந்தானி ராவணனு மாடகத்தாங் தண்டா
லெறிந்தா னெரிபுகைய வேற்றே மறிந்தான்
எருவைக் கிறைவரைபோ லேற்ற வமரர்
வெருவிப் பரிந்தார் மெலிந்து. (119)

மண்மேல் விழுந்தான் வயங்குமான் றேருட்னே
விண்மே லெழுந்தான் விமலைகண்டு புண்மேல்
எரிநுழைந்த தென்ன விரிந்தாள் சிறந்த
அரிநுழைந்த வைஃபா லவள். (120)

கொழுந்தே யனையாள் குழைந்தேங்கல் கண்டா
னழுந்தே லவலமென வார்த்தா னெழுந்து
விழுந்தா னவன்றேர்மேல் விண்ணவர்கள் பண்ணை
மொழிந்தாசி சொல்ல முனிந்து. (121)

Koviloor Digital Library

பாய்ந்தான்கைத் தண்டைப் பறித்தெறிந்து தேரயங்க
ளேய்ந்தாம் பதினாறு மெற்றியே காய்ந்தாற்றற்
றுண்டத்தாம் வாளாற் றுணித்தா னுயிர்தசத்தாம்
கண்டத்தான் கண்டான் கதித்து. (122)

திண்டை ரழித்தான் திறல்வாளி சேர்தூணி
கண்டான் றனுவின்றிக் காய்வதென வண்டிப்
பறித்தா னெறிந்தான் பறவைக் கிறைவன்
குறித்தா னுளத்திற் கொதித்து. (123)

மாச்சிச் சிரம்பாய்ந்தான் மார்புதோண் மேற்சிரகை
யோச்சிப் புடைத்தா னுலைத்ததனால் மூச்சிற்ற
முன்னரக்கன் சோர்ந்து முடிசாய்தல் கண்டிகழ்ந்தான்
மின்னரக்குந் துண்டமுற்ற வேந்து. (124)

அவ்வேலை மேன்முனிந்தா னாற்றற் படைகாணா
வெவ்வே லரக்கன் விரும்பினா னிவ்வேலை
இன்னுயிரை யுண்பனெனா வேற்றடுத்தான் வாளதனை
மின்னுயிர்க்க வீசினான் மேல். (125)

வலியதனாற் றேலான் வலத்தெய்வ வாளால்
நலிவதொடு வாழ்கையுடை நாளும் மெலிவதனால்
திண்ணாஞ் சிறகிழந்து தேய்ந்துவிழுந் தான்மலைபோல்
நண்ணுஞ் சடாயு நலிந்து. (126)

விரிந்தார் சிறைகிழா வீழ்ந்தான் அமரர்
இரிந்தார் துணையிழந்தா னென்னப் பரிந்தாரின்
விண்டுலகர் சொன்னமழை வேறுபொழிந் தார்சீதை
கண்டுலைவு கொண்டாள் கலுழ்ந்து. (127)

வெள்கு மரக்கனெடு விண்ணடைந்தான் மண்மகளும்
தொள்கடுத்த மான்போற் றுயருழந்தாள் கொள்கொம்பு
போனகொடி போலப் புரண்டாள் விழுந்தழுதாள்
ஆனதுயர் சொல்வ தரிது. (128)

Koviloor Digital Library

வென்றுணையா வந்த வளர்பரவை கட்கரசும்
பொன்றினனு மென்று புலம்பினாள் இன்றுணைதா
னின்றித் துயரதனு லேங்கி மெலிகின்ற
வன்றிற் பறவை யதாய். (129)

பின்னவன்றன் பேச்சதனைப் பேணாத பேதையேன்
அன்னவனை யண்டா தகற்றினேன் பின்னடுத்தான்
தன்சிரகும் போகத் தயங்கினேன் சார்விதிதான்
என்றருமோ வென்று ளிரிந்து. (130)

அல்லலிற்கா மென்னை யடுத்துப் புரந்தளித்த
நல்லவற்காம் வெற்றி நரகற்கோ வெல்வதுதான்
பாவமோ வேதம் பயனிலையோ தன்மமெனை
யோவுமோ வென்று ளுலர்ந்து. (131)

நாணிலளா மென்னுரையை நாடியடை நம்பிமீர்
நிணிலையார் நல்லறத்தி னின்றவர்கட் காணியெனும்
உந்தையர்க்கா மன்புடையாற்க் குற்ற செயல்காண
வந்தருள்வீ ரென்றழுதாண் மான் (132)

கற்பழியா தென்கடமை கண்டாலு மண்டலத்தாம்
பொற்பழியா வெற்படுத்த பொற்புயத்தான் விற்பழிதான்
கொண்டதியான் வந்த குலமும் பெரும்பழியைக்
கண்டதியா தென்றாள் கவன்று. (133)

எல்லியலும் நல்விசும்பை யேற்றிருந்த நேமியனே
சொல்லியலும் நன்னெறியாய் தோழமையான் வல்ல
கடன்கழித்த நம்பிதனைக் காணுதியோ வென்றாள்
மடன்கழித்தார் சிந்தைமலர் மா (134)

எங்குற்று டாழ்வு மிரகிழந்தான் வீழ்வுமுட
னுங்குறற கண்ட வடலரக்கன் தாங்குற்ற [தான்
தேரினிடை வைத்தமண்ணைத் திண்டோளிற் கொண்டடுத்
வாரியிடை காய வழி. (135)

Koviloor Digital Library

விண்ணிடையே வெய்யன் விரைந்தடுத்த வேகத்தாற்
கண்ணிநொடு சிந்தைசுழல் கற்புடையாள் விண்ணினிடை
மின்னேயுற்ற மேனி விளங்கிழையாள் சிந்தைகன்றித்
தன்னேயுற்ற தன்மைமறந் தாள். (136)

ஏக வரக்க னொருவைக் கரசனுடன்
மோகவுயி ராக முளேத்ததனல் மாகமதை
நோக்கினன் வஞ்ச னெடிவரையிற் செல்லலேக்கண்
டாக்கினு னெஞ்சத் தலம். (137)

வந்துயரு மைந்தர் மருகி தனக்கடுத்த
வெந்துயரைச் சிந்தி விளேபுகழைத் தந்திலரே
மேலே விதிதரும வேலிதனைக் காலிசெய்த
பாலகரைக் காணுத பண்பு. (138)

விற்றடக்கை வீரர் விழைந்திருக்கின் மேலான
பொற்றெடிக்கித் துன்பம் புகுவதுண்டோ வுற்றடுத்தல்
தேர்ந்தனனற் சிற்றவைதான் செய்தவஞ்ச மெய்தவந்து
சேர்ந்தனவோ வென்றான் றிகைத்து. (139)

பஞ்சணேயும் பாம்பணேயாப் பள்ளிகொண்ட பண்ணவனென்
னெஞ்சணேயும் மஞ்சனென நேர்ந்ததனல் வெஞ்சினங்கொள்
பேயரக்கன் வெல்லப் பெறுமோ பெருமாயை
யாயிருக்கு மென்றானறிந்து. (140)

வேருடனேர் வேலரக்கர் வீயப் பழிதொலேத்துக்
காருடனேர் வண்ணனென்சேய் காத்தளிக்கும் சீருடைய
தேவிதனைத் தீண்டுமெனிற் செம்மலரோன் சாபமிவ
ஞவிதனைத் தீண்டுமென்றா ஞய்ந்து. (141)

பருஞ்சிறையா னின்னவகை பன்னி யுரைப்பான்
அருஞ்சிறையா நங்கைக்கென் னுற்றற் பெருஞ்சிறைதான்
இற்றதுவா மென்றாலு மேற்றகற்பை மாற்றறிதென்
றற்றதுயர் நீங்கு முலேந்து. (142)

Koviloor Digital Library

அஞ்சிறையி ரத்தத் தழிந்து மதிசோர்ந்து
வஞ்சிதனை மீட்டலிலா மானத்தாற் செஞ்சவனை
மக்களிடைக் காதன் மதியாற் றயின்றனனு
மிக்குணர்வு நீங்கான் விழைந்து. (143)

வஞ்சிதனை வல்லரக்கன் வஞ்சனையாய் வந்தடுத்துச்
செஞ்சுருவந் தீண்டத் திகைத்தஞ்சி நஞ்சா
மரக்கியர்கள் சூழ வசோக வனத்திற்
றிருக்கியல வைத்தான் சிறை. (144)

இன்னிலைமா பாதகனு மேழை செயல்சொற்றும்
பொன்னிலைமான் பின்போன புண்ணியனு மன்னிலையைக்
காண்பானச் சீதைகடுத்தேவப் போனதம்பி
மாண்பாநற் செய்கைபுகல் வாம். (145)

ஒருமான் தனிமைதனை யுன்னி யுளத்தாம்
பெருமானைத் தேடிவரல் பேசில் வருநாள்
பரதனல முற்றுவரு பான்மையென வானன்
விரதநல முற்றான் விரைந்து. (146)

தெண்டிரையிற் சேர்கலம்போற் சென்று னெதிர்விரைவின்
புண்டரிகம் பூத்துப் பொலிந்துவரு கொண்டலது
வந்தெனத்தான் வந்த மறைப்பொருளைக் கண்டடுத்தான்
வந்தனித்தான் சிந்தை மலைத்து. (147)

துண்ணென்ற சொல்லடுக்கத் தோகை யவளஞ்சிப்
பெண்ணென்ற பேதைப் பெருமிதத்தா லெண்ணின்ற
சோருமெனச் சோருமனத் தூயோன் றனைத்தம்பி
சேருமெனல் கண்டான் றிகைத்து. (148)

புன்சொ லிடுமரக்கன் பொய்யுரையை மெய்யென்றாள்
வன்சொலிட வந்த மருளேயாம் தன்சொற்
கடந்துவரு மென்முன் கலங்கி யிளையோன்
படர்ந்துவர லென்றான் பரன். (149)

Koviloor Digital Library

என்றுன்னு மன்ன னிணையடிதாழ் தம்பிதனைப்
பொன்றுன்னு விற்கை புரிந்தெடுத்து மின்றுன்னு
நூலடுத்த மார்பி னுவன்றணைத்துக் கேட்டவுடன்
மாலடுத்த தம்பிமொழி வான். (150)

இல்லா நிலத்தி னிசையாத சொல்லதனை
நல்லா ளுனதுரையாய் நாட்டினாள் வல்வா
யரக்கனுரை யென்றவென தாற்றலுரை யென்னா
மிரக்கமுற்றா ளேங்கி யிரிந்து. (151)

ஏகாது நிற்றி யெனிற்றாவத் தாவனென
யாகான முற்றாண் மனமஞ்சிப் போகா
திருக்கி னிறப்பா ளெனவந்தே னென்றான்
இருக்கி னிருக்கு மினன். (152)

சாவாதா ளவ்விடத்திற் சார்ந்திலையா மென்பதுதா
னாவா வலக்கணூறு மன்னவனைக் காவா
நிலத்தினுற்ற வேதமது நீங்கா தெடுக்கப்
புலத்தினுற்றோர் செய்த புகல். (153)

வந்தாய் திறத்தோ வருகுற்ற மின்னிடையாள்
சிந்தா குலத்துரைத்த தீமையதே முந்தை
தடுக்க வொழியாது சார்ந்த வினைதான்
கெடுக்க முயன்றதென்றான் கேட்டு. (154)

பாணிக்க நின்று பயனென்னை பண்மொழியைக்
காணிற் கரக்குங் கடுந்துயரென் றேனுற்று
வந்தவிழி விற்றொடுத்த வாளி யெனவிசையிற்
சந்தமலர்ச் சோலையடுத் தார். (155)

ஓடிவந்தான் சாலை யுவந்தான் சுரிகுழலை
நாடிவந்தான் காணான் நலமென்னும் கூடதனை
மண்டலத்தில் வைத்தவுயிர் மற்றடுத்துக் காண்பரிதாய்க்
கொண்டலத்தி னின்றான் குறித்து. (156)

Koviloor Digital Library

கைத்தசிந்தை வள்ளல் கனக்குழையைக் காணுமை
லுய்த்தடுத்து வேறுபொரு ளொன்றுமிலான் வைத்தசிதி
மண்ணிஞெடும் வாங்கி மறத்தோர் கொளத்திகைத் தாங்
கெண்ணிஞெடு நின்றா னெதிர். (157)

மண்சுழன்ற நின்ற வரைசுழன்ற மாமதியோ
ரெண்சுழன்ற சூழ்ந்த நெறிகடலேழ் விண்சுழன்ற
வேதஞ் சுழன்ற விரிஞ்சன் மதிசுழன்ற
நாதன் மனஞ்சுழன்ற நாள். (158)

கூறு மறத்தைக் குமைக்குமோ கோதுடையார்
சீறுமறத்தைச் சிதைக்குமோ தேறு
நெடுந்தகையா னென்றுலக நேரி லரக்கன்
கொடுந்தொழிலை யெண்ணிநடுங் கும். (159)

நீலமுற்ற மேனி நெடியோன் மனந்திரிய
மூலமுற்ற முன்பனிடை முற்றுமுற்றுங் காலமுற்ற
மெய்ப்பொருள்க ளொன்றிஞென்று மேல்கீழாம் வேலைதனிற்
செப்புவனுந் தம்பி தெரிந்து. (160)

தேராழி கண்டனமாற் றீண்டுதலை யஞ்சிநின்று
பாராழக் கொண்டதுவும் பார்த்தனமா னேரான்
படர்வனத்திற் றூரம் பரியுமுனஞ் சென்று
தொடர்வநத்தி யென்றான் றுதித்து. (161)

ஆமத் தகுதியென வைய னமையமெய்யிற்
தாமக் கணைப்புட்டி ருங்கியே பூமிக்குட்
டேரொன்று தாரி திரிந்தார் சிலையுடைய
காரொன்று கையார் கனன்று. (162)

மண்மே லடுத்த வரைத்தேர்ச் சுவடுபட்டு
விண்மே லடுத்த விதங்கண்டு புண்மேலான்
நாமினித்தான் செய்வதெனை நாடிளையோ யென்றுரைத்தான்
காமனத்தன் சிந்தை கவன்று. (163)

Koviloor Digital Library

தெற்கடுத்துச் சென்றதுபொற் றேரென் பதுதெரிந்தோ
மற்கடுத்த திண்புயத்தாய் வானமது விற்கடுத் தே
செல்வி னெடிதன்று சேரா திடைநின்று
சொல்லி னெடிதாந் துயர். (164)

ஆகுமதே காரியமென் றத்திசையி னொத்தபுகை
ஏகி யிரண்டி னெதிரடுத்தார் மாகவரை
காலெடுத்து வீழ்த்ததெனக் கண்டார் சுருதிநிறை
கோலெடுத்த வீணைக் கொடி. (165)

கண்டு பகைவரொடு காரிகையா டன்பொருட்டின்
அண்டர் தமக்கா மமரென்றார் துண்டமெனும்
வாளிற் கொடிதுணிந்த வண்ண மதுகண்டார்
ஆளித் திறலா ரடுத்து. (166)

நோக்கினா லைய நுவலும் தரத்தினுந்தை
மூக்கினாற் றீர்ந்ததிது மொய்ம்புடையன் தாக்க
நடுவடுத்த தென்னையதோ நாளான் றமியன்
வடிவெடுத்தா டெவ்வைமலை வான். (167)

நன்றடுத்த நாத னடுக்கில் மிடுக்கினனும்
சென்றடுத்துக் கூடல் திறத்தனவாம் வென்றடுத்து
மாமதிக்கு நேர்வதன மங்கைதனை மீட்குமென்றான்
மாமதிக்கு மார்பான் மதித்து. (168)

தொடர்வதுதா னன்மையென்றான் றாயதம்பி காயம்
படர்வதுகா லென்னவந்தார் பாங்காய் மிடல்கொண்ட
வெஞ்சிலைதான் விண்ணிடுவில் வீந்து கிடந்ததெனச்
செஞ்சிலையார் கண்டார் செயிர்த்து (169)

சிலைகிடந்த துற்றடுத்துத் தேவர் கடைந்த
மலைகிடந்த தென்ன மதிக்கின் கலைகிடந்த
காட்சியினா னீதைக் கடித்தொடித்தான் பாரென்றான்
ஆட்சியினான் தம்பிக் கடுத்து. (170)

Koviloor Digital Library

நின்றபினுஞ் சென்றார் நெறியடுத்துச் சூலமொன்று
துன்றுகணைத் தூணி தொகையிரண்டு குன்றாக்
கிடந்த விந்தை கண்டார் கிருதடுத்த புந்தி
மடந்தவிர்ந்தார் கண்டாம் மகார். (171)

மறித்தும் வழிச்சென்றார் வான்வயங்கு சோதி
செறித்துவரு கான்மறையக் சேரப் பறித்து
நிருதர்கோ னெஞ்சி னிகரின்றி வீச
வருகவசங் கண்டார் மதித்து. (172)

கான்மறையக் கால்வயமாக் கண்டார் கவினுடைய
நூன்மறையார் சாரதியை நோக்கினார் உளனோ
டுதிரங் கிடந்த வுலகடுத்த வானிற்
சதுரன் கிடந்துழிவந் தார். (173)

கண்டலங்கு கைத்தலத்தைக் காண விதிர்த்தடுத்தார்
விண்டலத்திற் செல்லரக்கன்வெய்யோன்றன் குண்டலங்கள்
மண்ணிற் கிடந்தொளிரு மாமணியின் சோதிதனைக்
கண்ணிற்கண் டார்கள் கவன்று. (174)

தோளிமைக்கும் பல்கலன்கள் தோன்றுகுண்ட லத்தொகுதி
வாளிமைக்கு மாமுடிகள் மற்றுமுண்டாம் நாளனைத்தும்
தாண்டியநம் தாதை தமிய னடும்பகைவர்
வேண்டியபேர் தம்பியென்றான் வேள். (175)

திருவடுத்த நாயகன்சொற் றேறி யிளையோன்
தருவடுத்த தோள்தலைகள் சாரின் பொருதடுத்துத்
தாதைதனை யிந்நெறிதான் சாரச் செயும்வலியோன்
கோதைபுனை ராவணனா கும். (176)

மட லுடைத்தார்த் தம்பிதனை வள்ளல் மதித்து
மிடலுடைத்தா நாட்டந்தீ வேய்ந்து கடலுடைத்தாம்
நாட்டு குருதி நடுவணிடைக் கண்டடுத்தான்
தாட்டிகனுந் தாதை தனை. (177)

Koviloor Digital Library

துள்ளி யடுத்துத் துணைக்கண்க ணீர்சொரியத்
தள்ளி யுயிர்த்தமலன் தந்தையெனும் வள்ளியன்றன்
மேலடுத்து வீழ்ந்துலைந்தான் வெள்ளிமலை மேல்வீழ்ந்த
நீலடுத்த மாமலையை நேர். (178)

உயிர்த்திலனோர் நாழி யுணர்விலன்கொ லென்றே
யயிர்த்ததம்பி கொண்டெடுத்தா னங்கை புயற்கலந்த
நீர்தெளித்தான் கண்விழித்தான் நேயத் தவர்மனத்திற்
சீர்தெளித்த ஞானச் சிரன். (179)

தந்தாதை யாரைத் தனையர் கொலைநேர்ந்தார்
முந்தா ருளர்முடிந்தான் முன்னொருவன் எந்தாயே
எற்காக்கும் நீயு மிறந்தனையான் கூற்றமென்றான்
விற்காக்குந் தோளான் விரைந்து. (180)

பின்னுறுவ தோராதேன் பேதுறுவேன் பெண்பாலாள்
தன்னுறுவ தீர்ப்பான் றனித்தடுத்தே னுன்னுறவு
தேய்ந்துஞ் செயிர்தீர்த்தாய் செல்வதனாற் றுன்பமென
வாய்ந்துந் தவிரே னடுத்து. (181)

மாண்டே னினியான் மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் விரதமுயிர் போற்றினே னீண்டவுடல்
மன்பிறவி தானு மறம்போ லடுத்ததினிப்
புன்பிறவி வேண்டேன் புலர்ந்து. (182)

மன்றாரம் பற்றுண்ண வென்றாயைச் சான்றோயைக்
கொன்றானு நின்றான் கொலையுண்டாய் வன்றாட்
சிலையேந்தி வாளி சிறந்து சுமந்தேன்
நிலைதீர்ந்த வாழ்வை நினைந்து. (183)

சொல்லுடையா ரென்போலத் தோன்றுவரோ தொல்வினை
இல்லுடையாள் காண விறகுடையாய் நல்லுடையாய் [யேன்
உன்னைப் படையுடையா னோர்நொடியிற் கொன்றகன்றான்
முன்னைப் படையுடையேன் முன். (184)

Koviloor Digital Library

என்று பலபலவு மேற்றி யழுமயங்கும்
தன்றுணையாந் தம்பியொடு தானுமாய்ப் பொன்று
முணர்வு சிறிதாக வுண்முளைப்ப நோக்கும்
நிணமருவு வேலவரை நேர்ந்து. (185)

உற்ற துணரா துயிருலைய வெய்துயிர்ப்பான்
கொற்றவரைக் கண்டான் குளிர்ந்தான்மெய் யிற்ற
விருசிறகு மின்னுயிரு மேழுலகும் பெற்றேன்
வருபழியும் போயதென்றான் மன். (186)

பாக்கியத்தா லின்றென் பயனில் பழியாக்கை
போக்கியுற்றேன் கண்டேன் புனிதரையென் றூக்கிமுற்றும்
தாக்கி யரக்கன் தலைதுமித்த மூக்கதனால்
நோக்கியுச்சி மோக்கு நுவன்று. (187)

வஞ்சகத்தால் வந்த வரவென்ப தென்னுடைய
நெஞ்சகத்தான் முன்னம் நினைத்தாலு மஞ்சொற்
புயலுடைய குந்தளத்தைப் போற்றாது சென்றீர்
செயலுடையீ ரென்றான் தெரிந்து. (188)

என்றா னியம்ப விளையோ னெடுத்தவில்லான்
ஒன்றாலும் போகலின்றி யுற்றுரைத்தான் வன்றாளின்
மாயமான் வந்தமுதல் வந்த செயலதனை
நேயமான் முன்னம் நினைந்து. (189)

அவ்வுரையைக் கேட்ட வமல மனமதனாற்
செவ்வுரையா னான திறல்வேந்த னிவ்வருத்தம்
ஆற்றுதனன் றென்ன வவர்கட் கெடுத்துரைத்தான்
சீற்றமுள சிந்தை தெளிந்து. (190)

அதிசயந்தான் வேறொருவ ராலமைத்த வாமோ
துதிசயந்தா னும்பிறவித் துன்பம் விதிசயந்தா
னென்பதைமேற் கொள்ளாம லேற்ற மதியதனால்
மன்பதைமேல் வெல்வதெனல் மால். (191)

Koviloor Digital Library

தெரிவுற்ற துன்பத்தாற் றேர்ந்துவரு சிந்தை
யெரிவுற் றழுங்க விழுக்காம் விரிவுற்ற
மன்னுலக மெல்லாம் வழங்கினுன் றன்றலைகொய்
யன்னவிதிக் கென்னையரி தாம். (192)

அலக்கணது மின்ப மவையணுகு நாளின்
விலக்குவமென் றுலகுவு மெய்யோ கலக்கமுற்ற
முப்புரத்தை யெய்தவில்லி முன்னுந் தலைக்கலத்தி
னிப்புரத்தி னேற்றதவ மென். (193)

பொங்கிவரு கோளரவு பூத்த விசும்பினுறை
வெங்கதிரை மேல்விழுங்கி மீளுவது மங்கணுல
காயும் வளத்ததிங்க ளாய்ந்தோர் முறைவளரும்
தேயும் வளத்தகென்னை தேர். (194)

அந்தரந்தான் சேருதலு மான்றவவை தீருதலுஞ்
சுந்தரமாந் தோளுடையீர் தொன்மையதே மந்திரமார்
தேவகுரு வாய்மொழியாற் றேவேந் திரனடைந்த
தோவருமோ சொல்லத் துணிந்து. (195)

தடைக்கரிதாய்ச் சார்வலத்தன் சம்பரப்பேர் தாங்கும்
கடைத்தொழில னற்குலிசக் கையான் படைத்தபழி
தன்னையுந்தை தீர்த்தான் தனித்தோள் வலியதனுல்
என்னையுந்தை யாக்கு மினன். (196)

பிள்ளைமொழிக் கிள்ளைதனைப் பேணுத நுஞ்செயலுந்
தள்ளரிய தேவர்துயர் தந்ததுதான் கள்ளப்போர்
வஞ்சகத்தார்ப் போக்கி மருவு முலகளிக்கும்
நெஞ்சகத்தாற் காப்பீர் நினைந்து. (197)

மாமயிலா டன்னை மதிபாதி ராவணன்றுன்.
பூமியொடு பேர்த்தெடுத்துப் போவானை யேமம்
தடுத்தே னரன்வாளாற் றுக்கச் சிறைபோய்ப்
படுத்தே னிதென்றுன் பரிந்து. (198)

Koviloor Digital Library

கூறினவா மாற்றங் குரித்தசெவி கொள்ளுதன்முன்
ஊறினவாங் கண்க ளுதிரந்தீ யேறினவாம்
வண்ண வரப்புருவம் வாயி னிதழ்துடிக்கப்
பண்ணவற்கு வந்ததுகோ பம். (199)

மண்ணுந் திரிய வரைதிரிய மற்றுமுற்று
மெண்ணும் புனல்கா லிரிந்துலைய விண்ணகமும்
மேலைவிரிஞ் சன்திரிய வீரன் பொருளெல்லாம்
சாலவிரிஞ்சான நிலை தான். (200)

குறித்துலவு கோபமதைக் கொள்ளுவதா றென்று
வெறித்துலகு விம்மவரு வேலை பொறிப்படலைச்
செந்தீப் பொடிப்பச் செயிர்த்தான் பிரமனொடு
முந்தீன்ற தந்தையெனு முன். (201)

பெண்டனியாள் பேதைதனைப் பேடி யரக்கனின்று
கொண்டணைய நீயிந்தக் கோளடையக் கண்டசுரர்
எப்பொழிலுந் தீர வெரிப்ப னெனச்சினந்தான்
முப்பொருளுந் தானு முதல். (202)

தாரகைகள் சிந்தத் தரணி கதிர்பிதிரப்
பேரகையும் வானம் பிறங்கெரியா வாருலவு
நீர்கலங்க நின்ற நிலங்கலங்க மற்றெவையுஞ்
சீர்கலங்க நின்றான் சிரித்து. (203)

இக்கணத்தி னேழோடே ழென்னும் பெருமையுல
கக்கணக்கு மெல்லாங் கடிதடர்த்துத் திக்களக்கு
மாணின்ற வண்ட மருவுபொடி யாக்கிலனே
லாணென்ற பேரெதற்கென் றான். (204)

வெஞ்சுடரு மஞ்சடரு மேருவரை சேரவா
வெஞ்சலிலா வாசைநின்ற வெண்கரியு மெஞ்ச
விலக்குவதா ரையன் விசயந் தனையே
இலக்குவனுங் கண்டா னிரிந்து. (205)

Koviloor Digital Library

இவ்வழியாம் வேலை யெருவைக் கரசுரைக்கும்
செவ்வழியாய் நீமுனியல் தேவரெலாந் தெவ்வழியும்
போர்ப்பாகங் கொண்ட புகழ்த்தனுவுன் ஞணிடிக்கு
மார்பபாக க்கொண்டவரென்றாய். (206)

நாட்செய் கமலத்தோ ஞகர் களுமவனுக்
காட்செய்வ ரன்றி யறஞ்செய்யார் வாட்செய்யும்
வல்லமையு முண்டோ வரைநே ருமதுபுய
வில்லமையு மென்றான் விரைந்து. (207)

தெண்டிரைசூழ் பூவிற் செருந ரிடத் தேவல்
பெண்டிரென வாழ்தல்சுரர் பெற்றியன்றோ பண்டிலகை
உண்டிலக நின்ற வொருவன் தருமமுதை
யுண்டிலரே லுண்டோ வுயிர். (208)

வம்பிழைக்குங் கொங்கை மனக்கினிய மானதனால்
வம்பிழைக்கு மிப்பழியை வாய்ந்தடுத்தீ ரம்பிழைக்கும்
வில்விலகுஞ் செங்கையுடை வேளீர் பிழைநமதாம்
தொல்லுலகஞ் செய்பிழையே தோ. (209)

ஆதலினு ளீமுனித லாமோ வருந்ததிநேர்
காதலியைத் தாங்கிக் கருதலரால் வாதையன்றித்
தீர்த்தனல மென்றான் றிருவடியிற் சேர்வரதன்
ஆத்தநல மென்றான றிந்து. (210)

புயனிறத்தா மண்ணலந்தப் புண்ணியன்றன் சொல்லைத்
தயரதத்தார் மன்சொலெனத் தாங்கிச் செயலடுக்கா
வஞ்சகத்துக் கண்டகர்கள் வாழ்வைத் தொலைக்குநலம்
நெஞ்சகத்துக் கொண்டா னிலைத்து. (211)

ஆயபினர் தூயவர வண்ணலவன் சொற்கேட்டுன்
னேயவுரை யன்றி நிகழ்த்தலென்னே மாய
வரக்கனவ னெங்கே யளித்திடென வேந்தன்
கரக்கரிதாய்ச் சென்றான் கதி. (212)

Koviloor Digital Library

சீத மலரவனுந் தேவர்களு மென்பதென்னே
வேத மலரும் விமலவரன் பாதமலர்
ஆக்குந் தவமுடையா னுைதனு லன்றடைந்தான்
காக்கும் பரமனுல கம். (213)

வீடடையும் வேலை விரிஞ்சிமுத லோர்துதிக்க
வாடவர்க்கு நாத னருட்டம்பி வேடைகொளக்
கல்லு மரமுங் கரைந்துருகப் பாரோர்கை
செல்லுஞ் சிரத்திற் சிறந்து. (214)

அறந்தலைமை யாகா வரக்கற் கழிந்தேன்
துறந்தலைகோ சீவன் துறக்கோ பிறந்தலையப்
பெற்றிளைத்தேன் தாதை பிரிந்திறக்க நானிருந்து
பற்றிளைத்தே னென்றான் பரிந்து. (215)

இளையோ னுரைப்பா னிவையெல்லா மென்னும்
வளையாத வென்றி வலத்தா யுளைவுபெற
நின்றாயினை வென்னும் நெருக்கி யரக்கர்தமைக்
கொன்றாயினை யென்றான் குறித்து. (216)

அவ்வழியிற் றம்பிமொழி யாலயர்வு நீங்கியபின்
இவ்வழியி னைதலெண்ணி னேழைமைதான் செவ்வழிசேர்
தந்தைக்குத் தந்தசெயல் சார்ந்து புரிவனெனத்
தந்தைக்குத் தந்தைமதித் தான். (217)

இந்தனந்தான் சந்தகிலை யீட்டத் தொடுமெடுக்கிச்
சிந்திநந்தாப் பூவுஞ் சிறந்தகுசந் தந்தளித்துத்
தீக்கடைந்து சேர்த்தூத் திருந்துவசெய் தான்பெரியோர்
வாக்கடைந்து காக்கும் வலன். (218)

எந்திறன் கைத்துவத்தி னிமந் தனிலேற்றிச்
சாந்திறன் மாமலர்நீர் தந்தளித்துக் காந்தெரியை
மூட்டிறன் செய்கடனை முற்றித் தனதுலகி
லூட்டினன் வள்ளல்நயந்து. (219)

Koviloor Digital Library

கிளிச்சிறைப்பொன் ஞகக் கெழுவு மரைப்பூத்
துளித்தனவாங் கண்ணன் றுயர்த்துக் குளித்தனஞ
மாற்றுதக மாமறையா லள்ளியளித் தானமரர்
போற்றுதக வான்பொருந்து பு. (220)

மீட்டுரைப்ப தென்னே விரிஞ்சன் முதலவளங்
காட்டுமுயி ருண்டு களித்தனவாம் வாட்டமுற்ற
மெய்யா னளிக்கடலான் வேண்டுதந்தை மோக்கமுறக்
கையா லளித்தவுத கம். (221)

பல்வகையாம் வேதப் பலிக்கடன்கள் முற்றிவந்து
வெல்வகையான் சேர்ந்தபின்னர் வேலையுற்ருன் செல்வக்
குலத்துவந்தான் செய்கை குறித்ததனைத் தானும்
நலத்துவந்து செய்வதற்கி னன். (222)

சடாயுவதைப் படலம் முற்றிற்று.

அயோமுகிப் படலம்.

அந்தி யணுகுமெல்லே யவ்வழியை நீங்கியவர்
செந்தீ யமைவரையைச் சேர்ந்தார்க ளிந்திரற்கு
மட்டடங்காப் பேயரக்கர் வந்தடுத்த தென்னவிருள்
விட்டங்கா தாகுமிர வின். (1)

தேனுகவத் தேனருவி சிந்தித் தெருமரல்போற்
கானகமும் கண்ணீராங் கங்குறனின் மானம்
சினத்தை யுகுதாதை சென்ற மரணம்
மனத்தை வருத்தவரு வார். (2)

யாமதனைத் தேற்ரு மனகி சனகியெனும்
மாமகளை நீத்தோ மதிமுகங்கா ஞமலினற்
ருஞே பெருமான் கண் டாமலரயாம் போதுகங்கு
லேஞே குவியாத தே. (3)

Koviloor Digital Library

பெண்ணிற் சிறந்த பெருமாட்டி தன்னைவிட்டு
மண்ணிற் பிறிந்த வருத்தத்தா லெண்ணிவரு
நம்பிகண்ணு மன்றிரவு நாடித் துயிலிலதாற்
றம்பிகண்ணு மொன்றுறா தகைத்து. (4)

வண்டுளருங் கோதை வதன வெழில்வானிற்
கண்டதென வீரற்கோர் காதலுறக் கொண்டு
துதிவிளங்குஞ் சாரல் துடரவரு விண்ணில்
மதிவிளங்கும் வானில் வரைந்து. (5)

களியுடைய மாரன் கரந்துறையுங் கங்குல்
வெளியி னுலகம் விளக்கு மொளிநிலவு
மன்னு மிருட்பிழம்பாம் வஞ்ச விடநாகம்
துன்னுமண்ணல் மேனி சுடும. (6)

மானத்தாங் துன்ப மனமயக்கஞ் செய்யவரு
தேனுற்ற மாலைத் திறல்வீரன் தானும்
படம்பரந்த வல்குற் பணிமொழியை யெண்ணி
மடம்பரந்த தானுன் மதி. (7)

மடித்துவரு வாயன் வயங்கு முயிர்ப்பன்
துடித்துப் பருத்தொடுங்குந் தோளன் பொடித்ததளிர்
வம்பனையும் பூவினுடன் மால்கரியி னுலொடித்த
கொம்பனையா டன்னைமதிக் கும். (8)

வாங்குதனு வல்லமையான் வந்தடுக்கு மென்றிரண்டு
பாங்குநெறி பார்த்தனளோ பாவையெனும் வீங்குபெரு
வேலைத் திரையாய் விசைசேர் தனியுயிர்ப்பான்
சாலத் தளருஞ் சலித்து. (9)

தன்னினைந்தா ளென்றல் தருமோ மிகுவான
மின்னினைந்த போல விளங்கெயிற்று ளின்னிலென்று
தானடுத்த போழ்து தனித்தென்ன வெண்ணினளோ
மானடுத்த கண்ணியெனு மால். (10)

Koviloor Digital Library

நஞ்சுதனைக் கான்றுவரு நாகத்தின் வாயடுத்துத்
துஞ்சுமதி யென்னத் துயருறுவாள் வெஞ்சினங்கொள்
மைத்தனுவான் வஞ்ச மனத்தரக்கற் காற்றும்
லெய்த்தனனென் றுளோ வெனை. (11)

பூண்ட தொருமானம் போக்கரிய காதலதுந்
தூண்ட வுயிரடுத்துத் தோமுறவே மீண்டும்
வெறுப்பவரை யானவில்லும் வேண்டுமோ வென்றான்
றுதிப்பவரை யாண்டருடந் தோன். (12)

வில்லைக்கண் ணேக்கிநகும் வீரப் புயமேருக்
கல்லைக்கண் ணேக்குங் கடைக்காலாஞ் சொல்லைக்கண்
ணேக்கித் துணுக்கமுறு நோன்மையுடை யோர்மனத்தி
ளுக்கித் துதிக்கும் அறன். (13)

கூதிர்தரு வாடையெனுங் கூற்ற மதைநோக்கும்
வேதமுறை வேள்வி விளங்குபொன்ஞுஞ் சீதை
பிறிந்ததர மென்னையெனும் பேராற்றற் கேற்றஞ்
சிறந்தவரன் சிந்தை திகைத்து. (14)

நின்றனையும் பல்லுயிரும் நேரப் புரத்தலுற்றே
னென்றுணையாம் வல்லி யெழிலுடையாள் தன்றுயரைத்
தாங்குந் தகவிலனென் தன்மை யிதுவென்னும்
வாங்குந் தனிவில் வலன். (15)

சேயதளிர் தம்பி திருத்தியதாஞ் சேக்கையதுந்
தீயுமவை தீர்க்கவெனுஞ் சேராவி யோயும்
புழுங்க வழுங்கும் புலரும்வாய் நெஞ்சம்
மழுங்கும் விசன மலிந்து. (16)

பிறிந்துவரு மேதுவதோ பேர்மானந் தானே
தெரிந்ததிலை கண்மலர்கள் சேரப் பொருந்தவரா
தாயிரமாங் கற்பங்க ளானதெனச் சிந்தைசெய்தான்
ஆயிரமாம் நாமமுடை யான். (17)

Koviloor Digital Library

வென்றிவிற்கைப் பொன்னிளையோய் மேலடுத்த நாளனைத்து
மொன்றிநிற்க நின்ற வொருநாளே யின்றநெடு
நாளடுத்து வந்தவென நள்ளிரவு தள்ளலின்றி
நீளடுத்தற் கென்னும் நிபம். (18)

நீண்டுவரு மாலைமதி நேருரைக்கும் வீரவரன்
மீண்டும் மெலிந்தனையாய் வெள்குவாய் பூண்டவிழை
வாண்முகத்தைப் போல மதித்து விளங்கினையாம்
நாண்முகத்தைப் போற்றாய் நலிந்து. (19)

நீணிலவி னேர்ந்தவிசை நேர்ந்துவரு தன்குலத்துக்
காணியென வந்தபழி யாலருக்கன் நாணினனு
நாடுகடந் தோட நயந்தனனோ தம்பியென்றான்
கோடுகடற் பள்ளிவிட்ட கோ. (20)

சுட்டகங்கு னீண்டதெனச் சோர்கின்றான் பேர்கொண்டு
முட்டமைந்த தாளருணன் முன்னமொடு கிட்டிக்
கதிரோ னையுமரக்கன் கட்டிவைத்தா னென்றான்
துதியோங்கு நங்கையடுத் து. (21)

துடியவிருஞ் சீரிடையாள் தோன்றலளா மென்னிற்
கடிய விருட் கங்குலது கற்பம் முடியவரின்
மூரிநீர் மானிலந்தான் முற்று மெனநினைந்தான்
சீரினோர் மாமனத்தாந் தே. (22)

திறத்திற் புரிபெருமை சேர்தவத்தோர் சேர
வொறுத்துப் புவியுயிரை யுண்ணும் மறத்தினர்கள்
வாண்மலிந்த வீரம் மலியு மெனிலறத்தாம்
தோண்மலிந்த வீரமெனைத் து. (23)

தேனின்ற நாணார் சிலையான் சிறந்தமலர்ப்
பூநின்ற சாயகத்தான் பொற்றுணையை மேனின்ற
தொர்கிலனு மெய்ய வுழைத்தான் திருமனது.
தேர்கிலனு நின்று திகைத்து. (24)

Koviloor Digital Library

யோகத் தொருமுதலா யுற்றவரன் சினத்தாற்
போகுற்ற மேனி புழுங்கினுன் ஆகும்
கெழுந்தகைக்கு வன்மை கிடைத்து முனங்கொள்
பழந்துயர்க்கு நின்றான் பரிந்து. (25)

நீல நிறத்தா னிணைப்பி னிடைநேர்ந்து
சூல நிறத்திற் றளைத்தபோன் மூலமலர்
முன்னவனை முற்றுவிக்கு மொய்த்த பெருங்கால
மன்னவனை கங்குல்முடிந் தாம். (26)

வெள்ளத்தாம் பாற்கடலின் வேண்டுந் துயில்வேறுத்துக்
கள்ளூற்றுங் கூந்தலவள் கற்பலையி னுள்ளம்
படிவாற்குப் புட்சோலை பண்பிற் சிலம்பல்
விடிவாக்கு முள்ளம் விழைந்து. (27)

மயிலும் பெடையு மருவிவர மற்றும்
பயிலும் பெடையொடுறல் பார்த்தான் குயிலனைய
சொல்லுடையா ளில்லாத் துயரத் தழுந்தினுன்
வில்லுடையான் மேனி மெலிந்து. (28)

முடிநாட்டுங் கோட்டுதய முற்றுவரு சூரன்
படிநாட்டும் வீரற்குப் பண்பாய்க் கொடிநாட்டும்
செய்யதிரு வில்லையெனச் செங்கமலங் காட்டவுடன்
வெய்யகரங் கொண்டான் விழைந்து. (29)

பொழிலதனை நோக்கும் பொழிலடுத்த புள்ளி
னெழிலதனை நோக்கி யிசைக்குந் தொழிலடர்த்த
வாள்கழித்த கண்ணாள் வனப்படுத்துக் கண்டுவரு
நாள்கழித்தான் வள்ளல் நலிந்து. (30)

அன்னதொரு காலை யடியிற் பணிந்திளையோன்
பொன்னவளை நாடல் புகழென்றான் அன்னவரும்
சென்றெடுத்துத் தேடினர் தீயோ னிருக்குமிடம்
வென்றெடுத்த வில்லார் விரைந்து. (31)

Koviloor Digital Library

ஆசை சுமந்த வரவக் கிரியன்ஞர்
பாசிலையார் கானம் பலபின்ஞக் காசுகொண்ட
குன்ருன தாறு குறித்தடுத்தார் யோசனைதான்
சென்ருெளான் பானிரட்டி தேர்ந்து. (32)

மட்படிசெய் மாதவத்தின் வந்தடுத்த மாமதுரக்
கட்படியுங் கோதைதனைக் காணுதா ருட்படியுங்
கோபத்தார் வீரர் குளிர்புட் படிசோலை
சாபத்தா ரத்தரடுத் தார். (33)

ஆரியர்கள் சிந்தை யலக்கண் டமையறிந்தான்
நாரியரை நாமடுத்து நாடுதுமென் ருேர்மையுடன்
பொங்குலகந் தேடிப் பொருண்மேரு தேடிவரத்
தங்குகதிர் மீளமறைந் தான். (34)

அஞ்சனந்தா னெங்கு மடுத்ததென யாவர்களு
நெஞ்சனைந்து சொல்லா நெறியுடைத்தாய் விஞ்சத்
தெருண்டறிவி லாதமடர் சிந்தை தமைப்போல்
இருண்டறமை காட்டு மிருள். (35)

இளக்கமிலா வின்சொ லியைந்தனவாம் பூவை
கிளிக்கறையுஞ் சோலைதனைக் கிட்டி யொளிக்கறையார்
மண்டலத்தை நேர மருவும் பளிக்கறையைத்
தண்டலைக்கண் கண்டடுத்தார் தாம். (36)

அவ்விடையிற் சேர்ந்த வனக னருட்கடலான்
வெவ்விடையிற் சேர்ந்ததம்பி வீரவர விவ்விடையே
நாடி விரைந்தடுத்து நன்னீர் கொணர்கென்ருன்
தேடி விரைந்தான் தெரிந்து. (37)

எங்கணுமே நாடி யிடையடுத்து நீர்காணுன்
சிங்கமென வோடித் திரிவானை யங்கு
வனத்தடுத்த யோமுகியாம் வல்லரக்கி கண்டாள்
சினத்தடுத்துச் செல்லா டிகைத்து. (38)

Koviloor Digital Library

நன்மதியோர் போற்று நயமிகுந்த மந்திரத்தாஞ்
சொன்மதியா வல்லரவிற் றேன்றவாள் மன்மதத்தாம்
தன்மதன்றான் வெம்மை தணிந்தா ளணிந்தவெழில்
மன்மதன்று னென்றுண் மதித்து. (39)

அழிந்துவரு சிந்தை யரக்கி யலக்கண்
ணெழுந்துவரு காத லியைந்து புழுங்குமென்னேய்
தீர வணைப்பதன்றிச் செல்லுமோ வேறுமனம்
மாரனைக்கண் டென்றுள் மகிழ்ந்து. (40)

இரந்தனனு வெய்துமெனை யேற்றடையா னென்னிற்
கரந்தனனுக் கொண்டு கடந்தென் முரஞ்சதனில்
மேவிநய மானமத வேளைப் புணர்வலென்றுள்
தீவினையை மானுமவள் தேர்ந்து. (41)

உயிர்ப்பி னெருப்புமிழ்வா ளோங்கியெரி கண்ணு
ளெயிற்றின் மதமா வெடுத்துண் வயிற்றினெடு
மாசுணத்தை வீசி வரிந்த பெருந்தனத்தாள்
ஏசுணத்தா மேற்று ளதிர. (42)

பற்றியரி யாளிமலைப் பாம்பி னசைத்தெடுத்துத்
தெற்றுவரு பாதச் சிலம்புடையா ளிற்றுகவே
யாவுமுன மொன்று யடுத்து வருமுன்னுளத்
தாவுமினன் போலுமுகத் தாள். (43)

ஆழி வரக்க வடுத்து வருபெரிய
மூழை வடித்தபில மொய்வாயாள் கூழை
புரத்துவிரி கொண்டு பொலிந்துவரு கொட்பாற்
றிரத்துநெருப் பொத்தாள் செறிந்து. (44)

தடிதடவுங் கையாள் தடத்தபெருங் காலாள்
நெடிதடரு மான நிணத்தூண் படிதடவிப்
பாவ மடுக்கும் பருத்த கடிதடத்தாள்
தாவமடுக் குங்குரலா டான். (45)

Koviloor Digital Library

இவைஇறையா மென்ன வெரித்து விழிப்பாள்
சுவைசெறியு மூனெயிற்றாள் தோன்றுங் குவைகுலைய
மாகடலுந் தாங்குவிய வந்தலைப்பாள் பூமியெனுந்
தோகையடல் நாணநடந் து. (46)

நீளரவத் தாஞ்சரியை நேராக் கரத்தணிந்தா
ளாளரவப் புல்லாரத் தாந்தோளாள் ஆளரியைத்
தாலிசெயுஞ் சீராள் தடுப்பரிய கோளரியே
மாலிசையுங் குண்டலமா மால். (47)

நின்றனளா மாசை நிறைந்து கலுழ்கண்ணாள்
குன்றிநிக ராகக் குளிர்விழிப்பாண் மின்றிரிந்த
தென்ன வெயிற்றி னெழில்விளக்காற் கண்டனனு
மன்னவிரு டன்னின் மதித்து. (48)

பண்டடுத்து நாசி பரிபட்டுச் சிந்தைநொந்த
திண்டிறத்தாள் தாடைகைபோற் றீவிழியாள் கண்டகராம்
வல்லரக்கர் தொல்குலத்தின் வந்த கொடியளென்று
னல்லரக்குங் காந்தியுடை யான். (49)

பாவியடு மிவ்வரக்கி பண்பின்றி நம்மிடையே
மேவியதென் னென்று மிகுசினத்தான் மாவியலும்
கானுரைவா யிவ்விருளிற் கண்டுவந்தா யாவளடி
தானுரையா யென்றான் தடுத்து. (50)

பேசினு னங்கவளும் பேசவரு நாணடையாள்
தேசினன் தேத்தடுத்த சிந்தையாள் நேசமிலா
வன்பார நெஞ்செனினும் வள்ளலுனைத் தேடிவந்த
அன்பார யோமுகியென் பாள். (51)

பின்னு முரைப்பாள் பிறங்கு மெழில் வீர
முன்னொருத்தர் சேரா முலையோடும் பொன்னின்
மணித்தடங்காண் மார்பை மருவித்தா வென்றாள்
கணித்தடங்கா வின்பக் களி. (52)

Koyiloor Digital Library

ஆறியதோர் சிந்தையவ ளன்ன துரைசெய்யச்
சீறியதோர் கோளரிகண் சேர்ந்துரைப்பான் மாறிலவாம்
வார்கணையு மிவ்வுரைசொல் வாயைக் கிழிக்குமென்ருன்
சீர்கணையான் சிந்தை செறுத்து. (53)

மற்றவன்ருன் சொல்ல மயங்கு மனதுடையாள்
செற்றமிலாள் கைத்துணைதான் சென்னிவைத்தாள் கொற்றவனீ
என்னைத் தடிதற் கிசைந்தனையேல் யான்புரிந்த
நன்னர்த் தவமென் றனள். (54)

வெங்கதந்தா னில்லாள் விளம்புவாள் பின்னுமைய
விங்கதந்தாழ் தண்ணீர்க் கியைந்தடுத்தா யங்கையணைத்
தஞ்சலைநீ யென்றுரைக்கி ளுகாயக் கங்கையரல்
மிஞ்சலையா மென்ருள் விழைந்து. (55)

சுமித்திரைசே யன்னவடன் சொல்லதனைக் கேட்டுக்
கமித்திலனு நின்னுசி காதுந் துமித்திடுமுன்
போவிலகி யென்ருன் புரிவுடனே யன்னவளுந்
தாவிலகத் தானையடுத் தாள். (56)

எடுத்தனனு மேகி யெதிர்ந்தென் முழையி
னடைத்தனகன் வெம்மை யகற்றி யுடற்படுத்தி
மாலுடனே கூடி மகிழ்வே னெனமதித்துக்
காலுடனே கூடினளக் கா. (57)

மோகனமா மந்திரத்தை முந்தி முயன்றடுத்து
மாகமலை மேனியனை வவ்வினு ளேகியலை
யும்பருற்ற விந்துவுட னேங்கிவரு மேகமென
வம்பரத்தி னுற்றி னடுத்து. (58)

மந்தரந்தான் வேலைதனில் வந்ததுவும் வானமதி
லிந்திரன்ரு னூர்பிடியா மென்னவுற்ருள் வெந்திறல்சேர்
வேல்கொண்டு சூரையடு வீரனு ரும்பிடியா
நீல்கொண்ட தோகை நிகர்த்து. (59)

Koviloor Digital Library

ஆங்ககலத் தோடகரத் தாகி யடங்கிவரு
பூங்கழலான் மீளி பொலிந்திருத்தல் வீங்குசின
மாமதத்த யானையுரி வார்ந்த வுருத்திரனைத்
தாமதிக்க லான தகைத்து. (60)

ஏகினளா மிப்படியே யின்னவளு மன்னசெயல்
வேகமொடு நீர்தேடி மேலடுத்த பாகமலி
துப்புடைய மால்வரைதான் தோன்றலனு மென்றுனைந்தான்
வெப்புடைய வீரன் விரைந்து. (61)

வெய்தாகுங் கானில் விழைந்தடுத்து மேவருநீ
ரைதா தலினோ வயலொன்றோ வைதாவும்
வேலுடைய தம்பி விரைந்தடுக்கா தென்னையென்றான்
நீலுடைய நம்பி நினைந்து. (62)

நீர்கொண்ட நேயமொடு நேர்வா யெனவணைந்த
தார்கொண்ட வீரனிவண் சாராதென் வார்கொண்ட [தோ
கொங்கைதனைக் கொண்டார் கொடும்போரென் றெண்ணுவ
விங்கிதனை யென்றா னிறை. (63)

அஞ்சொற் கிளியா மணங்கை முனமெடுத்து
வஞ்சித்த வல்லரக்கன் வவ்வினனோ நஞ்சிற்
கொடியா னடலை குறிக்கப் படுக்கும்
படியான வோவென்னும் பார்த்து. (64)

வரிவிற்கை யென்னுயிர்தான் வந்திலனே யன்னான்
தருசொற்கை கொள்ளாதேன் றையல் பிரிவுற்ற
தென்றெடுத்தென் சோர்வா விரிந்துதான் துஞ்சினனோ
வென்றெடுத்து நைந்தா னிறை. (65)

உண்டாகுங் காரிருளி னுற்றடுத்துத் தேடவெனிற்
கண்டா னுனையன்றிக் கண்டிலனாற் புண்டானும்
நெஞ்சடுத்து நின்றேன் நிலையே னினியென்றான்
மஞ்சடுத்த குன்றான் வரைந்து. (66)

Koviloor Digital Library

தள்ளா வினையேன் தனியா ருயிராக
வுள்ளா யெனையு மொளித்தனையோ பிள்ளாய்
பிரியாய் பிழைசெய்தாய் பேருலகி லென்றான்
பெரியா ருளத்தாம் பிரான். (67)

பேரா விடரடுத்தாற் பேர்க்கவல்லாய் நீயேதான்
தீரா விடர்கொடுத்தாய் தீர்ப்பதெவர் வீரா
வெனவெறுத்தா யென்றா னிகலுலகை வென்று
தனைவெறுத்தார்த் தாங்குந் தவன். (68)

என்னத்த னென்றாய ரேற்ற பொலங்குழையார்
பொன்னைப் பிரிந்துமுயிர் போகாதேன் உன்னைப்
பிரியாத பெற்றியென்றான் பேராண்மை கொண்டோன்
தரியாத சிந்தை தவித்து. (69)

பொற்றோ டிவர்கின்ற பொன்னவளைத் தேடிவரல்
சற்றோ தியக்கந் தமியேற்கு நிற்றேடிச்
சிந்தா குலஞ்சேரச் செய்யே லெனையக்க
வந்தா குலந்தரலா மா. (70)

இன்றா மிறப்பே யெமது தமரானோர்
பொன்றா தொழியார் புகலுளரோ வொன்றாக
வுன்கிளைக்குஞ் செம்மை யொடுக்கு முபாயமென்றான்
கொன்கிளைக்கும் வில்லான் குறித்து. (71)

மாந்தாதா வேந்தர்முதல் மன்னர் வருவழியில்
வேந்தாத நீர்ந்தபின்னர் மெய்யுறவோர் சேர்ந்தார்
மொழியுற்ற வெல்லா முனிந்தெற் றொடர்ந்தாய்
பழியுற்ற தென்றான் பரிந்து. (72)

என்னா வுரையா வெழுவான் விழுமிருக்கு
முன்னா வுணர்வோயு மொன்றலவா மின்னா
வடைந்தான் சிறந்த வருட்கடலா மையன்
மடந்தா னறியார் மனன். (73)

Koviloor Digital Library.

நாடும் பலசூழ னன்றடுத்து மண்டலத்தி
னேடும் பலதரங்கூ யுற்றழைக்கும் வாடுமிட
ரொன்றோ வுயிரோயு முத்தமர்க ணத்துவர
னன்றோ வுதலறிந்தா ரார். (74)

கமையாள் சனகியுடன் காத்தளித்த தம்பி
யமையாத வாழ்வுடைய ஞனன் சுமையாக
நானிருந்தே னென்ன நலமடைவே னென்றுனைந்தான்
வானிருந்தார் மன்னும் வலன். (75)

அறப்பா லுளதே லவனெனக்கா முன்னுப்
பிறப்பா லுளதெனினும் பெற்றி மறப்பாலாம்
வாள்கொண்டேன் மன்னுயிரை வாங்குவே னென்றடுத்துக்
கோள்கொண்டு சிந்தைமதிக் கும். (76)

பேர்ந்த னெடுமாயை பின்னுக வன்னவளை
யீர்ந்தா னெடுநாசி யேற்றிளையோன் சோர்ந்தா
ளிடுபூச றன்னை யெடுத்தான் செவியிற்
கடுபூசும் வாளிகொண்டான் கை. (77)

கானமதி லரக்கர் காணுஞ் சமரோசை
யானதெனக் காணு மறிவனடக் கான
முரலவளி சேர்கூந்தல் மொய்ம்புடைய பெண்பால்
குரலவளி ராக்கதியா கும். (78)

அங்கிப் படையதனை யக்கணத்தி னற்புதனும்
செங்கைப் படத்தான் றிரித்தவெல்லை பொங்கிருடா
னப்புறத்தி ஞழலக மான்றளவிற் கங்குலதுஞ்
செப்புரத்த நற்பகலாந் தேர்ந்து. (79)

நெடிய வரைபொடியா நீங்க மரனு
மொடிய நிலனு முலையும் படியடுத்த
வெங்காலின் மும்மை விசையடுத்துச் சென்றனனுந்
தங்காலின் மன்னன் றனித்து. (80)

Koviloor Digital Library

உடனு முலகினிடை யூழி யுதிக்குங்
கடனுங் கடலடைந்த காட்சித் திடமார்
பெருந்துணையா முன்னவனைப் பின்னவன்றா னோக்கி
வருந்துணையா மென்றான் மதித்து. (81)

வந்தடுத்தே னின்னடியேன் வாழியா யாழிகொண்ட
கந்தடுத்த தோளாய் கலங்கலெனக் கொந்தடுத்த
சந்தத் தளிர்புரையுந் தாளடைந்தான் கோளடைந்து
சிந்தித்த கண்சேந் தென. (82)

கண்ணீர்மை கொண்டு கரைந்தான் விரைந்தடுத்துப்
பண்ணீர்மை கொண்ட பரந்தாமன் தெண்ணீர்மைத்
தம்பியுளான் றன்பிரியத் தாங்குமோ சோகமுற்றான்
வெம்பியுளம் விம்மி மெலிந்து. (83)

தழுவியணைத் தானுவந்தான் தாரைக் கண்ணீராற்
கழுவியணைத் தான்கனகக் காயம் வழுவினையா
மென்றேங்கி னேனென்றா னேற்ற சிலையடுத்த
குன்றேங்குந் தோளான் குறித்து. (84)

அங்கடுத்த தென்னை யறிய வுரையென்னக்
கொங்கடுத்த தார்வீரன் கூறினான் மங்கடுத்த
வின்னலொன்று நல்லுவகை யேற்றா னமரர்புகழ்
மன்னவன்றன் மைந்தன் மதித்து. (85)

ஆயுங் கடலகத்தி னம்பிவரு மாலுமிதான்
பாயுந் திரையாற் பரிந்தென்னும் தீயவினைச்
சென்மத்தால் வந்த திறலோர் துயரடைதல்
கன்மத்தா லென்றான் கணித்து. (86)

மூன்ற தெனவுலக முற்றும் வரவீரர்
என்ற பகையா யெதிர்ந்திடினுந் தோன்றுபுகழ்
எம்பிதுணை யேற்றிருக்க வென்னுங் கடல்கடக்க
வம்பிதுணை யேற்றதென வாம். (87)

Koviloor Digital Library

பிரிபவர்க ளெல்லாம் பிரிக விடர்தாம்
வருபவைக ளெல்லாம் வருகச் செருவலிசேர்
வீரயின்றே யோயுமன்றி மேலென் புரியுமென்றான்
பாரயின்ற வாயான் பரிந்து. (88)

வன்றொழிலார் வீர வலிய வரக்கிதனை
வென்றொழித்தே னென்ற விதமென்னை புன்றொழிலாள்
கூக்குரற்கா லன்னவளைக் கொன்றிலையென்செய்ததென்றான்
தாக்குரற்கால் யானையளித் தான். (89)

மூக்குஞ் செவிநகிலு மூன்றுந் தடிந்தடர்த்து
நீக்கு மளவி னெடிதரக்கி யேக்கத்
தரத்தி னொலியென்றான் சந்ததந்தாள் போற்றும்
வரத்தி னிளையோன் மதித்து. (90)

தொல்விருளிற் கொல்லத் தொடர்ந்தா டனையடுத்துங்
கொல்லலையாய் நாசி குறைத்துவிட்டாய் வல்லை
மனுமுதலா னை மரபுடையோ யென்றான்
தனுமுதலா னைதரத் தான். (91)

பேரறிய துன்பம் பெயர்ந்துளோ னென்னவரு
வீரனொடு தம்பி விடிதலுற்று வாருணமாம்
மந்திரத்தா லாகிவரு வானநீ ருண்டடுத்தார்
கந்தரத்தா மன்மலையைக் கண்டு. (92)

கல்லகன்ற வெள்ளிடையார் கான மதினுள்ள
பல்லவம்பூ வான்விரித்த பாயறனின் எல்லையிலாத்
துன்புற் றடைந்தான் றுதிக்கு மிளையவரன்
அன்புற் றடிவருட வாய்ந்து. (93)

மயிலாள் பிரிய மனமடுத்த நோயால்
அயிலாதா னென்று மமலன் துயிலாதா
னென்பதனைச் சொல்லற் கெளிதோ வுயிருயிர்ப்பி
னன்பதனு லாகுறமூ சல். (94)

Koviloor Digital Library

மானே வவண்மெய் மறக்கலா வல்லமையாற
தானே வரக்கர் தருமாயத் தானே
திருவென்று காணாந் தெரிவை தெரியு
முருவன்றிக் காணுனென் றும். (95)

சேயரிக்கண் கற்புடைமைச் செல்வி திருவடுத்து
நேயமொத்துக் காணு நிலைமையினுற் றேயமுற்றும்
நேரு முடன்றழுவ நீங்கு மருங்குலெனப்
பேரு முடலும் பெயர்ந்து. (96)

புண்டரிக மாமலரைப் போலுந் திருமுகத்தாள்
தொண்டையமு துண்டோன் றுயர்ந்துரைக்கு மண்டும்
புயலொன்று கூந்தலாள் போற்ரு து கண்கள்
துயிலின்றிச் சொப்பனமே தோ. (97)

மண்ணுலகும் வானினொடு மற்றை யொருமூன்று
மெண்ணுவதிற் பேரிடர்வந் தெய்தியே தண்ணும்
கருங்குழலாள் சானகியாள் கண்ணி னெடிதோ
மருங்குழலுங் கங்குலென்ருன் மன். (98)

அப்புடைய மீனலம்பு மார்கலியிற் றேன்றிமிக
வுப்புடைய விந்துவெனு மூழித்தீ வெப்பார்
விரிகதிராற் கொப்புளங்கள் மெய்யிற் பொடித்த
பரிசுறுமீ யென்ருன் பரன். (99)

இன்னபன்னி யீடழிந்து மேற்ற பெரும்புகழான்
மன்னவர்கள் மன்னன் மதிமயங்க வன்னதுகண்
டல்கிஞ னென்ன வடுத்தான் கதிரவனும்
மல்கினன் பேரிருளே மாய்த்து. (100)

அயோமுகிப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

கவந்தப் படலம்.

நிலம்பொறைதா னில்லென்று நேரடுத்த கற்பி
னலம்பொறைகூர் நன்மயிலை நாடிப் புலம்பும்
பறவைகளு மென்னப் பரிந்துதயந் தன்னி
லறவர்களு மானு ரதர். (1)

ஐம்பத்தென் யோசனைதா னுனு ரடவிதனிற்
செம்பொற் கதிரடுத்தான் சேருச்ச மம்புற்ற
வில்லமையுங் கையார் விரைந்தார் கவந்தனட
வல்லமையாற் சேரும் வனம். (2)

எறுப்பினங்கள் யானைமுத லெண்ணற் கரிய
வுறுப்பிணங்கு மெல்லா வுயிரும் வெறுப்பினங்கு
நோக்கினவாய்ச் சென்ற நுவலும் வலையினிடை
யாக்கினவா யான வறிந்தார். (3)

மரபு நிறுத்தும் வழியறியா மன்ன
னுரனில்லா நாட்டுயிரை யொத்தே வெருவி
மயங்குவன வாகி வருமுயிர்க ளோடித்
தயங்குவன நோக்கியடுத் தார். (4)

மால்வரைக டாமுருண்டு வந்த தெனமரமுங்
கால்பரந்து கான்யாறு காணவரு மேலாந்
திசையடுத்த மேல்வெளிகள் சேர்ந்து கரப்ப
மிசையடுத்த மேகம் விழும். (5)

நாற்றிசையுஞ் சூழும் நரலை யிறுதியுறக்
காற்றிசையுஞ் சேர்ந்துலகு கால்பரந்தே யேற்றிசைய
வந்திடுங்கு கின்றனபோல் மாதிசைகள் சுற்றிமருள்
தந்திடுங்கை யுள்ளினடுத் தார். (6)

Koviloor Digital Library

தேமொழியாள் சீதை திறத்தரக்கர் சேனைதிரண்
டேமுறவந் தென்றுவகை யெய்தினர் நேமிவரை
வந்துமதி தொட்ட மதிலாக வந்தகையாம்
அந்தமதிற் குள்ளா ரடுத்து. (7)

இளவறனை நோக்கி யிராம னுரைப்பான்
களவுசெய்யி ராவணனூர் காணும் அளவையதா
மீதறிதி யைய வினித்துன்பங் கீண்டதென
முதறிஞன் சொன்னன் முனிந்து. (8)

முற்றி வரு மரக்கர் மோதிவரு தானையெனில்
எற்று முரசொலிசங் கேந்துமிசை பெற்றிலதா
மாதலினல் வேறு யடுக்கு மெனவுரைத்தான்
காதலினன் தம்பி கனன்று. (9)

தெள்ளமுதஞ் சேரவரத் தேவர்முனம் வாங்கும்
வெள்ளெயிற்ற நாகமதோ வேறகியோ தள்ளரிய
வாலுந் தலையும் வளைத்துள் ளுறக்கவர்வ
கோலியெனச் சொற்றான் குறித்து. (10)

என்று விளம்பு மிளவல் மொழிகேட்டு
நன்று நினைந்து நடந்தவர்கள் ஒன்றிரண்டு
யோசனையுட் சென்று ருரியவர்க டாமலைபோல்
ஏசுங் கவந்த னெதிர். (11)

வெயிற்சேர் சுடரிரண்டை மேருவரை தன்னிற்
குயிற்றியவாய்க் கண்கள் கொதிக்கு மெயிற்றினிடை
பாழ்வயிற்றி னுக்கும் பருவாய்த் திறமறிந்தா
லாழ்கடற்கு நேரென்ன லாம். (12)

ஈண்டுபுல வோரவுண ரிந்துவத னைத்தறியாத்
தீண்டு நெடியமலைத் தெய்வமத்தைப் பூண்ட
வடகிமிர்த்து வாங்கலினல் வந்து கிடந்து.
புடைகிமிர்த்த கையினையொப் பும். (13)

Koviloor Digital Library

கொல்லன் றுருத்திக் கொடுந்தூம் பெனக்கடுமை
யொல்லுங் கனல்மூக்கை யுற்றுடையான் ஒல்லை
பகைத்த கடலைப் பருகு மெரியின்
நகைத்த சிகைநாவி ஞன். (14)

புரண்டிடையிற் பாம்புவரப் புக்கு வெருவி
யரண்டனையே நாடி யருவி வரைமுழைசேர்
சந்திரனைக் கூறிரண்டாத் தாக்கிக் கடைவைத்தா
மந்திரனை யொத்தவெயிற் ருன். (15)

வெய்ய மலையரவு வீழ்ந்துறங்க வாழ்ந்துவரு
செய்யமலைக் கந்தரம்போற் சேர்செவியன் பொய்யை
விரகிற் புரிவோர் விரைந்தடுத்து வாழும்
நரகிற் செறிவயிற்றி ஞன். (16)

முற்றுமுயி ரெல்லா முருங்கவே வாரித்தன்
பற்றுகரத் தான்பிணைத்த பண்ணையது தூற்றிப்
புகுந்துவரு தோற்றம் புதியவெமன் வாயில்
நகுந்திறலைக் கொள்வாயி ஞன். (17)

ஓலக் கடன்முழக்க முற்றடுத்த வோதையினன்
ஆலக் கடுவிருண்ட வாக்கையா னிலுறுமால்
கொற்றத் திகிரிதலை கொள்கால நேமியென
வற்றகவந் தக்காட்சி யான். (18)

தாக்கிவரு காலெரியத் தன்னுங் கொடுமுடியை
நீக்கிவரு மேருவென நிற்பவனை நோக்கினர்
தன்றுணையா நின்ற தரத்தா ரறத்தினர்க்கு
மன்றுணையா நின்ற வரர். (19)

நீரா று மண்டு நெடுங்கடல்போ னேமிகொண்ட
பாராம் பகுவாயைப் பார்த்தனர்க ணேராகிக்
காயு மரக்கர் கடிமதில்சூ ழூர்புகற்கு
வாயிலிதோ வென்ருர் மதித்து. (20)

Koviloor Digital Library

அவ்வழியிற் றம்பி யமர்ந்ததனை நோக்கியடு
வெவ்வழிசேர் பூதமது வில்வல்லாய் வவ்வியதன்
கையால் வளைத்துக் கவர்ந்துயிரை வாய்ப்பெய்யும்
மெய்யாகு மென்றான் விளித்து. (21)

பாரிடமே யீது பரவையலை சுற்றிவரு
பாரிடத்தை மூடிப் பரந்தமெய்யாஞ் சீரிடமாம்
பாரிடத்தைச் சூழ்ந்து பரவிவரு கையுடைத்தாம்
பாரிடந்த மாவனைய பார். (22)

தோகை பிரிந்திரிந்தாள் துஞ்சினன் தந்தைவரன்
வேகும் பழிசுமக்க வெள்கினேன் ஆகலினால்
யானிதனுக் காவ னடுத் தே குதியென்றான்
ஞானிதனக் காகு நலன். (23)

ஈன்றோ ரிடரடைய வெம்பி துயரமுறச்
சான்றோர் துயர்பழிக்குஞ் சால்புடைத்தாய்த் தோன்றலினு
மென்னுயிரைப் போக்க லினிதென்றான் றன்னுயிராய்
மன்னுயிரைக் காக்கும் வரன். (24)

இல்லறத்துக் கேற்ற வியல்புடையாள் பாவியராம்
வல்லரக்கர் தம்மனையின் மாழ்கிரிற்க வில்லுடையேன்
தூணிகொண்ட தோளுடனே தொன்மிதிலை வேந்தனிடை
நாணமின்றிச் செல்வதினென் னும். (25)

தளையவிழுங் கோதைதனைத் தாங்கலான் முற்று
மிளையோ னளிக்க விருந்தா னுளனென்னப்
பேரா னதினும் பெரிதுவர வானடைதல்
சீரான தென்றான் திகைத்து. (26)

ஆண்டா னுரைப்ப வமல விளையோனன்
மீண்டான பின்னர் விரிந்ததிடர் மூண்டாகு
முன்னே யுயிரை முடியா திருந்திடிற்றான்
என்னே புகழா மெனக்கு. (27)

Koviloor Digital Library

மானடுத்த கண்ணவளை மன்னுந் தமையனொடு
கானடுத்துக் கண்ணுறங்கான் காத்தவன்றான் கோனடுத்த
தன்னவர்க ளின்றித் தனிவந்தா னென்றுரைக்கின்
என்னவள மாகு மிசை. (28)

நேரிசையுங் கானமது நேரவரு நாளிற்
பேரிசையா ளற்கழிவு பேணுமெனில் சீரிசைய
முன்னெடுத்துப் பொன்றென்ற மோயுரையை நாடிவந்தேன்
என்னடுத்துச் செய்வே னினி. (29)

ஓதுங்கால் பல்பொருளு முற்றடுத்து நீங்காதாய்
வேதங்காணாதவற்கும் வீவுண்டோ மாதங்கம்
தின்றுவன வாசமகிற் சேர்பூதங் கொல்லவுண்டோ
பொன்றுவன வாகும் பொருள். (30)

கேட்டாருங் கொள்ளார் கிளர்போ ரடுத்தடுத்துத்
தோட்டாருங் கோதை துவளாமல் மீட்டதென்று
பூண்டவிசை கொள்ளாது போகினு ரென்றுரைக்கின்
மாண்டதினு முண்டாம் வசை. (31)

விடத்தகனற் பூதமது மீளாது நானே
தடத்தகையும் வாயுந் தடிந்து படித்தலத்தின்
வீழ்த்துவேன் றுன்பம் விடுகவெனச் சொற்றடுத்தான்
காழ்த்த வினையோன் கனன்று. (32)

என்னுமுன் சொல்லு மிளங்கோ விறையோர்க்கு
முன்னுகச் செல்ல முதலவனும் தன்னேரில்
தம்பியன்றி வேறே தடுப்பாரில் லாதுசென்றான்
வெம்புசுரர் கண்டார் விரைந்து. (33)

இனையவரா நின்ற விருவரிரு கண்போற்
கனைகழலார் செல்லக் கவுந்தன் வினைமினிடை
வீரவரர் யாவரென வேறோர் மொழிபுகலார்
தீரவரர் நின்றார் செருத்து. (34)

Koviloor Digital Library

அழிந்துளா ரல்ல ரடுத்திகழ்ந்தா ரென்று
பொழிந்துகனல் கோபம் பொடிப்ப விழுங்குவே
னென்றிரிந்தான் வீர ரெடுத்துவரு தோளிரண்டை
யன்றறிந்தார் வாளா லடுத்து. (35)

கைகளற்று வெங்குருதி காலக் கவந்தனுடன்
மெய்யினுற்ற வன்னதியாய் மேலடுக்கும் சையமொத்து
நின்றா னிகர்த்தா னிறைந்துவரு பேரெழிலான்
பொன்றாது நின்றான் புகழ்ந்து. (36)

ஆளவரு நாயகனு ரங்கை யடுத்ததனல்
மூளவரு சாபவினை முற்றியே தோளினொடு
கண்ணடுத்த யாக்கை கழிந்து கவினுடலான்
விண்ணடுத்து நின்றான் விரைந்து. (37)

விண்ணினின்றான் கண்டான் விரிஞ்சன் முதலோர்க்குங்
கண்ணினின்ற வண்ணலெனுங் காட்சிதனை யெண்ணிநின்றா
னொப்பரிய புண்ணியந்தா னுற்றடுத்த தென்றுரைத்தான்
செப்பரிய வீரர் திறத்து. (38)

ஈன்றவனே யெவ்வுலகு மெல்லைதீர் நல்லறத்தின்
சான்றவனே தேவர் தவப்பயனே மூன்றாய்
வருமுதலோ தோன்றி வரமருளித் தீர்த்தா
யிருவினையேன் சாபத் திடர். (39)

மூலமே யில்லா முதலவனே நீமுயலுக்
கோலமே யாரறிவார் கொள்கைத்தோ வாலமோ
ஆலி னடையோ அடைகிடந்த பாலகனே
மேலொருவ ரில்லாய் விளம்பு. (40)

காண்பார்க்குங் காணக் கருதுவர்க்குங் கண்ணாகிப்
பூண்பாய்போ னிற்றியென்றும் பூணாதாய் காணு
மூலகை வயிற்றொளித்தா யோங்குதியா லென்னே
யலகி லுனையறிவா ரார். (41)

Koviloor Digital Library

ஆதிப் பரமனுநீ யாதிப் பிரமனுநீ
யோதித் தருபொருளா யுள்ளவனீ சோதிச்
சுடர்ப்பிழம்பு நீயென்று சொல்லவரும் வேதம்
இடர்ப்பிழையு மெற்கே திசை. (42)

எண்டிசையுந் திண்சுவரா யேழேழ் நிலவகுத்த
வண்டப் பெருங்கோயி லாக்கிவரு மண்டலமாய்
மூன்றுபொறி யாங்குடிலை முன்னடுத்த புண்டரிகத்
தேன்றுறைவாய் நீயே யிறை. (43)

மண்பா லமரர் வரம்பாருங் காணுத
வெண்பா லுவந்த வெரிவேள்வி யுண்பாய்நீ
யூட்டுவாய் நீயிரண்டு மொக்கின்ற பண்பதனைக்
காட்டுவார் வேறெவராங் காண். (44)

நின்செய்கை கண்டு நினைத்தனவோ நீண்மறைகள்
உன்செய்கை யன்ன வொழுக்கினவோ வென்செய்தேன்
முன்னையறஞ் செய்தார் முடிக்கும் பதமளித்தா
யென்னைமறம் போக்கி யிசைந்து. (45)

மாயப் பிறவி மயறீர்த்து மாசடையாக்
காயத்தை நல்கிக் கனம்போற்றிப் பேயொத்தேன்
பேதை பிணக்கறுத்த பெம்மாற் கடியேனு
லேதுநல மென்ரு னெடுத்து. (46)

என்ருங் கினிதியம்பி யின்றெடுத்துக் கூறுவனேல்
ஒன்ருதென் றுன்னி யுளத்தொடுக்கித் தன்ருயைக்
கண்ணுற்ற கன்ருய்க் கசிந்தடுத்துக் கண்டுநின்ரு
னெண்ணுற் றவனை யிசைந்து. (47)

பாரா யிளையோய் படுத்தவிவன் வேறுமொரு
பேரா யொளியோங்கு பெற்றியனு நேராகக்
காயத்தி னின்ருனைக் கண்டு வினவென்ருன்
ஆயத்தங் கேட்டா னவன். (48)

Koviloor Digital Library

சந்தப்பூண் வீர தனுவென்னு நாமமுளேன்
கந்தர்ப்பன் சாபக் கடையுடலேன் வந்துற்
றிழிபிறப்பை மாற்றி யெடுத்தீ ரெனையான்
மொழிதிறத்தைக் கேட்பீர் முயன்று. (49)

வீரர்தமைக் காக்கும் விதியுடையா ரில்லெனினும்
சீரடுத்த சானகியைத் தேடுதற்காம் நேரடுத்தார்
வேண்டுவது முண்டென்றான் வேலை கடப்பவர்கள்
பூண்டபுணை கொண்டடுத்தல் போல். (50)

பங்கயத்தின் மேலான் படைத்த வுலகெல்லாம்
அங்கழிக்கு மேலவன்றா னகுமரன் மங்குலெனும்
கையுடையீர் பூத கணத்தி னெடுமுறைதல்
மெய்யுடையீர் நீவிரறி வீர். (51)

ஆயசெய்கை யாய்ந்த வறத்தி னருளடைந்த
தூயசெய்கை தோன்றித் துதிமருவு தாயின்
உயிர்க்காஞ் சவரியினை லுற்றிரலைக் குன்றம்
அயிர்க்காது செல்வீ ரடுத்து. (52)

கதிரவன்றன் சேயன் கனக நிறத்த
னெதிரடுத்து நட்டங் கிருந்து வெதிர்பொருவு
தோளுடைய நங்கைதனைச் சோர்வின்றித் தேடலென்றா
னாளுடையார் கொண்டா ரகம். (53)

ஆனவரன் வாழ்த்தியுட னந்தரத்திற் போனதற்பின்
மானவரர் மற்றும் வழிக்கொண்டார் கான
நதங்கமலை நன்னதிக னன்றடுத்து நாடி
மதங்கமலை கண்டார் மதித்து. (54)

கவந்தப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

சவரிபிறப்பு நீங்கு படலம்.

கண்ணியதை யெண்ணிநல்கும் கற்பகத்தாம் பொற்பகக்கா
நண்ணியதாஞ் செல்வ நலச்சோலை யெண்ணஞ்
சிறக்கவரு செல்வமன்றிச் சேரா நிலைசேர்
துறக்கமத னைப்போன்ற து. (1)

அன்ன விருக்கைதனி லாண்டளப்பில் காலமதாத்
தன்னை நினைக்குஞ் சவரிதனக் கின்னுரைதான்
சொல்லியவண் வந்தடுத்தான் தூயதவத் தோர்க்கருள்செய்
வில்லியவண் கையான் விரைந்து. (2)

ஆண்டவனு மன்பி னழுதிழியுங் கண்ணவளாய்
மாண்டதெந்தன் பாசவினை வந்தநலம் பூண்டதுவாம்
மாதவத்தின் செல்வமென வாய்ந்து விருந்தளிப்பப்
போதவத்த னுண்டான் புகழ்ந்து. (3)

ஈசன் கமல னிமைய வரர்முனிவர்
வாசவனை முன்னடுத்து வந்துரைத்தார் நேசமுடன்
நற்றவத்திற் கெல்லைவள்ளல் நாதனருள் பெற்றுவரல்
முற்றவத்தி னெல்லையென்றார் முன். (4)

இருந்தனனு மெந்தை யிவணெய்துந் தன்மை
பொருந்தவரு புண்ணியத்தின் பொற்பாம் மருந்ததென்றாள்
வாழ்வளித்தா யெங்கள் வருந்துதுயர் போனதென்றான்
வாழ்வளித்தார் போற்றும் வரன். (5)

அனகர்க் கமல னவனுறைந்த பின்னர்
வினையற் றவளைநோக்கி வெய்யோன் தனையன்
செறியடுத்த குன்றமது செல்ல வவர்க்கு
நெறியடுத்துச் சொன்னா ளினைந்து. (6)

Koviloor Digital Library

வீட்டுக் கமையநின்ற மெய்நெறியை யின்னதென்று
காட்டு மறிஞரெனக் கானெறியைக் கேட்டனராம்
கேள்விப் பொருளார் கிரியை பெறமதிக்கும்
வாள்வித் தகராம் வலர். (7)

பின்னவடான் பெற்ற பெறுயோகப் பெற்றியினுற்
றன்னுடலைச் சாய்த்துநெறி சார்ந்தனளா மன்னதனைக்
கண்டா ரதிசயித்துக் காணும் நெறிநடந்தார்
பண்டாருங் காணுப் பரர். (8)

தண்ணெடுங்கான் குன்று தவிரத் திசையடுத்து
மண்ணிடையிற் றோன்றி மகிமையுடன் மண்ணிவரு
புண்ணியத்தோர் போற்றும் புருடோத் தமரடைந்தார்
நண்ணியத்தாம் பம்பா நதி. (9)

சவரிபிறப்பு நீங்கு படலம் முற்றிற்று.

ஆக படலம் 11—செய்யுள் 1139.

அண்ணுமலையார் துணை

ஆரண்ய காண்டம் முற்றிற்று.

Koviloor Digital Library

நான்காவது

கிட்கிந்தா காண்டம்.

பம்பைப் படலம்.

தானமுற்ற சிலர் தவத்தாற் பெருமைகொண்டோர்
ஞானமுற்ற மேலோர் நலம்பெறவாம் கானமுற்றும்
எள்ளலிரா வானவர்கட் கேற்ற பதமளிக்கும்
வள்ளலிரா மன்றாண் மலர் (1)

தேன்படிந்த மாமலராஞ் செங்கணுடை வேங்கைமாத்
தான்படிந்து நற்றெளிவு சான்றதுவாம் மீன்படிந்து
மேகம் படிந்து விரிவேலை வான்படிந்த
தாகும் படியை யடுத்து. (2)

ஈர்ந்த பளிங்கதனை யேற்றுத் தெளிந்தபுனல்
பேர்ந்தொளிசெய் மாமணிகொள் பித்திகைதான் சேர்ந்துழி
சேர்ந்த படிநிறத்தைச் சேர்தலினு லோர்ந்துணர்வு [யிற்
சார்ந்தவரி னுள்ளமொப்ப தாம். (3)

ஓதமுற்ற நீருலகி னேக்கு முயிரெவையும்
வேதமுற்ற மேலோன் விதித்தநாள் சீதமுற்றுத்
தாக்குங் கடலைத் தணிப்பதற்குக் காதிசெம்மல்
ஆக்குங் கடலையடுத் தாம். (4)

நாக ரிருக்கையது நன்றாய்த் தெரியக்கீழ்ப்
பாக மடுத்த பகுப்பெனினு மாகமுற்ற
கற்பகத்தை யொத்த கவிஞர்திற நாட்டிவரு
சொற்பொருட்கு நேரடுத்த து. (5)

Koviloor Digital Library

களாநிலு மன்னமுதற் கண்ணகலு மேலாந்
தளமலர்சேர் புட்கள் தயங்கக் கிளவியது
சீலத்தை யின்னதெனத் தேருத தானகர்க்கண்
கூடலத்தைச் சாலநிகர்க் கும். (6)

பங்கயத்தா மன்னம் பரிந்துலகந் தேடியெங்குஞ்
செங்கயற்கண் புக்கிடத்லைதத் தேருதாற் றங்கன்
திருமுகத்தை நோக்கிலேம் தீர்துமினி யென்ன
வெரிமுகத்தை நோக்கு மிணைத்து. (7)

களிமருவா மாமனத்தான் காணவரிற் கற்பார்
கிளிமொழியாள் மன்விழிக்குக் கேளென் றளியதனல்
கண்டுளிக்குஞ் சோருமெனக் காணுது மீனினங்கள்
தண்டுளிக்கு நீரொளிக்குந் தாழ்ந்து. (8)

கழையார்ந்த முத்துங் கலுழி மதக்கார்
மழையார் தரளமணி வாரி யிழையாக
நீரருவி யெய்துதலால் நேரிழையார் கோலமெனச்
சீரரும்பும் பம்பை சிறந்து. (9)

பொங்குங் கரிகள் பொதுவி னடுத்தாடல்
கங்குற் களித்த கலவிதனிற் தங்கிவரும்
அங்க மலசியதா லாய்விலேயி னுமகளிர்
துங்க வடிவமொப்ப து. (10)

விண்டாழு மால்வரையின் வீழ்மதுவும் வேழத்தின்
வண்டார் மதமழையு மண்டுதலா லுண்டார்
பெருங்களிப்பால் மங்கையர்கள் பேரிதழ்த்தே னுண்டு
தருங்களிப்பா மென்னத் தகும். (11)

ஆரியங்க ளாமுதல வாம்பதினெண் பாடையன்றிப்
பூரியர்க ளோர்வழியிற் போந்ததென வோர்வரிய
மட்டடங்கா வார்த்தை மருவி நிறை வதுவாய்ப்
புட்டுவன்று கின்ற புகுந்து. (12)

Koviloor Digital Library

தானுயிரைப் போலத் தனிதழுவும் பேடைதனை
யூனுயிரைப் போற்பிறிந்த வோதிமந்தான் வானரமா
மங்கையர்க ளூபுரத்தின் மாமழலை யாமொழியைச்
சங்கையறக் காதேற்ப தாம். (13)

மால்வரையி னின்றிழிந்து வந்தா றிமெருவி
யால்வரையி லாரமகி லாதியால் மேல்வரைவி
னூரிடலா லொண்ணகரா ருற்றுறைத்த வெண்டளவச்
சேரிடலாம் பாணி திகழ்ந்து. (14)

நவ்விவிழி யாரதர நாட்டு குமுதத்தேன்
வவ்வுவரி ஞமயங்கு மாமகரம் எவ்வமது
நீங்கும் பிறப்பிறப்பை நேர்காட்டு நீர்க்காக்கை
ஆங்கு முழுகியெழ லால். (15)

மன்னவற்கு நாமம் மலரவளைத் தந்திலமா
லென்னவற்கு நாமு மியைந்தசெய்து மென்னவுடன்
அன்னநடை காட்டு மலர்குவளை கண்காட்டும்
பொன்னவிதழ் காட்டுமல்லிப் பூ. (16)

பெய்யநிறை பூஞெளிகள் பேரப் புனல்குடையுஞ்
செய்யதிரு வானரத்தார் சேயிழையார் செய்கையன்னம்
ஏந்திவரு சேடியர்க ளென்னமலர்க் கொம்பரன்ன
மேந்திவரும் பொய்கை யெடுத்து. (17)

ஏலவரு நீர்நிழலை யேற்றடுத்த லாற்படிகம்
போலவரு நீரே புகுந்தெனப்போ யாலகயல்
அஞ்சி யொளிக்க வரிய சிறைபுலர்த்து
மிஞ்சுமரத் திற்குரண்ட மேல். (18)

அங்கடுத்த பாகமதி னஞ்சனத்தாம் நீழலுறப்
பங்கடுத்த மாணிக்கம் பாங்கொளிரக் கங்குல்
பகலிணையைக் காட்டுவதாம் பாங்கர் கரைய
நகிலிணையின் வாளம் நகும். (19)

Koviloor Digital Library

வலிநடத்தும் வாளையை வாளையெதிர் பாயும்
நிலநடத்தும் நீர்த்திரையாம் நீர்நாய் கலிகழைசேர்
கண்ணுளரைப் போனடனங் காட்டவடுத் துத்தேரை
எண்ணுளரைப் போற்புகழு மேற்று. (20)

அன்னவகை பொய்கை யடுத்தா னருள்வள்ளல்
அன்னங் கமலமுத லானகண்டான் தன்னைவிட்டு
நீங்குந் தளிரியற்கு நேரான் றளர்ந்துருகி
யேங்கு முணர்வு மிரிந்து. (21)

வரியார் மணிக்கால் வாளமே கொங்கை
யுரியாளைக் காணா துவந்தீர் தரியாது
மிக்க துயரேற்கு வேண்டி யுரையீரேற்
தக்கதுயர் வுக்கென் தரம். (22)

விரிந்த குவளை விரைக்கமலம் வள்ளை
தரங்கம் வராலாமை தம்மை மருந்தனையா
ளுந்தவய வங்கண்டே னுற்றரக்கன் தின்றதிலே
சிந்தியவோ வென்றான் றிகைத்து. (23)

ஓடுங் களிமயிலே யோய்ந்தனைபொன் சாயலுக்கு
வாடும்நீ யுள்ள மறந்தனையோ நேடுதற்கும்
ஆயிரங்கண் ணுள்ளாய் அவையுன் கடமையென்றான்
மாயிரங்குந் தாருடைமா மன். (24)

அடையீ ரொருமாற்ற மாக்குவீ ரன்னப்
பெடையீரென் மேலென் பிழைதான் நடைநீ
ரழிவுற்றீ ரன்னவரா லண்டு மெனக்கென்
மொழியுற்றீ ரென்றான் முனிந்து. (25)

பொன்னொளிகா ணல்லியது புல்லிப் பொலந்தாது
தன்னளிகா னம்தமிழ்செய் தாமரையே பொன்னவளு
மென்னிடையி லுன்னிடையு மில்லையெனி லன்னநடை
மின்னிடைய ளெங்காம் விளம்பு. (26)

Koviloor Digital Library

வாசகத்தைச் சொல்லாய் வனமடுத்த பொய்கையுளாய்
ஆசகற்றுஞ் செவ்வாம்பற் காங்கிடையே நேசமுற்று
வாயதனைத் தந்தாய் மணிமுறுவல் வார்த்தையெனும்
நேயதனைத் தந்தா ணினைந்து. (27)

பஞ்சணிந்த பாத பதுமத்தாள் பாங்கிலையே
னஞ்சணிந்த போதோ நறுங்குவளாய் வஞ்சி
விழிபோ லிருந்து விளைத்தாய் துயரம்
பழிபோலி யாகாது பார். (28)

என்றயர்ந்த வள்ள லினிதா நதிவயினே
யன்றயர்ந்த சீதை யவயவங்க ளொன்றப்
பொலிவுற்ற கண்டு புகுந்த துயரால்
மெலிவுற்று நின்றான் விழைந்து. (29)

வாரளித்த சீர்சால் மடப்பிடிதன் வாயதனில்
காரளித்த கைம்மலைதன் கையதனு னீரளித்தல்
கண்டுநின்றான் வள்ளல் கருத்திற் பெருந்துயரங்
கொண்டுநின்று னுள்ளங் கொதித்து. (30)

ஆண்டநம்பி செய்கை யடுத்து வருமன்பு
பூண்டதம்பி கண்டு பொழுதடுத்த நீண்டபுனல்
தன்னிற் படிந்து தனதாங் கடவுளடி
யுன்னிப் பணியவென்று ணோர்ந்து. (31)

அரசு மவணின் றறிதி னடைந்து
திரைசெய் புனல்செய் திறந்தா னுரைசெய்கை
வாரணந்தா னுண மதித்துப் படிந்தனன்மெய்
ஆரணந்தான் காணு வரன். (32)

நீத்தமுறு நீரி னெடியவள்ளன் மூழ்கலுமே
தீத்துவரு காமமெனும் தீயதனுற் காய்த்திரும்பைக்
கம்மியனுற் றேய்ந்த கடும்புனலாய்ச் சுட்டதுவாம்
செம்மலவன் சேர்ந்தபொழு தே. (33)

Koviloor Digital Library

ஆடினு னன்ன மதுவா யருமறைகள்
பாடினு னுன்னு பரந்தாமன் சூடினுன்
நேமியன்றுள் சென்னிவைத்து நேரு முனிவரொடு
சாமியென்றுன் சோலையிருந் தான். (34)

அந்திவந்து சேர வழகார் சனகியிலான்
சிந்தைநொந்து தேடித் தெருமந்தா னிந்து.
வெரிகதிரி னுனு னிரங்கு மிராமன்
அரியதுய ராறு னடுத்து. (35)

பூவொடுங்கு மவ்விரவு புள்ளொடுங்கு மப்பொழிலின்
மாவொடுங்கு நாடகமில் மாமயில்கள் கூடொடுங்கும்
கோகிலங்க ளொன்றுற் கொடிய விரவிலண்ணல்
ஆகுலங்கள் சொல்லவெ:ளி தா. (36)

உணர்வழிந்து நெஞ்ச முருகிக் கவலை
புணர்வழியி ராமற்குப் பொன்னை யணவும்
கமலந் தலையெடுக்கக் கண்டடுத்தான் வெய்யோன்
விமலன் தலையெடுக்க மேல். (37)

காலைவரச் சென்றுர் கமழு மலர்நிறைந்த
சோலை மலைதழுவிச் சூழ்நெறிதான் ஆலைத்
துழனிசெறி நாடர் துருவி வருவார்
அழனிகருங் கற்பனையை யாங்கு. (38)

பம்பைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

அனுமப் படலம்.

எய்திச் சவரிவரை யேற வதினரசு
செய்யுங் கவிக்கிறைவன் சிந்தைசெய்தா னுய்வதிலை
தெவ்வையுற்றே னென்று தெறிந்தான் வரைமுழஞ்சிற்
கவ்வையுற்றான் வீரர்களைக் கண்டு. (1)

காலினுற்ற சேயிவரைக் காண்மினோ காலனெனும்
வாலிசொற்ற வந்த வரிசிலையர் நீலமுற்ற
மால்வரையின் பண்பார் மதியா ரெனவெருவிக்
கால்வரையா தோடினர்பக் கம். (2)

தாரனொடு நீலன் தரமருவு மாருதியாம்
வீரனொடு பானுசுதன் மேருசிகர் பார
மலையுடைய பாக மருவி யடுத்தான்
சிலையுடைய வாகரையஞ் சி. (3)

மானனையாட் காண்பவரை வாலி திறத்துவர
லானதெனச் சோர்ந்த வறிவுடையா ரேனையரும்
பின்றொடரச் சென்றவனைப் பேணி யனுமானும்
மன்றொடரைச் சொல்வான் மதித்து. (4)

அவ்விடத்தி னன்னு ரறிவழிந்து சோர்வகண்டால்
வெவ்விடத்திற் றேவர் மெலிவாகுந் தவ்விடத்துத்
தாழ்சடைத்தே வந்து தடுத்ததெனத் தாங்கினான்
வாழ்வளிக்க வந்தவனு மான். (5)

அஞ்சனைக்கா மைந்த னமைந்தவரை யாங்கிருத்தி
அஞ்சனக்கார் வண்ணர்கருகடுத்து வெஞ்சினத்தா
ரல்லவரா மெய்ய ரளிக்குஞ் சிலையுடையார்
வல்லவரா மென்றான் மதித்து. (6)

Koviloor Digital Library

தேவர்க் கொருதலைவர் தேவர் முதற்றேவர்
மூவர்க் கிவரிருவர் மூரிவில்லார் தேவரினும்
யாரொப்பா ரின்னவர்க்கி யாதரிது தேர்வரிது
சீரொப்பார் சிந்தை தெரிந்து. (7)

சிந்தை சிறிதுதுயர் சேரத் தெருமரலின்
நொந்த வரிசிலையர் நோவடையா ரந்தரமார்
தேவரலர் மானுடவர் சிந்தையுற்ற தேடுவராம்
தாவரமும் போற்றுந் தவர். (8)

தருமந் தகவும் தனமாந் தகையர்
கருமங் கவர்தல் கருதின் அருமருந்தா
மன்னதிடை நீங்க வதனை யிருமருங்கும்
தன்னதெனத் தேடுதரத் தார். (9)

கதமகன்ற கண்ணர் கருணைக் கடலார்
இதமகன்ற தென்று மிலராம் சதமகன்றோர்
நன்னிலையர் தன்ம நலத்தார் மதன்வடிவர்
பொன்னிலையர் கொண்டார் புகழ். (10)

என்பனவு மெண்ணி யிருவர் தமைநோக்கி
அன்பி னுருகி யனகர்தமை முன்பிரிந்தார்
தம்மைமுன்னிச் சார்ந்ததெனச் சார்ந்தடுத்தான் சற்குணத்தர்
தம்மைமுன்னிற் றூணுந் தரன். (11)

தன்கன்று கண்ட தனையதறு கட்பேழ்வாய்
மின்கன் றெயிற்றுமா வேங்கைமுதல் முன்சென்று
காதலினாற் சூழும் கணணீர்த் திரங்கிவரு
மாதலினா லோதுபர மாம். (12)

மயிலுறவாம் வான்பரவை மன்னுமிவர் மேனி
வெயிலுறலான் மேலே விரிக்கும் எயில்வகுத்த
வென்ன முகிலினங்க ளேற்ற திவலையொடு
மன்னமகி தன்னில் வரும். (13)

Koviloor Digital Library

காயெரியுங் கற்களது கள்ளுடைய மாமலர்போற்
தூயபதத் தாற்குழைந்து தோன்றுமாம் போய
திசைமரமும் புல்லுஞ் செறிந்து தொழல்போ
லிசைமருவுந் தன்மமிவ ரென்று. (14)

துன்பைத் துடைத்துத் தொடர்வினையைச் சுட்டறுத்து
மின்பப் பதவிதரற் கேற்றவர்தா மென்பெனக்கு
நெக்குருகுங் காதல் நிகரிலவா மன்படுக்கும்
புக்குறுவே னன்னவர்முன் பு. (15)

இவ்வழியி னெண்ணி யிருவர் வரவடுத்துச்
செவ்வழிசேர் மேலோனுஞ் சென்றெய்திக் கவ்வையின்றும்
நுங்கள் வரவென்ன நோன்மையனு மாணவக
வெங்குளனீ யென்றா னெடுத்து. (16)

மஞ்செனவாய் மேனி வரமகளிர் மற்றவர்க்கு
நஞ்செனவாய்ப் பன்னிக்கு நன்மைதரு கஞ்சநவம்
செய்யகண்ண யான்காற்றின் செல்வன் மனத்தனுமன்
தையலெண்ணு மஞ்சனைமைந் தன். (17)

இம்மலைக்கண் வாழு மிரவி சுதனேவற்
செம்மனத்தேன் தேவவுந்தன் சீர்வரவான் விம்மலுற்ற
வன்னவனு லேவு வடுத்தே னடியனென்றான்
பொன்னவனி சேர்புயன்முன் பு. (18)

மாற்ற முரைக்க வரிவிற் குரிசிலிவன்
தேற்ற முளரிலையாச் சிந்தனைசெய் தாற்றலுள
கல்விநல மெய்யறிவு காணுஞ் செயலெவையும்
நல்வினையா மென்றெண்ணி னன். (19)

இல்லா தனவுலகத் தெங்கு மிசைகொளிவன்
கல்லா தன கலைகள் காமர்மறை எல்லாமும்
சொல்லாலே தோன்றுஞ் சுருதிவரன் றேரிளையோய்
வல்லானு நல்லரனேர் வான். (20)

Koviloor Digital Library

மாணி வடிவமொன்றோ மற்று வடிவமைந்த
வாணி வடிவமெனு மாண்புடையோன் சேணார்
பெருமைதனைத் தேர்ந்தேன் பிறிதுங்கா ணின்னா
னருமைதனை யென்றா னரசு. (21)

மற்றுலகி னுள்ளவரின் வானவரி லாரிவன்றன்
சொற்றிறமை யுள்ளார் சுருதியெலாங் கற்றறியும்
மாணி மொழிக்கெதிரோ மன்முதல்வர் மூவர்மொழி
பேணிமொழி யென்றான் பிரான். (22)

எவ்வழியிற் சேர்ந்தா னியல்சேர் கவித்தலைவ
னவ்வழியிற் காணா மருத்தியுளே யிவ்வழிதான்
நின்னையுற்ற வெங்கட்கு நீயே தரக்கடவாய்
மன்னையுற்ற நேய மதித்து. (23)

மாதிரத்தோ டோங்கி வரம்பி னுலகினுற்ற
பூதரத்தோள் வீரரும்போற் போற்றவெ வராதரித்தே
யன்னவனை யுன்னி யணுகினீ ரென்னினவன்
முன்னவனை நன்மையென்னா மோ. (24)

இரவி திருமகனை யிந்திரன்சே யென்னும்
பரிவிலவன் சீறப் பகைத்து வெருவினொடு
வந்துற்றா னிம்மலைக்கண் வாழ்வளித்தீர் மிக்கசெல்வம்
வந்துற்றா லென்ன மதித்து. (25)

ஒடுங்கா வுலக முவந்துதவி வேள்வி
தொடங்கா வறத்திற் றுணிவோர் கொடுங்குலத்தாம்
கூற்றை நடுங்கினர்க்குக் கூறு மபயமருள்
பேற்றையுரைப் பாரார் பெரிது. (26)

எம்மை யளித்தலொன்றோ வேற்றபெரு மூவுலகந்
தம்மை யளிக்குந் தரமுடையீ ரும்மைப்
புகலடைந்தோ மெல்லாப் புகழு மடைந்தோ
மிகலடைந்த தேதா மினி. (27)

Koviloor Digital Library

யாரென்பே னென்குலத்தா ஞன விறைவற்கு
வீரர் பணித்திரென மெய்ம்மையுற்றான் வார்கழற்கால்
மன்னிளையான் சொல்வான் மரபடுத்த வாய்மையெலாம்
பொன்னிளையா மேருப் புயன். (28)

சூரியன்றன் மாமரபான் தொன்மை யயோத்தியுளான்
போரியன்று மாவசுரர்ப் போக்கினான் சீரியன்ற
வேளேற்ற நல்லெழிலான மேலா னரசர்முடி
தாளேற்ற வேடயர தன். (29)

அன்னான் சிறுவனிந்த வாண்டகையா னன்னைசொலத்
தன்னான செல்வநல்கித் தம்பிக்கே மன்னான
கானடைந்தான் வள்ளல் கமலாக்க னுக்கடிமை
நானடைந்தே னென்றான் நயந்து. (30)

என்றெழிலான் தோற்றமுத லீறு யிராவணன்செய்
புன்றொழிலா னேற்றுப் புகுந்தவெலா மொன்றொழியான்
சிந்தையுடன் சொன்னான் திருந்தறத்தோன் கால்மைந்தன்
வந்தடியிற் றாழ்ந்தான் மதித்து. (31)

தாழ்வினைச் செய்தாய் தருமந் தெரிதவத்தாய்
கேழ்விமறை வாணவெனக் கேட்டுறைப்பான் வாழ்வுதரும்
ஆழிகொண்ட தேவ வரிகுலத்தோ னென்றுரைத்தான்
பாழிகொண்ட தோளன் பரிந்து. (32)

மின்னுருக்கொள் வில்லோர் வியக்க வருவேதம்
பின்னுருக்கொள் தன்மைப் பெருமையான் பொன்னுருக்
மேரு புயத்துவமை வேண்டா வெனவெழுந்தான் [கொள்
வாருந் தனதுவடி வம். (33)

கண்டறியான் மூன்றுலகுங் காலாற் கடந்துகொண்ட
புண்டரிகக் கண்ணான் பொலன்சோதிக் குண்டலத்தாம்
நல்வதன மென்றால் நறுங்கதிரோன் மாணவகன்
சொல்வதனைக் கேட்பதெனைத் து. (34)

Koviloor Digital Library

தாளார் கமலத் தடங்கண்ணன் தம்பிக்கு
நாளா மறைபொருந்து ஞானத்தாற் கோளாகிக்
கோட்படா நின்ற குணமே குரக்குருவாய்
ஆட்படா நின்ற தடுத்து. (35)

நல்ல நனிநிமித்தம் நம்பியடைந் தானம்பா
லில்ல யினியேக்க மேற்றநலம் வில்லுடையா
யின்னோன் கவியரச னேவற் குளனென்று
லன்னோன் சவியறமென் னும். (36)

என்றடுத்த தேசா ரியல்புடைய வீரர்முனம்
குன்றடுத்த தோளனுமான் கூறுவான் சென்றடுத்த
அன்னவனைக் கொண்டிங் கணைவே னெனக்கவியின்
மன்னவனைக் கண்டான் மதித்து. (37)

அனுமப் படலம் முற்றிற்று.

நட்புக்கோட் படலம்.

போன வரைப்புயத்தான் பொன்றூப் புகழுடையான்
ஆன வரசை யடுத்ததுல யானுமினு
முன்பெருமை யுன்குலமு முய்ந்தோ மெனவுரைத்தான்
மன்பெருமை யுன்னி மகிழ்ந்து. (1)

மேலடுத்த சோதிமைந்த வேறென் மனக்கவலை
வாலெடுத்த வாலியுயிர் வாங்குதற்குக் காலடுத்த
தென்று ளிடர்க்கடனின் றேறினா மென்றுரைத்தான்
பொன்று வனுமான் புகழ்ந்து. (2)

மண்ணுந் திருவிண்ணு மற்று முலகெவையு
மெண்ணுந் திசையா ரிசையடைந்தார் கண்ணுள்ளா
ராயினர் சாரமிலா ரற்பத் தரப்பகைவர்
போயினர் வீரம் புலர்ந்து. (3)

Koviloor Digital Library

சூழிமால் யானையுடைத் தூயான் றசரதமால்
பாழியா லெல்லாம் பரித்தருள்வோன் ஆழியான்
மைந்தர்நலந் தந்தார் மருவு மரசளித்துன்
சிந்தைநலந் தந்தாள் திறர். (4)

நீதியார் பொற்கருணை நேமனத்தார் நன்னெறியிற்
பேதியார் பேணும் பெருமையா ரோதியாய்
நல்லறிவார் நற்புகழார் நன்மைதரு காதிவரன்
வல்லமையார் பல்லம்விடு வார். (5)

வேலிகலுந் தாடகையாள் வீயத் தனுவதனைக்
கோலியவண் மைந்தர்க் கொலைசெய்து காலியலும்
பூழியினுற் கற்படிவப் பொன்னு ரகலிகைக்கு
வாழியினுற் செய்தான் வரம். (6)

நல்லுறுப்பு நன்கமையும் நம்பியரி னுட்டுமுன்னோன்
எல்லுறுப்புக் கொண்ட வினவொளியோன் பல்லிறுத்தோன்
வல்லதிரி யம்பகமா மாவில்லை வாழ்மிதிலை
எல்லைசெலச் செய்தா னிரண்டு. (7)

உளைவயமா மன்ன னுதவவொரு சொல்லா
லளவயலாஞ் சிற்றவைசொல் லாற்றல் வளமையினல்
மாநிலத்தை முற்று மகிழ்வினிளை யோற்களித்துத்
தானலத்த கானமடைந் தான். (8)

கரனை முதலாங் கடற்படைக டீர
வரனை நிகராற்ற லாற்றுந் தரமுடையோர்
மாற்றறிய பொன்வலத்தார் வானவர்க்கு மானவர்க்குஞ்
சாற்றறிய வில்வலத்தார் தாம். (9)

தெவ்வழித்து நீண்ட சிகைமழுவி ராமனையும்
வெவ்வழித்தாம் வல்லமையை வீறுக்கி யொவ்வா
விராதனையி ராவகையாய் வீட்டுதலைச் செய்தான்
புராதனனி ராமன் புரந்து. (10)

Koviloor Digital Library

ஆயமா நாகர்பணி யாழியா னல்லதொரு
தாயமா ஞகான் கருதுவாய் நீயமான்
நேருதியான் மாவுழையா நேரவரு மாரீசன்
தீருதிற லானுன் சிதைந்து. (11)

உக்கவந்தந் தானு முடற்பகைபோ யோங்குபதம்
புக்கவந்தந் தாமுரைக்கப் போந்துளதோ திக்கவந்தா
னென்னச் சினவுகர மேற்றகவந் தன்சவரி
யென்னச் சிறந்தா னினம். (12)

முனைவர் பிறரு முடியும் பகலு
மினையர் வரத்தவஞ்செய் தேற்றூர் வினையாஞ்
சிறையடையா மேலோர் திருமாப் பதத்தர்
நிறையுடையார் தம்மை நினைந்து. (13)

மாயை மதியான் மதியினிரு தன்மனையைத்
தீயநெறி யுய்ப்பபத் தேடுவார் நீயாய்
தவமுடையா யுன்னுறவு சார்ந்தார் பகைவ
ரவமடையா ரேவ ரடுத்து. (14)

தந்திருந்தா னல்லருளைத் தாபகைவ ஞகியடு
மிந்திரன்சேய்க் கின்றிறுதி யேற்றதுவாம் புந்திப்
பெருமையுளாய் போதரெனப் பேசினு னென்முன்
னருமையுளாய் நூல்படித்தா ஞங்கு. (15)

அன்னவுரை யெல்லா மறிவி னறிந்துரைப்பான்
உன்னையுடை யேற்கரிதோ வோங்குபொருள் பொன்னைப்
பொருவுவா யென்று புகுந்தான் கருணை
மருவுவான் பாத மலர். (16)

கண்டா னிரவிசுதன் காமர் திருமுகத்தைப்
புண்டரிகம் பூத்துப் புயலடுத்து மண்டிலமாத்
திங்க ளுதயஞ் சிறந்த மரகதமாம்
துங்கமலை யென்னத் துதித்து. (17)

Koviloor Digital Library

நோக்கினு னின்றான் நுவலுங் கமலவரன்
ஆக்கினு னன்றுமுத லாகவரு பாக்கியந்தான்
செய்தவெலாஞ் சேர்ந்திரண்டு சேவகராய் வந்தவென்றான்
மெய்தவறுச் சொல்லான் விழைந்து. (18)

தேறினன் றேவர்க்குந் தேர்வரிய தேவரென
மாறினு ரிப்பிறப்பின் மானுடரா யாறுசெறி
கொன்றை யணிகுழகன் கூறும் பிரமர்தமை
வென்றதுவு மானிடமா மே. (19)

என்னநினை மன்னவனை யேற்றுவரு காதலினன்
மன்னவனை கண்களிப்ப மானேக்கித் தன்னை
யடுத்துவந்த போழ்தி லருட்கடலான் கையால்
அடுத்துவந்து சேர்திருவென் றான். (20)

தாவா வலியரக்கர் தாங்குமிரு ணீங்கவரு
கோவாம் வலியருக்கர் கூட்டமொத்தார் பூவாகி
யாசையற்ற சிந்தை யனகனரி வேந்துமுவாத்
தேசையுற்ற மாமதியொத் தே. (21)

கூட்டமுற்ற வீரர் குறித்த பொருட்குமுன்னாள்
யீட்டுதவம் பின்முயர்ச்சி யேய்ந்தடுத்தார் காட்டழலாம்
வாங்கரக்க ரென்ன வருதீ வினைகெடுக்கத்
தாங்குகல்வி ஞானமுமொத் தார். (22)

ஆய வமைதி யரிசே யரசையடுத்
தேய தவம்புரிந்தோ ரென்னவரார் நாயகமாம்
உன்னை யடுத்தே னுழிந்தேன் மனக்கவலை
என்னை யடுத்தாவ தென். (23)

மையில் தவச்சவரி மாமலையி னிவருந்தி
யெய்தியது சொல்ல வியைந்தெங்கள் மையதுயர்
நின்னுற்ற லாற்கடக்க நேசித்து வந்ததென்றான்
தன்னுற்றற் கெல்லையிலா தான். (24)

Koviloor Digital Library

முரணிலக்குங் கையோச்சி முன்னவன்ற னென்னை
இருணிலக்கு மேற்றெருடர விக்குன் றாணுடைத்தா
யுய்ந்தது யிர் போக்கிலே னுன்னைச் சரணடைந்தேன்
நைந்தவெனைத் தாங்க னலம். (25)

என்றவரி வேந்தை யிராம னருணோக்கி
னுன்றனுறு மின்பதுன்ப மொன்றுமெற்கே 'சென்றனபோய்
மேலுறுவ தீர்ப்பல் விழைந்தென்றான் மேவலர்மெய்
கோலுருவ வில்வளைத்த கோ. (26)

மற்றுரைப்ப தென்னவினி வானினிடை மண்ணினினைச்
செற்றவஃரெற் செற்றவரே தீயருன்னோ டுற்றா
ரெனக்குற்றா ருன்கிளையே யென்கிளையாம் நீயே
மனக்குற்ற தம்பியென்றான் மான். (27)

ஆர்த்த குரக்கனிக மஞ்சனைசேய் மேனிவளம்
போர்த்த புளகமலர் பொன்மாரி தூர்த்தவிண்ணோர்
மன்மொழியே மேலா மறைமொழியா மென்றுவந்தார்
அன்மொழியே யென்றயிர்க்கா தார். (28)

ஆண்டடியிற் றாழ்ந்தவர வஞ்சனைசேய் வாழிகினை
வேண்டிவரு தோழன் மிகவாழி யீண்டுநுந்தன்
கோயிலெய்திக் காணவருள் கோவென்றா னேமென்றான்
சேயிலெய்து வீரன் சிறந்து. (29)

எகு மரியரசு மெங்களைய ரோடுபெரு
மூகங்கள் சூழவற மோங்கவே நாகம்
நரந்தக்கா வாவிகளும் நாகமதை யேசும்
தரந்தக்க சோலையடுத் தார். (30)

ஆரமகில் துன்றி யவிரும் பளிக்கறையாய்
நாரமது நின்றவென நற்றடமும் பாரமெங்கும்
தெய்வத் தருவுஞ் சிறந்த வரமகளிர்
மெய்வைத்த வூசலெங்கு மே. (31)

Koviloor Digital Library

அயர்விலவாங் கேள்வி யறிஞர்க்கு முன்னே
பயிலாதார் கல்விபொலி பண்பாய்க் குயிலு
மணிக்குழுவு சோதி மருவும் வெயிலால்
கணிக்கும் வெயில்மதியாங் காண். (32)

ஏயவன்ன தாகு மினிய வளச்சோலை
மேயமைந்தர் பொன்கவியின் வேந்துமே தூய
வணைபொலிந்தா ரென்று மடுத்தவன்பின் மேலார்
இணைபொலிந்தா ரின்றி யிசைந்து. (33)

கனியுடனே கந்தநறுங் காயடுத்த தூய
பனியடையுந் தந்து படைத்தார் புனிதனுடன்
மஞ்சனந்தா னண்ணி மரபின் விருந்தானன்
அஞ்சனந்தான் வண்ண னறிந்து. (34)

விருந்தருந்த வாகிவர மெய்மையன்பி னோடு
மிருந்தவிறை சிந்தனையி னேற்றுப் பொருந்து
மனக்கினிய பூவைதனை மாறப் பிரிந்த
துனக்குமினி தென்று னுருத்து. (35)

என்றதனை நன்றாய்க் தெழுந்ததிறன் மாருதியும்
குன்றதென நின்றிருகை கூப்பினான் நின்றவர
நீதியாய் கேட்டி நிருபனுக்கா மென்மொழியை
ஆதியா யென்று னறிந்து. (36)

நாலியன்ற வேதமென நான்கடுத்த வார்கவிதான்
வேலியன்ன மாமலையின் மேலுள்ளான் சூலி
யருட்டுறையின் முற்றின னண்ணலெனும் வாலி
யருட்டுறையின் றாகுமனத் தான். (37)

சுழலுஞ் சுரரவுணர் தூய விழிநின்
றுழலு மலையினுரு வோங்கத் தழலுமொரு
கோளரவு தேயக் கொடுவேலை யைக்கடையுந்
தோளுடைய வாற்றல்படைத் தோன். (38)

Koviloor Digital Library

நிலநீர் நெருப்பு நெடுங்காற்று நான்கா
முலைவில்லாப் பூத மொருங்காம் வலியுடையான்.
வேலைகொண்ட வாழிமலை மேலிருந்து மிம்மலையி
னேலைகொண்டு தாவு முளன். (39)

கிட்டிவரு கேளார் கிடைக்கின் அவர்புரியப்
பட்டவரம் பாதி படைத்துடையான் மட்டமிலாச்
சீர்த்தியுடை மாதிரத்திற் சேர்ந்து நறுமட்ட
மூர்த்தியடி போற்று முதன். (40)

கால்செல்லா தன்னவன்முன் கந்தவேள் சந்தமலி
வேல்செல்லா மார்புடைய வென்றியான் வால்செல்லா
வாயலதி ராவணற்கு வண்ணமுறு கோல்செல்லா
தாயதுவே யாகுமறிந் தால். (41)

மேருமுதற் சார்கிரிகள் வேருடனே பேருமவன்
பேருமெனி லாரவன்றன் பெற்றிசொல்வார் காருடனே
வானக் கதிர்நாகம் மற்றுமுடன் றூறுமவற்
கானபெருந் தோள்களடுத் தால். (42)

பார்கடந்த பாரமுற்ற பன்றி பருவலிசேர்
நீர்கடந்த பேர்கமடம் நேர்கனகன் மார்பிடந்த
வாடகத்தாம் சிங்க மமையு மெனினுமவன்
தோடகைத்தற் கெங்காந் துணை. (43)

நீண்ட தலைபரப்பி நின்றெடுத்த பாரமதாய்ப்
பூண்ட வனந்தன் புகழோங்கு மாண்ட
படந்தடுத்துத் தாங்கும் படியை முடிய
நடந்தெடுத்துத் தாங்குவனன் ஞன். (44)

வெள்ள மெழுபதென மேலெடுத்த மேருவையுந்
தள்ளவரு தோளரியார் தானையினன் எள்ளரிய
பேராற்றன் மல்லிற் பெரிது முளனவன்முன்
யாராற்றல் செல்லு மடுத்து. (45)

Koviloor Digital Library

மெய்க்கொண்ட வாலின் மிடலுடையி ராவணன்ரூன்
தொக்க தொடர்படுத்த தொன்ஞளிற் புக்க
பொழியரத்த நீர்புகுதாப் பொன்னுலக மெங்கே
மொழியறத்தார் காண்பரம முன். (46)

இந்திரன்றன் செம்ம லினிய வொளியுடைய
சந்திரன்றன் மேனித் தனிவீரன் அந்தகன்றன்
ஆணைக்கு மாணையிஞ னன்ஞ னிவன்முன்னோன்
நாணற்ற வாற்ற னமன். (47)

அன்னவனே யெங்கட் கரசா யிளம்பதமிப்
பின்னவனே யாகப் பெறுநாளின் முன்னவன்முன்
முட்டிஞன் முன்ன முரணவுணன் மேற்பலத்தான்
கிட்டிஞன் வந்து கிளைத்து. (48)

முட்டிநின்ற வன்ஞன் முரணூரத்தி னேரினடர்த்
தொட்டிநின்ரு னன்னவன்ரு ஞேடிஞன் வட்டமிஞ்சு
மண்டலத்தாம் வாழ்வு மறிந்த தெனவுரகர்
மண்டலத்தாம் பாதலத்தா வான். (49)

எய்தியபி னப்பிலனு ளேற்றடுத்து மாற்றவனை
நொய்திற் கொணர்வனிங்கு நோன்மையாய், செய்தியிவண்
காவற் சிறுபொழுது காக்கவெனச் சொற்றடைந்தான்
தாவப் பெருஞ்சீற்றத் தான். (50)

ஏகியபின் வாலி யிருது பதிஞன்கு
வேகப் பிலந்தடவி வெம்மையான் மோகவென்றி
துன்றுதுணை கொண்டவரிற் சூழ்ந்து திரிந்துவரான்
நன்றுதுணை வன்றளங்கி ஞன். (51)

அமுதமுங்கு மின்னவனை யன்பிற் சிறந்து
தொழுதிரந்து நின்றன் ளெழிலா முழுதரசு
போற்றுவா யென்னப் புரிவுடையான் போற்றலிலான்
மாற்றுவான் சொல்லை மறுத்து. (52)

Koviloor Digital Library

இன்றடுத்துத் தானு மிலகும் பிலவழியிற்
சென்றடுத்து முன்னவனைத் தேடுவேன் கொன்றடுத்தான்
றன்னையுடன் கொல்வேன் தடுக்காதி ரென்றடுத்தான்
மன்னையுடன் றேடி வழி. (53)

வல்லவர்க ளன்னான் வழியைத் தடைபுரிந்து
நல்லவுரை யான்மனதை நாட்டியே மல்லல்
அடுத்தவறங் கொண்ட வரசளிக்க நல்லோர்
கொடுத்தவரங் கொண்டான் குறித்து. (54)

அன்னவாய் மாயாவி யப்பிலத்தி லாயடுத்து
மின்னவாய் வந்திடுமென் றெண்ணியாம் பொன்னின்
வரையொழித்து நின்ற வரைக ளடுக்கிப்
புரையொழித்து நின்றேம் புலர்ந்து. (55)

சேமம் வழிச்செய்து செங்கதிரோன் மைந்தனையே
கோமகனுக் கொண்டு குலவியாம் நாமமலை
மேலிருக்கு நாளின் விளித்தசுர னவியுண்டான்
மாலிருக்கும் வாலி வரைந்து. (56)

ஒளித்தா னுயிர்க்களிலை யுண்டு மனது
களித்தா னுயர்ந்தான் கடிது விளித்துநின்று
தம்பியடுத் தானவன்றன் தன்மை நலமென்றான்
வெம்பியடுத் தான்றீ விழித்து. (57)

வால்விசைத்து வானம் வளிமிமிர்ந்த தென்னவுடன்
கால்விசைத்து நின்று கடிதெற்ற நீலிசைத்த
விண்முகட்ட தாகியண்டி வேலை யிடைவிழுந்த
கண்முகட்ட வானமலை கள். (58)

எறினு னன்னு னெவரும் பயந்தோடச்
சீறினன் பொற்சிகரஞ் சேர்ந்தடர்த்தான் வேறில்
படிவணங்கு மாதவன்றன் பாலன் றமைய
னடிவணங்கி நின்று னடுத்து. (59)

Koviloor Digital Library

வணங்கித் தலைவ வரவிலதைக் கண்டு
பிணங்கிப் பிலவழியிற் போர்ந்தேற் கிணங்கரின்மை
யாலிறைவ ஞனே னடியேன் பிழைபொறுத்தாள்
மாலிறைவ வென்றான் மகிழ்ந்து. (60)

ஆணையிஞ லிவ்வரசை யாண்ட வறிவில்லேன்
நாணமிலா நானவையே னல்குவா யேணடைந்த
பூணுடைய தோளாய் பொறுத்தா ளெனப்பணிந்தான்
மாணுடைய தோன்றல் மதித்து. (61)

அடல்கடந்த தோளுரவோ னஞ்சு மிவனைக்
குடல்கலங்கக் கொண்டு குமைத்துக் கடல்கடைந்த
வெங்கரத்தான் வாரி விசைத்தா னுடல்கடைந்தான்
பொங்கரத்தா றெங்கும் புக. (62)

இவனிகந்தா ஞேடி யெழுகடலி னப்பா
லவனி கடந்தெயிலை யண்டக் கவனமிலான்
கால்கடலிற் றென்னக் கதித்தா னவனிவனும்
மேல்கடவா நின்றான் விழித்து. (63)

என்று சதாகதிசே யேற்றியம்ப வள்ளலுடன்
நன்று செயலென்று நாடியே பின்றையவன்
வாலி முனஞ்சென்று வாவற் கறிந்தனனே
காலின்முன மென்றான் கடுத்து. (64)

இனைய வியந்தா னிளவ லுடனே
வினையா கழற்கால வள்ள லினையவர்கள்
செய்தவகை சொல்லென்றான் சேந்த கடைக்கண்கள்
எய்தவகை சொல்வா னெடுத்து. (65)

எக்கற் கடற்புறத்து மேற்றுத் துடரவிவன்
செக்கர்த் தனிச்சோதி சேர்தலிலாச் சக்கரத்தாம்
மாமலைக்கும் பங்கமுற்று வந்து பிடித்தடர்த்தான்
தாமலைக்க வென்று தடுத்து. (66)

Koviloor Digital Library

பற்றிப் பழிக்கும் பயமிலனைப் பாழ்சினத்தால்
முற்றிப் பருத்த முரண்கரத்தால் வெற்றியுடன்
எற்றிநின்று பற்றி யெடுத்தெழலுங் கைபிழைத்தல்
பெற்றகன்றா னின்னேன் பிரிந்து. (67)

எந்தையவன் கன்றி யெயிரதுக்கு மென்னிலிறை
யந்தகற்கு முண்டா மரனேதா மிந்தவெற்பின்
வந்திருந்தா னின்னேன் மதங்க முனி சாபந்
தந்திருந்தான் தன்மைநலத் தால். (68)

உரிமையென்ற வின்னேற் குரிய மனையா
மருமருந்தை யன்னா னடைந்தா னிருமையுந்தான்
விட்டிருந்தா னின்னன் விரிந்த சரிதமென்றான்
மட்டிருந்த தாரான் மதித்து. (69)

மெய்ய னனுமான் விரித்துப் புகலவுடன்
ஐய னமல னருட்புணரி வையநுங்கும்
வாயி னிதழ்துடித்த மாமலர்க்க ணும்பலுற்ற
சேயனையாற் குள்ளம் சினந்து. (70)

ஈரமிலாச் சிற்றவை சொ லேற்றுப் பரிவினொடு
கூரமிலாத் தம்பிகொளக் கூவரசை நாரமொடு
தந்தளித்தான் முன்னம் தனித்தம்பி நன்மனைபாற்
கொந்தளித்தான் செய்கையென்னா கும். (71)

ஏழினொடு மேழுலகு மேற்றோ னுயிர்க்கிறுதி
வாழி தரினும் வலத்தழித்துக் கேழினொடு
நற்றலைமை தாரமுட னுட்டித் தருவனவன்
நிற்றலெமைக் காட்டென்றா னேர்ந்து. (72)

எழுந்து கடவுதய ரேகி யிசையின்
அழுந்து கடலுவகை யாகி விழுந்ததினி
வாலிவலி யென்று மதித்தும் வரதனிடைக்
கோலவலி தன்னைமதிக் கும். (73)

Koviloor Digital Library

அனையவுரை கேட்ட வனும னமைச்சர்
நினையவரு கல்வி நிறைந்தா ரெனையவரும்
வேறிருந்து போற்ற விளங்கு மரசனுளக்
கூறறிந்து சாற்றும் குறித்து. (74)

உன்னினே னின்னுளத்தி னுற்ற தனையுரவோய்
மன்னினுன் வாலிதனை வானேற்றப் பன்னுதிறல்
வீரற்குண் டாமோ வெனமதித்தா யென்னுரையின்
சீரிற் குண்டாமதனைத் தேர். (75)

சங்காழி பொங்குகுறி தாளிற் றடக்கையுள
வெங்காகு மிந்த விலக்கணந்தான் செங்கோலான்
விற்கரத்தி ராமன்விசயத் திருமாலே
மற்பொருத்த தோளாய் மதி. (76)

ஆல மடக்கி யமர்செய் புரமெரித்துக்
காலன் வலிகவர்ந்த காரணன்வில் மூலமற
முற்றுவிக்குந் தன்மை முதற்பொருளா மாயவற்கா
மற்றெவர்க்கு மாமோ மதி. (77)

என்னை யளித்தவன்சொ லிவ்வுலகெ லாமளித்தோன்
தன்னையளித் தாற்கடிமை தாமென்று னன்னவனே
யின்னோ னவைதெரிய வேதுவுமுண் டாமென்றான்
மன்று னவன்சொல் மதித்து. (78)

துன்படுத்த சொல்லேன் சுரர்முனிவர் மற்றெவர்க்கு [த்த
முன்படுத்த தோன்றலைக்காண் மொய்ம்பென்னை யென்றடு
வெற்கன்பு சான்றென்று னின்றோ னவைகரியாம்
உற்கன்பு மன்ன துரித்து. (79)

பிறிது மனகன் பெருவலிசே ராற்றல்
அறிது மெனினதுவு மாகும் நெறியினின்ற
வேழ்மரத்தி னொன்றை யிவனே தொளைக்குமெனின்
வாழ்வளிக்கு மென்றான் வரைந்து. (80)

Koviloor Digital Library

நன்றுநினை வென்று நலத்தரச னன்மையுற்ற
தன்றுணையா மாருதிதோள் தாங்கியே வென்றி
வரையென்ற தோளவன்முன் வந்துரையுண் டென்றான்
உரையென்றான் வள்ள லுவந்து. (81)

ஏகுநெறி யீதென் றினிமையுட னேற்றேகி
மாகநெறி நீண்ட மரங்களைக்கண் டாகிமுற்று
மைந்தொ டிரண்டினொன்றை யற்றுருவத் திருமெந்தன்
சிந்தையிட ரென்றான் றெரிந்து. (82)

மறுவில்லான் கூற மகிழ்வளிக்கும் வள்ளல்
முறுவலித்தா னன்ன முயர்ச்சி எறுழ்வலித்தோட்
பொற்சிலையை நாணேற்றிப் போந்தா னளப்பரிய
கற்சிலையை யொத்தமரங் கண்டு. (83)

கட்புக்கோட் படலம் முற்றிற்று.

மராமரப் படலம்.

ஊழி யடுத்துலக மோய்ந்துலைய வாந்தலையும்
தாழ்விலவா நின்று தயங்கிருள்சூழ் ஆழி
நிலந்தாங்கு பொற்கிரிகள் நேர்ந்தொன்றாய் நின்ற
வலந்தாங்கி நிற்கும் மரம். (1)

கலையார் மதியுங் கதிரவனு மொன்றித்
தலையார் தவந்தொடங்கு சாரல் மலையாகு
மென்பதனை யன்றி யெவரிலையைக் கண்டவர்கள்
மன்பதையார் தேவர் மதித்து. (2)

ஒக்கநா ளெல்லா முலையா வலியினொடு
தக்கதாம் நன்னலத்தைச் சாற்றலதென் திக்கதா
யோங்குதரு நீழ லுவந்து சிரமமடும்
பாங்கிரவி வையப் பரி. (3)

Koviloor Digital Library

கலரா முடிவுங் கடுங்கோளுஞ் சேர்ந்து
மலராப் பொலியும் வனப்ப நிலவு
மதியுட் கருப்பு வளர்கோடு தேய்க்கப்
பொதியுற்ற தென்னப் புகும். (4)

தீதற்ற சாகை செழித்தலால் வேதமென
வோதத் தகும்பெருமை யுற்றுளதா மாதியண்ட
முன்பளித்தோ னூர்தியன முற்றும் பெடையுடனே
யன்பளித்தங் காகு மமர்ந்து. (5)

நாற்றமல்கு போதடைகாய் நற்கனிக ளோடெவையும்
வீற்றுமண்ட லத்தடுத்து வீழ்கிலவாம் காற்றலம்பி
வானிற் கலந்த வரநதியின் வீழ்ந்துவரும்
மானக் கடலை மதித்து. (6)

அந்தணன்ற னண்டத்து மப்பால் முடியுடைய
மந்தணமா யுந்திநின்ற மாலனைய கொந்தளித்தல்
சாருமலை தன்னிற் றனித்தங்க மாய்நிலவு
மேருமலைக் கும்பழய வே. (7)

வள்ளலரி கான்முளைக்கும் வானிரவி மாமகற்கு
முள்ளமென வுள்வயிர முற்றவையாய் வெள்ளவுடைச்
சீர்மலிந்த பாரடுத்த சேடன் முடிகுடைந்த
வேர்மலிந்து நிற்ப விரிந்து. (8)

திக்கணைக்கும் பொற்பணைக்கண் டேவர் செறிந்திடுவர்
மிக்கணைக்கு மென்றாழ் விரிசுடர்சூழ் புக்கணைக்கும்
குன்றிற் குயர்ந்து குறுகாதி யோசனைதா
மொன்றிற்கொன் றுள்ளினுடைத் து. (9)

ஆய பணைமரங்க ளண்ணலவ ணோக்கித்
தூய கணைதொடுக்கத் தோன்றவே சேயாந்
திசைநாண் செவிடடையத் தேவர்பயங் கொள்ள
விசைநா ணெறிந்தான் விசித்து. (10)

Koviloor Digital Library

ஒக்கநின்ற மிக்க வுலகடுத்த வோசையெனின்
பக்கநின்றார் பக்கல் பகர்வதெவன் திக்கயங்கள்
சோர்ந்த வயனுலகுந் தொல்லை சலித்தலுற
வார்ந்தவய வில்லொலியா மால். (11)

அரிந்தமன்வின் ஞாண்டெறிது மார்த்தவுடன் றேவ
ரிரிந்தார் கடைக்கால மென்னப் பரிந்ததம்பி
பாங்குநின்றான் மற்றைப் பலரும் புரிந்தசொல்லி
ஞேங்குபழி யன்னவர்ச்சா ரும். (12)

சேருதுமுன் னெய்தறனைத் தேற வெனவரிதின்
மாருதியோர் போற்ற மகிழ்வெய்தி வார்சிலையை
நாணிகொண்டு சாயகத்தை நாட்டினன் யோகருளங்
காணிகொண்டு போற்றுங் கனன். (13)

ஏழு மராமுருவிற் றேழாகுங் கீழுலகும்
ஏழா மலைக ளிருடிகளேழ் ஏழ்புரவி
மங்கையர்க ளேழ்வர் மருண்டார் கணையடற்குச்
சங்கையவை யென்று தளர்ந்து. (14)

அன்ன தெனினு மறத்துக் குயிர்த்துணைவ
னென்னுமதை நோக்கி யெவரெவையு மன்ன
வருக்கனருள் சேயு மறிவனடி பூண்டு
பொருக்கெனநின் றின்னவைசெப் பும். (15)

வையமொடு வானும்நீ மற்றும்நீ மாமலர்மே
லையனொடு மாழி யமலனுநீ வெய்ய
வினைதெறுந்தே ஞயேற்கு வேண்டிற் றுதவி
எனைமகிழ்ச்சி செய்தா யிசைந்து. (16)

என்னை யெனக்கரிய தெப்பொருளு மெற்கெளிதா
முன்னை யடுத்தே னுயர்விதியா லன்னையொப்பாய் [ரூன்
போற்றடிமை யார்க்கடியேன் புண்ணியவெற் காக்கவென்
ஏற்றடிமைக் கேற்றா னிசைந்து. (17)

Koviloor Digital Library

ஆடினார் பாடினா ரங்குமிங்கு மாகாயந்
தோடினா ரோங்கு வகை யுற்றசிலர் நேடினும்
வாலிக்குங் காலனென வந்த மகிழ்ச்சியினால்
ஆலிக்குங் காதலுடை யார். (18)

அண்ட மளந்த வதிப னவனடுத்துக்
கண்டனனாந் துந்துபியின் காருடலை மண்டும்
பசையிலையா மென்றாலும் பாங்கா மலைமேல்
அசையிலையாய் நின்றதனை யாய்ந்து. (19)

தென்புலத்தா னாரு திறன்மகுட மோதிசைவாழ்
வன்புலத்தாம் யானை மடிந்தகொலோ வென்புலக்கத்
தீந்த மகரமோ செல்வவிவை செப்பென்றான்
ஆய்ந்த வறத்தா ரகன். (20)

மராமரப் படலம் முற்றிற்று.

துந்துபிப் படலம்.

துந்துபியாம் பேருடையான் தோங்கொள் சினத்தவுண
ணிந்து தொடுமெருப்பி னேற்றத்தான் மந்தரமா
யுள்ள பெருவுடலா னேங்கு சமர்க்கடுத்தான்
வள்ள லரிதன்பால் வந்து. (1)

அங்குசெறி மாயோன் அமைவென்னை யென்னவவன்
பொங்குசெரு வந்து பொருதென்றான் துங்கவனும்
ஆலநின்ற கண்ட னடுமாற்ற லுன்றன்வலிக்
கேலநின்ற தென்றா னெடுத்து. (2)

கடியான் கடுத்துக் கயிலை மலையை
முடியான கொம்பெடுத்து முட்ட நொடிதி
குறையென்னை யென்னக் கொடுபோரெற் கென்றான்
மறைமன்னு மேலோன் மதித்து. (3)

Koviloor Digital Library

மூலமறு வீர முடையா யுடையசமர்
ஏலவரா திந்திரன்பா லேகென்றான் சாலவரப்
போர்செய்வா யாதியேற் போவாலி பாலென்றான்
சீர்செய்யுந் தேவேந் திரன். (4)

அன்னான் விடவந் தரிகட் கதிபனெனு
மன்னபோர் செய்யவென மாமலையைச் சின்னபின்
னம்படுத்தான் வந்தான் நமனி னிவனடுத்தான்
கொம்படுத்தான் போரைக் குறித்து. (5)

இருவர் திரிய விவரிவரென் றென்று
மொரு வரறியா துடற்றித் தரையும்
வெருவுந் தகையின் விழுவ ரெழுவர்
மருவும் வலிப்போர் வலர். (6)

தீயெழுந்த காயந் திசைக ளெழுமுழக்கு
வாயெழுந்த வீரவரர் வார்த்தையுடன் தாயெழுந்து
தோளெடுத்து மூள்வார் தொடரக் கிரிபொடிப்பார்
தாளெடுத்து நாட்டுதரத் தால். (7)

புயலெடுத்த வானம் புணரி புணரிக்
கயலெடுத்த தூளி யளவோ மயனடற்சேய்
வாலிமதங் கொள்ள வரைவில்லாப் போர்கொடுத்தா
னேலுமதி யீரா ரிவண். (8)

அற்றசெரு முற்றவரு மவ்வளவின் வாலியடற்
கொற்றமுறு தோள்வலியாற் கொண்டவனைப் பற்றி
மருப்பினிணை தீர்த்து மடிக்கவெதிர் நின்றான்
பொருப்பினிடி யென்னப் புடைத்து. (9)

தலைமே லடிபடலும் தாளுலைய வாயாம்
நிலையா முழையெழுக நெய்த்தோர் மலைமேல்
உருமிடித்த தென்ன வுலகங் குலையக்
குருதிகக்கக் குத்தியடுக் கும். (10)

Koviloor Digital Library

கவரி யிதுவென்னக் கையாற் றிரித்தும்
இவரக் குருதிதிசை யெங்கும் துவரணிந்த
வென்னச் சிவந்த விசையுந் திசையானை
மன்னச் சிவந்த மலைத்து. (11)

புயலிரவி மாகநிலை பொன்முதலாங் கோள்கள்
வெயில்விரவு மண்டலமேல் வீசி யயிரார்
கடல்கலக்குங் கையினெற்றக் காயத்துயிர்போ
யுடல்கலக்கு மிப்பரிசி னேய்ந்து. (12)

வான்முகடு போயடுத்து வந்த வுடற்கட்டி
தான்மலையின் வந்துமுட்டச் சான்றோன்மு னேன்றசினத்
திட்டதொரு சாப மெனக்குயிரைத் தந்ததென்றான்
நட்டதொரு சார்பா னயந்து. (13)

கேட்டா னமலன் கிளந்த வகையெல்லாம்
வாட்டானைத் தம்பிதனை மைந்துடையா யோட்டென்றான்
உன்னான் கழல்விரலி னுந்தினன் தந்தையுற்ற
பொன்னா ருலகம் புக. (14)

ஆயிடையி னுமரிக ளார்கலியஞ் சக்கலித்தல்
வாயிடையி னுக வரதனவன் சேய
துணர்த்துறுவார் சோலை துதித்திருந்த போழ்தி
னுணர்த்துவதுண் டென்று னுகந்து. (15)

துந்துபிப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

கலன்காண் படலம்.

இவ்வழியின் யாக்க ளிருந்த விடையரக்கன்
வெவ்வழியான் கொண்டுவர மேனுளிற் செவ்வழியாள்
நின்றேவி தானே நிகரிலவ ளாற்றிச்
சென்றாள் கழிந்துவரு சேண். (1)

உழையராற் சொல்ல வுரித்தென் றுணர்ந்தோ
மழையருக் கண்ணாள் மதிப்பென் விழைவடுக்க
எண்ணியதென் கொல்லோ விழைபொதிந்து போடவது
நண்ணியது நாமேற்ற னம். (2)

வைத்தனமா லிவ்வழியின் வள்ள லதனைமுனம்
உய்த்தனமா லிவ்வணியை யோர்மையுட னத்தவெனக்
காட்டினு னெய்பால் கலந்து வருநேயம்
நாட்டினன் செய்யும் நலன். (3)

தெரிவுறத்தா னேக்கும் தெரிவை யணிக
ளெரியுறத்தா னேற்றமெழு கென்ன வுருகியுற்று
னென்கோ வுயிர்க்கூற்ற மேர்க்கப் பருகினனே
நன்கோ மகன்செயலென் னும். (4)

நல்குவது தானென்னே நங்கையணி கொங்கையிணை
புல்குவது கொங்கைதமைப் போன்றனவா மல்கு
லணிக ளதுவான வப்படியே மற்றை
யணிக ளவையவையே யாம். (5)

விட்ட வுணர்வை விளிர்த்த தவையென்கோ
அட்ட வுயிரை யடுத்தவென்கோ கொட்டியசாந் [கோ
தென்னக் குளிர்ந்தவென்கோ வேற்றடுத்துச் சுட்டவென்
மன்னற்கென் சொல்வேன் மதித்து. (6)

Koviloor Digital Library

மோந்திடற்கு நல்ல முருகார் மலரான
வேந்திடற்கு முத்தரிய மேய்ந்தனவாந் தோய்ந்தணியச்
சாந்தமுமாய் மேனி தழுவவொளி போர்த்தலினல்
பூந்துகிலாம் பூவையணி பூண். (7)

ஈர்த்தனசெங் கண்ணீ ரியைய வருவெள்ளம்
போர்த்த புளகம் புரிதோள்கள் நீர்த்தனவாய்
வேர்த்தசெய லொன்றோ வெதும்பினு னென்றுரைக்கோ
தீர்த்தனிலை சொல்வதெனைத் தே. (8)

விடங்கரந்த தென்னவரு வெம்மைமீக் கொள்ள
நெடும்பொழுது தன்னுயிர்ப்பு நீங்குந் தடம்பெரிய
கண்ணனரு டாங்கினன் கையா லெடுத்தணைத்தான்
அண்ண லரச னறிந்து. (9)

தாங்கினன் மிஞ்சுந் தனித்துயரந் தாங்காம
லேங்கின னெஞ்ச மிரங்கினன் பாங்கடையாத்
தெவ்வணியைத் தீர்க்குந் திருவ துயரடைதற்
கிவ்வணியைச் சேர்த்தே னெடுத்து. (10)

அயனண்ட முற்று மதற்கப் புரமு
மயர்வின்றி நாடி வலியா லுயர்புகழுன்
தேவிதனைத் தந்திடுவேன் செல்வ மகிழவென்று
ஞவிதனை யொத்த வரசு. (11)

திருவொத்த மேன்மை தெரியநிறை கற்பாள்
வெருவச்செய் வெய்யோன் விரியுஞ் சிரமும்
பணைக்காற்றுந் தோளும் பரம வுனது
கணைக்காற்று மோவென் கவல். (12)

ஈண்டிருத்த லுன்கடமை யென்கடமை யேழுடனேழ்
பூண்டிருக்கு மெவ்வுலகும் புக்குடனே தேண்டியட
லவ்வரக்க னைத்திருகி யாவியெனுந் தேவிதனை
இவ்விருக்கை சேர்க்கு மிசை. (13)

Koviloor Digital Library

ஏவல் புரியடிமை யெங்கள் செயலாகுந்
தாவரிய வல்லமையான் றம்பிநின்றன் சேவகந்தான்
முன்மொழியும் வென்றி முதலடுத்த மூவுலகும்
நின்மொழியி னன்றோ நினை. (14)

பெருமை யுடையார் பெரிதாற்றல் பேசார்
கருமமதாற் சொற்றேன் கவினும் தருமமெவை
நீயலது வேறூர் நிலையா முலகெவைக்குந்
தாயலது வேறென் தரம். (15)

முளரிமலர்ப் பண்ணவனு முக்கணனுஞ் சந்த
முளரிவலத் தாழி முதலும் அளவியொன்ற
தாயவரு மன்றித் தனிக்கிற் றுணையுறுமோ
ஆயவரு நீயனைத்து மாம். (16)

என்னுடைத்தாம் புன்குறையை யேற்று முடிப்பதுவும்
பின்னுடைத்தாம் பெற்றி பெருமையுறு மின்னிடைத்தாய்ச்
சானகிக்கு நன்மைதரச் சாருஞ் சமயமென்றான்
வானகைக்குந் தேரோன் மகன். (17)

எரிகதிர்ப்பொன் செல்வ னினைய புகல
வருவியுற்ற கண்ண னமலன் திருமா
புணர்ந்துரையு மார்பன் புலனொருவா றாக
வுணர்ந்துரையைத் தந்தா னொருங்கு. (18)

விலங்கல்விற்றோள் வீர வினையேன் விசைய
மிலங்குவிற்கை யேற்றிருக்க வில்லாள் கலன்கழித்த
வீதுகற்பு மேவிவரு மில்லுடையார் செய்ததெவர்
தீதுகற்பா மென்செயலே தேர். (19)

வாணெடுங்கண் மானென் வரவறியா ளேங்கிடயான்
தாணெடுங்குன் றேடுந் தடங்களொடும் பூணொடுந்தான்
போக்கினேன் போது புலம்பிச் சிலைசுமந்தே
னாக்கினே னிப்பழியை யாய்ந்து. (20)

Koviloor Digital Library

ஆறுபடு மாதர்க் கயலார் பிழைபுரியி
னூறுபடு போரி னுயிருகுப்பர் தேறியயான்
என்னைநம்பி வந்த விலங்கிழையைக் காக்ககிலேன்
பின்னைநம்பி யென்பார் பெயர். (21)

கருங்கடலைத் தோட்டார் கவின்கங்கை தந்தார்
வருங்கலைபுல் நீருண்ண வைத்தார் பெருந்தகையா
ரென்குலத்து வேந்த ரிரிந்தவில்லைக் காக்ககிலேன்
நன்குலத்து வந்தவிற்கை நான். (22)

இந்திரர்க்கு வந்த விடும்பை தணித்தவுணர்
சிந்தைகன்ற வட்டுச் செயமளித்தா னெந்தைவரன்
மற்றுங்கு தோளேன் வனிதை துயர்தடுக்கேன்
விற்றாங்கி நின்றேன் விழைந்து. (23)

விரும்பெழிலா ரெந்தைக்கா மெய்ம்மை மெலியிற்
பெரும்பழியா மென்று பெயர்ந்தேன் கரும்பழிசொல்
வல்லிதனை மாற்றான் வளைத்தெடுக்க வந்தபழிச்
சொல்லிதனை யேற்றேன் றுணிந்து. (24)

என்னும் படிமனநொந் தேங்கி யிரங்கிமிகத்
துன்னுந் துயரடுத்துச் சோர்வானைப் பன்னுங்
கதிரவன்சேய் தேற்றுங் கலக்கந் தெளிய
முதிரவின்சொ லாற்றி மொழிந்து. (25)

ஐயனீ யாற்ற வகந்தெளியு மல்லாம
லுய்யவழி யுண்டோ வுறுதியாய் வையகத்தி
லென்குறையைத் தீர்த்த வினியவுயிர் வீட்டலது
முன்குறையைத் தீர்த்தபின்னா கும். (26)

என்றனனும் வள்ள லினைய சமையமதின்
வன்றிறலான் மாருதியும் வாழ்த்தினன் குன்றிவரும்
தோளுடைய வென்னாற் றொடுத்துரைக்குஞ் சொல்லுண்டா
மாளுடைய வென்றா னடுத்து. (27)

Koviloor Digital Library

கொடுந்தொழிலான் வாலிதனைக் கொன்றரச னாகக்
கடுங்கதிரோன் சேயவனைக் கண்டு நெடும்படையைக்
கூட்டின னாகுங் குறித்த செயலென்றான்
ஈட்டினன் முன்னின் றெடுத்து. (28)

வானதுவோ மண்ணதுவோ மாறு மலையதுவோ
வேனைவரு நாக ரிருக்கையதோ தேனார்
தெரியலாய் சீதைநிலை தேர்தற் கரிதாம்
தரியலார் செய்மாயத் தால். (29)

எல்லா வுலகு மிமைப்பி னடைந்தடுவர்
பொல்லா நிலையர் புரம்படுத்த வில்லாள
னனவர னனவர வான்ற வரக்கரவர்
தானவரே தானுந் தரர். (30)

ஒருமுறையி னாலே யுலக மெவையுந்
திருமகளைச் சேர்த்தவிடந் தேர்தல் வருமுறையாய்
நாடவரம் பின்றாகும் நல்லுலக மெல்லையிலை
தேடிவரச் சேனாள் செலும். (31)

எழுபத்தாம் வெள்ள மியற்படைதா மாகடல்க
ளூழியுற்றா லென்ன வுலகடுக்கு மாழி
தனைமடுக்கும் வேலைநிலை சார்ந்துவரு மண்டந்
தனையெடுக்குந் தாங்குதரத் த. (32)

ஆதலா னன்ன தமைதி யெனநினைந்தேன்
நீதியா யென்ன நிகழ்த்தினா னேதவரு
பொற்றனுவான் கேட்டுப் பொருத்த மிவையென்றான்
மற்றனுமான் நாட்டம் மதித்து. (33)

வெங்க ணுடையாளி மீளிமா நாகமொடு
சிங்க மிரண்டடுத்த செய்கையினார் பொங்கிவரு
மேலந்த மால மிசைந்த வனமடுத்து
மேலுந்தி வந்தார் விரைந்து. (34)

Koviloor Digital Library

உழையடுத்த கண்மாத ரூச லடுக்கும்
தழையடுத்த சந்தமலர்ச் சாரல் மழையடுத்த
முன்றிலொடு சோலை முருகலைக்குஞ் செய்யகுன்று
மொன்றவழி வந்தா ருவந்து. (35)

அறங்க ளடுத்தா ரரிக்கணங்க ளோடு
மிறங்கவர வேற வெடுத்துக் கறங்கும்
கழல்கலிப்பக் கண்ணுறங்கு காட்டானை கேட்டு
விழைவடுத்து வந்தடுக்கு மே. (36)

மாணிக்கப் பாறை மரகதத்தா னற்றடங்க
ளாணிப்பொன் சேரு மயற்றடங்கள் சேணுற்ற
பொற்றலத்தார் போற்றப் பொருப்பின் வழிச்சென்றார்
விற்றடக்கை வீரர் விரைந்து. (37)

மருவிவரு வாவிதொறும் வானாறு பாயுந்
திருவார் விழியடுத்துச் சேலாம் அருவியொடு
வந்தடுக்கு மாமணிகள் மாலை யணிந்தவெனச்
சந்தடுத்த குன்றினிடை தான். (38)

அன்னதொரு குன்றினிடை யாறுசென்ற வீரர்பத்தாற்
றன்னவரு யோசனைமேற் சூழ்ந்தேறிப் பொன்னடுத்த
வானாடு வந்ததென வாலி பொருப்பிடத்தைத்
தானாடி வந்திறுத்தார் தான். (39)

கலன்காண் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

வாலிவதைப் படலம்.

அவ்விடத்தி ராம லழைத்துவரு வாலியெனும்
வெவ்விடத்திற் போர்விளேப்பின் வேறுநின்றேஎவ்விடத்தான்
நேர்ந்ததெனத் தேர்ந்துரைக்க நேரலரை வேறும்வலம்
தேர்ந்ததெனச் சேர்ந்தான் தெழித்து. (1)

வார்த்தையன்ன தாக வரமருவு பாற்கரன்சேய்
நீர்த்தரங்க வேலேயஞ்ச நீஞண வேர்த்துலகு
கம்பிக்க நின்ற கடமுஞ் சலிப்படைய
வெம்பிக் கனன்ருன் விளித்து. (2)

இடித்துரப்பி வந்தெதிர்க்கி ஞின்றடர்ப்ப னென்ருங்
கடித்தலங்கள் கொட்டி யடற்ருேள் புடைத்தடுத்து
நின்றுளேத்த பூசல் நிகரடுக்கா வாலிசெவிக்
கன்றுளேத்த லான தடுத்து. (3)

மாற்கொள் கடகரிதன் வான்முழக்கம் வாளரிநின்
றேற்கும் செவித்தலத்தி னென்னவரு மார்ப்பொலிதான்
கேட்டா னமளி கிடந்தான் பகைவர்தமை
வாட்டா வலத்தான் மதித்து. (4)

உருத்தான் பொரவெதிர்ந்தா ஞற்றிளேயா னென்ன
வரைத்தோள் திரித்து மதித்துச் சிரித்தனஞே
மவ்வொலிதா னெங்கு மடுக்கச் சினந்தடர்த்தான்
தெவ்வொலிதான் கேளாத் திறன். (5)

எழுந்தா ஞிறுதி யிலைசந்துவரு மூழி
எழுந்தாங் கடலிதுவா மென்ன வழுந்தாநின்
றக்கிரியு மொன்ருே வறுகு வரைநெறியத்
திக்கிரிய நின்ருன் தெழித்து. (6)

Koviloor Digital Library

போய்ப்பொடித்த கேசப் புரத்து வருபொறிகள்
காய்ப்பொடுற்ற தீவடவை கண்டயத் தீப்பொடித்த
கண்ணுடையான் றேவர் கலங்கும் பெருவுயிர்ப்பான்
எண்ணடையாக் கோபத் தினன். (7)

கைக்கொடுகை யிட்டிடிக்கக் காவல் புரிந்தளிக்கும்
திக்கயங்கள் சிந்துஞ் செருக்கதனை யுக்க
வுருமுந் திகைக்கவரு மும்பர் கலங்கச்
செருமுந்திக் கொண்டான் சினம். (8)

வந்தடர்த்து வந்ததென வாசகங்க ளாசையெட்டுந்
தந்தடர்த்து வந்தான் றனிப்புலிபோற் கந்தடர்த்தான்
கோமகுடங் கொண்டமலை கொந்தளிக்க மாமதியம்
மாமகுடங் கொண்ட மதர்த்து. (9)

வீசினதாற் காற்றடியின் வேர்பறிந்த வெற்பினங்க
ளாசை யடுத்ததுவா மண்டபித்தி பூசினவாம்
வெள்ளை மயிர்பொடித்த வெம்பொறிக டந்தடர்க்குங்
கொள்ளைதரு சீற்றங் குறித்து. (10)

கடித்த வெயிறு கனலைப் பொழிகா
ரிடித்த வுருமுகுத்த வென்னுந் தடித்தடுத்து
வீழ்வ வெனத்தகர்ந்து வீழும் வலையங்கள்
தாழ்வதிலாத் தோள்புடைப்பத் தான். (11)

ஞாலமுற்ற நாற்றிசையு நண்ணும் புனல்நாகர்
மூலமுற்றத் தீய்க்கு முடிவடுத்த காலமொத்தான்
கார்க்கடலிற் றூன்கடைந்த காலக் கடுவடுத்தான்
போர்க்கடலின் மிஞ்சும் புயன். (12)

ஆயிடையிற் றூரை யமிழ்த மெனத்தோன்றும்
வேயிடையுந் தோளான் விலக்கினுள் வாயிற்
புகைபொடிக்குங் கட்டைப் பொறியிற் செறியுஞ்
சிகைமுடிப்புந் தியத் திகைத்து. (13)

Koviloor Digital Library

விலக்கித் தடுக்கல் விளித்தா னுரத்தைக்
கலக்கிக் கடல்கடைந்த கையா லுலக்கி
யுயிரைக் குடித்த வுடனடுப்ப னென்றான்
செயிரைப் படித்தான் திகைத்து. (14)

கொற்றத் தினவுன் குவவுப் புயவலிமைக்
கிற்றைத் தினமடுச்கா திடுண்டோன் முற்ற
வடுந்துணைக்கு வந்தழைத்தா னுக்க முளதாம்
நெடுந்துணைக்குத் தக்க நினைந்து. (15)

மூன்றாக முற்று முடிவி னுலகெவையு
மேன்றாக முற்றிடினு மென்னெதிரிற் றேன்றிற்
றொலையுமெனல் சான்றாகுஞ் சொல்வ னதனை
யலையுமுன துள்ளத் தமை. (16)

மந்தரநேர் மத்தாக வாசுகியே நாணுகச்
சந்திரனே தம்பமதாய்த் தாங்கவட விந்திரனே
தேவ ரசுரர் திறலலைய யான்கடைந்தே
னுவ தனையறியா ரார். (17)

பவர்சே ரவுணர் பலமுடைய தேவர்
எவர்சேர வெண்ணுதா ரென்னைக் கவருமுயிர்
கூற்றமெற்காம் பேருரைக்கக் கூசுமெனி லாசடையு
மாற்றவர்க்கா யேவரெதிர் வார். (18)

பேதமையர் நேரெதிர்த்தாற் பேரா தவர்படைத்த
மாதமையும் வீரம் வரமுதல பாதியது
மென்னதுவா மென்னி லெவர்பகைவர் நின்கவலை
மின்னதுவாம் பொன்னிடையே விண். (19)

அன்னதனைத் கேட்ட வவளு மரசவவற்
கின்னுயிராம் நட்பமைந்தி ராமனென்பா னுன்னுயிரைக்
கோடலுக்கு வந்தான் குறிக்குமன்பர் சொல்லிதுநின்
னுடலுக்கு நாளலவென் றாள். (20)

Koviloor Digital Library

உழைத்த விருவினைக்கு மூறுகாண் கல்லா
தழைத்த வுலகுக் கறமே யிழைத்தவற்கா
யேற்ற வறஞ்சொல்லா தியம்பிநீ யென்புரிந்தாய்
தோற்றவரும் பெண்மை தொடர்ந்து. (21)

இருமையு நோக்கு மியல்பாற் கிதுவும்
பெருமையோ வீதிற் பெறலென் னருமையினல்
நின்றுயிரைத் தாங்கும் நிலைமைத் தருமத்தான்
தன்றுணையே தானுந் தரன். (22)

ஏற்ற வளமையுல கெய்தி யதனைமுற்று
மாற்ற வளமதித்தம் மைந்தனுக்கே யாற்ற
வுவகையினுற் றந்த வுரவோனைப் போற்று
திவகையினுற் புந்திகொண்ட தென். (23)

ஒன்றிக் கடலுலக முற்றடுத்துப் பற்றிடினும்
வென்றிச் சிலையலது வேண்டுமோ தன்றுணைதான்
தன்னையன்றி யல்லான் தரமில் குரங்கதனல்
என்னைவென்றி புல்லு மியைந்து. (24)

தம்பியரை யன்றித் தனித்துயிர்வே றில்லையென
விம்பரிடை யெண்ணுநல மேற்றவரன் எம்பியுடன்
யானெதிர்ந்த போரி னிடைஏ தொடுத்தடுமோ
தானறிந்த வீரன் தடுத்து. (25)

இருத்திவனை நீயிங் கிமைப்பி னடுத்திங்
றுருத்திவனை யாவிகுடித் தற்ற கருத்தழித்து
வந்தடைவே னென்றான் மருமொழியை யஞ்சிநின்றாள்
கொந்தடைவேய் கூந்தற் கொடி. (26)

ஒல்லைச் செருவேட் டுயர்புயத்தா மோங்கலும்பர்
எல்லைக்கு மேலே யிவர்வதென மல்லற்
கிரித்தலையின் வந்தான் கிளர்வாலி யாலம்
சிரித்தலையின் வந்ததெனச் சேர்ந்து. (27)

Koviloor Digital Library

நின்றா னெதிரெவரு நெஞ்சு நடுங்கியெஞ்சத்
தன்றோள் வலியான் தகைவாலி குன்றூடு
வந்துற்று நின்றான் மறத்தவுணன் சொற்குறித்துக்
கந்துற்ற சிங்கங் கடுத்து. (28)

ஆர்க்கின்ற பின்னே னகமறிந்தா ளுர்த்தடுத்தான்
வேர்க்கின்ற வானுருமு வீழவே போர்க்கின்ற
தெல்லா வுலகு மிரியச் சினத்தடுத்தார்
மல்லார் புயத்தார் மதர்த்து. (29)

அவ்வேலை வள்ள லடற்றம் பியைநோக்கிச்
செவ்வேலை நோக்கசுரர் தேவர்சிறக்க வெவ்வேலை
எம்மேக மெக்காலோ டெக்காலத் தீயுமிவர்
தம்மேனி மானுந் தகைத்து. (30)

வள்ளற்குத் தம்பி வழங்குந் தமையனுயிர்
கொள்ளற்குக் கூற்றைக் கொடுத்தகுரங் கெள்ளற்கு
வந்தடுத்த போரை மதிப்பே னலனென்றான்
கந்தடுத்த தோளான் கனன்று. (31)

ஆற்றாது பின்னு மறைவா னறமழுங்கத்
தேற்றாது செய்வாரைத் தேறுதலென் மாற்றானு
முன்னவனைக் கொல்ல முனையடுத்து முட்டிநின்ற
வின்னவனை நல்லனென லென். (32)

அத்தா விதுகேளென் றைய னெடுத்துரைக்கும்
பித்தாம் விலங்கொழுக்கைப் பேசலென்னே எத்தாயர்
பண்டியுற்றோ ரேனும் பரதற் கிணையுலகில்
அண்டியுற்றோர் கண்டதில்லை யாம். (33)

விற்றாங்கு வெற்பன்ன வீரப் புயத்தமெய்மை
யுற்றாங்கு நிற்பர்சில ரோய்வர்பலர் மற்றும்
அவையெல்லாம் நன்மையென லாமோ புகலின்
நவையில்லா ரேவர் நவில். (34)

Koviloor Digital Library

வீரத் திறலோர் விளம்ப வருவேலை
சூரத் திறலிருவர் சூழ்காலை நேரிற்
கடுத்தார் தடுத்தார் கனன்றுருக்கிக் கோபத்
தடுத்தார் சிரித்தா ரதிர்த்து. (35)

குன்றினொடு குன்றமொத்தார் கோளரிவல் லேறுருமு
மொன்றினொடு மொன்றடுத்த வொத்தனரா நின்றார்
திரிந்தார்கள் சாரி திகிரியெனச் சூழ்ந்து
பிரிந்தாகள் தாரி பெயர்ந்து. (36)

தோளொடுதோ டேய்த்தபொறை தொன்னிலந்தான் றூங்க
தாளொடுதா டேய்க்கத் தழலடுத்த வாளொடுசேர் [லுண்டோ
மின்னிரண்டு நின்றெனவும் வெங்கோ ளிரண்டெனவு
மன்னிரண்டு பேர்போர்ச மம். (37)

தந்தோள் வலியுடையார் தாயொருத்தி சேயரென
வந்தோர்பெண் டன்னால் மலைக்கலுற்றார் முந்தோரிற்
சிந்தோ டரிக்கட் டிலோத்தமைதன் காதலுற்ற
சுந்தோப சுந்தரையொத் து. (38)

கடலிரண்டு சேர்ந்தெனவுங் காவலுடை மேருத்
திடலிரண்டு சேர்ந்தெனவுஞ் சீற்ற முடலிரண்டு
கொண்டடுத்த தென்னக் குறிக்கவரு போர்புரிந்தார்
விண்டடுத்த தோளார் விரைந்து. (39)

உளகங் களினுத ரோங்கிவரு கட்டியால்
மேகங் களுமெரிந்த வெற்பெரிந்த மாகமொடு
திக்கிரிய நின்ற திறலமரர் சென்றொளித்தார்
மிக்கிரியு மிவ்வுலக மே. (40)

விண்மே லடுத்தனரோ வெற்பின் முகட்டினரோ
மண்மேலோ மாதிரத்தின் வாய்ந்தனரோ வென்ன
முடிப்பாரி னின்றார் முழுதுடலிற் பல்லாற்
கடிப்பார் புடைப்பார் கடிந்து. (41)

Koviloor Digital Library

எழொத் துலகுதிசை யெட்டோ டிரண்டுமுட்கு
மாழிக் கிளர்மடங்க லார்ப்பென்னப் பாழித்
தடந்தோளு மார்புந் தகரக் கரத்தா
லடர்ந்தோங்கிக் குத்தியடுத் தார். (42)

வெவ்வா யெயிற்றான் மிடலோர் கடிப்பச்சென்
றெவ்வாயுஞ் சோரி யெழுதலாற் செவ்வாயை
யொக்கநின்ற மற்றை யுயர்கோ ளுடுவினொடு
செக்கரொத்த மேகஞ் சிறந்து. (43)

வெந்துபொறி வல்லிரும்பின் மேலடிக்குங் கூடமதாற்
சிந்துபொறி போற்றிசையிற் சேர்ந்தடுக்கும் விந்தமொத்த
விந்திரன்றன் சேயு மிரவி சுதனுமுடன்
சந்தவன்கை தாக்கத் தகர்ந்து. (44)

உரத்தின் மடுத்திடுவெ ருந்தி யுதைப்பர்
கரத்தி னெறிவர் கடிப்பர் மரத்தி
னடித்துரப்பி மாமலையி னுன்ற சிரத்தி
னிடித்துரப்பி நிற்ப ரெதிர்த்து. (45)

எடுப்பர் தரமடுத்தா ரேற்றெறிவர் வந்து
கொடுப்ப ருரமடுத்துக் குத்திக் கடுப்பிற்
கறங்கென்னச் சாரி கடுகி வருவர்
திறங்கொண்ட வீரர் தெழித்து. (46)

வாலி னடுத்து வலிப்பர் வலியுகவே
காலி னெடுத்துக் கடுத்தெரிவர் வேலைகிரின்
மாமலையின் மூழையென மன்னு முடறுளைப்பர்
தாமலையும் வீரர் தகைந்து. (47)

மண்ணகத்திற் றோன்று வரைகள் மரங்களொடு
கண்ணகத்திற் றோன்றுவன கைப்படுத்தி யெண்ணகத்தி
வீசுதலி னெற்றலினுன் மேலெழுந்து காலலைந்து
வீசுமலை வேலை விழும். (48)

Koviloor Digital Library

வெருவற்குற் றாமரர் வேறென்னை சொல்லின்
ஒருவர்க்குற் றாரொருவ ரோங்குஞ் செருவிற்கோ
விற்காலுந் தீப்பொறியான் வெண்மயிரைத் தீர்த்தன்முளி
புற்கானிற் றீப்பொதிந்த போல். (49)

அன்னெடும்போ ராற்ற வடல்வாலி தம்பிதனை
வன்னெடும்போர்க் கையால் வலித்தரிதான் கொன்னகந்தாற்
றும்பிதனைத் தீர்த்ததெனத் தோன்றக் கரங்களினான்
மொய்ம்பதனைத் தீர்த்தான் முனிந்து. (50)

மலைந்திளைத்த பாற்கரன்சேய் வள்ள லிடைவந்
துலைந்திளைத்த போழ்தி னாரவோய் குலைந்திடற்கென்
வேற்றுமையான் காண விரைமலரைச் சூடவென
வாற்றுமவன் மீட்டு மடர்த்து. (51)

தயங்கவரு தாரகைபோற் சார்பூச் செனியன்
வயங்கவரு பேரிடிபோல் வந்து சயங்கவரும்
வாலிபயங் கொண்டு வரவறியத் தாக்குமிபம்
மேலபயங் காத்தோன் விட. (52)

அயிர்த்து வருமனத னந்தகனு மஞ்சச்
செயித்து வருகனற்கண் சேந்து வயிர்த்தகையின்
காலிற் கதிர்சேய் கலங்க வுயிர்த்தலங்கள்
மேலிற் புடைத்தான் வெகுண்டு. (53)

கக்கினான் மிக்கவுயிர் காலுமுயிர்ப் பாற்கண்ணி
னாக்க வெரிப்படலை யோடுதிரம் திக்கடுத்து
நோக்கினான் சூரியன்சேய் நோக்கப் பிடித்தடர்த்துத்
தாக்கினான் காரிவன்சேய் தான். (54)

எடுத்தலங்கப் பூவினிடை யெற்ற விளவல்
கடித்தலங்கண் டத்தினிடை கைகள் மடுத்தெடுத்து
மீக்கொண்ட வாலிநடு மேலடர்த்த கோல்விடுத்தான்
மாக்கொண்டன் மேனி வரன். (55)

Koviloor Digital Library

வாழைக் கனிகழிய வள்ளூசி சென்றதெனப்
பாழிப் படர்மார்பிற் பாய்ந்தனவா லூழுற்ற
பூமிமுத னான்கடுத்த பூதவலி மேவுரத்தை
நேமிமுத லம்பு நிரந்து. (56)

அலங்கு புயவலிபோ யான்றதம்பி தன்னை
வலங்கொளப்பா ரெற்றவரு வாலி கலங்கிவிழும்
வல்விசைக்கால் வீச வருகடைக்கால் மேருவெனும்
கல்விசைத்து வீழ்தல் கடுத்து. (57)

சையமலை வெள்ளிடியாற் சாய்ந்ததெனச் சாய்ந்து
வையமலை யக்கிடந்த வாலியவன் வெய்யவன்றன்
மாமதலை யைக்கவரும் வாகுமெலிந் துங்கவர்ந்தான்
மாமைதரு பாண மதை. (58)

வெற்றிபுரி பாண மிடலுரத்தி னூடெடுத்
துற்ற புரத்துறமு னோர்கரத்தாற் சுற்றி
விறலினுறு கால்வாலின் மேலடுத்துப் பற்ற
மறலிசிர மாட்டும் மலைத்து. (59)

எழுந்து முகடிடிய வேற்க விவரும்
உழுந்துருளு முன்னுகப்ப வோங்கும் விழுந்தடுத்துப்
பாரெய்தா வேரப் பறிக்கவெண்ணு மிச்சரத்தை
யாரெய்தா ரென்னு மழன்று. (60)

எற்று நிலத்திடிக்கு மெங்கும் பொறிபறக்கச்
சுற்று மடலம்பைத் தொல்கரத்தாற் பற்றிமற்றும்
வாலடுத்துக் காலான் வலிமை யுறப்பறிக்கும்
மேலெடுத்துக் கூவி விளித்து. (61)

தேவரோ வென்றயிர்க்குந் தேவ ரிதுசெயற்கு
மாவரோ வென்னு மயலோர்தாம் எவரோ
வென்றுமுறை செய்யு மிறைவ னிவன்செயல்தான்
நன்றுமுறை யென்னும் நகைத்து. (62)

Koviloor Digital Library

நேமியோ சூலமிதோ நேரான் கவுஞ்சமட்ட
சாமிவே லோபாக சாதனன்ற ஞமமிகு
வச்சிரந்தா னென்மார்பை வாட்டும் வலியுடைத்தோ
விச்சிரந்தா னென்னு மெனும். (63)

வில்லாற் றுரப்பரிதிவ் வெஞ்சரந்தா னென்றயிர்க்குஞ்
சொல்லாற் றுரப்பறவர் சொற்றதெனும் பல்லாற்
கடிக்கு மகலமதைக் கவ்வும் சரத்தைப்
பிடிக்கு மொடிக்கப் பெறும். (64)

சரந்தா னெனத்தெரிந்த தாழ்ந்து சலித்தென்
னுரந்தா னுருவிவரு மொன்றைக் கரந்தா
மிரண்டினிலும் பற்றி யிழுத்தறிவே னென்றான்
திரண்டவரைத் தோளான் றெழித்து. (65)

ஓங்கும் பெருந்திறலா னூக்கமனத் தன்கரத்தின்
வாங்கும் பெருந்திறலார் வாளியெனு மாங்கதனை
நோக்கினர் தேவர் நுவலும் வலியையனத்
தாக்கின ரார்வியக்கா தார். (66)

வாசத்தார் மார்பா மலைவழங்கு மாவருவி
யோசைத்தாஞ் சோரிகண்டா னோர்பிறப்பாம் பாசத்தாற்
சூழ்ந்ததம்பி நேசத் துணைவிழிக ணீர்சொரிய
வீழ்ந்ததன்பின் மேனி விதிர்த்து. (67)

பறிப்பனின்ற பல்லம் பருவலிக்கைப் பற்றி
யிறப்பனென்றான் மேரு விறுப்போன் முறிப்பனென்று
வந்தடுத்தா னேனும் மடுத்தலறி தாய்ப்பொறித்துத்
தந்தடுத்த வக்கரங்கண் டான். (68)

மும்மை யளிக்கு முதன்மனுவை மோனவரர்
தம்மை யளிக்குந் தனிப்பதத்தை யிம்மைவகை
யேழ்பிறப்புந் தீர்க்க விசைமருந்தி ராமனெனுஞ்
சூழெழுத்தைக் கண்டான் றுயர்த்து. (69)

Koviloor Digital Library

இல்லறந்தீர் நம்பியவ னெங்களுக்காத் தங்களுக்காம்
வில்லறந்தீர் வீரனற வேதமுறை சொல்லறந்தான்
நீங்காத சூர னெறிமரபும் விட்டதெனத்
தங்காத நாணமடைந் தான். (70)

வெள்குந் தலைசாய்க்கும் மேலுஞ் சிரிக்குமன
முள்கு மிதுவுமற மோங்குமெனு முள்குகுழி
புக்ககளி யானை புனைசேற்றி னனதென
வுக்கவரு நெஞ்சமழி யும். (71)

இறைதிறம்பு மென்னே யிழிந்தோ ரியர்க்கை
முறைதிறம்பு மென்றுரைப்பான் முன்ன மறைதிறம்பா
மன்னடுத்த வாய்மை வழங்கு நிலைகாட்டத்
தன்னடுத்த வில்லவன்வந் தான். (72)

கண்ணுற்றான் வாலி கனந்தான் மலர்பூத்து
மண்ணுற்றாய் வில்லேந்தி வந்ததெனப் புண்ணுற்ற
சோரிவர நோக்கித் துகளுடையாய் செய்ததென்னை
பூரியர்தஞ் செய்கை பொறுத்து. (73)

வாய்மையொடு மன்னுயிரை வந்தளித்த வள்ளலிடை
தூய்மைப் பரதன்முன் தோன்றினையே தீய்மைதனை
மற்றதொன்னுர் செய்தலதை மாற்றியரு ணீபுரிந்தா
லுற்றதென்னு மென்று னுருத்து. (74)

குலமீது கல்வியிது கொற்றத்தாற் பற்றும்
நலமீ தெனப்புவிக்கு நாட்டும் தலைமையுற்ற
நீயலம்பச் செய்தா னிகரி லறமென்னும்
வீயலம்பு தாராய் விளம்பு. (75)

கோவியலுந் தன்மங் குலத்தி னுதித்தோர்க்கே
யோவியமா மன்னு வுடைமையன்றோ வாலியென
வுய்கையது செய்யு முயர்தேவி யைப்பிரிந்து
செய்கையது செய்யாய் திகைத்து. (76)

Koviloor Digital Library

அரக்க ரழிவுபுரிந் தன்றொளித்தார் வேறு
குரக்கரசைக் கொல்லக் குறித்தா யிரக்கமென்ப
தெங்குதித்தா யென்பாலி னெப்பிழைகண் டொப்பினையோ
கொங்குதித்த தாராய் குறித்து. (77)

ஒலிகா லலையுலகி னூர்குரங்கின் மாடே
கலிகாலம் வந்த கலப்போ மெலியா
திகழ்தலின்று நீபுரிந்தா யேனு முலகோர்
புகழ்தலன்றி யென்னும் புகல். (78)

கூட்டறவாய் நின்றபெருங் கொற்றவநின் றூதைமுனம்
பூட்டரசு தம்பிக்குப் பொற்பளித்தாய் நாட்டமதால்
நாட்டுநன்மை செய்தாய் நலத்தரசென் றம்பிகொள்ளக்
காட்டுநன்மை செய்தாய் கடன். (79)

அறைகழலார் வீர ரவர்புரிவ தாண்மைத்
துறைகழலார் சொல்லவரு தொன்னூற் கிறைகழலா
யென்னிடத்திற் செய்த திதுவே விலங்கையர
சன்னிடத்தி லென்னதப்பி தம். (80)

இருவரெதிர் போரி லிருவருநல் லுற்று
றொருவரரு டாங்க வொளித்து வரிசிலையை
வாங்கிவா யம்பு மருமத் தலத்தெய்த
லோங்கிவாய் தன்மமிது வோ. (81)

வீரமன்று மேலும் விதியன்று மெய்ம்மையினும்
வாரமன்றுன் மண்ணினுக்கென் மன்னுடலம் பாரமன்று
பண்ணும் பகையன்று பண்பொழிநெஞ் சீரமன்றி
எண்ணும் படியடுத்த தென். (82)

இருமையையு நோக்கி யெவர்கட்கு மொக்கு
மருமைவலி யன்று வறத்தாம் பெருமை
யொருமைத் திறத்தி னொருவர்க் குதவல்
வருமைத் திறத்தா மதி. (83)

Koviloor Digital Library

செயலைத் தெறும்பகையைத் தேர்வான் றெரிந்து
மயலைத் துணையமைத்தா யாமோ புயலைத்தாம்
பொங்கரியைப் போக்கிப் புனமுயலைப் பற்றுவது
சிங்கரிய நல்லமுயர்ச் சி. (84)

காரியன்ற தாருங் களங்க நிறந்தொன்மை
யூரியன்ற மாமதிக்கே யுற்றுளதாஞ் சூரியன்றன்
மாமரபார்க் கோர்மருவு மன்னு குலந்தன்னி
லாமரசா யாக்கினையென் றான். (85)

மற்றொருத்த னென்னை வலிந்தறைகூ வச்சினந்தே
னுற்றொருத்தன் அம்பா லுயிருண்டா யிற்றைவலி
கொண்டடுத்தோ வெல்லக் குறித்தாய் மிகநன்று
பண்டடுத்தோர் செய்கையென்னும் பார். (86)

நூலியற்கை யன்று நுவலுங் குலச்செய்கை
போலியற்கை யன்று புலமன்று வாலி
தனைப்படுத்தா யன்று தருமமெனும் வேலி
தனைப்படுத்தாய் மன்னவர்க்குத் தான். (87)

தாரத்தை மற்றொருவன் சார்ந்து கொளவிடுத்து
வீரத்தைத் தாங்குசிலை வீரமிதே நேரற்று
நின்று நிராயுதன்மேல் நேர்வாளி யெய்வதற்கோ
துன்றுசிலை கற்றாய் துணிந்து. (88)

என்றுமொழி வாலி யெயிறு பொடிபடநேர்
தின்றுவிழி தீயுகவன் சேர்சினத்தான் கன்றிமொழி
வுற்றதனைக் கேட்ட வுயர்தரத்து வள்ளல்மதித்
திற்றதனைச் சொல்வா னெடுத்து. (89)

பிலம்புக்க நீநெடுநாள் பேராது கண்டு
புலம்புற்றான் பின்போந்த போதிற் குலம்புக்க
நன்முதியார் போற்றி நலத்தரச னாகவென்றார்
பன்முதிய சாத்திரப்பண் பால். (90)

Koviloor Digital Library

வான்கிளையா யென்முன்னை வைத்த வனையடுத்துத்
தான்கிளையு மாளத் தடிந்தியான் மேன்மரணம்
செய்வே னிருந்தரசு செய்யே னுரையூனம்
உய்வேனோ வென்று னுருத்து. (91)

பற்றுடைய பண்பார் படைத்தலைவர் பாங்கருளார்
முற்றுடைய மோன முதியோரு மெற்றரசு
முன்னதுதான் கொள்கவென வோங்கு பலநூலாற்
சொன்னதனாற் கொண்டான் றுணிந்து. (92)

வந்தவுன்னைப் போற்றி வணங்கி மகிழ்ந்தடுத்தான்
எந்தையென்க ணுற்ற வினத்தவர்க டந்தவுந்தன்
பொன்னரசா மென்றுன் பொருந்து மனமுடையான்
சொன்னவுரை கேட்டுந் துணிந்து. (93)

கொல்லலுற்று யும்பிதனைக் கோதா யடுத்தவற்
கில்லையுற்ற செய்கைக் கிரங்கலைநீ யல்லலுற்றே
னுற்கபய மென்றுனை யோங்கிப் புடைத்தலுற்றாய்
மற்கடமென் கொள்கை மதித்து. (94)

ஊற்ற முனக்கிளையா னுற்றிருந்து முன்னடியிற்
றேற்றே னெனத்தொழுத தூயானைக் கூற்றமுண்ணக்
கொன்றிடுவே னென்று கொதித்தாய் திசையடங்கச்
சென்றிடுவான் றன்னைச் செறுத்து. (95)

அன்னவன்பா னன்மை யறிந்து மருளடுக்காய்
பின்னவன்று னென்பதுவும் பேணகிலாய் வன்னி
யிடுசாபந் தன்னு லிசைந்த மலைக்குக்
கடுவாகு நீபோ கலை. (96)

ஈரமது மிற்பிறப்பா யேற்ற வருவதுவும்
வீரமதுங் கல்வியினும் மெய்ந்நெறியும் வாரமது
மோங்கு புகழொருவற் குற்றமனை கற்பதனைத்
தாங்குபுகழ் தக்கதென்ப தாம். (97)

Koviloor Digital Library

மறந்திறம்பல் வேறே வலியமெனச் சிந்தை
புறந்திறம்பல் தானெளியோர்ப் பொங்க லறந்திறம்பல்
மங்கையர்க டம்பால் மனது திறந்திறம்பல்
சங்கையின்றித் தேரிதனைத் தான். (98)

தருமமின்ன தென்னுந் தகையாகுந் தன்மை
யிருமையுந்தேர்ந் தெண்ணலீ யெண்ணி னருமையும்பி
தன்னா ருயிர்த்துணையாந் தையலவ ளின்பமுற
மன்னா மனதிசையு மா. (99)

ஆதலினா லன்னவனென் னாருயிருக் கான்றதுணைக்
காதலினா னானதினிற் கட்டதென்றா னேதி
லெளியோர் தமையே யெடுத்தருளிக் காக்கும்
அளியோங்கு மண்ண லறிந்து. (100)

பிழைத்த திதுவென்னப் பேரெழிலான் வீரம்
தழைத்த வரனுரைக்கத் தக்க திழைத்தலிலா
வாலி யுரைப்பான் வரதவெங்கட் கித்தொழில்தான்
சாலவுள தென்று தடுத்து. (101)

ஐயநுங்கள் செய்யகுலத் தான்ற பெருமைமிகு
பொய்யின்மங்கை யர்க்கேய் புணர்ச்சியெனச் செய்திலனாந்
தேமலரின் மேலோன் செறிந்தகருத் தின்படியே
யாமலது வேறென்னை யாம். (102)

மணமு மிலையா மறைநெறியின் வந்த
குணமு மிலையாங் குணமி லுணர்வதுவுஞ்
சென்றுழியிற் செல்லுந் திறமல்லால் வேறென்னை
புன்றொழிலே போர்க்கும் பொருள். (103)

பெற்றி யிதுவாகும் பேரெழிலா யென்னிடையிற்
குற்ற மெதுவாகுங் கூறென்றான் வெற்றியுற்ற
வீரனது கேட்டு விளங்க வெடுத்துரைப்பான்
சீரினது சொல்லாற் றெளிந்து. (104)

Koviloor Digital Library

நலங்கா ணமரர் நவையில் குலத்தாய்
கலங்கா வறநெறியைக் கண்டாய் விலங்காத
நன்மைசெயற் காகவரு நல்லரச ராயவர்கள்
தின்மைசெயற் காமோ தெரிந்து. (105)

பொறியிற் குளதோ புலநோக் கியதாம்
அறிவிற் கறிவறத்தி னறு நெறியுடைய
நோம்பிழைக்கும் பெற்றியைநீ நுண்மை யறியாது
தாம்பிழைக்கி னன்மையென்னுந் தான். (106)

மாடபெற்றும் வல்லிடங்கர் மாள வடர்த்திழுக்கக்
கோடுபெற்றுங் கொற்றவனைக் கூய்நலத்தால் வீடுபெற்ற
நல்லுணர்வின் செல்வமதை நாட்டுங் கசேந்திரனுந்
தொல்லைவிலங் கல்லதென்னை சொல். (107)

சிந்தை நலந்தறத்தாம் சேர்வழியைச் சேர்ந்ததனுற்
பைங்கொடியாள் சீதை பரிவாற்றிச் சந்ததமும்
வீடுபெற்ற வெந்தை விளங்கு மெருவையர
சேடுபெற்ற தார்மார்ப னெண். (108)

நன்றென்றுந் தீதென்று நாடவரு நல்லறிவ
தின்றென்றல் கொல்விலங்கி னேற்றசெயல் நின்றென்று
நன்னெறியு நீயறிந்து நாடா நெறியுளதோ
தொன்னெறியுன் வாய்மையுணர்த் தும். (109)

தக்கவின்ன வாகுந் தகாதனவு மின்னதென
வொக்கவுன்ன லன்றே வுயர்ந்தநல மக்களுந்தாம்
வல்விலங்கே யாவர் மனுநெறியை வாய்ந்தவையேற்
கொல்விலங்குந் தேவரெனக் கொள். (110)

காலன்ற னாற்றல் கடிந்த கணிச்சியான்
பாலுந்து பத்தி பயத்தலால் மாலுந்து
நன்மைதரு பூதங்க ளான்கினுடை யாற்றல்கொண்டாய்
அன்மைதரு செய்கையெதற் காம். (111)

Koviloor Digital Library

மேவுந் தருமமதை மேவி னவரேனு
மேவுந் தவத்தா லிழிந்தோருந் தாவரிய
நற்றவருந் தேவர்களு நன்மை யுளரேனும்
மற்றவருங் கொள்வார் மயக்கு. (112)

இனைய செயலதனா லெக்குலத்தி யார்க்கும்
வினையால் வருங்கீழ்மை மேன்மை யனைய
தறிந்து மழித்தா யமலமனை மாட்சி
செறிந்தவினை யென்றான் றிறன். (113)

அவ்வுரையைக் கேட்ட வரியரசன் றன்புகலுஞ்
செவ்வியநீ நேராஞ் செருவன்றி யவ்வே
மறைந்தெடுத்த தென்னையென்றான் மன்னிளைய வீரன்
சிறந்தெடுத்துச் சொல்வான் றெரிந்து. (114)

முன்புலத்தோட் டம்பி மொழியால் முறையிலுனைத்
தென்புலத்தின் வைப்பனெனச் செப்பினனீ யன்பிற்
சிறந்த வுயிர்க்கபயஞ் சேர்வா யெனத்தான்
மறைந்தெய்த தென்றான் மதித்து. (115)

கவிக்குலத்தான் மன்னவன்றன் கட்டுரையைக் கேட்டுச்
செவிக்குலத்தா நன்மைமனஞ் சேர்த்துப் புவிக்காம்
அறத்திறனைத் தள்ளா னனகனெனச் சென்னித்
திறத்திறைஞ்சிச் சொல்வான் றெளிந்து. (116)

தாயென் றுலகளிக்கச் சார்ந்த தருமவரன்
நீயென்ற நம்பி நெறிநோக்கா நாயென்ற
வென்பா னவையெண்ணா தென்னை யளித்தியென்றான்
அன்பா னவைதேர்ந் தடுத்து. (117)

இரந்தனனும் பின்னுமெந்தை யெண்ணாதேன் குற்றம்
குரங்கெனவே யெண்ணிமனங் கொள்ளே லரந்தைதரு
வெம்பிறவி நோய்க்கு விதமருந்தாம் நற்கருணை
நம்பியெனச் சொல்வா னயந்து. (118)

Koviloor Digital Library

ஏவவரு வாளி யெனையெய்த நாயேற்காம்
ஆவியழி வேலை யறிவளித்தாய் மூவருநீ
முற்று முதலும்நீ முன்னோ னுனையன்றி
மற்றும் பொருளுளவா மா. (119)

புரமெல்லாம் போக்கும் புனிதன் முதலோர்
வரமெல்லாம் போக்கி வலிசா லுரமும்
உருவி யுயிரை நுக ருஞ்சரம லாற்பின்
தரும முலகினுண்டோ தான். (120)

யாவருமெ லாவுயிரு மாயிருது வும்பயனும்
பூவெறியு மொத்த பொதுமையா யாவியுநீ
யாவதென மேலா மறிவோ ருரைத்ததனால்
மேவுபத மெற்காம் விழைந்து. (121)

உண்டான தன்ம வுருவாய் நிறைந்தவுனைக்
கண்டான பின்னெனக்கென் காண்பரிது பண்டான
வெந்தொழிற்கொள் காம விருத்திதா னின்றெனக்குத்
தந்தளித்த சந்ததம்ப தம். (122)

மற்றவனுஞ் செய்கைக்கு மாறுண்டோ வீரமிகு
கொற்றவனு நின்னிலெலனைக் கொல்வித்துச் சிற்றினத்தாம்
வெற்றரசை யெய்தியெம்பி வீட்டரசை யெற்களித்தா
னுற்றறிந்தே னன்மை யுவந்து. (123)

தேவருக்குந் தேவ சிறியா னெனதுதம்பி
பூவிருக்குந் தேனின்மதி போக்கிடினு மேவதனை
யென்பாலிற் கொண்டதென வேற்றலிலா நல்வரந்தா
னுன்பாலிற் கொண்டே னுவந்து. (124)

இன்னாய மேற்பதுண்டா லெம்பிதனை யும்பியர்கள்
தன்னனைய முன்னவனைச் சாய்த்தவனென் றுன்னி
மொழிந்தாலும் நீயிவனை முற்று மளிப்பாய்
மொழிந்தே னருட்பரவை முன். (125)

Koviloor Digital Library

மற்றித் தரத்தினெஞ மாய வரக்கனைவால்
பற்றிக் கொணர்ந்தென் பலங்காட்டி வெற்றித்
தனுமன் மதிக்குந் தரமடுக்கேன் மற்றும்
அனுமன் மதிக்கு மறிந்து. (126)

அனுமன்ரு ஞழியுடை யையநின்றன் செங்கைத்
தனுவென்ருய் தம்பிநின தம்பி யினைய
துணைவழியாம் நின்னடியர் சொற்றவிவர்க் கொண்டு
பிணைவிழியைத் தேடப் பெறும். (127)

என்றியம்பிப் பின்ன ரிருந்த விளவறனை
வன்றுணைக்கை சேர்த்து வரமைந்த வொன்றே
யுனக்குரைப்ப துண்டா லுறுதி தெரிதி
மனக்குறையென் னென்ருன் மதித்து. (128)

மறைமுனிவர் வானேர் வரன்முதல மற்றைத்
துறைமுடிவாஞ் சொல்லேவிற் றாக்கி யறைகழலி
ராமனென நல்லறத்தை நாட்டவந்த நாயகமா
மாமனெனக் கொள்வாய் மனம். (129)

நிற்கு மருட் செல்வ நெறிநின்ற யாவுமெலாங்
கற்குமிவ ஞமங் கருத்தடைப்பாய் பொற்குவடார்
தோளாய் பொதுநிலைமை தோன்றவெனைக் கொல்வலியாம்
வாளாய் மதித்தல் மடம் (130)

கைதவத்தைச் செய்த கணக்கிலவாந் தீமையருஞ்
செய்தவத்தா மையனருள் சேர்விசிக மெய்தலுற்ருர்
வான்பெறுவ ரென்ருல் வரதனடி யேவல்செய்வார்
தான்பெறுவ சொல்வதகைத் தா. (131)

அருமைப் பயனென் னளித்தார் விதியார்
இருமைப் பயனு மியைந்தாய் திருமருவும்
மார்புடையா னேவல் மதித்துப் புரிந்துவரிற்
சார்புடையா காதமென்னை தான். (132)

Koviloor Digital Library

மதமார் குரக்கின் மதிமாற்றி வள்ளல்
உதவிக் குயிரை யுதவு பதவியதை
முத்தர்க் களிக்கு முதல்வன் றிருவடியை
வைத்தற்கென் சிந்தை வசம். (133)

அரசியலாற் பூரித் தயர்தலின்றி யையன்
விரசியலாம் பொற்பதத்தை வேண்டு பரசவரு
சிற்றடிமை குற்றஞ் சிறக்குமென வெண்ணு
திற்றடிமை செய்வா யுகந்து. (134)

என்னத் தகைய வியல்புறுதி யின்னவர்க்குப்
பன்னிப் பரம்பொருளைப் பார்த்துரைப்பான் மன்ன
செயிர்கரத்தல் செய்யுஞ் சிறுவ னருளென்
றுயர்கரத்தை யுச்சிவைத்தா னோர்ந்து. (135)

வைத்தனையான் தம்பி மதிவதன நோக்கி வல்லே
யுய்த்தனையா முன்மகனை யோங்கவென்று னத்தலையான்
ஏவலுற்றான் வந்தா னிரியக் கடல்கலக்கும்
மாவலத்தான் மைந்தா மகன். (136)

சுடருடைய மாமதிபோற் றோன்றி யவனின்
றிடருடைய பேர்க்கண்டு மெண்ணான் மடருடைய
பொன்று முணையின்றிப் போர்த்தவிரத்தத் தடுத்த
தன்றாதை தன்னையடைந் தான். (137)

கண்டான் குருதியிடை கண்கலுழி பாயவரு
மண்டா னிடைக்கிடக்கு மாண்பானை யண்டிணைந்தான்
மான்வீழ்ந்த தேசு மதிமண் டலத்திறொரு
மீன்வீழ்ந்த தென்ன விழுந்து. (138)

எந்தையே யிந்த வெழுகடலாற் சூழுலகின்
சிந்தையா லோர்வினையுஞ் செய்யாதாய் நொந்தனையா
லுன்வலியைத் தீர்க்க வுளகூற்றம் வந்ததன்றோ
தன்வலியைத் தீர்ப்பரெவர் தான். (139)

Koviloor Digital Library

தறையடித்த போற்றீரா தாய்த்திசைக டாங்கும்
கறையடிக்குத் தீங்குபுரி கள்வன் பறையடிக்கும்
நெஞ்சுடையா ளுகும் நிலைமைகவிர்ந் தான்வாலி
துஞ்சுதலி னென்றான் றுயர்த்து. (140)

குலவரையும் நேமிக் குவடுடைய கோட்டின்
தலைவரையும் நின்றாளிற் றாக்கி நிலமறையுஞ்
சீர்கடைய நின்றதிறற் றேவர்க் கமுதமினி
யார்கடைய நின்று ரடுத்து. (141)

மலைவல்லி பாகன் மலர்ப்பாத மல்லாற்
தலைகொள்ளாச் சிந்தைத் தரத்தா யுலைகொள்ளா
நெஞ்சலிலாப் பண்ணவர்கட் கின்னமுத மீந்தவுற்கே
துஞ்சலிலாந் துன்படுத்த தோ. (142)

ஆயபல பன்னி யழுஞ்சுதனை யன்றடுத்த
தூயவர வாலி துதித்துரைப்பா னீயினிமேல்
வல்வினையை நோக்கி வருந்தேலி ராமன்செய்
நல்வினையை நோக்கென்ற னன். (143)

தோன்ற விறத்தல் துகளறத்தா னேக்கினவை
மூன்றுலகோர்க் கும்முடிந்த மூலத்தே யான்றவத்தே
னனவனே யென்ற லடுத்தெனக்கு வீடதனை
மானவனே தந்தான் மதித்து. (144)

பாலமைதான் தீர்தி பதிமனத்தென் சொல்லதனை
மேலமையு மெய்ப்பொருளே விற்றாங்கிக் கால்தரையிற்
றோயநிறை யார்க்கும் துவந்தப் பிணிதவிர்க்கும்
மாயனென்று கொள்வாய் மனம். (145)

என்னுயிர்க்குச் செய்தா னிறுதி யெனநினையா
துன்னுயிர்க்கு நன்மை யுவந்தெண்ணிப் பொன்னுயிர்க்கும்
பூணு யிவனடியைப் போற்றி வருபயனை
மாணுகக் கொள்வாய் வரைந்து. (146)

Koviloor Digital Library

என்றனைய நன்மை யிசைத்துத் துணைக்கரத்தாற்
தன்றனையன் றன்னைத் தழுவியணைத் தொன்று
முனக்கிசைந்த சிந்தை யுறுதியெனச் சொற்றான்
மனக்கிசைந்த தந்தை மதித்து. (147)

நெய்யடைவேற் றானை நிருத ரெனப்புகலும் [யா
துய்யடைவேய்க் காங்கனலித் தோள்வலத்தான் பொய்யடை
வுள்ளத்தார் தேறு மொருவ வடைக்கலமாம்
வள்ளற்றார் மன்னுவி வன். (148)

தன்னடியிற் றாழ்ந்தவனைத் தாமரைக்க ணெம்மானும்
பொன்னுடைவா டந்து பொருத்தியென்றான் மன்னும்
உலகலையு மாற்ற லுயர்வாலி சேர்ந்தான்
பலகலையும் போற்றும் பதம். (149)

கைநெகிழ்த லோடுங் கணைவாலி மார்பதனை
வெய்ய தெனவுருவி மேற்சென்று துய்ய
கடல்தோய்ந்து தேவர் கருதிமலர் சூட்ட
வடல்வாய்ந்த தூணியடைத் தாம். (150)

வாலிவதைப் படலம் முற்றிற்று.

அரசியற் படலம்.

வாலிசென்றான் விண்ணில் வரம்பில்லா வாற்றலுடன்
மேலவன்றன் மைந்தனொடு வீரனுற்றான் கோலமிகு
தாரையது கேட்டுத் தனிக்கணவன் மேல்வீழ்ந்தாள்
தாரைபொழி நீரா டவித்து. (1)

குங்குமச்சே றென்னமுலைக் கோட்டிற் குருதிபொங்கப்
பொங்கு குழல்சிவப்பப் பொன்னனையா ளங்கவன்றன்
மார்பிற் புரண்டாள் வளர்ந்துடைய செக்கருற்ற
சார்பிற் புரளுமின்போற் றான். (2)

Koviloor Digital Library

வேய்ங்குழலும் பாங்கடுத்த வீணை யிவைநாண
வேங்கை யழுதா ளிடர்க்கடலின் பாங்கடைந்தாள்
அன்ன நடைமா னளகஞ் சரிந்துவிழப்
பன்னவரு மின்ன பரிந்து. (3)

வரைசேராத் தோளினிடை வைகுவே னானும்
கரைசேரா வேலையிடர் காணேன் உரைசேர்
உயிரேயென் னுள்ளமே யுற்றடுத்து வந்தேன்
செயிரேனு னென்று டிகைத்து. (4)

துயரந் தனையறியாத் தூயவளா மென்னை
அயருந் தரமிதுவென் றாக்கும் செயிர்தீர்
விதியான தெய்வமே வெற்றுடல நிற்குங்
கதியான வென்றாள் கரைந்து. (5)

நறிதாகு நல்லமுத நாட்டிநீ நல்கப்
பிறியா வுயிர்பெற்ற பெற்றி யறியா
நடுவன்மை கொண்டமன நாட்டந்தா னென்னே
அடுவன்மை கொண்டா னகம். (6)

அணங்காரும் பாக னடியாசை தோரு
மணங்கான் மலர்கொண்டு வாழ்த்தி வணங்கவரு
காலமொரு மூன்றுங் கழிய விருப்பதென்னே
கோலவர வென்றாள் குறித்து. (7)

வரையாகுந் தோள்பொடியின் வைகும் படியாய்த்
தரையாகுந் தன்மையது தானென் னுரையாய்
கொடியேன் செய் பூசல் குறித்தொன்றுஞ் சொல்லா
யடியேன்செய் குற்றமெனத் தாம். (8)

னைவானே னையவினி நானு மிருந்திங்ஙன்
மெய்வானோர் நாடடுத்து மேவலின்றி மெய்யாய்நீ
என்னுவி யென்பதுவு மேற்கா மொழியதுவோ
மன்னுவி தென்றாண் மருண்டு. (9)

Koviloor Digital Library

செருவாருந் தோணினது சிந்தையுளே னென்றால்
மருவார் சரமெனையும் வவ்வும் ஒருவாதென்
னுள்ளத் துளேயென்று முன்னுயிர்க்குத் தீங்காமோ
கள்ளத் துளமொழியோ காண். (10)

ஓயாத வாளி யொளித்தெய் துயிருண்ட
வாயாத வள்ள லடுத்துன்பால் வாயாலே
சொன்னவகை வாழ்வைத் துரிதத் தளிக்குமுனை
யின்னவகை செய்வதுதா னென். (11)

சொற்றேன் முனமெனது சொல்லதனைக் கேளாம
லற்று னதுபுரிதற் காகானென் றுற்றடுத்த
வும்பிதனைத் தெட்டுதற்கா யோங்கிவந்து நீயிறந்தாய்
நம்பிதனை நம்புமெற்கென் னும். (12)

நீருகு மேருமலை நீயே நெருக்கியுற்றால்
மாறோர் கணையுன்னை வாட்டுவதோ தேறேன்
விளிந்துளது நீதானோ வேறுமொரு வாலீ
விளிந்துளனோ வென்றழுதாண் மின். (13)

தகைசேர்ந்த வண்புகழ்சேர் தம்பியா ரின்று
பகைசேர்ந்தா ரானதொரு பண்பால் வகைசேர்ந்தார்
சிந்தி யுலந்தார் திறன்மகனே நம்வாழ்வும்
அந்தரமா மென்று ளயர்ந்து. (14)

அருமந்த மைந்துடைமை யாக்கவரு வில்லார்
ஒருமைந்தர்க் கொவ்வாதை யுன்னிற் றருமந்தான்
தக்கவர்க்குத் தாங்குந் தரமிலையோ வென்றழுதாள்
மிக்கவர்க்குண் மிக்காண் மெலிந்து. (15)

என்றாண் மனமழிந்தா ளின்ன லொடுபன்னி
யொன்று வுணர்வேது முற்றிலளாய் நின்று
ளனையவளை மாருதியு மல்ல லகற்றி
மனையினுறச் சொற்றான் வரைந்து. (16)

Koviloor Digital Library

மடவாரா லன்ன மடவாரலை முன்ன
ரிடமாக்கி வாலிதனக் கேற்ற கடனனைத்துங்
கண்டடுத்து வந்ததனைக் கண்ண னுடலுவரைத்தான்
விண்டடுத்த தோளான் விழைந்து. (17)

காலைக் கிரியடுத்துக் காய்ந்து வருமருக்கன்
மேலைக் கிரியடுத்து மேவுமெல்லை சாலும்
நகமொத்த தோட்குரக்கு நாயகன்றன் செய்ய
முகமொத்த மண்டலந்தான் முன். (18)

மறைந்தா னருக்கனுடன் வள்ளியோன் சிந்தித்
துறைந்தான் மடந்தைநல முன்னிக் குறைந்த
மனத்தளவில் கங்குன் மதித்தடுத்து நீந்தும்
புனத்துளவ மாலைப் புயன். (19)

புதல்வன் மகுடம் பொறுக்க வரலால்
முதல்வ னுவகையொடு முந்தி யுதவவரு
பூமகள்சேர் பொற்கமலம் பூங்கரத்தி னுலவிழ்க்கும்
கோமகனுஞ் சூரன் குறித்து. (20)

அதுகாலந் தன்னி லருளளிக்கு நாதன்
மதிசாலுந் தம்பிதனை வல்லை கதிரோன்றன்
மைந்தனைநீ கையால் மகுடம் புனையென்றான்
பந்தனைநீக் கையன் பரிந்து. (21)

அப்போதே செய்ய வருளளிக்கு நாயகன்றான்
மெய்ப்போதன் மாருதியை வீரவா விப்போதே
இன்னமகு டம்புனைதற் கேற்ற பொருளனைத்தும்
தன்னனையாய் தந்தருளென் றான். (22)

மண்ணும் புனலடுத்த மங்கலங்கள் தங்கமுடன்
எண்ணும் முடிமுதல வேற்றவெலாம் நண்ணும்
படியமைக்கத் தம்பி பரந்தாமன் சொல்லால்
முடியமைக்க வந்தான் மொழிந்து. (23)

Koviloor Digital Library

மறையோர்க ளாசி வழக்க வமரர்
நறைதோய் மலர்பொழிய நாத னிறையோன்றன்
தம்பி யிளையவரன் தன்கரத்தி னற்சூட்டும்
பைம்பொன் மகுடம் பரிந்து. (24)

பொன்னடுத்த மோலி புனைந்து கனந்தழுவு
தன்னடுத்த பொற்சரணந் தாழவுடன் மன்னெடுத்து
மார்பிற் றழுவி மகிழ்ந்துரைக்கு மன்னவர்க்குச்
சார்புற்ற நன்மை தனை. (25)

ஈண்டுநின்று சென்றன் னிருக்கை தனையெய்தி
வேண்டுமர பெண்ணி விதிமுறையாற் பூண்டுவரு
பேரரசுக் கேற்ற பெருமைதரு மைந்தனொடு
சீரரசு செய்வாய் சிறந்து. (26)

வாய்மை சிறந்த மதியமைச்சர் மாந்தரோடும்
ஆய்மை சிறந்த வறிஞரொடுந் தூய்மையுடை
யாவரையும் பேணி யருளமைந்து நன்மையுடன்
கோவரைவு செய்வாய் குறித்து. (27)

புகையுடைத்தா மென்னிற் புலிங்கவன லுண்டாம்
வகையுடைத்தாம் நூலோர் வழக்கே பகையுடைத்தாம்
சிந்தையர்க்கு நன்மை சிறந்த நகைமுகத்தாம்
விந்தைதரச் செய்வாய் விழைந்து. (28)

தேவர்க்குஞ் சிந்தை தெவிட்டாத செல்வமுந்தன்
காவற்குச் சொந்தம் கருதுவாய் எவர்க்கும்
நண்ப ரயலார் நயமில் விரவலராம்
எண்பரவ மூன்றுவ தெண். (29)

செய்வனவும் செய்தடுத்த தீமை கருதாது
வைவனவுஞ் சேரின் வளங்கூறல் மெய்மை
வழங்கலொடு வெம்மையின்றேல் மைந்துடனே நன்மை
தழங்கலொடு வந்தடுக்குந் தான். (30)

Koviloor Digital Library

சிறிய ரென விகழ்ச்சி செய்யாமை வேண்டும்
நெறியழிய யான்றீமை நேரக் குறியதனுக்
கூனியினு லிந்தக் கொடியபழி வந்ததெனின்
மேனியிரூ லென்னும் விளம்பு. (31)

மங்கையரால் மாந்தர் மரண மடைவரென்றல்
சங்கையற வாலிசெய்கை சாற்றுவதா மங்கவர்கள்
தன்மையினுல் மிக்கபழி சாரு மெனவெங்கள்
தன்மையதே சால்கரியாந் தான். (32)

நாயகனே வல்லனிவ னம்மைப் பயந்தெடுத்த
தாயெனவே தாங்குதியாற் சார்ந்தவரை யாயதன்மை
யாகி யறமறந்தா லன்னவர்க்குத் தீயெனவே
யாகியறச் செய்வா யறிந்து. (33)

இறத்தல் பிறத்த லௌவிரண்டு மென்றுந்
திறத்த வினையாற் றெரிந்த வறத்தி
னிறுதியது வாழ்நாட் கிறுதி யதுவே
யுறுதியது கொள்வா யுளத்து. (34)

ஆக்கமொடு கேடு மறத்தினுெடு பாவத்தாஞ்
சேக்கையென நூலோர் தெரிந்துரைத்தார் நீக்கமின்றி
நன்மைதனை யெந்நாளும் நாடி யடையடுத்த
தின்மைதனை நீக்கு தெளிந்து. (35)

இன்ன தகைமையென்ப தேற்ற மரபினெண்ணி
மன்னரசு செய்து மழைக்காலம் பின்னுறவே
மாற்கடலாஞ் சேனை வளத்தான் வரவென்றான்
பாற்கடலாஞ் சேக்கைப் பரன். (36)

குரங்குறையுந் தானமெனுங் குற்றமது வல்லாற்
றரங்குறையா தாமுவணை தானும் வரங்குறையாக்
குன்றமதி லெம்முடனே கூடிச் சிலகால
மொன்றமதி யென்றா னுவந்து. (37)

Koviloor Digital Library

அரிந்தமநிற் சேர்ந்துன் னருளுக் குறியேம்
பிரிந்துரையுஞ் செல்வமென்ன பெற்றி கருந்தடங்கண்
அன்னைதனை நாடு மதுகாருஞ் சேரவென
மன்னைப் பணிந்தான் மகிழ்ந்து. (38)

எந்தலது கேளா வெம்போல் விரதியர்கள்
வேந்த ரிருக்கை விழைந்தன்றாற் போந்தவணின்
யாமிருக்கி னெம்மை யளிக்கும் பொழுதுனக்காம்.
கோமகற்காஞ் செய்கையென்னு கும். (39)

ஏழிரண்டா மாண்டு மெரிவனத்தி னேற்பனென்றேன்
வாழிகொண்டி ராசநகர் வைகலொல்லேன் யாழின்
மொழியன்றி யின்ப முகிழ்க்குமோ வெய்ய
பழியின்றி யென்னும் பகர். (40)

தேவியராம் வல்லரக்கன் சேமத் திருக்கவிவன்
ஆவியரா மன்பருட னுமின்பம் மேவியரா
மன்செயலா மென்றால் மதிப்பில்லா மாற்றமது
மென்செயலா மென்றா னெடுத்து. (41)

இல்லறந்தான் மேலோ ரிருக்கை யிழந்தேன்போர்
வில்லறந்தான் விட்டிருந்தேன் மேன்மையிலே னல்லறந்
செய்யாது வந்த சிறுமை தவிர்வதற்கு [தான்
மெய்யாது நற்றவஞ் செய் வேன். (42)

அரசியலைச் செய்வா யடுத்ததிங்க ளுன்கின்
விரசிவரு சேனையுடன் வீர வுரைசெயன்பால்
வந்தணைவா யென்றான் வரமுனிவர் வாழ்மனதாம்
சிந்தனைவாழ் செல்வன் சிறந்து. (43)

மறித்தொன்று சொல்லான் வரதனருள் வள்ளல்
குறித்தொன்று செய்தலெனக் கொண்டு நெறித்தொன்று
கண்கலுழி கொள்ளக் கருதிப் பணிந்துசென்றான்
எண்கலுழ மில்லா னியைந்து. (44)

Koviloor Digital Library

வாலியுடைக் காதலவன் வந்துவணங்க முற்றும்
சீலமுடைத் தாஞதல் செய்வதெவன் கோலமுடை
இன்னவனைத் தந்தையென வெண்ணு மதுவென்றான்
மன்னவனைத் தந்தையெனு மன். (45)

என்ன வுரைத்தவனை யேகவெனவருளப்
பொன்னடியைப் போற்றிப்புகழ்ந்து சென்றான் மன்னவனும்
மாருதியை நோக்கி வளத்தரசுக் கேற்றசெயச்
சாருதிநீ யென்றான் தவன். (46)

பொய்த்தலிலா வன்பு பொழிய வருமுளத்தன்
இத்தலையி னேற்றசெயற் கேற்பனென்றான் நற்றவத்தான்
பாதத்தைப் போற்றப் பணித்தா னவற்கன்பர்
சாதத்தை மாற்றுந் தரன். (47)

நிரம்பொருவன் காத்த நிறையரசு மற்றும்
வரம்பிலதை மற்றொருவன் வாங்கி னரும்புநலன்
தீங்குளவா மன்னதனைச் சீர்திருத்த நின்போல்வா
ராங்குளவா நன்மையதென் றான். (48)

ஆன்றவற்குச் செய்யு மரசை நிறப்புவதே
என்றெனக்குச் செய்யு மியல்பாகுஞ் சான்றனவாம்
நின்னிலையீ தாதலினல் நேராஞ் செயல்புரிய
மன்னிலைசே ரென்றான் மதித்து. (49)

ஆழி யுடையா னறமுரைக்க வாணைபிதேல்
வாழி யெனச் சென்றான் மருத்துமகன் பாழியுடைத்
தம்பியொடு வந்தான் தடங்குன்றின் மேலொருசார்
தும்பிபடு சோலையடுத் து. (50)

ஆரியன்றன் சொல்லா லடுத்த மலையதனில்
சூரியன்றன் சேயன் றுணைவரொடுந் தாரை
தனைவணங்கி யன்னவளைத் தாயென் றரசு
வினைவணங்கச் செய்தான் விழைந்து. (51)

Koviloor Digital Library

வளவரசை யெய்திமற்றை வானரராம் வீரர்
கிளைஞரெனப் போற்றக் கிளர்ந்து மளவில்லா
வாற்றலுடை யங்கதனு மான்ற விளவரசாய்ப்
போற்றலுடன் சேர்ந்தான் புகழ்ந்து. (52)

வள்ளலவ ணேகி மதங்க னிருக்கையென
வுள்ள சிகரவரைக் கோர்சாரி னுள்ளமுறத்
தம்பிநலத் தாற்புரிந்த சாலை தனிலிருந்தான்
நம்பிநலத் தார்க்கருளி னன். (53)

அரசியற் படலம் முற்றிற்று.

கார்காலப் படலம்.

மாவியலு முத்தரத்தின் வந்தடுத்துத் தேடியபின்
ஞேவியமே யென்ன வொளிகுலவு தேவிதனை
நன்றான தென்றிசையை நாடிவரு தூதனெனச்
சென்றானதென்று தெரிந்து. (1)

பையணையும் பஃறலைசேர் பாந்தடலை யேந்திநின்ற
மொய்யணையும் பூத்தகழி முன்னீர்நெய் செய்கிரண
வெய்யோன் விளக்கமென மேரு வெனுந்திரியின்
மையோங்கி நின்றதனி வான். (2)

நண்ணுதலார் பொற்கடலி னஞ்சமதை நுங்கிநின்ற
கண்ணுதலார் கண்டத்தின் காட்சியாய் விண்ணகந்தான்
எங்கு மிருண்ட விரவி கதிர்மெலிந்த
மங்குல் தழைத்த மதர்த்து. (2)

நஞ்சினஞ்சேர் கார்க்கடலி னங்கையர்க டுங்கமிகும்
அஞ்சனஞ்சேர் கண்ணினவ ரைம்பாலின் வஞ்ச
வரக்கர் வடிவி னவர்செய்கை தம்மிற்
கரக்க விருண்டதுமே கம். (4)

Koviloor Digital Library

நாட்க டமிற்கடவி ளுர மதைமிகுந்த
வேட்கையொடு கொண்மேக மின்னுவது வாட்கை
மயங்குஞ் செருவின் மதப்பூட்கை புண்கள்
தயங்கித் திறப்பதையொத் த. (5)

நீணிறத்த யானை நிறத்துவரு நீர்த்தென்னச்
சூணிறத்த மேகந் துவன்றியே மாநிறத்தாம்
கார்க்கடலை வாரியுள கம்மே னிறைத்ததனை
யேற்கு முழக்க மிசைந்து. (6)

அரிப்பெயர வன்முதலோ ரான்ற வணிகள்
விரிப்பனவு மொத்தமலை மீதி லெரிப்பனதீ
யொத்தனவா மாசை யுவந்து சிரிப்பனவு
மொத்தனவா மின்னி ஞெளி. (7)

மாதிரமாங் கொல்லனவன் மாரிமழை யாயிருண்ட
கோதடுக்கா விண்ணிருந்தைக் குப்பைதனிற் கூதிர்வெங்கா
லோதுந் துருத்தியமைத் தூதுங் கனலுமிழ்தல்
உளது முலையொத்த து. (8)

பிறிந்துறையும் பெண்கள் பெரிதடுத்த பாந்தள்
எறிந்து வரவிரவி யென்றூழ் அரிந்த
தெனவசனி நாவென்ன வேற்ற திசையி
னனிவிரியு மின்னல் நவித்து. (9)

சூடு மணிமுடியாற் ஞேன்றிவரு விஞ்சையர்க
ளாடவர்கள் வாளு மகல்திசையின் மாடிபத்தி
ஞேடை'யொளிபிறழ்வ தொத்தனவு மாயடுக்கும்
நாடியொளிர் சஞ்சலையன் ஞள். (10)

எண்வகையா நாகங்க ளேற்றதிசை யெட்டையுநா
நண்ணி வளைத்ததென நாடுமின்கள் கண்ணன்
வடிவ மெனக்கருகு வான்குடில மெங்கும்
கடிகொள்ளும் வாடை கவிந்து. (11)

Koviloor Digital Library

தலைமையதுங் கீழ்மையதுந் தானறித லின்றி
மலைகண் மரங்களொடு மற்றும் விலைநினைந்து
கள்ளமெனு நெஞ்சாற் கவிந்துவரு வேசியர்க
ளுள்ளமென வாடையுல வும். (12)

அழுங்கு மகளிர்தம தன்பர்களைத் தீர்ந்தோர்
புழுங்கு தனங்கொதிப்பப் புக்குக் கொழுத்த
தசையீர்ந்து கொண்ட தனைவிழுங்கு பேய்போல்
வசையோங்க வாடை வரும். (13)

ஆர்த்தெழுவான் தூசி யடைந்த கொடிமின்னல்
கூர்த்தெழுவாள் கோப்பிறழுங் கொட்பானும்போர்ப்பணையாய்
விண்டழுங்க லானும் விசையமிகு போர்க்களம்போற்
கண்டழுங்க நின்றதுமா கம். (14)

இன்னகையாள் சானகியை யேந்தல் பிரிந்ததனால்
மன்னமதன் பாணம் வழங்கினபோன் மின்னமரும்
பொன்றுவன்றுங் குன்றிற் பொழிந்த சரதாரை
மின்றுவன்று மேக மிகுத்து. (15)

கல்லிற் படுந்துவலை காரிற் படுபெரிய
வில்லிற் சரமென்ன வீழ்ந்தனவாஞ் செல்லிற்
பிறந்த கனலிற் பிறந்து சிதறும்
சிறந்த மணிக டெரிந்து. (16)

மள்ளர் மறுபடையா மானமிகு யானையின்மேல்
வெள்ளியயின் வீசினபோன் மேகங்க ளெல்லரிதாய்த்
தள்ளித் துளியாற் றகர்ந்து விழுகிரிகள்
புள்ளிக் கரிவிழுவ போல். (17)

வானத் தடிகரும்பா மாமழையின் வீழ்துளிதான்
மீனக் கொடியோன் விடுபகழி யானதனால்
நாயகனைச் சேராத நங்கையர்கள் மேனியெலாம்
சேயகணை மூழ்கலொத்த தே. (18)

Koviloor Digital Library

தீர்த்தன் கவிகளொடு சேர்ந்துவரு நம்பகையைப்
பேர்த்தனனு மென்று பிறங்கமரர் ஆர்த்தெனவாய்
ஆர்த்துவரு மேக மலர்மழையைத் தூர்த்தலொத்த
சேர்த்ததுளி வெள்ளஞ் சிறந்து. (19)

வண்ணக் கரத்தினிடை வாளத்தைத் தாங்கரக்கன்
விண்ணிற் கரந்தேகும் வேலையிடை பெண்ணரசி
கண்பொழிந்த மாரியெனக் கால மழையதனை
விண்பொழிந்த மேக மிகுந்து. (20)

சிரஞ்சுடர்செய் மாமதிசேர் தேவன் சிறந்த
புரஞ்சுடர்க்கு விட்ட சரம்போலும் தரஞ்சுடர்மின்
வேலதுபோ லாடவர்கள் மேலடுத்துச் சுட்டதுவாம்
கோல்விழியார்க் கூடாதார்க் கு. (21)

பொருடரப்போ னூர்ப்பிரிந்த பொய்யுடற்கு நேரே
யுருடரத்தேர் மேலுயிர்கொண் டுய்த்தல் மருளும்
பிரிவென்னு மாசுணந்தான் பேரக் கருடன்
வரநின்ற வாரடுக்கு மாம். (22)

முழங்கி முறைமுறையாய் மூரிநீர் மேகம்
வழங்கி மிடைதல் மதமா தழங்கிவரு
மாமதத்தி னுந்திவலை மாறு வயங்கியெதிர்
கொமதத்த பூசனிகர்க் கும். (23)

பாடலங்கள் சோரப் பகலோன் பசுமையுற
ஆடு மயில்க ளரங்கினவாம் பாடுகுயில்
அன்பருற்றூர்த் தேடி யலர்ந்தாரைப் போலுமயி
லின்பமுற்றூர் போலு மியல்பு. (24)

நானிறத்தாம் வண்டும் நறுமணியுஞ் சேர்சாரல்
தேனுறத்தாம் பூத்துவரு செங்காந்தள் வேனிறனை
வென்றதுகா ரென்ன வியந்த நிலமகடான்
பொன்றதும்பு கைமறித்தல் போல். (25)

Koviloor Digital Library

இந்திர கோபங்க ளெங்கு மலர்ந்தெதன்னும்
சுந்தர நாயகர்பாற் றூய்க்கலவி சிந்தைகொண்ட
தள்ளிடையின் மாதர் தருதம் பலச்சிதர்போல்
வெள்ளிடையிற் காட்டும் விரிந்து. (26)

தீங்கனிசேர் நாவலுடைச் சேணுயர்ந்த குன்றிற்பொன்
வாங்கினவாய்ச் சேரா றானவே வேங்கைமலர்
கொன்றை யொடுமீர்த்துக் கொண்டு வருகலுழி
சென்று நிலமயங்குஞ் சேர்ந்து. (27)

காந்தண் மலரிற் கடுக்கைமென்பூக் கோபமொடு
சேர்ந்ததனைக் கண்டாற் சிறுதும்பி வாய்ந்திசைக்கும்
இன்னிசையைக் கேட்ட விருநிலப்பெண் கையேந்திப்
பொன்னிசையுங் காசளித்தல் போல். (28)

கிளைக்கு மழலைவண்டு கின்னரமா மின்னும்
துளிக்குமுகில் தூரியமாத் தோன்றும் வளைக்கையர்
போன்றமஞ்ஞை தோன்றி பொருந்து மரங்கூடே
என்றவிளக் காகு மிசைந்து. (29)

தேரோ னெடுந்திசையிற் செல்லச் செருக்கழிகண்
சேரக் குவிந்த செழுங்குவளை மாரனன்ன
மைந்தர்வரல் கண்டு மகிழ்மகளிர் மூரலெனக்
கொந்தலரு முல்லைகுறிக் கும். (30)

களிக்கு நடமயிலைக் கண்ணுளராய்க் கண்ணுற்
றளிக்குமன்ன ராம்பொன் னருவி வெளிக்கண் சேர்
காரை விருந்திற் களிக்குமங்கை மார்முகம்போற்
சேருங் கமலஞ் சிறந்து. (31)

சரதமல ரெல்லாந் தடவி விடர்போற்
சுரதமலர் தேன்கொணடு தோன்றும் பரதமுறை
நாடகத்தைச் செய்ய நயக்குங் கவிஞரெனப்
பாடகத்த தேனீப் பரிந்து. (32)

Koviloor Digital Library

நோக்கினு னம்மைவரு நோக்கழியக் கண்டதனாற்
றூக்கணங்காஞ் சீதைக்குத் தக்கதுய ராக்கி
யளித்தனவா மென்ன வதனையுரை யாமற்
களித்தனவாய்ச் சென்றனமான் கள். (33)

நெஞ்சுற்ற வன்பா னெடிது பிரிந்துமிக
அஞ்சுற்ற காத லடுக்கவே மிஞ்சுற்ற
நன்னதியி னுடி நயஞ்சேர் கொழுநரென
வன்னமதி னூடு மமர்ந்து. (34)

காரென் பெரிய கரியவன்றன் மார்பினின்முத்
தாரமெனப் பொலிந்த தாமளக்கர் நீர்முகந்த
மேகத் தருகுதனில் வெண்ணிறத்த தாங்குரண்டம்
போகுற்ற தானவனப் பு. (35)

மருவினெடு மாலையென மாமேகப் பாங்கர்
குருகினங்கள் சூழ்ந்து குலவல் திருநாத
னென்னுமுத்த மாமறைக்கு மேகன் றிருமார்பின்
மன்னுமுத்த ரீயமொத்த வாம். (36)

கொடுந்தொழில்செய் வேனிலவன் குற்றங் குறைய
வடுந்தொழிலான் கார்ப்பெரியோ னுகப் படர்ந்த
குளிர்ப்பா னிலமடந்தை கொண்டபுர ரோமத்
தளிர்ப்பாம் பசும்புற் றரம். (37)

தேனூர் மலரின் றிசைமுகனே யாய்த்தெளிந்தோர்
ஞான்றி பன்றுயர்க்கு நாடிநல்கக் கானமெலாம்
சேர்த்தழைப்பச் கண்ணுத் திருவை மகிழ்மயில்கள்
பார்த்தழைப்ப போன்ற பரிந்து. (38)

செஞ்சவரு வேலர் செறிந்ததனு வாரிருண்ட
குஞ்சியொளி சேயநிறங் கொள்ளவரும் பஞ்சியணி
மெல்லியர்தாள் போன்ற விமலக் கமலம் வல்லி
நல்லிடைதான் காட்டும் நயந்து. (39)

Koviloor Digital Library

நீயிரையை தன்குதலை நேர்ந்ததனு ளுடியுடன்
போயதைய லைத்தருதிர் போங்தெனவே நாயகன்சொல்
தேயமெங்குந் தேடித் திருவையறி யாதுகுயில்
வாயடங்கும் பேச மருண்டு. (40)

பொழிந்தநிலம் புற்குமட்டப் போகும் புனிற்று
வெழுந்திடறு மாம்பிதயி ரேற்ற மொழிந்தவெழி
லாய்ச்சியர்கள் மாமுழவி ளுக்கவரு பானுரைகள்
வாய்க்கும் பொருவுபிட வம். (41)

வேங்கை கொடிச்சியர்கள் மேவு குழல்புன்னை
யோங்கு நுளைச்சியர்க ளோதிகொள்ளு மாங்குமுல்லை
நாறினவா மாச்சியர்கள் நற்கூந்த லுற்பலந்தான்
தாறு முழத்தியர்கூந் தல். (42)

தேராற்றும் பேரல்குற் றேவி முகங்காணுன்
ஆராற்று வாருயிரை யன்பழிந்தான் மாரனுக்கும்
எண்ணில் கணைவகுத்த வேற்றமிகு கார்கண்டால்
அண்ணல் துயர்க்கே தளவு. (43)

அளவில்லாக் காராகு மப்பருவம் வந்தால்
தளர்வில்லா மேலோருந் தாழ்வார் கிழவியிசை
மாமதுரத் தேனுண்ட வள்ளல் படுந்துயரம்
தாமதுரைக் குந்தரமோ தான். (44)

காவி குவளைகனங் காசா மலர்வண்ண
மேவு மெழிலான் மிகமெலிந்தான் ஆவிசிறி
துண்டுமொழி யென்ன வுயிர்த்தா னொடுங்கினான்
வண்டுவிழி தன்னை மதித்து. (45)

வாரேர் முலையை மறைக்கும் வழியிலர் வாழ்
உளரே யறியே னுலைவேனுல் நீரேயாய்க்
கோவதனைக் கொன்டாய் குலவருளில் காரேயென்
னுவிதனைக் கொண்டா யடுத்து. (46)

Koviloor Digital Library

வெப்பார் நெடுமின் விளங்கெயிற்றை மேலும்வெகுண்
டெப்பாலு மாவிசும்பி னேற்றெழுவாய் அப்பா
தகவஞ்ச ராமரக்கர் தங்களையே யொப்பாய்
தகவெஞ்ச வாவிமடுத் தாய். (47)

அயிலேர் பொருவிழியா ரான்ற வமிழ்தாம்
குயிலே மொழியைக் கொணராய் துயிலேன்
ஒருவே னுயிர்சோர் வுணர்வாய் மயிலே
திருவே தனக்குச் சிறந்து. (48)

மழைவாடை யோடாடி மாயு முயிர்மேல்
நுழைவாய் கொடியே நொடியா யிழைவாய்ந்த
வாணுதலாள் பொன்னிடைபோல் மன்னிக் குழைந்தடுத்துக்
கோணுதலென் னுவிகுழைக் கும். (49)

விழையேன் விழைவதனை மேன்மை தனினின்
றிழையே னுணர்வென்பா லின்மை பிழையேன்
உழையே யவனிதனி லொப்பில்லா ரெங்கா
முழையா ருரைப்பா யுவந்து. (50)

பயிலவுற்ற பாடகச்செம் பஞ்சடியார் மிஞ்சும்
அயிலையொத்த கண்ணவரோ டானும் உயிரேநீ
முன்னுறவை யெண்ணி முயங்கா தெனைவிடுத்தா
யுன்னுறவி னென்னு முரை. (51)

ஒன்றைப் பகரா யுவந்து குழற்குடைவாய்
மன்ற லடுக்கா வயிரத்தாய் கொன்றைக்
கொடியாய்நீ கொள்கிலையே கூறுமுற வென்றைக்
கொடியா திருந்தா யுவந்து. (52)

குராவரும்பை யொத்துவரு கூரெயிற்று நாகம்
விராவுகடு வொத்தமுல்லை வெய்தின் உராவரிய
வந்திற் றுயர்செய் யரக்கனடு கோபசிற்க
விந்திரகோ பந்தானி தென். (53)

Koviloor Digital Library

ஓடை நுதலை யொளிக்கலுற்ற மாரீசன்
னாடிவரு மாடகத்தாம் நவ்வியுற்றான் வாடையாய்க்
கூற்றுருவ மாற்றிவந்தான் கொள்கையிவை நன்றென்றான்
சாற்றுருவ மாலெரிகர்த் தான். (54)

அரக்கனென வந்தரத்தி னாகி முழக்கும்
கரக்கரிய மேகமின்னே காணா மிரக்கம்
படிவுற்ற தன்றியெனைப் பன்னாள் வருந்தப்
படிவத்தைக் காட்டியொளிப் பாய். (55)

வெம்மையிலாம் பூவாளி வீசி யெனைவிளிக்கும்
செம்மையிலா மாரா செறிவென்னும் எம்மையிலும்
நன்மைதரு தம்பி நலிவடையு மெற்கண்டா
லின்மைதரு முன்னை யிடித்து. (56)

வில்வலியுங் கொல்வலியும் வெஞ்சமத்தி னஞ்சினர்மேற்
புல்வதினா லாற்றல் பொருந்துமோ வல்லும்
பகலு மருளின்றிப் பாங்காங் கருணை
யிகலி விடுத்தா யெனை. (57)

இத்தகைய வுன்னி யிரங்குங் கருணையனை
மெய்த்தகைய தம்பி விழைந்தடுத்து முத்தர்தொழ
வாதங்கஞ் சேர்துயரை யாற்றி யருள்பரமன்
பாதங்கஞ் சேர்த்திதுரைப் பான். (58)

காரரக்கு மாரிநிலை கண்ட கவற்சியோ
சேரரக்கர் வீரமதைச் சிந்தித்தோ வீரவர்க்கச்
சேனை மடந்தைதனைத் தேடாக் குறையடுத்தோ
வேனையிட ரென்றான் யெடுத்து. (59)

வையந் துளங்கி மறைதுளங்கி மாழ்கிடினு
மையன் துளங்க வடுக்குமோ செய்யர்புகழ்
நின்புருவ நெற்றியுறி னேரார் நிலையென்னாந்
துன்புருவங் கொள்ளலெனைத் து. (60)

Koviloor Digital Library

மாருதியி னன்மைகண்டோம் வானரத்தாஞ் சேனைவர
மாரியதுந் தீரும் வகையடுத்த தேருதியாம்
தந்தடுக்கு மின்னிடையாள் சானகியைத் தேடமயம்
வந்தடுக்குங் காலமிதா வாம். (61)

மறையோர்க் கபயம் வழங்கியவை தீர்க்கு
மிறையோய் சமைய மியைந்த குறையோட்டி
மாதவரைப் போற்றி மடநெஞ் சிரக்கமிலாக்
கோதவரைக் கூற்றடுக்கக் கொல். (62)

கொற்றம் நினக்கல்லாற் கூறு மெவர்க்குளவாம்
வெற்றியன்று பேதமைதான் வீரநிற்கேன் முற்றும்
முடிக்கு மரனைநிகர் மொய்ம்புடைய நின்சீர்
படிக்குமவ ரெத்தகைப்பண் பார். (63)

சொற்றதம்பி தூயவுரை தோமி லுணர்வளிக்க
விற்றவின்ன லோடு மிருக்குமெல்லை யுற்ற
பிணிக்குப் பிணியடுத்த பெற்றியென வந்து
கணிக்கு மழைதான் கவிந்து. (64)

நிறைந்த குளங்க ணெருங்குந் தரங்கங்
குறைந்த குயில்குளிர்ந்த குன்றம் மறைந்த
புகன்றதிசை துன்பம் புரிந்தார் பிறிந்தார்
அகன்றிலதா மன்றி லடுத்து. (65)

பாசிழையார் மாதர் பழிப்பி லகலல்குல்
தூசுதொட லூசல் தொடர்வெம்மை வீசியகால்
காசையுற்ற புண்ணிற் கடுத்துவரு கோலினுறும்
ஆசையுற்ற பேரை யடுத்து. (66)

வேலை நிரம்பும் வெயிற்கதிர்கள் மேல்வெதும்பும்
சீலமழி வுற்றபுனல் சேர்செப்பின் கோலமதாற்
காலமறி வுற்றலது கன்ன லளவல்லால்
மாலைபக லோர்வரிதா மால். (67)

Koviloor Digital Library

நெற்கிழிய நேரில் நிரம்பும் பொதிமடவார்
சொற்கிழியு நற்கிளிக டோகையவர் நற்பொலிவாம்
சாயறனைக் காட்டுந் தரமார்ந்த புன்னையெலாம்
நேயமுறப் பொன்னெடுக்கு நேர். (68)

நிறங்கருகும் கங்குல்பகல் நின்றநிலை நீங்கா
தறங்கருது சிந்தை யனகர் திறமாய்ப்
பிறங்குந் துளியாற் பெயர்விலவாங் குன்றி
னுறங்கலிலா வேழ முறும். (69)

சந்தினடை யிற்படலை தான்வேதி கைத்தடந்தோய்
அந்தி யகிற்புகையி னுமன்னம் மந்தியது
வந்து துயிலுமுழை வன்கடுவ னின்றடுக்கும்
இந்தியம தேகுதவ ரின். (70)

ஆசில் சுனையருவி யாயிழைய ரைம்பாலின்
வீசுமணங் கொள்ளா விழைவனகா னூசல்
வழிதான வொண்மணிகள் வானடுத்து வீசும்
நெறிதிரு மாரி நிறைந்து. (71)

கருந்தகைய தண்சினைய கைதைமடல் காதல்
தருந்தகைய போது தயங்கப் பெருந்தகைய
பொற்சிறையைப் போற்றிப் புகுந்த குருகினங்க
ணற்பருவ மாரியத னல். (72)

பதங்கமுழ வொத்தவிசை பஞ்சுமிறு பண்ணும்
மதங்கியரை யொத்த மயிலும் விதங்கொண்ட
மாமரத்தின் மூலம் வதியு முழைக்குலங்கள்
தாமதர்த்த மாரிநலத் தால். (73)

விளக்கைப் பகைத்தபுகை மேலடுத்த மஞ்சம்
இளைக்குமிடை மாதர்மைந்த ரேறத் தளர்த்த
மலர்த்தவிசு நீங்கி வரிச்சிறையார் தும்பி
நலத்தசந்தை நாடும் நயந்து. (74)

Koviloor Digital Library

தாமரையின் மேலாந் தவிசிகந்த வன்மனது
வீமருவு பூம்பொழிலின் வீற்றிருக்கு மாமை
குயிற்று மிதணிற் குரம்பை துயின்று
ரெயிற்றியரோ டன்ப ரிசைந்து. (75)

வள்ளிபுடை சூழு மரத்தின் மறிக்குருளை
எள்ளலிலா வண்டரெதி ரேற்றிருந்த கள்ள
ரொளித்துறைதல் போற்கழுது மோங்கிப் பசியாற்
களித்துறைத லின்றும் கனன்று. (76)

சரம்பயிலு நீர்த்துளிகள் சாரும் புயல்கள்
உரம்பெயர்வில் யானை யொடுங்கா வரம்பகன்ற
மாமலையி னுழுழஞ்சின் மன்னி நிலைத்ததொரு
கோமலையி னுகியிருக் கும். (77)

இத்தகைய மாரி யிடையி னிருளெய்த
மைத்தகைய வோதி வளர்மனத்தான் மெய்த்தகைய
நம்பிதனை நல்லறவோர் நாட நலந்தருவான்
தம்பிதனைப் பார்த்திதுரைத் தான். (78)

மழைக்கரியன் வாளரக்கன் வஞ்சக் கடலி
னிழைக்கரிய மின்னிடையா ளின்ன லுழைப்ப
வுலைந்தே னிகழ்ந்த வுயிரோ வியம்போ
லலைந்தே னிருந்தென்னை யாம். (79)

தூநிறத்த சோர்வில்கணை தூணி யிடைதூங்க
வானுறத்த தோளா மலையினெடு வேனிறத்தி
னூற்றவிதெ னும்பழிக்கு மோயாது வாழ்வுகந்தேன்
சொற்றவிதெ னென்றான் றுயர்த்து. (80)

புண்ணடைந்த நெஞ்சாய்ப் புனமயிலி போயொளித்தாள்
எண்ணடைந்த நெஞ்சா லிருந்துழல்வே னெண்ணு
மெரிவிளக்க மின்மினியா யேற்றதுணை யோடு
குருவியுய்க்கும் கூட்டினுவக் கும். (81)

Koviloor Digital Library

வானகத்தின் வார்மின் மழைமுழக்க மானனும்
யானகத்தி னின்ன லளக்கரிதாங் கானகத்தின்
வந்தடுத்த செய்கை வளமுற்ற தென்றுரைத்தான்
நந்தடுத்தல் செய்கை நலன். (82)

மறந்துமுயிர் கைப்படுத்தேன் மாரி யிதுவே
விறந்துவிடி னிப்பழிதா னெங்காம் பிறந்துவரப்
பின்றீர்வ லோவிதனைப் பேராத் துறவடைந்தோ
வென்றீர் வலென்று னிறை. (83)

ஈண்ட லரக்க ரிருக்கை யறிதுமெனிற்
காண்டல் பலநாள் கழிந்திடுமால் வேண்டலன்று
தாட்சிதரு மிந்நோய் தணிய மரணமுறல்
மாட்சிதரு மென்றான் வரன். (84)

செப்புருக்கா மாரிநிறை சீகரத்தால் மோகரித்து
வெப்புறத்தான் தப்புரத்தின் வீவதுண்டோ வப்புருக்கொள்
வாளடுத்த கண்ணி வரவறியா னின்றழைத்தேன்
கோளடுத்த விற்கரத்திற் கொண்டு. (85)

நெய்யடையுந் தீமு னிறவி யிவளுனது
கையடையா மென்றசன கன்னுரையைமெய்யடையும்
வாக்கணங்க யானிருந்தேன் வந்ததென்றான் சந்தமலி
தாககணங்கு சார்ந்தபுயத் தான். (86)

தேற்றுவாய் நீயுளையாய் சிந்தை தெளிந்தசெய
லாற்றுவே னென்னை யருட்சனகி யேற்றமொடு
தோற்றுவா னல்லன் துயரந் தணிவதுண்டோ
யேற்றுவான் வில்லா யிசை. (87)

விட்டடுத்த வாளி விரிஞ்ச னெடுவிண்ணைச்
சுட்டடுத்துத் தேவரொடு தொல்லையரும் பட்டொழியக்
கொன்றலகை யெல்லாங் கொளுத்தினுஞ் சானகியை
நன்றடைவ னென்று னலிந்து. (88)

Koviloor Digital Library

தருமந் தவறின்றித் தண்ணளியி னஞ்சித்
தெருமந் தவரென்றென் செய்தே னருமந்த
தேவி பிறிந்து செறிந்த கவலையதும்
ஆவி பிறிந்த தனைத்து. (89)

இளவலுரை செய்வா னெண்ணவரு நாளு
முளவலதாங் கூதிர்கடை யுற்ற களவறியும்
வஞ்சருறை காணும் வரையடுத்து வந்ததினி
யஞ்சலெனை யென்று னறிந்து. (90)

திரைசெய் கடலமுதஞ் செங்கண்மால் நேரின்
உரைசெய் கடமைக்கே யுண்டாம் வரைசெய்து
நாட்டிக் கடைந்தெடுத்த நன்மை மறந்தசெயல்
வாட்டத்தா லென்றான் மதித்து. (91)

மனத்தி னுலகை வகுத்துவாய்ப் பெய்யும்
கனத்தி னுலவு கடவுள் சினத்திஞெடு
தானப் படையெடுத்துச் சார்ந்து வருசெயலென்
ஞானம் படையாய் நவில். (92)

கண்ணுற்ற நெற்றிக் கணிச்சி யுடைக்கடவுள்
விண்ணுற்ற முப்புரத்தை வீட்டுநாள் எண்ணுற்ற
தெய்வப் படையாற் செறிந்தசெயல் கண்டிலமோ
மெய்வைப் புடையாய் விளம்பு. (93)

ஆகுனர்கள் சேரவர வாக்கித் துணைவர்களா
லேகுநெறி யெண்ணி யியைவதுவும் பாகமதா
யோகைவர நன்மை யுவந்து முடித்துமெனில்
வாகைவரற் கென்ன வழக்கு. (94)

அறத்துறையை மாற்று மரக்கர் சிறக்கா
மறத்துறையை யேற்ற வரத்தார் திறத்துறையு
நன்னெறியைப் போற்று நவையரவர்க் கொல்வதுநம்
நன்னெறியைப் போற்று கலன். (95)

Koviloor Digital Library

பைந்தொடியாள் சிந்தையிடர் பாறும் பருவமிது
வந்தொடியா தாவருத்த மாற்றுவாய் அந்தணர்க்காம்
நல்லறத்தைச் செய்யும் நமதுதிறல் வில்லறத்தாற்
கொல்லறத்தைக் கொள்வதனு கும். (96)

உறுதி யதனை யுணர்ந்துழி நாதன்
இறுதி யுண்டே யிம்மாரிக் கென்னுந் தெறுதுயரம்
ஒப்பரியான் கொள்ள வுவப்பிலவா யோங்கிவரு
மப்பருவம் போய்த்தா மகன்று. (97)

மள்கலிலா நற்கொடையால் மன்னிநின்ற மண்ணோர்க
ளுள்ளும் பொருளுதவி யோய்ந்தபோ தெள்கலிலா
தேற்றோர் தமக்கிவ தின்மைவெள்கு மாந்தரெனக்
கோற்றோ யெழிலிவெளுக் கும். (98)

நல்வினையுந் தீவினையு நாடிப் பொருளறிந்த
தொல்வினையோர் கொண்ட தொடக்கத்தால் வல்வினையேய்
ஆயவினை மெய்யுணர்வ தாகும் பொழுதடைந்த
மாயையென மாய்ந்த மழை. (99)

மூளுமமர் நீங்க முரசவிந்த தன்மையெனக்
கோளமையுங் கொண்மூக் குமுறலற நீளும்
கணைபோற் றுளிநீங்குங் கைவா ளுறைபோந்
துணைபோன் மறைந்ததடித் து. (100)

தடுத்ததா ணீளுந் தடங்கிரிகள் சார
லடுத்தநீர் போயருவி யாமேல் எடுத்தநூல்
உத்தரியத் தோடு முடையின்றி நிற்றறனை
வித்தரித்துக் காட்டும் விதம். (101)

மேகமலை யாம்புறத்து வீத லடுத்ததனால்
மாகநதி யாவுநிறை வாரியற்ற வாகையுற்றோன்
செல்வ மழிந்து தெருளில்லான் செல்வநிறை
மல்குநிலை போன்ற வளத்து. (102)

Koviloor Digital Library

கடந்திறந்த யானையெனக் காணு முகில்கள்
இடந்திறந்தே கப்பொலிந்த திந்து நடஞ்சிறந்த
மங்கையரை நேரில் மறைக்கும் படமெடுக்கப்
பொங்குவத னம்பொலிந்த போல். (103)

பாசிழையார் மாதர் பகடடுத்த மாதனத்திற்
பூசிவரு சாந்தம் புலரவே மூசிவரு
சேரொழிய மொண்டு திறத்த மலர்வீசி
நீரொழிக்கும் வாடை நிரந்து. (104)

மன்னவன்றன் மைந்தன் வருத்தந் தனையகற்ற
வன்னெறியி ணும்பருவ மாய்ந்துநல்கும் பொன்னவளை
நண்ணிப்போய்த் தேட நயந்தடுத்த தென்னவிண்ணை
யண்ணிப்போ மன்ன மறிந்து. (105)

தஞ்சிறையைச் சேர்த்தித் தழுவிவரு மின்னலுடன்
நெஞ்சிற் பயம்நினைப்பு நீண்டனவா மஞ்சி
விதலையுற்ற கேகயங்கள் வேண்டுமழை நீங்க
மிதிலையுற்ற வன்ன மெனை. (106)

வஞ்சவினை யெஞ்ச மறைந்ததிறல் மாதவர்கள்
நெஞ்சிற் றெளிந்த நிறைநீரம் பஞ்சிற்
சிவந்தவடி மாதர் சிறந்த விழிபோற்
கவந்தங் களிக்குங் கயல் (107)

வாடு மடவார் வதன மெனமலர்ந்த
கூடுமடற் றாமரைகள் கூடினவர் பீடுடைய
சேயிதழின் கோலமதைச் செங்கிடைகள் காட்டினவாம்
வாயதனுற் சொல்லா மலே. (108)

சேர்ந்தபுனற் பூந்துகிலைச் சேர்திரைக்கை யாற்றிரைத்து
மோர்ந்துதுணைக் கால்மடுத்த வோதநீர் தேர்ந்த
எறுழ்வலித்த நாயகனை யெய்தியவா மாறு
முறுவலித்த போன்றவா முத்து. (109)

Koviloor Digital Library

சொன்னிறைந்த கேள்வி தொடர்ந்துவரு மாந்தரைப்போ
லின்னிறத்தாற் சேர்பசலை யேந்திழைபோற் றன்னிறந்தான்
நீங்கித் தடுக்கரிய நேர்மைகொண்ட பொன்னிறத்தைத்
தாங்கிநின்ற பூகத்தின் தாறு. (110)

கொஞ்சிவரு பூங்கிளிகள் கூடுங் குதலையென
அஞ்சிறைசேர் வண்டளக மாமென்ன வெஞ்சலிலாக்
கோல விடைநடங்குங் கொள்கையென்ன வஞ்சிநின்ற
சீலமுடை மாதர் திரத்து (111)

மழையாற் பொதுளு மருத மரையின்
தழையாம் புரையதனிற் றங்கும் விழைவுடைய
பேடையொடு நள்ளி பெரிய முழைமூடி
யோடுமுடன் வச்சையரை யொத்து. (112)

கார்காலப் படலம் முற்றிற்று.

கிட்கிந்தைப் படலம்.

அன்னதொரு கால மகலு மளவைதனில்
முன்னவரன் தம்பிதனை மொய்ம்புடையோய்சொன்னவரை
வந்திலனு லந்த யகையறியா மன்னனெனன்றான்
நந்திலனு விற்கரத்தா னன். (1)

பெறமுற்றுஞ் செல்வவளம் பெற்று முதவித்
திறமுற்றுந் தீர்ந்தான் தெரியான் அறமற்றான்
அன்புடைத்தாம் நம்முடைய வாண்மை யறிந்திலனால்
வன்புடைத்தாம் வாழ்வை மதித்து. (2)

நன்றி மறந்தனைய நட்பினையு நாரறுத்தா
மொன்று மெய்ம்மை போக்கி யுரைபொய்த்தாற் கொன்று
களைதலது குற்றத்திற் காணாத வன்றன்
விளைதலறி யென்றான் விளித்து. (3)

Koviloor Digital Library

வெம்பவரு கண்டகரை விண்ணடுக்க வேரையறுத்
திம்பரறஞ் செய்ய வெடுத்தவில்லின் கொம்பருண்டு
கூற்றடுத்து நேரக் குறிக்குமம்பு முண்டென்று
சாற்றெடுத்து நம்மாணை தான். (4)

நஞ்சமன்ன மன்னவரை நாடி நலிதலது
வஞ்சமன்ன தன்று மனுவழக்கா மஞ்சலென்னே
அன்னவன்றன் செய்கை யறிவா யறிந்தபினர்ச்
சொன்னவன்மை செய்கையுடைத் து. (5)

உளருமுட னுளரசு மொண்பொருளுஞ் சுற்றமுற்று
நீருமுடன் மாளவகை நேர்ந்ததுவாஞ் சேரும்
வரவடுக்கு மல்லவெனில் வானரமாம் பேரும்
கரவடுக்கு மென்பாய் கணித்து. (6)

இன்னு மறிது மிவர்களினு மிக்கவலி
துன்னினரை யென்று துணிவுண்டே லுன்னைத்
தடுக்கவொரு மூவர்க்குந் தானறிதாஞ் செய்கை
யடுக்கவறி விப்பா யவண். (7)

நீதித் தரும நிகழ்த்தினையே னன்றதனால்
வேதித்த லின்றேல் வெகுண்டவணிற் சாதித்தல்
செய்யாது செய்கை தெரிந்ததற்குத் தக்கசெயல்
மெய்யாது மென்றான் விழைந்து. (8)

ஆணைத் தரத்தா னடிதொழுதா னாண்டிறையும்
பாணித்த லின்றிவெரின் பாங்குடைய தாணியுடன்
பூட்டுசந்த விற்றாக்கிப் போயினான் தாயினல்லான்
நாட்டுசிந்தை நீங்கா நலன். (9)

மாறுநின்ற தான மரனு மலைகளுடன்
நீறுசென்ற கான நெடுநெறியும் வேறுசென்றான்
மெய்ம்மையினா னென்றாலும் மேலாறு சென்றிலனாற்
செம்மையினா னாணைகொண்ட சேய். (10)

Koviloor Digital Library

விண்ணூற் றெழுந்தபொல மேரு நிகர்வரையு
மண்ணூற் றழுந்தவரு மாருதம்போ லெண்ணூற்ற
ஞானவரம் பாரகத்து நாட்டும் பரம்பொருளா
மானவரன் சென்றான் மதித்து. (11)

வெம்புகின்ற கானில் விரைந்து வருதம்பி
யும்பரொன்று பாரமரத் தூடுவெள்ள லம்புசென்ற
வேகத்தை யுற்றான் விறல்வாலி தம்பிசெறி
நாகத்தை யுற்றாம் நலன். (12)

ஒண்கிரியி னின்று முயர்ந்து தரமடுத்த
வண்கிரியிற் றாவி வளமுற்றான் எண்கொள்
அருக்க னுதயவரை யாகியத்த முற்ற
பருப்பதத்தை யெய்தியபண் பான். (13)

தன்றுணைவன் வில்லிற் றனிவாளி செல்விசையி
னன்றுணைவன் கிட்கிந்தை நாடினான் குன்றினின்று
குன்றிற் குதிக்கும் கொதிகொண்ட கோளரிபோல்
வென்றிக் குதிக்கும் விதன். (14)

கண்டதிறல் வானரர்கள் காலனைக்கண் டாலெனத்தா
மண்டினர்கள் வாலி மகற்கையா கொண்டதிறற்
சீற்றத் தடுத்தான் திறலுடைய தம்பியென்றார்
ஏற்றத் தடுத்தாற் கியன்று. (15)

அன்னவனு மின்னலுட னண்டொழிலா னிண்டடுத்தற்
கென்னநிப மென்னமருங் கெய்தினான் மன்னவன்றன்
மைந்தனடல் கண்டு மதித்தா னடுக்கமுடன்
தந்தையிடஞ் சென்றான் றளர்ந்து. (16)

நளனியற்று நல்லவெழி லயகமாங் கோயில்
தளனியற்று பள்ளிதனிற் சார்ந்த வளர்தனத்தார்
ஏந்தடிதான் றைரவரசன் றேயுந் துயில்தனக்கு
வாய்ந்தவிருந் தாய்விரும்பு வான். (17)

Koviloor Digital Library

தெள்ளியோர் தந்த சிறந்த பெருஞ்செல்வக்
கள்ளிஞ லோங்கிக் கதிர்மருவு புள்ளிமிகு
பொன்வரையிற் புக்க புனித விரசிதமா
மன்வரையா மென்னவளர் வான். (18)

சிந்த வருநறைசேர் தேக்ககிலு மாரமொடு
சந்த மயிற்சாயற் ருழ்குழலார் கொந்தமலர்க்
காடடுத்துத் தாவுங் களிமந்த மாருதந்தா
னூடடுக்க மேவு முவந்து. (19)

தித்திக்க நின்று திகழ்செங் கிடைவாயர்
முத்தொத்த முள்ளெயிற்றின் முன்வருதேன் பித்தொத்த
மாலைத் தரலான் மதிமயக்கத் தாலடுத்தான்
தாலத் தறிவு தணந்து. (20)

மகுடமணிக் குண்டலமே மற்று மிழைகள்
உகுசுடரின் கற்றை யுலவல் பகலோன்
பனிமா லிடுவரையிற் பாங்கா விளங்கத்
தனிமா லொடுதயங்குந் தான். (21)

கிடந்த பெருவலியாற் கிட்டிச் சிறந்த
மடங்க லெனவலத்தான் மாற்றம் நடந்த
துயில்நீக்க வென்று தொடர்ந்து மிடைந்த
மயல்நீக்குஞ் சொல்வழங்கு வான். (22)

எந்தைகேள் வள்ளற் கிளைய வரவீரன்
சிந்தைகொண்ட சீற்றந் திருமுகமே தந்தளிப்ப
வந்தடைந்தா னுந்தன் மனக்கருத்தி யாதென்றுன்
கந்தடைந்த தோளங் கதன். (23)

இனையதொரு மாற்ற மிசைத்தா னெனவும்
நினையவரான் செல்வ நெருக்க நனைதுளிக்கும்
நஞ்சனைய வந்த நனிமதுவி னுலவன்றான்
பஞ்சணையிற் சிந்தை பரிந்து. (24)

Koviloor Digital Library

ஆத லுடனே யரசனிளங் கோளரியும்
ஏது மியம்ப விடமின்றிக் கோதடுக்காச்
சிந்தையனே மாருதியைத் தேடியடைந் தான்மயங்குஞ்
சிந்தையனே விட்டுத் திகைத்து. (25)

மந்திரத்தாஞ் சிந்தைவர மாருதியி னேடுமடல்
வெந்திரத்தாம் வீரர் விரவிவர விந்திரற்கு
மைந்தனடன் மைந்தன் வருந்தியடைந் தானன்னே
சந்தமலர் கோயில் தனில். (26)

எய்திச் செயற்கரிய தென்னே யெனலுமவள்
செய்தற் கரியவினே செய்தடுத்தீர் நொய்தினவை
நீக்கநினேக் கின்றீர் நிகரி லுதவிகொன்றீர்
ஆக்கரிய தென்ரு ளறிந்து. (27)

மீட்டுமொன்று சொல்வாள் மிகவாம் படைகளுமைக்
கூட்டுமென்று கொற்றவனுற் கூறுமொழி நாட்டிறம்பின்
வேண்டிவரு நுங்கட்கு வேண்டுங் கெடுதிதரல்
காண்டிர் கிடைத்ததினிக் காண். (28)

வாலியுயிர் காலன் மடுத்தற் கடுத்ததனுக்
கோலியுயர் செல்வங் கொடுத்தபிரான் போலும்
புறத்திருப்பார் நல்ல பொருத்தமிது வென்ருள்
அறத்திருப்பாள் சிந்தை யயர்ந்து. (29)

தேவிதனே நீங்கிச் சிறந்த வரன்றனதா
மாவிதனே நீங்கு மவனுக மேவிதனேச்
செய்யாது நுங்கள் செறிகுழலார்ச் சேர்ந்துவந்தீர்
நையாது சிந்தை நயந்து. (30)

திறம்பினீர் மெய்யைச் சிதைத்தீ ருதவி
நிறம்பொல்லீ ருங்கள்வினே நேர்ந்த மறஞ்செய்வா
னுற்றிரெனின் மற்று மொருநாளும் வாழ்வதிலே
மற்றினியென் னென்ருண் மதித்து. (31)

Koviloor Digital Library

கோளுறுத்தற் காகாக் குரக்கினங்கள் கொண்டுவந்து
நீளெழுக்கள் சேரு நெடுவாயில் தாளிறுக்கி
வெற்படுத்த வெல்லாம் விரிவா யடுக்கிவைத்த
கற்படுத்த லாமற் கடம். (32)

சிக்குறத்தாம் பொற்கடையைச் சேமித்த செய்கையொடுந்
தொக்குறுத்த பன்மரத்த தோன்றினவை புக்கிறுக்கிப்
போய்ப்புடைத்து மென்னப் பொருந்திநின்ற வெற்பினொடும்
தாய்ப்புடைக்க வென்று தகைந்து. (33)

காக்குங் கருத்துடைத்தோ காக்க வெனக்கருத்தால்
பூக்கவரு மூரலொடு புங்கவனுந் தாக்கணங்கார்
தாமரையாந் தாளதனாற் றூக்கினான் மாக்கதவை.
மாமறையோ ராளுமறி வான். (34)

காவல் மதிலுங் கதவுங் கடிவாயில்
மேவ வடுக்கிநின்ற வெற்பினொடுந் தேவர்பணி
சீமான் றிருவடியாற் றிண்டிறல்கொள் பாவமெனப்
போமாம் புகைந்து புறத்து. (35)

நொய்திற் பெருங்கதவு நுட்ப வுருப்புகளாற்
செய்துற்ற பொன்மதிலுஞ் சேரவே யையிரண்டு
யோசனைதா னற்று நுறுங்கக் குரங்குபயந்
தாசைகளிற் சென்ற தடுத்து. (36)

பகரிலவாக் கொண்டு படையெடுத்து நின்ற
புகரிலவாம் வானரஞ்செய் பூசல் சிகரவரை
சென்று திரிந்துழியிற் சீகரத்தாம் வேலையென
வன்று நகரலைந்த வாம். (37)

வானரங்கள் சோர்ந்து மலைநீங்கி மாபயத்தால்
கானொருங்கு சேர்ந்த கனகவரை மீனொருங்கும்
காய நலவுடுக்கள் காணா தொளித்த தனைத்
தூய நகரடுத்த து. (38)

Koviloor Digital Library

அன்ன தொருகாலை யாண்டகையுங் காண்டகைய
பொன்னகர வீதி பொருந்திவரச் சொன்னதொரு
தாரைதனைச் சூழ்ந்து தடுமாற்றங் கொண்டனர்கள்
ஆரதனைச் சொல்வா ரறிந்து. (39)

அனைய னுளமு மரிவையர்க டம்மால்
வனைய வழியை வளைந்தால் அனகன்
தனுமன்னும் வீரன் றனிநெறிகா ணென்
றனுமன்றான் கூறு மறிந்து. (40)

நீங்களய னீங்கு நெறிநேர்ந்தி யானடுத்துத்
தீங்களவா னுள்ளந் தெரிந்திடுவேன் பாங்கரெனப்
பேரநின்று ராரும் பிணைவிழியர் தங்களொடு
தாரைநின்றாள் சார்ந்து தடுத்து. (41)

உரைசெறியும் வானரர்க ளோங்கி யுரையும்
அரசருடை வீதி யடைந்து புரசைகொண்டு
கொந்தளித்தா மானையனுன் கூடி வரலோடுங்
கொந்தளத்தா டாரைவிலக் கும். (42)

விலங்குமிடை மின்னனையாள் வெண்ணகையார் மூரல்
இலங்குமிடை யேந்துதனத் தின்பக் குலங்கொண்ட
கோற்றொடியார் தம்முடனே கூடி யடுத்துவந்து
மாற்றி நின்றாள் வீதி வழி. (43)

வில்லரிவாண் யேலெடுத்து மின்ன வணியுடனே
மெல்லரிசேர் மேகலையு மேலார்ப்ப வெல்லும்
புருவக் கொடிநெருக்கப் போர்வல்லி யாயம்
செருவைக் கொடுவந்த தே. (44)

நூபுரங்கள் பேரி நுவலல்கு றேர்வேல்கண்
மாபுருவம் வில்லாக வல்லியர்கள் சேர்புரமும்
பார்க்கவஞ்சி னைப் பணையி னுயர்தோளான்
பேர்க்கமிஞ்சு சிற்றம் பெயர்ந்து. (45)

Koviloor Digital Library

தாமரையா மாமுகத்தைச் சாய்த்துத் தனுவூன்றி
மாமியர்க்கு முன்னு மருகனெனப் பூமனின்றான்
தாங்கிடையா ரோடு தயங்கி வருதாரை
பாங்கடையாச் சொற்றாள் பரிந்து. (46)

அந்தமிலா நோன்பினுற்ற வாற்ற லவையன்றி
இந்திரனே போல்வார்க்கு மெய்தரிதா மைந்தநின்றன்
பாதங்க மொன்றமனைப் பாங்கா வரத்தீர்ந்தோ
மாதங்க மென்று ளறிந்து. (47)

வெய்தின் வரலால் வெருவுரலுற் றுமுனது
செய்தி யறியாத சேனைவெள்ளம் ஐயனுநீ
யாழிவர வீர னடியைப் பிரியகிலாய்
வாழிவர வென்றாண் மதித்து. (48)

ஆர்கொ லுரைந்தாரென் றுங்கருளாற் சீற்றமஃகப்
பார்கொள் பகன்மதியின் பான்மையெனச் சீர்கொண்ட
சேய முகத்தானே நேர்கண் டிறைநோக்கித்
தாயர் தமையுநினைந் தான். (49)

மங்கலத்தா நல்லணியை மாற்றி யணிதுறந்து [யொடு
கொங்கலர்த்தார் கோதையின்றிக் குங்குமமில் கொங்கை
விண்பனிக்கு மின்போல் விளங்கிழையைக் கண்டுவள்ளல்
கண்பனிக்கு மன்பாற் கசிந்து. (50)

இணையவரா மீன்ற விருவரென வெண்ணி
நினையவரா யீர னிகரின் வினவுமவட்
கோர்மாற்றஞ் சொல்ல லுசித மெனவண்ணல்
சீர்மாற்றஞ் சொல்லுஞ் சிறந்து. (51)

சேனையுடன் தேடித் திருவைத் தருவனென்ற
மானவரன் தந்தவுரை மாற்றினான் ஆனவன்றன்
செய்கை தெரிதியெனத் தேவனுரை யாலடுத்தேன்
உய்கையவன் செய்கை யுணர்ந்து. (52)

Koviloor Digital Library

சீறுவா யல்லை சிறியோர் பிழைபொறுத்தல்
ஆறுவாய் நீயலமற் றருண்டாம் வேறுவாய்
திக்கனைத்துந் தூதர் செறிந்தடுத்தார் சேனைவரத்
தக்கநத்து நாளுமடுத் த. (53)

ஆயிரமாந் தூத ரரிக்கணத்தை யாக்கவெண்ணிப்
போயினராம் நாளும் புகுந்தடுத்த தீயனவாஞ்
செய்யார் செருனருண்டோ சேர்ந்தவரைத் தாங்குதிற
லையா வுனக்கடுத்த தாம். (54)

அடைந்தார்க் கபய மருளினீர் செல்வம்
தொடர்ந்தார்க்கும் நும்பணியிற் றெக்கார் மடந்தைதன்னால்
வந்தவன்மைப் போர்க்களத்தின் மாண்டு கிடந்திலரேல்
தந்தநன்மை யென்னுந் தகைத்து. (55)

செம்மைப் படுமுளத்தீர் செய்த பெருமுதவி
வெம்மைப் பகைமுடித்து மேன்மைதந்தீ ரும்மை
இகழ்வரெனி னென்றோ விருமைப் பயனுந்
திகழ்வதிலை யென்று டெரிந்து. (56)

ஆண்டடுத்த வாலிவத மாற்றியது மம்பொன்றேற்
பூண்டடுத்த நற்றுணையும் போர்வில்லே யாண்டடுத்துத்
தேடுகின்றீர் தேவிதனைத் தேடு மவரையிவண்
கூடுகின்றா ரச்செயற்கா கும். (57)

என்றுரைத்த வன்ற னினிய மொழிகேட்டு
நன்றுரைத்த கேள்விவர னானுடனே நின்றதனைக்
கண்டடுத்த மாருதியும் காய்தலில னென்றுமனம்
கொண்டடுத்தான் சிந்தை குறித்து. (58)

வந்தணித்தாய் முந்தி வணங்கிநின்ற மாருதியை
மந்தணத்தாய் நீயு மறந்தனையோ முந்தணித்தாம்
செய்கையென்று னண்ணல் சிறந்த வனுமனன்றே
யுய்கையுண்டோ வென்று னுணர்ந்து. (59)

Koviloor Digital Library

சிதைவகலுந் தாய்தந்தை சேர்ந்தகுரு தெய்வப்
பதவிமறை யோர்பாலர் பாவை வதைபுரிந்தோர்
உய்வகையு முண்டே லுதவிகொன்றூர் தம்பழிக்குச்
செய்வகையு முண்டோ தெரிந்து. (60)

ஐயநுங்கட் கண்டு மரிகுலத்தா னுமரசன்
செய்யநின்ற கேண்மையென்னுற் சேர்ந்ததுவே மெய்யனுகு
மன்னதிற மாயுமெனி லன்னவர்க்கு முய்வகைதான்
என்னதிற மென்று னெடுத்து (61)

தேவர் தவமெய் சிறந்த வறமற்றும்
யாவையுநீ ரென்பதெனக் காந்தெளிவா மாவதுதான்
நிற்க வருளுண்டு நீவிர்முனிந் தாற்றூங்கப்
பொற்கழலா யெங்காம் புகல். (62)

மறந்தா னலன்கவியின் மன்னன் படையைச்
சிறந்தாரை யேவிவரச் செய்தான் அறந்தானும்
நுங்கட்காம் வாய்மை நுவன்ற தழியுமெனிற்
றங்கட்காம் நன்மையென்னுந் தான். (63)

உதவி மறுத்தளித்தற் கொவ்வாது செய்திர்
பதவி மறுத்தளிக்காப் பண்பீ ரிதவியலென்
பூண்ட செருவிற் பொருந்தார் தமர்புதைத்தல்
ஆண்டசெய லன்றி யென்னை யாம். (64)

ஈண்டலற நிற்ற லினிய வியல்பன்றூல்
வேண்டலர்கள் கண்டால் வெறுத்தற்கா மாண்டகையீர்
நீரளித்த செல்வவளம் நின்கவிக்கோன் றன்னுடனே
சீரளித்தாய் காண்பாய் தெரிந்து. (65)

மாருதிபொன் மாற்றமதால் மன்னும் வரைத்தோளான்
திருதலை நேர்ந்தடுத்த சிற்றத்தான் ஆரியன்றன்
பேரருளிற் றீர்வடுக்கார் பேசரிய செல்வமதாற்
சாருமருள் கொண்டவராந் தான். (66)

Koviloor Digital Library

அனையகன்று வள்ள லனுமன் றனையே
நினையகன்று ரேவர் நெறியார் புனைய
வுரைத்தபொற்பு நன்றென்று றுத்தமர்கள் போற்றும்
விரைத்தபொற்றூர் வீரன் விழைந்து. (67)

தேவி தனைக்குறித்த சீற்றமொடு மானத்தீ
யாவி தனைக்குறித்த தாற்றினேன் கோவியலின்
தன்மையதுந் திருந் தகைத்தெண்ணி னேனடுத்த
வன்மையதுஞ் செய்வேன் மதித்து. (68)

ஆயினுமே யென்மனதை யாற்றிநின்று போற்றுபுகழ்
நாயகனைத் தேற்றவெகு நாள்கழிந்த தாயில்
உலகமொரு மூன்று முயர்தேவர் வீவர்
விலகவெவர் வல்லார் விரைந்து. (69)

உன்னைக்கண் டெங்கோனை யுற்றிடத்தி னுற்றபெற்றி
தன்னைக்கண் டிம்முயர்ச்சி தாழ்த்தகன்றி மின்னைக்கண்
டன்னவளை நாடற் கடுத்த தனுவொன்றும்
பின்னைவைதான் வேண்டும் பெலன். (70)

ஒன்றிப் படர்வான மொன்றோ வுலகடுத்த
வென்றிக் கடலுமலை மேலெவையும் நின்றதரத்
தண்டத்தி னுள்ளா மதுவு நெடிதோநீர்
பண்டுற்ற சொல்லெவன் படும். (71)

தாழ்வித்தி ரல்லீர் தருக்கு மரக்கர்தமை
வாழ்வித்திர் தேவர்துயர் வாழ்க்கைதந்திர் கேழ்வித்தீ
யாளர்க்கு மின்ன லளித்திர் பரந்தருபொற்
றாளர்க்கு மன்னுசினந் தந்து. (72)

தோன்றலது சொல்லத் தொழுதுரைப்பான் மாருதியும்
கான்றசெயல் நெஞ்சிற் கருதலெவன் என்றகொண்ட
தெம்முனைக்காத் திர்க்குஞ் செயலை முடித்துமுன்றன்
தம்முனைக்கா னென்றான் றகைந்து. (73)

Koviloor Digital Library

முன்னும்நீ சொன்ன முயற்சி முடிந்ததினி
இன்னும்நீ சொன்ன தியைதுமெனப் பொன்னுடைய
வார்சிலைக்கை மாதவத்தான் மாருதியி னோடுசென்றான்
கார்சிறக்கு மாடநகர்க் கண். (74)

அயிலேர் விழிகுமுத மாகியவாய் தோகை
மயிலேர் பொன் சாயல் மருவும் குயிலேர்
மொழிமடவா ரோடு முகிழ்நகையாள் சென்றாள்
விழிமடமான் தாரை விரைந்து. (75)

வல்ல வமைச்சரொடு வாலிசுதன் கோலவள்ளல்
அல்லி மலரடிசேர்ந் தச்சமற்றான் வில்லியுட
னன்னவனை நோக்கியுந்தைக் காம்வரவு சொல்லென்றான்
மன்னவன்பாற் சென்றான் மகிழ்ந்து. (76)

போனபின்னர் தாதையில்லம் போந்து பொலன்பாதந்
தானடுத்துப் பற்றிமுற்றுந் தைவந்து மானவற்குத்
தம்பிவந்துன் வாசற் றலைநின்றான் சீற்றமிணை
யம்பிவந்த மாகடலென் றான். (77)

அறிவுற்றான் மங்கையர்க ளன்னவனைப் பற்றிப்
பிறிவுற்றார் முன்னடுத்தல் பேணான் செறிபொற்றார்
வீரநம்மேற் குற்றம் விழையாது சீற்றமுறக்
காரணமே தென்றான் கரைந்து. (78)

இயைந்தனைய நாளெல்லை யெய்தலையாய்ச் செல்வம்
வியந்தனைகொன் றாயுதவி வீங்கி யுயர்ந்தனவாம்
சீற்றம் நயத்தனுமான் சென்றடுத்து வேண்டாமக்
கேற்றம் நயத்தளித்தா னின்று. (79)

வருகின்ற வேகமதை வானரர்க ளோக்கிப்
பொருகின்ற குன்றடுக்கிப் போற்றி வெருவி
யுருச்செய் கதவிறுக்கி யொண்மலைகள் கொண்டு
செருச்செய் கதத்துற்றார் தேர்ந்து. (80)

Koviloor Digital Library

ஆண்டகையா னேக்கி யணிகமலத் தாளெடுத்துத்
தீண்டவுடன் சேர்ந்த திருவுருப்பி னீண்டமதில்
கொற்றமுடி வாயிலொடு குன்றடுக்கி நின்றவெலாம்
இற்றபொடி யான தெடுத்து (81)

அன்னிலைமை கண்ட வரிகுலத்தி னுமனிகம் [மை
என்னிலைமை யாண்டொளித்த தென்றுரைக்கே னின்னிலை
கண்டவழி யன்னை கடுகிவரு பெண்களொடு
மண்டுவெழி மாற்றினாள் வந்து. (82)

மங்கையர்கண் மேனி வடிவ தனைநோக்கான்
பொங்கிவரு சீற்றம் பொராநின்று னங்கையவண்
நல்லமொழி கூறி நடந்ததெங்க ணன்மையென்றாள்
வல்லமொழி தந்தான் மதித்து. (83)

அதையறிந்த வன்னை யவன்சீற்ற மாற்றி
விதியறிந்த சேனை விரவப் பதியறிந்த
தூதனுப்பிப் பார்த்திருந்தான் சோர்வில்லா னென்றெடுத்து
நாதனுக்குச் சொற்று ணயந்து. (84)

சொற்குறியாக் கேட்டருக்கன் றோன்றலுரைப் பானுலகின்
நிற்குரியார் யார்சினத்தி னேர்ந்தனரேல் விற்குறியார்
இத்தன்மை யெய்த வெனக்குறையா தென்னென்றான்
மத்தன் மெய்கொண்டோன் மருண்டு. (85)

உணர்த்தினேன் முன்ன முணர்ந்திலைநீ யென்தாய்
புணர்ப்பதின்றி மாருதிபாற் போனே னிணர்த்தொகைசேர்
பொற்றோர்ப் புயத்தெந்தாய் போந்தவனைக் காண்டனன்மை
மற்றோர்க்கு மென்றான் மதித்து. (86)

உறவுண்டோன் சொல்வா னுலகி னொருவர்
பெறவுண்டோ வெற்காகும் பெற்றி நறவுண்ட
பித்தால் மறந்தேன் பெரியோர் புரியுதவி
எத்தாம் நலமென்று னேய்ந்து. (87)

Koyiloor Digital Library

ஏய்மனது மென்னையினி யேழைமையின் பாலதன்றே
தாய்மனைவி யென்னுந் தரமறியா தீவினையி
னைந்திறென்றா மன்றி யதிகத் திருக்குடைத்தாம்
சிந்தைநொந்து போந்தெளிவு தீர்ந்து. (88)

தீவினையைத் தீர்ந்தோர்க டீர்வர் பிறவியென
மேவினைய வேதம் விளம்பியுமே பாவமுற்ற
பொய்யினற வேற்றேன் புறத்திற் படுந்தீயை
நெய்யினவிப் பாரை நிகர்த்து. (89)

தன்னைத்தான் கண்டிருக்கிற் றூண்டும் பிறவிமயல்
என்னத்தா மாமறைக ளேற்றுரைத்து முன்னைத்தான்
தன்னை யறியாத் தகும்பிணிக்கு மேன்மதுவாற்
பின்னையறி யாதபிழைப் பென். (90)

அளித்தவர்க ளஞ்ச வருளில்லா நெஞ்சாய்க்
குளித்தவர்க ளின்பதுன்பங் கொண்டு விளித்தும்
மொளித்தவராய் வேரிதனை யுண்டு மதனாற்
களித்தவர்கட் கென்னாங் கதி. (91)

செற்றப் பகைஞர்களைச் செய்த வுதவியதும்
கற்றப் பழகுங் கலைவல்லோர் சொற்றதுவும்
மானம் தெரியாது மற்றவரு துன்பமதுந்
தானந் தெரியார்க்கென் தான். (92)

வஞ்சமென் றும் பொய்களவு மாறா மயக்கமொடு
தஞ்சமென்றார்த் தாங்காத் தகைக்களிப்பு கஞ்சமுற்ற
மெல்லணங்குந் தீரும் விதமுடைய கள்ளடுத்துக்
கொல்லும் நரகுமளிக் கும். (93)

கேட்டியன்றே னறவாற் கேடு வருமெனச்சொற்
காட்டியதா மாருதிமான் கல்விநலங் கோட்டிமிகு
மாற்றலரை வானேற்றும் வள்ளல் சினத்துயிரை
ஏற்றளித்த தென்றா னிரிந்து. (94)

Koviloor Digital Library

ஐய மிகுநடுக்க மாநறவாற் கேடடைந்தேன்
கையுமினி நாடா கருத்துமதே வெய்ய
மதுவை விரும்பின் வரதன் சரணம்
பதும மலர்சிதைக்கற் பாற்று. (95)

என்றுகொண்ட நெஞ்ச னெதிரேற்றற் கேற்றகொண்டு
நன்றுகொண்ட நீயே நணுகென்றான் தன்றுணையாந்
தேவியருஞ் சேரத் திருந்த வெதிர்கொண்டான்
கோவயரும் வேந்து குறித்து. (96)

உறைத்தநறுஞ் சாந்த முயர்பூப் புகையு
நிறைத்தகுடந் தீப நிரையுந் திறைத்தெழுந்த
கேதனத்தாந் தொங்கல் கெழுமு வளைபுரிய
மாதனத்தான் வந்தான் மதித்து. (97)

தூய பளிங்கின் சுவர்த்தலத்திற் சுற்றிநின்ற
நாயகமா மாமணித்தூ ணப்பணெலாஞ் சாயையினல்
பாயிரமாம் வில்லைப் பரித்தகரத் தோடுமைந்த
ராயிரமா நின்றா ரடுத்து. (98)

அங்கதனு மண்ண லடிபணிய வன்னவனை
எங்கிருந்தா னுந்தையென வேற்றலெண்ணி மங்குனிறை
கொற்றக் கடைத்தலைகொள் கோபுரத்தின் மாமருவு
முற்றத்தா னென்றான் முகிழ்த்து. (99)

சுண்ணமொடு தூசடுத்த சூடகக்கை மாதனத்தார்
கண்ணகன்ற பொற்கவரி காலசைப்ப வெண்ணகையார்
திங்கணகு வெண்குடையான் தேர்ச்சிவரன் றம்பிமுனர்ச்
செங்கணர சுற்றான் சிறந்து. (100)

அருக்கியத்தி னோடு மருச்சனைக்கா மெல்லாம்
முருக்கிதழார் கொள்ள முனிவோர் திருக்கில்
வரர்மதிக்க மல்கி வளர்செல்வங் கண்டு
சுரர்மதிக்கச் சூழ்ந்தான் றுதித்து. (101)

Koviloor Digital Library

வெம்முலைசேர் மாதரெலா மீனா விளங்கிவிண்ணிற்
சும்மைமதி யங்குன்றிற் றோற்றியவுஞ் செம்மறனைக்
கோதைதிகழ் மார்பன் குறித்தெதிர்ந்தா னம்மலைதன்
தாதையென நின்று சமைந்து. (102)

தோற்று மரிகுலத்துத் தோன்ற றனையிளையோ
னேற்றுவரக் கண்டா னெழுந்ததங்கண் சீற்ற
மதனைத் தகுமனத்தி னாற்றினான் போற்று
மதனைத் தருசிவன்போல் வான். (103)

எழுவின் மலையி னெழுந்ததிற டோளாற்
றழுவினர்க ணேயத் தரத்தார் குழுவினுற்ற
வீரவர ரோடும் விழைந்தடுத்தார் பொற்குழுவிற்
சேரவரு மாடஞ் சிறந்து. (104)

அரியணையைச் சேர்த்தி யதினிருக்க வென்னப்
பெரிய கவிக்குலமன் பேசத் திருமகள்சேர்
தன்றலைவன் புல்லிற் றனித்திருக்க வெற்குரித்தோ
நன்றலைமை யென்றா னலிந்து. (105)

கல்லணைந்த திண்மனத்துக் கைகேசி தன்பணியால்
எல்லணைந்த மாமுடிதா னேற்றலிலான் புல்லணைந்த
வாசனத்தின் வைக வடித்தொழிலேன் போற்றுமரி
யாசனத்தின் வைகலெதற் காம். (106)

என்றானம் மாற்ற மிரவி சுதன்கேட்டு
நின்றானங் கண்ணீர் நிலத்துகவே நன்றான
குன்றடுத்த மாடமணி குட்டிமத்தி னேயிருந்தான்
வென்றெடுத்த வில்லான் விழைந்து. (107)

மைந்த ரொடுமுதியோர் மாதர்வெள்ளம் பேதமையா
மந்தமிலா நோக்கி னழுதகண்ணா ரிந்தியந்தான்
பொன்றவரு சிந்தைப் பொலிவினர்க ளாயிருந்தா
ரொன்றவரு மோர்மனதுற் று. (108)

Koviloor Digital Library

மஞ்சனமாஞ் செய்கை மரபின் முறைமுடித்து
மெஞ்சலிலா நல்லமுத மேற்றருந்தி னுஞ்சனமால்
என்ன வரசுரைக்க வேந்த லெடுத்துரைக்கும்
தன்னவர நன்மனைதைத் தான். (109)

வருத்தம் பழியும் வயிறு நிறைய
வருத்து மினியென்னை யாகும் அருத்தியது
முண்டா கினுமவல மொண்கருத்து வேருற்றுற்
கொண்டா மமுதுகசக் கும். (110)

மூட்டினைய வன்பழியால் மூண்டுவரு தீயையவித்
தாட்டினையாங் கங்கை யரலரச னுட்டமிகு
தேவிதனைக் காட்டினையேற் றேவர்க் குறுமமுதங்
கோவினயந் துண்டதையொக் கும். (111)

பச்சிலைகாய் கந்தம் பரம னருந்தியபின்
மிச்சிலையான் வேண்டுவது வேறொன்று நச்சிலனல்
நச்சினே னென்னிலது நாயுண்ட வெச்சிலதே
இச்சியே னென்று னெடுத்து. (112)

அன்றினியு மொன் றுண்டா மைய வினியானே
சென்றினிய தென்று திருத்தினல்லா லுன்றுணைவன்
ஒன்றும் நுகரா னொருகணமுந் தாமதித்தல்
நன்றுதரா தென்று னலிந்து. (113)

வானரத்தார் வேந்தன் வரத னுரைகேட்டான்
தேனரற்றுந் தாரான் றிருவடுக்கான் கானம்
தலைமகன்றான் வைகவதிற் றாழ்வறியே னென்று
நிலைகலங்கி நின்று னினைந்து. (114)

எழுந்தகன்றான் மேலா னிரவி சுதன்றான்
விழுந்தகண்ணீர் வாழ்வும் வெறுத்தான் அழிந்தயர்ந்த
சிந்தை யுடையான் சிறந்த வனுமனைப்பார்த்
தெந்தைபிது செய்யென்று னேய்ந்து. (115)

Koviloor Digital Library

போயினவாந் தூதிற் புனைந்துவரு சேனைதமை
நீயுமுடன் கொண்டுவர னேர்மையெனத் தூய
வறிவாற் குரைத்தா னனகனிடை செல்லும்
நெறிபார்த்து நின்றா னினைந்து. (116)

அங்கதவேள் கூட வரிக்கணங்க ளோடமுனம்
மங்கையர்க ளுள்ளம் வனைந்துவரப் பொங்குபுகழ்த்
தம்பி தனைத்தழுவித் தம்முன்னிற் செங்கதிராம்
நம்பிதனை யன்சென்ற னன். (117)

பொன்னெடுத்த முத்திற் புனைந்துவரு மென்றாசின்
மின்னடுத்த பொன்மணியின் வெள்ளியினாற் றுன்னும்
சிவிகைசுற்றிச் சேரக் சிறந்த நலத்தாம்
கவிகைசுற்ற வந்தான் கசிந்து. (118)

வீர வரற்கிளைய மேலோன் சரணமலர்
பாரதனிற் சேரப் பரிதிமகன் தாரிற்
பொலியுங் கழல்தழுங்கப் பூமியெனுந் தேரின்
வலிமையுடன் சென்றான் மதித்து. (119)

எய்தினனும் வள்ள லிருந்த மலையதனை
நொய்தடுத்துச் சேனைபின்பா னோக்கிவரச் செய்யபுகழ்ச்
சோதிவிற்கை வள்ளலொடு தூயோ னடுத்ததனுங்
காதல்முனஞ் செல்லக் கசிந்து. (120)

கண்ணும் பெருஞ்செல்வக் காத லதுதீர
வண்ண லடிதொழச்சே ரன்பதனால் கண்ணும்
விரதநெறி கொண்டடுத்த மேன்மைக் கவிமன்
பரதனென வந்தான் பரிந்து. (121)

பிறிவரிய தம்பி பிரிய வுலக
மிறுதியிற்றா மென்னா மிறையை யறைமணித்தா
ராரமணி மார்ப னமலமலர்ச் சேவடியைச்
சேரமுடி கொண்டான் சிறந்து. (122)

Koviloor Digital Library

நீண்டலுமே மார்பிற் றிருவும் வெருவவர
நீண்ட தடக்கரத்தி னேரணைத்து மூண்ட
வெகுளி யொளிக்க விமலன் பொழிந்தா
னுகளுங் கருணை யுகந்து. (123)

அயலி னிறத்தி யரசொடுநின் னுணை
யியல்பி னியைந்திருக்கு மென்னும் புயல்பொழிகை
நீபுரக்கும் பல்லுயிரும் நேர்மை நிலையென்றான்
பூபுரக்குஞ் செங்கோற் புயன். (124)

பொருளுடைத்தாஞ் சொற்கேட்ட போதம் பரத்தி
னுருளு டைத்தேர் மன்சே யுரைக்கு மிருள்சே
ருலகிற் கிரவியென வோங்குங் கருணை
யிலகுற்ற வெற்கரிதென் னென்று. (125)

பின்னருரை பேசும் பெருமைத் திருவனின
தின்னருளிற் செல்வ மியைந்தவனன் மன்னவனின்
சொன்மறுத்துச் செய்தேன் றுணிந்த குரக்கியலின்
வன்மறுக்கங் காட்ட மதித்து. (126)

பெருந்திசையை நாடிப் பெருந்திறலிற் றேடித்
தருந்தகைமைத் தன்மை சமைந்துந் திருந்திழைபாற்
றாழ்ந்தே னெனதுசெயல் தற்பரனும் நீவருந்த
வாழ்ந்தேன் பெருமை மதித்து. (127)

இனையதெனி லென்னதுவா மெண்ணு மியல்பும்
நினையவரு மென்செய்கை நேர்மை வினையுமெந்தன்
நல்லாண்மை வல்லமையு நான்புகல வேண்டுவதோ
வில்லாண்மை வீர விரைந்து. (128)

செந்திருத்தாம் சேர்மார்பன் செப்பும் திரும்புவதும்
வந்திருக்குங் கால வரையளவாம் சிந்தை
சாதமொப்புஞ் சஞ்சலமேன் சார்காலந் தானும்
பரனெப்பா யென்றான் பரன். (139)

Koviloor Digital Library

ஆரியன்றான் பின்ன ரமைந்த நலமுணர்ந்த
மாருதியெங் குற்றான் வழங்கென்னச் சூரியன்சேய்
தோன்றவரு மன்னேன் துகிக்கும் பரவையென
வான்றவரு சேனை யடுத்து. (130)

கோடிதொடு மாயிரத்தைக் கொண்ட பெருந்தூத
ரோடி நெடும்படையை யுற்றடைந்தார் நாடிக்
குறித்துவரு நாளளவு கூறுமின்று நாளை
நெறித்தபடை யோடடுக்கு நேர். (131)

ஒன்பதினு மாயிரத்தி னுற்றதொரு கோடியுற்ற
நின்பெரிய சேனையந்த நேர்சேனைக் கன்பா
ரவதிநாள் நாளை யவையடுத்த பின்னர்
உவமையிலாய் செய்வதுரைத் தும். (132)

பரம்பொருளாம் வள்ளல் பணித்தமொழி கேட்டான்
அரும்பொருளோ நன்று மமைதி பெரும்பகல்தான்
போயபின்னர்ச் சேர்வாய் பொரும்படையி னேடென்றான்
ஆயபின்னர்ச் சேர்ந்தா னவன். (133)

அங்கதற்கு நன்மை யமைய வருளளித்துத்
தங்குதற்குன் தந்தையொடு சாரென்றான் செங்கமலக்
கண்ணனருட் டம்பியுடன் காதல்மன மங்கையுடன்
தண்ணெனவாஞ் சாலையிருந் தான். (134)

சேயுயரும் சீர்த்தியுடைச் செம்மல் கதிர்ச்சேய்பால்
போயதுவு மாங்குப் புகுந்தவையு நேயத்
துணர்த்திடுவா யென்ன வுரைத்தா னுரவோன்
இணர்த்திருத்தா ரேந்தற் கெடுத்து. (135)

அன்றவன்று னின்று னலரி குணக்கெழுந்த
பொன்றிணிந்த பொற்சிகரம் போந்திடுமுன் வன்றிறலார்
தூதுவர்கள் கூவத் துதைந்து வருபடைதாம்
மீதுவரல் சொல்வாம் விழைந்து. (136)

கிட்கிந்தைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

தானைகாண் படலம்.

ஆனைபத்தி னாயிரத்தி னொன்ற வலியுடையார்
வானரத்தி னொந்தலைவர் மானமிக்கார் என
மதவலியார் வார்குரங்கு மாசங்கத் தோடு
சதவலியாம் வானரன்வந் தான். (1)

ஊன்றிவரு மேரு வொடுக்கத் தொடுமிடுக்கர்
தேன்றெறிந் துண் டென்றுந் தெளிவுடையா ரான்றபத்தென்
றேன்றுஞ் சதகோடி யெண்ணும் படையுடனே
தோன்றுஞ் சுடேணன் றொடர்ந்து. (2)

ஈருக்கா வேலை யிமைப்பிற் கலக்கிமிகு
சேருக்கும் வானரத்தாஞ் சேனையுடன் தேறு
மமுத மொழியுருமைக் கானதந்தை வந்தான்
திமிதிமெனச் சேர்ந்து தெழித்து. (3)

ஐம்பத்தாம் நூறடுத்த வாயிரகோ டிக்கமைந்த
மொய்ம்புற்ற வெம்படைகண் மூண்டுவர வும்பரொடு
ஞாலத்தும் கீர்த்திகொண்ட நம்பன் றனைத்தந்து
சால்புற்ற கேசரிவந் தான். (4)

மண்கொ ளெயிற்றேன வல்லமையார் மால்வரைநேர்
எண்கொள் சதகோடி எண்ணமைந்த வெண்கினமை
யீட்டங்கொண் டேற்ற வெறுழ்சே ரிடும்பனுள
நாட்டங்கொண் டேற்று னயந்து. (5)

முனியு மெனிலருக்கன் முன்னிற்ற லேதெண்
குனியநனி கொண்ட கொடிய தனிதமுடன்
வான்பெயர்க்கும் வல்லமையார் வானரத்தாஞ் சேனைமுற்ற
வான்பெயர்க்கண் ணன்வந் தனன். (6)

Koviloor Digital Library

தனிதமிகு மால்வரைபோற் சாரும் பெரியன்
முனிவுமிகு சிங்கமெனு மொய்ம்பன் பனசனெனப்
பாரோங்கு பேருடையான் பன்னிரண்டு கோடிபடைச்
சீரோங்க வந்தான் செறுத்து. (7)

இடியுங் கடன்முழக்கு மேங்கி வெருக் கொள்ள
முடியுங் கணக்கில்படை மொய்ப்பக் கொடியரிலை
போற்றலுடைக் கூற்றும் புறமிட் டிடச்சிறந்த
வாற்றலுடை நீலனடுத் தான். (8)

எய்ப்புடைத்து மாநிலந்தா னின்னுமொன்று வேண்டுமெனச்
செப்புடைத்தோ வெண்ணென்னச் சேர்ந்துவரு மொப்பில்
வியனெண்பா ரப்படையான் வேறுங் கடல்போற்
கயனென்பான் வந்தான் களித்து. (9)

ஆயிரத்த நூறை யடுத்துவரு கோடிகொண்ட
பாயிரத்த வீரைப் படையுடையான் தாயுருத்தும்
ஏம்பலொடு கூட வெடுத்த வரைப்புயத்தான்
சாம்பனடல் வீரனடுத் தான். (10)

வல்லமையார் தொல்லரக்கர் மாய வடர்க்கும்வலி
எல்லமையும் வீரர்துதி யேற்றத்தான் தொல்லுலகம்
பன்முகத்தான் முந்தும் படைச்சலதி சூழவந்தான்
துன்முகத்தான் சிந்தை தொடர்ந்து. (11)

கோடிக்கு மேலளவில் கோடிவர நாடிலகை
மூடிக் குலவுபடை மொய்ப்பவே கோடாய்
நிமிர்ந்த புயத்தான் நிகரில் வலத்தான்
துமிந்த னடர்த்தான் றொடர்ந்து. (12)

இயைந்தபத்து நூறு யிரப்பத்தாங் கோடி
யுயர்ந்தபத்தி வானரங்க ளோங்கச் சயந்தனக்குச்
சேர்ந்ததெனச் சிந்தைத் திரத்தான் மயிந்தனடல்
வாய்ந்தவளந் தேர்ந்துவரு வான். (13)

Koviloor Digital Library

கறங்கிற் றிரிவனெடுங் காற்றிற் கொடிய
பிறங்குற்ற வேலையெனப் பேர்வ நிறங்கொண்ட
வொன்பதுற்ற கோடி யுயர்படையி னுங்குமுதன்
அன்பதுற்று வந்தா னடர்த்து.. (14)

ஏழேழு நூறு யிரகோடி யெண்ணமைந்த
வாழேழு மாப்பரவை வான்படையான் பாழிச்
சதுமுகந்தா னெண்ணுந் தரத்தான் மிகுந்த
பதுமுகந்தான் வந்தான் பரிந்து. (15)

ஏழினுட னேழா யிசைக்கு முலகமெலாம்
தாழினுமே தாழாத் தடவரைகள் சூழ்வனபோ
லேற்ற படையா னிடப னடுத்துவந்தான்
சீற்ற முடையான் சிறந்து. (16)

தீர்க்கபா தன்விநதன் சேருஞ் சரபனுடன்
ஆர்க்கவரு மைம்முகத்த னீகவெள்ளம் போர்க்கவரு
பூழியென்றை யுந்தப் பொலிந்த படையுடனே
வாழியென்று வந்தார் மதித்து. (17)

கையஞ்சா மாயுதத்த கண்ணன் றனைக்கண்டு
மெய்யெஞ்சா னெங்கும் விரிந்தபடை யையஞ்சா
மாயிரமாய் கோடி யடுத்து வரவனுமான்
பாயிரமா வந்தான் பரிந்து. (18)

நொய்தடுத்துக் கூடுபடை நூரா யிரகோடி
யெய்தவரத் தேவ ரிரிந்துடைய வெய்தடுத்த
வந்தகனுஞ் சிந்தை யசையச் சுரர்தபதி
மைந்தனளன் வந்தான் மதித்து. (19)

கும்பனொடு சங்கன் குறித்த படைத்தலைவர்
தம்பெரிய சேனையுடன் தாம்வந்தா ரிம்பர்பின்றோர்க்
கெண்ண வரிதா மிராமன் சரத்துவமை
நண்ணவரும் வேறேவைதா னும். (20)

Koviloor Digital Library

தோய்வரெனின் ஞாழி சுவறித் துகளாகும்
சாய்வரெனின் மேருவொடு சாயுமண்டம் காயிற்
கனலிரவி தாமுங் கரிந்து பொரிய
மனல்விரவி யாகு மடுத்து. (21)

எண்ணிற் பிரம ரெவர்க்கு மரிதாகும்
உண்ணிற் புடவி யொருபிடிக்கா மண்ணலரன்
வண்ண நுதற் கண்ணெரீக்கின் வல்ல சினவனலார்
மண்ணகத்த வானரத் தவர். (22)

ஒடிக்குமெனின் மேரு வொடிக்கு முயர்ந்தாய்
இடிக்குமெனின் வானை யிடிக்கும் பிடிக்குமெனின்
காற்றைப் பிடிக்கும் கடுங்கூற்றை வாயடக்கும்
நாற்றிக்கும் சூழ்ந்தடுசே னை. (23)

ஆறுபத்தேழ் கோடி யதிபர் படைத்தலைவர்
கூறுதிக்கிற் கப்புரத்துக் குப்புறுவார் மாறுபற்று
மன்னனய முன்னம் மதித்து முடிக்கவல்லார்
தன்னனையர் சேனையொடுற் றார். (24)

ஏழு கடற் பரப்பு மேற்ற தெனவிசைப்பச்
சூழும் படைவீரர் தோன்றினர் வாழிரவி
மைந்தடுந்த மைந்தன் மலர்ச்சரணிற் பூப்பொழிந்து
வந்தடுத்தார் வந்தனஞ் செய்வார். (25)

அனைய படைவீரை யார்க்க வருக்கன்
தனைய னடல்வள்ளற் சார்ந்தா னினையுமுனம்
சிந்தடைந்த வென்னச் சிறந்த திறற்சேனை
வந்தடைந்த வென்றான் மகிழ்ந்து. (26)

அய்ய னுவந்த வகமாய் முகமலர்ந்து
தையலனைக் கண்ட தகைத்தடுத்து மெய்யன்
தடக்கடத்திற் சென்றான் தரைமன் கவிமன்
படைக்கடத்திற் சென்றான் பரிந்து. (27)

Koviloor Digital Library

அஞ்சினெடு மையிரண்டி னுமகலம் யோசனைத்தாய்
செஞ்ச வடக்கினின்று தென்றிசைக்கண் ணெஞ்சலிலாத்
தானைதனை யேவித் தலைவ ருடனடைந்தான்
வானவினன் மைந்தன் மகிழ்ந்து. (28)

மீண்டியல்பொன் வள்ளல் விசயப் பதம்பணிந்து
காண்டிவர வேண்டியெனக் காட்டினுன் ஆண்டவரன்
நூற்கடலான் கண்டா னுவலும் படைவிரிந்த
பாற்கடலைப் போன்ற பரப்பு. (29)

எட்டுத் திசையு மிருநிலமு மேற்றிமையோர்
வட்டத் திசைவிண்ணும் வார்பூழி யட்டித்தான்
செம்பியனுற் செய்தகுடம் சேரவரு மண்டமெனிற்
பம்பிவருஞ் சேனைவரம் பா. (30)

நத்திசை யு மத்தியெனி னுடி யறிவருளர்
எத்திசையுஞ் சூழ்படைக்கோ ரெல்லையிலை பத்திரட்டி
நாளொருவர் கண்டாலும் நாடுமுடி காண்பரிதாய்க்
கோளொருவுஞ் சேனை யடுக்கும். (31)

விண்ணி னிலத்தின் விரிந்த பிலமதனி
லெண்ணி லினையி லிராமவரன் கண்ணினுமெய்ச்
சிந்தையினுங் கல்வித் திறத்து மறிந்ததனை
விந்தையொடு சொல்வான் விழைந்து. (32)

அடல்கொண்ட சேனைக் களவேது நாமு
முடல்கண்ட தன்றிமுடி வுண்டோ கடல்கண்டோ
மென்றெடுத்துச் சொல்வதன்றி யேற்ற கடல்முடிவைச்
சென்றெடுத்துக் கண்டவரார் தேர்ந்து. (33)

ஈசன் திருவடிவு மீரைந்து திக்கவையு
மாசில்லாச் சேனை வளமையுந்தான் பேசிவரு
பேச்சுஞ் சமயப் பிணக்கு மறிந்தவரார்
தூச்சிந்து வேலுடையாய் சொல். (34)

Koviloor Digital Library

இன்னவரச் சேனைதனை யெண்ணி முடிவறிந்த
பின்னைவரத் தெண்ணிற் பெயர்ந்திடுநாள் பின்னைவர
லுற்றதனை யெண்ணி னுயர்வாகு மென்றுரைத்தான்
பற்றலரை யெண்ணாப் பரன். (35)

யாவ துலகமதி லாவ திவர்க்கியற்ற
லாவ தரிதென்ன லாகுமோ பாவந்தான்
தோற்றதுவா மன்னுந் துணையிலறம் வென்றதென்று
னேற்றவரன் றம்பி யியைந்து. (36)

தரங்கொடரங் கக்கமலத் தாமரையான் றந்த
வரங்கொடரங் கொண்டகில மன்னு நெருங்குயிர்கள்
வானரத்தா மாப்படைக்கு மற்று முரைபோடத்
தானிறைத்தா னென்பதுரைத் தான். (37)

ஈண்டுவரை தாழ்த்த லினியென்னே யெண்டிசையுந்
தேண்டுவரை வல்லைசெலுத்தவர வேண்டுமென
நூல்வல்லான் தம்பி நுவலவர சுக்குரைத்தான்
கால்வில்லார் மொய்ம்பன் களித்து. (38)

தானைகாண் படலம் முற்றிற்று.

நாடவிட்ட படலம்.

வகைகொண்ட மானமொடு மாறெதிர வாற்றும்
பகைகொண்ட பாற்றிப் பரந்த தொகைகொண்ட
தானைக் களவு சமைந்த தெவளவென்றான்
தானக் களவுகிறத் தான். (1)

ஏற்றபெரு வெள்ள மெழுபதென முன்ன
மாற்றலறிவா ரறிவினமை மாற்றமன்றி
விண்ணினுற்ற தேவர் வியப்பெய்த வந்தபடை
எண்ணினுற்ற தேதா மியைந்து. (2)

Koviloor Digital Library

ஆறுபத்தேழ் கோடி யனிகந் தலைமையினர்
ஏறுகொற்ற வீரர்க் கியைந்தபதி கூறுகொற்றக்
கூற்றடுத்த தேனுங் குமைக்கு மெறுழ்லீலன்
ஏற்றடுத்தா னென்று னியைந்து. (3)

என்றுரைத்த விற்பரிதிக் கேற்ற திருமகற்கு
வென்றிவிற்கை வள்ளல் விருப்புடையா னன்றுரைத்தான்
நந்தனைசெய் கந்தரத்து நாயகியை நாடுதற்கு
சிந்தனைசெய் யுந்திறத்தைத் தேர்ந்து. (4)

அவனுமுற்றும் வீர வனுமானை நோக்கிப்
புவனமுற்றுந் தாதையெனப் போற்றுந் தவனமிக்க
வேகத்தைக் காட்ட விழையென்றான் பற்றலர்க்கு
மாகத்தைக் காட்டும் வலன். (5)

ஏக மடுத்த வெழிலா டனைநாடி
நாக மெடுத்தவிரி நானிலமும் போகமிகும்
நாட்டிற் சிறந்தடுத்து நாடு மதிவேகம்
காட்டிற் சிறந்தவிசை காண். (6)

தென்றிசையி ராவணன்றன் சேணகர மேணமையு
மென்றிசையு மென்னறிவு மின்னணமே வன்றிசைக்கண்
மாருதிநீ யன்றி மருவுமிசை யார்க்காகும்
சேருதிநீ யென்றான் தெரிந்து. (7)

வள்ளலறத் தாம்திருவை வஞ்சித் தெடுத்தமுழுக்
கள்ளவரக் கன்புகுதக் கண்டதுவுந் தெள்ளறிவாய்
தென்றிசைதா னென்று தெளிகின்ற தெந்தனுளம்
வென்றிசைதான் கொள்வாய் விரைந்து. (8)

தாரைமைந்தன் சாம்பன் தரமுடைய வீரரொடு
வீரைமைந்தார் சேனைவெள்ள மேவுமிரண் டாரையெனச்
சூழ்ந்துவரச் செல்வாய் சுருதிப் பொருளறிந்து
வாழ்ந்தவறச் செல்வவென்றான் மன். (9)

Koviloor Digital Library

குடக்கட் சுடேணன் குபேரன் றிசையாம்
வடக்கிற் சதவலியு மைந்திற் கடக்கும்
கிழக்கின் விநதன் கிளர்ந்தபடை முன்சொல்
வழக்கி னடுக்கவென்றான் மன். (10)

வெற்றிமதி வானரத்தாம் வெள்ள மொடுபெயர்ந்து
சுற்றிமதி யொன்றிற் றுருவியே நற்றிருவை
நன்றடுத்தல் வென்றியென்றா னட்டமிகு மந்தரத்தாம்
மன்றடுத்த வென்றின் மகன். (11)

ஈண்டுநின்று சென்றா லிரண்டைந்து நூறெனவாம்
தாண்டுமென்றாஞ் சோதிமுடி தோன்றலால் காண்டுமன்சீர்ச்
சந்தமலை நேமியெனச் சார்ந்தபுக ழேந்திநின்ற
விந்தமலை செல்வீர் விரைந்து. (12)

தேடு மவணுடுத்துத் தீர்ந்தபின்னர் தேவர்களும்
ஆடு மறுபதங்க ளோந்திணைப்பண் பாடும்
வெறிமதுவார் சோலை விளங்கெழிலிற் சூழும்
நறுமதையைக் காண்பீர் நயந்து. (13)

வாமமுற்ற மேகலையார் வானரப்பொன் மங்கையர்கள்
காமமுற்ற பூசலிசைக் கள்ளதனுற் றூமமுற்ற
மேனியசு ணாந்துயிலும் வெற்பேம கூடமெனும்
ஏனல்வரை காண்பீ ரிசைந்து. (14)

நொய்தினந்த மாமலையி னேக்கி நுமரோடு
மெய்திகழும் பொய்கையின்ஞ மேவினீர் செய்யபெண்ணை
நாடிவழிக் கொண்டு நலத்தசில நாளடுத்துத்
தேடிவழிக் கொள்வீர் தெரிந்து. (15)

தாங்குவார் போலத் தருவளர்செய் சந்தனத்தாம்
வீங்குவார் வேலி விதர்ப்பமுட னேங்குவார்
கண்டகத்தை நன்மைபுரி காமர் வனப்புடைய
தண்டகத்தைக் காண்பீர் தகைந்து. (16)

Koviloor Digital Library

பண்டகத்தி யன்பொருந்து பாழிவளர் செல்வத்
தண்டகத்தி லன்புடைய தாபதரைக் கண்டகத்துத்
தாபத்தைத் தீர்த்துத் தனிமுண்ட கத்துறையாம்
வீபத்துஞ் சோலையடை வீர். (17)

ஞாலத் தரத்தருன்னு நல்ல பொருளதனைப்
போலத் தரத்தடுத்த பூம்பொழில்கள் சீலத்தாம்
மங்கையர்கள் வாய்போல் மருவுகனி காலமின்றி
யங்கையமர் நெல்லியடுத் தாம். (18)

நயன மிமையார் நனிதுயிலார் நாட்டு
மயன மிலையருக்கர்க் காங்கு சயனமதும்
மாதர் கலவி மகிழ வருபயன்று
ஞேத நயக்கு முவந்து. (19)

ஆண்டிறந்த பின்ன ரடுத்தந் தரத்திந்து
தீண்டநின்ற செங்கதிர்போற் சேயொளியாம் பாண்டு
மலையடுத்துக் காண்பீர் மருவு புயத்தாம்
சிலையடுத்துக் காணுதிறத் தீர். (20)

முத்தீர்த்துப் பொன்றிரட்டு முன்னீத்த மாயர்முன்றில்
மத்தீர்த்து வந்தாடு மாதவரைப் புத்தீர்த்து
மாதா வரிக்க மருவா துலகளிக்குங்
கோதா வரிக்காங் குணம். (21)

அன்னதியைத் தாண்டி யறத்தா றெனத்தெளிந்த
நன்னதியாம் நாடுபல நாடியே பொன்னே
ருவணையுற்றூர் வேண்ட வுயர்முருகன் சேர்ந்த
சுவணமுற்றுக் காண்பீர் தொடர்ந்து. (22)

அந்தச் சுவண மறிந்துசந்த்ர காந்தமென
வந்தச் சிதத்தாம் வரையடுத்து விந்தைக்காம்
கொங்கணத்தைக் காண்பீர் குலிந்தத்திற் சென்றடைவீர்
வங்கணத்தை பூண்பீர் மதித்து. (23)

Koviloor Digital Library

அஞ்சிவரு வெஞ்சுரனு மாறு மகன்சுனையும்
மஞ்சிவரு மால்வரையும் வாய்ந்தடுத்து நஞ்சிவரும்
பாந்தட் குவண பதியமுதந் தந்தாயை
வாய்ந்தமலை காண்பீர் மதித்து. (24)

தேவர் பரவுந் திருவுடைத்தாய்ச் செல்வவளம்
மேவு மெழிலடுத்த மேன்மையாய்ப் பூவார்
அருந்ததியா மாமலையை யண்மிநறுங் கற்பின்
அருந்ததியைக் காண்பீ ரமைந்து. (25)

நான்மறைக்கு மற்றை நயவரைக்கு மெல்லையதாய்
மேன்முறைக்கு நல்லறத்தாம் வீடாகி மான்மயக்கத்
தாங்கடத்தை மாற்றத் தவம்புரிவார் சார்ந்ததிரு
வேங்கடத்தைப் போற்றிவிறை வீர். (26)

இருவினையு மாற்றற் கியைந்த தவத்தை
யொருவினையு நோக்கா துஞற்றும் திருவினையார்
ஈண்டிருந்து போற்றும் மியல்புடைய ஞானவரர்
ஆண்டிருந்தார் காண்பீ ரடுத்து. (27)

சூதகற்று மாமறையோர் தோயு நிறையாறு
மாதவத்தோர் போற்று மணித்தடமுங் கீதமொத்த
கின்னரங்க ளின்னிசையுங் கேடில் மடவார்கள்
பொன்னரங்கு மெங்குநிரம் பும். (28)

அம்மலையைச் சேரி னகப்பற் றுகப்பற்றுஞ்
செம்மலையைச் சூழ்ந்து சிறந்ததொண்டை கம்மலரும்
நாடடுத்துத் தேடி நணுகுவீர் சோணாட்டின்
ஏடடுத்த தாரீ ரிசைந்து. (29)

காவிரிந்த நாடு கலந்து கவிவரர்காள்
பூவிரிந்த பொற்பளிக்கும் பொன்னிவள மேவும்
அலைநாடு பாரத் தருகிரண்டுந் தேடி
மலைநாடு காண்பீர் மதித்து. (30)

Koviloor Digital Library

தென்றமிழ்சேர் நாடு செழிக்கும் பொதியவரை
நன்றமிழ்தை நாடி நதிப்பொருளைப் பொன்றிணிந்த
பாரத்தைக் கண்டு பலித மகேந்திரத்திற்
சேரத்தி காண்பீர் செறிந்து. (31)

ஆண்டுகடந் தெப்புரத்து மாமவதி யோர்திங்கள்
தேண்டியிவண் சேருமெனச் செப்புமெல்லை நீண்டவனும்
மாருதியை நோக்கி மதிவல்லோய் கண்டடுத்துச்
சேருதியேற் சொல்வேன் சிறப்பு. (32)

பாற்கடலிற் சேர்ந்த பவளமதைப் பஞ்சியிட்டு
மேற்கலையைச் சூட்டி விளங்குதுய்ய காற்றகைய
பொன்விரலார் பாதமதைப் பூங்கமல மொப்பதுண்டோ
மன்விறலாம் மற்றும் மதி. (33)

நீயே யுணர்தி நிறைவளையார் பெண்கடமக்
காயு முவமை யறிபுலவர் நேயமுடன்
ஆமையா மென்ப ரவைதான் புரவடிக்கு
மாமையா மென்பதென்ன மற்று. (34)

மஞ்சடையுங் கோதை மதிக்குங் கணைக்காற்கு
நெஞ்சடையுஞ் சொற்புலவர் நேராக மிஞ்சும்
சினைவரால் நெற்சினையுஞ் சிரம்புக் கூடும்
புனைவரா மென்னும் புகழ். (35)

அரம்பைதனை மாதரடுத்தகுரங் கொப்ப
நிரம்பு புலவருரை நேர்வர் கரும்புதனைக்
கைப்பித்த சொல்லாள் கவினுர் தொடைதனக்கு
மெய்ப்பித்த லென்னுகும் வீண். (36)

வாரணிந்த கொங்கை மடவாள் படரல்குல்
பாரணிந்த பார்தட் படமென்றே சீரணிந்த
வோராழித் தேருவமை யொல்லா தெனிலதற்கு
நீராழிப் பூவினெவை நேர். (37)

Koviloor Digital Library

சட்டகத்தை யார்க்குஞ் சமைக்கு மெழிலுடையாள்
இட்டிடைக்கி நேரியம்பற் கென்னுண்டு கட்பொறிக்குக்
காணற் கரிதாம் கருதுவமை சொல்லினவை
நாணற் குரித்தாம னம். (38)

ஆலிலையி னும்படிவத் தாகும் பலகைநொய்ய
பானிறத்த தட்டம் பளிங்காடி போலுமெனப்
போற்றிப் புகலிற் பொதுமை புனையிழைக்குஞ்
சாற்றிப் புகன்றென் தரம். (39)

சிங்கலிலாக் கூதாளி சேராது பொற்றுளையும்
மங்கலிலா தெங்குவமை வாய்ந்தடுக்கும் கங்கைச்
சுழியென்று லுந்திச் சுழிக்குவமை நீயே
வழியொன்றிக் காண்பாய் மதித்து. (40)

மயிரொழுங்கொன் றுண்டாகும் வல்லி வயிற்றென்
னுயிரொழுங்கா மேலுவமை யொக்கின் செயிரொழுங்காச்
சிற்றிடையா யுற்ற சிறுவல்லி சேராமற்
பற்றடைய வைத்தகொள்கொம் பாம். (41)

அல்லியுற வஞ்சி யரவிந்தந் தீர்ந்தவட்கு
வல்லிவரை மூன்று வயிற்றினுள வில்லிமதன்
மற்றையொரு மூன்றுலக மங்கையரை வென்றுவைத்த
வெற்றிவரை யென்றெண் வியப்பு. (42)

செப்போ கலசமோ செவ்விளநீ ரோவல்லோ
வொப்போ கலக முவமையதே விப்பார்
குலவும் புனையெழிலாள் கொங்கைக் குவமை
பலவும் நினைந்தென் பலன். (43)

கரும்பும் விரும்பவரு காம்படுத்துக் காணி
னரும்புங்கண் டாரையது வன்றிச் சுரும்புகொண்ட
வைம்பாலாள் தோளிணைக்கிங் காகு முவமைசொல
வெம்பாலாள் சொல்லே திலை. (44)

Koviloor Digital Library

முன்கைக் கிணையுவமை மூன்றுலகத் துண்டாமோ
மென்கைக் கிணைகாந்தள் மெல்லியதோ மின்கைக்கு
மற்றொன்றைக் கூறின் மருவாதி யாழ்மென்கை
முற்றொன்று மோதான் மொழிந்து. (45)

பொற்பகத்தாம் பிண்டி பொருந்துதளிர் பூமருவுங்
கற்பகத்தா நற்றளிரும் காண்பதென்னே வெற்பகத்தாம்
கொங்கைநல்லாள் பாதவிணை கூடா மரைமலரைச்
செங்கைநல்லா மென்ற றிகைப்பு. (46)

வெள்ளியதோர் புன்முறுவல் மேவுமலர்க் கொம்பனையாள்
வள்ளுகிர்க்கு நேருவமை மற்றுண்டோ வெள்ளவரு
முண்முருக்கம் பூவை முகஞ்சேர் கிளிமூக்கா
லெண்முறுக்குஞ் சொல்வ தெனைத்து. (47)

அங்கையடி கண்டா லரவிந்த மாகுமெனின்
மங்கை கழுத்திணையும் வான்கமுகுஞ் சங்காம்
எனநினைதி யல்லா லெடுத்த வுவமை
தனைநினைய வேறுமெவை தான். (48)

பவளங் கிடைகொவ்வை பைங்குமுதப் போதும்
துவளிலவங் கங்கோபந் தோன்றுந் தவளமதா
மென்றுரைக்கச் சேந்த விதழ்தே னரும்புமெனில்
நன்றுரைக்கச் சேர்ந்ததுமென் னும். (49)

சிவந்த வமிழ்தமிலை தேனில்லை யுள்ளம்
உவந்து நினைக்க வுருசி தவந்தருபொன்
செம்பவள வாய்க்குவமை செல்லாது வேறுபொருள்
நம்பவுனக் கென்னுரைப்பே னுன். (50)

முல்லை முருந்துமுத்து மூரற்கு முற்றுமெனின்
சொல்லை யமிழ்தமெனச் சொல்லவரு மல்லவெனின்
வேறுவமை யாகா விளங்கிழைதன் பற்களுக்குக்
கூறுவமை நீயறிந்து கொள். (51)

Koviloor Digital Library

ஓதியுட னெட்பூவு மொண்குமிழ்மூக் காகுமெனிற்
சோதிவளை பொன்னிரும்பைச் சொல்லுவமை நீதிமிகு
வல்லார்க் கெழுதவொணு வாளெழிலாற் கண்டுகொள்வாய்
நல்லார்க்கு நல்லா ணயம். (52)

வள்ளையொடு கத்தரிகை வாம மயிர்க்கருவி
பிள்ளைகள்தாம் பேசப் பெறுமுவமை யுள்ளம்
நவமைதரு காதுகட்கு நாட்டு முலகி
லுவமைதர வென்னுண் டுரை. (53)

பெரிய கடலொவ்வா பேசற்கு வேறு
முரிய கடமை யுவமை யரிய
கரிய விழிக்குக் கருணைக் கடலைப்
பெரிய வுவமமெனப் பேண். (54)

வாளொத்த கண்ணாள் வடிவிற் கியைபுருவம்
வேளொத்த விற்கரும்பை வேண்டினுல் தாளொத்த
தொக்கவளை யுண்டோ வுயரனங்க சாபமது
மிக்கவிரண் டில்லை வியப்பு. (55)

கொண்டலதின் கீழாக் குமுத மலர்த்துமதி
மண்டலத்தை நோக்கின் மருவுண்டாம் விண்டடுத்த
பொற்றனத்தா ணன்முகத்தின் பொற்பு மதிக்கேது
சொற்றனத்தா தென்ற றுணி. (56)

நீணிறத்தாம் நன்முகிலோ நீண்டகொடிச் சைவலமோ
மாநிறத்தாம் வேலையறல் வாய்க்குமோ பூநிறத்த
பொன்வடிவாள் கூந்தற்குப் போற்று முவமையுண்டோ
தன்வடிவே தானுந் தகைத்து. (57)

புல்லிதழின் தன்மைதெய்வப் பூவுக்கு முண்டுபொற்பின்
வல்லமதிக் குங்களங்கம் வாய்க்குமே யெல்லையிலா
நல்லியலாட் கெல்லா நலமு மமைந்திருக்குஞ்
சொல்லியலா தாகுந் துதித்து. (58)

Koviloor Digital Library

மங்கையர்கட் கோதிவைத்த வண்ண விலக்கணந்தான்
பங்கையத்தாட் கும்பிரம்பும் பான்மையதோ நங்கையிவட்
கெல்லா நலமு மியைந்திருக்கு மன்னவைதான்
வல்லானீ காணும் வகை. (59)

குழல்படைத்தி யாழுங் குயில்கிளியுங் கூட்டி
மழலையையுந் தந்த மலரோ னிழைபொருவு
பொற்றனத்தாள் சொற்கள் பொருந்தப் படைத்தளித்தான்
நற்றனத்தா னற்றவத்தி னும். (60)

வானின்ற மூவுலகும் வந்து வளர்ந்தாலும்
நாநின்ற தாஞ்சுவையாம் நல்லமுதம் வானொன்றும்
நற்செவிகட் கின்பம் நயக்குமோ சொற்கிணைதான்
கற்செறிய தோளவடுக் கா. (61)

பூமருவு மன்னம் புகழ்செய் மடப்பிடியு
மாமருவு மன்னடையின் வாய்ந்திடினு நாமதியோம்
பொற்புலவர் நாவிற் புனையுங் கவிநடைபோ
னற்பொலிவாம் நன்னடையி னாள். (62)

என்னிறந்தான் சொல்கே னிளமாந் தளிர்முதிரும்
பொன்னிறந்தான் மாணிக்கம் பொற்புடைத்தோ மின்னிற
நாணத்தால் விண்ணொளிக்கும் நங்கை யவணிறந்தான் [மோ
காணத்தான் மிக்காங் கவின். (63)

மங்கை யவளையொப்ப மற்றுள்ளா ரில்லையெனுஞ்
சங்கையிலா வுள்ளந் தனிச்சான்று வங்கவடன்
நன்னலத்தைத் தேறி நயந்தருகு சார்ந்துமலர்ப்
பொன்னவட்குச் சொல்லெனச்செப் பும். (64)

முன்னுவந்த மாமுனிபின் முன்னி மிதிலைதனில்
மன்றவன்றன் வேள்வி மதித்துவர வன்னமடுத்
தாடுந் துறைக்கருகி லன்படுக்க யான்கன்னி
மாடமிசைக் கண்டதுசொல் வாய். (65)

Koviloor Digital Library

சூழியுடை மாதங்கத் தொன்மருப்பு மென்மறுப்பு
வாழியுடை மாதனத்தாள் வாங்குமின்போ லாழிமன்னன்
பொற்சபைக்கண் வந்த பொலிவினையா ணேக்கியதை
மெச்சநத்திச் சொல்வாய் விரித்து. (66)

மானெடுத்தான் வில்லை வளைத்தான் முனிவனொடு
தானடுத்தா னில்லையெனிற் சார்ந்தெரிக்கண் யானடுப்பேன்
என்றான் முனமதனை யேற்றடுத்துச் சொல்வதற்கு
நன்றாஞ் சமய மென்ற னன். (67)

காடடுத்துப் பின்றொடரிற் காணவருந் தின்பென்றே
ஞடடுத்து விட்டவுற்கு நான்றான்போ வேடடுத்த
தாரா யெனவுரைத்துச் சார்ந்தா ளதனையவண்
சீரா யெடுத்துரைப்பாய் தேர்ந்து. (68)

வானடுத்த மாமதிலின் வாயில் கடக்குமுன்னே
தேனடுத்த சொல்லாள் சிறப்புடனே தானடுக்கும்
வெங்கான மீதோ வெனவுரைத்தா ளன்னதுசொல்
கொங்கான கூந்தலவட் கு. (69)

இன்னவகை சொல்லி யினிதே குதியென்று
வன்னமணி மோதிரங்கை வாய்ந்தளித்த தன்னனைய
சீமானைத் தாள்பணிந்து சென்றா னனுமானம்
பூமானைத் தேடிப் புகழ்ந்து. (70)

அங்கதவே ணீலன் அடைவாம் படைத்தலைவர்
பொங்குகடற் சேனை புடைசூழச் செங்கதிரின்
செல்வன் றனைப்பணிந்து சென்றார் பகைவர்களைக்
கொல்வன்மை கொண்டு குறித்து. (71)

நாடவிட்டபடலம் முற்றிற்று.

Koviloor Digital Library

பிலம் நீங்கு படலம்.

போயினவ ரெல்லாம் புறத்தா றெடுந்திசைகள்
தாயினவர் சுக்கிரிவன் றன்ஞணை மேயினவர்
சென்றுதிசை சுற்றித் திரிந்தன்ன நாளவதி
துன்றுவிசை முற்றிவந்தார் சூழ்ந்து. (1)

குன்றிசைத்த வென்னக் குவவுப் புயவலியார்
நன்றிசைத்த பொன்னவளை நாடியே வன்றிசைக்கண்
சென்றவர்க ளன்றிவரு தென்றிசைக்கட் சென்றவர்கள்
வென்றிவரம் நன்றுபுகல் வேம். (2)

திரண்ட மணிச்சுடர்கள் தெற்றியந்தி வானிற்
றிரண்டசுடர் மேனி திகழ்ந்தே யரண்டரவா
மிந்துநதி தந்தியணி யீசன் முடியைநிகர்
விந்தநகம் வந்தார் வியந்து. (3)

அந்தக் கொடுமலையி னுகு மணிச்சிகரம்
சந்தக் கொடுமுடியுந் தண்பொறைக ணந்தலிலா
நன்னெடிய தாழ்வரையு நாடினர் பீடுடையார்
பன்னெடிய நாளோர் பகல். (4)

மல்லலுடைப் பூவை மருவிவிண்ணி னேடுமலர்
சில்லலுடைப் பூங்குழலைத் தேடுவார் புல்லி
விரைவிற் பொதுங்கி வேய்ந்தா ருலகிற்
பரவைக் கிணையாய்ப் பரந்து. (5)

விண்டிற் செறிந்திழிவர் மேனிமிர்வர் விண்படர்வர்
மண்டு மரன்மலையு மற்றிடமுங் கண்டடுப்பார்
மாணுகுஞ் சிவர் உரைந்தார்கள் கண்டதிவர்
காணு தயன்காண் கலன். (6)

Koviloor Digital Library

எகினார் யோசனைதா னேழினுட னேழ்புவிக்க
ணாகினார் தென்றிசைக்க ணய்ந்தடுத்து மேகம்
கருமதர்த்த மேதியொடு காணத் திரியும்
நருமதைத்தண் ணாறுநண்ணி னார். (7)

அன்னம் படிதடங்க ளந்தரத்து நாடவர்கள்
துன்னும் படியிடங்கள் தூய்வளைக்கைப் பொன்னனையார்
ஆடுமிட நாடி யலைந்தார் கவிவீரர்
கோடுமிடை வெற்பினரு கு. (8)

மங்கைதனைத் தேடிவரும் வல்லமையா ரெல்லமையுந்
துங்கவரல் கூழைமுகந் தூய்கமலம் பொங்கு
முறுவலினா முத்துகண்டார் முற்றுதலுக் காணார்
செறுவலியார் சிந்தை திகைத்து. (9)

செருமதத்த தோளார் திருக்கின்றி யோங்குந்
தருமமுற்ற நன்மனத்தார் சான்றோர் கருமை
பொருமதமார் யானைபிடி புக்குழலுந் துங்க
நருமதையைத் தாநீங்கி னார். (10)

புண்ணியத்தாம் தீர்த்தம் புனைந்து மணிதரளம்
நண்ணியத்தாம் பொற்சுடரா நாடியே விண்ணியக்கும்
கொடுமிடையேம கூட மெனுமலையை
நாடிமிடை வார்வா னரர். (11)

மாடுற்ற பொன்மலைகண் மற்றும் மரங்களொடு
சூடுற்ற பொன்பொலிந்து தோன்றலால் பீடுற்ற
பொன்னொளியை யெங்கும் புரியு முவணையென
வுன்னுமொளி நன்மையுடைத் து. (12)

பறவை விலங்கு பரவுமிட மெங்கு
முறைவகன கப்பூழி யொட்ட னிறையுநெடு
மேருவைச்சேர் நீரனவாய் மேவிவரு பொன்னொளிகால்
சேரவருஞ் சாரல் சிறந்து. (13)

Koviloor Digital Library

பரவுங் கனக பராகம் பரக்க
விரவு மணியொளிதான் மேவும் அருவியொடு
தென்பாய் நதியலங்கு தீயி லுருகிவரு
பொன்பாய்தல் போன்றதுபொற் பு. (14)

விஞ்சையர்கள் பாடல் விசும்படுத்த வெள்வளைக்கைப்
பஞ்சடியா ராடலொடு பாணியதும் குஞ்சரத்தின்
மாமுழக்க மோங்கிவரு மஞ்சுமுழக் கம்பேரி
தாமுழக்க மேங்குந் தகைத்து. (15)

கோதிருக்கு நெஞ்சன் குணவதியைக் கொண்டனனம்
மாதிருக்கும் வெற்பாய் மயங்கினார் மீதின்
உவந்தோங்கு நெஞ்ச ருருமிற் சினத்தார்
சிவந்தோங்கு கண்ணார் செயித்து. (16)

இம்மலையி னம்மனையை யேற்றமொடு போற்றெடுத்துச்
செம்மலையு மம்மலறச் செய்துமென வம்மலையி
னிச்சயமாக் காணா நினைவுடையர் தேடிவந்தா
ரச்சயமார் வீர ரடர்ந்து. (17)

இரிந்த கரியாளி யீட்ட முடனே
விரிந்த வரிவெருவ மேலே தெரிந்தனராய்த்
தேடி யடுத்தார் திருமகளைக் காணாதால்
வாடி யடுத்தார் மனம். (18)

ஐம்பதிற்றி ரட்டி யடுத்துவரு காவதத்தா
மும்பர்தொட்ட தாமுயர்வி னோங்கியாஞ் சொம்பொற்
கிரிதாவித் தேடிச் கிளிமொழியைக் காணார்
விரிதாரி சென்றார் விரைந்து. (19)

வெள்ளமிரண் டென்ன விரிந்துவரு சேனைதனை
யுள்ளமுரண் கொண்டுலகி னோங்கியே எள்ளா
மகேந்திரம் போய்ச் சேர வழங்கிமலை நீங்கிக்
நகேந்திரன்போற் சென்றார் கவிந்து. (20)

Koviloor Digital Library

மாருதிக்கு நேர்வலவர் வாள்வயிரத் தோள்வயினர்
போருதிக்கும் வீரரண்டிப் போகின்றார் நீருதிக்கும்
பேரு நெறிநீங்கு பெற்றியிடை வந்தடுத்தார்
குரும் வெருவு சுரம். (21)

புள்ளடையா பல்விலங்கு போதலில்லை புல்லினொடு
கள்ளடையாங் காவில்லை கற்காய்ந்த வுள்ளிடையு
நுண்பொடியோ டொட்ட நுவல்வெள் ளிடையன்றிக்
கண்படியா வெப்பங் கடம். (22)

நன்புலன்கள் சோர நயத்தறிவு நாமமறப்
பொன்புலன்கொள் யாக்கை புழுங்குவார் தென்புலங்கொண்
டேங்குமெரி வென்னரகி லெஃபி லுயிரென்னத்
தாங்குமெரி வெஞ்சுரமுற் றார். (23)

நீட்டியதோர் நாவர் நிலத்தினிடைத் தீண்டுதொறு
மூட்டியபேர் வெம்மை யுலைகாலர் காட்டினுங்காய்
தங்காயந் தீந்ததனாற் சார்ந்தனர்சூட் டுப்பொரியா
யங்காயந் துள்ளி யலைந்து. (24)

ஒதுங்கு நிழலின்றி யோய்ந்த வுயிரார்
பிதுங்கு முடலார் பிழையார் பதங்கள்
கடும்பிலத்த தீயாற் கடுகிப் பதைத்து
நெடும்பிலத்தி னேர்ந்தார் நினைந்து. (25)

மீச்செலவே யில்லை விளிவ தனையன்றித்
தீச்செலவை நீக்கவரு திண்பிலத்தின் வாயச்செலவே
நன்றிதனில் வேறு நயக்கா தினையறிந்து
மென்றதனிற் சென்றா ரிரிந்து. (26)

அக்கணத்தி னப்பிலத்தி னந்தமதின் வந்தடைந்தார்
திக்கனைத்து மிக்கச் செறியுமிருள் அர்க்கனைக்கண்
டஞ்சி யொளித்த தனையவந்த காரமதி
லெஞ்சி விளித்தா ரிரிந்து. (27)

Koviloor Digital Library

எழுகிலராங் காலை யெடுத்தேக வெண்ணார்
ஒழிகிலராந் துன்ப முணர்வு மழிகிலராய்
நின்று ரிருளி னெடுமூச்சி னுலடுத்துப்
பின்று நிலையர் பிரிந்து. (28)

நின்றனராஞ் செய்யு நிலைமை யறிகிலராய்ப்
பொன்றினரா மென்னப் புழுங்கினார் வென்றிறலார்
மாருதிநீ வல்லை வழியி னெமைக்காக்க
வோருதிநீ யென்று ரொருங்கு. (29)

உய்வுறுத்தல் செய்வே னுலையீர் மனமென்வால்
மெய்யுறத்தான் பற்றி விடுகிலரென் றையுறத்தான்
அங்கால மென்ன வகலிருள்கை யாற்றடவி
வெங்காலிற் சென்றான் விரைந்து. (30)

பன்னிரண்டு யோசனைதான் பற்றி வருமெய்யான்
மின்னிரண்டு குண்டலங்கள் வில்விடவே துன்னிருளைப்
போக்குந் துணையிற் புகுந்தான் பொலங்கிரிபோ
வாக்குந் துணைத்தோ ளவன். (31)

கண்டலந்தார் பொன்னின் கமல மலர்த்துமினன்
மண்டலந்தான் வந்ததெனு மாண்புடைத்தாய் விண்டலந்தான்
நாணுமெழில் கொண்டு நளினை திருமுகம்போற்
காணுமெழில் கொண்டபொன்ன கர். (32)

கற்பகத்தாங் கானம் கமலக் கமலதடம்
பொற்பகத்த கோபுரமும் பொன்மதிலு மற்பகத்தாம்
விண்ணவரும் போற்ற விரும்பி யயன்மனத்தி
னெண்ணவரச் செய்த தெடுத்து. (33)

இந்திரற்காம் பொன்னகரு மேதா மிதற்கிணையென்
றந்தரத்தார் போற்று மணியுடனே யந்தரத்தி
னின்றசுட ரின்றெனினும் நேருமணி யாற்றமர்ந்தா
னென்றுமிலை யாகு மியைந்து. (34)

Koviloor Digital Library

சாற்றுபுகழ் முத்தையா தன்சே யிராமவள்ளல்
போற்றுபுகழ் சேர்புலவர் பொன்மனைபோ லேற்றுபுகழ்ச்
சொன்னக் குவியல் சுடரிழைகண் மாலைகலை
யென்னக் குவியு மியைந்து. (35)

பயிலவரு கிண்கிணிக்காற் பாவையர்கள் பொற்பி
னியலவரு மைந்தரிலையாய்த் துயிலவுற்று
நோக்குந் துணையன்றி நுண்ணுயிரி லோவியம்போ
லாக்குந் துணையா மது. (36)

அமிழ்த நிகரயினி யாயடுத்த வுண்டி
தமிழை நிகர்நறவந் தண்டே னிமிழ்கனிக
ளெல்லாங் குறைவின்றி யேற்றெடுப்பார் வேறொருவ
ரில்லாங் குறையொன்ற தே. (37)

பொன்னகரி கண்ட புகழ்சேர் கவித்தலைவ
ரின்னகரி ராவணன தென்றுமனத் துன்னி
யுரையாடுங் கோளா ருவந்தடுத்தார் வாயில்
வரையாடுந் தோளார் மகிழ்ந்து. (38)

புக்கநக ரத்தினிது போந்தடுத்து நாடினர்கள்
மக்கள்கடை தேவரொடு வானவைய மிக்க
வுறைவோ ருருவமது மோவியமே யன்றி
நிறைவோ ருயிரேது நேர். (39)

வாவியுள பொய்கையுள வான்மலியுஞ் சோலையுள
காவிவிழி மாதர் கவின்மொழிபோற் கூவுமிள
மென்குயில்கள் பூவைகிளி மேலா மடவன்னம்
பொன்குயிலு மோவியப்பொற் பு. (40)

ஆயநகர் மன்னு மளவை யறிந்தனர்கள்
மாயநக ரென்ன மதித்தடுத்தார் தீயபில
னுட்பிறவி சென்றறிவை யொன்றோ துறக்கமதோ
கட்புலனுக் கென்றார் கவன்று. (41)

Koviloor Digital Library

இறந்துமில மாகு மிதற்குரிய வெண்ணம்
மறந்துமிலங் கண்ணிமைத்தல் மாறேம் பிறந்துமிலம்
புல்லறிவர் போலப் புலம்புவது மென்னையென்றார்
நல்லறிவர் செல்வா னரர். (42)

சாம்பனவ னென்றுரைப்பான் சார்ந்த நலமதனால்
காம்பனவன் றோளியைக்கொள் கள்வனிவண் நாம்புகற்குச்
செய்தவன்செய் மாயந் தெளிந்தேறற் கில்லையென்றான்
கைதவன்செய் வஞ்சங் கணித்து. (43)

இன்று பிலனீதி லேறவரி தென்பார்க்குத்
தின்று சகரரெனச் சேர்ந்திடுது மன்றதெனின்
வஞ்சகரைக் கொன்று மகியைற் பிளப்பனென்றான்
செஞ்சொலுடை யான்மாரு தி. (44)

மற்றவரு முற்ற மனக்கொள் வலியுடையார்
உற்றவரு மொண்சுடரி னுட்கண்டார் நற்றவந்தான்
ஓருருவா யுற்றதென வோங்குந் தவமதனில்
சாருருவா டன்னைத் தனித்து. (45)

மருங்கலசும் வற்கலையார் வாரிறுக்குங் கொங்கை
பொருங்கலச மொக்குமெனும் பொற்பாள் பெருங்கலைசேர்
மாமதிக்கு நேர்முகத்தாள் மன்னாசி நன்னுதியைத்
தாமதிக்குங் கண்ணடவத் தாள். (46)

தேரடுத்த வல்குல் செறிதிண் கதலிதுடை
வாரடுத்த கச்சின் வரிதனத்தாள் சீரடுத்த
பொன்னாட்டிற் சிந்தை பொருந்தித் தவம்புரிவாள்
மின்னாட்டித் தந்தநடு மின். (47)

தாமரையை நேர்தளிர்க்கை தாங்கித் தரமுடைய
மாமருவு பொற்குறங்கின் வைத்துடையாள் காமமுத
லுற்றபகை சோர வுயரும் புலனன்றி
முற்றறிவாய் நின்றாண் முதிர்ந்து. (48)

Koviloor Digital Library

நெறிந்த குழலும் நிலமடுத்து நேரச்
செறிந்த சடையாய்த் திரண்ட பரிந்துவினைப்
பற்றறுத்த பாசம் பறியத் தவமுயன்ரு
ளுற்றடுத்த நேசத் துடன். (49)

இருந்ததியா ரென்ன வெதிர்ந்தா ரிறைஞ்சி
யருந்ததியாஞ் சீதையவ ளாகப் பரிந்துவரு
வானரத்தாம் வீரர் வறையவனு மானுரைப்பான்
தேனரற்றுங் கூந்தல் திறம். (50)

எக்குறியி னுக மெடுத்துரைக்கேன் மற்றிவட்கா
மிக்குறியி ராமன்மனைக் கேர்க்குமோ வக்குமணி
முத்தைநிகர் சொல்லின் முயலு மிவள்சனகன்
தத்தைநிகர் சொல்லத் தகும். (51)

அன்ன பொழுதி னணங்கு மறிவுற்ற
முன்ன முனிந்தாள் முறையன்றென் றுன்னரிய
பொன்னகரா ரல்லீர் புவியீர் வருதற்கிங்
கென்னகர வென்று ளெடுத்து. (52)

வாதைதனைக் கொண்டதிறல் வல்லறக்கர் மாயையினுற்
சீதைதனைக் கொண்டபுரை தேறவந்தோ மோதும்
அறத்துறையி ராம னருட்டே ரென்றூர்
திறத்துறையர் சிந்தை தெளிந்து. (53)

என்றனைய கேட்டா ளெழுந்தா ளிரங்கி மனம்
குன்றனைய பேருவகை கொண்டடுத்தாள் நன்றுவர
வாகவெனப் போற்று மகத்தாள் புயலடுத்த
தோகையெனப் போற்றித் துதித்து. (54)

எவ்வுழையான் செய்ய விரவிகுல வள்ளலெனச்
செவ்வுழையாங் கண்ணவளுந் தேர்ந்துரைக்க வவ்வுழை
தேருதியா யென்னத் தெரிய நிகழ்த்தலுற்றான் [தான்
மாருதியா முன்னேன் மதித்து. (55)

Koviloor Digital Library

கேட்டவளு மென்னுடைய கேடி றவமின்னே
காட்டவரும் வீடென்று கானீரை யாட்டி
யமிழ்துன்னு மின்னமுத மன்பினுட னூட்டித்
தமிழ்துன்னு மின்னுரைதந் தாள். (56)

மாருதியு மற்றவடன் மாமலர்ப்பொற் றாள்வணங்கி
யாருதவு மின்னகர்மன் யாது நின்பேர் சீருதவு
நற்றவத்தாய் கல்கவென நாடி நயந்துரைப்பாள்
முற்றவத்தாயன்னவற்கு முன். (57)

நான்முகத்தாற் கண்டு நுவலவரு சிற்பமதால்
மேன்முகத்தாம் வெய்யில் விரியவே கான்முகத்தாம்
மான்முகத்தா னுன மயன்புரிந்த நற்றவத்தால்
நான்முகத்தான் முன்செய் நகர். (58)

அன்னதிது தானவன்முன் அன்ன நடையரம்பை
பொன்னதித லேத்தனத்தைப் போந்தணைய வென்னுயிரா
மன்னவளைப் பொன்னுலகா யாற்றி யுடனிருந்தே
னின்னபிலந் தன்னி லியைந்து. (59)

புணர்ந்தவ ராமன்னவர்கள் போகமன்றி லென்ன
வுணர்ந்தவராய் நீடுபக னுற்றார் கணங்குழையாள்
பாசத்தால் நானும் பரிந்திப் புரையிருந்தே
னேசத்தா மானம் நினைந்து. (60)

இருந்திழைத்த நாள்பலவா மெல்லைதனில் வல்லோய்
திருந்திழைக்காத் தேவரிறை சேர்ந்து பெருந்திறலின்
மிக்கவனைக் கொன்று விழைந்தாளைச் சீறினன்
தக்கவினை யன்றென்ப தாய். (61)

முனிந்தவளை யுற்றமுறை முற்றுமொழி கென்னக்
கனிந்தவளு மென்னைக்கண் காட்டி இனிந்தை
முடிந்ததெனச் சொன்னாள் முழுதுநகர் காவல்
படிந்ததெனச் சொன்னான் பலன். (62)

Koviloor Digital Library

என்று னிருத்தி யிருளாம் நெறியென்றான்
ஒன்று முடிவை யுரையென்றேன் வன்றிறலார்
வானரத்தால் வள்ளலருள் வாய்க்கு மெனச் சென்றான்
தேனரற்றுந் தார்க்கௌசிகன். (63)

உண்ணவுள பூசவுள வொன்றோ வெடுத்தணிய
வண்ணமணி யாடையுள மற்றுமுள மண்ணலவை
முற்றுமற விட்டேன் முதிரும் வினையதனைத்
தெற்றுவா நற்றவஞ் செய் தேன். (64)

ஐயிருப தோசனைதா னைபிலனைய
மெய்யுருவம் மேலுலக மேவுதற்கே யுய்யுநெறி
யுண்டே லுபாய முளதே னினைத்திரென்றாள்
கண்டே மொழியாள் கவன்று. (65)

அன்ன வுரைக்கு மரிவை மொழியறிந்து
மன்னுபுலன் வென்றாண் மலர்ச்சரணைச் சென்னிவைத்து
வானவர்கள் போற்றும் வரனுலகு சேர்ப்பனென்றான்
மானவர்கள் போற்றுமனு மான். (66)

முழைத்துயின்ற மாவிருளின் மூழ்கிமுடி வேமைப்
பிழைத்துயிர்க்கச் செய்த பெரியோ யிழைத்திலல
மாயசெய லென்று ரவர்வழுத்த மாருதியும்
தூயசெயல் செய்யமதித் து. (67)

நடுங்கலென நன்று நவின்று நகைத்து
மடங்கலென வன்றிறலான் வானத் தொடுங்கவில
வானபிலத் தைத்திறந்து மண்ணுலகைக் கொண்டதடத்
தானகரத் தோடுமெழுந் தான். (68)

எருத்துமகன் கைக ளிரண்டுமெயி றென்ன
மருத்துமகன் பூவிடந்து வந்தான் கருத்துமகன்
கண்ணெதிரிற் கண்டோர் கலங்க வுலகெடுத்த
வண்ண வெறு ழிக்கிணை யா வான். (69)

Koviloor Digital Library

மாவடிவு கொண்ட மலரோன் வகுக்கவரு
தூவடிவாம் விண்ணைத் துளைக்கநின்றான் மூவடியிற்
பூகோ விரண்டுமுடன் போர்த்தவரன் சேவடியாம்
வாகோ திரண்டவனு மான். (70)

எழிருப தோசனைதான் எற்றெழுந்து பூமிதிற்
தாழ வருபிலத்தைச் சார்மேலை யாழ்கடலி
ஞகமெனச் சேர்த்தா னளவில் வலியுடையான்
மேகமென வார்த்தான் விளித்து. (71)

இன்றடுக்கு மேல்கடலி னேற்ற பிலந்திவாய்
நின்றடுக்கு நன்னுதலாள் நேர்ந்தாளும் குன்றடுத்த
தோளா ரெழுந்தார் துதித்துவனை மேற்சென்றாள்
வாளான கண்ணாள் மகிழ்ந்து. (72)

மேருவரை நேர்தனத்தாள் மென்சொல்லாள் விஞ்சுதிறல்
மாருதியை வாழ்த்தி வழிக்கொண்டாள் சாரும்
சுயம்பிரபைப் பொன்னுகுந் தூயா ளடைந்தாள்
நயம்பிரபைப் பொன்னுகு நாடு. (73)

வீரனடல் மாருதிசெய் வெற்றிதனை வாழ்த்தியவர்
பாரநடை கொண்டு பகலிற்போ நீருடைய
பொய்கையெனு நேமியுற்றார் போன பகல்கிரணக்
கைகளொடு மேலைக் கடல். (74)

பிலம் நீங்கு படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஆறு செல் படலம்.

கண்டார்கள் பொய்கைக் கரையிற் கனியொடுதே
னுண்டார்க ளுண்டங் கொருசூழல் கொண்டார்கள்
மானவராம் வானரர்கள் வாய்ந்து துயிலவெங்கட்
டானவனு மீனனடுத் தான். (1)

மலையேயுந் தோற்றத்தான் மாகடலும் போல்வான்
கொலையேயுங் கூற்றிற் கொடியான் புலையேய்வான்
நீர்மையிலா னிந்தா நிலவும் பிளவெயிற்றான்
ஓர்மையிலான் வந்தா னுருத்து. (2)

கருவி மழையைக் கடாவி யதன்மே
லுருவி யுடலொற் றுயர்வால் மருவும்
பொருவின் மழைபொழியும் பொற்புடலான் வந்தான்
அருவிவரு குன்றமென வார்த்து. (3)

வானவர்க்கு மேனவர்க்கும் வல்லமையிற் சொல்லமைந்த
தானவர்க்குந் தானரிய தன்மையினான் மேனிவெற்ப
னன்றோ னுடனமரி லாடற் கெவர்வலியார்
என்றோ விவனுக் கிணை. (4)

பிறங்குதிப் பங்கி பெயரவரு பெட்பிற்
கறங்கிற் சுழன்றுதிரி காலன் அறங்கொள்ளாச்
சிந்தைதொலை வில்லான் திரண்டுவரு வானரர்முன்
நிந்தைசொலி வந்தா னெறித்து. (5)

பொய்கையென தென்றறிந்தும் புல்லறிவி னோர்வந்தார்
உய்கையினி யின்றெனக்கை யோங்கியே செய்கையிலான்
அங்கதன்றன் பொற்பா ரகலத் தடித்தடர்த்தான்
வெங்கதங்கொள் வெற்பாய் விரைந்து. (6)

Koviloor Digital Library

மற்றிவன்மெய் மைந்துடையான் மாய முடைத்தீயன்
இற்றிவன்மெய் தென்னிலங்கை யேந்தலென வுற்றோ
னுரங்கொண்ட மார்பி னுருத்தா னடித்தான்
திரங்கொண்ட வீரன் றெழித்து. (7)

இடியுண்ட வோங்க விடிந்ததனை யொத்துப்
படியுண்டு வீழ்ந்தான் பதைத்துத் தொடியுண்ட
தோளடுத்த வீரரெலாஞ் சுற்றினார் வெற்றிமிக்க
ஆளடுத்த அங்கதன்பா லார்த்து. (8)

ஆரையிவ னென்ற தனுமான் வினவவுடன்
தாரையவன் மைந்தன் தடுத்துரைப்பான் நேரும்
பரிவிலனா மன்னும் பழியுடையான் தன்னைத்
தெரிவிலனா னென்றான் றெழித்து. (9)

யானிவன்றன் தன்மை யறிவேன் பொருவிலகேள்
தூணிவந்த வேற்கைத் துமிரனெனுந் தானவன்றான்
வன்னிநா னென்றடர்த்து வந்தா னெனவெடுத்துப்
பன்னினான் சாம்பன் பரிந்து. (10)

வேறு மடைவருளர் வெய்யோ ரெனமதித்து
தேறி யடைதுயிலிற் றீர்ந்தவரர் வீறு
சுடர்த்தபன னண்ணுஞ் சுடரடைந்த வேலை
தடத்தமலர்ப் பெண்ணையடைந் தார். (11)

நண்ணுதனம் பொற்புளின நற்றா மரைமுகமாப்
பண்ணுமிதழ் வாயாம்பல் பன்முல்லை வண்ணமுற்ற
வெண்ணகைநன் முத்தம் விளங்குபெண்ணை நாடிவந்தார்
வண்ணமணிப் பெண்ணாடு வார். (12)

துறையடுத்த தோகை சுழன்றாடு சூழல்
குறையடுத்த சோலை குளிர்நீர் சிறையடுத்த
தெள்ளு தடமுந் தெளியும் பளிக்கறையும்
வெள்ளிடமுங் கண்டார் விழைந்து. (13)

Koviloor Digital Library

மணிகொழிக்கு மன்னதியின் வந்து படிந்தார்
பிணிகொழிக்கும் வெம்பிறவி பேரும் அணிகொழிக்கும்
நற்சுழிக ளோடு நளினமலர் முத்தடுக்கும்
பொற்றுறைகள் கண்டார் புகுந்து. (14)

ஆடுமலைப் பெண்ணை யகன்றூர் பெருவளத்த
காடுமலை குன்றுங் கடந்தடுத்தார் நாடுமலை
நீரடுத்த நாடு நெருங்கிப் படர்ந்துவந்தார்
காரடுத்த கையார் கரைந்து. (15)

தசநவப்பேர் நாடு தகைந்தனர்க டேடி
யிசைநயத்த க்ாலா நிசைக்கு நசைநறவார்
தோடடுத்த பூஞ்சோலை சூழும் விதர்ப்பமெனும்
காடடுத்து வந்தார் நயந்து. (16)

வைதருப்ப மண்டலனில் வந்த திறல்வீரர்
எய்தருப்ப மத்தனையு மெய்தினர் மெய்தருப்பை
நூல்பிறழு மேனியராய் நுட்பமொடு தேடிவந்தார்
கால்பிறழு மென்னக் கலித்து. (17)

அந்நல் வள நா டடைந்தா ரவணூடிச்
செந்நெல் விளைநாடு தேடியே தன்னை
யனையார் புகுந்தா ரகன்றண் டகமாம்
புனையார்ந்த நாட்டின் புரம். (18)

உண்டகத்தைக் கொண்ட வுரமார்ந்த வைம்பொரியாங்
கண்டகர்க்குக் காலனெனக் காட்சியார் தண்டகத்தை
நாடியடுத் தேகினர் நன்முண்ட கத்துறையுந்
தேடியடுத் தாகிச் செறிந்து. (19)

அள்ளலுறு நீரி லமரர் வனிதையர்கள்
கொள்ளு முலைக்கலவை கொண்டதனுற் கள்ளடுத்த
வள்ளக் கமல மலர்வேலி நாறிலவாம்
புள்ளொக்க மீனும் புலால். (20)

Koviloor Digital Library

குஞ்சரங்கள் சேர்ந்து குடைந்தொழுகு கொட்பதனுல்
விஞ்சையர்கள் பாலின் விரகமின்னுர் நஞ்சனைய
வீணையிசை கேட்டுருகி மேலு மருவியெனக்
காணுமவர் கண்ணீர் கரைந்து. (21)

கழுகத்தின் வார்ந்து கனகத்தா லாகிக்
குமுதத்தின் வாயார் குயிலை யமுதத்தர்ம்
பாடலினுன் மாற்றிப் பரிந்தாடு மூசல்களை
நாடலினுர் கண்டார் நயந்து. (22)

இனைய துறையதனை யெய்தி யடுத்தார்
நினையு மிடமெவையு நேர்ந்து நனையவிழும்
வார்குழைந்த கூந்தல் வரமான் றனைக்காணுர்
சீர்குழைந்தார் தேடித் திரிந்து. (23)

நீண்டதொரு மேனி நெடியோன் கடிதாளிற்
பூண்டுவரு கங்கை புனைபொற்பின் பாண்டு
சேர மடுத்தமலை சென்றடுத்துத் தேடிக்
குகை மடுத்தார் குறித்து. (24)

இருளுற்ற தன்மே லெழுந்து நிலவு
மருளுற்ற சோதி வழங்க லருளி
லுடலரக்கல் மேலமுக்கி யோங்கு மவன்ற
னடலரக்குங் கைலைமலை யாம். (25)

விண்ணுற்ற சோதிவிரியு மலைதேடிக்
கண்ணுற்று நோக்காக் கவன்றனராப் பண்ணுற்ற
வாயுடைய சானகியை மமலையின் சாரலெங்கும்
ஆயுடைய ராகு ரவர். (26)

உளதைதனை யொத்துவிரைந் தோடித் திரிவயவர்
சிதைதனைக் காணுர் தியங்கினுர் டதரலாங்
கூந்தலவண் கண்டதெனக் கோதா வரிகண்டா
ரேந்தலவ ரெல்லா மியைந்து. (27)

Koviloor Digital Library

எழுங்கிரியிற் றாகி யிழியு மருவி
தொழுஞ்சனகன் வேள்வி தொடங்கி யுழும்பொழுது
வந்தமகட் காயிரங்கி வைய மழுவதெனச்
சந்தமகன் றாகுஞ் சரித்து. (28)

ஆசரித்துக் கூறுலகுக் காமளவை நூலென்னக்
காசரித்துச் சேரவரு காணாறு பேசரக்க
ணார மெருவைக் கரசடுத்து வீசவரு
சீரை யடுக்குஞ் சிறந்து. (29)

கொங்கணங்க ளேழுங் குடைந்து கடற்றரளஞ்
சங்கணங்கு நெய்தல் தணந்தேகித் திங்கட்
கொழுந்தார் சிமயமது கூடி யடுத்தார்
தொழுந்தா ளருந்ததியொத் து. (30)

அருந்ததிக்கண் சேணா ரழகுக் கழகா
ளிருந்ததிக்கைக் காணா ரிடையர் பெருந்ததிக்குத்
தாங்கடத்தின் தேன்மாறுஞ் சந்த மலைவிட்டு
வேங்கடத்திற் சேர்ந்தார் விழைந்து. (31)

முனிவர் மறைமுதல்வர் முந்தைநாட் சிந்தை
வினைவரவை மாற்றுவரர் மேலோர் புனைய
மருவிவருந் தேவரொடு மாதர்களும் வந்தா
ரருவிசிறந் தாட வடுத்து. (32)

பெய்த பொறியும் பெருங்காம மோடடுத்து
வைத நெறியு மடந்தையர்கண் ணெய்தவரு
வாளிக்கு மஞ்சார் வரத்தார் தவத்துறைவார்
ஆளக்கொள் தேவரடைந் தார். (33)

வலங்கொண்ட நேமி வரத னடியை
நலங்கொண்டு தாங்குமலை நண்ணும் விலங்குகளும்
வீடெய்து மென்றால் விழைந்து தவம்புரிவோர்
வீடெய்த லென்ன வியப்பு. (34)

Koviloor Digital Library

ஆயகுன்றை யண்மி யருந்தவத்தி னும்பெரிய
தூயகுன்றை யன்னார் சுரர்பரவு நாயகன்றன்
பொற்ற சரணமலர் பொற்புமனங் கொண்டமைத்த
நற்றவர்பா தஞ்சூடி னர். (35)

சூடுஞ் சிகழிகையார் தூவளகத் தோகைதனை
நாடுமவர் தண்டகமா நாடடுத்துப் பீடுடைய
நாட்டா மரைத்தார் நயக்குமறை யோர்வேடம்
போட்டார் புனிதர் புகழ்ந்து. (36)

குன்றடுத்துச் சூழ்கடமுங் கோவலர்த முன்றிறனி
னன்றடுத்துச் சூழ்படப்பை நன்புலமுஞ் சென்றடுத்துச்
சூழுந் திரைமணியார் சூழல் களுமடுத்தார்
வாழுந் திருவை மதித்து. (37)

மேலெடுத்த பாகல் வெடித்தசுளை தூங்குமது
கோலெடுத்த மள்ளர்களோர் கொண்டுழுது சாலடித்த
பள்ளத்திற் பாயப் பயிர்செழிக்கு மன்னமலி
கொள்ளத்தென் னடுவிளங் கும். (38)

தேங்குவளை கண்ணுஞ் செறியரம்பை சேர்குரங்காந்
தாங்குவளை கண்டந் தனக்காகு மோங்குவளைக்
கையுடைய மாதர் கவினுங் குழல்காட்டும்
மையுடைய சோலை வளம். (39)

தெருவினூறு பல்லியத்தைச் சேரு மயில்கள்
கருவிமழை யென்று களிக்கும் பொருனரருள்
தண்ணுமைகேட் டன்னந் தணத்த லரிதாகும்
வண்ணவள மென்சொல் வது. (40)

தேரும் வலியதலைத் தெங்கினது பாளைதனை
நாரைவரு மென்றுகெண்டை நாடாதாஞ் சேரைவரு
பாம்பென்று தேரை பயமாம் பயமருவு
மாம்பல் மலரை யடுத்து. (41)

Koviloor Digital Library

நள்ளிவளை வாக்குகடை நவ்வியராம் நங்கையர்கள்
வெள்ளிவளை வீசநிறை வெண்மணியைப் புள்ளிவளை
நாரை சினைபொரியா நன்முட்டை யென்றுமை
பார முதுகினுடைப் பார். (42)

சேட்டிளமை யாங்கடுவன் செய்ய சிறுகையிற்
கோட்டவரு தேம்பலவின் கூன்சுளையும் வாட்டமிலாத்
தோட்டமைந்த சோலைதனிற் றேய்ந்து வருதேனு
மீட்ட மொய்க்குமீயி னினம். (43)

செல்வரென்றுந் தீனரென்று செந்தமிழ்க்கல் விப்பெரிய
சொல்வரம்ப ரென்றுஞ் சுளிபடத்தான் சொல்வரென்று
மெண்ணார் பரமனடி யேற்றுந் திருவுடையார்
பண்ணார் பரவவிருப் பார். (44)

அன்னவளத் தண்டகனு டாய்ந்தா ரதைவிடுத்துப்
பொன்னிவள நாடு பொருந்தினர் செந்நெலொடு
கன்னலுறு கந்தி கவிந்து கடுகிவழிக்
கின்னலுறச் சென்று ரியைந்து. (45)

கொடிறுதனைத் தாங்குங் குழுநாரை வாழும்
தடறுதனைத் தாங்கிவருந் தாழை மிடையவரு
தீங்கனிகள் காலிடறத் தேனிழுக்கிச் சேரவரும்
தாங்கனிவாய்த் தேடுந் தரர்க்கு. (46)

இருப்புற்ற மீன்குட்ட மென்ன நினைத்துக்
கருப்புற்ற வெந்திரத்திற் கான்று விருப்புற்ற
சாரடுத்த கூனை தனின்முழுகி மீளவரும்
நீரடுத்த காக்கை நிரந்து. (47)

பூநெருங்கும் பொற்புடைத்தாய்ப் புள்ளுறங்குஞ் சோலைதனிற்
றேனெருங்கு வீழ்தலினுற் றேர்வின்றி மீனெருங்கும்
வெள்ளமெனக் கண்டு வெருவியுறை வானரங்க
ளுள்ளிமரப் பொந்திநெடுங் கும். (48)

Koviloor Digital Library

தாரடுத்த வாழைதழை தாழை குலையெடுத்த
சோறடுத்த மாமலர்மாத் தூங்குகனிச் சாரடுத்துச்
செங்கமலக் கொங்கார் செழுங்கழனிச் செந்நெல்கழை
யங்கமலக் கொண்ட லணித்து. (49)

அத்தன்மைப் பொன்னி யடுத்ததிரு நாடுவிட்டார்
அத்தன்மெய்க் கன்னி யரசதனால் முற்றும்
வினையாய்ந்த பண்பினர்கள் மேவுதமிழ் நாடு
தனையாய்ந்து வானரர்வந் தார். (50)

அத்திருச்சேர் நாடதனை யண்டர் திருநாடும்
ஒத்திருக்கு மென்று லுடன்படுமோ முத்திருக்கும்
முத்தமிழு மோங்கு முதன்மையுடைத் தாம்பொருளை
சத்தமிழு மென்னும்வளத் தாம். (51)

என்றுந் திருந்துதமி ழேற்றவர நாடதனைச்
சென்றுந் திரிந்தார் திருந்தினார் குன்றம்
பொருந்தினவர் போனார் புரிகுழலைக் காணார்
வருந்தினவ ரென்செய்கு வார். (52)

வன்றிசைக்கண் மாகரிபோன் மன்னு மகேந்திரமென்
குன்றிசைத்த வெல்லைதனிற் கூடினார் தென்றிசைக்கட்
சேர்ந்தகடற் சீகரத்தாற் றென்றல் வருதாரி
நேர்ந்தகட நீங்கி னிரந்து. (53)

ஆறு செல் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

சம்பாதிப் படலம்.

விண்ணின் முழங்கி விரிவானிற் சேர்ந்ததிசை
நண்ணும் கரமெடுத்து நாட்டிலங்கைப் பெண்ணு
ளுழைத்தடங்கண் வல்லி யுழையளென வோங்கித்
தழைத்தடங்கு மாழியடுத் தார். (1)

திக்கடையத் தேடித் திறலார் மகேந்திரத்திற்
புக்கடைய முன்னம் புகன்றுவரு மிக்கடையும்
வானரத்தாஞ் சேனை வளமார் கடலெனவே
தானரற்றி வந்தடுத்த தாம். (2)

தாவரிய வீரர் தகைந்தடுத்தா ரவ்வயினே
யோவரிய கற்பி னுயர்வானை மேவரிய
பூங்குழலைக் காணுர் புரிவ தவரெவைநா
தாங்குழறிச் சொல்வார் தளர்ந்து. (3)

அற்றிலதோ நாள்வரையு மான்ற அவதியதும்
உற்றிலதாம் வள்ளலுயி ரோய்ந்திடுமாற் கொற்றவன்றன்
தஞ்செயலா மாணை தவிர்ந்ததினி யிற்றதுயிர்
நஞ்செயலா மென்றெண்ணி னுர். (4)

தேடிக் கொணர்வேம் திருமகளை வானடுத்து
மூடிக் கொளுமுலக முற்றுமென வாடவர்க்கு
மேலாம் பரம்பொருண்முன் மிக்குரைத்தோம் பாடவச்சொல்
லேலாப் பழிகொண்ட தே. (5)

செய்துமெனச் சொற்றபடி செய்து முடித்திலமால்
வெய்துமென வுற்ற விளம்பகிலேம் எய்துமினி
என்பதனைக் கண்டிலமா லென்று முயிரிருந்தும்
அன்பதனைச் செய்யோ மடுத்து. (6)

Koviloor Digital Library

அருந்தவந்தான் செய்திடுமோ வன்னதுவு மன்றேல்
மருந்தவந்தான் வன்கடுவின் மாய்தும் திருந்தவந்தாம்
ஏதுசெய்து தீர்த்துமென வெண்ணிஞர் தம்முயிர்க்குக்
கோதுசெய்து தீரக் குறித்து. (7)

ஒக்கு மலைவேலை யுற்ற வரைநிரையாய்த்
தாங்கி யிருந்தவர்க்குத் தானுரைக்கும் பாங்காம்
அரசனிளங் கோளரியு மான்றசிந்தை கன்றிப்
பரசவரு பண்பிற் பரிந்து. (8)

எந்தைமுனி யுஞ்செயலு மேற்றவரன் வள்ளலுலை
சிந்தைமுனி யுஞ்செயலுந் தீர்வரிதா முந்துதலே
என்னுயிர்க்கு நன்மையென வெண்ணினே னீருரைமின்
பொன்னுயிர்க்குந் தாரீர் பொறுத்து. (9)

மேலாம் வகையுரைத்தாய் வெற்றிமிக்க பொற்புயத்தாய்
மாலாம் வகைநம் வருந்துசெயல் பாலாகி
நேர்ந்துவரு மன்பும் நெறிந்து வருபழிதான்
சார்ந்ததெனச் சாம்பனுரைத் தான். (10)

மீண்டுறுத லொன்று விளம்ப மிகுந்ததினி
மாண்டுறுத னன்ரு மதித்தனமே லாண்டுறுசீ
குற்றமில மன்ன னுயர்குமர னியுயிரிற்
பற்றனல மென்ருன் பரிந்து. (11)

என்றுரைத்தல் கேட்ட யிளவரசாம் வாலிமைந்த
னன்றுரைத்தல் செய்தீர் நவையில்லீ ரொன்றுரைத்த
நீர்மடிய யானே நினைந்துயிரி னேடிருப்பேன்
சீர்மடிய வென்ருன் தெரிந்து. (12)

சான்ஜேர் பழியுரையைச் சாராது தம்முயிரைப்
போன்ஜேர் மடிதரத்தான் போந்தனனென் ஜேர்ந்த
பெரியோ ருரைக்கப் பிழைத்தலினும் வானிற்
குரியோ னெனச் சொ லுரித்து. (13)

Koviloor Digital Library

எல்லை நமதிறுதி யெந்தையறிந் தாலுயிர்போம்
வில்லியிளங் கோவினொடு வீவதுமெம் சொல்லிதுவு
நாட்டு மயோத்திபுகி னண்ணல் பரதற்கே
தாட்டுறுய ரெல்லார்க்கு மாம். (14)

பரத னிளவல் பயந்தோர்கள் மூவர்
சரத முடிவர் சனகி வரதமுற்ற
மாதவத்தா டன்னல் மடியு முலகென்றான்
கோதவத்தா லாதல் குறித்து. (15)

பொருப்பை யுறழ்தோட் புனித னுரையால்
நெருப்பை விளைத்ததென நெஞ்சம் விருப்பினுடன்
கேட்ட வெண்கிண் வேந்தன் கிளத்துந் தனதுநிலை
வாட்டமுற்ற சிந்தை மருண்டு. (16)

நீயுகின தாதையன்றி நேரவரு நின்குலத்துத்
தாயவர வார்க்குந் தனையரிலை யாயதுதான்
எண்ணியது மன்றி யியலரசர்க் காமரணம்
நண்ணியது நன்றோ நவில். (17)

வாகைதனை யேற்ற வலத்தாய் நலத்தாயாந்
தோகைதனைக் காணுதுஞ் சொற்றியெந்தஞ் சாகைதனைச்
சொல்வாய்மை யாங்கொடையாய் சோக மனந்தாங்கே
னல்வாய்மை யாயென்ற னன். (18)

அவனுரைத்த தற்பி னனும னறைவான்
புவனமுற்ற மூன்றும் புகுமத் தவனமுற்ற
வேகந்தா வுற்றவர்போல் வெய்துயிர்த்த லென்னையென்றான்
மாகந்தா வுற்றவன்றோண் மான். (19)

பின்னு முரைப்பான் பிலத்தி னலத்தவான்
பொன்னுலவு மேருப் புரத்தேத்து நன்னுதற்பொன்
தேவியலை மாதைத் தெரிவரிதே ளுளவதி
கோவியலை வேந்துகுறிக் கும். (20)

Koviloor Digital Library

ஈங்குழலற் றென்று மிகவுலகந் தேடிநின்ற
பூங்குழலிக் காயடுத்த போர்க்களத்தி லோங்குமுயிர்
வீடுஞ் சடாயுவென வீதலறு நன்றென்றான்
நாடுஞ் சடாதரனன் றான். (21)

என்றுனையா கேட்டா னெருவைக் கரசனவன்
பின்றுணையாம் பேருடைய பெற்றியான் பொன்றினனு
மென்றனலை வீசுமுரை யேற்றசெவி யானடுத்தான்
குன்றநடந் தென்ன வருகு. (22)

முறையடுத்த வெம்பி முடிந்தவா றென்னுப்
பறையடித்த நெஞ்சன் பதைத்தா னிறைகுலிச
வேலடுக்கா முன்னம் விரிந்தசிறை வெற்பெனச்செல்
மாலடுக்கா வேகத்த வன். (23)

மிடலுடைய வெம்பிதனை வீட்டுவரு முண்டா
படருடைய ரென்னப் பதைத்தா னுடலை
வழிந்துதரு கண்ணீர் வரையருவி யென்னப்
பொழிந்துவரு மின்னற் புலன். (24)

வள்ளிவரு வான்மரனு மாமலையும் பூவழுந்தத்
தெள்ளிவரு பூழியதாச் செல்கின்றான் வெள்ளிவரு
மாமலையுங் காலடுத்து மண்ணி வரவென்னத்
தாமலையு மேனித் தரன். (25)

எய்தினவற் கண்டா ரிருந்தா ரிரியலுற்றார்
வெய்தினனு மானும் விழிதியான் னொய்தினிவன்
கள்ளமொடு வந்தான் கமையி லரக்கனெனு
முள்ளமொடு நின்று றுருத்து. (26)

வெங்கதத்தை வீசி வியந்தமனன் மெய்ம்மையுளான்
அங்கதத்தை வீசமறிவுடையான் பொங்கும்
சழக்கில்லா னென்னவரு தன்மைகண்டான் பந்த
வழக்கில்லா னென்னு மகான். (27)

Koviloor Digital Library

நோக்கினு னின்ற நுவலவரு கேள்வியண்ணல்
வாக்கினு லொன்றும் வழங்குதன்முன் தாக்கினுன்
தம்பி சடாயு தனைப்போரின் வென்றவல
நம்பியெவ னென்ரு னலிந்து. (28)

உன்னையுற்ற வாருரைப்பி னுற்ற செயலினையான்
பின்னையுற்ற வாறுரைத்தல் பெற்றியதா மென்ன
வனுமா னுரைக்க வவனு முரைப்பான்
கனமான முன்சொல் கணித்து. (29)

மின்பிறந்தா லென்ன விளங்கு மெயிறுடையாய்
என்பிறந்தார்க் கெய்தாவியல்புடையான் அன்பிருந்தான்
பின்பிறந்தா னன்ஞற் பிரிந்திரியும் பேதமையேன்
முன்பிறந்தே னென்ருன் முதிர்ந்து. (30)

கூறியதோர் வாசகத்தைக் கோதில்லான் கேட்டவுடன்
ஊறியதோர் துன்பத் துவரிபுக்குத் தேறியவன்
சொன்னு னிராவணனுற் சோதிகட்கத் தான்முடிந்த
வன்னுனி ராவணத்தை யாய்ந்து. (31)

அவ்வுரையைக் கேட்டா னசனி யடலேற்ருற்
தவ்வுகிரியென்னத் தரைவீழ்ந்தான் வெவ்வுரையிற்
சாலுமுயிர் சோர்ந்தவந்து தாங்காத் துயரமுடன்
மேலுமுரை சொல்லு மெலிந்து. (32)

இளையாய் நிற்கேற்றசிற கின்றிவெந்து நீரத்
தளையானே னென்னுயிர்க்குச் சார்போ வளையாத
நேமியன்போல் வன்மை நிறைந்தா யுனக்கடுத்த
தாமிதுவோ வென்ருன் தவித்து. (33)

மலரோன் வலுமையுளான் மண்வானு மல்கும்
உலையா வறமின்னு முண்டாம் நிலையாகக்
கற்பமது நின்ற கருதி னிலையில்லா
வற்பமது நின்னுயிர்க்கா மா. (34)

Koviloor Digital Library

இடனுகு மண்ட மிரண்டுயிர்க்க வந்தோ
முடனாக மண்டிரு வோரும் கடனு
தனிசென்ற வீரந் தருமோ வுரையாய்
நனிசென்ற வீர நகைப்பு. (35)

ஒன்றானோர் மூன்றுலகத் துள்ளோரை யன்றடர்த்து
வென்றானே யென்றாலும் வெலரக்க னின்றானே
நின்முன்னம் நின்றதன்றி நேர்ந்து நினைப்படுத்தான்
தன்மந்தா னென்னுந் தரம். (36)

என்றேங்கி நின்றிரங்கி யின்னற் கடற்படிந்து
பொன்றேகுந் தன்மை புகுந்தபோ தொன்றேங்காச்
சொற்கொண்ட தாற்றேறச் சொன்னான் மலையடுத்து
மற்கொண்ட தோளனனு மான். (37)

தேற்றத்தான் றேறித் தெரிந்த திறலுடையான்
கூற்றத்தான் வாளரக்கன் கொள்கையினு லேற்றத்தான் [மைம்
போர்செய்த தென்னையென்றான் பொன்னிலையான் றன்னிலை
தார்செய்த தோளனுரைத் தான். (38)

எங்கோமான் றாசரதி யில்லாள் சனகனெனும்
செங்கோலான் செய்தவத்திற் சேர்மாது தங்கோலச்
சானகித்தாய் தன்னைத் தரையோ டெடுத்தரக்கன்
வானகத்தாய்ச் சென்றான் வகுந்து. (39)

கொண்டேகும் வேலை கொலைவா ளரக்கனிலை
கண்டேகு மும்பியறக் கண்ணுடையான் வண்டேறு
கோதைதனை யெய்தாய் கொடியோ யெனவடர்த்து
வாதைதனைச் செய்தான் மறித்து. (40)

சிறிவரு தியனடற் றேரைப் பலபிளவாய்க்
கிறிசிறை தோளைக் கிழித்தடர்த்தான் தேறியவன்
வல்லான் றருவாள் வலத்திற் சிறையறுத்தான்
நில்லான் விழுந்தா னிலத்து. (41)

Koviloor Digital Library

விளித்தா னதுகேட்ட மெய்ம்மையோன் சொல்வான்
தெளித்தாளுந் தேவற்காச் சீவ னளித்தானேல்
என்றுமவன் பொன்று விசையுடையா னென்றுரைத்தான்
நன்றுபொழி கண்ணீரி னன். (42)

பைந்தார்ப் பரன்வள்ளல் பத்தினியாம் பத்மினியாம்
கொந்தார் குழல்வல்லி கோள்கையினல் மைந்தாகும்
என்றொளிசே ரெம்பி யிறத்தல் புகழுடைத்தாம்
புன்றொழிலார்க் கென்னும் புகல். (43)

அறமன்ன வண்ணலுட னன்றமைந்த வெம்பி
யுறமன்னுஞ் சீவனது மொன்றாய்ப் பெறவொண்ணுப்
பெற்றிபெற்ற வற்குப் பிரிது மிரங்கலென்னே
வெற்றிபெற்ற தென்னிதனின் மேல். (44)

என்றென் றிரங்கிமிக வேங்கி யினியபுனல்
சென்று படிந்து சிறந்தபின்னர் வன்றோண்
வலிமாறி லாத மனத்தா னுரைப்பான்
பொலிவா னரர்க்குப் புகழ்ந்து. (45)

வாழ்வித்தீ ரென்னையின்று வந்தடுத்து மைந்துடைத்தாய்
ஆழ்வித்தீ ரல்லீர்துன் பாழிதனிற் றாழ்விற்றீர்
தீவினையாய்ப் போந்த செறியிருளைப் போழ்வித்தீர்
கோவினையீ ரென்றான் குறித்து. (46)

எல்லீரும் வல்லீரி ராமபிரா னுமமதைச்
சொல்வீர் சிறைதோன்றுஞ் சோர்வில்லா நல்லீரா
யாய்மை யுடையீர் ரறிவுடையீ ரென்றுரைத்தான்
வாய்மை யுடையான் மகிழ்ந்து. (47)

என்றான சொற்காண்டு மென்று மனந்தெளிந்து
நின்றார்க ணின்றுழியி னிலவண்ண னன்றும்
இறைவான வன்பேரை யேற்றமொடு நல்கச்
சிறைவானந் தாவவந்த தே. (48)

Koviloor Digital Library

சிறைபெற்ற பொற்பாற் றிகழ்கின்ற மேனி
முறைபெற்ற மூவுலகை மூடி நிறைபெற்ற
ஆவி நெருப்புயர்க்கு மாம்வா ளுறைபெற்றுப்
பாவுமுட லென்னவுறப் பான். (49)

தெருண்டா னபிதானஞ் செப்ப வருபந்
திருண்டா னவன்செயலை யுன்னி மருண்டாராய்
வானவர்கோன் றன்கருணை வாழ்த்தி மகிழ்ந்தார்க
ளேனைவரர் சிந்தை யிசைந்து. (50)

அன்னானைக் கைகூப்பி யஞ்சலித்தா ரையாநீ
முன்னாளி னுற்ற மொழிகென்னச் சொன்னார்க்குத்
தன்னா லிசைந்ததனைச் சாற்றினா னேற்றசிந்தை
மன்னுஞ் சகுந்த வரன். (51)

தாயனையீர் சம்பாதி தானான் சடாயுவென்பின்
சேய கழுகுகட்குச் சேரரசர் தூய
கதிர்த்தேர் விடுமருணன் காதற் புதல்வர்
மதர்த்தே மயங்கி மதி. (52)

ஆயவும்பர் நாட்டை யடைந்து மெனவுன்னிச்
சேயுயர்ந்து சென்று திரிவேலை நாயகனுஞ்
செங்கதிர்த்தேர் கண்ணுற்றுச் செல்லுந் தருவாயின்
அங்கதிர்த்தே சீற்றத் தடுத்து. (53)

முந்தியெம்பி மேனி முருங்கு மழல்மூழ்க
எந்தை யளித்தி யென வேங்க வந்தென்
சிறையான தான்மறைத்தேன் செய்பதம்பி சென்றான்
சிறையானேன் றீர்ந்தேன் சிறை. (54)

மண்ணோக்கி வீழுமெனை வானோக்கிச் செல்லுமினன்
கண்ணோக்கி மாசனகன் காதலுடைப் பெண்ணோக்கும்
வானரரி ராமன்பேர் வாழ்த்தி வருகாலந்
தானிறகு சார்தருமென் றான். (55)

Koviloor Digital Library

தவமுடைய மாலோக சாரங்கன் சாரல்
அவமடைய வீழந் துயிரை யாற்றேற் குவமையிலா
முன்னேதி யானளித்தான் முற்றுந் தவவலியாற்
தன்னேதி யாலறிந்து தான். (56)

கற்றிலர்போ லுள்ளக் களிப்பா லமரிட
முற்றிடப்போ யாதபத்தி ஞேய்ந்துடல முற்று
மழன்முருங்க வீழ்ந்தா யளிக்கா துயிரை
யுழல்வதினு லென்னு முரை. (57)

களித்தோர் கெடுவர் கணங்குழையைக் கள்வன்
ஒளித்தோர் புரைதே டிரவோ ரளித்தவனி
ராமனரு ளும நவிலச் சிறையடுக்கும்
வேமனமாற் றென்ருன் விரைந்து. (58)

அன்றி மலரடுத்த வண்ணல் முனிவாய்மை
நன்றிதென நானும் நயந்தபடி இன்றிவணே
வந்தளித்தீ ரென்னை வரமுடையீர் கைமாறு
தந்தளித்தற் கென்னுந் தரம். (59)

திசைபுகழி ராமன்றன் றேவர் தவத்தா
லிசைபுகழார் தேவிதனை யேற்ற வசையரக்கன்
சென்றெளிக்கத் தேடிவரு தீரவர வானரர்கள்
அன்றளிக்கு நற்சிறகென் றுன். (60)

எம்பி யிடர்வீழ்வா னேய மறுக்கவஞ்சி
இம்பர்க் கழுகரசை யேற்றளித்தா னம்பிமீ
ரீதென்றன் றன்மை யிவணீ ரடைந்தசெயல்
ஏதென்ருன் சிந்தை யிசைந்து. (61)

என்றலுமி ராமனடி யேத்தி யிறைஞ்சியெந்தாய்
புன்றொழில னுமரக்கன் போந்ததுவும் தென்றிசைதான்
ஆனதனுற் றேடி யடைந்தனமென் ருரவனும்
ஆனதனைச் சொல்வா னடுத்து. (62)

Koviloor Digital Library

பாகொன்று சொல்லானைப் பாதகன்றான் சென்றெடுத்துப்
போகின்ற வெல்லைகண்டேன் போயிலங்கை வேகின்ற
வுள்ளத்தா டன்னை யுவந்து சிறை வைத்தான்
கள்ளத்தா னென்றான் கனன்று. (63)

எசற்ற யோசனைதா னெண்ணூஞ் சதமிலங்கை
பாசக் கரத்தார்க்கும் பார்த்தலொவ்வா நீசத்தான்
சீற்றம் பெருந்தாவஞ் சேரற் கரிதாகு
மேற்றம் பெருந்தாயொத் தீர். (64)

எல்லீரும் புல்லற் கெளிதன் றிலங்கையதில்
வல்லீ ரொருவர் மறைந்தடுப்பீ ரல்லீரும்
மின்சொல்லும் பொன்னிடையை வேண்டியழ கற்குரைத்தற்
கென்சொல்லு மன்னு மியைந்து. (65)

காக்குதற்கு வேறூர் கழுகினங்கள் கன்றுமினி
ஆக்குதற்குச் செல்வே னறமுடையீர் வாக்குதவி
நன்றாஞ் சிறையளித்து நாட்டுஞ் சிறையழித்தீர்
என்றான் விசையி னெழுந்து. (66)

சம்பாதிப் படலம் முற்றிற்று.

மகேந்திரப் படலம்.

பொய்யுரையைச் செய்யான் புகலவரு புள்ளரசு
கையுரையு கெல்லியெனக் கண்டடுத்தா முய்யுரைதாம்
பெற்றா மினிச்செயலென் பேரறிவீ ரென்றுரைத்தார்
உற்றா ரொருங்கி னுணர்ந்து. (1)

சூரியன்சேய் தன்னுடனுஞ் சோதிவிற்கை வீரவரன்
ஆரியன்பாற் சென்றீ தறைகிற்பீர் சீரியரீர்
முற்றுந் தெளிதல்செயல் முன்னீர் கடப்பதெவர்
மற்றுந் தெளிவீர் மதித்து. (2)

Koviloor Digital Library

மாளவலித் தேமென்று மானா வகையாக
மீளவுமுற் றேநவைதீர் வேலைபெற்றேம் காளசிற
முற்ற திரைக்கடலை யோர்ந்தடுத்துத் தாவிவர
வுற்றவரர் காப்பீ ருயிர். (3)

நேரடுத்த வீரமுற்ற நீலன் முதற்றலைவர்
வாரடுத்துத் தாண்டா வகையுரைத்தார் சீரடுத்த
வேலை கடப்பனிவண் மீளவிற லில்லையென்றான்
வாலி யளிக்கு மகன். (4)

உலகமெலா முள்ளடியி னேங்கப் பரன்சேர்ந்
திலக வருபோழ்தி னேற்று நிலவுபெரு
மாதிரத்தைச் சூழ்ந்துபறை வைத்து வரமேரு
மோதவிளைத் தேனென்றான் முன். (5)

ஆதலினாற் றாண்டி யடுத்துச் செறியிலங்கை
எதிலராந் தீயவரை யெற்றியே சீதைதனைத்
தேரவர முற்றுந் திறமன் றெனவுரைத்தான்
சாரவரு சாம்பன் றகைந்து. (6)

யாமினியிப் போதே யடுத்து வருவோரைப்
போமெனத்தாம் சொல்லல் புகழன்றாங் கோமுதல்வ
தேருதியா மைய திறலை முடித்தடுக்க
மாருதியாம் பேரிசைகொள் வான். (7)

ஆரியன்றாண் முன்ன ரடுத்த வகையாலுங்
காரியந்தா னெண்ணுங் கடமையினு மாருதியை
யொப்பினு ரேவ ருயர்ந்தோ ரெனவெடுத்துச்
செப்பினன் மேன்மை தெரிந்து. (8)

மேலை விரிஞ்சனென வீயா மிகைநாளீர்
நூலை விரிஞ்சுணர்ந்த நுண்ணறிவீர் காலனஞ்சும்
காய்சினத்தின் மொய்ம்பீர் கடுவுண்ட தேவனென
வாய்சினத்தின் போரிலொப்பா ரார். (9)

Koviloor Digital Library

வெப்புறுசெந் தீநீர் விசைக்காற்றி னுன்மடியீர்
செப்புறுதெய் வப்படைக்குஞ் சிர்சிதையீ ரொப்புறினுர்
உம்மை யடுத் தா ருரைக்க வுளராமோ
செம்மை யடுத்தீர் தெரிந்து. (10)

நல்லனவு மல்லனவு நாடி நவைதீரச்
சொல்வனவும் வல்லீர் துணிவுற்றீ ரொல்வனவாய்
வெல்வனவும் வல்லீர் மிடலுடையர் பற்றுரேற்
கொல்வனவும் வல்லீர் குறித்து. (11)

மேரு கிரிக்கும் விளங்கும் பெருந்தனுவீர்
பாரை யெடுக்கும் பலமுடையீர் சூரியனைத்
தொண்டைக் கனியென்னச் சூழ்ந்தீர் வலத்திதழி
இண்டைச் சடையார்க் கிணை. (12)

ஆலமெனக் காட்டி யமரார்த் தொலைக்கும்வலி
வாலிதனை வாட்டும் மதிவல்லீர் மேலரசன்
வன்மையினும் வச்சிரத்தும் வல்ல வுடம்பினிடை
கொன்மயிரும் போக்கீர் குறித்து. (13)

போர்முன் திரியுலகும் போற்று பொருளிலவா
மோர்வில் வலங்கொண் டியர்தோளீர் சீர்வில்
பகலோங்கும் வையமுனம் பார்த்துப் படித்தீர்
இகலோங்குஞ் செய்யபுயத் தீர். (14)

நீதியுடை வாய்மை நிலையீர் நினைவினிலும்
மாதர்நலம் பேணீர் மறையனைத்தும் பேதமற
வோதியய ராதுணர்ந்தி ரூழிகடந் திருலகி
லாதியய னுக வறிந்து. (15)

அன்ன லருட்கடல்பா லன்பு சிறந்ததனுல்
நன்ன லுமக்கா நலங்கண்டீர் திண்ணமது
செய்துமுடிக் கும்பொருப்பீர் சேர்ந்தடுத்த புண்ணியமே
எய்துமுடிக் கும்பொருள்கொண் டீர். (16)

Koviloor Digital Library

அடங்கவல்லீர் காலமன்றே லாகு மமரில்
மடங்கல் வலத்தீர் மதியீர் தொடங்கியது
முற்றிடுவீர் மொய்ம்பீர் முடிக்குஞ் செருவினினூ
றுற்றிடையீ ரென்றானுகந்து. (17)

ஈண்டியதோர் கொற்றத்தா னிந்திரனே மேலோர்கள்
பூண்டியலுஞ் சாபப் பொறையணுகீர் வேண்டியதை
யுய்க்கும் வினைவல்லீ ரோங்கும் பெரியோர்கள்
மெய்க்கும் வினையீர் விழைந்து. (18)

ஏகி யிசையெங்கட் கீந்தீ ரிசைகொள்வீர்
ஓகை யுரைப்பீ ருயர்வுடையீர் சாகரங்கள்
முற்றடுத்துத் தாவு முரணுடையீர்க் கிக்கடறான்
உற்றடுத்த தென்னு வுரம். (19)

சாம்ப னியம்பவுடன் சார்வதனத் தாமரையின்
ஆம்பனிக ராம்நகையா னன்றவரன் கூம்பலொடு
சேர்கைக் கமலத்தான் சிந்தைதெரிப் பான்கடல்தாய்ச்
சார்கைக்கு நின்ற தரன்தான். (20)

இலங்கைதனைத் தூக்கி யெறியென் றிடினும்
விலங்கினரை யெல்லாம் விளித்துப் பொலங்குழையைக்
கொண்டுவர வென்றாலுங் கூறி யதுமுடிப்பேன்
கண்டுவர லொன்றே கருத்து. (21)

ஓசனைதா னூறுமடுத் துள்ளடிய தாகமண்ணை
யீச னளந்ததென விக்கடலாய் வாசவனே
வந்துமலைந் தாலு மருளிலங்கை நேர்களைச்
சிந்தமலைந் தாலாஞ் செயம். (22)

நீயிர் நினையி னெடும்பரவை யேழுமுடன்
தாய்மயிலைச் சேர்க்குந் தரமுடையீ ராய்மையினீர்
போற்றுவதென் புன்மை புகன்றுதெரிப் பானுரைப்பீர்
சாற்றுவதென் நன்மைத் தரம். (23)

Koviloor Digital Library

முற்றுலகை முற்ற முழங்கிவரு முன்னீர்தா
னுற்றிடினு மண்டமுடைந்திடினும் வெற்றியெற்காம்
நம்மருளு மேங்கோ னுவலும் வரஞ்சிறையா
யெம்மருளு மின்றி யியைந்து. (24)

ஈண்டுறைமின் யானே யிலங்கை நகரெய்தி
மீண்டுவரு காறும் விடையென்று வாண்டவர்கள்
போற்றமலர் வானவர்கள் பொற்பிற் பொழியநின்றான்
ஏற்றமலை மேலா யிவர்ந்து. (25)

வேலைதனைத் தாவும் விழைவான் விமலவரன்
தாலதனைத் தாவுமரி தாளென்னக் கோல
வுருவடிவா னும்ப ருவந்தோங்க லானும்
திருவடியாய் நின்றான் தெரிந்து. (26)

பார்புகழுஞ் சீமான் பரிதி குலவள்ளல்
போர்புகழு மேலோர் புகழென்ன வார்புகழும்
தாளான் றடங்கடலிற் றாவி வருமுன்னம்
நீளாம் நிழலிலங்கை நேர். (27)

மடங்கலது வைகும் வரையதனை வாலால்
அடங்கலுமே சுற்றி யடுக்கத் தொடங்கிவரு
மாமைச் சிகர மடங்கிவரு தன்மைகண்டால்
ஆமைமுது காமந்த ரம். (28)

மின்கொண்ட லென்றடுத்து வீக்கு கழலார்ப்பத்
தன்கொண்ட தோற்றம்விண் டாவிநிற்க வன்கொண்ட
பொன்னூர் மலையண்டம் போற்றநூன் பாதசிலை
என்னுப் பொலிந்த தியன்று. (29)

மகேந்திரப் படலம் முற்றிற்று.

ஆ படலம் **16**—செய்யுள் **1044.**

அண்ணாமலையார் துணை

கிட்கிந்தாகாண்டம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஐந்தாவது

சுந்தர காண்டம்.

கடல்தாவு படலம்.

காரடுத்த மேனிக் கருணைக் கடல்கடலாற்
சீரடுத்த பூவரசர்ச் சேர்ந்தளித்து நாரடுத்த
வுள்ளமொடு போற்று முரவோர்க் கறமளிக்கும்
வள்ளலடிப் பூவென் மனம். (1)

ஆண்டகையும் வானோர் அருள்துறக்கத் தண்டிநின்று
காண்டகையி லங்கையெனக் கண்டிதுதான் சேண்டயங்கும்
விண்ணுடேன் றெண்ணி விளங்கிழையாங் கில்லையெனக்
கண்ணுடி மீட்டான் கருத்து. (2)

கண்டடுத்தான் பொன்னிலங்கை கான்பொழில்சூழ் மாமதி
விண்டடுத்த மாடநிரை வீதிகளும் கொண்டல் [லும்
அடங்கு மடற்சிகரி யாய்ந்துகண்ட வண்டர்
நடுங்கவடற் றேள்கொட்டி னன். (3)

வன்றந்த நாகம் வயங்கனல்சேர் வாயினெடு
பொன்றந்த நாகப் புரம்போவ நின்றந்த
மில்லா னடியா னெரிந்த மலைக்குடல்க
ளெல்லாம் பிதிர்வ வென. (4)

புகலுமுழை துஞ்சும் பொருசியம் பொன்றி
யுகலுங் குருதிகக்கு மூழி னிகலி
னுறைத்த பகலி னெளிகரப்ப வானை
மறைத்த பறவையினம் வந்து. (5)

Koviloor Digital Library

பொன்பிறழுங் கோடு பொடியாய்ப் பொறிசிதற
மின்பிறழுங் குன்றம் விரிவேலை வன்பறழை
வாயினிடை கவ்வியுற்ற வல்லியங்க டாமிரியும்
நேயமது விட்டு நினைந்து. (6)

மொய்த்தசெவி தாவி முதுகினுறக் காறள்ள
மைத்த விசும்பினுற வாலதிய மெய்த்துப்
பிடியபயஞ் சேரப் பெருமரங்கை சுற்றிக்
கொடியபயம் வேழமடுக் கும். (7)

தாரகைகண் மேகந் தவிர விடைதாழ்ந்து
பாரழுந்து குன்றம் படர்தோளான் சீரெழுந்த
கூம்பாய்க் குமிழிபொங்கக் கூறுங் கடலாழும்
பூம்பாய்க் கலமாய்ப் புகும். (8)

தாதுகுமென் சந்தந் தருகுங்கு மங்குலிகம்
போதுகுபொன் ருதுமிகப் பூசியே மீதுசுனை
நீரருவி யோடுலகி னேர்வீழ் வதுகுன்றம்
பேரருவி நெய்த்தோர் பெறும். (9)

வாரிமுற்ற மத்தாய் வரைதிரிய வாங்காலை
வீரமுற்ற சித்தர் விசும்படுத்தார் கூறும்
உடற்பாசம் வீசாம லும்பர்செல்வா ரொத்தார்
மடப்பாசம் வீசும் வலர். (10)

வெயிலியலுங் குன்றம் வெடிக்க நடுங்கி
மயிலியலுந் தேவியர்சேர் வானேர் அயிலரக்கன்
அள்ளத் திரிநா ளணங்குபுல்ல நின்றதிறல்
வள்ளற் பரயனெத்த வாம். (11)

உளறுங நற வுற்றகுற்ற முள்ளுணர்வை யுண்ணவந்து
சிறுகரார் தெய்வத் தெரிவையர்க ளாறினராய்த்
தங்களிக்கு நாயகரைச் சார்ந்தடுத்தார் வானம்விட்ட
பைங்கிளிக்குச் சிந்தை பரிந்து. (12)

Koviloor Digital Library

இத்திறமாம் வேலை யிமையோர் முனிவரென
முத்திறமாம் பேருலகர் மொய்த்தடுத்தார் கொத்திருக்கும்
மாமலர்கந் தூவி வழுத்தினர் வித்தகனும்
தாமலேகந் தாவவிரைந் தான். (13)

குறுமுனிவ னுண்டகடல் குப்புறுத லொப்பில்
எறுழ்வலிக்கென் னுகுமிதி னேற்றம் சிறுமையிதென்
றெண்ணாது சேறி யெனத்துணைவர் போற்றவறக்
கண்ணு னிசைந்தான் கருத்து. (14)

இலங்கையள வன்றுகு மிவ்வடிவின் தோற்றம்
விலங்கவுள தென்று வியக்க வலங்கலுளான்
போதடுத்த தாளழுத்தப் பொற்கழலார் தாளுடனே
பூதலத்திற் புக்க பொருப்பு. (15)

வால்விசைத்து வன்றூண் மடக்கியடன் மார்பொடுக்கிக்
கால்விசைத்துக் கைநீட்டிக் காட்டியே மேல்விசைத்துச்
சென்றெழுந்தான் வீரன் திசைமுகன்ற நாடடுத்துக்
குன்றெழுந்தா லென்னக் குறித்து. (16)

ஆயா னெழுக வரிய பனைமரங்கள்
வேயார்ந்த குன்றுடனே வேறுமுடன் நாயகன்றன்
நற்பணியா மென்ன நயக்கு மிலங்கைவரும்
பொற்பணியா வந்த பொறுத்து. (17)

அண்ணல்வரு வேகத்தா லான்றெழுந்த குன்றுடனே
நணணுமர னேடு நயந்தவெலாம் திண்ணமுடன்
சென்றுகடல் வீழும் செறியிலங்கை சேர்வதனுக்
கன்றுவிசை யில்லா தடுத்து. (18)

மாவினொடு வல்லி மரமடுத்த கல்லுமற்றும்
போவதெலாம் வீழ்ந்து புணரியிடை தாவிவந்து
தூவினவாய்த் தூர்த்த சுருதிவரன் சிறமுனம்
மேவினவாம் சேது விரைந்து. (19)

Koviloor Digital Library

நீண்டுவர வேலையது கீழுடுத்த நாகரணி
யாண்டு மணிக ளடுத்துமின்னத் தாண்டிவரு
விண்டடுத்த தோளான் விரைந்துவரு பாதலமும்
கண்டடுத்தே னென்றான் களித்து. (20)

கானமுதங் கொண்ட கடல்கிழிய வீசிவந்து
வானமுதங் கொண்ட வரனென்ன வானவர்கள்
உய்திறலு மெங்கா முறுவலிசேர் தார்க்கியன்றா
னெய்தினனா மென்றா ரிரிந்து. (21)

துள்ளி வருமகரஞ் சோரச் சுரவடுக்க
வொள்ளியதா குந்திவலை யூழடுக்க வள்ளுகிர்சேர்
வீர னடுக்கும் விசைக்காற்றி னாலிலங்கை
சாரு மலைக டவழ்ந்து. (22)

எண்டிசைக்கண் யானை யிரியப் பரிந்துசெலும்
அண்டர்கட்கு நாயகன்றா தாமனுமான் மண்டி
யலைக்கவரு காலா லடுத்து வருமுத்
தலைக்கிரியு மொத்தான் றணித்து. (23)

தெய்வத் தரக்குலிசத் தேவற்குங் காண்பரிய
மெய்வைத்த வேகத்தின் விண்ணடுத்துச் செய்யுற்ற
புட்பகந்தான் பொன்னிலங்கை போவ தனையடுத்தான்
நட்பகந்தான் கொண்டா னயந்து. (24)

விண்ணோர்க ளேற்ற விமலவரர் வாழ்த்தெடுப்ப
மண்ணோர்கள் போற்ற வருதூதன் நண்ணும்
அரக்கன் றனையமுக்க வன்றடுத்துச் செல்லும்
தரக்கயிலை தன்னையுமொத் தான். (25)

மாணி வடிவன் மலரயற்கு மாண்பமைந்தோன்
சேணிவரு மேற்றன் றிரிதலையாந் தாணுவெனுஞ்
செல்வன் றனைகாணச் சென்றடுக்கு மேருவொத்தான்
வெல்வன்மை கொண்டான் விழைந்து. (26)

Koviloor Digital Library

மழைகிழித்து மீனுதிர மாகடலுஞ் சேரக்
குழையவட மேரு குலுங்க விழைவடுத்து
மோதிக் கிரிகள் முடுக்கும் பிரளயத்தின்
தாதைக் குவமையடுத் தான். (27)

தடக்கையிரு பத்தாந் தலைபத் துடையான்
கெடக்குறிய தாகக் கிழக்கில் வடக்கெழுந்து. [தான்
தென்னிலங்கை சென்றிடுமோ தித்தனெனச் சென்றடைந்
பொன்னிலங்கு மேருப் புயன். (28)

புறத்தஞ்சி வேறரணம் புக்குறைதல் போக்கி
மறத்தஞ்சார் வாழுநகர் மன்னன் றிறத்தகையி
ராமனெனு மேலோனை நாட்டிச் செலுமரசன்
தாமமிகு மாழியடுத் தான். (29)

பாழிவடமேரு பரிய விசும்படுத்த
வாழியுடைத் தோளான் வரைந்துலக மேழும்
அருங்கனலா யுண்ண வடுத்து வடபால்
வருங்கனலார் மாமதியா வான். (30)

மாயவற்குத் தன்னுற்றல் வார்ந்தடுத்துக் காட்டுதற்கு
நேயமுற்றுச் சென்றசுரர் நேர்கலங்கக் காயமுற்று
மேவுந் திடர்தொட்ர மேகஞ் சுருண்டுவிழத்
தாவுங் கலுழனுமொத் தான். (31)

எல்லா வுலகு மிரியவரு நாகர்முதல்
வல்லாளும் விண்டு வரமருவு மெல்லார்ந்த
காலா லளந்த ககனமுகட் டைக்கால
வாலா லளந்துவரு வான். (32)

வேலைதனைத் தாவுதிறல் வீரன்வால் வேதமெய்க்கும்
கோலமிகு மாருதியாங் கோவறத்தை மேலடுத்துப்
புன்றொழிலர் கண்ணுறுவர் போந்தென் றொளித்துவந்த
தென்றிசைமன் பாசமொத்த தே. (33)

Koviloor Digital Library

மேருதனைச் சுற்றி விரவி வருநாகம்
சிருதவு தார்க்கியமால் செல்காலே சோர்வுதரச்
சேர்ந்ததெனச் சுற்றுவிட்டுத் தேறாது நின்றடுத்து
வார்ந்ததுவு மொத்ததந்த வால். (34)

குன்றடுத்த தோளாற் குலவு குரக்கரிதான்
சென்றெடுத்துக் காலெரியத் தேவருறும் மின்றொடரும்
வான விமானம் மயங்கியொன்றை யொன்றடுத்து
மானக் கடலடுக்கு மாம். (35)

வலக்கைக் குலிசத்தான் வைகுதிரு நாடும்
கலங்கச்செல் வீரன் கருத்தென் னிலங்கை
யளவன்றும் வேகமென வான்றோர்கள் போற்ற
வளமொன்றிச் சென்றான் வரைந்து. (36)

யோசனைகண் மேலா முடம்பமைந்த வென்னவரு
தேசஞ் சொலவாங் திமிங்கிலங்கள் பேசவரு
மாசையுற்ற வேலை யலைய வருமண்ணல்
வீசியுற்ற கால்மிகுந்த வே. (37)

குன்றடக்கும் வேகக் குரிசிற்கு முன்னடுத்துத்
தன்றடக்கை முன்னஞ் சரித்தேகல் வென்றடக்கும்
தன்னடைந்த தம்பியொடு தானுகும் வள்ளலவன்
முன்னடந்த தொத்த முனிந்து. (38)

இந்நாக மன்னு னெரிகா லெனவேகத்
திந்நாக மன்னும் செயல்கொண்டு முன்னுகக்
கைநாக மன்னு கடல்வந்த தாவந்த
மைநாக மென்னு மலை. (39)

மீயோங்கு மாயிரமா மின்னு முடியிமைப்ப
வோயா வருவிவரு முத்தரிய மாயோங்கத்
தானவரைத் தீர்க்குந் தனிமால் கடலெழுந்த
மானவரு மம்மால் வரை. (40)

Koviloor Digital Library

நூலெடுத்த கேள்விவரர் நுண்ணறிவர்ச் சேர்பரமன்
காலெடுத்துத் தாலளந்த காட்சியான் சீலடுத்த
அந்தரத்தாம் கச்சபமா யண்ண லடுத்தேந்தும்
மந்தரத்தை யொத்தாம் மதித்து. (41)

தள்ளற் கரிதாய்த் தழைக்குஞ் சிறையோங்க
எள்ளற் கரியநிற மெல்லையின்றிக் கொள்ளும்
சுவணத் தடுத்த சுதையெடுத்துத் தோன்று
முவணத் தரசுமொத்த து. (42)

ஆன்ற நெடுநீரி லாதியந்தந் தோன்றாது
மூன்று முலகத்தின் முற்றுயிரு மீன்றானை
ஈன்ற தனிச்சுவண மேற்றவண்ட மென்னவந்து
தோன்றிநின்ற தோங்க ரெடுத்து. (43)

இந்நீரி னெற்றந்த வெந்தை தனையடுத்துச்
செந்நீர்மை செய்வனெனச் சிந்தித்து முந்நீரின்
மூழ்கித் தவம்புரிந்து முந்தி முளைத்தெழுந்த
வாழ்விற் பிரமனென வாம். (44)

பூவா லிடையூறு போந்து முனிமுனிவாற்
கோவாகும் வாரி குளித்தவெலாந் தேவாதி
மாலை வணங்க வளரும் பொருளிலெழுந்து
வேலைவரு திங்களொத்த வே. (45)

நீனிறத்த நீரி னிகர்பவளஞ் சுற்றினவாய்த்
தூநிறத்த பொன்னாற் சுடர்சிகரத் தாநிறத்த
முன்றிற் பிணுவுடனே முன்னு மகரங்க
ளொன்றுமுயிர்ப் போடுமுலா வும். (46)

பல்லா யிரங்காசு பாடிமைக்க மேலடுத்த
கல்லார் சிமயத்தாங் கைகாட்டல் தொல்லையுற்ற
ஆர்கலியின் மூழ்கி யணவுமணி யீட்டமெலாம்
வாரிவந்த தொத்தா மலை. (47)

Koviloor Digital Library

மனையிற் பொலிந்து வளர்கொடியை மான
வினையிற் றிரளருவி வீழ நினைவிற்
கடலூ டெழலோடுங் காயுஞ் சுனையிற்
படுமீன்கள் துள்ளவரும் பாங்கு. (48)

ஆறுபகை மூன்றுகுற்ற மண்டாது கொண்டுவரு
வீறுபடு ஞான விளைவினர்போல் கூறரவு
விம்மலது நீங்க விழைந்து பொறையுயிர்க்கச்
செம்மலைமே னிற்குஞ் சிறந்து. (49)

எழுந்தோடி விண்ணுமண்ணு மேற்றெடுத்து நின்ற
கொழுந்தோடி நின்றகொழுங் குன்றை யழுங்காத
அண்ணலிது வென்கொலெனா வாய்ந்தா னயிர்த்தடுத்தான்
வண்ணமலை யென்றான் மதித்து. (50)

நீர்மேற் படாத நெடுங்குன்று நிற்பதுவும்
சீர்மேற் பாடாதென்னச் சிந்தைகொண்டான் வேர்மேற்
படத்தலைகீ ழாகப் படுத்தடுத்துப் பாய்ந்தான்
அடர்த்தலையிற் செல்வா னறிந்து. (51)

உந்தாமுன் வேலை யொளித்தங் குலைந்தகுன்றுஞ்
சிந்தா குலமுற்றுத் தீர்விலன்பால் வந்தாகும்
ஆண்டுசிறு மானுடன்றா னாகியிது கேளென்னா
வேண்டுமுறை கூறும் விழைந்து. (52)

வேற்றுப் புலத்தனலேன் வேறா மலைகளையே
மாற்றுச் சிறையறுத்தான் வச்சிரத்தான் காற்றுக்
கிறைவன்மை கொண்டளிக்க வின்றைவரை நின்றேன்
சிறைவன்மை கொண்டு சிறந்து. (53)

அன்னான்றன் காதலனி யாதலினா லன்புடையை
என்னா னுனக்கிங் கியைந்தசெயல் மன்னாகா
தென்றாலும் பொற்சிகரத் தேற்றிருந்து போற்றிடினும்
நன்றாகு மென்றா னயந்து. (54)

Koviloor Digital Library

கார்வண்ண மால்பணியாற் கால்மைந்தன் வந்தடுத்தான்
சீர்வண்ணச் சீதைதனைத் தேடியே யேர்வண்ணம்
சேறியிநிற் பேரென்னச் சீலமுற்ற வேலைசொற்றல்
தேறியிவண் வந்தேன் தெரிந்து. (55)

நற்றாயி னோடும் நலமுடைய னென்றென்னை
இற்றாக நாடி யிசைந்ததனைப் பெற்றாக
நன்மைசெய்வா யென்று நயந்தான் கொடுமுடிகள்
பன்மைகொண்ட மாமலைப்பண் பான். (56)

உரைத்தா னுரைக்கவிவ னூறில்லா னென்று
விரைத்தா மரைமுகத்து வீரன் சிரித்துத்
திசையடுத்து நோக்கித் திறலினொடு கண்டா
னிசையெடுத்த பொற்கிரியை யேய்ந்து. (57)

வருந்தேனென் னாதன் வழித்துணையா மென்றும்
அருங்கேனென் னாசைமுற்றி னல்லாற் பெருந்தேன்
பொழிசார லன்பு பொருந்தினே னென்று
மொழிசாரச் சொன்னான் முனின்று. (58)

முன்சிறந்த வள்ளல் மொழியு மிடைவள்ளல்
பின்சிறந்த வள்ளலெனப் பேசுமவர்க் கென்சிறந்த
அன்பு சிறந்த வவையன்றி வேறென்னாம்
உன்புகல்வா ராரென்றா னோர்ந்து. (59)

ஈண்டுகடி தேகி யிலங்கை விலங்கலெய்தி
யாண்டா னடிமைமுற்றி யாற்றலுடன் மீண்டுவரும்
போதுன் விருந்து பொருந்த நுகர்வனெனப்
போதல் புரிந்தான் புதன். (60)

செவ்வான் கதிர்குளிர்செய் திங்களொடு தேவஃருறு
வெவ்வேறு கொண்ட விமானமற்று மொவ்வாதா
யொன்றொடொன்று தாக்கவரு மூழிவெங்கால் சென்றதென
மன்றொடர்ந்து சென்றான் மதித்து. (61)

Koviloor Digital Library

பார்மேற் றவழும் பதத்தே மதித்தெனது
தேர்மேற் குதித்தெழுந்தான் சிந்தையென்னோ வார்மேற்
குதிகொண்டாஞ் செய்கை குறிக்குமோ வென்று
மதிகொண்டான் சூரன் மருண்டு. (62)

வாளொத்த வாளெயிறு மன்னு மருங்கிமைப்ப
நீளொத்த வால்விசும்பி னேர்மெய்யன் கோளொத்த
மேனி யதனால் விசும்பிருகூ றானதுகீழ்
தானடுத்து நின்ற தமம். (63)

மூன்றுற் றுலக முழுத்துன்பம் வீப்பதற்கா
என்றுற்றான் தன்வலியை யேற்றறிகென் றான்றுற்ற
வானோர் குறைநேர வந்தான் சுரசையவள்
தானோ ரரக்கியெனத் தான். (64)

பேழ்வா யரக்கியெனப் பேனாது முன்வந்து
தாழ்வா யரிகுலத்தாய் சாற்றுவதென் வாழ்வா
யெனக்கிடமாய் வந்தா யெனவிசும்பு முற்றுந்
தனக்கிடமாய் வந்தா டகைந்து. (65)

தீயெனவாய்க் கொண்டபசி தீத்தற் கடுத்துவந்தாய்
நீயெனவாய் வண்மைக்கு நேரடுத்தா யாயதனால்
வந்தெனது வாய்புகுவாய் மார்க்கம் பிரிதிலையாற்
சிந்தனையென் னென்றான் தெழித்து. (66)

பெண்பா லொருத்தி பெரும்பசியால் வந்திருத்தாய்
நண்பா லுதவ நயந்தடுப்பேன் விண்பாலார்
போற்றவரு நாயகன்றன் பொன்னேவல் செய்ததற்பி
னாற்றவரு மென்றா னறிந்து. (67)

காய்ந்தே முலகடுத்துக் காணநின தாக்கைதனை
ஆய்ந்தேன் பசிதீர்வே னுணையென்றான் வாய்ந்தோனும்
நின்பாழி வாயி னிறைந்தேகு மென்னைவல்லை
தின்பாயா மென்றான் சிரித்து. (68)

Koviloor Digital Library

அக்கா லரக்கியென்பா ளானபெரு வாய்திறந்து
விக்கா விழுங்க விரைபோழ்தின் மிக்காகும்
தீரமுற்றாள் வாயும் சிறிதாம் வகைநிமிர்ந்தான்
வீரமுற்ற மேலோன் விரைந்து. (69)

நீண்டா னுடன்சுருங்கி நின்ற வவள்வயிற்றி
னூண்டா னெனவுற் றுயிர்ப்பின்முன் மீண்டானைக்
கண்டாசில் விண்ணோர் கடிமலர்தூ விக்கசிந்து
கொண்டாசி சொற்றார் குறித்து. (70)

மின்மேனி கொண்டடுத்து மேல்வீங்கி நீங்கவுடன்
தன்மேனி கொண்டடுத்தா டாயனையா ளென்மேன்
முடியாத் திறலென்று முன்னேத்தி நின்றாள்
மடியாத் திறலான் மகிழ்ந்து. (71)

கீத மிசைத்தார் கிரிமிசைவாழ் கின்னரர்கள்
நாத மிசைத்தார் நடம்புரிந்தார் பூதமெலாம்
போற்றிப் புகழ்ந்தனவாம் பூசுரர்கள் வேதவிசை
யாற்றிப் புகழ்ந்தா ரமைந்து. (72)

மந்தாரஞ் சேர்ந்த மகரந்தத்தாம் [1]வந்து
செந்தா மரைமுகத்திற் சேரவே கந்தார
வீணைக் களியிசைக்க விண்ணோர் புகழவந்தான்
சேணைக் கடந்து சிறந்து. (73)

வெங்கார் நிறப்புணரி வேறாக வொன்றடுத்துப்
பொங்கார் கலியிற் பொலிவதென மங்காதா
ளார்த்துக் தித்தெழுந்தா ளயங்கார தாரையவள்
வேர்த்துக் கொதித்து விழித்து. (74)

காதத்திற் செல்லுங் கணக்கிறுதிக் கண்ணுடையாள்
பாதத்தாந் தண்டை பரவையென வேஃதத்தாம்
மாதவனை நாடும் மதுகை டவரையொத்தாள்
ஓதமதின் மேவி யுறத்து. (75)

1 காற்று வந்து.

Koviloor Digital Library

துண்டகத்த வெண்பிறைபோற் றோன்று மெயிறுடையாள்
முண்டகத்தின் வந்த முதல்வன்தான் அண்டத்துக்
கிட்டடங்கா தாமுரைபோ லேற்ற பிலவாயாள்
மட்டடங்கா வேகத் தவள். (76)

நின்றா ணிமிர்ந்தவலை நேருங் கடனீர்தன்
வன்றா ளலம்பமுடி வானளப்ப நன்றாம்
அறத்தை யருளோ டழித்து வருவான்
திறத்தை யறிந்தான் தெளிந்து. (77)

பேழ்வா யகத்தல்லாற் பேருலகை மூடிவரும்
நீள்வானி னேகும் நெறிநேரா வாழ்வா
னணுக்கனவ ளாழ்வயிற்றை யப்பொழுதே போழ்த
விணக்கமெனக் கொண்டா ணிகல். (78)

சாயா வரத்தைத் தழுவித் தழுவிநின்றா
யோயா வரத்தைக்கண் டோய்ந்திலைநீ வாயால்
அளந்திடத்தாம் வானை யடைத்தாய் நினையான்
பிளந்திடத்தா னென்றான் பிடித்து. (79)

திறந்தா ளெயிற்றையவள் சென்றா ணிடையி
லறந்தா னரற்ற வமர ரிறந்தானென்
றேங்கப் புகுந்தா ணிறந்தான் பிறந்தவன்போ
லாங்குப் படர்ந்தா ணடர்த்து. (80)

கள்வா யரக்கி கதரக் குடர்கணத்திற்
கொள்வார் தடக்கைகொண்டு கோவடுத்தான் முள்வாழ்
பொருப்பு முழையிற் புகுந்தரவைக் கொள்ளும்
விருப்பார் கலுழனென வே. (81)

சாகா வரமுடையார் தங்க டிலகமன்னான்
ஏகா வரக்கிகுட ரேற்றெழுந்தான் ஆகாய
முற்ற கதலியென வோங்கினான் காயமதில்
கற்றகவார் போற்று நலன். (82)

Koviloor Digital Library

ஆர்த்தனர்கள் வானோ ரழுங்கினார் தானவர்கள்
சீர்த்த விரிஞ்சன் சிறந்தோர்கள் பார்த்தனராம்
ஆன்ற முனிவரர்க ளாசி மொழிபுகல
வான்றொடர்ந்து சென்றான் வழி. (83)

மாண்டா ளரக்கியவள் வாய்வயிறு காறுமுனம்
ஈண்டா னிமைப்பிற் கிரிகீழா நீண்டான்றன்
வேகத்தைக் கண்டு வியந்தா னருக்கனுயர்
மாகத்தை யுற்றான் வழி. (84)

செந்நீமை வள்ளல் சிறந்த பதம்போற்றி
முந்நீர்மை வெள்ளந்தாய் மோட்டிலங்கை தன்னிலினி
யுற்றேது வாற்றா னொடுங்குமிடை யூறென்றான்
பற்றேது மில்லாப் பரன். (85)

உளறுகடி தாறுவன ஆறி லறமுன்னாத்
தேறி லரக்கர்புரி தீமைசிந்தி வேறும்வகை
ஆண்டானி ராம னடிக்கமலம் போற்றுவதே
ஈண்டாம் வினைவேர் கெடும். (86)

கனகத்தாம் நாஞ்சில் கடிமதிலை நோக்கி
யனகத்தாம் கற்பகநா டண்டு மனுமன்
இவளவுரை யென்னா தெழிவிலங்கை சேர்ந்து
பவளவரை யுற்றான் பரிந்து. (87)

மேக்குறுவோன் பாய விலங்கு மிலங்கைவரை
தாக்குறுத்துத் தள்ளுந் தகைமையது போக்கினுக்கு
வந்த விடையூறால் வாடைப் புசலடிக்கச்
சிந்துவிடை சிந்துகலத் தே. (88)

மண்ணடிதா னுற்றுவர வானடுத்து நோக்குதற்கும்
எண்ணடியுற் றான்குன்றி னெய்தியே விண்ணடுத்த
கன்னல்மொழி யார்காணக் கண்ணடிவைத் தன்னவெழில்
துன்னிலங்கை கண்டான் றுதித்து. (89)

Koviloor Digital Library

நன்னகரி னோக்கி ஈளினைக் காமறித்துப்
பொன்னகரி தொக்குமெனல் புல்லிதம்மா விங்ககரி
னண்டத்தை யாள்வா னரசிருக்கை யாற்பொருள்கள்
எண்டத்த நிற்குமென்று னேய்ந்து. (90)

மேலா யுரைத்தநல மேற்றலத்தென் றூர்புலவர்
மாலா யுரைத்தல் வழக்கெனினு நூலாகு
மீண்டறிதாம் போகவின்ப மீறிலதா மேலுலகிற்
காண்டறிதா மென்றான் கணித்து. (91)

உட்புலத்து யோசனைதா னுள்ளதெழு நூறென்பர்
எட்புலத்தாம் நற்பொருள்க ளேய்ந்திருக்கும் கட்புலத்தாற்
காணவக னென்னென்றான் கஞ்ச மலர்த்துமினன்
மாணவக னென்னும் வரன். (92)

கடல்தாவு படலம் முற்றிற்று.

உளர்தேடு படலம்.

பொன்கொண் டிழைத்துப் பொதிந்த மணியதனல்
மின்கொண் டமைத்த வெயிலுடைத்தாய் வன்கொண்டல்
விட்டுமதி முட்டும் வியன்மாடத் தாமெழிலே
எட்டுமதி முட்டுமென்று னேய்ந்து. (1)

நாகால யங்களொடு நாக ருலகுந்தம்
பாகார் மருங்கு படர்பண்ப வாகாய
மஞ்சவளர் மேரு வதனை யனுக்குங்கால்
கொஞ்சவளத் தென்றலடுக் கும். (2)

மாகாரின் மின்கொடியை மட்டி லடுக்கியதால்
மீகார மெங்கும் விளக்கியே யாகாயக்
கங்கையினை யங்கையள்ளிக் கண்டடுத்த நன்மொழியார்
சங்கையிலா மற்றெளிப்பார் தாம். (3)

Koviloor Digital Library

பஞ்சிதனை யூட்டும் பதுமநிகர் பாதமுற்ற
செஞ்செவிய தானசுடர் சேர்ந்தடுத்து மஞ்சினிறம்
போக்கி யரக்கியரைப் பொற்கூந்த லோடுவமை
யாக்கியதா மேனி யமைந்து. (4)

நானமலர்க் கற்பகத்தி னல்ல விரைநாறப்
பானம் வெறுத்தறுகால் பாட்டிசைக்கத் தேனடுத்த
செங்கழுநீர் சேறச் சிறந்த வரமியத்தில்
தங்கிவரும் வானநதி தாம். (5)

வீணை குழல்குழைய மென்மழலை பொன்கிளிக்கு
மாண வளிக்கு மலர்க்குழலார் காணுநிழல்
ஏற்ற மணிச்சுவரி னெங்கும் வருதம்மை
வேற்றுமைதாம் காணார் விழைந்து. (6)

இனைய தொருமாட மிந்திரற்கென் றேற்ற
மனையதுறு மென்றுரைக்கின் மாசாம் அனைய
அரக்கர் திருவு மளவே துவமை
கரக்க வருமென்றான் கண்டு. (7)

எத்துணையாம் நன்மணிக ளேற்றிடினு மான்மார்பின்
வைத்தணையும் நன்மணிக்கு மாறுண்டோ வத்துணைதான்
தெய்வகம்மி யன்புரிந்த சீரார் மனைகளுக்கும்
செய்யுவமை யென்றான் தெரிந்து. (8)

வாழித் தரத்துயிர்கள் வாழு மொருவழிசேர்
ஊழிப் பரன்வயிற்றை யொத்ததிவ்வூ ராழியண்டத்
தானருக்கன் தேர்ப்புரவி யல்லாத மற்றவெலாம்
கோனகர்க்க ணுகுங் குறித்து. (9)

சோலையெலாங் கற்பகமாஞ் சூழ்மனையெ லாங்கனகம்
சாலகடங் கர்க்கமரர் தாழ்ந்துவரு வேலைசெய்வா
ரென்றுரைக்கின் வேறு மியம்பற் கெவைதவந்தான்
நன்றுறைக்கு மென்று னயந்து. (10)

Koviloor Digital Library

போரியன்று தோற்றதிசைப் போதகங்க ளன்றிமற்றும்
நேரியன்ற யானையெலாம் நின்றடுக்கும் சூரியன்றன்
ஓராழித் தேரையன்றி யோங்கி வருவையஞ்
சீராக நேருமென்றான் றேர்ந்து. (11)

தேவரென்பார் யாருஞ் சிறந்த நகர்க்கிறைவற்
தேவரென்பா ரேவற் கிசையாதார் மூவரென்பார்
மேலா னிவனென்றால் வெற்றிதந்த நற்றவமே
மாலான வென்றான் மதித்து. (12)

தழங்கிவரு பேரி தகைசேர் களிறு
முழங்கிவரு மோதையதான் முற்றுஞ் செழுங்குழலார்
செவ்வி மழலை சிறந்துவரு நூபுரந்தாம்
பவ்வவொலி யைப்படுக்கும் பாங்கு. (13)

மரகதத்து மற்று மணியால் வனைந்த
குரகதத்தாந் தேர்பயிலுங் கொட்டி லிரவிவெள்க
நின்றிமைக்கு மென்றா னிகரில் துறக்கமதும்
நன்றிமைக்கு மோவிந் நகர்க்கு. (14)

திருகுசினஞ் சேரரக்கர் தீர்ந்தார் கருமை
அருகுவரு திங்களழ கற்ற பருகுநகர்
மின்னொளிகள் பாய விளங்குபசும் பொன்னுருக்கும்
தன்னொளியா கும்முவரி தான். (15)

அண்டமுற்றும் வீங்கிருளை யண்டா தகற்றலரி
கண்டநகர் கான்ற கதிர்கடமை யுண்டதனால்
ஒன்றுரைக்க நேராதா மொப்பிடிற்றன் முன்னடுத்துத்
துன்றுகச்சோ தத்தையொப்ப து. (16)

தேனடுத்த சாந்தஞ் செறிந்தநறு மான்மதச்சேர்
வானடுத்த கற்பகத்தா மாமலர்கள் மீனடுத்த
வாரிதனிற் கங்கைவழி வந்து மணங்கமழும்
நீரடுத்த செந்து நிரந்து. (17)

Koviloor Digital Library

தெய்வகம்மி யற்புகழ்கோ செங்க ணரக்கன்செய்
மெய்வகுத்த நற்றவந்தான் மேலென்கோ வையப்பா
டில்லா வரன்வரத்தை யேற்றுகோ ஞானியர்க்கு
நல்லா னிடத்துறைக்கு நாள். (18)

வையமொடு வானில் வளம்படுத்த மற்றுண்டோ
செய்யபொழில் செங்கனகச் சேர்க்கையதா லையமின்றித்
தேனு மலர்பழங்கள் சேர்ந்துவரு நல்வளங்கள்
ஏனையுல கத்து மிலை. (19)

பொன்னகரை வாயிற் புரத்தை யலங்கரித்து
நன்னயமாய் நின்று நலந்தரற்காய் மின்னலொளி
சாரவுற்ற கோபுரத்தைத் தான்கண்டாற் சிரடுத்த
மேருமுற்றும் வெள்கும் விளர்த்து. (20)

முன்ன மெவரு முனியு மரக்கனதாற்
பொன்னகரை நீங்கியென் றாழ் போமென்பா ரன்னதெனும்
ஆரையொளி கண்டா லவன்கண் வழக்குமெனச்
சாரவரான் சூரன் தனித்து. (21)

தீயசெய்வர் தேவர் திருந்த வவர்சேர
வாயிலல்ல தாய்வரம்பு வைத்துமென வாயும்
கணக்காங் கலைகடந்து காய்மதிலை யிட்டான்
தலைக்காக் கயிலையெடுத் தான். (22)

காலடுக்கா வென்றாழ் கருதா மறலிமறம்
மேலடுக்கா வானவர்க்கென் வேண்டுவது காலம்
திறம்புகா லத்துஞ் சிதையா நிலைய
வறம்புகா திவ்வூ ரடுத்து. (23)

கொண்ட திரைக்கடலாற் கொண்டு விளங்குதலால்
மண்டும் விசும்பெட்டு மாண்பதனாற் கண்டவெழில்
பண்டையொத்த நாகணையான் பாங்கருந்தி யிற்பயந்த
வண்டமொத்த திந்நக ரம். (24)

Koviloor Digital Library

பாடுவார் மேலாம் பரத னடனமுளார்
ஆடுவார் மேலா மமைதியுடன் கூடுவார்
இன்னியங்கள் கொட்டுவா ரெல்லார்க்குந் தாமதிகம்
பொன்னியங்கு நன்னகர்ப்பொற் பு. (25)

வானடுத்த மாதரொடு வாழ்விஞ் சையர்மகளிர்
தானடுத்துச் செய்யுந் தனிநடத்தை மீனடுத்த
கண்ணா ரரக்கியர்கள் காண்பார் களிப்புடனே
விண்ணுடர் போற்ற விழைந்து. (26)

இழையிஞெடு மாலை யியைசாந்த மேந்தி
யுழையரென நன்னிதிய மோங்கி விழைவடுத்து
நின்றுதவு மென்று னிகர்தா னிதற்கெதுவாம்
தன்றுணையில் லாததரந் தான். (27)

பொன்வரையின் மாமணியைப் போத்துப் பொழிந்துநின்ற
துன்னும் பிரம னுவந்துரைக்க நன்னயமாய்ப்
பன்னவரு நாள்கள் பலவுந் துணிந்துசெய்தான்
தன்னமிலா வானவர்தச் சன். (28)

தார்வீணை மந்திரகீ தத்தின் மறைந்தடுத்த
தார்வீரை மிக்கவொலி யான்றவொளி சேர்சிகர
மாடமதின் மங்கையர்கள் மன்னகரு தூபமதின்
ஆடுமுகில் மூடு மடுத்து. (29)

பளிக்கடுத்த மாடநிறை பத்தி தொறுந்தேன்
துளிக்கவரு கற்பகத்தாஞ் சோலை யளிக்குமது
வுண்டாடிப் பாடி யுவந்திருத்த லாற்கவலை
கொண்டாரைக் காணேன் குறித்து. (30)

தேறலது மாந்தினர்கள் தேனிசையார் செவ்வாயி
னூறலது மாந்தி யுளத்தூடல் கூறலது
மாந்திமகிழ் தந்திருந்தார் மஞ்சுளத்த ரக்கியர்க்குக்
காந்திதரு நேயவரக் கர். (31)

Koviloor Digital Library

சேர்த்தரக்குக் குங்குமச்சேர் சேர்ந்த தனத்தொழில்கள்
கார்த்தரக்கர் மேனி கலந்ததுவாம் பார்த்தவெழில்
மானனையார் சேர்ந்த மலரடியி னும்பஞ்சி
தானவர்கள் குஞ்சிபொலிந் த. (32)

உவளத்தா மானைக்கொம் பொத்ததனத் தார்வாய்
பவளத்தாம் காடாம் படைக்கண் குவளைக்காங்
கோட்டங் கடுத்த குளிர்ந்த முகக்குழுவாற்
காட்டுங் கமலமலர்க் கா. (33)

காயத்தாற் பேரார் கணக்கி லுலகெடுக்கு
மாயத்தார் வீர மளப்பரியார் மாயத்தார்
நன்னகர்க்கு நாடிமற்றோர் நாட்டுந் தெருச்சேரல்
பொன்னகர்க்கோர் பொன்னகரொப் பும். (34)

கழல்கொண்டாங் காலுங் கருதயில்கொள் கையும்
அழல்கொண்டாங் கண்ணுமுளா ராடுஉ குழல்வண்டார்
செங்கமலத் தாள்கணவர் சேகரத்திற் சேர்த்தலிலா
மங்கையருந் தாமரிதா மால். (35)

கள்ளடுத்த பங்கியரக் கர்க்கடுத்த காதலொடு
புள்ளடுத்த மேனி புலாலடுத்த வெள்ளெயிற்ற
செய்யதலை கார்வடிவாய்ச் சேர்மெய் மலையாகும் .
கையதுபுல் லானையனே கம். (36)

வள்ளியென நுண்மருங்குல் வானவர்கள் மாதருள்ளம்
உள்ளியன வாநடனத் தோங்குவார் கள்ளிசையும்
வல்லரக்கர் மாதர் வலிய குரலையினால்
ஒல்லொலிக்கச் செய்வா ருவந்து. (37)

ஒறுத்தற் கெளிதா யுயர்படைவாந் தில்லூர்
இறுத்தற் கெளிதா யியங்கும் கறுத்ததறு
வாளரக்கர் பெண்கள் மதிக்குமிழை யால்விளக்கும்
கோளடுக்கா வீதிகளெங் கும். (38)

Koviloor Digital Library

வடங்குழைகள் பூணடுத்த மாலையொடி யானைக்
கடம்பரி விலாழி கணக்கோ விடங்கடொறு
மாற்றோ டடுத்தவெலா மாழியது கொள்ளுமெனின்
மேற்றோன்று மாழியென்னு மே. (39)

விற்படையோமிக்கவென்கோவேற்படைதான்மிக்கவென்கோ
மற்படையோ வாட்படைதான் வல்லவென்கோ கற்பணமோ
பிண்டிபா லந்தான் பெரிதென்கோ நாயகன்பால்
அண்டியான் சொற்றரலென் னும். (40)

என்றிலங்கை நோக்கி யினைய பலவுமெண்ணி
நின்றிலங்கை வாளரக்கர் நேர்வரொனுத் தன்றாலங்கு
மேனி சுருக்கி விளங்கினு னோர்மலையின்
ஞானி யிருக்காம் நலன். (41)

எய்வினையி னுமிறுதி யிற்செல்வ மெய்தியபின்
ஆய்வினைய லானறிஞ ராற்றல்கொளான் வீவினையும்
சிந்தைதனிற் சேராதான் தீவினையைப் போலிருளும்
வந்ததனி னோங்கும் வளர்ந்து. (42)

கரித்த புரத்தைக் கணிச்சி யுடையான்
எரித்தலையின் வந்த விபத்தை யுரித்தாவரு
பேருரிவை யாலுலகு பெற்ற வுரையென்ன
நேருமிருள் வந்த நிரந்து. (43)

அணங்கா ரரவரச ராண்டளவில் காலம்
பணங்கா லுயிர்த்தவிடம் பாய்ந்து முணங்கா
வுலகமுவந் தண்டவெரி யோங்கு புகையோ
டிலங்கியெழுந் தென்னு மிருள். (44)

வண்மைவளம் நீங்கா மரபி னிடைவந்தோன்
பெண்மைவளம் நீங்காப் பெருந்திருவைத் திண்மைவளம்
நீங்காத வன்சிறையில் நேரவைத்தா னென்றும்வெண்மை
யோங்காப் புகழ்போ லுறம். (45)

Koviloor Digital Library

அவ்வழியி னவ்விருடா ஞங்கடுப்ப வவ்வயினே
எவ்வழியுஞ் சென்றரக்க ரேகினர் செவ்வழியா
மந்திரத்தி னேயிசைய மாட்டா ரெனினுமிருள்
அந்தரத்தி னேகு மறிந்து. (46)

இந்திரன்றன் பொன்னகருக் கேகுவா ரிந்துவளர்
சுந்தரஞ்சேர் மன்னுலகு தோய்ந்தடுப்பா ரந்தகன்ற
ணுணை யுலகி னடைவா ரரக்கன்ற
ணுணை புரிவா ரடுத்து. (47)

பொன்னகர மாதர் பொருவிஞ் சயர்மகளிர்
பன்னகரார் பெண்ணியக்கர் பாவையர்கள் முன்னின்
பணிமுறையிற் செல்வார் பகர்மின் மிடைந்த
வணிமுறையிற் காய மடுத்து. (48)

தேவ ரவுணரொடு செங்க ணியனுகர்
மேவு மியக்கர்விஞ்சை வேந்தர்களும் பாவும்
விசும்பி னிருள்போக மேலடுத்தார் மேவும்
பசும்பொனணி மேனி பரிந்து. (49)

சித்திரத்தாம் பத்தியிடை சேர்ந்து வருதேவர்
இத்துணைதாழ்த் தோமுனியு மென்றுதம முத்தடுத்த
வாரமொடு மாலை யழகுமுடி யுத்தரியம்
சேரவர வோடுவார் சேர்ந்து. (50)

நீண்டரிய தீவினைதான் தீர்க்கச் செறிந்தொருங்கு
மாண்டறவுந் தீர்ந்தவற மாருதிப்பே ராண்டகையா
மாரியளிக்க மகிழ்ந்து முளைத்தவெனச்
சீரியனு மிந்துவந்த தே. (51)

வந்தனனும் வள்ளல் மகிழ்தூதன் வாழ்வடுத்த
இந்திரனே யென்னவிசை யேற்றமுற்றுச் சந்தமலி
கீழ்த்திசையா மாது கிளரு முகமென்ன
வாழ்த்திசையா மிந்துவந்த வான். (52)

Koviloor Digital Library

கற்றைக் கவரியெனக் கார்க்கடலின் வெண்டிரைகள்
சுற்றக் கதிரிஞெடு தோன்றிற்று மிற்றதினி
எம்பகையென் றிந்திரமா லேற்றகுடை வந்ததெனக்
கம்பமின்றி வந்ததுதிங் கள். (53)

திங்களெனும் வண்குடத்தாற் சேர்ந்ததிரைப் பாற்கடலிற்
பொங்கு புனல்முகந்து பொன்வானம் எங்கும்
சொரிந்த தெனவந்து துள்ளிமீ னேடும்
விரிந்ததுவாம் வெண்ணிலவு மேல். (54)

அருந்தவன்றன் தேனு வருள்வானந் தன்னில்
விரிந்த வுதயமடி வேந்தன் பொருந்துதனம்
பொன்கதிரே தாரை புகழ்சொரிந்த பாலொத்த
மின்கதிர்சேர் நன்னிலவு மேல். (55)

மேலடுத்த மாருதிமேல் விண்ணவர்பொற் பூமழைதான்
தாலடுத்த தில்லைமுன்வான் சார்ந்ததிலை நூலடுக்கா
வண்ண லெனுமரக்கற் கஞ்சி யடுத்தமலர்
விண்ணினின்ற போல்விளங்கு மீன். (56)

எல்வி ளிருட்குறையு மேற்ற விருட்குறையைக்
கல்லுகில வின்முறியுங் கள்வனவாய்ப் புல்லும்
பகைபொருவ போன்ற பருமல் லிகையிற்
தொகைமருவும் வண்டுபொதிந் து. (57)

வீசு கதிர்க்கற்றை வெண்மையுற்ற நன்னிலவும்
ஆசுகவே யெங்குநுழைந் தாயதுதான் காசுற்ற
பொன்மதிலாற் சூழிலங்கை போர்த்துறையிட் டாலெனவே
நன்மைதர நின்ற நயந்து. (58)

இகழ்வரிய நற்குணத்தி ராமபிரா னேய்த
பகழியென வநுமன் பற்று விகழ்புகுந்தும்
ஆண்டரணிற் சேர்ந்தும் மகவிலங்கை மன்னவன்றான்
பூண்டபுகழ் போனதைபொப் பும். (59)

Koviloor Digital Library

அவ்வழியி ஞமனும ஞண்டடுத்துத் தேண்டும்வகை
எவ்வழியென் றேமனத்தி னெண்ணினுன் செவ்வழியைத்
தேக்கினுன் தேவர் சிறந்தேத்தச் செல்வழியை
உளக்கினு னுள்ளத் துவந்து. (60)

ஆழி யகழா யரிதா யமரருரை
எழுலகின் மேலமுக பேறியே கேழரிய
பொன்கொண்ட வேலை புனைமதிலுற் றூனதுவும்
மன்கொண்ட ஆழியினு மாம். (61)

கலங்கலவாய்ச் சூரன் கதிர்மீதிற் செல்லா
தலங்கலயி லாற்கஞ்சி யன்று விலங்கைமதி
லிங்கிதனை யேறலரி தென்றே விலங்குவதாம்
பொங்குமின னென்றான் புகழ்ந்து. (62)

தெவ்வளவில் லாத செயலுடைத்துச் சேரவேன்று
லவ்வளவு தன்றரண மண்டமிடை யெவ்வளவி
லுண்டுவெளி யில்லையென வோங்குமரக் கன்புகழைக்
கண்டுமனங் கொண்டான் கனன்று. (63)

மடங்கலரி யேறுமத மால்களிறு நாண
நடந்துசெலு நம்பி நலத்தார் அடங்கரிய
தானையயி லந்தகன தானைக் கடுந்திறலி
ஞனபுனை வாயிலைக்கண் டான். (64)

மேருமலை தன்னை வெளிசெய் ததுவிண்ணோர்
உளரோ படிகொ லுலகேழும் சோர்விலவாய்
நின்றடுக்க விட்ட நிகரில் பெருந்தூணோ
மன்றடுத்த வாயிலென்றான் மான். (65)

எழுலகின் வாழுமுயி ரெல்லா முடனடைந்தால்
ஊழிமுறை யின்றி யுடனேகும் வாழி
வழியிதுவா மென்று வகுத்தாற் பகைக்காம்
மொழியெதுவோ வென்றான் முனிந்து. (66)

Koviloor Digital Library

வெள்ள மிருநூறு மேவும் படைவீரர்
கள்ள வலியரக்கர் காவலுளார் முள்ளெயிற்றார்
மிக்கவலி யாயுதக்கை வீறுபட நின்றாரைத்
தக்கவலி யண்ணலடுத் தான். (67)

சூலமழு வாளயிலாங் தோமரமு லக்கைபிண்டி
பாலமெழு விற்பகழி பாசமுடன் கோலமிகு
நேமிதண்டாம் வாள்சுரிகை சேர்ந்தகையார் காவலிதின்
ஏமனண்டா னென்றா னெடுத்து. (68)

அங்குசந்தான் மிக்ககவ ணேறுஞ் சிலைவழங்கு
வெங்குலிசம் பாசமுடை வெய்யகையார் செங்குருதிக்
கண்ணொப்பும் குஞ்சியர்கள் காண்பைங் குனிமலர்ந்த
வண்ணப் பலாசமொப்ப வர். (69)

அளக்க வரிதா யகன்ற கணக்கர்
அளக்க ரிதுவா யறிந்து மிளக்கா
வுளக்கடிய காலனடுத் தூட்கு மணிவாய்
விளக்குபடை கண்டான் வியந்து. (70)

எவ்வமர ரெவ்வவுண ரெவ்வ ருளரென்னே
கவ்வைமுது வாயிற் கடைகாப்பார் தெவ்வரிவர்
சேமமிது சேவகனுஞ் சேர்படையும் வந்தடுக்கி
ணமிதமில் போரென் றனன். (71)

கருங்கடலைத் தாண்டல் கனமன்று காவற்
பெருங்கடலைத் தாண்டல் பெரிதாம் நெருங்கும்
அமரடுக்கிற் கால மகலு மமரும்
நமரடுக்கி னன்றென்ற னன். (72)

வாயில் வழிசேரல் வல்லமையன் றும்வலத்தோர்
ஆயிலவர் வைத்தவழி யாதலன்றாற் காயினனுஞ்
செல்லா மதில்தாவிச் சேர லுளதென்று
வல்லான் மதித்தான் மனத்து. (73)

Koviloor Digital Library

நாளுளுங் காவல் நலத்தா ளனிமூதூர்
வாளுளங் நாள்போம் வழிநின்றாள் தாளுளும்
தோளுடையான் றன்னைச் சுடரோற்காண் கட்செவியாய்க்
கோளுடையாள் கண்டாள் கொதித்து. (74)

எட்டுத்தோள் நான்முகத்தா ளீரே ழுலகடுத்துத்
தொட்டுப்பேர் சோதி சுழல்கண்ணாள் முட்டிப்பேர்
மும்மதிலைக் காவல் முதலோடு கண்டவவள்
செம்மலிடை சார்வாள் தெரிந்து. (75)

பார்த்துவந்தா ளெண்டிசையும் பார வலியுடையார்
சேர்த்துவந்தா ரேவரெனச் சீற்றத்தா ளார்த்துவந்தாள்
பொன்னிமைக்கு நூபுரத்தாள் போற்று வலியுடையாள்
மின்னிமைக்கும் பூணாள் விரைந்து. (76)

வேல்முதல வாயுதத்தாம் வீரமுற்ற கையுடையாள்
தாலமுதல் தாங்குவரை தன்னையொப்பாள் கால்முதல
கண்டால் நடுங்குங் கனகவரை மேனியினாள்
அண்டாக் கனலையனை யாள். (77)

அஞ்சுவணத் தாடை யணிந்தா ளரவெல்லாம்
அஞ்சுவண வேகத் தருளில்லாள் அஞ்சுவணத்
துத்தரியங் கொண்ட வுயர்புயத்தாள் சிறிவந்தாள்
மத்தரியல் கொண்டு மருண்டு. (78)

சிந்தாரச் செச்சை சிறந்தாள் தெளிநூல்யாழ்
மந்தாரச் செஞ்சொ லணியுடையாள் கந்தாரத்
தின்னிசைதான் பாடு மியல்வண்டு தேனருந்தத்
தன்னிசையா மாலையணிந் தாள். (79)

எல்லடுத்த வாழி யிலங்கை தனைநயனத்
தில்லெடுத்துக் காக்குந் திறலுடையாள் சொல்லெடுத்தாள்
நில்லடுத்துச் செல்லலென நேர்ந்தா ளதுகண்டான்
மல்லெடுத்த தோளனனு மான். (80)

Koviloor Digital Library

ஆகாது செய்தடுத்தா யஞ்சா யறிவில்லாய்
சாகாது நிற்குந் தரமுண்டோ பாகாரும்
பொன்மதிலைத் தாவிப் புகுவா யெனவதட்டித்
துன்மதியாள் வந்தாள் தொடர்ந்து. (81)

களியாகு முள்ளங் கதமடுத்து மூழ்க
விளியாது நீதி விழைவான் அளியாக
விவ்வூரைக் காண வியைந்தே னுனக்கிதனு
லெவ்வூறு மென்று னிகழ்ந்து. (82)

என்னுமு னேகா திரியா தெதிர்மாற்றஞ்
சொன்னாய்நீ யாவன் சுரர்க்கதிப ரன்னாரு
சேர்கலவா மிவ்வூர் சிறியோ யளியுடன்செல்
லூர்கொலென நக்கா ளுறுத்து. (83)

நக்காளைக் கண்டா னகைத்தான் சிகைக்கனலாய்
தக்கானி யாவர்சொலத் தாவிவந்தா யுக்காமுன்
னோடற்கென் னென்று ளுவந்தடுத்தே னிவ்வூரை
நாடற்கென் னென்றான் நலித்து. (84)

வஞ்சமனங் கொண்டான் வருபவன்றான் வானரனே
துஞ்சுமெனைக் கண்டாற் றொடர்காலன் நஞ்சமணி
கண்ணுதலைப் போலக் கனன்று சிரித்தடுத்தான்
எண்ணுதலென் னென்று ளிவற்கு. (85)

கொன்றடுத்தா லல்லாது கோளுறுமிவ் வூரென்று
சென்றடுத்தாள் கன்றிச் சினவிழியாள் வென்றடுத்து
மூவிலைக்கண் வேலை முனிந்து திரித்துவிட்டாள்
தாவலைக்க நின்றாள் தடுத்து. (86)

தடித்தொடிற்றாய்த் தன்னெதிரிற் றாவுதழல் வேலைப்
பிடித்தொடித்தான் கண்ட பெரியா னடுக்கமுற்று
மெண்ணம் பிழையா ளெதிர்த்தாண் மலைமுலையாய்
நண்ணும் பெருவாயி னாள். (87)

Koviloor Digital Library

இற்றுவரச் சூல மெரியனையாள் பின்னெடுத்து
மற்றுபடை கொண்டு மலைவாண்மே லுற்றடுகை
ஆயுதங்க ளெல்லாம் அடர்த்துப் பிடித்தொடித்தான்
வாயுதந்த சேயன் மதர்த்து. (88)

வழங்குபடை யென்னும் மலைக்கமலை வான்மேல்
முழங்குமிடி யென்ன முனிந்து கழங்குபந்தாய்
மாமலையை யாடும் வரைப்புயத்தாள் வந்தடித்தாள்
தாமலையா வானரனைத் தான். (89)

அடித்தாளை யங்கை யனைத்து மொருகை
பிடித்தான் பெண் கொல்லிற் பிழையென் றொடித்துநெஞ்சந்
தன்னி லடித் தான் தரைவீழ்ந்து தத்தளித்தாள்
மின்னிலடித் தாமகியாய் வீந்து. (90)

விழுந்தா ளுடனெழுந்தாள் வெங்குருதி வெள்ளத்
தழுந்தாள் விதியி னருளா லெழுந்தயற்கு
வேதம் பணித்தான் விமலன் விரற்றாதன்
பாதம் பணிந்தாள் பயந்து. (91)

செய்தியைய கேட்பாய் சிறந்தவர னுணையினு
லெய்தியிவ்வூர் காப்பே னிலங்கணியான் செய்தொழிலி
னுள்ளந் திகைத்தே னுரிய துரைப்பனென்றாள்
கள்ளந் திகைத்தாள் கரைந்து. (92)

எத்தனைநாட் காப்பே னிலங்கை யெனப்பிரமன்
முத்தனைநேர் வானரன்றன் மூரிக்கை வைத்தவன்றே
வந்தடுத்துக் காண்டி வளமை யுறுநகரம்
வெந்தடுத்தா மென்றான் விரைந்து. (93)

என்னியலு மீதே யிசைத்த வறத்தடுத்தா
யுன்னியவை முற்று முனக்கரிய தென்னையெனப்
பொன்னியலைத் தேடும் புனிதன் றனைப்பணிந்து
தன்னியலை நாடிநடந் தாள். (94)

Koviloor Digital Library

வீரியன்ரு னேற்றமிக்க மெய்மை விளையுமென
ஆரியன்ருள் போற்றி யகலிலங்கை சீரியபால்
வேலை பிறைதெரித்த மென்மை யெனச்சூழ்ந்தான்
ஆலமுறை கண்டனையன் ஞன். (95)

வான்ருெடரு மாமணிசேர் மாட மிருள்சீத்துத்
தான்ருெடரு மென்ருெளியைத் தாங்குதலா லான்ற
அறிவன் றுணுக்கமுற்ரு னண்டு பகலே
செறிவன்மை யென்று தெரிந்து. (96)

மொய்ம்மணியார் மாடநிறை மூதூ ரிருளகற்று
மெய்மை யுணர்ந்து விலங்கினுன் செம்மையினன்
பொன்னிலங்கை நாப்பண் பொருந்துமெனின் மின்மினியும்
தன்னிலங்கு சோதிமுன்போற் ருன். (97)

பொற்குன்றிற் பொன்மதிலிற் பூத்துப் பொலிசோதி
எற்குன்று மாமணியா லேய்மாடம் நிற்க
விசையு மிலங்கையிரு ளின்மை நிருதர்
நிசிசரரா மென்ரு னினைந்து. (98)

என்றியம்பி வீதிதனி லேக விழுக்கமெனுத்
தன்றனுவாற் சின்னமுற்றுச் சார்மாடம் சென்ருன்
மனுமன் குலத்துவரு வள்ளல் புகழா
மனுமன் தலத்தா றறிந்து. (99)

ஆவடுத்த சாலைதொறு மானைவளர் கூடமுற்று
மாவடுத்த பந்திதொறு மற்றிடத்தும் பூவடுத்த
வண்டினுற்றுச் சென்ருன் வளரு மலைகடந்து
விண்டினுற்று நின்ருன் விரைந்து. (100)

நாளொளிசேர் நான்மணியி னன்றடுத்த பொன்மாடச்
சூளொளியாற் காவின் றுணைத்தோன்ற னிளும்
மகத்துவரு மேனிதிரு வண்ணமெலாஞ் சேர்த
லகத்துவரு மாத்தனிணை யாம். (101)

Koviloor Digital Library

கானனத்து மஞ்ஞை களிக்குமனஞ் சாயனடை
யானனத்து மிந்தா மரக்கியர்க்கு வானனத்துந்
தெய்வநீ ராட்டிச் சிறந்த வரமகளிர்
மெய்வருந்தல் கண்டான் விதிர்த்து. (102)

ஈட்டு தவமல்லா வீட்டா லியைவதின்மை
காட்டு தவவிதியைக் காண்மினம்மா பூட்டுதுவ
வார்தனத்தார் வான மகளி ரரக்கியர்க்குச்
சேர்தனத்தாம் வேலை செயல். (103)

இலக்கணத்தாம் பாட லெழுவகையி னல்யாழ்
அலக்கணத்தா மாத ரளிக்கக் கலக்குமெனச்
சேடியதைக் கண்டு செறிமழை வாய்பொத்த
நாடியதைக் கண்டான் நகைத்து. (104)

சந்தப்பூம் பந்தர் தமனியத்தாற் றுங்கரங்கின்
சிந்தித்த தெய்வமணி சேர்விளக்காம் கந்தர்ப்ப
மாமகளி ராடு மணிநடனங் கண்டுமகிழ்
தேமொழியார்க் கண்டான் தெரிந்து. (105)

பளிக்கடுத்த வேதி பயிலும் வரர்பாற்
களித்தகயற் கண்செம்மை காட்டத் தளிர்த்தநறுங்
காமத்தான் மிக்கநயக் கள்ளருந்திக் காதல்கொண்ட
வாமத்தார்க் கண்டான் மதித்து. (106)

செங்குவளை நாட்டஞ் சிறந்தவரர் கண்காட்டப்
பொங்குதுவர் நாட்டமிதழ் போற்றவெண்மை கங்குல்பகல்
கண்டறியார் காமக் கடலிற் குளிப்பவரைக்
கண்டறியான் சென்றான் கனன்று. (107)

விற்பவளப் பாதம் விளங்கு மலத்தகத்தார்
பொற்பவளத் தாங்கலவை பூசியே கற்பகத்தா
னங்கொடுத்துப் போற்ற நலத்தணிசேர் நங்கையரை
யங்கடுத்துப் பார்த்தா னயர்ந்து. (108)

Koviloor Digital Library

புலியடுத்த கொண்கர் புதுப்பிழையாற் சிந்தை
நலிவடுத்த பெண்க ணலஞ்சேர் வலிய
சிலம்பொலிப்பக் காலாற் றெருண்டுதைக்க மாலாம்
நலம்பலிப்பார்க் கண்டா னலிந்து. (109)

காமக் கலவியினுற் கண்சிவக்க வாய்வெளுக்க
நாமப் புருவ நலந்துடிக்க மாமுகந்தான்
கள்ளிடையிற் றேன்றக் கணவர்க் கவல்வாரை
யுள்ளிடையக் கண்டா னுறுத்து. (110)

ஆலையுற்ற சோலை யமுதமுற்ற சாரலதிற்
கோலத் துவசரில்லிற் கோமளமார் பாலடுத்த
வேலையுற்றுங் கொள்வதிலா வேற்கண்ணார் வாயமுதான்
மாலையுற்றார்க் கண்டான் மருண்டு. (111)

நலமருவு நாயகரை நண்ணார் பிரிந்து
கலவைதனந் தீயக் கமல மலர்மேல்
மலர்வைத்தா ரென்ன வதனங்கை தாங்கி
அலர்வைத்தாற் கண்டா னடுத்து. (112)

எதியங்கை நாயகர்பா லெய்துசலத் தாரடுத்துத்
தாதியங்கு சேக்கை தமிழ்சார்வார் தூதியங்கு
பொன்னனையார் புன்முறுவல் போற்றி யுயிரடுக்கும்
மின்னனையார்க் கண்டான் விரைந்து. (113)

சங்கஞ் சிலம்பத் தனிப்பாத சாலகமு
மெங்குஞ் சிலம்ப விற்றே யேத்தியே மங்கையர்கள்
மங்கலமாப் பாட மறிப்பலியைச் செய்பவரைப்
பொங்கலமாக் கண்டான் புகுந்து. (114)

இழைதொடரும் வில்வா ளிருளை மலையக்
குழைதொடருங் கண்ணார் குழுமி மழைதொடரும்
பேரிநலங் கண்டு பெரியவிழாக் கொண்டுவரு
வாரிநலங் கண்டான் மதித்து. (115)

Koviloor Digital Library

பண்கலக்கும் பள்ளி பரிந்தூட னீங்கியபின்
கண்கலக்கு மொண்கலவி காலுநெஞ்சர் எண்கலக்கும்
வாளுறையி னீக்கும் வகைகண் விழித்தடுத்த
கேளியரைக் கண்டான் கிளைத்து. (116)

ஓவியத்தா மொண்டொடிய ரூட லுணர்வையுண்ண
வாவியொத்த கண்ட ரருகிருக்கத் தூவியொத்த
வன்னமெனச் சென்றாங் கரிதிற் கதவடைக்கு
மின்னவரைக் கண்டான் வெறுத்து. (117)

கின்னரங்கள் பாடக் கிளரும் விமானமதிற்
பன்னகத்தார் பாடிவரப் பல்லாண்டு பொன்னகர
வீதியினு கும்புதிய மேன்மனையிற் சேர்வாரை
யோதியினுன் கண்டா னுவந்து. (118)

கோவைகுழை மின்னெடுக்கக் கொண்டல் முரசெடுக்கத்
தேவர்தொழ மாமுனிவர் சேர்ந்துவரப் பாவையர்கள்
பல்லாண்டு கூறப் பரிந்து புதுமணஞ்செய்
நல்லாரைக் கண்டான் நயந்து. (119)

இயக்கி யரக்கியர்க ளெஞ்சலிலாத் திங்கள்
நயக்கு முகத்தியரை நாடி மயக்கறவே
கண்டுவரு மாருதியும் கண்டான் கருணைத்தான்
மண்டுவரை யாக மதித்து. (120)

ஓசனைதா னேழகன்ற தோங்கிவரு மும்பரக
மாசில்லா மாமணியார் மண்டபந்தான் ஆசையெட்டிற்
தோன்று மிருளலைத்துத் துங்கவொளி பெங்குமுடன்
என்று விளங்கு மெடுத்து. (121)

அன்னமணி மண்டபத்தி ளுகு மமளிமிசை
பன்னகவேர் தென்னப் பரவையெனத் துன்றுமிரு
ளெல்லா மொருவழியி னேய்ந்தவெனத் தீவினைதான்
வல்லா னுருக்கொண்ட வாய். (122)

Koviloor Digital Library

முன்னுங் கடலின் முழுகிவந்து மூவகைத்தாத்
தின்னுங் கதிகளொடு தோன்றியே பொன்னுலவு
மன்றலணி கற்ப வனத்து ளடுத்துவரு
தென்றலணி செய்யச் சிறந்து. (123)

வான மகளிர் வருடப் பதமதியின்
ஆனனங்காண் மண்டபத்து ளாய்கதிரின் கானகவாங்
காந்தமீக் கான்று கமழும் பரிமளநீர்
சேர்ந்ததளி சேர்ந்தான் றிகழ்ந்து. (124)

மூசுமுயிர்ப் பென்னு முடுகி வருவாதம்
வாசற் புறத்தினின்று வன்மையான் நாசி
யளவி நடக்க வதுகண்ட வீரன்
உளமொ டுரைத்தா னுருத்து. (125)

பூழி விசும்பளப்பப் போய்ப்புகுந்து சென்றவரும்
கேழி லுயிர்ப்பதுவுங் கேடில்லா வாழி
தருமுலகைத் தீர்க்குந் தனிக்கால வூழி
வரவறிந்து நிற்குமென்றான் மான். (126)

பகையா மதியைப் பகுத்துப் பகுவாய்
வகையாக வைத்தருந்து வான்போற் புகையோடு
பேருயிர்ப்பு வீசும் பெரிதா முகமதனிற்
சேருமெயி றுருகுஞ் சிறந்து. (127)

மந்திரத்தி னூற்றகைந்த மாநாகம் போலவரு
சிந்தைகொண்டு பேருறக்கஞ் சேர்ந்திருந்தான் வந்தடுக்கும்
காலக் கடலைக் கடக்க வயல்கிடக்கும்
நீலக் கடலை நிகர்த்து. (128)

ஆவதொரு தன்மை யரக்கன் றனையரக்கர்
கோவிவனு மென்றுசினங் கொண்டவன்று னேவனெனச்
சென்றடர்த்து நோக்கம் செறிதீப் பொறிசிதற
நின்றடர்த்துச் சொல்லும் நினைந்து. (129)

Koviloor Digital Library

வன்றலைகள் பத்தும் வரைத்தோ ளிருபதொடு
நின்றலையா தாலிவனோ நேரரக்க னென்று
மறுகிமுனி வென்னும் வடவை யவித்தான்
அறிவாம் புனலை யளித்து. (130)

அவித்துநின்ற னேவனிவ னாகவென வங்கை
கவித்துநின்று சிந்தை கருதிச் செவித்தலத்தே
னென்னவிரா மன்புகழை யேத்துங் கவிவரன்றான்
அன்னமனை நீங்கு மடுத்து. (131)

மாடரங்கு கூடமொடு மாளிகைபொன் மாதரடுத்
தாடரங்கு மம்பலங்க ளாலயங்கள் கோடரங்க
ளோதரச மண்டபங்க ளுற்ற விடமெல்லாம்
மாதரசைத் தேடு மதித்து. (132)

மணிகொண்ட வாயில் மலர்சா ளரத்திற்
கணிகொண்ட காலிற் கலக்கும் அணிகொண்ட
மேருவென வீங்கு மிகச்சிறக்குஞ் சொல்வதெவர்
மாருதிதன் செய்கை மதித்து. (133)

ஏந்த லனுமானு மிவ்வகையா யெங்குமெய்திக்
காந்தளன கையார் களைக்கண்டு வேந்தரொடு
மெண்ணகன்ற வேதியர்க ளேத்தெடுக்கும் புண்ணியன்வாழ்
கண்ணகன்ற கோயிலுட்புக் கான். (134)

பளிக்கடுத்த மாடம் பவளத்தாங் கூடம்
களிக்கு மரக்கர்தமைக் காணு தொளித்த
லருமையென வெண்ணி யவருருவ நண்ணுந்
தருமமன்னன் றன்னைய டுத்தான். (135)

உற்ற னவனுணர்வை யுற்றுணர்ந்தான் தன்னறிவாற்
செற்றான் சினமதனைச் சீலனென்றான் பொற்றைபெனு
மாடங்கள் கோடி மதித்தடுத்துத் தேடுமினன்
பாடங்கொண் மாருதிபண் பான். (136)

Koviloor Digital Library

முந்தரம்மை மாதர் முதலோர் மதிமுகத்து
சுந்தரஞ்செய் தோகையர்க்காண் டோற்றத்தா னிந்திரன்றன்
காக்கும் சிறைசெய் கடிவாயில் சென்றடுத்தான்
ஆக்கும் அறத்தா னறிந்து. (137)

எதியுடைக் கைய ரெயிறும் பிறையிலங்க
மூதுரையாம் காதை மொழிந்திருப்பார் தீதுடையா
ராய்தலிலா ராயிரம்பே ராவ ரரக்கர்னிலை
சாய்தலிலார் காவல் கடந் தான். (138)

முக்கணன்றன் சேயான் முகலோ னறுமுகனும்
திக்கணங்கு கைகள் சிலகரந்தான் ஒக்கவரு
நோக்கியன்றூர் கூட்ட நுனித்துறங்கு கின்றானைத்
தூக்கியன்றான் கண்டான் றுதித்து. (139)

வாளெயிற்றி ராக்கதனே வான்கணிச்சி யான்மகனே
ஆளியொத்த வீர னடுத்தமரில் வேளையொத்த
வீரவரன் றம்பி விசயற்கும் போர்சிலநாட்
சேரவரு மென்றான் தெரிந்து. (140)

இவனைத் துணைகொண்ட வேந்த லரக்கன்
புவனத்தை வென்ற பொருளோ சிவனைத்தான்
நான்முகத்தான் மாலை நயக்க வுரைப்பதன்றி
வான்முகத்தா ராரிணையா வார். (141)

என்றெண்ணிக் கால மிடையிற் கழிப்பதென்னும்
நன்றெண்ணி நாடுவது நன்மையென வென்றண்ணு
குன்றடுத்த மாளிகைகள் கோடி யொருகோடியிற்
சென்றெடுத்துத் தேடும் சிறந்து. (142)

அக்கனில்லைத் தாண்டி யதிகாயன் புக்கதளி
தொக்க பொருனர்தளி சூழ்ந்துகண்டு மிக்கதிறல்
மந்திரிகள் சேரு மனைகளையும் பார்த்துவந்தான்
மந்திரஞ்சேர் சிந்தையனு மான். (143)

Koviloor Digital Library

இன்ன படைத்தலைவ ரென்றிருக்கு மாளிகைகள்
பன்ன வருகோடி பார்த்தடுத்தான் சொன்ன
புகழுடையான் பொன்னகர்க்கண் போற்றுநடுவண்
அகழுடைமை கண்டா னயிர்த்து. (144)

கஞ்சனவன் தந்தை கமலை கணவனருள்
அஞ்சனவண் ணத்தா னருட்டேன் மிஞ்சி
இனிக்கடப்பா மென்றுகு மேழ்கடலா மென்றான்
பனிக்கடற்பாங் காகுமகழ் பார்த்து. (145)

பாழி நெடுங்கிடங்கைப் பலலோ ரொருங்கடுத்தும்
மூழிவரை கல்லினுந்தா னுற்றடுக்கா வாழி
யரக்கன் றனக்கஞ்சி யாழியெலா மொன்றிக்
கரக்கு மகழென்றான் கண்டு. (146)

ஆயதொகு வேலை யகழிதனை முன்கடலைத்
தாய விருமடியிற் றாண்டினுந்தான் நேயமுடன்
போதலரி தென்று புகன்றான் கலையனைத்து
மோதலரி தன்னிடங்கற் றோன். (147)

நாயகனும் வள்ளல் நயக்கும் புகழ்த்தூதன்
சேயனைய வீரம் சிறந்துடையான் தூயவரன்
கண்டான் புறக்கடலே காணு மகழியெனக்
கொண்டா னகத்திற் குறிப்பு. (148)

ஆனைதரு மும்மதமா வான்ற விலாழியது
வானமடவார் தனஞ்சேர் வாரியது நான
நறைக்குழலா ராவி நறுமணமுந் தேனுஞ்
சிறக்குமகழ் கொள்ளுஞ் செழித்து. (149)

உன்னவரு நாரை யுயர்ந்த வகன்றிலொடு
மன்னமுறு வண்டான மாங்கோழி பன்னும்
குரண்டங் கிலுக்கங் குணமடுத்த புட்கள்
திரண்டங் கிருக்குஞ் செறிந்து. (150)

Koviloor Digital Library

நலத்தடுத்த மாதர் நறையகிலி ளுவி
யலத்தகமுஞ் சேரவணேந் தாடும் வலத்த
விலக்கணத்த வானே யிளமென் னஸ்டசேர்
குலப்பிடிக்கு முடல்கொடுக் கும் (151)

நறையடுத்து நின்ற நறுந்தா மரைகள்
துறையடுத்துக் கண்முகிழ்த்துத் தோன்றுஞ் சிறையடுத்த
செய்யாள் முகத்துறவு செய்யு மலரான
துய்யா தொடுங்கலரி தோ. (152)

பளிங்குசெற்றி முற்றிவரு பாயொளிய தாகும்
விளிம்படுத்த வெள்ளமது வேறில் தெளிந்துவரு
சிந்தை யுடையார் சிறியா ருடனடுத்தா
லெந்துவகை காண்ப தெடுத்து. (153)

நீல முதலவரு நித்திலத்தா நன்மணிகள்
மேலொடுகீழ் பக்கமொளி வீசுதலால் பாலடுத்த
வேலேமுதற் பவ்வமெலாம் வேண்டி யடுத்ததெனக்
கோலநிறக் காடடுங் குறித்து. (154)

அன்னதிறல் வேலே யகழியைத்தா மார்கலியா
மென்னதிற லாற்கடந்தா னிஞ்சிபின்ளுத் துன்னரிய
மானகரைச் சேர்ந்தடுத்த மாருதிபின் செய்ததிற
லேனேயதுஞ் சொல்வா மெடுத்து. (155)

நாழிகையும் பாதி நடுவடுத்த காலனுந்தான்
வாழிபுகன் ருேடும் வளம்பதியிற் பாழிகொண்ட
பொற்புயத்தான் றேடும் புகலரிய வோசனேகொள்
ளற்புதத்தாம் விதியணேந்து. (156)

வேரி யடக்கும் விரிந்த கடலெனவாம்
பாரி யடங்குமுயர் பண்ணடக்கும் காரியங்கள்
செய்வோ ரடக்குவார் சேர வருமுறக்கம்
செய்வோ ரடங்கார் செறிந்து. (157)

Koviloor Digital Library

இறங்கும் நிறங்கொள்பரி யேமமுற வெங்கும்
கறங்கினவாம் காதலர்கள் கண்கள் நறுங்குழலார்
அன்பர்ப் பிறியா ரணைத்துறங்கி ஞர்பிறிந்தோர்
துன்பைப் பிறியார் சுழன்று. (158)

வடந்தாழ் கடப்புயத்து மைந்தர்கல விப்போர்
கடந்தா ரிடைந்தார் களித்த மடந்தையர்கள்
தந்தனத்தி னுச்சி தனிற்கிடந்து போக்கினர்கள்
சந்தநற்பு ணர்ச்சியின்கே தம். (159)

வாமநறை கொண்டார் மயங்கி மறைந்தனர்கள்
காமநறை கொண்டார் களித்தனர்கள் பூமனறை
வண்டா ரமளிபுக்க மாமயிலார் தாமருவத்
தண்டார மார்பரணைத் தார். (160)

பண்ணடைத்த தாகும் பலபொருநர் பாடலவை
விண்ணடைத்த தாக விளைந்தவிருள் தண்ணுமையுங்
கண்ணடைத்த வோசை கபாடங் களையடைத்த
வெண்ணடைத்த மாட மிசைந்து. (161)

விரிந்த நரந்தமுதல் வெண்மலர்வி ளாகத்
துரிஞ்சவழி தென்ற லுலவும் சொரிந்தபுனல்
கண்ணடுத்த துள்ளியொடு காந்தர் தமைப்பிரிந்தார்
எண்ணடுத்து நின்று ரிரிந்து. (162)

இளக்கரிழு தெஞ்ச விரியும் விளக்கைத்
துளக்கியது தென்றல்பகை தோன்ற விளக்கும்
மணிவிளக்க மெங்கும் வழங்கு மொளியை
யணிவிளக்கு மாட மடுத்து. (163)

நித்தநியமத்தொழிலர் சேர்ந்துவரு ஞானவரர்
உத்தமராம் யோக ருறக்கமுற்றார் மத்தமத
வெங்களிறு தூங்கும் விரைந்தடுத்த பித்தர்களும்
தங்களியாற் றூங்குந் தகைந்து. (164)

Koviloor Digital Library

ஆய பொழுதி னரக்க ரரசுருறுந்
தூய தெருக் கோடி துருவிப்போய்த் தீயோன்
மனையடுத்துக் காக்கும் மதிலடுத்துச் சென்றான்
எனையெடுத்துக் காக்கு மினன். (165)

போரியற்கை கொண்ட புகழரக்கன் பொன்மனைதான்
சீரியற்கை சேர்ந்துவரு திங்களாய்த் தாரகையாம் [கண்
கூட்டம் சிறந்தவெண்ணிற் கொண்டபொன்னூர் தம்மனைக்
நாட்டம் தெரிந்துநண்ணி னான். (166)

முயற்கறையை நீக்கி முழுத்தவொளி கொண்ட
நயக்கு மதிமுகத்து நல்லா ரியக்கர்குல
மங்கையர்கள் சந்தமலி மாளிகைசென் றுணிபாற்
சங்கையறச் சிந்தைதெளிந் தான். (167)

தழைந்துவரு தாழ்க்கோல் சரிக்குநுழை தோரு
மிழைந்துவரு நூலிளங்கா லென்ன நுழைந்துவர
நொய்தடுத்து நோக்கும் நுவலவரு நல்வினையைச்
செய்தடுத்தார்க் காக்குந் திறன். (168)

அத்திரஞ்சேர் யானை யரக்க னளவிலன்பு
வைத்துரஞ்சேர் சிந்தை வழக்குடையார் வெத்திதரு
பத்திரங்கொ ளொட்டம் பதைப்பின்றி யோங்குமுயர்
சித்திரங்க ளொத்தார் சிலர். (169)

வள்ளலொத்த வெஞ்சரத்தா மாரனிடத் தஞ்சியோ
மெள்ளவுற்ற மெய்க்கனவை வேண்டியோ கள்ளம்
அறிந்திலமால் கண்முகிழ்த்தங் கான்றவுள்ள மின்றிச்
சிறந்திலவாந் தூக்கஞ் சிலர். (170)

பழுதகங்கொள் மன்மதன்றன் பாங்காங் கணையா
லழுதகொங்கை பூச லுயிர்ப்பார் அழுதகங்கொள்
ஆற்றலின்றி மேவு மரக்கன் றனையெழுதுந்
தேற்றமின்றி யெண்ணுஞ் சிலர். (171)

Koviloor Digital Library

ஆவதொன்று செய்யா யருளா யெனதாவி
மேவவரு வானை விரைந்தழைக்காய் பாவியெனப்
பாவையது பேசவபோற் பாங்கடுத்த பூவையுடன்
தேவையது சொல்வார் சிலர். (172)

ஈரத்தாந் தென்ற லிழுக மெலிந்துமிகப்
பாரத்தாங் கொங்கைதமைப் பார்த்தரக்கன் வீரத்தோள்
வீக்கம் நினைந்து விழைவாற் றுயரவனல்
தீய்க்கச் சினந்தார் சிலர். (173)

நக்கதொரு செம்மணிகள் நாறிவரு நாணிழல்தாம்
பக்கமுறப் பள்ளி பலபகலும் ஒக்கவரு
புங்கமுற்ற வாசை புலரத்தாம் செக்கர்தரு
திங்களொத்தார் மாதர் சிலர். (174)

வாளெடுத்த கற்பகத்தாம் வல்லியென நல்லெழிலார்
நாளெடுத்த பூவமளி நண்ணுபவர் தேளின்
மிசைப்பெய்யும் யாழிசையால் மேனி மெலிந்து
திகைப்பெய்தி நின்றார் சிலர். (175)

தீயாம் நகையாற் றிரிபுரத்தைத் தீர்த்தவரன்
தூயான் மலையெடுத்த தோள்வரையி னேயமுற்று
வவ்விநின்ற சாந்துதன மாதனத்தை வவ்விநின்ற
செவ்விகண்டு நேர்வார் சிலர். (176)

கூடும் பரவையெலாங் கோக்கச் சிறந்ததாத்
தாடும் பரன்புகழை யாய்ந்தறிந்து கூடுமொரு
வார்பாடு வீணை வழிபாடு வான்புகழின்
சீர்பாடு கின்றார் சிலர். (177)

இனையவையா மால்கொ ளியக்கியர்க ளெய்தும்
மனையவைகள் தேடிவரு மன்று மனையன்
குலத்தாற்றி னிற்பார் குலமனைகள் சென்றான்.
நலத்தாற்றி னிற்பா னயந்து. (178)

Koviloor Digital Library

மாமணியின் சோதி வளங்கொள் சுடர்மாடத்
தாமணியின் சேக்கையிருந் தாயமின்றிக் கோமருவும்
தன்மனத்தா ரூடல் தனித்துப் புரிவாரை
மன்மனத்தான் கண்டான் வரைந்து. (179)

நாவிகொண்ட கூந்தலுடை நங்கையர்கள் பூஞ்சயனம்
ஆவிகொண்ட தென்றுபயங் தாம்பளிங்கின் மேவிநின்ற
சீதத்திற் சேருந் தெரிவையரைத் தேர்ந்து சென்றான்
போதத்திற் சேரும் புதன். (180)

தாரகைசால் வானந் தயங்கிவரு மேனியதாய்ச்
சேர்மின் மருங்குலெனச் செக்கர்வான் நேர் கூந்தல்
சந்திமதி நெற்றியதாய்த் தாங்குமையுண் கண்ணுடையார்
அந்திவா னொக்கின்றனர். (181)

பானலுண்கண் வண்ணப் படிமுறைமா றப்பண்ணை
சோனைகொண்ட கூந்தன்மிகச் சோர்வடுக்க மேனிமிர்ந்த
மாடவெண்ணி லாமுன்றில் வானமீன் கைக்கழங்கா
யாடுபவர்க் கண்டா னடுத்து. (182)

மினல்பரவு தேவ விளங்கிழையார் தந்த
புனல்குளிரா தென்று பொருந்த மனமுவந்து
மாளிகையி லேறி மழைபொதுத்தா டுங்கழையார்
தோளியரைக் கண்டான் றொடர்ந்து. (183)

பன்னகத்தார் செம்மணியைப் பற்றி யுயிர்க்கணவன்
என்னகத்துத் தந்தா னெனவிஞ்சை மன்னருடன்
பொற்பலகை சூது புரிந்தா டிராப் பகலில்
விற்பனரைக் கண்டான் விளித்து. (184)

சித்த மடவார் செறிகானம் பன்னகர்கள்
தத்தமட வார்புரியும் தண்ணுமையோ டொத்த
வரம்பையர்க ளாட வரக்கியர்க ளோடும்
தரம்பயிலாச் செய்கைகண்டான் றான். (185)

Koviloor Digital Library

காதற் பெருக்கதனாற் கண்ணீர் வரவுறக்கம்
ஏதற்றுச் சிந்தை யிரிந்தோராய் நாதத்தாம்
வீணைகுழல் மிடறு வேற்றுமையில் லாதுபுரி
பாணிதனைக் கண்டான் பகைத்து. (186)

தண்டலைவா ழைத்தொடையைச் சார்ந்தவல்குற் றட்டினிடை
கொண்ட கலை சோரக் கூர்ங்கள்ளை யுண்டகண்ணார்
குண்டலம்வில் வீசக் குரவை யிடுவாரைக்
கண்டலந்து சென்றான் கனன்று. (187)

நாக மதுக்குருது நக்கிப் பிதற்றிவரும்
ஆகத் துகிலலைய வாங்கடுத்து வேகத்தாம்
சச்சரிப்பாண் கொட்டித் தடுமாறு மங்கையரை
இச்சரிப்பான் கண்டா னெதிர். (188)

பொய்வம் பதனைப் புரிகள்ளி னாலென்மேற்
றெய்வம் படிந்ததனைத் தேர்மினெனக் கைவம்பு
சேருதிறல் கொண்டவுச்சி சேர்த்தகளி யாடுவரை
மாருதிகண் டான்வாய் மடித்து. (189)

இத்திரத்த ரக்கியர்க ளேற்றுவரு கோடிகொண்ட
பத்தி தருதெருவும் பார்த்தடர்த்துச் சித்தியர்கள்
மாடங்கள் கண்டு வளர்விஞ்சை மாதருறை
மாடங்கள் கண்டான் வரைந்து. (190)

ஆசைகொண்ட மாத ரரக்கன் வரக்காணார்
ஓசைகொண்ட சொல்லா ருவந்தடுத்துத் தேசுகொண்ட
கானநத்திக் கேட்டுவரு காமத்தாற் சிந்தைகன்று
மானனத்தார்க் கண்டா னடுத்து. (191)

மாமுனிவர் தேவர் மருளுஞ் சினத்தரக்கற்க்
காமுனிவில் சிந்தையிவ ராமென்றே தாமும்
சொரியு நிலவாற் றுணைமுலைகள் சோர
வெரியுமவர்க் கண்டா னெதிர்த்து. (192)

சிறுகாத காலம் சிலவூழி யாக
வுறுகாதல் கொண்ட வுளத்தார் மறுகிவரும்
வாட்கண்கள் சேப்ப மயங்கி வருவாரை
ஆட்கொண்டான் கண்டா னடுத்து. (193)

ஆயவிஞ்சை மாத ரடுத்த தெருத்தேடி
மாயவிஞ்சை வல்லரக்கன் மாளிகைசெல் தூய
வயன்மகிமை யாற்ற லவனடுத்துக் கண்டான்
மயன்மகள்சேர் மாடம் வரைந்து. (194)

கண்டா னளித்தகைமைக் காகுத்தன் தேவிதனைக்
கொண்டா னொளித்த குலமாடம் விண்டுதட
மார்பி னடுத்த மணியாய் வளங்குலவும்
சார்பி னடுத்தான் தரன். (195)

அரம்பையர்கள் சேர வடிவருடிப் போற்றத்
தரம்பயில்வெண் சாமரைகள் சாரக் கரும்பினலங்
கைப்பித்த சொல்லுடையார் காமரங்கள் சேரவர
வொப்பித்தல் கண்டா னுவந்து. (196)

விழைவடக்கா மேலோரைக் கீழோர் வெகுண்டால்
பிழையடக்கு மென்றுதென்றல் பேணி யுழையரோடு
கூடிவந்து நேர்நதூசல் கொண்டு பயமதனால்
வாடிவந்து நேரும் வினைந்து. (197)

இன்னவித மாக வெரிவிளக்கின் மேற்பொலியுந்
தன்னொளிசேர் தைய றனைக்கண்டா னன்னவளெனும்
சானகிதா னென்றயிர்த்துச் சார்ந்து வருசினத்தால்
மானகிதா னென்றுயிர்ப்பான் மற்று. (198)

எற்புடைய யாக்கை யிதிற்பேறு நின்றிடுகக்
கற்புடைமை நீங்குங் கனங்குழையேற் பொற்புடைய
வள்ளல் புகழுடனே மன்னிலங்கை யென்னுயிருங்
கொள்ளைபுகு மென்றான் குறித்து. (199)

Koviloor Digital Library

மானுடத்தார் மங்கையவள் மாறுடைத்தா மங்கையிவள்
தானியக்கி தானவர்தந் தையலோ கானியக்கும்
தாருடைய வள்ள றனைநோக்கு நங்கையர்க்கு
மாரனிடத் தாமோ மனம். (200)

இலக்கணங்க ளானசில வேற்ற வெனினும்
அலக்கணங்கைக் கானவெனு மாக்கை மலர்க்குழல்தான்
சோரச் சிலமாற்றம் சொல்வா ளிவள்கணவன்
பேரச் சிலநாட் பெறும். (201)

என்றுமனத் தானுணர்ந்தா னேற்றதவ னித்திறத்தாற்
பின்றுமனத் தான்கோயில் பிற்படப்போய் என்றுசுழல்
குன்றுகுன்றக் காணும் குலமனையைக் கண்டடுத்தான்
வென்றிகுன்ற வீரன் விரைந்து. (202)

நிலந்துடிக்கும் பொற்பார் நிருதர்குல மாதர்
பொலந்துடிக்கு நேரிடையும் பொற்றோள் வலந்துடிக்கும்
மாதடையா மாதிரமும் வானு மலைவெடிக்கும்
கோதடையாக் கும்பம்வெடிக் கும். (203)

புக்குநின்று நோக்கிப் பொருந்த மனநினைக்கும்
நெக்குநின்று நீங்கு நிகரில்திரு வெக்குலத்தின்
யாராவ ரேனு மயலூழ் முறைப்படிதான்
சீராவ ரென்றான் தெரிந்து. (204)

நூற்கடலான் சென்றடுத்து நோக்கினன் தாக்குடைய
வேற்கடலார் காக்கும் வியன்கோயில் பாற்கடலார்
மாயணியின் சேக்கை வளத்த சயனமதிற்
தாமாய்த் துயில்வான் றனை. (205)

குழலியென்று குன்றிவர்ந்த கோளாகு மோலி
இழைகளொன்றி நின்றவொளி யேற்ற முழையதனின்
சீயம் தலைபத்துச் சேர்தோ ளிருபதுடன்
ஆயமளி யிற்றுயில்வா னை. (206)

Koviloor Digital Library

ஆயிரம்பேர் தேவரம்பை யார்ந்த கவரியிடத்
தூயதென்ற றேன்றளித்துத் தோன்றுதொறு நேயமுடன்
சீதைகண்டா லென்னச் செறியு முருவெளியால்
வாதைகொண்டாற் கண்டான் மலிந்து. (207)

குழந்தை மதியரன்கல் கூர்ந்தெடுத்த தோளைக்
கழிந்து மதன்கணைகள் காய மொழிந்த
திசையானைக் கொம்பு திரண்டடுத்த மார்பன்
வசையானைக் கண்டான் மதித்து. (208)

சார்ந்து கலவையொடு சார்ந்து வருதென்றல்
யேந்துநிறை காமத்தை யேற்றுதலால் காந்தும்
நெருப்பி னெரி வான்போல் நினைந்துபாழ் பட்ட
பொருப்பனையாற் கண்டான் புகுந்து. (209)

கொண்டுசெறி யூக்கத்தாற் கோதில் திசையடுத்து
மண்டுசெறு விற்புயத்தால் வாரியுண்ட அண்டருற்ற
கள்ளப் புகழ்தெவிட்டிக் கான்றகடை வாயிலென
வெள்ளெயிற்றாற் கண்டான் வெறித்து. (210)

சேக்கைவெந்து தீயத் திகழ்மேனி வேர்வடுக்கப்
பூக்கமழும் வண்டு பொறிந்தடுக்க மாக்கமழு
மாலை கரிய மருவு முயிர்ப்பானை
வேலையெனக் கண்டான் விரிந்து. (211)

தேவியலு நேமியனிற் சிந்தை திருவடுக்கப்
பூவியலுஞ் சேக்கைதனிற் பொய்யுறங்கும் பாவிதனைக்
காதலப்பாற் பேருயிர்ப்பாங் கல்வி னுயிரறைக்கும்
தீதலைப்பாற் கண்டான் தெழித்து. (212)

மிகுநினைப்பால் மேனி வெளிப்பட்ட வேலை
நகுமுகத்தன் காத னடுக்கன் தகுமெழிலாள்
உட்புலத்தா ளென்ன வுவந்துபொலி மேனியனைக்
கட்புலத்தாற் கண்டான் கனன்று. (213)

Koviloor Digital Library

மென்றொழிற்க லாபமஞ்ஞை வேட்கை மிகவானற்
குன்றொழித்தோர் குன்றினிடை கொள்வதென மன்றலணி
கூந்தலா ரேறிக் குலவுதடந் தோளானை
ஏந்தலான் கண்டா னெதிர். (214)

கருங்கடலின் மீதுசுடர் கான்றதென வேன்ற
பெருந்தரத்தா மாரம் பிறங்க வருந்தரத்து
மூவரியல் நேமிமழு மோதுகுலி சம்மடுத்துந்
தாவரிய மார்பான் றனே. (215)

தோடுழுத வண்டுந் துதித்ததிசை யானைமதத்
தூடுழுத வண்டுந் துதைந்துவரக் கோடுழுத
மார்பானை வன்பகைவர் வந்து தொழுஞ்சரணச்
சார்பானைக் கண்டான் றனித்து. (216)

கொண்டவுரு மாயன் குறளிற் குறுகநின்றான்
திண்டலைகள் பத்துத் தெறிந்தடுத்துக் கண்டவுடன்
மூண்ட கருத்தின் முதிர்ந்துவரு காலத்தீக்
கீண்டனகீழ் வேலை கிளைத்து. (217)

தோளாற்ற லென்னுந் துடித்துவரு சொல்லென்னும்
வாளாற்ற கண்ணுளை வஞ்சித்தான் மாளத்
தடித் திடித்த தென்னத் தலைபத் துருட்டி
யடித்திடித்தற் கென்வழக்கென் றான். (218)

நடித்தலடி மைத்தொழிலோ நன்னுதலை யுட்கப்
பிடித்தவரக் கன்பிழைத்தல் பெட்போ முடித்தலைகள்
பத்துந் தகர்த்துப் பழிக்குடலா மிவ்வூரை
முற்றுந் தகர்ப்பனென்றான் முன். (219)

என்றாக்கிக் கை களிரண்டும் பிசைந்தெழுந்து
நின்றாக்கி நேமிவள்ளல் நேர்பணியோ வொன்றாக்கி
யொன்றிழைத்த வுண்மைக் குரித்தோ விதுசால
நன்றிழைத்த தில்லையென்ற னன். (220)

Koviloor Digital Library

ஆலமுள்ளா னுண்டவன்போ லாற்ற லுளதெனினுஞ்
சீலமுள்ளார் செய்யாது செய்வதுண்டோ காலமுள்ள
பார்த்தழிக்கும் வேலையெனப் பண்பிற் சிறந்தடுத்தான்
காத்தளிக்கு மெய்யன் கவன்று. (221)

இற்றைப் பெருஞ்சீற்ற மென்னே முடிந்திடுக
கற்றைக் குழற் சிறைசெய் கண்டகனை முற்றப்போர்
செய்தல் குரங்கென்றாற் சீமான் சிறந்த வில்லுக்
கெய்தல் வசையென்றான் எற்று. (222)

அந்நிலையான் பேர்ந்துரைப்பான் ஆய்வளைக்கை யாயிழை
இந்நிலையா ரல்ல விவனிலையும் புன்னிலைய [யார்
காமத்தா லாகும் கருதினன்னை தன்னிலையும்
சேமத்தா லாகுமென்றான் றேர்ந்து. (223)

என்றெண்ணி யோர்பயனு மில்லை யென நினையா
குன்றன்ன கோமனைபிற் கொண்டடுத்தான் நின்றெண்ணி
யுன்னுவான் தேவி யுயர்நகரி லில்லையெனப்
பன்னுவான் சிந்தை பரிந்து. (224)

கொன்றானே கற்பழியாக் கோமகளைத் தோமுடையான்
தின்றானே செய்த சிறையறியேன் ஒன்றானுந்
தேர்ந்திலேன் போயடுத்துச் செப்புவதென் சீவனுடன்
சேர்ந்திலே னென்றான் திகைத்து. (225)

கண்டுவரு மென்றிருக்குங் காகுத்தன் வானரமன்
கொண்டுவரு மென்றிருக்கும் கோளிதுவாம் புண்டரிகக்
கண்ணான்பாற் செல்வேனோ காத லறமென்பா
னண்ணாதென் னென்றா நலிந்து. (226)

கண்ணியநாள் கான்றனவாம் காணேன் கனங்குழையை
விண்ணடைவார் தம்மை விலக்கியயான் எண்ணம்
முடிக்ககிலேன் யான்முடிவேன் முற்றுவரு தன்மம்
பிடிக்ககிலே னென்றான் பெயர்ந்து. (227)

Koviloor Digital Library

ஏழுநா ளோசனைதா னேற்றிருக்கு மிவ்விலங்கை
வாழுயிரி யான்காணு மற்றில்லை யூழியான்
தேவியையான் காணேன் றிரைதாவித் துன்பாழி
மேவியையு மென்றான் மெலிந்து. (228)

வல்லரக்கன் றன்னை வலியவெங்கைக் குத்திநெஞ்சாங்
கல்லரக்கிக் காட்டென்று காண்கேனோ மெல்லரக்கிற்
சேர நெருப்பாற் செறித்தரக்க னூருடனே
பேரவடற் கென்னும் பிழை. (229)

வானவரைக் கேட்பனெனின் வல்லரக்கன் றானிருக்கத்
தானுரைத்தற் கென்ன தரமுடையார் ஏனையர்கள்
யாருரைப்பா ரெவ்விதத்தி யானறிவேன் மானனைய
சீருரைப்பாந் தேவி திறம். (230)

எருவைமன்னன் சம்பாதி யிவ்விலங்கை தன்னிற்
றிருவைமுன்னங் கண்டவுரை தீதோ கருமைமன்னூர்
தெவ்வுயிரை யின்னகரைச் சேர வழிக்காம
லிவ்வுயிரை யுன்னற் கெனைத்து. (231)

வடித்தாய பூங்குழலை வாளெடுமெண் காணப்
பிடித்தாய பேயரக்கன் பெற்றி யெடுத்தாழி
இட்டிலங்கை தன்னை யிவனை முடித்தற்கென்
முட்டிலங்கு மென்றான் முனிந்து. (232

எள்ளுறையு நீங்கா திலங்கைதனைத் தன்மனத்தி
னுள்ளுறையும் வள்ளலென வோங்கினான் புள்ளுறையும்
உய்யானங் கண்டா னுவந்தான் புதிதென்றான்
செய்யானங் கண்ணன்மனத் தே. (233)

உளர்தேடு படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

காட்சிப் படலம்.

மாடுநின்ற சோலை மருவித் திருமகளைத்
தேடநின்றாற் றீமை சிதைவெய்து மூடுநின்ற
கண்டிலனேற் பின்னைக் கருத்தென் னிலங்கைதனைத்
தெண்டிரையிற் சாய்த்தலென்றான் றேர்ந்து. (1)

என்றடுத்துச் சோலை யியைந்தா னயந்தருவான்
ஒன்றடுத்துப் பூப்பொழிந்தா ரும்பரெலா மன்றரக்கன்
அவ்வழியின் வைத்தசிறை யன்னமனை யாணிலையைச்
செவ்வழியிற் சொல்வாந் தெரிந்து. (2)

வன்மருங்குல் வாளரக்கி மார்நெருக்க வந்திருந்தார்
கன்மருங்கு காய்ந்துதுளி காணாத நன்மருந்து
போலவரு நங்கை பொருந்து மருங்குலெனச்
சாலவரு மங்கமெலிந் தாள். (3)

துயிலடையாக் கண்கள் துடித்திமைத்தல் செய்யாள்
வெயிலிடையாந் தீபவொளி மெய்யாள் அயிலெயிற்று
வெம்புலிக்கு பூாத்தினுற்ற மென்மானின் பேடையுற்றாள்
அம்புலிக்கு நல்வதனத் தாய். (4)

விழுதலிரா மற்றுளங்கல் மேனி வெருவல்
எழுதலிரா மற்றனையென் றெண்ணித் தொழுதலொடு
சோர்தலன்றி நேருந் துயரத் துயிர்த்தல் கண்ணீர்
வார்தலன்றி வேறென் வரும். (5)

தழைத்த வருவி தனங்கடந்து தாழ
மழைத்தவெனக் கண்பொழியு மாண்பா லிழைத்தவிடை
காரணிந்தாள் கூந்தலவள் கண்மழைக்க ணென்றுரைக்குங்
காரணந்தான் கொள்ளுங் கவிந்து. (6)

Koviloor Digital Library

அரியகண்ட மஞ்சுடனே யஞ்சனமு மிஞ்சும்
கரியகண்டாற் கண்ணீர் கலுழும் உரியதென்ற
காதலுருக் கொண்டோர் கலந்து பிரிந்ததுயர்
கோதிலுருக் கொண்டதடுக் கும். (7)

துப்படுத்த கைகால் துளிக்குமஞ்சை யொப்பவனை
யொப்படுத்த சிந்தைநினைந் தோங்குகண்கால் அப்பால்
நனைந்துயிர்த்த வெப்பிற்காய் நண்ணிநிலை யின்றிப்
புனைந்துடுத்த வத்திரத்தாள் பொன். (8)

அரிதுகுலை வுற்றவிதி யாமோவென் றஞ்சிப்
பரிதிகுல முற்றபழி பார்த்துச் சுருதிவரன்
வந்தடுத்துக் காக்கு மனத்துணிவின் மாதிரத்தை
நொந்தடுத்து நோக்கும் நுவன்று. (9)

கமையா டிருமுகத்தைக் கவ்வி விழுங்க
அமையாதுமிழு மரவாய்க் குமையாய்த்
திரண்டரவா குஞ்சடையாய்ச் சேர்ந்த குழலாள்
அரண்டரவா குஞ்சிந்தை யாள். (10)

ஆவியன்ன வாச மணிந்ததன்றி வேறறியாள்
தூவியன்ன மெய்புனலிற் றோய்தலிலாள் தேவுகடல்
மெல்லமுதங் கொண்டடங்க வேள்புனைந்த வோவியந்தான்
பல்குபுகை கொண்டதையொப் பாள். (11)

கண்டிலன்கொ லாமிளவல் காணுன் கடனடுவி
லுண்டிலங்கை யென்று முலகொருப்பான் கொண்டிடைந்த
தாருரைப்பா ளென்பா ளகல்புண்ணிற் றீநுழைந்த
சீருரைப்பாஞ் சிந்தை திகைத்து. (12)

மாண்டா னெருவை மகிப னெனதுநிலை
யீண்டார் தெரிப்பா ரிகமதனிற் காண்ட
லரிதென்று விம்மும் அழுங்கு மயங்கும்
பெரிதென்ற கொங்கைப் பிணை. (13)

Koviloor Digital Library

என்னைவரு நாத னிளவலையெண் ணாவினையேன்
சொன்னவுரை கேட்டுத் துறந்தனனோ முன்னை வினை
முற்றியதோ வென்னு முறையில்லே னென்றவனல்
பற்றியதோ வென்னும் பதைத்து. (14)

அருந்துமட காரிடுவா ரன்புடனே யென்னும்
விருந்துவரி லென்படுமோ வென்னும் மருந்துமுண்டோ
யான்கொண்ட நோய்க்கென் றழுங்கு மிகமெலியு
மான்கொண்ட நோக்கின் மயில். (15)

வன்பரவு கண்ணரக்கர் வைத்திருக்கார் திற்றியெனத்
தின்பரவ ரென்றுமனந் தீர்ந்தனனோ என்பழிதான்
எண்ணுவே னென்னு மிரவுபக லின்பமின்றி
கண்ணுவே னென்னும் நலிந்து. (16)

பெற்றவருந் தம்பியரும் பின்னு மடுத்துமன்னைக்
கொற்றவர நன்னகர்க்கண் கொண்டனரோ வுற்றவர
வாண்டளவு தீரா தனக னகரடையான்
காண்டகையா னென்பாள் கசிந்து. (17)

முரனனைய மொய்ம்பார் முரண்பொருத வாபோல்
வரனனைய மாய வழக்கார் பொரரநனிகொள்
பூசலுண்டா மென்னப் பொருமி மனமழிவாள்
ஏசலுண்டா மென்னு மிடை. (18)

தெம்மடங்கு சேணிலந்தான் தேற்றமுடைக் கேகயர்கோன்
தம்மடந்தை தம்பியது தானென்ன மும்மடங்கு
போற்றிப் பொலிந்த புருட னருண்முகத்தை
யேற்றிப் பணிவா ளிருந்து. (19)

மெய்த்திருச்சேர் பொற்பதத்தாய் மேவென்ற போதுமடுத்
தித்திருச்சேர் பொற்பதத்தா யெய்போதும் சித்திரத்திற்
சேர்ந்து மலர்ந்தெழில்சேர் செந்தா மரையையிகர்
வார்ந்த வதனமுன்னு வாள். (20)

Koviloor Digital Library

தேங்கிவளர் கங்கை திருமுடிசேர் சேயுடையான்
வாங்குவரை தூங்க வளர்சிலையை யோங்குமுன
மிற்றிரண்டாய் வீழ வெடுத்தபுய முன்னினைவாள்
அற்றிரண்டா லென்னலவம்பா லாள். (21)

இன்ன லிமையோர்க் கியற்றும் கரன்முதலோர்
பன்ன லியையாப் படைப்பரவை கன்னலொரு
மூன்றடுக்க வாகவத்தை முற்றுவித்த விற்புயத்தை
ஏன்றடுக்க யெண்ணு மிசைந்து. (22)

ஆழமுறு கங்கையதி லம்பிவிடு செம்படவ
னேழமையார் வேடற் கிளையனுன்பின் தோழமைகீ
மங்கை கொழுந்தியென வாழிமனத் தாலுரைத்த
பங்கமிலா நண்பைமதிப் பாள். (23)

உரங்கொண்ட சென்னி யுரிமைசா றம்பி
வரங்கொண்ட மாமுடியை மாற்றித் திரங்கொண்டு
கட்டியதாஞ் செஞ்சடையைக் கண்டு வருந்தவெண்ணு
லொட்டியதா நண்பை யுவந்து. (24)

பரித்தசெல்வ நீக்கிப் படர்வனஞ்சேர் நாளின்
அருத்தியுடன் மேலோர்க் களித்தான் கருத்தினவ
ராசைகண்டி லேச மனகன் சிரித்துவந்த
நேசமுண்ட தெண்ணும் நெகிழ்ந்து. (25)

மழுவெடுத்து மன்னர் மடியமுறை மூவேழ்
பொழுதடுத்து நூறிவரு புண்ணீர் முழுகியுற்ற
மொய்ம்புயர்த்து மெய்த்தவத்தன் மூரிவில்லை வாங்கிநின்ற
பைம்புயத்தை யெண்ணும் பரிந்து (26)

ஏகமுற்ற வாளிதனை யிந்திரன்றன் காதலன்மேற்
போகவிட்டுக் கண்ணைப் பொடித்தாள் காகமுற்றுக்
கோர்கண்ணைப் போக்கு முயர்வடுத்த வென்றிபுனை
வாகெண்ணுஞ் சிந்தை மதித்து. (27)

Koviloor Digital Library

வெய்யதொழி லாக்கும் விராதன் வினைமாற்றிச்
செய்யதொழி லாக்கும் செயராமன் மெய்யடுத்த
வீரவரன் மெய்ப்புகழை வேண்டி மிகமெலிவு
நேரவருஞ் சோரும் நினைந்து. (28)

ஏற்ற திரிசடையா ளென்னுமின்சொ லாளொழியத்
தோற்று மரக்கியர்கள் தோமுடையா ரேற்றுவரு
பொல்லாத செய்கை புரிவோர் துயிலடுத்தார்.
எல்லாரு மொன்ற விசைந்து. (29)

ஆயனையாள் பின்னை யடுத்துத் திரிசடையாம்
தாயனையாள் தன்னைத் தனிநோக்கி நேயமுற்ற
தாயைநீ கேட்டி துணைவியெனக் கென்றெடுத்து
நேயவுரை சொல்வா ணினைந்து. (30)

நலந்துடித்து நன்மை நயக்குமோ பின்னும்
சலந்துடித்துத் தின்மை தருமோ பொலந்துடிக்காம்
பொன்மருங்கு னல்லாய் புருவ மிடந்துடிக்கும்
என்மருங்கு நன்மைவரற் கென். (31)

முனிவ னுடுமிதிலை முன்னுேன் வருநாள்
நனிபுருவந் தோளுமுட னுட்டம் இனிய
துடித்தனவா மீண்டுந் துடிக்கு மதுபோல்
வடித்தனவாஞ் செய்கை யென்சொல் வாய். (32)

மறந்தே னிதுவுமொரு மாற்றமது கேட்டி
அறந்தேறு சிந்தையென தன்பன் பிறந்தான
பார்முழுதுந் தம்பிபெறப் பண்ணிவனம் நண்ணியநாள்
சீரில் வலந்துடித்த தே. (33)

நஞ்சவல னண்ணி நயமருவா நாளினிடை
வஞ்ச வலந்துடித்த மாயத்தா லெஞ்சலிலை
யீண்டா மிடந்துடிக்கு மென்னநய முண்டதனை
வேண்டியுரை செய்வாய் விழைந்து. (34)

Koviloor Digital Library

என்றாள் திரிசடையு மேற்றவரு சோபனந்தான்
நன்றாளு மென்று நயந்தடுத்தாள் வென்றிபுனை
நாயகனைச் சேர நயக்குமுண்மை யாகுமென்று
நேயகனஞ் சொல்வா ணினைந்து. (35)

உன்னிறந்தா னன்மையுற வோங்கு முயிர்தழைப்ப
இன்னிறத்தே னண்பா லிசையுடனே பொன்னிறத்தாம்
தும்பிவந்துன் காதிற் றுதித்தூதிச் செல்வதனைக்
கொம்பிவர்ந்த தேன்மொழியே கொள். (36)

ஆயதனைத் தேறினுன தாவியொத்த நாயகனு
லேயதனித் தூதிசைத்த லேற்றடுக்கும் தீயதுதான்
றீயவர்க்குச் சேறல் சிறந்த தெனவுரைத்தாள்
தாயவட்காய்ச் சார்முச் சடை. (37)

துயிலடுக்கா தாற்கனவு தோன்ற விலவாம்
அயிலடுக்கும் வேல்விழியே யாகும் பயில்கனவும்
மொன்றடுத்துக் கண்டே னுரைப்பே னெனவுரைத்தாள்
நன்றடுத்த சிந்தை நயந்து. (38)

எண்ணை முடி தோறு மிட்டு முடிவில்லாத்
திண்ணெடும்பேய் வேசரிபூண் டேரின்மே னண்ணினனல்
வன்புலத்தி ராவணனும் மன்னிரத்த வாடையினன்
தென்புலத்தி னனன் றிரிந்து. (39)

மக்களொடு சுற்ற மருவுனரி யாவர்களும்
புக்க புலத்தினின் றம் போந்திலராஞ் சிக்கறவே
நோக்கினிவை தீதே நொடிவனிவை கேளென்ன
வாக்கினிமை சொல்வாள் மதித்து. (40)

ஆண்டகையி ராவணன்று னன்பின் வளர்த்தவனம்
காண்டகைய வோமக் கனல் விளக்கும் மாண்டகைய
மண்டபத்தி னோடு மடிந்து விழக் கண்டேன்
கண்டகர்க்கு நன்மையுண்டோ காண். (41)

Koviloor Digital Library

பிடிமுழங்கு மாமதத்திற் பேரி முதல
விடிமுழங்கு மாலிரட்ட லின்றித் தடிமுழங்கு
மாமுகில்க ளேற்காது வான முழங்கிவரும்
தாமுதிரு மீன்கள் சலித்து. (42)

பகலொளியைக் காட்டும் பகருமிரவு
மிகலுடைய மைந்த ரிருதோள் தகவுடைய
கற்பகத்தா மாலைமலர் கான்ற புலால் வீசும்
பொற்பகத்தாய் வீணோ புகல். (43)

திரியு மிலங்கைமதில் திக்கெல்லாம் பற்றி
எரியு மதனபுர மெங்கும் தெரியவரும்
மங்கலத்தாம் பொற்கலச மாறு மிருள்விழுங்கும்
பொன்கலத்தாம் தீபமதைப் போந்து. (44)

தோரணங்க ளெல்லாம் துணியவருஞ் சூழிமால்
வாரணங்கள் பொல்லா மருப்பொடியும் ஆரணங்கொள்
மந்திரத்தின் மேலோர் வகுத்த குடத்தமுதஞ்
சிந்திரத்த மாகுஞ் செறிந்து. (45)

விண்மதியைக் கீறிவரு மீன்க ளெழுமீது
புண்மருவி ரத்தம் பொழியுமழை மண்மதிக்கும்
வாள்தனுவென் றின்ன வழங்குவா ரின்றியமர்
கோள்தணியா தாகிமலைக் கும். (46)

மங்கையர்கள் மங்கலத்தான் மன்னுந் திருத்தாலி
அங்கையதின் வாங்கு மவரன்றியே கொங்கைகளின்
வீழ்ந்தனவா மிவ்வகைதான் மேலோ கெடுதியுற்றுத்
தாழ்ந்தனவாந் துன்பந் தரும். (47)

மன்னவன்றன் தேவி மயன்மடந்தை வன்னமுடன்
பின்னநின்ற வோதி பிறங்கிவிழத் துன்னும்
சுடர்சுறுக்கொண் டேறத் தொலையு மிதற்காம்
படர்சுருக்க மில்லையது பார். (48)

Koviloor Digital Library

என்றிப் படியியம்பி யேற்றகனுக் கேட்டியினி
யின்றிப் படியி னிடைந்ததுவும் வன்றுணையாங்
கோளரியி ரண்டு குழுக்கொ ளுழுவையுடன்
ஆளெரியாய் வந்த தடர்த்து. (49)

வரம்பின் மதகரிகள் வாழும் வனத்தின்
நிரம்ப வளைந்தனவாய் நேர்ந்து பொரும்பல்
பிணம்படத்தான் செய்து பிறங்கு மயிலைக்
கணம்படக்கொண் டேகுங் களித்து. (50)

ஆயிரமாந் தீப மமையத்தா மாட்டியதிற்
சேயொளிசேர் பொன்விளக்கைச் சேர்த்தசெய்யாள் நாயகன்
மாமனையினின்று மகிழ்ந்தடுக்கும் வீடணன்றன் [றன்
கோமனையி னன்று குறித்து. (51)

பொன்மனையிற் புக்க பொழுதி னுணர்த்தினைநீ
யென்மனதி னின்னமுடி வென்றுரைத்தா ளன்னை
யதனைத் தருமா றறிந்திடுவா யென்றாள்
மதனைத் தருமா மயில். (52)

இவ்விடையி னண்ண லிராம னடிபோற்றும்
வெவ்விடைநேர் தூதனெனும் வீரவரன் அவ்விடையே
நோக்கி யடுத்தான் நுவலுந் திருமகளைப்
பாக்கியத்தைக் காணவரும் பண்பு. (53)

அவ்வயினும் வல்ல வரக்கியர்க ளாண்டெழுந்து
செவ்வையிலாத் தூக்கஞ் செகுத்ததெனு வெவ்வயினு
மேலெழுந்து வீங்கினர் வெங்கைமழுச் சூலத்தார்
காலெழுந்த தென்னக் கலித்து. (54)

வயிற்றினிடை வாயர் வளைத்த பெரு நெற்றி
குயிற்றினவா நோக்கர் கொடியர் எயிற்றிற்
கிடையிடையே யானையரி யேற்றுத் துயிலும்
படியிடையா வாயரடிப் பார். (55)

Koviloor Digital Library

ஒருபதெனுங் கையுடைய ரொற்றைத் தலையர்
இருபதெனுஞ் சென்னி யிருகை வெருவவரு
தோற்றமுலை வில்லார் தொலையா வலியுடையர்
நாற்றமுலை பல்வகையா னோர். (56)

சூலம்வாள் சக்கரங்கள் தோட்டியடு தோமரங்கள்
காலவேல் கற்பணங்கள் கற்றகையர் ஆலம்
உருவுகொள்ளு மேனி யுயர்வார் மறலி
வெருவுகொள்ள வானி மிகுத்து. (57)

கரிபரியாம் வேங்கை கரடிபே யாளி
அரிநரிநா யென்ன வடுத்துத் திரிமுகத்தர்
பின்னுளு மாமுகத்தர் பேரவிழி மூன்றுடையா
ரென்னுளும் பாபத் தினர். (58)

எண்ணிற் கடங்காத வீட்டினர்கள் கூட்டமுற்றார்
கண்ணிற் கடங்காத காட்சியார் பெண்ணென்ன
முற்றினர் பேரின் முனிந்தார் துயிலெழுந்து
சுற்றினர் தோகைதனைச் சூழ்ந்து. (59)

ஆயிடையின் மிக்க வழகன் றிருத்தேவி
தியனையர்க் கண்டுமிகத் தேம்பினள் நாயகன்றன்
தூதன் விரைந்தடுத்தான் தூய மரப்பணையின்
நீதன் சிறந்துகண்டா னோர். (60)

அரக்கியர்க ளுற்ற வயின்முதலாங் கையர்
நெருக்கியர்க ளாந்துயிலு நீங்கி இருக்குனர்கள்
எதுவிதற் கென்னையென யேற்றடுத்து நோக்கினன்
சாதுவரர் போற்றுந் தரன். (61)

விரியு மழைக்குலத்தின் மின்னலொளி யென்னக்
கரியநிறத் தார்குழுவிற் கண்டான் உருசிறைந்த
வள்ளலகங் கொண்டு மருவு திருமகளை
யுள்ளலகங் கொண்டா னுவந்து. (62)

Koviloor Digital Library

தொடக்கரிய காவலெனச் சுற்றரக்கி யர்க்குண்
மடக்கொடியாஞ் சீதையென மாதே கடற்றுணையாந்
தண்ணீர்த் தடத்திற் கருதியுரை யன்னமென
வெண்ணீர்மைக் கேற்ற ளிசைந்து. (63)

வீடினதன் றும்அறனும் வீகலேன் யானுமினித்
தேடினேன் கண்டேன் திருவையென வாடினன்
ஆடினன் பாடி யடுத்தான் அடுத்தெங்கு
மோடின னடியுகந்து. (64)

எள்ளரிய நன்னூ லிலக்கணங்க ளெங்குமெழில்
வள்ளலுரை கொண்டடுத்த மாறிலவாங் கள்ள
வரக்கனித்தன் மாமலர்க்க ணண்ண லுயிரைக்
கரக்கவைத்தா னென்றான் கனன்று. (65)

மூவகைய தாமுலகு முன்னிலையை நீக்கியடு
பாவியுயிர் கொள்ளச்செய் பண்பிதுவா மாவதுதான்
ஐயமில தாக வரவிற் சயனனவன்
தையலிவள் தண்கமலத் தாள். (66)

மாசுண்ட மாமணியாள் மன்னவரு மால்கதிரின்
தேசுண்ட திங்களெனத் தேய்ந்துள்ளாள் காசுண்ட
கூந்தலாள் கற்புங் குறையாத காவற்கும்
ஏந்தலா னல்லறந்தா னீடு. (67)

புனைகழலி ராமன் புயத்தைப் புகழ்கோ
வனிதை மனத்தை மதிக்கோ கனைகழற்கால்
மன்னர்குலச் செல்வன் வரசனகர் மாண்குலத்தின்
நன்மைதனைச் சொல்கோ நயந்து. (68)

தேவர்பிழை செய்திலராந் தெய்வத் திருமறையோ
ரேவர்பிழை செய்வாற மீறின்றால் ஆவதினிச்
செய்யவரி தெம்பிராற் சேரென் னடிமையது
மெய்யிவரு மென்றான் விழைந்து. (69)

Koviloor Digital Library

கேழிலாள் தன்னிறைதான் கீண்டது வாமென்னி
லாழியான் கோபமெனு மாழிகொள வூழி
இறுதி வருமென்ன வெண்ணினேன் வாழி
யுறுதி யுலகமுள்ள து. (70)

வெங்கனலின் மூழ்கி விரிபுலன்கள் வீக்கியுந்தான்
நுங்க வருந்தலின்றி நோற்றவர்கள் எங்குள்ளார்
நற்குடியின் வந்து நயத்தவில்லின் மாண்புடைய
பொற்கொடியார் நற்றவத்தைப் போல். (71)

பேண வுயர்ந்த பிறவிவரு பெண்மையது
நாண முயர்ந்தநங்கை நண்ணுதலால் காணலின்றி
யீண்டிவடான் கொண்டதவ மெம்பிரான் காண்கவறம்
பூண்டிலனு மென்றான் புகழ்ந்து. (72)

முனியு மரக்கியர்கள் முந்துமுறை யில்லார்
இனிய வறத்தவள்வே றில்லை தனிமையதும்
பெண்மைதவ நல்லறத்தின் பேராற்ற லானவெலாம்
வண்மைதவ மங்கையர்க்கா வாம். (73)

தருமந்தான் காப்போ சழக்கன் வினையின்
கருமந்தான் காப்புடைத்தோ கற்போ வருமையிதே
யாராற்று மாரிதனை யண்ண றிருத்தேவி
பேராற்றல் பேசப் பெறும். (74)

செல்வமோ வன்னதவர் தீமைதா னேவிதுவும்
அல்லும் பகலமர ராட்செய்வா ரொல்லுவதோ
வேறொருவர்க் கீது விளிதற் கிதுவழியே
தேறறந்தான் வெல்லும் சிறந்து. (75)

என்றினைய வெண்ணி யிருந்தான் பணைமரத்தாற்
பொன்றிணியுஞ் சோலை புகுந்தனுமா னின்றவழி
நேர்ந்தா னரக்க னினைந்த விரவினடு
சார்ந்தா னறமதிலா தான். (76)

காட்சிப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

நிந்தனைப் படலம்.

நீண்டவரை யெல்லாம் நிறைந்தவெனத் தோள்வயங்கப்
பூண்டவரை யுச்சிநிறை பொன்கதிர்போற் காண்டகைய
மாமகுடம் பொற்றலைமேல் வார்ந்திருளை யோட்டவந்தான்
காமகுமாரக் கத்தனரக் கன். (1)

மேலா முருப்பசிமான் வெள்ளடைதான் தந்துவரக்
காலார் செருப்பொருமான் கைக்கொள்ளத் தாலாய்
அரம்பையர்கள் சூழ வடுத்தான் வனத்தைத்
தரம்பயிலா வல்லரக்கன் தான். (2)

கானநெய்யி ளும்விளக்கம் நாற்கோடி நங்கையர்கள்
தானெடுத்துச் சூழத் தரம்பயிலும் கானநெறி
பாங்கிவர மேலாம் பரதநட னம்புரிவா
ரோங்கிவர வந்தா னுவந்து. (3)

அந்தரமி லாதா னரியதுயி னீங்கினன்
சுந்தரிவாழ் சோலையதோ தோற்றமென்னே மந்திரந்தான்
என்னே வெனவமர ரேற்றடுத்துப் போற்றவந்தான்
கன்னேவுஞ் சிந்தையரக் கன். (4)

நீணிறத்தாம் குன்றி னிறந்தா ழருவியெனப்
பானிறத்த வுத்தரியம் பாங்குடையான் சூனிறத்த
கொண்மூக் கிழிக்குமின்போற் கொண்டபுரி நூல்விளங்க
விண்மூட வந்தான் விரைந்து. (5)

தோள்தோறும் தோய்ந்து சுடரும் வலையமின்ன
தாள்தோறுஞ் சேர்கழல்கள் சார்ந்தொலிப்பக் கேளெல்லாம்
சூழ்ந்துவர வந்தான் துயரடுத்த சிந்தைகொண்டாள்
வாழ்ந்துவரு சந்த வனத்து. (6)

Koviloor Digital Library

தன்னிறத்தின் மாருய்த் தழுவிவரும் நீவிகொண்ட
பொன்னிறத்த தூசுவெயில் போற்றிவர மின்ஞெளிசேர்
காசுகொண்ட மோதிரக்கை கற்பகக்கா வாய்க்கவினத்
தேசுகொண்டு வந்தான் சிறந்து. (7)

சன்னவீ ரத்தசரஞ் சார்ந்துடுக்கள் கோள்களுடன்
பொன்வரையிற் ரேன்றும் பொலிவெய்த மின்வரைந்த
மோலி யுதயவரை முற்றருக்கர் பத்தடுத்தார்
போலிவர வந்தான் பொலிந்து. (8)

பணைமருப்புத் தீரப் பரிபவத்தைத் தாங்கும்
இணைமருத்த திக்கசங்க ளேங்கத் துணைமறுத்த
பொன்னவனைப் போக்கும் பொருவினர சிங்கமென
மன்னரக்கன் வந்தான் மதித்து. (9)

அங்கயலாங் கண்ணு ரரக்கியர்கள் விஞ்சையர்பொன்
மங்கையர்கள் சித்தர் மடந்தையர்கள் கொங்குடைய
நீலவரை யைத்தழுவி நேரு மயில்களெனச்
சாலவர வந்தான் சலித்து. (10)

தொளையுற்ற வேயிஞெடு தோகையர்கள் கானம்
கிளையுற்ற வீணை கெழும அளையுற்ற
தந்தியமு தந்தாங் தரவிசைக்கு நேயமுடன்
வந்தியர்கள் போற்றவந்தான் மன். (11)

அன்னம் படர்ந்தவென வங்கைகொண்ட சாமரையார்
நன்னயக்கார் கண்டுமயில் நாடலென மின்னிடையார்
போற்றிவரு கானம் புரிந்தடுத்துச் சேரவந்தான்
கூற்றிருந்த வேலான் குறித்து. (12)

மந்திரகீ தத்தின் வகையாம் பதந்தொடர
அந்தரவா னத்தி னரம்பையர்கள் சுந்தரமாம்
பாடலார் சீருடனே பாங்காய்ப் படர்ந்துவர
ஆடலான் வந்தா னடுத்து. (13)

Koviloor Digital Library

மாரனம்பிற் சோர்ந்து வருதென்ற லான்மயங்கி
வாரணிந்த கொங்கை மடந்தையர்கள் சீரணிந்த
கண்ணுகும் வேல்கள் கலந்துநிறை தோளடுக்கப்
புண்ணுகி வந்தான் பொருத்து. (14)

கேடகவாள் சூலமழு கேளடுத்த கற்பணம்வேல்
ஆடகவாள் வில்முதல வாயுதங்கள் தாடகைநேர்
மைந்தா மரக்கியர்கள் வார்ந்ததலை தாங்கிவர
வந்தா னரக்கன் வளைந்து. (15)

மாலைவரை சாந்து வயங்குபூண் தூசுமணி
சோலைவரு கற்பதரு சொன்னிதிகள் சாலக்
கொடுத்துவர வந்தான் குணநிதிசேர் சோலை
கடுத்ததிறல் கொண்டவரக் கன். (16)

அனையதிறல் கொண்ட வரக்க னடுத்த
புனையிழையா ணோரிற் புகவே வினையமினி
மேல்விளங்கு மென்ன விரும்பி மரத்திருந்தான்
கால்விளங்கு சேயன் கடுத்து. (17)

நிந்தைகொண்ட பேயரக்கன் நேர வருவதனை
விந்தைகண்டு சிந்தை மெலிவெய்திச் சிந்தைகொண்டு
காயு முழுவைவரக் கண்ட பிணைபோல
வோயுமுணர் வாள ளுலைந்து. (18)

கூசியடுத் தாவி குலையவரு கிள்ளையின்மேல்
ஆசையடுத் தாவி யலைவானைக் காசில்லாக்
கண்ணடுத்துக் கண்டான் கருத்துவந்த தேவருளத்
தெண்ணடுத்துக் கொண்டா னிசைந்து. (19)

வாழிமலர்ச் சானகித்தாய் வாழி மறைவள்ளல்
வாழிமறை வாழி மறையவர்கள் வாழியென
வாழ்த்தினன் கூர வழியரக்கன் சிந்தையெண்ணைத்
தாழ்த்தினன் வந்ததரத் தான். (20)

Koviloor Digital Library

அவ்விடத்திற் சேர்ந்த வரக்க னிரக்கமுடன்
எவ்விடத்தி னின்னருளை யீவதென வெவ்விடத்தை
மிக்கசுவை யென்ன விரும்பிப் புகழ்ந்துரைப்பான்
தக்கமதி யில்லாச் சடன். (21)

ஈசனென்ற போது மிறையுந் திறம்பாத
வாசிகொண்ட தீர மனமுடையான் ஆசைகொண்ட
தாமனத்தா ளுணர் தலைக்கொள்ளப் பூங்கணையால்
வேமனத்தான் சொல்வான் விழைந்து. (22)

இன்றிறந்த நாளை யிறந்த தெனவிருந்தா
லென்றிறந்தான் சேருமன மென்னுளாங் கொன்றிறந்த
பிற்கூட வெண்ணுதியோ பேரா மதக்களிற்றின்
தற்கோடு கொண்டதனத் தாய். (23)

உலகெல்லாம் போற்ற வொருங்கடுத்து நின்ற
வலகில்லாச் செல்வத் தரசே யுலைவில்லா
வுன்றிறத்துக் காம னுறுத்தெய் கணையன்றி
என்றிறத்தி னேதெளிமை யெண். (24)

பூந்திருவும் நேராப் பொலிவெடுத்த பொற்கொழுந்தே
ஏந்திவரு செல்வ மிகழ்ந்தனையுன் காந்தனவன்
மாண்டிலனு மென்ற வழக்கொன்றி லாதுநினை
வேண்டிவரு மென்றல் வியப்பு. (25)

நோற்கின்றார் நுண்பொருளை நுட்ப வறிவெடுத்துப்
பார்க்கின்றார் பெற்ற பயன்பார்த்தி வார்க்குன்றா
மாதனத்தா யென்சொல் மவுலியினு லேற்பரொடு
காதனத்துஞ் செல்வமது காண். (26)

பொருளும் விளரி புகழ்பூவை யாழும்
மருளும் மழலை வழங்காய் தெருளுடைய
நான்முகனுன் சிந்தை நயத்தருளும் பொன்மருங்குந்
தான்முதலில் லாதுபுரிந் தான். (27)

Koviloor Digital Library

ஈண்டடுத்த நாளு மிளமையது மீண்டிலவாம்
மாண்டடுத்து நீங்கிலென்ன மாலாகும் வேண்டியநாள்
வீணுக்கி மேல்விளிந்தால் வேறென்ன வாழ்வடைவாய்
மாணுக்கும் செல்வ மதி. (28)

இழவுயிர்க்கு வந்தென்பா லெய்திடினு மெய்தக்
குழைமுகத்து நின்மனது கோடி லழகுமிக்க
பண்புடைய காமப் பழக்கம் புரிவதெவர்
நண்புடையாய் நீயே நவில். (29)

பெண்மை யழகு பிறழா மனத் திண்மை
கண்மை பொருந்திக் கருணைபடர் வண்மை யொன்றும்
மாண்டதுவாம் பொற்சனக வங்கிசத்தி னென்றுரைக்கிற்
பூண்டதுவா மேலாம் புகழ். (30)

வீட்டு மிடத்தலறு மெய்க்குரலைக் கேட்டுமனம்
மீட்டுமினி யென்று விரும்புதியோ தேட்டமுற்ற
நல்லறத்தி னும்பயனை நாடா திகழ்ந்துபின்னைக்
கல்லரக்கு நெஞ்சினென்னும் காண். (31)

தக்கசெல்வத் தெந்தனுயிர் தாழ்வடுத்து வீடுமெனின்
மிக்கசெல்வம் நீங்கும் விழைவுடைநீ புக்கின்
உயர்ந்ததெனச் சொல்லடுக்கி னேங்குபுக ழன்றி
யயர்ந்ததெனச் சொல்லினென்னை யாம். (32)

தேவரொடு தேவியர்கள் சேவடியிற் போற்றிசெய்யத்
தாவரிய மூவுலகு தாளுைம் காவலைம்
மேவுகின்ற துன்கண் விலக்கினையுன் போலுலகிற்
பாவுகின்ற வேழையரார் பார். (33)

குடிமை யுலகஞ்செய் கொற்றத் தெனதா
மடிமை யுனதென் றறைந்து முடிகொண்ட
சென்னியுழி கையன் திருவடியில் வீழ்ந்தடுத்தான்
பன்னுபழி பாரான் பரிந்து. (34)

Koviloor Digital Library

காய்ந்த சலாகையெனக் காமவுரை மேவியதாற்
றீய்ந்தசெவி யுள்ளந் திரிந்துநெய்த்தோர் பாய்ந்தகண்க
ளொன்றுமுறை யோம்பா ளுயிர்க்குந் தரமின்றிக்
கன்றுமுரை சொல்வாள் கடுத்து. (35)

மல்லெடுத்த தோளான் மனமிடைய மாறறையுங்
கல்லடுத்த நெஞ்சுரமுங் கற்பினுண்டா மில்லடுத்த
மாதகத்திற் கொள்ளா வசனமிது வாந்துரும்பே
பாதகத்திற் கென்னும் பலன். (36)

மேரு வரையுருவி விண்ணைப் பிளக்கவெனிற்
சீரார் புவனமொன்று செய்யவெனி லாரியன்றன்
ஏவடுத்துச் செய்தற் கிசையு மெனலறிந்தும்
தாவடுத்த மூடவென்செய் தாய். (37)

அஞ்சினையா லன்றோ வமல வரனேக
வஞ்சனையா மான்விடுத்து வந்தெடுத்தாய் நெஞ்சினைய
மண்ணெடுத்த வுன்குலத்தை மாய்க்குஞ் சிலையன்வரிற்
கண்ணெடுத்து நோக்கவுமா கா. (38)

பத்தெடுத்த கம்புயங்கள் பாணம் பலவிடுத்து
வித்தகவிற் கையான் விளையாடற் கொத்த
கடமைகொண்ட தன்றிக் கருதுபோ ரென்னும்
மடமைகொண்ட மூடவென்றாண் மா. (39)

தோற்றாய் பரவைக்குத் துள்ளரலைச் சென்னிபுனை
நிற்றான் கரவாளி னேரவென்றாய் நோற்றவெலாம்
கூற்றமுன்னத் தானும் குறித்த வரன் பகழிக்
கேற்ற மென்னு மென்றா ளெடுத்து. (40)

பெற்றுடைய வாளும் பிறங்கு முரனுளும்
மற்றுடைய தோளும் வரன்வரமும் விற்றொடையாம்
வள்ளல் சரத்தால் வருவிளக்கு முன்னிருளாம்
உள்ளல் தரத்தே தினக்கு. (41)

Koviloor Digital Library

குன்றெடுத்த வுன்னைக் குலவும் பதநுதியால்
வென்றடர்த்த வீரன் விரற்சிலைதான் என்றடலதன்
ஆற்றலினு விற்ற தடுத்த படரோசை
எற்றிலையோ வென்று ளெடுத்து. (42)

மலையெடுத்தே னெண்டிசையா மாக்க டமையும்
நிலையெடுத்தே னென்றிசைக்கு நீமுன் சிலையெடுத்துத்
தம்பிசிற்கச் சேரும் தரமின்றி மாயைகொண்டாய்
வெம்பிசிற்கும் வீர மெலிந்து. (43)

ஏழையெங்காம் நீசே ரிடமின்ன தென்றதனை
வாழியெங்கோன் காண வருநாளின் ஆழி
இலங்கையுடன் போமோ விசையவரு மூழி
யுலங்கனையா யுன்னுயிரொன் றோ. (44)

வெஞ்சினத்தி ராக்கதரை வீய்த்தலொன்றோ நீபுரிந்த
வஞ்சினத்தால் வள்ளல் வளர்சினத்தால் எஞ்சும்
உலகெல்லா மென்ன வுலந்தேன் கரியாம்
அலகில்லா மென்னும் அறம். (45)

அங்கண்மா ஞால மலறக் கொடுந்தொழில்செய் [மால்
புன்கண்ணாய் புன்றொழிலைப் போட்டிடற்கென் செங்கண்
தந்தைவர னென்னத் தனித்தென் புரிந்தனையென்
சிந்தைவரன் செய்கை தெரிந்து. (46)

சீரியனோர் மானுடனே செய்வ னெனிற்கார்த்த
வீரியனோர் மானுடனல் வெட்டுண்டான் போரி
லெனக்கேட் டிருந்து மிகலுடையான் முன்னர்
மனக்கோட்டஞ் செய்துமடி வாய். (47)

இருவரன்றோ வென்றிகழ்ச்சி யெண்ணினையா மென்னி
லொருவனன்றோ ஆழி யொழிப்போன் செருவருங்கால்
நன்மையென்சொற தேர்வாய் நலியுந் திருவுடையாய்
வன்மையென்னும் நாசம் வரும். (48)

Koviloor Digital Library

பொற்கண்ணன் தம்பியென்னப் போர்த்திரத்திற் கேற்றவலர்
மற்கண்ணுந் தோளவுணர் வன்ருெழிலார் நற்கண்ணுர்
நல்லறத்தாற் றீர்ந்திடினும் நாட்டமிலுன் போற்பிறர்த
மில்லறத்தாற் றீர்ந்தா ரிலர். (49)

பூவருவோ ஞதி புலவ ரவுணர்களும்
மேவரிய செல்வமுன்பால் மேவியவை தாவரிய
நற்றவத்தி ஞலோ நவைபுரிந்து கிட்டியவோ
முற்றவத்த ஞய் மொழி. (50)

இப்பெரிய செல்வமுனக் கீந்த வரனுமுன
மொப்பரிய நல்லறமா யோங்குமென்பார் செப்பரிய
தன்மத்தை விட்டாய் தரமில்லா யேழையுயி
ரின்மைக்கு வித்தா மிவை. (51)

மறந்திறம்பா வல்லமையின் வாழ்ந்தாலு மாண்டார்
அறந்திறம்பி ஞர்தா மறிவாய் சிறந்திருந்தார்
பாசத்திற் றீர்ந்து பகரும் பகைமூன்று
நேசத்திற் றீர்ந்தார் நினை. (52)

தென்றமிழைத் தேர்முனிவன் றீதின் முனிவர்களும்
புன்ருெழிலிற் போமரக்கர் போக்கில்லார் கொன்ருெழித்தி
நின்ருற் குறைவரென்ருர் நேரடுத்தி யான்கேட்டேன்
தன்ருற் குறுகுமினித் தான். (53)

உன்னையுங்கேட் டுன்னுடைய வூற்றமிக்க சேனைநிலை
தன்னையுங்கேட் டாமுனிவர் சாற்றியபின் கன்னமுடன்
மூக்கரிந்தன் றங்கை மொழியறிந்த தம்பியரைத்
தாக்கறிந்து கொன்ருன் றவன். (54)

ஆயிரங்கை யானின்கை யைநான்கைப் பற்றிநெய்த்தோர்
வாயிறங்கத் தீயசிறை வைத்தவனைக் காயும்
வயிரத்தோள் கொண்டான் வலிதொலைத்த மாற்றம்
செயிருற்ருேய் சிந்தைகொள்ளா தென். (55)

Koviloor Digital Library

தடிக்குமரா மந்திரத்திற் கட்டவரு முன்னே
யடுக்குமடா தென்ற வறிவிட் டிடிக்குனர்கள்
இல்லையுள்ளா ருன்னை யெடுத்து முடிக்குனர்கள்
வல்லையென்றாற் பின்னென் வரும். (56)

என்றறத்தைக் கேட்டா னிருபதுகண் டீயெரிய
நின்றாற்றி மேற்கிளம்பி நேர்ந்தடுத்தான் கன்றிப்
படர்ந்தெடுத்த காமப் பகுதிக்கு மேலே
கடந்தெடுத்த சீற்றக் கனல். (57)

வளர்ந்துவரு நாணத்தான் மாதிரஞ்சேர் தோளன்
கிளர்ந்துவரு கோபத்தாற் கிட்டிப் பிளந்திவளைத்
தின்பனென வுற்றான் சினத்தினொடு காதலடத்
துன்பமுனஞ் சிந்தையுற்ற து. (58)

அன்னதொரு காலை யனுமா னருந்ததிநேர்
என்னறிவா மன்னைக் கிடர்விளைக்கி னன்னெறியில்
நீசற்கென் செய்கை நிலைத்துழக்கி யன்னவனை
வீசற்கென் னென்றான் விரைந்து. (59)

தனியிலங்கு பத்துத் தலைகளையுந் தாக்கிப்
பனியிலங்கை வேலைவிழப் பாச்சிப் புனிதத்
தவத்தணங்கைக் கொண்டடுத்தல் சார்பென் றிருந்தான்
பவத்திணங்காச் சிந்தைப் பரன். (60)

ஆண்டரக்கன் கோபத்தி னண்ட மழிப்பவனு
மூண்டரக்க நின்ற முழுத்தீயைத் தாண்டலுற்ற
காதலெனு நீத்தங் கடுகி யணைத்ததனால்
நீதமிலான் சாற்றும் நினைத்து. (61)

கொல்வனென்றே னுன்னைக் குமைத்தலின்றி விட்டதற்கும்
சொல்வனின்றே வன்மை துயருடையாய் வெல்வனென்றல்
வெல்லாத தென்பதுவும் வேண்டும் விளையாட்டே
யொல்லாத தொன்றெனக்குண் டோ. (62)

Koviloor Digital Library

ஒன்றுரைக்கக் கேளா யுனக்குறிய நாயகனைக்
கொன்றரக்கி னீயிறக்கிற் குற்றமென்று மென்றனுயிர்
நீங்குமெனத் தேர்ந்து நினையெடுத்தேன் வஞ்சமதா
லாங்குமறிந் தென்முனிற்பா ரார். (63)

மானென்று சென்றலைந்த மானுடவ ரீண்டடுக்க
யானென்று கேட்கி னிசைவுண்டோ தேனென்ற
சொல்லுடையாய் முத்தேவர் தோற்றுடைவ தன்றியென்முன்
வெல்லுடையா ராதல் வியப்பு. (64)

வென்றே ரிருந்திடினும் வீயாதோர் நின்றிடினும்
என்றோரி னிந்திரனே யேவல்செயப் பொன்றாத
மூன்றுலகு மாள்வேன் முறையி னிவைதெரிந்த
சான்றதனைத் தேறுதென் தான். (65)

மூவர்வரு தேவர் முரணுகவே முற்றுகொற்றம்
பாவைபுரை நின்னுற் பழிபெறவாய்ப் பூவின்
மனிதருட னேற்கேன் வனிதைநினக் காகத்
தனிதமுட னேவல்கொள்வேன் சார்ந்து. (66)

சிறுமனித ரோடெதிர்த்தல் சீரியதன் றேனு
முறுமுனிவு முற்குவப்ப தொன்றேற் குறியவரை
எற்றிக் கொணர்த லியல்பன்றா மென்றாலும்
பற்றிக் கொணர்வதனைப் பார். (67)

பதமனித ரென்றாலும் பைந்தொடிநிற் றந்த
உதவி யுயிர்முடித்தற் கொல்லார் சிதைவுபெறச்
செய்த லுனக்குச் சிறந்த தெனநினைக்கி
னைதலுறச் செய்வே னணித்து. (68)

பள்ளவர லோக்கும் பதியாம யோத்தினண்ணி
யுள்ளவரைச் சேர வுயிர்குடித்து வெள்ளமுற்ற
நீர்மிதிலை யோரை நிரைகெடுத்துத் தின்பனுனை
தேர்கிலையென் சீற்றத் திறல். (69)

Koviloor Digital Library

ஈதுரைத்துப் பொங்கி யெடுத்தகையின் வாளோக்கித்
தீதுயிர்க்குச் செய்நாளுந் திங்களிரண் டாதல்
பகுத்துவைத்த நின்மனத்திற் பாரென் றூரப்பி
யகத்துவைத்துச் சென்றா னகம். (70)

அஞ்சவித்தோ வன்றி யறிவுறத்தான் தேற்றுவித்தோ
வஞ்சிசித்த மென்பால் வசித்திடுவீர் எஞ்சுவித்தால்
நஞ்சுமக்கு நானென்று நண்ணு மரக்கியர்க்கு
வெஞ்சினத்தான் சொன்னான் விரைந்து. (71)

போய மதியரக்கன் போகவரா நுங்கிவிட்ட
தூயமதி யாளைத் தொடர்ந்தடுத்தார் தீய
வரக்கியர்கள் சிந்தை யழன்றுரைப்பார் சந்த
விரைக்குழலி தன்னை விளித்து. (72)

முன்னின்றார் கண்கள் முழுத்தீச் சிதரவொளிர்
மின்னின்ற சூலங்கை வேலோச்சிக் கொன்மின்கள்
கொன்று குடாராரக் கோதவளைத் தின்மினென
வன்றுகுறித் தார்சிலரெல் லாம். (73)

வையமுற்ற நான்முகத்தான் மைந்தன் மகன்மைந்தன்
ஐயனுற்ற வேத மளவில்லான் மெய்யனன்பை
யுன்னிடத்தில் வைத்ததலா லுண்டோ வவற்கிழிவு
கன்மனத்தா யென்றார் கனன்று. (74)

மண்ணினுற்ற மானுடவர் மற்றும் வழியுடனே
பெண்ணினுற்றார் மாயும் பிணிசெய்தாய் புண்ணினுற்ற
கோலிட்டா லன்னசொல்லிக் கோபத் தழல்விளைக்க
மேலிட்டா யென்றார் விரிந்து. (75)

புக்க வழிக்கும் புகுந்த வழிக்குந்தீ
யொக்க விதைத்தா யுணர்வில்லா யிக்கணமே
யிற்றா யினிவாழா யென்றுரைத்து நின்றுதெழித்
துற்றார் சிலர்க ளுறுத்து. (76)

Koviloor Digital Library

கொல்வா ளிவளைக் குறித்தா னரசனென
வல்வா யரக்கியர்சொல் வன்மொழியும் பொல்லாத
வல்லரக்க னேவும் மதித்தாள் வனப்பினுற்ற
நல்லறக்கண் ணுள்நலிந்த னள். (77)

இன்னவர்க ளென்னவகை யெய்த வெதிரடுத்து
முன்னவகை யென்கனவை முற்றுவித்தே னன்னவகை
பேதுறுவீர் செய்வீர் பிழையென்றாள் முச்சடையுந்
தீதொருவி நின்றாள் தெரிந்து. (78)

அறிந்தார் திரிசடையி னன்ற மொழியைப்
பிறிந்தார் சினமடங்கிப் பேர்ந்து செறிந்தாய
தீவினையா மன்னர் தெறலெண்ணார் செய்யவளு
மாவிநிலை நின்றா ளயர்ந்து. (79)

சிந்தனைப் படலம் முற்றிற்று.

உருக்காட்டு படலம்.

காண்டற்கா நன்மைதரு கால மிதுவாகுந்
தூண்டற்காஞ் சிந்தையினர் தூங்கலார் வேண்டற்காத்
துஞ்சா ரெனவிஞ்சை சொற்றா னவர்களெலாந்
துஞ்சார தானார் துயில். (1)

துஞ்சாதார் துஞ்சத் துயரடுத்த தோகையவள்
நெஞ்சாலொன் றெண்ணு நிலையில்லா ளஞ்சாநின்
றுன்னுவாள் பன்னாளு மோய்ந்த துயரத்தாள்
பன்னுவா ளன்பிற் பரிந்து. (2)

கருமேகம் காராம் கடலனைய கண்ணன்
தருமே தனியுயிரைத் தானே யுருமேறை
யொத்தசிலை நாணொலிதா னேங்கிவரு மேயுரையாய்
சித்தமெனை யென்றாள் தெளிந்து. (3)

Koviloor Digital Library

கல்லா மதியே கதிர்கா னிலவொளியே
செல்லா விரவே செறிபிருளே யெல்லாம்
எனைமுனிவீர் சற்று மெனைநினையா வள்ளல்
தனைமுனியீ ரென்று டவித்து. (4)

தழல்வீச வுற்ற தனிவாடை யேநீ
ரழல்வீரென் னாவி யறியிர் நிழல்வீரை
மேனிகொண்ட வள்ளலொடு மேவிவரு காணீரென்
ஆனிகண்டுஞ் சொல்லாதென் னாம். (5)

வாராதி ரான்வரதன் வள்ளலெனும் வண்மையினு
லோரா யிரமிடர்க்கு மோய்வுடுக்கேன் தீராத
வல்லமையு நிற்கே வருவா யரக்கரடும்
வில்லமையுங் கையாய் விரைந்து. (6)

தருவொன்றுங் கானடையத் தாங்காச் சரணி
வரவொன்று நாள்சிலவாம் வாடா திருவென்ற
வின்னருளை முந்தி யிரங்கா மனமென்னோ
மன்னருளென் னென்றுண் மருண்டு. (7)

பேணுகின்ற நல்லுணர்வே பேராது சேருயிரே
நாணுகின்ற தென்னீரென் னையகனைக் காணும்
துணையுங் கழியீர் துயரடுத்த வெற்கே
யணையும் பழியை யறிந்து. (8)

முடியா முடிமன் முடிந்திடவு முற்று
படியாவுந் துன்பிற் படுத்து மடியா
நெறியடுத்துக் காட்டி னெருங்குங் கொடியார்
குறியடுத்துக் காப்பதென்னு கும். (9)

என்றென் றுயிர்சோர்ந் திரங்கி யிரிந்தயர்வாள்
மின்றன் மருங்குன் விளங்கிழையா ளொன்றென்
னுயிருண்டே லோங்குமிட ரொன்றுது பொன்றிற்
செயிருண்டோ வென்று டிகைத்து. (10)

Koviloor Digital Library

பொறைகழலா தாருயிரைப் போற்றினேன் தேசார்
அறைகழலாற் காணவரு மாசை நிறைகழலும்
வஞ்சர்நின்ற மாநகரில் வந்துசிறை யுற்றவெனை
அஞ்சலென்றற் கென்னும் அறம். (11)

உன்னினர்கள் வேறென் றுணர்ந்து மிருந்தவர்கள்
சொன்னவெலா மென்செவியிற் றூங்கவுந்தா மன்னுயிரைக்
காத்தரக்குங் காலங் கடுஞ்சிறையி லேற்றவென்போ
லேத்தரக்கி மார்க ளெவர். (12)

சொற்பிரியா விப்பழியைச் சோர்வின்றி யான்சுமந்தேன்
நற்பிறப்பும் நாணும் நயத்தவே கற்பிருக்கு
மங்கையர்கள் துங்க மருவுமில்லைத் தாமிழந்தா
ரெங்கயர்வா ரென்போ லிரிந்து. (13)

பிறனில்லைப் பேணிவரு பெண்ணைப் பெறுதல்
திறனல்ல யென்றிறைவன் றீர்ந்தா னறனல்ல
செய்தியற்றி வேறென் செயற்காற்றி னேனுயிரை
வெய்தியற்றி யானே விழைந்து. (14)

எப்பொழுதி னிப்பழியு மெய்தியதோ வேற்றவுயிர்
அப்பொழுதே தப்பநின்ற வாணையே னொப்பாப்
பெருமருவை நல்லுலகம் பேச விருந்தேன்
திருமருவ வென்று சிறந்து. (15)

அன்பழிந்த சிந்தையுடை யாடவரு நாடவரார்
வன்பழியைத் தாங்கும் வலுவுடையார் துன்பழியு
நற்குலத்திற் றோன்றிவரு நானென் பழிதுடைப்பேன்
விற்குலத்தாற் கென்னோ விருப்பு. (16)

வஞ்சனையா மான்பிடிக்க மன்னவனைப் போக்கியெந்தன்
மஞ்சனையான் வைது வழிக்கொளென்று நஞ்சனையான்
மாநகரின் வந்திருந்த மட்டியுயி ரோடிருக்கின்
ஏனையுல கஞ்சொல்வ தென். (17)

Koviloor Digital Library

வல்லியலும் வீரர் வடுவடுத்தல் தீர்ப்பவர்தாம்
வில்லியலும் போரை விடுத்திடினு மில்லியலும்
நல்லறத்தைத் தாண்டி நடந்த வெனதுபழி
சொல்லறத்தார்க் கெங்காந் துணை. (18)

வருந்தலிலா மானமதின் மானனைய மாட்சிப்
பெருந்தவத்துப் பெண்களெதிர் பேதை கருந்தனியா
மாமுகிலை விட்டு வருகள்வ ரூரிருந்த
கோமுகியென் றேசநிற்ப னோ. (19)

அற்பணியும் வள்ள லரக்கர் குலமறுத்து
விற்பணிகொண் டாஞ்சிறையின் மீட்டநா ளிற்பணிக்குத்
தக்கவணீ யல்லையெனிற் சார்ந்தகற்பை யெப்படியோ
மிக்கவணிற் காட்டும் விதம். (20)

ஆதலதாற் சாத லறத்தா ரெனக்கடுத்த
சாதலதைத் தாங்குவார் சாம்பினு ரீதல்து
வேறிடமு மில்லையென மிக்கடுத்த மாதவிப்பேர்
கூறிடமுன் சென்றாள் குறித்து. (21)

கண்டா னனுமான் கருத்தைமுற்றுங் கண்டுபயங்
கொண்டா னனிநீண்டக் கூசுவான் அண்டரணி
நாயகன்றன் றூத னனுகினே னடியென்று
தாயடியைச் சார்ந்துபணிந் தான். (22)

அடைந்தே னடியே னருட்கடலி னாணை
குடைந்துலகு தேடிவரு கொட்பான் மிடைந்தவர்க
ளெத்தனையோர் யானறத்தி னேற்ற மடைந்ததனால்
நத்தனையே கண்டே னயந்து. (23)

ஈண்டிருந்தாய் நீதா னிடர்க்கடலி னுற்றவள்ள
லாண்டிருந்தான் றேறா னதற்குநிபம் வேண்டும்
அரக்கர் வருக்கமுட னன்றே யழியா
திருக்கவர லென்றா னெடுத்து. (24)

Koviloor Digital Library

ஐயுறுதற் கேற்கா தடையாள மாரியனல்
மெய்யுறுதற் கேற்றவுரை வேறுமுள கையுறவாம்
நெல்லிக் கனிபோ னிகரின்றிக் காண்பதுவே
சொல்லிற் பெருமையுடைத் து. (25)

என்றிறைஞ்ச நோக்கி யிரக்க மொடுசினத்தா
ணின்றிறைஞ்சு மின்னு னிருதனலன் வென்றபொறி
யானுகும் விண்ணவனே வாமறிவி னிற்சிறந்த
மானுகு மென்றான் மதித்து. (26)

அரக்கனிவ னுக வமரனிவ னுகக்
குரக்கினத்த னுகக் குறுக்கு மிரக்கமுடன்
எம்பிரா னும மெடுத்தேத்தி னுனுயிரைத்
தம்பிரா னுஎன் றனித்து. (27)

என்னநின்று நோக்கி யிரங்கு மெனதுள்ளம்
துன்னநின்ற மாயரக்கர் தோற்றமிலன் வன்னமறை
நேரவரு சொல்லா னிகரடுக்கா னென்றறிந்து
வீரவர யாரென்றாண் மின். (28)

ஆயன்பு கொண்ட வவனுரைப்பா னன்னைநினைத்
தாயன் பிரிந்தபின்னர்ச் சூழ்துணைவன் காய்கதிரின்
செல்வனெனப்பான் சுக்கிரிவன் சேரும் கவித்தலைவன்
சொல்வனப்பான் மெய்மைபடைத் தோன். (29)

மற்றவன்றன் முன்னேன் வலத்தரக்கன் வாற்கட்டி
னிற்றுகத்தான் பாய்ந்த விசையுடையான் சுற்றிவரு
நாகந்தே யக்கடலி னன்மந்தி ரஞ்சுழற்று
மாகந்தாந் தோளடுத்த வன். (30)

அன்னவனை யைய னனலம்பி னுவிகொண்டு
பின்னவனை மன்னவனுப் பேணினனம் மன்னவற்கு
மந்திரத்தேன் வாயு மதலை யனுமனென்பேர்
சுந்தரத்தா யென்றான் றுதித்து. (31)

Koviloor Digital Library

எழுபது வெள்ளமென வேற்றபடை வேலை
தழுவிக் கடக்கலுற்ற தாள குழுவினவுன்
னுதன் குறிப்பறிந்து நன்றுபுரி வானரங்க
ளோதும் வலிமையுடைத் து. (32)

துப்புற்ற வேலை சுழலு முலகமொடு
மொப்பற்ற நாக ருலகும்பர் குப்புற்றுத்
தேடிநினைக் கண்டிலவேற் சேர்ந்தபுறத் தண்டத்தும்
தேடிவரச் சென்ற செறிந் து. (33)

புன்றொழிலான் கொண்டுவரு போது துகில்பொதிந் து
குன்றுழியி னிட்ட குறியிழையால் வென்றிவரன்
வேண்டி யடியேனை வேறிருத்தித் தென்றிசையிற்
தேண்டிவர வென்றான் றெரிந் து. (34)

வெற்றிவரற் கண்ணுள் விளங்கிழையாய் நின்னிழையின்
பெற்றிவரச் சீவனிலை பெற்றதுவா மற்றையணி
காத்ததுமுன் மங்கலத்தைக் கண்ணன் பெருந்துயர்க்கு
மாத்ததுவு மேதாம் மதி. (35)

ஆயவன்றன் தன்மைநிற்க வங்கதனும் வாலிமைந்தன்
ஏயவெள்ளஞ் சேனை யிரண்டுடனே தூயவுள்ள
தென்றிசைக்கண் வந்தான் செறியிலங்கை தேடவென்ற
தொன்றிசைக்க வந்தே னுவந் து. (36)

எய்தவன்றன் சொல்லா லெழுந்த வுவகையுற
வெய்தொடுங்கு மேனிவிம்ம வேற்றவளா யுய்தல்வந்த
தென்றருவிக் கண்ணு ளிபமளித்தான் மேனிநலம்
நன்றருள்வா யென்றா ணயந் து. (37)

படியெடுத்துக் காட்டும் படித்தன்று பாங்கா
முடியடுத்த மேனிநல முற்றுந் துடியிடைத்தாய்
மன்னவய வங்கட்கு மாறுரைக்க வேறிலதா
மென்னவயஞ் சொல்வே னெடுத் து. (38)

Koviloor Digital Library

சேயிதழாம் தாமரையைச் சேணுள்ளோர் சொல்வரதும்
ஏயினதா மத்துணையு மேன்றதிலை நாயகன்றன்
சேவடிக்கு நேருவமை சேரவது காட்டுதற்கு
நாவடுக்கா தென்று னயந்து. (39)

தளங்கெழுநற் கற்பகத்தாம் தண்ணார் முகிழும்
இளங்கொடியார் நற்பவள மென்னும் துளங்கொளிசேர்
பொன்னார் விரற்கெதிராய்ப் போற்றுமிளஞ் சூரியன்றன்
மின்னார் கிரணமொக்கு மே. (40)

சிறிய பெரியனவாய்த் திங்கள் மறுப்போய்
நறியவொரு பத்திலவாம் நாட்டும் குறிகொள்
எறிசுடரும் நல்வயிர மேலா திரட்சி
அறியே னுகிர்க்குவமை யான். (41)

பொருந்து நிலனுடனே போந்துகான் சென்று
வருந்துமெனி னும்நூற்கு மாறா யிருந்தபதம்
நின்ற புவனமெலாம் நேராய்ப் புணர்வதெனின்
ஒன்றுவமை யொன்றா தொருங்கு. (42)

ஓங்கும் வளைதிகிரி யோங்க வரவரசன்
தாங்குபள்ளி யானெனினுஞ் சார்ந்துவரும் பூங்கணைக்கால்
மேவு முவமைக்கு வேறெ னவன்கொண்ட
ஆவ முவமையடுத் தாம். (43)

அறஞ்சேர் பறவை யரச னெழில்சேர்
பிறங்கெருத்தா மன்னதுவும் பேரும் மறஞ்சேர்
கரிக்கரமு.நாணும் கனஞ்சேர் குறங்கிற்
கிருக்க வருமுவமை யென். (44)

வலஞ்சுழித்து நீர்வழங்கு வான நதியின்
பொலஞ்சுழிக்கும் சொல்லரிது புன்மை நிலஞ்சுழிக்கும்
உந்திக்கு நேரா யுவம மிலஞ்சியெனச்
சந்திக்க லாகுந் தகைத்து. (45)

Koviloor Digital Library

பொருவா மரகதத்தாம் பொன்மால் வரையும்
வெருவா விரிவாக மேவிப் பிரிவறத்தாம்
நோற்றதனா லன்றோ றுவலுந் திருவுறையும்
சாற்றுவதார் மார்பின் தரம். (46)

நீடார்ந்த கீட்டிசையி னின்ற திசையானைக்
கோடார்ந்த கைசிறிது கூறவரும் தோடார்
மலர்போற் சுரும்புசுற்று மன்னன் தடக்கைக்
கிலைவே றுரைக்கவுல கில். (47)

பச்சிலையார் தாமரையைப் பன்னுபகல் கண்டதெனக்
கைச்சே ருகிர்தான் கனகனென்பான் வச்சிரத்தாம்
ஆக்கை வகிர்ந்தசெயற் கானதனாற் தானுவமை
நீக்கவரு மன்னதுவே நேர். (48)

திரண்ட வொளியின் திருவுடைய சேக்கை
முரண்ட புயத்துவமை மொய்ம்பார் வரையேல்
விருப்புவர வாந்துவமோ விற்றழும்பு பொற்போ
பொருப்புவமை யாமோ புகல். (49)

கடற்றுறையார் சங்கமொடு கன்னிக் கமுகும்
மிடற்றுவமை சொல்வார் மெலியோ ருடற்படுதற்
கொண்ணுமோ சொல்லற் குரக சயனனிடம்
நண்ணுமால் சங்கிருக்க நாம். (50)

அண்ணலொத்த மாமுகத்திற் காகுங் கமலமெனிற்
கண்ணிணொத்த வேறெவைதான் காட்டுகேன் தண்ணமதி
என்றுரைத்த் லென்னா மெழுந்து மெலிந்துவரும்
நன்றுரைத்தற் கென்னாம் நலம். (51)

ஆரமுற்ற தோளமல னண்ணல் விமலசெவ்வாய்
நாரமுற்ற செங்கமலம் நாளத்தாஞ் சேரும்
அமுதா மெனினு மடுத்தற்கென் மூரல்
கமழாப் பவளமென்னாங் காண். (52)

Koviloor Digital Library

முத்து நிலவின் முறியோ முறையறத்தின்
வித்து முளைத்தெழுந்த மேன்மையதோ நத்திவரு
சொல்லுக் கடுத்துவமை தோன்றுமோ வேன்றவரு
பல்லுக் குவமையெங்காம் பார். (53)

எள்ளவிலா விந்திரநீ லத்தி னெழிலமைந்த
வள்ளலுடை மூக்கினுக்கு மன்னுவமை கொள்ள
வுலகிலிழி வாம்பொருள்க ளொக்குமோ மிக்கா
மலகிலெழி னீயறிந்தா லாம். (54)

கரன்படையி னுங்கவந்தக் கானமதைப் பேய்கள்
திரண்டிழுக்க நின்ற சிலைக்கை யரன்றனைநேர்
அன்னான் புருவ மடுத்து வருமுவமை
யென்னா லுரைப்பவரற் கென். (55)

வருநாளிற் றேன்றும் மருவளர்வு தேய்வும்
மருவாது நித்தமொரு மாண்பாய்ப் பெருகுமெழில்
முற்றிப் பிறையாய் முழுநாளு நிற்குமெனில்
நெற்றிக் குரைப்பாம் நிகர். (56)

நீண்டு குழன்றிருண்டு நெய்த்து நெடுநீலம்
பூண்டு கடைசுருண்டு பூபுகையும் ஆண்டடுக்க
வேண்டுதலில் லாது விளங்கு சடைக்குவமை
ஈண்டுமழை யென்னு மியம்பு. (57)

திருமகளும் பூவும் சிறந்தபுவி யேழும்
பெருமையுறு போதும் பிறகும் அருமைகொண்டு
கான மடுத்துங் கனஞ்சேர் நடையதனை
யானை நடைக்குவமை யா. (58)

இன்னமொழி கேட்டா ளெரியினிட்ட நன்மெழுகாத்
தன்னையறி யாதயர்வா டாள்வணங்கி மன்னவரன்
சொன்னகுறி யுண்டதனைத் தோகைகே ளென்றுரைக்கும்
கன்னகுதோள் வீரன் கரைந்து. (59)

Koviloor Digital Library

நடத்த லரிதாகும் நாட்சிலவாந் தாயர்க்
கடுத்தபணி செய்யென்ற வச்சொற் குடுத்ததுகில்
நன்றதனைக் கொண்டு நணுகுமுயிர் நாயகிக்கு
நின்றதனைச் சொல்லென்று னேர்ந்து. (60)

நீண்டமுடி வேந்தனருள் நீந்தா நெடுஞ்செல்வம்
பூண்டதனை நீங்கிநெறி போதுறுநாள் ஆண்டநகர்
ஆரையொடு வாயி லகலாமுன் கானெதென்றாள்
சீரையெடுத் தோது தெரிந்து. (61)

தேரான் சுமந்திரனுந் தெள்ளமுத வின்மொழியை
நேராகக் கேட்ப நிகரில்லாள் சீராகும்
கிள்ளையொடு பூவை கிளத்தல் கிளவென்னும்
பிள்ளைதிறம் பேசென்றான் பின். (62)

மீட்டுரைப்ப தென்னையென மெய்ப்பேரைத் தீட்டியது
தீட்டரிய செய்கையது செவ்வேதான் காட்டிதென
நேர்ந்தே னெனக்கரத்தி னீட்டினு ளாழிதனை
வார்ந்தகுழல் கண்டாள் மதித்து. (63)

இறந்தார் பிறந்தபய னெய்தினர்கொ லென்கோ
மறந்தா ரறிந்துணர்ந்த மாண்போ துறந்தவுயிர்
வந்தவித முய்ந்தகொலோ வாணுதலி சிந்தைநலம்
எந்தவிதஞ் சொல்வா மெடுத்து. (64)

இழந்த மணியரவ மெய்தியதை யொத்தாள்
பழந்தனந்தான் கைவந்த பாங்காள் குழந்தை
யுயிர்த்த மலடிக் குவமையினாள் சிந்தை
அயிர்த்த மலரா ளறிந்து. (65)

வாங்கித் தனக்குவையில் வைத்தாள் சிரமதனுல்
தாங்கிமலர்க் கண்ணொத்தித் தன்வரைத்தோள் வீங்கி
மெலிந்தாள் குளிர்ந்தாள் வெதுப்போ டுயிர்த்தாள்
மலர்ந்தாங் குழலாள் மதித்து. (66)

Koviloor Digital Library

மோக்குமுலை வைத்து முயங்கு மொளிர்நன்னீர்
நீக்கிநிறை கண்ணால் நெடுநீளம் நோக்கும்
நுவலக் கருதும் நுவல்கில்லா ளொன்றும்
நவநித் திலநகையி னாள். (67)

நீண்டவிழி நேரிழைமின் னேர்ந்த நிறமெல்லாம்
பூண்டதொளிர் பொன்னனைய பொன்னிறமே யாண்டகைதன்
மோதிரந்தான் முன்னடுத்த முற்றுங் கவர்தலினால்
வேதிகைசெய் நன்மணியா மே. (68)

இருந்து பசியா லிடருழந்தார்க் கென்று
மருந்து மமுதா யறத்தார் விருந்துமென
லாகியது வீயுமுயி ரன்றடுத்து மீளுமுயி
ராகியதா மாழி யடுத்து. (69)

இத்தகைய ளாகியுயி ரேமுறவே தான்விளங்கும்
முத்தநகை யாலி முலைமுன்றில் தத்தியுக
மென்குதலை தள்ள விழைந்து விரித்துரைப்பாள்
நன்குதலை யானவச னம். (70)

மும்மை யுலக முதல்வற்குத் தூதாகிச்
செம்மையுயிர் தந்தாய்க்குச் செய்வதுண்டோ வம்மையுமா
யத்தனுமாய் வந்த வருட்கடலே யெற்கடுத்து
நத்துமிசை தந்தாய் நயந்து. (71)

பாழிப் புயவீர பாங்கா யெனையளித்த
வாழிப் புயநன் மனத்தவனெனில் ஊழி
யொருபகலா யோங்க வுவந்திருப்பா யென்றாள்
மருவகலாக் கூந்தலுடை மான். (72)

மீண்டு முரைக்கலுற்றாள் மேலோ யுனைவீரன்
தேண்டியெங்ஙன் தம்பியொடு சேர்ந்ததெனை யாண்டடுத்தார்
யாருரைக்கத் தேர்ந்தா னடுத்த செயலெல்லாம்
சீருரைக்க வென்றாள் தெளிந்து. (73)

Koviloor Digital Library

உழைக்குலஞ்சேர் தீய வுருக்கொண்மா ரீசன்
இழைக்குலஞ்சேர் மார்படுத்த வேந்தல் பிழைத்தவிலா
வெஞ்சரத்தால் வீவான் விழைந்தெடுத்த மாயவுரை
சஞ்சலத்தை யுற்களித்த தாம். (74)

இக்குரலை மாறா யிறைவனிட்ட வில்லொலியாம்.
மெய்க்குரலைக் கேளாறும் மேல்விதிதான் புக்கவனும்
வேகமுட னோடிவரும் விற்பிடித்த தம்பிதனைச்
சோகமுடன் கண்டான் றுதித்து. (75)

கண்டிளைய வீரன் கருத்தை முகத்துணர்ந்து
புண்டரிகக் கண்ணான் புகல்கேட்டான் வண்டுறையும்
சாலைவந்து நின்வடிவு சாரா னுயிருண்டு
வேலைவந்த துன்ப மிகும். (76)

தேண்டிநேர் கண்டடைந்தேன் தீதிலனெங் கோன்வாழி
பூண்டவுயிர் பொய்யுயிராய்ப் போற்றநின்றா னண்டகைதன்
நெஞ்சகலாய் நீயிருக்க நேசனுயிர் நீங்கலுண்டோ
மஞ்சகலாக் கூந்தல் மதி. (77)

அன்னிலையாம் வள்ள லடுத்த நினைக்காணான்
தென்னிலையா மாவரைக டேடியே யின்னுயிரி
லெந்திரத்தைப் போல்வா னியைந்த சடாயுவிடை
யந்தரத்தைக் கண்டா னடுத்து. (78)

வந்தவனை நோக்கி வலியதுயர் கொண்டவள்ள
லெந்தைவினை யென்னையெனவேற்றரக்கன் சிந்தைகொண்டு
நன்னுதலாய் செய்த நவையனைத்துங் கேட்டவுடன்
பன்னுதலார் வந்ததுகோ பம். (79)

சீறித் திரியுலகுந் தீய்ப்ப னெனவடுக்க
மாறிச்செய் குற்றமொரு வன்புரிய வேறுலகம்
வாதையுறச் செய்தல் வழக்கோ வெனச்சீற்றம்
தாதையுரை செய்துதடுத் தான். (80)

Koviloor Digital Library

அன்புடையா னின்ன வறிவிக்க வாரியன்றன்
வன்படையா னெஞ்சின் வருத்தமுன்னி யென்புடைய
ஏங்கி யிரங்கி யெடுத்ததுன்பத் தோடுவகை
தாங்கி யிருக்குமுளத் தாள். (95)

நையுற்ற சிந்தையினள் நாட்டந் தருவாரி
தொய்யற் சுமந்த துணைத்தனத்தா ளையவென்னை
யொப்பரிய பேரளக்க ரோங்கி யுயர்ந்தடுத்தா
யெப்பரிசி னென்று னெடுத்து. (96)

சுருங்கிடைநின் னையகனுர் தூய சரணம்
ஒருங்குணர்வார் மாயை யுளத்தாம் பெருங்கடலைத்
தாண்டியுயர் பெற்றியெனத் தாவினே னிக்கடலை
வேண்டியுயர் காலின் விரைந்து. (97)

இத்திணையா மாக்கையினு லேற்ற கடலதனைத்
தத்திணையா நற்றவத்தின் சார்புடைத்தோ சித்தி
தரவடுத்த செய்கையதோ சாற்றென்று னெஞ்சிற்
கரவடுத்தோர் காணுக் கனி. (98)

சுட்டியர நின்றான் தொழுதெடுத்த கையுடையான்
விட்டியருந் தோளான் விசும்பின்மே லெட்டி
முகடெய்து மென்ன முனிவ ருரைக்கும்
அகடெய்தா னின்று னறிந்து. (99)

ஒத்துயர்ந்த நற்கனக வொண்கிரியி னேங்கிவளர்
மெத்து மரமடுத்து மின்மினிகள் மொய்த்துளவா
மென்னமுன்னும் பின்னு மிருந்துளவாந் தாரகைகள்
துன்னவருங் கேசத்தின் சுற்று. (100)

கண்டலத்தி னுலறியுங் காட்சி கடந்துடையான்
விண்டலத்தின் மேலும் விளங்குவான் மண்டலத்தா
மன்னுமதி மன்சுடரை மாறுகொண்ட குண்டலங்கள்
மின்னுமொளி கொண்டுநின்றான் மேல். (101)

Koviloor Digital Library

எண்டிசைகள் சூழுலக மெல்லா நிறையுயிர்கள்
கண்டிசையத் தன்னுளேக்கும் காட்சியாய் அண்ட
மதினுறையுந் தேவ ரனைவர் களையு
மதிவதனன் கண்டான் மதித்து. (102)

எழுந்துயர்ந்த சேயோ னிரண்டு பதமு
மழுந்த விலங்கை யலையில் விழுந்து
நிலமிசையிற் சேர்ந்த நெடிய திரைகள்
புலமிசையு மீனம் பொறுத்து. (103)

மஞ்சம் புரைகுழலாள் மன்னுதலைக் கற்புடையாள்
கஞ்சம் புரைகழலுங் காணுதாள் துஞ்சும்
அரக்கரென வாய்ந்தா ளகலு முருவைக்
கரக்கவென வேய்ந்தாள் கசிந்து. (104)

முழுவுலகா மிவ்வுருவை முற்றுங்கண் காணும்
குழுவுலகி னில்லையெனக் கூறி எழுவி
னெழிலிலங்கும் வள்ள லியைந்த துணைத்தோள்
தழுவிநின்ற தன்மைசமைந் தாள். (105)

ஆண்டான வீர னருளிதுவே யாகுமென
மீண்டான் விசும்படுத்து மேற்செல்வான் காண்டலுக்கா
யொத்துருவங் காட்டினு னெங்கும் விளக்கனையாள்
சித்தமுடன் சொல்லுஞ் சிறந்து. (106)

இடந்தா யுலகை யெடுத்த வரவைக்
கடந்தா யெனினுங் கணக்கோ நடந்தாலும்
நாணுக் கடலடுத்து நாட்டிக் கடத்தலென்றின்
மாணுக்கற் கென்ன மதிப்பு. (107)

ஆழி நெடுங்கையா னுண்டகைமெய்க் கீர்த்திதனை
யூழி பலநிறுத்தற் கொத்தவனீ பாழியதோள்
வீரவர வுற்கேற்ப வெற்பிலங்கை யேழ்கடற்கும்
தூரவிருக் காதெனைத் து. (108)

Koviloor Digital Library

எவ்வழியி னுற்ருனி யாதுறையு ளாவதெனச்
செவ்வழியான் சொல்லான் திறல்விதியா லோவ்வும்
கழுகரச னுற்ருன் கருதும் பதத்தை
யெழுகவலை யுற்ரு ரிவர். (81)

அயர்த்தறிதிற் றேறி யடுத்ததா தைக்குச்
செயத்தகுதி யாங்கடமை செய்து கயத்தரக்கன்
தானங் கடிதடுக்கச் சார்ந்தமலை யாறுமுதற்
கானங் கடிதடுத்தார் கள். (82)

அவ்வழியிற் காணு தயர்ந்தறிதிற் றேறிவரு
செவ்வழிக் கண் ணீர்வழியைச் சேறுசெய்ய வெவ்வழலி
னுற்றமெழு கென்ன வுருகி யறிவழிய
விற்றவுரை சொல்வா னெடுத்து. (83)

கன்மத்தை ஞாலங் கடத்த லரிதாகும்
பொன்மொய்த்த தோளான் புலன்வேருய் நன்மத்தை
நாகத் தயல்சூடும் நம்பனென வுன்மத்த
ஞகத் தயங்கு மயர்ந்து. (84)

போதடுத்த போது புனலாடல் பொய்யாமோ
தீதடுக்கா தென்பாலிற் றேடிவந்து கோதா
வரியே தருவாய் வழங்கலையேற் றீயா
யெரிவாயென் றேற்ரு னிகழ்ந்து. (85)

குன்றே குறித்தடுத்தாய் கோமளத்தாங் கொம்பரன்ன
வென்றேவி யைக்காட்ட வில்லையெனி லொன்றேயென்
னம்படுக்கு முன்னே யழித்தற் கெனச்சினப்பான்
கம்படுக்கு முன்னைக் கரன். (86)

பொன்மா னுருவாய்ப் புரிமாயை யாலன்றே
என்மா னுருவ மிலையென்றே நன்மான்
கலைநோக்கிச் சிந்தை கனன்ரு னுரைக்கும்
வலைநோக்குங் கண்டத்த வன். (87)

Koviloor Digital Library

வேறுற்ற மாமனதான் விம்ம லொருவாராய்
ஆறுற்ற நெஞ்சனுயி ராந்தம்பி கூறுற்ற
சொல்லெடுத்த நன்மருந்தாற் றேற்றுந் துயர்ப்பிணிபோய்
வில்லெடுத்து வந்தான் விரைந்து. (88)

வந்தா னிளையவனும் வான்மணியின் கான்முளையாம்
நந்தா விளக்கினெங்கள் நாயகன்வாழ் சந்தார்
தடங்கொண்ட குன்றிற் றவம்பெருக நட்டான்
வடங்கொண்ட பள்ளி வரன். (89)

உண்டாய தெல்லா முணர்த்த வரனுள்ளம்
எண்டா னிழந்துவரு மெல்லைதனிற் கண்டானும்
உன்னிழையாங் காட்ட வுயிர்வந்த தன்னவற்கு
மின்னிழையா யென்றான் விழைந்து. (90)

தணிகின்ற நம்முரையின் தன்மையிது வென்னிற்
றுணிகொண்ட வேலான் றுயர்நின் னணிகொண்ட
போதமுதங் கொண்டு புரிகினுமா றாத்துயரம்
நீதிவரன் கொண்டா னினைந்து. (91)

சிந்தைநொந்து தேறிச் சிறந்தமலைக் கப்புரத்தின்
வந்துயர்ந்த குன்றடுத்தான் வாலியென்பா னிந்த
விராவணனை வாலி னிறுக்கி வரையார்
தராதலங்கள் தாவியடைந் தான். (92)

ஆயானை யோரம்பி னாருயிரை வாங்கியன்பிற்
றூயானைச் சூட்டிமுடி தொன்மழைக்கா யாயவரு
திங்களொரு நான்குஞ் செழித்த மலையிருந்தான்
பங்கயனை யாக்கும் பரன். (93)

பிற்கூடு சேனை பெருந்திசைகள் கொண்டளக்க
விற்கூடு நன்னுதலாய் மேவனின்னைத் தெற்கூடும்
ஏவினா னென்னை யெனத்தா னெடுத்துரைத்தான்
தேவினான் செய்கை தெரிந்து. (94)

Koviloor Digital Library

அன்புடையா னின்ன வறிவிக்க வாரியன்றன்
வன்படையா நெஞ்சின் வருத்தமுன்னி யென்புடைய
ஏங்கி யிரங்கி யெடுத்ததுன்பத் தோடுவகை
தாங்கி யிருக்குமுளத் தாள். (95)

நையுற்ற சிந்தையினுள் நாட்டந் தருவாரி
தொய்யற் சுமந்த துணைத்தனத்தா ளையவென்னை
யொப்பரிய பேரளக்க ரோங்கி யுயர்ந்தடுத்தா
யெப்பரிசி னென்று ளெடுத்து. (96)

சுருங்கிடைநின் னுயகனுர் தூய சரணம்
ஒருங்குணர்வார் மாயை யுளத்தாம் பெருங்கடலைத்
தாண்டியுயர் பெற்றியெனத் தாவினே னிக்கடலை
வேண்டியுயர் காலின் விரைந்து. (97)

இத்தினையா மாக்கையினு லேற்ற கடலதனைத்
தத்தினையா நற்றவத்தின் சார்புடைத்தோ சித்தி
தரவடுத்த செய்கையதோ சாற்றென்று ணெஞ்சிற்
கரவடுத்தோர் காணுக் கனி. (98)

சுட்டியர நீள்ரான் தொழுதெடுத்த கையுடையான்
விட்டுயருந் தோளான் விசும்பின்மே லெட்டி
முகடெய்து மென்ன முனிவ ருரைக்கும்
அகடெய்தா னின்று னறிந்து. (99)

ஒத்துயர்ந்த நற்கனக வொண்கிரியி னேங்கிவளர்
மெத்து மரமடுத்து மின்மினிகள் மொய்த்துளவா
மென்னமுன்னும் பின்னு மிருந்துளவாந் தாரகைகள்
துன்னவருங் கேசத்தின் சுற்று. (100)

கண்டலத்தி னுலறியுங் காட்சி கடந்துடையான்
விண்டலத்தின் மேலும் விளங்குவான் மண்டலத்தா
மன்றுமதி மன்சுடரை மாறுகொண்ட குண்டலங்கள்
மின்னுமொளி கொண்டுநின்றான் மேல். (101)

Koviloor Digital Library

எண்டிசைகள் சூழுலக மெல்லா நிறையுயிர்கள்
கண்டிசையத் தன்னேக்குங் காட்சியாய் அண்ட
மதினுறையுந் தேவ ரனைவர் களையு
மதிவதனன் கண்டான் மதித்து. (102)

எழுந்துயர்ந்த சேயோ னிரண்டு பதமு
மழுந்த விலங்கை யலையில் விழுந்து
நிலமிசையிற் சேர்ந்த நெடிய திரைகள்
புலமிசையு மீனம் பொறுத்து. (103)

மஞ்சம் புரைகுழலாள் மன்னுதலைக் கற்புடையாள்
கஞ்சம் புரைகழலுங் காணுதாள் துஞ்சும்
அரக்கரென வாய்ந்தா ளகலு முருவைக்
கரக்கவென வேய்ந்தாள் கசிந்து. (104)

முழுவுலகா மிவ்வுருவை முற்றுங்கண் காணும்
குழுவுலகி னில்லையெனக் கூறி எழுவி
னெழிலிலங்கும் வள்ள லியைந்த துணைத்தோள்
தழுவிநின்ற தன்மைசமைந் தாள். (105)

ஆண்டான வீர னருளிதுவே யாகுமென
மீண்டான் விசும்படுத்து மேற்செல்வான் காண்டலுக்கா
யொத்துருவங் காட்டினு னேங்கும் விளக்கனையாள்
சித்தமுடன் சொல்லுஞ் சிறந்து. (106)

இடந்தா யுலகை யெடுத்த வரவைக்
கடந்தா யெனினுங் கணக்கோ நடந்தாலும்
நாணுக் கடலடித்து நாட்டிக் கடத்தலென்றின்
மாணுக்கற் கென்ன மதிப்பு. (107)

ஆழி நெடுங்கையா னண்டகைமெய்க் கீர்த்திதனை
யூழி பலநிறுத்தற் கொத்தவனீ பாழியதோள்
வீரவர வுற்கேற்ப வெற்பிலங்கை யேழ்கடற்கும்
தூரவிருக் காததெனைத் து. (108)

Koviloor Digital Library

அறிவீ துருவீதே யாற்றைம் புலத்தின்
செறிவீது செய்யுஞ் செயலும் நெறியும்
நினக்கிவையா மென்னி னிகரா ரொருவர்
தனக்கிணையில் லாததரந் தான். (109)

மின்னெயிற்று வாளரக்கர் வீக்கமது மேலவற்குப்
பின்னையுற்ற தம்பிதனை பேணியதும் உன்னி
மனக்கவலை கொண்டேன் மறந்தே னினியே
தெனக்கவல மென்று ளெடுத்து. (110)

மாண்டே னெனினன்று மாயாச் சிறையினின்றும்
மீண்டே னுறுத்தாரை வேரறுத்தேன் பூண்டேன்
கருணைக் கடலுள் கழிந்தபழி யென்றான்
தருணத் தெனையளிக்குந் தாய். (111)

அண்ணற் பெரியோ னடிவணங்கி யீதுரைப்பான்
எண்ணிற் கரியகட லேற்றபடை வண்ணப்
படைத்தலைவர் வள்ளல் பணிக்கச் சிறந்தார்
கடைத்தலைவல் லேவலெற்காங் காண். (112)

வெள்ள மெழுபதுள வீரன் படைவேலைப்
பள்ள மொருகையள்ளும் பான்மையதோ கள்ள
வரக்க ரிலங்கை யறியா நிலையாய்க்
கரக்க விலங்கியது காண். (113)

வாலி யிளவலவன் மைந்தன் வயக்குமுதன்
நீலனிட பன்பனச னேர்சாம்பன் காலனையும்
காயும் வலியர் கருது புகழுடையர்
ஆயுங் கவியகட லார். (114)

தம்பனொடு தூமன் சதவலி தாமென்போர்
இம்பருல கம்பரிப்ப ரேற்றவள்ளல் அம்பி
னுதவு தலைவர்க் குறையிடுதற் கேலும்
கறவும் படையரக்கர் கள். (115)

உருக்காட்டு படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

சூளாமணிப் படலம்.

உண்டுதுணை யென்ன வுளதோ வுலகினம்மா
புண்டரிகை யின்னல் புரிகின்றாள் அண்டர்முதல்
நாயகன்ற ஞவியிவள் நான்கொண் டணைவதுவே
நேயமென்றான் சிந்தை நினைந்து. (1)

கேட்டி யடியனுரை கேளாரை வேரறுத்து
விட்டியடல் பொருளோ வீரன்முன் காட்டிநினைப்
பாதமடுத்துப் பணிவேன் பன்னுந் துணிவென்றான்
சாதமடுத் துப்பணியா தான். (2)

பொன்றிணியு மென்கொடியே போற்ற வளர்கேசம்
துன்றுபுய மண்டிற் றுயரேதா மின்றுயிலைச்
செய்வாய்ந் திமைப்பிற் செறிவேன் பரமனிடம்
மெய்வாய்ந்த தாய்தா விடை. (3)

அறிந்தரக்கர் மத்தி யடுப்பா ரெனிலோ
முறிந்திறக்கச் செய்து முடிப்பே னெரிந்தகுழல்
நின்னிலைமை யொன்று நெடியோ னிடம்புகலோன்
என்னிலைமை யென்றும்விளி யேன். (4)

இலங்கையொடு மேருதிகொ லென்னி லிடந்தென்
வலங்கையொடு மத்தலையின் வைப்பேன் விலங்கினரை
நூறிவாரி வெஞ்சிலையி னோர்தம் பதம்பணிவேன்
தேறிவரு மெற்கரிதே தே. (5)

அருந்ததியே நீசொல் லழகற் கருகுன்
மருந்தனைய தேவிவஞ்சர் வைப்பிற் பெருந்துயரி
னேடிருக்கக் கண்டே னுவந்துவந்தே னென்றுரைக்கிற்
பாடிருக்குஞ் சொற்கென் பலன். (6)

Koviloor Digital Library

புண்டார் வலத்த புயத்தி னெடுபுக்கேன்
விண்டார் வலியும் விரித்துரைக்கோ கொண்டுவரு
கிற்றிலே னென்னுயிர்க்குக் கேடின்றி வந்ததெனச்
சொற்றிலே னச்சொற் றுணிந்து. (7)

இருக்கு மதில்சூ ழிலங்கை யிமைப்பின்
உருக்கி யெறிந்தரக்க ரொன்ற முருக்கி
நிருதக் கடல்குடித்து நேர்வ தெனினு
முரைதக்க செய்வே னுகந்து. (8)

இந்து நுத னின்னுடனே யெய்தி யிறைவள்ளல்
சிந்தையுறு வெந்துயரைத் தீர்த்தபின்னர் ரந்தமிலி
ராக்கதரை நூறி நயத்த வுலகரின்பம்
போக்கலின்றி யாக்கல் புகழ். (9)

வேறுதர மென்னுகு மின்னே ரிடையுவந்திப்
பேறுதர லெற்காம் பெருமையதே யாறுதுயர்
அஞ்சொலிள மானே யடியேன் புயத்திருக்கிற்
செஞ்சொலுளான் முன்பணிவேன் சென்று. (10)

நேயடுத்த மாற்றம் நினைந்து புனைந்துவரு
தாயடுத்த கன்றின் தகையானை நீயெடுத்த
அற்புயர்த்து மாற்றற் களவே துரைத்தலுன
பொற்புயத்துக் கேற்றதென்றாள் பொன். (11)

அரியவன்று நின்னலத்த வாற்றற் கடுத்த
தெரியவென்று செய்வதுவுஞ் செய்தி யுரியதன்று
யோர்கின்ற தெந்த னுளமுற்ற பேதமையாற்
சார்கின்ற தென்றனளென் தாய். (12)

வேலையிடை யண்டிமண்டு வெய்யோர் சரந்தொடுக்கும்
வேலையிடை யெற்கவர்க்கோ வேண்டிவரும் சாலத்
தடுமாற்றங் கொள்ளுந் தனிமை யதனு
லடுமாற்றல் கொள்ளா தவண். (13)

Koviloor Digital Library

அன்றிச் சிலருமுள வாரியன்கை நேரியன்ற
வென்றிச் சிலைமாசு மேற்கொள்ளும் நன்றி
யறியாத வஞ்ச ரடுத்த செயனீ
குறியாத தென்றுகுறிக் கும். (14)

கொண்டடுத்த சண்டைதனிற் கொற்றவரன் விற்றலைமை
கண்டடுத்த வண்டர் களிக்கவெற்கண் கண்ட
அரக்கன் விழிகாக மள்ளியுண்டல் கண்டிவ்
விருக்கைவிட னன்று மிசை. (15)

வெற்றிதரு வில்லியர்கள் விற்றொழிலி னிற்றசெயல்
முற்று மரக்கியர்கள் மூக்குடனே யற்றுவரு
நாணுடைய ராகி நலிவுகொண்டா லன்றியெந்தன்
நாணுடைமைக் கென்னும் நலன். (16)

பொற்பிறங்க லாமிலங்கை பொன்றும் பொருந்தலர்கள்
எற்பிறங்க லாக வியைந்திலவே விற்பிறப்பும்
நல்லொழுக்கம் கற்பும் நயந்துலகங் காண்பதென்னே
புல்லொழுக்க மாகுமென்றாள் பொன். (17)

நல்லடுக்கா வல்லரக்கர் நண்ணு மிலங்கையதோ
எல்லடுக்காத் தொல்லுலக மெல்லாமென் சொல்லடுக்கிற்
சுட்டகண நன்மைதரும் தூய வரன்வில்வி
லிட்டகணைக் கென்பெருமை யெண். (18)

வேறுமுரை கேட்பாய் விளங்கும் பெருந்திருவான்
ஏறுவரன் மேனியன்றி யேற்றலின்று மாறிவரு
மைம்புலத்தைத் தீர்க்கு மனகனென்று மாணென்றே
யெம்புலத்திற் கேற்கு மிசைந்து. (19)

தீண்டுமெனி லித்தனையாஞ் சேண்பகலு மீங்குறுமோ
யீண்டுமுயிர் மெய்யி னிமைப்பதன்முன் மாண்டு
விடுமென்று மாநிலத்தை வேரோடு கொண்டான்
கடுமென்று மாளுமரக் கன். (20)

Koviloor Digital Library

மேவுதலைச் சிந்தைகொண்டு மெல்லியரை யொல்லைதொடிற்
பாவிதலை சிந்துவது பண்பென்னப் பூவிற்
புராதனன்செய் சாபப் பொறையுயிரைத் தந்த
தராதலத்தி னிற்கச் சமைந்து. (21)

அன்னவகை சாப மடுத்தவென வாண்மைகொண்ட
மின்னுவகை மோலிபுனை வீடணன்மெய்க் கன்னி
யெடுத்துரைக்கு மென்வயினு மேற்ற கருணை
தொடுத்துரைக்கு மென்று டுதித்து. (22)

ஆயதுண்மை யானும் அறம்வழுவா தென்றுரைக்கும்
சேயவண்மை யானுஞ் சிறந்தடுத்தே ஞயகன்றன்
நல்வலியைக் காட்டி நலங்கொள் பெருவலிநாண்
வில்வலியைக் காட்ட விழைந்து. (23)

ஆண்டு மரக்க னகலிடத்தைக் கீண்டதனை
யீண்டுவைத்தான் நம்பி யிளையவன்செய் நீண்டடுத்த
சாலையொடு நண்ணு தலைக்காண்டி யென்றுரைத்தாள்
வேலையடு கண்ணாள் விழைந்து. (24)

தீரவரா தோர்பகலுஞ் செல்வேன் சிலையுடைய
வீரவரன் மேனியென வேண்டவரு நாரமுற்ற
மாமலர்சேர் பொய்கைதனை மன்னு முயிர்க்காகும்
சேமமெனச் செய்கை தெரிந்து. (25)

ஆதலினு லன்னவகை யாகா வெனவறிந்தேன்
வேதமுதற் காரணன்பால் மீண்டனையாய்ப் போதல்
குறியென்று கொண்டான் குறித்த வவனும்
நெறியென்று கொண்டா னினைந்து. (26)

நன்றுநன்று மிவ்வுலக நாயகன்ற னுகமுற்ற
தன்றுணையாந் தேவி தவத்தொழிரு னென்று
மனங்களித்து நின்றான் மருவார் பொருதிற்
சினங்களிக்குஞ் சிந்தைத் திறன். (27)

Koviloor Digital Library

இருளுடைத்தாம் ஞால மிராவணனு லின்னும்
தெருளுடைத்தா மன்றிச் செறியின் மருளுடைத்தாம்
மன்னவற்கி யானே வழங்குமொழி சொல்கவெனப்
பொன்னடியிற் ருழ்ந்தான் புதன். (28)

இன்னுமொரு திங்க ளிருப்பலியா னன்னதுவு
நின்னுடைய நன்மொழியி னீதியோய் பின்னை
யுயிர்படைத்த லொவ்வே னுயர்ந்தவர ஞணை
செயிர்படைத்த சொல்லெதற்காந் தேர். (29)

ஆரமலர் மார்பற் கமைந்து சரியான
தாரமல ளேனுந் தயாவென்னு மீரம்
அகமடுக்கா தேனு மறிவனது வீரம்
சகமடுக்கச் சொல்வாய் தனித்து. (30)

ஏத்துமகிழ் வென்றி யிளையோற்கி யானுரைக்கும்
வார்த்தையுண்டா மென்னை வரனருளாற் காத்த
வுறைகோட்ட மில்லா வுனக்கேயாம் சீதை
சிறைவீட்ட லென்பாய் தெரிந்து. (31)

திங்களொன்றி னெந்தன் செறிந்த தவந்தீர்ந்த
திங்குவந்தி லானே லெறிதிரைநீர்க் கங்கைக்
கரையி லடியேற்குக் கண்ணன் செயற்காம்
பரிவுடைய தாந்தர்ப் பணம். (32)

மாமியர்கள் மூவர்க்கு மாய்வடுத்த சீதையவள்
மாமலராந் தாளை வணங்கினுள் தாமென்
றறத்தமல னன்றுமறந் தாலு மதனை
மறத்தலின்றி நீவழங்கு வாய். (33)

வந்தெனைக்கைப் பற்றி வரநின்ற வைகலின்வாய்
இந்தநட்பாஞ் சன்மத் திருமாதர் சிந்தைநத்தி
நாடே னெனவுரைத்த நல்லுரையை மன்செவியி
னூடே யுரைப்பா யுவந்து. (34)

Koviloor Digital Library

ஈண்டிருந்து நானு மினியவுயிர் மாண்டிடினும்
மீண்டிரந்து வள்ளறிரு மேனிதனைத் தீண்டி
முழுதாளு நல்வரத்தை முன்னிலையாச் சீதை
தொழுதா ளெனச்சொல் தொடுத்து. (35)

அரசைப் புரக்கு மவையர் தனிலும்
புரசைக் களிற்றிற் பொருந்துந் திருமேனிக்
கோலத்தைக் காணக் குறிக்கும் விதியிலதேன்
மாலுற்ற தாலென் வரும். (36)

தன்னை யடுத்துத் தளரு முலகிற்கும்
அன்னை பரத னகத்தளவா மின்னலுற்ற
நோய்க்குமங்கே போவதன்றி நொய்தடுத்த வெற்கருள
வாய்க்குமென்ற லென்ன மதிப்பு (37)

எந்தை முதற்கிளைஞ ரெல்லார்க்கு மென்னுடைய
வந்தனத்தைச் சொல்கவியின் மன்னவனைச் சுந்தரத்தோள்
வீரற்குப் பின்னடுத்து வேந்தாக்கச் சொல்லென்றாள்
பாரக் குழலி பரிந்து. (38)

இத்திரத்தாம் சொல்லதனை யேற்ற மனமுடையான்
தத்துறத்தா மின்னமென்னை தாயேநீர் சித்தம்
தயங்குவதென் னென்று தனியறந்தான் சொல்லும்
வயங்குலவு சிந்தையனு மான். (39)

வீவாய்நீ மெய்யே விளியா திருக்கும்வரன்
போவா னகரும் பொருத்தந்தான் வேய்வான்
மவுலியென்னை யென்றான் மருவும் அறத்தின்
செவிலியென்ன நின்றான் தெரிந்து. (40)

கைத்தோங்கு புன்சிறையிற் கற்பனையை வைத்தோனும்
பொய்த்தோ னுயிரும் பொருந்துமாம் முத்தேவாம்
வில்லிகளும் போவாராம் விந்தை யுரைக்குமொழி
நல்விகலா மென்று னயந்து. (41)

Koviloor Digital Library

நல்லோயாம் நின்னை நலிந்த பொருந்தலரைக்
கொல்லோமா யெம்முயிருங் கொண்டங்கே எல்லோரும்
போவதுமா மெங்கோன் பொருதிறற்கை வில்லுடனே
ஆவதுமா மென்னும் அறம். (42)

நீந்தாத வின்னல் நிறைந்த மனத்தெமக்கே
ஆய்ந்தாகுஞ் செல்வ மளித்தருளா யீய்ந்தாற்கா
யுன்னை யளித்திலமே லுற்ற துயிர்க்கென்னும்
பின்னையளித் தென்றான் பிரித்து. (43)

நன்றார்ந்த நல்லுரையி னாட்டமிகு நல்லோரைத்
தின்றா் குடல்பேய்கள் தின்றடுக்கக் கொன்றும்
வலனுயரச் செல்வோம் வளநாட்டிற் கென்றான்
புலனுயரும் புந்திப் புதன். (44)

மாட்டாதார் தம்சிறையில் வைத்தோயை நற்றாயை
மீட்டாதா ராகியினி மீள்வோமேல் நாட்டார்
நலத்தாரும் நன்னூலும் நன்மையொடு நாடும்
புலத்தாவ தென்னும் புகல். (45)

பூண்டாள் பொலன்கற்பாள் போற்றும் புகழுடையாள்
தீண்டாத வஞ்சகர்கை தீண்டாமுன் மாண்டாளா
மென்றடுக்கத் தேறி யியைந்துசென்றால் வீரமது
நன்றடுக்கு மென்றா னகைத்து. (46)

கெட்டா ருயிர்நீயும் கேதத்தால் விட்டபின்ன
ரொட்டா ருடனுலக மோரேழும் சுட்டாலும்
வந்தபழி தீரும் வகையுளதோ வென்றுரைத்தான்
சந்தமொழி மேலோன் தகைத்து. (47)

முன்னேதான் கொல்வான் முறைநின்ற மூவுலகும்
பொன்னேபோ லோங்கு புகழ்வில்லான் என்னேயாம்
நின்னிலைமை யீதென்றால் நேரடுத்த செம்மைதனை
முன்னிலைமை கொள்ளான் முனிந்து. (48)

Koviloor Digital Library

தாழியென வாகுந் தனிக்கடலாற் சூழ்ந்தடுத்த
வேழினிலை யேழுலகு மேத்துமைய ஞழியுடைக்
கையான் விடுமம்பாம் காலவரு மூழித்தீச்
செய்வதனைச் சொல்வதெனைத் தே. (49)

படுத்தானுந் தேவர்களின் பற்றுரை யென்றும்
தடுத்தானுந் தீவினையைத் தக்கோர் எடுத்தாளும்
நல்வினையை யெந்நாளும் நாட்டினன் வள்ளலெனச்
சொல்வினைய முற்கடுத்த து. (50)

சின்னுடா நின்னிடரும் தீரா திருத்தலுறும்
இன்னுத வைகறனி லெல்லோரும் நன்னுளைக்
காணுதலும் நன்று கருதவரும் அறமும்
வாணுதலி நின்னல் வரும். (51)

புளிக்கவரு கண்டகர்கள் புண்ணீருண் மூழ்கிக்
குளிக்கவரு பேய்கள் குடைந்தும் ஒளிக்கவரு
தேவருவந் துள்ளந் தெளியவரு நல்வினைதான்
பாவையுந்தன் பாக்கிவரும் பார். (52)

ஊழ்கிளரும் போதி னுருமெறிந்த தென்னமிகு
கேழ்கிளரும் பாணங் கிழித்தபுண்ணில் வீழ்குருதி
யிற்றரங்க வேலைநிலை யேழுமொன்ருய் நின்றிரைய
மற்றரங்கல் காண்டி மதித்து. (53)

சூலாம் வயிறலைத்துச் சோர்வுற்றுத் திர்வடையார்
ஆலாகுங் கண்ணு ரறுத்துயர்த்த தாலிப்
பெருமலைக ளெங்கும் பிறங்குவன காண்டி
செருமலையுஞ் சேயான் செயல். (54)

விண்ணடுக்கா நீள விரிகழுதும் வெஞ்சிறைய
வெண்ணடுக்கா தாம்பரவை யீட்டமுந்தான் புண்ணீரா
முந்திபடிந் தாடி யுடன்மடவார் கண்ணீரா
முந்திபடிந் தாடு முவந்து. (55)

Koviloor Digital Library

நிரம்புமுர சங்கறங்க நேர்ந்தடுத்த செய்ய
நரம்பினிசை யோடு நயந்த வரம்பையர்கள்
ஆடுவதைக் காண்பா மரங்கிற் குரங்கினங்கள்
ஆடுவதைக் காண்பா யடுத்து. (56)

புரைசேர் தொழிலரக்கர் புண்ணிற் பொழியும்
திரைசேர் குருதிநதி சேர்க்க வரையில்
பிணப்பிறங்கல் மண்டிப் பெருங்கடலைத் தூர்த்தல்
தணப்பிறங்கக் காணத் தகும். (57)

இணையு மரக்க ரிருந்தை பொரியச்
சனகியெனுந் தீநடுவிற் சார வனகனடு
மம்பென்னு மூதை யதனு லிலங்கையெனும்
செம்பொன் னுருகுமதைத் தேர். (58)

தாக்கிகலி ராவணன்றன் சார்தலைக டாவினவாய்ப்
பாக்கியமா நின்மேனி பார்த்தகண்கள் நோக்கும்
நுதிகொண்ட மூக்கால் நுவலவரு காக்கை
கதிகொண்டு நுங்குவதைக் காண். (59)

மேலுற்றி ராவணனுல் வீறழிந்து வெள்கிவரு
நீலத் திசைக்கரிகள் நிற்பனமுன் காலும்
தலைகவர்ந்த பாணம் தடிந்திடுவ காண்டி
யலைகவர்ந்த கண்ணு லடுத்து. (60)

நீர்த்தெழுந்த பாணமழை நேர்வழங்கு ிவிடுவான்
வேர்த்தழுங்க வீசவரு மென்றூசாய்ப் போர்த்த
பொலன்கொடிகள் பொன்னிலங்கைப் பூழியுடனே
கலங்குகழு தாடலொக்குங் காண். (61)

நிலடுத்த நேரரக்கர் நெய்த்தோரி னீத்தமது
வேலைமிக்க வாறடுத்து வேலைமுற்ற ஞாலமுற்றும்
கார்நூங் கடையுகத்திற் கால னுயிர் கவர்தல்
போர்தடர்த்தல் காண்பாய் புனைந்து. (62)

Koviloor Digital Library

அணங்கா மகளி ரரக்கரொடு மாடும்
மணங்கால் துடவையலர் வாவி யிணங்கிடங்கள்
வால்பிடித்து மாலிஞெடு வானரங்கள் வந்தடர்த்துக்
கால்நடித்தங் காடுநலங் காண். (63)

செப்புறுவ தென்னை திருமால் கரவாளி
இப்புரத்த ராமரக்கர்க் கேயந்தவொன்றோ வப்புரத்த
வண்டத்த ராமரக்க ராற்ற லடுவதனைக்
கண்டத்தன் செய்கை கருது. (64)

ஈண்டலொன்று திங்க ளிடரகத்து வைகுதலே
வேண்டலன்று நான்விரைவின் வீரனருள் காண்டல்
குறைபின்னர்க் காலம் குறிப்பதென லுண்டோ
மறைபன்னு மாதே மதி. (65)

ஆவியுண்டா மன்றி யனகனருள் நாயகற்குக்
காவியுண்ட கண்ணாய் கருதுவவென் பூவும்
தளிருங் கருகாத் தனிக்காவு முண்டோ
மிளிருங் குழையாய் விளம்பு. (66)

சோக மடுத்துவரத் தூய தெளிவுண்டோ
மேக மிடித்துருமு வீழ்ந்திடினும் ஆகம்
புயத்தைப் புயங்கம் புகுந்து கடித்தும்
நயத்தைத் தருமறிவென் னும். (67)

மத்துற்ற தாழி மதிக்குந் ததியாக
வொத்துற்ற வாழி யுதித்தவில்லான் நத்துற்ற
கண்டத்தாய் நின்பிறிவு கண்டபொழு துண்டுறுய
ரெண்டத்தாய் நின்றதென வெண். (68)

இந்நிலைமை வீர னிருக்கு மெனவென்னும்
மன்னிலைமை தேரா வழியுரைத்தாய் பொன்னிலைமை
கொண்ட புகழோய் குறித்தவிவை நீயே
கண்டு புகல்வாய் கருத்து. (69)

Koviloor Digital Library

தீர்த்தன் கவியரசும் தேவி னினதமுத
வார்த்தை செவியுறுமுன் மாக்கடலி னித்தமுள
தூர்த்திலங்கை தன்னையடச் சூழுங் குரங்கார்த்தல்
சீர்த்திலங்கக் கேட்கும் செவி. (70)

எண்ணற் கரியபடை யேற்றடுத்து நாளைநகர்
நண்ணற் குரியவவை நாப்பணங்கை வண்ணமுற்ற
விண்ணனையுந் தார்க்கியன்றோள் விண்டெசிலை கண்டதெனக்
கண்ணனையென் றோளடுத்துக் காண். (71)

அங்கதன்றன் றோளி லனக னிளவன்மலை
பொங்குமினன் போற்பொலியப் போர்ப்படைதா னிங்குவந்து
தாக்குந் திருவுடைத்தாஞ் சாராதா மையமினி
நீக்குந் திறமை நினை. (72)

மாமருவுங் கூந்தன் மயிலே குறித்திடுநாள்
தாமருவி வந்துசிறை தள்ளிலனேல் கோமருவும்
பாவம் பழியோடு பற்றுதற்கி ராவணனே
மேவுவள்ள லென்றான் விழைந்து. (73)

ஆகும் மொழியா லறிவுற்றான் சிந்தைவந்த
வோகை வழியா லுயர்வுற்றாள் போகைநல
மென்பதனைச் சிந்தை யிசைந்தா ளருண்மொழியால்
அன்பதனைத் தந்தா ளறிந்து. (74)

சேறியைய நீவிரைந்து தீயவையெல் லாமுடைய
வேறுதர மொன்றும் விளம்பகிலேன் கூறுகின்ற
முன்னான வின்சொலுள முத்தற் கெடுத்துரைப்பாய்
என்னா னவின்றா ளிசைந்து. (75)

நாகமொன்று நல்வரையி னாடி யெனையளைந்த
காகமொன்றைச் சீறிக் கரும்புல்லை வேகப்
படையாக வைத்த பரிசுரைப்பா யைய
விடையாக நத்துநடை வேட்கு. (76)

Koviloor Digital Library

அங்கதஞ்சி யோடி யயன்பதியை யண்மலவ
னிங்குவர வென்னையென வேறயுர்த்த மங்கைபங்கன்
நாடடைந்து மெண்டிசையு நாடி யவர்மறுக்கப்
பாடடைந்து வந்ததுரைப் பாய். (77)

இந்திரன்றன் மைந்த னிருந்துயலரைப் பார்த்தவரர்
அந்தரத்தி னின்ருே ரயர்ந்துரைக்க எந்தை
சரணன்றி வேறமொரு தஞ்சமுண்டோ நீயே
அரணென்று வந்த தறை. (78)

வந்து சரணென்ன வள்ளன் மகிழ்ந்துசர
முந்துதர நீக்கி முனிவின்றி வந்தடுத்த
கண்மணியு மொவ்வொன்றே காகங்கட் காக்கினவை
விண்மணியஞ் சேய்க்குரைப்பாய் வேய்ந்து. (79)

என்னே ரிளங்கிளிக்கா மேற்றபெய ரென்னையென
மன்னுகுங் கேகயன்றன் மாதாமென் அன்னை
பெயராகு மென்ற பெருமையுரை யென்ருள்
துயராகம் வென்ரு டுணிந்து. (80)

என்ரு ளடையாள மித்துணைக்கு மேற்சிறந்த
தொன்ருவ தின்ரு யுணர்ந்தனளாய் மென்றுகிலின்
நன்றுபொதி வுற்றதுதா னண்ணுஞ் சுடர்க்கரசா
வென்றபொதி வுற்றதென்ப தே. (81)

வாங்கினுள் தன்மலர்க்கை வைத்தா ளதுமுன்னு
வேங்கினன் பொன்னனுமா னென்னையென வீங்கி
வியந்தாங் கிருந்தான் விரியு மிருள்கள்
பயந்தாங் கிரிந்ததனைப் பார்த்து. (82)

மஞ்சலரும் பொன்னொளியோன் மாநகரின் வந்தடுத்தா
னஞ்சலனென் ருரயிர்த்தா ராமரக்கர் சஞ்சலங்கொள்
சக்கரவா கங்களுடன் தாழ்கஞ்ச மும்மலர்ந்த
தக்கவொளி மிக்கனகாந் தம். (83)

Koviloor Digital Library

கூந்தன் மழைமுகின்மேற் கொண்டெழுந்த கோலமொடு
வேய்ந்ததுவா மெல்லியல்தன் மேனியெழில் காந்தியுடன்
கொண்டா னனகன் குலவுசரண் போலொளிர்தல்
கண்டா னனுமான் கசிந்து. (84)

சூடைமணி கண்மணியாய்த் தோன்றுவது தொன்னுளின்
ஆடையணி கொண்ட தடையாளம் நாடிவந்தென்
இன்னு ருயிரளித்த வேற்றமுளாய் கோடியெனப்
பொன்னாள் புரிந்தாள் புகழ்ந்து. (85)

தொழுதடுத்து வாக்கியதைச் சுற்றுதுகில் முற்றப்
பழுதடுக்காப் பந்தனைமுன் பண்ணி யழுதடுத்து
மும்மைவலங் கொண்டான் முழுதுலக மீன்றளித்த
வம்மைவிடை தந்தா ளறிந்து. (86)

சூளாமணிப் படலம் முற்றிற்று.

பொழிலிறுத்த படலம்.

நெறிக்கொள் வடக்கி னினைப்பி னிமிர்ந்தான்
பொறிக்கொள் மலர்ப்பொழிலிற் போவான் சிறுத்தொழிலைச்
செயது முடித்தகறல் தீதா மெனத்தெறிந்தான்
எய்துமுடி வெண்ணி யிசைந்து. (1)

ஈனமுறு பற்றலரை யெற்றி யிகன்மூதார்
மீனவிலை யத்தின் விழவீசிச் சானகியைத்
தேனார் மலரடிக்கண் சேரவைத்தல் செய்திலனே
லானு லடிமையென்னை யாம். (2)

வஞ்சகத்தி ராக்கதனை வாலால் நெருக்கியுற
வஞ்சிரட்டி சேகரந்தோ ளார்த்தசைத்து வெஞ்சிறைக்கண்
வைத்துமில னென்றால் வழியடிமை யெங்காகும்
நத்துவதென் வேறடுத்து நான். (3)

Koviloor Digital Library

கண்ட நிருதக் கடல்கலக்கி யென்வலத்தால்
திண்டிறல்சேர் வல்லரக்கன் சோர்ந்திருக்க மண்ட
வுதரத் தவள்குழலை யோங்கப் பிடித்துப்
பதரச் சிறையிடல்பண் பாம். (4)

மீட்டுமினி யெண்ணும் வினைவே றுளதன்றிக்
கோட்டி யரக்க ருலைத்துரிமை காட்டு
மிதுவே கரும மிவர்க்கென்று போர்செய்
வதுவே கருது மனத்து. (5)

இப்பொழிலைச் சேர விறுப்பே னிறுத்தடர்க்கா
லப்பொழுதப் பூச லடுத்தரக்கர் வெப்பார்
சினத்த ரெதிர்ப்பர் செறுத்து முறுக்கி
நினைத்த படிமுடிப்பே னின்று. (6)

வந்தவர்கள் மீள வருவா ரலர்மடிந்தால்
வெந்திறலார் பேயரக்கன் மேலடுத்து முந்துமெனின்
அன்னான் முடித்தலைக ளற்று விழச்செய்து.
பின்னான செய்கை முடிப்பேன். (7)

என்றினைய வெண்ணி யிரவி மதியியங்கும்
குன்றினையந் தோளாற்றல் கொண்டார்த்தான் நின்ற
உலகெடுத்த வேனமென வோங்கினான் காவை
நிலைகெடுத்து நின்று னிமிர்ந்து. (8)

முடிந்தனவா கிப்பிளந்த முன்னே நெறிந்த
மடிந்த பொடிந்த மறிந்த செறிந்தடுத்துப்
போன தகர்ந்தெரிந்த புங்கமிகு சோலையதற்
கான நிலையுரைப்பா ரார். (9)

வேரோடு சோர்ந்தசில வெந்த சிலவிண்ணின்
காரொடு சேர்ந்தசில காலினொடு சேர
மறிந்தசில தும்பியொடு வானுடு சென்ற
வெறிந்த சிலமரங்க ளே. (10)

Koviloor Digital Library

சோனையெனச் சூழச் சுழற்று மரந்திசைப்பே
ரானைநுக ரக்குளகு மானதுடன் மேனிமிர
விட்டபொழில் வான மிசை சென்று நந்தனத்தைக்
கட்டழியச் செய்யும் கரிந்து. (11)

அலைந்த கடலு மரக்கனகன் மாடம்
குலைந்து விழுந்த குலத்தாம் மலைகளென
மாதிரத்தின் மீனிெனுடு வான மலருதிர்த்த
பூதலத்தின் சோலை புகுந் து. (12)

முடக்குநெடு வேருடனே முந்தெடுத்து வீசிக்
கடக்களிறு கொண்டு களித்த மடப்பிடிக்குக்
கையா லளித்ததெனக் காலு மெயிரடுக்க
மெய்யாவான் வீசும் விரைந்து. (13)

விஞ்சை யுலகும் மிகுத்தியக்கர் மாமலையும்
துஞ்சுதலில் வானோர் துறக்கத்தும் பஞ்சியடி
வஞ்சியர்கள் மொய்த்தனராய் வந்து பறித்தனர்கள்
வஞ்சனையான் சோலை மலர். (14)

பொன்றிணிந்த நன்மரங்கள் போற்று திசைபோவ
மின்றிணிந்த தொத்த வெயிலொத்த வொன்றிெனுடு
மொன்று புடைத்துதிர வூழின் விழுவனவும்
தன்றிரளின் தாரகையாந் தான். (15)

புள்ளிெனுடு வண்டும் பொருங்களிகொள் பூவிெனுடு
கள்ளுமுகை கொண்ட கனிகாயும் வெள்ளநெடு
வேலைவிழ மீனினங்கள் வேண்டிக் களித்துண்ட
சோலைவிழ மேனி துடித்து. (16)

தூவியதா மாமலர்கள் தோன்று திசைதோறும்
பூவியலு மாமணத்தாற் போனபுலால் தேவரெலாம்
தேவியரோ டாடச் சிறந்த புனலான
காவியலும் வேலைக் கடல். (17)

Koyiloor Digital Library

இடந்தமணி வேதி யிறத்த கடிகா
தொடர்ந்துதிட ராகத் தொடக்க நெடுந்தகையான்
பாழிகொண்ட தோளன் படர்ந்து வருகாலால்
ஆழிகொண்ட தாகு மடுத்து. (18)

வேனிற் சுடரோன் விளங்கொளியா விம்முறுகா
வானிற் றொடரவந்து வாட்டுதலால் தானவர்கள்
மாட மலைந்துலைந்த வானவிடி யாலிடியும்
நீடுமலை யாக நிரந்து. (19)

எண்ணவரு கோடி யெறிந்த மரஞ்செறிந்து
தண்ண மழைபோற் றழைநலத்தால் விண்ணும்
இலங்கவரு நந்தவன மேய்ந்ததெனச் செய்தான்
நலங்கவரும் சிந்தைநண்ணி னன். (20)

தேன்றுளிப்பப் புட்கள் சிலம்ப மலர்மரங்கள்
ஏன்ற விசும்பி னிடைநெருக்கல் ஆன்றமணி
வாளொடுவில் வீசவரு வான விமானங்கள்
கேளொடுமின் றுகும் கிளைத்து. (21)

சாக நெடும்பணைகள் தாங்குந் தனிமரங்கள்
நாகமனை யான்வீச நாகமுற்று வேகமுடன்
வானிழிந்து வீழ்ந்துபுனல் வாருஞ் சலதரம்போல்
தானிழிந்த வாழி தனில். (22)

ஊனமுற்றார் மண்ணி லுதித்தவர்கள் மெய்வாய்ந்த
ஞானமுற்றால் வீடெய்து நன்மையெனத் தானகற்பத்
தண்டலைகள் விண்டலத்திற் சார்ந்த முனமுறைந்த
மண்டலமா மென்று மதித்து. (23)

மணிபடுத்த குட்டிமங்கள் மட்டடுத்த மாடந்
துணிபடுத்த வாவிகளைத் தூர்த்துத் தணியாச்
சுவர்த்தலங்கள் சிந்தித் தொலைக்கு மனுமான்
கவர்த்தலங்க வீசுமரங் கள். (24)

Koviloor Digital Library

வேங்கைசெற்று மாமரங்கள் வீழப் புடைத்தடர்த்து
மோங்குகற்ப கப்பூ வொடித்துராய்ப் பாங்குருற்ற
செண்பகத்தை வாட்டித் தெழித்தான் பரம்பொருள்பா
னண்பகத்தை நாட்டு நலன். (25)

சந்தனங்க டாக்கிற் றகர்ந்துடைந்த தானடலா
விந்தனங்க ளாக வெரிசிந்த முந்தனங்க
வேள்வசந்தன் மாற விமலமிகு நந்தனமாம்
தாள்வரைசெய் காகரிந்த தாம். (26)

காமரந்தான் செய்யுங் களிவண்டு கான்கலங்க
மாமரங்கள் மாண்டனவா மண்ணோடும் கோமரமும்
தாமரங்க வாங்கு தணிந்து தெரித்தனவாம்
பூமரங்க ளெல்லாம் பொரிந்து. (27)

ஆனையுற்ற தானமினு ராட லரங்கமொடு
பானமுற்ற தானம் பரிப்பந்தி ஏனையுற்ற
வெல்லாந் தகர வெறிந்தான் மரங்களினல்
வல்லாந் தனுக்கொளனு மான். (28)

மயக்குற்ற பொன்னடுத்த வல்லிகளை வாரி
யியக்கத் திசையி னெறிவ் வெயிற்கதிர்செய்
கற்றையற்று வீழ்ந்தபுயல் காணுங் கடற்றலையி
லுற்றடுத்துச் சேர்ந்தனவொக் கும். (29)

பெரிய மரங்கள் பெருங்குன்ற மெல்லாம்
இரியவர வீசமதி லேற்று நெரியவர
மாட நெருப்பெழவே மன்னிலங்கை யெங்கணுந்தான்
ஆடல்கொண்டான் வெற்றியுடை யான். (30)

தொண்டைவாய்ச் சீதை துயக்கா லெனைத்தகித்தாய்
விண்டவர்கண் முன்பொழிலை வீசுவதுங் கண்டா
யெனவரக்கன் காயுமென வேங்குங் கவலை
மனமரக்கச் சென்றான் மதி. (31)

Koviloor Digital Library

காசற்ற பொன்னுமணி காந்தங் கனலவரு
மாசற்ற நன்மரமா வாழ்சோலை ஆசைதொரு
மையன்வளக் கையா லடர்த்தெடுத்து வீசலினாற்
செய்யவிளக் காகுந் தெரிந்து. (32)

கதறினவா யுள்ளங் கலங்கும் விலங்கு
பதறினவாய் மேலாம் பரவை யுதறினவாய்
வேலைகண்டு வீழும் விமலன் கரமடுத்த
சோலைகண்டு வீசத் துணிந்து. (33)

தோட்டோடு போனமரந் தோறுந் தொகுத்தபுட்டம்
கூட்டோடு பேருவணை கொண்டனவாம் கோட்டோடு
சேர்தருண மார்புடையான் சீற லிதுவென்றால்
வார்கருணைக் கென்னும் வழக்கு. (34)

பொய்ம்முறையைக் கொள்ளரக்கர் போற்றப் பொலிசோலை
இம்முறையா மன்னையுறை யேற்றமரம் மும்முறையாம்
சீரா ருலகங்கள் சென்றுமுடி வன்றுமுற்றக்
கூராரு மாலைநிகர்க் கும். (35)

உறுசுடர்செய் சூடை யுயிரொப்பான் காண
வறிகுறியாய் விட்டனளா மன்னை வறியளெனச்
சேர்ந்தகட லீயும் சிகாமணியைப் போலிரவி
சார்ந்தகட மாமலைவந் தான். (36)

தாழாப் பொழிலதனைச் சாய்த்துத் தமியனின்றான்
ஏழாப் பொழிலளந்த வெம்மான்போல் ஆழி
நடுவாம் வரைக்கரசை நண்ணினா னூழி
யடுவா னுருத்திரனைத் தான். (37)

இன்னநிகழ் வேலை யெழுந்தரக்கி மாரவனைப்
பொன்மலைபோற் கண்டுபயம் போர்க்கவே யன்னையிதென்
னென்றார் நடுங்கி யெடுத்துரைப்பா யென்றிரிந்தார்
பொன்றாத தொன்று பொறுத்து. (38)

Koviloor Digital Library

தீயவர்செய் தீயசெயல் தீயோர் தெரிவதன்றித்
தூயவர்க்கென் ஞம்ங்கள் சூழலெலாம் மாயவர
வாமான் தகாதென்று வள்ளலிளை யோனுரைத்தும்
ஏமாந்த வெற்கறிதற் கென். (39)

என்றூ ளரக்கியர்க ளேங்கி வயிறலைத்துக்
குன்றூன துங்கடலுங் கொண்டோட நின்ற
சமித்தமது கண்ட தனைநீக்க வென்னும்
நிமித்தமது கொண்டா னிமிர்ந்து. (40)

கண்கொளற்கு மீதாகிக் கால்கொளற்கு மீதாகி
எண்கொளற்கு மேலாத வேற்றமுடன் விண்கொளற்காம்
மேருவெள்க நின்ற விமலமொடு பூமிபொறை
சாரநின்ற தாகுந் தகைந்து. (41)

பொங்கொளிசெ யங்கிரணப் பொற்பி னுயர்ந்தடுத்த
திங்கணக மங்கிருளைத் தின்றதுவாய் அங்கைமலை
பத்திரட்டி யானுணைப் பாங்காகப் பங்கயத்தான்
சித்தமொத்துச் செய்தான் சிறந்து. (42)

தூணெல்லாங் காசடுத்த சுற்றெல்லாம் பொன்மணிகள்
பேணெல்லா மாணிக்கம் பெற்றபத்தி சேணெல்லாஞ்
செம்மாந்த சோதி திகழ வரு சமித்தம்
எம்மாற் புகழுறுத லென். (43)

வெள்ளிநின்ற பொற்றைதனை வேரோ டரக்கன்முன்
அள்ளிநின்ற செங்கைக் கழிவுதரப் புள்ளிநின்ற
மேருவெனும் பொன்மலையை வீறூ யெடுப்பவன்போற்
சாரவெடுத் தான்சமித்தத் தை. (44)

விட்டா னிலங்கைதனில் விண்ணடுத்த மாடமெலாம்
பட்டான பூழி பரந்தனவாற் சுட்ட
பொறியாற் றுளங்கினராம் போரரக்கர் பட்டார்
நெறியாற்றூர்க் கென்ஞ நிலை. (45)

Koviloor Digital Library

நிராந் துகிலர் நெருப்படுத்த நெஞ்சுடையார்
பீரா முருவர் பிணங்கிடுவார் உளரார்செய்
பூசலுற்றா ரோடிப் புகுந்தா ரிரிதேவர்
வாசமுற்ற காக்கா வலர். (46)

ஆலடுத்த சீற்றத் தவன்முன் னுரைத்திடுவார்
காலடுத்த வெங்கட்குக் காவலிலை மேலடுத்த
திண்டோட் குரங்கு செறிந்தெடுத்து வீசிவிட்ட
துண்டோநம் சோலை யொருங்கு. (47)

சொல்லற் கெளிதன்றால் சோலையைக்கால் கையதனாற்
புல்லுற்ற தாந்துகளாப் போக்கியதால் வில்லுற்ற
வோமந் தனைவீச வோங்கிலங்கை யுஞ்சிதைந்த
நாமந் தருகுரங்கி னால். (48)

ஆடகத்தாம் சோலை யழித்தரக்கர் காவல்புரி
தேடகத்தா மோமஞ் சிதைத்ததுவுங் கோடரத்தா
மொன்றென்றீ ரிச்சொ லொருமூ டருமொழியார்
நன்றென்றா னண்ணா னகைத்து. (49)

தேவர்பினுஞ் சொல்வார் திருவுருவைத் தாங்குதிண்மைப்
பூவலய மன்றோ புகழுடைத்து மூவர்தமி
லுற்றவனென் றாலு மொழியாக் குரங்கதனை
மற்றவனென் னீகாண் மதித்து. (50)

மண்டலங்கள் சோர மறிகடல்கள் மோழைமண்ட
வெண்டிசைவாழ் தேவ ரிரிந்தோடக் கண்ட
வரக்கியர்கள் சூல்கரைய வார்த்தா னனுமான்
குரக்கியலைக் காட்டிக் குறித்து. (51)

பொழிலிறுத்த படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

கிங்கரர்வதைப் படலம்.

அருவரையின் முட்டு மசனியிடிப் பாழி
வெருவு முழக்கீசன் வில்லாய்க் குருமகுட
கோடி முடிகுலுங்கக் கொண்டவரக் கற்கடுத்த
தோடு செவியிருப தும். (1)

புல்லு முறுவலுறப் போராமை பொங்கவுடன்
எல்லையிலா வாற்றலரை யேவியே வல்லை
பிடித்தடர்த்துக் கொல்லீர் பிணித்தடுப்பீ ரென்ருன்
இடித்தடர்த்த சொல்லா னிரித்து. (2)

சூல முசலமயில் தோமரத்தி னேடுபிண்டி
பால முதலாம் படைக்கரத்தர் ஆல
மொருவவரு மெய்யுடைய ரூழிக் கடலும்
வெருவவரு வார்கள் விரிந்து. (3)

நானிலத்தி னுண்டு நலிவுறுபோ ரென்றசொல்லைத்
தேனினத்தி மண்டிவரு சிந்தையினர் கானிற்
பெரியார் கடலிற் பெரிதோசை பெற்ருர்
தரியார் தடுத்தார் தகைந்து. (4)

திருகு சினத்தடுத்த தேவரெனுந் தெவ்வா
மிருகுரும்பைத் தீர்க்கு மிசையா ரொருகுரங்கோ
வென்றடுத்த தென்று விளித்துவரு நானுடையார்
குன்றடுத்த தோளைக் குறித்து. (5)

கட்டிவரு வாளர் கவசர் கழலர்திக்கை
தட்டிவரு தோளர் தடக்கையா ரெட்டுமுடி
வானடுத்த மெய்யார் வரையிடறு தாளுடையார்
கானடுத்த பேரிமுழக் கார். (6)

Koviloor Digital Library

வானவர்க ளேற்றபடை வாங்கும் வடிவுடையார்
தானவர்க ளேதித் தழும்புடையார் யானைபிடி
வாரியிடு வாயர் வளர்பிறையின் வாளெயிற்றார்
தாரியிடு வார்காயத் தால். (7)

சக்கரமார் தண்டுலக்கை தாரைபிண்டி பாலமொடு
முற்கரமுட் கோல்முசுண்டி முன்னடுத்த பொற்குலிசம்
பாசமொடு குந்தம் பரித்த கரமுடையா
ரோசைகொடு வந்தா ருருத்து. (8)

பொன்னிற் கஞல்தெய்வப் பூணர் பொருப்புத்தோள்
மின்னிற் படைக்கை விழிநெருப்ப ரென்னென்றார்க்
கென்னென்ப தன்றி யிருந்த தறிந்திலர்கள்
கொன்னின்றி லாத்துர்க் குணர். (9)

வெய்யபடை மின்னுடையார் வில்லுடையர் மேற்காலர்
மைவிசும்பிற் றேன்றுமெய்யர் வாய்மடித்தார் கைபரந்து
பொங்கிக் கடையுகத்திற் போர்த்துவரு மங்குல்பொழி
யங்கிக் கடையுவமை யார். (10)

பனியார் செயலைசிந்திப் பாங்கோமம் போக்கித்
தனியார் குரங்கென் தருக்க ரினியோர்
பழிமுற்றுந் தீதோ பரித்தற்கா மென்பார்
விழிமுற்றுந் தீயர் வெகுண்டு. (11)

எற்று முரசுவின் ணேற்றகழல் சங்கினொடு
முற்றுந் தெழித்த முரண்சொல்லு முற்றென்று
யோங்கி யொலித்துவரு மூழிக் கடலெழிலி
யேங்கிக் கலிக்கு மெடுத்து. (12)

தெருவினிட மின்றித் தெழித்த ககனர்
புருவனிமிர் கோட்டுசிலைப் பொற்பர் விரிவிலவாந்
தென்னிலங்கை யென்று செறுப்பார் வலிக்கிணைதான்
கொன்னிலங்கு வன்னிகுறிக் கும். (13)

Koviloor Digital Library

வாளுறைவிட் டார்விதிர்த்து வாய்மடிக்கும் வல்லமையார்
தோளுறைதல் கல்லைத் துகளாக்குந் தாளுரத்தர்
சந்திரனைக் கீறுந் தரத்தெயிரார் வந்தடர்த்தார்
சுந்தரனைச் சூழ்ந்து துடித்து. (14)

அனைவர் களுமலையி னானார் படைகள்
புனைவ ரமரிற் பொலிந்தார் வினையும்
கசரதங்க ளின்றிக் கருவுசுரர் வென்றும்
அசுரர்தங்க ளாருயிருண்டார். (15)

குறுகு கவசர் குறைகழலர் போரின்
முறுகு சினத்தின் முறையார் மறுகும்
நிதிக்கிழவன் போரை நிகராக்கா வீரர்
மதிக்குமுல கிற்றிரிவார் மற்று. (16)

வரையிடற மாக்கடலை மன்னிக் குடிக்க
இரவிதனை நூறவெழு மென்றால் அரவரசைப்
பூவெடுக்க வென்றாற் பொருது, வலியுடையார்
தாவடுக்கும் செய்கைபடைத் தார். (17)

தூளிப் படலந் துதைந்திமையோர் கண்புதைப்ப
வாளித் திறலா ரலைத்துவரு கோள்விடத்தைக்
கொண்ட குணத்தார் குறிக்கு மலைகடலின்
மண்டி யடர்த்தார் வரைந்து. (18)

பொறிபொடித்த கண்ணார் புகையுமயில் மின்போ
னெறிதரத்தாம் பேரிடியை நேர்வார் எறியும்
கடையுகத்தாம் காலும் கலங்க வருவார்
வடிவுகுத்தாங் காவை வளைத்து. (19)

வயிரொலியி னோடு வளையொலியுங் காரின்
செயிரொலிபோற் றார்க்கச் செவியைக் கயிலையென
நின்றா னரக்கர் நிகரில் படைகண்டான்
நன்றா னறக்கண்ணினான். (20)

Koviloor Digital Library

இதவியலா முந்த வியைந்து தெரிந்தான்
பதவியலா நல்லறிவான் பார்த்தான் சிதையும்
கடிபொழிரு ளென்றே கருதவரு திண்போர்
முடியவரு மென்றான் முனிந்து. (21)

இவனிவனு மென்று ரிகலி யெதிர்ந்தார்
பவனை னெனமுடுகிப் பாய்ந்தார் புவனி
யலைவிடக்கா ரஞ்சவர வார்த்துப் பெருத்த
வலைவிடத்தி னும்படைவிட் டார். (22)

மழைகடலா மாமுரச மாறி யறைந்தார்
முழைகடவு வாய்திறந்து மொய்த்தார் கழைதொடரும்
காட்டினுற்ற தீபோற் கருதும் படைவிடுவார்
வீட்டினுற்றோர் தேவரன் மேல். (23)

அறவ னதனை யறிந்தா னருகிற்
செறியு மரங்கரத்திற் சேர்த்தா னிறையும்
கடல்கடையும் வெற்பாய்க் கடுத்த படையின்
அடலுடைய வுற்று னடர்த்து. (24)

பருவரைநேர் வன்றோள் படரு மருவி
சொரிவனவாய் நெய்த்தோர் சொறிந்தார் நெரியுந்
தலையுடையார் சோர்ந்தார் தடித்துருமைக் கொண்ட
மலையுடைய ராக மடிந்து. (25)

பறைபுரையுங் கண்கள் பறிந்தார் படியார்
பிறைபுரையும் வல்லெயிறு பேர்ந்தார் குறையுயிரார்
சிந்துங் குடமுடையார் தீர்ந்தார் படரடுத்து
முந்தும் படைகண் முறிந்து. (26)

படையிற் பொறியாற் படர்கேசந் தீர்ந்தார்
தொடைமுறுகிற் சோரி சொரிந்தார் படையொடியத்
தோள்க டிறந்தார் தொடருங் குடர்சரிந்தார்
தாள்க டறிந்தார் சதைந்து. (27)

Koviloor Digital Library

புதையிருளிற் றீர்ந்தார் பொடியிற் புரண்டார்
விதைசே ருயிரார் விழுந்தார் கதையால்
மலைந்தார் கணைசொரிந்தார் மற்றுதையின் வீழ்ந்து
தொலைந்தா ரலைந்தார் துடர்ந்து. (28)

அயலடுத்த குன்றி னறைந்தான் பலரை
வியலிடத்தை மூட விரித்தான் புயலடுத்த
கார்க்கடலிற் றள்ளிக் கரைத்தான் பலரையுடன்
ஆர்க்குமடல் தீர்த்தா னடித்து. (29)

பற்றுவரு தோளைப் பறித்தெறியப் பார்வீழ்ந்தார்
இற்றசிறை வெற்பினமா யேய்ந்தடுத்தார் கொற்றமிக்க
வாலெடுத்து வீசுதலால் மன்னிவரு ம்பரமாய்
காலெடுத்துச் சூழ்ந்தார் கலித்து. (30)

வாள்களிற்ற விற்ற வரிசிலையி னும்வயிரத்
தோள்களிற்ற விற்ற சுடர்மழுவும் நாள்களிற்ற
விற்ற நகையெயிரி னீட்டமொடு தாள்களிற்ற
விற்றபடை கைக ளிழந்து. (31)

தெறித்த தலைக டெரித்த கவசம்
தெறித்த கழல்கள் சிலம்பு தெறித்தனவாம்
பண்மணிக ளோடு படரும் பொறித்திறங்கள்
கண்மணிக ளோடு கலந்து. (32)

உக்கனவாம் பற்குலைக ளுக்க நுவக்கெலும்பு
முக்கனவா மிக்க வுடலுயிர்கள் உக்க
மணிமகுடத் தோடு மருவு தலைகள்
பிணிமருவ வீழ்ந்தார் பிரிந்து. (33)

தாள்களிறுற் பல்லோர் தடக்கரங்க ளாற்பலவர்
தோள்களிறுற் பல்லோர் சுடர்விழியாற் கோள்களிறும்
கைக்குத்தாற் பல்லோர் கருமரத்தி னுற்பலரை
மெய்க்கொத்தான் கொன்றான் விரைந்து. (34)

Koviloor Digital Library

ஈர்க்கப்பட் டார்சிலவ ரேற்றவிடி யாற்புரண்டு
பேர்க்கப்பட் டார்பிடிப்பாற் பேர்ந்துபட்டா ரார்க்கவுடன்
பட்டார் சிலவர்முழுப் பார்வையினாற் பட்டொழிந்தார்
கெட்டா ரரக்கர் கிளை. (35)

ஓடிக்கொன் றான்சிலரை யோங்கு முடலடுத்துக்
கூடிக்கொன் றான்சிலரைக் கோமரத்தாற் சாடித்தான்
கொன்றான் சிலரைக் குவித்த பிணந்தடவிக்
கொன்றான் சிலரைக் குமைத்து. (36)

முட்டினார் போக முறையாய் முடுகியடும்
கிட்டினார்க் கொல்லுங் கிரிகளெனக் கட்டிநின்றார்
பட்டொழியக் கொல்லும் பரவைக் கிணைபடைகள்
கெட்டொழியக் கொல்லுங் கிளைத்து. (37)

மறக்கினுந்தான் கொல்லு மறவாது சேணிற்
பறக்கினுந்தான் கொல்லும் படைகை துறக்கினுந்தான்
கொன்றுதொலைத் தார்த்தான் கொடிய வரக்கர்களை
நன்றுதலை மைக்குறித்தா னன். (38)

சேறடுத்த வண்டல் செறியநிண மாய்த்திரிய
வாறடுத்த சோரி யடுத்துவர விறில்லான்
கொன்று குவித்தான் கொலைசெ யரக்கர்களை
வென்று குதித்தான் விரைந்து. (39)

கருதிவரு காலிற் கரம்வாலிற் கட்டால்
சுருதிவரன் மாருதிதான் றார்க்க நிருதரெலா
மாலைக் கரும்பானு ரார்குருதிச் சாரடுக்கும்
நீலக் கருங்கடற்கூ னில். (40)

எடுத்தரக்கர் தம்மை யெரியப் பெரிய
கொடித்தடத்த மாடமிடி கொள்ளத் தடக்கைகொண்ட
யானை பிடிபுரவி யான மடிந்தனகாற்
றானை முடிந்த தவித்து. (41)

Koviloor Digital Library

தத்தமடல் மாடமதைத் தம்முடலி னற்சிதைத்தார்
தத்தமட மாதர்களைத் தாம்சிதைத்தார் தத்தமக்கள்
தம்மைத்தாம் கொன்றார் தனிமா ருதியெறிய
வெம்மைத்தாம் வீரர் விழுந்து. (42)

ஆடன்மிக்க யானையன்ன னன்றரக்கி யர்க்கருளி
வீடடுக்க வாஞ்சிலரை விட்டார்த்தான் கூடினவர்க்
காஞ்சிலரை வீசி யடுத்தா னுடனூடும்
வாஞ்சையர்க்கு வந்தசில வர். (43)

தருக்க ளடுக்குமுடல் சார்ந்த தெருவும்
வருக்க வுடலான் மயங்கு மரக்கருட
லெங்குங் கிடக்க வெறிந்தா னனுமனெனுஞ்
சிங்கந் தடக்கை திரித்து. (44)

ஊனுயிரை மாற்ற வுளகால னேய்வடுத்தான்
தானுயிரா மாருதியுஞ் சாடினன் மீனடுத்த
வான முயிர்சுமந்த மன்னு மகிபுனைந்த
தானவர்க டம்முடலைத் தான். (45)

ஆகச் செறுவிளைய வான்ற வரக்கரெலா
மோகச் செறுக்கர் முனைந்தடுத்தார் மாகமுற்றுச்
சேர வளைத்தார் திறல்மேக மொத்தனர்கள்
மாருதியும் வெய்யவனு மால். (46)

அடலரக்க ரார்த்த லலைத்த லதனால்
புடைபெறுக்க வாற்கருமை பொங்கல் கடனிகர்த்தார்
வல்லரக்கரெஞ்ச வலித்துவரு மாருதியும்
அல்லரக்கு மந்தரமொத் தான். (47)

கரதலத்தி னுலெடுத்தும் கால்வாலி னலு
மிரையுஞ் சிரநெரிந்து வீப்பார் சுரர்நடுங்க
நல்லமுது கொண்டெழுந்த நாளி னுரகரொத்தார்
வல்லவனுந் தார்க்கியனு வான். (48)

Koviloor Digital Library

மானமுற்ற வன்பகையால் வந்து விளைத்தவெலா
மூனமுற்றக் கொன்று மொழியாதோ ரானையொத்தார்
ஆளரியா தோங்கு மனுமா னடுதொழிலின்
கோளரியா நின்றான் குலமைத்து. (49)

எய்தவெற்றி மேலெறிந்த வீர்த்த விகலினவும்
பொய்த பொத்து மேற்றொளைத்த போந்தனவுங் கொய்த
குடைந்தனவு மாகக் குறிக்க வருபுண்
மிடைந்தனவு மாமையன் மேல். (50)

கார்க்கடலின் மிக்க கணத்தி னுறுகணமும்
வேர்க்கச் செறுவிளைக்கும் வேலரக்கர் போர்க்கவரும்
பூசலதி லையன் புகழதனை விண்ணவர்கள்
பேசலதே யெங்கும் பெறும். (51)

மேவுஞ் சினத்தரக்கர் மிக்க செருவினிடை
ஏவும் படைகளெண்ணை யில்லனவுந் தேவரொடு
மன்னு முனிவர்பொழி மாமலரும் புண்ணுமுடன்
துன்னுமனு மான்றோட் டுணை. (52)

பெயர்க்கவரு சாரி பிறங்கத் திசையி
னுயர்க்கவிண்ணி னேங்கி யுறலா லயிர்க்கவெங்கும்
வீழ்ந்தழிந்தார் வல்லரக்கர் மேனி வெயர்த்துயிர்த்துத்
தாழ்ந்திழிந்தா னல்லவறத் தான். (53)

எஞ்ச லறியோ மிராவணனு லேவ்வந்து
நஞ்சமுண்டா ரென்ன நடந்தவர்க டுஞ்சினவ
ரல்லரன்றி யாவ ரடுத்தார் மனந்தளர்ந்து
வல்லரக்கர்க் காகு மறம். (54)

வந்தவனக் கிங்கரர்கள் மாத்திரைப்போ தாமடிந்தார்
நந்தவனக் காவலர்க ளோடினார் பிந்திவரு
தாலுடைய ராகிக் கருத்திற் பயந்தள்ள
வோலுடையார் வந்தா ருளைத்து. (55)

Koviloor Digital Library

விரைவினுற்ருர் விம்மி விளம்பார்க ளொன்றுங்
கரதலத்தாற் பட்டதனைக் காட்டித் தரையடுத்து
நில்லார் திசைநோக்கி நேரு மவரலக்கண்
வல்லா னறிந்தான் மதித்து. (56)

இறந்தனரோ வென்றனை யேற்கா திகழ்ந்து
துறந்தனரோ வெஞ்சமத்தின் ருேற்ற மறந்தனரோ
வந்ததென்னை யென்ருன் மடித்தபெரு வாயன்றீச்
சிந்தவரு கண்ணான் செறுத்து. (57)

சலந்தலையிற் கொண்டனரரந் தன்மை யுடையார்
அலந்தலையார் மன்செருவி னஞ்சார் புலந்தெரிந்து
பொய்க்கரிசொல் புன்கண்ணர் பொன்றுகுலம் போலவிந்தார்
மெய்க்குரங்கு வீச விளிந்து. (58)

ஏவலினு லெய்தி யிரிந்துவரு மெண்டிசைவாழ்
தேவர்களை நோக்கினாண் சிந்தையினன் யாவ
தெனவறிந்தீர் நீரென்ரு னேற்ற வுலகைச்
சினமிகுந்தாற் றீர்க்குந் திறன். (59)

மீட்டவர்கள் சொல்லெடுக்கார் விம்முதலுற் ருர்பயத்தால்
தோட்டலருந் தொங்கலினன் ருெல்குரங்கு வீட்ட
அழிந்ததுகண் டீரோ அடுத்தவர்கள் சொல்லால்
மொழிந்ததுவோ வென்ருன் முனிந்து. (60)

கண்டிருந்தோ மோர்புடையிற் காலங் கலித்துவரு
தெண்டிரையாய் மண்டிவரு சேனைதனை மண்டலமாய்ச்
சேர்ந்தகொலை மாமரத்தாற் றீர்த்த குரங்கின்னம்
சோர்ந்ததிலை யென்ருர் துதித்து. (61)

கிங்கரர்வதைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

சம்புமாலி வதைப் படலம்.

கூம்பிவரு கையான் குறித்தசம்பு மாலியெனும்
பாம்பிவருங் கண்ணனைப் பார்த்தரக்கன் வாம்பரித்தேர்த்
தானையொடு சென்று தனிக்குரங்கைக் கட்டிவந்தெற்
கானசினம் போக்கென்று ணர்த்து. (1)

ஆயான் வணங்கி யடல்வீர ராங்கடன்முன்
நீயாய் முடித்தியென்றாய் நேர்ந்ததெனத் தீயானும்
பொன்னிலங்கை மன்னன் புரிந்தசினம் போவதென
மின்னிலங்கச் சென்றான் விரைந்து. (2)

தன்னுடைய தானை தசமுகத்தான் றந்தபடை
கொன்னுடைய தந்தை கொடுத்தபடை தன்னையொத்த
வீரவரர் தந்தபடை வேலா வலையமெனச்
சேரவர வந்தான் சினந்து. (3)

உருமொத்த தாமுழக்கி னோங்கு வரைபோற்
பருமித்த யானை பதும னிருமித்த
மாவெழிலி யாம்நிலைய மன்னு கொடித்தடந்தேர்
தாவொழியான் சுற்றநடந் தான். (4)

காற்றை மருங்கசைத்துக் கால்வகுத்த தென்பதுடன்
கூற்றைமருண் டேற்றுங் குலப்பரிகள் தூற்றின்
பயந்தரவாய்ச் சூழ்ந்துசுழல் பைங்கட் புலிபோல்
வியந்தரவாங் காலாள் விதம். (5)

தோமரங்கூர் வாள்குலிசந் தோட்டி மழு வேல்வில்
காமரம்போற் றண்டுபெருங் கற்பணங்கள் மாமரமும்
பாசநிலை யாம்வலையம் பாரித்த கையுடையார்
ஆசைநிலை போரையடுத் தாம். (6)

Koviloor Digital Library

எத்துமயில் குந்த மெழுக்கழுவைக் கையேந்திக்
குத்துமயல் கொண்டு குழுக்கொண்டார் வெத்திகொண்டு
போவதனைப் போலப் புரியும் பதாகையினூர்
காவதனைச் சூழ்ந்தார் கலித்து. (7)

பல்லியங்கள் சேரப் பணில முரலத்தேர்ச்
சில்லியிடிப் பச்சிரிப்ப தேர்வாசி யொல்லொலிகள்
மேவியொன்று சேர்ந்து மிகவானிற் றேவர்துதி
பூவினென்று தாக்கும் பொலிந்து. (8)

மின்னகர வாங்கிரிகள் மேரு வெனவடுக்கத்
தொன்னகரம் போற்றுந் துரக்கமென்று மன்னவன்றன்
தானைசெல வாற்றல் தகைந்திலங்கைப் பொற்பூழி
வானைநில வச்செல்வ தால். (9)

ஆயிரமைந் தோடைந்தா மாழித்தே ராங்கிரட்டி
மாயிருயா னைக்கிரட்டி மன்னுபரி போய
பதாதி புரவிதுவம் பாங்கடுத்த தீயன்
சதாகதியாந் தேர்சூழ் தரும். (10)

வின்மறையர் விஞ்சை விதத்தார் வரத்தினுற்றூர்
வன்மறவர் வன்கண்ணர் வான்புயத்தார் வெங்மறைக்கும்
தூணியுடைத் தாரர் தொடுகவச மார்புடையார்
ஆணியுடைத் தேரரடுத் தார். (11)

பொருதிவரு தெவ்வைப் புரம்பார்த்த வீரர்
நிருதிவரு தொன்மரபி னேர்வார் குருதிவரு
செங்களத்தைச் சேருக்கிச் சேருந் திறல்படைத்த
அங்களிற்றின் வீரரடுத் தார். (12)

எருற்ற சாரிபதி னெட்டு மியல்பினெண்ணிப்
போருற்ற வாட்புலவர் போரதனிற் றேருற்றூர்
யானைத் தரர்சிரத்தி னுட்டுங்கால் கோட்டிவரும்
தானப் புரவியர்வந் தார். (13)

Koviloor Digital Library

அந்நெடிய தானைசுற்ற வச்சமம ரர்ச்சுற்றப்
பொன்னுடைய தேர்ப்பொருப்பிற் போம்நெருப்பான் கோன்
வீறடுத்த வில்லான் விரற்கவசன் வந்தடுத்தான் [னுடைய
பாறடுத்த வ்ாகவத்தன் பான். (14)

நந்தவன முந்திநின்ற நாயகன்றா தன்னரக்கர்
வந்தவாரில் லென்று வழிநோக்கி இந்திரவில்
லென்னவுற்ற தோரணத்தி னேறி நிமிர்ந்துநின்றான்
பன்னவுற்ற வீரன் பகைத்து. (15)

கேழ்மணியும் பொன்னுங் கிழிக்கு மிருளையென்ற
ஆழ்முறையாந் தோரணத்தி னும்பருற்றான் சூழ்கதிர்க
ளெல்லாஞ் சுடர விருக்கு மருக்கனொத்தான்
வல்லாள னானவனு மான். (16)

செல்வினொடு மேகஞ் சிதரக் கடல்கலங்கக்
கல்லளைசேர் நாகமது காலவுயிர் வல்லரக்கர்
நெஞ்சினச்ச மேற நெடியோன் தனுவிடியாய்
வெஞ்சினத்த னார்த்தான் விரைந்து. (17)

நின்றதிசை வேழம் நெடுஞ்செருக்கு நீங்கநமன்
றன்றவரு முள்ளந் துணுக்கமுறப் பொன்றவிலா
மீனுதிரப் பூப்பிளக்க வேலை துளக்கமுற
மானவரன் றோள்கொட்டு வான். (18)

அவ்வழியி னாமரக்க ராழி யெனவார்த்தார்
செவ்வழியி னிங்குபிணஞ் சேர்குன்றாற் கவ்வையுற்றுச்
சாரநின்றார் தங்கள் தமரிடற வீழ்ந்தடுப்பார்
சோரிமண்டு மாற்றிற் றுளைந்து. (19)

ஆண்டுபடை வல்லா னணிவகுத்துச் சேனைதனை
மூண்டுபுடை சூழ முறையேவித் தாண்டினன்றேர்
தோரணத்தான் கண்டு சுடரும் படையடைசேர்
காரணத்தான் வீங்கினன்றோட் கல். (20)

Koviloor Digital Library

அய்ய னமைந்துநின்ற ஞாழி வரனுமம்
நெய்விளக்கிற் றேன்றநெற்றி நெற்றியாய் மொய்ம்மயிரே
சேனையவாய்ப் பொங்கத் திறலுகிர்வாட் கைகையா
யேனையவால் கூழை யென. (21)

வயிர்வால் வளைகலிப்ப மாயஞ் சிலைப்பச்
செயிரா ரக்கர் சினந்தார் அயிரடுத்த
வெம்படையாற் போர்த்தார் விசய மதன்மலரா
மம்படையான் றன்னை யடுத்து. (22)

கருங்கடலென் ஞமரக்கர் கைப்படையைக் கையா
லொருங்கடலுன் ஞப்பிணித்தா ஞேட்டித் தெரிந்த
நெருப்பா யடித்தார் னெடிதா மெழுவைப்
பொருப்பா யெடுத்தான் புகழ்ந்து. (23)

இருந்தா னெழுந்தா னிரித்தா னுயர்ந்தான்
திரிந்தான் புரிந்த தெரியார் விரிந்தபடை
வீரரெழுந் தேர்க்கா விதமாய்க் களத்தவித்தான்
சூரனெழுத் தண்டினடுத் து. (24)

எறிந்தனவு மெய்தனவா யேற்றபடை தன்னைச்
செறிந்தவிடக் கையாய்ச் சிதைத்தான் முறிந்தனவாய்
மாக்கரிக டேர்பரியாள் மன்னு வலக்கையாற்
றாக்கரிய போரரிறைத் தான். (25)

இழந்த கொடிக ளிழந்த விருகோ
மிழந்த கரந்தா ளிழந்த முழக்கொலியு
மேற்றவரு மும்மதமு மின்றி மடிந்தகரி
சாற்றுவதா ரன்ன தகைத்து. (26)

நெறிந்த சுவரு நெறிந்த பெரும்பார்
நெறிந்த நுசுப்பு நிகர்கால் நெறிந்த
கொடிஞ்சி யொடுவியன்ஞர் கூறுங் குதிரை
மடிந்தனவாந் தேர்கள் மதித்து. (27)

Koviloor Digital Library

ஒடிந்த வுலந்த வுருண்ட புரண்ட
விடிந்த யெரிந்த யெழுந்த படிந்தனவா
மன்னுமலை யென்ன வருபோர்ப் பரிசிறைகள்
தன்னிலையில் லாதுதொலைந் த. (28)

வெருண்டார் வியர்தார் விழுந்தா ரெழுந்தார்
மருண்டார் புரண்டார் மறிந்தா ருருண்டா
ருலைந்தா ருழைத்தா ருருமைநிகர் வீரர்
மலைந்தார் விழுந்தார் மடிந்து. (29)

கரியாற் கரியைக் கணத்திற் புடைத்தான்
பரியாற் பரியைப் படுத்தான் வரிசிலையர்
தம்மையவர் தம்மினட்டான் சாடினன் றேர்தேராற்
செம்மையவர் தம்மினட்டான் றேர்ந்து. (30)

மூளை யுதிர முழங்கிக் குழம்பாக
மீளாக் குழையின் விழுங்கரிகள் தாளொடுதோள்
சேர்த்துத் தலைசிதறச் சேர்கிரிபோற் றேர்கள்விழத்
தீர்த்துப் பொடித்தான் றெரிந்து. (31)

மல்லோடு சொல்லு மலைத்தோ ளரைவளைவாய்ப்
பல்லோடு கையாம் பகட்டினொடு வில்லோடும்
வேலோடு மேலா விளித்துவரு சொல்லோடும்
தாலோடு நின்றுதுகைத் தான். (32)

புகைபொறியுஞ் செல்திசையிற் போய்ப்பொலிந்து நின்றான்
சிகையடுத்த தேர்தோறுஞ் சென்றான் தகைசேர்
கரிபரிக டோரு கலந்தான் வயவ
ரெரிசிகையைத் தீர்த்தா னிடித்து. (33)

வென்றிப் புரவி வெரினும் விரவலர்கள்
மன்றலணி மார்பு மணித்தேரு மொன்றினொன்று
குன்றிறுத்துச் சாய்க்குங் கொடிய விடியென்ன
வென்றிரித்துத் தீர்த்தான் விலைழந்து. (34)

Koviloor Digital Library

பிரிவரிய கோலாய்ப் பெயர்ந்தான் பெரியோ
ரிருவினைசே ராவறிவி னேய்ந்தான் வருதனத்தால்
வாங்குவிலை மாதர் மனமாய்ச் சுழன் றடைந்தான்
தாங்குசிலை மாதவன்றா தன். (35)

அண்ணலவன் மாலோற் கடியா னவன்சீரை
நண்ணுவனெ னும்பொருளை நாட்டுவான் மண்ணும்
விசும்பு மருங்கும் விரிந்தார்கள் கண்ணும்
அசும்புபடக் காய்ந்தா னடித்து. (36)

கொடித்தடந்தே ரோடெங் குதிரைக் குழுவை
யடித்தடர்ந்தான் பூவி னரைத்தான் இடித்துரப்பி
வல்லெயிற்று வான்பொருப்பை வாங்கிப் பிழிந்தெரிந்தான்
நல்லயிற்கை யாரை நலித்து. (37)

கறுத்த நிறத்தர் கவினு மெயிற்றர்
செறுத்தெரியைச் சிந்துகண்ணர் தீயர் வெறுத்து
மறலியென வந்தார் வரத்துருத்தி ரன்போற்
றிறலியையக் கொன்றான் செறுத்து. (38)

சக்கரங்க டோமரந்தான் தண்ட மயில்வாள்வேல்
மிக்க பரிதேர் விரவுகொடி யுக்க
குருதி வருதிரையிற் கொண்டுருட்டி வேலை
பொருதி வருதிரையிற் போம். (39)

எட்டும் விசும்பை யெழுவாற் படவெழுந்து
முட்டும் மலையை முரிதலையத் தட்டியவை
யொன்றினொன்று தாக்கி யுடைந்து விழவுதிர்த்தான்
குன்றினொன்று தோளான் குறித்து. (40)

கானெய்தும் வேழக் கணங்க ளரிகொன்ற
வானெய்த நின்ற மதவரையான் தேனே
புரைகண் கனல்சொரியப் பொங்கினான் சீற்றம்
வரைசம்பு மாலியென்பவன். (41)

Koviloor Digital Library

காற்றிற் கடும்புரவி கான்றும் நிருதர்களத்
தாற்றுக் குருதி யடுத்தகொள்ளச் சேற்றிற்றேர்
ஆழியெழுந் தேக வரிதாய்க் கவலைமிகப்
பாழியெழுந் தோளன் படும். (42)

எதியொன்றுற் றேரொன் றெளியோ ருயிர்கோற
னீதியன்றுற் காக்கு நிலையில்லாய் சாதி
பிறிதென்னை செய்தி பிணங்குவாய் போதி
வறிதென்னை யென்றான் மகான். (43)

நன்றான் கருணையென நாட்டம் நெருப்பெடுத்தான்
பொன்றும் புரையிலெனப் போக்கினு யென்றடர்த்து
வன்றிண் சிலையின் வயிரச் சுடர்வாளி
யொன்றல்ல தொட்டா னுறுத்து. (44)

செய்திசிலைப் போர்வெறுங்கைத் திண்ணியரைக் கண்டடுத்தா
ஞெய்தின் வெலற்கென்னையென நோக்கிநக்கான்எய்தியவன்
அங்குமிங்குங் காலா லழியுமழை போற்பகழி
எங்குமங்க வேற்று னெழு. (45)

முற்ற முனிந்தரக்கன் முன்னடுத்துப் பின்னுமடுத்
துற்ற பகழிமுரித் துன்னினான் சுற்று.
மிரதத் தடித்தா னெழுவைப் பொடித்தான்
கரமுற்ற வில்லான் கடுத்து. (46)

சலித்தா னரக்கன் சரங்களுகச் சாடி
யொலித்தான்றன் றேரு ளுகந்தான் கலித்தான்
சிலையைச் சிரத்தினிலை சேர்த்திர்க்க வீழ்ந்த
மலையைச் சிரித்ததலை மண். (47)

குதித்துத்தே ரூர்வான் குலப்பரியு மொன்ற
மிதித்துத்தான் தோரணத்தான் வீரன் உதித்துப்
புலர்ந்ததோ லாகும் பொருநாட்டிப் போனார்
அலர்ந்ததோர் காவலடுத் தார். (48)

Koviloor Digital Library

பிரிந்தபெண்கள் காணப் பெருங்கணவர்ப் பற்றி
விரிந்த குருதிநதி வீச விரிந்திலங்கை
கெட்டதிவ ஞலென்று கேடுடைய பேழ்வாயை
விட்டழுதார் கூகூ வென. (49)

புக்கா ரமரர் பொருவி லவன்கோயில்
விக்காநின்ருர் விளம்பார் விம்முவார் நக்கரக்கன்
நன்றுரையு மென்ரு னமர்சம்பு மாலியுடன்
கொன்றுறையு மென்ருர் குரங்கு. (50)

என்னு மளவி னெழுந்த வெகுளியினுன்
உன்னக் குருதி யுமிழ்கண்ணுன் சொன்னகுரங்
கைப்பிடிப்ப னென்றெழுந்தான் காணும் படைத்தலைவ
ரொப்படைப்பார் வந்தா ருருத்து. (51)

சம்புமாலி வதைப் படலம் முற்றிற்று.

பஞ்சசேனுபதிகள் வதைப் படலம்.

சிலந்தியுண்ணுங் கோடரமேற் செல்லிற் றிரலோய்
கலந்துவரு போரிற் கவன்றும் புலர்ந்த
திசையோங்கு மானை செறுக்கு மதத்தா
லிசையோங்கு மென்ரு ரெடுத்து. (1)

இலங்குரத்த தாஞ்சினத்தி னேற்ற கருடன்
உலங்குறுத்த தாங்குரங்கை யோட்ட லலங்கலுற்று
நின்றுயர்வாந் தோளை நினைந்து மனந்தளரும்
வன்றுயர்போம் வெள்ளி மலைக்கு. (2)

உறுவதொன்ரே வல்லமையி னேங்கிவரு தெவ்வர்
பெறுவதொன்று மில்லையெனப் பேர்ந்தார் சிறுமையிதாம்
பெற்றியுற்ற மூவர் பிறங்கு முகங்களெலாம்
வெற்றியுற்ற தாகு மிகுந்து. (3)

Koviloor Digital Library

அன்றியுனக் காளின்மை யாகு மதுவன்றி
வென்றியறி யார்சிலரை விட்டிருந்தாய் நன்றிவர
வேண்டுமெனி னெங்கள் விசைய மறியவென்றார்
ஆண்டகையா மென்று னறிந்து. (4)

உலகந் திரிபடரா வோங்க வுவந்தார்
திலகம் படவணங்கிச் சேர்ந்தா ரலகில்லாத்
தேர்புழைக்கை மாகாலாள் சேர்ந்து வருகென்றார்
கார்முழக்க மாகக் கலந்து. (5)

ஆனைதனிற் பேரி யடித்தா ரதுகேட்டுப்
பேனைதனிப் பேர்கடலாப் பேர்ந்தபடை சோனை
முகிலினிய மார்த்துவர மோதும் பண்டைகள்
தருதிபெறு மின்னுவமை தாம். (6)

தானையனை கேதனங்க டாங்குமழை மேற்றுள
வேனையனு மான்முனிய வேற்றுலர்ந்து போனபற்றாற்
கானபுகழ் போல வடுக்குங் ககனமிசை
வானநதி வான்றிறையு மாம். (7)

விரவுகழல் கட்டி வெரிநின் விளங்கச்
சரமடுத்த தூணி சமையப் புரவிகட்டுந்
தேரடுத்துப் பூட்கை செறியப் பருமிதத்தாந்
தாரடுத்த வீரர்கள்வந் தார். (8)

ஆறுசெய்த வானைமத மவ்வாற் றினையடுத்துச்
சேறுசெய்த தேர்ச்சில்லி சேறதனை நீறுசெய்த
தாம்பரியி னுங்குரந்தான் சாற்றுமதை வீறுசெய்யும்
வாம்பரிவி லாழி மடுத்து. (9)

வழங்குமிர தத்திடிப்பும் வாசிகொண்ட வார்ப்பும்
முழங்குதாரத் தத்தி முழக்கும் தழங்குமிய
வல்லொலியு மாக்கல் வழங்கு யுகக்கடலி
னெல்லொலியைப் போக்கு முயர்ந்து. (10)

Koviloor Digital Library

ஆழித்தேர் கொண்டதொகை யைம்பதி னாயிரமாம்
சூழிப்பூட் கைக்குமிதே சூழிரட்டி யூழிக்காற்
றன்ன புரவி யவற்றிரட்டி கொண்டதுவாம்
பன்னவரு சேமப் படை. (11)

கூய்த்தரத்தாம் வந்து குழுமிச் சினந்தபடை
நீத்தமுற்று மென்ன நெருங்கிவரக் காய்த்துரத்திற்
றூக்கும் படைகளொன்று தாக்கும் பொறிக்குலத்தால்
வாய்க்கு மெழிலி வறண்டு. (12)

பண்மணியாம் யானைப் பரவை புடைமிடைந்த
வொண்மணியார் மேகத் துருமையொப்பக் கண்மணிகள்
காய்ந்த தரத்தார் கனலாய்ப் புடைசூழ்ந்தார்
வாய்ந்தவரத் தூது வினை. (13)

தொக்கபடை யாரைத் தொடிக்கை மகளிரொடு
மக்கள்படு சுற்றம் வழிமறித்துத் தக்கதன்று
போனவர்கள் போனார் பொருது குரங்கதனால்
வானுலக மென்றார் மருண்டு. (14)

கைபரந்த சேனைக் கடலிற் கலந்தடுத்தார்
செய்கைவரு தேர்க்கதிராய்ச் செய்யவே யைவர்களும்
பூதமைந்து மொத்த புரிவிற் சிறந்தமைந்தா
ரோதமைந்து கொண்டா ருருத்து. (15)

முந்து மியங்கண் முறையிற் பொரிசிதர
வந்த வுருமாய் வழங்குசிலை மைந்துடையார்
மாமுனிவர் தேவர்கட்கு வாய்ந்தபகை யிந்தியங்கள்
தாமுனிந்து வந்தமையொத் தார். (16)

வாசவன்றன் வச்சிரமும் வானவரு ணன்கயிறுந்
தேசுடைய தென்றிசைக்கோன் சேயெழுவு மீசனுடைச்
சூலா யுதமொன்றிச் சூசி யளவுவடி
வேலாப் புயத்தா ரிவர். (17)

Koviloor Digital Library

சூர்தடிந்தோன் கேகயத்தின் றோகை பரித்ததுடன்
பார்பயந்தோ னன்னத்தின் பாலிறகும் வீரமிக்க
சூடிகையாய் நெற்றிமிசை சூட்டும் வலர்மூவர்
நாடவரு நல்வலியி னார். (18)

வன்றிணிந்த தோளரக்கன் மார்பிற் பொருதிழந்த
பின்றரிந்த கோட்டின் பெருங்குழையார் நின்றதிசை
யானைநெற்றி வீரபட்டத் தாலடுத்த நெற்றியினார்
சேனைமுற்றி வந்தார் தெழித்து. (19)

நிதிக்கிழவன் றன்னை நெருக்கி நகரிற்
பதித்து வருதிருவைப் பண்டை விதித்தெடுத்தும்
அன்னவனை வெங்காட்ட வாக்கி யிழைபறித்தார்
பொன்னணியைக் கொண்டார் புயத்து. (20)

இந்திரன்றன் மூந்து மிகலில் வலியிழந்து
தந்தி தனைமுடுக்கத் தாமதன்வா லுந்தியினி
வல்லவனே லேகென்று வார்ந்திழுத்த வூற்றத்தார்
அல்லவனை மேனியுடை யார். (21)

பாணிறத்து வேதன் பணியா லுமதுவரக்
கோணினைக்கா னென்றுலகங் கூறுதலு நீணிறத்து
வல்லரக்கன் றன்முனிவை மாற்றுவான் காலனையும்
பல்லிறுக்கிப் பற்றியடுப் பார். (22)

மலையைநகு மார்பர் வளரும் கடலின்
அலையைநகுந் தோளா ரரியின் கொலையைநகும்
வெத்திக் கொலையர் மிகுந்துகொல்ல லூதுலையை
நத்திக் கொதித்திடுகண் ணார். (23)

தோல்கிளரு நற்றிசையாற் சூழுலகஞ் சுற்றிவரு
கால்கிளருங் காயெரிதான் காய்ந்திடினுஞ் சால்கிளருங்
காலோங்கி நின்றிடினுங் காணுங் கடன்மிகினு
மாலோங்கு வன்மைமிகு வார். (24)

Koviloor Digital Library

இவ்வகையா மன்னு ரெழுந்துவரு தானையினர்
செய்வகையார் தோள்புடைத்துச் சேர்ந்தார்த்தார் கையொடு
கட்டினர் வல்லணிகள் காய்ந்தடுத்தார் தோரணத்தைத் [மெய்
தட்டினு ரையனுணர்ந் தான். (25)

அரக்க ரடலு மளவில்லாச் சேனைத்
தருக்கு மனுமான் தனிமைச் செருக்கும்
பொருக்கென்று நோக்கிப் புலவோர் அறிந்து
வெருக்கொண்டு நின்ருர் மிசை. (26)

இற்றுணர்ந்தார் வல்லரக்க ரிப்பகலி னென்றுமனம்
கற்றுணர்ந்த தூதன் களித்தடுத்தான் முற்றுணர்ந்து
வாளெடுத்த சேனை வரவதனை நோக்கித்தன்
தோளெடுத்து நோக்குந் துதித்து. (27)

புன்றலைத்தாம் புன்குரங்கு பொன்னுட் டமரர்புகழ்
வென்றலைத்த வேலரக்கர் மெய்ப்புகழை வன்றிறத்த
வேரோடு தின்று விளைந்திருந்த தென்றுரைத்தார்
சீரோட நின்ருர் தெளிந்து. (28)

ஆயிடையி ளுகு மனுமா னமரர்கள்
வாயிடையி ளுகும் வழிவைத்த சேயொளிய
தோரணத்தா னும்பர் சுருங்கப் பெருத்தடர்த்தான்
ஆரணத்தா னன்ப னறிந்து. (29)

வீங்கியலும் வீரன் விசைய மதைநோக்கித்
தீங்கியலும் வல்லரக்கர் சேர்சினத்தார் வாங்குஞ்
சிலைவளைத்தார் பாணமழை சிந்தினர் செய்யும்
கொலைவளைத்த் கையார் குறித்து. (30)

எறிந்தனர்க ளெய்தனர்க ளெண்ணிறந்த வீரர்
பொறிந்த படைக்கலங்கள் போக்க நெறிந்துவரு
மாமயிரி னும்புரத்தின் மன்னிச் சொரிந்தவெனத்
தாமருவி வீரனிருந் தான். (31)

Koviloor Digital Library

உற்றுடன்று தாக்கி யுருத்த வரக்கர்படை
செற்றுடன்று போக்கவரு சிந்தையினான் முற்றி
வரும்பரிசு கண்டான் வலிய வெழுவைப்
பொரும்பரிசு கொண்டான் புகழ்ந்து. (32)

ஊக்கும் படைக ளுருத்தடர்த்த வீரர்விழத்
தாக்கும் பரியைத் தடுத்துயர்தேர் மேக்குவிழ
மேகநெடு மாலையென வீங்குங் கரிகளுடன்
சாகநெடுந் தண்டினடித் தான். (33)

வார்மதத்தி னுங்கரியின் வன்கோடு வாங்கியதாற்
றேர்மடித்துத் தேரடுத்த சில்லியினால் வீரர்
தமையுருட்டும் வீரர் தனிவாளிற் கோரந்
தமையுருட்டு மேலோன் தகைந்து. (34)

இரண்டா மிரத மெடுத்திரண்டு கையா
லிரண்டாமி யானைகளை யெற்று மிரண்டுகரி
கொண்டிரண்டு கோரமதைக் கொன்றடர்க்குங் காலாளை
மண்டுதரை தேய்க்கும் வளைத்து. (35)

மாயிரும்பேர் மாமலையை வாங்கி மகியினிட்டங்
காயிரந்தேர் தீர வரைத்தடர்க்கும் ஆயிரமாம்
யானைதமை யோர்மரத்தி னலடிக்கு மேயெனுமுன்
சேனைதமைத் தீர்க்குஞ் சினந்து. (36)

உதைக்குங் கடகரியை யற்றுழக்குந் தேரை
மிதிக்கும் பரிகடமை வீரர் மதிக்குமலை
வல்லெழுத்த னலரைக்கும் மண்ணிற் குதித்துலைக்கும்
பல்லழுத்திக் கொல்லும் பழித்து. (38)

விசையினெடு தேர்களிறு வீசித் திசையு
மிசையுங் ககனத்து மேற்றுங் குசைகொள்
பரியதனை யாளினொடும் பற்றிப் படுக்கும்
பெரியகரங் கொண்டு பிசைந்து. (38)

Koviloor Digital Library

தீயும் பொறிசிதறுஞ் செங்கணுடை வேங்கைமா
மீயுற்று வீரனுடன் வீசுதொறும் போயடுதேர்
ஆயுடைய நீள்கொடிக ளாழி தனிலாழ்வ
பாயுடைய நீள்கலமொப் பாம். (39)

மீயுற்று விண்ணை முட்டி வீழுந் திரைக்கடலி
னேய்வுற்றுத் தாழு முடற்பரிகள் வாயி
னுதிரங் கடவுதலா லோங்கெரியை வாய்க்கொண்
டதிரும் வடவையென வாம். (40)

தாருருளி னேடுந் தடக்கையி னுந்தனியாம்
வீர னெறியவிண்போய் வீழ்வனதாம் சூரனென
வேற்ற சுடர்க்கடவு ளின்றேர் நிகர்த்தனவா
மாற்றுபரித் தேர்க ளடுத்து. (41)

வரிந்துவல்லே சுற்றியடல் வாலெடுத்து வீச
விரிந்த கடலடுத்து வீழ்வார் அரவாற்
செறிய வருகயிற்றிற் றேர்மந் தரத்தை
யறியவர லானு ரடுத்து. (42)

வீரன் தடக்கை விரித்தடுத்து வீசவரு
வார்கரியிற் றேரதனின் வாசிகளின் மூரிக்
கடலிற் புகக்கருதும் காணமுந்து மூரின்
படுகுருதி யாறீர்ப் பன. (43)

பிறைக்கடையின் வாளெயிற்ற பேர்முழையாம்வாய
கறைப்புனலுந் தீயுமிழுங் கண்ண வுறைத்தபடை
யோடுதிர்ந்த யாக்கைகளா லோங்கி மறைத்தனவாம்
மாடுயர்ந்த தோரணத்தை வான். (44)

குன்று மரங்களுள கொல்லவெழும் பேரெழுக்க
ளொன்றோ வுயிருண்பா னுள்ளவங்கே யன்றிப்
பலருளரு மையன்கைப் பட்டுமடிந் தன்றி
விலகுவஃதற் கெங்காம் வினை. (45)

Koviloor Digital Library

முழுமுதலாங் கந்த முருகனத்தன் கையார்
மழுமுதலாச் சேர்ந்த வயிர வெழுவாற்
பொலங்கழலி ஞரரக்கர் பொன்ற வதைத்தான்
கலங்கழலின் வீரன் கடுத்து. (46)

உலந்ததுவாந் தானை யுவந்தனரா மும்பர்
அலந்தலையும் பொன்னிலங்கை யன்றே கலந்த
தழுங்குரலி ஞேதை யடுத்தைவர் வந்தார்
எழுங்குரலை வீரத் தெடுத்து. (47)

ஈர்த்தெழுந்த செம்புனலி னெக்க ரிழுக்கவதிற்
றேர்த்துணைகொ ளாழிபுகச் சென்றடுத்தா ரார்த்தனராய்
ஆயிரமா மம்புமழை யஞ்சனைசிங் கம்புயத்திற்
பாயிரமா வீழ்த்தார் பழித்து. (48)

எய்த கணையாவு மெய்தா வகையாக
கொய்தகலக் கையா னுறுக்கினன் வெய்ய
கடும்பொறித்தே ரைந்திஞேன்றைக் கையாற் சிதைத்தா
னிடும்பொறித்தே ரேற்கா வினன். (49)

உற்றடுத்த தேரா னுயர்ந்தான் சிதைத்திடுமுன்
முற்றடுத்த வீரன் முனிந்தனன்வான் பொற்ற
வெழுவைப் பொறுத்தா னெறிந்தா னவனும்
முழுவிற்கொ டேற்றான் முனிந்து. (50)

முறிந்தரக்கா வில்லு முறிந்த தனைத்தான்
எறிந்தரக்கன் வெற்பை யெடுத்தா னறிந்தரத்த
னவ்வெழுவைக் கொண்டே யவனுயிரைப் போக்கினன்
தெவ்வெழுதல் காணுத் திறன். (51)

ஒழிந்தவர்கள் நால்வர்களு மூழி யுறுத்த
கொழுந்துறுதீ யென்னக் கொதித்துப் பொழிந்தனராம்
வாளியடற் றேரர் வழிந்ததுசெய்த் தோரருவி
மீளியடற் றேளின் மிசை. (52)

Koviloor Digital Library

ஆயவறக் கட்குரிசி லன்றடுத்தா னுள்ளமுடன்
மாயவரக் கர்க்குறிய வன்மைகண்டான் மீயெரியை
உய்ப்ப தொருசிலையை போக்கிவிட்டான் றீங்குடையார்
கைப்பொடியாப் பெய்தார் கடுத்து. (53)

தொடுத்த தொடுத்தசரந் தோன்றா து மார்பி
னடுத்தகன் ற தாக வழன்றான் மிடற்றொழிலான்
விட்டடுத்த தேரொன்றை வீசினன் விண்ணடைய
மட்டடுத்த தாரான் மதித்து. (54)

ஏந்தியடு தேரு மெடுத்தவொலி விண்ணதனை
நீந்தியடுத் தோடி நிமிர்வேக மோய்ந்துதரை
வீழ்வதொல்லான் பாய்ந்தான் விறல்மா ருதிபாய்ந்தான்
தாழ்வதில்லான் மேனி தனில். (55)

மதித்தடுத்த யானைதனை வாளரியி னேறு
கதித்தடுத்துப் பாயுங் கதியாய்க் குதித்தடர்த்தான்
மால்வரையா மேனி மயங்கமிதித் தான்மதனன்
கோல்வரையா மேனிகொண்ட கோ. (56)

மூண்டிவரு மேற்சினத்தார் மூவர் முனிந்தார்த்தார்
தூண்டிவரு தேரர்களை தூர்த்தடர்த்தார் வேண்டியதா
வெஞ்சமங்கள் வேறு விளைப்பா ரனுமான்முன்
எஞ்சலின்றி வந்தா ரெதிர்த்து. (57)

திரண்டுடைய தோணமலையன் சிமான்றன் றூதன்
அரண்டருசீர் விண்ணோரு மஞ்ச முரண்டருதேர்
மூன்றி னிரண்டை முரணிரண்டு கையெடுத்துத்
தோன்றிவரும் விண்ணிற் றொடர்ந்து. (58)

தூங்கு நயத்தபரி சூத ருலைந்தனர்கள்
வீங்கு புயத்தர் விசைத்தார்விண் ணோங்கதுகண்
டன்னிலையிற் போயகலா வாறவரு மாருதியுந்
தொன்னிலையிற் சென்றான் றொடர்ந்து. (59)

Koviloor Digital Library

கானிமிரும் வெஞ்சிலைகள் கையி னிறுத்தடர்த்தான்
ஆனவர்க ளேனிதட ராயகைத்தான் ஏனையவர்
வெம்படைவா ளில்லார் விரியு மமரெஞ்சார்
தம்படைவான் மல்லின்மலேந் தார். (60)

வெள்ளை யெயிற்றர் விரவு கருமெய்யர்
பிள்ள விரித்த பெருவாயர் கொள்ள
வுருத்தடருங் கோளரவை யொத்தார்கள் வீரன்
அருக்கனிக ராளு னறிந்து. (61)

தாம்பெனவாய் வாலதனிற் சார்ந்துகட்டித் தாளுடனே
ஏம்பலிலார் தோளை யிறுத்தவுடன் பாம்பெனவாய்
நீங்கினர் பட்டார் நெடியோ னடற்றாத
னோங்கினன் கட்டா னுருத்து. (62)

நின்றவனு மேனையன்பூ நின்ற தனைக்கண்டான்
குன்றமென வாவலுற்ற கோளரிபோல் மின்றிரியும்
வன்றலையி னேகுதித்தான் மன்னுவையத் தோடவன்றான்
பொன்றலுற்றான் மண்ணிற் புகுந்து. (63)

வஞ்சனத்தி யாங்களவு வாங்கரிய நஞ்சனைய
வெஞ்சினத்தி ராக்கதர்கள் மேலடுத்த வஞ்சாம்
புலனொத்தார் வென்றடுத்துப் போற்றுமறி வொத்தான்
வலனொத்த வீரன் மதித்து. (64)

நெய்தலைய வேற்கை நிருதர் செருநேந்தா
ருய்தலையுற் றார்க ளொருவரிலை யைவர்
உலந்தலைவுற் றாதனை யுற்றறிந்தார் தீயோர்
அலந்தலைவுற் றார்க ளழிந்து. (65)

இறக்குறுமாம் நம்மை யினிக்குரங்கென் றுன்னி
மறக்குறவாஞ் சிந்தை மயங்கிச் சுறுக்கொள்ள
நோக்குவான் காதி னுழைத்தார் மருவலரைத்
தாக்குவான் காறுந் தரம். (66)

Koviloor Digital Library

தானை யுலந்த தலைவர்களுஞ் சாய்ந்தனர்கள்
போனவரின் மீண்டவர்நாம் போரடுக்கோம் வானையுந்தான்
வென்றவரை நூறி விழைந்த குரங்கடுத்துச்
சென்றவரை நூறுமென்றார் தேர்ந்து (67)

பஞ்சசேனாபதிகள் வதைப் படலம் முற்றிற்று.

அட்சகுமாரன் வதைப் படலம்.

கேட்டரக்கன் கோபங் கிளைத்து வருமுயிர்ப்பான்
தோட்டரக்கு மாலை சுறுக்கொள்ள வூட்டரக்கை
யுண்டமைந்த கண்ணா னொருப்பட்டானைத்தொழுது
கண்டமைந்தன் சொல்வான் கனன்று. (1)

முக்கண்ணா னூர்தியன்று மூன்றுலக முந்தாயோன்
ஒக்க பரவை யுரகமன்றேற் றிக்கயந்தான்
அல்லதல மாகுரங்கை யாய்வதற்கு நீயெழுந்தா
னல்லதல வென்றா னகைத்து. (2)

அண்டர்பணி மன்னை யடர்த்தற்கென் முன்னவனைக்
கொண்டபணிக் கென்சிந்தை கோடலது முண்டதனைத்
தீரக் குரங்கைச் செருக்க வருளென்றான்
வீரர்க்கு வீரன் விளித்து. (3)

கொய்தளிரைக் கோதிவரு கோடரத்தின் மேனிகொண்டு
கைதவந்தான் செய்யவரு கற்பதனா லெய்தா
மரனென்ற போது மடர்த்திடுவ னென்றான்
உரனின்ற மைந்த னுருத்து. (4)

துண்டத்தாண் டோன்றுமரி தூயவலிக் கோட்டிணரிடை
மண்டொத்து கேழலிதாய் வந்திடினுந் தண்டத்தைச்
செய்தவத்தை யாக்கிநின்பாற் சேர்ப்பேன் சிறந்தென்றான்
கைதவத்தாம் நெஞ்சன் கனன்று. (5)

Koviloor Digital Library

எனவியம்பி யீதிவிடை யென்றிரஞ்சி நின்ற
வினைவியந்து கண்டு மகிழ்ந்து துனைபரித்தேர்
மீதேறிச் சேறியென்றான் மீளாப் படையுடனே
தீதேறிச் சென்றான் றெழித்து. (6)

எயினனு மன்னோ னிகலின் வலாரிவிட்ட
நூறிரண்டு பூண்டபரி நோன்மைகொடேர் தேறினார்
வல்லரக்க ராசி வழங்கப் படைகடலாஞ்
சொல்லிருக்க வந்தான் றொடர்ந்து. (7)

கடன்மகர மெண்ணிற் கருதலாம் பூட்கை
யடன்மீ னடுத்திருக்கு மத்தே ருடன்மணலை
எண்ணினெண்ண லாந்தானை யேற்ற திரைகணக்கேல்
மண்ணினெண்ண லாம்பரிகண் மற்று. (8)

ஆறிரண்டா மெண்ணடுத்த வாயிரத்தா ராவியொத்தார்
வேறிரண்டாங் கையர் வியன்றோழர் எறிவரு
தேரினர்கள் சூழ்ந்தார் செறிகாலத் தீச்சுடரின்
வார்கழற்கால் வீரர் வரைந்து. (9)

மந்திரத்தார் மைந்தர் மதியமைச்சர் மக்களொடு
தந்திரத்தார் தந்தையர் தாதைக்கா யந்தரத்தார்
மாதரிடை வந்தமைந்தர் மன்னவரு நாலிலக்கந்
தாதரிசேர் வீரரடுத் தார். (10)

தோமரமா சூலஞ் சுடர்மழுவேல் தோட்டியொடு
மேமருவில் வாளுடனே யீட்டியதுங் கோமருவ
வீசவரு பாசம் விழைவயிரத் தண்டுகொண்ட
வாசில்படை சூழ்ந்த தடுத்து. (11)

என்றபடை கொண்ட வெறிபடைக ளீண்டிவர
மின்றிரண்ட வென்ன வெயிலடிக்கப் பொன்றிரண்ட
மாவுலகந் தூளி வரைந்து மயங்குதலாற்
பூவுலகாய்ப் போற்றும் புகழ்ந்து. (12)

Koviloor Digital Library

காகங் கழுகுகணம் காலம் வருகாலன்
சேகங் கடுநீமை சேர்ந்துவரப் பாகங்காஞ்
சொல்லார் துணைமுலையார் தோகையர்கள் சிந்தையென
வல்லாருந் தம்பிவளைத் தாம். (13)

உழைத்தரத்தி னேக்கா ருரியதிரு மாதர்
அழைத்தழுகை சேனைகுர லார்ப்புந் தழைத்தவொலிப்
பல்லியத்தி ஞர்ப்பும் பரவி மழையொலிபோற்
சொல்லியற்றல் காணூர் துயர்ந்து. (14)

ஓங்கிருந்தேர் பூண்ட வுளைப்புரவி யொல்கியதாய்ச்
தூங்குமிடக் கண்டோ டிக்குமின்னி லாங்குவரு
மேகமிரத் தம்பொழியும் விண்ணிடிக்கு மேற்கொடியிற்
காகமரற் றுங்கொடுமை கண்டு. (15)

வெள்ளமிக்க சேனையினல் விண்ணேர் வெருவிவிம்ம
வுள்ளமுற்ற கூற்று முறுவதுன்னத் துள்ளுஞ்
சுழல்கட்பேய் தோள்புடைப்பத் தோன்று மவனை
அழல்கட்கால் வீரனறிந் தான். (16)

இந்திரசித் தோதா னிராவணனே வென்றடுத்த
மந்திரசித் தோங்கு மனத்தனுமான் வந்தான்
முடிந்த கருத்தென்று முன்னவனைப் போற்றி
நடந்துமலைத் தோள்கொட்டி னன். (17)

எண்ணியவாம் பேரிவரி லேற்றொருவ னேலேய்ந்த
புண்ணியமெங் கோன்றவமும் போற்றுமன்றே மண்ணிநின்
காலனென்றி வந்தான் கருதுஞ்செயல் முடிப்பன் [றேன்
ஏலவென்றான் வீரனெடுத் து. (18)

பழியினுரு வேனும் பலதலையா னல்லன்
விழியினுறு வேந்தைவென்ற வேந்தில் மொழியவரின்
மற்றிவர்க்கு மேலான் மதிக்கு முருகனலன்
வெற்றிவர்க்க னென்றான் வியந்து. (19)

Koviloor Digital Library

என்றுவந்து விண்ணடுத்த விந்திரவில் லாமென்ன
நின்றுயர்ந்த தோரணத்தா நீதியனைக் கன்றிமனம்
நோக்கி யரக்கர்களை நோன்மையுடன் கொன்றதென
ஆக்கியறச் சீறு முருத்து. (20)

அன்ன மொழிகேட் டறிந்துரைப்பான் சாரதியு
மின்ன வுலகியற்கை யென்சொல்வேன் மன்னனுடன்
வந்தெதிர்த்த வாலி வலிய வலிமுகந்தான்
கந்தெதிர்த்த தோளாய் கருது. (21)

விடந்திரண்ட மெய்யான் விளம்புமுரை கேளா
விடம்புகுந்த சீற்றமிதற் கென்னுந் தொடர்ந்துலக
மூன்றுற்ற நாடி முசுக்கலைக டேர்ப்பனென்றான்
றேன்றுற்ற தாரான் சிறந்து. (22)

ஆர்த்தெழுந்த சேனைவா மஞ்சனைக்காங் குன்றதனைப்
போர்த்தெழுந்த தாய்ப்பொழிந்த பொன்றுபடை வேர்த்திரிந்
திக்கடுத்தாம் பாலர் திசைவான் சலித்ததனி [தார்
மிக்கடுத்தான் வீரன் விரைந்து. (23)

எறிந்தனவு மெய்தனவு மேற்றபடை யாவு
முறிந்தனவாம் வீரன்மேல் முட்டும் செறிந்தகயம்
போன வுயிராம் பொருதிற்ற தேர்படையும்
ஞானவரன் செய்கையத னல். (24)

காயெரிபுற் றீய்கான் கலந்ததெனக் காற்றின்சேய்
எயெனத்தான் கொல்படைக்கோ ரெல்லையிலை போயுயிருந்
தென்புலந்தான் சேருந் திறலார் நமன்றூதர்
வன்புலத்தார் கோடியுண்டா மால். (25)

வரவுற்றார் வந்தார் வரம்பில்லா வெம்போர்
பொரவுற்றார் மேலாற்றல் பொங்கி யெரியுற்ற
ஆழியென்றி ஞெ னுருத்த வரக்கரெலாந்
தாழுமென்பி லாவுயிரொத் தார். (26)

Koviloor Digital Library

பிள்ளும் கரிதேர் பிழையா பரிகாலாள்
அள்ளுங் குருதிவரு மாறுகக் கொள்ளே
யடித்தான் மறலியென வாக்கியுயி ரெல்லாங்
கொடுத்தா னறத்தான் கொதித்து. (27)

தேரேதான் பட்டவென்றூர் சேர்ந்தகரி பட்டவென்றூர்
நேரேதேர் பட்டபரி நீடலென்பார் வீரவரர்
போனதொகை மேலென்பார் பொன்று படையலகிட்
டானதொகை யார்க்கறிதற் காம். (28)

ஆழிப் படையடலோ ராயர் மகளிரடு
தாழித் தயிர்வீரன் சார்மத்தா மூழிப்
புனலொத்தார் நாற்படையார் பொன்றலிலா வீரன்
அனலொத்தா னன்றே யழித்து. (29)

கொன்றூன் குழுவைக் குறைந்து குலேகின்றூர்
பின்றூழ் குருதிப் பெருங்கடலின் வன்றிறலான்
தேரொன்றி நின்றூன் திறலார் கணைபொழிந்து
நேரொன்றி வந்தா னினைந்து. (30)

உற்றூ னரக்க னொருகாற் பலருயிரைச்
செற்றூ னரக்கநின்றூன் சென்றடர்த்தா னெற்றூ
மனுமா னிலேயென் றழிந்தார் மனது
கனமான தேவர் கசிந்து. (31)

எய்தா னரக்க னெரிவாளி யீரேழைப்
பெய்தா னெழுவாற் பிளந்துகத்தான் வைதாவும்
வாளிதனை வேய்ந்தான் வரன்தடுத்து வையமிசை
மீளியெனப் பாய்ந்தான் விரைந்து. (32)

தேரேறிப் பாகனுயிர் தின்றூன் பரிகளட்டான்
மாரேறிப் பாய்வாளி மாற்றினுன் நேரேறிச்
சென்றூன் வயிரச் சிலேகரத்தி னூற்பிடித்து
நின்றூன் தரத்தா னிகர்த்து. (33)

Koviloor Digital Library

ஒருகையால் முற்றுசிலை யுற்றடர்த்துப் பற்ற
விருகையாற் பற்றவுட னிற்ற சுரிகையாற்
குத்தினு னக்கன் கொதித்த படைபொடியா
யெத்தினுன் மிக்கா னிடித்து. (34)

வாளிற்ற கண்டு மதியான் வயிரத்திண்
தோளிற்ற கைக்கத் தொடர்வானை மீளாது
வாலெடுத்துச் சுற்றி மயிரயிலாய்த் தைக்கவுடல்
மேலெடுத்து நின்றுன் விளித்து. (35)

பற்றி யவன்வடிவாட் பல்லிற் றுகக்கையா
லெற்றி யணிசிதற வேற்றகுடல் முற்றிச்
சரியச் சுவலினிடை தாக்கினுன் கையால்
எரியச்சங் கொள்ள வெடுத்து. (36)

நீத்தா யுதிரநதி நேரச் சிலைபாரிற்
போய்த்தாழப் பொங்குமுயிர் போகாமுன் மீத்தாவிக்
கையிற் பிடித்துவிண்ணேர் காணப் புவிதேய்த்தான்
மெய்யிற் சிறந்தோன் மிதித்து. (37)

புண்டாழ் குருதியிடைப் புக்கார் சிலர்பேயின்
பண்டாரத் திட்டார் பயந்துடலைத் திண்டாடித்
திக்கரியா மற்போய்த் திகைத்தார் பலர்படையைக்
கைக்கரியாய்ப் போட்டிரிந்தார் கள். (38)

மீனுய்க் கடலுற்றூர் மேய்ந்தார் வழிபசுவாய்
உளனுர் பரவையென வோங்கினுர் ஆனு
மறையோ ருருவெடுத்தார் மங்கையராய் நின்றூர்
நிறையோய் சரணமென்றூர் நேர். (39)

தந்தாரம் பந்து தழுவ நுமரல்லேம்
வந்தேம் சுரரே மனிதரென்றூர் மந்தாரம்
சூழ்பொழிலின் வண்டானுர் தோன்று மெயிறிறுத்தார்
தாழ்குழலைத் தானிருள்வித் தார். (40)

Koviloor Digital Library

குண்டலத்தா மால்குழையார் குங்குமத்தாங் கொங்கையினார்
வண்டலைத்த கூந்தல் வருடக்கால் கொண்டலத்திற்
கோர்கரையைக் காணா ருயங்கி விழுந்தழுதார்
நீர்கொணக ரெங்கு நிறைந்து. (41)

கதிரார் முகத்துக் கணவன்றன் காலின்
எதிர்வீழு மாதர்க் கிசையு முதிர்கூந்தல்
பொங்கிவரு நெய்த்தோர் புகல்வேற் றுமையின்றித்
தங்கிவர நின்றார் தவித்து. (42)

தாவு செருநிலத்திற் றாக்கி யுலர்ந்தவர்மே
லோவியமாய் வீழ்ந்த வுழையனையார் மேவுதிருக்
கண்க ளிமைக்கார் கருதவரு மாவியொன்றா
யெண்கொ ளுடலிரண்டென் றே. (43)

நீட்டிவரு வாட்கட் டெரிவை திருவன்னா
ளாட்டிவரு வார்கவந்த மாங்கடுக்கக் காட்டுவையோ
வென்கணவன் றன்னை யிருவீரும் நேசமன்றோ
வன்கணவ வென்றாண் மருண்டு. (44)

ஏந்தித் தலையை யெழுதரிய கொம்பரன்னாள்
காந்தித் தலைவன் கவந்தமதைச் சேர்ந்தடுத்து
வேந்தளிக்கை சோர்ந்தாய் விடுதிநட மென்றணைத்தாள்
பூந்தளிர்க்கை சோர்ந்து புகழ்ந்து. (45)

நாடினார் நாடி நனையுற்ற கொம்பனையார்
வாடினார் தங்கணவர் மார்பணைத்தார் வீடினார்
அவ்வயினும் விண்ணோ ரரச னவையடுத்து
கவ்வையினார் நின்றார் கலுழ்ந்து. (46)

கயன்மகிழுங் கண்ணிற் கலுழி பெருகப்
புயன்மகிழுங் கூந்தல் பொடிசேர்ந் தயன்மகன்றன்
மைந்தன் மகனடியில் மங்தோ தரிவீழ்ந்து
சிந்தும் புனலைத் திகைத்து. (47)

Koviloor Digital Library

தாவரிய பொன்னகரிற் றைய லவர்முதல
வேவர்விழுந் தேங்கி யிரங்காதார் காவலன்கால்
மேல்விழுந்து சோர்ந்தார் மிகவு மழுதுணைந்தார்
மால்விழுந்த தேவர்மகிழ் வார். (48)

அட்சகுமாரன் வதைப் படலம் முற்றிற்று.

பாசப் படலம்.

அவ்வழியி னவ்வுரையை யாய்ந்தடுத்த வாண்டகையும்
வெவ்வழிய தீவெகுளி வீங்கினன் எவ்வழியி
ஞழலைய வாழுலக நாட்டமிகு மிந்திரனைத்
தாழுலையச் செய்ததரத் தான். (1)

அரஞ்சுடர்செய் வேற்ற னனுசனிற்ற சொல்லால்
உரஞ்சுடுதீ யென்ன வுருத்துப் புரஞ்சுடவாம்
பொன்மலையை வில்லாப் புரியு மரன்போல
வின்மலையுங் கையான் விரைந்து. (2)

ஏறினனுங் காயமதி னெல்லையிவை யென்றடுக்கு
மாறிருநா ளுங்கணங்கொ ளாழித்தேர் கூறிவரு
சொற்களவை கோத்த துதிக்குந் திசைகளொடு
பொற்குலவு மண்டமெங்கும் போய். (3)

ஆர்த்தனவாம் பேரி யசனி பயமடுக்க
வேர்த்தனவாம் விண்ணரசன் மேனியெலாம் சேர்த்தனவாம்
போரென்று முத்தேவர் போற்றவரு யோகம்விட்டார்
சீருன்றான் செய்கை தெரிந்து. (4)

தம்பியலை போர்நோக்கித் தாரை பொழிகண்ணான்
வம்பியலும் வின்றேக்கி வாய்மடித்தான் கொம்பியலும்
மந்தியுக வெம்பி மடிந்ததொன்றோ தேய்ந்ததுதான்
எந்தைபுக ழென்று னெடுத்து. (5)

Koviloor Digital Library

வேறிரண்ட வின்மிடைந்த வெற்பென் றடுத்தவெலாம்
கூறிரண்டு செய்படையைக் கூறலென்னுஞ் சேறை
இரண்டருதஞ் செய்யுமத மேற்ற களிறு
மரண்டருதேர் செப்ப வரிது. (6)

ஆயவரத் தானையண்ம வாழிவரு தீயனைய
தீயவரத்தா னரக்கன் றேரேறி யேயெனுமுன்
வந்தானி ராவணனும் மன்தந்தை கோயிலிடை
சிந்தா குலத்தாற் செறிந்து. (7)

தாளிணையின் வீழ்ந்தழுதான் தம்பிக் கிரங்கியவன்
றோளிணையைப் பற்றிமிகச் சோர்ந்தெழுந்தான் வாளிணை
கண்ணூர் வயிறலைத்துக் காந்து செயல்விலக்கி [கொள்
எண்ணு னுரைக்கு மிவை. (8)

ஒன்றிறலா காவுறுதி யோரா யுளையகிற்றி
வன்றிறலார் வானரத்தின் வன்மைகண்டுஞ் சென்று
பொருதிரெனப் போக்கிமிகப் பொன்றத் துலைத்தாய்
தருதிறலார் சேனைவளத் தை. (9)

கிங்கரர்க ளைவர்பதி கேடில்சம்பு மாலியெனும்
பைங்கழலார் பின்போம் படைக்கடலி னிங்கொருவர்
மீண்டதில யென்றுரைக்கின் வெற்றி தருகுரங்கை
ஆண்டதலைச் சங்கரனென் றாய். (10)

திக்கயத்தை வென்று திறற்கயிலை தேர்ந்தெடுத்து
மிக்கடுத்த மூவுலகும் வெற்றிகொண்டா யக்கனைத்தான்
கொன்றகுரங் காற்றல் குறையா தறையவிட்டாய்
வென்றதிறற் றமென் மிகை. (11)

ஆயினுமென் னையனொய்நி னுடன்மிக்க கோடரத்தை
ஏயெனுமுன் பற்றி யிறுத்திடுவேன் நீயிருத்தி
என்றெழுந்து சென்று னிகலிந் திரன்புயத்தின்
வன்றழும்பு நின்றிடச்செய் வான். (12)

Koviloor Digital Library

உடைந்த விருஞேற் றருக்கொண்ட தென்ன
மிடைந்த பலபணிகள் மின்னக் குடைந்துவரு
கொற்றவாள் வில்வீசக் கொண்டடைந்த தானையுடன்
எற்றவாய் வந்தா னெதிர்த்து. (13)

ஆழியுடைத் தேர்மா வரக்க ருருக்குசெங்கட்
சூழியுடைத் தேர்மா துவன்றிவர ஆழிக்
கடலுடைய சுற்றிற் கருதிநிலை நின்றான்
மிடலுடைய மேருவென்று மே. (14)

சென்றனனு மன்னே திசையோ டுலகமெலாம்
வென்றனனு மென்றாலும் வீரத்தா னன்றதனைக்
கண்டனுமான சிந்தை களித்தான் துயர்கொண்டார்
விண்டனுவார் தேவர் மிகுந்து. (15)

இலைகொண்ட பூணு னிருங்குருதி யீர்க்க
அலைகொண்ட சேனை யளக்கர் மலைகொண்ட
மாகடலு மாறு மதிக்கநின்ற வேருலகாம்
தாகடவா வாகவங்கண் டான். (16)

வெப்படையா நெஞ்சின் மிகவுற்ற விம்மலினன்
ஒப்படையார் தீர்ந்தா ரொருகுரங்கா லெப்படையால்
வில்வீர முற்றார் வெலற்காம் வரினென்றான்
கொல்வீர முற்றான் குறித்து. (17)

கண்ணடுத்த நல்லுயிரார் கைப்படையிற் காத்திடுவார்
எண்ணடுத்த வீர ரிறந்தவரை மண்ணடுத்து
நோக்கி வெறுத்து நுவல்வான் கவலைமிகத்
தாக்கி யுருத்துத் தளர்ந்து. (18)

காளிலத்தைக் குற்றதுவுங் காதுகர ஞர்பாடும்
மேனிலத்தைத் தம்பி விழைந்ததுவு மானிடவர்
வானரத்தா லென்றால் மதித்தவென்போர் நன்றென்றான்
தேனரற்றுந் தாரான் றிகைத்து. (19)

Koviloor Digital Library

நீப்புண் டுயிர்போய் நெருப்புண்ட தாய்த்தோன்றி
ஈப்புண் குணபமிட வேற்றடுத்தான் றேய்ப்புண்ட
தம்பியுடல் கண்டான் றடுக்கா விசனத்தான்
வெம்பியுட னின்றான் விளித்து. (20)

தாருகன்போ ரன்ன தனிமாக் கிளைத்தகொற்றக்
கூருகிரி ணுங்கனகன் கோலமென நேருகத்தன்
கையுரத்த வில்லுகவாய்க் காந்திநின்றான் கண்ணீராய்ச்
செய்யரத்தஞ் சிந்தத் திகைத்து. (21)

வெவ்வினைய வேலுந்தை வெம்மை தனைநோக்கி
வவ்வலுற்றான் கூற்றுவனு மற்றுலகி னெவ்விவரு
மெல்லாரு மஞ்சுவா ரெங்கொளித்தா யென்றரற்றும்
வல்லாரு மெஞ்சவடு வான். (22)

ஆற்றல்கொண்ட வஞ்ச னறிவழியு மவ்வேலை
சீற்றமுண்ட மிஞ்சுந் திறலுடைத்தாய்த் தோற்றிவரு
துன்பநோ யுள்ளே சுரியச் சிறந்ததுவாம்
வன்புநோ சிந்தை வறண்டு. (23)

ஈண்டுநிகழ் காலை யிரவிதரு வையமெனத்
தூண்டுநிலை தேரினுற்ற தோன்றறனை வேண்டாப்
புரஞ்சுட்ட வீரனெனப் போற்றனுமான் கண்டான்
தரஞ்சுட்டும் வீரனெனத் தான். (24)

வென்றே னிதன்முன் விரவார் சிலவரைவன்மை
அன்றே முடுகி யழைத்ததம்மா வொன்றேதான்
வெந்திறத்தின் வென்றிடினும் வீண்புரிந்து தோற்கினுமென்
இந்திரசித் தென்பா னிவன். (25)

கட்டேறு கண்ணியனிக் காளை யெனநகையிற்
பட்டேறு மேலரக்கன் பாடாகும் கெட்டேமென்
றெண்ணியருங் கற்பனையை யென்பா லனுப்புநலம்
நண்ணியவா மென்று னகைத்து. (26)

Koviloor Digital Library

ஒன்றோ விதினடுத்த வூதியந்தா னொண்மையினைக்
கொன்றேனே லிந்திரர்க்குக் கூடுநல மின்றே
கடிகெட்ட தாமிலங்கை காவ லரக்கன்
கெடிகெட்ட தென்றான் கிளைத்து. (27)

அக்காலை தன்னி லரக்கர்பரி யானைவையம்
முக்கா லுலகுசயன் முன்முற்றிப் புக்கானின்
முன்பூசல் செய்ய முனிந்தான் மரங்கொண்டு
மன்பூசல் மூர்துமனு மான். (28)

உதைப்புண்ட யானை யுருண்ட களிறு
மிதிப்புண்ட யானை விழுந்த புதைப்புண்ட
யானை புரண்டனவாம் ஆளித் திறலவன்முன்
ஏனைபுரண் டாகா வெடுத்து. (29)

முடிந்தனவாந் தேர்கள் முரிந்த முரணிற்
றிடிந்தனவா யச்சுமுறிந் திற்ற தொடிந்துவைய
முக்கனதேர் நெக்குவிட வோய்ந்தனவாய்க் காய்ந்தடர்த்தான்
முக்கணனை யொத்தான் முனிந்து. (30)

சிரநெரிந்த கண்மணிகள் சிந்தச் செறுதாட்
டரநெரிந்த பின்பிளந்து சாய்ந்த வுரனெரிந்த
வொண்பொற்றாண் மாகுரம்போ யோங்கு கழுத்திழந்த
மண்பற்றா வேகமுடை மா. (31)

பிடியுண்டு பட்டார் பிளந்திற்றார் தோள்க
ளொடியுண்டு பட்டா ருரத்தா லடியுண்டார்
கண்பார்வை யாலுருக்கிக் காய்ந்தான் கருதலரை
விண்பார்வை யாக்கும் விதன். (32)

வெட்டமுடை வில்லால் வயவர் விடுவாளி
விட்டபடை வீரன்மேல் வீழ்ந்தவெலாஞ் சுட்ட
விரும்படைகல் லைச்சுடுதற் கேலா தனபோ
லரும்படைக ளான வழிந்து. (33)

Koviloor Digital Library

மிகையெழுந் தீ வாளி யிந்த்ர சித்தனுமான் மீது
மிகையெழுந்த வஞ்சினத்து விட்ட புகையெழுந்து
போனவிறல் கண்டு புரியு புகையிழந்த
மோனவரர் வானோர் முகம். (34)

தேரடுத்த வன்களிறு சீர்மா வரக்கரொடு
பாரடுத்து நின்ற பணைத்தோளன் வீரத்
தனுமன் முறுவல்சினந் தாங்கி யடிக்கும்
அனுமன் முரலவந்தா னார்த்து. (35)

புரந்தரன்றன் சென்னி பொதிரெறிய வானிற்
பரந்தவுரு மேரு பதைப்ப நிரந்தரமாம்
சேடன் சிரந்துளங்கச் செஞ்சிலையை நாணெறிந்தான்
யாடொன் றறந்துறந்த வன். (36)

ஆண்டவரன் றாத னயனுடைய வண்டமுடன்
கீண்டதெனப் பூமி கிழிதரத்தா னீண்ட
திசைவெடிக்க வீரன் சிலைநாண் டெறிக்க
விசைவடித்த தோள்புடைத்தா னீண்டு. (37)

நல்லவரு ஞாலத்து ளொடி யுனைப் போல்வா
ரில்லவலி யாவரொடு மேற்றிகல வல்லவலன்
என்றாலும் வாழ்நாளுக் கெல்லையின்று மென்றுரைத்தான்
வென்றாலுந் தீயோன் வெகுண்டு. (38)

நாளும் நிருதரென நாடியுல கத்தைநலி
கோளுங் கொடியீர் குறித்தவலி வாளுடனே
தோள்வலிக்கு மெல்ல தரிதமுடன் கொணர்ந்தேன்
ஆள்வலிக்கென் னென்று னதிர்த்து. (39)

இச்சிரத்தை யைத்தொலைப்பே னென்றிந்தி ரன்பகைஞன்
பச்சிரத்தம் வந்தொழுகப் பார்நடுங்க வச்சிரத்தும்
வன்மையுற்ற பாண மழைபொழிந்து வந்தடுத்தான்
வின்மையுற்ற மேகமென வே. (40)

Koviloor Digital Library

குறிதென்று வானைக் குறியாச் சினத்தான்
மறியுங் கடலுலகை மாற்றிச் சிறியதாய்
சொன்னிலையி னின்றுவந்த தூயோன் புகழெனத்தான்
தன்னிலையி னின்றுவனந் தான். (41)

பாகமல்ல காஞன் பருவலித்தோள் வானரனை
நாகமல்ல மற்றுலகு நாட்டுபுகழ் ஆகமெல்லாம்
கண்கொண்டா னிந்திரனைக் கட்டிக் கொணர்ந்தவலன்
எண்கொண்டான் சிந்தை யியைந்து. (42)

நீண்டடுத்த வீர னெடிய கரநீட்டி
ஈண்டடுத்த பாணமழை யெய்தரிதாய் மீண்டடுக்கத்
தட்டியவன் றேரடுத்துச் சாரதியும் வாம்பரியும்
எட்டிவிழக் கொன்று னிடித்து. (43)

ஊழிக்கா லன்ன வொருபரித்தேர் வந்துதவப்
பாழித்தோள் வீரனதிற் பாய்ந்தேறி யாழி
எனுமாப் பகழி யெடுத்து மறைத்தான்
அனுமா னுடலை யடுத்து. (44)

உற்றுவரு வாளி யுரத்தடங்க நின்றுதரி
முற்றுவரு தேரின் முகந்தேறிப் பற்றி
யொடித்தான் றனுவை யுயர்தரத்தோ ரெண்ண
முடித்தா னனுமன் முனிந்து. (45)

முறிந்தவில்லி னேசை முடிவதற்கு முன்னம்
செறிந்தகல்வி னன சிறகை யெறிந்த
குலிசத்தான் தந்தசிலை கொண்டான் பகைவர்
வலிசெற்றான் சிந்தை மதித்து. (46)

நூறடுத்த போர்வாளி நொய்திற் றடுத்ததனு
ஊறடுத்த மேனி யுளவெய்தி வீறடுத்த
சேவகன்றன் றூதன் சிறுபொழுது வீற்றிருந்தான்
பாவகன்றன் றூய்மைப் பரன். (47)

Koviloor Digital Library

ஆர்த்தனராம் வாஞே ரறிவழிய வன்னதனைப்
பார்த்தனுமான் தாரு பறித்தனன்கை தூர்த்துவரு
வாளிநிலை போக்கி மடங்கவென வந்தடித்தான்
மீளிதலை மீது விளித்து. (48)

பார மரமுகுடம் பற்றுதலை யுற்றதலை
யார வரையருவி யாய்க்குருதி சோரவரை
நின்றுடலஞ் சோர்ந்தா னிகரி லமரர்புகழ்
தின்றுடலஞ் சோராத் திறன். (49)

நின்றடுத்துப் போதம் நிலைக்கப் பிறையெயிறு
தின்றடுத்துத் தேவர் திகைப்பெய்தக் குன்றடுத்த
மாருதியா கங்குலுங்க மட்டில்கணை விட்டடித்தான்
நேருதியா மென்று நிமிர்ந்து. (50)

உய்த்தசந்தப் பாண முரத்துங் கரத்தொளிப்பக்
கைத்தசிந்தை ஏணன் கனன்றடுத்தான் வித்தகன்றன்
பாணத்திற் பாய்ந்து பரியிரத மாய்ந்தெடுத்துச்
சேணத்தி விட்டான் தெரிந்து. (51)

கண்ணிமைக்கு முன்னங் ககனத் தெறிவையம்
விண்ணிமைக்கச் சென்று விழுமுன்னர்ப் பண்ணிமைக்கும்
ஆகத்தா ஞன வதிவீரன் பாரடையான்
மாகத்தா ஞுன் மதித்து. (52)

பாரடையான் வீரன் பரிந்தவனி பார்ப்பதன்முன்
சீரடையாம் வீரன் றிகழ்வரையாய்ச் சேரும்
செழுந்தண் மணித்தேர்க டரச் சிதைத்தான்
உழுந்தங் குருண்முன் னுருத்து. (53)

எறிரத மின்மையினு மேற்றெதிரும் வன்மையினுங்
கூறுதிற லின்மை குறித்தடர்ப்பான் மாறில்
பிரமனரு ளத்திரத்தைப் பேணி யெடுத்தான்
தரமதனி லித்திரத்தைக் கண்டு. (54)

Koviloor Digital Library

பூவு மயினி பொருந் து புகைதீபம்
பாவனையாற் செய்து பரிவமைத்தான் தேவர்
உலகந் திருத்து முயர்ந்தோன் படையை
நிலவப் பணிந்தா னினைந்து. (55)

கொண்டகொற்ற வெஞ்சிலையிற் கூட்டிப் பணிந்ததனைச்
சண்டனுத்த மாருதிமேற் சார்த்தியே மண்டுளங்க
மாதிரவான் சீத மதிதோயும் விண்டுளங்கக்
கோதிறவான் விட்டான் குறித்து. (56)

தணிக்குதலில் வாளி தழலாந் தறுகட்
பணிக்குலமன் பாரவுருப் பற்றித் துணுக்கமுற
மாருதிவன் றோளை மடியப் பிணித்ததெனிற்
சோருதிற லிப்படைக்கே து. (57)

திண்ணென்ற யாக்கைதனைச் சேரும் படைதிருக
அண்ண லனுமா னறமடுத்தான் கண்ணகன்ற
தோரணத்தி னோடு தொடுத்தமதி யாய்ச்சாய்ந்தான்
ஆரணத்தின் மேலா னறிந்து. (58)

சாய்ந்த விறலோன் சதுமுகன்றன் பாணமென
வாய்ந்த திறலா னவமதித்தல் ஏய்ந்ததிலை
என்றெண்ணிக் கண்முகிழ்த்தா னேற்றவலி யிற்றதென
நன்றெண்ணி வந்தான் நகைத்து. (59)

உற்றடுத்த காலை யொதுங்கித் திசையொளித்த
வற்றடுத்த கோல வரக்கரெலா முற்றடுத்துச்
சூர்த்த விழியார் தொளையெயிற்று வல்லரவைப்
பார்த்து மொழிவார் பதைத்து. (60)

குரக்குவலி யில்லையெனக் கொண்டடுத்த சூழ்வா
விரைக்குநகர் மாநடலை யேற்ற நிரைக்சவரு
மாசுணமும் வாசுகியாம் வல்லரக்கர் தேவர்மனத்
தாசுணரான் மந்தரமென் றும். (61)

Koviloor Digital Library

கறுத்த வரவங் கனகதனுக் கட்ட
அறுத்து வரவான் அனுமான் மறத்துடனே
மாருதஞ்சூழ் நாளடுத்து வாளரவு சுற்றவரு
மேருதனை யுற்றான் விரைந்து. (62)

வந்திரைத்தார் மைந்தர் மகளிர் மழையாக
அந்திடத்து மேல்விசும்பு மார்த்தடுத்தார் மூந்து
மூவமைக் கிணையே துவணைக் கரச
னிவனுற்ற போதடுத்த தே. (63)

பாசப் படலம் முற்றிற்று.

பிணிவீட்டு படலம்.

எய்மினடுத் தீர்மின் னெறிமின்கள் போழ்மின்பின்
கொய்மின் குடரடுத்துக் கூறுசெய்மி னைய
வுலகினிடை தேய்மின்க ளுய்யுமெனி னம்மை
இலகவிடா தென்பாரி ரிந்து. (1)

மைத்தடங்கண் மாதரொடு மைந்தர் சினந்தடுத்துப்
பைத்தலைய நாகமெனப் பைதறனை யித்தலையிற்
செய்திடுவான் முன்னர்ச் சினத்துத் துலைத்துமென
வைதிடுவார் கொல்லமுயல் வார். (2)

நச்சடையு மாயுதத்தி னலடையு மீடுடைத்தோ
வச்சிரமு டன்கடலின் வாய்மடுத்து மூச்சி
யழுத்து முருத்ததெனி லங்கி யிடுமின்
வழுத்துவதென் னென்றோடு வார். (3)

எந்தையெம்பி யெம்மு னிவர்க டமைக்கொன்றாய்
தந்துமுந்தென் றோடித் தடுப்பர்பலர் அந்தரத்தி
னமரா ராணைக் கதிபனெனத் தம்முயிர்க்குச்
சேமமற நிற்பார் சிலர். (4)

Koviloor Digital Library

ஓங்கலென வல்ல வுயிர்க்குரிய நண்பர்களை
நீங்கலமா லின்றோடு நீங்கியதாற் றீங்கா
மிவன்சிரத்தி னேறி யிருந்துதிரு வாங்கும்
தவன்சிரத்த தென்பார் தடுத்து. (5)

கொண்டடர்த்துச் செல்லவரு கொற்றமுற்ற மாநகரம்
அண்டமுற்ற தாகெடிதி னார்ப்பதனால் கண்டமுற்ற
பொன்கணவர்க் கேங்கும் புரிகுழலார் புன்மையணி
வன்கணவர் கொண்டார் மகிழ். (6)

வடித்தாம் படைக்கை வயவர் கரிகள்
கொடித்தேர் படிவீசக் கூடி யிடித்துச்
சிதைந்தவரை போலவெலாஞ் சேர்ந்துகண்டு சென்றான்
துதைந்தவரைத் தோளனடுத் து. (7)

முயிரலைத்த மாமரமா மொய்ம்பு நிறைதோள்
கயிரலைத்தல் கண்டு கலங்கி எயிறலைத்தற்
கேற்ற வரக்கியர்க ளேங்கி வயிறலைத்து
மாற்றமுரை யாதோடு வார். (8)

ஆர்த்திடுதற் கஞ்சி யடங்கி னவர்பலராம்
போர்த்திறத்தை மிஞ்சிப் புகழ்வர்பலர் வேர்த்திரிந்து
பார்க்கப் பயத்தாற் பதைத்தவரா யூர்ப்புரத்திற்
சேர்க்கப் படுவார் சிலர். (9)

காந்தும் கதழெயிற்றுக் காரரவின் கட்டுமொரு
பூந்துணரா மென்னப் பொலியுமுகம் தேர்ந்து
பொருளறிந்து செய்மின் புகழ்வேந் துறுதல்
மருளறிந்த செய்கையென்பார் மற்று. (10)

ஒளிவரு நாகத்துக் கொல்கியதோ வன்று
விளிவரலின் றுமெண்ண மேதோ களிவரவாஞ்
சிந்தையினுற் காண்டி சிறந்தெங் களையென்று
வந்தனைசெய் வார்பலரா வார். (11)

Koviloor Digital Library

பைங்கழலா னைப்பிணித்த பாந்த ளுடனடுத்துக்
கிங்கரரோர் பக்கங் கிளர்ந்தடுத்தார் வெங்குருதிக்
கண்ணரைம்ப தாயிரவர் காது வலியுடையார்
எண்ணிறம்ப வந்தா ரிழுத்து. (12)

அண்டா வலியரக்க ராற்றல் களையவெனத்
தண்டா துருக்கரந்த தன்மையினன் மண்டும்
அமர்தொடங்க வானரத்தி னன்றவுருக் கொண்ட
சமனடங்கா னென்றார் தவித்து. (13)

அரமியத்த தாந்தலத்தி னம்பொன்னார் மாடத்
தரமியற்று சாளரத்தின் சார்பின் முரசியற்று
மாதிரமார் வீதிதொறும் வந்திரைத்துச் சிந்தைநொந்தார்
மாதிறமார் மைந்தர்மங்கை மார். (14)

கயிலையுற்ற மேலாங் கணிச்சிக் கடவுள்
மயிலையொத்த சீதைகற்பின் மாண்பா லெயிலையுற்ற
மாநகரை வாட்டுதற்கு வந்த திறலடுத்த
தானவரை வானரமென் றார். (15)

அரம்பையர்கள் விஞ்சைவரத் தாரளக வல்லி
நரம்பினிய சொன்னாக நாட்டார் கரும்பினியல்
சித்தரியல் மாதர் சிறந்த வியக்கர்பெண்கள்
தத்தரிய ராகிமொழிந் தார். (16)

நீருடைய நேமி நிரந்து துயில்வானும்
தாருடைய மாமலரின் தாதையுந்தா னோரிடரைக்
கொண்டுருவ மாற்றிக் குரங்குருவாய் வந்ததினிக்
கண்டுறுவா மென்றார் கனன்று. (17)

அரக்க ரரக்கியர்க ளல்லா தவர்க்குக்
கரக்கிலவா நீண்டமழைக் கண்ணீர் விரைக்குழலி
சீதை மெலிவதனைத் தேர்ந்தோ விரக்கமதோ
மேதையறத் துண்மை மிகும். (18)

Koviloor Digital Library

ஆண்டொழிலின் மேலா னனும னவருடன்போம்
மீண்டொழிய வேறு விரும்பகில னீண்டிதுவே
நேரிலங்கை வேந்த னினைவதனைக் காண்பதற்குச்
சீரிலங்கு மென்றான் றெரிந்து. (19)

எந்தை யருளு மிராமன் பதயுகளம்
சிந்தையரு ணல்லறத்தும் சீதைசுரர் தந்த
வரத்தினுமிப் பாச மடியப் புரிவேன்
உரத்தினலம் பின்னரடுக் கும். (20)

வளையெயிற்றி ராவணனை வார்ந்த வமைச்சர்
தளையுமுதி யோரறியத் தானே விளைவை
இயல்தெளியச் சொல்லி னினிய திருவை
மயல்தெளியத் தந்திடற்கு மாம். (21)

அல்ல தவன்றுணைவ ராயினவர் மேயவலிக்
கெல்லை தெரியுமவ னெண்டெரியும் வல்லோன்
நிலைமைமனந் தேற நினைவிதுநா னென்றான்
புலமைமனந் தேறும் புதன். (22)

வாலி யிறுது மராமரங்கட் குற்றநிலை
கூல மிகுசேனை கொண்டகொள்கை மேலினன்றன்
மைந்தன் வலியு மதியிலியி ராவணன்றன்
சிந்தைநிலை செய்தல் சிறப்பு. (23)

ஏதத் தரக்கனவை யெய்தி யவனுற்றல்
நீதித் தரத்தா னினைந்துபடை பாதிக்கு
மேற்செல்ல நூறி விரைவின்றிச் செல்லுதலே
ஆச்சென்று கொண்டா னகம். (24)

கடவுளர்க்கு மன்னைக் கடந்த வலத்தோன்
புடையளக்க ரொத்தபடை போர்க்க விடைபிணிப்புக் [வை
கொண்டதென வீரனைத்தான் கொண்டெழுந்தான் மன்னன
கண்டதென வுள்ளங் களித்து. (25)

Koviloor Digital Library

தூதுவர்க ளோடித் தொழுது பணிந்துநின்று
மாதிறத்தார் போற்றரிய மன்னநின்றன் காதலன்றன்
தாமரைத்தே வாளி தகைந்து பிடித்ததென்றார்
காமரத்தைப் போற்றுகுரங் கை. (26)

கேட்டிருந்தான் வான்சுடர்தான் கெட்டடுத்த வானமென
வீட்டிருள்சேர் மார்ப னிபங்கனெட்டின் கோட்டின்
எதிர்பொருத வாரமெடுத் தீந்தான் கழற்கா
லதிரவரு தூதர்க் கறிந்து. (27)

எல்லையிலர் நன்மகிழ்ச்சி யேயந்தவரத் தோளுடையான்
புல்லவரு கட்குமுதப் பூவுடையான் ஒல்லையிலாய்க்
கொல்லா தடுத்தென்பாற் கொண்டுவர வென்றுரைத்தான்
பொல்லா தடுத்தான் புகழ்ந்து. (28)

அவ்வுரையைத் தூத ரறிந்த படியுரைத்தார்
தெவ்வுரையைத் தீர்த்தான் றிருமுன்ன ரிவ்வுரையைச்
சீதைசெவி யேற்றுத் திரிந்து வருமுளத்தாம்
வாதைசெயல் சொல்வாம் வரைந்து. (29)

இறுத்தான் கடிபொழிலை யெண்ணிறந்தோர் மாள
வொறுத்தா னெனக்கேட் டுவந்தாள் வெறுத்துயிர்தான்
சோரத் துளங்குந் துதிப்போர்க்கு நற்கருணை
சாரத் துளங்குமென் றன் தாய். (30)

ஓவியம தோங்கி யுயர்புகையை யுண்டதெனப்
பூவியலு மேனி பொடியுறவே பாவிவரு
வேடன்கை பார்ப்புறத்தான் வேண்டி மறுகிவரு
பாடன்ன மென்னவுரைப் பாள். (31)

உற்றுண்டாம் நல்விசும்பை யோங்கி யுருவிநின்றாய்
முற்றுண்டாம் நற்கலைகள் முற்றடுத்துக் கற்றுண்டாய்
கள்ள வரக்கனுற் கட்டுண்டாய் நல்லறந்தா
னெள்ளவரற் கென்னு மியல்பு. (32)

Koviloor Digital Library

கடல்கடந்து வந்தடர்த்துக் கண்டகர்க ளாவி
யுடர்கடந்து காணுய்பின் ஞூழி யடர்கடந்த
மைந்துடையாய் நற்புயத்தாய் வந்திடரைக் காட்டினையே
நைந்திடைவே னென்றனளன் னை. (33)

ஆழிவரங் காட்டியெனக் காருயிரைக் காட்டுமுனக்
கூழிவரங் காட்ட வுரைதந்தேன் வாழியது
காட்டுமென வுண்டு கவினுன் புயப்பாழி
காட்டுமனத் தாற்றுயர்த்தேன் காண். (34)

கண்டுகொண்டு சென்றிடுநீ காட்டும் வழிவந்து
மண்டுகொண்ட பேயரக்கன் மாயவட்டுக் கொண்டுமென்னன்
போமென்ற கொள்கை பொருந்தா தெனப்புரிந்த
தாமென்றாள் சிந்தை யயர்ந்து. (35)

என்றபடி பன்னி யினிய வுயிர்தேயக்
கன்றுபிடி யுற்ற கரவையென நின்று
தளர்ந்தயர்ந்து சொற்றாள் தனித்தீயைச் சுட்ட
வுளந்தயங்கு மென்று யுலர்ந்து. (36)

பெருந்தகைசேர் செய்ய பெரியோற் பிணித்த
முருந்த னுலகாகு மூன்று மருந்தவத்தின்
செய்கையர சாளுகின்றான் சென்றிருந்த கோயிலின்முன்
உய்கைமகன் வந்தா னுயர்ந்து. (37)

தலங்களொரு மூன்றுந் தழைத்தமதி யென்ன
வலங்க லுடையகுடை யாக்கல் வலங்கொண்ட
தோளா னெடுத்தவெள்ளித் தூய மலைமேலே
வாளா மொளிவிரித்த மாண்பு. (38)

புள்ளுயர்த்தோ னூழி புரந்தரற்காம் பொன்னயிலும்
வெள்ளிமலைத் தேகணிச்சி வீழ்தழும்பும் கள்ளுயிர்க்கும்
மென்குழலார் மாதர் விரற்கதிர்வாள் வள்ளுகிரும்
தன்புயத்தி னேறவிருந் தான். (39)

Koviloor Digital Library

துன்றிவரு செம்மயிரின் சூழ்கற்றை சுற்றிவரு
நின்றுதிக்கி னேர்ந்துகதிர் நேர்மிர வென்றியுற்ற
சீற்றத் துயிர்ப்பதனுற் றென்றிசைக்கு மோர்வடவை
ஆற்றத் திருத்தியதொத் தான். (40)

மரகதத்தின் கற்றையொடு மாணிக்க வாளும்
நரகதத்து நள்ளிருளை நக்கச் சிரமனைத்தும்
சேரத் திசைசெலுத்தித் தோர்ந்துரகர் கோனரசின்
வீரத்தையொத்தான் விழைந்து. (41)

குவித்தமணிக் குப்பைகலை கொள்ளு மிழையின்
சவிச்சுடர்கள் பொற்றோ டயங்கப் புவித்தலத்தாம்
மேருவைப்பொன் மாமுடியாய் மேலே கவித்தகடல்
சேரவிருந் தான்மெய் சிறந்து. (42)

சிந்துரா கத்தின் செறிதுகிர்க்கச் சுச்செறியப்
பந்திதரு முத்தொளிகள் பாலொளியா யிந்துகுடை
வல்லநிழற் றூரகையின் வானினத்தி னுமந்தி
அல்லரசை யொத்திருப்பா. னுங்கு (43)

வண்மைக்குந் தோங்கொண்ட மாமுகத்தி னுற்றிசையிற்
கண்வைக்குந் தோருங் களிற்றினொடு மெண்மர்க்கும்
மற்றையிரு வர்க்கும் வலிய பயமியற்றும்
பொற்றையிருந் தேன்னுமன் பொற்பு. (44)

நாயகன்றன் றேவிதனை நாடி யெதிர்ந்ததற்பின்
தூயவுல கங்களுள தோகையர்கண் ணேயமின்றி
மை·நர்கள்போற் றேன்றி மருவினர்கள் சுற்றினடுச்
சந்தமலி தோளணிருந் தான். (45)

வானரங்க ளோடு மனிதர் வலமென்னை
யானதெனச் சொல்லு மவருடனே யேனை
யிருடியர்க டீரமற்றை யெல்லோரு மொன்ற
வருளிலரக் கன்சிறந்தா னுங்கு. (46)

Koviloor Digital Library

நரம்படுத்த வீணை நயத்தகுழ லோடும்
கரம்படுத்த பாணியொடு கால வரம்படுத்த
மங்கையர்கள் பாடல் மருவு மிசைசெவியில்
சங்கையின்றிச் சாரவிருந் தான். (47)

கூடுகின்ற பாணியிசை கூறுமுழ வோடடுக்க
நாடுமடி யங்கைமுனம் நன்றென்ற வாடுமதை
நோக்கி னருந்தவர்க்கும் நோக்கடுக்கு மேனகைமேல்
நோக்கினறும் பொறற்பா னுவன்று. (48)

உளமுகத் தார்நறையை யோர்மா முகமுண்ணக்
கூடுமுகத் தாந்தேன் குடிக்கவொன்று பாடுமவர்
மாமுகத்தே னுண்ணவொன்று வந்துநடிப் பாரழகை
மாமுகமொன் றெண்ணு மதித்து. (49)

தேவ ருடனரசு சேர்ந்தோர் முகஞ்செலுத்தும்
மூவரொடு மோர்முகந்தான் முன்பேசும் பாவமிக்கான்
பாவகமோர் சென்னி பகரு முருவெளிகண்
டோவுமொரு சென்னி யுவந்து. (50)

காந்தண் விரற்சனகி கற்பாங் கடலதனை
நீந்தலெனைத் தென்றோர்முக நேர்ந்தடுக்கச் சாந்தணவும்
கொங்கை மகளிர் குறித்தடுக்கு மாடிதனிற்
தங்குமொரு சென்னி தகைந்து. (51)

தண்டலைத்தேன் புக்கருந்தச் சார்ந்தங் ககம்புலரும்
வண்டாய் மனஞ்சனகி வாய்மறுகல் கண்டு
பழித்தா மனதுடையார் பாவையர்கள் கண்ணீர்
விழித்தாரை வேறாக்க வே. (52)

மாறு மகரந்த மாநறவை யுண்டுபெண்கள்
வீறுந் தனத்தெழுது மென்சாந்தின் வேறுகும்
சிகரத்தாந் தென்றலது சித்தசனே வைத்தபுண்ணின்
மாகடுவாய்ச் சேரமெலி வான். (53)

Koviloor Digital Library

திங்க ளுதன்மாதர் சேயரிக்கண் டாமரைக்குப்
பொங்கலரி யாகிப் புரிவானோர் வெங்கணுடைக்
கோமருவு தானர் குவிகரமாந் தாமரைக்குத்
தாமதியைப் போலவிருந் தான். (54)

இருந்த வரக்கற் கெதிரடுத்தான் வீரன்
கருந்தகைய ராக்காண் கலுழன் பொருந்துமெனத்
தோளிலணை பாசந் தொலையநஞ்சு போல்பவன்மே
லாளியெனப் பாய்வனென்று ளார்த்து. (55)

உறங்கும் பொழுதி னுயிருண்ட நீர்ந்தேன்
பிறங்குந் தவிசிருக்கப் பெற்றேன் திறங்களவை
சிந்தித் தலையுளத்தென் தேர்விலி மேற்பாய்ந்து
சிந்தத் தலையுருட்டல் சீர். (56)

தேவர் முதலோர் சிறந்த முனிவரொடு
காவ லிருந்தோர் களிப்படையப் பாவி
முடித்தலையைத் தீர்த்திலனேல் முன்னவற்கி யான்செய்
யடித்தலைமை யென்னு மவம். (57)

மாடிருந்த மங்கையர்கள் மற்று மிவற்புணர்வார்
ஊடிரிந்து போக வுருட்டியிவன் கொடுதலை
கொண்டலைத்தற் கென்னும் குறித்துவந்த தோர்குரங்கு
தண்டலைக்கண் டாவுமென்ப தா. (58)

நீண்ட வெயிற்றரக்க னேர்கண் டுயிர்சுமந்து
மீண்டயலிற் போதல் மிகுவசையாந் தாண்டி
இகழன்றி வெல்லா திறந்தனனென் றாலும்
புகழன்றி மற்றென் புகும். (59)

என்றடுத்துத் தோட்பாச மிற்றேக விப்பொழுதே
குன்றடுத்து மேற்பாயுங் கோளரிபோற் சென்றடுத்துச்
சேர்வனெனச் சிந்தை சிறந்தா னிதுமதித்தற்
கார்வமெளே யென்றா னடுத்து. (60)

Koviloor Digital Library

கொல்லுந் தரமோ குறித்துவரு கொற்றமுந்தான்
புல்லுந்தரமும் பொருந்தாதா மல்லே
திரண்டறிவி லாமடனைத் தெட்டவெனில் வீரன்
அரண்டருவி லாமென் றனன். (61)

என்னைவெலற் கென்று மிவனுற் கபடனிவன்
றன்னைவெலற் கென்றலுஞ் சார்வதிலை பின்னையெண்ணிற்
காலமிக வுண்டாங் கருதுசெயல் மித்தையென்றான்
ஆலமிக வுண்டானன் றன். (62)

ஏழி னுயருலக மெல்லாம் நலமடையப்
பாழிப் புயத்தரக்கன் பஃறலையைப் பூழி
தனிலாக்கும் பூணிப்பென் றன்னதென்றான் வள்ளல்
கனிவாக்குஞ் சொல்லாற் கணித்து. (63)

இங்கெண்ணு தோர்திங்க ளேற்றிருப்ப னென்றவுரை
அங்கண்ணு னுணை யறிவித்த மங்கை
இருப்பதுவு மின்று மிசை சினத்தே தென்றான்
பொருப்பதுவு மொன்றுப் புயன். (64)

ஆதலிற்றான் செய்யு மமர்த்தொழிற்கு மேன்மையின்றால்
தூதனுற்ற செய்கைமிகத் தூய்தென்றான் வேத
சிரக்கருணை வள்ளல் திறமடுத்த நேயன்
அரக்கனவை வந்தா னடுத்து. (65)

தீட்டுந் தடராய்ச் சிறந்தவிழித் தேவியர்கள்
ஈட்டந் தனிலா மிறைவற்கு வீட்டும்
அனுமானு மென்று னமரர்வலி கொண்ட
தனுமானு மிந்திரசித் தன். (66)

புவன மனைத்தும் பொருளாக்கா வீரன்
அவனைப் பணிந்தரியா மண்ணல் சிவனெனத்தான்
செங்கண்மா லென்னத் திறற்சே வகனென்றான்
வன்கண்மா மாயம் வலன். (67)

Koviloor Digital Library

நோக்கினான் கட்பொறியால் நோன்மையிலான் வாய்மையி [லான்
தூக்கு மயிர்கள் சுறுக்கொள்ளத் தாக்கும்
உயிர்ப்படுத்து வெய்யபுகை யோங்க வுறுத்தான்
செயிர்ப்படுத்த பாம்பிற் சினந்து. (68)

அன்ன வெகுளியா னண்டர் முதலெவரும்
துன்ன வெகுதுணுக்கஞ் சுற்றுறத்தான் என்னை
இவண்வரவு நீயாரை யென்ன விளித்தான்
அவண்விரவு கூற்றா யடர்த்து. (69)

நேமியோ வச்சிரனோ நேர்கணிச்சி வானவனோ
தாமரையான் றானோ தலைபலவாய்ப் பூமிதனைத்
தாங்கொருவ னீட்டாய் தனித்தடற்கு நாமமுட
னோங்குருவைக் காட்டா யுருத்து. (70)

நின்றிசைத்து நல்லுயிரை நீக்குமடற் காலனோ
குன்றிசைத்து வேல்வீசு கொற்றவனோ தென்றிசைக்கட்
சார்ந்தவரன் றானோ தறுகண்ணாய் நேரடுத்து
வார்ந்தவரி னீயார் வழங்கு. (71)

அந்தணர்கள் வேள்விதனி லாக்கி வரவிடுத்த
வெந்தறுகட் பூதமோ வேறெவைதான் முந்த
மலரோ னிலங்கை வளமாற்ற விட்ட
கொலையார் திகியோ கூறு. (72)

ஆரைநீ யென்னையிவ ணாகியது காரணமென்
னாருனைவிட் டாரறிய வாணையினாற் சோர்விலவாய்ச்
சொல்லுதிற லென்றான் சுரர்புகழை முற்றெடுத்துக்
கல்லுதிறல் கொண்டான் கடுத்து. (73)

சொல்வலிய ரல்லேன் றொகுத்த வவரெல்லாம்
புல்வலிய ரேவல் பொறுக்கிலேன் அல்லி
நலங்கொண் மலர்க்கண்ண னாட்டும்வில்லி தூதன்
இலங்கை நகர்க்கெய்தி னேன். (74)

Koviloor Digital Library

அனையவனை யாரென் றறிதியேற் சொல்வேன்
முனையவரர் தேவர் முதல்வ ரனைய
திருவினையு மாக்குஞ் செயலுடையர்க் கேனு
மிருவினையு நீக்கு மிறை. (75)

ஈட்டுவலி மேனு ளியற்று தவமடுத்துக்
கூட்டுபடை வானோர் கொடுத்தவரம் நீட்டுபிற
வாழ்வடுத்த வெல்லாம் வரமார் பகழியொன்றாற்
தாழ்வடுத்தல் செய்திடவந் தான். (76)

தேவர்பிற ரல்லன் திசைக்களிறல் லன்றிசையின்
காவலரோ வீசன் கயிலையலன் மூவரலன்
மாண்ட முனிவரலன் மன்னடுத்த பூவுலகை
யாண்டவரசன் புதல்வ னாம். (77)

போதமுந்து கேள்வி புரையில் பயன்பொய்தீர்
மாதவந்தாந் தீரா வரங்கண்முற்றும் ஞாதமுந்த
எண்ணவற நல்கு மிறைவன் மறைபுகலும்
வண்ணவர வில்லோன வன். (78)

காரணங்கேட் டாயிற் கடையின் மறைக்கண்ணும்
ஆரணங்காட் டாவறிவுக் காமறிவன் வாரணந்தான்
மாமுதலே யென்ற மறைமுதலே வானவர்க்குத்
தாமுதலா வந்தான் தரை. (79)

மூலநடு வீறுமிலான் முற்றடுத்த விற்பிடித்துச்
சூலங் கரகஞ் சுடராழிக் கோலம்
துறந்தாலம் பூவெள்ளித் தூயவரை விட்டுப்
பிறந்தான யோத்தியென்று பேண். (80)

அறத்தை நிறுத்திமறை யானவர நீதித்
திறத்துலகம் பூணவைத்துத் தீயோ ரிறத்தலுற
நூறித்தக் கோரிடரை நூறிப் பிறப்பறுப்பான்
தேறிப் பிறந்தான் சிறந்து. (81)

Koviloor Digital Library

அன்னதலைத் தேவற் கடிமை யனுமனென்பேன்
நன்னுதலைத் தேடி நயந்தபடை மன்னவன்தென்
பால்வந்த வாலிமைந்தன் பாங்குடைய வங்கதன்றன்
மால்வந்த தூதனென்றான் மான். (82)

என்றவுரை கேட்ட விலங்கைக் கதிபனக்கு
வன்றிறலான் வாலி மகன்றூத னன்றடுத்த
வாலிவலி யானரசு வாழ்வுடைத்தோ வென்றவற்கு
மாலிவரச் சொல்லு மதித்து. (83)

அஞ்சிநத்தான் வல்லரக்க வந்தரமுற் றான்வாலி
வெஞ்சினத்தான் மீளான் வால் மீள்வதிலை யஞ்சநத்தாம்
மேனிவள்ளல் வாளியொன்றால் வீந்தா னெமதரசன்
தானவரன் சூரியன்மைந் தன். (84)

என்னிட்டால் வாலி யிறந்தா னவற்கொன்ற
வன்னானி ராமனெங்கே யாயவன்றன் மின்னவளை
அங்கதனே தேட வடுத்த செயலென்னே
யிங்கிதுசொல் லென்றா னெடுத்து. (85)

தேவிதனை நாடிவந்த செங்கோலாற் கெங்கோமான்
ஆவிதனைப் போன்றா னருளென்றான் கோவியலை
நன்றளித்தான் முந்த நலத்தேவி யைத்தந்து
கொன்றளித்தான் வாலியையெங் கோ. (86)

ஆயவன்ற ஞேடு மடுத்ததிங்க ளான்குவைகி
மேயபடை சூழ விளங்குவரன் போய்நாடு
மென்னப் புகுந்த திவையென்றான் கேட்டரக்கன்
பன்னப் புகுந்தான் படிறு. (87)

உங்குலத்தி னற்றலைவ ஞெடொப்பி லானையம்பின்
வெங்கொலைக்குள் ளாக்கியன்றாண்மேற்கொண்டீ ரெங்குலக்
நும்சீர்த்தி தானும் நுமக்கே பொருத்தமென்றான் [கும்
தெம்சீர்த்தி கொண்டான் சிரித்து. (88)

Koviloor Digital Library

தம்முனைத்தான் கொல்வித்துத் தானே யடிமையுற்ற
வும்மினத்தா னேவ வுரைப்பதெற்கென் றெம்முனைக்காந்
தூதா யிகல்புரிந்த தொல்லைவழக் கென்னையென்றான்
வாதா யிகல்செய்ப வன். (89)

துணர்த்து வருதாரன் சொற்றவுரை கேட்டுப்
புணர்த்து வரு நீதி போற்றி யுணர்த்தின்
நலமென்று கொண்டான் நயவுரைகள் சொற்றான்
புலமொன்ற வென்றான் புனைந்து. (90)

தூதுவந்த தோதுவகேள் சூரன் றிருமகன்றான்
ஏதுவந்த நீதி யியைந்தவற்றைச் சாதுவொன்ற
நிற்கியற்றச் சொற்றா னிகரில்லா னென்றுரைத்தான்
கற்கியொற்றை யான்மாணுக் கன். (91)

வறிதுநண்ணாய் வாழ்க்கை மறுவி லரசாய்ச்
சிறிதுமெண்ணாய் தீமை திருந்தி இறுதியுற்ற
தாயினுமுற் காமுறுதி யாவதனைக் கேட்கின்
மாயினுமிக் காகியநன் மை. (92)

காயிற்றீ ரைம்புலனைக் காத்தறிவை மேற்செலுத்தி
யாயிற்றீ ராத வருந்தவந்தான் போயிற்றாம்
கற்புடைய தாயைக் கடுந்தியிற் றூயவளைத்
தற்பமொடு செய்துன்பத் தால். (93)

இன்றடுத்து வீந்த தினிநாளைத் தீர்ந்ததிறை
நின்றடுத்து வீந்ததலா னிற்றலுண்டோ வொன்றடுத்த
நல்லுணர்வா ரும்பர்களை நாட்டிவென்ற சீர்த்திபது
மெல்லுணர்வாம் பாவ மிகும். (94)

தீமையது நன்மையியல் தீர்த்தலொவ்வா தென்றடுத்த
வாய்மையதை நீக்கிவிட்டாய் மாதவத்தாம் தூய்மைகொண்ட
தூயவளாற் றேன்றியநோய் துன்பமிகத் தந்தநன்றி
நேயவள மென்னும் வினை. (95)

Koviloor Digital Library

திறந்திறம்பு காமச் செறுக்கி னுறுவோர்
மறந்திறம்பாப் புந்தி மயக்கி னிறந்திறந்திங்
கேறி யழிவதலா லேற்றவறத் தாற்றினிலை
கூறியிடும் நன்மையென்னா கும். (96)

நாமத்தார் வேலைசுற்றும் ஞால மவிந்தவர்க
ளீமத்தான் மூடு மிளமாதர் காமத்தால்
வாடியிற்ற பேரை மதித்தெண்ணிற் சால்வதுண்டோ
நாடியுற்ற நன்னலமென் னாம். (97)

பொருளடுத்த காமமிவை போக்கித்தாம் வேறு
மிருளடுத்த செய்கையெண்ணா ரீத லருளடுத்துக்
காதலிடை தீர்தலன்றிக் காணுவது வேறிலென
வோதநின்றார் மேன்மையுளத் தோர். (98)

இச்சையுற்ற தன்மை யினிற்பிறர்த மில்லதனை
நச்சியுற்ற நாண்போய் நகைக்கிடமாய் வச்சிரத்தாம்
மேனிக்குந் தீங்காய் வெறும்பழியை யேற்றலது
மானிக்கு வித்தா மறி. (99)

ஓதமுற்ற நீருலகை யுன்னின் மிகுத்தாண்டா
ரேதமுற்ற தாலிறந்தா ரேற்றமுற்றா ராதலிற்றான்
வேதமுற்ற நீதி விதிவழியிற் செல்லவரு
போதமுற்றுக் கொள்வாய் புலன். (100)

வெறுப்புண்டா மங்கைதனை வேண்டி யதனால்
மறுப்புண்டு வாழநின்ற வாழ்வி லுறுப்புண்டா
யோங்கிநின்ற நாசிதனை யுற்றறுத்த தாமழகு
தாங்கிநின்ற தென்றான் றடுத்து. (101)

பாரை யடுத்தடர்க்கும் பற்பலவாம் பொற்புயங்கள்
சீரையடுத் தாயிரங்கஞ் சேர்ந்திடினு மூரைச்
சுடுகனலில் வீழ்ந்த துணியாவ தன்றி
நடுவருமோ வித்தொழிலி னால். (102)

Koviloor Digital Library

புரம்பிழைக்கத் தீயைப் புகுதாகை செய்தோன்
நரம்பிழைத்த பாடலினல் நல்கும் வரம்பிழைக்கும்
மன்னு மறைபிழையா வள்ளல் சரம்பிழைத்தற்
குன்னுமுறை யுண்டோ வுரை. (103)

ஈறில்லா நாணமுக வெஞ்சலிலா நற்றிருவை
நூறிவந்து நொய்தாய் நுழைதியோ வேறும்
நகையாம் வினைத்தொழிலை நாடினர்க் கேற்ற
சிகையாம் வினைத்தொழிலாய் தேர். (104)

பிறந்துள்ளா ரின்னும் பிறவாப் பதத்திற்
சிறந்துள்ளார் தேவர்க்குந் தேவ ரிறந்துள்ளா
ரெல்லாரும் வள்ள லிராமன் றனைமதிக்கும்
வல்லாரென் றெண்ணுன் மனத்து. (105)

ஆதலினு லுன்ற னரிய பெறற்செல்வ
மோது கிளை யுயிரு மோங்குதற்குச் சீதை
தனக்கினிய செய்துதரச் சாற்றினன் சூரன்
மனக்கினிய மைந்தனென்றான் மான். (106)

என்றடுத்த சொற்கேட் டிவைபுகல லெற்குமொரு
குன்றடுத்த கோடரமோ கூறுமுறை நன்றெனவுட்
கொண்டு சிரித்தான் குறிக்கும் பகைவரைவெங்
கண்டு சிரித்தான் கனன்று. (107)

குரக்குமொழி மானுடவர் கொற்றமுந்தா னிற்கச்
செருக்குமொழி யென்கொல் சிறந்த புரத்துவரு
தூதடுத்தாய் மைந்து தொலையா வரக்கர்களை
கோதடுத்தாய் கொன்றதெவைக் கு. (108)

காட்டுவா ரின்மை கடிகாவைப் பொன்நமுற்றும்
வாட்டினே னென்னை வலிந்தவரை விட்டினேன்[வென்றான்
பின்னுமென்மை கொண்டதுன்றன் பேரவையைக் காண
மன்னுமெய்ம்மை கொண்டவனு மான். (109)

Koviloor Digital Library

என்னவுடன் பொங்கு மெரியாற் பொரியுடலன்
மின்னெயிற்றன் வன்சினத்தின் வீங்கினன் கொன்மினென்
கொல்லியர்கள் சேரக் குறித்தவரை நின்மினென்று [ரூன்
நல்லிய லனும்வீட ணன். (110)

ஆண்டெழுந்து நின்று னதிப னரக்கனைத்தன்
நீண்டகையி னல்வணங்கி நீதியான் மூண்டெழுந்த
கோபமுறை யாமோ குலமன்ன வென்றுரைத்தான்
பாபமுரை யாதான் பரிந்து. (111)

அந்தவர னுக்கு மகிலத் தரத்தாற்றல்
தந்தவனன் புக்காம் தவநெறியா யிந்திரற்கும்
எற்றறிய செல்வத்தா யின்னெருவன் றூதனுயிர்
மாற்றறிய தென்றான் மதித்து. (112)

பூதலத்தி னண்டப் புரத்திற் புரைதீர்ந்த
வேதமுற்ற மெய்யுடைய வேல்வேந்தர் மாதரைத்தாம்
கொன்றவருண் டேனும் குலத்துவரு தூதர்களைக்
கொன்றவருண் டாமோ குறித்து. (113)

பகைப்புலத்தார் சொற்ற படியுரைக்கும் நன்மைத்
தகைப்புலத்தார்க் கோறலது தக்கார் நகைப்புலத்துக்
காகுமிட மன்றி யறிவின் றலைமைமன்னு
போகுமிட மென்றான் புலர்ந்து. (114)

முத்தலைய சூலத்தான் முன்னோன் முதல்வர்க்கு
மித்தலையே வல்லிகழ்ச்சிக் கேற்றவினை யெத்தலையும்
காவல்புரி மேலோய் கருதலர்க ளேவவரு
மேவல்புரி தூதர்செய லென். (115)

இளையவளைக் கொல்லா திருஞ்செவிமூக் கீர்ந்து
விளைவுரைக்க விட்டார்கள் வீரர் களைதியெனில்
நம்பாலின் வந்தசெய்கை நாட்டுவதா ரென்றுரைத்தான்
தம்பாலி னன்மையறிந் தான். (116)

Koviloor Digital Library

நன்றுரைத்தாய் நம்பி நவைசெய் தவனேனுங்
கொன்றுரைத்த நீதினித்தான் கூலத்தை நன்றுசுட்டிங்
கின்னகரைப் போக்கிவரு மெல்லை கடத்துமென்று
னன்னவர்கள் வந்தா ரடுத்து. (117)

ஆய சமைய மயன்படையி னேடிருத்தல்
தூயதன்று வேறுற் றொடக்குமென மேயபடை
தன்னை யெடுத்தான் சரிகயிற்றாற் கட்டினர்கள்
மன்னு மரக்கர் வளைத்து. (118)

நாட்டினக ருள்ள நடுக்கயறு தாமொன்றே
வீட்டினடு வூசல் விசிதுறந்த மாட்டும்
புரவி விசிதுறந்த போர்யானை யெல்லாம்
புரசை யிழந்த பொருத்து. (119)

மண்ணடுத்த வாணிளுள மற்றுங் கயிறுகளும்
எண்ணடுத்த வீர ரெடுத்துவந்த பெண்ணுடையார்
மங்கலத்தி னுங்கயறு மட்டு மொழிந்தமற்றும்
பொங்கலத்தார் தந்தார் புகழ்ந்து. (120)

கடவுட் படையைக் கடத்தினவை யின்றி
விடுவித் தளித்தார்தெம் வேந்தர் கடுவொத்தார்
வென்றுகொள வெற்கே விடையளித்த தொத்ததிது
நன்றுகொளுந் தியின் னகர். (121)

நொய்யபா சம்பிணிப்ப நோன்மை யிலன்போலும்
வெய்யவரக் கர்க்குணங்கி வேண்டிவந்தா னையனவன்
விஞ்சைமுற்றுந் தேர்ந்தறியா மேலோனைப் போலிருந்தான்
தஞ்சமுற்றோர்க் காக்குந் தரன். (122)

வேந்தன் கடைவாய் விரைவிற் கடந்திடையிற்
போந்து மறவர் புரஞ்சுற்ற வேந்துநெடு
வாலினிட்ட வார்கிழியின் வண்ணமுற்று மெண்ணெயிட்டார்
கோலிமுட்டுந் தீயின் கொழுந்து. (123)

Koviloor Digital Library

ஆர்த்தார் தெழித்தடுத்தா ரண்டங் கடிகலங்க
வேர்த்தார் வெறித்தார் வெருவினார் நீர்த்தரங்கம்
போலவிடு மோசை புரமுழுதும் போர்ப்பவந்தார்
சாலவடல் கொண்டிழுத்தார் தாம். (124)

ஒக்கவுடன் சேர்த்தா ருலப்பிலவாம் பாசமதைப்
பக்கமுட னெண்ணரியார் பற்றினார் புக்க
படையுடையார் காப்பவர்கள் பற்றித் தொடர்ந்தார்
கடையுடையார் காணுமரக் கர். (125)

இந்த நகரழித்து மேற்றபடை யைத்தொலைத்தும்
நொத்தவளாஞ் சீதைக்கு நோன்மைதந்த சந்தக்
குரங்கடைய வந்த கொடுமையறி வீரென்
றுரங்கடையார் சொற்றா ருருத்து. (126)

ஆர்த்தார்க ளண்டத்தி னப்புரத்துஞ் சொல்வரெனச்
சீர்த்தா ரிடித்தார் செழிந்தடுத்துப் பார்த்தார்கள்
சானமுற்றுஞ் சானகிக்குந் தந்துரைத்தார் வெந்துயரால்த்
தானமுற்று ளேங்கியழு தாள். (127)

தாயே யனைய தரத்தாய் தனஞ்சயனே
நாயே யனையார்க்கு நல்கலுண்டோ நீயே
யுலகச் சுடராகி னுத்தமியா னென்னின்
விலகச் சுடலென்றாண் மின். (128)

வெளுத்த நகையாள் விளம்ப விலகி
யொளித்த கனலவனு முட்குந் தளிர்த்தனவாம்
கேசஞ் சிலிர்ப்பக் கெழுமி விள்ங்கினான்
மாசென்ப தில்லான் மகிழ்ந்து. (129)

மற்றப் பகர்வென் வடவை புவியடுத்த
கற்றைக் கனலிபற்றுங் காயத்தீ முற்றுவரர்
மும்மைத்தீ முப்புரந்தீர் முன்னோன் விழித்தியும்
செம்மைத்தாஞ் சீதமுற்ற தே. (130)

Koviloor Digital Library

அண்டமளந் தான்கை யனலி குளிர்ந்தோம
குண்டங் குளிர்ந்தவிடி கொண்டகுளிர் சண்டக்
கதிர்மண் டலங்குளிர்ந்த காணு நரகந்
துதிகொண் டெனக்குளிர்ந்த து. (131)

வெற்பியன்ற மேனி விழுங்கி வருவெந்தீ
யாற்பியன்ற வுட்டிணமில் லாமை கண்டான் பொற்புடைய
சிந்தைநய நன்றனுமான் சீர்ச்சனகி கற்பினல்ந்
தந்தநய மென்றுதுதித் தான். (132)

அற்றை யிரவி லறிவின் முழுதுமுன்னப்
பெற்றிலனென் றூலும் பிறங்கரக்கர் முற்று
மறியநத்திக் காட்ட வகனகரங் கண்டான்
பொறியடக்கு நன்மைப் புலன். (133)

முழுதடுத்து நோக்கி முடிவூரிற் சென்றான்.
வழுவுதற்கா மென்று வளைத்துத் தழுவி
இரண்டுபுறத் தாயிரம்பே ரேற்றெடுத்தார் தம்மைப்
புரண்டுவிழச் சென்றான் பொடித்து. (134)

இற்றரக்கர் போக விழுந்த கயிற்றினொடு
வெற்றியுற்றான் விண்ணின் விளங்கலது முற்றடுத்து
வாளரவின் சுற்றம் வயக்க வருகலுழன்
கோளறவ னொத்தான் குறித்து. (135)

துன்னார் புரத்தைச் சுடுதொழில்சேர் தொல்லையனும்
பன்னும் சுகரடுத்துப் பற்றுதற்கு மன்னவனை
வாழ்த்திநகு தீயின் மடுப்ப னெனவாலைத்
தாழ்த்திநகர் தன்னில்விட்டார்த் தான். (136)

தன்னிறைக்கு வெய்யோர் தரமன்றிச் செய்ததுகேட்
டன்னதற்கிவ் வூரை யழிப்பலெனச் செந்நிறத்தாம்
வெம்போர் மழுப்பின் விரும்பி வரலொக்குஞ்
செம்போதன் கூலஞ் செழித்து. (137)

Koviloor Digital Library

அப்புரத்து வேலை யளவு மிலங்கைதனை
எப்புரத்து மோர்கணத்தி னேற்றெரித்தல் துப்புறழும்
மேனியண்ணல் மேருவெனும் விற்பிடித்து முப்புரமாம்
வானிலெய்த கோலடுக்கும் வால். (138)

உகக்கடையி னெல்லா மொருங்குணத்தன் ஞட்டச்
சிகைக்கனலை முன்காண் செயலா மிகைத்தெழுதீ
யோங்கிநின்ற வாலதனை யோட்டினன் பொன்னிலங்கை
யேங்கிநின்றோர் காண வெடுத்து. (139)

வெள்ளியினும் பொன்னும் விளங்கு மணியானும்
தெள்ளியனுந் தேவதச்சன் செய்தடுத்த தள்ளரிய
தாமனைக டோருந் தனித்தனியே தாவுசெயல்
மாமலையின் வீழிடியா வாம். (140)

நீணிறத்தி ராக்கதரால் நெய்பொழியும் வேள்வியின்றி
பால்பசியான் மாருதிவால் பற்றியே யாலமுண்டான்
உண்டா னுலகெல்லா மூழிதனி லென்னக்
கொண்டான் கனலி கொதித்து. (141)

பிணிவீட்டு படலம் முற்றிற்று.

இலங்கை யெரியூட்டு படலம்.

விடுகொடியைப் பற்றி விமானங் கொளுத்தி
நெடுந்தூணைச் சேர்ந்துசுவர் நெட்டி முடியவஃரச்
சுற்றிநகர் முற்றுந் தொடர்ந்தெரித்து வந்தனவாம்
கற்றைமனை தோறுங் கனல். (1)

வாசலிட்ட தானவெரி மாமணிசேர் மாளிகையை
மூசமுட்டி யெங்கு முருக்குதலால் ஊசலிட்ட
வுள்ளத்தோ டோடி யுலைந்துளைந்து பூசலிட்ட
கள்ளத்தோர் போற்றுநன்ன கர். (2)

Koviloor Digital Library

மணியிற் சிறந்து வயங்கொளிசேர் மாடம்
பிணியிற் சுடர்கள் பெருக்கத் திணிகொள்ளப்
பற்றியதை யோரார் பணில வளைக்கரத்தார்
சுற்றியமைந் துள்ளார் துணிந்து. (3)

வானகத்தை நீண்டபுகை மாய்த்து வரலாலே
போனதிக்கைக் காணர் புலம்பினர் தேனைப்
பயிலுமலர் சிந்திப் படரும் வனத்து
மயிலனைய காட்சிமட வார். (4)

கூய்ச்செறிந்த மாகனருள் குஞ்சிதனிற் கூந்தலினும்
மீச்சொரிந்த மாதரொடு வீரர்களும் ஏய்ச்சொழிந்த
தன்மையினற் றீயின்மை தானுங் கொளுந்தினவும்
வன்மையினற் காணவரா வாம். (5)

இல்லினிடைத் தங்கு மியங்கெரிதான் யாவையுமே
சொல்லினிடைத் தீர்ந்தவெனத் தொல்லுறுத்தான் புல்லிக்
மாயைப் புணர்ப்புவிட்டு மன்னுகல்வித் தம்மியலை [கொள்
ஏயும் கருத்த ரென. (6)

ஆயதங்கோர் காலை யனகன் குறளுருவாய்த்
தாயளந்து பூவைத் தரக்கொள்வான் மீயார்
கரியவன்றன் மேனி கவிந்து பரந்த
வரியபுகை யோங்கி யடர்ந்து. (7)

நீலிசையும் யானையெலாம் நின்றதரக் கீழ்த்திசையான்
மாலிசையும் யானைதனை மானுவவா யேலவரு
மேலுரிஞ்சுந் தீயால் வெதும்பி யுடல்முழுதும்
தோலுஞ்ச தாகிவருந் தோல். (8)

மீதினிமஞ் சார்ந்தவென மேன்மைதரு வெம்புகையும்
சோதினிமிர் மங்கலத்தீச் சுற்றலினல் மேதிமங்குல்
விழ்புனலில் வீழும் விரியோதி மங்களெனத்
தாழ்புனலின் மாதர்விழுந் தார். (9)

Koviloor Digital Library

பொடித்தெழுந்து பேரும் பொரிபோ வனவும்
இடிக்குலங்கள் போலவிழ வெங்கும் வெடித்தவொலி
வேலை வெதும்புதலால் மீன்குலங்க ளன்னிரிற்
கோலிவெதும் பித்துடித்து கும். (10)

பருகுந்தீ யுள்ளுறத்தான் பற்று தலினுற்
தரமடுத்த வாடகத்தாந் தாரை யுருகியது
வேலைத்தண் ணீரின் விளங்கிவரு பொன்னெல்லாம்
சாலத்தண் டிற்றிரண்ட தாம். (11)

உரையின்முந்தப் பூவுலகை யுண்ணு மெரியால்
வரைநிவந்த பன்மணிகொள் மாடம் நிரையினின்ற
சோலையொடு போமோ துலங்கவரு பொன்னதனுற்
கோலமொடு தாலமுரு கும். (12)

கல்லின் வலிதாம் கடும்புகைசேர் கற்றையினு
லெல்லிபெற்ற தாமிமையோ ரேர்நாடு வில்லிடற்காம்
வல்லியுடன் கோலி வரச்சிறந்த மாமணியாம்
சில்லியுடன் றிரண்ட தேர். (13)

பேயமன்றி னின்று பிறங்க வருமெரிதான்
மாயருண்ட கள்ளை மடுத்ததுவாம் தூய
ரவரும் புரியு மவரடுத்தாற் றீமை
யிவரும் புரிவரென்ப தே. (14)

தழுவு மிலங்கை தழங்கெரிமீத் தாவி
வழுவில்லா வேலை மறுகும் எழுவாம்
சுடர்க்கற்றை யெய்தலினுற் தோயமுண்ணு மேகம்
விடத்திற் கொதிக்கு மிருந்து. (15)

உளனதனி லோடுமெரி யோடு மொடுங்கிடுவார்
கானதனி லோடுபுனல் காணென்று மேனிமிர்ந்து
வானிற்று மோடு மகளிர் மயங்கினராம்
வேனிற்றேர் தன்னில் விழுந்து. (16)

Koviloor Digital Library

தேனடுத்த பூம்பொழிலிற் றீப்பட‌த்தாம் சிந்தியதாற்
சோனைமலர்த் தும்பி தொடர்ந்தயலி லானதுதான்
மீச்சுடருந் தீயை விளங்கு மலர்த்தடமாய்
போய்ச்சுழன்று வீழ்ந்த பொறிந்து. (17)

நற்கடனு மீது நமக்குயிர்போ னுயகன்றன்
மற்கடத்தால் மாண்டதனுல் வாழ்விலவா மிற்கடத்த
லாகடமை யென்றறியி னுய்ந்திறந்து சூழ்ந்தனர்கள்
மாகடமாங் கொங்கைமட வார். (18)

பூக்கரிந்து பொங்குமுறி போயடைபோங் காவினிடை
தாக்கரிந்த பொன்கிளைகள் சாம்பராய் மீக்கரிந்து
வேர்முதல சாம்பியெரி மிஞ்ச விரித்தனவாம்
சீர்முதலான் வாலினிடுந் தீ. (19)

கார்முழுக்கத் தீருங் கனற்கற்றை சூழ்ந்ததனு
லூர்முழுக்கச் சேர வுருகினவாம் சீரொழுக்காய்க்
காய முழுதுங் கனலடுத்த லாற் சுவர்க்கம்
நேயமொடு வேர்விடுத்த னேர். (20)

நெருக்கவர மேலே நெருப்பெழுந்து வீசச்
செருக்குங் கதிர்திங்கள் சேர வுருக்கிவரு
மெய்யமுத மூற்றுதலால் வீழ்ந்த வரக்கர்சிலர்
செய்யவுயிர் பெற்றுர் சிறந்து. (21)

பரிதி யுலகுவரை பாயுங் கனலால்
கருகி யெழுந்துவரு காரும் அருகுவர
வான விருந்தை யதினுருகு பொன்னெனத்தான்
ஆன கதிரு மடுத்து. (22)

எழுந்து விசும்படுத்தா ரேறப் புகையாம்
கொழுந்துசுற்ற மிக்கவரு கோளால் விழுந்துபட்டார்
கொற்ற மிகுபடையார் கூற்றை விழுங்குமடல்
வெற்றி யரக்கர் விரைந்து. (23)

Koviloor Digital Library

கோசிகத்தாம் நற்றுகிலைக் கொண்டு கடுங்கனலும்
தூசினுத்த ரீயத் தொடுசுற்றும் வாசமிக்க
மைக்குழலைப் பற்ற மயங்கினர் காசடுத்த
பொற்குழையார் மிக்கப் பொரிந்து. (24)

நிலவார் துகிலு நெருப்பா ரரக்கர்
நலவான முத்த நகையார் புலவி
கரைகண் டவரமுதங் காலுங் கலவி
கரைகண் டிலர்பயந்தார் கள். (25)

பஞ்சரத்தி னோடு பசுங்கிளிகள் வெந்தடுக்க
அஞ்சனக்கண் ணீர்தனத்தி னக்கினர் கொஞ்சும்
கொழுநர்த் தழுவுங் கொதிப்பினோர் மஞ்சி
லெழுமின்னுந் தூமத் திடை. (26)

வரைபுரைய மாடமெரி மன்ன மகளிர்
புரையில்லா வில்விசும்பிற் போவார் கரையில்
புகைப்படலை யாற்கலங்கிப் பொன்சித் திரம்போல்
மிகப்படர்ந்து நிற்பார் வெளி. (27)

அகரினொடு சாந்தமுத லாமரங்கள் பற்றிப்
புகரின் வெரியுலகு போர்ப்பப் பகரூழிக்
காலக் கனல்பருகும் கார்க்கடலைப் போலெறிந்த
மாலொத்த நந்த வனம். (28)

மினைப்பரந்த வெஞ்சுடர்கள் வீங்கி விழுங்க
நினைப்பரிய திக்கடுத்து நேரக் கனற்பரந்த
தன்வடிவுந் தீயுந் தலைதெரியா மற்சிறந்த
பொன்வடிவாங் கற்பகப்பொற் பு. (29)

மிக்க புகைவிழுங்க வெள்ளி மலையதனை
யொக்கவெற்பாங் காக்கையன்ன மொன்றுகும் பக்கமுற்ற
வேலைசெயும் பாற்கடலும் வெற்றிமிக்க திக்கயங்கள்
மாவிசையும் யானைகளா மால். (30)

Koviloor Digital Library

கரிந்து கனல்கதுவக் காண வரவே
உரிந்தமெய்யர் நீரி ஞெளிப்ப விரிந்தடுத்த
கூந்தலொடு குஞ்சி குலவக் கடஞுமுஞ்
சேர்ந்தெரிந்த தன்மை தெரித்து. (31)

மருங்கி ஞெருமகவு மற்ரோர் மகவை
அருங்கையிற் கொண்டொன் றரற்ற நெருங்கினர்கள்
கூந்தலங்கி கொள்ளக் குரைகடலின் வீழ்ந்தனர்கள்
காந்தளங்கை மாதர் கரிந்து. (32)

வில்லுடைவாள் குந்தம் விறல்சேர் படைக்கலங்கள்
எல்லுடைய வாங்கே யிசைந்துருகி எல்லாம்
திரண்டொன்று சேர்ந்து செறியுண்டை யான
புரண்டொன்று மில்லாது போய். (33)

செய்தொடர்ந்த வல்லியொடு சிந்திப் புரிசையையும்
நொய்திற் றரிபறித்து நூறுமெரி வெய்தி
நுழைமுகத்தாங் கையெடுத்து நோன்மையின்றி யோடும்
கழைமுறிக்குங் கார்யானை கள். (34)

வெருளும் புகைப்படலை மேவ வெருவி
இருளுங் கடல்வீழு மேற்ற பருமைப்புள்
மீன்விழுங்க வெஞ்சும் வெருளி னருளிலர்பாற்
தான்விழுந்த தஞ்சந் தகைத்து. (35)

நீரைப் பருகி நெடுநிலமுற் றுந்தடவித்
தாருவெரித்துமலை தானீத்தி மேருதனைப்
பற்றிவரு பாழித்திரப் பாங்கா யரக்கன்மனை
சுற்றியெரிக் கத்துடர்ந்த து. (36)

வானடுத்த மங்கையரு மற்றுமங்கை மார்மறுகிப்
போனதிக்கை யாரறிந்தார் போயினுர் வானவர்கோன்
பொற்பதிக்கு முன்னிவராற் போந்த விடர்போல
விப்பதிக்கு வந்த திடர். (37)

Koviloor Digital Library

காவி னறுங்கலவை கற்பகத்தி னற்மொலிவாம்
பூவகிலு மொன்றிப் புகைமடுக்கத் தேவுகொண்ட
தேன்பொழியு மாமழையாய்ச் சேரு மடந்தையர்கள்
வான்குழலுங் கொண்ட மணம். (38)

சூழுமெரி யாருந் துணுக்கங் கொளவெவரும்
வாழுமரக் கன்கோயில் வந்துபற்றி யூழி
நிலையேழு மாப்பொழிலு நேர்ந்தெரித்தல் போல
நிலையேழும் வெந்த நிவந்து. (39)

பொன்றிருத்து நன்மை புரைதீர்ந்த மேருவெனும்
குன்றமொத்த மாநிலையார் கோபுரங்க ணின்றுருகித்
தென்றிசைக்கு மோர்மேரு சேர்த்த தெனவிருந்த
வன்றிறலான் பொன்மா மனை. (40)

அக்காலை தன்னி லரக்க னரிவையரும்
புக்காரம் புட்பகத்திற் போயினர் தக்க
வினைசெறித்தா ரில்லையதான் மேலா மிலங்கை
தனையெரித்த தீயெங்குஞ் சார்ந்து. (41)

ஆழித்தே ரண்ண லரக்கர் களைநோக்கி
ஏழுக்கே ழாமுலக மேற்றெரியு மூழித்தீக்
காலத்தான் வெந்ததுவோ காண்பிறிது வேறுண்டோ
வாலத்தீச் சுட்டதென்னென் றான். (42)

கரம்பரப்பித் தங்கிளையைக் காணார்கள்சோர்ந்தாங்
கிரங்கரக்கர் சொல்வா ரிறையோய் குரங்கடுத்துச்
சுட்டதீ யென்றவர்கள் சொல்லக் கொதித்தெழுந்தான்
கட்டதீ யென்னவரக் கன். (43)

என்றுரைக்கக் கேட்டரியி னேற்ற வலிக்குரங்கோ
நன்றுரைக்க வுண்டதுதீ நம்நகரை இன்றுகண்ட
தேவர்நகை செய்வார் திறமை நலமென்றான்
தாவநகை செய்தசினத் தான். (44)

Koviloor Digital Library

உண்டணையுந் தீயை யுலைய வடித்தடர்த்துக்
கொண்டணையு மென்றான் கொடுங்கண்ணான் மண்டி
விரைந்தடுத்தார் வீரர் விளங்குமலைத் தேரர்
வரைந்தடுத்தார் போரை மதித்து. (45)

நீருற்ற வேலை நிமிர்ந்தார் பெரும்படையார்
போருற்ற மாலை புனைந்தார்த்தா ரேருற்ற
வீரவர ரேழ்வர் வியந்தார் வளைத்தனர்கள்
சாரிவரு மாருதியைத் தான். (46)

பற்றுதிர்க ளென்பார் படர்ந்து பிடித்தடர்த்திங்
கெற்றுதிர்க ளென்பா ரெதிர்முனிவார் முற்றுதிறல்
கண்டடுத்தான் மாருதியும் காலக் கடுங்கனலைக்
கொண்டடுத்த கோலன் குறித்து. (47)

ஏல்கொண்ட வஞ்ச ரெதிர்த்தார் சினத்தினொடு
கால்கொண்டு கையடுத்த காரெனவே வேல்கொண்ட
கோலினரை வெந்திக் கொடுவாலி னன்வளைத்தான்
காலினடு மாருதிமிக் கான். (48)

பாதவத்தை யொன்று பறித்தான் பருவலியான்
மாதவத்தான் வாலின் வளைத்தடுத்து மோதவத்தால்
ஏதி யிழந்தா ரிரத்த நதியதனின்
மோதி விழுந்தார் முனிந்து. (49)

தோற்றினர்க டுஞ்சத் துடித்துப் பொடித்துவரும்
ஏற்றிகலும் வீர ரெதிர்ந்தார்த்தார் காற்றின்
மகனடுத்து வந்தான் வழுத்து திறத்தான்
சுகனடுத்துக்கற்றமிடுக்கன். (50)

மஞ்சுழலு மேனி வலிமிகுத்த வன்றாளர்
எஞ்சலிலா வீர ரிறந்தார்பின் மிஞ்சிவரு
மைம்பதி னாயிரவ ரல்லா தவர்வீழ்ந்தார்
பைம்புனலாம் வேலை படிந்து. (51)

Koviloor Digital Library

தோய்ச்சனனும் வாலைச் சுரிகொள் கடுங்கனலின்
காய்ச்சினதாம் வேலை கலந்தார்த்தார் போய்ச்சிலவர்
பொன்றினவர் போனார் புகைந்து வருகோப
வன்றிறலார் மைந்தரெழு வர். (52)

சுற்றிவரு தேரர் துறக்கா வலியுடையர்
விற்றொழிலார் வீரம் விளைத்தடுத்தா ரெற்றிவரு
மாருதிகை வீச்சால் மடிந்தா ரெழுவர்களும்
பேருதியை யொத்தார் பெருத்து. (53)

விட்டுயர்ந்த தோளுடையர் விஞ்சையர்கள் வெந்தீயின்
மட்டுயர்ந்த பொற்றனத்தாள் வைகுமெழிற் புட்டுவன்று
சோலைப் புறத்தடுத்துச் சூழ்ந்திலவா மென்றுரைத்தார்
ஆலைத் திறத்த மொழியார். (54)

வந்தவர்கள் சொல்ல மகிழ்ந்தான் புகழ்ந்தடுத்தான்
வெந்திறல்சேர் வீரன் வியந்தமனத் துய்ந்தனனு
மென்னச் சிறந்தா னினியமொழி யன்னைசர
ணுன்னிப் பணிந்தா னுகந்து. (55)

பார்த்தறிந்தா ளென்தாய் பரிந்த மனதுடையாள்
வேர்த்தெரிந்த மேனி மிகக்குளிர்ந்தாள் போர்த்திறத்தான்
மாருதியும் வார்த்தையென்னை வந்தனைதா னென்றுரைத்தான்
ஒருதிர வாரி யுளன். . (56)

தெள்ளியதோர் மாருதியுஞ் சென்று னினியிருந்தாற்
கள்ள வரக்கரெனைக் கண்டடுத்தா லெள்ளுவராய்ப்
பற்றுவர்க ளென்னுப் பரிந்த வெரியோனும்
சற்றுவர லின்றிமறைந் தான். (57)

இலங்கை யெரியூட்டு படலம் முற்றிற்று

Koviloor Digital Library

திருவடி தொழுத படலம்.

நீங்குபுலங் கொண்ட நினைவான் மருங்குநின்ற
தாங்குபொலங் குன்றை யடுத்தவையன் வீங்கும்
உலகை விழுங்கி யுயர்ந்தவர வீரன்
சலசவடி போற்றிநடந் தான். (1)

மைநாக மென்னும் மலையை மரபினெய்திக்
கைநாக மன்னன் கருத்துணர்த்திப் பைநாகம்
நிற்கின்ற வீரர் நிறைந்து வரவடுக்கும்
பொற்குன்றி னின்றான் பொலிந்து. (2)

போயடுத்த நற்கருமம் போற்ற முடிந்ததென
வாயெடுத்து வாழ்த்தவரு வானரர்கள் வீயடுத்த
பார்ப்பெல்லாந் தாய்ப்பரவை பன்னி வரக்கண்ட
வார்ப்பொன்ற வந்தா ரடுத்து. (3)

அழுதார் சிலவர்முன்னின் றார்த்தார் சிலவர்
தொழுதார் சிலவரண்மித் துள்ளி முழுதும்
விழுங்குவர்போன் மொய்த்தார் விரைந்து சுமந்தார்
செழுங்கருணைக் கண்ணனைச் சேர்ந்து. (4)

தேன்மலருங் காய்கிழங்குந் தேடி முறைவைத்தீதம்
பான்மையொடு முண்டு பசிதீர்தி மேன்மைதரு
வாண்முகமே யெங்கட்கு மாற்ற முரைத்ததென
வாண்மைதமைச் சொற்றா ரடுத்து. (5)

தாள்களினு மார்பிற் றலையிற் றடக்கைதமில்
வாள்களினுங் கோலின் வகுத்தபுண்கள் நாளடுத்த
நம்பிகண்ணை வாயடுத்து நாட்டியதைக் கண்டுயிர்த்தார்
வெம்பியெண்ண மிக்க மெலிந்து. (6)

Koviloor Digital Library

வாலி சுதனை வணங்கியெண்கின் வேந்தனிரு
காலிற் பணிந்து கடவசெயல் மேலியற்றிப்
பன்மை யிவணிருந்த பாங்குடையோர்க் கன்னைமொழி
நன்மைதரு மென்று னயந்து. (7)

என்றெடுத்துச் சொல்ல வெழுந்து கரங்கூப்பி
நின்றெடுத்த வன்பி னிறைந்தநெஞ்சர் சென்றடுத்து
வந்தவரை சொல்வாய் வளர்ந்தபுயத் தாயென்ன
முந்தவுரை தந்தான் மொழிந்து. (8)

ஆண்டகைதன் றேவி யருந்தவத்தி னன்புசொல்லிப்
பூண்டவடை யாளம் பொருந்தவுரைத் தாண்டரக்கர்
போருரைக்கான் றீயும் புகலான் றனதுவென்றிச்
சீருரைக்க வெள்கித் தெளிந்து. (9)

பொருதமைபுண் சொல்லவென்றல் போந்த துரைக்க
உரைபுகைதீ யூரினிட்ட தோதக் கருதலர்கள்
வன்மைகண்டோந் தேவி வரவில் செயலதனால்
நன்மைகண்டோஞ் செய்வதெனை நாட்டு. (10)

யாவுமினி யெண்ணற் கடுத்த செயலின்றாந்
தேவிதனைக் கண்ட செயல் செப்பி மேவுமண்ணல்
உள்ளத்தாஞ் சங்கை யொழித்தனல மென்றசென்றார்
வெள்ளத்தாம் வீரர் விழைந்து. (11)

போயார் களிப்பினொடு புக்கவன்வில் வாளியெனக்
காயுங் கதிருச்சிக் காலமதாய்ச் சேயார்
மதுவனத்தை யுற்றார் மதித்த கவினால்
விதுவனத்தை யுற்றார் விரைந்து. (12)

ஏதடுத்த கால மிலையந்த வுணவின்றி
மீதடுத்த நல்லுணர்வும் வீயந்துற்றோஞ் சாதல்
தடுத்தா யுணவதுவும் தந்தருள்வா யென்ன
வடுத்தா னனுமா னறிந்து. (13)

Koviloor Digital Library

அங்கதன்பா லண்மி யளக்கா வுனதுபடை
வெங்கதம்போய்ப் பொங்குபசி மேலடுக்கு மிங்கிதனுக்
காம்பிரசந் தந்தருளற் காமென் றுரைத்துநின்றான்
சாம்பனொடு சார்ந்ததரத் தான். (14)

நன்றென் றவனுரைக்க நாற்கடலி னார்த்தெடுத்துச்
சென்றுபிர சந்தூங்குஞ் சீர்வனத்தி னொன்றினுடன்
ஒன்றடுத்துப் பாயு மொடிக்கும் பிரசமெலாந்
தின்றடுத்துச் சேருந் தெழித்து. (15)

ஒருவர்கொண்ட தேனை யொருவருண்டு போவர்
ஒருவர்கொண்ட கோலை யொளிப்பார் ஒருவருட
னொன்றித் தழுவி யுவப்பா ருகந்தடுப்பார்
வென்றித் தகையர் மிகுந்து. (16)

இன்னநிகழ் காலை யெரிவிழித்துச் சீறிவந்தார்
அன்னநிகர் சோலை யளிப்பவர்கண் மன்னும்
கதிர்ச்சேய னாணை கடந்தீ ரிறுதி
மதித்தீர்க ளென்றார் மறித்து. (17)

முனியுமெமை யென்று மொழிந்தடுத்து வந்து
கனியு மதுவனத்தைக் கட்ட தினியகவிச்
சேனையெனச் சொற்றார் திறலார் ததிமுகற்குத்
தானையெனச் சொற்றதரத் தார். (18)

கேட்டானை வாலிக் கெடுதியுற்றார்க் காட்டிரென
வாட்டானை வாலி மகன்முதலோர் கூட்டாக
வந்தடுத்தா ரங்கதன்சொல் வாய்ந்து வனமழித்தார்
சிந்தடுத்தா மென்னத் தெரிந்து. (19)

உரங்கிளத்து மன்ன னுறுதிகொண்டி யாங்கள்
குரங்கினத்தைத் தட்டவெம்மைக் குத்த விரங்கிநத்தோம்
காவலனே யென்றார் கருதிலனோ தாதைசெயல்
மேவலனோ வென்றான் வெகுண்டு. (20)

Koviloor Digital Library

எனவுரைத்துத் தீயி னெழுந்திரண்டு கோடி
கனகவியின் சேனை கலக்கப் புனையுமதுச்
சோலைவந்த காலை துயர்த்தகவி யங்கதவேள்
காலைவந்து சூழ்ந்த கவிந்து. (21)

இந்திரனால் வாலிக் கியைந்த மதுச்சோலை
யந்தரத்தார் நோக்கரிதென் ஞனையினற் சிந்தினையால்
மற்றரிசேய் வன்மை மதியா யுனதுயிரு
மிற்றதினியென்று னெதிர்த்து. (22)

மதுவனத்தை யென்னே மடித்தா யெனத்தான்
கதுமெனத்தான் பாறை கடுத்துத் ததிமுகத்தான்
அங்கதன்மேல் வீச வதையடுத்துத் தட்டிவிட்டான்
வெங்கதன்மேன் மேலும் விளித்து. (23)

வாய்குருதி சோர மடித்துத் தினன்சேய்முன்
போய்மொழிதி யென்றவனைப் போக்கியே யாயவன்றன்
சேனைதனைக் கட்டிச் செறியு மெனவுரைத்தான்
மானவரன் வாலி மகன். (24)

பிடித்தார் கொடியிற் பிணித்தா ரவரை
யிடித்தா ரெறும்வலிக்கை யிட்டுத் துடித்தாரைச்
சொல்லலுட னீருமெனக் சொற்று னவர்மிகுந்த
வல்லலுடன் சென்று ரடுத்து. (25)

அலைவளைத்த நீர்குடையு மாபோற் குடைந்து
தலைவர்கட்குத் தேன்கனியுந் தந்து நிலைவருத்தம்
தீர்ந்தா ருபவனத்தைச் சேர்ந்தார் கவிவரர்கள்
கூர்ந்தாம் வெயிலைக் குறித்து. (26)

முத்தலைவேற் கையார் முடிப்பரிய முற்றவிக்கும்
வித்தகவே டேர் விசையத்தா லத்தலையின்
ஆனதனைச் சொன்னே மனகன்மாட் டித்தலையி
னனதனைச் சொல்வா மறிந்து. (27)

Koviloor Digital Library

சேற்றினுற்ற மாமலர்வாழ் செல்வி தனைத் தேர்கவெனக்
காற்றினுற்றோ னோடு கவிச்சேனை நாற்றிசைக்கும்
ஏவிக் கருணைவள்ளற் கேற்ற புகன்றிருந்தான்
காவிக் கரும்பகை மகன். (28)

கார்வரையின் வீற்றிருந்த காத லிரவிசுதன்
சீர்வரையஞ் சொல்லாற் றெருட்டவள்ள லாருயிர்தான்
சோர்ந்துயிர்த்துத் தோன்றுந் துரிய நிலைமேலோர்
சார்ந்துயிர்க்கு மேனிலைநா தன். (29)

தண்டலிலா நற்றிசைக டாவினர் முத்திசையுங்
கண்டிலரா மாதையெனுங் கட்டுரைதான் கொண்ட
மனுமா னுளத்தின் மதிக்கும் பெருமை
யனுமா னுளத்தை யடுத்து. (30)

ஆரியனுந் துன்பமிகு மாழியடுத் தாழ்பவன்றான்
சீரியதன் றுஞ்செய்கை நீர்வருமாம் பாரிற்
பழிக்குறவு நாமென்றான் பங்கயமான் செம்பூ
விழிக்குறவு தாமென்ற வேள். (31)

குறிக்கவரு தென்றிசையைக் கூடி யடுத்து
வெறிக்குழலைக் காணச்செல் வீரர் மறித்துமிவண்
வந்திலராங் காரணமென் மாண்டனரோ வாண்டையவர்
சிந்தினரோ சிந்தைத் திறம். (32)

மாண்டனளோ வன்னாள் மரணமுற்ற வார்த்தைதனை
மீண்டனமாஞ் சொற்குநலம் வீதலெனப் பூண்ட
துயரடுத்துப் பொன்றினரோ சோர்ந்தலர்தார் கொல்லோ
அயரடுத்த தென்னோ வவர்க்கு. (33)

கண்டகரைக் கண்டு கருவு பகைமிகுத்து
மண்டமரில் வஞ்சர்புரி மாய்கையினால் விண்டலந்தான்
மேயினரோ வல்லால் விதியின்றி வெஞ்சிறையிற்
போயினரோ வென்றான் புலர்ந்து. (34)

Koviloor Digital Library

கூறிவரு நாளிருக்கை கூடலமான் மேலினித்தான்
ஏறிவரு நாணணி யின்பதுன்பந் தேறி
யருந்தவத்தை யாற்றினரோ வல்லதவர்க் குற்ற
வருந்தவத்தை யென்ன மதி. (35)

என்றான் ததியி னிடர்க்கடலி னேற்றவெல்லை
குன்றாந் ததிமுகன்றான் கூடினன் றன்றலையிற்
சோர்ந்தாங் குருதியுடன் சோர்ந்த கரங்கூப்பிச்
சார்ந்தான் பரிதிமகன் றாள். (36)

எழுந்துநின் று சொல்வா னினியே தழிந்த
திழிந்து மதுவனந்தா னென்றான் பொழிந்த
குருதியனை நோக்கிக் குறித்திடற்கா ரென்றான்
கருதிமொழி வான்றதிமு கன். (37)

நீலன் குமுதன் நெடிய மலையதனைப்
போலவரு சாம்பன் புணரியென மேலெழுந்த
சேனையொடு வந்தத் திறலார் மதுவனத்தைத்
தானிலமை பொன்றவழித் தார். (38)

தகைந்தடுத்த சேனை தனையடித்து நின்னை
இகழ்ந்துரைத்தான் வாலிமக னேற்ற மிகையாம்
உரைபொருத்த லின்றி யுருத்தெறிந்தே னென்றான்
தரைசெறித்த பாறை தனை. (39)

இமைத்திடுமு னங்கதன்றா னேற்றுவரு பாறை
தமைத்திடமார் கையிற் றடுத்துக் குமைத்தெனையும்
போய்மொழிவா யென்று புகன்றான் சினமுடையான்
தாய்மொழியா யென்றான் துதித்து. (40)

ஏம்ப லுடனெழுந்தா னென்றின் புதல்வனுடன்
பாம்பணையான் றாள்பணிந்து பைந்தொடிதான் மேம்படுபோற்
கற்புடையா ளென்னுமெய்ம்மை காட்டியதிக்கோபமென்றான்
அற்புடையான் றன்னை யடுத்து. (41)

Koviloor Digital Library

பண்டருசொ லன்னை பரிபவத்தைப் பாங்கடுத்துக்
கண்டனர்க ளன்ன களிப்பதனால் வண்டார்
மதுவனத்தைக் கண்டதனை மாந்தினு ரென்ருன்
விதுவனத்தைக் கொண்டான் விழைந்து. (42)

வந்தனர்கள் தென்றிசைக்கண் வாவினு ரென்றவுடன்
புந்திநொந்து கேட்டென் புகல்வரென வெந்தை
இருந்தான் ததிமுகனை யேற்றரசு சொல்லும்
பரிந்தான் றதிமொழியப் பால். (43)

யாரவணின் வந்தா ரதனை மொழிகவென
மாருதிதான் வாலி மகன்சாம்பன் சோர்வில்
பதினெழுவர் வீரர் பரவைப் படையார்
மதுவனத்தின் வந்தார் வளைத்து. (44)

என்ருன் றதிமுகன்று னேற்ற விரவிசுதன்
ஒன்று முரைநா னுரைப்பனகேள் குன்றாத
வாலிவரன் ருனும் வளமருவு மேன்மையினுன்
காலிவரும் வேகமிடுக் கன். (45)

கொற்றவன்ற னேவறலைக் கொண்டுவரு தெண்டிரைப்பார்
சுற்று திசை துருவித் தோகைதனைப் பற்றும்
பகையைத் தடிந்துவந்து பாங்க ரடுத்தார்
தகைமைத் தலைவரவர் தாம். (46)

அன்றியுமே யங்கதன்று னுற்ற லரசனென்பான்
பின்றிவர லென்னும் பெருந்தரத்தா யொன்று
முணர்வதிலை நன்மை யுவந்தடுக்க வேண்டின்
புணர்வதலை யானவனட் பு. (47)

வணங்கிவரு சென்னி மறைத்துவரு வாயன்
உணங்கிவரு சிந்தை யொடுங்கிக் கணங்களுடன்
ஏகிக்கா னண்ணி யியைந்தான் வியந்ததிறற்
போகிக்கா மங்கதன்முன் பு. (48)

Koviloor Digital Library

கண்டவனம் வாலி கருத வருபுதல்வன்
விண்டவனம் மேலடுப்பான் மீண்டுமெனி னுண்டோ
வுயிரவற்கே தென்று னுவந்துவரு தொண்டன்
செயிரவற்றே தென்றான் தெரிந்து. (49)

போழ்ந்தனயான் செய்தகுறை போற்றுகென வேற்றவடி
வீழ்ந்தனனும் வீழ்ந்தவுடன் வெற்றிமிக்கான் றாழ்ந்துகரம்
பற்றித் தழுவியுளைப் பண்பின்றிச் சூழ்ந்ததென்றான்
வெற்றித் தரத்தான் விழைந்து. (50)

யாமுதலி னேயிறந்த நாளெண்ணி வீயுமெம்மை
ஏமுறத்தான் துன்பழித்த வேற்றமெனத் தாமரைக்கண்
எம்மான் றுயர்தணிக்க வேக வெனவநுமான்
அம்மான் கழறலைக்கொண் டான். (51)

வன்றிறலி னென்றருள்வான் மாமுனிவு மாறியுற்றான்
வென்றிதரு மென்றுமுள வெம்மைவிட்டா னென்றடுத்தி
யாவருமே யேகி யடுத்தார்க ணன்மைதரு
சேவடியைச் சிந்தை செறித்து. (52)

இப்புறத்தி ராம னிரவி மகன்வதன
மொப்புறத்தா னோக்கி யுயர்தரத்தாய் தப்பறத்தான்
கண்டனமென் பாரோ கருதித் தெரிகிலராய்
விண்டனமென் பாரோ விளம்பு. (53)

என்புழியின் வாயுசுதன் ஏற்ற விரவியென்பான்
தென்புறமா வந்ததெனத் தேர்ந்தடுத்தான் பொன்பொழியும்
கையுடைய வில்லான் கருமை தருமெழிலி
மெய்யுடையான் காண்பான் விழைந்து. (54)

எய்தி யனுமானு மேந்தல் பரந்தரவாம்
செய்ய கழல்வணங்கான் செம்மலர்மான் றையல்
கழறலையிற் கொண்ட கருத்த னறத்தன்
விழைவுடனே வாழ்த்தும் விரைந்து. (55)

Koviloor Digital Library

திண்டிறலான் செய்கை தெரியவந்து நோக்கினன்
வண்டுமுர லோதி வலியளிவன் கண்டதுண்டு
கற்பவட்கு நன்றென்று காணுங் குறிப்பதனால்
பொற்பவள்ளல் கண்டான் புகழ்ந்து. (56)

ஆங்கவன்றன் செய்கை யளவை யதுவென்னு
வோங்கு முணர்வி னுளத்தமைத்தான் வீங்கும்
புயத்தான் புனற்கண்ணன் போன துயரான்
நயத்தான் மிகமகிழ்ந்த னன். (57)

கண்டறிந்தேன் கற்புக் கணியை யெனதுகண்ணுற்
றெண்டிரையாற் சூழிலங்கைத் தென்னகர்க்கண் அண்டர்க்
கதிப வினித்துயருக் காக்கமில்லை யாகும்
நதிபரவு தாளவென்ற னன். (58)

உன்றேவி யென்னு முரிமைக் குலையனித்த
மன்றோர் மருகியெனும் வாய்மைக்கும் பொன்மிதிலை
மன்மகிழ்ந்தாம் பொன்மகளா மட்டடங்காப் பொற்பினுக்கு
நன்மைதந்தா ளெம்மோய் நயந்து. (59)

பொன்னடுத்த பொன்னுயர்வு போலப் பொறையினின்று
டன்னடுத்த வன்னை தனக்குவந்த நின்னையொப்பு
நீயெனவே நேர்ந்தாள் நிகரி லெனக்குமதே
தாயுலக நாயகிதந் தாள். (60)

உன்குலத்தை யுற்களித்து மோங்கும் புகழ்க்கொருத்தி
தன்குலத்தைத் தற்காய்த் தனிமைசெய்தான் வன்குலத்தைக்
கூற்றுக் களித்தமரர் கோன்குலத்தை வாழ்வளித்தாள்
போற்றக் களிக்குமலர்ப் பொன். (61)

விற்றடந்தோள் வீர விரிநீ ரிலங்கைவெற்பி
னற்றவத்தா நங்கைதனை நான்காணே னிற்பிறப்பு
மேற்ற பொறையு மியைந்தபொற்புந் தாங்கணித்துச்
சாற்றுநடங் கண்டேன் றனித்து. (62)

Koviloor Digital Library

கண்ணு முளைநீ கருத்திடையு நீங்ககிலா
யெண்ணுமுளை கொங்கை யிணைக்குவட்டா யொண்ணுமுளம்
வெங்காம னெய்தவம்பு மேற்றொளைத்த காயமுற்று
யெங்கா முனைப்பிரிந்த தே. (63)

வேலை யிலங்கை விரியுநகர் விண்ணடுத்த
காலையிருள் காணாத கற்பகத்தாம் சோலைதனி
லும்பிதரு புற்சாலை யுற்றுன் சரணமலர்
நம்பியிருந் தாள்பணிந்தே னன். (64)

மண்ணொடுதான் கொண்டான் மதிக்கான் றொடுவதற்கு
மெண்ணொடுங்கத் தொட்டிடிற்சா வேற்குமென வண்ணக்
கமலவரன் சாபங் கவினு மறத்தாம்
விமலைதனைக் காக்கும் விழைந்து. (65)

தீண்டிலனென் வாய்மை திசைமுகனாற் செய்தவண்டங்
கீண்டிலது சேடனுச்சி கீறிலதாம் மீண்டு
சுடரடையா வீழுகிலை தூயவர வேதம்
படரடையா வென்பகரி பார். (66)

சோகத்தா ளாயநங்கை தூயகற்பி னாற்சிறந்த
மாகத்தாந் தேவியரும் வாழ்வடைந்தார் பாகத்தாள்
பாரச் சிரத்தாள் பதுமத்தா ளாயிரத்தாம்
வீரச் சிரத்தாள் விழைந்து. (67)

இலங்கைதனைக் கண்டரக்க னேற்றவிடந் தேடிப்
பொலங்குழையைக் காணாது போந்து நலஞ்சிறந்த
சோலைபுக வவ்விடையிற் றூயவளைக் கண்ணீராம்
வேலைபுகக் கண்டேன் விரைந்து. (68)

அரக்கியர்கள் கூடி யளவற்று ராங்கே
நெருக்கிவர மெய்க்கனலா நேரா ரிரக்கமென்ற
தொன்றே திருவடிவ முற்றுச் சிறையிருந்த
தென்றேதான் வேறுரைப்ப தென். (69)

Koviloor Digital Library

மாண்பமைந்த கற்புடைய வானுதனின் பால்வைத்த
சேண்பிறந்த காதல் தெவிட்டலுண்டோ வாண்பிறந்த
பல்வளத்த செல்வம் பலித்த வெனவுரைத்தான்
நல்வளத்த தூத னயந்து. (70)

தைய லடிவணங்கச் சாரமையம் பார்த்திருந்தே
னையவது காலை யரக்கனெய்த வெய்துரையாற்
சீறுமது கண்டுமிக்க சீற்றத் தடுத்தவனுங்
கோறுமதைக் கொண்டான் குறித்து. (71)

ஆயிடைதாய் கற்பு மனக நினைதருளும்
தூய வறமுந் தொடர்ந்தளித்த பேயாம்
அரக்கியரென் மந்திரத்தி னுலூரங்கி னூர்கள்
கரக்குமுயி ராகமொளிக் க. (72)

அன்ன பொழுதினங்கை யாருயிரை நீக்குதற்காத்
தன்னகழுத் தைச்சுருக்கிச் சார்பொழுதிற் பொன்னடியைப்
போற்றி வணங்கிப் புரிவுடைய நின்பெயரைச்
சாற்றி யிணங்கினின்றேன் றாழ்ந்து. (73)

வஞ்சனைசெய் வாளரக்கன் மாய மெனக் கொண்டும்
அஞ்சனவண் ணன்பெயரை யாக்கியென்பாற் றுஞ்சும்
பொழுதடுத்தா யென்று புரிந்தாள் கருணை
அழுதடுத்த கண்ணீ ரவள். (74)

அறிவுற்ற தாயென் னடையாளச் சொல்லாற்
செறிவுற்ற நாயேன்பாற் றேறி நெறியுற்ற
மோதிரத்தைக் கண்டாள் முயங்கு முயிர்க்கதுதான்
மாதிறத்தை நாட்டு மருந்து. (75)

ஒருகணத்திற் கண்டே னுவந்த விரண்டு
திருமுலைக்க ணூழிவைக்கச் சேர்ந்த விரகமதாந்
தீயி னுருகிச் சிறந்த கருணையெனுந்
தோயமத ஞல்வலித்த து. (76)

Koviloor Digital Library

வாங்கி மகிழ்ந்தாழி வஞ்சரூர் வந்ததெனத்
தாங்குமழைக் கண்கலசத் தாலாட்டி யேங்கி
இருந்ததலா லொன்று மியம்பா டன்மேனி
வருந்தகிலாண் மேற்பருத்த வாம். (77)

அன்னவட்கு நிற்பிறிந்த தற்பி னடுத்தவெலாஞ்
சொன்னதற்பி னீயிருந்த சூழலது மின்னதெனத்
தேராதா லித்தனைநாட் சென்ற தெனவருத்தம்
நேரா யுரைத்தே னினைந்து. (78)

இங்கடுத்த தன்மை யியம்பினேன் கேட்டபின்ன
ரங்கடுத்த தன்மை யறிவித்தாள் திங்களொன்று
தானிருக்கும் சீவனென்றாள் தாங்கினு ணின்சரணம்
மானிருக்குங் கண்ணாள் மனத்து. (79)

வைத்த துகிலின் மணிக்கரசை வாங்கியெந்தன்
கைத்தலத்தி னீந்தவிது காணென்று வித்தகற்குத்
தந்தனளும் வேதந் தலைநின்ற தாம்புகழும்
சந்ததமு நிற்குந் தவன். (80)

பையவாங் காமம் பரிணமித்துப் பொங்குவதா
மெய்வெதும்பி யுள்ள மெலிவைவிட்டா னையனவன்
அங்கிமுனம் பற்று மவள்கரமே யானதுவாம்
பொங்குமணி தானும் புனைந்து. (81)

பொடித்தனவு ரோமம் பொழிந்தமலர்க் கண்ணீர்
துடித்தனவா மார்பினொடு தோள்கள் மடித்ததுவாய்
ஆவிவரும் போவதென வாய பெருமகிழ்ச்சி
மேவிவர நின்றான் விழைந்து. (82)

ஆயபொழு தங்கதனு மான்ற கவிமுதலோர்
மேயவனைக் கம்புரிந்து வீரர்தமை எயவரு
காரியந்தான் முற்றியதாற் காணு மதிமுகத்தார்
வீரியந்தான் கொண்டார் மிகுந்து. (83)

Koviloor Digital Library

ஆண்டுவள்ளல் முன்ன மரிவை யவணம்பாற்
காண்டலுக்கா யின்னும்வரு காலந்தாழ்ந் தீண்டிருந்த
னன்றடுத்த லேதென்று ளுட்டு மலர்மலர்த்து
மென்றடுத்த மைந்த னெழுந்து. (84)

எழுக படைக ளெனவேற்ற வெங்கும்
முழுமுரச மெற்றி முடுக்கப் பொழிதிரையார்
வேலை புடைபரந்த மென்மையெனச் சென்றடுத்த
தாலமிடை தென்றிசைக்கண் டாம். (85)

நீலனைத்தா னோக்கி நெடியோன் பணிப்பானம்
பாலனைந்த சேனை பகையின்றிச் சாலவர
முன்னவர்க்கு நன்மைதர முன்னர்ச் செலவென்றான்
மன்னவர்க்கு மன்னன் மகன். (86)

என்றுரைத்து முன்னெழுந்தா னேற்றிவரு மாருதியும்
புன்றொழிலே னேனும் புகுதியென்றே னென்றவுட
னேறினன் வள்ள லியைந்துதம்பி யங்கதன்றோ
ளேறினு னுள்ள மியைந்து. (87)

கருட னிடைவிடையிற் காணு மிருவர்
அருடருவா ரென்ன வமர்ந்தார் பொருடருவார்
உந்தினர்கள் பொற்பூமி யுள்ளார் கடவுளர்கள்
சிந்தினர்கள் பொற்பூச் சிறந்து. (88)

வையமதின் மாக்கள் மயங்கும் வயச்சேனை
எய்துமெனின் வள்ள லினிதேவப் பெய்கனிதேன்
என்ற பெறுதற்கா யேற்றமலை நாடுவழி
சென்றபெருஞ் சேனை தெழித்து. (89)

வீரர் விரைந்தார் விலங்க லிலங்கைவெய்யோர்
சோரரணங் கொற்றமுதற் றேன்றுமெலா நேரே
அனுமா னெடுத்துவுரக்க வாங்கதனைக் கேட்டு
மனுமா னடுத்தான் வழி. (90)

Koviloor Digital Library

அந்நெறியாய்ச் செல்ல வரியரசன் வாழ்குமரன்
தந்நெறியார் சேனைவளந் தாங்கிவந்தா ரின்னவகை
பன்னிருநா டென்றிசைக்கண் பாங்கடுத்துக் கண்டனராம்
கன்னிகருங் தோளார் கடல். (91)

திருவடி தொழுத படலம் முற்றிற்று.

ஆ படலம்15—செய்யுள் 1311.

அண்ணுமலையார் துணை

சுந்தர காண்டம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஆறுவது

யுத்த காண்டம்.

கடல் காண் படலம்.

பத்தடுத்த கந்தரத்தான் பாறப் பருவலிவில்
நத்தடுத்த கந்தரக்கை நாட்டுவள்ளல் முத்தர்கட்குப்
பொன்மை தரும்பதத்தைப் போற்றிப் புனைமனமே
நன்மைதரு மென்று நமக்கு. (1)

உளழிதிரி காலத்து மோங்கு முயர்கிரியும்
வாழிக் கடல்வடபால் வான்றோய வேழுபத்து
வெள்ளமுற்ற தென்பால் விரிகடலின் பாரமுற்ற
வள்ளலொத்த சேனை வளம். (2)

பொங்கிப் பரந்தபடை போர்க்கப் புரத்தகத்தும்
சங்கிற் பொலிந்தகரத் தாணிங்கக் கங்குற்
பொழுதுந் துயிலாப் புகழோ னிருந்தான்
தொழுதும்பர் போற்றமகிழ்ந் து. (3)

சேயவரு காலந் திரிந்து பிரிந்த வர
மாயன் வளர்வனென மன்தென்றல் தூயநுரை
சிந்திப் படுக்கை சிறக்க விரித்ததுபோல்
வந்தித் தலைகள் வரும். (4)

வழிக்குங் கண் ணீரமுவம் வஞ்சி யழுந்தப்
பழிக்கு மதனம்பு பாயத் தழைக்குமால்
சேருந் திரைக்கடலின் தென்றற் குருந்திவலை
சாருமிரா மன்றோன் தமில். (5)

Koviloor Digital Library

றென்னற்காண் மேனி நிலையின்று காணுதான்
தன்னைக்கண் டேங்குந் தடங்கடல்வாய்ப் பின்னற்
றிரைதவழ்செய் தென்றல் சினையுயிர்க்கும் புன்னை
வரைபொடியைப் பூசு மகிழ்ந்து. (6)

சிலையடுத்த கையான் றிருத்தோண் மெலிய
நிலையடுத்த நங்கையிதழ் நேரக் கொலைசேர்
முடிப்பகைவர் தேய முடிப்பான் முதற்குக்
கொடிப்பவளங் காட்டுங் குறிப்பு. (7)

தூரமில்லை மானிருந்த சூழல் மனஞ்செல்ல
வீரவில்லான் மேனி மெலிவதற்கு நேரே
பிறிவுற்ற நங்கை பிறங்கு மெழிலார்
முறுவற் குறிகாட்டு முத்து. (8)

இந்துநுதற் பாவை யிருந்தா ளிடர்கொடியேன்
தந்ததவப் பாவை தனிமைதனைச் சிந்தியென
நீல்வீழ்ந்த தம்மடிக்க ணோர்திரைகள் பூவடுத்துக்
கால்வீழ்வ தொக்குங் கடல். (9)

மங்கை துயர்நீக்கி வானோர் குறைமுடித்து
வெங்கைதுணை விற்பிடித்த மேலோனைக் கங்கைத்
திருநா டனைக்கண்டு சேருங் கடறன்
திரைநாடுங் கையெடுக்குந் தேர்ந்து. (10)

இன்னகத்து மாகடலை யெய்தி யெழிலோங்கும்
தன்னகத்து மானந் தழைத்தோங்க வென்னதினி
மேல்விளைவை யுன்னிவள்ளல் வீற்றிருந்தான் றென்னிலங்கை
மேல்விளைவைச் சொல்வாம் விரித்து. (11)

கடல்காண் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

மந்திரப் படலம்.

பூவிருக்குந் தேவனொடு போந்திலங்கைப் பொன்னகரை
மூவருக்க மாம்பொழிற்கு முன்னெழிலா மேவிவரச்
செய்தான் கணமதனிற் றெய்வகம்மி யன்கண்டான்
வைதாவும் வேலான் மதித்து. (1)

பொன்னிகரின் மின்மணியிற் போந்துவரு பொற்புடைத்தாம்
நன்னகரை நோக்கி நயந்தவெழில் முன்னையினும்
மின்னுடைத்தா மென்று மிகுமுனிவு மாறிமகிழ்
மன்னுடைத்தாஞ் சிந்தைவந்த வாம். (2)

முழுத்த தனியுலக முந்தை சிறந்தான்
எழிற்குறியி னின்றியற்றி யீந்தான் விழுத்த
முழுத்தவத்தி னல்லுலக முற்று முறையின்
அழித்தியற்று வார்க்கரிதென் னும். (3)

திருநகரை முற்றுந் திருந்தவர நோக்கிப்
பொருவி லயற்கரக்கன் பூசை வரன்முறையிற்
செய்தடுத்த தச்சற்கும் சேர்ந்த நயமியற்றி
வெய்தடுத்தா னின்றான் விழைந்து. (4)

அவ்வழியி னாயிரத்தோ டாயிரமா மென்றநிறை
செவ்வழிய செம்மணித்தூண் சேர்த்தியதா யொவ்வுதலாம்
மண்டபத்தின் மேவி மகிழ்தருசிம் மாசனமேல்த்
தண்டவத்தி னெய்தியிருந் தான். (5)

வரம்பரிய சுற்றமொடு மந்திரத்தின் வன்மை
நிரம்பரியோர் சேனைகட னேரத் தரஞ்சார்
அரம்பையர்கள் பாடிநட மாட விருந்தான்
தரம்பையிலாச் செய்கைதழைந் தான். (6)

Koviloor Digital Library

முனைவரொடு தேவரையு முற்று மடுத்தோர்
எனைவரையு மேக வியற்றிப் புனைகுழலா
ரோடிளைஞர்ப் போக்கி யுவந்த செயலதனை
நாடிமனத் தாக்கும் நலிந்து. (7)

பண்டிதர்கள் பண்பிற் பழமை யுறுகிழவர்
தண்டலிலா மந்திரத்தர் சார்கவென வண்டினொடு
கால்வரவு மாற்றிக் கருதும் படியிருந்தான்
மேல்வரவு தோற்று விதன். (8)

ஆன்றமைந்த கேள்வி யறிஞரென வாந்தரத்தா
ரேன்றநண்ப ரென்றிடினு மேவரையும் வான்றுணையாம்
சுற்றத்தார் மக்கள் துணைவ ரெனினுமிதிற்
பற்றற்ற ரொக்கமதிப் பான். (9)

திசையி னிறுவினர்கள் சேரு முலகைப்
பிசையுந் தொழின்மறவர் பேச்சென் விசைசேர்
பறவை விலங்குமற்றும் பற்றியசை யாது
துறவுற்ற சித்திரமொத் து. (10)

நாட்சி யிதன்மேற் றருவ தெவையுண்டா
மாட்சியிலாக் கோடரத்தான் மாநகர மாட்சி
யமையாவ தென்று லரசுரிமை யென்னுஞ்
சுமையாவ தென்றான் சுளித்து. (11)

சுட்டதுவுக் கோடரந்தான் சூரைகொள்ள மாநகரம்
கெட்டதுவு மேலாங் கிளைஞரொடும் பட்ட
பரிபவத்தை யேற்றப் பரிந்தவன்பி னோடு
மரியணைக்க ணூனே னடுத்து. (12)

உளறுகின்ற கேணி யுதிரநீ ரொண்ணகரம்
ஆறுகின்ற தாமோ வகின்மணமுங் கூறுகின்ற
மங்கையர்கள் கூந்தல் மருவுஞ் சுறுநாற்றம்
சங்கையிலா தென்றுமடுத் து. (13)

Koviloor Digital Library

மற்றதெலா நிற்க மலேந்துசென்ற வானரந்தான்
இற்றதெனுங் கூற்று மியைந்திலமால் முற்றும்
பிறந்ததனுற் பேரென் பெரும்பழியைக் கொண்டோம்
சிறந்ததுநம் செய்கையென்முன் றேர்ந்து. (14)

என்று னியம்ப வெழுந்தா னிறைஞ்சினன்
கன்றுன் கழற்சேனைக் காவலன்முன் ஒன்றும்
உணர்த்துவன்கே ளென்ன வுரைத்தா னளிசூழ்
துணர்த்தவன்றார் மார்பன் தொடுத்து. (15)

வஞ்சனையின் மானுடரை மாற்றித் தனிமையுற்ற
வஞ்சிதனைப் பற்றல் வழக்கன்று மஞ்சும்
தொழிலென் றுரைத்தேன் துணிந்து புரிந்தாய்
அழிவென் றறிந்து மடுத்து. (16)

கரன்முதலாம் வீரர் கருத்தழித்துன் தங்கை
விரிகுழலை மூக்கரிந்து விட்டுப் பரிபவஞ்செய்
அன்னவரைக் கொல்லா தரசியலி னென்னையென்றாய்
என்னவுரையென்று னெடுத்து. (17)

தண்டப் பொருட்குரிய தக்கார் தமையடுத்துக்
கண்டப் பொழுதவர் காவலர்கள் வண்டாரும்
தாராய் வணங்குவரோ சாரார் வலியடக்கற்
காராய்வ ரென்று னறிந்து. (18)

செற்றமொடு சென்றடுத்த தேவா ரசுரர்தம
கொற்றமொடு வீரவலி கூட்டறவே முற்றிவரு
மூன்றுலகு நிமுதலாய் முன்வந்த துங்கொடுமை
ஏன்றலதோ வென்று னியைந்து. (19)

விலக்கினரை யட்டு விளித்துவா லன்றி
இலங்கைதனி லின்பத் திருக்கின் வலஞ்சேர்
குரங்கொடுதான் போமோ குறித்த வுலங்கும்
தரங்கொடுமேற் சாருமென்றான் தான். (20)

Koviloor Digital Library

தேவ ரடங்கினர்கள் சித்த ரியக்கரொடு
தாவரிய தானவருந் தாழ்ந்தனர்கள் மூவர்
ஒதுங்குவா ருன்முன் னுகந்துவரற் கேற்ற
பதுங்குவா மந்தியென்றான் பார்த்து. (21)

சென்றகுரங் கைத்தொடர்ந்து சென்றாகி யவ்விடையி
னின்றோ ருயிர்குடித்து நேர்கலமா யின்றும்
மனம்வெறுத்து வாழ்துமெனில் மற்றும் நமது
சினம்சிறக்கு மென்றான் தெரிந்து. (22)

மற்றவன்றான் சொல்ல மகோதரனும் பேருடையான்
கற்றடந்தோள் வீரன் கனற்கண்ணன் கொற்றவகே
ளன்சொல்லை யென்று னெடுத்த சினமுடையான்
புன்சொல்லைக் கூறும் புலன். (23)

எற்றமென்னை சொல்வ தெவர்க்கு மினியவுயிர்
மாற்றவன்மை கொண்ட வரத்தாற்றற் கூற்றுவனும்
தன்னுயிர்க்குக் கூற்றமெனச் சார்ந்து நினதேவல்
மன்னுமுடி கொண்டான் வரைந்து. (24)

வெள்ளிக் கிரியை விடைப்பாகன் வீற்றிருக்க
அள்ளிக் கிளர்ந்தெடுத்த வாற்றலாய் சுள்ளி
யெனவாங் குரங்கை யெடுத்தேற் றினையென்
மனமேங்க வென்றான் மதித்து. (25)

மண்ணெடுத்து வானுலகில் மற்றுலகின் வாழ்பவரும்
கண்ணெடுத்து நோக்குதற்குக் காதலுண்டோ வெண்ணரிதாம்
மண்ணுலகின் மானுடரும் வானரரும் வந்தடர்த்தார்
எண்ணுவதற் கென்ன மிவை. (26)

இடுக்கிப் புகல்வ தெனையிண் டெனாநீ
விடுக்கிற் குரங்கை வெருட்டித் தொடுக்கும்
மனிதருயி ருண்டு வரத்தடையே தென்றான்
தனிதமொடு கொண்டசினத் தான். (27)

Koviloor Digital Library

இச்சிரத்த வீர னெடுத்துரைத்த வெல்லையின்வாய்
வச்சிரத்த தந்தன் வலியுடையான் அச்சிரத்தைக்
கோர்பொருளின் றேனு முதிரம் பொழிகண்ணான்
காருருமிற் சொற்றான் கடுத்து. (28)

போயினவா மானுடரைப் புன்குரங்கைப் பூமிதனிற்
தேயெனவா மென்னைச் சிறந்தனுப்பி யோய்வோ
டிருக்குமென லன்றி யெனதிடத்து மையம்
இருக்குமென வெண்ணுவது மென். (29)

எவ்வுலகத் தேனு நினதேவற் கிசைதவிலாத்
தெவ்விலகத் தேய்த்தடிமை செய்யுமியா னிவ்விடையிற்
செய்தகுற்ற மென்னை சிறந்த பணி யென்பா
லெய்தமுற்றச் செய்யவழக் கென். (30)

நின்மினென வன்னவனை நேர்விலக்கிச் சீர்கலக்கும்
என்முனெளி யோர்போ லிருத்தியென வன்மையுடன்
மன்முகத்தை நோக்கி வணங்கி யொருமாற்றம்
துன்முகத்தான் சொற்றான் துணிந்து. (31)

திக்கயங்கள் வல்லமையில் தேவர் மெலிவுடையர்
முக்கணன்றன் வெற்பு முரணிலவா மக்களொடு
வானரமு மிக்க வலியுடைய தென்பதனை
யானறியப் பேசுவது மாம். (32)

பொலிதலிலா ரென்றும் புதுமை யடுத்து
மெலிதலிலா நம்மிறுதி வேண்டி நலிவ
ரவர்க்கொதுங்கி வாழ்த லடுத்தனமக் கென்றான்
தவர்க்கொதுங்கா வன்மைத் தரன். (33)

தண்ணியதோர் மந்திரத்தின் காரியமும் வீரியமில்
மண்ணியலு மானிடர்க்கும் வானரர்க்கு மெண்ணுவதாம்
என்றுரைக்கி னென்று மிழிவிதற்கு மேலுண்டோ
வென்றிருக்குந் தாரா யியம்பு. (34)

Koviloor Digital Library

எரியை மடுத்த லெதிர்ந்தோர் படவாய்ப்
பொருதல் புரிந்தடுத்துப் போதல் வருதலிவை
வானரத்துக் கென்றல் வளமிகுந்த வூரினமக்
கேனிருத்தற் கென்று னெடுத்து. (35)

ஒல்வதனைச் செய்யு முறுதிதனை யோர்ந்திடினும்
வெல்வதனுக் காம்வினயம் வேண்டிடினு மொல்வ
ரவருழையி னுகி யடுத்து வதைத்தல்
தவருழைய நம்வலியென் றான். (36)

காவலன்ற நேரவனைக் கைகவித்து மெய்கவித்த
கோவமொடு வன்மை குரக்கினுக்கே யாவதென
மாபெரும் பக்கன் வலியோ னெடுத்துரைப்பான்
தாபெறுஞ் சொற்கள் தடுத்து. (37)

முந்தச் சிலவர் முரணில்லார் மொய்யமரி
னந்தச் சிலவலத்தை நாட்டியதால் வந்தகுரங்
கிட்ட நெருப்பி னிலங்கை யுடனரக்கர்
மட்டில் வலி போகுமா. (38)

மானுடர்க ளேவ வருகுரங்கிம் மானகரைத்
தானெரியாற் றுக்குதற்குத் தாழ்நிருத ரானவர்க
ளன்னதனை யெண்ணி யழுங்க வருமென்று
லென்னதனைச் சொல்வ தெடுத்து. (39)

நின்றேறிப் பின்னும் நிரப்பு வதினென்று
நன்றோ குரங்கை நரருடனே கொன்றொங்கத்
தின்றுவரு செய்கையன்றிச் சேரே னெனவுரைத்தான்
வென்றுவரு செய்கை விழைந்து. (40)

திசாதிசையிற் சென்று சிறந்தவலி நாட்டும்
பிசாசனெனும் பேராற் பெரிய னுசாவிமிக்க
கொண்டான் கவலை கொதிக்கும் நெருப்பனையான்
அண்டான் சினத்தி னலைத்து. (41)

Koviloor Digital Library

ஆரியனு மண்ண லடுத்து மதிப்பதுவுஞ்
சீரியதா மென்றெடுத்த சீற்றத்தான் சூரி
யனைப்பகைத்தான் சொன்னு னரக்கர் தமிலும்
மனித்தரடு கொற்ற மதித்து. (42)

ஆள்வினையும் வீர மரக்க ரடுமாற்றல்
தாழ்வினையும் பேசத் தகுந்ததே சூழ்வினையும்
மானுடர்பா லென்று மருட்டியவேள் விப்பகைஞன்
தானுடனுச் சொன்னுன் தகைந்து. (43)

தொகைச்சூர் குரங்கினேடு தொன்மனித ரென்னை
சிகைச்சூலி யென்றிடினுந் தீர்ப்பன் தகைத்தலிலா
தண்ணலுரை வேண்டுமென வாம்வேள்வி யின்பகைஞன்
கண்ணெறியச் சொன்னுன் கனன்று. (44)

மற்றவன்றன் பின்னர் வருமந் திரியரெலாம்
இற்றவுரை நன்மையென வேற்றமுடன் புற்றுறையுஞ்
சீற்றவர வென்னச் சினந்த வுரை செய்தார்
ஆற்றவரர் வீர மறிந்து. (45)

வெம்பிகலி ராக்கதரை மேல்விலக்கித் தேர்ச்சியிலா
நம்பியர்கள் செல்கவென நாயகன்பாற் கும்ப
கருணப் பெயரான் கருது வலியான்
தருணத் துரைத்தான் தடுத்து. (46)

நீயயன்றன் முற்குலத்தி னேர்மை சிறந்தவலன்
ஆயிரம்பொன் வேதத் தறிவமைந்தாய் தீயவினை
மெய்த்துணையோ செய்ய விழைந்தாய் வருதுயரு
மித்துணையோ வென்று னெடுத்து. (47)

ஓவியமா யுற்றநக ரோங்கியதி யாலுளைந்தாய்
கோவியலும் போனதென்றுய் கோக்குலத்தோன் தேவி
தனைச்சிறையில் வைத்தாய் தகுந்தபழி பாவம்
மனச்சிதைவு மொன்றோ மதி. (48)

Koviloor Digital Library

நன்னகரம் போனதெனு நாண மெடுத்துரைத்தா
யுன்னுயிராந் தேவியர்க ளுன்னடுத்தா ரின்னகைதான்
செய்யவொரு வன்மனைவி செம்பதத்தின் வீழ்ந்துளைந்தாய்
செய்யபுக ழென்று சிறந்து. (49)

தக்கவன்ற னில்லாந் தவத்தி தனையிரங்க
மிக்கசிறை வைத்தாய் விழைவினொடு புக்கடுத்த
புன்றொழிலாற் றங்கும் புகழுடைத்தோ வென்பதனை
வன்றொழிலாய் கொள்ளாய் மனத்து. (50)

ஆசில் பரதாரத் தஞ்சாச் சிறையிடுவேம்
மாசில் புகழ்காதல் வாய்ந்தடுப்பேம் பேசுவதும்
மானம் பிடிப்பதுவும் மற்றடுத்த காமமதே
ஞானம் படிப்பதினென் னும். (51)

சிட்டர்செயல் செய்யாய் சிறுமை மிகச்செய்தாய்
மட்டவிழுங் கூந்தலளை மன்னவினி விட்டிடுது
மென்றாலு நன்மை யினியவரால் வென்றிடர்க்கு
நின்றாலு நன்மை நினை. (52)

மரன்படர்செய் கானில் வலியசிலை யொன்றாற்
கரன்படையைக் கொன்றவனைக் கட்ட னிரம்பிடுவ
தன்றடுத்த நம்படைக்கு மன்னசெய லென்றதனை
நன்றடுத்துக் காட்டும் நவித்து. (53)

வென்றிடுதல் மானுடர்க்காம் வெற்றி யெனினுமியா
நின்றிடையின் றாக நெறிநெறுக்கித் தின்றிடுதல்
செய்யா திருக்கிற் செருநரொடு தேவருல
கெய்யா தடுக்கு மினி. (54)

ஊறும் படையடமு னுற்ற வொருநாளே
எறங் கடற்கரையி னேற்றவரை வேறு
பெயராத வண்ணம் பிளந்தெறித னந்தம்
அயரா வலிக்கழகென் றான். (55)

Koviloor Digital Library

நன்றுரைசெய் தாய்குமர நானு மவைநினைந்தேன்
ஒன்றுரைசெய் தாய்வதிலை யொன்னலரைக் கொன்று
பெயர்வாங் கொடிப்படையைப் பேரவிட வென்றான்
மயர்வானி ராவணன்றான் மற்று. (56)

என்று னியம்பியுற்ற வெல்லை தனில்வல்லே
சென்றும் படையாற் சிறுமனிதர் வென்றடுத்தல்
நீயென்றால் வீரம் நிலையான தென்றுரைத்தான்
மாயந்தான் செய்யு மகன். (57)

ஈசனருள் செய்தனவு மேடவிழு மாமலரின்
வாசனருள் செய்தனவு மற்றுமுள பாச
முதற்படைகள் கொண்டோர்க்கு முன்னு மெனது
முதற்படைக ளென்றான் முனிந்து. (58)

முற்று முலகமொரு மூன்று முனிந்துறினுஞ்
செற்று மெனினுஞ் செறுத்தற்கென் வெற்றி
விளையா தொழியின் வெறுத்தற்கா மென்றான்
வளையா வலிமிக்க வன். (59)

குரங்குபடப் பூமி குறைத்தலையி னாக
அரங்குபடர் மானுடவர்க் காக விரங்குபடர்
சிதைபட வின்றிருவர் சேகரத்தைக் கொண்டடுப்பேன்
வாதைபட வென்றான் வரைந்து. (60)

சொல்லிடையி னென்னும் சுருங்கு குரங்கெனது
வில்லிடையின் வாளி வெருவித்தம் பல்லிடையச்
சேர வருபயத்தாற் சென்றிடுவ கண்டுவப்பாய்
வீரவர வென்றான் விரைந்து. (61)

யானையிலர் தேர்புரவி யாது மிலரேவும்
தானையிலர் நின்றதவந் தாங்கிலர் கூனற்
குரங்குகொடு வெல்வார் குறித்தோர் மனிதர்
அரங்குபடர் நம்வலியென் னும். (62)

Koviloor Digital Library

நீரும் நிலனும் நெடுங்கா னிமிர்வானும்
பேரும் படிமனிதர் பின்குரங்கும் சேர
வொழியாது கொல்வேன் உயர்வா னவரும்
கழியார்க ளென்விற் கணைக்கு. (63)

என்றடியைப் போற்றி யெழுந்து விடையீமோ
வன்றொழிலா யென்றான் வளரெயிறு கன்றுதலாய்த்
தின்றான் முனிந்தான் திறலார் விபீடணன்றான்
நன்றான சொன்னவின்ற னன். (64)

நூலும் தெரிந்துதெளி நுட்ப வறிவுடையை
போலும் பொருளுணரும் பூட்சியோய் காலமுற்றி
யுண்டாம் பொருளை யுணர்கற்பி லாச்சிறியோன்,
கண்டா யிவற்றின் கருத்து. (65)

கருத்தறியான் கண்ணில்லான் கையால் வரைந்து
திருத்தவரு சித்திரம்போற் செப்பும் பொருத்தமுளாய்
சாதுகையர் போற்றுந் தனிமந் திரத்திருக்கை
யோதுகையு முற்குளதா மோ. (66)

தூயோர் முறைமை தொடங்கிவரு தொன்மையுள
தாயோ ரிருக்க வவுணருற்றார் தீயோரும்
நல்லறத்தி னாற்சுரயா நாட்டும் நலமன்றிக்
கொல்லறத்தி னேமனத்திற் கொள். (67)

அறந்துறந்து தேவர்களை யாண்டுவென்ற வீரம்
திறந்தெரியி னன்னதவஞ் செய்தல் மறந்துறந்தோர்
தந்தவரத் தாகும் தகைமை சமையுமன்றி
எந்தவரத் தாகு மிசை. (68)

மூவர் தமைவென்று மூவுலகை முற்றவரு
காவல் தவரிலாங் களிப்பதனால் வீவை
முதற்றந்த தாகு முறையடுத்த தேவர்
இதத்தென்று நின்று ரிசைந்து. (69)

Koviloor Digital Library

விளைவரம்பை வென்றடுத்த வீடதனைக் கண்டோர்
எனைவரென்கே னெவ்வ மிரிந்தோர் முனைவர்
அமரர்முத லென்று ரறத்தாற் சிறந்தார்
நமரிலெவர் நின்றார் நலத்து. (70)

பிள்ளைமையாய்ச் சொற்றாய் பிரிதுற்ற நீதியென
வொள்ளியசேய் தன்னை யுரப்பியென்சொல் எள்ளலையா
மென்னிற் சொலற்குரித்தா மேற்றபொருளென் றுரைத்தான்
தன்னிற் பெரியதவத் தான். (71)

எந்தை யொடு தாயு மெம்முனுநீ யேற்றதவம்
வந்தனைசெய் தெய்வமுற்றும் மற்றவுநீ இந்திரற்காம்
செல்வ மிழக்கும் செயல்சிறந்தா யென்றகொாந்தேன்
வெல்வமென வெண்ணேன் விழைந்து. (72)

கற்றறியு மாட்சியென்கண் காணு தெனினுமிக
வுற்றறியு மாமறிவு மோய்ந்திடினு மற்றறியுஞ்
சூட்சிதுணி யேனெனினுஞ் சொற்றவுரை முற்றறிந்து
மாட்சிமையாய்ச் செய்வாய் மறுப்பு. (73)

கோனகர மாமுழுதுங் கூறு நினகொற்றம்
சானகியாம் பேருலகத் தாய்கற்பி னனவனல்
சுட்டதன்றி வானரத்தாற் சூழ்ந்ததெனக் கிளத்தல்
பட்டதன்றி வேறென் படும். (74)

எண்பொருட்டு வேறெவையா மெண்ணி யுரைக்கினதும்
விண்பொருட்டல் லாதுயர்வு மீட்சியுந்தான் பொண்பொருட்
லன்றிப் பிரிதென்னு மாகுமது மண்பொருட்டு [டா
மொன்றிப் பிரியா துளம். (75)

மீனுடைத்தாம் வேலை விளங்கு மிலங்கைமன்னன்
தானுடைத்தாம் நற்றவத்திற் சாய்வதுதான் மானுடத்தாம்
மங்கையினல் வாய்க்குமென வாழுலகர் வாய்மொழியும்
சங்கையினு லாமென்ற தா. (76)

Koviloor Digital Library

ஏற்ற மிகுதவத்தி னெல்லைகண்ட நாளதனில்
ஆற்ற லுடைக் குணத்தா னணையினாற் சாற்றும்
மனிதர்பாற் கொற்றம் வரைந்த நிலையா
மினிதவர்பா லேதா மிசை. (77)

ஏயதுதான் வேறு மியம்பற் கெளிதென்னும்
நீயுலக மெல்லாம் நிகரில்லாய் ஆயிரமாம்
தோளார்கு ணற்றல் தொலைந்த விதமதனை
வாளாற்றற் குற்றாய் மதி. (78)

மேலுயர்ந்த மால்வரையை வென்றெடுத்த வன்றடுத்த
நாலுபுய நந்தி நவில்சாபங் கூடமுற்ற
கோடரத்திற் காணுமெனக் கொள்ளு மொழி வாலி
கூடுரத்திற் கண்டோங் குறித்து. (79)

தீயி னிடை குளித்த தெய்வநிலைக் கற்புடையாள்
வாயி னிடை யளித்தன் மாற்றலுண்டோ நோயுனக்கு
யானென் றுரைத்த வணங்கரசே சீதையெனு
மானென் றுரைத் தாம் மதி. (80)

சம்பரப்பேர்த் தானவனைத் தாங்குந் தனுவலத்தால்
அம்பரப்பேர்த் தேத்தழித்த வாற்றலினன் நம்பும்
தசரதப்பேர்ச் சீமான் தரத்தாழி யாற்குக்
கசரதத்தாம் சேனை கடல். (81)

மிடலமரர் கோன்விடையா மெவக் கருத்தா
யுடலமரத் தானவரை யோட்டி யடலமரும்
பூமி வளம்பெருக்கும் பூமானுங் கங்கைதந்த
நேமியனு மிக்குலத்தார் நேர்ந்து. (82)

பொய்யுரத்தைப் போக்கிப் பொருந்து முலகதனை
மெய்யறத்தி னாக்கி விழைந்தளித்தோன் மையுரைக்குங்
கண்ணாள் மனைவி கருதுவர மெய்நிலையால்
விண்ணாள் பதமடைந்தான் வேந்து. (83)

Koviloor Digital Library

அன்னான் சிறுவ ரடுத்த பகைவரைய
வின்னார் பெருமை யெளிதன்றாற் பொன்னாரும்
தேவர்வரர் போற்றுந் திருவர் மனிதரென
மூவர்வலி கொண்டார் முனைந்து. (84)

கோசிகப்பேர் முன்னோன் குறித்த திறற்படையாற்
றேசிகத்த வில்லார் சிறந்தகையார் ஆசில்
உலக முழுது மொருநொடியிற் றீய்க்கு
மலகில் படைவலத்தா ராம். (85)

தேவர்தொழ முன்னந் திருவளிக்கத் தார்க்கியன்மேல்
மேவருவோன் வில்லும் விசையமிக்க சேவுடையோன்
முப்புரத்தைத் தீர்த்த முழுச்சரமுங் கொண்டுவந்தார்
செப்பு குறுமுனிவற் சேர்ந்து. (86)

நாவி னுலகை நடுக்குமலர் திக்களக்கும்
மேவு விடமுயிர்க்கும் வீரவரர் ஆவயெனும்
புற்றுரையு நற்றவரைப் போற்றாத பாவருயிர்
கற்றவிரை கொள்கணைநா கம். (87)

பேருமோ வேறொருவர் பேர்க்க வருதரத்திற்
சாருமோ நம்சிலைபோற் றானுமோ தாருவோ
வேனுவோ தானுவெனும் மேரு வரைதானே
பூணுவோர் கையிற் பொருப்பு. (88)

உரமுடைய வாலி யுரமு மரமுங்
கரனும் விராதன் கனஞ்சேர் சிரமுடனே
கொண்டடுத்த தெவ்வருயிர் கூற்றம் பெறவளிக்கும்
தண்டெடுத்தான் வாளித் தரம். (89)

சொல்லும் முனிவர் துயரடுத்த தேவர்களும்
மல்லு முறழ்புயத்த மானுடவர் பொல்லா
நிலைமைகொண்ட வல்லரக்கர் நேரத் தொலைக்கும்
தலைமைகொண்டா ரென்றுமதித் தார் (90)

Koviloor Digital Library

துஞ்சா ரிரவுபகல் சொல்லவொல்கி நல்லமரர்
அஞ்சார் சனகியென வான்றகற்பார் நஞ்சதனைத்
தின்று ரரக்கர் திறத்தார் நரகிலென
நின்றார் மனத்தி னினைந்து. (91)

சகமதிக்கு நம்மாற் றடுக்கு மமரர்
அகமதிக்குஞ் சீர்முனிவ ராேனார் புகலும்
பகல்மதிக்கு நேர்முகங்கள் பன்னும் பருவத்
தகன்மதிக்கு நேருவமை யாம். (92)

சிந்து முலகமெனத் தேர்ந்தொளித்தார் சீருடைய
விந்து முகத்திறைவி யிங்குளதால் வந்து
சுரர்முனிவர் தங்கட்காந் தொல்லுலகைக் காண்பார்
வரமுடைய ராகி மதித்து. (93)

துன்னிமித்த மெங்குந் தொடர்வ தனைத்தேவர்
நன்னிமித்த மென்று நயந்துவந்தார் பன்னும்
குதிரையொடு குஞ்சரங்கள் கொன்வலக்கால் முந்தி
யதிரவரு நம்மனைக்கண் ணாய். (94)

வாயினொடு பல்லும் வறந்த புனனிருதர்
பேயினொடு மோரி பிறவெண்ணின் கோயிலொடு
நன்னகர மெங்கு நலியவரு மித்துணைதாழ்
வென்னகர வென்று னெடுத்து. (95)

சிந்தமா நாகர் திறல்சேர் கரன்முதலோர்
முந்தமான் வாலி முடிவுகண்டா லந்தமான்
மானிடவ னாழிமுதல் மற்றுஞ் சிறந்தவரன்
மானிடவ ராகவந்த வர். (96)

இன்னமொன்று கேண்மோ யிருவர் மனிதரொடு
மன்னும் பெரும்படையாம் வானரர்கள் பொன்னுலகர்
என்றுரைப்பார் மேலோ ரிவரே பகைவரையா
பொன்றுதற்காம் நம்போர் புகழ். (97)

Koviloor Digital Library

நசையடுத்த மேற்குலத்தி னற்செய்கை யோங்க
வசையடுத்த நம்பியையும் வாழ விசையடுத்த
கற்பனையை விட்டருளல் காண்பதெனப் போற்றிநின்றான்
விற்பனரின் மிக்கான் விழைந்து. (98)

கேட்டா னரக்கன் கிளர்வாய் தொறுமெயிருப்
பூட்டும் பிறைபொழியப் பொன்னிலவைத் தோட்டடங்கள்
ஆரத்தா மார்ப மசையச் சிரித்துரைப்பான்
வீரத்தான் வேறாய் விடைத்து. (99)

இச்சை யுறுதி யிசைப்பனென்றாய் நின்னுரையும்
பிச்சர் சொல்லா மெந்தன் பெருவிரலைக் கொச்சை
மனிதர் வெல்வ ரென்ற மதிப்பும் பயத்தோ
தனிதவன்போ சொல்வாய் தகைந்து (100)

ஈங்குமனி தப்பசுவுக் கில்லை வரமென்றாய்
திங்குநனி சொல்லாந் திசையுலகந் தாங்கிநின்ற
யானைதனைத் தள்ளி யரனைக் கயிலையெடுத்
தானதனை யார்வரமென் றாய். (101)

மனப்படர்நீ வீணே வழங்கினையாம் வானோர்
சினப்படைக ளென்னை யென்ன செய்த வெனக்குநிற்க
வென்வலியோ டோர்வயிற்றி னேற்றவுற்கு மானுடவர்
தன்வலியோ மிக்கதரத் தாம். (102)

சொல்லுந் தெரிந்திலையாற் றோற்றுப் பலமுறையும்
வெல்லுந் தரமு மிகவுடையே னெல்லும்
படையுடனே யென்னைப் படுக்குநரு முண்டோ
கடையுடைய சொல்லிதெனக் காண். (103)

தேவரிடைப் பெற்ற செருக்காம் வரமென்றாய்
மூவரினு முக்கணனை முன்மாலைத் தாவரிய
போரிற் கடந்த புனைவலியெத் தேவரிடம்
சீரிற் பெறுவரந்தான் தேர். (104)

Koviloor Digital Library

நந்தியிடு சாபத்தி னுடங் குரங்கென்றாய்
வந்தியலுஞ் சாபஞ்செய் வல்லமையென் னிந்தியங்க
ளூர்முனிவர் தேவர் சிறந்த நமக்கிறுதி
யார்முனிவு செய்யா தவர். (105)

அரங்கி னடிப்பான் அரன்வரத்தைத் தேறேன்
இரங்கிநின்ற வென்வலியு மேற வரங்கொள்ளும்
வாலியிடைத் தோற்றதெனின் மற்றுங் குரங்கெல்லாம்
கோலியெனை வெல்லுவதென் கொல். (106)

நீலகண்ட னேமிவரன் நேரடுத்து நின்றிடினும்
ஏலும் வலியுமவற் கெய்துவதாம் வாலி
வரம்நினைந்தி ராமன் மறைந்தெய்த தென்றான்
தரம்நினைந்து சொல்வதிலா தான். (107)

ஊனச் சிலைமுறித்து மோட்டைமரத் தோட்டியம்பைக்
கூனிசெய்த சூட்சியினாற் கோவனத்தா யாணிழைத்த
மாயத்தா லில்விழந்த மானுடவன் விற்றிரத்தை
நேயத்தாய் சொற்றாய் நினைந்து. (108)

என்றெழுந்து தன்னுரையை யேற்கா திகழ்ந்துபின்னும்
நன்றெழுக வென்றவனை நாடியே யொன்றுகேள்
மன்னு மிறுதியென மற்றுமன்பி னுற்றொழியான்
பன்னு முறுதி பரிந்து. (109)

தன்னடுத்து முன்னுபொருள் தானுந் தனித்தலைவன்
மன்னடுத்த மானுடனா வந்தவனும் சொன்னவர
நம்பொருட்டுத் தேவர் நலிசூழ்ச்சி யாலடுத்தான்
செம்பொருளாந் தேவனென்றான் றேர்ந்து. (110)

அச்சொல்லைக் கேட்டரக்க னூழியா னென்றனையேற்
கொச்சைமதி யெத்தனையோ கூடிவென்றே னிச்சைதனக்
கேற்றபடி யான்புரிந்த வித்தனைநா ளத்தனவன்
மாற்றமுடி யாதென் மதித்து. (111)

Koviloor Digital Library

இந்திரனை நொந்தசிறை யிட்டனா ளேற்றிமையாத்
தந்தியுடைக் கோடு தகர்த்தநாள் வந்தவனைப்
போரின் வெருட்டியநாள் புத்தேளிர் பின்னிடுநாள்
ஓரிலனோ நீயுரைத்த தே. (112)

சிவனான் முகத்தான் றிருமா லெனும்பே
ரவனோ மமர ரடங்கப் புவனமெலாம்
யானாண் டுளது மவர்க்குப் பயந்துநின்றோ
தானாண்மை யின்றியுரைத் தாய். (113)

ஆயிரந்தோண் மாமலையு மத்துணையா நற்றலையும்
மாயிரும்பூ வுள்ளடக்கு மால்வடிவு மோயுமென
வெண்ணிநாம் தின்னு மியல்மனித னாகினனோ
பண்ணினான் மன்னும் பரன். (114)

பித்தனென்ற வீசன் பெருமாலென் பேரைக்கேட்
டெய்த்தசிந்தை யோடேகு மெவ்வழியு நத்திவரு
மேற்றிற் கருட னிடையுஞ் செறித்தபுங்கம்
சாற்றிற் கணக்கிடுமோ தான். (115)

வெஞ்சினத்த போரிலென்பின் வேண்டி வருதலிலை
யிஞ்சினத்து மாநகரி னீண்டிருத்தி யஞ்சலஞ்ச
லென்றுரைத்து நக்கா னிருந்தோர் முகம்பார்த்து
நன்றுரைத்தான் றன்னை நலித்து. (116)

பின்னு முரைப்பான் பெரியோ னவனடுத்து
முன்னு கிளையு முடிந்தார்க ளின்னமுண்டு
சொல்வே னிரணியனுஞ் சூர னவன்றரத்தைக்
கொல்வேலா யென்றான் குறித்து. (117)

மந்திரப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

இரணிய வதைப் படலம்.

வேதப் பொருளாம் விரிஞ்சன் தரமகிழ்ந்தான்
போதத் தவன்வரத்தாற் போந்துடையான் காதநின்ற
கண்ணுதற்கு மெண்ணுதற்குங் காண்பரிய பூதமுதல்
எண்ணுதற்கு நின்றா னியைந்து. (1)

எற்றையினு முள்ள விறைவ னயனரனுங்
கற்றை யவர் படைத்துக் காத்தழிக்கு மொற்றையண்டத்
துற்றசெய லொன்றோதா னெங்குபுறத் தண்டத்தும்
மற்றசெயல் செய்யும் வலன். (2)

பாழித் திசையைப் பரிக்கும் பணைக்கைமிக்க
பூழிக் கரியைப் பொருத்துமிரண் டாழமதைக்
காண்பரிய வாழி கடக்கவெனிற் றந்தாளின்
மாண்பரிவான் சிந்தை மதித்து. (3)

வண்டற் றிரையாற்றை மன்னான் சிலவென்று
கொண்டற் சலிலங் குளிர்ப்பிலவாம் பண்டைப்
பரவை யுவ ரென்று படியான் புறத்துப்
பரவையிடை மூழ்கும் பரிந்து. (4)

சாரும் விமானமதி தன்னுலகு சஞ்சரிக்கும்
தேரிரவி தன்பதமுஞ் சேர்ந்தடுக்கும் பேர்வில்
திசைப்பாலர் செய்கை செயற்காகு மேரு
விசைப்பா மரசுக் கியைந்து. (5)

நிலனு மரனு நெடுங்கனலுங் கால்மேற்
தலனுந் தலைவர்களாய்ச் சாரும் வலனுபரும்
காற்றிற்றான் சேரும் கருதுவரு ணன்புகழும்
மாற்றித்தான் சாரும் மதித்து. (6)

Koviloor Digital Library

தாமரைக்க ணெம்மான் சபைதவிர மற்றுலகின்
நாமறத்தன் பேரே நவிலவைத்து மோமம்
கனலாக்கி யந்தணர்செய் கர்த்தர்பெயர் தாமே
தனதாக்கி யுண்பனவி தான். (7)

காவலொடு காட்டல் கடத்த லிவைபுரியு
மூவர்தொழி லேற்ற முறைவிட்டார் தேவ
ரவன்ருள் தொழுவா ரமலமிகு யோகர்
தவந்தாம் புரியார் சலித்து. (8)

மரபிற் புறக்கடலின் மஞ்சனந்தான் செய்வான்
அரவத் தலத்தி னமுதம் விரவியுடன்
இந்திரன்ற ணுட்டினிடை யேற்ற பகல்போற்றித்
தந்தையுல கஞ்சரிக்குஞ் சார்ந்து. (9)

பண்டமரர் தானவரும் பற்றிக் கடையவலம்
கொண்டவரை தன்னைக் குறித்திடுங்கைத் தண்டாம்
எனக்கொண்டு பார மிலையென்று விட்டான்
தனக்கொன்று மாற்றல்படைத் தான். (10)

மண்டலத்தாம் சூரன் மறைந்துதிக்க நின்றுநலங்
கண்ட வரையிரண்டுங் காதிலணி குண்டலமாய்க்
கொள்ளும் பெருவலியான் கூற்றமடுக் காவரத்தான்
எள்ளும் புகழா னியைந்து. (11)

மருக்கொண்ட தாமரையான் மற்று முதலோர்
குருக்கொண்டு கற்கும் குணமா மிருக்கினுற்ற
மன்னுமந் தன்னை மதிக்கா துலகனைத்துந்
தன்னுமம் பன்னவடர்த் தான். (12)

மயரும் பெருத்தவடி மண்ணினிடை வைப்பி
னயரு மரவத் தனந்தன் உயருமெனில்
அண்ட முகடு மடிக்குஞ் சிரமதனில்
கொண்டல்முதற் பூதங் குலைந்து. (13)

Koviloor Digital Library

பெண்ணிற் பிரிதாண் பிறங்கு மலிபிரிது
மொண்ணுஞ் சராசரத்தா லோய்ந்துலவான் மண்ணின்
மரண மடுக்கான் வரவானிற் சாகான்
அரண மடுக்கும்வரத் தான். (14)

தேவ ரெவருந் திரியு மியக்கரெவ
ராவ ரிசைக்கு மருள்சிறந்த மூவர்முத
லேற்றவரு மானுடரு மெற்றறிகி லாமிடுக்கன்
ஆற்றலென் றுந் தீரா தவன். (15)

நீரடுத்துஞ் சாகான் நெருப்பின் விளிதலிலான்
மாருதத்து மற்றெவற்று மாளாதான் சீரடுத்த
தேவரொடு மாமுனிவர் செப்ப வருசாப
மாவதென்னை யன்னாற் கடுத்து. (16)

உள்ளிடையுஞ் சாகா னுலக்கான் புரத்திடத்துங்
கொள்ளைத் தெய்வப்படையாற் கொல்லவொண்ணா நள்ளிர[விற்]
சாகான் பகலுமதே சார்ந்து நமன்கொள்ளான்
ஏகாது சீவனவற் கே. (17)

பூதத் துடனுப் பொருந்துமுணர் விற்புணரும்
வேதமுரைக் கும்பொருளால் வீதலிலான் தாதைதனைத்
தான்கொலைசெய் தாலும் சலிக்கா வலியுடையான்
என்சொலற்கா மன்னோற் கிணை. (18)

ஆயோன் புதல்வ னறிவற் கறிவுமிக்கான்
தூயோன் மறைதெரிந்த தோற்றத்தான் நேயமுற்றோன்
நல்லறத்தி னயகன்பால் நாட்டுமுயிர்க் கன்புடையோன்
கொல்லறத்தைக் கொள்ளான் குறித்து. (19)

வாழிவலன் தந்தை மனமுவந்து கண்டுருகி
ஆழிமறை யாய்தற் கமைதியென்று றூழி
கடந்தேழு மேழுலகுங் காக்குந் தலைவன்
அடைந்தானு மாயுளவ னை. (20)

Koviloor Digital Library

என்றவர னந்தணனை யேவி யறிவுமிக்காய்
நன்றிவர நீமறையை நாட்டென்றான் சென்று
மறைமுதலி னோதுவான் மற்று மமைந்தான்
மறைமுதலி தன்னை மதித்து. (21)

பூதமுத லுந்தைபெயர் போற்றிப் புகலென்றான்
போதமுதல் பொன்செவியைப் பொத்தினான் வேதமுதல்
நற்றவத்தார் போற்று நலமாம் பொருளுரைத்தான்
முற்றவத்தான் வந்த முதல். (22)

நாராய ணாயவென்று நன்றும் மனமுருகிச்
சீராய கைகள் சிரஞ்சேர்த்து நேராகக்
கண்புனலான் மோனநிலை கண்டிருந்தான் மாமறையோன்
எண்புலர்ந்து நின்றா னிரிந்து. (23)

கெடுத்தொழிந்தா யென்னைக் கெடுத்தா யுனையும்
படுத்தொழிந்தாய் தேவர் பகரார் அடுத்ததன்றி
நின்றதனைச் சொல்லி நிறைத்தா யுயிர்க்கபய
மின்றதனைச் சொல்வ தெனைத்து. (24)

என்னைமுற்று முய்வித்தே னெந்தைக்கு நன்மைசெய்தே
னுன்னைமுற்று முய்வித் துலகளித்து முன்னைவர
வேதமுற்ற மெய்ப்பொருளின் மெய்ப்பேர் விழைந்திருந்தேன்
சாதமுற்ற மாற்றவென்றான் தான். (25)

முந்தையுற்ற வானவர்க்கு முன்னோ னெனவிளங்கு
முந்தையுற்ற வான்பெயரே யோதற்கா மந்தணனன்
இந்தமொழி தந்தடுத்தா யெற்கெடுத்தா யென்றுரைத்தான்
சிந்தைமொழி நொந்து திகைத்து. (26)

வேதவர னவ்வுரையை மேலுரைக்க நல்லமலன்
ஆதிவர னுமன்றி யானறியேன் ஓதிவர
வேண்டுவது மில்லை விழைவில்லை யென்றுரைத்தான்
மாண்டவரார் போற்று மனன். (27)

Koviloor Digital Library

தொல்லைகொண்ட வேதந் துணியும் பொருட்கெல்லா
மெல்லைகொண்ட மேலோ னிருக்குமென்னு னில்லையினி
வேறுபதம் நீயுரைக்க வேண்டுமெனின் மேலோர்கள்
கூறுபதம் நீயுரைப்பாய் கொண்டு. (28)

ஆராகச் சொல்வா ரறிய மறையுணர்ந்தோர்
சீரா முபநிடதஞ் செப்புவதென் நேராம்
முனிவர் சுரருரைக்கும் முன்மொழிதா னென்னை
நனிவருமென் னாவி னயந்து. (29)

வேதத்தால் வேள்வியினால் மெய்யுணர்ந்த செய்யர்மிகும்
போதத்தால் மற்றெப் பொருளாலுஞ் சாதிப்பார்
போற்றுபதம் புந்திவைத்தேன் போந்தோதிக் கேட்பனவுஞ்
சாற்றுவதும் வேறென்னை தான். (30)

காடடுத்து மாமலையைக் கண்டு கலைத்தோலால்
மூடியுற்று முண்டித்து மோனமுறை வீடுபெற்றோர்
பெற்றதரந் தன்னையிடை போராதி யானடைந்தேன்
மற்றதரந் தானென் மதி. (31)

செவியாற் பலகேளாத் தேவ ரெனினும்
கவியுமறை யுட்புறம்பு காண்பார் கவிகளென்பார்
காணவரு மெய்ப்பொருளே காலாற் புவிகொள்ளும்
மாணவரு மாலாய் மதி. (32)

எனக்கும் பிரம ரெவர்க்கு முயர்ந்த
தனக்கு மெவைக்குந் தலைவன் மனக்குவந்த
சொல்வதனா லெங்காகுந் தூயமறை யோய்வினையை
வெல்வதனைச் சொல்வாய் விரைந்து. (33)

...ற்ற ... ன் மறையோன் மனமறுகி
...தியவென் றுற்றற்
...டேன் கனவு
...கழ்ந்து. (34)

Koviloor Digital Library

எந்தைகே ளெற்கிம்மை யெற்ற மறுமைக்குஞ்
சிந்தைகே ளாகாத் திறஞ்செப்பி மைந்தனும்
பேத முரைத்தான் பிரிதுமியான் சொல்லகின்ற
வேத முரைக்கான் வெறுத்து. (35)

அன்னதனைக் கேட்டபொன்ன னந்தணர்கட் காகாத
தென்னதனைச் சொன்ஞெனழிற்புதல்வன் றன்ன
துணர்ச்சியாற் சொற்ற வுரையாவை யென்ருன்
உணர்ச்சியால் முற்ருவுளன். (36)

அரச ஹுரைக்க வருமறையோ னஞ்சிச்
சிரதலங்கை சேர்த்துச் செவிசே ருரகமன்ன
சொல்யா னுரைத்திடினுந் தோன்றும் நரகமென்ருன்
கொல்யானை யன்னுற் குறித்து. (37)

கொணர்க மைந்த னென்று கொடியோ னுரைப்ப
வுணர்விநெஞ்சு மேவலர்க ளோடித் துணையடுக்கான்
தன்னைத் துணையாந் தனையன் றனைக்கொணர்ந்தார்
மன்னைப் பணிந்தான் மகிழ்ந்து. (38)

தொழுத சுதனைச் சுடர்மார்பிற் சுண்ண
மெழுதத் தழுவி யிருத்தி முழுதடுத்துச்
சொன்னவர வேதியன்சொற் சொல்லாது மாறுரைத்தற்
கன்னவர வென்ரு னிருந்து. (39)

நந்தி மொழியிற் றொடக்கத்திற் சொன்ன
வாருதிருவன் பேரை யுளத்திற் கருதின்
இடராழி யேற விசையு மதனைப்
படராழச் சொற்றேன் பரிந்து. (40)

தேவர்செய லான்புகலத் தீயனுரைப் பான்
தாவி லுரை சொல்லத் தடுத்துரைத்
தவ்வுரையைச் சாற்றென்ரு னூற்ற
செவ்வுரையான் சொல்வான் றெரிந்

Koviloor Digital Library

காமமெலாந் தந்து கருதும் பதங்கடந்தாற்
சேமமிகு வீடுதருஞ் செய்யநிலை நாமமுளார்
பாராய ணம்புரியப் பன்னுமறை பேசநின்ற
நாராய ணாய நம. (42)

மண்ணினின்று மேலும் மறையோ னுலகுவரை
எண்ணினின்ற பூத மெவற்றுள்ளு முண்ணிறைந்து
காத்தளிக்க வாகிக் கனந்தாங்கு மெட்டெழுத்தே
ஏத்தளிக்கு மென்றா னெடுத்து. (43)

முக்கட் கடவுள் முதுநான் குடைமுதலோர்
மக்கட் கடவுளவா மந்திரந்தான் புக்கடுத்துக்
காட்டுவதார் யோகர் கருத்திற் சிறக்குமலால்
நாட்டுவதார் மற்றோர் நவின்று. (44)

தோற்றமுற்ற தொல்வினையிற் றோன்றுங் கடற்சுழிநின்
றேற்றமுற்ற நற்கலனா யேய்ந்துவரு மாற்றலினும்
வேத முரைக்கும் விழுப்பொருளா நின்றதனிச்
சோதிதிரு நாமமெனுஞ் சொல். (45)

உன்னுயிர்க்கு மென்னுயிர்க்கு மோங்கு முலகமதின்
மன்னுயிர்க்கு மீதுறுதி வாய்ந்ததெனச் சொன்னதுவாம்
இப்பெயரை யென்றா னிரணியன்றான் கேட்டவுடன்
தப்பரிய தீயின்விழித் தான். (4

அற்றைமுத லிற்றை யளவுந்தா னப்பெயரைச்
சொற்றதொரு வாய்நெஞ்சைச் சுட்டதென்ற னொற்றைவ
வாழிமற்றி யாரிடையி னுய்ந்தாய் பெயரிதனைச்
சூழ்வினையாற் சொல்வாய் துணிந்து. (47)

பழினவர் ரக்கல முற்றுலகத் துள்ள
எற்ற வெனக்கிறுதி யயல யேத்தி நினைவரெந்தன்
கனகன் றனையடுத்துக் கயருரைப்பா ரேவரவர்
புனைகழலா யென்றான் சினந்து. (48)

Koviloor Digital Library

மறக்கொள்செருப் பன்முறையும் வந்து வருந்திக்
கறக்குசிறைத் தார்க்கியனாற் காணன் பிறக்குதிரை
பேரான் கடலிற் பெயரா துறக்குவான்
பேரா ருரைத்தார் பெயர்ந்து. (49)

பரவைமண லெண்ணிற் படாதவரை யெண்ணக்
குரவர் குலத்தார் குறைந்தார் அரவுதிரு
நாமத்தைப் போற்றியெலி நன்மை யடைவதுண்டோ
வீமத்தைக் காண்பா யிசைத்து. (50)

வயிற்றேழொ டேழுலகும் வைக்கு மநுசன்
அயிர்ப்பிலனே யேனமொன்றா யார்த்து மெயிற்றால்
எறிந்துயிரை யுண்டொளித்த எழை பெயரை
எறிந்துரைக்கப் பெற்றதனை யென். (51)

ஒருவ னெவரெவற்று மோங்கு முதல்வன்
தருவமுதல் மூன்றுந் தருவோன் கருமத்தா
லன்றிவரு காரணத்தா லாம்காட்சி யென்பதனை
நன்றுமறை யென்றாய் நலிந்து. (52)

ஆதியந்த மாமிதனி னன்றியிலை பேருணர்வின்
வேதமுரைத்த விதியதனல் கோதில்லா
நல்வினைசெய் தாருயர்வர் நாடாது தீதுசெய்வார்
தல்வினையும் தாழ்வர் பயந்து. (53)

செய்த தவத்தினயன் சேரு மரிசிவனென்
றெய்தும் பதமிழந்தா ரென்தவத்தாற் பொய்திளைத்து
மவிநின்றே யென்பெருமை மேவும் சிறந்தபுகழ்க்
காவலிடை யென்றுமடுக் கார். (54)

வேள்விவரு புண்ணியமே வேண்டு தவம் விளக்கிக்
கேள்வி தவிர்த்துக் கிளர்பகையைத் தாழ்வித்த
வில்லாது செய்யு மெனையவர்க ளேற்றடுக்கின்
நில்லாதா மன்னர் நிலை. (55)

Koviloor Digital Library

பேதமைந்த பிள்ளாய் பிழைத்தாய் பொறுத்தலுற்றேன்
ஏதமைந்த வெள்ளா திகன்முனிவன் ஓதமைந்த
வன்னமொழி யெண்ணி யறிந்தோது போதியென்றான்
துன்னுமொழி மைந்தனைப்பார்த் து. (56)

உரையுளது சொல்வ னுணர்ந்து கொளற்காம்
விரையலங்க லாய்வேத வேள்வி கரையுளதோ
தேசினு வாருந் திறமுடனே கற்பதெனப்
பேசினன் மைந்தன் பிரித்து. (57)

வித்தின்றித் தோன்றி விளைவ திலைவேந்த
பித்தின்றித் தேர்ந்தாற் பிறங்குதலா முய்த்தொன்று
சொல்லா துணருந் துணிவுண்டே லுள்ளங்கை
நெல்லிக் கனியாம் நினை. (58)

தன்னுள் ளுலகெவையுந் தந்த வுலகெல்லாம்
தன்னுள்ளே நின்று சரித்திடுவான் பின்னில்லான்
முன்னொருவ னில்லான் முழுதொருவ னுற்றுணிதல்
தன்னொருமை காட்டுந் தரன். (59)

சித்தா மறையின் சிரத்தினுற் றோர்வரிய
சுத்தாத் துவிதத் துணிவுடையான் வித்தகராய்
அல்லா தவர்கட் கதினுண்மை தோன்றிடுமோ
கல்லா தவர்க்கென் கருத்து. (60)

அளவா லறித வரிதாகு மன்ன
வுளவா முபநிடத மோதும் கிளவிப்
பொருளாற் கிளத்தலுறுன் பொன்னூர் களவை
அருளா லறிபவர்க்கே யாம். (61)

மூவகையாம் நல்லுலக முக்குணங்க ளாமெவைக்கும்
தாவரிய நன்மை தருதிருவாய் ஓவலிலா
நன்னிலையான் செய்யும் நலத்தவினை தேவர்முதற்
றொன்னிலையோர் காண்பதரி து. (62)

Koviloor Digital Library

சாங்கியமாம் யோகமெனத் தாங்கிரண்டு தன்மையுடை
வீங்குபொருள் காண்பனவும் வேறுகு மாங்கவைதான்
தேர்ந்தவர்கட் கன்றித் தெளியுமோ வன்னிலைதான்
ஓர்ந்தறிவா யுள்ள முவந்து. (63)

கருமமொடு மன்னதனுற் காண்பயனுங் கண்ணும்
தருமமுத லாந்தலைவன் தானும் அருமைப்
பெருமை யறிவார் பிறவிக் கடலின்
வருமை யறியாத வர். (64)

மந்திரத்தா மாதவத்தால் மன்னும் பெருந்திறலைத்
தந்த பயன் முறையிற் சாற்றவரு நந்தலிலாத்
தெய்வமாய் வைகுந் திருமறையும் வேள்விதனி
லையவியு மாகு மவன். (65)

முற்பயனை நல்கு முதலு மெனையெவர்க்கும்
பிற்பயனை நல்கு பெரியோனும் தற்பயன்று
னன்னவனை யன்றி யறிதாந் தருமமவை
தன்னறிவார் காணுந் தரம். (66)

ஒருவினை யோர்பயனை யுய்ப்பதனை யன்றி
யிருவினை யேற்றபய னெய்தா கருதின்
தரனருளு மேலாந் தனிப்பரமாத் தேறு
பரனருளை யன்றியென்னும் பார். (67)

ஒராவுதியாம் வேள்வி யுறுபயனை யோம்பு
மராவணையா னுற்களித்த லன்ன சராசரங்க
ளெல்லாம் பொருந்து மெனவா மனத்துணிவு
வல்லார் வழக்குமது வாம். (68)

பகுதிப் பயனுப் பயந்த தனியாம்
மிகுதிக்கு மேன்மிகுதி மேலோர் வகுதிக்கும்
மேலாகி நின்று விரும்புதிருச் சிந்தையுற்ற
மாலாகி னூர்க்குவரு மா. (69)

Koviloor Digital Library

எழுத்தியலா வேதநிலை யெண்ணறிய மேலோன்
முழுத்தனியாம் நான்முகனும் முன்னோர் வழுத்தறிய
தேவாதி தேவன் திருமால் பதமலரை
நாவாதி தேர்ந்து நவில். (70)

கண்ணிடையும் வீற்றிருப்பன் கண்டடுத்துக் காட்டுவான்
உண்ணிறையு நல்லறிவா முண்மைதனை எண்ணித்
தருவனப்பி னுலுயர்ந்தான் சான்றோ ரறியு
மொருவனெப்பி லாமலுயர்ந் தோன். (71)

சிந்தைசெய்கை சொல்லிற் செறிந்த பரம்பொருளாம்
இந்தியங்க ளோருநிறை யெண்ணில்லான் சிந்தைவரும்
ஓரெழுத்தாய் நின்ற வுபநிடதத் துண்மைதனை
யார்வழுத்தா ரெந்தா யகத்து. (72)

காமம் வெகுளிமுதற் காரணங்க ளாலடுத்த
தீமைவலி தீர்க்குஞ் செயலுடையார் சேமம்
அடுத்தவன்றான் கொள்வதனை யன்றிநிலை வேறென்
கடுத்தவர்கட் கென்றுமடுக் கா. (73)

காலங் கருவியிடங் காணுங் கடையடுத்த
பாலாம் பயனும் பயன்றுய்ப்பான் சீலத்
தகுந்திருவா யுள்ளான் றகையால வித்திற்
புகுந்தடங்கு வான்பொருந்து பு. (74)

உள்ளுணர்வு தேறி யுணர்ந்தடுத்த மேலோர்க்குத்
தெள்விளியா ழாய்த்தெரியுஞ் செய்கையா னுள்ளும்
புறத்து முளனுகிப் போற்றிவரு செய்கைத்
திறத்துமறை தேறுத் திறன். (75)

ஓமென்னு மோரெழுத்தி னுண்மை யதுவானேன்
ஆமென் றறிவுக் கறிவானன் தாமுற்ற
மூவுலகு நின்றோன் முழுக்கனலுந் தூமமும்போல்
மேவித் தொடர்ந்தடுத்த மெய். (76)

Koviloor Digital Library

காலை மலர்மலராக் காட்டி யடுத்துவரு
மாலைமலர் போற்சமய வாதியர்கள் சூலைத்
திருக்கல்லாற் சொல்லுந் திறத்தோர்க்கு வேலை
திரைபோல வேறில்லான் தேர். (77)

இந்நெடிய தன்மையினை யேலா திகழ்ந்துரைக்கி
னன்னெடிய செல்வமது நாமறத்தான் மன்னும்
உயிரிழத்தி யென்று முளதெடுத்துச் சொன்னேன்
செயிரிழைக்கான் நாமமென்றான் றேர்ந்து. (78)

எதிர்நின்ற மான்சொல்ல வெவ்வுலகு மஞ்ச
முதிர்கின்ற கோபவலை மோதக் கதிரினொடு
வானஞ் சுழன்ற மதிசுழன்ற வாங்கனகன்
மேனஞ்செனக்கொதித்தான் மேல். (79)

வேறுமென்னை சொல்வதினி வேண்டாம் பிறிதுபகை
ஊறி யென்னுள்ளாக வுதித்ததுவாம் மாறில்லா [றான்
வென்பகைவற் கன்பனென்று னேனேன் தொலைக்கவென்
வன்பகையாய் வந்தார் வளைத்து. (80)

குன்றடுத்த மாளிகைவாய்க் கொண்டார் மழுக்கூர்வா
ளொன்றடுத்த வாயிரமீ தோச்சினர் தின்றடுத்துத்
திரடுப்பா மென்றார் தெழித்தா ருரப்பினர்
நேரடுத்துச் சென்றார் நிமிர்ந்து. (81)

தாயி னுயிர்க்கன்பன் தன்னைத் தகவில்லோர்
ஏயெனுமுன் தாக்கு மிரும்படைகள் மாய
வினைத்துணையாக் கொண்ட வினையொன்றுஞ் செய்யா
தனைத்தும் பொடியா மழிந்து. (82)

எறிந்தவெய்த வெற்றினவா யீர்த்த படைகள்
முறிந்துநொய்ய தாக முதலைச் சொறிந்ததன்மை
செய்யாது போன சிறந்தோன் பதமலரை
யையா துளத்துவைத்தானை. (83)

Koviloor Digital Library

உள்ள படைக்கலங்க ளுக்க துறவோய்நின்
பிள்ளைதனி மேனி பிறழ்விலவாம் வள்ளலெனக்
கள்ளத்தான் றன்னைக் கனற்செறித்து வீழ்த்துமென்றான்
தள்ளத்தான் கொண்டசினத் தான். (84)

இந்தனத்தி னுமலையி னெண்ணை யிழுதையிட்டார்
சந்தனத்து வன்றழலிற் றள்ளியிட்டார் பந்தனத்தான்
தானும் பரம்பொருளைத் தாங்குமுளத் தான்கனல்தான்
ஆனுமை கொண்டபய மாம். (85)

காலக் கனல்கதுவக் கற்புடையாள் சோற்றவுரைச்
சீலத்தா லாலத்தார் செய்கடுந்தீ கூலத்
தனுமானைச் சுட்டிலபோ லன்றெடுத்து நின்றான்
தனுமானைச் சுட்டுமுளத் தான். (86)

சுட்டதில்லை நின்சேயைத் தோன்றா லெனத்தொழுதார்
கட்டியொல்லை தீயைக் கடுஞ்சிறைசெய் தெட்டடுத்த
நாகத்தாற் கொன்மினென்றான் நாட்டநின்ற கோபத்தீ
யாகத்தான் சிந்தை யழன்று. (87)

அனந்தன் முதலா மரவரசர் சிந்தை
நினைந்தவுட னெய்தி நெருப்பாய் வினைந்ததிரு
மேனி வரனை விழைந்து கடித்ததனல்
ஆனிவர வினைகிகட் காம். (88)

சூழநின்று பற்றிவிடஞ் சுற்று மெயிரதனுற்
போழகில வென்று புகன்றனர்கள் வாழும்
திசையானை முன்னஞ் செறித்திடுமி னென்றா
னிசையானைக் கொல்லற் கிசைந்து. (89)

பசையில்லாச் சிந்தைப் பதகர் சிலவர்
திசையில்லாய்ச் செப்பச் சிறந்த விசையில்லார்
தந்தடுக்க விந்த்ரதிசை சார்ந்து வருவேழம்
வந்தடுத்த சிந்தை மருண்டு. (90)

Koviloor Digital Library

கையிஞெடு காலுங் கழுத்தணியு மார்பகத்துந்
தெய்வமுற்ற பாசத்தாற் சேர்த்திறுக்கி மையற்
கரிமுன்னம் வைத்தார் கருதுமரி சிந்தை
விரிமுன்பன் சொல்வான் விழைந்து. (91)

எந்தாய் மடுக்க ணிடங்கர் விழுங்கவங்கன்
முந்தாய நின்ற முதற்பொருளென் றுந்தனுற்ற
தந்தையினைத் தானேச் சார்ந்த பரமனெந்தன்
சிந்தையினைத் தானென்ருன் றேர்ந்து. (92)

என்னுமுன் மன்னு மிருங்களிறு தன்னுடைய
பொன்னுரு மோடை பொருந்தநிலத் தன்னுன்
தனைவணங்கி நின்ற தரத்தை யுரைத்தார்
வினைவணங்கா வீரர் விரைந்து. (93)

வல்வீரை யிற்றுயில்செய் வானை மதித்தெனது
நல்வீர மெண்ணுத நாற்கோட்டா லொல்லும்
கரியதனைக் கொல்வீர் கடுகியெனச் சொற்ருன்
எரியதனைக் கொள்வா னிகழ்ந்து. (94)

தன்னையுடன் கொல்பவர்கள் சார வருதலுந்தான்
மின்னையுடன் கொண்டகொம்பார் வேழமுடன் மன்னையுடன்
கொல்ல வெனவடுத்துக் கோபத் தழல்சொரிய
வல்லவனைச் சூழ்ந்த வளைத்து. (95)

வீரமுற்ற மார்பினிடை வெண்கோடு பாயநெஞ்சி
னீரமற்றுக் குத்து மெழிஞுகம் பாரமுற்ற
கொம்பெல்லாம் வாழைக் குலத்தண்டு போன்முறிந்த
வம்பொல்லான் மேனி மதித்து. (96)

வெண்கோ டொடிந்த விதங்கண்ட மெய்யில்லான்
கண்கோடுந் தீப்பொறியாற் காந்திஞன் எண்கோடற்
கேலா வெகுளி யெடுத்தமனத் தான்கடைக்கால்
வேலா வலயமென வே. (97)

Koviloor Digital Library

தள்ளரிதாந் திக்கின் சயிலத் துடன்கூட்டி
எள்ளரிதாய்க் கட்டி யெடுத்திவனைக் கொள்ளைகொண்ட
வெள்ளத் திடுமென்றான் வீரை துயில் வேதமுதல்
உள்ளத் திடுவானை யோய்ந்து. (98)

ஒட்டிநின்று கொல்வா னுணர்ந்து வெகுண்டவர்கள்
வெட்டுமென்ற கோப விரைவினர்கள் கட்டிமலைக்
கல்லினொடு சேரக் கடலி னடுவிட்டார்
அல்லினொடு சேர்நிறத்தா ராங்கு. (99)

நடுவொக்கு மொப்பற்ற நாயகன்பொன் ஞமம்
விடுகிற்குந் தன்மையிலா மேலோன் மடுவொத்த
மாகடலும் வங்க மலையே மிதந்துவந்த
சேகடலைத் தீர்த்தான் நிறத்து. (100)

மோதுற்றார் வேலைதிரை மூழ்கான் பரம்பொருளாய்
மீதுற்ற கற்சிலையின் மேற்கிடந்தான் ஆதிக்காம்
பண்ணவன்ற ஞமம் பகர்ந்தான் சகத்திரந்தாம்
எண்ணுமறை யுள்ளத் தினன். (101)

தலையிற்றீர் வில்லாத் தடக்கை வரதன்
நிலையிற்றீர் வின்றி நினைந்தான் சிலையிற்றிண்
ஆலினிலை மேலை யழகுடைய பிள்ளையென
மாலினுயர் தாளை மதித்து. (102)

அடியார்க் கடியனெனு மார்வமொன்றே யல்லா
லொடியா வலியெற் குளதோ கொடியாய்
குறியாய் குணமேனும் கொள்ளாய் நினையில்
சிறியே னிலையென் திறம். (103)

கள்ளந் திரிவார் கருதநின்ற கைதவனீ
யுள்ளந் தெரியாத தொன்றுளதோ துள்ளும்
பொறியடக்க நின்னையுளம் போற்றப் புரிவாய்
மறிகடற்கண் கண்ணுறங்கு வாய். (104)

Koviloor Digital Library

வருநான் முகன்முதல வானவர்கோன் தானத்
திருநான் மறைநேர் திருவார் பெருநாள்
தெரிகின் றிலர்பேதை தேர்வதுவு முண்டோ
விரிகின்ற நின்பேர் விழைந்து. (105)

செய்யா தனவோவல் செய்வதுண்டோ தீவினைதான்
பொய்யா தனவும் புணர்ந்திடுமால் மெய்யேம்
உயிர்தீர்வ தோர்வினையோ னுற்றடுக்க நன்றும்
செயிர்தீர் பதமருளிச் செய். (106)

ஆயப் பெறுநெறியே யாந்தம் மறிவென்ன
வேயப் பெறுமீச ரெண்ணிலரா னியப்
புறநிற்க வெண்ணுர் புரிமாயை யுய்க்கும்
பொறிபுக்கு நிற்பார் பொதிந்து. (107)

ஆதிப் பரமூகு மன்றெனலு மாகிநிற்கு
மோதப் பெறுநு லுலப்பிலவாம் பேதித்த
வன்னவையிற் பேர்கிலையா லாதிப் பரம்பொருளே
என்னவிளை யாட லிவை. (108)

அம்போ ருகனு ரறவோ ரறியாதாய்
எம்போ லியரெண்ணற் கென்பலவாங் கொம்போ
டடைபூக் கனிகாயு மாமரந்தா னென்றே
விடையேற்று நிற்கும் விழைந்து. (109)

நின்னிற் பிறியா நிலையடுத்து மேன்மைகொண்டு
தன்னிற் பிறியாத் தனியறந்தா னுன்னிற்
பிறிதா யினவோ பெரிதுலகம் பொன்னின்
வறிதாப் பணிவேறு மா. (110)

தாய்தந்தை யென்னுந் தகைவந் தனைதந்தாய்
நீதந்த நெஞ்சி நிலையுடையேன் வாய்தந்து
வாழ்த்த வரந் தருவாய் வள்ளலெனச் சிந்தைசெய்தான்
தாழ்த்தவினை யால்வருந்தா தான். (111)

Koviloor Digital Library

அத்தன்மை தன்னை யறிந்த வருந்திறலோன்
உய்த்தும்மி னெம்மி னென வுய்த்தார்தாம் பித்துண்டு
பேரப் பெரிதும் பெருவிடத்தை யூட்டுமென்றான்
வீரக் கழலான் வெகுண்டு. (112)

இட்டார் கடுவிடத்தை யெண்ணமுடை யானடுத்துத்
தோட்டா னுகர்ந்தான் தொகைக்கசையிற் கட்டிக்
கடுமத் திகையாற் கடுத்தா ரடித்தார்
கடுமுற்றும் வெய்யோர் கடிந்து. (113)

வெய்யார் முடிவிலவர் வீசி யடித்திடுபோ
துய்யா னெனும்வேலை யுள்ளுறைவோன் கையா
யிரமோ கணக்கிலவா மென்னவுல கெங்கும்
தரமாகு மென்றுமதித் தான். (114)

ஊனோ டுயிர்வேறென் றுன்னாத பொன்னவனுந்
தானோடு மாயைத் தனிமயக்கால் யானே
உயிருண்பே னென்று னுருத்தா னுயிர்த்தான்
செயிருண்ட தீயாய்ச் சினந்து. (115)

வந்தான் சரணின் வணங்கி யெனதுயிர்தான்
எந்தாய் கொளற்குறமோ வெண்ணிலிவை சிந்தைவலத்
துந்தா ரியதன்று மோங்கு முலகெவையுந்
தந்தா ரியல்சமைந்த தாம். (116)

ஏவ ருலகுதந்தா ரென்பெயரை யேத்திநின்ற
மூவருளர் தேவர் முழுமுதலோர் யாவர்
தெரியச்சொ லென்றான் தெரித்தா னனகன்
அரியத்தன் செய்கை யறிந்து. (117)

உலகுபல தந்து முயிர்க ளளித்தும்
உலைவிலுயிர் தானு யுறையும் மலரின்
வெறியெள்ளி னெண்ணெயென வேண்டி யிருக்கு
மறிவென்ற தாகு மரி. (118)

Koviloor Digital Library

என்கண்ணு ளேக்குதற்கா யெங்கு முளனெந்தை
தன்கண்ணு ளேக்கத் தறமுளதோ வுன்கண்ணும்
பொன்கண்ணு ளவியுண்ட புண்டரிகக் கண்ணனுன்
வன்கண்ணுற் காண வரான். (119)

மூன்றும் குணம்செய்கை மூன்றும் வடிவமதே
மூன்றும் விழிசோதி மூவுலகாம் தோன்ற
லிடையீறு மில்லாதா னெப்பொருட்கு மீசன்
கடைகாணு வேதக் கரி. (120)

என்ற வுரையவுண னேத்தெடுத்து நக்குமிக்க
வொன்றும் பொருட்கா மொருவனென்றாய் நன்றதனே
இன்றுளதாய்க் காட்டி னிருந்தாலும் வன்மலைக்கண்
ணின்றுளதா வென்று னெரித்து. (121)

சாணி னுளன னுவைத் தாங்கரிய கூறுசெய்த
கோணினுளன் மேருவுளன் கோரநின்ற தூணினுளன்
நின்சொல் லினுமுளனும் நேருரைத்துக் காண்டியென்றான்
மன்சொல் மதிக்கு மனன். (122)

உம்பர்க் குனக்கொத் துலகம் பரந்துளனேக்
கம்பத்திற் காட்டக் கருதிலையேற் கும்பத்தின்
வன்கடத்து மாவை மடங்கலேனக் கொன்றுதின்பன்
உன்கடத்தை யென்று னுருத்து. (123)

என்னுயிர்நிற் கோரற் கெளிதன்றி யான்கருதிச்
சொன்னவள்ளல் தொட்டவிடந் தோன்றிலனே லென்னுயி
மாய்த்திடுவேன் வாழ்வை மதிக்கி னவற்கடிமை [ரை
ஏய்த்திடுவே னென்று னிசைந்து. (124)

நசைதிறந்து பொங்கிமிக்க நன்றென்று நக்கு
விசையுறமு வீழ்ந்ததென வெற்றி யிசைதூணி
னெற்றவுட னண்ட மிரியச் சிரித்துவந்த
வெற்றியரி சீற்ற மிகுத்து. (125)

Koviloor Digital Library

நாடி வருமென்ற நல்லறிவி ஞன்சிறந்து
தேடிவரன் கந்திற் சிரித்தவுடன் ஆடி
அழுதா னரற்றினன் ஆயர்தபுகழ் பாடித்
தொழுதா னெழுதான் றுணை. (126)

ஆரடா சொன்ன வரியோ சிரித்ததுநீர்
சீரடா தோவொளிக்கச் சேர்தரியாய்ப் போரடா
நின்றேன் புரப்படென்றான் நேரடுத்துச் சீறிவரு
குன்றேந்து தோளான் குறித்து. (127)

பிளந்ததுதா ணுங்கற் பிறந்தசெங்கட் சீயம்
வளர்ந்ததிசை யண்டமுற்று மாக விளைந்ததுவாம்
அப்புரத்த செயகை யறிவா ரெவரண்டத்
திப்புரத்த செய்கை யிவை. (128)

மன்ற லணிதுளப மானுடத்தி ஞமடங்கல்
சென்றதுவான் தீண்டுபடி சேவடியாம் நின்றபொழு
தண்ட முகட்டுமுன்னே னன்றுந்தி வந்தவனுக்
கண்டமுகத் தான்மலர்ம கன். (129)

எத்துணையாங் கையென் றியம்பி யவையெண்ணும்
வித்தகருண் டோதானர் மேற்சேனை பத்தடுத்த
நூறமைந்த கோடிவெள்ளம் நோக்கினவை யாங்கடலை
வீறமைந்து கோறும் விரைந்து. (130)

ஆயிரமாங் கோடிவெள்ளத் தாமவுணர்க் காங்காங்கு
மேயுமுக மொன்றிரண்டா மேற்றபுயம் தீயாய்க்
கனல்விழிகண் மூன்று கருதி விளங்கும்
புனல்மலைகள் வாயிற் பொலிந்து. (131)

அண்ட முடிவுண்ணு மாற்றன் மிகுதியை
மண்ட வுடமடங்கல் மானுயிர்ப்பு மண்டிவரு
காற்றடுக்கா தென்னிற் கவினுநர சிங்கவலி
எற்றெடுத்தற் கென்ன மிசைந்து. (132)

Koviloor Digital Library

நன்மை துடர்ந்தார்க்கு நாடிவரு கேடேது
தொன்மைதொடர் நன்மையறம் தோற்றவரை யன்வயித்துத்
தீயவுண ரல்லாரைத் தென்னுர் வயிற்றடக்கி
யாயவுணர் வாய்த்தந் தது. (133)

பேரா வவுணர்தமைப் பேரு மெயிற்றடக்கும்
பாராக்கு மண்டத்திற் பற்றிவிடு மேருமலை
தன்னி லடிக்குந் தனிக்கரங்க ளாற்பிசையு
மன்னிலையே கொல்லு மடித்து. (134)

வகிர்ப்படுத்து வாய்பிளக்கும் வன்றோ லுரிக்கும்
உகிர்ப்படுத்துக் கொல்லு முருட்டும் பகிர்ப்படுத்துக்
கொய்யுங் குடரைக் குமைக்குஞ் சமைப்பதொன்றோ
செய்யுங் கொலைகள் சிறந்து. (135)

யானை யொடுதேர்மா யாவு முயிரின்றி
யூனையொடுக் கும்பரவை யோரேழு மீனிஞெடு
மள்ளிக் குடிக்கு மறமு மிதின்கோர
முள்ளிச் சலிக்கு மொருங்கு. (136)

ஆழி வரையி னடிக்கும் சிலரையண்டச்
சூழி வரையிற் றுவைக்குமற்றும் வாழிமலை
யேழினெற்றிக் கொல்லு மிருட்பிழம்பிற் றேயக்குமடல்
ஆழிமிக்க சிய மடர்த்து. (137)

மலையிற் புரண்டுவிழ வள்ளுகிரால் வாங்கித்
தலையைத் திருகும் தடக்கைக் கொலைபுரியும்
வாங்கி யுயிர்குடிக்கும் வாரி தமைத்தூர்க்கு
மோங்குமும்பர் தன்னிலெறி யும். (138)

முப்புரத்த தாமுலகர் முற்றுமுனர்ப் பற்றித்
தப்புதலில் லாதுகொன்று தையலர்கள் செப்பும்
கருவடுத்துத் தள்ளியண்டங் காணுமசுரர்
உருவடுக்கா துய்க்கு மொழித்து. (139)

Koviloor Digital Library

கனகனையும் சேயாய்க் கருதும் வரத
வனகனையும் நீக்கி யசுரர் எனைவரையுங்
கொன்றநெடுஞ் சீயத்தின் கொள்கை தனைநோக்கி
யொன்றிரவி சூழா துலகு. (140)

வயிரத்தாம் வாள்வாங்கி வான்கேட கத்தான்
செயிரற்ற தேவருள்ளந் தீய அயிருற்ற
வேலையஞ்ச வார்த்துவரு மேருவென வாய்மடித்து.
மாலையஞ்சா னின்றான் மதர்த்து. (141)

நின்றவனை நோக்கி நிமல னெடுத்துரைப்பான்
ஒன்றமன நோக்கா துறலென்னை வன்றொழிலி
னூழியுற்ற வேந்தை யடிபணியப் போமுனது
பாழியுற்ற புன்றொழில் வெப் பம். (142)

கேளொருநீ காணக் கிளர்ந்து வருமரியின்
தோளொருதா ணீக்கித் துலைத்துநினை வாளை
வணங்குவதை யல்லால் மகளிரு டற்கும்
வணங்குவதே தென்றான் மதர்த்து (143)

நகைபுரிந்து வாட்கை நடந்தெடுத்த தாளும்
புகைநெடுந்தீப் பொங்கவெதிர் புக்கான்றொகையடங்காத்
தோளடுத்துச் சூழ்ந்தான் துணையி லிரணியனை
ஆளடுத்துச் சூழ்ந்தசிங்க மார்த்து. (144)

இருவர்களும் பற்றிநின்றா ரெப்பொழிற்கு மேலார்
ஒருவர்களும் பற்றா ருவமை வெருவரிய
தோற்றத்தான் மேருவொத்தான் றூயோனு மற்றவைக
ளேற்றத்தா னொத்தா னிசைந்து. (145)

ஆர்ப்பொலியின் வள்ளுகிரி னன்றகரம் பல்வேறாய்ச்
சீர்ப்பொலியும் பாற்கடறான் சேர்ந்ததொத்தா னேர்க்கடலின்
வண்ணோட்டு மாயன் மலையரசா மேருவொத்தான்
கண்ணோட்டந் தீர்ந்தகன கன். (146)

Koviloor Digital Library

வாள்கவிசெய் தோள்கை மகுட மலரோன்வாழ்
நீள்ககன மேலாக நின்றடுத்து வாளொளிப்பூண்
எங்குஞ் சிதர விணைத்தா டமைப்பற்றிப்
பொங்கிச் சுழற்றும் புகுந்து. (147)

சுழற்றியதாற் றாங்குஞ் சுடர்க்குண் டலங்கள்
கிழக்கிற் குடக்கிற் கிடந்த வழற் கதிரோன்
தோன்று முதயமத்தந் தோய்ந்து வருகிரிகள்
என்றுவரு மெந்தாயெடுத்து. (148)

போன்றனவாந் தன்மை புகலி னினையவென்று
தான்றனியிற் சொல்லுந் தரத்தினனோ வான்றருவான்
வள்ளலுகிர் மார்பின் வழங்கப் புகுந்தரத்த
வெள்ளமுல கெங்கு மிகும். (149)

ஆய வினைமாயன் அந்தி யவுன்கோயில்
வாயிற் கவானில் வலத்துகிரால் மீயாம்
குருதிபொங்க மார்பிற் குடர்களைந்து தீர்த்தான்
கருதிநின்ற தேவரிடுக் கம். (150)

முன்னோன் பிரமன் முளரிநிக ராயிரக்கண்
மன்னோடு தேவர் வரமுனிவ ரின்னோரும்
தேடரிய வெந்தை சிறந்தபதம் போற்றி
யாடல்கொண்டார் வெற்றி யறிந்து. (151)

நோக்கினர் நோக்கமெங்கும் நோன்மைமிகு கைகளொடு
மாக்கைதா ளெங்கணுந்தா மாகியே வாக்கினன்
மாமதியி னுலளக்க வாரான் வடிவுகண்டு
போமதியி னாறத்தர் போந்து. (152)

பல்வெளியி னெல்லையிடைப் பத்திவெகு தூரமுற்ற
சொல்வதனங் கோடிக்குந் தோற்றமிகு மெல்லை
கணிக்கா வுருவைக் கமலத்தி னண்ணல்
தணிக்காத் துதிசெய் தனன். (153)

Koviloor Digital Library

தன்னைப் படைக்காத் தனிமுதலே முன்னிலையா
மென்னைப் படைக்கு மியல்பளித்தா யுன்னைப்
படைத்தவரு முண்டோ பரம வுனதாம்
கடைக்கணரு ளென்றான் கசிந்து. (154)

பல்லா யிரமாம் பகிரண்டம் வேலைகொண்டு
நில்லாத மொக்குளென நின்னுழையே யெல்லா
வுருவமுமாய்க் காண வுளதென்னின் மாறாத்
திருவவுனை யென்தெரிந்த தே. (155)

பேரைத் தரத்தெண்ணிப் பேர்த்துப் பலவகையாய்ச்
சீரைத் தரற்கெண்ணுஞ் செய்கையதே யாரைப்
படைப்போராய்க் காத்துப் பகைத்துத் துடைப்போர்
கிடைப்போரா ருன்னையன்றிக் கேள். (156)

நின்னுள்ளே யென்னை நிறுமித்தாய் நீயாக
வென்னுள்ளே யெப்பொருளும் யானளித்தேன் பின்னில்
முன்னில்லே னெந்தை முதலே பணியெல்லாம் [லேன்
பொன்னுள்ளே தோன்றுவது போல். (157)

என்றான் கியம்பி யிமையாத வெண்கணனும்
பொன்றாத தேவர் புரஞ்சூழ்ந்து நின்றாக
நேமிப் பெருமான் நிகரிலடி சீற்றமதைச்
சேமித்து நின்றான் சிறந்து. (158)

எஞ்சு முலகனைத்து மிப்பொழுதே யென்றடுத்து
நெஞ்சமலை தேவர்களை நேர்நோக்கி யஞ்சன்மின்
என்று வருள்சுரந்தா னேற்ற கமலக்கை
தன்று லளித்தான் சரண். (159)

பூவிருக்குந் தாயைப் புனையு மெழினலத்தை
யவருக்குங் கண்ணு மிலக்குமியை யாவிக்
கிணைகடற்றாய் நல்லமுதி னேற்ற திருவைத்
துணையிடத்திற் சேர்த்தார் துணிந்து. (160)

Koviloor Digital Library

செந்தா மரைக்கண் டிகழவரு சேயிழையை
நந்தா விளக்கை நயமணியை முந்தும்
உலகெல்லா மீன்ற வொருவனிதை தன்னை
யலகில்லான் கண்டா னளித்து. (161)

தீதிலவா மன்னை திருவை யரிணேக்கக்
காதலொடு கண்டார் கணமுநிவர் ரோதினர்
சீர்த்தி பரஞ்சுடருஞ் சேயன்பன் றன்னைக்கண்
பார்த்திதனைச் சொல்லும் பரிந்து. (162)

உந்தைதனைக் கொன்று முடலளைந்த கண்டுமென்பாம்
சிந்தைதனை யென்வசஞ்செய் சீரறத்தாய் அந்தமிலா
அன்பென்மேல் வைத்தாய் அளித்தாய்கை மாறுண்டோ
பொன்பரவு மேலோய் புகல். (163)

அயிரா விமைப்பி னருட்டந்தை தன்னைச்
செயிரா நிமிடத்திற் சீறி யுயிரளையக்
கண்டிருந்து போற்றுங் கருணைத் திருவவுன்போல்
எண்சிறந்தா ரேவ ரினி. (164)

கொல்லே மினியுன் குலத்தோரைக் குற்றங்க
ளெல்லா மினிய தெனவுரைத்து நல்லா
யுனக்குப் புரிவ துரையென்றான் வள்ளல்
தனக்குப் புரிவரிலா தான். (165)

முன்புபெறும் பேரோ முடிவில்லை யின்னுமுடன்
பின்புபெறும் பேரும் பெறவேனேல் என்பில்
இழிபிறவி யெய்திடினு மெந்தையுந்த னன்பு
வழிபரவச் செய்தி வரம். (166)

அன்னானை நோக்கி யருள்சுரந்த நெஞ்சினனா
யென்னானை வல்ல னெனுமீசன் முன்னான
பூதங்க ளெல்லாம் பொருந்துயிரா மென்போல
நீதுங்க னென்று னினைந்து. (167)

Koviloor Digital Library

ஏனவர மொன்றே வெனக்கடுத்த அன்புநிறைந்
தானவரெல் லாநிற்கன் பாயினர் தானவர்க்கு
வேந்தனீ யென்கை விருப்போ சுரர்கட்கும்
வேந்தனீ யென்றான் விழைந்து. (168)

நல்லறமு மெய்ம்மையொடு நான்மறையு நல்லருளும்
எல்லையிலா ஞானமுட னெப்பொருளுந் தொல்லைசால்
எண்குணனு மேற்றிங் கெனைப்போ லொளியாகிப்
பண்பொடுவாழ் கென்றான் பரன். (169)

என்று வரமருளி யெவ்வுலகுங் கைகூப்ப
முன்றின் முழங்கி முடிசூட்டி நின்ற
வமர ரனைவீரு மன்பர்க் கடுத்த
தமராக வென்றான் சமைந்து. (170)

தேம னுரிமை திசைமுகத்தோன் செய்யவர
வோம மியற்ற வுயர்முடியைக் கோமன்னு
மூவுலகுங் கொண்டான் முறையிற் பெரிதடுத்து
நாவுலகம் போற்ற நயந்து. (171)

ஈதாகு முன்னிகழ்ந்த தென்பெருமா னென்மாற்ற
மேதாகு மென்ன விகழ்புரியிற் றீதாய்
விளையு மெனவுரைத்தான் மேதாவி யாகும்
இளையோன் மிகவு மெடுத்து. (172)

இரணிய வதைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

விபீடண னடைக்கலப் படலம்.

கேட்டிருந்து மக்கேள்வி கேட்டைத் தருவதெனக்
கோட்டமனத் தானுறுதி கொண்டிலனல் மூட்டிவரு
தீயாகிப் பொங்கிச் சினந்தான் பெருங்காமத்
தீயாகுஞ் சிந்தைத் திறன். (1)

இரணியனும் பேரா னெனக்கு முயர்வான்
முரணியனோ முன்னவனை முற்றும் அரணியனென்
றன்னவன்பா லன்பா யடுக்கு மரணமின்றி
மன்னவன்பால் நின்றாய் மதித்து. (2)

ஆயவடற் றூதை யரிய வுடலதனை
மாயனடக் கண்டு மகிழ்மகனும் ஏயவரு
மென்பகைவற் கன்பா மிழிவை யுடைநீயும்
ஒன்படுவீ ரென்றா னுருத்து. (3)

பாழி யிரணியன்சேய் பண்பாக நீபுரியும்
சூழ்வினையால் யானவற்குத் தோற்றபின்னர் தாழ்வினைநீ
என்செல்வ மெய்தி யிகலின்றி வாழ்கருத்தோ
வுன்செய்கை முற்றா தொழி. (4)

முன்பகையா ருன்போல் முரணி லவராகும்
வன்பகையா மானுடரை வாழ்த்துடையா யென்பும்
உருகவழு தேத்துதியா லுன்போற் பிறிதும்
திருகவழுந் துங்கபடார் தேர்ந்து. (5)

கண்ணினையா மானுடர்பா லன்புகொண்டு நாட்டிமனத்
தெண்ணினையாம் செய்வினையு மென்னைவெல்ல வெண்ணும்
அரசின்மே லாசை யடுத்தாய் செயலும்
பரசின்மே லென்றான் பகைத்து. (6)

Koviloor Digital Library

அஞ்சினையா மாக வமர்க்கும் பொருத்தமிலாய்
வஞ்சனையா மானுடர்பால் வாஞ்சையுளாய் நஞ்சை
யுடன்கொண்டு வாழ்த லுரித்தோ வதுபோல்
மடன்கொண்ட நின்செயலா மால். (7)

அன்று குரங்கு மசோக வனமழிப்பக்
கொன்றிடெனத் தூதர்தமைக் கோறுவது வென்றியல
வென்றாய் விலக்கினாய் ஏற்றபகைவரிடை
நன்றாய் மனமுடைத்தா னாய். (8)

பழியுணர்த்த நின்னைப் படுக்காது நின்றேன்
ஒழியுணர்த்துஞ் செய்கையது மொல்லை விழியுணர்த்த
நிற்றி யெனின்விளிதி நீங்கென்றான் தாங்கரிய
முற்றுபழி கொண்டான் முனிந்து. (9)

என்றா னுடனே யெழுந்தான் பெருவானிற்
சென்றா னுடன்றுணைவர் சிந்தைவர நின்றான்
கலையுறுதி கொண்ட கவினடுத்த நீதி
பலவுறுதி விண்டான் பரிந்து. (10)

வாழியாய் கேட்டி மகிழ்வாழ்வு கைம்மிகத்தான்
ஊழியாய் நின்னுயிரை யோர்கில்லாய் கீழ்மையோர்
சொல்லா லறமடுக்காய் தூய்மைமிக்க வாழ்வுமுண்டோ
வல்லாய் மனத்தாய் மதி. (11)

புத்திரரா யுற்றோர் பொருவில்லாக் கேண்மையினோர்
மித்திரரா யுற்றோர் மெலிவுடையோ ரித்துணையாம்
பேருமிரா மன்சரத்தாற் போராது சித்ரவதம்
சேருமிரா தாகச் சிதைந்து. (12)

எத்துணைத்தாம் நல்லுறுதி யெய்தும் வகையடுத்த
தொத்துணர்த்த வொன்று முணரகில்லாய் அத்த
பிழைபொறுத்தா ளென்று பெயர்ந்தா னகரை
மழைபொறுத்தாள் கையான் மறந்து. (13)

Koviloor Digital Library

அனல னனில னறனொடுசம் பாதி
யினையவர்க ளுல்வ ரியைந்தார் கனைகழலார்
வீரர் மதிவல்லார் வீடணனைப் பின்றொடர்ந்தார்
சேர வருபருவந் தேர்ந்து. (14)

அரக்கனொடு நால்வ ரறிவுடைய சீரார்
குரக்கினத்த ரோடுவரர் கோனீர்க் கரைக்கண்
அடுத்தா ரெனவந் தறிந்தார் கவலை
விடுத்தார் மதித்தார் விரைந்து. (15)

அளக்கரெனு மேலா மறிவுடைய நம்பி
விளக்கொளியார் பாற்கடலின் மேலே வளத்தடத்தாம்
தாமரையின் மாமலர்கள் சார்ந்து பறந்தவெனக்
காமர்வளங் கண்டான் கதித்து. (16)

உளனயத்த தான வுடம்பினுயர் வானரமும்
ஏனையுற்ற வானவெலா மெண்ணிவரின் வானரந்தான்
மிக்கவுறுஞ் சிந்தையான் வேண்டுந் துணைவர்கட்குத்
தக்கவுரை செய்தான் தடுத்து. (17)

அறந்தலைமை நின்றோர் அருளுடைமை பூண்டேன்
மறந்தலையே னன்மை மதித்தேன் பிறந்த
வுறுதிசொல்லச் சிறி யுறுத்தான் றுறந்தேற்
குறுதிசொல்வீ ரென்று னுகந்து. (18)

மாட்சியிதி னின்றும் வரவடுத்த வேறில்லை
தாட்சியிலா மூர்த்தி தனையடுத்துக் காட்சி
யினிக்கடவ தென்று ரியைந்தடுத்த சிந்தை
தனிக்கடமை மந்திரத்தார் தாம். (19)

நல்ல தனையுரைத்திர் நாமுமினி வேறு
யல்லதனை யுரைத்தா லாமரக்க ரெல்லையிலா
நற்குணத்தி ராமன்றாள் நாட்டுமெனத் தாற்பிறவி
நிற்குணத்தாய்ச் செய்வோம் நினைந்து. (20)

Koviloor Digital Library

முன்புறநான் கண்டதிலை முன்படுத்த கேள்வியிலை
யன்புறவாங் காரணந்தா னானதென்னோ வென்புருக
நெஞ்சுவப்ப நிற்குமெனி னேரும் பிறவிதனை
யஞ்சுவிப்போ னென்றா னறிந்து. (21)

ஆதிப் பரமனிடை யன்பும் அறத்தினொடு
நீதித் தரமுயிர்க்காம் நேயமுடன் வேதியர்பால்
நல்லருளும் பெற்றே னளினத் தனிக்கடவுள்
சொல்லருளு நற்றவந்தோய்ந் து. (22)

ஆயதுதான் சேரு மமைதி யடுத்ததனாற்
தூயதுதான் நல்லறிவுந் தொல்லையுற்ற நாயகன்றன்
தாளடுத்து நம்மனத்திற் சார்ந்த தனைமுடிக்கும்
நாளடுத்த தென்றா னயந்து. (23)

இருளுற்ற வெல்லை யியைத லிலதாய்ப்
பொருளுற்ற சிந்தை பொறுத்தார் மருளுற்ற
சூழ்வடுத்துச் சேர்ந்தார் துதிக்கு மினனடைந்தான்
வாழ்வடுத்த பொன்னார் மலை. (24)

அப்புறத்தி ராம னலங்குமலை வேலைதனைக்
குப்புரற்கா வெண்ணிக் குவளைவிழி துப்புறழும்
செவ்வா யணங்குசிந்தை சேரக் கடற்கரையாம்
அவ்வா யணைந்தா னறிந்து. (25)

கானல் கழியுங் கருமணலுங் கண்டலுடன்
பானல் குவளை பரந்தபுன்னை மேனலமாம்
அன்னம் பெடையோ டமர்ந்துறையும் பூஞ்சோலை
தன்னையடைந் தான்மா தவன். (26)

தரளம் பவளந் தரங்கத்தி னீட்டும்
திரளு மணிகனக தீரம் மருளும்
பொதும்பர்மணற் குன்றம் புரளுந் திரையும்
வெதும்புமனன் கண்டான் விழைந்து. (27)

Koviloor Digital Library

மின்னும் விரற்றேய வீழ்ந்தடுத்த கண்ணீராற்
றன்னுஞ் சுழியழிப்பச் சோர்வினுடன் பொன்னனையார்
கூடற் சுழியதனைக் கோவடுத்த புன்னையடி
நாடித் திகைத்தான்ம னம். (28)

கூதிர் குறும்பனியிற் கூர்திவலை கோவைகொண்டு
மோதுந் திரையார் முடத்தாழை பாதியுற்ற
வஞ்சிறையின் பாடணைத்த வன்னந் துயில்வதனை
நெஞ்சுருகிக் கண்டா னினைந்து. (29)

அருந்துதற்கு மீன்கொணர வன்றடுத்துத் தன்னைப்
பிரிந்துநின்ற சேவறனைப் பேணி வருந்திசையை
நோக்கிமழ லைக்குருகு நோயுற் றிருந்ததனை
ஆக்கிமனத் தாவியலைந் தான். (30)

ஒருதனியாம் பேடைமிசை யுள்ளம் வருந்தப்
பெரிதாங் குருகிரண்டு பேரா துருகிமிக
வெஞ்சினத்தி னேடுபொரும் வேட்கை யதுகண்டு
நெஞ்சினத்தி நின்று னிமிர்ந்து. (31)

உண்ணிறைய மூடலிடை யோய்ந்தடுத்த வோதிமந்தான்
கண்ணுங் கலவிவென்ற கண்டிறைவன் தண்ணார்
பவள விதழதுக்கிப் பார்த்து நினைந்தான்
குவளைவிழி தன்னைக் குறித்து. (32)

இத்திறமா யெய்தி யியல்படுத்த காலமிசை
வித்தகர்தம் சொல்லான் மெலிவதனைச் சித்தமிசைக்
கொள்ளாது வள்ளல் குறித்திருந்தா னேரிடத்தின்
நள்ளாரைப் போக்க நயந்து. (33)

உறைவிடத்தைச் சேர்ந்தா னொருங்கடுத்த கேள்வித்
துறையடுத்த நண்பரொடு சூழல் முறையடுத்த
தானை மருங்கணைந்தான் சார்ந்துவரு வீடணனும்
வானைமருங் காம்புகழ்கொள் வான். (34)

Koviloor Digital Library

மற்றபொரு ளின்றி மகிழ்ந்த வரதவனை
யுற்றசர ணென்றாங் குயர்ந்தவுரை வெற்றிதரு
வீரன் செவித்தலத்தின் வீழ்ந்தாங் துணைவர்தமைக்
கூரன்பி னோக்கியுரைக் கும். (35)

எந்தைவர சீராரி ராம சரணமெனத்
தந்தவுரை யார்முகத்தாம் சாற்றுமென மந்தணந்தா
னுற்றுழியிற் சேனை யுவந்தடுத்தோர்க் குற்றதனை
மற்றுழியிற் சொல்வா மதித்து. (36)

முற்றிவரு வானை முழங்கிவரு தானைதமி
லுற்றார் நிருதரென வோங்கினர் எற்றுதிர்கள்
பற்றுதிர்க ளென்று பரந்தடுத்துச் சுற்றினர்
மற்றுதிறல் வீரர் மருண்டு. (37)

தந்ததுவாம் தன்மமது தானே தடுத்திவனை
வெந்தொழிலிற் றீய வினையுடையான் வந்தான்
இலங்கையர்கள் மன்ன னிவனுகு மென்றார்
கலங்கலிலார் சிந்தை களித்து. (38)

இருபதெனுங் கைகளுட னீரைந்து கம்முன்
திருவிலிக்கா யன்ன சிதைந்த பொருதொழிலை
யெம்மொடுபா ரென்ப தெடுத்துரைத்து வந்தனர்கள்
தம்மொடுதா மானதரத் தார். (39)

பற்றிச் சிறையினிட்டுப் பாருடைய கொற்றவற்கு
முற்றிச்சிறந்து மொழி துமென்பா ரெற்றுவதை
யன்றியிவர் தம்மை யடுத்துரைப்ப தென்னென்பார்
வென்றியிவர் தம்பால் விழைந்து. (40)

இமைப்பதற்கு முன்விசும்பி னேற்றெழுந்து செல்லின்
அமைப்ப தெனையரக்க ராமே சமைத்தல்
கொலைத்தொழிலை யல்லாற் குறிப்பதினி யுண்டோ
நிலைத்ததொழி லென்றார் நினைந்து. (41)

Koviloor Digital Library

இயைந்தன்பின் மேலவர்க ளின்னவகை கூற
மயிந்தன் துமிதனெனு மாண்பார் அயிந்திரந்தான்
சேர்ந்தவர னுணையினுற் றேர்ந்தவர்கள் வந்தடுத்தார்
நேர்ந்தவரத் தாரை நினைந்து. (42)

விலக்கியுற்றூர் வீரர்தமை வேதநூல் சார்ந்த
இலக்கணத்தாம் நோக்கரவ ரெய்திச் சலக்குறிகள்
இல்லா ரெனத்தா மியல்பி னடுத்தவரை
நல்லா ரெனநோக்கி னூர். (43)

யாரிவணி னுற்றீ ரியைந்த கருமமெவை
போரிவணி னுற்றூ புரத்தொன்றூ பேரிவணீர்
சொல்வீ ருமதுளத்தைச் சோர்வில்வீ ரென்றுரைத்தார்
நல்வீர முற்றூர் நயந்து. (44)

பகலோன் வழிமுதலான் பார்க்குறிய னுதன்
புகலா மவன்கழலாய்ப் போந்தான் தகவுளவாஞ்
சிந்தையினுன் தன்மஞ் சிறந்தவர னுன்முகத்தான்
மைந்தனருண் மைந்தன் மகன். (45)

அறனிலையி னீங்காமை யாதிப் பரன்பால்
நிறையவரு வாய்மைநிலை நேயம் மறையவர்பால்
அன்பா மிவைக ளமல னருள்பணிந்து
தன்பாலிற் கொண்டதவத் தான். (46)

சுடுதீ முடிந்ததெனத் தூயாட் சிறையி
விடுதீ வினையை யிசைத்தாய் விடுதியெனின்
உய்வாய் விரும்பினையே லோடுமுயி ரென்றுரைத்தான்
மெய்வாய்மை நேயன் விழைந்து. (47)

மறந்தனையாஞ் சிந்தை மதிநீங்கிச் சொல்வான்
பிறந்தனையா நிந்தைபிழைத்தா யிறந்தனையாம்
நிற்றி யெனிலென்ன நேயம் துறந்தனனென்
றுற்ற தனலனுரைக் கும். (48)

Koviloor Digital Library

மயிந்தனவன் சொல்லை மனத்தூவைத்து நீயிங்
கியைந்தனபொன் ஞதற் கிசைப்பேன் பெயர்ந்தெனத்தான்
தம்பியையுஞ் சேனையையுந் தான்காவ லாக்கிவந்தான்
நம்பியையுண் ஞடி நயந்து. (49)

தருமமொடு ஞானந் தவமடுத்த வேள்வி
மருவும் பெருமைபொறை வாயில் கருணைநிறை
கோயிலுற்ற கண்ணன் குறிப்பறிந்து போய்ப்பணிந்தான்
ஆயலுற்ற வண்ண மடுத்து. (50)

உண்டறிந்த தொன்றுரைக்க வூழியா யென்றவுடன்
பண்டறிந்த மேலோர் பரம்பொருளான் மண்டும்
சடையார் முடிதுளக்கிச் சார்ந்துகண்ட கேட்ட
விடையாது சொல்லென்முன் வேந்து. (51)

விளைவுடைமை யானறியேன் வீடணனென் பேரான்
அளவுடையா ஞல்வருட னஞ்டிக் களவியலும்
வஞ்சனையான் தென்னிலங்கை மன்னவற்குத் தம்பியவன்
தஞ்சமென நம்மிடைவந் தான். (52)

கொல்வழியிற் பற்றுமெனுங் கொள்கையினர் நம்சேனை
பல்வழியிற் பற்றுதலும் பார்த்தியாம் நின்மினென
நீர்யாரை யாம்நிலைமை நேரா யுரைமினெனத்
தார்மார் பொருவனுரைத் தான். (53)

முரண்புகுந்த தீவினையை முற்றுவித்த முன்னேன்
சரண்புகுந்த சூழலன்றிக் காணும் அரண்புகுதற்
கல்லையென வருளி ஞர்கலியைச் சார்சரணம்
நல்லையென வந்தனனென் ருன். (54)

ஆயவன்தன் தன்மமுளா ஞதிப் பரனடிக்கண்
மேயசிந்தை மெய்ம்மையுடன் வேதியர்கள் நாயகன்பால்
நீண்டவரத் தெய்தினன் நேயமுடை நற்பொருளும்
பூண்டவர னென்ருன் புனைந்து. (55)

Koviloor Digital Library

கற்புடைக்குன் ருந்திருவைக் காத்தி விடாயெனிலோ
எற்புடைக்குன் ருமிலங்கை ஏழைநின்றன் பொற்பார்
முடித்தலைக்காம் சோர்வுமென முற்றும் பொருளும்
எடுத்துரைத்தா னென்ரு னியைந்து. (56)

ஏங்தெழிலி ராவணனு மின்னவகை சொன்னவனீ
சாங்தொழிற்கு நேர்தியென்முன் சார்தியெனி லாங்கினைப்போ
தாமகல்தி யென்ன வடுத்தா னதுபொழுதே
தாமகலா னுகுஞ் சரண். (57)

அப்பொழுதி ராம னருகிருக்கு நண்பர்களை
இப்பொழுது கேட்டீ ரியம்புமிவன் கைப்புகற்குத்
தக்கவனே வன்றிநம்மாற் றள்ளற் குரியசெயல்
மிக்கவனே வென்ருன் விழைந்து. (58)

தடமலர்க்க ணம்மான் றனைவணங்கி நின்ருன்
இடமலர்த்துங் காலமிதென் றெண்ணுங் கடனறியும்
காவலனும் சுக்கிரிவன் காதும் வலியுடையான்
ஆவலொடு சொல்வா னறிந்து. (59)

நனிமுதலாம் வேதங்க ளுலும் நயநூல்
மனுமுதலாங் கண்டறிந்த வள்ள வினையசெயல்
கேட்பதனுற் சொல்வேன் கிளத்தல் தெரிந்தவரை
நாட்பதுமக் கண்ணவென்ற னன். (60)

வெம்முனைதான் மிக்க விளைதலன்று வேறுமொரு
சும்மையவர் கொள்ளத் துணிந்தன்று தம்முன்
தனைத்துறத்த னீதி தருமோ வரக்கர்
நினைத்துவரு நல்லரெவர் நேர். (61)

தகையுற்ற தம்முன்னைத் தந்தையரைத் தாயை
மிகையுற்ற நற்குருவை வேங்தைப் பகையுற்ற
போதுங் துறந்தபண்பு போற்றுங் தாமுடைத்தோ
வாதுங் துங் திச்செயலா வாம். (62)

Koviloor Digital Library

வேண்டுழியி னன்மை விளம்பிவரு வெம்முனைதான்
பூண்டுழியி னுஞ்செருவிற் புக்குடனே மாண்டொழித
லல்லாது நம்மருங்கி னவன்ற னுண்டொழிலும்
செல்லாது நன்மைத் திறம். (63)

மிகப்புலத்து நற்றருமம் வேட்ட தெனினும்
தகைப்புலத்திற் சார்தலன்றித் தானே பகைப்புலத்தில்
வந்தநலம் பார்க்கின் மதிக்குந் தரமில்லான்
சிந்தைநல மென்னுந் திறம். (64)

வார்க்குறவு செய்கழலான் வாழ்தம்முன் வாழ்வுற்ற
சீர்க்குறவாய்ச் செற்றார்கள் சீறிவரு போர்க்குறவு
செய்யாது வந்த திறமரியின் யார்க்குறவாம்
பொய்யாது மின்னான் புகல். (65)

ஒட்டிவரு சொன்ன வுழையுருவ மாகிவரு
சிட்டன் மருமகன்செய் தீவினைதான் கிட்டும்
பொழுதுதவங் கேள்வி புகன்றநல மான
முழுதுமவ மாமறியோ மோ. (66)

கூற்றமுட னிவ்வுலகங் கூடி வருசெயலின்
ஏற்றமுடன் வெல்லுமடற் கேற்றமுள மாற்றவன்றன்
தம்பியிவண் தோற்றமெனிற் றாழ்ந்த விவன்செயலை
நம்பியுரை செய்வதற்கென் னும். (67)

அரக்கர்தமை யட்டுநயத் தான வறத்தைப்
புரக்கவரு நாமே புரிவி லிரக்கமிலா
அன்னவரைத் தாமே யடுத்ததுணை யாக்கின்
என்னவரை வென்றா னெடுத்து. (68)

விண்டுழியு மோர்நிலையின் மேலாவர் மெய்ம்முகந்தான்
கண்டுழியு மோர்நிலைதான் கைப்பொருளைக் கொண்டுழியும்
மோர்நிலையி னிற்பவரே யுற்றா ரெனப்புகல்வர்
சீர்நிலையி னிற்குந் திறர். (69)

Koviloor Digital Library

வஞ்சமன னஞ்சவபோல் வந்த வரவல்லாற்
றஞ்சமென நம்மிடையிற் சார்ந்தன்று னஞ்சமெனும்
தன்மையினு னென்றுரைக்குஞ் சார்பே யெனதுளத்தி
னன்மையினு மென்றுரைத்த னன் (70)

அங்கிகரி லான்புகல வையன் பெருங்கேள்வி
தங்கிகரில் சாம்பன் றனைப்பார்த்தா னென்னையினி
உன்கருத்தா மென்று னுயர்ந்தோர்க் கருடிரமே
தன்கருத்தாக் கொண்டவர தன். (71)

அறிஞ ரெரினு மரியதெவ்வர் தம்மைச்
செறிஞ ரெனிற்கெடுவர் திண்ணம் நெறியதனை
நோக்கி னரக்கர்தமை நட்ப வறிவினரென்
றூக்கினவர்க் கென்னறிவ தாம். (72)

வெற்றியையுஞ் செய்வர் வினைய மதுவேண்டி
முற்றியையு மாங்குறைவு முற்றுவிப்ப ருற்ற
நெடும்பகைவ ரல்லதுட னோர்சிற் றினத்தார்
அடும்பகைக்கே யாவா ரவர். (73)

வேதமொடு வேள்வி விளக்கு மறையவர்கட்
கேதமொடு தேவர்க் கிடரியற்றும் பாதகர்கள்
நம்வயிற்று ரென்னி னலமுளதோ வெவ்வுலகும்
தம்வயிற்று மென்றதரத் தாய். (74)

கைக்கொடுபின் மேற்சரணுக் காத்தபின்ன ரன்னூர்தாம்
பொய்க்கொடிய வஞ்சம் புணர்க்கினுந்தா னிக்கொடியர்
தம்மைவிடற் குண்டோ தகுதியல வின்னர்செயும்
வெம்மையினுற் றீங்கே மிகும். (75)

மேனகைக்குஞ் செய்கை விளம்புதற்கு வேறுண்டோ
கானகத்திற் றேவியொடாங் காலமதின் மானெனத்தான்
வந்தவனைப் போல மதிக்கு மிவனென்று
சிந்தைதனைச் சொன்னுன் தெரிந்து. (76)

Koviloor Digital Library

பால்பெரிய நூலின் பனுவற் றுணிவுமுற்றுஞ்
சால்பெரிய தானைத் தலைமையா னீலன்
தனையாது நின்கருத்துச் சாற்றென்றான் மாற்றார்
வினையாது நின்றவொன் வேந்து. (77)

பகைவர் தமைத்துணையாய்ப் பற்றற்கடுத்த
வகையுளவா மன்ன வகுப்பேன் நகையுளதா
மென்றாலு மோர்குரங்குக் கேற்ற மொழியிதுவா
மென்றாலுஞ் சொல்வே னிசைந்து. (78)

தங்குலத்தார் தம்மைத் தருக்கிவந்த போரினிடைப்
பொங்குகொலை யோர்க்கெளியர் போந்தவரேல் மங்கை
திறத்தின் வயிர்த்தோர் செறிந்த பொருளை
யறத்தின் வலியினிழந் தார். (79)

பேரபிமா னங்களுற்ற பெற்றியர்கள் போரினிடை
சாரும் புறங்கொடுத்துச் சாய்ந்தவர்கள் நேரான
தாயத்தி னானிரப்புந் தன்மை யுடையோரேல்
ஆயத் தகுந்தா ரவர். (80)

அடுத்த வரசியலி னாணை யதனாற்
படுத்தவர்கள் பட்ட பகைஞர் மடக்கொடியர்
மைந்த ரெனினுமவர் வந்து நமையடுத்தாற்
சிந்தைகொளற் கொன்றுந் தெரிந்து. (81)

தாமவர்க்குத் தீர்ந்த தகைமை யுடையரலர்
நாமுறற்கு வல்லார் நமையடுத்தார் தோமா
மவரடுத்த தன்மையென வாய்ந்தேன் கரத்திற்
றவரெடுத்த நன்மைவலத் தாய். (82)

காலத்தை நோக்கியவர் கற்றுணர்ந்த நூல்பொருந்து
சீலத்தை நோக்கித் தெளிதற்கும் ஏலும்
சமையவரா வாமோ தனிமுதலே யென்றான்
அமையவரு நீல னறிந்து. (83)

Koviloor Digital Library

மற்றுமுள மந்திரியர் வாய்மை நலமுடையர்
குற்றமிலாக் கேள்வியன்பு கூர்ந்தடுத்தார் பற்றல்
பழுதாகு மென்று பகர்ந்தா ருலக
முழுதாகு முன்னவற்கு முன். (84)

உறுபொருளை யாவர்களு மொன்ற வுரைத்தார்
செறிபெரிய கேள்வித் திறத்தாய் நெறியுடைய
மாருதிசொல் லென்ன வரனுரைக்க மற்றவனும்
நேருதிறல் சொல்வா னினைந்து. (85)

இணங்கி னவரறிவை யேற்கா ரெனினும்
வணங்கினவர் நம்மினத்தார் வாய்மைக் குணங்களெனத்
தன்னிலைமை தேறும் தரத்தான் பொருத்துரைத்தான்
நன்னிலைமை யெல்லா நயந்து. (86)

எத்தனையாம் வித்தகர்கள் எண்ணுவதற் கேய்ந்தவரர்
அத்தனையாம் வீரர்வினை தன்றென்று ருத்தமர்கள்
தேர்ந்துரைத்த வன்ன செயலைத் தெரிந்தினிமே
னேர்ந்துரைத்தற் கென்னும் நிபம். (87)

தூய வரத்தார் துணிந்த திறல்தூய
வாய வரத்தா யமைந்தெனினுந் தீயவனென்
றன்னவகை யானு மயிர்க்கேன் முனமுளதா
மன்னவகை சொல்வே னறிந்து. (88)

வண்டுளரு மாலைவர வஞ்சகர்தம் வாண்முகந்தான்
கண்டபொழு தேதெரியுங் கைதவந்தா னுண்டே
லொளிக்க வருமோ வுடனடுத்தும் விழ்வர்
களிக்கவரு செய்கையிலார் காண். (89)

உள்ளத்தி னுள்ள துரைப்பதற்கு முன்னெடுத்து
மெள்ளத்தன் மாமுகமே வேறுசொலும் பள்ளத்தி
னன்றி யிருள்வெளியி னுமோ வெடுத்துரைக்கி
னன்றிதரு மென்று னலன். (90)

Koviloor Digital Library

வாலிவிண்ணி னேற வரவரசு தம்பிபெறக்
கோலிநண்ணும் வில்வலியுங் கொற்றமுடன் சீலம்
உணர்ந்து நினைச் சேர்ந் தூரிய வரசு
புணர்ந்துநிற்க வந்தான் பொறுத்து. (91)

செறியுங் கழலரக்கர் தீமை யரசு
நெறியிலையா னிற்கா நிலையு யெறிகடலார்
பூமியன்றுந் தம்பிகொளப் போந்த தரமதனால்
நேமியன்று னென்று னினைந்து. (92)

காலமன்று மின்னேன் கருதி வரற்கென்றால்
வாலிபகை தீர்ந்த வலிதேறி மேலுமினி
இங்குறைவோர்க் கெல்லா மிறுதி யெனவெண்ணித்
தங்குறையைப் போக்குவன்வந் தான். (93)

தீத்தொழில ராமரக்கர் செய்வினையர் நம்தெவ்வாய்
வாய்த்தொழியா ரன்னதுணர் மாண்பதனாற் காய்த்தவரே
கையுற்று ரென்னிற் கருதும் வினைமுடியு
மையுற்ற தென்னை யறிந்து. (94)

தெளிய வரிதிவர்தந் தீமை யெனவும்
விளிதல் செய்வ ரென்ற விருப்பும் எளியவர்பால்
எண்ணுவது மென்னு மியல்புடைய வீரவரற்
கொண்ணுவது மல்லா துறும். (95)

கொல்லுதற்கு வல்லரக்கன் கூற வெனைத்தொடரும்
எல்லையுற்றுத் தூதர்தமை எற்றெறிதல் புல்லிதுவாம்
செய்கை பழிபுணரும் சேரவரு போர்வெல்லோம்
நைகை தொழிலென்றான் நயந்து. (96)

மாதர்தமைக் கோறல் மறத்துப் பிறிந்துவரு
மாதர்தமைக் கோற லழிவுறினுந் தூதர்தமைக்
கோறலிவை தூய்தன்றுங் கொள்ளாது நல்லுலகஞ்
சீறல்புலை யென்றான் தெரிந்து. (97)

Koviloor Digital Library

எல்லியினி லேகியிவனிரண மாளிகையிற்
செல்லியவாம் போதுந் திரிபோது நல்ல
நனிநிமித்தங் கண்டே னயந்த துரைப்பேன்
துனிநிமித்த மில்லான் றொடர்பு. (98)

நிந்தனைகொள் கள்ளும் நெறியடுக்கா வூன்களொடு
தந்தனவுங் காணேன் தருமநிலை வந்தனையும்
நீதியுட னந்தணர்கள் நேயவில்லி னுஞ்செயல்கள்
ஓதியுடன் கண்டே னுவந்து. (99)

அன்னான் தனையை யலரி னுரையயனாற்
சொன்னான் முனிசாபந் துன்மதிதான் நன்னுதலி
தீண்டுமெனிற் கூற்றணுகும் தீர்கவலை யென்றுரைத்தாள்
ஆண்டுமென தன்னையிடத் தாய். (100)

பெற்றுடைய தொல்வரமும் பேராற்றல் வஞ்சனையும்
விற்றொடையின் வெந்தழியு மென்றெண்ணி யுற்றுடையான்
தண்ணளியு நல்லுணர்வுஞ் சாரு மிவனன்றி
மண்ணிடையும் விண்ணுமுண்டா மா. (101)

தேவர்க்கும் தானவர்க்கும் தேவர்க்கு மேலான
மூவர்க்கு முற்றுதை முற்றுவிப்பேம் ஆபத்தின்
வந்துபயந் தானைவிட்டால் வான்கூப நீர்க்கண்டு
சிந்துபயந் தானதென்றான் றேர்ந்து. (102)

பகைப்புலத்தோர் நற்றுணையோ பற்றே லறிஞர்
நகைப்புலத்தா மன்றி நயப்பென் தகைப்புலத்துத்
தம்பி தமையரிவர் தாம்பகைவ ராம்புலத்தி.
னம்புபொருட் காதலத னால். (103)

ஆத லிவன்வரவு மான்றதொரு நல்வரவே
சோதியுளத் தெண்ணற்குத் தாய்தென்றான் நீதிவர
னலுங் கணிப்பருநா னற்கிரண மாலிமுன்னர்
மாலிற் படித்தவனு மான். (104)

Koviloor Digital Library

மாருதிபொன் வார்த்தைசெவி மாந்தி யமிழ்தமெனப்
பேரறிவ வென்று பிறர்நோக்கிச் சீரிதுமே
லிம்மாற்றந் தேர்மி னெனவுரைத்தா னரியனு
மம்மாற்றந் தேர்ந்தா ரவர். (105)

கருத்துறத் தான்போந்த கால நலத்தாம்
அருத்தி யரசினிடை யாகும் பெருந்துயரும்
நற்றவத்தி னும்பெருமை நாட்டுமவ னம்வயிற்று
முற்றடுத்த செய்கையென்று னோர்ந்து. (106)

மற்று முரைப்பதிலே மாருதி யாய்ந்துரைத்த
பெற்றியது பிறிதாய்ப் பேர்ந்தாலும் வெற்றிபெறத்
தோற்கவர வானாலுந் தூயபுக லென்றவனே
காக்கவரற் கென்னே கருத்து. (107)

இன்றுவந்தா னென்றுண்டோ வெந்தைதனை யாயைமுனம்
கொன்றுவந்தா லென்னைபுகல் கூறுகின்றான்தொன்றுவந்தும்
அன்பாந் துணைவ னவனடுத்துப் பின்றுமெனின்
நம்பாற் பிழைவரற்கென் னும். (108)

பிறந்து துலை புக்கான் பெற்றி யதனை
மறந்து சரணென்றான் வாழ்வைத் துறந்ததினும்
இன்றுவந்தான் சூழ்வா லிறந்தநா ளென்றுமுள
நன்றுவந்த நாளென்ற னன். (109)

இடைந்தவர்க்குத் தானபய மேற்றெறிநீர் வேலை
கடைந்தவர்க்கா யாலமுண்டல் காண்டிர் அடைந்தவர்க்கு
நல்லருளைச் செய்துவலி நாட்டு மறம்புரியான்
புல்லருளத் தோடுகட்பிற் போம். (110)

பேடனுக்கங் கொள்ளப் பிடித்துத் தனைப்பிடிக்கும்
வேடனுக்குத் தீமூட்டி வேம்பசியாற் பாடனுக்கம்
நோக்கி யுடல்கொடுத்த நுண்புள்ளும் வீடடைந்த
வாக்கியமும் வேதவிழு மம் (111)

Koviloor Digital Library

போதகந்தான் கன்றிப் பொருத விடங்கர்பற்ற
வாதி யபயமென்ற வாற்றலினால் வேத
முடியா னடைந்து முழுதளித்த வார்த்தை
படியான தெங்குநிறைப் பாம். (112)

மன்னுயிரைத் தந்து வளர்த்து வருமாயன்
தன்ன வுல கிற் றருமந் தா னாகு மென்னினுந்தாம்
வந்தடைந்தோர்க் காத்து வரவீ டளிக்குமென்றல்
சிந்தைநலங் கொள்ளவந்த தே. (113)

நஞ்சை மிடற்றணிந்த நாதன் கருணைமுனம்
விஞ்சவளித் துப்புதல்வன் வீதற்கா யஞ்சி
யபயமென்ற வந்தணற்கா யன்னாளிற் கூற்றை
நபயமொன்ற வென்றதுமென் னாம். (114)

சரணெனக்கி யாவரெனச் சானகியாள் சாம்ப
அர னுனக்கி யானென் றருளி மரணமுற்ற
வெந்தைவழக் கெற்கிருக்கா தென்னும் சரண்காப்பென்
சிந்தைவழக் கென்றான் தெரிந்து. (115)

உய்ய வபய முடையா னுயிரோம்பாக்
கைய னுதவி கருத்தில்லோன் மையற்ற
மாமறையி னின்ற மெய்யை மாற்றுங் கசடனிவர்
தாமறைவார் மாநகரந் தாழ்ந்து. (116)

சீதை தனைக்குறித்தோ தேவர்தமைத் தீமைசெய்த
பேதைதனைக் கொல்விரதம் பேணுபெற்றி வேதியர்க்கு
நன்றபயந் தந்தவன்று நாட்டு மொழியன்றோ
நின்றபடி செய்வதுதா னோர். (117)

காரியமோ வன்றோ கருணை யுடையோர்க்குச்
சீரியது மீதிற் சிறந்ததுண்டோ பூரியரே
யானாலு மென்னை யபயமளித் துக்காத்தல்
தானாகு மேன்மைத் தரம். (118)

Koviloor Digital Library

ஆதலினாற் றானே யபயமென்ற போழ்தபயம்
ஈதலினும் சொற்றதுவு மென்பாலாம் காதலினும்
பாற்கரத்தான் மைந்த பரிந்தழைப்பாய் நீயென்றான்
நாற்கரத்தா னுங்கடல்வண் ணன். (119)

அய்யுறவெல் லாந்தீ ரளவை யமைந்தவன்றே
மெய்யுறவாஞ் சிந்தையென மேற்றேறிக் கையுறற்குச்
சேர்ந்தா னெளிதிற் சிறந்து கொணர்வனென
வார்ந்தா னருணன் மகன். (120)

வருகின்ற வேந்தை மயிந்தற் கிளையான்
தருகென்றா னண்ணனினைச் சார்ந்தான் திருவொன்று
மன்னன்பு கொண்டு வருகின்றா னென்றவுடன்
தன்னன்பு முன்னுறவந் தான். (121)

தொல்லருங்கா லம்பழகிற் றாயரல்லார் புல்லார்தாம்
புல்லுவராந் தூயார் பொருந்துமன்றே யொல்லையுணர்
வொன்ற விருவோரு மோர்நாட் பகலெல்லாய்
நன்று தழுவினரா னார். (122)

தழுவிநின்ற காலைகமழ் தாமரைக்க ணெம்மான்
எழுவினின்ற தோளா னிறைவன வழுவின்றித்
தந்தா னபயம் சரணமலர் வணங்க
வந்தா னபய மனம். (123)

சிங்கமனை யான்சொற் சேர்வதற்கு முன்காதிற்
கங்குனிறத் தானடைந்தான் கண்ணருவி யங்கம்
மனமாய்க் கிளர்ந்தான் மனம்நிறைந்து மேனி
கனமாய்ப் பொடித்தபுள கம். (124)

பஞ்சிற் சிவக்குமென்காற் பாவைதனைப் பிரித்த
வஞ்சற்குத் தம்பியெனை வாவென்றான் தஞ்சமெனத்
தாழ்சடைத்தே யுண்ட தனிநஞ் செனச்சிறந்தேன்
வாழ்வுடைத்தாம் நாயகன்பால் வந்து. (125)

Koviloor Digital Library

மருளூற்ற சிந்தையனென் வாய்மைவிட்டான் சூரன்
உருளூற்ற தேரிலங்கைக் குள்ளாம் தெருளூற்ற
சிந்தைமிக்க தேற்றமிதேற் செய்யு மருளிதுவேற்
சந்தமிக்கா ராமரக்கர் தாம். (126)

தீர்வரிய தீமைதனைச் செய்தாலுஞ் செய்யசிந்தைப்
பேரருளார் தம்செயலிற் பேர்வதுண்டோ கார்வரையாற்
தன்னைக் கலக்கத் தருமார் கலியமுது
தன்னைக் கடவுளர்க்குத் தாம். (127)

துறவர்க் குறவான தூயவர னென்னை
யுறவுற் றடைக்கலந்தா னுய்த்தான் மறவினையை
நீக்கலிலா மாயம் நிறைபிறவி தீர்ந்ததினி
யாக்குநர இல்லை யடுத்து. (128)

திருத்து கதிர்ச்செல்வன் செப்பும் அடைந்த
வொருத்த னுயிரையுவந் தோம்புங் கருத்துடைய
னுதலினுற் றூழா தடுத்து வரவென்றான்
போதமுனா னன்பு புரிந்து. (129)

மொய்தவழு மாகிரிகள் முற்றும் வரநாப்பண்
மைதவழுங் குன்றும் வடவரையும் எய்தலெனச்
சேர்ந்தோர் மரமேழும் சேரவெய்தோ னேர்சூழல்
சார்ந்தா ரிருவர்களுந் தாம். (130)

மார்க்கடஞ்சூழ் வைப்பின் மருங்கங் கதன்காக்க
நாற்கடல்சூழ் பார்க்கரச னன்மகனும் பாற்கடறான்
சுற்ற வடவரைமுன் தோன்றிநிற்பக் கார்க்கடல்தான்
உற்றதெனக் கண்டா னுவந்து. (131)

அள்ளு முலகை யரிக்குலச் சேனைக்குட்
தெள்ளுதிரை யென்னச் செறிநிறத்தின் வெள்ளியதோர்
பாற்கடலின் முன்னுளிற் புண்ணவர்க்காப் பள்ளிவிட்ட
போற்புயலைக் கண்டான் புனைந்து. (132)

Koviloor Digital Library

கோலப் புருவமெனக் கூடுந் திரையுடனே
மாலப்பு முத்தின் மணற்பரப்பிற் றாலப்பொன்
வாணுதலி சீதை வயங்குதிருக் கண்மணிபோல்
நாணுடைவில் லாற்கண்ட னன். (133)

கற்றைநில வின்றிக் கருணையமு தங்காலும்
முற்றுகலை போலு முகத்தானை பெற்றவன்றான்
தந்த மவுலிதனைத் தம்பிக் களித்தனையால்
வந்தமவு லித்தா மனை. (134)

வீரன் றனைநோக்கி மேனி மயிர்சிலிர்ப்பச்
சேரு முருக்கமுடன் சீர்முகில்தான் நீர்முகந்து
பொற்கமலம் பூத்துப் புவியடுத்த தெனனவரன்
நற்கமலத் தாள்கண்ட னன். (135)

மின்மினியின் மாய்பிறவி வேலை தனை வாங்கச்
செம்மகுட நீக்கியடி சேர்த்தவள்ளல் தம்முன்னோன்
தாமரையான் தாதை தனிச்சரணங் காணவெம்முன்
கோமருவான் செய்தவழக் கு. (136)

பெருந்தவஞ் செய் வோர்க்கும் பெரும்பிறவி நோய்க்கும்
மருந்தெனவந் தானே மடிக்க விருந்ததெனில்
என்னதவந் தாமரக்க ரேற்கப் புரிந்ததென்றான்
பன்னுதவத் தாற்பெறுபண் பான். (137)

கரமருவிச் செல்லுங் கதிர்முடியன் கல்லும்
மரமுருக நோக்கிவந்து வள்ள லுரமுருகி
நோக்க விறைஞ்சி நுவலு மலர்ப்பதத்தின்
சேக்க விழுந்தான் செறிந்து. (138)

அழிந்த பிறவி யதனைமுகங் காட்ட
வழிந்தகண்ணி னீரான் வழங்கும் பழங்கருணைக்
கண்ணானைக் கைநீட்டிக் காண யிருவென்றான்
தண்ணார் துளவமணிந் தான். (139)

Koviloor Digital Library

ஆழிவரன் ருறு மருள்சுரந்து நோக்கியுடன்
ஏழிவரும் மேழுலகும் என்பேரும் வாழும்வரை
மன்னிலங்கைச் செல்வம் வழங்கினேன் கொள்கவென்றான்
பொன்னிலங்கை யாழிப் புயல். (140)

தீர்த்த னருளுேக்கிச் செய்சிறப்புப் பெற்றனும்
கூர்த்தவறம் நோக்கிக் குறித்ததோ வார்த்தையது
சொன்னவுட னுர்த்தார் துணையில் முனிவர்சுரர்
பன்னவரு வானரர்பண் பார். (141)

உஞ்சனனு னென்றடுத்த வூழின் வணங்கிநின்ற
அஞ்சனனை நோக்கி யருட்கடவுள் துஞ்சா
நயனத்தாய் சூட்டுமுடி நாயகத்தா யென்ன
அயனுத்தான் வந்தா னடுத்து. (142)

விளைவை யறிந்தடுத்த வீடணன்றான் சொல்வான்
அளவையுருச் செல்வ மளித்தா யிளையவற்குச்
சூட்டுமுடி சூட்டித் துயர்போக்க வேண்டுமென்றான்
நாட்டு முடியடியா னுன். (143)

குகனேடு மைவர்முனங் குன்றடுத்துச் சூழ்வான்
மகனே டறுவர் மயக்கி லகனமரும்
காதலநின் னேடெழுவர் கான மளித்துந்தை
யோதுயகா ருற்ரு னுவந்து. (144)

நடோன் பகர்வதெனை நாயகா யேனை
உடனுதித்தா ரோடு முரைத்தாய் அடிமை
சிறந்ததெனச் சேர்ந்து திருவடியைச் சூடி
நிறைந்ததனம் பெற்ரு னினைந்து. (145)

திருவடியைச் சூடிமுடி செங்கதிரைச் சேர்ந்த
அருவரைபோ னின்ற வனக னிருவருடன்
எல்லாரு மின்பமுற்ரு ரேற்றவிமை யோர்பொழிந்தார்
வில்லாரு மின்பூ விழைந்து. (146)

Koviloor Digital Library

ஆர்த்த பரவையுட னார்த்த வுலகமெலாம்
வார்த்தொழிலிற் பேரிமுதன் மங்கலங்கள் தூர்த்தனவாம்
பொன்மாரி யெங்கும் பொதிந்த நறுஞ்சுண்ணம்
மன்மாறி லாச்சொன் மதித்து. (147)

மொழியமுதன் னுடிரத்தின் முற்றுமுறை நீங்கி
இழிமரபு நன்மையுற்ற தென்றே பொழிமலரோன்
தீமை யரக்கனிலை தீர்ந்த தெனவறமும்
வாய்மை யுற நன்னிலையா வாம். (148)

இன்னசெவ்வி யாக விராம னிலங்கைமன்னைத்
தன்னசெல்வம் பெற்ற தனையார்க்கும் சொன்னதெனத்
தானைவைப்பைச் சூழவலம் சார்கவெனத் தம்பிக்கும்
வானரமன் னற்கும்அருள் வான். (149)

அந்தமிலா நற்குணத்த வன்னவனை மன்னவனுச்
சந்தனமா னந்தலைவர் தாங்கிவர விந்திரற்கும்
தாங்கரிய செல்வனெனத் தானைவைப்பைச் சூழ்ந்தனர்கள்
வாங்கரிய வல்லமைகொள் வார். (150)

தேடுவரர் தேடுந் திருவடியைத் தேடிமிக
நாடுவர னுட்டவரு நன்னீரை யாடுவரர்
பாவமஞ்சும் போக்கிப் பரவுசுர ரேற்குடும்
காவலவர்க் கென் பெருமை காண். (151)

இற்றைவரை யாரு மிருடி களுமிமையோர்
முற்றவர முற்றதிற முற்றிநின்றோர் முற்றுயர்ந்தார்
தென்னிலங்கை வேந்தனெனச் சேர்ந்தசெல்வரேவரென்றார்
பொன்னிலங்கு மேலோர் புகழ்ந்து. (152)

விபீடண னடைக்கலப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

இலங்கை கேள்விப் படலம்.

வந்தடியை வந்தனைசெய் வாணிருதர் மன்னவனுக்
கந்தமிலா தோருரையு ளவ்வழியே தந்து
விடுத்தபின்னர் வானிரவி வெய்ய கதிரை
யொடுக்கிநின்று னன்மை யுவந்து. (1)

சந்திவந்த னைத்தொழில்கள் தாமுடித்துத் தன்னெடிய
புந்திநொந்தி ராமனுறப் பூங்கணையைச் சிந்தி
யடுத்தான் மதன்றீயி னந்தி யடுத்த
கடுத்தா னெனவும் கனன்று. (2)

மரத்திசைக டோரு மறைத்த விருளதுவும்
கோத்திசையு மாம்கடலின் கொள்ளையென நீத்தமிகும்
பொய்கை நிறைந்தமலர் போலவுற்ற மீன்கணங்கள்
செய்கை நிறைந்தமங்குல் சேர்ந்து. (3)

சில்லிவனங் கோதைதனைத் தேறி நினைந்திருக்கும்
வில்லிமனம் வெப்பமுறும் வேட்கையால் எல்லிதனைக்
கண்டுமல ரீட்டினுற் கான்மல்லி கைக்கானம்
கொண்டமலர் வானமதொக் கும். (4)

ஒன்றுட் கருப்பா மொளிர்வா டனையுருவித்
தன்றுணையில் மாமுகத்தாற் தாழ்த்திவென்ற பொன்னின்
துணைவனையான் வெல்வனெனத் தோன்றுவது போல
விணைவனையா விந்துவந்த தே. (5)

கண்ணிணைக்கு மப்பாற் கரந்து திரிந்தாலும்
பெண்ணிறத்தை யீண்டு பிடிப்பலென வொண்ணும்
கடலுலக மெங்கும் கலைநிலவை வீசி
அடலுலவு மிந்துவடுத் தாம். (6)

Koviloor Digital Library

புடைக்கை திரையெடுத்துப் பொங்கு கடளுன்
உடைத்தன் எரிறங்கொ ளொருவன் அடைக்கவந்தா
னென்னேயரித் தானேயிஞ லென்று கிளர்வனபோற்
தன்னேயறி யாதலேத்த தாம். (7)

மேலுடுத்த தாம்தொகுதி மேவமுதிர் மெய்யெல்லாம்
தோலுகுத்தா லாமரவத் தொல்கடளுன் வாலுகத்தா
லோங்கும் பரப்பெல்லா மொண்பா லுகுத்தவெனத்
தாங்கும் நிலாப்பாய்ந்த தால். (8)

மன்றல்வாய் மல்லிகையே வாளெயிறு வண்டினங்கள்
கன்றுமிடத் தாய்நறவின் கண்ணதுவாய்க் குன்றின்
முழையிற் குலாயகொட்பால் மோதிவரு தென்றல்
தழுவுபுலி சீறிவந்த தாம். (9)

கரத்தொடுங்கான் பாழிக் கடல்கடைந்த வீரன்
உரத்தொடுங்கா னுடுருவ வோங்கி மரத்தொருங்கு
சேரத்துளைத்தான் திருமார்பை மன்மதனல்
வாரத் துளைத்தாம் மலர். (10)

உடலினேயே நோக்கு முயிரடுத்து நோக்கு
மிடரினேயே நோக்குமற்று மெண்ணுங் கடலினேத்தான்
நோக்குங் கபடனுறும் நோதிடரை நோக்கும்வில்லே
நோக்குஞ் சினத்தை நுகர்ந்து. (11)

பணிபழுத்த பூணல்குல் பண்பிற் கவர்ந்த
பிணிபழுத்த பித்திஞுளப் பெம்மான் அணிபழுத்த
முத்தமைந்த செம்மணிவாய் முன்மறக்கான் தாழுததி
மத்தமைந்த தாஞன் மனம். (12)

ஆய வளவை யருக்கன் சுதனடுத்துத்
தேயவுள வென்சிர்த்த சிந்தையாய் மேயநிலே
நல்லவனே டெண்ணி நலந்தேற வேண்டுமென்ருன்
எல்லேவராக் காத லினன். (13)

Koviloor Digital Library

அவ்வழிய ஞகியுணர்ந் தாமயர்வு நீங்கியுளான்
செவ்வழிய ஞமறிவன் சேர்கவெனத் தெவ்வழிக்கும்
வீரன்முன் னுற்ருன் விரைந்து பணிந்திருந்தான்
சீரன்பின் மிக்கான் றெரிந்து. (14)

ஆர்கலிக்காம் பொன்னிலங்கைக் காமரணுஞ் சீர்நிலையு
வார்கலிக்கும் காலரக்கன் வல்லமையும் தார்கலிக்கும்
தானைகொண்ட வன்புந் தகுதியொடு சாற்றவென்ருன்
ஆனைகொண்ட வன்பினனித் தான். (15)

எழுந்தவனை வீற்றிருக்க வென்றேவி வள்ளல்
செழுந்தவனைப் பார்த்துத் தெரித்தி முழுது.
மெனத்தொழுத கையா னெடுத்துரைப்பான் முற்றும்
மனத்தொழுகு நன்மையுற்ற வன். (16)

நிலையார் வடவரைதா னேர்குலைய நேர்நாள்
தலையா ரடல்சிகரத் தாம்பேர் மலையதனை
மும்மடிதான் வாங்கியவை மூரிக் கடலினிட்டான்
செம்மனுமான் தந்தை தெரிந்து. (17)

எழுநூ ஞேசனைதா னேற்றகல மிக்கதுகிழ்
ஆழநூ ஞேசனையா மாழிவரை வாழி
யுலகை வளைந்தவண்ண முற்றமதில் சூழும்
இலகும் சுடர்க்குமெட்டா தே. (18)

மருங்குடைய வெந்திரஞ்சேர் மாண்பொறியின் மாட்சி
இருங்கடிய பேரரண மெண்ணின் கருங்கடலே
சூழு மக ழென்ருற் சொற்றரற்கு முற்றதெவை
தாழுமகத் தான்செயலைத் தான். (19)

வடதிசையாம் வாயில் வளர்ந்துன்னக் காப்போர்க்
கிடையெண் ணிருகோடி யென்பர் கடையா
முகமுடிவிற் கால ஞெடுங்கும் வலியார்
நகமுடிவிற் கால்புயத்தி ஞர். (20)

Koviloor Digital Library

மேற்றிசையாம் வாயில் விரிவடுத்த வெய்யவர்கள்
ஆற்றுமிரு கோடி யவர்க்கதிகங் கூற்றைப்
பொறிகலங்கப் பார்க்கும் புகையொடனற் கண்ணார்
நெறிகலங்க நிற்பார் நிறைந்து. (21)

தென்றிசையாம் வாயில் செறிந்துறையுந் தீயவர்கள்
எண்டெண் ணிருகோடி யேற்றமுளார் குன்றுறழும்
மேனி வரர்கொடுமை மிக்கார் நடுவனரா
சானிவரச் செய்வா ரடர்த்து. (22)

கீட்டிசையாம் வாயிலுறு கீழோரு மெண்ணிரண்டு
நாட்டிசையாங் கோடியென நாட்டநின்றார் கோட்டார்
திசைக்களிறைத் தான்பிடித்துச் சேரச் சுழற்றி
வசைக்களியாற் கூவினெற்று வார். (23)

விண்ணருகோ டிக்கண் விழித்துநிற்கும் வெய்யவர்கள்
எண்ணிருகோ டிக்கிரட்டி யென்பாரால் மண்ணிடையும்
வானோர் வருவரென மாயத்தாற் காயமறை
ஏனோர்க் கரிதாகு மெண். (24)

பிறங்கு நெடுமதிலின் பின்னடுத்து முன்னும்
உறங்கலர்க ளெண்ப துலவை கறங்காய்த்
திரிவோர் கணக்கெடுக்கிற் சேர்ந்தை யிரண்டின்
வருகோடி யென்பர் மதிப்பு. (25)

இப்படியாங் காவலர னேன்றதொரு மூன்றெனவா
மொப்படிய சீர்மை யுரைத்தலென்னே மெய்ப்பெரிய
மாநகரைக் காக்கும் வலர்மூப் பதுகோடி
யானவரை மும்மையடுத்த தாம். (26)

சிறப்பவனாற் செய்யத் திருவடைந்த செல்வர்
அஃறப்பகைவ ராமளவி லாற்றல் உறப்பெரிய
வன்பகையிற் சென்றுதவும் வன்கண்ணர்க் கெண்ணடுக்கா
தென்பதுதா னேற்றநலத் தெண். (27)

Koviloor Digital Library

விடமோ விழியென் வெகுளிநிறை கண்ணூர்
கடனே விமைத்திலராய்க் காவல் வடவரைநேர்
கோயிலுற்ற வாயின்முனர் கூறு வலமிடத்தார்
ஆயிலுற்றூர்க் கெண்ணறிய வாம். (28)

பேயினே னென்ன பிதற்றுவது பேர்த்தவன்றூன்
மாயிருஞா லத்துவைத்த மாப்படைகள் தேயினுநாள்
ஊழியடுக் கும்படைதா னேரா யிரவெள்ளம்
ஆழியடுக் கும்கரந்தா யாம். (29)

அன்றியுமே யன்று னகன்கோயில் வாயிலெனும்
முன்றிவிடை நிற்பார் முறைகூறின் ஒன்றி
யுலகெடுக்கு மூற்றத்தா ரோங்குகுன்றின் வல்லார்
நிலகெடுக்குங் கோடியெண்ணே நேர். (30)

தேர்வரைய வாமயுதம் செம்முகத்தூர் பெற்றதிறற்
கார்வரைய வற்றிரட்டி கால்வயமா நேர்வரையா
அன்னவைக்கு நேரிரட்டி யாமதின்மே லொட்டகமும்
கொன்னகத்தாம் வாயிலினிற் கும். (31)

இலங்கையர னின்னவையா யேற்றமிக்க சிற்ற
வலங்கையில்வா ளீசனிடை வாங்கும் அலங்கலந்தோள்
அன்னூன் றுணைவ ரளவடுக்கா மெய்த்தவத்தா
மன்னூன வல்லமைகொள் வார். (32)

தும்பி யுடனிரதம் சூர்பரிகா லாளுடனும்
அம்படைதா னையிருகோ டிக்கதிபன் செம்பொன்னுட்
டுள்ளசித்த ரைச்சிறையி னேயவைத்த பேயனவன்
வள்ளசிக்கைக் கும்பன் வலன். (33)

உகம்பலவுஞ் செய்தவத்தா னேங்கும் வரத்தான்
சுகம்பலவும் போர்ப்படையாய்த் தோன்றும் நகம்பல்லென்
றில்லா நரசிங்க மேற்ற வலியுடையான்
பொல்லா னகம்பனனென் போன். (34)

Koviloor Digital Library

பொருப்பாம் புரவிநிறை பூட்கையொடு தேரும்
விருப்பாம் படையனந்த மேலான் மருப்பார்
கடாய்கடவி வந்த கடுநெருப்புப வென்றான்
படாவலியா னானிரும் பன். (35)

பேயாளி யானை பெருங்கழுதை நேர்பிணித்த
மாயாத தேர்ப்படையெண் வாய்த்தவிலான் தாயாயா
வஞ்சனையின் மிக்கான் மகோதர னென்பேரான்
அஞ்சனமா மெய்யுடையா னங்கு. (36)

குன்றுறைவார் நாலைந்து கோடி படைக்கதிபன்
இன்றுளவர் நாளையிரா ரென்றெயிற்றுற் றின்றுளவன்
தேவர்களை வென்றான் திருவேள்விக் கோர்பகைவன்
பாவர்களின் முன்னிற் பவன். (37)

மண்ணிலுள்ளார் வானின் வரைவார் தமைவகுத்தால்
உண்ணவொரு நாளொன் றுளிர்படையாம் எண்ணடுத்த
நாலிருக்கும் கோடிபடை நாட்டத் தினன்பகைவன்
மாவிருக்கும் வன்னெஞ்ச வன். (38)

தேவர் முனிவர் திசைமுகனோ டும்சிறந்த
மூவர் முனிவுமஞ்சா மோகரத்தான் தாவரிய
வெண்ணிருகோ டிப்படையா னேற்றமகா பாரிசனும்
கண்ணிருகோ வைக்கனிச்சே கன். (39)

உச்சிக் கதிரா யுருத்த வெரிமுகத்தான்
நச்சிக் கடற்படைக்கு நாயகனும் வச்சிரத்தாம்
தந்தனெனும் பேரான் தடவரைநேர் சாலுடலா
மந்தனெனப் பாவமிக்க வன். (40)

அசஞ்சலம தாம்படைக ளாயிரண்டு கோடி
வசஞ்சலந்தா மென்றுவரு வாழ்வான் இசைஞ்சுவரு
வெஞ்சமத்தின் மிக்க வியனியக்கர் சோரவென்ற
தஞ்சமத்தின் மிக்கபிசா சன். (41)

Koviloor Digital Library

சில்வியெழு தேர்கரிமா சீறி வருகாலாள்
வல்லவெழு கோடிபடை வாய்ந்துடையான் வெல்லும்
கொடியவிரற் றுன்முகனுங் கோரனெதிர் பற்றார்
மடியவரா லன்றியென்னு வார். (42)

மையிருகோ லாகலஞ்சேர் வாரிபெற்ற தீவினுற்ற
வையிருகோ டிப்படைகொ ளாற்றலினுன் வெய்யான்
விலங்கடுத்த நாட்டத்தான் வீர மிகுத்தோர்
குலங்கெடுத்த தோட்டூர்க் குணன். (43)

நாமத்தி னுற்றசவம் நாளடுத்து வேறொருவர்
ஈமத்தி னுற்றடையா தேற்றெயிற்றான் நாமம்
புகைக்கண்ண னென்று புகல்வான் பதுமத்
தொகைக்கண்ணுஞ் சேனைபடைத் தோன். (44)

போர்மத்தன் மத்தன் பொருவில் படையுடைய
நீர்மத்த னுத்தபடை சேர்தலைவர் பேர்பெற்ற
வல்லமையார் மிக்க வரத்தா ராளவெடுக்கிற்
சொல்லமையா தென்றான் துதித்து. (45)

இன்னார் துணையமைந்தோ ரெத்தனையோ வாயிரம்பேர்
அன்னான் துணைவ ரமர்க்கமைந்தோர் சொன்ன
படைத்தலைவர் மேலான் பரவுபிர கத்தன்
கடைத்தொழிலிற் சிந்தையடிக் கான். (46)

சேனைமுற்றுங் காவலனுஞ் சீர்மருவு மிந்திரனோ
டேனையுற்ற வானோ ரிரிந்தோடச் சேனை
எனக்கணையால் வென்ற விகலில் வலியான்
தனக்கிணையார் சொல்லுந் தரம். (47)

தம்பியவன் முற்பகலிற் சந்திரர்கள் நால்வரெனக்
கும்பமுறு கைக்கரியின் கோடுகொண்டா னம்பொன்
மலைமதம்பட் டாலென்ன வந்தகும்ப கன்னன்
கொலைமதம்பட் டான்றேவர்க் கு. (48)

Koviloor Digital Library

கோளிரண்டைக் கொண்டசிறை கூட்டுங் குமரனவன்
ஆளிகொண்ட விந்திரசித் தாம்புதல்வன் மீளிகொண்ட
இந்திரற்கு முன்ன மிவனூற் புரிதழும்பு
மந்திரத்தோள் நிற்கும் வலித்து. (49)

அன்னவன்பான் தம்பி யதிகாய னென்பெயரான்
முன்னவன்பாற் பெற்றசிலை மொய்ம்புடையான் பின்னவன்
இந்திரனில் லாமையினூ லேற்றும் பெயர்படையான் [பேர்
கந்தரமா வில்லாள் கரன். (50)

தேவாந் தகனுந் திரிசிரன ராந்தகனு
மூவா வலியுடையார் முன்குமரர் ஏவா
வலியுடையா ரெத்தனையோர் மன்னும் புதல்வர்
நலிவுடையார் போரினுற்ற நாள். (51)

இனையதன்மை வல்லமையா ரின்னவர்க்கு மேலான்
அனையதன்மை வல்லரக்க னாற்றல் நினைவதென்னை
தேனுவந்த தாமரையான் சீர்வரத்தா னேர்வரத்தான்
தானுவந்த சீர்த்திபடைத் தான். (52)

எள்ளுதலின் மாபூத மெல்லாம் புடைசூழப்
புள்ளிமா னுடைப் புராரியொடும் வெள்ளி
மலையெடுத்த வாற்றலினான் வல்லவர்க ளேவர்
தலையெடுத்த வாற்றலினர் தான். (53)

ஆன்றதிசை யானை யடுகோடு தன்மார்பின்
ஊன்றவிசை யோடகல முற்றடுத்தான் தோளாறுமெனில்
முப்பத்து முக்கோடி மூரிவலத் தேவர்
எப்பற்று மில்லா ரிரிந்து. (54)

வெற்றிவரு வீரம் விழைகால கேயர்களைப்
பற்றிவரு வாள்கொண்டு பாறுமன்னூள் மற்றும்
இலங்கையர சென்று விடியுண்ட பாம்பிற்
பலங்கையறுந் தேவியர்கட்ப் பம். (55)

Koviloor Digital Library

ஒங்கு மன்னைகக ரொன்றங் குபேரனவன்
தாங்கு வளமையொடு தன்மானம் வாங்கா
திலங்குபுட்ப மான மிரண்டும்விட்டுச் சென்றான்
இலங்கைவிட்டுச் சிந்தை யிரிந்து. (56)

புறங்கொடுத்தா னந்தகனும் போற்று மிரவி
இறங்கு மொலியிலங்கை யேற்கா தறங்கெடுத்த
மன்ன னிராவணனால் மாற்றரிய பாசம்போய்த்
துன்னும் வருணன் துயர்த்து. (57)

என்றுலக்கச் சொல்வே னிராவணனென் றேற்றமுற்ற
குன்றலக்குந் தோளான் குறித்தகொற்ற மின்றுலக்க
நாளை யுலக்ககச்சின் னாட்சென் றுலக்கினுந்தான்
ஆளுநினைக் கன்றியெவர்க் காம். (58)

ஈடுபட்டா ரெண்ணிலவ ரேற்ற மிகுமெழுவாற்
பாடுபட்டா ரெண்ணிலவர் பாங்கரக்கர் கூடும்
தரக்கடும்போதாடுபட்டதாழ்விற் றளர்ந்தார்
உரக்கடும்போர் மாருதியா லோய்ந்து. (59)

காய்த்த சினத்தரக்கர் காருடலில் வார்குருதி
நீத்த மலைகடற்குநேர் நெருப்பாம் வாய்த்தவக்கன்
றன்னைக்கு மார்க்கனைத்தன் றாளமுத்தித் தேய்த்தகுழம்
பின்னைக்கு மாமிலங்கை யில். (60)

சேனைக்கு நாதரைவர் தேவர்க் குயிரோடு
வானைக் குமைக்கு மறவோர்கள் தானையொடும்
ஆனைக்காற் பட்டசெல்லா யானு ரவர்வலிமை
ஏனைக்கா மென்ன விழிந்து. (61)

எங்குலத்தோ ரெண்ப தெனுமா யிராரிறைவர்
கிங்கரப்பேர் கொண்ட கெடியுடையார் சங்கரற்குத்
தோற்றமுப்பு ரத்தரெனத் தோன்றி யழிந்தார்கள்
ஏற்றமெப்பு ரத்து மிழிந்து. (62)

Koviloor Digital Library

வெம்புமிகச் சேனையடல் மேவிப் பொற வெகுண்டான்
அம்புமிக நம்பிபுயத் தாக்கியே வம்புமிகு
கூற்றினாற் கின்னாக் கொடுத்தசம்பு மாலிதலை
மாற்றினான் வின்னாண் மடுத்து. (63)

சொன்னமுற்றா மன்னிலங்கை சூழ்பரப்பி லேதுகைத்துச்
சின்னமுற்றார்க் காங்கணக்கைத் தேர்ந்தவரார் பின்னமுற்றார்
நெய்த்தோ ரடுத்து நெருப்பை யவித்ததென்றால்
மெய்த்தோ னடற்கென் விதம். (64)

விலங்கல்வெந்த வீரம் விளம்புவது மென்னை
அலங்கலொடு சாந்த மணிந்த நிலையில்
இலங்கை யரசனவ னேழுநாள் வானில்
நலங்கொள் விமானத்தி னன். (65)

திண்டிறலா ரவ்வரக்கன் செய்கை யிலங்கைவளம்
கொண்டிருந்த வான்பெருமை கூறினேன் பண்டாக
வல்லரக்க னேவலினால் வந்துபடைத் தான்பிரமன்
எல்லிருக்கு மின்னகரை யேய்ந்து. (66)

காந்துங் கணையாற் கரன்முதலோர் காமர்கவி
வேந்தும் விளிந்த விதங்கேட்டு மேந்திலங்கை
தீர்ந்தசெயல் கண்டுஞ் செருமுருக்கிப் போந்தகண்டு
சேர்ந்தசெய லென்றான் சிறந்து. (67)

கேள்கொண்ட வண்ணல் கிளத்து பொருள்கேட்டான்
வாள்கொண்ட கண்ணிபிரி வான்வருந்து தோள்கொண்ட
தாமெலிந்த தீர்ந்தான் தகுதி யனைப்பார்த்து
நாமலிந்த நற்புகழ்சொன் னான். (68)

கூட்டினார் சேனையொரு கூறதுவோ மேற்கொன்றாய்
ஊட்டினாய் தீமுற்று மொன்றுண்டோ வாட்டமுற்ற
சீதைதனை மீட்டாச் செயலெனது வில்வீர
மேதைதனைக் காட்ட விழைந்து. (69)

Koviloor Digital Library

நின்செய் புயவலியி னேரிலங்கை பாறவந்தோம்
பின்செய் செயலென்னை பீடுபெறும் பொன்செய்யும்
தோளுடையாய் போர்ப்படையாற் றேன்றியினி யாம்புரியும்
ஆளுடைமை யென்னு மவண். (70)

என்னதெனச் செய்யு மிராவணன்றன் வல்லமையும்
உன்னதெனச் செய்தா யுயர்வலத்தாய் மன்னுலகம்
முன்பதத்தா லாக்கும் முதல்வன் பிரமற்கு
மன்பதத்தை நிற்களித்தே மால். (71)

என்றுவள்ளல் கூற வெழுந்திறைஞ்சி நாணினொடு
மென்றுமுள்ளா னின்றான் எழும்தவத்தான் நின்றவெள்ளம்
கோடரத்தார் கூறரசும் கொண்டபுகழ் கேட்டுவள
வீடறத்தா ரானார் விழைந்து. (72)

இலங்கை கேள்விப் படலம் முற்றிற்று.

வருணனை வழிவேண்டு படலம்.

தொடக்குமெனின் மூவுலகுந் தோளாற்ற லாலே
அடக்குமென வோர்பொருள தன்றால் கிடக்குமலை
வண்ணக் கடலை வளச்சேனை தாண்டும்வகை
எண்ணக் கடவதென்றா னேய்ந்து. (1)

கரந்த நினதுதரங் காணுங் கடல்தான்
பரந்த நினகுலத்தார் பண்பால் வரந்தருமிம்
மாக்கடலை வேண்டி வழிக்குச் சரணமுற்றால்
தாக்கடலாற் றரி தரும். (2)

நன்றிலங்கை நாத னயத்த மொழியென்று
ஞொன்றிலங்கு தன்றுணைவ ரோங்கிவரச் சென்றிலங்கு
வேலைதனைச் சேர விசும்பிற் சிவந்தகுன்றின்
பாலடுத்த சூரன் பரி. (3)

Koviloor Digital Library

கொழுங்கதிர்க்குச் சேர்ந்த பகைக் கோளிருள்போய் நீங்கச்
செழும்பிறையைக் காரரவு சேர்ந்து விழுங்கிவிட்ட
காலத்தைப் போலக் கவினுங் கடலுலகு
கோலத்தைப் போற்றிவிளங் கும். (4)

தருணமங்கை சேரத் தருநெறிய தென்னும்
பொருணயந்து நூனெறியாம் புல்லின் கருணைக்
கடல்சரண மென்றான் கருங்கடலை நோக்கி
அடல்வருண மந்திரத்தை யாய்ந்து. (5)

பூழி முகமுருவிற் போர்க்க வினன்கதிர்கள்
வாழி முகம்வருட வாய்வளர்ந்தான் ஊழிபகல்
ஒப்பனவா யோர்பகலு மோரேழு சென்றடுத்தும்
அப்பனகன் வந்ததிலை யாம். (6)

ஊற்றமிக்கப் பற்றுகட லுண்டில்லை யென்றுரைக்கும்
மாற்றமிக்கப் பெற்றிலமென் வார்த்தையென்றான் ஏற்றும்
புனலிற் கனல்மூளத்த போற்சீற்ற மிக்க
கனலிற் சிவந்தனகண் கள். (7)

மாண்டவில்லை யில்லேன் வழிவணங்கி வாழ்த்தலொடு
வேண்டவில்லை யென்றொளித்தல் மேலாமென் றாண்டவில்லி
கண்சிவந்த நாணாற் கவின்வில் லெனக்குவிந்த
வண்சிறந்த வானபுரு வம். (8)

ஒன்றும் விரும்பா ரொருவ ரிடையொன்று
சென்று விரும்பிற் சிறுமையா மின்று
வழிவேண்ட வில்லையெனும் மாற்ற நலமென்று
விழிபூண்ட செம்மை வெறுத்து. (9)

பாரமில்லா வில்லன் பழியுடையி ராவணனற்
தாரமில்லா னெல்லுந் தகைமையால் வீரமில்லான்
என்றெடுத்த வேலைக் கியம்பு மெனதுதரம்
நன்றெடுத்த வேலையிற்றா னும். (10)

Koviloor Digital Library

புரந்து கொளல்புகழாற் போற்றல் பொருது
தூரந்துகொளல் தொன்மை தொடர்ந்த விரந்தடுத்துக்
கொள்ளுதலி னன்றும் குறித்த களவடுத்தல்
எள்ளுதலென் னென்று னெடுத்து. (11)

கானிற் புகும்பலாற் காய்கந்தந் தின்றதனால்
ஊனிற் புகும்பலனென் றுட்கொண்ட மீனர்
கடற்பெருமை கண்டார் கருதுவலி யில்லேன்
அடற்பெருமை காண்ப ரடுத்து. (12)

ஏதமஞ்சிக் கேட்ட தெளிதென் றிகழ்ந்தவிந்த
வோதமஞ்சி னேடிரண்டு மோய்ந்துகவே பூதமஞ்சும்
போற்றவடற் சேனைவளம் புன்னெறியில் லாதுசெல்க
ஏற்றமுட னென்று னிரித்து. (13)

மறுமைகண்ட ஞானி மகியில் வறினும்
வெறுமைகண்ட பின்னர் விரும்பார் குறுமைகண்டோர்
தீயெனினுங் கூசார் சிறுமை பெருமைகண்டு
மாயுமன்றி மற்றெதினு மால். (14)

திருதியென்ப தொன்றிழியச் சேருழி யிற்சேர்
பருதிமண்ட லத்தன்முகம் பார்த்துத் தருதிவில்லை
என்னுந் தரத்தி லிலக்குவனுந் தந்தடுத்தான்
மன்னன் கரத்தின் மதித்து. (15)

வாங்குவலத் தாம்சிலையான் மன்னும் புயவலியான்
வீங்குவலத் தாம்கோதை வெவ்விரலிற் றாங்குவலன்
நாண்தாக்கி னன்தமரம் நண்ணிமுக்க னன்தேவி
விண்தாக்கு மூடல் விட. (16)

மாரிப் பெருந்துளியின் மன்வரம்பி னல்வடித்த
சீரிதெவற்றன் தெரிந்துமிக்க பாரிற்
புனலைப் பருகும் பொருவில் கதிராம்
அனலைத் தருசரம்விட் டான். (17)

Koviloor Digital Library

பெரியவரை யேழின் பெருவலியைப் பெற்றவ்
வுரிய சிலைபிறையி ஞேங்கத் திரிவசிற்ப
யாவு முடிவடுதீ யாகக் கணைசொரிந்தான்
தேவு முடிவடுவான் றேர்ந்து. (18)

மீனினொடு நாகம் விளங்கு மலைவிரகாய்
ஏனைசிற்ப யாவு மெரியெய்தப் பேனநீர்
நெய்யாய்க் கணைநெருப்பாய் நேருந்தீக் குண்டமொத்த
செய்யாக் கடலம் சிறந்து. (19)

பாழிச் சிலைகால் பகழி யெறிகடல்கள்
ஏழும் யெறிபுகையோ டெயதியே யூழி
நெருப்பாய்ப் புகுந்து நிகராழிக் கப்பால்
இருப்பா மிருள்போக்கு மேய்ந்து. (20)

மருமமெரி யுண்ட மகரம் மயங்கிச்
செருமவான் கற்பக்முந் தீய நிருமியா
விட்டகணை பாய்தலினல் வீழ்நெருப்பி னேடுருமு
பட்ட கடற்றுளியும் பர். (21)

கூடு மனல்கொளுத்தக் கேவார் குயின்பொரிந்தே
யோடும் பொரியா யுகுந்தவும்பர் ஆடும்
மடவார் குழல்வெளுக்க மன்னுதீ மேலே
படவாம் புகையும் படிந்து. (22)

நிமிர்ந்த நிறையேய் நிறம்படலும் நெயத்தோர்
உமிழ்ந்துலர்ந்த மாமகர மொன்றே திமிங்கிலங்கள்
துண்டங்க ளான துணியுங் கருங்கடலின்
அண்டுந் திமிங்கிலகி லம். (23)

நிறடுத்துச் செல்நெருப்பா நேர்பொருப்பெ லாமெரிய
நூறடுத்த கோடிகணை நூக்கலினல் ஆறடுத்த
ஆமளறு பட்ட வளக்க ரதுகாந்தித்
திமருவுஞ் சேடன் சிரம். (24)

Koviloor Digital Library

மொய்த்தடுத்த மீனம் முருங்குமொழி பொய்ச்சான்று
நத்துகுல மாய்க்கணையி னூலெரிய வுய்த்தகொடும்
கூம்புடனே யுங்கலத்தைக் கொள்ளுங் கடனடுவின்
மேம்படுமெம் போடோடு மீன். (25)

சிந்துங் குருதி செறியுங் கனலாக
வந்திவா னுைத்த வளக்கரிடை பந்திபந்தி
யாகக் கணைபடர வந்தில்வெந்து தீந்தனவாம்
சேகுற்ற மீன்கள் சில (26)

வையமுற்ற வுண்டவரன் வாளிவளைத் துக்குடிக்க
வையமுற்ற நீரா யனல்மடுக்க வெய்ய
கடல்மெய் யகலாக் கருதுசில மீன்கள்
உடல்நெய்யில் வெந்தனவொக் கும். (27)

குணிக்காப் பகழி குருதி மடுப்பக்
கணிக்காப் புனல்குடிக்கக் காந்து மணிக்குப்பை
மாக்கடல்தான் வெந்து மருவுந் தழல்சொரிந்த
தேய்க்குமொழி யெங்கு மிடும். (28)

அதிர்கணைக ளொன்றை யொன்றை யண்டியெரி யுய்ப்ப
வெதிர்கா னெனவெந்த மீன்கள் பொதுவில்
உயிர்கள் துணிய வுதிரம் திரையும்
உயர்வாய்ப் பொருவனபோ லும். (29)

அண்ணல் கணைக ளறுக்க வெழுந்தளக்கர்
பண்ணைநீர் தீயினுைடும் பாறியே மண்ணில்
மரமுற்று மெண்ணைபட்ட மாண்பி னெரிந்த
கிரிமுற்று நண்ணிக் கிளைத்து. (30)

தெய்வத் திறலான் சிறந்தகணை நான்முகத்தோன்
வைவிற் பிழைப்பின் மனத்துமுற வெய்ய
நெருப்பிற் பொலிந்தெழுந்த நீர்தா மரைசேர்
உருப்பிற் கடல்குளமா கும். (31)

Koviloor Digital Library

செப்புவஃதுஞ் செவ்வியர்கள் சிறிற் சிறப்பாதல்
தப்புவதோ கண்டோம் தணியாத வுப்புக்
கடலாம் பழிநீங்கக் காணவரு மப்புக்
கடலாதல் கண்டோங் களித்து. (32)

தாரையுண்ட வண்டமெலாந் தானே தணித்தடுத்து
வாரியுண்ட வற்கோர் வலியாமோ பாரைமண்டி
யுண்ணும் புனலை யொடுக்கு நெருப்பென்ன
எண்ணும் பொருளா யின. (33)

மங்கலஞ்சேர் நற்றவத்து மாதவர்கள் போதமுடன்
கங்குலுஞ்சே ரெல்லும் கடலுறைவார் அங்கம்வெந்தார்
ஆகா தவனடியை யண்டுமெனத் தாரதனுல்
ஆகா தவர்பா வனல். (34)

தென்றிசை மேலைத் திசைமுதல திக்கனைத்தும்
துன்றும் புகைப்படலஞ் சுற்றலால் கன்றும்
நிறத்தாற் பகலோ னிரல்பரியுந் தாரி
நெறித்தா யடுக்காது நேர். (35)

பிறிந்தோர்க் குறுபொருளின் பெற்றி யுணர்வோர்
அறிந்து மறியாரென் றுய்ந்து செறிந்ததம
பேடைகளைத் தேடிப் பெருந்தீக் கொளமறிந்த
கூடிவரு வான்புட் குலம். (36)

கமையில் கடலிற் கனலி பரந்த
அமையும் புகைசுற்ற வாங்கே யிமையோர்
இமைத்தனர்கள் கண்ணை இயலா வியர்ப்பும்
சமைத்தனவா மேனி தமில். (37)

பூச்செல்லா தாமிடத்திற் போஞ்செயலில் லாததனுல்
ஏச்செய்து மன்ன மெவைவயுந்தாம் மீச்செல்
நெறியகல வீழ்ந்த நிறைநீர்க் கடவுள்
வறியபுகழ் போல வரைந்து. (38)

Koyiloor Digital Library

பம்பு கடலாம் பறவை யினமெல்லாம்
அம்பு கடவா தடுத்தலா லம்பரத்தி
னேக வரிதா யெரிந்துவரு மெய்யுடனே
சோகமொடு வீழ்ந்த துடித்து. (39)

பட்டன வன்றிப் படாதன புட்குலங்கள்
சுட்ட வெரிப்படலஞ் சுற்றலா விட்ட
விடத்தை யறியா திரிந்துமுட்டை யென்று
கடுத்தமுத்தைக் கொள்ளுங் கரிந்து. (40)

வள்ளல்தர முள்ளீர் மனித னெனமதத்தால்
எள்ளலுற்ற தெண்ண மிலையாலென் றுள்ளியதாய்
வெண்பற் களைக்கிழித்து விணணடுத்துத் துள்ளினவாம்
நன்பிற் குரங்கு நயந்து. (41)

தாக்கடல்செய் தீமை தமையுடைய தன்மையார்
மாக்கடலிற் சேர்ந்து மறைந்துறைவார் தூக்குருதி
வேலவுணர் துஞ்சினர் மேலாங் கிரிபோலக்
கோல மிதந்த குறித்து. (42)

தசும்பு விரிந்தவெனுந் தாரை யுருகிப்
பசும்பொன்னு மானமுடன் பாய்ந்த வசும்பின்றி
வானம் வறந்தனவா மாக மதிற்றேன்று
மீனும் வறந்துவெந்த மேல். (43)

செறிவுற்ற செய்கையெனத் தீயோம்புஞ் செய்கை
நெறியுற்ற தாந்தவத்தி னீண்ட வுறஞ்சேர்
குடமதுற்று வந்த குறுமுனிவன் போலக்
கடல்குடித்த கூராங் கணை. (44)

மோதலங்கா ரக்கடரூன் முற்றவரு தீயாற்
பூதலங்கா வோடெரிந்த பொன்மதிலும் வேதலுந்தான்
முன்பாகுந் தூதன் முழங்குதீ வைத்தனனே
வென்பா மிலங்கை யெரிந்து. (45)

Koviloor Digital Library

அருக்கனென வொளிசெய் யாடகத்தாம் கோடும்
உருக்கினவாய் நெய்த்தோர்பாய்ந் துற்ற முருக்காய்ச்
சிவந்த முளரியெனத் தீயாற் பவளம்
குவிந்த கரிக்குவையா கும். (46)

பேரிடத்த கோடாய்ப் பெருத்து வருமீன்கள்
ஓரிடத்து மோடி யொதுங்கிலா நீரிடத்துச்
சேருற்ற மீனமெலாஞ் சிந்தைநொந்து தீயதனாற்
பாரிற் குதிக்கும் பதைத்து. (47)

சுருளும் திரையைத் தொலைத்துண்ட தீதான்
பருகப் புனலின்றிப் பாரும் மருளப்
படர்வனவாய் நாகர்வைப்பும் பாயிருளைத் தின்ற
சுடரிரவி யென்னத் துடர்ந்து. (48)

கருங்கடல்க ளோடுலகங் காச்சி யதனும்
இரும்பாகிக் கீழி னிழிவ அரும்புறத்தாம்
அண்ட முருவியதி னப்பாற் புறக்கடலும்
கொண்டடுத்துப் பின்போங் குறித்து. (49)

திடர்திறந்து கோட்டுமணி சேணிலத்தின் மண்டி
யுடல்திறந்து வந்தகறை யொத்த கடல்திறந்தும்
எங்கணுந்தான் வற்றவதி னேற்ற கடல்சூடல்போற்
பொங்குமரா வெங்குமலம் பும் (50)

ஆழிப் புனல்தீர வாகு [1]மடல்களட்டும்
பேழைக் கிணையாம் பெருங்கடலுன் பூழையதிற்
பன்னுங் கணையுருவப் பன்மூழை யிற்பொலிந்த
மன்னும் முரல்வெள் வளை. (51)

சூடுபெற்ற வையன் தொலைக்கவரு மன்னுயிர்கள்
வீடுபெற்ற தாமிடைந்த வேணுவினும் காடுபற்றி
நாடும் பெருங்கனலி நண்ணி யுவரியெலாம்
ஓடியுற்ற நீரி னுகந்து. (52)

1 மடல் - நந்து.

Koviloor Digital Library

காலத் தடுத்த கடுங்கணைகள் சுற்றுதலால்
நீலத் துகில்நீக்கி நேர்பூவின் கோலத்
துகிலுடுத்தா ளென்னத் துலங்கும் பெரிய
மகியெனச்சொன் மாறு மகிழ்ந்து. (53)

கற்றவர் கற்றவர் காணு வுணர்வுடைய
கொற்றவன் பாணங் குறித்தகடல் நிற்றல்
அரிதா மெனவே றளக்க ரடுத்த
பெரிதாம் வடவை பெயர்ந்து. (54)

வாழி யுலகை வளைத்துமேல் வானினுறச்
சூழும் கடர்ப்பிழம்பு தோன்றலால் ஊழி
தனிலுலக முண்ண வெனச் சார்ந்தோங்கு மாழி
தனையடுத்த வாழியன்று டான். (55)

எனையர்க ளெண்ணுவதென் எங்குலகி னீண்டினு
ரானவர்கள் செய்கை யறைவதுண்டோ மேனிமிர்ந்து
காலக் கனலாற் கடவுளர்சென் றூர்பிரமன்
கோல வுலகைக் குறித்து. (56)

இடுக்கினும் சொல்லெ னிகல்வருணன் றன்னை
முடுக்குவே னென்று முனிந்து தடுக்காச்
சதுமுகந்தன் பாணந் தனைத்தொடுக்கக் கொண்டார்
கதுமெனத்தான் தேவர்நடுக் கம். (57)

மழைக்குலங்கள் கன்ற வருணன் கதறி
யழைக்கு மொலியுலகி னுகப் பிழைக்க
வறிதா மெனவுலக மாங்கு நடுங்கும்
பெரிதாம் பயத்திற் பெயர்ந்து. (58)

அண்டநெறி யப்பாலா மாழி கொதித்ததெனிற்
றெண்டிரையைச் சொல்வதென்னை தேவர்சென்னி பண்டை [நாள்
கங்கை பதைத்தாள் கமலன் கமண்டலநீர்
சங்கையிலை யாய்க்கொதித்த தாம். (59)

Koviloor Digital Library

இரக்கமுற்ற தாலுலகை யின்றளித்து மீளக்
கரக்குமண்ணல் சிற்றவுரை கண்டும் வரக்கருதல்
தாழ்ந்தா னரக்கர்க்கும் தாழ்ந்தான் வருணனெனச்
சூழ்ந்தார் பெரியோர் துயர்த்து. (60)

உற்றேன் கனந்தா வுலக மனைத்தினையும்
பெற்றேன் முனிந்தாற் பெறுவதெவன் குற்றமொன்று
மில்லாதார் மேலு மிசையுமெனப் பூதமெலாம்
கல்லாதா னென்ற கடுத்து. (61)

எழுசுடரோ னேங்கு மெரிபுகையி னேடி
வழிதெரியான் மண்டி வருணன் அழுதழிந்தான்
அன்பா லுருகி யடுத்துத் துதித்தருள்சேர்
மன்பாலி னுஞன் மருண்டு. (62)

கோனீ நினைந்ததனைக் கொண்ட கடன்முகட்டி
ஞனே னறியே னளித்தியெனத் தானே
எரிப்படலை சூழ்தரங்கத் தேவருந்தி வந்தான்
பொரிப்படலை பேர்ப்பப் புகைந்து. (63)

வந்தான் வளர்தருவான் மால்சரணம் வாயினிடைச்
சிந்து மொழியன் திகைத்தநெஞ்சன் வெந்தழிந்த
மெய்யன் புகைப்படல மீது மெரியினுடன்
எய்துங் கடலுக் கிறை. (64)

நவையற்ற நல்லுலக நாயகனி சிறின்
அவையம் சரணமன்றி யாமோ வினைவதான்
உனக்கரிதோ வென்ன வுரைக்கு மொழியன்
மனக்கவலை கொண்டடைந்தான் வந்து. (65)

ஆழியனல் நீயே யல்லவையெல் லாம்நீயே
ஊழி யுலகு முயிர்நீயே வாழியாய்
நின்னை மறப்பதுண்டோ நேர்ந்தே னெருப்பினிடை
யன்னைமறக் குந்தனைய ஞர். (66)

Koviloor Digital Library

காட்டுவா யெவ்வுலகுங் காத்துக் கடைச்செந்தீ
யூட்டுவா யுற்கடுக்கா தொன்றுண்டோ நீட்டுவான்
பாணமொன்றி னெவ்வுலகும் பற்றவடு வாய்பெருமை
காணவரல் நாயடியேற் கா. (67)

சண்டக் கிரணத்தாற் றூக்கிருளைச் சாய்த்துவரு
மண்டிலத்தாஞ் சோதி மறைவாழ்வே பண்டை
கராசலத்தைக் காத்த கருணைக் கடலாம்
புராதனனே போற்றி புகல். (68)

அன்னைநீ யத்தனுநீ யல்லவையெல் லாநீயே
பின்னுமுன்னு மாகும் பெருமானீ யென்னை
யிகழ்ந்ததென வெங்கணுண்டா மேற்றவுனை நீயே
புகழ்ந்தறியா யெற்கென் புகும். (69)

பாயிருளைச் சீய்க்கும் பருதி யெனுமாலை
ஆயி னடியுறையி னுகவைத்து மாயிரமா
நாமத்தா யென்பிழையை நாடாது காத்தியென்றான்
சேமத்தாம் பொற்சரணஞ் சேர்ந்து. (70)

பருப்பதந்தான் வேவதெனப் பாடெரியி னின்றான்
உருக்காட்டி னுபயத் தோங்க நெருப்புற்றுப்
பொங்குபா னீருற்ற போலச் சினந்தீர்ந்தான்
மங்குலா மேனி வரன். (71)

ஆறினு மஞ்ச லளித்தோ மபயமுன்பாற்
றேறினுமஞ்சலிசெய்தேமடுக்காய்சீறுமா
கண்டலத்த செய்கை கருதி வரலென்னென்றான்
கொண்டலொத்த மெய்யான் குளிர்ந்து. (72)

பார்த்தனிலு மிக்க பொறைப் பத்தினியாட் குற்றதனை
வார்த்தையினுற் றேர்ந்தன்றி வந்ததிலை போர்த்தொழிலை
மீனடுத்துச் செய்ய விலக்கப் புகுந்ததனுல்
யானடுத்துத் தேறே னகத்து. (73)

Koviloor Digital Library

என்றதுகேட் டைய னிரங்கி யதுநிற்க
பொன்றலிலாப் பாணமடப் போக்கென்றான் நன்றாம்
வருண னெடுத்துரைப்பான் வள்ளலடி போற்றித்
தருணமென நெஞ்சு தளர்ந்து. (74)

மன்னமரு காந்தார மாந்தீவின் வாழ்கொடியர்
அன்னசத கோடி யவுணருளார் பன்னும்
உலகங் களுமெனக்கு மோங்கு பகையா
ரிலகும் கணைக்கா மிலக்கு. (75)

தேடிக் கடவுளருந் தேறாத் திருவடியான்
கோடிக்கு மேலார் குலங்களொடு மோடியுட
னூறிவர விட்டா னொடிவரையி னூறிவந்த
தேறினரைக் காத்தகணைத் தே. (76)

ஆய்வினைய ராகி யறம்பிழை யார்க்கெல்லா
மேய்வுநல னேயா மிறுதியெங்காம் மாய்வினையைச்
செய்ய வருணனிடை சேர்சீற்றம் தீவினையார்
வெய்யவரைத் தீர்த்த விரைந்து. (77)

பாபத்தாம் பற்றலரைப் பல்காதம் பற்றிமுற்றுந்
தாபத்தாந் தியாற் றொலைத்ததுவாந் தீபத்தாம்
ஞான முனிவர் நவிலவரு சாபமெனக்
கான முளரிக் கணை. (78)

நன்றாக்கஞ் செல்லபய நாடு முனக்களித்தேன்
குன்றாக் கடற்றண்டிக் கோநகர்சென் றென்றும்
பழிதருதீ யொத்த பதகர்த் தொலைக்க
வழிதருதி யென்றான் மதித்து. (79)

ஆழ மகல மளப்பரிதா மெற்குமைய
வேழடுக்கு நல்லுலகா மெல்லையில்லை வாழியாய்
வற்றவைக்க வென்றால் வரம்பில் பகலடுக்கும்
வெற்றிமிக்காய் செய்தல் விளம்பு. (80)

Koviloor Digital Library

கல்லையொட்டிச் செய்யிற் கணக்கி லுயிர்மாளும்
ஒல்லையிட்ட தொன்று மொழுகாம லெல்லையிட்ட
காலமெலா மேந்துங் கடமையேன் சேதுகட்டி
வேலையெனச் செல்ல விரைந்து. (81)

நன்று புரிதும் நளிர்கடலி னுப்பணின்றே
குன்றுபுரி சேது குயிற்றுதிரா லென்றுரைத்து
நின்று னனக ளிரந்த வருணனுடன்
சென்றான் கடலிற் சிறந்து. (82)

வருணனை வழிவேண்டு படலம் முற்றிற்று.

சேதுபந்தனப் படலம்.

அளவி லறிஞருட னன்றரக்கர் கோமாற்
கிளவலொடு தேர்ந்தாங் கினிதாம் விளைவ
மதித்து நளனை வருகென்றான் வெள்ளம்
கதித்த கவிநாய கன். (1)

வந்தனையான் தச்சன் மவுலி தரவணங்கிச்
சிந்தனையா தென்னத் திரைக்கடலைப் பந்தனைதான்
செய்யப் பணிநமக்குச் சேர்ந்த தெனவவனும்
உய்யப் பணிந்தான் உவந்து. (2)

காரியன்ற மாகடலைக் கட்டல் கடமையது
சூரியன்சேய் சொல்லிற் றுணிவென்னை மேரு
வனித லணுவுடனே யாங்கணையும் வண்ணம்
வனிதமொடு செய்வேன் வரைந்து. (3)

இளவ லிறைவ னிலங்கைவள வேந்தன்
அளவளவா நம்மரசு மல்லார் வளையுங்
கடலடைக்க வென்னக் கருதிவரு சாம்பன்
உடனடுத்துச் சொற்று னுவந்து. (4)

Koviloor Digital Library

கருவரைகள் காதங் கணக்கி லதனை
இருவரைதோள் சென்னிமிசை யேந்தி யொருகடலை
உற்றடைக்க மற்றை யொழிகடல்கள் வந்தனபோற்
கற்றெருடுக்கும் வானரமாக் கள். (5)

பேர்த்தனவா மாமலையைப் பேர்க்கப் பெரிதுமெண்ணி
ஈர்த்தனவாஞ் சென்னிமிசை யேந்தியே தூர்த்துச்
சிலகடுகிச் சென்ற சிரித்தாடிப் பாடி
அலைகடலிற் கூடு மடுத்து (6)

காலிடையி னொன்றுமுட்டிக் கையி லொருமலையை
மேலிடைய வாங்கிவரு விண்டினொடு சூலிடைய
மாலிடைய வீங்கி மருவு சிகரவரை
வாலிடையொன் ருக்கி வரும். (7)

முடுக்கினுந்தான் தாருமென மூன்றடுத்த கோடி
எடுக்கினுந்தா னோர்கரத்தி னேந்தி யடுக்கிநின்று
தன்புலமை காட்டித் தனியா ழியைநடுக்கும்
நன்புலமெய் நாட்டும் நளன். (8)

மஞ்சைநகு மாமலைகள் வானரங்கள் தாமுடுக்க
விஞ்சைநளன் தாங்கி வியந்தடுக்கும் தஞ்சமுற்ருேர்த்
தாங்குமுத்தை யாசேய் தருராம ஞதவள்ளல்
ஓங்குபுக ழென்ன வுகந்து. (9)

சயக்கவியைச் சார்தலைவர் தாளான் முடுக்கும்
வியக்குமலை முன்றில் விளங்கும் நயக்கும்
முகிற்குலங்க ளோடவைம்பால் மொய்ம்பியக்கர் மாதர்
நகிற்பெருமை யாரோடி னர். (10)

வேருடைய தாங்கிரிகள் வீசுந் தலைவர்களால்
ஓரிடத்தின் மேலொன்றி னொன்றபொறி நீரின்
அருண நெறிப்பாலி தாருடைய தென்று
வருண னிரியு மலைத்து. (11)

Koviloor Digital Library

ஆநிறத்தாங் கண்ணா னழகாங் கரத்தெடுத்துக்
கானுர் மலைவீசக் கார்க்கடலூன் தூநிறத்த
முத்தினங்க ளுந்துளியு மோதிவரல் வானுடுவிற்
றொத்தியதின் மாறுகொண்ட து. (12)

சிந்துரக்கல் வீசச் செறிந்த வதுசேணில்
வந்துரத்த முத்தமது வார்ந்திடுதல் அந்தரத்தில்
மாமுகிலா மாடையா வந்தடைந்த பந்தரொத்த
கோமருவி யெங்குங் குளிர்ந்து. (13)

வேணுவுற்ற மால்வரைகள் வீச வுறுதிவலை
சேணினுற்ற தால்நனைந்த செந்துகில்பூண் பாணிபெற்ற
அல்குலொத்துத் தோன்ற அளவற்ற நாணமுற்றூர்
வல்தனத்து வானமட வார். (14)

தேனிவருங் கானவரை சேருந் திரைக்கடலிற்
தானிமிர்த லாற்குவிந்து தள்ளும்நீர் மேனிமிர்ந்த
வான திவலை வரைந்துமேன் மீளுதலால்
வானவர்க ளூட்டு மழை. (15)

மையார் மலைகடலின் வந்துவிழச் சிந்துரத்தை
வெய்யமக ரம்பற்ற மேனாளின் பொய்கை
இடங்கரடக் கைதூக்கி யீசன் கழல்சேர்
கடங்கரட யானை கடுத்து. (16)

அசும்படுத்த தேன்பூவு மாரமகில் மற்றும்
விசும்படுத்து வேரி மிடைந்து தசும்படுத்த
வாசங் கலந்தநீர் மானும் பசும்புலால்
வீசுங் கடலு மிகுந்து. (17)

தேமுதல காய்கனிகள் தெய்வ விரைமருவு
பூமுதல மீன்கொள்ளப் புக்கதன்றே மாமுதல
வாந்தருவோ டொக்குமலை வாழ்க்கை குறைந்தாலும்
தாந்தருகை யேங்கவரா தாம். (18)

Koviloor Digital Library

மண்ணுற்ற சேறுபுக்க மாமலைகள் காய்போது
கண்ணுற்ற கவ்வுங் கயல்முதல வெண்ணுற்ற
மீன்வறிய வாக்கினவாம் மேலாம் பொருணல்கும்
பான்மையிலா லோபியரொப் ப. (19)

கறங்கிற் றிரியும் கவிகடங்கள் போடப்
பிறங்கும் பெரும்பாந்தன் பேரா துறங்குவது
கேடுற்றா லுந்தெரியாக் கீழோர் தமைப்போலக்
கூடுற்ற வாகும் குறிப்பு. (20)

இழையாத மின்னி னெயிற்றினங்க ளெய்தப்
புழையாங்கை யொன்றொன்று போக்கித் தழையுடைய
குன்றின்மழை போற்பொருத கோல மொடுகடலின்
நின்றமக ரங்கயத்தை நேர். (21)

பொன்ற வருகொஞ்சப் புண்ணியத்தி னாரென்னக்
குன்று வியப்பக் குலவுதலால் ஒன்றினொன்று
மேலே யுகைத்தெழுந்து மேலுமும்பர் நாட்டிடமும்
கோலிவளைக் குஞ்சிகரங் கொண்டு. (22)

கூரெயிற்றுக் கோண்மா குறித்தசுர வாற்கொல்லப்
போருடைந்த சிங்கம் புலிப்போத்தும் நீரிடையிற்
தோற்றதுதான் தன்னிலையிற் றோலா வலியினர்க்கும்
மாற்றுமிடத் தென்னா மதிப்பு. (23)

ஒள்ளியதோர் நல்லுணர்வி னாற்றோ ரெனவொன்றோ
வள்ளியர்செல் வம்முதவு மன்னுயிர்க்குத் துள்ளிக்
குதித்தகுவட் டிற்றாங்கும் கோற்றேனை மாந்தி
மதித்ததுவா மீனினங்கண் மற்று. (24)

மூசு மெரியா முடுக்கு மலைதன்னால்
மீசொரியுந் தேனுகுத்த மேன்மலையின் வேய்சொரியும்
முத்தினுக்கு நல்விருந்து முந்தித் தரவிருந்த
நத்தினுக்கு முத்து நகைத்து. (25)

Koviloor Digital Library

விண்டலத்தி னோடு மிகுவரையை வேரோடும்
கொண்டடுத்த வீரர் குவித்தலினால் மண்டும்
கடல்நீ ரடுக்கக் கருது புவியும்
கடலா மெனக்காணுங் காண். (26)

அய்யன் விரும்பி னதுவிதுவா யாமன்றே
வெய்யசிங்கம் யாளியொடு வேங்கையுந்தான் மொய்கொள்
குன்றடுத்து மொய்த்தல் குறிக்கவரு நெய்தல் [ளும்
குன்றாக் குறிஞ்சிநிகர்க் கும். (27)

யானுண்ண நேரா தடுத்த திவையென்னத்
தீனுண்ணு மாசை சிறக்கவே பேனம்
திரையிலங்கு மீனம் திகைப்பின்றித் தின்ற
வரைவிலங்கு தம்மை மடுத்து. (28)

கனிதிருந்து காய்முதல கண்டுநா டோரும்
இனிதருந்தி மெய்த்தவத்தை யேற்ற முனிவர்
முனியார் முடிவுன்னார் மோனத் திருந்தார்
செனியாத யோகத் தினர். (29)

புலைவாழ் வரக்கர் பொருப்பின் மிசையார்
தலைமேற் கரத்தராய்ச் சாற்று மலைமீது
வாழ்வா மரிதென்று மன்னு மிலங்கைநகர்
சூழ்வார் துயரம் தொடுத்து. (30)

முழுக்கநீர் புக்கு முழுகிச் செலவாங்
குழுக்களுடன் யாளியரி கொண்ட விழுக்கிலதாம்
கோல வணையிற் குறிக்கு மிருபக்கம்
மாலை வகுத்தாய் வரும். (31)

பாரின் முதுகு பரந்த விடம் பாழா
மூரிக் குரங்கெடுக்கு மோட்டுமலை வேர்விடுத்த
தென்ன முழையினுழை யேற்றிருந்த மாநாகம்
வன்னநில னிற்றூங்கு மாம். (32)

Koviloor Digital Library

பளிக்குவரை முந்து படுத்தனவா மென்ன
வொளிக்குங் கடல்கிடந்த வோரார் வெளிக்குவரை
வேண்டுமெனக் கொண்டு விளங்க நிறைத்தனராம்
தாண்டுவன வானரங்க டாம். (33)

அருண மணிக்குன் றருகிற் சிலவாம்
இருணிறத்த குன்றங்க ளேய்தல் கருணைமிக்க
நாதன் வருணற்கு நன்களித்த மாலையென
வாதும் வருணத் தடுத்து. (34)

ஏய்ந்துவரு தம்முடம்பி னிட்ட வுயிர்க்கிடந்தான்
ஆய்ந்த வறிஞரென வாழ்கடலிற் பாய்ந்தகண்டு
பண்டா மலைப்பாந்தள் பாங்கர் வருமலையைக்
கண்டதனிற் கொண்ட கரந்து. (35)

சேதுப் பெருமையது செப்புந் தரமுடைத்தோ
ஏதுவது வேண்டுமென வெண்ணுவதென் தூதனிட்ட
மாமலையி னீர்த்துவலை வாரி யிறைத்ததனல்
தாமலையு மீனந் தகைந்து. (36)

நீலனிட்ட மாமலைதா னீண்ட நிலமடுத்து
மூலமுட்ட மேலடுத்த மொய்புனரூன் கூலமுட்டிக்
கோத்தவெள்ளத் தாலுலகம் கொண்ட பயத்திரிந்த
ஆர்த்துலகு மார்கவி யொப்பாம். (37)

மயிந்த னிடுவரைதான் வானமுட்டி வீழ
வுயர்ந்து வருநீரி னோதம் தியந்தமுடன்
திக்கபயந் தாங்குந் திணியானை மீப்பிளிறி
மிக்கபயந் தாங்கும் விரைந்து. (38)

இலக்குவன்றன் பாண மெனினு மடுத்து
விலக்கரிய தாம் விலங்கல் விட்டும் அலக்கணெய்த
ஆழி கலக்கி யமுத மெடுத்தான்சேய்
பாழி கலக்கும் பரிந்து. (39)

Koviloor Digital Library

மருத்தின் மகன்புயமா மன்னு மலையைப்
பருத்த கரடிப் படையான் விருத்தன்
விசையி னெறிய விழுந்திவலை சென்றும்
திசையினிமிர் வானோர் சிரம். (40)

குமுதனிட்ட கோலவரை கூத்த ரெனவே
திமிதமிட்ட தாற்கடலிற் சேர்ந்த துமிதமதால்
வானவர்கள் துள்ளினர் மன்னு மமுதமினும்
ஆனதுவோ வென்ன வடுத்து. (41)

கனசினத்த தாமுருமிற் காரேர் வரையைப்
பனசனிட்ட போது பரித்தற் கனகன்
அனந்தன் சிரந்துளக்க வானதனாற் சிந்தை
சினந்தங்க நின்றான் திகைத்து. (42)

எண்ணிலெண்கி னீட்ட மெறிந்த வரைக்குலங்கள்
நண்ணியொன்றி னொன்றடுத்து நாட்டத்தான் நுண்ணும்
பொடியாய்த் துலைந்தவாம் புண்ணியமி லாத
கொடியார் முயற்சியெனக் கொண்டு. (43)

ஓரமிலா தாயிரமி யோசனையா மாழமதிற்
றீரப் பரந்த திமிங்கிலந்தான் பார
மலையேற லாற்பதைத்தம் மட்டில் புறழ்வா
லலையோர் மலைபேர்ந்த வாம். (44)

குலையா தடுக்கிவரு கொள்கை குறித்தான்
சிலையாது மொன்றொடொன்று சேர்த்து மலைகள்
முறித்தடுக்கி முற்றும் முழுமணலிற் கையால்
தறித்தடுத்துச் சேர்த்தான் தகைந்து. (45)

தழுவியொரு கோடி தணியாக் குரங்கு
குழுவிற் கொடுத்தகிரி கொண்டே யெழுவாம்
கரத்தெற் றிடவழுவுங் கார்மலைகள் காலின்
திரத்தெற்றிச் சேர்க்கும் சிறந்து. (46)

Koviloor Digital Library

மலைகள் சுமந்து வருவா னரங்கள்
நிலைநின்ற செல்ல நிலமும் அலைகடலும்
அன்ற தெனத்தலையி ஞன வொருசேது
நின்றதெனக் காட்டும் நிலைத்து. (47)

பருத்தவரை யேந்திவரு பல்படைக ளெங்கும்
நிரைத்தலினாற் செல்ல நிலத்தே கரத்தினெடுத்
தேந்தி வரைகொண் டெழிற்கடலை யொன்றினென்று
நீந்தினவாய்ச் சென்ற நிமிர்ந்து. (48)

ஆய்ந்துவரு நீள மறிது சுமந்தனகால்
ஓய்ந்து பசியி னுலைந்தனவாய் ஏந்துவரை
வைத்தவற்றி னீண்டுமது மாந்தி மதிமயங்கிச்
சித்தமொத்து நிற்குந் திகைத்து. (49)

போதலுறு பேரும் புகுவார் களுமாக
மாதிரமார் வானரத்தார் வாழ்வுடையார் சேதுவதும்
எத்துணைதாம் சென்றதென்பா ரேற்றடுத்த பாதியென்பார்
மெய்த்துணையாம் வீரர் விழைந்து. (50)

குறைவில் குகைத்தேனுங் குங்குமத்தி னோடு
நிறையு மலரும் நிறைந்து துறையடுத்த
மாமலையிற் றூங்கி வருதலால் மாகடலும்
தாமதுவி னுங்கடலொத் த. (51)

நெடும்பல் வரைகள் நெருக்கமொடு தூர்க்கத்
துடும்பலுற்ற வேலை துளங்கா விடும்பையது
மெத்தனைவந் தாலு மியற்குடும்பந் தாங்குலஞ்
சித்தமுளார் போலச் சிறந்து. (52)

கொழுந்தார் பவளக் கொடியின் குலங்கள்
அழுந்த மலைகள்தகர்ந் தாகி விழுந்தடுத்த
பன்மணியின் காந்தி பரவவரு வானவில்லின்
நன்மைதரு மெங்கு நயந்து. (53)

Koviloor Digital Library

பழுமரத்தைச் சேர்ந்து பறிக்கப் பரவை
தழுவிநின்ற தாம்தம் தலைவன் விழுதலுமே
வேறிடமில் லாது விரும்பி யழுங் கிளையாய்
கூறிடநின் றாகுங் குறித்து. (54)

தாவிவரு மாகிளையாற் றாங்குந் தரமுடைய
மாவெல்லா முந்திவிழ வண்டெல்லாங் காவல்புரி
வேந்தர் விழக்களைகண் வேறடுக்கா தேவலர்கள்
சோர்ந்து திரிதலொத் தது. (55)

தொக்கடங்க வில்லாது தோன்றுந் துவலைகடா
மிக்கடங்க லும்போவ மீன்குலங்க ளக்கடல்தான்
தூரவயற்கடலிற் றோன்ற வருவனபோற்
சேரவரு மெங்குஞ் செறிந்து. (56)

மூசிவரு வண்டினங்கள் மும்மதத்த யானையின்மேல்
ஆசைகொண்ட போற்றொடர வாடினவா மோசைக்
கடலின் மலைபுகவே காணவரு வேசை
மடவா ரெனமீண்ட வாம். (57)

நிலமரங்க வேரோடு நேரே பறிக்க
வலமரவாந் துன்பமெய்திற் றானும் வலமரங்கள்
விட்டிலவாய் நின்ற விளங்குங் கொடிகளெலாம்
மட்டில்குல மங்கையென வாய்ந்து. (58)

துப்புறவா மாகடலிற் றூய துவலையால்
அப்புறவா மாகடலு மற்றசுவை வெப்பார்
உருமுங் குளிர்ந்த வுவரடுத்த நிரை
வருமங் குலும்பொதிந்த வாம். (59)

முதிர்கிரிகள் வீழ முழங்கி வருநீர்
எதிரெழுந்த தாகிநிறைந் தெய்த மதியின்
கதிரின் குளிரடுத்த காலும் பரிதிக்
கதிரின் கொடுமைக் கனல். (60)

Koviloor Digital Library

நன்கொடித்து மேலு நறுங்கிரிகள் சிந்திவரு
பொன்கொள் திவலை பொதிந்தோடல் பொன்னுடைய
மன்னுங் கொடிப்பவளம் வான்வயங்கித் தோன்றலது
மின்பொடித்த போன்ற விரைந்து. (61)

ஓடி யடுக்கும்பின் னொன்றி னுடனொன்று
காடுமரங் கற்கள் கடிதெடுத்து நாடிவந்து
நாட்டும் நளிர்கடலின் நண்ணு மலையதனை
ஆட்டும் களிவான ரம். (62)

உற்ற வணையதுவு மோங்க விலங்கைதனை
முற்றவரு மூன்றுபகல் முற்றவுடன் பெற்றுவரு
சேர்க்கும் விசும்பு செறிந்து பிளந்ததென
ஆர்க்குந் திறல்வான ரம். (63)

நாடுவதென் வேறுமொன்று நாத னடுத்துவந்து
தோடுவரு பொற்குழையா டுன்பம்விட ஆடிவரு
மென்முதுகிற் சேரவென வேற்றுவரு சேடனெனக்
கொன்பரவு சேதுவடுக் கும். (64)

மெய்யடுத்து நின்று விளங்கு மிலங்கையாள்
பொய்யடுத்த தீமை பொறுக்ககிலா தையன்வளச்
சேனைகண்ட வன்பாற் சிறந்ததொரு கைநீட்டிக்
கோனையண்டிக் காட்டுதலொக் கும். (65)

கானவர யாறு கலந்த கருங்கடலில்
ஞானவரன் சேனை நடத்தலால் வானயா
றிம்ப ரடுத்த தெனப்புகல வேற்றதுவா
மம்பரவி நின்ற வணை. (66)

கற்கிடந்து மின்னொளிசெய் காசினங்கள் காந்திதர
மற்கடங்கள் செய்ய வயங்குமணை எற்கடந்த
வல்லிருளி னிந்திரவில் வார்ந்து கிடந்ததென
எல்லொளியைக் காட்டு மியைந்து. (67)

Koviloor Digital Library

ஆன வணைதன்னை யன்பி னமைத்தனர்கள்
ஞானவளத் தான்கவிக்கு நாயகனும் ஏனை
இலங்கைமன்னும் வள்ள லிணையடியைச் சேர்ந்தார்
நலங்குலவ நாடி நயந்து. (68)

எய்தவரு யோசனைதா னீண்டு மொருநூறும்
அய்யிரண்ட தாகும் அகலமுடன் செய்த
அணையென் றுரைத்தார் அமரர்க்கு நாதன்
துணையொன்று தாளைத் துதித்து. (69)

சேதுபந்தனப் படலம் முற்றிற்று.

ஒற்றுக் கேள்விப் படலம்.

ஆண்டகையா னன்பா னமுத மொழியுடையான்
நீண்டகையி னுனளனை நெஞ்சணைத்துக் காண்டற்
கெழுகின்ற வள்ள லிழைத்தபடி கண்டு
பொழிகின்ற காதலிற்செப் பும். (1)

பண்டையுறை யுட்கினமாப் பன்னு கடல்வைகும்
கொண்டலெனத் துன்றுமணை கூடினன் அண்டர்கட்கு
நாயகனும் நன்மைமிகு நாயகியை நாடியபோ
லாயகனங் கொண்டா னகத்து. (2)

நின்று நெடிதுன்னி நேயவிழி மாலுரைக்கும்
குன்றி னணைகுயிற்று கொள்கையது மன்றலகு
தந்தமுறை யந்தணனே சார்ந்தமைத்தா னென்றிடினு
மிந்தமுறை யேற்கா தென. (3)

ஊழிமுத னுத னுவப்பி னுடுகின்றான்
ஆழமுரை செய்யு மளவொன்றோ வாழிலங்கை
அத்திசைக்க ணுமே லளவி லெழுகடலும்
ஒத்திசைக்கு மென்றா னுவந்து. (4)

Koviloor Digital Library

என்று நளனை யிறுகத் தழுவிபன்பா
லன்று வருணனிட்ட வாரமளித் தொன்றுகதிர்ப்
பொற்கலனுந் தந்து புரிவுடைய வென்றியினி
எற்கலதார்க் கென்று னெழுந்து. (5)

நெற்றி யரக்கர்பதி நேரடுக்கத் தேறுநன்னூல்
கற்ற வனுமான் கடைக்கூழை வெற்றிபுணர்
தம்பிவரன் பின்புசெலத் தானடுவிற் சென்றணைந்தான்
நம்பிவரு நள்ளார் நலன். (6)

கருங்கடலிற் போய்ப்புகுதும் காவிரியைப் போல
மருங்கடரும் சேனைவர மன்னன் தருங்கருணை
வள்ளலடச் சென்றான் வரவிலங்கை வானவர்கள்
உள்ளமொடு போற்ற வுவந்து. (7)

இழைத்தகதி ரென்றாழி ராமன் கருணை
மழைத்ததிரு மேனி வருடல் பிழைத்திரிய
நீழலுற்ற சந்தனத்தி னேர்தருக்கள் கொண்டுசென்றார்
வாழலுற்ற வானரரா வார். (8)

ஓம நெறிவாண ருற்ற மறைதாமே
யாமரசன் மைந்த ரகமகிழப் பூமரனை
நீளப் பொருத்தி நிறைந்ததழை சாமரையாய்
ஆளப் பொருத்திவந்தா ராங்கு. (9)

மருங்குதளர் வெய்த வளருந் தனத்தாள்
தருங்குதலை நெஞ்சந் தழைக்க வொருங்குபடர்
வானரர்கள் வாழ்த்திவர மால்கரையை வந்தடைந்தான்
மானவர னைவிரா மன். (10)

பெருந்தவமுன் செய்தமரர் பேறும் வரத்தால்
மருந்தனைய தம்பியொடும் வள்ளல் அருந்ததியும்
வந்தனைசொல் வஞ்சி மருவுநகர் வந்தடுத்துச்
சந்தனமார் குன்றினிருந் தான். (11)

Koviloor Digital Library

நீலன் தனைநோக்கி நேமிவரன் சொல்வானம்
பாலன்பாஞ் சேனைகட்குப் பாடியிடக் கால்வணங்கி
அன்னு னுரைத்தான் அலைகடலைப் பேரணைசெய்
மன்னு நளனை மதித்து. (12)

பொன்மணியி னுந்திவரு போதன் புனைந்தபொற்பி
நன்மணியாம் பொற்சிலையை நாட்டியே இன்னவகை
என்றறியா வண்ண மெழிற்பாடி செய்துதந்தான்
நன்றறியுந் தந்தைக்கு நாண். (13)

வில்லினர்க்குச் செய்யும் விருப்பிற் பொருப்பினுற்ற
கல்லினிற்கல் லொக்கக் கடாய்க்கழையின் நெல்லினிற்றுன்
காலலக்குச் சேர்த்துக் கவின்தருப்பை வேய்ந்துசெய்தான்
சாலைமிக்க வள்ளல் தனக்கு. (14)

வாயின் மனத்தினுற்ற வாழ்த்தி யுயிர்க்கெல்லாம்
தாயின் கனத்தவள்ள ருள்வணங்கி யேயும்
இருக்கை தனிலிருந்தார் ஏற்றபன்ன சாலை
தருக்கை தனி வள்ளலிருந் தான். (15)

பப்புநீர் வீரர்மலை பாச்சக் கடலதனில்
துப்புநீ லத்திறுறத் தோன்றிவந்து முப்புநீர்
தோய்ந்ததனைப் போக்கச் சுனைவளநீ ராடுவன்போல்
வாய்ந்தனனெல் லத்த வரை. (16)

மாலாம் குடகமுற்ற வான்வயங்கித் தோன்றிநின்ற
பாலான திங்கள் பரந்தாமன் மேலாகக்
காமன் சினந்து கருதி வளைத்தசிலை
யாமென்று காட்டு மடுத்து. (17)

நூற்றிதழார் பொற்கமலம் நுண்ணியபொற் சுண்ணமுண்ணத்
தீற்றியநீர் தோய்ந்தடுத்த தென்றலினும் மாற்றரிய
கொன்மதனன் வாளியெனுங் கூற்றிற் கொதித்தமதி
வின்மதனத் தானை விரைந்து. (18)

Koviloor Digital Library

செயிர்ப்பி னழகுசெயுந் தேவிதனைத் தீர்ந்து
துயிற்கொள்ளான் ஞாளிலா தோற்றம் மயில்பிரிந்த
தென்ன மரகதத்தி னேய்ந்தமலை வாளரவு
துன்னுபிள்ளை யூர்வதையொத் து. (19)

மன்னகர மாடே வருதலால் செங்கையுற்ற
பொன்னெடிய தோளான் புழுங்கினைந்தான் பன்னெடிய
காதஞ் சுடவல்ல காமத்தீச் சேர்ந்தனுகின்
வாதஞ் செயற்கென் வழக்கு. (20)

இற்றது கால மிலங்கைமன்ன னேவலினல்
ஒற்றர் குரங்கா யுழல்வாரைப் பற்றினன்
பண்டடுத்த தன்மம் பலன்றுய்ப்பான் வந்தடைந்த
விண்டடுத்த வீடணனும் வேந்து. (21)

பேர்வுற்ற சேனைப் பெரிய கடலதனை
யோர்வுற்ற வொற்றை யுணர்ந்துகொண்டான் சேர்வுற்ற
பாலடுத்த நீர்த்துளியைப் பாங்கிற் பிரித்துவரும்
சீலடுத்த வன்னமெனத் தேர்ந்து. (22)

கூட்டிவிரற் கையாற் குரங்கிரங்கக் குத்திமற்றும்
மீட்டுவினை செய்யாமல் வீக்கியே பூட்டுகையர்
வாயாற் குருதிபொழி வாரையிவர் கள்வரென்முன்
தாயாம் கருணையன்கண் டான். (23)

பாம்பிழைக்கும் பள்ளிவரன் பாரான் பகைவரென
நோம்பிழைக்கும் வானரரா நோக்கியே தாம்பிழைத்தல்
செய்தாகு மென்றுலுஞ் சேந்தவரைத் தண்டித்தல்
வெய்தாகு மென்றான் விரைந்து. (24)

அகத்தாம் கருணைவர னன்புகண்டு சொல்வான்
நகத்தாம் நமதினத்தி னுடார் தகத்தில்லாப்
பேய னரக்கனெற்றர் பேர்சுக சாரணராம்,
மாயவுருக் கொண்டுவந்த வர். (25)

Koviloor Digital Library

கல்விக்கோன் சொல்லக் கருமனத்தர் கண்ணவர
வல்விற்கை வீரவிக்காம் வானரரை வெல்விக்கை
யொல்லாதென் றன்னியிவ ணுற்றடுத்தான் வெற்றிகொள்ள
நல்லாயாம் தொல்வா னரர். (26)

கள்ளறிவ ரென்னுக் கருதினன் மந்திரத்தை
உள்ளறிவ னென்னு ருருமறைத்த கள்ள
வுருநீங்கி நின்று ருளநடுக்கங் கொண்டார்
திருநீங்கு செய்கைத் திரர். (27)

மின்கன் றெயிற்றர் வெருவந்து வெற்பினின்ற
வன்கண்ணர் தம்மை மகிழ்வள்ளல் என்கண்ணற்
கிவ்விடையின் வந்தீ ரியைந்தசெயல் கூறுமென்றுன்
தெவ்விடைய நின்றுன் தெரிந்து. (28)

தாய்தெரிந்து காத்த தவத்திதனைத் தன்னையடு
நோய்தெரிந்து காத்தான் றுவலவென ஆய்தெரிந்த
வொற்றுரைக்க வந்தோ முயர்ந்தோய தெங்கடொழில்
மற்றுரைக்கு மாய வழக்கு. (29)

எல்லையிலாச் செல்வ மிளையதம்பிக் கீந்தசெயல்
சொல்லுதிரால் வேலைகல்விற் றூர்த்துடனே வில்லினர்கள்
வீரமுற்ற சேனையுடன் வெற்படுத்தா ரென்றுரைப்பீர்
சோரமுற்றுன் முன்னர்த் தொடுத்து. (30)

கொத்துற்ற சென்னியன்சேர் கோளிலங்கைக் குன்றமது
தத்துற்ற நீர்வேலை தன்னிலுற்ற தொத்துற்
றுணராமை தன்னு லுயிருறவி னேடு
தணவா திருந்தசொல்வீர் தாம். (31)

சண்டத் தனிவிடையான் தாவி லுவணத்தான்
அண்டத்தர் வந்துதுணை யானுலும் கண்டகனை
யாங்கடுத்த வீருட னற்றுவிழச் செய்வதனைப்
பாங்கடுத்துச் சொல்வீர் பரிந்து. (32)

Koviloor Digital Library

தீட்டுமழு வான்தந்தை செற்றேன் குலத்தையெலாம்
மாட்டுமுறை யென்ன வருக்கமுற்றும் வீட்டியெந்தன்
தாதைக்குத் தக்கபலி சார்ந்தசுரர்க் கீவதனைப்
பேதைக்குச் சொல்வீர் பிரித்து. (33)

தாழ்வில்லாத் தையல் தனைச்சிறையின் வைத்துடைய
சூழ்வில்லா வஞ்சகனைச் சுற்றமொடும் வாழ்வெல்லாந்
தம்பிகொளத் தந்து தயங்கெரிசேர் வெந்நரகின்
வெம்பிவிழச் செய்தலைச்சொல் வீர். (34)

நோக்கினீர் தானை நுழைந்தீ ரினிவேறும்
ஆக்கினீ ரச்ச மகற்றுமென வாக்கின்
மனத்தா லிவரை வரைந்துவிடு மென்றான்
அனைத்தா யரக்கருஞ்சென் றார். (35)

அரவக் கடலஞ்சு மச்ச மடுத்தும்
உரவுத் திருவணையோட் டேற்றம் வரவும்
இலங்கையர்கள் மன்ன னிரவி னிடையே
சலங்கையுற வெண்ணவிருந் தான். (36)

வார்குலா மந்தனத்து மாத ரொடுமைந்தர்
ஆர்கொலாம் நீங்க வறிஞரொடுஞ் சீர்குலாம்
உத்திரவில் லாது வந்து மோங்காச் சபையடுத்தான்
பத்திரட்டி யத்தன் பரிந்து. (37)

உணர்வில்லா நெஞ்ச ருணர்வடுக்கா ஆமர்
புணர்வில் பொறியர் புருடர் கொணரவரு
கூனர் குறளர் கொழுஞ்சுடரா நல்விளக்கோ
டேனையவுஞ் சூழ்ந்தா ரெடுத்து. (38)

நணியர் மனிதர் நமக்குமிதின் மேலென்
துணிய வருவதெனச் சொன்னான் பணியவரு
தானவர்கள் பன்முடியிற் சார்ந்தமணி யால்விளங்கு
மான்கழற் காலான் மதித்து. (39)

Koviloor Digital Library

கால மறிந்த கணையாற் கவலைகொண்டு
வேலை பொரிந்து வெயில்புரையு மாலை
யொடுவெணங்கு மாற்ற முயர்சூல மென்ன
நடுவெணங்க வாற்றும் நலிந்து. (40)

கிழிபடத்தான் வீரை கிடந்த செயலும்
மொழிபடைத்த வல்லமையாய் மூண்ட பழிபடைத்த
மிக்க பயத்தை விழுங்கி வழிகொடுத்த
துக்கமென துள்ளம்வருத் தும். (41)

படைத்த வலிவரைகள் பற்றிப் பறித்துத்
துடைத்த குரக்குவரர் தோளைப் புடைத்த
வலியும் புணரி வருந்த வடைத்த
கலியும் மனதுகலக் கம். (42)

காந்துசின வீரர் கணக்கி லடங்காதார்
தாந்தனதா மாற்றற் றாமுடையா ரேந்துவெற்பை
விட்ட தெனைத்தொருவன் வெற்றிவிர லாலடுக்கி
இட்டதென துள்ளத் திடும். (43)

சுட்டவா கண்டுநகர் தோலாத வேலைதனைத்
தட்டவா கண்டுந் தனித்தெவ்வர் கட்டவா
கண்டுவிழி நேரிற் கடந்தவா கண்டுமினி
மண்டுவழி யெண்ணவரு மா. (44)

என்றன்னை யைப்பயந்தோ னேற்றியம்ப வாற்றலுளான்
தின்றன்ன வாயைவிழி தீயுகுத்து நன்று
வளமலிந்த மந்திரந்தான் வாழ்வடுக்க நீயும்
இளையவன்பாற் சேர்வா யினி. (45)

ஈனமுற்ற செய்கை யிவனுக் கிதமென்ன
மோனமுற்ற செய்கை முதியனுற்றான் மானமுற்ற
ஏத நினையவரு மேதிலரை மோதுபடை
காத னினையசெப்பி னான். (46)

Koviloor Digital Library

கண்மையொன்று வேலை கடந்த செயலான
திண்மையொன்று தானே திசைகாவல் எண்மர்
இவற்கேவல் செய்யு மியல்பை யறியாய்
தவத்தேயு மாற்றலவை தாம். (47)

கூசிவரு கோடரங்கள் குன்று கொடுகடலின்
வீசிவரு வீரம் விளம்புவாய் தேசின்
மலையதனை யீசன் மலைக்க வெடுத்த
நிலையதனைப் பேசாய் நினைந்து. (48)

பதிகெட்ட தாகும் படைக ளடுக்க
மதிகெட்ட பேர்நாம் வசிக்கும் பதிகட்டார்
தம்மையட நின்ற தரமார் விதிசெலுத்த
வெம்மையொடு வந்தார் மிகுத்து. (49)

மூடிவரு கஞ்சுகத்தார் மூட்டிவரு தீப்பொறிக்கண்
காடிவரு வேத்திரத்தர் நண்ணுவார் வாடிப்
படிசார நின்றார் படிகா வலர்போய்
அடிசார வென்று ரடுத்து. (50)

மனைக்க ணடுத்து வணங்கினர் பாதம்
பனைக்கைக் குரங்கின் படரை நினைக்க
அலமருநெஞ் சுள்ளா ரதியுதிரங் காலும்
நிலமையுளார் நின்றார் நினைந்து. (51)

வெள்ளத்தாம் சேனை விரிவும் விபீடணன்பொய்
கள்ளத்தான் தாபதன்றன் கற்பதுவு முள்ளத்தாம்
கோறுதலைச் சொல்வீர் குறித்தென்றான் மந்திரத்தின்
மாறுதலைச் செய்வான் மதித்து. (52)

அடியேமச் சேனைதமை யாசைகொண்டு நோக்க
வொடியாத வுள்ளமொடு மோடிப் படியார்
எழுகடலி னோங்கி யிருப்பதனை வேகத்
தெழுகருட னிற்கண்டி லம். (53)

Koviloor Digital Library

நுவலயாம் வேண்டுமெனும் நோக்க முளதோ
கவலையலை கடலைக் காணு தவலத்
தடைத்துழியி ஞர்த்தெழுந்த தாகும் துவலை
கிடைத்ததிலை யோமுன் கிளைத்து. (54)

செல்நோக்கு மேனித் திறலான் நயமடுத்த
சொல்நோக்கு மானுடன்றன் தோளென்ற கல்நோக்கும்
நோக்கைத் தனுவடுக்க நொய்தடுத்து வெந்ததுவாம்
காக்கைக்கு நின்ற கடல். (55)

தாருலவு மார்ப தகைசேர்ந்த நின்றம்பி
தேருலவு செங்கதிரும் சேர்த்தவரன் பேருலவும்
அன்றளவும் பெற்று னனகனரு ளாலிலங்கை
நன்றளவு செல்வ னயந்து. (56)

சேதுபந்த னஞ்செய் திறலு மிகவடுத்திப்
போதுவந்த தாகும் புயவலியோ தூதுவந்தான்
தோள்வலியே முன்னம் சொலற்கியைந்த தாயிருக்க
வாள்வலியாய் சொல்வதெனே வந்து. (57)

மருந்து சுரர்கள் வளத்தருந்து வேலை
இருந்த வசுரர்தமை யேற்றுப் பெறுந்திறலார்
மாயற்குச் சொற்றதென மன்னவுந்தன் தம்பியெமை
யாயற்குச் சொற்று னறிந்து. (58)

பற்றியெமை வானரர்கள் பாறப் பணைக்கையால்
எற்றிநெடுந் தோளை யிறுக்கியே பற்றி
அலைத்தடுத்துக் காட்டிஞு ரண்ண லருளான்
நிலைத்தடுத்த தெங்களுயிர் நேர். (59)

சரங்களினுற் பண்டு தனதுடைய வெற்றி
வரங்களடு வேனென்ற வள்ளல் குரங்கா
யமையாத வெங்களையு மாக்கி விடுத்தான்
கமையாக வீதொற்றுங் காண். (60)

Koviloor Digital Library

மற்றும் பொருந்தவளர் வாய்மை யுடைவீரன்
சொற்றபடி சோர்வின்றிச் சொல்லினார் குற்றம்
அதினடுத்த செய்கை யலேந்ததெனி லாயுள்
மதனடுத்த தென்றார் வரைந்து. (61)

ஒற்றுக் கேள்விப் படலம் முற்றிற்று.

இலங்கை காண் படலம்.

வைதெனக்கோல் விற்கை மனிதர் கடலடைத்து
வெய்தடுத்தார் நம்மிலங்கை மேலென்னும் செய்யும்
திறனுண்டோ வென்னவடு சேனைக் கதிபன்
மறனுண்டோன் சொல்லும் மதித்து. (1)

விட்டனமா மாதெனினும் வேந்தன் வெருவியுளம்
பட்டனனென் றம்பர் பகைதீர்வர் ஒட்டலாம்
போரிற் பகைஞர் புறக்கணித்தற் கும்பியொட்டான்
சீரிற் பகைசிறந்த தே. (2)

ஆண்டரிக ளோடு மடிமனிதற் கொன்றிருக்கை
மீண்டனமே னும்புகழ்தா மேவினு ரீண்டடுத்து
வந்திருத்தா ரென்றல் வலத்தாற் சிறந்ததென்றான்
மந்திரத்தான் மேலான் மதித்து. (3)

ஆயிரமாம் வெள்ள மரக்கர் படைமுழுதும்
தேயினுமோ ரூழியதாம் சென்றிடினி நாயின்
இனஞ்சிங்கங் கண்ட தெனவடுத்த தெவ்வர்
மனஞ்சிங்கு மென்றான் மதித்து. (4)

வந்தனர்கள் தானே மறிகடலின் வாழ்ந்தழுந்திச்
சிந்த நகர்ப்படையிற் சென்றியான் நந்தும்
படிபுரிய வெற்குவிடை பாவித்த லென்றான்
தொடிபுரியுந் தோளான் றுணிந்து. (5)

Koviloor Digital Library

மதியறிவு சான்றநெறி மாலியவான் வாய்மை
பொதுநெறியிற் சொல்லல் புலமை விதியென்
றெடுத்துரைத்தான் கால மியல்புடைய மூன்றும்
தடுத்துரைக்கும் காத கனுக்கு. (6)

பூசற்கு நம்பாற் பொருந்தி வருபரனைத்
தேசத் தரசன் தெசரதன்சேய் மாசற்ற
சோதிவெள்ளத் துச்சி துலங்கு சுடரென்பர்
நீதிவெள்ளத் துற்றார் நினைந்து. (7)

அன்னவனைப் பின்னவனை யாய மறைபரமென்
றுன்னவனை நன்னிலைமை யோங்கவென்பா ரின்ன
வகைபெரியோர் பேசும் வகைதெரிய நோக்கின்
பகைபெரிதாய்க் காணப் படும். (8)

அவர்க்கமைந்த வில்லும் அரன்மேருப் பாங்காம்
நமர்க்கமைந்த வில்லி னலிவோ தமர்க்கமைந்த
பண்பெல்லாம் நல்கும் பரஞ்சுடராம் நாமெண்ணும்
எண்பொல்லா தாகு மிய்பு. (9)

வாலிமகன் வந்தானை வானோர்க் கிறையென்றார்
நீலன் நெருப்பரசே நேரென்றார் காலன்
தனிவலத்தான் றாதன்கால் தானுவென்றா ரன்னோன்
இனிவரத்தான் வேதனென்பா ரே. (10)

அப்பதத்தை யீந்தா னரக்கர் குலமறுப்பான்
இப்பதிக்கண் வந்த விராமனென்பார் பொற்பதிக்காம்
வானவரே வானரரா வந்தார் வரத்தென்றார்
தானவரை வாட்டுதரத் தாய். (11)

ஆய தெரிந்தவர்க ளச்சமோ வாமறிவோ
சேயவனை யென்னசிந்தை சேர்த்தலம்மா தூய
வழுதியொடு தோன்று மமலை யுலகோர்
சமதியவ னென்றார் துதித்து. (12)

Koviloor Digital Library

காணிலங்க வந்த கருத்து மமரர்கட்காத்
தாணிலங்கை வேந்தன் றவத்தையட வானோர்
தனித்தனிய ராகித் தரணியிடை சூழ்ந்தார்
மனித்தரியல் வானரரா வந்து. (13)

ஆயிரமுற் பாதங்க ளாயடுத்த வென்றுரைத்தார்
தாயினுமுற் றூளையறி தக்கோனும் நேயமுற்ற
தூதனெற்றப் போன துலங்கிலங்கை யுற்றதெய்வம்
ஆதலிற்றான் போரென்று ராய்ந்து. (14)

அம்புக் கிலக்க மரசோ டரக்கரென்றார்
நம்பிக்கை கொள்ள நயந்துரைத்த வும்பர்க்காம்
மந்திரிக்கி மேலாம் வரஞானத் தம்பிசொல்லி
யந்தரத்த ஞானு னறிந்து. (15)

ஈதுணர்ந்தே னன்றி யெனதுகுல மிற்றதுவும்
ஆதியிவ ளுலென்று மன்படுத்தும் வேதனைதான்
நெஞ்சமொன்றிச் சொற்றே நிகரடுக்காச் சீதைதனை
வஞ்சமின்றி விட்டிடல்வாழ் வாம். (16)

மற்றுநிற்க வந்த மனிதர் குரங்கடல்வான்
உற்றுநிற்குந் தேவரென வோதலன்றி வெற்றி
யுனக்கிலையா மென்றனையென் றேங்கிச் சினந்தான்
தனக்கிலையாச் செய்ததரத் தான். (17)

பேதை மனிதரன்றிப் பேருலக மூன்றுமுற்றார்
காதுசெரு வேட்டென்மேற் காந்திடினுஞ் சீதை
திறத்தன்று போர்திறம்பு செய்கை யுளதோ
மறத்தன்றிச் சொற்றாய் மதிப்பு. (18)

ஒன்றோ பகழியென்கைக் குற்றனவு மற்றுலகம்
வென்றேங்கு தேவர்தமை வெங்கண்ட தின்றும்
குரங்கடுத்துச் செல்லாத கோனென்னை யென்றான்
தரங்கெடுத்துச் செய்கைதவிர்ந் தான். (19)

Koviloor Digital Library

சூலத் தடக்கையண்ண ரேன்றுங் குரங்கெனினும்
மேலுற்ற வென்னைச்செய் மேன்மையெனை வேலைக்
கடுவோ விழுங்கக் கணையென்ன தாகும்
அடுவோற் கனலா மறி. (20)

கொற்றக் குலிசன் குரங்குருவங் கொண்டடுக்கின்
எற்றப் படுமோ வெனதுபுயம் இற்ற
சிறைப்பொருப்போ வல்ல திரிபுரத்தைச் செற்ற
விறைப்பொருப்பைக் கொண்ட தெடுத்து. (21)

அறிகிலையோ வைய வமரிலெனை நேமி
எறிவோ னெதிர்க்கினுந்தா னென்னும் பிறிவில்
கடல்வாழ் கவுத்துவமோ காணத் தரிக்க
வுடல்வாளி நெஞ்சை யடும். (22)

உள்ளத்தாம் தூதா லுயிரா ருறைநாடும்
கள்ளத்தாம் பெண்கள் கவலையுற மெள்ளத்தாம்
நேமிக்குத் துன்பம் நிலையா தகலவந்தான்
மாமிக்குப் பூமலர்த்து வான். (23)

இன்ன வகையென் றெடுத்தெரியு மேற்றமன்றிப்
பொன்மதிற்குப் பக்கமஞ்சிப் போம்பரிதி தொன்னகர்க்கண்
காண்பா னடுத்தான் கமலத்துக் கண்வளரு
மாண்பா னடுத்தன் மதித்து. (24)

அருந்ததிநேர் நங்கை யவணிருந்தா ளென்று
பொருந்த நகர்காண்பான் போலத் திருந்துபடை
வீரர்முற்றத் தம்பியுடன் வெற்பினுச்சி வந்தடுத்தான்
வாரமுற்றோர் போற்றும் வலன். (25)

செருமலியும் வீரமுற்றோர் சேர்ந்துவரப் பாங்கு
பொருவரிய சீயம் புலிகள் திருவினொடு
சுற்ற வரியரசு தோற்றும் வரையினுச்சி
நிற்றலென நின்றா னிமிர்ந்து. (26)

Koviloor Digital Library

கதமிகுந்து பொங்குங் கடல்சூ ழுலகம்
புதையுமிருள் போலரக்கர் பொற்புச் சிதைவுபெற
வந்துகருஞ் சூரன் வடதிசைவான் குன்றமதில்
உந்துமென நின்ரு னுகந்து. (27)

வாளிப் பெருமழையை வந்தொன்னர் மேற்பொழியத்
தோளிற் சிலையுடனே தோன்றுவெற்பான் ஆளும்
கரங்கால் முகமுங் கமல மெனப்பூ
தரங்காணு மேகமதொத் தான். (28)

மற்குவடாம் வீரர் மலையாற் கடலடைத்து
நிற்பவரின் மத்தியண்ணல் நேர்ந்துநிற்ற லற்புடைய
பொற்குவடு குழநடுப் புல்லு மரகதத்தின்
நற்குவடை யொத்தா னயந்து. (29)

அணைகடலிற் றேன்ற வகன்றசினத் தையன்
பிணைநெடுங்கண் ணட்டுரந்த பின்னை பிணைபிரிந்த
வன்றிலங்கு சேவலென வானன் துணைவிழியால்
நின்றிலங்கை நோக்கும் நிரந்து. (30)

நந்திருவா நன்னகர நாட்டு நகர்க்கெல்லாம்
வந்துவமை கூறி வழுத்தலுற்ரு ரிந்திரனுக்
கேற்ற விருக்கையென்ப ரிவ்விலங்கை யைப்புகலார்
போற்றநலங் காணர் புனைந்து. (31)

பழுதற்ற பொற்றலத்திற் பண்ணுந் தொழில்கள்
முழுதுற்ற நன்மணியாய் முற்றும் குழுமியதாய்
இன்னவகை செய்தவென வேற்ற செயல்தெரியா
மன்னவரு தேசு மலிந்து. (32)

விரியும் கதிரா மிளிர்மணிகள் வீசச்
சொரியும் சுடர்ச்சும்மைத் தோற்ற மரியென்ற
வெற்றியனு மான்கொளுத்த மேற்றீ யெரிவவெனத்
துற்றும் நகரமுழு தும். (33)

Koviloor Digital Library

மாசின் மரகதத்தான் மன்னு தலத்துவைத்த
காசடையு மாடங் கதிர்சுற்றத் தேசுமலி
ஆசடையா வெள்ளிமனை யன்னமெனப் பொய்கையிடை
பாசடையிற் பூத்தமலர்ப் பாங்கு. (34)

தீச்சிகைசேர் சோதியுற்ற செம்மணித்தூண் மேன்மாடம்
தூச்சுடரி னாற்கருமை தோன்றாது மீச்செல்லும்
மேகஞ் சுடரிலங்கை மீதாகக் காச்சிரும்பை
ஆகுமொளி செய்வதனை யாய். (35)

விற்படிதோள் வீர விளங்குகரி காலினடும்
பொற்பொடிமேல் வீசிப் பொலிவதனால் அற்படியும்
தன்னிறம்போய்ச் சாலத் தனியாங் கனகவரை
என்னவரும் பாரா யெடுத்து. (36)

பூசலுற்ற வில்லாய் புதுமைதரு பொற்புமிகு
காசடையும் பொற்கவரிக் கால்கதுவ வீசுகொடி
ஆகாய முற்ற வகன்மேகத் தாந்துகளைப்
பாகாய்த் துடைப்பதென்றாம் பார். (37)

நூல்தொடர்ந்த பைம்பொ னுனித்தசித்தி ரப்பத்தி
கோல்மனைக ளாமணிகள் கூடியே வேலரக்கன்
மாட மணிநடுவா மன்னல் கடற்கிறைபூண்
டாடுமணி மாலைநிக ராம். (38)

நன்னெறியாய் நோக்காய் நலமார் தெருநாப்பண்
பன்மணியா மாடநிழல் பாங்குறலால் இன்னநிறம்
என்று தெரியாம லேற்ற புரவியெலாம்
நன்றுவரும் பாரி னடந்து. (39)

வீரவர பாராய் மிளிர்பளிங்கி னால்விளங்கும்
மாரன் மருள்மாட மற்றுமுற்றுஞ் சீர்மணியால்
இன்னலத்த மாடமெனை வேற்றறியா தாய்ச்சிறந்த
நன்னலத்தை யென்புகல்வோம் நாம். (40)

Koviloor Digital Library

தாளமுற்ற வாய்ப்புரிந்த தண்பந்தர் நாப்பண்
மரகதத்தைச் சேர மருவல் வரமிகுத்த
பாற்கடலின் வைகும் பரமன் றனைப்போல
வேற்குமெழில் பாரா யிசைந்து. (41)

மின்னொளிக்கு மாட மிசையோர்பெண் காளவுறை
தன்னொளிக்கும் கண்ணடியைத் தானெடுத்தல் பன்னும்
அராவிழுங்கி விட்டமதி யாகுமது பாராய்
கராசலமாம் வீர கவிந்து. (42)

கொற்றச் சிலையாய் கொடியிடைகொண் மாடமதி
லுற்றகழுத் தொட்டகந்தா ளேக்குழும்பர் செற்றும்
மணிச்சுடரை வானின் வரைதளிராய்க் கவ்விப்
பணித்து மிமிர்வதனைப் பார். (43)

வாகைச் சிலையாய் மலர்க்குழற்குச் செய்மாலை
தோகையரா லாம்புகைதான் சுற்றுதல்தான் .வேகக்
கவளக் களிற்றுரியாற் காண்கடவு ளென்னப்
பவளக் கவின்மாடம் பார். (44)

காவலன்சே யான களிறே கனமுற்ற
தேவதச்ச னீலத்தாற் செய்குன்றம் மேவிசிற்றல்
கண்டா லரக்கர் களித்துப் புரிபாவ
பண்டார மொக்குமது பார். (45)

பிணைநோக்கம் பாழாப் பிடியுண்ட வன்பின்
துணைநோக்கா வுள்ளந் துவளப் பணிநோக்கும்
செம்மையல்குன் மாதர் செறிபருவம் நோக்கலென
நம்மையன்பிற் காண்பதனை நாடு. (46)

பன்மலர்த்தார் வீர படைகாண வானகத்தாம்
நன்மொழியார் மைந்தர் நயந்தேறல் பொன்னகர
வாழ்வடுத்த தென்றுவந்து வானேறல் போன்றதுவாம்
தாழ்வடுத்த விந்தகரைத் தாழ்ந்து. (47)

Koviloor Digital Library

இன்னவகை வள்ள லிளவற் கிலங்கைதனை
யன்னவகை காட்டி யருள்காலை மன்னுநகர்
வேந்த னரிக்குலத்தின் வெம்மை தனைக்காண்பான்
சேர்ந்தான் சிகரிச் சிகை. (48)

இலங்கை காண் படலம் முற்றிற்று.

இராவணன்றனை காண் படலம்.

கவடுகத்தான் போர்புரியும் காய்களிறு மன்னன்
அவடுக்கின் பூவம்பா லாக்குஞ் சுவடுடைத்தாம்
தோள்கொண் டனேகம் சுடர்குவடு சேர்மலைபோல்
வாள்கொண்டா னின்றான் வரைந்து. (1)

பொலிந்ததினிப் போரென்னப் பொங்குங் களியால்
மலிந்தவெழில் நங்கையினல் வன்மை மெலிந்த
புயங்கள் வடமேரு போலப் பொலிந்து
தயங்கவுடல் தங்குமனத் தான். (2)

செம்பொன் மவுலி சிகரங்க ளாய்த்தயங்க
அம்பொன் மகமேரு வாம்சிகரி வெம்புதிறற்
காலெடுத்துக் கொள்ளக் கருதி வருபெரிய
தாலடுத்த வாசுகியொத் தான். (3)

தொக்கதிறற் பூமைந்தின் தோற்ற மொடுதன்னிட்
டொக்கதிசை யொன்பதினோ டொன்றடுத்து மிக்க
நிழல்பரப்பி யாம்வியப்பால் நின்றகுடை மீது
குழைவடுக்க நின்றான் குறித்து. (4)

கைத்தரத்தாம் பொற்கவரி கால வருகாலால்
செய்த்திருண்ட நீலவரை நின்றவளர் தத்திவரும்
பொன்னலத்த தாமருவி போலுத்த ரீயமல்கத்
தன்னலத்த மார்பினன்வந் தான். (5)

Koviloor Digital Library

வானகத்த காணின் வருமா னுருப்பசியும்
தேனகத்த செவ்வாய்த் திலோத்தமையோ டேனை
அரம்பையர்கள் சீதைக் கழகுதந்து சாரத்
தரம்பயிலாக் கூடரனடைந் தான். (6)

வீழிகந்த செய்யவிதழ் மேலாங் கழைத்தோளார்
ஆழிதந்த மங்கையர்க ளாயடுத்தார் எழிசைந்த
நல்லிசையாங் கான நலத்தார் புடைமருவ
அல்லிசைய வந்தா னடுத்து. (7)

முழையுற்ற தாம்பிறைபோல் முள்ளெயிற்ற வொள்வாள்
விழைதெற்றிப் பல்லினொளி வீசத் தழைவுற்ற
தொங்கல் வயங்கச் சுருதி தொடுத்துவர
மங்குலென வந்தான் வரைந்து. (8)

ஓதுகின்ற நூல்வழியி னுற்ற செவியுள்ளும்
சீதையெனு மாருயிரே தேய்ந்துவர நாதமிக்க
வீணையிசை நாரதனார் வேண்டி யிசைபுரிய
ஆணையிசை யில்லனடைந் தான். (9)

வெங்கரத்தர் வாளயிலர் வில்லுடைய ரெல்லுடைய
சங்கரர்க்கும் வல்லமையிற் சாய்தலிலார் அங்கரக்கர்
கோடி யமைந்தோர் கொடிய புயவலியார்
நாடியமைந் தாகவந்த னன். (10)

கல்லிலங்கை யாளுலகு காணக் கவர்வோர்கள்
நல்லிலங்கை யுற்றோர் நவையில்லோர் புல்லும்
சதகோடி கொண்ட தனுப்படையர் சூழ
மதமோடு வந்தான் மருண்டு. (11)

பாரியங்க வாகிப் பரந்த விசும்படுத்தோர்
வாரியங்கு மாமழையை மாறுமெனும் தூரியங்கள்
நின்று துவைப்ப நிறைகடலின் வந்தடுத்தான்
பொன்றுதையு மார்பு பொலிந்து. (12)

Koviloor Digital Library

நஞ்சமிடை கண்ணுடைய நாகியர்க ளூனமுற
வஞ்சியிடை மங்கையர்கள் வானத்தார் மிஞ்சும்
நரம்பில்லா நாதவிசை நன்றடுத்துச் சேர
வரம்பில்லான் வந்தான் மதித்து. (13)

நஞ்சுகக்குங் கண்ணினெறி நாட்டி விழிப்பவர்கள்
கஞ்சுகத்தர் பொன்கதையார் கையுடையார் மஞ்சுகக்கும்
வல்லிடியாம் சொல்லுடையார் மன்னுந் திசையடுத்துச்
செல்லநடு வந்தான் செறுத்து. (14)

கூயுரைப்ப வான குலமால் வரையேனும்
தாயுரைப்ப வான தடந்தோளின் வாயுரைத்த
விற்கலவை வாசமது வேயுரைப்ப தென்னவவன்
முற்குலவ வந்தான் முனிந்து. (15)

வேத்திரத்தர் தாவமதை வீசி விழிக்கவரு
நேத்திரத்தர் நின்றுழியி னில்லாதார் காத்திரத்தர்
அம்மனைக்காம் காவ லதிபர்புடை சூழவந்தான்
தம்மனத்தாம் செய்கைத் தரன். (16)

தோரணத்தின் வாயில் தொடர்ந்து வருசூலாம்
நீரணைத்த மாமுகிலாய் நேர்ந்துநின்றான் ஆரணத்தைச்
சான்றோ ரிதயமலர் தாங்கும் பெருஞ்சுடரை
ஆன்றோனைக் கண்டா னடுத்து. (17)

மடித்துவரு வாயன் வயங்குமெரி வந்து
பொடித்திழிந்த கண்ணனது போழ்தி னிடித்த
திசையெரிந்த நெஞ்சம் திரடோள் விழிகள்
இசையறிந்து துள்ளு மிடம். (18)

ஆகத்தி ராகவனை யவ்வழியிற் கௌவையொடு
மாகத்து வானரிய மாவினொடு மேக
இராசி யெதிரா மிராகு வதுவாய்
இராசையனைக் கண்டா னிமிர்ந்து. (19)

Koviloor Digital Library

ஏனை யவனே யிராம னெனத்தனது
மேனியுரை செய்யும் விரிந்துவரு மானப்
படையடுத்தார் தம்மையுரைப் பாயென்ன வாங்கு
புடையடுத்த சாரன்விளம் பும். (20)

இங்கயலி நின்று னிலங்கையர்கண் மன்னவன்றன்
தங்கையென மிக்க சலத்திஞெடு கொங்கையணி
மூக்கிஞெடு காதும் முரண்கொண்ட வாளதனால்
தாக்கிநின்ற தம்பியிவன் தான். (21)

அறக்கனென்ப தன்றி யறியாத் திருவன்
நிறக்கடலு ணேமியிடை நின்றுந் துறக்கமதின்
ஆராமத் தோரு மகலா வுறக்கமதைச்
சாராம லோடமுனிந் தான். (22)

கோலமுளான் கைதாங்கிக் கொண்ட கரமுடையான்
வாலியுட னண்ட மலேநடுங்க வேலும்
செருவிற் றிகழ்ந்தான் றினகரன்றன் செல்வன்
மருவற்ற வல்லமைகொள் வான். (23)

தந்தை தனேயாகச் சாரும் வலனுடையான்
முந்தைய னிராமனடி முன்னுமன்பான் சிந்தையெனு
மங்கதந்தான் சேரா வடலுடைய வாலிமகன்
அங்கதன்று னென்பா னவன். (24)

நடந்த விரத நகுங்கிரின் முன்னர்
நடந்து படித்த நலத்தான் படர்ந்து
கிடந்தபடி சுற்றெயிற்றின் கேழ லனேயான்
நடந்தபடி கண்டனேமுன் ளுள். (25)

நீலனவ னின்றேன் நெருப்பின் வரப்புதல்வன்
சூலங் கயிறெடுக்காத் தொல்கரத்தான் ஆல
மெனநிறத்தா ஞகி மிலையந்தவனேச் சேரார்
மனநிறுத்திக் காலெனச் சொல்வார். (26)

Koviloor Digital Library

வேறாக நின்ற விசைய னளனென்பான்
ஏறான் வருண னெனவள்ளல் சீறுதலி
னுள்ளத்திற் சீற்றத் தாறுசெந்தீ யாருமுனம்
வெள்ளத்தி னாறுபுரி வேள். (27)

முக்கால முற்று முறையி னுணர்ந்தவரன்
புக்காலஞ் சீறப் புணரிகடை யக்காலம்
உள்ளா னுலகேழு மூற்றத் தெடுப்பனின்றும்
எள்ளான் கரடிக் கிறை. (28)

சேனா பதியிருளைச் செய்தகுன்றன் னானயலே
ஆனாத வாடகக்குன் றாந்துணைவர் வானோர்
மருத்துவர்தம் மைந்தர் வலியுடையர் சிந்தை
செருத்துவக்கச் சேர்ந்தார் சினந்து. (29)

இவன்காண் குமுத னிவன்குமு தாக்கன்
இவன்காண் கவைய னெறுழான் சிவன்காணும்
தாதனுக்குத் தாதை சுரர்மகிழ்செய் கேசரியென்
றோதனிற்கு மேதைமனத் தோன். (30)

வரையுற்ற தோளான் மடங்கல் வலியான்
தரமுற்ற பேரான் சரபன் கரமுற்ற
யானைவல மிக்கான் அவனே சதவலியாம்
தானைநல மிக்கதரத் தான். (31)

மூன்றுகண்டான்தோன் றவிலைமூன் றெயிலை என்றெறித்தான்
போன்றுகண்டான் தான்பனசன் போர்க்கெல்லா மேன்ற
விடப னிவற்கெதிரா யேற்றான் சுடேணன்
வடபநலை யாம்புயத்த வன். (32)

வெதிரடுத்த குன்றமென மேனிவனை தீரன்
கதிரடுத்த சேயிடத்தாம் காளை ததிமுகன்றான்
சங்கனெனத் தக்கான் தரியலரா கும்கடலை
வங்கமெனத் தாண்டும் வலன். (33)

Koviloor Digital Library

அண்ணற் பெரியோ யவதி யிதற்காமோ
எண்ணற் கரிதா யிசைக்குமுரு வண்ணக்
கடல்மணற்கு மண்ணிற் கணக்கேதா மென்றான்
அடல்மணக்குந் தூத னறிந்து. (34)

சினங்கொ ளரக்கன் சிறியநகை செய்து
புனங்கொள் குரங்கைப் புகழ்வாய் வனங்கொண்ட
மானினங்கள் வீர மடங்கலையென் செய்வதென்றான்
தேனினங்கொள் தாரான் செறுத்து. (35)

என்றுரைக்கும் வேலை யிராமன் விபீடணனை
என்றுரைக்கும் பொற்சிகரி யேறிநம்மை நன்றுரைத்து
வானடுத்து நின்றானை மன்னும் வரன்முறையாற்
தானடுத்துச் சொல்லென்றான் தான். (36)

நாறுசெய்து தன்கிளையை நாட்ட நரகமதிற்
சேறுசெய்து வைத்த திறலுடையான் கூறவரு
மங்கையர்கள் சூழ வளர்சிகரி தன்னினின்ற
வங்கவனி ராவணனென் றான். (37)

கருதுதக்கான் கூறுமுனம் கண்ணிற்றீக் காலப்
பொருதுபுக்கான் சூரன் புதல்வன் பரிதிதனை
ஆய்ந்த கனியென் றடுத்த நிமிடமதிற்
பாய்ந்த வனுமனெனப் பாங்கு. (38)

சுதையத்தி றேய்க்கும் சுவேலத்தை விட்டுச்
சிதைய விராவணன்மேற் சென்று னுதயத்தாம்
குன்றினின்று தாவும் குலத்தாதை தன்னையொத்தான்
மன்றினின்று தாவும் வலன். (39)

பள்ளம்போய்ப் பாய்புனலாய்ப் பாங்கா மலைசலிப்பத்
தள்ளரிய கோபுரத்தைத் தானடைந்தான் வெள்ளம்போற்
கண்ணனி யழவரக்கற் காய்ந்து வருகழுகின்
அண்ணயுலை மொத்தா னறிந்து. (40)

Koviloor Digital Library

கருணைக் கடலவனைக் காணச் சிறந்த
தருணைத் தரம்பையர்கள் தாமும் உரியதொரு
குன்றினிடி தாக்கக் குலைந்த மயிற்குலமா
யொன்றினர்க ளோடி யொளித்து. (41)

இராவணன்றனை காண் படலம் முற்றிற்று.

மருட பங்கப் படலம்.

காலையிருள் சிய்க்கும் கதிரோன் மதலைகண்ணுற்
றேலவெதி ரெய்தினனி ராவணனை நீலமலை
முன்கயிலை நின்றதென முட்டினு னுலவிடத்
தின்வலியை மாற்றரன்போ லேற்று. (1)

இத்திசைக்கண் வந்தபொரு ளென்னென் றியம்பவவன்
தத்தியெதிர் சென்று தடந்தோள்கள் பத்தினொடு
பத்துடையான் மேனி பதைப்பமுனம் குத்தினனு
லொத்துடைய மெத்து முரத்து. (2)

திருகு சினத்தாற் செறுத்து விழித்தான்
உருகும் திசைக ளொலிப்ப விருபதேனும்
கையெடுத்துப் பேரிடிபோற் கார்கலங்கத் தாக்கினன்
வையெடுத்த வாளுடைய வன். (3)

அடித்தவிர லாலெழுந்த வத்துழியி னெய்த்தோர்
பொடித்தெழத்தான் சென்று பொருத்திக் கடித்து
விசையிற் கடிதெழுந்தான் வெய்யதலை பத்தும்
இசையி னுதைத்தா னெதிர்த்து. (4)

உதைத்தவன்று டன்னை யொடித்துப் பிடித்துப்
பதைத்தலையப் பல்திறத்தும் பண்ணி மதக்கரியைச்
சிங்கம் நெரித்த தெனமயக்கிக் கையால்மெய்
பங்கம் பெறத்துகைத்தான் பார்த்து. (5)

Koviloor Digital Library

துகைத்தோ னுடலைச் சுறுக்க விறுக்கித்
தகைத்தான் றலமடுத்துத் தாக்கி வகைத்தாம்
பிறைபெயிற்றைக் கொண்ட பெருங்குகையாம் வாயில்
நிறைகுருதி யுண்டான் நெறித்து (6)

கையாற் குடித்துக் கனகவெற்ப தாமுடலை
பையா டரவாய்ப் பலகைபற்றி மையாகும்
வண்ணத்தான் மற்றும் வலத்தாற் றிரித்தனனும்
எண்ணத்தான் முற்று மிரித்து. (7)

திரித்தோ னுரத்திற் செறித்துகிராற் குத்திப்
பெருத்தாங் தடக்கை பிடித்துக் கருத்தழிய
மாற்றி நெறித்தவனை மன்னு மகழியிட்டான்
கூற்றி னுரத்தான் குறித்து. (8)

இட்டவனை யின்னு மெடுத்தா னகழினிட்டான்
தட்டவுய ரத்திற் றசமுகத்தான் ஒட்டவுடன்
வந்தவனை யுற்றான் மறித்து மகழ்வீழ்ந்தார்
பந்தமொடு சேர்ந்து படர்ந்து. (9)

விழுந்தார் சுழன்றார் வெகுண்டார் திரிந்தார்
அழுந்தார் அழுந்தி யகலார் எழுந்தார்
எதிர்ந்தார் முதிர்ந்தார்க ளின்னவகை செய்வார்
அதிர்ந்தார்க ளொன்றுமுணா ரார்.. (10)

அந்தரத்தாம் சூரியன்சேய் ஆழி யகழாகச்
சுந்தரக்கை சுற்றும் சுழிப்பட்டும் எந்திரமாச்
சுத்தித் திரியரக்கன் சூழ்மந் திரமாகத்
தத்திவரு வாலியையொத் தான். (11)

உளறுபடு செம்புனலு ளேங்கு மகழையுற்ற
ஆறுபடு கின்றனவா யாதவன்னூர் பாறு
பொருகின் றனவாகப் போயார் விசும்பின்
இரிகின்ற தாமுலக மே. (12)

Koviloor Digital Library

தூரநெடு வானடுத்துத் தோன்றுஞ் சுடரவன்சேய்
காரிநெடு மேருவெனக் காயரக்கன் தாருடைய
தோள்தழுவ நின்றான் சுடரூர் கிரணமெனும்
தாள்தழுவு தாதையுமொத் தான். (13)

பொங்கதிர்செய் போர்விசும்பிற் போயுடன்ற போதடுத்த
செங்கதிரோன் சேயைத் திறள்புயத்தா லெங்குமறைத்
தாமரக்கன் வெங்கதிரை யான்றடக்கு மேகமெனத்
தாமரக்க நின்றான் றடுத்து. (14)

நூபுரத்தாள் மங்கையர்கள் நோக்கிக் கிடந்தலற
மாபுரத்தா ரெல்லா மயங்கவே கோப
மடங்கலென வான்மணிசேய் வந்து குதித்தான்
தடங்கொள் சிகரிதகந் த. (15)

கொன்னடுத்த விண்ணேற்றைக் கூடித் தொடரவந்து
மின்னெயிற்று மேகம் விழுமென்னத் தின்ன
வெருட்டி வருமரக்கன் வீழ்ந்து பிடித்தான்
கரத்தின் னுணையைக் கனன்று. (16)

வந்தவனை நின்ற வலியோ னெதிர்மலைந்தான்
அந்தகனு மஞ்ச வறைந்தான்பூ எந்திரந்தான்
என்னக் கடிதி னெரியவவன் கந்துகமென்
றன்னக் கலந்தா னுறுத்து. (17)

படிந்த மரங்கள் பகிர்ந்த தரையும்
கொடுஞ்சினத்தி னுரத்தாம் குத்தா னெடுஞ்சுவரும்
நேர்பிளந்து குன்றம் நெரிந்து தகர்ந்திலங்கை
வார்பிளர்து குன்றும் வளம். (18)

செறிந்த கரங்களையர் தேறார்தம் மேனி
பிறிந்தார் பொருந்தியதும் பேணார் செறிந்தவர்கள்
செய்தவலி தேறார் தெறும்போர் மறந்தரக்கர்
எய்தவலி யில்லா ரிரிந்து. (19)

Koviloor Digital Library

இன்னவவாக வெய்த வெழிலா ரெழிலிவண்ணன்
மன்னுயிரா மன்னன் வரக்காணுன் உன்னும்
கருமமிலை யுன்ஞற் கடந்ததெனப் பன்னும்
தருமமிலை யுள்ளமழிந் தான். (20)

ஒன்று முணர்வா முயிர்த்துணைவ வுன்னையன்றி
நின்றுளனு நானியற்று நேர்மையுண்டோ துன்றுபயத்
திட்டாய் சுரரை யெடுத்தா யரக்கர்களை
விட்டா யெனையும் வெறுத்து. (21)

தெய்வப் படைமாயை சேர்வல்ல தீயனுடன்
கைவைப் படைந்தாய் கடத்தியிலை வையமெலாம்
பெற்றாலும் வாழேன் பெரிது முயிருதவி
நற்றுயாம் நீயிலையா னல். (22)

ஒன்ருய் நினைந்திருக்க வொன்று விளைந்ததினி
என்றுலென் வாழ்வென் னெதிர்ந்தவனைக் கொன்று
னவனென்று லென்னை யடுத்து வதைத்த
தவமென்ற லுன்னையடுத் தாம். (23)

இறந்தனைநீ யென்று விருந்தரக்க ரென்பார்
திறந்தனையா னீக்கியுயிர் தீர்ந்தும் மறந்தான்
உயிரனையான் றன்னை யொழிந்திருந்தா னென்பார்
செயிரனைய சொல்லடுக்கேன் தேர். (24)

அழிவனசெய் தாயைய வன்பளியத் தேனுக்
கொழிவனசெய் யாததவு முன்னே டெழுபதெனும்
வெள்ளத்தி னீண்டொருவர் மீளாது செல்லினன்றே
உள்ளத்தின் வெம்மை யுகும். (25)

என்றிரங்கக் காலத் திருவ ரொருவர்தமில்
வென்றிலராய்ப் போர்புரியும் வேலையடல் துன்றும்
அரக்கன் மவுலி யணிமணியை வாங்கிக்
குரக்கரசன் வந்தான் குதித்து. (26)

Koviloor Digital Library

கொழுமணிகள் மாமுடியிற் கொண்டகுழுக் கூட்டம்
அழுதயரும் வள்ளலடி யாக்கித் தொழுதயலி
ஞணிநின்று ஞயகர்க்கும் நாட்டுவலி வானரர்க்கும்
காணிகொண்ட நல்லுயிரா க. (27)

என்படுத்த புண்ணி னிழியுங் குருதியொடும்
புன்புலத்தான் றீண்டுபவம் போகவெனத் தன்பெரிய
கண்ணீரி னாட்டினன் காவலனைக் காத்தளிக்கும்
மண்ணீர்தீ கால்கோவா வான். (28)

ஈர்கின்ற தன்றே யெனதுளந்தா னிங்குமங்கும்
பேர்கின்ற தாவிநிலை பேசலென்னே தேர்கின்ற
சிந்தை திகைத்தாய் தெரிந்தவனீ யென்றறத்தாம்
எந்தை யிசைக்கு மெடுத்து. (29)

கல்லடுத்த தோளாய் கருணையிலானின்னையட்டால்
வில்லெடுத்து வெல்பகழி வித்தியென்னும் கொல்லினுந்தான்
தோற்றவனு னன்றோ துயரப் பெருங்கடலின்
ஆற்றலனு வீழ்திறத்தற் காம். (30)

பெருமை யொடுவண்மை பேரெழில்சே ராண்மை
யொருமையொடு காண்பொறையி னூற்ற மிருமைக்கும்
தன்னினைந்த செய்கைத் தரமடுக்கச் செய்துவந்தாய்
என்னினைந்தென் செய்தா யிவண். (31)

இன்னிலையி னெய்தரிதா யித்துணைதான் றாழ்த்தியெனில்
நன்னுதலி யாலென் னலமடுக்கும் உன்னைத்
தொடர்வேலை யென்னைத் தொடரு முலகம்
படர்வேலை செய்தாய் பரிந்து. (32)

என்றறத்தான் கூற விணையடியை யேற்றுகையான்
வன்றிறத்த வான்குரங்கு வள்ளலுற்ற தன்றிறத்து
நாலுற் றலைகுனிந்து நன்குரைக்கும் செய்கையது
வீணுற்ற லென்று வெறுத்து. (33)

Koviloor Digital Library

காட்டிற் கழுகரசன் கண்ணுஞ் செயல்காட்டேன்
நாட்டிற் குகனார்செய் நாட்டமிலேன் கேட்டும்
தளிரடியைக் கொண்டான் றலைபத்துங் கொள்ளேன்
வெளிறுடையேன் வந்தேன் விழைந்து. (34)

வன்பகைதா னிற்க வலிமுகத்துக் கேற்றபடி
புன்பகையைக் காண்பேன் புகழ்க்கென்னும் அன்பகத்தாய்
என்பகையைச் சிந்தியுயி ரேற்றரசு தந்தவுற்கே
யுன்பகையைத் தந்தே னுகந்து. (35)

செம்புக்குஞ் சேந்தகண்ணார் திக்கு நிலக்களிற்றின்
கொம்புக்குங் கிழென் குரக்குத்தோள் அம்புக்கு
முன்னும் பகைமுடிக்க மூண்டுதீ தின்றிவந்தேன்
பின்னும்பர் காணப் பெயர்ந்து. (36)

நூல்வலிக்காம் நுண்ணறிவ னுந்தூத னேன்மைமிகும்
வேல்வலிக்கும் வில்வலிக்கும் மேலோர்முன் வால்வலிக்கை
காட்டும் வளநகரிற் கால்வலியைக் காட்டிவந்தேன்
நாட்டுங் கரவலியென் னும். (37)

இன்னபல பன்னி யிறைஞ்சு முடியுடனே
மன்னவன்முன் வானரத்தார் மன்னிற்ப வன்ன
தனைநோக்கும் வள்ளல் தனைநோக்கி யுள்ளில்
மனம்நோக்கும் வீடணன்சொல் வான். (38)

வாங்குமணி யன்னோன் மவுலி தவலரிதாய்த்
தாங்குமணி யன்றோ தரமில்லான் தீங்கான்
சிரத்தி னுயிர்மேலுஞ் சீரியதே யன்னோன்
விரித்தபுகழ் கொண்டாய் விரைந்து. (39)

பார்சுமந்த பாம்பின் பணமணியைப் பற்றினுடன்
வார்சுமந்த காற்கல்ல வல்லவன்முன் தாரார்
மவுலிபத்தின் மாமணியை வல்லமையால் வாங்கல்
குவலயத்தி னோர்செயலா கும். (40)

Koviloor Digital Library

கண்ணுதலான் சென்னி கவினும் பிறையுடனே
கண்ணன் றிருமார்பின் கண்மணியும் நண்ணிப்
பறித்தாலு மென்னே பருவலியாய் வன்மை
குறித்தாலு மேன்மை யிதா கும். (41)

தொடியிமைக்குந் தோளுடையாய் சொல்லவகை யுண்டோ
வடியிமைக்கும் வாள்சிவன்பால் வாங்கும் கொடியான்
முடிமணியைத் தந்தெதொன்றோ முற்றுமவன் வெற்றிக்
கடிமணியைத் தந்தா யடர்த்து. (42)

வென்றி யிதினுண்டோ வீர புவியதனை
நன்றெயிற்றிற் கொண்ட நலத்தெறுழி யன்றாகில்
ஆர்க்காகு மென்றான் அமரர்க் கருளியதாற்
பார்க்காகு மெம்மான் பரிந்து. (43)

தன்புதல்வன் வென்றி தசமுகன்றன் மோலியுற்ற
மின்புரையு மாமணியை வேறல்கண்டா னென்றெழித்தா
லொன்றடுக்கு மென்றரக்கற் கோடியொளிப் பான்போல்
என்றடுக்கும் மேலவரை யில். (44)

கங்குலது நேரக் கருது மணிவிளக்கின்
வெங்கழலான் மோலி விளக்காகச் செங்கதிரோன்
மைந்தனியல் வென்றி மதித்துமலை விட்டிறங்கித்
தந்தனியில் லானன் றவன். (45)

என்றானு மித்தன்மை யெய்தா விலங்கைமனன்
நன்றாளுந் தேவர்கடை நாணத்தாற் பொன்றாது
பொன்றும் புகழுடனே போயினன் பெண்கள்விழி
அன்றா டவர்கண்க ளாய். (46)

மகுட பங்கப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

அணிவகுப்புப் படலம்.

மானத்தா னல்லன் மருமத்தான் மாமுகங்கள்
கூனத்தாந் தாமரையாய்க் கோயிலுற்றான் பானத்தான்
அல்லனட னம்பாட லாகான் சயனத்தான்
வல்லனவும் பேசான் மருண்டு. (1)

வையம்விற்றும் நேரா மணியிழந்த வாளரக்கன்
பைய்யுயிர்க்கும் பாம்பணையிற் பள்ளிகொண்ட வையன்
தனைப்பிரிந்த மாவனந்தன் தன்னை யடுத்தான்
வினைப்படர்செய் வேலரக்கர் வேந்து. (2)

தாயிற் பழகினரும் தன்னிலைமை தானறியா
மாயத் தரக்கனைக்காண் வாயிலுற்றான் சேயவர்தம்
சேனைநண்ணிச் செய்யுந் திறமுரைக்குந் தூதன்வந்தா
னேனையெண்ண மென்றா னெடுத்து. (3)

அழையென்ன வெய்தி யடிவணங்கி னானைப்
பிழையன்றிச் சொல்கவெனப் பேச முழையுற்ற
சீயமன்னான் சிந்தைத் திறத்தை முகத்தறிந்தான்
ஆயசொன்னான் மெல்ல வடுத்து. (4)

வீரியத்தி னாம்பதினேழ் வெள்ளம் படைசூழ
மாருதிக்காம் மேலை வரவாயில் ஆரியன்தான்
வெள்ளமுன்போற் றாம்வடவாய் வேண்டி யினன்மகனை
உள்ளமன்பிற் சோற்றா னுவந்து. (5)

அன்றிசையும் வெள்ளத் தரசன் றருமகனைத்
தென்றிசைவாய் வென்றிதனைச்செய்யவென்றானன்றிசைமை
காலன் தனைத்துணைகொள் காவலர்க ளோடடுத்தான்
நீலன் குணவாயி னோர். (6)

Koviloor Digital Library

இம்பரியை காய்கனியை யேற்ற விரண்டுவெள்ளம்
வெம்பும் படைக்குணவு வேண்டிவிட்டா னும்பிதனை
வாயிலெலாஞ் செய்யும் வகையறிந்து சாற்றவென்றான்
நேயமிக்கான் தம்பியொடு நேர்ந்து. (7)

சார்த்தூலன் சொல்லத் தழங்கெரியாங் கண்ணுடையான்
பார்த்தாளி பொங்கிப் படர்வனவும் தேர்த்தாறு
நெய்த்தோரி னுலடங்க நேர்ந்து படுப்பனென்றான்
கைத்தோன் மனது கனன்று. (8)

மாவனையும் நீல வரையி னிளவெயிலாம்
தாவனையும் நெய்த்தோராந் தோளுடையான் ஏவனையும்
விற்காமன் பூங்கணையால் வெம்பரக்கன் வந்தடுத்தான்
தற்கால முற்றும் சபை. (9)

செய்யுமுறை யெண்ணுந் திறந்தேர் மரபினுற்ற
மையி லமைச்சர் வருகவென்றான் ஐயிரண்டு
கோடிகணங் காவல்வலி கொண்டடுக்கு மண்டபத்தின்
மாடிகலும் வீரரொடு வந்து. (10)

அளந்தறியு மந்திரர்க ளான்றமுக நோக்கி
வளந்தரிக ளோடுவரர் வாயில் விளைந்ததுபோர்
என்றடுத்த நம்மையினி யேற்றசெய லென்னையென்றான்
குன்றடுத்த தோளான் குறித்து. (11)

எழுபது வெள்ளமரி யேற்ற மதிலைத்
தழுவியது செய்தரத்தைச் சாற்று யழுவாீர்
வேலைகொண்ட நம்படைசூழ் மேலா யிரவெள்ள
மாலைகொண்ட திங்கர வாய். (12)

எழுப்படைவே றண்டுகையி னில்லாப் படையாம்
முழுப்படைக்கை நம்படைதான் மூண்டால் வழுத்திச்
சுரர்பின் னிடுவர் துயர்குரங்கி னென்றாற்
தரமன்னும் நம்வலிமெய் தான். (13)

Koviloor Digital Library

ஈதா மிவர்கீகட்சி யென்று னிடியினக்குக்
கோதார் கிகும்பன் கொடுஞ்சினத்தான் தீதாகும்
காமங் கெடுத்ததெனக் கையடித்தான் வையமிசை
மாமன் கடுத்துரைசெய் வான். (14)

புக்கெரித்திவ் வூரைப் பொடிபடுத்திப் போயினற்குச்
சக்கரமுண் டோவரசன் சார்தலையா மிக்கிரிமேற்
தக்க மகுடமணி தம்மைப் பறித்தடைந்த
சுக்கிரிவற் குண்டோ துணை. (15)

தொடைகலந்தி ராமன் றொடுப்பதற்கு முன்னம்
சடைகலந்த கூந்தலளைத் தந்து படைகலவா
நாமப் படையுடைய நாதன் சரணடைந்தால்
ஈமப்ப டாதுநம்மு யிர். (16)

என்புழியா மாலிதனை யேற்றெரியி னேக்கியென்பால்
வன்பழியைத் தந்திடுதி வார்த்தையினு லன்பழியும்
சிந்தைகொண்டா யென்றான் சிறந்தவவன் பேச்சுவிட்டான்
நிந்தைகொண்டான் புந்தி நினைந்து. (17)

காட்டும் படைக்கரத்துக் காலகே யர்த்தொலைத்து
வாட்டும் படைவீர மாவலத்தாய் நாட்டும்
படைநூ றிரண்டுவெள்ளம் பாங்கடுக்கக் கீழைக்
கடைசேரும் வாயிறனைக் கா. (18)

காலற்குக் காலாய்க் கருது மகோரதனி
மாலா மகாபார்ச வல்லனொடு கூடக்
குரங்கொன்றக் கொல்வாய் குறித்த படையால்
வரங்கொண்ட தென்றிசைவாய் வந்து. (19)

ஏற்றந்தா னென்னுகு மிந்திரன் றன்பகைவ
காற்றின்சேய் வன்மைதனைக் கண்டவனி நூற்றிரண்டு
வெள்ளம் படையுடனே மேலைத் திசைவாயி
லுள்ளம் படக்கா வுவந்து. (20)

Koviloor Digital Library

இந்நெடிய கால மிமையோர்க் கிறுதிகண்டாய்
புன்னெடிய வானரத்தாம் போர்புகழென் அந்நெடிய
மூலத்தாந் தானையொடு முற்று நகர்காவல்
கோலவிரு பாக்கவென்றான் கோன். (21)

சேனைத் திறளிற் செறிந்தவிரு நூறுவெள்ளம்
தானைத் திறப்படைக டாஞ்சூழ நானே
வடதிசையாம் வாயில் மதில்காப்ப னென்றான்
மடமிசையாஞ் சிந்தை வலன். (22)

கலங்குகங்குல் நீங்கிவரல் கற்பமதாய்க் காணு
கலங்குலவு தேவர்மறை நாவர் பொலங்குழையாள்
நல்லோர்க்கு நாதன் நயமி லரக்கனொடு
பல்லோர்க்குஞ் செய்தனவின் பம். (23)

அளித்தகையில் லாம லலர்ந்தோனுக் கஞ்சி
வெளிப்படற்கு வேதனைசெய் வேலை களித்தோர்
களிப்பகலக் காப்போரைக் கண்ணுற்ற வெல்லி
வெளிப்பகலாய் வந்தான் விரைந்து. (24)

உளைப்புற்ற வேலைநிலை யோங்கலொடு தூர்ப்ப
அளப்பற்ற தூளி யடற்கா மிளைப்பில்
தலைவர் சொலவெயிலைத் தாவி வளைத்த
நிலைவரம்பில் சேனை நிலைத்து. (25)

தந்திரங்கள் சூழ்ந்திலங்கை சார்மதிலைத் தாவினவாய்
அந்தரமீன் சிந்த வடலார்ப்பாற் செந்தரத்த
சூரியன்சேய் தம்பி துரிதமுடன் முன்செல்ல
ஆரியன்சேய் வந்தா னமர்க்கு. (26)

நூற்புலவ ராலும் நுனிக்கா வரமுடைத்தாய்
வேற்புலவர் வீரர் விழைதிறத்தாய் ஆர்ப்புடைய
கார்க்கடல்பின் சூழக் கவிக்கடல்சூழ் காட்சியவூர்
பாற்கடலி னாப்பணுனும் பாங்கு. (27)

Koviloor Digital Library

அலகிலவாஞ் சேனை யகத்தரியின் றானை
அலைகொலெனச் சூழும் வரம்பு கலையாம்
பரவையெழுங் காலம் பரவு முலக
மொருவகையாய்க் கூடலொத்த து. (28)

அணிவகுப்புப் படலம் முற்றிற்று.

அங்கதன் றூதுப் படலம்

வள்ளல் வடதிசையாம் வாயிறனில் வானரத்தாம்
வெள்ள மெழுபதுடன் மேற்சூழ்ந் து கள்ள
வினையான் வரவறிவான் வீடணன்பாற் கூறும்
இனையான் மொழியை யெடுத்து. (1)

தூதுவனை யிவ்வழியிற் றூண்டித் தவகிதியா
மாதுவனை யாளேவிட மாற்றுவனேற் காதும்
கடனென்றெ னுள்ளம் கருதும் அறத்தாம்
தடநின்ற நீதியென்றான் தான். (2)

அரக்கர்கோன் கேட்டா னழகிற்றே யென்றான்
குரக்கரசன் கொற்றமெனக் கொண்டா னிரக்கம்
இழுக்கமென்றான் தம்பி யினியம்பு பூட்ட
வழக்கெனென்றான் சிந்தை வரைந்து. (3)

தேசிகிற்கத் தக்கசிறை செய்தான் சுரர்களொடு
பூசுரர்க்குத் துன்பம் பொருத்தினன் ஆசை
யவளவுல கெல்லா மடைந்தும் குமார்க்கம்
எவளவினுஞ் செல்வா னிழிந்து. (4)

வாழியாய் நின்னை வரம்பில் துயர்வைகத்
தாழ்விலாத் தேவி தனையெடுத்தான் ஏழைக்
கிரங்கிவந்த தந்தை யிகல்வலியைச் செற்றான்
வரங்கிடந்த வாளை மதித்து. (5)

Koviloor Digital Library

அன்னவற்குப் பொன்னேவிடி ஞன்ற வுயிர்தந்தாற்
பின்னவற்கு மன்னிலங்கைப் பேச்சென்ஞே முன்னம்
முனிவர்க் குரைத்த மொழியும் பழுதாம்
அனேவர்க்கும் நன்மையல்லே யாம். (6)

அறந்துலங்கு நன்மை யறிவி னவற்றை
மறந்திலங்கை வாழ்வை மதித்து மிறந்திவைதாம்
போதனல மன்றெனினும் போரே புகழென்ருன்
நாதனலத் தெண்ணும் நகைத்து. (7)

அயர்த்ததிலே யன்னவைதா மாமெனினு மான்ருேர்
நயத்ததிற னீதி நமக்காம் புயத்ததிறல்
வல்லவரென் ருலு மருவு பொறைசயத்தாம்
நல்லவலி யென்ரு னயந்து. (8)

மாருதிதான் செல்லின் மறித்திவனே யன்றிவந்து
சாருதிறல் வீரரிலாச் சார்படுக்கும் யாரினிச்சார்
தக்காரே யங்கதன்ருன் சார்ந்து வருமொன்ஞர்
மிக்காரேல் வென்றி மிலேந்து. (9)

நன்றவனேக் கூவிநம்பி நண்ணலன்பாற் சென்றிரண்டி
ஞென்றவனேச் செய்ய வுரைத்தி யென்ருன் குன்ருய்
உயர்ந்ததவன் ருேளென்ரு லுற்றமனங் கொண்டு
நயந்தமுதஞ் சாற்றுதற்கென் ஞும். (10)

என்னவற்குச் சொல்வதென வேந்திழையை விட்டுயிரைத்
தன்னதெனச் செய்யநன்ருே சார்தலேகள் சின்னபின்ன
மாகக் களத்தடுத்தற் காமோ விரண்டிஞென்று
வாகொத்துச் செய்ய வழக்கு. (11)

அறத்துறையோ வீரற் கழகோ விதாண்மை
மறத்துறையோ சேம மறைதல் நிறத்துறத்தான்
வாளிசெல்வாய் நிற்குமெனின் வந்துபுரம் போர்த்தற்கென்
மீளிசொல்வா யென்ருன் விரைந்து. (12)

Koviloor Digital Library

பார்வணங்கிச் சீயம் படர்ந்த தெனவீரன்
கார்வணங்கும் வில்லம்பாய்க் காயமுற்றான் மாருதியாம்
அல்லதெனி லங்கதனென் றான்றேன் அருளமைந்தேன்
இல்லையெனில் வீரருல கில். (13)

அயில்கடந்து நோக்கு மரக்கரட வாழித்
துயில்கடந்த யோத்திவந்தான் றூதன் வெயில்கடக்கா
மேருவென நேருமெயில் மேற்போ யிலங்கையெய்திச்
சீருறவி லானோர் செலும். (14)

அழுகின்ற கண்ண ரனுமனென வஞ்சித்
தொழுகின்ற சுற்றம் துயர்த்தாய் மொழிகின்ற
வீரனுரை காதுகளின் வீழ வியந்திருக்கும்
கோரனுறை கண்டான் குறித்து. (15)

கல்லுமர முண்டு கடல்கடந்த சொல்லுண்டு
வெல்லுமெனிற் கூற்றமொன்ற மேலுண்டோ வெல்லாம்
படையா னெதிர்க்கிற் பரம்பொருளி ராமன்
உடையா னெதிர்க்கைக் குறும். (16)

இன்றிவனை நோக்கு மெனக்கெதிர்ந்த போரினெலாம்
வென்றிவனை தாதைதலை மேற்செகுத்து நின்றவரன்
வந்தானென் றெண்ணலன்றி வாழ்வுயிர்க்கு வேண்டுபவர்
மைந்தான தென்று மதிப்பு. (17)

அணிபறித்துச் செய்யு மழகுடையா ளாசைப்
பிணிபறித்துக் கொல்லும் பெலனுர் பணிபறித்த
மானக் கலுழனென மாற்றி மணிபறித்த
கானவலன் தந்தையதி கன். (18)

நெடுந்தகைபொன் றூத னிரம்பவினை யெண்ணிக்
கடுங்கனல்கூற் றாற்கரங்கால் காட்டி விடுஞ்சுடர்செய்
மாமகுட மின்ன மறிகடலெல னுங்கொடிய
கோமகன்முன் னின்றான் குதித்து. (19)

Koviloor Digital Library

நின்றவனை யன்று நெருப்பெழத்தான் பார்த்துரப்பி
இன்றுவரு நீயாவ னெய்தியதென் கொன்றிவர்கள்
தின்றுமுன் சொல்வாய் தெரிய வெனவுரைத்தான்
அன்றனுஞ் செய்தா னசி, (20)

பூதங்க ளுதன் புவிநாதன் பூமேலாஞ்
சீதங்கொள் சீதைவரன் செப்பும்நீ வேதத்தாம்
நாதனவன் மேல்விதிக்கு நாதன் தெரிந்துவிட்ட
தூதனிவண் வந்தேன் றுணிந்து. (21)

அரன்கொ லரிகொ லயன்கொலா மன்றிக்
குரங்கிலாஞ் சேதுகட்டிக் கொண்டிங் கிரங்கினுந்தான்
ஆன்ற பயத்தா லரிய வுனையேவும்
என்றநர னீசனென்ப தே. (22)

கங்கை யணிந்த கடவுள் திருமாலாம்
சங்கை யணிந்தவரன் சாரார்க ளங்கவர்க்கு
மன்றி மனிதற் கடுத்த தனித்தூத
னென்றுவந்த நீயா ரியம்பு. (23)

இந்திரன்றன் செம்ம லிராவண னென்பானைச்
சுந்தரத்தோள் வால்வலியிற் றூங்கவே சிந்துரத்தாம்
மாமலைக டாவி வரவேலை யைக்கடைந்தான்
கோமகனு னென்றான் குறித்து. (24)

உந்தை யெனதுணைவ னேங்கரமே சான்றதற்கு
நிந்தையவன் றூதனென நீயடுத்தல் தந்தனனன்
வானரங்கட் காந்தலைமை வந்து நயமடுத்தாய்
மானவர னென்மகனு வாய். (25)

தாதையைச்செற் றான்பின் தலைசுமந்து கையெடுத்துப்
பேதையைப்போல் வாழ்ந்த பிழைதீர்ந்தாய் சீதை
தனைப்பெற்றே னுன்னைத் தனையனுமாயப் பெற்றேன்
எனைப்பெற்ற நன்மை யிதின். (26)

Koviloor Digital Library

அன்னரர்க ளின்றே யழிவதற்கோ ரையமிலை
யுன்னரசை யுற்களித்தே னூழிவரை மன்னவனுத்
தேவர் புகழத் திருமகுடஞ் சூட்டிவைப்பேன்
தாவில்புகழ் தந்தனையென் றான். (27)

அங்கதனுங் கேட்டதனை யங்கை யடித்திலங்கை
துங்கதனுத் தோண்மார் துளங்கநக்கா னிங்கா
மிருப்போர்க் கிறுதியென யெங்களிடை வந்தான்
பொருப்போதோட் டம்பி புனைந்து. (28)

வாய்தரத்தாற் சொல்லி வசஞ்செய்ய வெண்ணுதியே
லாயதரத்தா தூத னரசாள்கை நீதரத்தான்
நான்கொள்ள லென்னுகும் நாய்தரத்தான் சீயமது
தான்கொள்ள லென்னுந் தரம். (29)

அடுவனெனப் பொங்கி யரக்கன் படையாற்
றொடுவன் குரங்கையெனத் தோன்றி நடுவன்செய்
நாட்குரியான் றூத னுகிவரல் சொல்லென்றான்
கோட்குரியான் சிந்தை கொதித்து. (30)

கூவியென்னைச் சென்று குலமுழுதுங் கொல்லநின்ற
பாவிதன்னை யின்றும் பதுங்குவனைத் தேவி
தனைவிடுக வன்றேற் சமர்க்களத்தி னுவி
தனைவிடுக வென்றான் தவன். (31)

பருந்துண்ணப் பாட்டி படுத்தநாண் மாமன்
மருந்தினியான் மாண்டும் வனத்தி னிருந்துழிதான்
வந்ததங்கை மூக்கரிந்தும் வாராக் குடிகேடன்
வந்ததங்கே யென்செயற்கா வாம். (32)

இளையாம் படைஞரொடு கேடி லுயிர்க்குக்
களையா மிளைஞர்சென்ற கண்டு மிளையோன்
பிரிந்திடற்கு மாயம் பிடித்த வரக்கன்
வருந்திவரற் குண்டோ வகை. (33)

Koviloor Digital Library

ஏந்திழையைக் கண்ணுற் றெதிர்ந்த வரையெற்றிச்
சாந்தாய்ப் புதல்வற் றரைதேய்த்துக் காந்தெரியைத்
தன்னூர் மடுத்துத் தடங்கடலைத் தாவிவந்தான்
பின்னூர்ந்தா னில்லையெனப் பேசு. (34)

உடைக்குலத்தா ரொற்ற ருயிர்கொடுத்துக் கள்ளம்
துடைத்தும் வருணன் றொழுதும் குடைத்தொழிலை
யும்பிக்கித் தந்து முயர்கடலை யுற்றடைத்தும்
அம்புய்க்க வாராற்கென் னும். (35)

மறிப்புண்டோர் காண மணிவரைத்தோள் வைகும்
நெறிப்புண்ட கூந்தலர்முன் னென்னல் பறிப்புண்டான்
மோலிப்புலி யன்னான் முறைகவர்ந்தும் வந்திலனால்
மேலினிப்போ ரென்னும் விரும்பு. (36)

என்றியம்பி வாவென்று னெண்ணி யுரைப்பதனை
நன்றியம்பி விட்டா னயமுண்டா மன்றதெனிற்
பொன்றுதலைக் கொண்டாற் புறப்படென்முன் வாயல்தனில்
வென்றுதலைக் கொள்ளல் விடு. (37)

நீரினொடு காலி னெருப்பிற் செறித்துநின்ற
பாரினொடு காயத்திற் பட்டவெலாம் போரினிடைப்
பட்டு விழப்பொருதும் பாங்குடைநீ யூரினுற்றூற்
றட்டபழி யென்றான் தடுத்து. (38)

சொற்றவண்ணங் கேட்டுத் துடித்தா னவனுயிரை
முற்றுமுண்ண வெண்ணு முனிவுடையான் பற்றிப்
பிடியுமென நால்வர் பிறங்கெரிபோல் வீழ்ந்தார்
முடியுமெனச் சொல்ல முனிந்து. (39)

எவியவர் சூழ்ந்தவரை எற்றி யெடுத்தெழுந்து
தாவியவர் தங்கடலை தான்போகத் தூவிச்
சிகரத்தாம் வாயில் சிதைத்தா னவரைப்
பகரத்தான் முற்றும்வியப் பாம். (40)

Koviloor Digital Library

ஏமங் கவின யெளியோ ரெவரும்நீர்
தூமங் கவினுஞ் சுடுசரங்கள் வேமின்
எனவீழதன் முன்ன மிவண்விடற்கா மென்றான்
தனிவீழ் தனையனங்க தன். (41)

அந்தரத்தின் முந்த வதிர்த்தெழுந்தான் மார்பதனிற்
சிந்துரத்தஞ் சேர்ந்தொழுகு செச்சையவ னிர்ந்து
குடிலத்தி னின்றிழிந்த கொள்கை வணங்கும்
சடிலத்தான் தன்னடியைச் சார்ந்து. (42)

உற்றடுத்த போதவன்ற னுள்ள முரைப்பான்மன்
கொற்றமுற்ற வீரவர கொள்கையது முற்ற
முடிவடுக்க வோதியெனை மூர்க்கன் தலைகள்
படியடுக்க வாசை படும். (43)

அங்கதன்றூதுப்படலம் முற்றிற்று.

முதற் போர்ப் படலம்

பூச லடுக்கும் புகலப் பிரிதிலையென்
றாசை யடுக்கு மணிமுரசாய்ப் பாசறைகள்
பற்றிவரு வாயல் பரவ வருசொல்லை
முற்றிவர வென்றான் முனிந்து. (1)

மற்றடுத்து நின்ற மலையு மறங்களையும்
பற்றெடுத்த வீரர் பரவையெனக் கற்றடுத்த
கைகளினல் முற்று கடிநகரைச் சுற்றகழைச்
செய்கையினற் றூர்ப்பீர் தெழித்து. (2)

இடும்பின் மரங்க ளியங்கலற வெங்கும்
தடுமின் அமர்க்குவரச் சாற்றும் கடுமின்
கதிர்மீச்செ லாமதிலிற் காணும் குடுமி
யதைவீட்டு மென்றா னடர்த்து. (3)

Koviloor Digital Library

தடங்கொள் மலையும் தருக்களையுந் தாங்கி
மடங்கலன வானரர்கள் மன்னு மிடங்கர்
விரியப் புனலேற வேலை யகழை
இரியத் தடுத்தழித்த தே. (4)

ஏயதொரு வெள்ள மெழுபதுமா வெண்கடலை
ஆயவெள்ளமாமகழி யைத்தூர்க்கத் தூயவெள்ளம்
தோன்றித் துணைசெயல்போற் றோன்றுந் துணைவாயில்
கான்றுவரு மெங்குங் கவிந்து. (5)

விளையும்வென்றி வேலரக்கன் மெய்சேர் புகழை
முளையி னொடு கிளைத்து முற்றத் தளையவிழ்ந்த
தேனரங்கத் தாமரையிற் சேரும் வளையமதை
வானரங்கள் வாங்கி வரும். (6)

எளையுற்ற தார மியம்பி வருவண்டர்
பாளையுற்ற தாதுகுநீர்ப் பண்ணையுற்ற தாளடுத்த
தாமரையி னன்னங்கள் தாவும் கயல்தாவும்
மாமருவு வானரந்தா வ. (7)

இகழடுத்த தன்மை யிராவணன்றன் மேன்மை
புகழடுத்துப் போன பொருந்த நிகழ்கண்ணும்
நீல முகிழ்த்தல் நிறையகழி நின்றேங்கிச்
சால வழுவதுபோற் றான். (8)

தண்டிருந்த சாம்புநதத் தாமரைகள் தாளறத்தான்
பண்டுசிதையப் படர்சிறைய வண்டிருந்த
வாயெடுத்த முட்டையொடு வானிற் பரந்தனவாம்
கூயடுத்த வன்னக் குழாம். (9)

வாகடுத்த மாமரமு மாமலைக ளுந்தொடர்ந்து
மீகடுத்த நீர்நெறுக்கி மீளுதலால் நாகடுத்த
ஏறுகொண்ட பேரகழி யின்னின் றெடுத்தபல
வாறுகொண்ட வத்தி யடுத்து. (10)

Koviloor Digital Library

இழுதும் பெருங்க லிடுகின்ற தோருஞ்
சுழிகொள்ளத் தோன்று சுரைதான் ஒழுகிவரு
தாமரைக ளொத்தனவாம் தண்ணீரின் மூழ்கியெழு
காமரிள மாதர்மு கம். (11)

வன்மை யிகழரக்கன் மானகரைச் சூழ்ந்தடுத்த
தொன்மையகழ் வானரங்க ளேர்த்தவெனில் நன்மையென்னும்
ஒன்றுடைமை யுற்றவர்க்கு மோங்குதலி லின்மைக்கும்
துன்றுவரம் புண்டாவ தோ. (12)

தூர்த்தவர வானரங்கள் சுள்ளி மடுத்திடத்தான்
சேர்த்த வணையடுத்துச் சிந்தினவாய் வார்த்த
மதிலின் வரம்படுத்து மன்னுகட லோடு
கதிகொண்ட மேகமஞ்சுங் காண். (13)

வட்டமிட்ட மேரு வகையாக வான்முகட்டை
எட்ட வருமதிலி னேறிவிண்ணை முட்டத்தான்
தொட்டடுத்த வானரங்கள் தோன்றினவா மீச்செல்ல
விட்டகொடி யென்ன விரைந்து. (14)

இறுத்தற்கு வேண்டுவதோ வெண்டீர் மணிகள்
வெறுக்கைமக மேரு விளங்கும் நிறுக்கும்
அதிவா னரங்க ளடுத்து நெருக்க
மதில்வான் தரைபுக்க வாம். (15)

அறைந்த்முர சானைதனி லாகுங் கொடியால்
மறைந்த நெடுவான் மதிக்கும் சிறந்தபெருந்
திக்கடுக்குந் தூளி சிறந்து வருமோதை
மிக்கடுக்கும் காயம் விரிந்து. (16)

கோடலம்புங் கோதை குறித்தலம்பும் வண்டுமுடன்
ஆடலம்ப ரித்தா ரலம்புமணி மாடலம்பும்
மாமணித்தேர்ச் சில்லி மதிக்கு மதயானை
தாமணியு மாமணியுந் தாம். (17)

Koviloor Digital Library

அரக்கர் குலந்தீர வல்லார் வருக்கம்
பெருக்கவர வாழ்வு பிறங்கக் கருக்கொண்ட
காலம் விதியடுத்துக் காட்டித் தருக்குபடை
யோலம் விதித்தடுத்த து. (18)

பற்கொண்டும் பாதவங்கள் பற்றி யடர்த்துமிகு
கற்கொண்டுஞ் சென்ற கவிக்கடலும் விற்கொண்டும்
வேல்கொண்டு மற்றை விளங்கு படைகொண்டுங்
கால்கொண்ட மற்றைக் கடல். (19)

மாக்கைக் கவிகள் மலைக்க வருகற்கள்
தாக்கத் தலைகள் தகர்ந்ததனால் நாக்கும்
செவிமூக்கி னேடு செறிந்து சொறிந்த
புவிமூழ்க்கு மூளை பொலிந்து. (20)

அற்களொடு நேரும் அரக்க ரடுகரத்தாம்
விற்களிடு பாணமட வெம்புண்ணீர் பற்கள்
சொரியப் பிடித்தகற்கள் சோர வுருண்ட
வரியொப்பு மோகணக்கி லாய். (21)

நின்றமதி னெற்றி நிகரடுக்கா வானரராம்
வென்றி மதிப்பார் விசித்தகற்கள் குன்றின்
இடிவிழுந்த தென்னவட லேற்ற வரக்கர்
படிவிழுந்து பட்டார் பலர். (22)

எதிர்த்த குரக்கினுட விற்ற படியே
மதிற்புறத்து மண்ணின் மறைந்த கதிர்க்கொடுங்கண்
வல்லரக்கர் கையால் வழங்கி வரவாகும்
அல்லரக்கும் பல்லவங்க ளால். (23)

கடித்த கையாற் குத்திக் கழுத்தை நெரித்துப்
பிடித்த வுகிராற் பிளந்த விடித்தெற்ற
எண்ணி லரக்கர்களை யேத்து முடித்துமென
கண்ணி யடுவா னரம். (24)

Koviloor Digital Library

எறிந்துமெடுத் தெய்து மெழுமுளையிற் றண்டின்
அறைந்துமடுத் தாகத் தழுத்தி நிறைந்துகொண்ட
வெங்க ணரக்கர் விரைந்து நெருக்கலினல்
பங்கம் குரக்குப் படை. (25)

செப்படுத்த செம்புனலாற் சேருஞ் சுவணமதில்
துப்படுத்த போன்றனவாம் சூழ்வரைகள் செப்பும்
பிணக்குவையைக் கொண்டு பிறங்கு முதிரம்
மணக்குங் கடலடுத்து வந்து. (26)

வந்திரைத்த வான்பரவை வார்ந்து மயங்கினவாம்
அந்தரத்தி னேநெருங்க வாங்கொருபொற் பந்தர்பெற்ற
போன்றனவா மிந்திரற்கும் போகா விலங்கைதனில்
என்றனவா மென்னு மிசை. (27)

தங்கு கனல்போற் றயங்கு குருதியிடை
கங்கு லனகவந்தங் கைதூக்கி யெங்குநிறைந்
தாடினவாங் கூடு மலகை யவைகண்டு
பாடினவாம் நின்று பரிந்து. (28)

கொன்னிறத்த நெய்த்தோர் குடைந்து வருபுட்கள்
தொன்னிறத்த தம்சிறையாற் றாவுதலால் பன்னிறத்த
கேதனங்க ளெல்லாம் கிளர்ந்துவரு சென்னிறத்தாற்
கோதணங்கா தாகியடுக் கும். (29)

பொழிந்துவரு சோரிப் புனல்மீது பொங்கி
வழிந்து மதில்விட்டு மல்கும் மொழிந்தமகா
மேரு வரையும்பர் விட்டிம் பரினிழிந்த
வீரையென லாகும் விரைந்து. (30)

பதன மதிலும் படையடுத்த நாஞ்சில்
கதனவா யட்டாலை காணும் முதலவாய்
பொங்கி யெழுந்த புணரி புகலானர்
வெங்க ணரக்கர் விழுந்து. (31)

Koviloor Digital Library

பாய்ந்த விரத்தப் பரவைதனிற் பற்பலவா
நீந்திச் செலவாம் நெருக்கினிடை சாய்ந்த
சரம்பட்டுத் தள்ளிச் சரிந்த பலவாம்
புரமிட்டங் கோடும் புகழ்ந்து. (32)

தழுவிவரு வானரமாத் தானையது சாய்தல்
பொழியும் படைக்கடல்தான் பொங்க வொழியவரு
காலத்தா மூன்றுலகுங் காணக் கடலார்க்கு
மோலத்தைத் தாமொத்த து. (33)

முரச முருடு முரட்சங்க மோடு
முறைசெய்யு மாகுளியி னோசை விரசிவரு
மாகுலத்த பல்லியங்கள் வல்வில்லி னோசைகடற்
காகுலத்தைச் செய்யு மடுத்து. (34)

ஆயவரு காலை யனைத்துலகு மாக்கிவரு
நாயகன்கம் நான்கும் நடந்ததென மேய
படைக்கடலும் வாயில் பரவி யடுத்த
தடைக்கரிய வாகித் தகைந்து. (35)

நெருக்கி நிருதர் நெருங்க வதனாற்
குரக்குப் படைகள் குறைந்தாங் கருக்கன்
மகனாக வந்தடுத்து வந்து செருக்கும்
முகனாக வந்த முறிந்து. (36)

சாய்ந்து வரு தானைத் தளர்வும் மலைத்தெதிரிற்
பாய்ந்துவரு தானைப் பணைப்பதுவுங் காய்ந்தநெஞ்சிற்
கண்டெடுத்தான் கையிற் கனமா மரத்தண்டை
விண்டெடுத்தா னென்ன விரைந்து. (37)

வாரணத்தின் முன்னும் வயமாவின் முன்னடுத்தும்
தேர்முகத்தின் வீரர் திருமுன்னும் ஒரொருத்தற்
கோரொருத்த ராக வொடுங்கான் றிலைத்தனனும்
தோரணத்த னாகத் தொடர்ந்து. (38)

Koyiloor Digital Library

களிறு பரிசிருதர் கால்க ளறத்தான்
ஒளிறு மணித்தே ருருட்டிக் குளிரடுத்த்
சோரி நிறையத் தொலைத்தான் மரங்கொண்டு
வேரிநிறை தாரான் விரைந்து. (39)

அன்ன சமைய மரிகுலத்து வீரர்களும்
மன்னடுத்தி ராக்கதரு மற்றடுத்தார் முன்ன
முழங்கு பெருஞ்செருவில் முற்றி முனிந்தார்
வழங்கு பெரும்படையார் வந்து. (40)

கற்றூரந்த மேலும் களம்படத்தான் வஞ்சகர்கள்
இற்றுலர்ந்து போனபடை யெண்ணிலவாம் விற்றூரந்த
வெங்கணையி னுலுடலம் வீறிப் பிளந்துநிலை
மங்கினவாம் வானரங்கண் மற்று. (41)

கற்கடந்து கொண்டு கலந்த பெருஞ்செருத்தான்
மற்கடங்கள் கொண்டு வழங்கினவாற் றற்கடங்கி
மாண்டா ருயிரு மருவினவாந் தென்றிசையின்
ஆண்டா ருயிர்ப்படங்கி னர். (42)

பாடுகின்ற பேய்க்கணங்கள் பன்னுமிசை கெட்டவுட
னுடுகின்ற வெங்கு மறுகுறைகள் கோடும்
உதிரம் புகுந்த வுடலடுத்து நாடும்
கதிர்தங்கு கற்புடையார் கண். (43)

யானைபட்ட தாக வழியும் புனமேலாம்
பானல்பட்ட பல்கணையின் பாரிப்பால் சோனை
படவதனுல் வானரங்கள் பட்டுவரு புண்ணீர்
கடவவரு மாறு கடுத்து. (44)

காய்ந்தடுத்த வானரங்கள் கையா லெடுத்திடிக்கத்
தேய்ந்தடுத்தோர் மேனிவரு செம்புண்ணீர் பாய்ந்துடுத்த
தானைப் படுகளம்பாழ் சார வரக்கர்படை
கானைப் படரும் கரந்து. (45)

Koviloor Digital Library

தங்கள் படைசாய் தலைக்கண் டடங்காத்தீ
வெங்கணரக்கன் விரைதேரைக் கங்கம்
தொடரக் கடலிடைசெ றூய வங்க மென்ன
வடர்க் கடுத்தா னடுத்து. (46)

வந்தடர்த்துத் தாக்கி வடிக்கணை மாரியினல்
சிந்தடுத்த வானரத்தைத் தேய்த்திடலும் நொந்து
திகைத்தார்க டேவர் சிறந்த கவிமன்
தகைத்தான் படையைத் தடிந்து. (47)

நொக்கிவரு வஞ்சன் நொறில்வயத்த மாப்பரியால்
வீக்கிவரு தேரின் மிசைப்பாய்ந்து தூக்கிவரு
தூணிகொண்டு வில்லுந் தொலைத்தா னரக்கனையும்
பாணிகொண்டு பற்றிப் படுத்து. (48)

மலைகுலைந்த தென்னவரு வச்சிர முட்டி
நிலைகுலைந்து வீழவங்கு நின்றூர் குலைகுலைந்து
மானகரைச் சேர்ந்து மருண்டார் திறல்கெடுத்து
வானரரை மாய்க்கவரு வார். (49)

வீழிவெங்க ணுமரக்கர் வெய்ய படையடுத்தா
யூழிவெல்லு மாகடலி ேனேங்கினவாய்க் கீழைவாய்
கிட்டலுமே முட்டினர்கள் கேடில்லா வானரர்க
ளொட்டி யடர்த்தா ருகைத்து. (50)

சூல மயில்வாளந் தோமரங்கள் சக்கரங்கள்
வாலமொடு வாளி வழங்கியே யால
மெனவரக்கர் தாக்க விகல்வா னரங்கள்
சினமரக்க வீழ்ந்தார் திகைத்து. (51)

வென்றிவர வானரங்கள் வீசி யெறியவரு
குன்று மரமுங் கொடுங்காலிற் சென்றுவர
வீச நிருதர்சிந்தி விழ்ந்தார் புரவிகயம்
தேசுமிகு தேரும் சிதைந்து. (52)

Koviloor Digital Library

தண்டுவாள் சக்கரங்கள் சாயகத்தி னேடுமயில்
கொண்டு நிருதர் குறித்தெழலும் புண்டிறந்து
நெய்த்தோர் பொழிய நிகரடுக்கா வானரங்கள்
எய்த்தோடக் கண்டா னெதிர். (53)

எரியரசன் மைந்த னிருநிலங்கீழ் வேர
விரியுமரங் கையின் விளங்கத் திரியும்
நிருதக் கடல்சுவற நின்ற நெருப்பாய்ப்
பொருதிப் புனைந்தான் புகழ். (54)

தேரடுத்த பாகர் திறல்வாசி செம்முகக்கார்
சீரடுத்த சீயமுதற் றீரவெல்லாம் வீரம்
விழப்புடைப்பப் புண்ணடுத்து வீழ்குருதி யெங்கும்
எழப்புணரி யாக்கு மிசைந்து. (55)

அரக்கர்பெருஞ் சேனை யடுகளம் பாழா
வெருக்கொள் படைக்காவல் வீரன் பெருக்கும்வலிக்
கும்பானு வம்பாற் குரக்குப் படைவானிற்
செம்பாதி சென்ற செறிந்து. (56)

கண்டுநின்ற மைந்தன் கரடிப் படைக்காவல்
இண்டைகொண்ட வீர னிடும்பனடு சண்ட
மருத்துவக்க வந்தான் வரைசெறித்த கையான்
செருத்துவக்க வந்து செறுத்து. (57)

தொடுத்தபுங்கம் வீழுமுனம் சூழ்ந்தெடுத்த குன்றை
எடுத்தவங்கை கொண்ட விடும்பன் விடுத்தவுடன்
வில்லொடிந்து தேர்வாசி வீந்து கொடிவீரச்
சொல்லொடிந்து சூழ்வான் றுணிந்து. (58)

தேரழிந்தும் வீரச் சிலையழிந்தும் மாவுகத்திற்
காரிழிந்த பேருருமாய்க் காய்ந்தெதிர்ந்தான் பார்கிழியப்
பாய்ந்தான் சுரர்புறத்தைப் பார்த்த வமருடையான்
வாய்ந்தான் கரத்தினடு வான். (59)

Koviloor Digital Library

தத்திநின்று மார்பிற் றடக்கை யெடுத்தடர்த்துக்
குத்திநின்ற கும்பானு கொன்னெதிரின் மொத்தி
முடித்தலையைப் பற்றியுடன் மொய்ம்படுத்து நின்று
படித்தலத்தின் வீழத்தான் பழித்து. (60)

கடித்தலத்திற் காலிற் கழுத்திற் கரத்திற்
பிடித்தலைத்து நின்ற பிறங்கல் முடித்தாம்
முடித்தலத்தைக் கவ்விமிகு மூளைபட ரென்ன
வெடித்துவிழ வீழ்த்தான் விரைந்து. (61)

தன்படைக்கு நாதன் சதைந்த தனைக்கண்டு
துன்படைக்கு நெஞ்சன் சுமாலிமகன் முன்படைத்த
செல்லடுத்த தென்னச் சிறந்தகணை மாரிபொழி
வில்லெடுத்தான் கையில் விரைந்து. (62)

வாங்கிச் சிலைகை வரவான ரப்படைக
ளோங்கச் சிலைநா ணெறிந்துபடை பாங்கடுத்த
மாரி யெனச் சுடர்செய்வாளி பொழிந்தடர்த்தான்
சோரியெங்குஞ் சுற்றத் தொடர்ந்து. (63)

நூறுமடுத் தாயிரமும் நொய்திற் படுத்தகணை
வேறுபடத் தாக்கலினால் வெம்பியே யீறில்
குரங்குபடப் பீறிக் குவித்தான் குமுறிக்
கரங்குபட வீரன் கனன்று. (64)

குன்றநின்ற கொண்டு குறித்தடுத்துக் கூற்றமெனச்
சென்றெறிந்து சேனை சிதைத்திடலும் வென்றிக்
கணைநூறி னூறிக் கதிர்த்தான் மலையை
இணைநூற தாக வெடுத்து. (65)

மீட்டும் மராமரத்தை வேரி னொடுவாங்கி
ஈட்டு மிடியென்ன வெற்ற லுந்தான் கோட்டும்
சிலையும் கொடியும் திறற்பரியுந் தேரும்
நிலையில் பொடியாம் நிரந்து. (66)

Koviloor Digital Library

தேரிழிந்து வீரச் சிலையிழந்து சீறிவரு
காரிழிந்த பேருருமாய்க் காநதுவான் பாரிழந்தங்
கூரிழந்த சூரனென வோடினான் தண்டமுடன்
சீரிழந்த செய்கைத் திறன். (67)

வாய்மடித்துத் தீப்பொடித்த வன்க னுடைவலியன்
போயடர்த்தான் நீலன் புகைந்தெதிர்த்தான் தாயடுத்த
வன்கையிற் றண்டினொடு வாரிப் பிடித்தெறிந்தான்
கொள்கையான் கோவிற் குறித்து. (68)

அம்பரத்தின் வீசி யடர்ப்ப வரக்கனவன்
இம்பருற்றுத் தீமகனை யேற்றுடலிற் செம்புனற்றான்
சோரப் புடைத்தான் சுரர்நடுங்க மிக்கதிறற்
கோரப் படைத்தண்டு கொண்டு. (69)

அடித்தவுட னார்த்தா னதற்கிளையா வீரன்
எடுத்தபடி பற்றி யெறிந்து முடித்துமெனக்
கையெடுத்து மோதினான் கான்றவிரத் தங்குடித்துப்
பொய்யடுத்த வாய்வந்த போல். (70)

குருதிவாய் நின்றொழுகக் கூசா நிருதன்
வருதியென நீலனெடு மார்பிற் கருதிமுனம்
குத்திரத்தஞ் சோரக் குறித்திருவர் போர்வலியும்
எத்திறத்துஞ் சொல்லவொண்ணா தே. (71)

மற்றடுத்து நீலன் வலத்தா னரக்கனைத்தன்
சுற்றடுத்து வால்வளைத்துத் தோண்மார்பி னெற்றியுற்றும்
கால்வரையுங் கையாற் கடிதடிக்க வீழ்ந்தனனால்
மால்வரையா மெய்யான் மடிந்து. (72)

இறந்தான் பிரகத்த னென்றறிந்து வானோர்
சிறந்தா வலங்கொட்டித் தேர்ந்தார் மறந்தானும்
செம்மயிரார் வெள்ளெயிற்றார் சேராதார் சென்றமைந்தார்
பொம்மலிரா வூரிற் புகுந்து. (73)

Koviloor Digital Library

தெற்குலவு வாயில்தனிற் சென்ற நிசாசரர்கள்
கற்குலவு தோளங் கதனிற்ப வெற்குலவ
நின்றிலர்க ளோடினர் நேரும் சுபாரிசனும்
பொன்றினர்க ளோடடுத்தான் போய். (74)

நூற்றிரண்டு வெள்ளம் நொறிலடுத்த வீரருடன்
ஆற்றலுடைத் துன்முகனு மார்த்தெழுந்து மேற்றிசைக்காம்
வாயகத்து மேவி மடிந்தார் மருத்துமகன்
நாயகத்தாம் கைக்கால லால். (75)

அன்னதோர் காலே யயிந்திர வாயில்முதற்
றுன்னுபோர் கண்டவொற்றர் தோன்றினர் மன்னகே
ளென்றுவணங் கித்தா மிரிந்தார் செவியடுத்து
நின்றுவணஞ் சொல்வார் நினைந்து. (76)

கீழையுற்ற வாயல் கிளரு மரக்கர்படை
யூழியுற்ற நாளு முலவாத ஆழியுற்ற
சேனைத் தலைமகன்றான் சென்றான் றிரமடுத்த
வானைத் தலைமைகொண்டான் மாய்ந்து. (77)

வென்றி நிருதர் வெகுண்டு வருவீரர்
தென்றிசையோர் வாயிலிடை சேர்ந்துழியே பொன்றினன்
தக்க சுபாரிசனுந் தானை தடுத்தவரார்
புக்கவிடங் கண்டதிலை போந்து. (78)

வடக்கு வருவாயல் வச்சிரத்தா மேலோர்
குடக்குவாய் குன்றடுவாய் கூரர் அடக்கா
வலத்தைம் பதுவெள்ளம் மாய்ந்த கொடிய
அலத்தைநிகர் நம்படையென் றார். (79)

என்றுமருள் வார்த்தை யெரிபுகுந்த நெய்யாகச்
சென்றுமனஞ் சேரவரு சீற்றத்திக் கன்றிவரு
கண்ணுடையா னின்று கடித்த வெயிறுடையான்
எண்ணுடையா னின்றுயிர்த்தா னேற்று. (80)

Koviloor Digital Library

மறத்து மவனுயிரை வவ்வி னவனை
இறுத்துரைமி னென்று னிசையை நிறுத்துவலன்
நீலனெனும் பேரா னிகரில் படைத்தலைவன்
ஆலமென வந்தா னடர்த்து. (81)

உற்றடுத்த போதி னுடன்ற விருவர்களும்
கற்றெடுத்த போர்புரியுங் காலையவன் நெற்றிமிசை
நீலனெற்ற வீழ்ந்தா னிகரடுக்கா னென்றுரைத்தார்
காலனொத்த தூதர் கரைந்து. (82)

அன்னவர னோடு மடுத்த வரக்கர்களி
னன்னகர்க்கு வந்தவர்க ளுங்களே என்ன
வெயிறிலங்க நக்கா னெறிந்த சினத்தான்
அயிலிலங்கு கையை யடித்து. (83)

மாடுநின்ற வல்லரக்கர் வன்முகத்தை நோக்கியமன்
கோடுகொண்டு போர்செய் குரங்கதனு லாடல்வென்றி
வீரன் மடிந்தனனும் வென்றிமிக நன்றென்றான்
கோரன் சினத்திற் கொதித்து. (84)

கட்டதுவு மிந்திரன்றன் காமர் பெருவாழ்வைப்
பட்டதுவு மோர்குரங்கின் பாடடியா விட்டவெஞ்சொல்
சுட்டதென்ற னெஞ்சைச் சுடரெரியி னெய்யதனை
விட்டதென வென்றான் விளித்து. (85)

கருப்பையொத்த வானரத்தின் கையாற் சிகரப்
பொருப்பையொத்த வீரவரன் பொன்று மருப்பமென
வல்பகைக்குந் தீய்க்கு மனத்தெண்ண லென்னையென்றான்
தன்பகைக்குஞ் சிந்தை துடித்து. (86)

கண்டக் கடுவான் கபிலை யெடுத்தபுயன்
அண்டர்க் கரி பொருவு மாற்றலினன் கொண்டதீக்
கண்ணுடையான் மன்னுங் கனத்திரத மேற்கொண்டான்
எண்ணுடைய போரை யெடுத்து. (87)

Koviloor Digital Library

ஆயச் சகத்திரத்தி ஞன பரிபூண்ட
தோயக் கடன் மலேயும் சுற்றிவரும் சேய
வுரமடுத்துச் செல்லு முயர்வடுத்த போரிற்
தரமடுத்த விந்திரன்றந் தான். (88)

ஆற்ற லுடையான் அதிரதத்தின் மேலிவர்ந்து
கூற்றடுக்க நாண்சிலேயிற் கோட்டியே சீற்றமிக்க
போரைக் குறித்தான் பொருந்தி வருதேவர்
சீரைக் குறைத்தான் றெரிந்து. (89)

மற்றுமுற்ற வான்படைகள் வானவரை யாயடுக்கிக்
கொற்றமுற்ற சாலிகவர் கோமார்பன் பற்று
நெடுந்தும்பை சூடி நிகர்பிடித்து வந்தான்
தடிந்தும்பர் நாடுகவர்ந் தான். (90)

பேருங் கவரிப் பெருங்கடலி னுப்பணிடை
நீரும் நுரையுமென நின்றடர்த்தான் உளரும்
உவாமதியின் கீழ்க்காரை யொத்தானன் முத்தின்
தவாக் கவிகை கொண்டதரத் தான். (91)

போர்த்தசங்க மாம்படகம் போரைக் குறித்ததனற்
சீர்த்தசங்க மாக்கடலிற் றேவருக வோர்த்தசங்க
வண்டம் வெடிக்க வதிர்ந்த குரற் சங்கினெடு
மண்டும் முரசம் வரைந்து. (92)

தேரினெடு மாவுங் கிறற்படையுந் தெற்றிவர
மூரினெடுந் தானேயொடு முற்றினன் நீரேழும்
சேர நெருக்குநாள் சீர்மேரு வென்னநின்ருன்
கோர னரக்கன் கொதித்து. (93)

எழிசையி னுங்கருவி யேற்றிருந்த தென்னினும்பொன்
சூழுந் திசைதொடருந் தொல்கொடிதான் வாழி
யுலகெல்லாம் வாயிலிட வோங்குமந்த கன்றன்
அலகில்லா நாவினடர்த் தாம். (94)

Koviloor Digital Library

வேணுவுற்ற நீல்வரையாம் வேலரக்கர் வேலைக்கோர்
தோணிபெற்ற தாய்க்கடக்குந் தொல்செருவைக் காணுதற்கு
வந்தோர் கலங்க வரவானிற் றேவர்சிந்தை
நைந்தோட வந்தா னணித்து. (95)

கானடுத்த தேரார் கதலி கரமடுத்த
வேனையுற்றே ரேந்துகொடி யீட்டமுடன் ஆனைக்
கொடியடுத்துத் தோயக் குறித்தவா றும்
தடியெடுத்த காரும்வற்றுந் தான். (96)

ஆயிரமாங் கோடி யடுபேய்க ளாயுதங்கொண்
டேயவரச் சேமத்தே ரேற்றுவரு மாயிரத்தி
ஞமிரட்டி யெய்த வடைந்தான் பெருஞ்சமர்க்கு
மாமிரட்டுந் தாரான் மகிழ்ந்து. (97)

ஊன்றும் படைக ளுறுத்து வரவெற்றி
யான்ற வரக்க ரடுத்துவரத் தோன்று
மூலகடுத்த வெற்றியினு லோங்கி மதிக்கும்
அலகடுத்த வாற்றலன்வந் தான். (98)

ஓதுற்ற கார்க்கடலை யொத்து வருதானைத்
தீதுற்ற வல்லரக்கன் சீற்றத்தான் மோதும்
களத்தடுத்தல் தூதர்சொற்றூர் காணும் பெரியோ
ருளத்தடுத்த வள்ளற் குவந்து. (99)

ஆங்கரக்கன் போருக் கணுகினு னென்றவுரை
ஓங்குருக்கொள் சீதை யுளத்திலா யேங்கும்
வரைத்தோள் பருத்தல் வரைவடுக்கா தென்றூல்
கருத்தோங்கல் சொல்வதெவர் காண். (100)

தொடையுற்ற வற்சலையைச் சுற்றி யதன்மேற்
புடையுற்ற வாள்பொலியப் போந்தா னிடையார்
கருமத்தி னெல்லையது கண்ட பெரியோர்
தருமத்திற் காணுந் தவன். (101)

Koviloor Digital Library

ஒத்த சிறுகுறளா யோங்கிநின்ற சேவடியா
னத்துஞ் சிறைக்கழலை நாட்டியே வித்தகர்கள்
போற்றும் பெருமான் புனையும் கவசத்தான்
எத்தும் பெரியாற் கினன். (102)

நற்புறத்த கோதை களினக் கரமதனில்
நிற்புறத்த காட்சியது நேமிசால் கற்பகத்தாம்
கொம்பைக் கரும்பாம்பு கொண்டு தழுவியது
பம்பச் சிறந்த பரிசு. (103)

புதையு மிருட்பொழுதும் பொங்கி மலரும்
சிதைவடுக்காத் தாமரையின் செய்ய விதழடுத்து
வண்டிருந்தா லென்ன வளரும் விரற்புட்டில்
கொண்டிருந்தான் கோமான் குறித்து. (104)

பல்லியலும் நல்லுலகிற் பாடை பலவமைந்த
வெல்லையிலா நூல்க ளியற்றியே நல்ல
பொருள்குறித்த நற்கவிபோற் போற்றவரு தூணி
தெருண்மனத்தான் கொண்டான் சிறந்து. (105)

கிளரு மழைக்குழுவிற் கேடில்லா மின்போல்
வளர்நெற்றிப் பட்டம் வரைந்து துளவத்
தொடுதும்பை சூடித் தொடர்ந்தா னமரர்
படுதுன்பை மாற்றும் பரன். (106)

ஓங்கு முலக வுயிர்க ளொருங்குவரத்
தாங்கும் பரமன் தனியறத்தான் தோங்கொண்ட
வற்பிடித்த மெய்ய னரக்கன் வலிதொலைக்க
விற்பிடித்தான் கையில் விரைந்து. (107)

மேவு முலகும் விசும்படுத்த தேவர்களும்
தூவு மலரடுக்கத் தோன்றினன் தாவுதிறத்
தானையின மாகத் தரங்கத்தாம் பாற்கடலே
யானதெனச் சூழ வடுத்து. (108)

Koviloor Digital Library

ஊழி யுருத்திரனே யோங்கு முருவாகி
எழுலகும் வீப்பவடுத் தெய்துமென வாழி
வரிசிலைவன் றம்பி வருபடையின் கூழை
குரிசிலைவந் துற்றான் குறித்து. (109)

என்புழியி னும்பிருத ரேழடுத்த வேலையுடன்
பொன்புரையும் வானரரும் பொங்கியே தென்புலத்துத்
தேவன்மை கொள்ளச் செருச்செய்வான் வந்தடுத்தார்
மாவன்மை கொண்டு மகிழ்த்து. (110)

தெற்கு வடக்காய்ச் சிறந்துவரு திக்கெல்லாம்
பற்குவைக ளாங்குரங்குப் பல்பிணந்தான் பொற்குவையை
யொத்தனவி ராக்கதரா யோங்குசவங் கற்குவையை
யொத்தனவாய்க் காட்டு மொருங்கு. (111)

துமிந்த தலைகள் சொரிந்துவரு தேர்கள்
அவிந்த புரவியொடா ளற்ற குவிந்த
பிணக்குவையாற் பூமி பிளக்கு மிரத்தம்
கணக்குவையா மானதியாங் காண். (112)

கடுங்குரங்கு குத்தவுடன் கால்வயத்த மாக்கள்
கொடுங்குரந்தான் போந்து குலைந்த வொடுங்கும்
நிருதருலந் தோடினார் நேரிரத்த மாறாய்ப்
பெருகமலை யாகப் பிணம். (113)

அவ்வழியி ராவணன்றான் அச்ச மமரர்கொள
வெவ்வழியின் வின்னாணை வீக்கினான் செவ்வழியில்
கானழிந்த தீயிற் கலங்கிவரு வானரர்கள்
தானழிந்தார் சிந்தை தளர்ந்து. (114)

உருமிடித்துச் சேர வுலையு மரவாய்
இரியலுற்றுச் சிந்தை யிறந்த வெருவலுற்று
விம்மலுழந் தோடும் வெகுண்டு களத்தவியும்
செம்மையிலான் செய்கைத் திறத்து. (115)

Koviloor Digital Library

பொரக்கரிய தாம்விசும்பு புண்படத்தானின்ற
விரக்கமிலான் காணி ளிசையாற் குரக்கினங்கள்
உற்றதனைச் சொல்வதெனே யோங்கு குலத்தரக்கர்
பற்றதனை விட்டார் பயந்து. (116)

வீடணனுந் தம்பி விசையத் தடுத்தவனும்
கோடரத்து மன்னுங் குறித்தவர்க ளோடலன்றி
மற்றையர்க ளோடி மறைந்தார் வரவானோர்
இற்றசெய லேற்று ரிரிந்து. (117)

ஏந்து சிகரமொன்றை யிந்திரன்றன் வச்சிரமாக்
காந்தி யெறிந்தான் கவிக்குலமன் சேந்த
நெருப்பெடுத்து வந்தமலை நீக்கினு னேயாற்
பொருப்பெடுத்த தோளான் புரிந்து. (118)

அரக்கன் கணையி னழித்தான் மலையைக்
குரக்கரசன் கோச்சிவந்து கொண்டு நெருக்கும்
மரமொன்று வாங்கி மறித்து மதனைக்
கரமொன்றிற் கொண்டான் கடுத்து. (119)

கொண்ட மரத்தையம்பின் கூட்டத்தி னூற்றியன்
கண்டமுற்ற கண்டு கவியரசன் பண்டை
வரைக்கும்பெரிதாய் வழங்கத் தொலைத்தான்
அரக்கன் சினத்தி னடர்த்து. (120)

அக்கிரியைப் போக்கி யலைக்கு மடுசினத்தாற்
திக்கிரிய வென்ற சிலைவளைத்துச் சுக்கிரிவன்
தன்னெஞ்சிற் புங்கஞ் சரியாப் புகவெய்தான்
கன்னெஞ்சிற் கங்கு லரக்கன். (121)

சுடுகணையால் மன்னன் றுளங்க வருமுன்
குடதிசைவாய் மாருதியாங் கோமா னுடனிருந்து
கண்டவனைப் போலிமைப்பிற் காணும் வடவாயில்
கொண்டவனை மன்னையடுக் கும். (122)

Koviloor Digital Library

பரிதிமகன் றேரூமுன் பல்போ ரரக்க
புரிதியென்னோ டென்று புகன்று வருதியோ
வாவென்பான் மேன்மலையை வாங்கி யெடுத்தெறிந்தான்
தீவென்ற சூலமுடைத் தே. (123)

மீயெழுந்த மேகம் விரிகரியிற் சிந்தவடு
தீயெழுந்த தாகுஞ் செயனோக்கிக் காய்கணைக
ளைந்துமைந்தும் போக்கியதை யாயிர மாங்கூறு
மைந்தமைந்தான் செய்தான் மதித்து. (124)

மீட்டோர் சிகரம் விரைந்தெடுத்து வீசியுட
னேட்டவுரு மாய்க்கடிதி னேடியே கோட்டுசிலை
வாளிமுனஞ் சென்று வயங்கு புயத்தடுத்துத்
தூளியெனப் போனதுலைந் து. (125)

மெய்யரியாய்ப் பொங்கிவரு வெங்கண்ணன் மீட்டுமொரு
மைவரையை வாங்கி வருவானைக் கையினொடு
மார்பிற் கரக்க வரவாளி பத்தெய்தான்
சார்புற்றான் தாங்கும் தடுத்து. (126)

யாரிதுசெய் கிற்பரென யாணரிமை யோர்புகழ
மாருதிபின் னோர்மரங்கை வாங்கியே வேரினொடு
சுற்றிவிட்டான் பாகன் றுதிக்குந் தலையதனை
எற்றிவிட்டா னக்கணத்தி னே. (127)

மாறியொரு பாகனுற மன்னு மலைமண்டிச்
சீறியதாய் வாளரக்கன் தெய்வக்கோ னூறு
லனுமா னலக்கணுற்று ஞறுபோற் சோரி
தனுமீது சோரத் தளர்ந்து. (128)

கற்கொண்டுங் காமரத்துங் கைகொண்டும் வாயினுற்ற
பற்கொண்டுஞ் சண்டைபுரி பான்மையர்முன் விற்கொண்டு
நிற்கின்ற தென்று னிகரி லுலகையடும்
மற்கொண்ட தோட்கென் மதிப்பு. (129)

Koviloor Digital Library

என்றுரைத்துச் சீறி யெடுத்துவரு வாளிமழை
கன்று கடையுகத்துக் கார்போல நின்று
பொழிந்தான் குரங்காய்ப் புகலும் படைகள்
அழிந்தாங்கு மாண்ட தலைந்து. (130)

கலக்கி வருமரக்கன் கல்வித் திறத்தால்
அலக்கணுறு வீர ரழிவைப் புலக்குறித்து
வில்லுடைய மேருவெனும் வெற்றியினன் கண்டடுத்தான்
மல்லுடைய தோளிலக்கு வன். (131)

தேயத் தலைவன் சிலைநா ணெறிந்தவுடன்
மாயத் தலைவர் மயங்கினர் சீயத்தின்
மன்முழக்கங் கேட்ட மதகயங்கள் போல்வீழ்ந்தார்
வின்முழக்கங் கேட்டு மெலிந்து. (132)

ஆற்ற லரக்கன் அயல்நின் றவர்நெஞ்சம்
வீற்றாகி யுற்றதுவும் வீரவரன் கூற்றின்
புருவமன விற்குரலும் பொன்றுபடை கண்டான்
ஒருமனித னென்றா னுருத்து. (133)

கட்டமைந்த தேர்மேற் களிற்றிற் புரவியின்மேல்
விட்டெழுந்த வெள்ளமிற்ற வீரர்கண்மேற் பட்ட
மழைத்திறத்த பாண வருடம் சிறக்க
வுழைத்திரத்த மெங்கு முகும். (134)

நகங்கொள் கரியை நலித்துச் சிறந்த
முகங்கொள் பரியை முறுக்கி யகங்கொண்ட
தேய்விலவாம் வீரர்ச் செகுத்து வருவாளி
யோய்விலவா யெங்கு முறும். (135)

உற்றாங் கொருமனித னேங்கெம் மிறைவனுடன்
விற்றாங்கி நிற்றல் வியப்பென்ன மற்றும்
எறியும் படையரக்க ரேற்றார் விளைத்துச்
செறியும் புருவத் தினர். (136)

Koviloor Digital Library

அறுத்தா னரக்க ரடலார் படைகள்
பொறுத்தான் பகழியுயிர்ப் போகம் வெறுத்தான்
நமனியற்றுஞ் செய்கை நடுக்கும் பிணத்தாம்
தமனியத்தின் குன்றமெடுத் தான். (137)

தலையெல்லா மற்றனவாந் தாளற்ற தோளாம்
மலையெல்லா மற்றபொற்றார் மார்பம் சிலையெல்லா
மற்றகழல் வீர ரணிவீர கண்டையற்ற
வற்றசெயல் முற்று மழிந்து. (138)

தேர்துமிந்த மாவின் திறந்துணிந்த செங்கணுடைக்
கார்துமிந்த வீரக் கழறுமிந்த சீர்துமிந்து
தத்தமுடைப் போர்துமிந்து தாங்கும் புகழ்துமிந்து
மெத்தவுடைந் தற்றார் விழுந்து. (139)

ஆளடுத்து வீழ வவர்மேற் புரவிவிழத்
தாளடுத்த யானை தடத்துவிழ வாளெடுத்த
வீரரொடு வையம் விழப்பகழி விட்டார்த்தான்
கார்பொழியுங் கையான் கடுத்து. (140)

கடுப்பி னமரர்களுங் காணார்கள் தம்பி
எடுப்பிற் பகழிதொடு மேற்றம் அடுக்கும்
பிணமலைக்கண் மேகம் பிறங்குவன கண்டார்
கணமலைக்குந் தேவர் களித்து. (141)

கொற்றவாள் சூலங் கொலைவேல் சிலைகோலி
வெற்றி யரக்கன் விடுபடைகண் முற்றும்
பொடியான தன்றிப் பொருந்தவொன்றுங் காணார்
முடியான வீரனட முன். (142)

குன்றமன்ன யானை குதிரைகொடுந் தேர்கோப
வன்றிறலார் சீயமுதல் மற்றுமுற்றும் சென்றனவும்
எல்லையில்லை யான வெடுத்த களம்வீழ்ந்த
வொல்லையில்லை யான வொருங்கு. (143)

Koviloor Digital Library

சாய்ந்ததுவாம் தானை தமர்தலைகள் தள்ளுற்றந்
தோய்ந்த வொழிந்த வுலந்தனவாம் வேய்ந்ததம்பி
வாலைத்தலைக் கொண்டான் வரிவில் லரக்கன்மனம்
வேருதலைக் கொண்டான் விரைந்து. (144)

காற்றுறழு மான்றேர் கடிதிற் கடவியடுத்
தேற்று னரக்க னிளையவரன் கூற்றுமால்
கொண்டதெனக் கொல்வான் குறுக வெதிர்சென்றான்
அண்டர்தொழும் வீர னடர்த்து. (145)

காக்கின்றேன் காவல் கடந்த திருடவுற்குப்
போக்கின்றே தென்று புகன்றுயிர்த்துக் கோக்கும்
கொலையம்பு கொன்றலைகள் கொண்டலைக்க வெய்தான்
தலையன்பர் சிந்தைத் தரன். (146)

எய்தான் சரத்தை யிடையிற் றடையாக
வைதாவும் வாளியினால் மாற்றினான் நொய்தாதல்
கண்டதனைக் காய்ந்தனையாற் காண்பா யெனப்பொழிந்தான்
விண்டதனைப் போல விரைந்து. (147)

ஆங்குஞ் சரமனையான் ஆக்கு மிகல்வாளி
வீங்குஞ் சரற்கால மேகமென வாங்கிப்
பொழிந்த புனைவாளி போக்கினான் பொய்யின்
இழிந்த வினையா னெடுத்து. (148)

அப்போதி னூற்று மனுமா னனல்விழித்துப்
பொய்ப்போரென் றன்னவன்றேர் போய்ப்புகுந்தா னிப்போ
றொழிப்பாயான் சொல்லு முறுதிகே ளென்றான்
பழிப்பாயான் றன்முகத்தைப் பார்த்து. (149)

வென்று யுலகை மெலியா வலியதனாற்
றின்றாய் சுனாசீரன் சீரதனை யொன்றே
பலகளந்தான் கொண்டாய் பழிதருவே னென்று
னுலகளந்தா னென்ன வுறத்து. (150)

Koviloor Digital Library

எடுத்தான் வலத்தடக்கை யேற்ற வுலகை
அடுத்தான் திருவடியி னானுன் கடுத்தான்
எனவுறுத்தான் முன்னே எதிர்த்தெடுத்து நின்றான்
சினவுறுத்தா னென்னத் திறத்து. (151)

வில்லா யுதத்தாம் விரற்கரங்கள் நாலைந்தின்
வல்லா யுடற்றுதிறல் வன்னெஞ்சாய் பொல்லாச்
செருவலியா யென்றாலுஞ் சீற்றத்தி னேற்ற
பருவலியென் பாற்பறக்கும் பார். (152)

நீளாண்மை கொண்டாய் நிகரி லரனளித்த
வாளாண்மை கொண்டிலகை வாட்டுவாய் தாளாண்மை
எல்லா மொருபுடைப்பா லின்றடிப்ப னென்றடர்த்தான்
வல்லான் பெருவாய் மடித்து. (153)

பரக்கப் பகர்ந்தென் பரமன் கயிலை
வரைக்கும் திசைக்கரிக்கும் வாங்கா வுரக்குப்பை
கொண்டதிறற் றோளென் குரக்குக் கரத்தடுத்து
விண்டதிற லாகுமென்றான் வேய்ந்து. (154)

என்றோங்கு மென்கரத்தி னேற்ற விறக்கிலையேற்
குன்றோங்கு நின்கரத்திற் குத்தவுடன் பொன்றேனேல்
நின்னோடு போர்புரிய நேரே னெனவுரைத்தான்
தன்னோடு தானுந் தரன். (155)

காருற்றான் மாருதியைக் கண்டு கடிதுகவா
வீரற் குரியசொற்றாய் வெற்றிமிக்காய் நேருற்று
நிற்பவரு முண்டோ நிகருலக மூன்றினிடை
யொப்பவரு முண்டோ வுனக்கு. (156)

ஒன்றா யுதமில்லா யோங்கு மெனதுறவுங்
கொன்றா யிரதமிசைக் கோல்கொண்டு நின்றேன்
வலியுடைய னென்முன் வழங்கு முறையால்
வலியுடைமை நிற்காம் வழக்கு. (157)

Koviloor Digital Library

முத்தேவர் தானென் முழுமூன் றுலகிடையும்
எத்தேவ ரெத்தான ரென்னேரிற் பித்தேறிப்
பொன்றினவ ரல்லாற் பொருமார்பிற் குத்தென்று
நின்றவரு முண்டோ நிலைத்து. (158)

பொருகை யிருபதுளேன் போற்று புகழேன்
பெருகைத் திசைக்கரியும் பின்னு மிருகைத்
தலத்தாயென் முன்னின்று சாற்றியவுன் போல
வலத்தாரெங் காகும் வழங்கு. (159)

திசையுண்ட வென்புகழுந் தேய்ந்த விதனின்
வசையுண்ட தேதென் மகனே அசையத்
தரையெடுத்துத் தேய்த்தபசை தானற் றிலமுன்
உரையடுத்தாய் சொல்வதெனைத் து. (160)

பூணித்துச் சொற்றாய் போதுவே யுரையதுவும்
பாணித்த தாலென் பழிதடுக்க நாணித்
தலைகுனியேன் குத்தென்று தன்மார்பைக் காட்டி
நிலைகுனியா நின்றா னிமிர்ந்து. (161)

வீரமிக்கா யென்று வியந்து மிகவிளித்துத்
தேரினுற்றுத் தீவிழித்துச் சேரவரு மாரக்
கவசத்தா மார்பிற் கரமெடுத்துக் குத்த
வவசத்தா னானவன். (162)

அயிருக்க பொன்வரைக ளானதலை மூளை
தயிருக் கனவான சாய்ந்த செயிரின்
விழைவுற்றி ராக்கதர்கள் வீயுநிலை கொண்டார்
மழையுக் கனவாகும் வான். (163)

விற்சிந்தும் விண்ணுண் விரிநீர் கரைசிந்தும்
கற்சிந்துங் கோடுகதிர் காலசுடராம் பற்சிந்து
மால்யானை சூரர் வழங்கு படைசிந்தும்
சால்பானுன் குத்தத் தளர்ந்து. (164)

Koviloor Digital Library

கைக்குத் திடியிற் கருதுந் திசைகாவல்
மைக்கொத்த யானை மறக்கொம்பு வைக்கும்
நிறஞ்சார்ந்த வெல்லாம் நிலையா திழிந்த
புறஞ்சார்ந்த தாகும் புகழ். (165)

அள்ளாடுஞ் சாலி யவிரு மணிபோல
வுள்ளாடுங் கட்பொறிக ளோங்கவே தள்ளா
நெடுங்கால் பொரமுடிவி னேருமக மேரு
நடுங்கா விழுந்தெனவா னன். (166)

ஆர்த்தா ரமர ரனுமான் மிசைமலர்கள்
தூர்த்தா ரிசையாசி சொற்றடுத்தார் வேர்த்தார்
நிருதர் சுரர்கள் நிகர்வலியை யுன்னிப்
பொருதவினை சொற்றார் புகழ்ந்து. (167)

கற்றங்கு வாயுநிலை கண்டோ ரவைவிடுத்து
மற்றங்கு வேறுருவாய் மாறுபவர் பற்றிப்
புரம்போன பின்னடுத்த போலவந்து சேர்ந்த
உரம்போன வன்ற னுயிர். (168)

உணரா நெடிதுயிர்த்தா னேங்கு புகழால்
இணையாரு மில்லவனை யேற்றிப் பணையார்
புயமெடுத்த வண்ணல் புனிதஞ் சிறந்த
வயமெடுத்துச் சொற்றான் மதித்து. (169)

வலியென் பதுவும் வயமுற்றாய் நின்பால்
அலியென் பதுபுறத்த தாகும் சலியென்று
மாமலரோன் சொற்கும் மயங்கேன் மெலிவினிலை
தாமறியச் செய்தாய் தகைந்து. (170)

ஒன்றுண்டி யானுரைப்ப துன்மார்பென் கைக்குத்தி
னின்று நிலைக்கி னிகரில்லா யென்று
முளையாவ தன்றி யுனக்கு நிகரார்
களையாதா யென்றான் களித்து. (171)

Koviloor Digital Library

என்று னெதிரி னிகலனுமா னீயெனையே
வென்றாய் விளியாது மீண்டுரைத்தாய் நன்றும்
கடன்கொள்வா யென்ற கலங்காட்டி நின்றான்
மடன்கொள்வார்க் காகா வலன். (172)

உறக்கித் தனியெதிர்நின் றாக்கத் தொடுபல்
லிறுக்கி யெரிபுருவ மேற்றி முறுக்கியகை
கொண்டடர்த்துக் குத்தினான் கோலப் பணைமார்பின்
வண்டடர்த்த தாரான் மதித்து. (173)

பள்ளத்தாம் வீரை படிபேரி னும்பதையா
வுள்ளத்தான் சிந்தை யுலைவெய்திக் கள்ளத்
தரக்கனாற் றள்ள வலைந்தவர வெள்ளி
வரைக்குவமை யானான் வலன். (174)

சலித்ததொரு காலை சலித்ததிமை யோரூர்
சலித்தவற மெய்மை தகவும் சலித்ததனை
யன்றிச் சுருதி யருள்வீரை யுஞ்சலித்த
வென்றித் தரன்சலிக்க வே. (175)

அனையதொரு காலை யரிகுலத்து வீர
ரனையவரு மோர்குவடங் கேந்தி வினையாற்
புராதனமாம் வீரர் பொருததவெலா மொன்றாய்
இராவணன் மேல் விட்டா ரெறிந்து. (176)

ஒத்து வருகைய ரூழி தனிலுலகை
மெத்துவரு மேகமென விண்ணடையப் பத்தெடுத்த
கோடிக்கு மேன்மலைகள் கொண்டடுத்து விண்மறைய
வாடிக் குலைந்தனர்தே வர். (177)

தருக்கியுற்று வீசத் தடவிசும்பு தன்னில்
நெருக்கியுற்று நின்று நிறைந்த வருக்கன்
மறைந்தா னரக்கர் வலிபோன தென்றும்
அறைந்தா ரமர ரடுத்து. (178)

Koviloor Digital Library

ஒன்றையொன்று பட்டங் கொடியவுறு முந்திகைக்கச்
சென்ற பொறியின் றெரிக்கவே மன்றெய்வ
வின்மருவும் வில்லாய் விரிந்து நிலம்வீழும்
கன்மழையைப் போன்றனகற் கள். (179)

இரிந்துசிந்த வாமரக்க ரேற்ற படைகள்
விரிந்துசிந்தும் வான விமானம் சொறிந்தனிறை
வெம்பொரியி னுலடுத்த வேலை சுவரவரும்
கம்பமில்லா வீரர்விட்ட கல். (180)

இறுத்த வுலகென்ற வேக்க மடுக்கக்
கறுத்த சிந்தை வாளரக்கன் கண்டான் ஒறுத்துவரு
வானோர் புகழுண்ட வல்வில் வளைத்தம்பால்
தானோர்ந்து பூழியடித் தான். (181)

காம்புதுக ளாகக் களிறு துணிந்திறத்தான்
பாம்புடனே யாளிபுலி பாறவே கூம்பர்
மரமெரிந்து தீர வருசாம்ப ருன
தரமெறிந்த மாமலைக டான். (182)

உற்றவா ரின்னதென்று மொன்றுநூ ராயிரமா
யிற்றவா ரென்று மிடிபொடியா யற்றவா
ரென்று மரக்க னிகலை மதித்தமரர்
நன்று வியந்தார் நலிந்து. (183)

மிடறுடைத்து மென்றவரி வீர ரெறிந்த
வடலுடைய மாமலைக ளன்றே பொடியாய்க்
களத்துதிர்ந்த தன்றியம்பாற் காணவரு வீரர்
வளத்தவுடல் நெய்த்தோர் வரும். (184)

கொல்வேனிக் கோடரத்தின் கூட்டந் தனையடர்த்து
வெல்வேன் மனிதர் விறலென்று பல்வேறு
வார்சிலைகள் பத்திடக்கை வாங்கிச் சரம்பொழிந்தான்
கார்சினந்த தென்னக் கடுத்து. (185)

Koviloor Digital Library

ஐயிரண்டு கார்முகத்தி னம்புதொடைக் காயிரமாக்
கையிரண்டைந் தாலுங் கடுத்துவிட்டான் வெய்யதிசை
வான மிருநிலமும் வாங்குங் கடலிடமும்
ஆனசரத் தான வனல். (186)

அந்தியுற்ற வானி னமர்க்களத்தி னுதிரம்
சிந்தியுற்ற வாசை செறிசரத்தாற் பந்தியுற்ற
வாகமடி வானரத்தி னாகும் பிணமலைமேல்
மேகம் படியும் விரைந்து. (187)

நீலனம்பி னோடு நிலத்தான் சினத்தினொடு
காலனன்பி னானான் கவயன்தான் ஆலமன்ன
பாணத்தா லங்கதனும் பாடடுத்தா னோர்சரத்தி
னேணத்தான் சாம்ப னிரிந்து. (188)

மற்றுமுற்ற வீரர் மருமத்தின் மாமுகத்திற்
கொற்றமுற்றுப் பாயக் குறைந்தசெயல் முற்றடுத்துக்
கண்டா னிலக்குமணன் காய்ந்தான் கடுவெனத்தான்
அண்டாத கோபத் தவன். (189)

நூறடுத்த கோடியொடு நூறா யிரங்கோடி
வேறடுத்த பாணம் விலக்கியே சீறும்
இலக்குவன்றா னவ்வரக்க னேற்றசிலை பத்தும்
உலக்கவெய்தா னோர்நொடியி னோர்ந்து. (190)

ஆர்த்தா ரறத்தார் அமர ரகங்களித்தார்
வேர்த்தா ரரக்கர் வியன்முனிவர் பார்த்துவந்தார்
நல்லறத்தார் பாடி நறிய மலர்பொழிந்தார்
வில்லறத்தான் செய்கை விழைந்து. (191)

நன்றடுத்த போர்வீரம் நன்றாள் வலியுடைமை
நன்றடுத்த கைக்கடுமை நன்றுகல்வி என்றெடுத்துச்
சொன்னா னரக்கன் துதிக்கைக் கொருவனென
அன்னான் கடுமை யறிந்து. (192)

Koviloor Digital Library

காணிற் கரன்படையைக் காலற் களித்தவனும்
வாணிற் கரசனட்டல் மாற்றியவென் கான்முளையும்
விற்பிடித்த யானுமன்றி வேறிணையுற் காரென்றான்
கற்பிடித்த மேனியரக் கன். (193)

வில்லுக் கிணங்க வெலற்படா னெனறிவனைக்
கொல்லற்கு நாளுங் குறித்ததெனப் பல்லா
லிதழுதுக்கி நான்முகன்கை யேற்றவர வேலைக்
கதழ்கொதிக்க வீசினான் காய்ந்து. (194)

எறிந்தவே லம்பெலவையு மேங்க வெரித்துப்
பொறிந்த விசையுடனே பொங்கிச் செறிந்துவரு
தார்மார்பிற் பாய்ந்த தனையறிந்து சாய்ந்தனனும்
சீர்மாறாச் சிந்தைத் திறன். (195)

இரியலுற்ற வானரங்க ளேங்கு மிமையோர்
பரியலுற்ற மாமுனிவர் பார்த்து விரியும்
திரைக்கடலி னார்த்தார் செருநர் வெறித்தார்
தரைக்கணுரி யோர்கள்சலித் தார். (196)

அஞ்சின னல்ல னயன்றந்த வேற்காவி
துஞ்சின னல்லன் றளங்கினான் எஞ்சலின்றி
விஞ்சினன் யாக்கை விழைந்தெடுப்ப லென்றுகொண்டு
நஞ்சினன் சென்றா னடந்து. (197)

உள்ளிப் பிணத்தி னுதிரநதிக் குள்ளோடி
அள்ளிக்கை பத்திரட்டி யாலவசத்தான் வெள்ளி
வரையெடுத்து வெள்குமதை மாற்றப்பொன் மேரு
வரையெடுத்த தென்ன வலரந்து. (198)

அடுத்த வுணர்வொழியா னம்பரஞ் செம்பொன்
உடுத்தவனைக் கொள்ள வொருங்கே தொடுத்த
அரனடுத்த வேதண்ட மள்ளினவன் றம்பி
உரனெடுக்கா னின்றா னுருத்து. (199)

Koviloor Digital Library

தலைபத்தி ளோடேர் தழுவு மரக்கன்
அலைபெற்ற மாகடலி ஞனை் நிலவு
மதிநெழுந்த மாமதியி னுனை ளிராமன்
துதிமிகுந்த தம்பி தொடுத்து. (200)

எடுக்கின்ற மோலோனை யேந்தத் தனக்கு
மிடுக்கின்றி ராவணனும் விட்டா னடுக்கின்ற
மாருதிதான் கண்டு மதித்தெடுத்துச் சார்ந்தனனு
மோருதிற லானை யுகந்து. (201)

தொகுத்துவரு ஞானத் துணையா னெவர்க்கும்
மிகுத்துவரு மன்பான் விழைந்து மகத்து
மகவுகொண்டு செல்லுநல மந்தியென வந்தான்
தகவுகொண்ட மேலாந் தரன். (202)

மையல் மனத்தரக்கன் வன்படையி னுன்மயங்கும்
செய்யவரன் சிந்தை தெளிந்தாகக் கையொடுகோல்
கண்ணுங் கமலமெனுங் கண்ணனிடை வந்தனன்பி
னெண்ணுங் கமல னுவந்து. (203)

போனவுடன் புக்கான் புனிதவரன் போர்வேட்டி
யானையடப் புக்கவரி யாமென்ன வானுளவர்
ஆர்த்துமலர் சிந்த வரக்கன் சயங்குறித்துத்
தீர்த்தனிடை வந்தான் தெழித்து. (204)

தேரிற் சிறந்தரக்கன் சீறிவரச் சேவகனிப்
பாரிற் சிறந்துவரல் பார்த்தவுடன் நேரிற்
சிறந்தநல வென்று தெழித்தனுமன் வந்தான்
அறந்தலைமை யாளற் கடுத்து. (205)

நூறுபத்துக் கோரமுற்ற நோன்றேரின் மீதரக்கன்
சீறிபத்தி னேறரிலஞ் சேர்ந்தடுதல் ஆறநீக்கா
சேருதியென் றேனொன்று சீமானைப் போற்றிநின்றான்
மாருதியென் றேதும் வரன். (206)

Koviloor Digital Library

நன்றினிய தென்று நயந்து வருநாதன்
குன்றினிவர் கோளரியிற் கூடினன் கன்றினியல்
தாங்கிவரு தாய்போற் றனிமா ருதிகளித்தா
ஞேங்கிவரு சிந்தை யுகந்து. (207)

ஆசி மொழிந்தா ரறவோர் கயிலையுற்ற
வீசன் புகழ்ந்தா னிமையவர்கள் பூசலது
காணவந்தார் காயங் கலந்தார் நலந்தருவார்
ஆணவந்தா னில்லா வறர். (208)

அண்ண லமல னமரைக் குறித்தனக
ரெண்ணரிய வின்னு ணெறிந்தவுட னெண்ணித்
திருத்துமுல கெல்லாந் திறல்வாயி லுண்ணு
முருத்திரனுர்ப் பென்ன வுறும். (209)

ஆவியொன்றி நில்லா ரரக்க ருடனியக்கர்
நாவுலர்ந்து சோர்ந்து நடுங்கினுர் கோவைகொண்ட
வண்டங் குலைந்த வலைபாப் பெருந்தேவர்
கண்டங் குலைந்தார் கருத்து. (210)

ஊழி யனலு முரித்தோ வெனவுருவ
வாழி யரவுண் டளப்பதிசை வீழுயரின்
மண்ணும்விண்ணும் போர்ப்ப மதித்துவரு மேழுகணை
நண்ணுமண்ணை யெய்தா னலிந்து. (211)

எய்து சரமேழை யேழி னிரட்டிமுற்றச்
செய்துசர மைந்துதொடை சேர்த்தியே வெய்துவரு
காலக் கனலைக் கருக்குங் கணைவிட்டான்
வேலைக் கனலின் மிகுத்து. (212)

வாளிலயந்தை வயந்து வரவாளி யான்மாற்றி
யாளிமைந்த னுமரக்க னம்புபத்துத் தோளினுற
வாங்குற்ற முன்றுறந்தான் வள்ள லுடன்பொடித்தான்
ஆங்குற்ற முன்ன மடர்த்து. (213)

Koviloor Digital Library

அறுத்தயலி னின்ற வளக்கரிய வீரர்
செறுத்துவிட்ட மாப்படைகள் சிந்திக் குறித்த
மலையான் மலையும் வலிய வரக்கர்.
தலையான் மலைகள்புரிந் தான். (214)

மீனக் கடலடுத்து மேவரக்கர் பாணமழை
யினக் கடலரக்க னேவுகணை வானரமாம்
பாற்கடலிற் சேராது பார்த்துப் படைபொடித்தான்
கார்க்கடலின் மேனியழ கன். (215)

இம்பருற்ற னென்னி லெடுக்கும் விசும்பரக்கன்
தும்பையுற்ற வானனமுன் றேன்றிவரும் வெம்பும்
விழிக டொருந்திரியும் மேனின்ற னம்பின்
வழிகடொரு நிற்குமனு மான். (216)

ஆடுங் கவந்த மவற்றி னொடுமொடிப்
பாடு மலகை பணைக்கையுடைக் கோடுமிடை
யானைபரி கொண்டடுக்கு மாறு மிரத்தநிறந்
தானுவரி கொண்ட தகைத்து. (217)

அற்றுவரு மாழி யறுப்புண்ட வச்சினம்போ
லிற்றுவரு கோரங்க ளேற்றவைய மொற்றைச்
சரத்தோ டுருண்ட தலையானையெல்லாம்
பரிக்கோடு கூறவரம் பா. (218)

தேரிழந்துங் கோலுஞ் சிலையிழந்துஞ் செந்தறுகண்
காரிழந்தும் போர்புரிமா காலிழந்துஞ் சூரர்
வனசாலி தீர்ந்து வரமரக்கர் தீர்ந்த
தெனசாலுஞ் சொல்லற் கெடுத்து. (219)

அரவடுத்த வல்குலுடை யங்கனையர் கண்டர்
சிரமடுத்த தாதலினுற் றேரார் புரவியொடு
பூட்கைத் தலைபொருத்திப் பொன்றத் தழுவியுயிர்
வாழ்க்கைத் தரம்விடுத்தார் மற்று. (220)

Koviloor Digital Library

ஆர்ப்படங்கும் வாய்க ளனற்கொழுந்து சேரவரு
பார்ப்படங்குங் கண்கள் பலபடைகள் தூர்ப்படங்கும்
கைகளடு தூளி கடலுலகு போர்ப்படங்கும்
செய்யமுர சம்போம் தெரித்து. (221)

ஒன்றடுத்த வாயிரமா யோங்குஞ் சிரமுருட்டிச்
சென்றடுத்துச் சேர்ந்தவுடல் சேர்த்துருட்டி நின்ற
வொருதேரி னோடரக்க னேய்ந்துநிற்கச் செய்த
கருதாரைக் காவாக் கணை. (222)

தேரினொடி யானை திறற்பரிக ளாளுருட்டிப்
பேருமிட மின்றிப் பிறங்குதிசை காரினொடு
வான்தகைக்கும் வன்பிணத்தின் மாமலைகள் கண்டரக்கர்
கோன்திகைக்குஞ் சிந்தை குறைந்து. (223)

முரண்டொகுத்த வில்லை முறையின் வளைத்துப்
புரண்டுவரு நாணிவலம் போக்கி யிரண்டெடுத்த
வாளிகளால் வீரன் மரகதத்தி னும்சிகரத்
தோளிரண்டின் விட்டான் றடித்து. (224)

முறுவல் புரிந்து முளரிமலர்க் கண்ணன்
மறுவில் வடிக்கணையை வாங்கி யிறுதி
வருநாளின் மந்தரமாய் மன்னரக்கன் வில்லை
யுருநாலச் செய்தா னுறுத்து. (225)

மாற்றுச் சிலையதனை வாங்கி னெடுநாணை
ஏற்றுச் சிலைக்குமுன மேற்றொடித்தான் காற்றிற்
கடிதாகுந் தேருங் கடும்பரியுங் கொய்தான்
வடிதாவும் வாளியினால் மன். (226)

மற்றவிந்தை மாப்படைகள் வாங்கி வழங்குமுன
மிற்றவிந்து தீர வெடுத்தெய்தான் கொற்றக்
குடைகொடியி னோடு குறைத்தா னகலத்
தடைகொடிய சாலியழித் தான். (227)

Koviloor Digital Library

மாற்றுக் கடவிரதம் வந்தனவெல் லாமொடிய
வீற்றுக் கணைகடமை விட்டடித்தான் கூற்றுக்
கரமெடுத்துக் கூத்தாடக் கண்டு கொதித்தான்
உரமெடுத்தி ராவணனு மோய்ந்து. (228)

மின்னு மணிமவுலி மேலோர் கணைதொடுத்தான்
அன்னகதிர் மேற்பா யனுமன்தா னென்ன
மகுடமெடுத் தேந்தி மறிகடலி னிட்ட
தகடுலகங் கொண்டவர னம்பு. (229)

செறிந்த மணியினொளி திக்கெல்லாம் வீசப்
பொறிந்த கணைபட்ட போழ்தி னெரிந்துவரு
கால்பொரக்கோன் மேருமுடி கார்க்கடலின் வீழ்ந்தவெனக்
கோலமுடி வீழ்ந்து குதித்து. (230)

அண்டரரு ளண்ண லடுசிலையி னும்பு
கொண்டெரிய மாகடல்வீழ் கொள்கையது மண்டி
நிரைகடவு சூரனொடு நேரடுத்த கோள்கள்
குரைகடலின் வீழ்வதையொக் கும். (231)

சொல்லு மனவிற் சுடரு முடிதுறந்தான்
எல்லை மதியு மிழந்துவரு மல்லும்
பகலுமொத்தா னென்னர் படையிற் சயத்தாம்
இகலுமொத்தா னென்பா னெடுத்து. (232)

மாற்றற் கரிய மணிமுடிபோம் வாளரக்கன்
எற்றற் கரியனென வேய்ந்திடினும் மாற்றற்
தகவுடைய நற்கவிஞர் சாற்றங்க தத்தாற்
புகழிழந்தான் போன்றான் புரிந்து. (233)

அறங்கடந்தா ராற்றலிதென் றுமுலக ரார்ப்ப
நிறங்கரிந்து நேர்விழிக்கா னின்று னிறங்குகண்ணன்
எல்லையற்ற கைநாற்றி யேற்றவிழு தால்போல
வல்லலுற்று நின்று னடுத்து.. (234)

Koviloor Digital Library

நின்றநிலை நோக்கி நெடுந்தகையு மின்றிவனைக்
கொன்றநிலை நோக்கான் குறித்துரைப்பான் அன்றவிந்த
போலுமழி தீமையெனப் போற்று மிசையுடனே
சாலுமொழி தந்தான் றகைந்து. (235)

அறத்தினு லன்றி யரியசமர் வாகை
மறத்தினுற் கொள்ள மதிப்போ செறித்தமுறை
கொல்லலுற்றதின்று குறிக்கேன் மனத்தினிடை
அல்லலுற்ற நின்னை யறிந்து. (236)

உடைக்குலத்த ரோடு முரவோ டுதவும்
படைக்கலத்த தேடும் பலவு மடைத்துவைத்த
கொண்டாற் றுதியேற் குறித்துவா வன்றொளித்தல்
பண்டாற்று செய்கையது பார். (237)

சிறையினுற்று டன்னைவிட்டுத் தேவர் தமையும்
முறையில்வைத்துத் தம்பிதனை முன்னு மிறையில்வைத்தும்
ஏவலவற்கேற்க வியற்றி லுனதுதலை
பூவலயத்தாக் கேன்பொடித் து. (238)

அல்லையா மென்னி னமர்புரியுந் தோற்றமதின்
வல்லையா மென்னில் வலங்கொண்டு மல்லலின்றி
நேரடுத்துப் பொன்றிடினும் நேர்தாம் பிழைப்பினிமேல்
சீரடுத்த தில்லையெனத் தேர். (239)

ஆளையா யுற்கமைந்த தானபடை மாருதமுன்
பூளையா யுற்றகண்டாய் போய்ப்போர்க்கு நாளைவா
வென்றுரைத்தான் வள்ள லியல்பி னவற்குயிரைக்
கொன்றுரைத்த வின்றிக் கொடுத்து. (240)

முதற் போர்ப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

கும்பகருணன் வதைப் படலம்.

வாரணப்போர் மார்பும் வரையெடுத்த தோளுடனே
நாரதமு மோலிபத்து நாதன்வாஃ வீரமுடன்
வெங்களத்தே போட்டு வெறுங்கை யுடனடுத்தான்
கொங்களக்கும் தாரான் கொதித்து. (1)

கிடந்தவலி யார்மாட்டே கேடில் சுரரைக்
கடந்துலக கண்டகனுங் காலன் தொடர்ந்த
பழியாக வன்று பரவுநக ரானுன்
எழினுக முற்று னினன். (2)

மாதிரத்தை நோக்கான் வளமா நகர்நோக்கான்
காதலுற்றோர் போர்ப்படையுங் காணுதான் தாதவிழும்
கூந்தலார் நோக்கக் குனிந்த சிரங்களுடன்
ஏந்தலான் சென்று னிழிந்து. (3)

நாளொத்த தாமரைப்பூ நன்முகத்தி னூர்நயனம்
வாளொத்த மைந்தர்புகல் வாளியொத்த கோளைச்
சிறைவைத்த கொற்றவஃற்குச் சேர்வீர மங்கை
குறைவைத்த நோக்கம் குறித்து. (4)

மந்திரத்தாம் சுற்றமொடு வானுதற் சுற்றத்தார்
தந்திரத்தாம் சுற்றமொடு தன்கிளையார் எந்திரத்தி
நிற்பக் களிறு நிகர்கூடம் புக்கதெனப்
பொற்பைக் கடந்தான் புகுந்து. (5)

ஆண்டொருபொற் பீடத் தமர்ந்து மிகவருந்தி
நீண்டவலிக் கஞ்சுகியை நேர்நோக்கி யீண்டுநம
தூதர்தமைத் தாவென்னத் தூண்டு வலியுடையா
ரோதுமுனம் வந்தா ருருத்து. (6)

Koviloor Digital Library

மனகதிகால் வேகன் மருத்தன்மா மேகன்
வினையறிவார் தம்மை விளித்து நினைவதன்முன்
நீரடுத்து நேர்திசைக ணீந்தி யரக்கர்படை
யூரடுக்க வென்று னுரைத்து. (7)

ஏழிக் கடற்றீவு மேற்ற கடங்களினும்
பாழிப் பொருப்புங்கீழ் பாதலத்தும் ஆழி
வரையடுத்த மேலும் வளரரக்கர் தம்மை
விரைவடுத்துச் சேர்க்கவென்றான் வேந்து. (8)

மூவுலகி னோடு முறையேவல் செய்வார்கள்
பாவகந்தான் தேறார் பதைக்கவே தூவகலா
வைவேல் தொளைக்க மதிகெட்ட யானையென
நைவா னமளியிலா னான். (9)

பண்ணிறையுஞ் செஞ்சொற் பணைத்தனச் சீதையெனும்
பெண்ணிறைய நெஞ்சிற் பெறுநாளைக் கண்ணிறையும்
கோடலுறான் சிந்தை குறிக்குங் கவலையினால்
நீடுயிர்ப்ப னானான் நிமிர்ந்து. (10)

வானகைத்து வென்ற வயிர நெடுந்தோளான்
தானகைத்தோர் தன்னைநகல் தானென்னான் வேனகைக்கும்
கண்ணுடையாள் சீதை கருதி நகைப்பளெனு
மெண்ணுடையான் சிந்தை யிசைந்து. (11)

ஆங்கவன்றன் மூதாதை யாமூப்பி னுலுடலம்
வாங்கவரு வில்லைநிகர் மாலியவான் பூங்கழலான்
வந்தடுத்து வேந்தன் வளர்சயனப் பாங்கருற்ற
சந்தடுத்த வாதனஞ்சார்ந் தான். (12)

இருந்தா னிலங்கையர சேற்றதெய்த நோக்கி
வருந்தா வரத்தாய் மனமும் பெருந்தோளும்
வாடுதற்கு வந்ததெனை வாடாத் தவமுடையாய்
காடுதற்கென் னென்று னலிந்து. (13)

Koviloor Digital Library

கவையுற்ற நெஞ்சன் கனல்கண்ணன் பத்துச்
சிவையுற்ற வாயன் சிறந்து நவையற்ற
பாகமுதை நக்கினுந்தான் பன்னுசுவை யின்னாவான்
சோகமதைச் சொன்னான் றதித்து. (14)

சங்கமுற்ற தாகுந் தவத்தா ருடனேம்மோ
டங்கமுற்ற தாக வளவாகாக் கங்கமுற்ற
செங்களத்து நம்குலத்தைச் சேராப் பழியுடனே
பங்கமுற்ற தென்றான் பதைத்து. (15)

கிளையமைந்த முப்புவனங் கேடின்றிக் கிட்டி
வளையமைந்த விற்போரின் மன்னி னிளையவன்றன்
முன்னடுக்கின் வீணும் முதல்வன்போர் சொல்வதெனில்
என்னடுக்கு மென்றா னிசைந்து. (16)

எரிந்தபோர் வீர ரெதிர்த்தவர்க ளெஞ்சப்
புரிந்தபோ தென்புகழும் போக்கி யிருந்தும்
மனவுண்மை கொண்ட வரதற்குப் பொங்கும்
சினவுண்மை கண்டவரார் தேர்ந்து. (17)

மலையிற் பெருமுடலர் வாளரக்கர் தானை
நிலையுற்ற வெள்ளமெலாம் நேரும் தொலையுற்ற
போதுபரி யாள்களிறு போற்றுவையம் போனதலால்
மோதுமரி வாளிநிற்கு மோ. (18)

போயபின்பு வாளி புகுமே யுலகெங்கு
மோயுமென்ப துண்டோ வுகலூழித் தீயுந்தான்
திக்குந் திசைதீக்குந் தீதுமொழி வாய்தீக்குந்
தீய்க்கு மனத்தைச் சிதைத்து. (19)

மேரு வுருவுமெனில் விண்கடந்து செல்லுமெனிற்
பாரை யுருவிப் பருகிவரும் நீரையென்றால்
ஆறிவரு மோவவற்றி னாற்றலனந் தங்கோடி
கூறிவரு மென்னிலடுக் கும். (20)

Koviloor Digital Library

வரிசிலையைக் கோத்தெடுத்து வாங்கும் விடுதல்
தெரிகிலதா மாற்றலியார் தேர்வார் பொருசினத்து
வல்லரக்க ராவி வதைத்து முலகமெலாம்
வில்லரக்கும் வெஞ்சரமா மே. (21)

நல்ல வரகவிஞர் நாவிற் பொருள்குறித்த
சொல்லெனவுஞ் செய்யுட் தொடையெனவும் வல்ல
அலங்காரப் பண்பெனவு மாகு மிராமன்
நலங்காணும் பாணமென நாட்டு. (22)

இந்திரன்கை வச்சிரமு மீசனடு சூலமொடு
சுந்தரமா யன்திகிரி தோங்கண்டே னிந்தவயத்
தாபதன்கை யம்பின் தரமுடைத்தோ சொல்வதற்கு
நாபதறு மென்று னலிந்து. (23)

ஈசனெண்டோ டாமு மிரண்டடுத்த விந்திரன்றோள்
ஆசைகொண்ட பூவயிற்றி னுக்குமரி தேசுகொண்ட
ஆயிரமாந் தோளாற்ற லன்னுன் விரலொன்றிற்
கேயுறுமோ வென்று னெடுத்து. (24)

சீர்த்தவர வீரியர்கள் செங்கண்மா லென்றாலும்
கார்த்தவர வீரியனோர் கண்டதுண்டோ பார்த்ததரத்
தன்னு னிலக்குவன்று ளண்டுந் துகள்க்கொவ்வான்
மன்னு னிலக்கென்னு மால். (25)

முப்புரத்தைச் சுட்டெரித்த மூரிச் சிலைவீர
னற்புதத்தாம் வில்லுக் கோ ரம்பாகா வொப்புரைதான்
வேறுரைத்தற் கென்னும் விமலமறை தப்பினுந்தான்
சீறுமவன் வாளிதப்பா தே. (26)

உற்பத்தி யொக்குமயன் ஓட லரியொக்கும்
கற்பத் தரன்பகைவர்க் காய்தலினுல் சிறப்பத்தைச்
சொல்லமைக்க லாமோ துடைத்ததெந்தன் தற்பமென்றால்
வல்லமைக்கென் சொல்வேன் மதித்து. (27)

Koviloor Digital Library

குடக்கோ குணக்கதோ கோணத்திற் றானோ
தடக்கோ குவலயத்திற் றானோ வடக்கோதான்
தெற்கென்று முன்னேன் சிலைமனிதன் வில்லிடக்கை
யிற்கொண்ட தோவலத்தோ வென். (28)

எற்ற மிலையென்ப தேழைமையே யாமன்றி
ஆற்றல் சலுழற் கடுக்குமோ காற்றோ
கனலடுக்கும் கூற்றைக் கடாவு செயலோ
எனலக்டுகும் கோடரமென் றெண் (29)

போயினித்தேர்ந் தென்னும் பொறையி னுலகொத்தாள்
ஆயி னிராம னழகுடனே தீயனைய
சேவகத்தைக் கண்டாற் றிருவாரும் காமன்நாம்
தாவகத்தாம் நாய்க்கிணையாந் தான் (30)

வாசவனு மாயன் மலரோன் மழுவுடைக்கை
ஈசனெனும் பேரா ரிவரன்றி நாசமது
வந்துற்ற போதும் வலியபகை வாய்த்ததென்றான்
கொந்துற்ற தாரான் குறித்து. (31)

முன்னுரைத்தே னென்னை முனிந்தாய் முனிவிலும்பி
யின்னுரைத்தல் கொள்ளா யிதமறியாய் நின்னுரைக்கு
நேருண்டோ வையா நினைவுனக்கு நன்மைதரிற்
சீருண்டா மென்றான் றெரிந்து. (32)

உளைவன வுற்றாலு முற்றா ருகந்தார்
விளைவன சொல்லும் விரும்பாய் கிளையடுத்த
சுற்றமுற்று கேண்மை துதிகல்வி செல்வமென
முற்றமுற்று மென்றான் முனிந்து. (33)

ஆயதவன் சொல்ல வயலிற் றெரியவரு
மாயைபல வல்ல மகோதரன்றான் றீயெழவே
நோக்கிச் சிறுமை நொடிவ தெனையென்றான்
வாக்கிற் கொடியான் மதித்து. (34)

Koviloor Digital Library

நன்றியிது வென்று நயந்துகொண்ட சிந்தையிதால்
வென்றியதோ தோர்வை விளிவெனினு மொன்றடுத்து
நிற்றலது வீர நிலையாவ தன்றிமற்றை
வெற்றியதோ வாய்ந்து விளம்பு (35)

திரிபுரத்தைத் தீரத் தெரிந்துசரந் தொட்ட
வொருவன் புவனமளந் தூற்றான் பொருதுனக்கு
முன்னில்லார் சென்றார் முரட்போர் மனிதர்வலி
யின்னின்று சொல்வா யெடுத்து. (36)

வென்றவர்கள் தோற்றிடுவர் வெல்வார்கள் தோற்றவர்மேல்
நின்றவர்கள் தாழ்வார் நெறியதுவே யென்றார்
அறிஞரவ ராற்றற் களவுண்டோ வென்னை
செறுநர்புகழ் சொல்வாய் தெரிந்து. (37)

தேவி தனைவிட்டால் தீரும் வருதீமை
ஆவி தனைவிடுத லாற்றலதே தாவரிய
சீருடையாய் நீயினித்தான் சேர்ந்தசெயல் தாழ்வதெனை
போருடைவார் போலப் புகழ்ந்து. (38)

இனியிறையும் தாழ்த்த லியல்பன்று நம்மைக்
கனிமரமாய்க் கோரடங்கள் காணும் பனியுடைய
வேலைச்சின் னீர்பருகும் மேலவனைப் போற்கடுகி
ஆலத்தைப் போலடர்த்த லாம். (39)

முன்னுனக்கு மூவர் முறைவிட்டார் தேவரெல்லாம்
பின்னுனக்கே யேவல் பெறப்பெற்றார் புன்னுனிநீர்
போலும் மனிதர்ப் பொருளொன் றுனக்கிளையான்
வேலையரி யாதுரைத்தாய் வீண். (40)

ஆங்கவனைக் கூவி யனுப்புதியே லையவவ
ஞேங்கவனை மேனிகண்டா லோட்டந்தான் தாங்கும்
திறலுடையா ரன்றென்றான் சேகனதா மென்றான்
இறலுடைமைக் கேற்ப விசைந்து. (41)

Koviloor Digital Library

இந்தவித மாக வெடுத்துரைத்த துன்மதியைச்
சிந்தைகொண்டு தேறித் தெருளில்லான் முந்தும்
உறுதியுரை தந்தா யுனக்கிளையா ரென்றான்
பெறுதிருவான் சிந்தை பெயர்ந்து. (42)

நன்றடுத்த தென்று நவின்று தருதிரெனச்
சென்றடுத்தார் நால்வர் சிறந்தோன்பாற் றென்றிசையான்
தூதுடையா ரென்னத் துயர்ந்தடுத்தார் சிந்தையுற்ற
கோதுடையான் கோயில் குறித்து. (43)

கிங்கரர்கள் நால்வர் கிரியனைய வன்கிடந்த
மங்கு லுறுவாயில் வந்தடைந்து தங்கை
எழுவா லடித்தா ரிழிந்தவுரை சொன்னார்
வழுவா லடுத்தார் வரைந்து. (44)

உறங்குகும்ப கன்ன வுரித்துங்கள் வாழ்வும்
இறங்குகின்ற கால மெழுவாய் கறங்குகின்ற
விற்பிடித்த காலர் மிடுக்கி னுறங்குவாய்
பொற்பிடித்த தாராய் புகுந்து. (45)

என்றுங் கெடாவரக்க ரின்பமிகு வாழ்வைநும்முன்
சென்றுங் கெடத்திமை தேடினா னின்றிறத்தல்
திண்ணமையா முன்னுறக்கந் தீர்ந்த தினியுங்க
ளெண்ணமுய்யா தென்றடித்தா ரேய்ந்து. (46)

என்றடித்தற் கன்னா னெழுந்தா னிலையதனைக்
குன்றெடுத்த கொற்றவன்பாற் கூறினார் அன்றவனும்
மாவினொடு மாளி வலிநடத்தித் தாருமென்றான்
ஏவினொடு சென்றா ரிசைந்து. (47)

அனையவகை செய்து மவனுறக்கம் நீங்கான்
வினையவகை சொல்ல வியந்து கனைகழற்கால்
மல்லரடுத் தாயிரம்பேர் மாறி யடித்தெழுப்பச்
சொல்லடுத்துச் சென்றார் துணிந்து. (48)

Koviloor Digital Library

சென்றவர்க ளாயிரத்தாம் சீரடுத்த வீரவரர்
மன்றலந்தார் மன்வருத்த மாற்றவென வின்றே
இவன்முடிக்கு மென்றெடுத்த வெண்ணமொடு சென்றார்
அவன்முடிக்க வாயி லடுத்து. (49)

திண்டிறலார் வாயில் திறக்கச் சுவாதக்கால்
மண்டுறுவார் வீரர் வலியில்லார் கொண்ட
தடக்கைபற்றி வல்லமையாற் சார்ந்தெழுப்ப நேர்ந்தார்
மடக்கியுற்ற வேறுவழி வந்து. (50)

இங்கிவனை யாமெழுப்பற் கென்ன வகையென்று
துங்கவனை வாய்கண்டு தோங்கொண்டார் அங்கையாற்
தீண்டவஞ்சி யாழ்ந்த செவியதனி னூடே
யாண்டவஞ்சர் பேரியடித் தார். (51)

கோடிவல்ல தண்டெழுக்கள் கூடிவலர் கொண்டடுத்துத்
தாடைசந்து மார்புதலை தாக்கியே வாடியுற்ற
கையுடையார் சொல்லக் கலினப் பரிகளினால்
மெய்யிடையச் செய்யவென்றான் வேந்து. (52)

கட்டுற்ற மாக்கள் கடிதா யிரமடுத்து
மட்டுற்ற தாரான் வரைமார்பின் விட்டு
நடத்தினர் சாரி நயந்துவரு தூக்கம்
கடத்தினு ராக்கக் கவிந்து. (53)

கொய்ம்மலர்த்தார் மன்னன் குரைகழலைப் போற்றியைய
மெய்ம்மலர்த்தும் வீரன் விரும்புதுயில் செய்யும்
வகையெல்லாம் செய்தெழுப்பும் வன்மையிலை யென்றார்
தகையில்லாச் சிந்தை தளர்ந்து. (54)

இடைபேர்த லில்லா வினையாழித் தேரும்
படைபோதக் கண்டும் பதையான் மடைபேராச்
சூலத்தாம் கையான் றுயிலெழுப்பு மென்றுரைத்தான்
ஆலத்தாம் வெய்யோ னடர்த்து. (55)

என்றவுடன் போற்றி யிரண்டைந்து நூறரக்கர்
பொன்றவுறு மன்னனிடைபோயடுத்தார் துன்று
மிரண்டாங் கதுப்பு மிடித்தார் முசலம்
புரண்டாங் கெழுந்தான் பொலிந்து. (56)

விண்ணிடறு மேன்மை விசும்பை நிறைக்குமுடல்
கண்ணிரண்டுஞ் சேந்த கடலென்று வெண்ணவரு
கோலவிலங் கேசன் குறித்ததம்பி மண்ணளந்த
மாலவலங் கொள்ளநின்றான் மற்று. (57)

மூவுலகு முட்க முரட்டிசைக்கை யானையொடு
தாவரிய வாசை சலிக்கவே பூவான்
பொருப்பான் புணரியான் போர்சிறக்கா வீரன்
நெருப்பா னெழுந்தா னினைந்து. (58)

உறக்கம் வெருத்தா னுணத்தகுந்த தான
நிறைக்கும் வரைக்கமையூன் நேரும் நறைக்குடங்கள்
கண்டடுக்கா னின்றான் கடைவாயை நக்கினான்
விண்டடுக்காத் தோளான் விரைந்து. (59)

ஆறுநூ றுகு மடற்சகடத் தாமடிசில்
நூறுநூ றுங்குடகள் நுங்கினான் சீறும்
பசியெழுந்து நின்றான் பரிவின்றி மண்டும்
நிசியெழுந்து நின்றதனை நேர்ந்து. (60)

எருமை வரு மேற்றை யிராறு நூற்றை
அருமையின்றித் தின்றிறைதா னறிப் பெருமைநிற
மேற்ற வுருமை யிடந்து பிடித்துவரு
மாற்றலெரி யூது மடர்த்து. (61)

இருந்த பொழுது மிராவணன்று னின்ற
தெரிந்த வுடலான் திரைபோல் நெரிந்த
புருவத்து நெற்றியான் போந்துவரு சோரி
வருமொத்த வாயான் மடுத்து. (62)

Koviloor Digital Library

உதிரமிக்க வாரியுட னூனெலும்பு தோலும்
உதிரமிக்க வாரிநுக ரூணன் கதிர்செய்
வயிரப் பணைக்கை வழங்கும் படையான்
செயிருற்ற செய்கைத் திறன். (63)

இரும்பசிக்குங் காலை யெடுத்தா யுதமா
மிரும்பசிக்கு மாலை யெயிற்றான் வருங்களிற்றைத்
தின்றுபசி போக்கு திறத்தான் மதுவினிடை
கன்றிவரு மாசைமிடுக் கன். (64)

ஆலடுத்த சூல மடுத்துவரு தோளுடையான்
சூலடுத்த நீலமெனத் தோற்றத்தான் காலனெனக்
கொல்வான் பகைவர்தமைக் கொலும் கொடுமையினால்
வெல்வான் சுரரை விளித்து. (65)

உடல்கிடந்த கண்டுவரி னும்பர்க்கு முற்றும்
குடல்நடுங்குங் கொள்கையது கொண்டான் கடல்கிடந்த
தன்னதன்மே லங்கி யடுத்துப் படர்ந்ததென
மன்னுமயிர்ப் பங்கிகொண்ட வன். (66)

திக்கடங்க வென்ற திறத்தா னறத்தடக்கான்
மிக்கடங்க வில்லா விதுக்கதிர்கள் புக்கடங்கு
மேருப் புழைபோல் மிகுந்த துயிலடங்கிச்
சாரும் புழைக்கண் டரன். (67)

காம்புறங்கு மான கனவரைபோற் கைவரையின்
தூம்புறங்கு மானத் துதிக்கையென வோம்பும்
முழையுற்ற மூக்கினான் மூரியுற்ற பாம்பு
விழைவுற்ற காதான் மிகுந்து. (68)

கூயினா னும்முனெனக் கூற வுடனடுத்துப்
போயினான் மிக்க வொலிவுடனே வாயிலது
வல்லை நுழைந்து மதியடுத்த கோயில் வந்தான்
தொல்லை மலை போல்வான் றுதித்து. (69)

Koviloor Digital Library

வன்றிரண்ட தம்பி வணங்க வுடனெடுத்துத்
தன்றிரண்ட தோளிற் றழுவினன் பின்றகுன்று
நீணெடுங்கா லோடு நிறைந்து வருமலையைக்
காணத் தழுவல் கடுத்து. (70)

உடனிருத்தி யோங்கு முதிரத் தொடுகெட்
குடனிரைத்த வூட்டிக் குலவுங் கடனுரைபோல்
வெண்பட் டுடுத்தி விளங்கு கதிர்க்குழாம்
பண்பட்ட பூணணிந்தான் பார்த்து. (71)

பேரவிட்ட தீரப் பெருவலிகொ ளிந்திரன்முன்
னூரவிட்ட மாகளிற்றே டோடுதோள் சேரவிட்ட
வெற்றிமிக்க வோடைதனை வீரபட்ட மாநுதலில்
பற்றிமிக்கச் செய்தான் பரிந்து. (72)

மெய்யுடைமை கொண்டவணி மின்வெயிலை வீசியிட
தொய்யிலுற்ற தாம்துவரிற் றேய்ந்தாகும் கையுடைய
நாகம் கடலென்ன நல்ல மணச்சாந்தம்
ஆகமடங் கப்பூசு மாம். (73)

விடமெழுந்த தென்னவரு விண்ணை யடுத்துத்
தொடவெழுந்த மார்பினிடை சுற்று மிடபமுந்து
மேலாங் கடவுடந்த வீரக் கவசமதை
மாலா வணிந்தான் மதித்து. (74)

அன்ன தொருகாலை யாயத்தஞ் செய்பவிதற்
கென்னவரு காரணந்தா னேற்றதென்றான் மின்னும்
புருவமிடத் தோளும் புரிந்து துடிக்க
வெருவு மனத்தான் விரைந்து. (75)

வானரத்தாம் தானை வரத்தார் மனிதரவர்
கோனகரைச் சுற்றிவரு கொற்றமுந்தா னேனையுற்றார்
அன்னவரைப் போனகத்திற் காக்கி வரவென்றான்
பன்னவரை வில்லான் பரிந்து. (76)

Koviloor Digital Library

ஆனதுவோ வெஞ்சமர்தான் அற்புதமாங் கற்புடைய
சானகியாள் துன்பந் தவிர்ந்திலதோ வானும்
உலகும் பலகிலத்து மோங்கு புகழ் போய்
இலகும் மரண மியைந்து. (77)

கிட்டியதோ போருங் கிளிமொழிமான் சீதைதனைச்
சுட்டியதோ முன்குறித்த சொல்லதனுல் திட்டி
விடமடுத்த கற்பினளை விட்டிலையோ வின்னம்
மடமடுத்தல் மேல்விதியா மால். (78)

கல்லலா மிவ்வுலகைக் காயமுத லாயகட்டச்
சொல்லலாம் வள்ளலடு தோள்வலியை வல்லமையால்
வெல்லுவது மாமோ விளைமடங்கற் சீதைதனைப்
புல்லுவது மாமோ புகல். (79)

புலத்தியனுர் பொய்யின்றிப் போற்றும் புகழ்சேர்
குலத்தியனுர் தீர்ந்தமுற்றுங் கொற்றம் நலத்தியல்பு
தீர்தற்கு வேறென்னை சேரும் நிலத்தியல்பே
நீர்தக்க தாகும் நிறைந்து. (80)

கொடுத்தனையா மிந்திரற்கு கொற்ற முழுதும்
கெடுத்தனையாம் நின்னைக் கிளையைப் படுத்தாய்
பலவா மமரர் பழியதனுல் வீடும்
இலவாகு மென்று னெடுத்து. (81)

அறமுனைக்கண் டஞ்சி யகன்றதுவா முன்னம்
நிறமுனக்கு நல்கியதன் னீர்மை யிறவாம்
தொழிலெடுத்துச் செய்து தொலைத்தா யதனைப்
பழியெடுத்து வந்ததினிப் பார். (82)

தஞ்சந் தருமந் தகவு மவர்பாலாம்
நெஞ்சங் கருமமுரை நேர்ந்தடுக்கும் வஞ்சம்
பழிவந்த பாவப் பலனே நமக்காம்
இழிவன்றி யென்னு மியம்பு. (83)

Koviloor Digital Library

என்றுணர்வு கொள்ள விசைத்தா னதற்பின்னும்
ஒன்றுணர்வு கொள்ளி னுவப்புடைத்தாம் நன்று
நயக்கிலா யென்னில் நடுவென்கைச் சேரும்
மயக்கிலா மென்றான் மதித்து. (84)

காலிற் கடலைக் கடந்த கவிகளுண்டு
ஆலத்தாம் சீதை யகன்றதில்லை வாலி
யுரங்கிழித்த பாணமுள வுற்ற நமக்காந்
தரம்பழித்த தன்றியென்னுந் தாம். (85)

கையலைவிட் டன்னான் சரணளிக்கச் சார்ந்தனது
செய்யதம்பி யோடளவிச் சேர்தலே யுய்தற்
கடுத்ததிற மாகு மவையல்லா தெல்லாம்
படுத்ததிற மாகுமென்றான் பார்த்து. (86)

பந்திபந்தி யாகப் படையைச் செலுத்தியவை
சிந்திவரக் கண்டடுத்துத் தேம்புவது மந்திரந்தா
னன்றாகும் நம்வலியி னனவெலாங் கொண்டடுத்தல்
நன்றாகு மென்றா னலிந்து. (87)

உறுதொழிலைக் கூற வுனையழைத்த தன்றாம்
சிறுதொழிலார்க் கொல்லுஞ் செயற்கா முறுதிசொல
மந்திரிநீ யல்லை மறுத்து மொழிபுகல
வெந்திறலா யென்றான் விளித்து. (88)

மறங்கிளரும் போர்க்குறிமை மாண்டா யுணற்குப்
பிறங்கு தசைநறவும் பெற்றா யிறங்கிவரு
கண்மூடி யெல்லிபகல் காணு துறங்கென்றான்
கொண்மூ விடிபோற் கொதித்து. (89)

மானுடரை வாழ்த்தி வணங்குவது மற்றடுத்த
கூனுடைய வானரரைக் கும்பிடலு மூனுடைய
வும்பிக்கு முற்கு முகந்தசெய லுங்களைத்தான்
நம்பிக் குறைவடுக்கே நான். (90)

Koviloor Digital Library

தருகவென்றன் போர்ப்படையுஞ் சாற்றவரு கூற்றும்
வருகவென்முன் வானமண்ணும் மற்றும் இருகைச்
சிறுவருடன் போர்க்கென்று சீறினன் செல்லற்
குறுதல்கொண்டான் பொல்லா னுறுத்து. (91)

அன்னதனைக் கண்டதம்பி யாற்ற லறிவிலன்றன்
பொன்னடியைப் போற்றிப் பொருத்தியென வங்கொடிய
சூலத்தைக் கொண்டான் றுணிந்தொன் றுரைக்கலுற்றான்
காலத்தைக் கொண்டவிதி கண்டு. (92)

வென்றுவரு வேனென்றல் வீணும் விதியிவணி
னின்றுபிடர் கொண்டுதள்ள நேர்ந்ததுவாம் பொன்றுவனுன்
பொன்றினுற் பொன்னவளைப் போகவிட்டுப் புந்திதனில்
நன்றினுல் வாழ்கவென்ற னன். (93)

இந்திரனை வென்றோ னிராமன் றனித்தம்பி
வெந்திறலி னன்றாக வீடுதலாம் தந்திரமோ
காற்றினுற்ற சாம்பர் கருதுவாய் நீயதற்பின்
கூற்றினுற்ற செய்கைவிலக் கு. (94)

என்னைவென்றா ரென்னி னிலங்கை நகர்க்கரச
வுன்னைவென்றா ரென்ற வுரையுண்மை பின்னைக்
களித்தல் தவறிக் கனங்குழையை யன்பால்
அளித்தல் தவப்பயனென் ருய். (95)

இற்றைவரை யான்புரிந்த வேற்கா தனவாகுங்
குற்ற முளபொருத்தி கொற்றவனே யற்றதுவாம்
ஆனு முகத்தி லடுத்து விழித்தலென்றான்
போனன் சமர்க்குப் பொலிந்து. (96)

அவ்வழியி ராவணனு மானவன ஞட்டமெலாஞ்
செவ்வழிநீ ரிற்குருதி தேக்கினன் எவ்வழியோர்
எல்லாரு மேங்கின ரேற்ற பெருவாயில்
வல்லானுஞ் சென்றான் மதித்து. (97)

Koviloor Digital Library

இரும்படைகள் மாமுரச மெற்றி யெழுந்து
வரும்பரவை யென்ன வரைந்து பொருந்தவுடன்
வந்தனவாம் வானோர் வரமுடிமேற் றாளிகொண்டு
சிந்தினவாய்ப் போர்க்கச் சிறந்து. (98)

தேர்க்கொடிகள் யானைமிசை சேருங் கொடிகளொடு
தார்க்கொடிகள் வானிற் றதைந்தோங்கிப் பார்க்குரிய
தூளி துடைப்பதெனத் தோன்றுபடை வந்தனவாம்
ஆளியனை யானை யடுத்து. (99)

எண்ணும் படைக்கலங்க ளேற்றுவதி னலடுத்து
நண்ணும் பொறிபடைக்கு நாயகர்கள் கண்ணுற்ற
வாம்பொறியும் வான மடுத்து வருமெழிலி
தாம்பொரிய வாகுந் தகைத்து. (100)

தேரடுத்துச் செல்லச் சிறந்தபரி செம்முகத்துக்
காரடுத்துச் செல்லவரு காலாளும் பாரிற்
செலற்கரிதாய் வானிற் செறிந்து வருமாம்
வலத்தரக்கன் சேனை வளம். (101)

ஆயிரமாங் கோளரிக ளாளிகளு மத்தொகையே
ஆயிரமாந் தோல்பூத மாயிரமாய்த் தோயமுற்ற
ஞாலஞ் சுமக்கவரு நன்மணித்தே ரேறிவந்தான்
ஆலஞ் சுமந்தசினத் தான். (102)

தோமரம்வில் சக்கரங்கள் சூல மழுக்கோலும்
நாமமுற்ற வேலுலக்கை நாஞ்சிறண்டு வாமப்
படைசுமந்து சென்ற பலகணங்கள் தும்பைத்
தொடைசுமந்தான் பாங்கரடுத் து. (103)

நறையுடைய சாடி நவைவெந்த வூன்கள்
குறையுடைய தன்றிவண்டி கொண்டு பிறையுடைய
வல்லெயிற்றான் பின்பு வரைவின்றித் தந்தடுத்தார்
கொல்லயிற்கை வீரர் குறித்து. (104)

Koviloor Digital Library

ஒன்றோ பலர்க ளுதவவரு மூனறைகள்
பினறு பிலனிற்பெய் பெற்றியென வன்றிறலேச்
சேர்கரத்தால் மாந்திச் செறிந்தோர் பயங்கொள்ளப்
போர்குறித்துச் சென்றான் பொறுத்து. (105)

கணத்தாங் குரங்கிற் கழிவதுவோ வன்று
நிணத்தாக்க விவ்வுலக நேரோ பிணத்தாக்கப்
பட்டோடு மென்று படருடைய தேவர்மனம்
விட்டோட நின்றார் வெறுத்து. (106)

பாந்தள் தலைநழுவப் பார தனிறுேடும்
வேய்ந்து விளங்கவரு மேருவரை போந்ததெனப்
பொற்றிறத்த தேரின்வரு போர்த்திறனைக் கண்டுவந்தான்
விற்றிறத்த வீரன் விழைந்து. (107)

வீணை யெனினன்று வெற்றிதனைக் காட்டிநின்று
சேனுயருங் கேதனமுஞ் சீயமாம் காணவரு
காலடுத்த காட்சி கவினு மிழைமார்பன்
மேலடுத்தா னேவனென்றான் வேந்து. (108)

தோளி னுடுதோ டொடர்ந்து வரநோக்க
நாளினடல் வேண்டும் நடுநின்ற தாளார்
மலைசமரம் வேட்டுவரு மாண்போ லிவற்கு
நிலைசமரி நிற்பதெவர் நேர்ந்து. (109)

அரக்கனுரு நீக்கி யரியான தானை
வெருக்கொளக்கொள் வேடமோ வேறும் விரித்துவரு
மிவ்வுருவைத் தேர்ந்திங் கிசையென்றான் வீடணனைத்
தெவ்வுருவைத் தீர்க்குந் திறன். (110)

பேரிலங்கை மன்னவற்குப் பின்னோ னெனக்குமுன்னோன்
சீரிலங்கு போரிற் றிகழ்கிற்போன் காரிலங்கு
காலனுற்ற செய்கைக் கழற்கும்ப கன்னனெனும்
சூலமுற்றா னென்றான் றுதித்து. (111)

Koviloor Digital Library

தவனுணர்ந்த வேதத் தலைவன் கடனின்
றவனெழுந்த காலத் தசுர்க் கவதியுண்டா
மின்னுன் றயிலி னெழுந்தாற் சுரர்கட்கே
இன்னுவா மென்று னெடுத்து. (112)

ஆழிவர வான அளவில் வருபவன்றன்
உளழியொரு நாளா யுறங்குவான் பாழிபெற்ற
இந்திரன்யால் யானைதனை யேற்றெடுத்த சீற்றத்தான்
மந்திரமாந் தோளெடுத்த வன். (113)

ஒழிந்துவரு தீயி னொடுகா றனையும்
பிழிந்துவரு சாறு பெறுவான் அழிந்து
வரமீதி லாழிநீர் வன்காலி னெற்றுந்
தரமீது கொண்டவலத் தான். (114)

ஊனுயர்ந்த தேக வுரத்தான் வரத்தவத்திற்
தானுயர்ந்த மேலாந் தரத்தானுன் மானும்
பொருத்தமுற்ற நாளெல்லாம் போற்றுநா ளொன்றுத்
திருத்தமுற்ற தூக்கத் தினன். (115)

சூலமுண்ட தன்னதுதான் சூருண்ட வீரரடு
காலமுண்ட தன்னதனைக் கைக்கொள்வான் வேலைகொண்ட
ஞாலமுண்ட நாயகனே நாட்ட மிகுதவத்தால்
ஆலமுண்டான் தந்த தடுத்து. (116)

மின்னிலங்கு மேனி விளங்கிழையார் விண்ணவரை
முன்னிலங்கு போரின் முனிந்தவரை பின்னிலென்று
வெங்கண்ட தன்றி விழியான் முகத்தெதிரில்
என்கண்ட தின்னு னிகல். (117)

தருமத்தாம் செய்கைத் தரமில்லைத் தானே
வருமொத்த கேடென்றுன் வாய்மை யுருமொத்தான்
கொள்ளானென் றுனக் கொடுவுரைகள் கூறியதால்
தள்ளானென் றுனு னமக்கு. (118)

Koviloor Digital Library

மறுத்துரைத்த முன்னவன்றன் வாய்மை யதனை
யொறுத்துரைத்து மாவதனை யொன்றான் வெறுத்துறுத்து
மாய்வதுட லென்று மதித்து நினைப்பரமாய்
ஆய்வதுடன் வந்தா னடுத்து. (119)

நன்று மரணம் நமக்கென் றுறுதிகொண்டு
பொன்ற மனது பொருந்தியே யின்றவரு
காலன்முன் னெய்துங் கருத்தான் வரத்தென்றான்
சீலன்முன் செய்கை தெரிந்து. (120)

என்றுரைத்த லோடு மிரவி மகனிவனைக்
கொன்றுரைத்த லின்றுபலன் கூட்டியே நின்றதனைச்
செய்யி னிடரிவற்குச் சேராது நன்றென்றான்
அய்யனினி தென்று னறிந்து. (121)

ஏகுதற்கி யாவ ரெனலு மிலங்கைமன்னன்
ஆகி னடியே னடுத்துள்ளம் சேகறத்தான்
தேற்றிவரிற் சேர்ப்பனென்றான் சேவகனு நன்றென்றான்
போற்றிவிடை கொண்டான் புகழ்ந்து. (122)

தந்திரத்தை நீந்தித் தனதுபலஞ் சார்ந்தடுத்தான்
வெந்திரத்தாற் கைய வீபீடணனும் வந்தா
னெனக்களித்தான் சிந்தை யிவனுமவன் பாதந்
தனக்களித்தான் தன்வந் தனம். (123)

வந்தனைசெய் வானை மகிழ்ந்தணைத்தான் மார்பினொடு
முய்ந்தனைசெய் நீயொருவ னென்றுவந்தேன் சிந்தனைதான்
தேறாது செய்தாய் தெளிவிலர்போ லென்றுகண்ணீர்
ஆறாது செய்தா னடுத்து. (124)

அவயமெலாம் பெற்றதுவு மான சுரர்க்காம்
உவயமெலாங் கேட்டுவந்தே னுள்ளம் கவிஞரென
நல்லறிவு மிக்காய் நடுவெற் களிக்குமெம்பாற்
புல்லறிவின் வந்ததென்னன் பு. (125)

Koviloor Digital Library

குலத்தியல்பு தீர்ந்தேம் குமரவுனைக் கொண்டு
நலத்தியல்பாம் புண்ணியத்தை நாட வலத்தியல்தோள்
கண்டிவரு மெற்குக் கவலைக் கடலளித்தாய்
அண்டிவரு செய்கை யடைந்து. (126)

அறத்துணைவர் தம்மை யபயஞ்சே ருன்னைத்
துறத்துவது செய்யார் துறையோ ரிறப்பாம்
பதத்தைவிட்டாய் புன்பிறவி பாறு மிராமன்
பத்தைவிட்டாற் புன்பிறப்பாம் பார். (127)

அறத்தாகு மண்ணாற் கடுமை யடைந்தாய்
மறத்தாகு மாயவினை மாற்றிப் புறத்தாகும்
தீமை சிதைத்தாய் திருவிலிபால் வந்ததனுல்
மாமை சிதைத்தாய் மதி. (128)

நீதித் தருமம் நிலமை புலமையதும்
ஆதித் தவத்தி னடைந்தனையாம் வேதியர்கள்
வேத்த னருளாள் விளியாத வாயுளுற்றாய்
மாத்தனலம் சாதியின்புன் மை. (129)

ஏற்றவர வில்லோ னிறைவ னிராமனின்றான்
மாற்றவரான் றம்பியொடு மற்றுநின்றார் கூற்றமுடன்
நின்றதெமைக் கொல்லவிதி நேர்ந்துநின்ற சார்ந்தவெம்பாற்
துன்றவர லென்னைமதித் து. (130)

அய்ய வயோத்தி யரசற் கடைக்கலமாய்
உய்கிலையென் றுலரக்க ருள்ளோர்கள் மொய்கணையின்
மாரியினல் மாண்டால் மதித்தெண்ணிர் சேர்த்தளித்தற்
காரினிமேற் கண்டா யறிந்து. (131)

வருவ திலங்கைக்கிம் மட்டியெலாந் தீரத்
திருவுறையு மார்பனருள் சேர்ந்து பெருமையுறச்
செல்லென்று னல்லருளாற் சேர்ந்தநிப முண்டென்றான்
சொல்லென்றான் சொல்வான் றுதித்து. (132)

Koviloor Digital Library

இருளுற்ற சிந்தையெற்கு மின்னருள் செய்வீரன்
அருளுற்ற நீசேர்ந் தபயப் பொருளுற்றால்
வன்பிறவி நோய்க்கும் மருந்தாம் சிறந்தபதம்
அன்புறவாய் நல்கு மடுத்து. (133)

எனக்களித்த செல்வத்தி னேற்ற மதனை
நினக்களித்து நின்னேவ னிற்ப னுனக்குறுதி
யில்லையிதன் மேலு மெடுத்த வலிநீங்கும்
தொல்லையிருண் மாயத் தொடக்கு. (134)

போதன் மிகவரிது போனாற் புகலிடமில்
சாதல் சரதந் தழுவறத்தா யாதலினால்
ஏதங்கமாகு மியல்பாம் பிறவிநிலைக்
காதங்க மாகுமறிந் தாய். (135)

தீய்தந்த செய்யிற் சிறந்தார் பிறந்தவுற்றார்
தாய்தந்தை யேனுந் தணத்தற்காம் நீயே
தெரிந்தவழி சொல்வதெனை சீரடுத்துச் செய்யிற்
பரிந்தபழி சேர்வதுண்டோ பார். (136)

மக்கள் குரவர்தமை மாதரைமற் றுள்ளோரை
யொக்கவுயி ரன்னாரை யொன்றவே துக்கமிவை
யென்று துறப்பா ரியல்பிற் றுணிவுடையார்
நன்றுதரும் வீடு நயந்து. (137)

தீவினைசெய் வாளொருவன் தீங்கில்லா ரேவர்களும்
வீவினைசெய் தாலதுதான் வீணன்றோ வாய்வினையா
யன்றறத்தை நோக்கி யளித்ததாய் தன்னையன்றோ
கொன்றறச்செய் தான்றவமிக் கோன். (138)

உடலினுற்ற வொன்றை யுதிரமுறக் கீறித்
திடமுறச்சுட் டோர்மருந்திற் றீர்ப்பர் கடலினிடை
கோட்டங் கரைத்துக் குறித்த பலனுண்டோ
நாட்டங்கொ ணீயே நவில். (139)

Koviloor Digital Library

காக்கலா முன்னவனைக் கண்டதிலை யன்னதனை
ஆக்கலாம் வேறெனினு மாவதிலை நீக்கலாங்
கொண்டவிண்ணோர் கைகொட்டக் கூசா மரணத்தா
லண்டவொண்ணுந் தீநரகி னாழ்ந்து. (140)

மறங்கிளர வென்றுலகை வாழ்ந்திலைமண் மீதா
விறங்கினையாம் போக விளமை யுறங்கினையா
லுற்ற துளதோ வுரிமையறக் கெட்டபின்னை
மற்ற துளதோ மதி. (141)

திருமருவார் மார்பனல்கத் திருமனந்தர்
பெருமைமிக வாழ்நாளும் பெற்று யருமையென்னும்
ஓங்கரசும் பாங்காக வுற்றதுவாம் நன்மையெலாம்
தீங்கனைத்து நீங்குஞ் சிதைந்து. (142)

தேவர்க்குந் தேவனல்கச் சீரிலங்கைச் செல்வமுற்றால்
எவர்க்கு மேலாத வேற்றமுற்றாய் மூவர்க்கும்
மேலான மூர்த்தியார் வேண்டி யறங்காக்க
மாலானார் சிந்தை மதித்து. (143)

உன்மக்க ளாகியவ ருன்னோடு தோன்றிவரு
மென்மக்க ளானோ ரிகல்செய்வான் தன்மக்க
ளாகியுள்ளார் சீர்பெறுவ ராந்தரும மோங்கவரின்
வாகையுள்ள செல்வம் வரும். (144)

முனிவர் கருணைவைப்பார் மூன்றுலகந் தன்னி
லினியார் பகையென்ப தில்லை கனிகொள்ளும்
காலத்திற் பூக்கொய் கருத்தற்று வெள்ளையுறும்
சீலத்திற் சொல்வாய் தெரிந்து. (145)

வேதவில்லி நாதன் விரும்பி யெனைவிட்டான்
காதலென்மேல் வைத்த கருணையா லாதலினு
லன்னான் சரண மடைவா யெனப்பூண்டான்
முன்னான் சரண முடி. (146)

Koviloor Digital Library

தும்பிசுழல் தொங்கற் சுடர்முடி பூத்தோயப்
பும்புகழல் கையெடுத்துப் பற்றிநின்ற தம்பிதனை
மார்பிற் றழுவி மயங்கிவரு கண்ணீரான்
சார்பிற் புகல்வான் றடுத்து. (147)

நீர்க்கோல வாழ்வைநச்சி நேர்ந்து வளத்தெனையும்
போர்க்கோலஞ் செய்தார்க்கென் போற்றுமுயிர் தார்க்கோல
மேனிமைந்த வென்சொல் விரும்பினையேற் கார்க்கோல
மேனிமைந்தன் பாற்செல் விரைந்து. (148)

மலர்மேலாம் வள்ளல் வழங்கும் வரத்தால்
உலையாத் தருமத்தி ேனுங்கு தலையடுத்தா
யானதனு லுற்கா மழியாப் பதமெனக்காம்
வானதனைச் சேரும் வரம். (149)

கருத்திலிறை தீமை கருதி லதனைத்
திருத்தவரி னன்றே சிறப்பாம் பொருத்த
மிலையே லவற்குமுன மேற்ற மரணம்
தலையே யெனவறிவாய் தான். (150)

அம்புகிளை வில்லா னடுகணையாற் சேனையொடும்
வெம்புகிளை வல்லான் விழைந்திருந்தா னம்புவியில்
தம்பியர்க ளின்றித் தனியே கிடக்கினென்று
மிம்பரியல் நீயே யியம்பு. (151)

இணையின்றாந் தேவ னிருங்கயிலை பேர்த்த
பணையொன்று தோள்கால பாசம் பிணியுண்டு
தோற்றுளவாங் கூற்றடுத்த சூழல் வருங்காலம்
எற்றதுணை யின்றிவரற் கென். (152)

வம்பிட்ட மாலை வரத்தானென் முன்னவனை
யம்பிட்டு மாய்த்தற் கடார்த்தவனைக் கும்பிட்டு
வாழ்வடுக்கேன் கூற்றை வலிந்தாடல் கொண்டனேன்
தாழ்வடுக்கே னென்றறிவாய் தான். (153)

Koviloor Digital Library

அனுமானை யங்கதனை யாதவன்சேய் தன்னைத்
தனுமானை நீலனிவர் சார்வார் கனிதொடரும்
வானரத்தி னும்கடலை வாட்டும் வடவையெனத்
தானடர்த்து நிற்பேன் தனித்து. (154)

ஆலங்கண் டஞ்சசுர ராக வரியோடச்
சூலங்கொண் டோடித் தொடர்ந்துபற்றி நீலக்
கடலோடக் காறீ கலங்கிவரச் செய்வேன்
அடலோடென் னுண்மையறி யாய். (155)

செருவரைய வஞ்சாது சேர்வ ரெனிலோ
கருவரைபொற் குன்றனைய காட்சி யிருவருற
வானரங்க ளீறில் வலிய வுயிர் தம்மை
வானரங்கின் வைப்பேன் வளைந்து. (156)

தாழ்க்கிற்பா யல்லை தகுதிகொண்ட சொல்லென்று
கேட்கிற்பா யாகினவர் கேழினட்பை வேட்கிற்பாய்
மாற்றமினிச் சொல்லின் மருவு புகழின்மை
யாற்றுமெனச் சொற்று னடுத்து. (157)

போதுவா யையவினிப் பொன்றி னவர்க்கெல்லாம்
சாதுவாய் வீரனுரை தாங்கியே யாதி
மரபுற்ற செய்து மதிக்காத் துயர
நரகத்தை மாற்று நயந்து. (158)

ஆகுவதாங் கால மழிவு மதுபோலப்
போகுவதும் போற்றினுந்தாம் போதலுறும் வாகதனை
நன்றுணர்ந்தார் நின்னிலெவர் நண்ணு துயரெதற்காம்
என்றுமுளா யென்று னெடுத்து. (159)

என்றவனை மீட்டு மெடுத்தகலத் தோடணைத்து
நின்றவனை நோக்கி நெடுங்கண்ணு லின்றோ
டுடற்பிறப்புத் தீர்ந்ததென்று னுற்றவனு மண்ணல்
அடித்தலத்து வீழ்ந்தா னறிந்து. (160)

Koviloor Digital Library

வணங்கினன் கண்ணும் வதனமொடு வாயும்
உணங்கின னுற்றுரை றயா னென்றும் பிணங்கின
லாவதில்லை யென்ப தறிந்தா னெழுந்துசென்றான்
தாவதில்லான் சிந்தை தளர்ந்து. (161)

கள்ளமைசேர் வாழ்க்கையெமைக் கைவிட்டுக் கால்விட்டான்
பிள்ளைமைதீர் வாவெனன்ற பேதைநெஞ்சன் வெள்ளநீர்
வேலையுற்றுங் கண்ணீர் விழவடுத்துப் பார்த்துநின்றான்
சீலமுற்றான் செய்கை தெரிந்து. (162)

எய்திறத்தாம் வீர னிராம னடிவணங்கி
யுய்திறத்தார்க் காமறத்தி னுண்மையுண்டாம் பெய்திறத்தாற்
பேசினே னென்சொற் பிடிக்கான் குலமானம்
ஆசினற் காகுமென்று னய்ந்து. (163)

கொய்த சடைக்கற்றைக் கொந்தளத்தாங் கோலவள்ளல்
னொய்தசைத்து நும்முன்னும் நோன்மையனை யெய்திறத்தா
செய்தலின்றிச் சேற்கவெனச் செப்பினேன் சேர்விதியை [ன்
எய்தலின்றிச் செய்வா ரெவர். (164)

எனவுரைக்கும் வேலை யிராக்கதராம் சேனைக்
கனைகடலும் வானரத்தைக் கட்டி முனைதொழிலைச்
செய்யவுல கம்போர்த்த சேர்தூளி கம்பலையும்
வெய்யகட லாகும் விரைந்து. (165)

ஓடும் புரவிகரி யோடு முருளைத்தேர்
ஓடுமலை யோட வுதிரநதி காடலையாம்
ஆடுங் கவந்த மலகை யுடனாடும்
ஆடுங் கொடிபறவை யாய். (166)

மூளைதசை யென்பு முறியுங் குருதிநிணம்
வாளுங் குழம்புபட்டார் வல்லரக்கர் மாளக்
குருதிவெள்ளத் தாழ்ந்த குரங்குப் படையும்
நிருதவெள்ளந் தம்மால் நிரந்து. (167)

Koviloor Digital Library

எய்தார் நிருத ரெடுத்தார் கவிவீரர்
பெய்தா ரரக்கர் பிசைந்தவரி வைதாவும்
வாட்படையிற் கொன்றார் வலத்தரக்கர் வானரர்கள்
தோட்படையிற் கொன்றார் துணித்து. (168)

நீரோட்டுங் காலு நெருப்போட்டு நீருமெனப்
போரோட்டி வென்ற புகழ்நோக்கித் தேரோட்டி
வந்தான் திருவதனை வானோர்க் களிக்காது
சிந்தா குலஞ்செய் திறன். (169)

ஊழிபட்ட காலத் துலகந்தான் பட்டதெனப்
பூழிபட்டுச் செந்நீர் புணரிபடச் சூழிபட்ட
நெற்றிப் பகட்டிரதம் நேராழி பட்டவுடன்
மற்றிப் படைமடிந்த வாம். (170)

குன்றுகொண்டு வீசும் குதிக்கும் மதிக்குமுடன்
நின்றுழக்கித் தாக்கும் நெருக்கியடும் தின்று
சிரங்க டமைத்திருகும் தேய்க்கும் விண்வீசும்
கரங்களினாற் கொல்லுங் கடுத்து. (171)

வாரி தனிலாழ்த்து மண்ணிற் பிடித்தடிக்கும்
நீரிற் குவிக்கும் நெருப்பினிடும் தேரினிடை
எற்று மெரியு மெடுத்து மரத்தடிக்கும்
பற்று மலையிற் படுத்து. (172)

பறந்தார் பயந்தமரர் பல்பிணத்தின் பம்மல்
நிறைந்தாம் பரவைதிசை நேர்ந்து மறைந்ததெனக்
கூற்றமஞ்சக் கொன்று குமைத்தான் பெரும்படையை
ஆற்றலெஞ்சா வீர னடித்து. (173)

மற்றிலவாம் பூவின் மரனொடு கல்வைக்கப்
பெற்றிலமா மின்றோடு பேர்த்துமென வெற்றிகொண்ட
வீர ரெடுத்தெறியு மேலாம் மலைகள்மரம்
தீரனடுத் தேர்ந்தான் தெரிந்து. (174)

Koviloor Digital Library

கல்லி னொடுதூறுங் கட்டை முதலான
புல்லி னொடுபொடியாய்ப் போனகண்டு மில்லையினி
மற்றெரியத் தக்கவெண வானரங்கண் மேலடுத்து
முற்றுமுட்டித் திரு முனிந்து. (175)

குன்றின் விழுங்குருவிக் கூட்ட மெனக்குறித்துச்
சென்றெழுந்து குத்திக்கை தேய்ந்ததுடன் வன்றிறலார்
பல்லாற் கடித்துப் பரவுமுகி ராற்பிளந்தும்
செல்லாமே லோடும் செறிந்து. (176)

மூலமுற்றும் பூமூழ்கி முற்றும் பொருப்பதனைக்
காலரற்றிக் கொண்டதெனக் கைவாங்கி நீலன்
நிமிர்ந்தபடி விட்டான் நிகர்சூலங் கொண்டு
திமிர்ந்தபொடி செய்தான் சிரித்து. (177)

பெயர்த்தா மலைதேடிப் பேரென்னை யென்னாப்
புயத்தாம் படையாற் புகுந்தான் அயத்தாகும்
மேகத் திடிக்குநிகர் வெற்றிக் கரமுடையான்
ஆகத் திடிக்கு மடர்த்து. (178)

கைசலித்துக் காலும் கருத்தி னொடுசலித்து
நெய்சமித்த காயெரியாம் நீலனைத்தன் கைசலிக்கான்
எற்றினான் சூல மெடுக்கான் வெறுங்கையாற்
பற்றினா னென்று பகைத்து. (179)

ஆண்டதனை நோக்கிவரு மங்கதன்றா னாழிவரை
நீண்டதனைத் தூக்கி நெருக்கிவிட்டான் மாண்டான்
அரக்கனென வானவர்க ளார்க்க நெருக்கும்
பொருப்பையவ னேற்றான் புயத்து. (180)

ஏற்றவுடன் குன்ற மெடுத்த தாகளாகி
வீற்றடுக்க நின்றகவி வெள்ளமெலாம் உளற்ற
மெமக்கேதென் றோடி யிழிந்தார் குமரன்
சமிக்கான் சினத்தினடுத் தான். (181)

Koviloor Digital Library

இடக்கையி னலரக்க னெற்றமெழுத் தண்டை
தடுக்கை தரத்தின்ருய்த் தாக்கி மடக்கு
முயிரையென வீசமைந்த னுற்றுப் பிடித்தான்
வயிரமெனுந் தண்டை வலித்து. (182)

பிடித்ததையச் சுற்றிப் பெருவலியான் ரன்னே
யிடித்தசனி குன்றடுத்த தென்ன வடித்துக்
குடிப்பனுயி ரென்னக் கொதித்துமண்டி நின்றுன்
கொடிப்படிதேர் முன்னர்க் குதித்து. (183)

நின்றவனே யன்னு னெருப்பெழத்தா னேக்கியின்று
பொன்றவரு தானைப் புரவலனே வன்றே
லவன் மகனே வெம்மூ ரனல்மடுத்தான் ருனே
எவனுரைநீ யென்ரு னெடுத்து. (184)

நும்முனே வாற் கட்டி நுவன்ற திசைதாவி
மும்முனேவேற் றேவனடி முன்னடுத்த வெம்முனேயான்
மைந்தனுனே யென்வாலின் வார்ந்தெடுத்தி ராமனடி
சிந்தைசெய்வே னென்ருன் சினந்து. (185)

உந்தைபகைப் பற்றிலனே யோரம்பி னுற்றொலைத்தான்
தந்தபகை செற்றிலையேற் றூரணியோர் நிந்தை
புரியவரு மென்ருன் புகைக்கனலைப் போலுந்
தரியலரைத் தாக்குந் தரன். (186)

இத்தலையின் வந்த திராமனிடை வாலீர்த்து
வைத்தலையின் ருந்தேவர் மார்பேற்ற முத்தலைவேல்
உச்சி முதுகுறலா லுன்வால்போற் கைகாலும்
நச்சடைய வென்ரு னகைத்து. (187)

அற்றவன்ஞன் சொல்ல வனல்வா யசனிகுன்றி
னுற்றதென வோங்குலக மோய்ந்துட்கக் கற்றகையால்
வீசிப் புடைத்தான் மிகுவயிரத் தண்டதுவுந்
தூசிப் புகலான து. (188)

Koviloor Digital Library

தண்டிற்ற தாற்றடக்கை தன்னாற் றறுகணனைக்
கொண்டிற்ற தாகக் குனிக்குங்கால் புண்டிறப்பக்
கைய னுடன் குத்தக் கடுத்து விழவந்தான்
செய்ய னனுமான் செயிர்த்து. (189)

மறித்தவனைச் சூலத்தால் மார்பினிடைக் குத்தக்
குறித்தவனை யன்னிலையோர் குன்றம் பறித்தவன்றன்
செற்றியினி னிற்க நிகரடுத்துச் சேரவைத்து
வெற்றியனை வாழ்த்தும் வியந்து. (190)

தலையதனில் வேறோர் தலையிதெனநின்ற
மலையதனை மாருதிதன் மார்பி னுலைவுறத்தான்
விசித்தோள் கொட்டி வியந்தான் மருவலரைக்
கூசித்தோங் கொள்ளவடுங் கோள். (191)

அவ்வழியி னங்கதனை யங்குலத்து வீரரஞ்சார்
வவ்வினராய்ப் போந்தார்கள் மாருதிவான் கவ்வி
யடுத்தவரை வாங்கி யரக்கன்முன் னின்றங்
கெடுத்தவுரை சொல்வா னியைந்து. (192)

எறிவே னிதனை யிமைப்பளவி னாற்றல்
அறிவே னதன்வலியை யாற்றின் விறலுடையாய்
பின்னையுந்த னேடுமமர் பேணே னுலகதனி
லுன்னைமுந்து வீரரெவ ரோது. (193)

மாற்றமொப்பச் சொல்ல மலைமுழையாம் வாயுடைய
கூற்றமொப்பான் நீகொண்ட கோமலையை எற்றுவரு
காலத்தி னெற்கமிறை காணினுநான் தோற்றதென்றான்
ஆலத்தி னிற்பா னடர்த்து. (194)

மாருதியாம் வல்லையெனில் மாறு நில்லன்றேற்
பேருதியா லென்று பிறங்கவிட்ட காருதிருங்
குன்றறத்தோ ளேற்றான் குருந்துகளாய்க் கண்டவன்றன்
வென்றிக்கே கொண்டான் வியப்பு. (195)

Koviloor Digital Library

இளக்கமிலா தாகு மிவனுற்ற லென்றும்
துளக்கமிலான் வேறெவைக்குந் தோலான் பிளக்குமெனில்
வள்ளலொத்த பாணந்தான் மாய்க்கு மெனவநுமான்
உள்ளமொத்துச் சென்று னுகந்து. (196)

தாக்கினூர்க் கெல்லாஞ் சலித்தது கையன்றி
நூக்கின லன்னுற்கு நோவுண்டோ வாக்கினன்
போர்க்களத்திற் கோடரத்தைப் பொன்ற வடுசெய்கை
ஆர்க்களத்தற் காகு மறிந்து. (197)

சங்கத்தா லாங்குரங்கு சாயத் தவவேட
ரெங்குற்ருர் வேறிலங்கை யேற்றதுண்டோ விங்குற்ரு
ரில்லையோ வென்று னெடுத்தழைத்தான் கூற்றமென
வில்லையோர் கையான் விளித்து. (198)

பறந்தலையின் வந்து பலகவியின் பண்ணை
யிறந்தலைய மற்ற விரிய வறந்ததுவாம்
வெம்போர்க் களஞ்சோரி மிஞ்சிக் கடலடுத்துச்
செம்போர்க்கச் செய்யும் சிறந்து. (199)

குன்றமொடு காவுங் குரைந்த குரங்கென்று
வென்றபடை பாதிக்கு மேன்மடிந்த வின்றென்னுந்
தேவர் மனத் துன்பந் திறம்பச் சினந்துகொன்ருன்
தாவமெனத் தம்பி தகைந்து. (200)

நாணெறிந்தான் வில்லை நடுங்கி யரக்கியர்கள்
பூணெறிந்தார் நாயகர்க்குப் போக்கென்று சேனூர்
திசைசெவிடு பட்ட செறுக்கு மலகை
இசைசெறியப் பாடு மியைந்து. (201)

அரக்கர் கழுத்தை யரிவ விரியுஞ்
சிரத்தைத் திசைகொண்டு செல்வ தரத்திெனுடு
வம்படைத்த போர்க்களத்தை வாங்கிமேற் செல்வதுதான்
கம்படைத்த போன்றசரங் கள். (202)

Koviloor Digital Library

உருப்பதங்க னொத்த வொளியுற்ற பாணம்
பொருப்பதங்கை யானைசிரம் போக்கிச் செருப்பதத்தைச்
சேரா வரக்கர்தலை சிந்தி யுடலொளிக்கும்
பேரா முழைபுகுபாம் பின். (203)

மருப்பிழந்த யானையது வாலுஞ் செவியும்
நெருப்பிழந்த கண்ணும் நெடுங்கை செருப்புகுந்த
காலொத்த காலும் கடிந்து தொலைத்தனவாம்
ஆலொத்த பாண மடுத்து. (204)

நிரந்தரமாய் விற்றொடையி னேர்ந்து நிறைந்த
சரந்தடியத் தாமயங்கிச் சார்ந்து குரந்தடியப்
பட்டுழைத்த லாற்குதிரை பாறினவை யன்றி
விட்டழைத்த தில்லை விரிந்து. (205)

பல்லவங்கள் பட்டுப் படுபுரவி பல்காலும்
வில்லுடையாள் சூதரொடு வீழ்த்தியே யெல்லையற்ற
வார்குருதி யீர்த்த வழக்கலது வேறிலவாய்
தேர்குறுகித் தீர்ந்த சிதைந்து. (206)

நாதன்வெற்றி நாள்குறித்து நாட்டிவைத்த நாண்முளைகள்
ஓதியுற்ற பாலிகையை யொத்ததென நாதம்
கிழிந்துநட்டு வீழ்துடியிற் கேடடுத்துச் சீர்தான்
அழிந்துநட்ட சாமரைக ளாம். (207)

வேனிலா னன்ன விமலன் கணைவிலக்க
மான வரக்கர்படை வாரியே போன
திசைபொறிகள் போர்ப்பத் திரிந்துமீன் வானம்
மிசைவீழ்ந்த தொத்த விரிந்து. (208)

கரங்குடைந்த போய்த்துடர்ந்து காயும் பரிமா
குரங்குடைந்த கொய்யுளையைக் கொண்ட தரங்குடைந்த
தேரைக் குடைந்த சிறந்த வரப்பாகர்
வீரங்கு டைந்த வெறுத்து. (209)

Koviloor Digital Library

மெய்யுணர்வி லாத வினையரக்க ராக்கைதமை
அய்யன் சரமறுத்த வாற்றலால் செய்ய
தரம்பயிலுஞ் சீவன் றனைவானி னுற்ற
அரம்பையர்கள் சூழ்ந்தா ரடுத்து. (210)

மறக்கொடிய பாண மறுக்கா மழைபோல்
நிறத்தடுக்க நேர்ந்த நிருத ரிறக்கமெய்தி
வானடுத்தா ரென்றால் வளமார் துறக்கமதிற்
தானெடுத்த வேற்றமெனைத் தாம். (211)

ஒருவரைக்கை மற்று மொருவர் சிரத்தைக்
குரைகழலைத் தோளிணையைக் கோறி விரவலரைக்
காணமற் றீர்த்த களத்திலக்கு வன்பகழி
வாணளைப் போக்கி வரைந்து. (212)

சிலரைக் கரத்தைச் சிலரைச் சிரத்தைச்
சிலரை யுரத்தைக்கொள் செய்கை நிலவரையில்
தந்தபொருட் கேற்பத் தமிழ்வழங்கும் பொற்புலவர்
சந்தவழி யாகுஞ் சரம். (213)

அறத்தினுயி ரான்கணையா லன்றரக்க ரெல்லாம்
இறத்துமென வெண்ணி யிரிந்து நிறத்திற்
படத்திசையிற் சிந்திப் படர்குருதி யென்ன
வெடுத்திசையின் ரேடினு ரேற்று. (214)

செருவலியி ராக்கதர்கள் தீரச்செய் தம்பி
பெருவலியைக் கண்டரக்கன் பேராத் திரிபுரத்தைத்
தீர்த்தடுத்த தேவன் செருவிவற்கு நேரென்று
வாய்த்தடுத்துச் சொற்றான் வரைந்து. (215)

படர்ந்த வடற்றட்டிற் பாகர்திசை தோறுந்
தொடர்ந்துசெலுத் தக்காலுந் தோன்றிப் படர்ந்தமனம்
காரோட்ட மென்னக் கடுப்பின் வருபெரிய
தோரோட்டி வந்தான் செருத்து. (216)

Koviloor Digital Library

தோன்றிவரு தேரிற் றுகள்சே ரரக்கனவன்
யேன்றுசெருச் செய்ய விளையோய்நீ யூன்றிவரு
பாதத்த ஞகல் பரிவன்றென் ரேட்கொளென்ருன்
ஆதித்தன் சேட னடுத்து. (217)

ஏறினன் கோளரிபோ லேற்றிமையோ ராசிமொழி
கூறினர் வானரர்கள் கொண்டாடி நூறுபத்துத்
தாவனுமா னித்தபரி தாங்கிரதத் தோங்கிநின்ற
தேவனுமான் செய்டபுயத் தேர். (218)

தன்னேர் பிரிதில் தரத்தான் புயத்தடுத்துத்
துன்னேர் புயத்தம்பி தோன்றிவரல் பொன்னின்
வரைவெள்ளி மால்வரைமேல் வந்ததெனக் கூறும்
தரமன்றி வேறென் தரும். (219)

ஆங்கடுத்த வீரன் அடுத்தமர்செய் வாளரக்கன்
தாங்குகணைப் புட்டிலது தாங்கியே யோங்கியதோள்
வீங்குவலிக் கேற்ற விசும்படுத்த வில்வெள்க
வாங்குவரை வில்லெடுத்தான் வாய்ந்து. (220)

வரராமன் றம்பிநீ வாளரக்கன் தம்பி
பொரநின்ருேம் காண்பார் புலவர் பரவும்
வலிக்குரிய போரும் வழங்கவரு கென்ருன்
கலிக்கடலைப் போல்வான் கடுத்து. (221)

பெய்தவத்தி னேர்பெண் பிறந்தா ளமதுழையிற்
செய்தகுற்ற மில்லாசி சேர்சினத்தாற் கொய்தகொடுங்
கொற்றவனீ மற்றவடன் கூந்தலெருட்ட கைவீழும்
இற்றவனி யென்ரு னெடுத்து. (222)

அல்லெடுத்துச் செய்த வினையா னதுபகர
மல்லெடுத்த தோட்டம்பி மாற்றமுன்பால் வில்லெடுத்துச்
சொல்வதனை யன்றித் துணிவே தெனவுரைத்தான்
வெல்வதனை யேற்ருன் விரைந்து. (223)

Koviloor Digital Library

விண்ணிரண்டு கூறாகி வெற்பும் பிளந்தவென்றால்
மண்ணிரண்டு கூறை வழங்குவதென் கண்ணிரண்டுந்
தீமுகக்கப் பாணஞ் சிறந்தெண்ணி ரண்டுவிட்டான்
நோமுகத்தான் சிந்தை றுணித்து. (224)

உம்பர்களின் வன்மை யொடுக்கப் புரிசெயலான்
வெம்பு சினத்தரக்கன் விட்டதிற லம்பதனை
நான்கம்பி னலறுத்தா னல்லோர்கள் போற்றுவலத்
தான்தம்பி யானுன் தகைந்து. (225)

அறுத்ததொரு காலை யருக்க னமரர்
திறத்தைச் செருத்த திறலைப் பொறுத்த
கணையொன்று விட்டதனைக் காவென்றான் போற்றற்
கிணையொன்று வீர னெதிர். (226)

புரிந்ததிசை யெங்கும் புயலாய்ப் பகழி
யெரிந்ததிற நோக்கி யிளையான் தெரிந்ததனை
யோர்தெய்வ வெங்கணையா லுற்று யிரமுகத்த
வார்கணையைச் செற்றான் வரைந்து (227)

ஆறிரண்டு பாண மனுமா னுரத்தழுத்தி
வேறிரண்டு தம்பிபுய மேற்செலுத்தி நூறமைம்ப
தோரோர் தொடையி னுகளவிடுத் தடர்த்துச்
சீரார் திசை நிறைத்தான் தேர்ந்து. (228)

மறைத்தனவாம் வாளி மழையவற்றான் மாற்றித்
துறைத்தலங்க டோருஞ் சுமக்கும் பொறைக்கமைந்த
வெங்கரிகள் யாளி விரிபூத மாமுதல
பங்கமுறத் தேருடைத்தான் பார்த்து. (229)

தேரழிந்து சாரதிகள் தீர்ந்து திறலுடையான்
ஊரழிந்த சூரனென வுற்றான்கைப் பாரச்
சிலையைத் துணித்தான் தினகரர்கள் சூழும்
மலையைத் தொகுத்தவில்ல வன். (230)

Koviloor Digital Library

ஊன்றுதே ரோடு முவரி கிளர்ந்தவென
வேன்றிவனைத் தீர்ப்ப னெனவுலக மூன்றுமுடன்
வென்றடுத்தல் காட்டும் வியன்மூ விலைச்சூலம்
ஒன்றெடுத்தான் வந்தா னுறுத்து. (231)

செய்து வருபோரிற் றேரி னிடைசேர்ந்த
கொய்யுளைக ளாமுதல கோளரியை எய்துதான்
கொன்றனனே மந்திரத்தைக் கூறிப் படுத்தனனே
வென்றயிர்க்கத் தீர்த்தா னிரித்து. (232)

பாய்ந்தா னிலம்பிளக்கப் பாரினின்ற தேரினின்றும்
ஆய்ந்தா னிளையோ னனுமன்றோள் சேர்ந்துபோர்
செய்தலற மில்லையெனத் தேர்ந்து நிலமடுத்தான்
கைதவறு வில்லான் கடுத்து. (233)

உற்றபடை தம்பிக் குதவினுன் வல்லரக்கன்
இற்றபடை தம்பி னிருமடிதான் முற்றிவந்து
தம்பிதனைச் சூழ்ந்த தணியாக் கடலிதெனக்
கம்பிதந்தான் றேவரடுக் க. (234)

இரிந்தமனத் தேவ ரெவரு நடுங்கச்
சொரிந்த படையைத் துணிக்கத் தெரிந்ததம்பி
மாப்படையிற் புக்கான் மருவா கவமெல்லாஞ்
சேப்படையச் செய்து சிறந்து. (235)

முருக்கின் மலரா முரட்கண்கள் கொண்ட
வரக்கர் சிரமணைக ளாகப் பெருக்கிற்
பெருங்கடலிற் சேரப் பிறங்கிவரு மாறாய்
வருங்குருதி வேலை மடுத்து. (236)

கரிகளுடைக் கையுங் கணப்புரவிக் காலும்
திரிதருதேர்ச் சில்லி சிரங்கள் சொரியும்
துறைக்கடுத்துச் சூழல் சுழித்துவரு நீத்தக்
கறைக்கடுத்த மேற்கறையாங் காண். (237)

Koviloor Digital Library

கொற்றமுடைத் தண்டு குலிச மழுச்சூலம்
மற்று படையிலக்கு வன்வாளி சுற்றும்
தொடர்ந்து துணிக்கத் தொகையான வெல்லாம்
படர்ந்து திடராய்ப் படும். (238)

குண்டலங்கள் மோலியொளி கோவை மணியாரந்
தண்டை வளைகடகந் தாங்கரக்கர் கொண்டவுடல்
கண்டங்க ளாகக் கடிந்துசரந் தள்ளவினன்
மண்டலத்தை மாறுகொண்ட வாம். (239)

பரந்தகொடை சாமரைகள் பாங்காம் பதாகை
சரந்தரவாம் விற்கள் சரங்கள் துரந்துவரு
நெய்த்தோர் நதிதோறும் நேர்ந்துவரப் பேய்க்கணங்கள்
மெய்த்தோர் கரைகுவிக்கு மீது. (240)

ஈண்டரக்க வெஞ்செருவு மேற்ற பெருவலியா
னீண்டரக்கன் வேறுதிசை நின்றூர்த்தான் பூண்டசெருச்
செய்தா னிரவி சிறுவனொடு தேவரெலாம்
வெய்தாகக் காண விரைந்து. (241)

பொறிந்தெழுந்த கண்ணன் புகையுயிர்க்கும் வாயான்
செறிந்தகதிர்ச் செல்வனவன் சீறி முறிந்தவைவாம்
வல்லரக்கன் தோளென்று வானோர் பரவவிட்டான்
அல்லரக்கு மாமலையை யார்த்து. (242)

அம்மலையி னின்று மவனி தனிலெய்துஞ்
செம்மலைய தாங்களிறுஞ் சேனையிடை வெம்மலையாம்
வேழமலை யப்பொருது மென்றால் அவற்கெடுக்கத்
தாழுமலை யெங்குளது தான். (243)

இவ்வகைய மாமலையி னேற்றிழிந்த மாசுணந்தான்
கவ்வு மரக்கர் களிறதனை யவ்வகையாய்
ஆளு மலையதனை யங்கையினேற் றானரக்கன்
வானவுணர் வாழ்த்தினர் வந்து. (244)

Koviloor Digital Library

ஏற்றோர் கரத்தி னிதுகொலடா நீயும்
ஆற்றேங்கு குன்றென்று ஹற்றலுளான் நீற்றினிய
லாகமுற்றுந் தேயத்தா னடுத்தவுடன் றூற்றினுன்
மாகமுற்றூர் கொண்டார் மயல். (245)

செல்லவன்றிண் குன்றதனைத் தேர்ந்தின்னுஞ் சேர்வமெனு
எல்லவன்றன் மைந்த னிசையுமெல்லை கொல்லென்
றெறிந்தான் முனிவர்புக லேற்றுவரு சூலம்
அறந்தான் முனியு மவன். (246)

பட்டா னிவனென்று பார்த்தோர் பயமடைய
விட்டா னின்சூலம் விசும்படுக்க வெட்டிப்
பிடித்திறுத்து நீக்கினுன் பேரா னனுமான்
முடித்தறத்தான் சிந்தை முனிந்து. (247)

சித்திரத்துச் சீர்தனத்தாள் சீதையுற்ற செவ்வியினுல்
முத்திறத்தான் பொன்மிதிலை முன்னடுத்துப் பித்தன்
சிலையொடித்த பேரொலிபோற் சீர்ச்சூலமிற்ற
தலையெடுத்த பேரோசை தான். (248)

நிருத னனையா னிலமைதனை நோக்கிக்
கருத வரிதுன் கரத்தி னரியவலி
என்றுரைத்தா னென்னுட்டு மில்லையுவமை யென்ருன்
குன்றுரைத்த தோளான் குறித்து. (249)

என்னேடு போர்புரியி னென்னவகை யுன்னுவைநீ
சொன்னபடி செய்வனெனச் சொல்லுதலும் முன்னி
எதிர்க்கிலே னென்றவுரை யேற்ற மதனுல்
மதிக்கிலான் சென்ருன் வரைந்து. (250)

அற்றதுவாங் காலை யரக்கனே ராயுதமும்
பெற்றிலனுப் பேராத பெற்றியால் பற்றியெதிர்
பாய்ந்தான் பரிதிமகன் பன்னுகரங் கொண்டுகுத்திக்
காய்ந்தா னடித்தான் கடித்து. (251)

Koviloor Digital Library

அரக்கனன்று நின்ஞண்மை யாயினுந்தா னின்று
தருக்ககன்று தாழுமெனச் சார்ந்து நெருக்கி
உருக்கியசெம் பென்ன வுதிரமுற்ற கண்ணன்
செருக்கி யடர்த்தான் சினந்து. (252)

திரிந்தார்கள் சாரி தெரிந்தாரில் தேவர்
புரிந்தார் புகையெங்கும் போர்ப்ப வெரிந்த
வுருமா மிவர்வாயி ஞேங்கிவரு சோரி
வருமாருய்ச் சோரார் மதித்து. (253)

உருக்கியொரு வர்க்கொருவ ருற்ற விகலின்
முருக்கி வரவரக்கன் மொய்ம்பால் பொருக்கா
வகைபுயங்க ளாலிறுக்க வன்மை குறைந்து.
தகையுணர்வு மெஞ்சினன் தான். (254)

மண்டமரின் ரூடு மடங்குமென மன்னில்லாத்
தண்டமறிந் தேங்கச் சரிந்தோட வெண்டான்
கருதுவது வேறிலெனக் கைக்கொண்டு நின்ற
நிருதனகர் நோக்கும் நினைந்து. (255)

உரற்றினவா கும்பரவை யூறுகொண்டு செல்லச்
சிரற்றினவாம் பார்ப்பிற் சிதைந்து மரற்றினவாம்
கையடித்து நொந்து கதறும் கவிக்குலங்கள்
பொய்யரக்க ரார்த்தார் புகழ்ந்து. (256)

நடுங்கினர் பண்ணவர்கள் நாவுலர்ந்து வேர்த்தா
ரொடுங்கினர் வானரத்தா ரோய்ந்தே யிடுங்கினவாங்
கண்ணுடைய நெஞ்சன் கருது முயிர்ப்படங்கி
எண்ணுடைய ஞண னிரிந்து. (257)

புழுங்குஞ் சினத்தரக்கன் போகுவான் கோபத்
தழுங்கு மரவமென வானன் செழும்பரிதி
மைந்தனவன் கையின் மதிய மெனவானன்
சிந்தையவங் கொண்டு திகைத்து. (258)

Koviloor Digital Library

திக்கை விளக்குகதிர்ச் செல்வன் வருதீயோன்
மைக்கரிய மார்பின் மறைந்ததுதான் மிக்கவுரு
மேகத்திற் சேர்ந்து விளங்கா மதியொத்தான்
மோகத்திற் சோர்கண் முகிழ்த்து. (259)

ஒருங்கமர்தான் செய்வதிலே யுன்னுடனு னென்று
நெருங்கு முரைநினைந்து நேரான் கருங்கடலைக்
காலாற் கடந்தோன் கரம்பிசைந்து பின்சென்றுன்
மேலாக்க மின்றி விரைந்து. (260)

ஆயிரமாம் பேரோ னடித்துணையின் வீழ்ந்தழுவார்
நாயகரா ரெங்கட்கு நாட்டவினிக் காய்கதிரின்
செல்வன் றனைப்பிணித்துச் சேர்வா னரக்கனென்றார்
வில்வல்லான் முன்னர் விழுந்து. (261)

தீயின் முனிந்து சிவந்த விழியுடையான்
காயும் கணைபிடித்த கையுடையான் வாயில்
அவனடையா முன்ன ரடுத்தான் மனத்திற்
தவனடையார் காணு தவன். (262)

உடைத்தாம் துணையை யுயிரிற் கவர்ந்து
கிடைத்தாம் நகரமெனிற் கேடாம் தொடைப்பகழி
மாரியினுற் சாரும் வழியடைப்ப னென்றடைத்தான்
ஆரியனும் சீரா னறிந்து, (263)

மாதிரமெ லாமறைய வார்ந்தநிலே வெய்யவன்றன்
சோதிநிலே மிகவுஞ் சோர்ந்தனவாம் யாதும்
படர்கிலவாய் விண்ணிற் படரடைந்து நின்ற
அடர்கிலவாங் கோள்க ளடுத்து. (264)

மனத்திற் கடியவிசை வானடுத்துச் செல்வான்
இனத்திற் கணைமதிலே யெய்தி நினைத்தவைதான்
தான்திரித்துத் தாண்டலது சாரா தனவென்று
வான்திரித்து நோக்கிவரு வான். (265)

Koviloor Digital Library

கண்டான் வதனமொடு கால்கரங்க ளானவெலாம்
புண்டரிகம் பூத்த பொலிவுடைத்தாய் மண்டுசிலை
கைமலையா பூவுலகிற் கார்மேகம் வந்ததென
மைமலையான் கண்டான் மதித்து. (266)

மடித்தவாய் தூமம் வழங்க விதழும்
துடித்தவாய் நின்று சுழன்று பொடித்ததீ
கண்பொழிய நின்று கடுத்தா னிடித்தடர்த்தான்
மண்கிழியக் குன்றை மடித்து. (267)

மாக்கவந்தன் றானும் வலிதொலைந்த வாலியெனும்
பூக்கவர்ந்துண் போலிகளைப் போலுமெனைத் தாக்க
நினைந்தடுத்து வந்தனையோ நேருமிவன் றன்னைச்
சினந்தெடுத்தேன் காண்பாய் திறல். (268)

உம்பி தனைமுனியே னூர்தியா யன்னவற்காம்
தம்பி தனைமுனியேன் தொல்வாலி தம்பி
தனைமுனிந்தே னல்லேன் சமரந் தனிலே
யுனைமுனிந்தே வந்தே னுருத்து. (269)

தேடித் திரிந்தேன் திசையடுத்து நின்னையுட
ஞேடித் திரிந்தபடை யும்பிகண்டு பாடாய்
நடந்தனுமன் பாரினன் நண்ணுமிவ னூற்றல்
கடந்திவனைக் கொண்டேன் கடுத்து. (270)

காக்கவந்தா யென்னிலுனைக் கண்டதுவுந் தானெனது
பாக்கியந்தான் தந்தநின்னைப் பன்முறையு மாக்கும்
செருவெல்லாம் போக்கிச் சிறந்தவென்முன் காதல்
தரவல்லேன் வந்தேன் சமர்க்கு (271)

எதித் திறலோ யிமையோ ரெதிராகப்
பேதைக் குரங்கைப் பிணித்தபிணி கோதைச்
சிலையினூற் கோடியெனிற் சீதைசிறை பேரும்
நிலையிரு மென்று னினைந்து. (272)

Koviloor Digital Library

என்றதனைக் கேட்ட விராமன் முறுவல்செய்தென்
இன்றுணைவற் கொண்ட வினைத்தோளாங் குன்றை
முடிக்கிலே னென்னில் முறையாயென் கைவிற்
பிடிக்கிலே னென்றான் பெயர்ந்து. (273)

மீட்டுறத்த கையால் விலங்க லனையானை
மூட்டறத்தா னீக்க முயல்வேலை நாட்டமிக்க
நெற்றித் தலத்தி னிறைத்தா னிரண்டுகணை
வெற்றித் தலத்தான் விரைந்து. (274)

சுற்றும் குருதிநிறை சூழ்ந்தெழுந்த செக்கரென
நெற்றி தனிலொளிர நின்றவன்றான் முற்றுங்
கதிரவற்கு முன்னுதயங் காணு மருணன்
உதயமது போன்றா னவன். (275)

குன்றி னருவி குதித்து விழுவதெனப்
புன்றலைய தாமுகத்தைப் போர்த்தலுந்தான் துன்றும்
மயக்கத்தான் முந்தும் வலிமுகமன் நின்றான்
தியக்கத்தாம் சிந்தை தெளிந்து. (276)

நெற்றி நிறைத்து நெடிதிமைக்க நேர்ந்தசரம்
கொற்றவன தென்று குறித்துன்னிச் சுற்றுறத்தான்
நோக்கிப் பணிந்தான் நுவலும் பொருளனைத்தும்
ஆக்கிப் பணிப்பவனை யாய்ந்து. (277)

கண்டான்பொன் னையகனைக் கண்ணுற்ற பாங்கருடன்
தண்டாநாண் மானமதைத் தாங்கினான் விண்டவன்றன்
மூக்கினோடு காதும் முரண்வலியாற் கொண்டுதமர்
சேக்கையிடை வந்தான் சினந்து. (278)

வானரர்க ளார்த்தார் வரமழையி னார்ப்பிதெனத்
தான வரமகளிர் தாமார்த்தார் மீனவரால்
வேலையொடு வெற்பார்த்த மேலடுத்த வானவரும்
கோலவற மார்த்த குறித்து. (279)

Koviloor Digital Library

கார்ந்து மிகலரக்கன் கையடுத்து நீங்கிவரு
ஃமந்தறமை நோக்கிமகிழ் வெய்தினன் வேந்தன்
மனதிடத்து மங்கை மருள்சிறையை விட்டுத்
தனதிடத்து வந்ததெனத் தான். (280)

மத்தகத்தைப் பேர்த்து வலிய சிறையுடைய
வித்தகன்றன் பாண மெலிவுசெய்யச் சித்திரமாய்
நின்றதனுற் காதும் நிலமூக்கும் கொண்டெழுந்தான்
அன்றதெனிற் போதலெனைத்தாம். (281)

அக்கணத்து வந்ததறி வங்கைதனி னின்றகுரங்
கிக்கணத்திற் சென்றதென வெண்ணினன்மிக்க
செவிமூக்கும் தீர்ந்த செயலுந் தெரிந்தான்
புவிமூழ்த்தும் நெயத்தோர் பொருத்து. (282)

தாதுரா கத்தாற் றடங்குன்றந் தாரைசால்
கூதிர் மழைசொரியக் கோத்திழியு மூதை
யுடனருவி சேர்வதொத்தா னெண்குருதி யாற்றூற்
திடனடையு மேனித் திறன். (283)

எண்ணுடைய தன்மை யியைந்தான் மனமதனிற்
பெண்ணுடைய தன்மையனும் பீடையால் புண்ணுடைய
காதடுத்த மூக்குங் கழியவுருக் கண்களொடு
தாதடுத்த செங்குருதி தாம். (284)

ஏசியெழுங் காயமதி னேற்ற வரைப்பார்க்கும்
நாசியெழல் பார்க்கும் நடந்நாள் வாசிதனைப்
பார்க்குமண்ணைப் பார்க்கும் பரிந்துசீ சீயென்னும்
ஏர்க்குமண்ணைப் பாங்கா னிகழ்ந்து. (285)

என்முகந்தான் காண்பதன்முன் எற்றவரு நானவனின்
தன்முகந்தான் காணல் சரதமெனப் பொன்முகங்காண்
தோலுமலை போரிற் றுலங்க வருவாளும்
சாலவலக் கையிலெடுத் தான். (286)

Koviloor Digital Library

ஆயிரத்தாம் பேய்க ளடுத்துச் சுமந்துவரு
மாயுரத்த கேடகத்தை வாங்கினான் பேய்தான்
இரண்டா யிரஞ்சுமந்த வேற்ற வயிரந்
திரண்டான வாள்பிடித்தான் நேர்ந்து. (287)

விதிர்த்தான் விசும்பினுற்ற மீன்வீழ வீசி
யுதிர்த்தா னுலகளந்தா னைத்தான் அதிர்த்தான்
கொடிமுடிக ளாயிரஞ்சேர் குன்றுகால் கொண்டு
படிநடந்த தென்னப் படர்ந்து. (288)

வீசினவாங் கேடகத்தின் வீங்கிவரு காலடுத்துக்
கூசுங் குரங்குகளைக் கொண்டெழுந்த தாசை
யடுத்துவிழக் கொண்ட வலைகடலிற் னெங்கும்
திடத்துவிழக் கொண்ட திடர். (289)

போயினவாங் கேடகத்தைப் போகத் துலைத்ததிற
லாயிரம்பேர் வள்ள லறியுமுனம் பேய்தா
னிரண்டா யிரந்தாங்க வேற்ற கிடுகு
புரண்டான தோர் நிமிடம் போய். (290)

தோலா னதனைத் துரக்கச் சுடரடுத்த
வேலான கூற்றை விடுத்தவுடன் காலார்
கடலைக் கடுத்த கவிப்படைகள் சிந்தி
அடலைக் கடுத்த தடுத்து. (291)

ஏறுபட்ட தாக விடையெதிர்ந்த பேரெல்லாம்
கூறுபட்ட தாங்குறுதி கோத்திழிந்து மாறுபட்ட
தாகு நிலந்தான் அனந்தனுச்சி சேறுபட்ட
தாகுங் கணத்தி னழிந்து. (292)

இடுக்கிலையாய்க் கொல்லு மிவனை யடுத்துத்
தடுக்கிலையேல் வானரத்தைத் தானே யொடுக்கி
யரக்கர்க்கு நன்மை யளிக்குமெனச் சாம்பன்
இரக்கத் துரைத்தா னெடுத்து. (293)

Koviloor Digital Library

அண்ணலுந்தன் ருனையழிவு மரக்கனடுந்
திண்ணமொடு சொற்றமதுஞ் சிந்தித்தான் நண்ணிவரு
காலன் தனக்கிவனை காட்டற் கடுத்ததென்ருன்
ஆலந் தனிற்பள்ளி யான். (294)

ஆறினோ டேழுகணை யான தசனியென
வீறில்லான் வள்ள லெடுத்தெய்தான் நூறிவரு
வாளாற்றல் கொண்டு வருகணையைப் பேதித்தான்
தோளாற்றல் கொண்டான் றுணிந்து. (295)

ஆடவர்க்கு மன்ன னடுத்துத் தொடர்ந்தவழி
கோடைக் கதிராய்க் கொடியகணை யீடாய்த்
துறந்தான தெல்லாந் துணித்தான் கிடுகால்
அறந்தான தில்லா தவன். (296)

சிறுத்தா முறுவல் தெரியவரு செம்மல்
மறுத்தாங் கணைதொடுக்க மாற்ரு ஞெறுத்தொளிசெய்
வாளாகு நாகமதை வாட்டுங் கலுழனெனக்
கோளாகச் செய்த குறித்து. (297)

அற்ற கரவாளை யற்றதிலை யென்ன
மற்று மொருவாளை வாங்கினுன் முற்றவரு
மூழித்தீ தன்னை யுறுத்தான் சினத்தீயாற்
பாழித்தோள் கொண்டான் பறந்து. (298)

அந்நெடிய வாளு மறத்துணித்தா னண்டகைதான்
பொன்னெடிய கேடகத்தைப் போக்கினுன் நன்னர்
கணையைப் பொழிந்தான் கவசத்து மின்போ
லிணையற்ற வீர னெடுத்து. (299)

அன்னநிகழ் வேலை யாழி யடுத்ததெனப்
பொன்னகரார் துன்பம் புனைந்தோட மன்னும்
தசமுகன்ருன் விட்டபடை சார வொருங்காம்
திசைமுகந்து வந்த செறிந்து. (300)

Koviloor Digital Library

வில்வினையிற் றேர்ந்த விமல னிவன்றன்னைக்
கொல்வினைய தென்று குறித்தளவின் வல்வினையாந்
தீயடுத்து வந்தவிடை சேர்ந்துவரு நல்வினைபோற்
தாயடுத்து வந்தபடை தான். (301)

கோத்த படையிற் குதிரை குலவீரர்
பூத்த மதமலையும் போர்ப்படைதான் காத்த
கருணனைத்தான் கண்டு கவின்மாயக் கூத்தன்
தருணமெனக் கூவியடுத் தான். (302)

சூழிகொண்ட சிந்துரந்தான் தூண்டு புரவியொடும்
ஆழியந்தே ரோடுமிடை யார்கலிதான் ஏழிரண்டு
கோடிபடை யென்னக் கொதித்துவரு மூழிநம்பன்
நாடியடைந் தானு னகைத்து. (303)

காலமொடு காலன் கணக்கில்லாத் தீமையதும்
மூலமொடு மூன்றாய் முடுகிவரு ஞாலமொடு
நாகர் விசும்படுத்து நாட்டிவரு சூலமொன்று
வாகரக்கன் கொண்டான் வலத்து. (304)

அரங்கினிடை யாடு மவர்போற் கவந்த
நெருங்கிவரக் கண்டதன்றி நேரே சிரத்தாற்
திரிவாரைக் காணார் திகைத்தார்க டேவர்
பரிவீரை வண்ணனடல் பார்த்து. (305)

எத்தனையோ கோடி யிகல்வீரர் பற்றிநின்ற
அத்தனையா மாயுதங்க ளன்றேதான் முற்றி
முறிந்து திடரா முடிந்தசெய லன்றி
யறிந்தவரார் முற்றுபடை யாய்ந்து. (306)

கும்பத் தலைத்தகனை கோதடுத்த பாகரொடு
வெம்பத் தொலைத்து விழுத்தியதாற் பம்பிக்
கிடந்ததனைக் கண்டதலாற் கேடில்லா யானை
நடந்ததனைக் கண்டவரார் நன்று. (307)

Koviloor Digital Library

வீழ்ந்த பதாகை விளிந்தபரி பாகர்
தாழ்ந்த வுருளையொடு தட்டுடனுஞ் சூழ்ந்த
யிரத்த நதியி லிழுத்துவரு மல்லாற்
றிரத்தவையங் கண்டவரார் தேர்ந்து. (308)

ஆடுமணி தீர்ந்துகழுத் தற்றுக் குரநீத்துத்
தாடுணிந்து வெங்குருதி தாழ்ந்துகரிக் கோடுகொண்ட
வெள்ளமதிற் சேர்ந்து விழுந்து வருவதலா
லுள்ளபரி கண்டவரா ருற்று. (309)

வேதத் தலைவன் விடுபகழி யின்கணக்கை
யோதத் தலைமையரா ரும்பர்களு மீதுவந்த
காதுபடை கண்டார் கணவ ருடல்தேடும்
மாதர்களைக் கண்டார் மருண்டு (310)

என்றாழ் முனம்பணியாயேற்ற படை தீர
வன்றே யொருவனிலை வள்ளல்கண்டு பொன்றுந்
தருண மடுத்த தனைமனத்தி னெண்ணிக்
கருணை மனத்துரைப்பான் கண்டு. (311)

எதியொன்றாய் நின்றா யிழந்தாய் பெருந்துணைதான்
நீதியொன்றுந் தம்பிமுன்னு நின்னையடேன் போதியொன்றே
பின்றை வரநினைவோ பேராண்மை யான்மரணம்
இன்றைவர வெண்ணினையோ வென். (312)

ஏற்ற வினையா யிளையோ னுனையழைத்தும்
மாற்றகிலாய் மூத்தோன் வழிநின்றாய் ஆற்ற
லுறக்கத்தாற் றீர்த்தா யுகந்தவையென் னென்றான்
றுறக்கத்தார்க் கேற்றுந் துணை. (313)

மற்றவைக ணிற்க வரமுற்ற வுகைகளினல்
இற்றவையா மூக்குடைய வெங்கையெனப் பெற்றதிறல்
மூக்கிழந்தும் வாழ முயலுவனோ வென்றுரைத்தான்
தூக்கிழந்தான் றம்பி தொடுத்து. (314)

Koviloor Digital Library

வான்மொழிய நின்ற வரமுடைய யாமடுத்துத்
தேன்மொழியைக் கொண்டசெய நீதென்று யான்மொழிந்து
வாக்கிழந்து சோரும் வகையுடையே னின்றடுத்து
மூக்கிழந்து சேரமுற்று மோ. (315)

உங்க ளுயிர்கொண் டுகந்தவெந்தன் முன்னவற்கு
நங்கைநல நாட்டவந்த நான்றேவர் செங்கைகொட்டிச்
சேர்ந்து சிறிக்கத் திறலா ரிராவணன்முன்
நேர்ந்து சிறக்கவெந்நாம் நேர். (316)

ஒருத்த னிலையுலகுக் குற்றபழி தீர்க்கும்
கருத்த னிலையோ கருதாய் செருத்ததிறல்
வாளினு லுங்கள்சிர மாற்றிப் பொருத்தலினுல்
மீளினுஞ் செய்கையுண்டா மேல். (317)

என்றுநெடுஞ் சூல மிடக்கை வலக்கையின்
குன்றுநெடுஞ் சேவகன்மேற் கூறிவிட்டான் என்றுவரு
விண்ணிற் பொரிசிதரி வீரனுக்கு நேராக
வெண்ணிற் சிறந்துவரு மேற்று. (318)

அனையக்குன்ற மாகு மசனிதனை வள்ளல்
புனையநின்ற மாவார்ப் பொடித்தான் நினைவதன்முன்
சூலத்தை மாற்றினுன் தூசியென வோசையுற்ற
ஆலத்தை மாற்றுசரத் தால். (319)

அண்ணல்வில்லி னுங்கா லலையுங் கடல்வறள
வண்ணவில்லா மேரு வரையுருவி விண்ணுருவும்
கண்ணுதலான் தந்த கவசத்தைக் கட்டழித்தற்
கெண்ணுதலி லாதா மிசைந்து. (320)

தாக்கி நுழையாத் தகைமை யுணர்வள்ளல்
நோக்கிச் சிவனளித்த நோன்மையுன்னி யாக்கும்
விரைசூழ் கடுக்கையான் வெம் படையின்வீழ்ந்த
வரைசூழ் கதிர்வீழந்த வாய். (321)

Koviloor Digital Library

காந்து கவசமிறக் கண்ணெருப்பாய்த் தோள்புடைத்தங்
கேந்துமுனைத் தண்டை யெடுத்தடர்த்து வாய்ந்துவரு
வானரத்தின் மால்படையை வன்சாந்து செய்வனெனத்
தானரைத்து வந்தான் தரை. (322)

ஆயிரத்தாம் பாண மகன்மார்பி னைப்பிளந்தும்
மீயுரத்தைச் சூழ்ந்து விலகாது பாயும்
குரங்காம் படையைக் குறித்தடுத்துக் கொன்றான்
கரங்காய்த் திரிந்து கடுத்து. (323)

தண்டுகையி னுண்டென்னிற் றனை யிலதென்று
கொண்டவையன் வாளிபத்துக் கோத்தெய்தான் கண்டதுற்ற
கண்டா னரக்கன் கனன்றெடுத்தான் கேடகத்தைப்
பண்டான வாளியொடு பார்த்து. (324)

வாளெடுத்தான் வானரங்கள் மற்றும் வழிதோறும்
தாளெடுத்தார் வானோர் தலையெடுக்கார் கோளடுத்த
தென்றுரைக்கக் கொற்றவனு மேற்ற பகழிவிட்டான்
குன்றுரைத்த தோளைக் குறித்து. (325)

அலக்கணுற்ற தீமை யறமெழுந்த வோர்த்துக்
கலக்கமுற்றார் தீயர் கடலின் அலைக்குவமை
கொண்டவலக் கைவாளைக் கொண்டு விழவரக்கர்
அண்டவலா ரோடு மறிந்து. (326)

மற்றடுத்த வீரவரர் மண்ணுலகி னேதிவன்போ
லுற்றடுத்து நின்ற வுயர்தோளா லற்று
விழுந்தோங்கு கையெடுத்து வீரக் குரங்கை
அறிந்தோடக் கொன்று னடர்த்து. (327)

வள்ளலுடன் காத்துநிற்ப வானரத்தை வாண்மறலி
கொள்ளையிட மும்மடியிற் கோரலுன்னி யுள்ளதொரு
கையகத்து வீழ்ந்த கரமே கொடிதென்று
வையகத்தார் சூழ்ந்தார் மருண்டு. (328)

Koviloor Digital Library

மாறுபடா வானரங்கள் வார்ந்தோட வார்சோரி
ஆறுபடத் தேவ ரழிந்தோடக் கூறும்
இலங்கை கலங்க வெடுத்தோடி வந்தான்
நலங்கை கலங்கும் நமன். (329)

ஈற்றுவன்கை பாற விமையோர் தொழுதேத்தத்
தோற்றவன்ற ளுெந் தொலேந்தேகக் கூற்றுவந்தன்
அச்சமகன் ஞேட வடுங்கை கடலினிட்டான்
மெச்சமகா வீரன் விரைந்து. (330)

சந்திரனுந் தாணடுத்துச் சாத்தி யமிழ்தினுக்காய்
அந்தரத்தா ருந்திகடை யன்ளுளிற் சுந்தரத்தான்
தோள்வளேகள் மாசுணந்தான் சுற்றுந் தொழில்காட்டத்
தாள்வலிசேர் மந்தரமொத் தான். (331)

மேருவரை கால்கொண்டு வெங்களத்து வந்ததெனச்
சாருமரக் கன்முழக்கஞ் சாரவே சீரடுத்த
வானரமுந் நீரை மதித்தா னெலும்புதசை
யானவையொன் ருக வடித்து. (332)

நிலத்தகால் தீநீர் நிருதன் வடிவாய்
வலத்துயிரைக் கொன்றுவரு வானே வலத்தகால்
தன்னேத் துலேத்தான் சரத்தா லமரர்பயம்
தன்னேத் துலேக்குந் தவன். (333)

செக்கர்வா னென்னச் சிவந்த குருதியினுல்
உக்க வுடலா னுருத்தடர்த்துப் பக்கமுற்றுக்
குந்தித் தொடர்ந்து குமைத்தான் குரங்குகளே
முந்தித் தடிந்த முறை. (334)

மாறுநின்ற வெல்லாம் வளேத்துத் தொகைத்துவரு
சூறைகொண்ட காலாய்த் தொடர்வானே வேறுமொரு
காலுந் தடிந்தான் கடுங்கணேயி னுலமரர்
மேலும் புகழ விரைந்து. (335)

Koviloor Digital Library

கையிரண்டுங் காற்றுவம்போய்க் கார்வரைபோற் காந்திநின்ற
மெய்யிரண்டு கோடிகணை மேலடுக்கச் செய்யதிறற்
கண்பொழியுந் தீயாற் கனன்றான் மனமழன்றான்
பண்பொழியுந் தீயான் பகைத்து. (336)

பாதமுற்ற கைபோய்ப் படியான் பகுவாயாற்
காதமுற்ற கல்லைக் கடித்தெயிற்றின் மீதுகொண்ட
தன்னகத்துக் காத்தாற் றடுக்காத் திசைசெல்லக்
கொன்னகத்து வீழுங் குரங்கு. (337)

தீச்செய்த கண்டீச் சிலைகயிற் றிசைதிய
மீச்செய்த நாவெற்பை விண்வளைத்துப் பேய்ச்செங்
களமிரிய வூதினான் கண்ணன் வியந்தான்
வளமிரிவாற் கண்டு மதித்து. (338)

அய்ய னடுதொழிலுக் காயிரமி ராவணர்தாம்
செய்ய வருவதெனை சீரிழந்தேன் மையனேய்
கொண்டான் முடிந்தான் குணமில்லா னென்றுமனத்
தண்டாப் பெருந்துயரா னான். (339)

சிந்துரத்தாம் செங்குருதி சேர்ந்து சிறையாறு
எந்திரத்தேர் யானைபரி யீர்த்தோடச் சுந்தரப்பொற்
றோளானை யெண்ணுற்ற தூயோர்க் கறமளிக்குந்
தாளானைக் கண்ணுற்றான் சார்ந்து. (340)

புக்க புறவின் பொருட்டாற் றுலைபுக்க
மைக்காத்து வேந்தன் வழிவந்தீ ரிக்கடன்சேர்
என்வினையைத் தீர்த்திங் கிருமைக்கும் நன்மைதரல்
மன்வினைதா னென்றான் மதித்து. (341)

நீதித் தொழிலாம் நெறிதருத லாலன்றிச்
சாதித் தொழிலறியாத் தம்பியவன் ஆதியாம்
நின்னடிமை சார்ந்தா னிகரில்லாய் காக்கவென்ற
என்னடிமை யேற்பா யிசைந்து. (342)

Koviloor Digital Library

வெல்ல நினைக்கின்ற வேலரக்கன் வேரோடும்
கல்ல நினைந்தான் கருணையிலான் ஒல்லும்
உடன்பிறப்பு மோராதா னுற்றவிவற் காக்கும்
கடன்பிறக்க வென்றான் கனிந்து. (343)

தம்பியென வெண்ணித் தவிரான் தகவில்லான்
நம்பியிவற் காணின் நலிவுசெயும் உம்பியைத்தான்
உன்னை யனுமனைத்தா னோர்பொழுது நீங்காது
தன்னனையாய் நிற்றல் தரம். (344)

மூக்கில்லா னென்று முனிவ ரமரர்களும்
நோக்கில்லா முன்கணையால் நோதலையை நீக்கிக்
கடலடுத்து வீழ்த்தல் கடனென்றான் கஞ்ச
மடலடுத்தான் தந்தைதனை மற்று. (345)

வரங்கொண்டான் செய்தல் வழக்கென்றோர் வாளி
உரங்கொண்டான் வில்லி யொருவன் சிரங்கொண்டு
காற்றின் படையாற் கடல்விடுத்தான் வன்னுயிரைக்
கூற்றின் படையக் கொடுத்து. (346)

ஆடினார் வானோ ரமுத விசைமகளிர்
பாடினார் மேலோர் பயந்தீர்ந்தார் ஓடினார்
தூத ரிராவணற்குச் சொல்லுங் கவலைகொண்டார்
ஓதநகர் சென்றா ருடன். (347)

கும்பகருணன் வதைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

மாயாசனகப் படலம்.

அவ்வழியிற் கும்பகன்ன னுண்மை தனையெல்லாஞ்
செவ்வழியிற் சொன்னேஞ் சிறுமையான் வெவ்வழியா
மாயமொன்று வேட்கை மனத்தா னிலங்கைமன்னன்
தீயசெய்கை சொல்வாம் தெரிந்து. (1)

மாதிரமார் தோளான் மதியமைச்சர் தம்மினுற்ற
மோதரனைப் பார்த்து முகமனுரை யோதியென்பாற்
சீதையைத்தான் வந்து திகழப் புரிந்துமனம்
வாதையைத்தீ ரென்றான் மருண்டு. (2)

உணர்த்துவதென் மாயை யொருநொடியிற் செய்து
புணர்த்துவனுன் சீதைவரு பொற்புக் கணத்துட்
சனகன் றனைக்கட்டிச் சார்ந்துவரத் தானே
மனமுந்திச் சேர்வாள் மதித்து. (3)

எனையவுரை கேட்டா னெழுந்திறுகப் புல்லி
அனையவனைக் கொண்டுவரற் காக்கிப் புனையுமலர்ச்
சோலை யடுத்தான் றுதிமருவு கற்புடைய
வேலையடுத் தான்பான் மெலிந்து. (4)

பண்ணுற் கிளவி பவளத்தி னுலதரம்
பெண்ணூர்க் களவில் பெருந்திருவாய் யெண்ணின்
அளவாப் பரம்பொருளா மன்னைதனை யண்டிக்
களவாளன் கண்டான் களித்து. (5)

மின்னு மகுடம் வெயிலடுத்து வீசிவரத்
துன்னுமிருள் போக்கிமணித் தோடோன்றப் பொன்னரி
மாலைவரு நீல மலையருவி யைப்போர்ப்பக்
காலனென வந்தான் களித்து. (6)

Koviloor Digital Library

விளக்கொளி மீக்கொண்ட மின்னணியாய்ச் சுற்றி
இளைக்கு மிடைதனத்தி னேங்க முளைப்பிறையி
னெற்றி யரம்பையர்கள் நேர்ந்து புகழ்படிக்க
மற்றரக்கன் வந்தான் மருண்டு. (7)

இட்டதொரு பீடமிசை யேற்றதோட் காடுசுற்ற
வட்டக் கவிகை வளத்தோங்கத் தொட்ட
கழற்கால் விளங்கக் கருதி யிருந்தான்
அழற்காலுங் கற்பாட் கயல். (8)

என்றைக் கடியேற் கிரங்குவதா மிந்துவென்பான்
என்றைக்கா மென்றின்றி யெய்துவது மென்றைக்கா
மன்மதனார் வாளி மருவு சுகந்தருதல்
பொன்மயிலே என்றான் புகழ்ந்து. (9)

வஞ்சகத்தி னேனெனக்கு மாதர் வடிவுகொண்ட
நஞ்சகத்தை நல்லமுதா நாடினேன் நெஞ்சகத்து
நேரான வும்மை நினைப்புவிட்டு நீங்ககிலேன்
சீரான செம்மை தெரிந்து. (10)

தோற்பித்தீர் மாமதிக்குச் சூடுசெய்தீர் தென்றலை
வேற்பித்துத் தோளை மெலிவித்தீர் எற்பத்தான்
இன்னலறி வித்தீ ரிமையோர் பயந்தெளித்தீர்
இன்னமென்ன செய்வீ ரிசைந்து. (11)

பெண்ணெல்லாம் நீராய்ப் பெயரு முமதாக்கிக்
கண்ணெல்லாம் நீரே கவின்காட்டி எண்ணெல்லாம்
நீரேயாய்ச் செய்துமதன் நீள்கணைக்கு நேராக்கிப்
போரேயாய்ச் செய்தீர் புனைந்து. (12)

ஈசனொடு மானுடவ ரேற்ற முதலிறுதி
கூசவரு மென்வீரக் கோட்டிதனைப் பேசுவார்
வேறுண்டோ வெல்வார் விசையை யுனதாசை
மாறுண்டா மென்றான் மருண்டு. (13)

Koviloor Digital Library

நோயிடையில் லாது நுணங்கி யெனதாவி
நாயிடையி னுகும்வெகு நாட்சென்ற் றீயிடையாம்
நத்தடுத்த காமம் நலத்தா யிரமதனைப்
பத்தடுத்த தென்பார் பயந்து. (14)

அறந்தரவாம் செல்வத் தமிழ்துடையீ ரென்னைப்
பிறந்திலனுச் செய்யப் பிறந்திர் சிறந்து
வருமென்னு யாசை மருந்தா லிருந்தேன்
தரமன்னுஞ் சீவன் தகைந்து. (15)

அந்தரத்தைப் பார்க்கி னகலிகைபொற் பான்காத
லிந்திரற்குத் தந்தா ளிழுக்குண்டோ மந்திரந்தா
னில்லை மருந்தில்லை யேற்ற குமுதவாய்ச்
சொல்லையரு ளென்றான் துதித்து. (16)

என்றுரைத்துச் சென்றங் கிருப தெனுநீலக்
குன்றுரைத்த தொவ்வாத்தோள் கூவடையத் துன்று
முடிபத்துந் தாழ முகிழ்த்துவரு கையன்
படிபத்தி வீழ்ந்தான் பரிந்து. (17)

வல்லியத்தைக் கண்டபிணை மான்போன் மறக்கமுற்று
வல்லியொத்தா ளாக்கை மனமெலிந்து புல்லும்
துரும்பைமுனம் வைத்துத் துகளாய் மதித்துப்
பெரும்பொறையாள் கூறும் பெயர்ந்து. (18)

பழிபாவ மின்னதெனப் பாராய் பகரும்
மொழியாவ தின்னதென முன்னுய் கிழியாதுன்
னெஞ்சத் துரமென்று னேரவரு கற்பெனைத்தாம்
வஞ்சத் துரும்பே மதி. (19)

வானோர் வரத்தின் வழிவந்த மண்ணுலகி
லூனு ருடம்புக் குயிருணர்வு தாளுகும்
பத்துவா யுண்டு பகரத் தகாதவெலாங்
கத்துவாய் கேட்பேன் கனன்று. (20)

Koviloor Digital Library

வாசவன்ற ேனாடு மழுவான் பிரமனுடன்
கேசவன்ற னோடு கிடைப்பனென்றாய் பூசலதிற்
சென்றடுத்த போதென் செழுஞ்சுடர்போற் கண்டதுண்டோ
நன்றடுத்த போதமிலாய் நாடு. (21)

உளணிலவாம் யாக்கை யுயிர்புகழைச் சூடாது
நாணிலவா நின்றதென்னும் நற்குணமாம் பூணணிந்த
புண்ணியனைக் காணும் பொருட்டென்ற நற்றிறத்தை
எண்ணியலை யில்லாதாய்க் கென். (22)

நின்ற தெனதுயிரும் நீங்கா திருத்தலெற்காம்
குன்றதெனத் தம்பிபுறங் கொண்டுசிற்ப நன்றடுக்கா
நின்றகளஞ் சிந்தியுட னேரரக்கர் முற்றுமறக்
கொன்றகளங் காணவெனக் கொள். (23)

எனக்குயிர்தான் வேறோ வெனதுநிலை யல்லாற்
றனக்குயிர்தான் வேறிலெனுஞ் சாமி கனக்கரிய
மேகமொன்று கார்முகத்தை வெற்றிகொள்ள வென்றெடுக்கி
னேகமொன்று பேருயிரென் னும். (24)

என்றவுரை கேட்டா னெரிவிழியான் றன்னைத்தான்
கொன்றதெனச் சீற்றங் கொதித்துடையான் வென்றன்னை
மீட்டபின்ன ராவி விழைந்திருக்க லாங்கமல
நாட்டமுற்றா யென்றா னகைத்து. (25)

இனத்துலகத் துள்ளா ரிமையோர் முதலென்
சினத்துளவர் தீர்ந்தார் சிறுவன் புனத்துழாய்
மாலவனோ மென்றன் மனத்துற் றவனெனினும்
ஆலமெனக் கொல்வே னடர்த்து. (26)

விளைத்தனவாய் மாமதிலை வார்ந்தொன்றி வாயால்
உளைத்தனவாங் கோடரமென் றன்னு மிளைத்தவிடை
யென்னெதிரி லாம்போ தெரியும் விளக்கினிடை
பன்னுதிற லாம்பதங்கம் பார். (27)

Koviloor Digital Library

கொற்றத் தரக்கர்தமைக் கூறு மயோத்தியரைப்
பற்றித் தடிந்துவரப் பன்னிமற்றும் முற்றும்
மிதிலைச் சனகனையும் வெற்றிகொளச் செய்தேன்
இதிலச்ச மில்லைமனத் தெண். (28)

என்றுரைத்த காலை யிவையென்னைச் செய்தார்க்கு
மொன்றறிதோ வென்ன வுளநடுங்கி நின்றுளைத்துச்
சோர்ந்தாள் வெதும்பித் துயருக்கே சேக்கையுற்றாள்
தீர்ந்தாள் மனது திரிந்து. (29)

இத்தலையி னின்னசெயற் கேற்ற விதியார்க்கு
மத்தலையி னன்னசெயற் காமரிதென் பொய்த்தலைய
தாமோ தருமந் தடுத்த தெனக்கண்ணீர்
தாமோத நின்று டவித்து. (30)

ஆயதுவாங் காலை யரக்கன் சனகனென
மாயவுரு வாக மகோதரன்றான் காயெரியை
யன்னான் கொணர்ந்தா னரக்கன் முனமதனை
மின்னாளுங் கண்டாள் வெறுத்து. (31)

கையை நெறித்தாள் கமலக்கண் மோதினாள்
நெய்யெரியிற் சேர்ந்ததென நின்றுளைத்தாள் மெய்யென்
றெரிந்தேங்கி வீழ்ந்தா ளெடுத்தபொய்யா மென்று
தெரிந்தாங்க ணில்லா டிகைத்து. (32)

தெய்வமே யென்னுஞ் சிதைந்தமெய்மை தானென்னுந்
வையமேல் வஞ்சகமோ வாழ்வென்னும் செய்ய
திறத்தான் படுந்துயரம் செப்ப வரிதாம்
அறத்தாளென் செய்வா ளறிந்து. (33)

எந்தையே யென்பா ளெனது பொருட்டெனக்கு
வந்ததோ தீமை வழக்கிதென்பாள் சந்த
வுலகார்க்குத் தந்தையென வுற்று யுனக்கும்,
இலகாத்தன் பென்பா ளெடுத்து. (34)

Koviloor Digital Library

இட்டுண்டாய் தன்மம் எதிர்ந்தோ ரிருக்கையெலாம்
சுட்டுண்டாய் வேள்வித் துறைமுடித்தாய் மட்டுண்டார்
மாமனித்தர்த் தின்ற மறத்தோராற் கட்டுண்டாய்
ஆமினித்தா மென்னும் அறம். (35)

என்று ளெழுந்தா ளிடர்க்கடலில் வீழ்ந்திரிந்தாள்
பொன்றாது பொன்றிப் பொறையழிந்தாள் மின்றான்
நிலத்துற்றா ளென்றாய் நினைத்தாள் புரண்டாள்
அலத்துற்றா ளென்று யறிந்து. (36)

பிறைநுதலார்க் கென்றும் பிறந்தகடன் செய்ய
இறைநகர்க்கு வாராத வென்தாய் சிறையடுத்துக்
காணுதற்கா நீயும் கலங்குசிறைப் பட்டுவந்தாய்
நாணுதற்கா மென்றாள் நலிந்து. (37)

வன்சிறைப்புள் ளூர்தி வரத்தான் வரம்பிலதான்
புன்பிறவி போக்கப் புலவர்நின்றார் என்சிறைதான்
தீர்ப்பாரைக் காணேன் சிறந்த வுனதுசிறை
தீர்ப்பாரா ரென்றாள் சிதைந்து. (38)

பண்பெற்றா ரோடு பகைப்பா ரிடம்படற்கு
விண்பெற்றால் நன்றாகு மேலான வெண்பெற்றா
யிப்பழியும் நிற்கே தெவிட்டாச்சுவையாய்க் கண்டதனால்
வெப்பழிய வந்ததென்றாண் மின். (39)

சுற்றுண் டலந்தாஞ் சுமையுண்டு சூடுண்டவ்
கெற்றுண் டளர்க்கான வேறென்னப் பற்றுண்ட
நாளடுத்து மாளேன் நலிந்தேன் கவலைமிக்க
கோளடுத்து நின்றேன் குறித்து. (40)

இருந்தேன் பகையெல்லா மீறுகண்ட வின்பம்
பொருந்தேன்மன் பாதம் புனையேன் பரிந்தினன்பின்
மன்னர் புகழ்க்கடற்கு மட்டில் வடவையெனத்
துன்னிநின்றே னென்று டொடுத்து. (41)

Koviloor Digital Library

கொல்லென்று நாதர்க்குக் கொண்டேன் பகையெந்தை
கல்லென்ற தோள்பிணிப்பக் கண்டிருந்தே னில்லென்
றிரண்டினுக்கு மின்ன லிசைத்தே னெளியேன்
மிரண்டனுக்குஞ் செய்கை விழைந்து. (42)

இணைத்தாய வேள்வி யியற்றியெனைப் பெற்றோன்
பணைத்தோள் புழுதி படிய மணத்தாகிக்
கைப்பிடித்த நாதனையுங் காணு திறக்கின்றேன்
எப்படித்தா னுய்வே னினி. (43)

அன்னையீ ரையன்மீ ராருயிராந் தங்கைமீர்
என்னையெந்தைக் கெய்தியவை யாதொன்று முன்ன
முணர்ந்திலிரோ வுங்கட்கு முற்றசெய லன்றோ
கணங்குழையீ ரென்றாள் கரைந்து. (44)

மேருவிற்கு மும்பருற்று விண்ணினைமீக் கொண்டாலும்
நீருடையூ ரெய்த நெறியின்றாம் போரிடையிற்
கொண்டா ரெனினுங் குறித்தவஞ்ச முண்டெனினும்
தண்டா தனுமனுண்டோ தான். (45)

சரதமிவற் றந்தார் தவம்புரிதல் சான்ற
பரதனையுங் கொள்வார் பகைவர் வரதனுடன்
வாழ்வடுக்கான் தம்பிக்கு வந்த வினையதனல்
தாழ்வடுக்கு மென்றாளென் தாய். (46)

அடைத்த கடலை யடைந்த மதிலைத்
துடைத்த பகையையெனச் சொல்லப் படைத்த
வுவகைதனை வேறு ருபாய மதனு
லிவகைதனைச் செய்தா ரெடுத்து. (47)

ஏங்குவாள் பன்ன லிமையவர்க ளேற்றமதை
வாங்குவான் மன்னன் மகிழ்ந்துடனே தாங்குவாள்
துன்பமதை யென்று தொடுத்த நயமனதான்
இன்பமதாய்ச் சொல்வா னிசைந்து. (48

Koviloor Digital Library

காரிகையே நின்னையெய்துங் காத லதனலிப்
பேரிடரைச் செய்தேன் பிழைபொறுத்தி வேரறத்தான்
பொன்மிதிலை யோரைப் புரியேன் துயரிவற்கும்
நன்மைசெய்வே னென்று னயந்து. (49)

இமையோ ருலகமுட னிவ்வுலக மேழும்
அமையுமுல கெல்லாமென் னாட்சி சமைவுறத்தான்
தந்திடுவே னின்றேற்கு சார்ந்தவெந்தன் காமவெந்நோய்
சிந்திடுவா யென்றான் சிறந்து. (50)

இலங்கை யிவற்கீந் திருப்ப னயலூர்
நலங்கொ ணிதிமூன்று நல்கிப் பொலங்கொள்வி
மானமுடன் தந்துசிவன் வாள்கொடுப்ப னென்றனனி
தானமுடன் நன்மையிலா தான். (51)

இந்திரற்கா மோலி யிமையோர்க ளேத்தெடுப்ப
மந்திரத்திற் சூட்டி வரவானோர் சந்ததமும்
ஏவல்செய்யச் செய்து மிவன்பணியி னடுப்பேன்
தாவரியீ ரின்பந் தரின். (52)

எந்தைதந்தை தந்தை யிசைந்துலக மீனறவரன்
தந்தவர மின்றேற்குத் தந்திடுவேன் செந்திருநீ
ரல்லீரே லன்னவளு மாமடிமை செய்யவர
நல்லீரே செய்வே னயம். (53)

தேவர் முதலோர் திறனகர் பூவுலகர்
யாவர் களுமேவ லாற்றவிவன் பாவைநின்னைப்
பெற்றபயன் முற்றப் பெரிதுவந்து செய்வையென்றான்
உற்றபய னற்று னுவந்து. (54)

இத்திருவைச் சேர்வானு மிந்திரனே பொன்னிலங்கைப்
பொய்த்திருவும் வீடணன்பாற் பொன்திருவாம் மெய்த்த
சரங்களுன்றன் மார்பைத் தகைந்து பிளக்கும்
வரங்களுண்டா மென்றன் மயக்கு (55)

Koviloor Digital Library

நகுவனவு நின்றேடென் ஞயகன்றன் வாளி
புகுவனமார் பிற்றிறந்த புண்கள் தகுவனதான்
சொல்லவன்பிற் சேர்வதுவுந் தூயவரன் வின்ஞணி
நல்லவின்ப மின்னதுதா ஞம். (56)

சொல்லதுவா மாற்றமது தண்டந்தன் கண்ணதனைக்
கல்வதுவாங் காகங் கமலக்கண் வில்லோன்
பகழியெழின் மார்பம் பரவியணைக் கும்பேய்
இகழிவையே யென்று ளெடுத்து. (57)

விரும்பினான் கேட்பதுவும் வீரன் சரத்தால்
பெருந்தலைகள் சிந்திப் பிணமாய்த் திருந்திக்
கிடப்பதனை மாருதியுங் கிட்டிவந்து சொல்லி
முடிப்பதுதா னென்றுள் முனிந்து. (58)

வெய்யனிது கேளா வெயில்விழித்து வீரமிக்க
கைபிசைந்து பேழ்வாய் கடித்துரப்பித் தையறனே
வாதைதர வெண்ண மகோதர னேர்சொல்வான்
ாதையுரை கேழ்க்குமெனத் தான். (59)

அன்றினவன் சொல்லி னடுத்தா சனத்திருந்தான்
பொன்றினவன் போற்கிடந்த பொய்யவனு மின்றிதற்கு
நேராகா யென்னிலெனே நீயே கெடுத்ததென்ருன்
சீராகா மெய்யன் சினந்து. (60)

பூவின்மே லுற்ற புனிதை பொதுமையுற்ருள்
பாவியான் பெற்றநின்ஞற் பாடடைந்தேன் தேவியா
யெல்லா வுலகுக்கு மீசனிவன் பாலிருந்தால்
பொல்லாங்கென் னென்ருன் புகழ்ந்து. (61)

என்னைக் குலத்தோடு மின்னுயிரைத் தாங்கியின்று
நன்னெடிய செல்வமென்பா னல்கியே நின்னையுற்ற
வெஞ்சிறையி னீங்கி விழைவா யெனப்பதத்தி
னஞ்சிறையின் வீழ்ந்தா னவிந்து. (62

Koviloor Digital Library

அவ்வுரையைக் கேட்ட வரிவை செவிபொத்தி
வெவ்வுயிர்த்து மேல்வெகுளி வீங்கிறு ளிவ்வுரைதான்
எந்தைமெய்யான் கூறு னினியவாழ் வெண்ணியெனச்
சிந்தைசெய்தாள் சீற்றந் தெரிந்து. (63)

அறங்கெட்டு நீங்க வரசர்களுக் கான
மறங்கெட்டு மெய்ம்மை வறையா திறங்கெட்டு
நல்லொழுக்க மில்லா நவையெடுத்துக் கூறினதாற்
புல்லொழுக்க னென்றாள் புலர்ந்து. (64)

வழிகெடத்தான் வந்தாலும் வாழ்க்கைதேய்ந் தாலு
மொழிகெடத்தான் றந்தைமொழியான் பழிபடத்தான்
வாழ்வதிலாஞ் சாதல் வளமன்றோ வென்றுரைத்தாள்
தாழ்வதிலாச் சிந்தைநயத் தாள். (65)

நீயெனெந்தை மன்கிளையும் நேராக வேறுகி
மாயினுந்தான் வாழேன் மகிமைகெட்டோ யாயிரமா
நாமத் தரிக்கடுமை நானிந்த நாயைநச்சற்
றீமத்தா யென்று மிசை. (66)

வரிசிலையார் மன்னல்லா மைந்தரெவ ரேனும்
எரியிடைவீழ் விட்டிலென வேற்கும் அறியுடனே
வாழ்வடுத்த பேடை வருநரியி னிச்சையுண்டோ
தாழ்வடுத்தாய் சொல்வதென்னை தான். (67)

அல்லையெந்தை யாகத்தா லாறு யளவில்லான்
வில்லையுந்தி மேன்மை விழைவடுப்பா யில்லையெனிற்
சாதலினால் நன்மை தருமலது மேன்மையின்றி
யோதலினு னன்மையுண்டா மோ. (68)

மன்றிறலான் வாளரக்கன் வாசகத்தைக் கேட்டுமனம்
வென்றதுதா னிற்க நிகழ்ந்தபின்முன் னின்றோன்
னகனல்லை யென்னிற் சதைத்திடுவே னென்றான்
னகனில்லை யஞ்சா னகத்து. (69)

Koviloor Digital Library

என்னையுங் கொல்லா யிவனிலையு மன்னதுதான்
உன்னையுங் கொல்லாயு லகுமதே பின்னுமுயிர்
நீங்கிக் கெடாப்புகழி னிற்கின்றே னேயனம்பிற்
போக்கிளையு நீயுமென்றாள் பொன். (70)

இரந்தரந்தை கொண்டா னிவனாற் பிழையோ
புரந்தரன்றன் செல்வத்தாய் பொன்றப் பரந்தபகை
தன்னைக் கெடுக்கிற் றனிவருவா டந்தைதனைப்
பின்னைக் கெடுக்கிற் பிழை. (71)

என்றடுத்த மோதரன்சொல் லேற்றிருந்தா னச்சமயம்
குன்றுநிகர் தம்பி குறைந்ததனால் வன்றிறலார்
வானரத்தி னார்ப்புடனே வானோர் புகழுரையுந்
தானரற்றுங் காதுகளிற் றான். (72)

உகுந்திறலின் வானவரு முற்றகுரங் கோடு
மிகுந்திறலார் வில்லொலியும் விஞ்சத் தகுந்திறலான்
எம்பிக் கமரினிடை யேற்றதன்மை யென்னையெனத்
தம்பித்தான் சிந்தை தளர்ந்து. (73)

புறந்தரவாஞ் சேனைமுன்னீர் போக்கியிடை வந்து
பறந்தனைய தூதர் செவிப் பாங்கிற் றிறந்திறமா
நின்றகவிச் சேனையற நேர்தடிந்த தம்பியும்பின்
சென்றது வானென்றார் திகைத்து. (74)

உளரோடு தோன்று மொளியவனா மென்னவொண்பொற்
றாரோடு மோலி தலைதள்ளப் பாரோடும்
போழ்ந்த மரம் வீழ்ந்ததெனப் பொன்றி னவன்போல
வீழ்ந்தான் தரையின் வெறுத்து. (75)

பிறிதலென்னும் பீழை பிறந்தநா டொட்டு
மறிதலென்ப தின்றி மகிழ்ந்தான் முறிதலின்றா
தாஞ்செருவிற் றம்பி தனக்காக வீந்ததனால்
வாஞ்சையுருக் கொண்டுகத்து வான். (76

Koviloor Digital Library

தம்பியோ வும்பரெனுந் தாமரையின் காடெழுக்குந்
தும்பியோ வேதன் றுதிமரபோ வெம்பியோ
இந்திரனைத் தீர்த்த விசையாய் வசையுடையே
னிந்தமொழி கேட்டே னிரிந்து. (77)

மின்னிலைய வேலோய் விழிகாணேன் யானுமினிப்
பின்னிலையா தென்றுயிரைப் பேணினே னுன்னிலதா
னீதாகி லிந்திரன்றா னேற்ற களிறுந்தி
மீதாகு மென்றான் வெறுத்து. (78)

வன்னெஞ்ச னென்னையினி வஞ்சித்து வானடைந்தாய்
இன்னஞ் சமவயினி னேற்பவரார் மின்னஞ்சும்
வேலுடையாய் வானோர் விரவி மனதுடையார்
மேலுடையா ராவார் விழைந்து. (79)

கல்லன்றோ நீராடுங் காலத்தே கால்தேய்க்கும்
மல்லொன்று தோளாய் வடமேரு வில்லார்
மனிதனுனைக் கொன்றதெனு மாற்றந்தான் கேட்டேன்
புனிதமினி வேறென் புகல். (80)

மாண்டனவாஞ் சூலமொடு வச்சிரமுஞ் சக்கரமும்
தீண்டினவா மொன்றுஞ் செயலின்றி மீண்டனவா
மானுடவர் மெல்லம்புன் மார்பைப் பிளந்ததினி
யானுடையே னின்றே னடுத்து. (81)

நோக்கறவு மெம்பி நுவலு மிலங்கைநகர்
போக்கறவு மாதுலனார் பொன்றவெங்கை மூக்கறவும்
வாழ்ந்தே னொருத்தி வலியதனத் தாசையினாற்
தாழ்ந்தேன் மனது தவித்து. (82)

தன்னைத்தான் தம்பியொடு தானைத் தலைவனைத்தான்
மன்னைத்தான் மாமகனை மாருதியை மன்னும்
ரடிக் கிறையைக் கடிந்ததெனக் கேளேன்
பாருதிக்கொல் வீரன் புகழ். (83)

Koviloor Digital Library

ஏழை மகளி ரிசைந்திருக்க வீர்ந்தென்றல்
வாழுமலர்ப் பள்ளிமிசை வைகுவாய் பூழி
யணைமேற் றுயின்றனையோ வாங்கடுத்த பேயின்
கணமே துணையாகக் கண்டு. (84)

செங்தே னருந்தித் திறலுடைய நீவாழ
வுய்ந்தே னினியா ருகப்பரெனை நொந்தேன்
பிரியேன் தனிப்போகப் பேதையோ நானும்
அரியே னுயிரென்ரு ஞர்த்து. (85)

அண்டத் தளவு மறிய வலறியவன்
பண்டைத்தன் ஞமத்தைப் பாரித்தான் தொண்டைக்
கனிவாய் மடந்தை களித்தாட னுள்ளம்
இனிவாய்மை யென்ரு ளெடுத்து. (86)

வீங்கினுள் கொங்கை மெலிந்த மெலிவகல
வோங்கினு ளுள்ள முயிர்புகுந்தாள் பாங்கினும்
கற்புடையாள் மாமடந்தை காணவரு செடியெனும்
பொற்புடையாள் கொண்டாள் புகழ். (87)

கண்டாள் கருணைமுன் கண்கடந்த காயத்தான்
கொண்டாள் துணுக்கமின்று கொற்றவனுர் தண்டாத
பேருருத்தன் வாளி பிளந்த தெனக்கேட்டு
வேருருத்தி யொத்தாள் விழைந்து. (88)

தாவரிய பேருருவான் தம்பி சவத்தோடும்
எவரையுங் கொல்வே னிறவாத மூவரையுந்
தேவரையும் வைப்பேன் சிறையென்னச் சீறினன்
கோவரைவு கொள்ளாக் குணன். (89)

அக்கணத்து மந்திரிய ராற்றச் சிறிதாரி
இக்கணத்து மானுடவ ரீர்ங்குருதி முக்கைப்
புனலுகுப்பே னெம்பி புகவென்று கண்கள்
கனலுகுப்பச் சென்றுன் கதித்து. (90)

Koviloor Digital Library

கூடுரே மினிநாமக் கும்ப கருணனூர்
பாரூடு வெங்களத்துப் பட்டதனுல் வேரூேர்
முறையில்லா னுகிவரு மோதரனுஞ் சென்முன்
சிறையில்லா மென்றிவனைச் சேர்த்து. (91)

கண்டணியாம் நன்மொழியாள் காந்தட் கரமுடைய
வன்டணியாம் கூந்தல் மடவாட்கு மண்டும்
துரிசடையா நன்மனத்துத் தோகை யனைய
திரிசடையாள் சொல்வாள் தெரிந்து. (92)

எந்தாயுன் தந்தையென வேற்றுருவ மாற்றிஙிவண்
வந்தான் மருத்தனெனு மாயையினுன் சிந்தை
வருந்தே லெனவுரைத்து மாற்றினுள் சோகம்
மருந்தே மொழியால் மதித்து. (93)

நங்கை யவளுரையி னுள்ளுந் தேறுவதாற்
சங்கையின்றித் துன்பந் தவிர்ந்தாளு ளிங்காய்
வருந்திச் செலுமிலங்கை மன்னன் புகலைத்
திருந்திச் சொலுவேன் றெரிந்து. (94)

மாயாசனகப் படலம் முற்றிற்று.

அதிகாயன் வதைப் படலம்.

கொழுந்துவிட்ட கோபக் கொடுமடங்கல் கோரத்
தெழுந்துதட்ட தென்னமருங் கேற்ற தொழுந்தகைய
மந்திரியர் தம்மை மதிக்கான் சுளித்துரைப் பான்
கொந்தழலா மென்னக் கொதித்து. (1)

மோகரித்தீ ரென்முன் முடுகி வருகவிரென்
சாகரத்தாந் தானையுடன் சார்ந்தவராய் வேகச்
சிலைத்தொழிலை விட்டீர் சிறந்த வலியீர்
கலைத்தொழிலைத் தொட்டீர் புரிந்து. (2)

Koviloor Digital Library

எடுத்ததவ ரோடமெதித் தேகிப் படையைப்
படுத்ததவ ராற்றலடு பண்பீர் தடுத்திலீ
ரெம்பிக் கிடுக்க ணியைந்த பொழுதுயிரை
நம்பிக் கொடுக்கீர் நலிந்து. (3)

உம்மைநம்பி யன்று முலக மொருமூன்றும்
வெம்மைபம்ப வாண்டவெந்தன் வென்றியினீ ரிம்மை
தனிலித் திருவெய்தித் தாழ்வின்றி வாழ்ந்தீர்
புனிதத் துயிர்கொடுக்கீர் போந்து. (4)

ஆற்றலமென் றீரே லதுவு முரைமின்கள்
தோற்றலந்தான் சேரத் துறந்துவரு கூற்றாய்
உயிர்குடிக்கும் வேற்றலையி னுற்றமனிதர்
உயிர்முடிப்பே னென்று னுருத்து. (5)

அல்லதுவுஞ் சொல்வதுண்டா மாற்று மமரடுத்து
வெல்வதுவு முண்டேல் விரைந்தடுப்பீர் வல்ல
செயலுரைமி னென்றான் சிறுதொழிலாற் சிந்தை
மயலுறுமன் னென்று வலன். (6)

நதிகாய் நெடுமோனம் நாணமொடு சீறி
மதிகாய் குலமன்னை வைது விதிகாயும்
வீரம் விலக்கரிய மேலா னதிகாயன்
சூரன் சினந்தான் றுணிந்து. (7)

வானஞ்ச வைய மறுத்தஞ்ச மாலானோன்
தானஞ்ச வீசன் தனித்தஞ்ச நானஞ்ச
நேர்ந்ததெனக் கெள்ளு நினைவு வாற்கென்ன
சார்ந்ததெனச் சீறியடர்த் தான். (8)

வெம்மையுற்ற தானவர்கள் மேலும் வலியோர்கள்
தம்மையுற்ற தாந்தளையிற் றந்திலனோ வும்மைக்
குலையப் பொருதேவர் கொம்மைப் புயத்தை
அலையப் பொருதேற்கென் னாம். (9

Koviloor Digital Library

காய்ப்புண்ட தாம்படைகள் கையி லுளவாகத்
தேய்ப்புண்டவனுஞ் சிலகணையால் எய்ப்புண்ட
வன்னவனுஞ் சொல்லா லடுத்தவன்போ லென்னையுன்ன
லுன்னவல மென்றா னுருத்து. (10)

உம்பிக் குயிரீ றுடற்று மொருவனவன்
தம்பிக் குயிரீறு தான்புரிந்து நம்பிக்கு
வன்றுயரைத் தந்திலனேல் வல்ல விராவணற்கு
நன்றுயரத் தக்தமக ஞே. (11)

கிட்டிப் பொருத கிளர்சே னையையடுத்து
மட்டித்த வானரத்தார் வன்றலையை வெட்டித்
தரையிட்ட தாமிருவர் தம்மையடர்க் கேனேல்
வரையிட்ட தோட்கென் மதிப்பு. (12)

தானைக் கடல்முன்னுச் சார்கவெனச் சாற்றிடினும்
ஏனைப் படையென்னு மேகெனினுந் தானுைத்துச்
சொல்லுதிற லென்றான் சுரர்புகழை வேரினெடு
கல்லுதிறல் வீரன் கடுத்து. (13)

சொன்னதுவு நன்று துணிந்த செயனன்று
அன்னதுநீ செய்யி னடுத்தநாள் மன்ன
னிராமன் றனைமுடிப்ப னென்னப் புகன்றான்
அராமன்னச் சீறி யடர்த்து. (14)

போவா யிதுபொழுது பொன்னுர் கழலோய்நீ
மூவா யிரகோடி முற்றுபடை காவார்
கரிபரிதேர் காலாள் கடுத்தடுக்க வென்றான்
எரிபுரைகண் சேந்தா னிரித்து. (15)

கும்பத் திறலான் கொடிய நிகும்பனட
லம்பொற் கழலா னகம்பனுடன் செம்பொற்
பொலிதேரர் சூழ்ந்தார் புரந்தரனுந் தேவர்
வலிதேறி வீழ்ந்தார் மருண்டு. (16)

Koviloor Digital Library

ஓரேறு தான்சிவனுக் குற்ற தனையவலி
வாரேறு வெற்றி வயப்பரிதாம் சீரேறு
மாயிரங்கொண் டெற்று மடற்றேறி லேறென்றான்
மாயிரங்குந் தாரான் மதித்து. (17)

என்றான் விடைநல்க வேற்றுச் சினந்தெழுந்தான்
வன்றாள் வயிரவில்லான் வாள்கொண்டு பொன்றாழ்
கவசமுற்ற நீலக் கருமுகிலி னின்றான்
அவசமுற்றார் தேவ ரறிந்து. (18)

பல்வேறு கொண்ட படைக்கலங்கண் மிக்கொளியா
லெல்வேறு கொண்ட வினவென்னச் சொல்லிற்
றெழிக்கொண்ட வீரர் திரைக்கடலிற் சூழ
வழிக்கொண்டான் வீரன் மதித்து. (19)

இழையஞ் சனக்களிறு மெண்ணி லரிமா
முழையஞ்ச நின்று முழங்க மழையஞ்ச
வின்னு ணொலிக்க விளங்கு கடலஞ்சக்
கொன்னார் முரசமொலிக் கும். (20)

ஆர்த்தார் நெடுவானு மஞ்ச வடியெடுத்துப்
பேர்த்தார் நிலமகளும் பேர்வளெனத் தூர்த்தார்
கடலடுத்த தூளியினாற் கண்டடுத்த தேவர்
அடலெடுத்தா ரோடற் கடுத்து. (21)

தாளுடு மால்கரிபோந் தண்டமதிற் கொண்டமதச்
சேறுடப் பாய்பரிகள் செல்வதனால் வீறுடக்
காலான வீரர் கடுத்துவரு பூழிபட
மாலானன் போரை மதித்து. (22)

தேர்சென் றனவான செங்கதிரோன் றேரினொடு
மூர்சென் றனபோல வோடைகளின் கார்சென்ற
கார்நிறைகள் சென்றனபோற் கற்கி நிறைசென்ற
பார்நிறைய வெங்கும் பறந்து. (23)

Koviloor Digital Library

சீரடுத்த மேருதனைச் சேர்வரைகள் சுற்றிவரு
பாரடுத்து நேரும் பரிசேபோல் தேரடுத்துச்
சுற்றிவரப் போர்க்களத்திற் றேன்றினு னிற்றைவரை
வெற்றிவரப் பார்த்தான் விழைந்து. (24)

கண்டா னிராமனெனுங் கார்யானை கொண்டமதத்
துண்டாடு வெங்களத்தை யூடுருவப் புண்டாழ்
மனம்புழுங்க நின்று மலைத்தா னலைக்கும்
சினம்புழுங்க நின்றான் திகைத்து. (25)

மலைகண் டனபோல் வருதோளி னேடு
கலைகொண்ட தோளொருபாற் கண்டு நிலைகொண்ட
தாதைதனைக் கண்டான் தலைகண் டிலனுகி
வாதைதனைக் கொண்டான் மனத்து. (26)

மிடலொன்று பாணம் விரைந்தடுக்க நேரும்
திடலொன்று திக்கயமோ சேரும் கடலன்றி
எந்தை கடக்கரியா னேற்ற வுடலென்று
சிந்தைகடக் காத்துயரான் சேர்ந்து. (27)

எல்லே யிவைகாண வெய்தினனே செய்திறலின்
வல்லே வுளரான மானுடரைக் கொல்லேனுச்
சென்றடுக்கி னென்னுஞ் சிறந்த வுயிர்கொண்டு
நன்றடுக்கே னென்று னகைத்து. (28)

என்னு முனிந்தா னிவையிழைத்த மானுடவன்
பின்னுனைச் செய்தலன்றிப் பேர்தலுண்டோ வன்னு
னிடர்கண்ட பின்னை யிதுகாண்ப னென்றங்
குடனின்ற வற்குரைத்தா னேர்ந்து. (29)

வானீ மயிடன் வலத்தால் விசையுடனே
போனீ யிலக்குவன்முன் போயடர்த்து நானீது
செய்யத் துணிந்த செயலென் றெடுத்துரைப்பாய்
வெய்யற்கு முன்னம் விரித்து. (30)

Koviloor Digital Library

அந்தா ரிளவற் கயர்வெய்திச் சிந்தைநொந்த
தந்தாதை தன்னிடரைத் தாங்குவான் வந்தான்
எனமுன் னுரைப்பா யெனது செயலை
மனமுன்னி நன்று மதித்து. (31)

கோளுற்ற வனெஞ்சு கோடக் குழைத்திடுவான்
ஆளுற் றவனை யடர்த்தொருதன் தாளற்றுச்
சோரத் தலைதுணிப்பான் சூளுற்றேன் வந்ததனை
நேரத் தரத்துரைசெய் நீ. (32)

தீதென் றிதனைத் திறத்தசிந்தை செய்திலையா
லீதென் றறநெறியு மெய்துமெனத் தூதென்
றிகழாது செல்வா யெனவுரைத்தான் சேரார்ப்
புகழாது கொல்வான் பொருத்து. (33)

செருவாகை கொண்டுபுகழ் தேடச் சிறந்த
இருவோரை வல்லமையி னெய்திப் பொருவேன்
நமன்பதியிற் சேரவரு நாளதுவு மின்றே
அமைந்த தெனச் சொல்வாயடுத்து. (34)

சிந்தா குலந்தந்தை சேர்தல் திருத்திடுவான்
வந்தாகு மெந்தனெதிர் மாமதியோய் தந்தா
லுனையன்றி யெற்கு முரியோரா ருற்கு
மெனையன்றிச் செய்வா ரெவர். (35)

இலக்குவனும் வீர னெனக்கெதிரின் வந்தால்
விலக்குவரோ தேவர் வெகுண்டும் கலக்கியவன்
தன்னுயிரைப் போக்கிச் சமைந்த வுனையுமொரு
மன்னுயரை வேப்பேன் மதித்து. (36)

விண்ணாடு பெண்களுடன் விஞ்சையர்க ளஞ்சொலினார்
பெண்ணா ரமுதன்னார் பெய்தெவரு முண்ணாத
கூர்ந றவு கொண்டு குறித்த வவைதருவேன்
ஏர்தசும்பு மெண்ணா யிரம். (37)

Koviloor Digital Library

உறைதந்த செங்கதிரோ னுற்ற துருவில்
பொறைதந்த காசொளியும் பூணும் நிறைதந்த
தெய்வ நிதிக்கிழவன் சேகரத்தாற் றந்தவெலாம்
உய்வனவா முற்கே யுவந்து. (38)

மாறா மதமாரி வண்டினொடு மண்டிவரு
பாறுடு மன்முகத்துப் பல்பகலும் தேறாது
செங்களிப்பே செய்மதமா சீராரு மோரயுத
மிங்களிப்பே னென்றா னிசைந்து. (39)

செம்பொ னமைந்து சிறந்து பொருந்தியதே
ரும்பர்நெடு வானிடையு மொப்பிலதாய்ப் பம்புமணித்
தாரணிந்த பாய்பரிமாத் தந்தளிப்பேன் கொந்தளித்த
சீரணிந்த செய்கை தெரிந்து. (40)

நிதியி னிறை குப்பை நேர்ந்த சுவணப்
பொதியின் மிளிர்காசு பூணும் மதியி
னொளிமிகுத்த தூசு முயர்ந்தவைக ளெல்லாம்
களிமிகுத்துத் தந்திடுவேன் காண். (41)

மற்றுமொரு மாறின் மணிக்குவிய லாங்கணிதம்
உற்ற நினைவெவையு முந்துவனல் பொற்றின்
கழலாய் நனிபோதி காணவெனச் சொல்ல
அழலா யடுத்தா னவன். (42)

ஏகித் தனிசென் றெதிரடுத்த தூதுவன்றான்
காகுத் தனையெய்து காலையின்வாய் வேகத்தாய்
வீரர் விசைத்தெழலும் வேகமுட னேகையது
சார விசைத்தான் றணிந்து. (43)

போதமுதல் வாய்மொழியைப் போற்றிப் புகல்வதனு
லேதமுத லாகா னிகலடுத்த தூதன்
அவனைச் சுளித்த லறிவன்றா மென்றான்
சிவனைத் துணையார் திறன். (44)

Koviloor Digital Library

என்வந்த செய்தி யியம்பென் றுரைத்திடலும்
மின்வந்த தந்தகல வில்வலநின் பின்வந்த
தம்பிக் குரைக்கத் தகுதி யுளதென்றான்
கம்பிக்குந் தூதன் கதித்து. (45)

சொல்லா யதனைத் துரிதத் தெனவந்து
வில்லாளன் றம்பி வினவுதலும் பல்லா
யிரகோடி யாம்படையி னேற்ற கடலின்
அருகோடி நின் றுரைத்தா னங்கு. (46)

உன்மே லதிகாய னேங்கி யுருத்துவரு
நன்மேரு வென்ன நடந்தடுத்தான் தன்மே
லெதிர்வலியு முற்குளதே லென்னுடனே போதல்
முதிர்வலியா மென்றான் முனிந்து. (47)

சையப் படிவத்தாம் தந்தை தனைமுன்னம்
மெய்யெப் படிநம்முன் வீழவெய்தா னய்யப்
படலின்றி யப்படியே பாடுசெய வென்ற
வடலின்று கொண்டா னடுத்து. (48)

கொன்றா னொழியக் கொலைகோ ளறியாதான்
நின்றா னொடுமென்னை நேர்ந்ததெனிற் றன்றாதை
கொண்டதுய ருன்முன் குறித்தடைய வன்னவனும்
கொண்டதுவா மென்றான் குனித்து. (49)

வானோரு மண்ணில் வருவோரு மற்றையுள
வேனோரு மிவ்வுரையை யேற்றிடுமின் தானே
பொருவான் வருவான் புகலுந் தமர்கள்
வருவா ரவைதான் வளம். (50)

என்றா யுலகேழு மேழு முடனாகத்
தன்றா யரைப்பாலுந் தாளளவா நின்றான்
உரைசெய்ய வுற்றரக்க னென்றி யுரைப்பான்
வரைசெய்யுந் தோளாற்கு மற்று. (51)

Koviloor Digital Library

எழுவாய்நீ யென்னுடனே யென்ரு னெரியும்
மழுவாய் நிகர்சொல் வழங்கத் தழுவா
வுடனேக வேண்டுமென வுற்ருர்கண் முன்ன
மடல்வீரன் சொற்ரு னமைத்து. (52)

எல்லா முடனெய்தி யேற்ரபின ரின்னவனே
வில்லா னொடுசெய்ய வேண்டுமென நல்லாறு
கொண்டலொத்தான் வீடணனுங் கோமா னுரையெடுத்தான்
கொண்டலொத்தான் முன்னங் குறித்து. (53)

வாரேறு பொற்கழலென் வாளரியாம் வீரனொடு
போரேற நின்று பொலன்படுத்த தேரேறி
வந்தான் செயலை வரைவே னெனவுரைத்தான்
சிந்தா குலத்தான் தெரிந்து. (54)

ஓவா துதவு மொருதவத்தி னேங்கலினுன்
தேவா சுரர்கள் செயுஞ்செருவிற் சாவா
திறையுஞ் சலியா னியல்பிற் பிரமன்
குறையுதலி னல்வரத்தைக் கொண்டு. (55)

கடமேய் கயிலைதனைக் கண்ணுதலி னேடு
மிடமேவ வேற்ரே னிவனைத் திடமேவத்
தேவரொடு மேருவெனும் தெய்வத் திருவரையைத்
தாவரிதாய்ப் போக்க வளத்தான். (56)

மாலா ரொடுமெடுத்த மந்திரமு மாசுணமும்
மேலான தேவரொடு வேண்டுமென ஞலாலம்
ஆரமிழ்துந் தாமமைய வாகு மொருகாலால்
பேரக் கலக்கும் பெயர்ந்து. (57)

ஊழிக்கு மேலா யுயர்ந்துமொரு நாளொருவாப்
பாழித் திசைசுமந்த பண்படுத்த சூழிக்
கரிதள்ளல் கொள்வலியோ காண வராவாழிக்
கிரிதள்ளு மோர்கை கிடைத்து. (58)

Koviloor Digital Library

காலங்கள் தாமும் கனக்கிலவாய்க் கண்ணிமையா
வாலங்கொள் கண்டத்த ஞரழல்வாய் சூல
மெனமடுத்த சொல்லுடையா னேற்ற வரத்தான்
மனமெடுத்த கோபத்த வன். (59)

பகையாடு வானோர் பரவவரு மூரைப்
புகையாடி வாகை புனைந்தான் மிகையார்
உயிருண்ண வீசு முயர்வாளி தாங்கும்
செயிரொன்று விற்கைத் திறன். (60)

உயிரொப்ப தாகு முயர்படைக ளெல்லாம்
செயிரொப்ப விந்திரமால் சிந்த வயிரொப்ப
நுண்டுகளாய்ச் செய்து நவலும் வலியுடையான்
வண்டுகளாய் மாலையணி வான். (61)

கற்றான் மறைநூல் கருத்துடையான் கண்ணுதலான்
உற்றா னுதவு முயர்படையான் பற்றார்
இலரென்று செய்யு மிகல்படைத்த வீரன்
அலரொன்று வில்லாண்மை யான். (62)

அறமான செய்கை யறியான் சிறந்த
மறமான தைப்பணியா மன்னும் திறமா
முயிர்க்கிலய மானுலு முற்றவிசை தன்னைப்
பயிர்ப்பின்றிச் செய்வான் பயன். (63)

காயத்தார் சிவனடி கால மடுத்தாலும்
மாயத்தார் கூடி மலைந்தாலுந் தேயத்தார்
செய்யுந் தொழிலாச் சிறந்து வருமாயம்
செய்யுந் தொழில்கொள்ளாச் சேய். (64)

மதுகை டவரென்னு மாண்புடையார் தேவர்
பதிகை கொடுகெட்ட பண்பார் துதிகொண்ட
வாழி யனந்தனையு மாங்கடுத்து முட்டிவரும்
பாழியன தோளார் பரிந்து. (65)

Koviloor Digital Library

நீராழி தாங்கு நெடுந்தகையைக் கண்டடுத்துத்
தாரா யமரென்றார் தாமொருநாள் கூராழிக்
கையான் குறித்தான் கடுஞ்சமர முற்றியிவர்
மெய்யாகம் போக்கும் விதம். (66)

வல்லா னுருக்கொண்ட மாதவரோ டாயிரமாய்
நல்லார் முறைபோய் நகுதிறலார் மல்லால்
இளகாதா ராயிரமா யேற்றபக லெல்லாம்
வளமாகச் செய்தார மர். (67)

தன்போலி யாருஞ் சரியாத் தனியாழிப்
பொன்போலு மேனியனைப் போற்றினார் என்போல்வார்
சொல்லமைத லொன்றோ சுமுக வுனதுபுகழ்
வல்லமையா மென்றார் மகிழ்ந்து. (68)

ஒருவே முலகேழு முண்டுமிழ்வேம் சந்த
விருவேமு மித்தனைநா ளேற்றாந் தருவேம்
உனக்குவர மேன்று ரொடுங்கா வலியார்
தனக்குவரு கேடறியா தார். (69)

ஒல்லும் படியா யுனக்குதவு நல்லவரஞ்
சொல்லும் படியவெனச் சொல்லலுமே வெல்லும்
படியாக நும்மைப் பகர்வீ ரெனத்தான்
நெடியா னுரைத்தா னினைந்து. (70)

இடையிற் படற்கரிதா மேற்ற வொருநின்
றொடையிற் படற்காய்த் துணிந்தோம் அடையச்செய்
திற்றியெம தானையெனக் கேடில்லா நீதியுடை
வெற்றியினார் சொற்றார் விழைந்து. (71)

விட்டா னுலகெவையு மேலி னெடுநீழு
மெட்டா வொருவ னிடத் தொடையை யொட்டா
தவரொன்றி யூழ்வலியைத் தாங்கி யுலந்தார்
பவரொன்று வல்லமையார் பண்டு. (72)

Koviloor Digital Library

தனிநாய கன்கதை யைத் தன்கையிற் கொண்டு
நனிசாட வீழ்ந்தார் நலிவாய்ப் பனியா
மதுமேதை தன்னால் மகிழ்மே தினியாய்ப்
புதுமேதை கொண்டதிந்தப் பூ. (73)

விதியா லுலகமுற்ற மெய்மை வலியான்
மதியான் மதுவெம்முன் மாய்ந்தான் துதியார்
கயிடவனு மிந்தவதி காயனெனச் சொற்றான்
பயிலுநல மேலோன் பரிந்து. (74)

என்றானி ராவணனுக் கேலா விளையோன்சொல்
நன்றாக வென்றடுத்து நாயகனும் மின்றானும்
எந்நா நகைத்தா னிளையோன் றிறமையெலாம்
சொன்னா னவற்குத் துதித்து. (75)

எண்ணா யிரமா மிராவணரு மேற்றவர
விண்ணோர் வேறுலக வீரர்களு நண்ணா
வொருமூவர் நண்ணிடினு முற்றவிவன் வில்லின்
வருவீரங் காணென்றான் மான். (76)

வானென்ப தென்னை வரவுலக மென்னையரி
தானென்ப தென்னை தனிச்சிலையோர் யானென்ப
தென்னாகு மீச னிமையவர்கோ னென்பதுதான்
என்னாகு மெம்பிக் கிணை. (77)

தெய்வப் படையுஞ் சினமுந் திறமுரமும்
மையற்ற மாதவமு மற்றுமுற்றுந் மெய்தற்
குளவோ விவன்சிலையி னுற்றநாண் வைப்பி
னளவோ யுமென்றா னறிந்து. (78)

என்றேவி தன்னை யெடுக்கவஞ்ச மேற்றுவந்த
அன்றேவிற் றீர்வா னவள்சொலாற் குன்றே
னெனவேகுங் கொள்கையினு லின்றளவு நின்றான்
மனவேக மாகிவந்த வன். (79)

Koviloor Digital Library

ஏகா யுடனீ யெதிர்ந்து ளவனுகும்
மாகாய னுற்றதலை வாளியொடும் மாகாய
மண்டி விழுந்ததனை யாங்காக மாகியுண்ணல்
கண்டிடுவா யென்றான் கனன்று. (80)

நீரைக் கொடுநீரை நேரெதிர்த்து நிற்பதெனத்
தீரக் கொடியரொடு தேவர்பொரும் போரைத்தாம்
வெல்லவந்த செய்கை விழைந்தெவரைக் கொண்டென்று
சொல்லவந்தாய் நீயறியா தோ. (81)

சிவனல்ல னென்னிற் றிருவின் பெருமா
னவனல்ல பூத்தந் தருளும் தவனல்லன்
என்னி னிவ னன்றி யேற்றபகை வெல்வதற்கு
முன்னினெவ ராகு மொழி. (82)

ஒன்றான வெள்ள மொருங்கா யிரமான
வன்றானை வீரர் விளைந்தவெலாங் கொன்றா
னிவனன்றி யேவ ரெடுத்ததவ ரோடுங்
கவனம் படவதைத்தார் காண். (83)

கொல்வா னிவனே கொடியோர் தமையெல்லாம்
வெல்வா னிவனடல்சேர் விண்டுவென வொல்வானும்
இங்கிவனே யாகு மிவனுடனே செல்கவெனத்
துங்கனுரை செய்தான் றுதித்து. (84)

அக்காலை தன்னி லமலன் பதத்தை நம்பி
முக்கால் வணங்கி முழுதுணர்வான் தக்க
மதிவி டணனொடு மன்னுகளம் புக்கான்
பதிவீ டருளும் பரன். (85)

சேனைக் கடலடுத்துச் சென்றனவாந் தென்கடன்மேல்
ஏனைக் கடல்க ளெழுந்தவென வானை
பரியிரத மாண்மிடைந்து பன்னவரு தானை
அரிவிரவு சேனைதன்மே லார்த்து. (86)

Koviloor Digital Library

நெய்த்தோ ரடுக்க நிறைகவந்தங் கூத்தாடக்
கைத்தோடு பூதங் கலந்தார்ப்பத் துய்த்தோடு
பூழிவிண்ணைப் போர்ப்பப் புகல வருசேனை
ஆழிமண்ணைக் கொண்ட தனைத்து. (87)

தாமிடிக்கும் போர்ப்பணையுந் தாங்கிவரு சங்கினமு
மாமிடிக்கு நேரா யதிர்த்துவர வேமச்
சிலையிடிக்கு மஞ்சிச் சிறந்தலையும் வேலை
யலையடிக்கு மார்ப்படங்கு மாம். (88)

உலைக்குங் குருதி யுயராருவி யொத்து
மிலைக்கு மரங்கொடிக ளேர்ப்ப மலைச்சிகரம்
பாய்ந்த வென வானரங்கள் பன்னவரு யானைகளிற்
காய்ந்தனவாய்த் தாவுங் கடுத்து. (89)

கிட்டிக் கிளையினொடு கீழடுத்த தாயடுத்த
மட்டி லிரத்தமதின் வானரந்தாம் விட்டவரை
வேழத் துடனே விழுந்து கிடப்பனவாம்
ஆழத் திரண்டானை யாய். (90)

இடித்த வுறுக்கி இறுக்கிவர வேய்ந்த
தடித்தா மெயிறுதலை சந்தில் கடித்த
குரங்கெற்றக் கையாற் குதிரைப் படைகள்
தரங்கத்தை யொத்துலந்த தாம். (91)

அடைந்த கவிக ளடுத்தெற்ற வாகி
குடைந்தன கால் பூட்கை குப்பை யிடைந்த
முகிற்குலங்கள் சாயந்ததென முன்னு மருப்பின்
உகுத்தனதா முத்த முகந்து. (92)

மரவஞ் சிலையினொடு மாமலையும் வாளார்
அரவங் கரிபரியு மல்ல விரவி
விசும்பி னிடை மிடைந்து வீழ்வ கடலின்
அசும்பு மழைபோன்ற வாம். (93)

Koviloor Digital Library

தடவரைகள் வானரங்கள் தாங்கி யடர்த்தும்
அடல்வலியி ராக்கதர்மே லண்ட விடவதுதான்
மேல்விசும்பி னுற்றடுத்து வீழ்வ படர்கடலின்
மால்படித லொக்கு மதித்து. (94)

மிடலுடைய வானரங்கள் வெள்ளக் குருதி
இடைநீந்தி யானை யியைந்த திடரினிடை
சென்றொழுகிச் சேர்ந்த திரைகடலி னனவரை
துன்றுகரை காணுத து. (95)

கால்பிடித்த நீர்க்கும் கழிக்குருதி கண்ணகன்ற
சேல்பிடித்துச் செல்லுந் திரையாற்றின் கோல்பிடித்துச்
செல்லுங் குருடரெனச் செல்வால் பிடித்தெழுந்து
செல்லுங் கவிகள் சிறந்து. (96)

பாய்ந்த நிருதர் படைப்பரவை பன்முறையும்
காய்ந்த படைகலங்கிக் கைதோறும் தேய்ந்து
சிதைந்தசிந்திச் சேணினுற தேய்ந்துடுத்துச் சாய்ந்த
துதைந்தசிந்தி வானரங்க டோற்று. (97)

அத்துணையி லக்குவன்று னஞ்சலென வடுத்தான்
எத்துணையும் நன்மொழியா னேற்றினன் கைத்துணைசேர்
காண்வலிமை வில்லென்ற காலனுற்ற வாழ்வதனை
நாண்வலிமை கொண்டா னயந்து. (98)

துரந்த கணைகள் துரந்தவவை தோன்று
கரந்த நிருதர் கரையில் பரந்தனவாய்ச்
சென்றநெய்த்தோர் நீதத்தம் சிறந்த கடல்பரவிக்
கொன்றதனைத் தன்வயமாக் கும். (99)

யானைக்கை வெட்டி நயத்திரத வீரர்களின்
தான முடிதடிந்து தார்வாசி கானிரையைப்
போக்கிவரு வீரர் புகழ்முடிக ளைத்தடிந்து
தாக்கிவரும் வீரன் சரம். (100)

Koviloor Digital Library

வில்லறுத்து வேல்துணித்து வீரர் முடிதுணித்து
எல்லடுத்த பொற்கவச மீர்த்தேறிக் கல்லணையை
நீக்கிப் பரிவீட்டி நீளத்தாம் யானைகளைக்
காக்கிலது கொல்லுங் கணை. (101)

வெற்றிக் களிற்றின் விரைந்துவரு வெண்மருப்பும்
அற்ற விசையினும்ப ரண்மினவு முற்றறிய
முற்பகலிற் றிங்கண் முளைக ணெடுவானில்
நிற்பதனை யொத்த நிரந்து. (102)

கூர்மருப்பைக் கொண்டு குறைந்துவரு கையனவாய்
கார்மதத்த யானை கடம்வீழ்ந்து போர்முகத்த
நெய்த்தோர்ப் புணரிபுக்க நேரமையப் பாரெடுக்கும்
மெய்த்தோர் வராகமென்றா மே. (103)

புண்ணுற் றுயிர்போம் புரவியது பூட்டறத்தான்
கண்ணுற்ற தேர்க்கலம்வீழ் காட்சியது மெண்ணும்
பெரிய பதமஞ்சிப் பேர்மண்ணில் வீழும்
அரியவிமா னத்தையொத்த தாம். (104)

அடற்கவந்த நின்றாட லாகிவரு காட்சி
விடற்காம் வினைசிந்தி மெய்யான் கடக்கா
வுயிர்துறக்கஞ் சென்றதென வுற்ற வுடலும்
செயிர்துறக்க வாடலொத்த தே. (105)

ஆடுங் கவந்தமொன்றே லாறெடுத்தெண் ணுயிரமாம்
வீடும் பொழுதெனுஞ்சொல் மெய்யாகிக் கோடிக்கு
மேற்குனித்த கொற்றவன்வில் வீறத் திரந்தன்னை
யாற்குறித்துச் சொல்லற் கடுத்து. (106)

ஆனைக் குருதி யரக்க ரிரத்தமுடன்
ஏனைப் புரவி யிரத்தமுமாய்க் காணும்
மலையும் பரந்தபுனல் வானயா றென்ன
அலையும் பரந்தா மடுத்து. (107)

Koviloor Digital Library

தாக்கு சரத்தாற் றலைக ளவைநீக்கி
ஆக்கை புரசை யலை தாள மேக்குயரும்
அங்குசத்தாங் கைய வடுகரியை நூக்குவன
சங்கையற்ற வாம்பிணங்க டாம். (108)

கோளார் கணைபாயக் கொன்புரவி கூத்தனவாய்
தோளார் தலைபோயுந் தோற்றிலவாய் ஆளும்
குறைத்தலைக ளாடுவவாங் கொற்றவாட் கையாய்
நிறைத்தவர வாசி நிமிர்ந்து. (109)

வைவனவா மாமுனிவர் வாக்கனைய வாளிகடாம்
கொய்வனவாந் தோடலைகள் கூர்கவந்தம் கைவளையும்
வில்லிற் கணைதொடுத்து மேலிரத்தத் தெய்வனவாய்ப்
பல்பிணங்க ணிற்கும் பரந்து. (110)

தாதைதனைத் தம்முன் தனைத்தம்பி யைப்பேரன்
காதலனை யுத்த களந்தனிலே யூதை
யனையகணை பாய வழிந்தார்கள் சீதை
தனையமனுத் தேடுநிபத் தால். (111)

ஆயிரவாங் கோடியென வாகு மடற்பாணம்
தீயுமிழ்ந்து சிந்தையெனச் சென்றடுத்துப் பாய்வதனால்
தீரு நிருதருயிர் தேடுநமன் றூதற்குஞ்
சோருநிலை கைகால் தொடர்ந்து. (112)

தாருகனென் றுள்ளான் தருக்கிற் சிறந்தவலன்
மேருகனப் பேரொலியின் வெம்மையான் போருவந்து
தாக்கினன் சையமெனச் சாந்து வருமிரதன்
தீக்குமா வில்லன் றெறிந்து. (113)

துரந்தான் சரநெருப்பின் சீறுற்றத்த வான
பரந்த விசும்பொடுங்கப் பண்டாம் வரந்தன்னால்
வந்தவற்றை வள்ளல் வரவாளி யிற் றடுத்தான்
சிந்தைமுற்றக் கொண்டான் சினம். (114)

Koviloor Digital Library

அண்ணல் கணைதுணிக்க வன்னோன் றலைமலையால்
கண்ணகன்ற தாம்விசும்பிற் காரெனவாய் விண்ணடுத்தங்
கார்த்த வுயிர்விரைவின் ஆக்கவந்த கூற்றுமுட்கப்
பார்த்தவுடல் வேர்த்துப் பதைத்து. (115)

காலன் குலிசனொடு காலசங்கன் கோலமெனு
மாலி மருத்தன் மருவுமைவர் சூலமொரு
பாலம் கணிச்சியொடு பாசம் பயில்கரத்தா
ராலங் கணித்தெனவங் தார். (116)

அன்னவர்க ளெய்த வெறிந்தனவு மாயிரமாம்
துன்னும் படைக டுணித்துடனே நன்னர்த்
தலையைத் துணித்துடைய தானைதனைத் தீர்த்து
மலையத் துணிந்தா னறிந்து. (117)

ஆண்டதிகா யன்ற னடற்சேனை யாடவர்கள்
ஈண்டதிகா ராங்கரிக ளெத்தனையோ தூண்டி
மருங்கு வரச்சுற்றி வந்தார் படைக
ளொருங்குவர வெற்றினோரோர்ந்து. 118)

போக்கடுக்கா தென்னப் புரம்வளைத்துப் பொங்கினர்
தாக்கடுத்த வாசைதொறுந் தாழ்கைவரை நூக்கும்
படையால் நுறக்கினர் பன்னும் கவிகள்
கிடையாகச் செய்தார் கிழித்து. (119)

எறிந்தனவு மெய்தனவு மெய்தியொன்றோ டொன்றாய்
அறைந்த வசனியென வாசை நிறைந்து
மழைபோ னெருங்க வரவா னுலகும்
உழைபோகக் கொண்டா ருருத்து. (120)

அப்படையைப் பொய்ப்படையா யாக்கி யவர்சிறந்த
துப்படையா வாக்கை துணித்துவரு மொப்பில்
மதமலைகள் சூழ்குலத்தை வாட்டினான் வீட்டும்
கதமலையாந் தம்பி கடுத்து. (121)

Koviloor Digital Library

குன்றலைக்கு மால்யானை கொம்பி னொடுகரங்கள்
வன்றலைக்குந் தீர்வடுத்து மாறுவன வொன்றலவே
பாண மழையாற் பலகரிகள் சிந்துவன
காணவரா தென்றும் கணித்து. (122)

ஒருதொடையின் விட்ட வுருமடுத்த பாண
மிருதொடையைப் போக்கி யெடுத்த விருதுடைய
மேலானை வீழ்த்தி விடுத்த மலைபோலத்
தோலாக்கு மெங்குந் துணித்து. (123)

மலையெடுத்த வெய்ய மதமலைகள் வீழச்
சிலையெடுத்த கையன் திறத்தால் நிலையடுத்த
வைங்கரத்துத் தேவு மடுத்தமுக மானையதாற்
தங்கருத்துச் சூரடுத்த தாம். (124)

அவ்வேலை தன்னி லனுமா னனல்வேலை
வெவ்வேலை போலுமிப வேலைதமைச் செவ்வே
நினையா வெதிர்ந்தா னெருப்பெழுந்த தென்னப்
புனையா வலத்திற் பொலிந்து. (125)

ஆர்த்தங் கனல்விழித்தா னன்னமத யானையன்னான்
தீர்த்தன் கழல்வணங்கிச் சேரரிபோல் வார்த்தயங்கு
வீரக் கழலான் விரற்றுரு வொன்றுகொண்டான்
சேரக்கால் தண்டிற் செறிந்து. (126)

கருங்கார் புரையுங் கரியானை சேர
வொருங்கா முயிரெல்லா மொன்ற வருங்காலம்
போதுமழை மேகமொன்றாய்ப் போக மலைவீழ்ந்த
தாகுமிடி யென்னவடித் தான். (127)

மிதியாற் பலவா மிடலாற் பலவாங்
கதியாற் பலவாலிற் காலாற் குதியாலுங்
கொன்றடர்த்தான் வீரன் குலவரையைக் கொள்புயத்தான்
அன்றெடுத்த தண்டத் தடித்து. (128)

Koviloor Digital Library

பறித்தான் சிலபகிர்ந்தான் பல்லாற் கறித்தான்
இறுத்தான் சிலவிடந்தான் எற்றி முறித்தான்
சிலயானை தன்னைச் சிலபிடித்துத் தீர்த்தான்
மலையான கையான் மதித்து. (129)

வாரித் தலையின் மடக்கு நெடுமரத்தாற்
சாரித் தலையாற் றலத்துதைக்கும் பாரிற்
பிடித்தடிக்கு மூரிற் பிறங்க வெரியும்
அடித்தலத்தி னூற்றுவைக்கு மார்த்து. (130)

வாலால் வளைத்து மலைப்பாம் பெனமலைத்து
மேலா னொடுபிசைந்து மேலெறியு மாலால
முண்டவனைப் போல வொருவாயி னிட்டதுக்கும்
கண்டகய மாயிரமோர் கால். (131)

சையத்தின் மேலாந் தறுகட் களிமதத்தின்
மையொத்த மேனி வருகரியைத் தொய்யலுற்ற
சேறுகக் கொண்டு சிதைக்கும் பெருங்காலால்
மாறுனர்க் கொல்வான மன். (132)

வேறு மதக்கரியை வேறுமொரு கோடிகொண்டான்
சீறுவிளையோன் செருத்தலத்தி னேறு
நெடும்பயத்தாற் கண்ட நிசிசரர்க டாமும்
படும்பயத்தில் வீழ்ந்தார் பலர். (133)

இரிந்தார் திசையடுத்தி யானைப் பிணத்தின்
நெரிந்தார் திகைத்தார் நெருக்கா ரெரிந்தார்பின்
கோவாந் தகைமைக் குணத்தா னொருதேரான்
தேவாந் தகனடைந்தான் றேர்ந்து. (134)

உதிரங் கடல்பிணந்தா னெங்கும் வரையாய்
எதிரங் கடுங்களத்தி னேற்றான் கதிர்பொங்கு
வெங்கணையைக் கான்மகன்மேல் வித்தினன் றேர்விடுத்துப்
பொங்குமழை யென்னப் பொலிந்து. (135)

Koviloor Digital Library

அப்போ தனுமா னடிமரத்திற் றடுத்தான்
இப்போ திவனுயிர்போ மென்றெறிந்தா னெப்போதா
வெங்கணைகள் விட்டு விலக்கினான் காமரத்தைக்
கங்கணையுந் தேவாந்த கன். (136)

மாறுங் கொருமலையை வாங்கினான் வானரர்கட்
கேறுங் கெரிய விசைத்தெதிர்த்தான் கோறுங்கு
வில்லுடையான் மாருதிதேர் மேற்றாவி யத்தவில்லைப்
புல்லிடையாப் போக்கும் பொடித்து. (137)

பறித்தான் படையைப் பலசுரர்கள் பார்க்க
முறித்தான் அரக்கன் முனிந்தான் மறித்தாங்கு
தோமரத்தை வாங்கிச் சுடர்த்தோளின் வீசினான்
தாமரத்தப் பங்கிவலத் தான். (138)

தோமரத்தைத் தொட்டவுடன் தோங்கொள் சுடராக
மாமரத்தை வாங்கி மதித்தடித்தான் தாமறத்தான்
சாரதியைச் சாய்த்தான் தனிமதனை யேய்த்ததிறல்
மாருதியை மேலான் மலைந்து. (139)

சூலப் படையைத் தொடுவான் றணிந்தடுத்த
ஆலத்தின் வெய்யோ னடர்த்தெடுத்தான் காலற்குக்
கண்ணு கும்வீரன் கதுப்பிற் புடைத்துயிரை
விண்ணூட விட்டான் விரைந்து. (140)

கண்டா னதிகாயன் காலக் கனல் பொடிக்கப்
புண்டான ரத்தம் பொழிகண்ணான் உண்டே
னிவனுயிரை இப்பொழுதே யென்றுரைத்துத் தேரை
அவனுறையின் விட்டா னதிர்த்து. (141)

அன்னான் வரும்போ தனிகந் தலைநின்ற
பின்னா னதுமுன்னைப் பேர்ந்தடுத்த பொன்னாலாம்
மால்வரையைப் போலெதிர்த்தான் மாற்ற மதிகாயன்
நீல்வரையான் சொன்னா னினைந்து. (142)

Koviloor Digital Library

தேய்த்தா வியைத்தம்பி தேகத் தொடு முன்னம்
போய்த்தாவிப் புன்கடலைப் பொன்றலிலாய் வாய்த்தானைப்
பின்மடித்தாய் கண்டடுத்தேன் பேதை யுனதுயிரை
முன்மடித்தற் கென்றான் முனிந்து. (143)

இன்றல்ல துன்னை யெதிர்க்கே னொருநாளும்
ஒன்றல்ல மானுடனை யுன்னையுந்தான் கொன்றல்ல
செல்லே னெனவுரைத்தான் தேரார் தமையடுத்தால்
வல்லே னெனவதைப்ப வன். (144)

பிழையா தெனத்தன் பெருங்கை பிசைந்தான்
மழையாய்ச் சிரித்தான் மலையான் முழைவாழும்
சிங்கமனையான் திரிசிரனை யுந்தேய்ப்பான்
இங்கழைபபா யென்று னெதிர்த்து. (145)

ஆமா மெனத்தலைமூன் றானுடைய னார்த்துவந்தான்
கோமான் றனித்தூதன் கூர்த்தடுத்தான் காமாண்டார்
கல்லாதார் வல்லீர் கருதுவீ ரென்றுரைத்து
நல்லான் புகுந்தா னடு. (146)

தேர்மலைமேற் சென்றான் திரிசிரனை யோர்திறத்தாற்
கார்மலைபோல் வானைக் கரத்தெடுத்தான் பார்மேற்
படுத்தா னரைத்தான் பழிபடத்தான் வீசி
அடுத்தான் குடவா யதிர்த்து. (147)

இமையிடையச் சென்று னிகலுமதி காயன்
அமையருவிக் கண்ணு னழன்றான் உமைபாக
னொத்தவிவன் வல்லமைக்கு மொப்பா றெனவெடுத்துச்
சித்தமொத்துச் சொற்றான் றிகைத்து. (148)

பூணிப்போ னாகிப் புகுந்தான் புறத்துநின்று
பாணித்த லென்னை பருவலிக் கோ ராணிப்பொன்
ஆனேன் தனைக்கண் டறிவே னெனத்தேரை
ஏனேன் முன் னேற்று னிசைந்து. (149)

Koviloor Digital Library

தேரொலிதான் கார்க்கடலைச் சீறச் சிலையொலிதான்
காரொலியைச் சீறக் கவின்முரசு வாரொலிக்கச்
சென்றா னதிகாயன் சீர்த்தம்பி தேவர்தொழ
நின்றா னதிகா ணிகர்த்து. (150)

வல்லியந்தா னென்ன வணங்கினான் வாலிமைந்தன்
சில்லியந்தேர் சேரான் சிறந்திருக்க வில்லி
தரையடுக்க நிற்றல் தகவன்றென் தோளாம்
வரையடுக்க வென்றான் மதித்து. (151)

ஆமெனத்தா னண்ணலவ னங்கதன்றோ ளாகவுடன்
தாமரைத்தா டாங்கினான் தார்க்கியன்போற் கோமகன்ற
னாற்றறனை நோக்கி யமரர் பொழிந்தார்த்தார்
போற்றவரு பூமழையைப் பூ. (152)

ஆயிரமாப் பூண்ட வசனி யடற் றிண்டேர்
போயினமா சாரிதிக்கிற் போயடுக்கு மீயெழுந்தாற்
றானுயருந் தாழினுடன் தானு மவைபுரியும்
மானுயரு மங்கதனே மன். (153)

அத்தொழிலைக் கண்ட வமரர் மனமகிழ்ந்தார்
இத்தொழிலாற் றார்க்கியர்க்கு மேற்றமென்றார் முத்தொழி
பாணமழை யாள்களிறு பாங்காம் பரியிரதம் [லான்
கோணிவிழத் தைத்த குறித்து. (154)

முழங்கு முரசம் முழங்கி வருதேர்
முழங்கிவரு பாய்மா முதல முழங்கிவரு
கார்முகத்தி னோதை கலித்த கழலோதை
கார்முகத்தின் மும்மை கடுத்து. (155)

கரிபட்ட காலாள் கலங்கக் கலினப்
பரிபட்ட கூற்றம் பயந்த எரிபட்ட
சூரன் கிரணமெனத் தோய்ந்து சுவரினவாம்
வீரன் கணைகள் விரைந்து. (156)

Koviloor Digital Library

மன்னவன்றன் தம்பி மருவான் றனை நோக்கி
என்னவுந்த ணிச்சை யெரிபடைகள் சின்னபின்ன
மானதனைக் கண்டா யடுத்துப்போர் செய்வதற்கு
மானவனே யென்றான் மதித்து. (157)

யாரும் பொருவதில யானு முடனீயும்
போருஞ் சுரர்காணப் போற்றிடுதல் சேரவரக்
கூறியது மன்ன குறித்தென் றெடுத்துரைத்தான்
சீறிவரு கூற்றனையான் றேர்ந்து. (158)

உமையனே காக்க உமைகூறன் காக்க
இமையவர்கள் காத்திடினு மென்னை சமையுமுந்தன்
வாழ்க்கையின்றே டென்று வரசங்க மூதினான்
தாழ்த்தலில்லா வில்லான் றடுத்து. (159)

அன்னதனைக் கேட்டமைந்த னுகு முறுவலுடன்
சொன்னவர்கள் வாரார் துகளனையா யென்னைப்
பொருதாலவரைப் பொருதலா மென்று
கருதாது விட்டான் கணை. (160)

விட்ட பகழிகளை வெற்பெடுத்த தோளவனும்
சுட்டபகழிகளாற் றுண்டித்தான் எட்டொடெட்டு
வாளி யிலக்குவன்மேல் வார்ந்துவிட்டு நீயிதனை
மீளவிலக் கென்றான் விளித்து. (161)

ஆர்த்தவனெய் வாளி யனைத்து மறுத்துடனே
வேர்த்தொலிசெய் வாளிமழை வித்தினான் சீர்த்தவடற்
றம்பிதொட்ட வாளி தமைத்துணித்துப் பாணமழை
வெம்பிவிட்டான் வீர மிகுத்து. (162)

எய்த கணையை யெரிகணையால் மீண்டகற்ற
வெய்தகலா மேற்கோபம் விஞ்சியே அய்யன்
அவசத்தைச் செய்யவென வாக்குதெய்வ வாளி
கவசத்தைக் கொய்யுங் கடுத்து. (163)

Koviloor Digital Library

நூறுகோல் கீறி நுழையக் குழைவெய்தித்
தேறுந் துணைசிலையைத் தேருன்றி ஆறினான்
அன்னபன்னும் கால மணிகந் தனைக்கடுத்துச்
சின்னபின்னஞ் செய்தான் செறுத்து. (164)

புடைநின்றார் போனதுவும் புங்கமுற்ற வாளி
கடைநின்று செய்வதுவுங் கண்டா னிடையாம்
மயக்கத் தெடுத்தான் வரவில்லின் வாளி
வியக்கத் தொடுத்தான் விரைந்து. (165)

வானெல்லாம் வாளி வரம்பெல்லாம் வாளிமண்ணோ
தானெல்லாம் வாளியுடன் சார்ந்தோர்க ளூனெல்லாம்
வாளி மழையாய் வரைந்தான் சிறந்தபுயத்
தாளி யனையா னதிர்த்து. (166)

மறைந்த திசையெல்லாம் வானோர் மனம்போற்
குறைந்த திரிசுடருங் கோதாய் அறைந்த
பகழி யுலகெல்லாம் பாழியடு தீயின்
தகழியெனச் செய்த சரிந்து. (167)

முற்றியதின் றோடு முழங்கிவரு வானரந்தாம்
மற்றிவனை வெல்லவல்லன் வள்ளறம்பி கற்றறிவன்
கால ஞெடுகொலையைக் காணவரு விற்றொழிலும்
ஆலமெனத் தேவரயிர்த் தார். (168)

அங்கதன்ற நெற்றியினு மாகத்து மம்புயத்தும்
புங்கமது தோன்றுமற் போக்கியே வெங்கணைகள்
மூன்றுதம்பி யேற்றொடுத்து முன்சங்கந் தான்குறித்தான்
தேன்றதும்பு தாரான் செறுத்து. (169)

வாலிசேய் மேனி மழையாய்க் குருதியது
கால்வரையிற் சேயருவி கண்டதம்பி கோலாற்
பரிதொலைத்துப் பாகற் படுத்துப் பிடித்த
வரிசிலைக்குந் தீர்வுசெய்தான் மற்று. (170)

Koviloor Digital Library

மாற்றுருப்பொன் றேரேறி வானோர் சிலைவாங்கி
எற்றரக்கன் சீற்றவெரி யேற்றடுத்தான் ஆற்றற்
படைவிட்டான் தம்பி படுத்தா னதனைத்
தடைவிட்ட வன்னசரத் தால். (171)

எற்றவனுந் தம்பி யெரியுருவ வாளியினால்
மாற்றவனும் வல்லரக்கன் மார்பதனை எற்ற
பலகணியாய்ச் செய்தும் பரியான் பகழி
அலகணியாக் காதுபொழிந் தான். (172)

பின்னின்றார் முன்னின்ற பேரையறி பெற்றியதாய்
மின்னின்ற எதிறந்த மேனிமுற்றும் அந்நின்றான்
ஆற்றல் குறையா னடுத்தாவி நீங்கிலான்
தேற்றமுற்று நின்றான் றெரிந்து. (173)

கோன்முகந்த வள்ளிக் கொடியசிலை நாண்கோத்து
மேன்முகந்து கொண்டுபொழி வீரனிடை வான்முகந்த
காற்றரசன் வந்து கலந்துபிர மாத்திரத்தால்
மாற்றரச வென்றான் மதித்து. (174)

நன்றென் றுகந்துடனே நான்முகன்ற னத்திரத்தை
மின்றுன்று வாளியுடன் விட்டார்த்தான் குன்றொன்று
தீயோன் றலைகொண்டு சென்றடுத்த வாளிவிண்ணிற்
றூயோர்கள் போற்றவந்த து. (175)

பூமழைசெய் வானோர்கள் போய பொருமலென்றார்
தாமலறி யெங்குந் தகைந்தரக்கர் வேமனத்தார்
அங்ககன்றே னின்ற வனகன் குதித்தடுத்தான்
வெங்கதந்தோய் வில்லான் விரைந்து. (176)

வெந்திறலைக் கண்டவர வீடணும் பாடுகண்ட
அந்தரத்தா ரார்ப்புமவ னாற்றலது மந்திரத்தாம்
சித்திகுன்றா வில்லினொடு சேரிந் திராசித்தன்
வெத்திகுன்று மென்றான் விழைந்து. (177)

Koviloor Digital Library

எஃதெழிலா னென்முன் னிறந்தா னெனநினைந்து
சார்ந்தணிதோ ளேனைக்கித் தநுநோக்கிப் போந்தகைக்கு
வீரனல்லை யென்று விரைந்தா னராந்தகனும்
சேரநல்லை நாந்தகம்வீ சி. (178)

தேரினிடை சேர்ந்துகண்க டையுகத்தான் சீற்றமுடன்
பாரினிடை பாய்ந்து பரிதியென்பான் ஊரினிடை
நின்ற னெனக்கிடுகு நேர்கையிற பற்றிமுகில்
மின்ற னெனக்கிளர்ந்தான் மீ. (179)

வீசினவாங் கல்மரங்கள் வீற்றுவீற் றாகியிற்ற
ஆசைதொறும் வாளா லறுத்தாக்கித் தூசி
இருகைகொண்ட நீர்ப்பாசி யென்றெருதுங்க வந்தான்
வருகைகண்டா னங்கதனு மன். (180)

மரமொன்று வாங்கி மடித்துவாய் வள்ளல்
சரமென்று தாக்கித் தகைந்தான் காமொன்று
வாளா லதனை மடித்தா யிரங்கண்டம்
தூளாகச் செய்தான் றுணித்து. (181)

அவ்விடையி னும்வெறுங்கை யங்கதனு மாண்மையன்று
லிவ்விடையி னுப்பெயர்த லென்றெண்ணி வெவ்விடமாய்ப்
பொங்கியெரி வீச்சிற் புகுந்துகர வாளினொடும்
அங்கியெனச் சேர்ந்துபிடித் தான். (182)

அத்தொழிலைக் கண்ட வமா ரதிசயித்தார்
இத்தொழிலைச் செய்பவரா ரென்றுரைத்தார் குத்தொழித்து
நீட்டினுன் கைவாளை நீள்கரத்திற் பற்றியுடன்
விட்டினுன் கூறாய் விழ. (183)

கூர்மத்தின் மேலாங் குலமந் தரத்தோளான்
வார்மத்த முண்ட மயக்கத்தான் போர்மத்தன்
என்பான் புகர்மத்த மேற்ற கரிமேலான்
வன்பான் வரத்தான் மடித்து. (184)

Koviloor Digital Library

காற்றிற் கடுமை கடலின் முழக்கமுடன்
கூற்றிற் கொலையுருமிற் கூர்கொடுமை சிற்றந்
தனக்குவமை யின்றாய்த் தறுகண் மதத்தாம்
கனக்கரியின் வன்மைகணக் கா. (185)

வேகக் கவிகள்விடு வெற்பினத்தை மேலடுத்த
பாகர்விடு முண்டையெனப் பற்றியே மாக
மரம்பாய்ந்து பற்றிவரு வண்டினங்கள் சோரக்
கரும்பாய்க் கரிக்குங் கடுத்து. (186)

காலிடையிற் பட்டுங் கரத்தா லடிக்கமுற்றும்
வாலிடையிற் பட்டும் மருப்பிட்டு நாலிடையிற்
பட்டபடை தம்பிவிடு பாணத்தால் மாண்டதென்னும்
பட்ட குரங்குப் படை. (187)

தன்படையின் தாழ்வு தனைநோக்கித் தாங்கரிய
அன்படையு முள்ளத் தனற்புதல்வன் வன்படையா
மாமரத்தைத் தான்சுழற்றி வந்தான் பொருனர்படை
தாமரற்றி வீழத் தடிந்து. (188)

சேறிரண்டு பாற்செய் திறற்களிற்றிற் சேர்ந்தரக்கன்
ஆறிரண்டு பாணத் தகற்றினான் வேறுமொரு
குன்றெடுத்தா னீலன் குறித்த பகழியினான்
அன்றடித்தான் துன்றுபொடி யாய். (189)

பிற்குன்றைத் தேடிப் பெயர்வானை யேகாது
பொற்குன்றைச் சுற்றரவம் போலவே யற்குன்ற
நின்றமத்த யானைநெடுங்கரத் தாற் சுற்றிவரக்
குன்றமொத்த நீலனெடுங் கும். (190)

ஒடுங்கு முரவோனை யுற்றவுயி ருண்ணக்
கொடுங்கோட்டாற் குத்தக் குறிக்க நெடுங்கை
யொடுதலையுங் கொண்டா னுயர்ந்தான் விசும்பிற்
படுதலையாம் வேழத்தைப் பார்த்து. (191)

Koviloor Digital Library

தறைத்தலையி னீலன் தரிக்கவரு சோரி
நிறைத்தலையிற் சேர நிலத்திற் குறைத்தலைய
குஞ்சரத்தைக் கண்டான் குறித்த மழையாகச்
செஞ்சரத்தைக் கொண்டான் செறுத்து. (192)

வாங்கு சிரத்தின் வயிரவான் கோட்டை வவ்வி
வீங்கு சினத்தரக்கன் மேல்விட்டான் ஆங்கவற்றை
யோரம்பின் மாற்றி யுரத்தொளிக்க வெத்தனையோ
கூரம்பு சேர்த்தான் குறித்து. (193)

எய்யுஞ் சிலையான் யெதிர்வீழ்ந்த யானையெனக்
கைம்மலையொன் றேறிக் கடவினன் வெய்யவனை
மேலடுத்து வீழ்த்தினன் வெற்றிபுனை வில்லினொடும்
காலடுத்த தோன்முன் கடுத்து. (194)

இட்டான கோனை யெழுவதன்முன் யானையது
கட்டான கோடுகொண்டு காலதனுல் வெட்டித்
தடக்கையுற்று வீசத் தனியானை தன்னை
மடக்கிவெட்டி வீசும் மருண்டு. (195)

தன்கரியைத் தான்கொன்று தாங்காச் சினத்தடுத்தான்
பொன்கரிய நீலன் புகைந்தடுத்து வன்கரத்தாற்
குத்தமத்தன் மாண்டான் குறித்த வயமத்தன்
சித்தமத்தன் வந்தான் சினந்து. (196)

பொய்யினொடு மெய்யன் பொருப்பைப் பழித்தபுயன்
வெய்யனெடுந் திண்ணியன்மா வில்லுடையான் செய்யவரு
வீரக் கழலரக்கன் வெற்றிப்பே யாயிரத்தாற்
சேரத்தேர் வந்தான் சினந்து. (197)

ஆர்த்தா னுலகை யழித்தா னுருமஞ்சப்
பார்த்தான் பழித்தான் பகழிவெள்ளந் தூர்த்தான்
குரங்குற்ற வன்படையைக் கொன்று னிடபன்
இரங்குற்று வந்தா னெதிர்த்து. (198)

Koviloor Digital Library

சென்றவனை நோக்கிச் சிரித்துச் சுதியையுனே
வென்றவனை வென்னும் விரிந்தபுகழ் என்றாலும்
மன்னன் மகனை வதைத்தானைக் கொன்றுகுரங்
கென்னவையைக் கொல்வனென்று னேய்ந்து. (199)

வாய்கொண்டு சொல்லும் வலியாய் பலியுண்ணும்
பேய்கொண்டு வெல்லவரு பித்தாகேள் நோய்கொண்டு
மல்குமருந் துண்ணு மடையா வெனவந்தான்
ஒல்குமன மில்லா னுருத்து. (200)

ஓடுதியா மென்ன வுறத்துவரு முன்னொடமர்
ஆடுஞ் செயலென் றரக்கனம்பொற் கோடார்
சிலைவளைத்துப் பத்தம்பு சென்றிடபன் மார்பா
மலைவளைக்க வெய்தான் மறித்து. (201)

அசும்புடைய நெய்த்தோர்கொ ளாகத்தான் வேகத்
தசும்புடைய தேர்வீசிச் சாரப் பசுங்கண்ண
பேய்பரந்து செல்லப் பெருங்கடற்கு மேகமென
வாய்பரந்து சென்றான் வரைந்து. (202)

தேரி னுடன்கடலிற் சென்று விழுந்துதலை
நீரி னுடனழுந்தி நேர்நெருப்பாய்ப் பாரிற்
குதியா முனமிடபன் கூர்ந்தெடுத்த கோபக்
கதியா லடுத்தான் கடுத்து. (203)

அல்லைத் தழுவுபக லாமென் றரக்கனவன்
கல்லைத் தழுவுபுயங் கட்டினான் பல்லிடையும்
வாய்குருதி பாய வரிவிற் புயலொத்தான்
வீய்குதலைச் செய்தான் விரைந்து. (204)

குரங்கரசும் வென்றிமிக்க கும்பனும் வெம்போர்
ரரங்கினூறு சாரியுட னார்த்தார் மரங்கொண்டுந்
தண்டுகொண்டு மாமலைபோற் சாரிவந்தார் போருவந்தார்
விண்டுகொண்ட மேகமென வே. (205)

Koviloor Digital Library

கிடைத்தா ருடலிற் கிழிசோரி வாங்கித்
துடைத்தார் விழித்தீ சொரிந்தார் புடைத்தடுத்துக்
கோளரிக ளென்னக் குதித்தார் மதித்தார்த்தார்
ஆளரிநேர் வீர ரடுத்து. (206)

தண்டங்கை வீசிவந்து தாக்கு மரக்கனவன்
அண்டங்கை கொண்டதென வார்த்தடித்தான் கண்டங்கு
காத்தான் மரத்தாற் கடிதுமரந் தீரமனன்
வேர்த்தான் விளித்தான் வெகுண்டு (207)

பொன்றப் பொருவேன் பொறுக்கே னினியென்று
வென்றிப் பொருப்பாய் விளித்துநின்ற மன்றப்
பெரியோன் கரத்தளித்தான் போராற்றற் றண்ட
மெரியோங்கு நீல னெடுத்து. (208)

அத்தண்டங் கொண்டா னமைந்த கரமுடையா
னெத்தண்ட முற்ற வுருத்தடர்த்தான் பித்தன்
தடமார்பு தோண்முரியத் தாக்கினான் கூக்கொள்
கடமா ரரக்கர்கலங் க. (209)

அடியுண்ட வல்லரக்க னார்த்து விழுந்தான்
இடியுண்ட மால்வரைதா னென்ன முடியுண்டா
னென்பதனின் முன்ன மெழுந்தான் எழுந்தரசன்
தன்பதலைத் தோளினடித் தான். (210)

தோளிற் புடையுண்ட சூரன் வரமருமகன்
தாளிற் றடமோற்றந் தாங்காது வாளிக்
கடுவிசையின் மண்டிக் கனன்றடித்தான் மார்பின்
வடுவிசையான் வானரமன் வந்து. (211)

அடியா யிரகோடி யாக வடித்தார்
முடிவெவர்க்கா மென்றமரர் மொய்த்தா ரிடியோ
டிடிகிட்டுமென்ன விரண்டு தடியும்
பொடிகிட்ட நின்றார் புடைத்து. (212)

Koviloor Digital Library

மத்தச் சினக்களிறாய் மாறிமலைந் தார்த்தார்
பத்துத் திசைசெவிடு பட்டபல்காற் றத்தித்
தழுவித்தோள் கொட்டித் தடிந்தா னரக்கன்
எழுவிற்றோள் தன்னி விடித்து. (213)

நிலையிற் சுடர்சேய் நெருங்கிக் கரத்தால்
வலியிற்செய் கூட மலைப்ப வுலையிற்
படுமிரும்பு போலப் பதக னகலம்
வெடிவுகொளச் செய்தான் விரைந்து. (214)

செய்வா யிகலென்று சேர்ந்து சிரித்தரசன்
அவ்வா யரவமுழை யானதெனக் கைவாய்
வழிசென் றவனுயிரை வாட்டிப் பறித்தான்
மொழிசென்ற நாவை முனிந்து. (215)

அக்கா னிரும்ப னனல்சொரியுங் கண்ணுடையான்
புக்கா னினியெங்கு போவதெனு மிக்கான்
எதிர்த்துவந்தா னங்கதன்றா னேற்று வெகுண்டான்
அதிர்த்துவந்தார் சண்டையிட்டா ராங்கு. (216)

சூலத்தின் கையான் தொடர்ந்தா னிடையடுத்தான்
ஆலத்தின் வெய்யதிற லங்கதனு நீலக்
கிரிமேலாம் பொற்கிரி போற்கிட்டித் தடுத்தான்
அரிமேலா மாற்றலுடை யான். (217)

ஏறியவரு சூல மெடுத்தடுத்துச் சீறி
முறியவரு மங்கதனின் முன்னே யறியும
அடன்மா ருதியதனி னற்ற முணர்ந்தான்
படுதீயாய்ப் பாயந்தான் பரிந்து. (218)

தடையேது மின்றித் தனிச்சூலந் தன்னை
விடைபோலு மங்கதன்மேல் வீசும் கடியானைக் [றான்
கைப்படையைக் கொண்டு கவிந்தடர்த்துக் கொன்றுசென்
ஒப்படையா மாருதிதா னோர்ந்து. (219)

Koviloor Digital Library

நின்றார் தடிப்பவரை நேரார் நெளிந்துவந்தார்
பின்றா தவரும் பிரிந்திரிந்தார் வன்றாண்
மரம்வீசி வானரர்கண் மட்டின்றிக் கொன்றார்
தரம்வீ சரக்கர்சரிந் தார். (220)

ஓடிப் புகுவாயி லுற்றநெருக் காலுலர்ந்தார்
கோடிக் கதிர்குத்திற் கொன்றடித்தார் பாடித்
தலையுற் றலைந்துபட்டார் தாங்கரிய வீரர்
வலையுற்ற தென்னமடி வார். (221)

தண்ணீர் தருகென்று தாவி யடுத்தோடி
யுண்ணீர வாவி யுலந்தூக்கார் கண்ணீரோ
டாவி கலங்கி யறிவழிந்து மாண்டனர்கள்
பாவி யரக்கர் படிந்து. (222)

விண்மேல் நெடிதோடி வீசு முயிரானார்
மண்மேல் வரைபோல் மடிந்திழிந்தா ரெண்மேல்
நிமிர்ந்தார்க ளோடி நிலைகலங்கி வீழ்ந்தார்
அமிழ்ந்தா ரிரத்தமடு வாழ்ந்து. (223)

அறியு மவரைப்பார்த் தையவிவ் வம்பைப்
பறியுமென வந்து பறிக்கப் பிறியுமுயிர்
எண்ணிலவ ராகுந்த மில்லடுத்துப் பட்டவரு
மெண்ணிலவ ராகு மிரிந்து. (224)

பரிபட்டு வீழப் பதைத்தார் சிலவர்
கரிபட்டு வீழக் கரைந்தார் நெரிபட்ட
தேரினிடை நின்று சிதைந்தார் சிலரெரியிற்
சாருமனை யானார் தவித்து. (225)

இருகண் டிரந்தயலி னேற்றிரங்கு வாரைத்
தருகென்றார் தண்ணீர் தருமுன் கருதிநின்று
மாண்டார் சிலவர் வருநீரைத் தாம்பருகி
மாண்டார் சிலவர் மருண்டு. (226)

Koviloor Digital Library

மக்கடமைத் தூக்கி வருவார் வழியாவி
யுக்க வுடன் வீசி யுருத்தலைந்தார் தக்கபடி
செங்குருதி கக்கியுடன் தேய்ந்தசிலர் கண்மணியும்
பங்கமுற மாய்ந்தார் பலர். (227)

இன்னதன்மை யெய்தி யிராக்கதர்கள் தீர்ந்தபின்னர்
பொன்னகரார் பூசல்கண்டு பொங்கினார் துன்னரிய
தூதுற்றார் சோர்ந்தார் துயர்க்குறியான் வல்லரக்கன்
பாதத்தில் வீழ்ந்தார் பதைத்து. (228)

நோக்கியவல் வேந்த நுவல்மின்க ளூற்றதெனப்
போக்கியதா கும்படையிற் போந்தவரா ராக்கிவரு
போரிலதி காயன்முதற் புங்கவர்கள் மாய்ந்துபட்டார்
வீரியர்க ளென்றார் மெலிந்து. (229)

எங்குவிம்மல் மான மிரக்க முடன்வீரம்
ஓங்கு வெகுளிதுன்ப மொன்றொடொன்று தாங்கும்
தரங்க மெனத்தரையைத் தள்ளுகடல் போல
விரங்கிநின்றான் கண்ணீ ரெழ. (230)

திசைநோக்கும் சேர்ந்துநிற்கும் தேவர்தமை நோக்கும்
வசைநோக்கும் நோக்குமுடன் வாளைப் பிசையுங்கை
மீசைசுறுக் கொள்ள மிகவுயிர்க்கும் நாணிநிற்கும்
ஆசை படநகைக்கு மார்த்து. (231)

மண்ணெடுக்க வெண்ணும் வரவானை மாய்க்கவெண்ணும்
எண்ணுமுயிரைக்கணத்தி னெற்றவெண்ணும் பெண்ணென்ற
பேரைப் பிளப்பனெனப் பேசும் பிறங்குபுண்டீச்
சாருமெனச் சிந்தை தவித்து. (232)

ஒருவருரை யாருள்ள மோய்வா ருயிர்க்கார்
வெருவித் தகைந்துவிம்மு வேலை தருவனம்போற்
றோளா னெதிரிற் றுயர்த்தான மாலையவள்
வாளா வலறிவரு வாள். (233)

Koviloor Digital Library

மலைக்குவட்டின் வீழிடிபோல் வால்வளைக ளேங்க
முலைக்குவட்டி னெற்றி முனிந்து தலைக்குவட்டின்
செக்கரெனப் பங்கி செறிந்து விழவந்தாள்
உக்கசெம்பிற் கண்ணீ ருகுத்து. (234)

வீழ்ந்தா ளரக்கனடி மேற்றோ ணிலமடுக்கப்
போழ்ந்தாள் பெரும்பாம்பாய்ப் பொங்கினாள் சூழ்ந்தாய்
கொடியா யெனத்துடித்தாள் கூறியழுஞ் செய்கை
படியாள் பரிந்தாள் பதைத்து. (235)

மாட்டாயோ விக்காலம் வல்லோர் வலிதீர்க்க
மீட்டாயோ வீர மெலிந்தாற்றல் கேட்டா
யுணர்ந்திலையோ வென்னுரையை யோராய் மகனைக்
கணந்தனிலே கொன்றாய் கரைந்து. (236)

இந்திரற்குந் தோலா திருந்தமகற் பெற்றனளென்
றந்தரத்தா ரேற்று மளியற்றேன் மந்தரத்தோள்
வண்ணமகன் றன்னை மனிதற் கிரைகொடுத்தேன்
எண்ணமகன் றென்று ளெடுத்து. (237)

அக்க னுலந்தா னதிகாயன் தானுலந்தான்
மிக்க திறத்தரக்கர் வீடினார் மக்களினி
மண்டோ தரிமகனே வாய்க்குமோ வின்னொருகால்
அண்டாத திக்குவிசை யம். (238)

ஏதையா சிந்தை யினிலேற்றா யெண்ணிறந்த
கோதை யரக்கர்பட்டார் கூவாயோ பேதையாய்க்
காமம் பிடித்தாய் கருத்துற்ற சீதையினால்
ஏமம் பிடித்தா யினி. (239)

உம்பியுணர் வுள்ளா னுரைத்த வுரையோராய்
நம்பி குலக்கிழவன் நன்மைகொள்ளாய் கும்ப
கருணனையுங் கொல்வித்தென் கண்மணியைத் தீர்த்தாய்
தருணமினி யெண்ணமென்னை தான். (240)

Koviloor Digital Library

என்றுபல பன்னி யெடுத்தழைத்து மிக்கதுயர்
கன்றுபட்ட தாய்போற் கவல்வாளை நின்ற
வுருப்பசியு மேனகையு முற்றழைத்துச் சேர்த்தார்
பொருப்பனைய கோயில் புக. (241)

தான நகரத் தரக்கர் தலைமயங்கிப்
போனமக வார்போற் புலம்பினார் ஏனை
மகளிர்நிலை யென்னுவர் மாக மகளிர்
துகளிலருங் கொண்டார் துயர். (242)

தாரகலத் தண்ணல் தனிக்கோயில் தாசரதி
பேரவுல குற்றதுற்ற பேரிலங்கை யூரகல
மெல்லா மரந்தையுற்ற வேற்றடுத்த வார்கலிபோல்
பொல்லா வழுகை புரிந்து. (243)

அதிகாயன் வதைப் படலம் முற்றிற்று.

நாகபாசப் படலம்.

குழுமி யரக்கியர்கள் கூந்தல் விரித்துத்
தழுவியகை மார்பினெற்றித் தாழ்ந்து மழுதொழில்தான்
என்னனையுஞ் சிந்தை யெடுத்தவயிர்ப்புடையான்
தன்னனைய னிந்திரசித் தன். (1)

எட்டாய திக்கை யெடுத்துவென்று னின்றீடு
பட்டான்கொல் வேறென் பரிபவமுன் சுட்டான்
பதிகெடுத்த தூதன் பரவினனோ முன்னை
விதிகெடுத்த தேதென்றான் வேர்த்து. (2)

கேட்டா னதனைக் கிளத்தற்கு யாருமுடன்
மாட்டாது தம்மை மறந்துநின்றார் ஒட்டா
நெடுந்தேர் கடிதோட்டி நேர்ந்தான் பிதாமுன்
னடுந்தோள் வலியுடையா னுக்கு. (3)

Koviloor Digital Library

கண்டா னிறையாரிக் கைகூப்பி நின்றிவணி
னுண்டாய தென்னையென வும்பியரைக் கொண்டான்கால்
கும்ப னிகும்பனொடு கூறுமதி காயனுடன்
நம்பியரை யென்றா னலித்து. (4)

சொல்லாத முன்னஞ் சுடர்தூண்டு கண்ணுடையான்
பல்லா விதழதுக்கிப் பார்த்தான்விண் எல்லாரும்
போயினரோ வென்றான் புரியுஞ் சிலைக்கதிபன்
சேயனைய வீரன் தெருண்டு. (5)

ஆர்கொன்றா ரென்றான் அதிகா யனைத்தம்பி
நேர்கொன்றான் பின்னடுத்து நின்றவரை யூர்கொன்றான்
மற்றையவ ரென்றான் வளர்கயிலை சாய்த்ததினும்
வெற்றியவ முற்றான் விளித்து. (6)

கொன்றா ரவரோ கொலைசூழ் கெனக்கொடுத்தாய்
வன்றானை மானுடர்கள் வன்மைகண்டு மென்றேனும்
என்னைச் சினந்தடுத்தற் கேற்றிலையென் றான்மாக
மன்னைச் சினந்தடுத்த வன். (7)

அக்கனகு மாற்றனிலத் தாக்கி யரைத்தவனைப்
பொக்கமிகு தூதனெனப் போக்கினாய் மக்கட்
டுணையற்று நின்றாய் துயர்க்கேது வொன்றே
இணையற்ற வாழ்வினித்தா னென். (8)

என்னின்ற தாம்வினைத்து மெண்ணி யியம்பியுந்தாம்
கொன்னின்ற வெம்பிதனைக் கொன்றவனை யின்ன
நிலத்தின்று யாக்கையுயிர் நீக்கினா லன்றி
வலத்தின்று வாழ்வென்றான் மற்று. (9)

மாற்றா வுயிரெம்பி மாளவடு மானுடன்ற
னூற்றார் குருதிபுவி யுண்டிலதே லேற்றான்
இகலடுக்கு மிந்திரற்கு மேழைநான் றோற்ற
புகலடுக்கு மென்றான் புகைந்து. (10)

Koviloor Digital Library

வெங்கணெடு வானரத்தை வீற்றுவீற் றுயெடுத்து
மிங்கணடு மேலா மிலக்குவனைப் பங்கமுறச்
செய்திலனேல் வீரம் சிதைந்த தெனத்தேவர்
வெய்திகழ வென்றான் வெறுத்து. (11)

பாம்புற்ற வெம்படையும் பாசு பதத்தினொடு
தேம்பற் பிறைச்சென்னித் தேயேதி யோம்பித்
திரிந்தேற் குதவியது செய்யாது போமேற்
பரிந்தேற் குயிரேது பார். (12)

மருந்தாய வெம்பிதனை மன்னுயிர்கொண் டானை
விருந்தாய் மறலி விரும்பேற் பெருந்தேவர்
கூடிச் சிரிக்கவெனைக் கோமானி ராவணற்கு
நாடிச் சிறக்குமக ளு. (13)

ஏகா விதுசெய்தெ னின்னலடச் செய்யவெந்தைக்
காகாத தென்று மடையலரை மாகார்
வரிவில் வளைக்கின் வருசேகென் றெண்ணிப்
பொருதே னடுத்ததுதுன் பு. (14)

என்றாற் பணிந்தங் கிலங்கிலைவா ளேத்தெடுத்து
மொன்றாங் கவச முடலேற்றிப் பொன்றாக்
கணையடுத்த புட்டிலது கட்டிவில்லைக் கொண்டான்
இணையடுத்தா ரில்லா னிசைந்து. (15)

வயிரவரை கொண்டு மலரடுத்த தேவன்
செயிரிவர விந்திரற்குச் செய்த வுயர்சிலைதான்
பண்டவனைப் போக்கிப் பரித்துக்கை கொண்டவலி
யண்டர்களைப் போக்கிநின்ற தாம். (16)

தோளடுத்த புட்டிலதுந் தோற்றிந் திரனடுக்க
வாளியுற்றான் கொண்டதுவா மாழியெலா மாளப்
புனல்வற் றிடினும் பொறைவற் றிடுமோ
கனல்வற் றிடாத களிப்பு. (17)

Koviloor Digital Library

பல்லா யிரமாப் படைக்கலங்க டேவர்பயந்
தெல்லாருந் தந்த திணைமேரு வில்லாளன்
தந்த விரிஞ்சன் தடுக்கா தளித்தவெலாம்
சிந்தை விரிஞ்சுகொண்டான் றேர்ந்து. (18)

நூறு யிரமாளி நோன்மை தருசீயத்
தேறுக வாயிரந்தா னேற்றிழுக்க மாறுக
வோரிலங்கை யொப்ப துயர்ந்த விரதமதைப்
போரிலங்கக் கொண்டான் புனைந்து. (19)

பொன்செய் சிறைய புனிதக் கலுழனுக்கும்
மின்செய் மழுவான் விடைக்குமே பின்சென்
றறியாத தாகு மமரர்க் கரசைச்
சிறியா னெனச்செய்த தேர். (20)

ஏயாத் தனிப்போரி னேற்றுவரு மிந்திரன்றன்
சாயாத் தனிவலிமை சாய்த்தவன்றே ளாயாத்
தழும்பேறச் செய்வீரன் சார்ந்துவரு மென்று
கொழும்பேய்க ளார்க்குங் கொடி. (21)

அத்தேரி னேறி யதையொப்ப தாயிரந்தேர்
ரொத்தேறிச் சேமமதா யுற்றுவெம்போர்ப் பித்தேறி
வந்தானெத் தேவரையும் வாட்டும் வலியுடைய
கொந்தான தாரான் குறித்து. (22)

அன்னா னொடுசென்ற தானவிகற் றானைதனை
யென்னா வியம்பரிதா மேற்றமுனி நன்னான்
மறைதெரிந்தா னற்பதெனு மாவெள்ள மென்றான்
குறைதெரியாச் சேனைக் குணிப்பு. (23)

தூபக்கண் கோறனொடு தொல்லமரிற் றோலாத
மாபக்க னுந்தேரின் வண்டிலுறத் தாமக்
குடையுயர மீது குறித்தவனை யோங்கப்
படையுயர வந்தான் பகைத்து. (24)

Koviloor Digital Library

தேரா யிரகோடி சேர்ந்தடுத்துத் தேறிவரப்
பேரானை மேலிரட்டி பேரவரத் தாரார்
புரவிக் கடலடுக்கப் போர்த்தானை கூட
விரவிக் கடலிவந்தான் வேய்ந்து. (25)

நின்றா னிலக்குமண நேர்களத்தை நீங்ககிலன்
பொன்றினவன் போகவினிப் போரடுப்பான் வென்றி
அமரர்க்கா நல்லரச னூற்ற னுலைத்த
சமரத்தா னுகுமென்று தான். (26)

யாரிவனின் வந்தா னடுத்தியம்பு வாயென்று
வீரவில்லான் கேட்க விபீடணன்றான் ஆரியசீர்
இந்திரனோர் போர்கடந்த யேற்றமிக்கான் போர்வலிது
சுந்தரனே யென்றான் றுதித்து. (27)

எண்ணினவை சொல்வே னெனக்கருளு மெம்பெரும
கண்ணனைய வானரர்கள் காத்திடத்தா னண்ணும்
துணைவ ரொடுபொருத றாயதெனச் சொற்றான்
இணைவருவா ரில்லாற் கெடுத்து. (28)

மாருதிநற் சாம்பனொடு வானரத்தார் மன்னனொடு
தாரைமகன் நீலன்முதற் றார்வீரர் நேர
உடனடுக்கப் போர்புரித லுற்றதர மென்றான்
மடனடுக்கப் போகா மனன். (29)

பல்பதி னுயிரம்பேர் பான்மை யுளதேவர்
எல்லையிலா ரோடெதிர்த்த விந்திரன்றா னெல்லை
யிடைந்தோடி னுன்மரண மெய்தாத தன்மை
அடைந்தா மமிழ்தவன்மை யால். (30)

இனித்தான் மறையுமோ விந்திரன்றன் றேளிற்
றனித்தான பாசத் தழும்பு குனித்த
தனுமன் றனையென்று லன்னவன்போர் வன்மை
தனுமன்று னென்னத் தகும். (31)

Koviloor Digital Library

என்று னிறைஞ்ச விளையவள்ள லின்சொலது
நன்றாக வென்றவுட ஞடினன் குன்றான
மாருதியுந் தம்பி வரன்முன் னரக்கனுடன்
பேருதிறல் கண்டான் பிரித்து. (32)

கூற்றமுடன் கண்புதைப்பக் கோத்தெழுந்து வந்தடுத்த
ஆற்ற மொடுதுணிவு முற்றிருந்தான் மேற்றிசையாம்
வாயில்விட்டுக் காற்றெனத்தான் வந்தணுகி னன்விசையின்
மாயமுற்றான் செய்கை மதித்து. (33)

அங்கதன்றான் முன்ன மறிந்தவ் விடத்தமர்ந்தான்
துங்கவன்றேண் வானரர்கள் சுற்றினர் செங்கதிரோன்
மைந்தனங்கு சென்றான் வரச்சேனை சுற்றிவரச்
சிந்தையன்பு கொண்டு சிறந்து. (34)

இருதிரையார் கார்க்கடல்க ளேற்றிரண்டு திக்கும்
பொருதொழிலை வேட்டார்த்துப் பொங்கி வரும்போல்
மனத்தெதிர வாம்சினத்தான் வந்தவிரு சேனை
கனத்தெதிரி லேற்கும் கடுத்து. (35)

கண்ணால் மனத்தாற் கருதித் தெளிந்துவரு
மெண்ணாற் பெறும்பயனை யெய்துமென நண்ணி
அடுத்தா ரிமையோர்கள் அங்கனைய ரோடு
முடுத்தாங்கு வானத் துகந்து. (36)

ஒத்திரண்டு தானை யுடற்றுவதற் குற்றழியின்
அத்தனையாம் வீரர்சத்த மார்கலிபோ னத்தொலியும்
நாமுரசி னோதை நடுக்கலால் வானவர்கள்
தாமுரணார் காதையடைத் தார். (37)

எற்றினவாய்ப் பற்றி யெரியுங்க ளெய்மினென
வுற்றனவாய்ச் சொல்லவரு மோசையனை முற்றும்
கடையுகத்தி னடியிற் காந்துஞ் சிலையும்
அடையுமொலித் தாக வடுத்து. (38)

Koviloor Digital Library

கற்பட்ட காமரக்கள் காலவேல் கோலிவரு
விற்பட்ட பாணத்தால் வீழ்வீர ரெற்பட்ட
தாமுடலி னுவிரண்டு தானவளச் சேனைகளும்
போமுடைந்து போரும் பொதிந்து. (39)

எழுத்தொடரு மாமரத்தா லேற்றமுற்ற சேனை
விழுத்தலைமுற் றுஞ்சிதரி வீழ்ந்த பழித்த
சினவரக்கர் பேராக்கை சிந்திக் கழுத்தின்
இனமிரக்கி யாடு மிசைந்து. (40)

வெட்டுந் தலையனவர் வீசு நரம்புமேல்
முட்டுமிரத் தங்குரங்கின் மொய்யுடலுன் தட்டும்
விரிவனந்தான் தீர்ந்தபினர் வேறடுத்த கட்டை
எரிவனவாய்க் காணு மிசைந்து. (41)

பிடித்தனவி ராக்கதரைப் பேராற்றற் றோளால்
ஒடித்தனகா லாலுதைத்த வுந்திக் கடித்துக்
கழுத்தறக்கை யாலெடுத்துக் காந்தி யரைத்த
முழுத்தவலி மந்தி முனிந்து. (42)

வாள்கொண்டு வானரத்தார் வார்கழல்க ளார்க்கவரு
தாள்கொண்டு வெட்டித் தலைதுணித்தார் தோளைப்
பிரித்தா ருடலைப் பெருந்துண்ட மாக்கிக்
கரித்தார் நிருதர் கடுத்து. (43)

மரங்கொண்டி ராக்கதர்கள் மாமலைகள் போன்ற
சிரங்கொண் டுயிரைச் சிதறிக் கரங்கள்
கழலொடியக் காதுவன கண்டகண்ட பேரை
அழலொடியல் வானரந்தா மார்த்து. (44)

சுடர்த்த பொறிகள் சொரியவரு கண்ண
அடர்த்த மரமற்ற வாங்கை யுடற்றலையில்
வேலுருவ வுய்த்தோர் மிடற்றைக் கடித்துடனே
கோலிவிளி வாகுங் குரங்கு. (45)

Koviloor Digital Library

அடர்ந்தமலை தன்னை யசனியே றென்னக்
குடைந்தமழை போற்றும்பிக் கும்ப மிடந்துபொழி
எதிலவா லூளை யெடுத்து மிகுத்துண்ட
காதிவரு மாகரடி கள். (46)

கொலைமதத்த யானையின்மேற் கோரப் படைமேல்
வலமணித்தேர் மேல்வாளின் வந்து சிலையின்
குடுமிச் சிரத்திற் குதித்தேறித் தாவும்
கடுமிக்க வானரங்கள் கண்டு. (47)

தண்டெடுத்தி ராக்கதர்கள் தாக்குவதி னுன்மிகுந்த
துண்டடுத்த தாமுடலைத் தூவினவாய்க் கொண்ட
மலைபோற் குரங்கு மடிந்தபிணக் குப்பை
அலைபோய் மடுக்கு மடுத்து. (48)

பணியார் பதாகையென்றும் பல்லுளைமா வென்றுந்
தனுவாளி வேல்தண்டு தானே சினவென்றி
மாவென்றுந் தேரென்று மாருதிதான் தாக்கவரு
கோவென்ற சேனையென்னு கும். (49)

பொங்கிவரு தேர்புரவி பூட்கை நிருதரெனச்
சங்கையில்லா வண்ணந் தனிக்கடலாம் அங்கதன்றான்
மாமரத்தைக் கொண்டடிக்க மாளும் படைக்குழுவிற்
றாமிருக்குங் கூற்றந் தகைந்து. (50)

தாக்குதிசை தோறுந் தலைமயங்கித் தம்மினுற்று
றாக்குகரி தேர்புரவி றூழில்செய்ய வாக்கும்
செருவிதனைக் காண்முனிவர் தேவர் சுரர்போர்
பொருவிலதா மென்றார் புகழ்ந்து. (51)

எடுத்தா ரரக்க ரிரிந்தார் குரங்கார்
தடுத்தார்க டாக்கித் தலைவர் மடித்தார்
அரக்கர் பொடித்தார் அடுத்தனைய வீரர்
குரக்குவரர் காத்தார் குறித்து. (52)

Koviloor Digital Library

சூலமழுத் தாங்கித் தொடிப்புயக்க ணூலுடனே
மூலத் துலகையுண்ணு மூர்த்தியென நீலனுற்று
நின்றழிதா னின்ரு னிகர்பாசக் கையுடனே
மன்றலணி காலன் மதித்து. (53)

காற்றனலோ நீரோ கருது மெனக்கரத்தி
ஞற்றலினுற் செய்சமந்தா னுகுமெனிற் கூற்ற
மெனக்குதித்துக் கொல்லுமதிப் பேற்ற குமுதன்
தனைக்குறித்துச் சொல்வதெவர் தாம். (54)

மறிகடல்சூழ் வைப்பின் வரன்வாளி சென்று
செறிமரமே நின்றமற்றும் செப்பும் குறியுடைய
காமரங்க ளெல்லாங் கடுத்தெடுத்து வீசிநின்ருன்
பாமருங்காங் கிர்த்தியிட பன். (55)

வாம்பரிமான் றேர்மதமா வாளெயிற்ற ராமரக்கர்
பாம்பெனவாம் வெய்யோர் படத்தொலைத்தான் சாம்பன்
கொலைத்தொழிலைக் கண்டுடைய கோவடுத்து நின்று
மலைத்தொழியார் தேவர் மதித்து. (56)

பொருபரிகள் சூழ்திரைதாம் பொற்றேர் கலமாய்
இருமகரம் யானையென வேற்ற கரிய
கடல்கலக்கு மத்திற் கனன்ருன் பனசன்
அடல்கலக்கும் வீர னறிந்து. (57)

மயிந்தன் துமிந்தன் வளரெருவை வேந்தர்
நயந்தவர ரொத்தார் நலிந்தார் கயங்குடைந்த
வீரக் களிறொத்தான் வெற்றிக் கவைய:னடு
மேருவொத்தான் கேசரியாம் வேந்து. (58)

படைத்தலைவர் கூடிப் பரிந்தடுத்த போரில்
அடைத்த பிணக்குப்பை யாகத் தடுத்தான்
வரமருவு மாநிருதர் மாண்டகண்டு வந்தான்
தரமருவு மிந்திர சித்தன். (59)

Koviloor Digital Library

மேருமலை யொத்த விசையவில்லை நாண்பூட்டிச்
சாருமலை யொத்த தமரத்தா னேருமலை
யென்னவரு தேரா னெதிர்த்துவரக் கண்டுவணை
நன்னகரார் நாவொடுங்கி னார். (60)

சிங்கமுந்தி யாமுழக்கத் தேர்கடவி வந்ததென
அங்கரிந்த வானவர்க ளஞ்சவே சங்கமுற்ற
நாகமென வாங்கணைகள் நாட்டினான் கோட்டிவரு
நாகமென வாஞ்சிலையி னான். (61)

சுற்றுகவி வீரர்விடு தொன்மரங்கள் பன்மலைகள்
இற்றபொடி யாயுதிர வெற்றியே வெற்றிக்
கணைகடலை கொள்ளவுயிர் காயத்தி னுக்கி
அணைகடலி னுக்குமுட லம். (62)

முழுத்தமொன்றின் வெள்ள முடியத் தடிந்து
கழுத்தகைகால் கண்டமுற்ற கண்டும் எழுத்தொடரும்
தோளால் மலைவீசித் தோன்றி யுடன்வீழும்
நாளாற் குறைவா னரம். (63)

விழிக்கின் விழிகூடு மீளுமேற் பின்னும்
தெழிக்குமெனி னுவுன்னிற் சிந்தை பழிக்கினுடன்
மேனிதனைச் சூழும் விசையன் விடுகணைகள்
ஊனிதனைச் சொல்வதுமென் னும். (64)

மொய்கணையின் மாரி முடித்தவகை கண்டிலர்கள்
எய்விடத்து நாணிசெவி யேற்றதன்றி மெய்யடுத்த
வானரங்கள் வீழ்ந்தநிலை வானவர்கள் கண்டடுத்துத்
தானிரங்கி வீழ்ந்தார் தவித்து. (65)

கண்டமுற்ற வானரரைக் கண்டிரவி காதலன்றான்
கண்டமுற்றுங் கோபக் கனலுடையான் மண்டி
விழித்தான் மராமரத்தை வீசினான் யேசிப்
பழித்தா னெதிர்த்தான் பகைத்து. (66)

Koviloor Digital Library

உடைந்தமுதன் மைப்படைக ளோடலுற்ற கண்டு
கடைந்தமுதின் முன்விடமாய்க் காந்தி யிடைந்துபின்னிற்
சென்றபடை போற்றிச் சிறந்தபடை கால்தளரக்
கொன்றபடை யாக்கினன் கோ. (67)

சுற்றுபடை யோடத் துரந்த மராமரத்தான்
எற்றிவால் கண்டா னெடுத்தவில்லான் நெற்றி
தலையிற் சரத்தாற் றடிந்தான் மரத்தை
யுலையப் பொடித்தா னுருத்து. (68)

அக்கணத்தின் மாருதியு மாலமெனச் சீறிவந்தான்
இக்கணத்தி னேற்றிழியு மென்றடுத்தான் தக்குன்றை
வீசின னன்னன் விடுத்தசரத் தாற்பொடித்துப்
பேசின னின்ன பிரித்து. (69)

நில்லடா வுன்னை நினைத்துச் செருவினுற்றேன்
வில்லெடாய் நின்று விழைந்தடுத்தாய் கல்லும்
மரமெடுத்து வந்தென் வலிகடக்க நின்றாய்
தரமடுக்கா யென்றான் தகைந்து. (70)

வில்லெடுக்க வுண்டுசில வீரரினி யுங்கட்குக்
கல்லெடுக்க நின்றதுவுங் காணலாம் புல்லெடுத்த
போரடுத்தோர் நாங்களலேம் போரிற் சிறந்தவெற்றிச்
சீரடுத்தோர் நாங்களென்றான் தேர்ந்து. (71)

என்தலைமைப் போரோ விலக்குவனோ வுன்றந்தை
தன்தலையைப் போக்குந் தனிவள்ளல் மன்தலைமைப்
போரிற் கருத்தோ புகன்றபடி செய்துமென்றான்
சீரிற் றிறத்தோன் தெழித்து. (72)

எங்குநின்றான் சொன்ன விலக்குவனென் தம்பியெனும்
சிங்கநின்றாற் கொன்றுயிரைச் சேர்த்துவைத்தான் அங்கவனை
மாய்த்துமுனி வாற்றவந்தேன் வானரங்க ளோடடர்ப்பின்
ஏய்த்ததிற லென்றா னெடுத்து. (73)

Koviloor Digital Library

ஆரும் படைவீர ரன்றியொரு வில்லுடனே
தேறிநின்று நும்மைச் சிறந்துணிப்பன் வாருமுடன்
வானோ ருலகருடன் வந்தாலு மின்றொருநாட்
டானேபோ ரென்றான் றகைந்து. (74)

என்றெடுத்துப் பாண மெழுநூ றிருநூறும்
குன்றெடுத்த மாருதிமேற் கொட்டினான் சென்றுருவ
வாளெயிறு தின்று வலிய மலையெடுத்துக்
கோளரிபோ னின்றுகுறிக் கும். (75)

தும்பியுல குள்ளவெலாந் தோன்றியொன்றாய் வந்திடினும்
வெம்பு மடங்கலொன்றை வென்றிடுமோ நம்பிதம்பி
வந்தலைக்கு முன்தரிக்க மாட்டா துயங்குவையே
லிந்தமலை காவென்றா னேற்று. (76)

செருப்பயிற்றுங் கையான் செலவிட்ட குன்று
பொருப்புநிகர் சாலிநிலை போக்க நெருக்கிப்
பொடிப்படுதெனச் சென்று பொடியா யுதிர்ந்த
முடிப்படுதென்னை யென்றான் முனிந்து. (77)

விலங்கலொன்றி னான்றெடுத்து வீசிவரு காலை
சலங்கொண்ட வஞ்சன் றருக்கி வலங்கொண்ட
மேருவொத்த மாருதிதோள் மீதா யிரங்கணைகள்
சேரவிட்டான் சிந்தை செயிர்த்து. (78)

ஒன்றடுத்த தென்ன வுயர்பகழி யூடுருவக்
குன்றடுத்த தோளான் குலுங்கினான் வென்றிபுனை
மாருதிதான் தேருமுனம் வந்தடர்த்தா னீலனவன்
வாருதிதா னென்ன வரைந்து. (79)

நீல னொருவரையை நேர்கையி னாலிடந்து
மேலெழுதீ மீச்செல்ல வீசினான் ஆலமென
வந்தமலை தன்னை வரவாளி யாற்பொடித்தான்
சந்தமலைத் தோளரக்கன் றான். (80)

Koviloor Digital Library

ஊகமெங்கு மோட வுயரமர ருள்ளமெலாம்
சேகடைய மேருவினும் திண்மைகொண்ட வாகம்
வெளியாய்க் குருதிநதி வேறாகச் செய்தான்
களியானை யன்னான் கடுத்து. (81)

நெற்றி யடுத்தும் நிலமார்பு தோண்மேலும்
புற்றிநுழை நாகமெனப் போர்வாளி தெற்றிவர
வாளெயிறு தின்று வருகுருதி வாரியுற
ஆளரிபோல் வீழ்ந்தா னடுத்து. (82)

மற்றுமுற்றார் தோண்மார்பு மாரி யெனப்பொழியும்
கொற்றமுற்ற வன்கணையாற் கோடலுற்றார் பெற்றிகண்டு
வள்ள லிளைய வரனறிந்து மிக்கதுயர்
உள்ளலைந் தோது முருத்து. (83)

பிழைத்ததுவாங் கொள்கை பெருந்தலைவ ரெல்லாம்
உழைத்தார் குருதிவெள்ளத் தோய்ந்தா ரழைத்திவனைப் [ன்
பாடணைந்தாய்ச் செய்யாது பார்த்திருக்கி னென்னையென்று
வீடணன்பாற் றம்பி விளித்து. (84)

அய்யவீ தன்னதுவே யாயிரகோ டித்தேவ
ரெய்தினு நீடுண் டிரிந்ததலாற் செய்திலர்கள்
இன்னு னடலை யிசைந்துநீ தீர்ப்பினன்றி
யென்னகு மென்று னெடுத்து. (85)

என்பதனைக் கேட்டவுட னிந்திர வில்லுடனே
பொன்பொருவு மேகமது போல்கின்றான் முன்பனைப்பார்த்
தின்று திராம னிளவ லெனச்சாரன்
சொன்னனி ராவணிக்க து. (86)

நீயா னிளவலிடைச் செல்வதற்கு முன்செல்கென்
றேயும் படைத்தலைவ ரெங்கட்கு நாயகன்றன்
மைந்தனவற் கொன்றாய் மடிப்பே முனையென்று
சிந்துவெனச் சூழ்ந்தார் தெழித்து. (87)

Koviloor Digital Library

கோடி யியைந்துவரு கூட்டத்தார் திண்டேரும்
ஆடற் களிறுபரி யார்த்துமண்டி மூடினார்
மூடினார் தம்மை முறையாய்த் துணித்துவெற்றி
சூடினான் தம்பி தொடர்ந்து. (88)

விட்டனவாம் பாணம் விடாதன வீரர்மார்
பட்டனப தாகைப் படிகொட்டைச் சுட்டுத்
துரகம்போர் தீர்த்துத் தொடையானை சாய்த்தும்
உரகம்போ லாகு முருத்து. (89)

உலக்குனர்கள் தம்மையெண்ண வுற்றடுத்த விண்ணோர்
கலக்குனர்கள் முற்றுமெண்ணைக் காணார் விலக்குகணை
மாரிகண்டு தம்பி வலியவில்லிற் றன்மேகம்
மாரிகண்ட தென்றார் மதித்து. (90)

கையற்றார் காலுங் கழுத்துங் கவசமற்றார்
மெய்யற்றார் சால விளிவுற்றார் மையற்
கரிதேரும் வாசியற்றார் கண்டோடி னார்கள்
அரிதேற மற்றைவிலங் காய். (91)

வற்றுகடல் நின்ற மலைபோல் மருங்கெவரும்
சுற்றினர்க ளின்றிநின்ற தொல்லையோன் முற்றும்
இனமன்னுந் தேரா னிலக்குவன்முன் வந்தான்
அனுமன்னுந் தேர்ந்தா னடுத்து. (92)

தோளாதி யென்று தொழுதான் சிறந்தேற
மீளா ரமரர் விசயமுற்றார் கோளாகும்
வாளிதமைத் தூர்த்தார் வரத்தார் மிகுத்தபலத்
தாளியிரண் டென்ன வமைந்து. (93)

இடித்தார் சிலைநா ணிடிந்ததிசை யெங்கும்
வெடித்தா மலைபிளந்து மேன்மேல் பொடித்த
பொறியுலக மெங்கும் புரிந்த கணைகள்
செறியுநிலை யுற்றுச் சிறந்து. (94)

Koviloor Digital Library

அம்பினுட னம்பறுக்க லாகாக் கணைமிக்க
வெம்பொறிகள் விண்ணில் விரிந்தோங்கச் செம்பொறிகள்
தம்பமுற்ற வேலை கரந்து செறிந்தவெனின்
இம்பருற்ற தென்று மிசை. (95)

அரியினஞ்சார் தேரு மனுமானுஞ் சாரி
விரியவர வூர்திரிந்த மேலோர் எரிகணைதாம்
எங்குஞ் சுழல விருவர் நிலைதேரார்
பொங்கிவரு நாளொலியொப் பும். (96)

நாண்பொருவு விற்கையவர் நந்நூல் நவின்றகல்வி
மாண்பெருமை யார்நவில வல்லார்கள் சேண்பெரிதாய்ச்
சென்றடுத்த தேவர்களுஞ் சிந்தை கலங்கினர்
அன்றடுத்த போர்த்திறத்தை யாய்ந்து. (97)

என்செய்தா ரென்செய்தா ரென்றியம்பு வாரின்ன
முன்செய்தா ராரென்பார் முற்றறியார் கொன்செய்தார்
வீர ரிவர்செய்கை விண்ணோ ரறிந்திலரே
லாரறிவ ரன்னா ரகம். (98)

ஆயிரமாங் கோடிபல்ல மண்ண லரக்கனெய்தான்
ஆயிரமாங் கோடிகணை யாலறுத்தான் ஆயிரமாம்
நாகக் கணைதொடுத்தா னடி யரக்கனையன்
வேகக் கணைதொடுத்தான் மேல். (99)

கோட்டித் தலைவாளி கோடி யரக்கன்விட்டான்
கோட்டித் தலைகோடி கொண்டடித்தான் மீட்டுமொரு
கோடியம்பு தொட்டான் குணமி லரக்கனவன்
கோடியம்பு தொட்டடித்தான் கோ. (100)

கங்கபத்தி ரங்கோடி கைவிசைத்தான் மொய்யரக்கன்
கங்கபத்தி ரத்தினவல் காத்தடுத்தான் திங்கள்
சமைத்தவரு பாதி சரத்தா னரக்கன்
அமைத்ததம்பி யத்துணைகாத் தான். (101)

Koviloor Digital Library

கோரைத் தலையம்பு கோடி யரக்கனெய்தான்
கோரைத் தலையம்பிற் கொண்டதம்பி பாரைத்
தலையடுத்த கோடிகணை தாக்க வரக்கன்
நிலைகெடுத்தா னன்னகணை நேர்ந்து. (102)

தாமரைப்பூ வாளி தருக்க னரக்கன்விட்டான்
தாமரைப்பூ வாளியினுற் றம்பியட்டான் வேமனத்தான்
வச்சிரத்தாம் பாணம் வழங்கினுன் தம்பியுடன்
அச்சரத்தாற் காத்தா னடைந்து. (103)

அஞ்சலியாம் பாண மரக்கனைந்து கோடியெய்தான்
அஞ்சலிபா ணத்தறுத்தா னையனவன் மிஞ்சிவரு
குஞ்சரக்கன் னங்கோடி கோத்தான் கொடியனுடன்
அஞ்சரத்தாற் றம்பியட்டா னூர்த்து. (104)

எய்யவரு வாளி யியைந்த வுலகமெலாம்
மொய்கணையா யுற்ற முழங்குகடல் பெய்கணையால்
கோபம் பிறந்ததல்லாற் கூறு மிருவர்க்கும்
சாபம் சிறந்ததரத் தாம். (105)

வீழிக் கனிபோல் மிகுத்தனுமான் மேனிமுற்றும்
சூழத் தனுவளைத்துத் தோன்றினுன் ஊழிவரு
செந்தீயாய்ப் பாணம் செறித்தா னிலக்குவன்றன்
கொந்தீயுந் தார்த்தோள் குறித்து. (106)

முற்கொண்டான் தீயன் முனிந்தா னெனத்தேவர்
சொற்கொண்டார் வானரமன் றேனென்னுங் கற்கொண்ட
மாமலைமேல் நெய்த்தோர் வருமருவி யாய்க்கண்டார்
மாமுனிவர் சிந்தை மலைத்து. (107)

எறுதிறற் சிந்தை யிலக்குவன் கைவாளி
நூறுநூ றேவி நுடங்குளமா வேறுபடக்
கொன்றுன் கொடியறுத்தான் கூறுங் கவசமட
நின்றுன் பகழி நிறைத்து. (108)

Koviloor Digital Library

காளமே கத்தைக் கதிரோன் றடுத்ததெனத்
தோஃறடுத்த தாங்கவசஞ் சூழ்வே நீள்பவள
வல்லி நிமிர்ந்தவென வாளிவரு வாயடுத்துப்
புல்லிநிறை வாமிரத்தம் போர்த்து. (109)

பொன்னுலவு தேர்மடங்கல் போனநிலை யானதினும்
மின்னுகொடி சாரதியும் வீழ்போதும் தன்னிறத்து
வாளி யடைபோது மாற்று வலியுடைய
மீளியிவை சொற்றான் விழைந்து. (110)

அந்தரனோ வல்ல னறியதிறல் விண்டுவன்றேல்
மன்னரனோ வேதன் மதிக்குமோ வன்னரெனில்
நம்பதிக்கண் வந்து நலியும் வலத்தினரோ
வென்பதனைச் சொற்று னெடுத்து. (111)

வாய்நெருப்புக் கால வருகுருதி வெள்ளமுகத்
தீய்பொருப்பாய் நின்றவுயிர் தீர்ந்திடினு மோய்விடந்தான்
இல்லா னிமைக்குமுன மேறிஞ னுயிரமா
செல்லாயிடிக் குமடற் றோர். (112)

ஆசையெங்கு மாகி யடுக்க வருவெம்போர்
ஓசை யுருத்திரனு மோங்கவுடல் கூசவர
வெண்ணுமொரு கோடி யெடுத்த கணைவீசி
விண்ணைவெளி யின்றாய் விடும். (113)

அத்திரத்தி ஞக வனகனுந்தா னுயிரமாம்
பத்திபட வெய்யும் பலகணைதாம் சித்திரத்திற்
சிந்தி யிராவணன்றன் சேயற்கொ ராயிரந்தான்
முந்தித் தொடுத்தான் முனிந்து. (114)

ஆயிரங்கொள் பாண மடுத்தவுட னுற்றரிய
காயெரியி னெய்யெனப்பின் காந்தியே தூயன்
சுடர்நெற்றி தன்னிற் றுயர்த்த கணைறு
றடர்வெற்றி யான்விடுத்தா னங்கு. (115)

Koviloor Digital Library

நெற்றியுற்று நூறு நெடிதாங் கணைகளுடன்
உற்றிடத்து மேதொன்று முன்னுதான் மற்ற
வலியோன் வரைமார்பின் மற்றுமொரு நூறு
தலையோங்கு பாணம் விடுத்தான். (116)

நூறுகணை மார்பி னுழைய வதனுலே
யூறுமிகு சோரியினு லுள்ளிடைந்தான் தேறும்
துணைவில்லை யூன்றித் துயர்பொருத நின்றுன்
இணையில்லா வீர னிசைந்து. (117)

புதையு மணியிெனுடு பொன்னுருளை யச்சும்
சிதையப் பரியனைத்துந் தீர வதையதனுல்
மற்றுமொரு கூற்றென்ன மாருதிதான் சென்றுதைத்தான்
வெற்றிதரு தேரை விளித்து. (118)

பேயா யிரம்பூண்டு பெய்யுமணி செய்யவொளி
யேயா விரதமிசை யேறினுன் தூயான்
சுடர்த்தோளி லம்பதெனுந் தூயகணை விட்டான்
அடர்த்தோண் மலையா மவன். (119)

ஏறியுட னேறி யிழிந்துதரை யாவதன்றி
வேறுசெய்யான் வீரனுடன் வெய்யவனும் ஆறடுத்த
கோடி பகழியுடன் கொட்டிவரு மாயிரந்தேர்
வீடலுறச் செய்தான் விரைந்து. (120)

ஆசிமொழி கூறினு ரார்த்தா ரமலர்மலர்
வீசிமொழி கூறினுர் விண்ணவர்கள் தேசுமிகும்
உத்தரியம் வீசி யுகந்தார் தரமடுத்த
நித்தனியல் வெற்றி நினைந்து. (121)

அக்கணத்தி லுகிவரு மாயிரத்தொ டாயிரமாம்
மிக்கவெங்கண் வெய்யவர்கள் வீரனுடன் ஒக்கவின்ப
மோர்வழியி னூனு ருடனடுத்து முந்தினர்கள்
சேர்வழியிற் சிந்தை திகைத்து. (122)

Koviloor Digital Library

தேரார்க்கும் வீரர் சிறந்தார்க்கும் செம்முகத்துக்
காரார்க்கும் வீரர் கணக்கிலராம் சீரார்
பரிவீரர் வீரமணி பற்றுகால் வீரர்
தரியாது சூழ்ந்தார் தடுத்து. (123)

பார்த்த திசையெல்லாம் பன்மழைகள் கூட்டமுடன்
போர்த்தவா னாகவிடி போர்த்தெழல்போ லார்த்தடுத்த
வோசையொடு வெம்படைக ளோங்கிவிடு மோசையினால்
ஆசையொடு விண்ணேயடைத் தாம். (124)

ஆளி மிகவார்த்த வாளரியு மார்த்தனவாம்
கூளி மிகவார்த்த குஞ்சரமும் வாளியொடு
தேரார்த்த மண்டிலத்தாற் சேர்ந்தடுக்குந் தூளியினால்
நேராம் பிணங்க ணிறைந்து. (125)

வந்தணைந்த வாளரிபோல் வாவி வருதேரின்
இந்திரனை வென்றவர னேறினான் சிந்தி
வருகணையாற் றிக்கை மறைத்தான் வரதன்
ஒருகணையாற் றீர்த்தா னுறுத்து. (126)

சுற்றுகின்ற வாகித் தொடர்ந்த படைவீரர்
எற்றுகின்ற வெய்தி யெறிந்தனவும் மற்றுதிர்ந்த
வோரா யிரந்தலைக ளோர்சரத்தி னாலுருளத்
தாராருந் தம்பிசிதைத் தான். (127)

குடர்கிடந்த பாம்பெனவாய்க் கோண்மதியி னாகும்
திடர்கிடந்த சிந்திவரு தேர்கள் படர்கிடந்த
பல்படைகொள் கையார் பரந்து கிடந்தனர்கள்
தொல்கடலி னாகத் தொடுத்து. (128)

குண்டலங்க ளாரங் குலவு மணிக்கோவை
கண்டமணி நாணுங் கவசமுடன் சண்டமுற்ற
மாருதவான் வீச மருவித் தலத்தினுகும்
சீருதவு விண்மீனுச் சேர்ந்து. (129)

Koviloor Digital Library

அரக்கன் மகனை யருட்கடலா னூறிக்
கரக்க வெதிர்பொருது கண்டோர் சிரக்குவையால்
குன்றுதிறங் கண்டான் குறித்து வருகாலன்
நன்றுதிரங் கண்டான் நலிந்து. (130)

சுற்றிவர வால்கொண்டு தூவுந் துகைக்கும்விட்
டெற்றிவர வானி னெடுத்தெறியும் உற்றடுத்து
மோதுமுதை போடு முருக்குஞ் செருக்கிவரும்
வேதமுத லேறும் விடை. (131)

பார்க்கு முருக்கிவரும் பண்ணும் பகடதனாற்
றூர்க்கும் கடலார்தோள் தொட்டெடுத்தங் கார்க்குமுடன்
பண்ணிரத மாயிரத்தைப் பாங்கொருகை யாலடிக்கும்
அண்ணல் சரிக்கு மரி. (132)

மாவடுத்த யானையொடு வாளுடைய தானைதமைப்
பூவடுத்த நீரும் புனைதளிர்போற் றூவும்
பிசைந்து துகைக்கும் பெரியோன் பரியா
இசைந்தவலக் கூற்ற மெடுத்து. (133)

உரகமது பூண்ட வுருளை பொருந்து
மிரதமதொ ராயிரத்தை யெற்றிச் சரதம்
தரையடுத்துச் சாருந் தருமவுருவன்
விரைவடுத்த யானை விசைத்து. (134)

அவ்விடத்தி லாய்மருந்தா லாகி யழலடுத்த
வெவ்விடத்தை யுண்டவர்கள் மீண்டவென எவ்விடத்தும்
வீழ்ந்த வினைத்தலைவர் வேறுவரு தெவ்வடக்கி
வாழ்ந்தா ரெழுந்தார் மகிழ்ந்து. (135)

தேறினார் கண்ணெருப்பிற் சீறி யிளவலிடை
வீறினார் வந்தார் வியப்பெய்தி மாறு
மலைமரங்கள் கொண்டு மலைந்தார் சிறந்த
கொலைமறங்கொள் வீரர் குறித்து. (136)

Koviloor Digital Library

வாலிமைந்தன் கையின் மராமர மொன்றேந்திக்
காலின்வந்த வீரனை நீ காத்திடுவை போலுமிதே
யுன்னுயிரை யுண்பதென வோங்கி யுருத்தெறிந்தான்
மன்னுயிரைத் தாங்குதலை வன். (137)

ஏழித்த செய்த விதுவே தனதெழிலின்
சீரழித்த தாகுமெனத் தேவர்களி னூரழித்த
வோங்குவரைத் தோளை னுயர்தே ரழித்துகொடி
தீங்குவரை யச்செய்த தே. (138)

அந்த வரைவேலை யார்த்தெழுந்தா ராடினார்
சிந்தை மகிழ்ந்தார்க டேவரெலாம் தந்தைதந்தை
பண்டுற்ற செய்கை பரிந்து புரிந்ததென்றார்
விண்டுற்ற தோளை வியந்து. (139)

அழிந்து வருதேர்நின் றந்தரத்தி னன்றே
எழுந்து வருதேரி னேறிக் கழிந்துடனீ
போகலைநில் லென்று பொழிந்தான் கணைமாரி
மாகலையின் வல்லான் மதித்து. (140)

இந்திரன்சேய் மைந்தனை நீ யின்னுயிர்தந் தேகவென
வந்தடுத்துச் சார்ந்தவனை வானரர்கள் முந்தி
நெருக்கினார் போர்க்கு நிகரிலனைச் சூழ்ந்து
தருக்கினார் வந்தார் தடுத்து. (141)

மரத்தினொடு கல்லும் மடிந்த வரக்கர்
சிரத்தி னொடுயானை தேரும் வரத்தினுயர்
மாளிகையும் வாரி மறித்தா ரரக்கர்விடு
வாளியையுஞ் சிறி மலைத்து. (142)

அனைய வருகாலை யாயிரத்தி னேற்றம்
வினைய வரக்கர்களை விண்ணோர் நினையவரு
மாத்திரையிற் றீர்த்தான் மனைவாழ் வுறக்கமது
மாத்திவிர தத்தினுற்ற வன். (143)

Koviloor Digital Library

ஆனைதடந் தேருந்தன் னுருயிரைப் போலவரு
சேனைபரி தீர்ந்த செயல்கண்டு போனவென்றி
வல்லா னரக்கன் மதித்தான் மனமழன்று
செல்லாய்த் தெழித்தான் சினந்து. (144)

சீர்த்த தடந்தேரான் சில்லியந்தே ராரிருவர்
காத்தவடல் வீரர் களைக்கண்டான் ஆர்த்துநின்ற
தன்சேனை காணுன் தடுக்கா திரத்தவெள்ளம்
வன்சேனங் கண்டான் மருண்டு. (145)

அன்றயலி நின்ற வரக்கர் தமைநோக்கி
யொன்றவலி நின்ற வொருவில்லான் துன்றும்
படைநாலு பத்துவெள்ளம் பாறவட்டா னென்றான்
கடைநாளும் தீயாய்க் கனன்று. (146)

ஆயவர வீரர்சொல்வா ரைய வமர்த்தலையின்
நீயவரின் வெள்ளமந்த நேர்மையினுல் மாயக்
கணையிலாய்க் கொண்டு கடுத்தாய் சமம்போ
ரிணையிலா யென்று ரெடுத்து. (147)

வந்திவண்ணம் நேரவரு மாருதிமே லேறிவரும்
அந்திவண்ண னுயிரமா மத்திரங்கள் சிந்திநண்ணத்
தேவர்களை வென்ற திருவிலியும் நேரடுத்துத்
தாவுகணை கொண்டுதடுத் தான். (148)

ஆறடுத்த வேறுகணை யைம்ப தறுபதுடன்
நூறடுத்த வாயிரமே நூக்கினுன் உளறும்
உணர்வுநிலை தீர்த்து முயிர்தேறி னுரை
அணவுநிலஞ் சேர்த்தா னடர்த்து. (149)

கதிரடுத்த மைந்தனெடு காவலர்க ளெல்லாம்
உதிரமிக்க வெள்ளத் தொதுங்க வெதிரடுத்த
விந்திரசித் தென்பா னெரிந்துவரு தாவமெனக்
கொந்துசரம் விட்டான் கொதித்து. (150)

Koviloor Digital Library

உளையா வுடல மொசிய வரக்கன்
கிளையா மிருவர் கெடவும் அளவில்லாச்
சேனைமிக்க தீர்த்தான் திருமாற் கிளையமைந்தன்
சோனைமிக்க வாளி சொரிந்து. (151)

தெரிகணையின் மாரிபெய்யத் தேர்சினைக்கை மாவும்
பரிகணையப் பட்டதனைப் பார்த்தா ரிருவர்களும்
நின்றார்கண் மற்றை நிருதரெனும் பேருடையா
ரொன்றார்க ளோடினா ரோய்ந்து. (152)

ஓடி யரக்கர்தண்ணீ ருண்ணசையி னுவுலர்ந்தார்
தேடிமுகில் பிழிந்து தேக்கினார் நாடிவரு
புண்களினீர் பாயப் புலர்ந்தார் சிலர்சிதைந்தார்
கண்களினீர் பாயக் கலுழ்ந்து. (153)

வெங்கணைக ளாற்றிறந்த மெய்யர் விளிவின்றிச்
செங்குழலின் கற்றைத் தெரிவையுடன் பொங்கும்
சயனத் தடுத்துத் தழுவியுடன் சேர்ந்தார்
வியனுற்ற பொன்னுலக மீது. (154)

பொறிப்பகழி மார்பினொடு போனார் புகுந்து
மறிப்பவரு சேயர்தமை மற்றும் குறிக்கொள்ளு
மென்றுரைத்துக் கூற்றை யெதிர்நோக்கிச் சென்றடைந்தார்
நன்றுரைத்து நின்றமர ணம். (155)

தாமரைக்கண் வள்ளறம்பி தன்மையிதே லிவ்வூரும்
வேமரைக்க ளாத்தரக்கன் வீதன்மெய்யே மாமரக்கான்
குன்றினா ராதல் குறித்த செயலென்று
பொன்றினார் போனார் புகைந்து. (156)

வரையுண்ட மேனி மருமத்து வாளி
யிரையுண்ட திர்க்க னிறப்பாம் பிறையுண்ட
பாலடுத்த வுள்ளம் பரிந்து பிறர்க்குரையார்
மாலடுத்து வீழ்ந்தார் மறிந்து (157)

Koviloor Digital Library

தேரிடைச்செல் வார்புரவி செங்கண் சினந்துவரு
காரிடைச்செல் காலிற் கரப்பர்சில ரூரிடைத்தான்
செல்லா ருயிர்மேற் சிறந்தவன்பாற் போரடக்கச்
செல்லா ருயிர்ப்பார் சிலர். (158)

நொய்தடுத்தி ராவணியின் நோன்மை தனைநோக்கி
வெய்தடுத்துக் கொல்லும் வெகுளியால் எய்திவரு
கூற்றினு மம்பாற் குறித்த கவசத்தை
மாற்றினன் தம்பி மதித்து. (159)

கவசத்தை வீழ்த்தவுடன் காக்குநிலை யின்றி
அவசத்தை வீழ்த்து மளவும் துவசத்தாம்
தேர்விரவித் தூண்டிச் சினத்தின் முடித்துமெனத்
தார்விரவு வீரர்தடுத் தார். (160)

மாருதிமே லையன் வரைமார்பு தோண்மேலுந்
தேரிருவர் நின்றுகணை சிந்திடலும் ஆரியனும்
வாகைவில்லுந் தேரும் வருபரியுஞ் சாரதியும்
போகவொல்லை செய்தான் பொறுத்து. (161)

இருவரிறு வில்லா ரெழுமுனையின் றண்டார்
உருவரையார் மாருதிமு னுற்றார் பொருவரியார்
அண்டிப் புடைத்தா ரனுமா னவருடைய
தண்டைப் பறித்தான் தடுத்து. (162)

தண்டவன்கை யாகத் தரிக்கார் விரித்தபயங்
கொண்டவன்மை யோடக் குணித்தனர்கள் உண்டுவந்த
செஞ்சோற்றை யெண்ணார் திருமாது சென்றனராம்
நஞ்சேற்ற வெண்ணார் நலிந்து. (163)

காற்றசைத்த காரணத்துங் காலங் கனத்ததினுங்
கூற்றசைத்துக் கொள்ளாத கொள்கையினு மேற்றவுயிர்
பெற்றா ரெழுந்த பெருமை வலிமையுட
னுற்றா ரெழுந்தா ருருத்து. (164)

Koviloor Digital Library

அங்கதனும் நீல னனக னருக்கன்சேய்
கொங்கதனுந் தாரார் குறித்தவர்கள் சிங்கதனு
வீரர்வந்தா ரெல்லாம் விளித்து மலையேந்திச்
சேரவந்தார் சீற்றஞ் சிறந்து. (165)

அத்தனையோர் குன்ற மளவி லசனியென
வொத்தனைய தொன்ற வொருங்குவிட்டா ரித்தனையோ
செய்கையும தென்று சிறந்தவர வில்லுடையா
னெய்கையுறச் செய்தா னுவன்று. (166)

மரங்களொடு கல்லு மழையாய் வழங்கி
நெருங்கினரைக் கண்டு நிகர்வில் சரங்கள்
துணையாகக் கொண்டான் றுணையாகச் சென்று
னிணையாகக் கொள்ளா வினன். (167)

வாழ்வுதரும் வேத மனுமுதல நூலடுத்த
வேழ்விதரு வேதியர்கள் மேன்மையெலா மாழிவர
னென்றதம தாமுணர்வை யேற்காதா ருள்ளமென
நின்றதம மெங்கு நிறைந்து. (168)

நாக மனையநம்ப நாழிகையுங் காலடுத்த
பாக மதனிலிவன் பட்டானே லாகுமன்றி
யாகாய முற்று லரிது சயமென்றான்
வாகாய வீடணனு மன். (169)

அத்தனையாம் வீர ரனுமா னுடன்மேலும்
எத்தனையோ கோடிகளை யெய்யநின்ற வித்தகஞ்சேர்
வில்லிதனைக் கொல்ல விரும்பி யிளவீரன்
சில்லிதனைத் தீர்த்தான் சினந்து. (170)

அழித்திடுதேர் வீழுமுன மம்பிறெடு வெம்பி
உழைத்திவர்கள் வெல்லாமு னேங்கிப் பிழைத்திலராய்ப்
பாசத்தாற் கட்டிப் படுப்ப னெனமீது
மோசத்தாற் கிட்டு முனிந்து. (171)

Koviloor Digital Library

பொன்குலா மேனிப் புனிதனொடு போர்புரிந்தான்
வன்கலாஞ் செய்தான் மனம்வேறாய் மின்குலாம்
விண்ணடுத்தான் வீரன் விரைந்தவித மென்னையென
வெண்ணடுத்தார் வானோ ரிரிந்து. (172)

தாங்கிநின்ற வில்லான் தழுவிவரு தூணியினா
னோங்கிநின்ற கோபத்தி யூற்றத்தான் நீங்குநின்றோர்க்
கெல்லாந் தலைமை யியைந்தா னிருட்பிழம்பின்
நில்லான் மறைந்தா னினைந்து. (173)

தணிவின்றிச் செய்த தவத்தும் வரத்தும்
தணிவின்றி வந்த தரத்தும் அனுவென்ற
மாயையுருக் கொண்டு மறைந்தான் ககனமதிற்
றீயையுருக் கொண்டான் றெரிந்து. (174)

வாங்கினான் மாமலரான் வான்கங்கை மாசடிலந்
தாங்கினான் சக்கரத்தான் தானெனினும் வீங்குவான்
தோளைப் பிணிக்கும் சுடர்நாக பாசமெனும்
காளப் படையைக் கரந்து. (175)

ஆயவரு காலை யமர்த்தொழிலை யஞ்சியப்பாற்
போயதென வீரர் புலத்தெண்ணி நாயகனும்
அன்ன நினைந்தான் அமர்த்தொழிலை மாற்றிநின்றான்
தன்னைநினைத் தானதவத் தான். (176)

அன்னவெல்லை தன்னி லனுமான்றான் விட்டிறங்கி
மன்னவில்லை யங்கதன்பால் வைத்தவான் தன்ன
வுடற்கணையை வாங்கினா னேங்குவான் மாயம்
படற்கணைவான் பாங்குமறப் பான். (177)

விட்ட திசையரக்கன் மேனாக பாசமதே
அட்டதிசை சூழிருளி னுங்கோடிக் கட்டினவாம்
காகுத்த னுக்கிளைய காளை வரையனைய
வாகொத்த தோளை மறித்து. (178)

Koviloor Digital Library

இறுகப் பிணிக்க விவையடுத்த போதும்
மறுகப் பிணிக்கவரு மாயம் குறுகுற்றும்
துன்பமிலா ஞகித் துயர்க்களத்தை நோக்கிமிசை
அன்பினெடு பார்க்கு மடுத்து. (179)

காலிசைக்கு மைந்தன் கணத்திற் களவுடையான்
மேல்விசைத்து வெம்பியெழும் வேலைதனில் மால்விசைத்த
பாசமது வாலிவால் பன்னு மிராவணன்மேல்
வீசியதாய் வீழ்ந்த விரைந்து. (180)

மற்றையவாம் வானரரை வாளெயிற்ற மாலரவம்
சுற்றினவாம் வச்சிரத்தாங் தோள்களையே இற்ற
செயலாய்ச் செறிந்தார் செயுமதனைத் தேரார்
மயலாய் மறிந்தார் மருண்டு. (181)

மலையெடுத்தல் போலெழுவர் மண்ணின் விழுவர்
தலையெடுத்து நோக்கித் தவிப்பர் அலையெடுத்த
வாலடித்துப் பார்ப்பர் வரன்தம்பி மாமலைத்தோள்
மேலடுத்துச் சேர்ப்பர் விழி. (182)

வீடணனை நோக்கி விளைவிதற்கென் னென்றுரைப்பர்
மூடிருளை நோக்கி முனிந்திடுவ ராடல்
நமக்கே தெனச்சிரிப்பர் நம்பிபுய நோக்கிக்
குமைக்காதென் னென்பர் குறித்து. (183)

ஆரிதனைத் தீர்க்கவல்லா ரஞ்சனைசேய் தாமென்பார்
மாருதியை நோக்கி மறுகுவார் வார்கழற்காற்
றம்பிசெயல் கண்டு தரிக்குமோ வள்ளலென்பார்
வெம்பிவிழும் வீரர் விரைந்து. (184)

என்செய்த சொல்லி னெனறழரக்க னெய்ததனை
மின்செய் துருமடுத்து வீழ்வவெனக் கொன்செய்த
வாளி பொறிபுகையும் வார்ந்து வருதலினல்
மீளியென வீழ்ந்தார் விசைத்து. (185)

Koviloor Digital Library

மலைத்தலைய காலமுற்ற மாரிக்கால் மோதத்
தலைத்தலைய வீழ்தண் டலையாய்க் கொலைத்தலைய
வாளிபடச் சீறி மறுகிவிழுந் தாரிரத்தந்
தூளிபட மேற்றொடர்ந்த து. (186)

ஆயிரத்த கோடிகணை யாகத்தி னுகவத்துப்
போயிரத்தம் பொங்கு பொழுதினுந்தான் றீயெரித்த
கண்ணுடையா னஞ்சனைசேய் கண்டுநடுங் குந்தம்பி
எண்ணுடையான் கொண்டசெய லேற்று. (187)

வேறடுத்த வீரரெலாம் வீழ்ந்தா ருருமைநிகர்
நூறடுத்த வாளி நுழைதலினால் ஆறடுத்து
நெய்த்தோர் பெருக நெடியமலை போலிருந்தான்
கைத்தோனி லாவங் கதன். (188)

கதிரவன்றன் மைந்தன் கனகமலை மேனி
எதிரவன்றன் பாணத்தா னேறி யுதிரக்
கடலுதிக்குந் தந்தையொத்துக் காண விழுந்தான்
அடலுதிக்குஞ் சிந்தை யயர்ந்து. (189)

வெப்பாரும் பாசமுற்று வெங்கணையி னுமெய்யன்
ஒப்பாரும் பேசற் குரித்தில்லான் தப்பாத
பாசத்தை மாய்க்கும் படிநினைந்தான் றன்னடியார்
பாசத்தை மாய்க்கும் பரன். (190)

அம்புநகு செங்கதிர வாய்ந்திழியு மாகமுற்ற
செம்புனலே வெய்யிலெனச் சீறியிருள் பம்பு
மொளிநாகம் பற்று முருவத்தி னேடு
வெளிநாடு சூரனுைத்தான் வேந்து. (191)

மயங்கினன் தம்பியுடன் மற்றொரு மண்ணின்
முயங்கினு ரென்றரக்கன் முன்னித் தயங்கிவரு
பேராற்ற லானுந்தன் பேருடலின் வாளியினுற்
சாராற்றல் கெட்டுமெலிந் தான். (192)

Koviloor Digital Library

சொற்றமுடிக் தேனுளைச் சோர்வுடற்குத் தீர்வுசெய்து
மற்றமுடிப் பாமனிதன் வாழக்கையெலா மிற்றமுடி
வானரங்கள் மாய்ந்தவென வாழ்மங் கலத்துடனே
தானரங்க மாளிகைவந் தான். (193)

ஏர்க்கடைஎ மாரி இலக்குவனு நின்றவா
நீர்க்கடைமே கத்தைவிட்டு நீங்ககிலான் வார்க்குடையாக்
கொங்கை மணிமுறுவல் கோதையர்கள் மாதர்விழிப்
புங்கமுறச் சென்றான் புகுந்து. (194)

ஐயிருகோ டிக்கதிக மானவர மங்கையர்கள்
கையிருகோ டும்விளக்காற் காந்திவரப் பையரவ
வல்குலார் பல்லாண் டடுக்கச் சிறந்துவந்தான்
கல்குலாந் தோளான் கதித்து. (195)

தந்தைதனைச் சார்ந்து தடிந்துவரு தன்மையினுஞ்
சிந்தைதனைத் தேர்ந்து திரிந்ததிடர் னொந்தேன்
மிகவென்று நில்லான் விரைந்தான்றன் கோயில்
தகவென்று மில்லான் தவித்து. (196)

இத்தாந் ததியின்ன லேற்றதொரு வீடணன்றான்
மத்தாந் ததியின் மயங்கினன் அத்தலையின்
வந்தா னலத்தான் மரணமெனக் கில்லையென்றான்
சிந்தா குலத்தான் செறிந்து. (197)

பாசத்தாற் றம்பி படியிற் படர்ந்தபடி
நேசத்தார் வீழ்ந்தார் நிலைநின்றேன் தேசத்தா
ரென்னையென்ன சொல்லா ரெனவேங்குஞ் சிந்தையினன்
தன்னையன்ன சொல்லியழு தான். (198)

கொல்வித்தா னென்றுலகு கூறுமோ தன்மகனை
வெல்வித்தா னென்று விளம்புமோ நல்வித்தாய்
வந்தடுத்தா னென்று வழங்குமோ வென்றுசிந்தை
நொந்தடுத்தா னின்று நுவன்று. (199)

Koviloor Digital Library

போர்புரியும் போழ்தே பொருவயிரத் தண்டதனால்
தேர்புரவி வீழச் சிதைத்தென்றன் வீரம்
தெரிவித்தே னல்லேன் சிறந்தவனைப் போலு
முருவொத்தே னென்றா னுலர்ந்து. (200)

ஒத்தலைத்து வீடி யுயர்ந்திலே னெஞ்சமதும்
கைத்தலத்தா னெல்லியெனக் காட்டிலே னத்தலைக்கும்
அல்லே னபயம் அளித்தோர்க்கு மாளல்லேன்
நல்லேனோ வென்றா னலிந்து. (201)

அனையபல பன்னி யரற்று மவனை
வினையபல மாக விழைந்தென் நினையவல
நெஞ்சமற நின்றுருகல் நேர்மையோ வென்றனலன்
வஞ்சமறச் சொன்னான் மதித்து. (202)

நீயிருத்தி யான்போய் நெடியோற் குரைப்பனெனப்
போயருத்திப் புண்ணியன்றன் பொற்சரணி னேயன்
வணங்கினான் வந்த வகையுரைத்தான் சிந்தை
யுணங்கினான் சீமா னொசிந்து. (203)

உரைத்துவரா னொன்று முணரானவ் வீரன்
கரைத்துவரு கண்ணீரைக் காணான் கருத்து
நிலையின்றி நின்று நிகரில்லாத் துன்பம்
அலையொன்ற நின்றா னடுத்து. (204)

விம்முறுவான் சிந்தை வெதும்பினான் வெய்யதுயர்க்
கிம்முறைதான் செய்வதென வெண்ணகிலான்பொம்மெனவே
தானெழுந்து சென்றான் றனிக்களத்தி னின்றுயிர்த்தான்
வானெழுந்தோர் வாழ்த்தும் வரன். (205)

இழிந்தநீர் மேக மெறிகடலு மற்று
மொழிந்தநீர் வண்ண முடனாப் பிழிந்ததெனக்
காளிமையைக் கொண்ட கரும்போர்வை சேர்ந்தவென
வானுலக நின்ற தடுத்து. (206)

Koviloor Digital Library

ஆரிருளி னண்டிவரு மாயிரநா மத்தண்ணல்
சீரிருதீ வாளி தெரிந்துகொண்டு பாரில்
விடுத்த வுடனிருள்போய் மேலடுத்த சூரன்
கடுத்தவுச்சி யாம்போர்க் களம். (207)

புடைகுணபப் பொம்மல் பொருப்பாய்த் துவன்றி
இடைகுருதி யாறு யெழுந்து கடையுகத்தின்
காலமென வாங்களத்தைக் கண்டா னிபமழைக்க
மூலமென வாங்களித்த முன். (208)

பிணப்பெருங்குன் றாடும் பெருங்குருதி பேரும்
நிணப்பெருஞ்சே றாடும் நெருங்கிக் கணத்தினுற்றுத்
தாழ்ந்தோங்கி நின்றவெழிற் றம்பி தனைக்கண்டான்
வாழ்ந்தோங்கி னார்கருத்தா வான். (209)

உழைக்கு முயிர்த்தாவி யோயுமுடன் சோரும்
இழைக்கு மிலக்குவா வென்ன அழைக்குந்தான்
உய்யவகை யுண்டோவென் றேங்கும் பெருமுனிவர்
செய்யவகை தேறுந் திறன். (210)

தாமரைக்கை யாற்றளைத் தாங்குங் குறங்குதட்டும்
தூமலர்க்கண் ணேக்குந் துடிப்பறியு மேமுற்
றெடுக்குந்தன் மார்பினிடை யேற்றும் விடுக்கும்
படுக்குந்தன் பாங்கர்ப் பரிந்து. (211)

வில்வினையை நோக்கும் விசித்து வருபாசம்
வல்வினையை நோக்கும் வகைஞெக்கும் கல்லுவேன்
வேரோ டலகையெனும் வித்தகர்கள் சித்தமிசை
சீரோ டலவுகின்ற தே. (212)

வீரர்களைப் பார்க்கும் விதிபார்க்கும் வீரமிக்க
பாரச் சிலைபகழி பார்க்குமென்போ லாரிதனைப்
பட்டாரென் றேங்கும் பரவு கடவுளரை
நட்டாரென் றேங்கு நலன். (213)

Koviloor Digital Library

எடுத்தபோர் தன்னி லிவன்பாசந் தன்னை
விடுத்தபோ தெற்கு விளம்பிற் றெடுத்தவனைக்
கைதலையைக் கொய்வேன் கருதியுரை செய்திலையாய்
மெய்தலையா யென்றான் விரைந்து. (214)

அவ்வுரையைக் கேட்ட வரக்க னுரைசெய்வா
னிவ்வழியின் ஞன்போரு மேற்றறியோம் வெவ்வழிய
னன்னவகை தோற்ப தறிந்தவுடன் பாசத்தா
லின்னவகை செய்தா னெடுத்து. (215)

அதிகாயன் றன்னை யழித்தவுடன் வீரன்
மதிகா யரக்கன் வருவான் விதிகாய
வேற்பதுட னென்று னிவனடுத்தான் சேனைவெள்ளம்
காற்பதுட னென்று னலிந்து. (216)

ஈண்டடுத்த நம்சேனை யேற்றவெள்ளம் நாற்பதிறத்
தூண்டடுத்த பாணந் தொடுத்தடர்த்தான் வேண்டிவரு
போர்முடித்தான் பின்னர்ப் புகுந்தான் மடங்கலினு
லார்முடித்த வாயிரந்தே ரான். (217)

அனுமன்மேல் நின்றவள்ள லாயிரந்தேர் மாய்த்துத்
தனுமன்று னென்னவவன் றனை பணியென்றாய்
அன்னவனைப் பட்டானென் றுகப் பலவாளி
தன்னவனைத் தட்டான் றடுத்து. (218)

ஏவதுண்ட வாயா னிழிகுருதி யோடுநின்றான்
தாவதுண்ட தானைபடச் சார்பவனுப் போவதுண்டேல்
மாயம் புணர்ந்தாம் வகையுரைத்தேன் சூரியனும்
தோயம் புணர்ந்தான் றுதித்து. (219)

மாயத்தி னுலிருண்ட மன்னுலகு வஞ்சனும்வான்
போயுற் றொளித்துவரப் பொற்பதனுல் மீயுற்றுப்
பாசத்தை விட்டான் பலித்த திவையென்றான்
நாசத்தை விட்டா னலிந்து. (220)

Koviloor Digital Library

பின்னூரவார் போற்றும் பெரும விவரெல்லாம்
இன்னுயிரார் பாசமது மிற்றவுடன் பொன்னுயிராம்
வந்தடுத்த மெத்தறத்தை மாபாவ மாய்த்திடுமோ
நந்தடுத்த வத்தவென்ற னன். (221)

யார்கொடுத்தா ரின்னதனை யாதுசெயிற் றீருமிது
சீர்கெடுத்த காரணந்தான் செப்பென்றான் சூர்கொடுத்த
அன்னவகை தன்னை யடுத்துரைத்தான் வீடணனு
மின்னவகை யென்ன வெடுத்து. (222)

ஆழியங்கை வீர வகலிடத்தை யாக்குமண்ணல்
வேழ்விவந்த தீசன் விழைந்துகொண்டான் தாழ்வுகொண்ட
சிந்தையுடை யின்னவற்குச் சேர்ந்த தவத் தளித்தான்
எந்தையுமை பாக னிசைந்து. (223)

அன்றுரத்த வாற்றலினு லாயிரங்கண் ணனவனைப்
பின்றுறத்தான் றேள்பிணித்த பெற்றியதே நன்றும்
அனுமானை முன்னமொன்ற வாக்கியதா மென்றால்
அனுமான மென்னையென்று ஞய்ந்து. (224)

தான்விட்டா லாகுஞ் சதுமுகன்று னென்றாலும்
வானிட்டோர் மாற்றரிது மண்ணோரென் னூன்விட்
டுயிர்போக நின்றதிலை யுண்மையிவை யென்றான்
செயிர்போக நின்றசிந்தைச் சேய். (225)

ஈந்துளவாந் தேவ ரிரிய வுலகமெலாம்
தீந்துளவாச் செய்திலங்கை சிந்தியுடன் காய்ந்தவர்கள்
சுத்தம் படச்செய் துணிவென்றான் றேன்றுபகை
யத்தம் படச்செய் யரன். (226)

வரங்கொடுத்திப் பாசம் வழங்கி யவர்வந்
திரங்கிடத்தான் செய்வே னிலையே லுரங்கெடுத்து
மூன்றுலகு மின்னே முடிப்பேன் புரம்படுத்த
சான்றவனி லென்றான் றடுத்து. (227)

Koviloor Digital Library

எம்பி யிறந்தபினு மேற்றிலங்கை போற்றரசே
நம்பி யறம்புகழை நாட்டவென்னே யும்ப
ருலகத்தார் நந்த வொழிப்பனெனச் சொற்றான்
கலகத்தார் சிந்தைகலக் கான். (228)

என்றலையச் சொல்லி யிடுக்க ணொருவற்கா
நன்றலைகைத் தீர்த்த னயமன்றா லென்று
நெடிதுயிர்த்து நின்றா னிகரில்லா வள்ளல்
படுதுயர்க்குச் சிந்தை பரிந்து. (229)

மீட்டுமிகல் வில்லான் விசய மிகுதோளைப்
பூட்டுமிகற் பாசம் புரியுமெனில் வாட்டிப்
படுப்பே னெனத்தெரிந்தான் பண்ணவர்கட் காக்கங்
கொடுப்பே னெனப்புரிந்த கோ. (230)

இத்தன்மை கண்ட விமையோர் மிகவஞ்சி
எத்தன்மை யண்டு மெனவேங்க அத்தன்மை
கண்டுபுடை நின்ற கலுழன் மிகக்கலங்கி
விண்டுபுடை வந்தான் விரைந்து. (231)

அசையாதான் சிந்தை யரவா லனுங்க
விசையா திசையுமென வெண்ணித் திசையானை
கண்டு நடுங்கக் கனகமலை போல்வருவான்
விண்டு நடுங்க விரைந்து. (232)

காதங்கள் கோடி கடைகாணுங் கண்கலுழ
வேதங்கள் கூறுவள்ளல் மேனிகண்டு சீதங்கொள்
வேலை யலையழுந்த வீங்கு மிருள்சிதர
ஆலமெலி வெய்தவந்தா னார்த்து. (233)

அல்லைச் சுருட்டிவெயி லாக்கித் திசையெங்கும்
வில்லைச் செலுத்தி விரைசோதி தொல்லைப்
பொருப்புநிக ராகப் பொருந்தினன் வந்தான்
விருப்புநிக ராகன் விரைந்து. (234)

Koviloor Digital Library

மின்பார் குணக்கெழுந்து மேக்கி னுறவெய்யோன்
தென்பா லெழுந்து திறலுற்ற அன்பாய்
வடபா லடுத்தவகை வந்தான் கலுழன்
அடல்பா லடுத்தவகை யாய்ந்து. (235)

பன்னுகர் கொண்ட பருமணியி னுமிழைதாம்
மின்னுக மெங்கும் விளங்கவே தொன்னுன்
பிரிந்ததுயர் தீரப் பெருமானைக் கண்டு
பரிந்ததுயர் வந்தடுத்தான் பாங்கு. (236)

முடிமேல் முகிழ்த்தகரன் முன்னவனை யன்பாற்
படிமேல் முகிலென்னப் பார்த்தான் அடிமேல்
விழுந்துபணி சிந்தை மிகுமன்பின் வந்தான்
அழுந்துபணி சிந்த வடர்த்து. (237)

வந்தாய் மறைந்து மலரோன் முதலமரர்
சிந்தா குலந்தீர் செயல்புரியு மெந்தாய்
கனக்கரிய மேனிக் கருணா கரனே
யுனக்கரிதென் னென்ரு னுகந்து. (238)

தேவாதி தேவ திருநான் மறைமுடிவே
மூவாத மூல முனிவர்தொழுங் கோவே
அடியேற்று வந்தார்க் கருள்வா யெனத்தான்
படியேற்று வந்தான் பரிந்து. (239)

சிருட்டிதிதி சங்காரஞ் செய்தற்குச் சிந்தை
யருட்டிகழு மூன்றுருவ மாணுய் தெருட்டியர
மேலோங்கு வார்சிந்தை மேலோங்கு வாயென்ருன்
மாலோங்கு வார்சிந்தை மன். (240)

என்றின்ன போத மெடுத்தேற்று வாணிறகர்
பொன்றன்று சோதி புடைத்தவிருள் நின்றன்னி
எண்ணினுன் வன்மை யெடுத்த புகழுடனே
பண்ணினு னன்மை பரிந்து. (241)

Koviloor Digital Library

வள்ளலெனு முத்தையா மைந்தனிரா மன்புகழை
உள்ளமதிற் கொள்ளு முயர்புலவர் விள்ளும்
பசிபோன தென்னப் பதகன்றன் பாச
விசிபோன முன்னம் விரைந்து. (242)

பல்லா யிரமாப் பரவி நிறைவாளி
செல்லா யிரமாச் சிதருற்றுப் பொல்லா
வடுக்க ளொடுநீங்கி வானரத்தார் வீரம்
முடுக்க வெழுந்தார் முனிந்து. (243)

தருமத்தின் செய்கை தழுவுந் திறத்தார்
உருமொத்த செய்கணையா லோய்ந்தார் கருமத்தின்
மெய்வைத்த மேலோர் விரும்பி யெழல்கண்டாற்
தெய்வத்தின் மேலாஞ் செயல். (244)

இளையா னெழுந்துதொழ வேற்றஅன்பிற் சேர்த்து
வளையாத சீர்த்தி வனைந்த கிளையாரின்
எல்லாருஞ் செய்யா ரெழுந்ததிறங் கண்டுரைத்தான்
வில்லாருங் கையான் விரைந்து. (245)

அய்யனியா ரெங்க ளருந்தவத்தி னுலிவணின்
எய்தி யுயிரளித்தா யெம்மாலாங் கையுறையைக்
கோடற்காஞ் சிந்தை குறித்தவனு மல்லையென்றான்
நாடற்காஞ் சிந்தையுற்றா னன். (246)

பொருளினித்தான் வேறு புரத்துண்டோ புந்தித்
தெருளினைத்தான் சொல்வதெனை செல்வம் மருளாம்
இருளினின்றுத் தீர்ந்தசெய லீதாகின் வாயால்
அருளினென்னு மென்றா னறிந்து. (247)

கண்டிலைமுன் கேட்கக் கடவதுவு மில்லையெம்பாற்
கொண்டிலைமுன் கேண்மை குறித்தசெய லுண்டிலையா
மென்னு முயிரளித்த வேற்றத்தா யெங்களினுற்
பன்னுசெய லென்னையென்றான் பார்த்து. (248)

Koviloor Digital Library

பறவைக் குலத்தரசன் பன்னுவான் முன்னு
முறவைக் குறித்தலிவ னெவ்வா மறம்வைத்தார்த்
தீர்த்தபின்னர்ச் சேர்வேன் திருமா லெனப்பணிந்து
சீர்த்தவிடை கொண்டான் தெரிந்து. (249)

ஆரியன்தான் சொல்வா னருளி னுயிருதவிக்
காரியந்தான் கொள்ளரன் கடைமையே மாரி
தனைநோக்கி வையந் தருவதெனை யென்றான்
தனைநோக்குஞ் சிந்தையடுத் தான். (250)

இறந்தா னிளவலென வென்தா யிரங்கும்
மறந்தா ருறங்குவார் வஞ்சர் அறந்தானும்
தந்தளித்த கையாய் நயந்தார்க்க வென்றுரைத்தான்
வந்தளித்த மெய்யான் மதித்து. (251)

விழைவானு னண்ணல் விரவார்க ளஞ்சக்
குழைவானன் சேடனுச்சி குன்ற மழையோடு
மாமலைகள் கீற வருமா திரம்பிளக்கத்
தாமலையி னார்த்தார் சரித்து. (252)

பழிப்பற்றாள் பாற்சிந்தை பாடாகிக் கண்கள்
விழிப்புற்றான் மேனி வெதும்பும் வழிப்பற்றும்
வல்லரக்கன் கேட்டான் மனமேங்கி நைந்தடுத்தான்
கல்லரக்குஞ் சிந்தை கலந்து. (253)

தாதைமொழி தன்றலையிற் றாங்குந் தருமவுரு
காதனெழில் நாட்டுசிந்தை நாயகியாள் சீதை
தனைநினைக்கும் பேதை தனைத்தவிர மற்றோர்
வினைநினைக்கார் தூக்கம் விலங்ந்து. (254)

சிங்கந்திரின் கர்ச்சனையாற் சீற்றமிகு சேனையென
வங்குற்றா ரன்னகரா ராம்போரின் மங்குற்றார்
சத்துருக்க ளென்றவுரை தானென்று மென்றுநக்கான்
பத்துருக்கொள் கண்டன் பதைத்து. (255

Koviloor Digital Library

இடிக்குமிரா மன்றனுக்தா னேற்ற வுலகம்
வெடிகுமிரா மன்றம்பி வின்னுண் அடிக்கவரு
மென்னிடிக்குங் காதை யியல்பினனு மானூர்ப்பு
மன்னிடிக்கென் சொல்வா மதித்து. (256)

அங்கதன்ற னூர்ப்பு மசனி யெனவடர்க்கும்
வெங்கதத்து நீலன்முதல் வேறடுத்துப் பொங்குவரர்
ஆர்த்தெழுந்த வோதையிக லண்டத்தை முற்றுவதாற்
சீர்த்தெழுந்தார் பாசம் சிதைந்து. (257)

என்பதனைச் சொல்லி யெழுந்தா னரக்கனுட
னென்பதெனுங் கோடியர்க ளூற்றுவரப் பொன்பொதிந்த
நல்விளக்க மேந்த நடந்தான் றொடர்ந்தமகன்
அல்விளக்குங் கோயி லடுத்து. (258)

தாங்கு துகிலார் சரிந்து விழுகுழலார்
வீங்குயிர்ப்பார் விண்பார்க்கு மேற்றனத்தார் தூங்கும்
விழியார் துளங்குநடை மேலடுத்தார் வந்தார்
வழியா மனந்தருற்ற வர். (259)

பானந் துயில்கனவும் பண்கனிந்த பண்ணையுற்ற
கானங் களிப்பொடுங்கக் கள்ளமுற்ற மீனடுத்த
வாட்கிணங்கு கண்விழித்தார் வானவர்கள் மாமகளிர்
தாட்கிணங்கு நூபுரத்தார் தாம். (260)

மழையடுத்த வாசமுற்ற மன்னு குழலார்
இழையடுத்த பொற்றனத்தை யேந்திக் குழைவடுத்த
நுட்பவிடை தந்தார் நுவலு மனந்தரது
தட்பவிடை வந்தார் தளர்ந்து. (261)

ஆர்ப்பொலியைக் கேட்ட வரக்கர் வெருக்கொண்டு
சீர்ப்பரவு சிங்கவொலி சேரிபமாம் வார்த்தனத்து
மாத ரிடியொலியால் மாழ்கரவ மாயிருந்தார்
ஆதரவில் லாதநக ரார். (262)

Koviloor Digital Library

அரக்கனடுத் தான்மைந்த ஞடகத்தா மாடம்
பொருக்காத புண்குமிழி பொங்கத் தரிக்காதான்
மாமடங்க லாலடர்த்த மத்தகச மாயடுத்துத்
தாமடங்கு தன்மகற்கண் டான். (263)

எழுந்து வணங்கா னிருகையுரி தேற்றித்
தொழுந்தகையை நோக்கித் துணுக்குற் றழுங்கினையோ
வந்ததென்னை யென்றான் மகனு மெடுத்துரைப்பான்
சிந்தைகன்றி வென்றி திகைத்து. (264)

உருவி யுரத்தை யுலப்பி லுதிரம்
பருகி வருபகழி பற்றச் செருகினவாய்க்
கண்ணெடுத்துப் பார்க்கும் கருத்துமில ஞகிவந்தேன்
எண்ணடுத்த மாயை யியைந்து. (265)

இந்திரன்றா னென்னை எறழ்கலுழப் பாகனெனை
கந்தரந்தா னிலன் கனல்போரில் நொந்து
நுவன்றதென்று முண்டோ நுவல்மனிதன் போரிற்
கவன்றதென்றான் சிந்தை கனன்று. (266)

இளையவன்றன் தன்மை யிதுவே விராமன்
விளையவந்த வின்மை வழங்கற் குளையுமனம்
மற்றதன்மை தேறும் வழக்குளதோ வென்றுரைத்தான்
உற்றதன்மை தேரு னுருத்து. (267)

வென்றதுவும் பாசத்தும் வேறடுத்த மாயையினும்
கொன்றதுவு மக்குரங்கைக் கொற்றவனை நின்று
னிராமனென்று லேற்கு மியல்பென்று மென்றான்
இராவணன்றான் சொல்வா னெடுத்து. (268)

வார்கழற்காற் றம்பி வயிரத் தடுத்த வில்லின்
பேரொலிக்கும் வானரத்தார் பேரொலிக்குங் காரொலிக்காக்
கம்பிக்க நின்ற கனத்த வெடியொலிதான்
நம்பிக்குக் கேளாதென் னும். (269)

Koviloor Digital Library

அய்யவெந்தன் பாசத்தா லார்ப்புண்டா ராமசனி
பெய்யவென்ற வேயாற் பிளப்புண்டா ருய்குனர்கள் [யோ
என்றுரைத்த துண்மையதோ வேற்றதெய்வம் பொய்யுரை
நன்றுரைத்தீ ரென்ரு னகைத்து. (270)

ஈது நிகழ் வேலை யெய்தியவை கண்டுவந்த
தூதுவர்கள் பாதந் தொழுதவுடன் யாது
நிகழ்ந்த வெனவரக்க னேரடுத்துச் சொல்வார்
புகழ்ந்தமனங் கொண்டு புனைந்து. (271)

பாசம் பிணித்துப் பகழியினுற் பட்டவரை
நேசம் பிணித்தவள்ளல் நேர்ந்துநின்றே எசத்தான்
எங்கிளைந்தான் கோவை யெரிப்ப னெனக்கலுழ
ஞேங்கிவந்தான் சிந்தை யுருத்து. (272)

அன்னவனைக் காண வரவும்பகழியதும்
சின்னமுற்றுப் புண்ணயர்வு தீர்ந்தவராய் முன்னே
வலியா ரெனக்களத்தின் வாய்ந்தடர்த்தா ரென்ருர்
சலியாத தூதர் தடுத்து. (273)

எற்றவலத் தாற்றலுடை யென்மகற்காம் பாசமதை
மாற்றவலன் தார்க்கியனு மற்றுமெந்த ஞற்றலது
நன்ருயிற் றென்ரு னகைத்தானி ராவணனும்
கொன்ருயிற் றுள்ளங் கொதித்து. (274)

உண்டுலக மேழு முமிழ்ந்தா னெனுமாற்றல்
கொண்டுலவு விண்டு குறித்தசமர் மண்டிலமாய்த்
தான்றிரிந்த போதென் றனிவலிமை கண்டிலனே
வான்றிரிந்தான் றம்பி மதித்து. (275)

கரத்திற் றிகிரியுடைக் கண்ணன் புரத்தி
னுரத்த பகழி யுறுநாள் சிரத்தடுத்து
வான்சிறையி னென்பகழி வந்தடுக்க நின்றடுத்த
தான்சிறுமை தேர்ந்திலன்வந் தான். (276)

Koviloor Digital Library

ஈண்டிதென்ஞ மேலு மிசைந்து முனமஞ்சி
மீண்டவரைக் கொல்வதுதான் மேலாகு மாண்டகைதான்
இன்றடுத்துத் தீர்த்த வியல்பென்ருன் மைந்தனவன்
தன்றடுத்த செய்கையுரைத் தான். (277)

இன்ஞெருநா ளின்றெ னெடுத்தசிர மம்போக்கி
நன்ஞெருவா நான்முகன்ற னற்படையால் வென்றுன்
மனத்துயரைத் தீர்ப்பேன் மகிழ்ந்தென்ருன் தந்தை
தனத்துயருங் கோயிலடுத் தான். (278)

நாகபாசப் படலம் முற்றிற்று.

படைத் தலைவர் வதைப் படலம்

ஆர்த்தெழுந்த வோசை யரக்கர் முரசார்க்கப் [டஞ்சேர்
போர்த்தொழிற்கண் வேட்கை புகுந்துமொய்த்தார் தார்த்த
மார்பனைத்தாம் வந்து வணங்கி விடையென்ருர்
போர்மனத்தார் போற்றிப் புகழ்ந்து. (1)

மாபெரிய பக்கனெடு வான்புகைக்கண் ணுன்தகைத்தான்
ஏபெரிய விற்கரத்தா ரேன்றவரைக் கோபெரியான்
போங்களித்தென் ருனுடனே போரானமை சேர்தூதர்
தாங்களித்துச் சொன்னூர் தரம். (2)

ஆனைபரி தேரரக்க ரானபடை போய்த்தனிமை
ஆனதனை நோக்கா ரடுத்தெண்ணுர் மானவன்றன்
வாளியெனும் வாயார் வரம்புகடந் தோடினவர்
ஆளியென வந்தனரென் ருர். (3)

அற்றவர்கள் கூற வடர்த்துவரு தாவமென
முற்றிவரு கோப முதிர்ச்சியான் பற்றிப்
பிடியுங்க ளென்றுரைத்தான் பேராண்மை முற்றும்
மடியுங் களத்தரக்கர் மன். (4)

Koviloor Digital Library

என்றலுமே கிங்கரர்கள் எய்தி யடுத்தெதிர்த்துப்
பின்றலினோர் தம்மைப் பிடித்தவரைக் கொன்றலினென்
மின்னுன வாளெடுத்து வெட்டுவீர் மூக்கென்றான்
மன்னுன வாளெடுத்த வன். (5)

அக்கணத்தின் வாளெடுத்த வாற்ற லுடைவீரர்
மிக்கணைத்த நாசிதனை வெட்டவெனப் புக்கபொழு
தன்றடுத்து வந்தா னனற்சொரியுங் கண்ணுடையான்
நன்றடுத்த மாலி நலிந்து. (6)

அந்தநவ மொன்று மறிந்திலநீ நிந்தைபுக
வந்தனவும் நம்வயிற்றா மட்டுண்டோ சிந்தைகன்றி
இந்திரனு மஞ்சி யிரிவ னெனவுரைக்கிற்
தந்திரத்தைச் சொல்வதென்னை தான். (7)

வருணனுற்றான் மாநடுக்கம் வந்து வணங்கிக்
கருணைபெற்று நின்றுயிரைக் காத்தா னிருணிறத்து
வஞ்சகரெங் குள்ளார் வரைந்தபடி செய்வதற்கு
நெஞ்சகமெங் காகும் நிகழ்த்து. (8)

பத்தனைய நான்காப் படுத்த பரப்பினவாம்
அத்தனையாம் வெள்ள மரக்கரற்றா ரொத்த
வொருமூவ ருய்ந்தா ருடனடுத்த வீரம்
வருமேவர் பங்கா மதி. (9)

பாசமது மிற்றதுவாம் பாதிக்கு மேலடுத்து
நாசமது முற்றதுவாம் நம்பிநின்றாய் பூசல்
முகத்துற்றான் கான்முளையும் மோதிப் பிரியும்
மிகைத்துற் றிவரைவெட்டல் வீண். (10)

வாழி யிலக்குவனும் வள்ள லெனமறுகி
ஆழி யரக்க ரடைப்பர்வழி எழு
கடற்றனையாம் நாசி கடுக வறுப்பாய்
விடற்றனையா ரேவர் விளம்பு. (11)

Koviloor Digital Library

தூதுவரு வீரன் றனைத்தா டொழுதன்னு
ளோதுசெரு வஞ்சி யுடைந்துவரு தீதிலராய்
நின்றவர்கள் பாதியின்மேல் நேரடுத்த மூக்கரிந்தா
லொன்றுவரா ரென்று னுருத்து. (12)

விட்டிலையாம் சீதை விழைவை யெனில்வீரர்
ஒட்டிவரு போரே தொருநாளே பட்டிலரேல்
நாசிதனை வெட்ட நணுகுவா யென்றுரைத்தான்
ஏசிதனைச் சிந்தை யெடுத்து. (13)

ஆறினராம் பின்ன ரழிந்து வருமன்னர்
தேறினரா யன்னசெயல் சிந்தித்தார் சீறிவரு
நெஞ்சினர்கள் செங்கண்ணர் நேரடுத்துக் கூறினராம்
அஞ்சினர்க ளன்றி யதிர்த்து. (14)

மன்னடுத்த நின்மகன்றான் வாடி மிகமயங்கி
மின்னடுத்த வானின் விரைந்தடுத்தான் கொன்னடுத்த
மாயமுட னெய்தியதால் வந்தடைந்தா னிந்நகர்
சேயமுட னென்றார் நினைந்து. (15)

இப்பகல்தா னென்றுகு மேற்று வருநாளை
முப்பகலி லாவி முடித்தடுப்பேம் வெப்பகலா
வெந்தழலின் வெந்தசெப்பு வெண்ணெ தனைவேய்ந்த
கொந்தழலி னென்றார் கொதித்து. (16)

விட்டனையா யெம்மை விடுத்தினியாம் வெம்போரும்
பட்டனர்க ளென்று படுத்ததொன்றோ கெட்டனர்கள்
என்பதனைக் கேளென்று ரேற்ற தமக்கிறுதி
முன்பதனைச் செய்ய முயன்று. (17)

அன்னவர்க டம்முடனே யையிரண்டு வெள்ளமெனும்
மின்னவரு கைப்படையர் மேலடுத்தார் சொன்ன
தொகைத்தகைமை யானை சுடர்த்தேர் பரியின்
வகைத்தொகையு மன்ன வரும். (18)

Koviloor Digital Library

நெய்யழலை யாக நெடும்பகையுஞ் சூரியற்கு
வெய்யபகை யாக விரைவோனும் பெய்யழலான்
மாலி பிசாசனொடு வச்சிரதந் தன்றானு
மாலமென வந்தா ரடர்த்து. (19)

என்றவர்க ளெல்லா மெழுந்துலக மீரேழும்
வென்றவனை லேவ விரைந்தார்த்தார் சென்ற
கரியடுத்த தேர்பரிகள் காண நடந்தார்
அரியடுத்த யானையென வாய். (20)

விண்ணை விழுங்கும் விரைதூளி விண்ணவர்கள்
கண்ணை விழுங்கக் கரைகாணார் கண்ணை
விழுங்கினவாஞ் சேனை விசயமது கண்டோர்
அழுங்கினர்கள் சிந்தை யலைந்து. (21)

காலாங் கரிநீர் கருதிவரு மேகமென
மேலாங் கொடிதிரையாய் வீசிவரப் பாலாங்
கடலடுத்த தென்னக் கருதும் படைகள்
அடலெடுத்து வந்த தடர்த்து. (22)

பேரி கலித்த பெரும்புவியைச் சூழவரு
மேரி கலித்த வியல்பென்ன மாரி
கலித்தவென யானை கலித்த திரையாய்க்
கலித்த பரிகள் கலந்து. (23)

எரிந்தெழுந்த பல்படையி னேற்றவொளி வீரர்
அருங்கலந்தான் மின்னொளிதேர் யானை பொருந்திவரு
பண்ணொளியுந் தாரொலியும் பாங்காய்ப் பரிதலினால்
எண்ணொழியுஞ் சூழ மிருட்டு. (24)

எய்திவரு சேனைதனை யீச னெதிர்கண்டான்
வெய்திவரு மாயையினால் வெற்றிதனைச் செய்துவரு
கோடணையும் வில்லவனே கொள்கை யுரையென்றான்
வீடணனுஞ் சொல்வான் விரைந்து. (25)

Koviloor Digital Library

முழைக்குலத்தாஞ் சீய முனிந்த தெனவே
புழைப்பிலவா யார்த்திடித்துப் பொங்கித் தழைத்துவரு
வாளிபெறும் விற்பிடித்து மாமலையார் தேர்வருவோன்
ஆளிபெரும் பக்கனென்றா னய்ந்து. (26)

சிகைக்கனலைச் சிந்துந் தெறுகட் டிறலான்
பகைக்கடலைத் தீய்க்குமனற் பாங்கான் புகைக்கண்ணன்
என்றெடுத்த பேரா னிடித்துவரு வோனென்றான்
குன்றெடுத்த தேரைக் குறித்து. (27)

பிச்சரொத்த தாய்த்திகைத்த பெற்றியினன் போர்த்திறத்தான்
முச்சிரத்த வேலான் முதற்றேரா னிச்சிரத்தை
யும்மதென்று வந்தா னுயர்வடுத்த மாவலியைத்
தம்மதென்ற வச்சிரதந் தன். (28)

காலுளைய சிந்தையதுங் காணாத வேகமுற்ற
வாலுளைய கந்துகமேல் வாய்மடித்தான் சூலம்
பிடித்து வருவான் பிசாசனென்பான் பல்லைக்
கடித்து வருவான் கனன்று. (29)

சூரியனைத் தாக்குபகை தோங்கொண்ட தேருடையான்
நீரியலைப் போக்கும் நெருப்பனையான் ஆரியமா
வேள்வித் திரப்பகைவன் வீரக் கரத்தெடுத்த
வாள்வித்திக் கொண்டுவரு வான். (30)

சாலிக் கதிரைநிகர் தானைப் புரவியினன்
கோலிக் கொடியதவக் கொள்கையினன் ஆலம்
வெருக்கொள்ளத் தேரடுத்த வீணன்றான் மாலி
தருக்குள்ளா னென்றான் றகைந்து. (31)

ஆர்த்தெரியி னருகு மரியினுறு பாற்கடலும்
கார்த்தெரியி ராக்கதராங் கார்க்கடலும் போர்த்தொழிலைச்
செய்யப் புலவோர் திகைத்தார் மிகைத்தமனம்
நையப் புலமை நலிந்து. (32)

Koviloor Digital Library

கல்லெறிந்த மந்தி கடையுருமிற் காலென்ன
வில்லெறிந்த சிந்து வியனரக்கர் பல்லெறிந்து
வீழ்ந்தா ருடல மிகுத்த தலைமலைகள்
தாழ்ந்தாகு மெங்குந் தகைந்து. (33)

கடம்பட்ட யானை கடுங்கா லிவுளி
தடம்பட்ட தேருந் தகர்ந்து தொடங்கித்
தவிப்படையச் செய்த தனியாழி வீரன்
கவிப்படையன் றௌெறியுங் கல். (34)

ஆண்டகன வில்லா ரடும்பகழி சேர்கரத்தார்
மாண்டகவி லாத வலியரக்கர் தாண்டும்
குலப்பரிவார் வீரர் கொடிப்படையாற் றீர்ந்தார்
நலப்பரிவார் சீர்வா னரர். (35)

சில்லிவரைத் தேரைச் சிதைத்துவரு சாரதியாம்
வல்லவரைத் தாமடித்து வஞ்சகர்கள் வில்லிளுெடு
கண்ட மிறப்பகட்டைக் காதுங் கவிக்குலங்கள்
மண்டியெரி கல்லின் மலை. (36)

வாலைப் பிடித்தடிக்கும் வானரத்தை மால்கரிகள்
காலைப் பிடித்தடிக்குங் கண்டகவி தோலைப்
பிடித்தடிப்பார் வல்லரக்கர் பேர்ந்துசிரந் தாவிக்
கடித்தடர்ப்பார் வல்லகுரங் கார். (37)

முற்படுத்த வானரங்கள் மூண்டடுத்து வீசிவரும்
கற்படுத்த வீந்தார் களத்தரக்கர் வெற்படுத்த
மேனி யரக்கர்புரி வெம்போரின் வானரர்கள்
ஆனி யடைந்தா ரடுத்து. (38)

தூபக்கண் வீரனுடன் தோன்றினுன் மாருதியும்
மாபக்க னங்கதன்பால் வந்தடர்த்தான் கோபக்கண்
மாலியொடு நீலன் மலைந்தான் பிசாசனுடன்
கோலியடுத் தான்பனசன் கூர்ந்து. (39)

Koviloor Digital Library

சூரியன்றன் சத்துருவுஞ் சூரியன்றன் புத்திரனும்
நேரியன்ற வேள்வி நெடும்பகைவன் ஆரியன்றன்
தம்பியுடன் சார்ந்தான் தனிவச் சிரதந்தன்
வெம்பிடபற் பாய்ந்தான் விரைந்து. (40)

வெங்க ணெயிற்றரக்கர் வீரர் கவிக்குலத்துச்
சிங்கமன்ன போர்த்தலைவர் சேர்ந்துடற்ற அங்காம்
அமர்க்களத்தி னெவ்வொருவ ராகி மலைக்கும்
சமர்க்களத்த லென்னுகுந் தான். (41)

இன்ன தொரு காலை யிரைந்து வெள்ளமெனச்
சொன்னதொரு வேலைதமைத் தொல்வீரன் அன்னசமத்
தாறுவெள்ளந் தீர்த்தா னடற்றம்பி காலுவெள்ளம்
பாறுகொள்ளப் பார்த்தான் பறந்து. (42)

உப்புடைய வுந்தி யுகிர மடுத்ததனால்
செப்புடையா மீன்குலங்கள் சேர்ந்தடுத்த பொற்புடைய
முத்தினங்கள் குன்றியென முன்றோன்ற வுற்றனவாய்ச்
சித்தம் திகைத்தார் செறிந்து. (43)

தத்துரத்த தாங்கடலுஞ் சார்குருதி யாற்றயங்கச்
சித்திரத்திற் பன்மணிகள் சேர்ந்தடுத்த வெஃத்தி
மதமலையா முத்தும் வளைமுத்து மொன்றாய்
விதமலையா தாகும் விரித்து. (44)

அதிர வருசெருவா மன்ன வளவில்
கதிரவனுஞ் சேய கரத்தான் எதிரவரு
வல்லிருளா குங்கரியை வாட்டி யுதிரவெள்ளம்
புல்லியுதித் தான்பொருந்து பு. (45)

அரக்க ரெனுமிருளை யண்ணல் துரக்கப்
புரத்திருளைப் பொன்னிரவி போக்கப் புரக்கும்
புனித ரிருவர் பொருந்து முலகம்
தனித மொடுநிறைந்த தாம். (46)

Koviloor Digital Library

நிலைகொளிரு ணீங்க நிலத்தினிடை நின்ற
மலையுங் கடலும் வருந்தத் தொலைவிலவாய்த்
தோன்றிவரு சோரிகடல் சோரும் பிணமலையா
யேன்றிவரு மெங்கு மெடுத்து. (47)

நிலந்துவன்ற செந்நீர் நிணமடுத்த சேற்றில்
தொலைந்தபொழு தம்பாகுந் தும்பி கலந்துவரு
தாமரையென் றாழுடுக்கத் தானே மலர்ந்தவெனப்
போமவர்கள் மாமுகத்தாம் பொற்பு. (48)

தேரினொடு யானைபரி தேவர் சிறந்துநிலைத்
தூரவரு மான மூலகமலை பேரவருங்
காலத்துக் கால்பொரலால் காண விழுந்ததனைப்
போலொத்துக் காணும் புலர்ந்து. (49)

மதிமுகத்து மங்கையர்கள் மன்னுகளஞ் சேர்ந்து
துதிமிகுத்த தங்கணவர்ச் சூழ்ந்து கொதிமிகுத்துப்
புல்லியணைத் தாகம் பொருந்து நிலைகண்டால்
வல்லியணைத் தாகும் மரம். (50)

வணங்கு மிடைமலையா மாமுலைசெங் கூந்தல்
அணங்கா ரரக்கியர்க ளானூர் கணவர்
பசுந்தலையைப் பற்றுபேய் பற்றித் தொடர்ந்து
விசும்படுத்து வீழ்வார் மெலிந்து. (51)

சுடரவளைத் தோளி தொடர்ந்தாள் கணவன்
உடரதனைக் கண்டு முரையாள் குடரீரல்
கண்ணுநரி கொள்ளக் கவன்றுயிரைப் போக்கினு
ளெண்ணுநல மின்றி யிரிந்து. (52)

பெரியவாட் கண்ணி பெருங்கணவன் றேலை
நரியலைத்தல் கண்டு நடுங்கி நெருங்கி
வணங்கினள் தாராத வன்மையாற் சிந்தை
பிணங்கினள் சோர்ந்தாள் பெயர்ந்து. (53)

Koviloor Digital Library

நலங்கொண்ட நெஞ்சுடையார் நற்றுணைவர் நாடி
விலங்கல் பிணக்குவையின் மேலார் வலங்கொள்
துணைபிரிந்த மாமயில்கள் தோன்றுவரை சூழ்ந்த
இணைதெரிந்தார் சிந்தை யிரிந்து. (54)

சிலவர் கணவர் செருவைச் சினத்தாற்
பிலவாய் மடித்துயிர்போய்ப் பெற்றூர் அலகில்லா
வெள்ளெயிற்று லாங்கலவி மேவுங் குறிபார்த்தும்
உள்ளமொத்து நைந்தா ருயிர்த்து. (55)

கவசமுற்ற தங்கணவர் கம்மடுத்துக் காணூர்
அவசமுற்ற மாத ரழிந்தார் துவசமுற்ற
தங்கூ ருகிர்க்குறிகள் சார்கவச நீக்கியதோள்
அங்கூரச் சிந்தை யறிந்து. (56)

மாரிதரு கண்ணூர் வயக்கணவர் தம்வயிரப்
போருடலை நாடிப் புகுந்துகளம் பேராம்
பிணக்குன் றிடைப்பிறந்த பேராற்றுச் சோரி
நிணக்குழியின் வீழ்ந்தார் நிரந்து. (57)

மிகைத்தெண்ணும் வீர மிகைமா ருதியும்
புகைக்கண்ணன் தானும் பொருவார் தகைத்தண்ணும்
கோபத் தடுத்தார் குறித்தவென்றி தோர்வையிலார்
தீபற்று மென்னச் சினந்து. (58)

அய்யஞ் சழல்வாளி யாடுங் கொடியனவன்
மெய்யஞ் சனைமைந்தன் மேனியின்மேல் எய்யும்
சிலைகொண்ட மேகமெனத் தீயான் வழங்கி
நிலைகொண்டான் சிந்தை நிமிர்ந்து. (59)

பாழிக் கடும்புயத்திற் பாணம் பரிந்துபட
வீழிக் கனிக்கண் மிகவெகுண்டா னாழிப்
பெருந்தேரைத் தீர்த்தான் பிரிந்த மனத்துத்
திருந்தாரைத் தீத்தாந் திறன். (60)

Koviloor Digital Library

சில்விப் பொருதேர் சிதையச் சிலையோடு
மெல்விற் பொலிவின் னெழுவான்றன் வில்லிற்ற
தாமிலக்கு வன்கணையா லன்றே தரைவீழ்த்தான்
காமனிக்கு வன்மையடுக் கான். (61)

மலையிற்கால் சட்டகத்தை மண்ணிலிட்டு மற்றும்
உலையக்கால் தன்னு லுதைத்துத் தலைதத்தக்
கொண்டெறிந்து தீர்த்தான் குறித்த பரிதிமுனம்
பண்டெரிந்து பார்த்தான் படித்து. (62)

மாபக்க னங்கதனு மாமலையைப் போன்மலைவார்
தீபக் கனற்சிமிக்க செங்கண்ணர் கோபத்தார்
கொல்ல நினைந்தடர்வார் கொண்ட திறற்போரைச்
சொல்லநினைந் தெங்காம் துணை. (63)

ஐம்பத் தொருகணையை யங்கதன்றன் மாவலத்து
மொம்பிற் புகவுய்த்தான் மெய்தொழிலான் வெம்பிக்
கனந்தான் சினந்தாங்கு கார்யானை யென்ன
மனந்தான் கொதித்தான் மதித்து. (64)

உளரோ டடுத்த வொளியோனை யுற்றுவரு
காரோ டடுத்த கதமுடையான் தேரோ
டெடுத்துயர்ந்த வகையதனு லெற்றினன் பாரிற்
கடுத்துயர்ந்த சிந்தை கனன்று. (65)

வில்லைச் செலவெடுத்து வீசி விழுந்தழியும்
எல்லிற் பொலிதே ரிடையிழியா சொல்லிற்
பிழையாத சூலமவன் பேர்மார்பின் விட்டான்
வழியாதுந் தேரு மடன். (66)

சூலமெனி னன்று தொடர்ந்து வருபெரிய
ஆலமென வொன்று மறிவுடையான் ஞாலம்
உடையா னதனை யொருகணையிற் றீர்த்தான்
கடையான் செயலைக் கடிந்து. (67)

Koviloor Digital Library

உளர்ந்தா னினையாமு னுற்றதது வாகக்
கிளர்ந்தா னிருகூறாக் கிட்டிப் பிளர்ந்தான்
உலையா துலங்கமு முற்றளர்ந்தான் வன்மை
தலையாக நாடுமங்க தன். (68)

மாமாலி தானும் வரனீலன் வானவர்தங்
கோமா னொடுதானர் கோனிகலே யாமாறு
தான்மலைந்தா ரென்றிமையோர் தாங்கரிய பூமாரி
வான்பொழிந்து நின்றார் மதித்து. (69)

கல்லொன்று நேர்ந்து கடாவிய காலையவன்
வில்லொன்றிற் கூறு விளைத்திடலுஞ் செல்லொன்று
வாளியொடு தேரினனு வந்தடுத்து நில்லென்று
கோளியொடு சென்றுநெருக் கும். (70)

அற்றத் தொழிலெய்த வக்கணத்தி னுகியடல்
மற்றப் புறநின்றான் வந்தணுகாக் கொற்றக்
குமுதனொரு குன்றுகொளாக் கூடித்தேர் தீர்த்தான்
அமிதமொடு நின்றாரை யாய்ந்து. (71)

தாளார் மரநீலன் தாக்கி விடுத்ததனை
வாளான் மடித்து வலித்தடர்வான் கோளாம்
வரைவைத்தாந் தோளை வலத்தவில்லி னோடும்
தரைவைத்தான் றம்பி தடிந்து. (72)

மின்போல வாளியொடு வேறடுத்ததோள்விழவும்
வன்போர் தவிராத வன்வலியை என்போல்வார்
போரன் றிதுவுமொரு புன்போ ரெனப்போனான்
வீரஞ் சிறந்தான் வெகுண்டு. (73)

நீர்வீரை யன்னான்ற நேரெதிர்ந்து தோன்றுதலும்
பேர்வீரன் வாசி பிடித்தவனைச் சோர்வீரம்
செய்தா னதுகண்டு சீர்சிறந்த போர்வீரர்
மெய்தான தென்றார் விரைந்து. (74)

Koviloor Digital Library

வேள்விப் பகைவனுடன் மேவி வெகுண்டடரும்
தோள்வித் தகனேர் சுடர்க்கணையால் வாழ்வித்
தனையென்று மார்பகலம் தாங்காது போழ
வினையொன்று வானுயிர்போம் வீந்து. (75)

மல்லற் றடமலைய மார்பன் வடிக்கணையால்
எல்லுற் றுயர்வேள்விக் கேற்றபகை வில்லற்றுத்
தேரற்று மார்பொடிந்து சேர்ந்த கழற்கண்டை
வாரற்று வீழ்ந்தான் மடிந்து. (76)

தன்றாதை தன்னைத் தடுத்து வலியதனால்
வென்றானை மாவிலங்கல் மேனியனைப் பின்று
வலத்துயர்ந்த வெற்றியனை வாட்டி வதைத்தான்
நலத்துயர்ந்த கோடரமன் னன். (77)

இடபன் றனிப்போரை யேற்று வருமவ்
விடவெங்கண் வல்லெயிற்றான் விண்ணிற் கடவிவரு
தேருடையான் தேரைச் சிதைத்தான் மலையதனால்
பாரடைய நின்றான் பகைத்து. (78)

திண்டே ரழியச் சிலைவிட்டுக் கையிலொரு
தண்டே ரழியாது தாங்கினா னுண்டோ
வுயிரென் றுறுத்தா னுருமென்னத் தீர்த்தான்
செயிர்கொண்ட தோளைச் சிதைத்து. (79)

அடியுண்டா னாவி யயர்ந்தான் குலைந்தான்
இடியுண்ட மாமலைபோ லிற்று முடியும்
தருணத்தின் வந்து தடுத்தான் பெரிய
அருணற்குச் சேட னறிந்து. (80)

கிடைத்தா னனுமான் கிளர்வா னதனை
அடைத்தான் றன்யாக்கை யதனைப் படைத்தானை
நீண்ட புகழானை நேர்மார் பினிலடித் தான்
கீண்டுபொடி சிந்தக் கிளைத்து. (81)

Koviloor Digital Library

எற்றிப்பேர் வானே யெடுத்த விடக்கையால்
பற்றிப்போர்த் தண்டு பறித்தெறிவான் வெற்றிப்போர்
கையெடுத்துக் குத்திக் கடியா னுயிர்முடித்தான்
மெய்யடுத்த வீரன் விரைந்து. (82)

காத்தோர் மரம்வீசும் கையான் கதமுடையான்
போர்த்தோர் புலிப்பனசன் பொங்கினன் கோத்த
குருதிப் புனல்பெருகக் கோத்தோ மரத்தைக்
கருதிப்புன் மார்பெறிந்தான் கண்டு. (83)

கார்மே லினனோ கடன்மே லடுத்தவனோ
பார்மே லினனோ பகன்மேலோ ஆர்மேலோ
வென்றறியான் வந்தான் எடுத்த குதிரையினன்
வென்றறிவான் சிந்தை மிகுத்து. (84)

னூரு யிரகோடி னூறிவரு மென்றுகொலென்
ருரு யிரந்தேவ ராரறிவார் தேரு
வகைகடவு பாய்பரியான் வந்தான் சிறந்த
சிகைகடவு தீயாய்ச் சினந்து. (85)

கண்ணிற் கடுகும் கடிய மனமெங்காம்
விண்ணிற் படர்காலின் மேற்கடுகு முண்ணிற்கு
மென்றாற் புரமடுக்கு மேற்றமண்ணி லெங்கும்வரும்
வன்ருட் பரியின் வலம். (86)

மாப்புண் டரவாசி வட்டணையின் மேலாக
ஆப்புண் டவனெத்தா னரயிலால் கோப்புண்ட
ஆவி புறத்தகல வாக்கினன் வானரத்தைப்
பாவி யரக்கன் படர்ந்து. (87)

நூறு மிருநூறும் நோக்கும் நொடிப்பளவில்
எறுநதி வேலி னிறைப்பொழுதின் சீறுங்
கவிச்சேனை யைச்சிதைக்குங் காந்தியெனத் தேவர்
தவித்தார்கள் சிந்தை தளர்ந்து. (88)

Koviloor Digital Library

ஆற்று முருவம் தொடர்ந்தோன் றெனத்துணியா
கூற்றின் கொலையடுத்த கொள்கையனை யேற்றுசிலை
யாண்மையான் தம்பி யடற்காற்றின் றன்படையின்
கேண்மையாற் கொன்றான் கெடுத்து. (89)

இன்றா தியமுண் டெனப்பெரிய வின்னகைபாற்
சென்றா தியதம்பி தென்றிசையான் வன்றூதர்
எய்தினர் வஞ்சனையான் ஏற்ற பெருந்தூதர்
எய்தினர் தன்னகரை யேற்று. (90)

ஏகித் தனிமன் னிருந்தூழியிற் புக்கவர்க
ளோகைப் பொருளன்றென் றுள்ளழியா வேகத்தாம்
வீரர் விளிந்தவெலாம் வேறா யெடுத்துரைத்தார்
சோரன் சபையிற் றுணிந்து. (91)

படைத் தலைவர் வதைப்படலம் முற்றிற்று.

மகரக்கண்ணன் வதைப் படலம்.

சொன்னா ரவர்கள்படு சொற்செவியிற் சார்தலுமே
யின்னா மனத்த னிலங்கைமன்முன் வெங்காக
மென்னா வுயிர்ப்பா னியைந்த செயலுரைத்தான்
மன்னும் கரன்றன் மகன். (1)

முந்தேயென் றந்தைதனை மொய்யமர்வாய் பொய்யமர்வான்
அந்தோ வுயிருண்டா னாருயிர்மே லுந்தாய்
ஏனையாது முன்னா திடரடைதற் கென்னை
வினையாவ தென்றான் விடைத்து. (2)

நானே செலற்கெண்ணி நண்ணினே னன்னதுவுந்
தானே செலநீதாய்த் தாழ்ந்ததாம் வானே
நிலனே முதன்மற்றும் நேர்ந்தாலு மென்றன்
வலனே முதலென்றான் மற்று. (3)

Koyiloor Digital Library

அருந்துயரி னன்னை யழுந்தியிழி கண்ணாள்
பெருந்துயரி னன்கணவற் பேர்த்தோன் கருந்தலையி
னின்று கழிப்பே னிகர்தாலி யென்றுரைத்தா
ளின்று கழிப்பே னிசைந்து. (4)

அம்மகரக் கண்ண னறைய வரக்கனைய
வம்ம கரக்கா தடர்த்தி யாமென்றான் கொம்மைத்
திரமுற்ற தேரேறிச் சென்றான் சிறந்த
கரமுற்ற வில்லான் கனன்று. (5)

தன்சேனை வெள்ளந் தழுவத் தசமுகனு
மன்சேனை வெள்ள மழைபோர்க்கப் பின்சேரும்
பேரிகட லாவகையாப் பேர வருதூளி
தாரிகட வாவகைவந் தான். (6)

சோணிதக்கண் ணான்சிங்கன் தோன்றி வருதேரார்
பாணிதக்க தாம்படையார் பாங்குவரக் காணமுற்றும்
சேனைவரச் சென்றான் செழித்த மதிசூழ்ந்த
மீனைவரச் சென்றாம் விதம். (7)

பல்லார் பதாகைமிசை பற்றித் தொடுத்தபந்தர்
எல்லார் சுடற்குநிழ லிந்தடுக்கக் கல்லார்ந்த
யானை விலாழி யடுத்த திவலையுற
வானரங்க ளர்ந்தசிர மம். (8)

முழங்கினவாம் யானைபரி முற்றியத்தின் பண்ணை
தழங்கினவாம் வீரவரர் தாக்க வழங்கும்
பதலையண்ட முட்டப் பகைத்துவரு பாரும்
விதலையண்டச் சென்றான் விரைந்து. (9)

வெய்திறுற்ற தானை விடாநூழில் வெம்போரைச்
செய்திருக்கும் வீரர் சிறந்துவரு கையொடுகை
யுற்றுக் கலந்தடர்த்தா ரோங்கி வருசோரி
பற்றிக் கலந்திழுத்த பாங்கு. (10)

Koviloor Digital Library

வானரத்தார் விட்ட மலைகளையி ராக்கதர்கள்
மீனரற்ற மேகமெழ மீட்டும்விட்டார் வானவிடி
யுண்டதென வானரங்க ளோடி மடிந்தவகை
கண்டவனப் பேய்கள்கடக் கா. (11)

மைநிறத்த வாளரக்கர் வாள்வாங்கி வானரர்கள்
மெய்நிறத்தின் வீசி வெகுண்டுகொல்வர் செய்நிறத்த
கன்மரத்தை வாங்கிக் கடுத்துப் புடைத்தடிப்பர்
வன்மறத்தர் வாயை மடித்து. (12)

வண்டிறலார் மார்புடையான் வான்மகரக் கண்ணனெனுந்
திண்டிறலான் சார்புடைய தேரதனைக் கொண்டலென
மேலோட்டிச் சென்றான் விரைந்தடுத்த வானரரைக்
காலோட்டிச் சென்றதெனக் காய்ந்து. (13)

இந்திரனை வென்றபகை யென்றெடுத்த வச்சமதாற்
றந்திரமி ரிந்துசெலத் தாக்கியே எந்திரத்தாம்
எவெடுத்து வீழ்த்தி யிராம னிடைநின்று
தாவெடுத்துச் சொல்வான் றகைந்து. (14)

என்னுடைய தாதை யினிய வுயிருண்ட
வுன்னுடைய தாருயிரை யுண்டிலனேற் பின்னை
எடுத்தநல மென்ன வெனவேறரே னென்றான்
கடுத்தனல மென்னக் கனன்று. (15)

நிகரந்த கண்ணன் செறித்தவுரை கேட்டுவள்ளல்
நீகரன்றன் மைந்த னிமிர்ந்தடுத்தாய் மாகரந்த
மைந்தர்புரி வீர வழக்கிதுதா னென்றுரைத்தான்
விந்தைபுரி வீரன் விழைந்து. (16)

உருமிடித்த வின்னொ ணொலித்தன்னோ டெந்தை
செருமுடித்தல் தீர்ப்பனெனச் சீறிக் கருமுடித்த
மேகங் கடைக்கால் விடுந்தாரை யாய்ப்பொழிந்தான்
வேகுங் கணையை மிகுத்து. (17)

Koviloor Digital Library

அம்புயத்தாங் கண்ணன்மிசை யாயிரத்த தாம்பகழி
தம்புயத்தாந் தம்பிமிசை சார்ந்திரட்டி வெம்பி
யனுமா னடற்ருேளி லாயிரந்தான் விட்டான்
தனுமா னடற்குமுனந் தான். (18)

சொரிந்த கணையெல்லாந் தூயோன் கணையி
னரிந்தவன்ற னுகத் தடுக்கத் தெரிந்து
பகழியொன்றை யெய்தான் பருவலியா னுகம்
தகழியொன்ற நின்றெரிந்த தாம். (19)

ஏவுண்ட தாற்றளக்க மெய்தா திரத்தமதாற்
சேவுண்ட கண்ணுன் செறித்துவரு தேவன்
அகலத்தி னுயிமா மம்பு பொருந்த
விகலத்தான் விட்டான் விரைந்து. (20)

அன்னதுகாண் வானே ரதிசயமுற் ருர்வாழி
மன்னதுகாண் முன்விடுத்து மாற்றியே பொன்னெடுந்தேர்
பூண்டபரி போக்கிப் புனைபாக னைத்தடிந்து
நீண்டவரி வில்முறித்தா னேர்ந்து. (21)

மார்பிடையாம் வாளி வழங்குங் குருதியுடன்
சோர்புடையான் காயமதிற் ருேன்றியே கார்புடையாங்
காற்றுங் கனலுங் கடைநாளிற் கண்டவெனத்
தோற்றுந் தவத்தடுத்தான் ருேய்ந்து. (22)

உருமுறைகள் கோடி யுதிர்ந்தூழி நாளின்
இருமுறைகால் சீறி யெழுந்த கருமுறையாம்
மேகஞ் சிலைமாறி வீசியதால் வானரங்கள்
ஆகங் குலையு மதிர்ந்து. (23)

போயினவாந் திக்கிற் புகையும் பொழிந்துவரு
தீயினமாய்ச் செல்லடுத்துச் சிந்தவே யாயிரமாம்
கோடிகவி திரக் குறித்தவையன் மாயமென
வீடணன்ருன் சொல்வான் விரைந்து. (24)

Koviloor Digital Library

நோற்றடுத்த நோன்மைதனை நோக்கி நுலவரு
காற்றடுத்த நீர்க்கடவுள் கண்டடுத்து மாற்றலரா
யீந்த வரப்பெருமை யீதென்றான் வாதொன்றான்
சாந்தவரன் றீர்ப்பனென்றான் றான். (25)

காலோன் படையுங் கடலரசன் றன்படையுங்
கோலோடு கூட்டிக் குறித்துவிட்டான் மேலோன்
துரக்கவரு வாளி தொடர்ந்தெரிக்கத் தீர்ந்து
கரக்கவரு மாயைக் கடல். (26)

அத்துணையை நோக்கி யரக்க னுறுவான்மே
லொத்தவுரு வாய்மறைத்தா னெண்சூலப் பத்தி
பரப்புதலைப் பார்த்துப் பரந்தாமத்தையன்
நிரப்புதலைச் செய்வா னினைந்து. (27)

அம்பின்வாய் நெய்த்தோ ரடுத்தரக்கன் யாக்கைதனை
யும்ப ரொளிக்கவதை யோர்ந்தவள்ளல் பம்பும்
கொலையுற்ற வாளி குறிக்க வரக்கன்
தலையற்று வீழ்ந்தான் றரை. (28)

அயில்படைத்த வாளி யரக்கன் றலையைப்
புயல்படைத்த நெய்த்தோரிற் போக்கத் துயில்படைத்த
சொப்பனம தான துணையான மாயைதரு
வெப்பனலும் போன விடுத்து. (29)

குருதியுற்ற கண்ணன் கொடிநெடுந்தேர் கொண்ட
பருதியுற்றுத் தோன்றுசுடர்ப் பண்பன் எரிகணைகள்
சிந்திவரு காலிற் சினந்தேற்ற செய்கையினான்
வந்திவரு மாநளன்றன் மாட்டு. (30)

அன்றவன்றன் வின்னாண் அலங்கற் புயமடுக்க
வொன்றலவாம் வாளிமழை யோச்சினான் சென்றான்
தருவடுத்த கையான் தனிச்சிங்கஞ் சீறிக்
கரியடுத்த தென்னக் கனன்று. (31)

Koviloor Digital Library

கரத்திற் றிரிமரத்தைக் கண்டமது வாகச்
சரத்திற் றுணித்தவனைச் சார்ந்து சிரத்திற்றான்
குத்தினன் வாரியனை கொண்டான் உயிரைநமன்
பத்தினன் பாசத்தாற் பாங்கு. (32)

அங்கவன்றான் றீர வனலடுத்த கண்ணுடையான்
சிங்கவன்மைப் பேரான் செருவலியான் எங்கடா
போவதென வந்தான் பொருப்பான் பனசனுற்றான்
சாவதெனச் செய்வான் றடுத்து. (33)

பாய்ந்தான் பனசன்மிசை பல்லவங்கள் பத்தெய்தான்
காய்ந்தான் பனகமெனக் காந்தியே ஏய்ந்து
வருதே ரெடுத்து மருள்காய முற்றான்
விருதேறி நின்றான் விரைந்து. (34)

தேரெடுத்தல் கண்டு செருநிலத்திற் சேர்ந்தவனை
மேருவொத்தா னுச்சிமிசை விட்டெறிந்து பாரினுற்று
வீழ்ந்தானைச் சோரியுயிர் வீழத் துகைத்தடுத்தான்
வாழ்ந்தானைச் சேரும் வலன். (35)

கார்வழங்கு கையார் கணைக்கும் கவித்தானை
சீர்வழங்கும் தெய்ய சிலைக்குமாய் நேர்வழங்கிப்
பட்டவெள்ளம் பத்தாம் படாதநிலைத் தூதர்படை
விட்டகள்ள ரொத்தார் விரைந்து. (36)

மகரக்கண்ணன் வதைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

பிரமாத்திரப் படலம்.

கரனுரத்து மைந்தன் கடுங்குருதிக் கண்ணன்
சிரனெரித்துச் சிங்கனொடு சேனை பரமுலகுக்
கென்னத் துலைத்த வியல்பதனைக் கேட்டுமகன்
தன்னைத் தருதிரென்றான் தான். (1)

கூயினா னுந்தையெனக் குன்றடுத்த வென்றியினான்
போயினா ராமரக்கர் பொன்றியென்றான் ஏயினால்
மீள்பவரும் நின்னையன்றி வேறெவரா மென்றுரைத்தார்
ஆள்பவனும் வந்தா னடுத்து. (2)

வணங்கியைய நொய்துமக்கள் மாண்டனர்க ளென்ன
வுணங்கினையல் வன்குரங்கி னொன்றும் பிணங்களினும்
குப்பை யொடுமனிதர் கூன்பிணத்தாற் சீதைதுயர்
தப்பரிது காணென்றான் சார்ந்து. (3)

வலங்கொண்டா னாயிரமா மாமடங்கல் பூண்ட
பொலங்கொண்ட தேரிற் புகுந்தான் கலங்கா
வறுபதுவெள் ளந்தானை யன்றுவரச் சென்றான்
குறுமையுல கென்னக் குறித்து. (4)

கும்பிகையுஞ் சண்டை குறடு திமிலைகொட்டும்
பம்பைமுர சம்பணவம் பாங்கடுக்கக் கம்பலைகொள்
தக்கை கரடிகையுந் தார்வேயந்த கண்டையுடன்
மிக்கவிய மார்த்த விசைத்து. (5)

யானைப் பறைதழங்க யானைமணி யோடுதிறல்
மானப் புரவிபொற்றார் வார்கொடிகள் சேனையணி
வீரக் கழல்தார் விளைக்கு மொலிவிளைத்தல்
பேரிக்கு மேலாம் பெருக்கு. (6)

Koviloor Digital Library

சங்கொலிதான் பொங்குவயிர் தானடுத்த காகளமும்
பொங்கொலிவான் பீலியுடன் பொன்வேயும் சிங்கவலி
சேர்முழக்கம் வாசி சிரிப்பிரதத் தாமிடிப்புங்
கார்முழக்கம் பேசுங் கலித்து. (7)

பண்டருசொற் செவ்வியொடு பல்லியத்தின் தீந்தேனும்
கண்டருபொன் வீணை கமழ்தேறல் வண்டிற்
பொலியாழ் வழிநறவம் பொற்படுத்த வானோர்
மெலியாச் செவியாம் விரைந்து. (8)

வில்லொலியு மார்க்கும் விளிப்பொலியும் வீரருற்ற
வொல்லொலியு மார்ப்பு முரப்பொலியும் செல்லொலிபோர்
தோள்கொட்டும் பேரொலியுந் தோன்றுங் கடலொலியின்
கேள்கிட்டு மென்றுங் கிளைத்து. (9)

நாற்கடலாந் தானை நடக்கக் கிளர்பாரின்
மேற்கடலாந் தூளி விசும்படுக்க வற்கடலாம்
வானவர்கள் தம்மகளிர் வாட்கண் பனித்தனவாம்
சோனைமழை யென்னத் துயர்த்து. (10)

ஆயிரத்தாங் கோடித்தே ரண்டர் நகரமென
மேயவர்க்குட் டான்பொற்றேர் மேலுடையான் றூய
சுடர்நடுவிற் றோன்றுஞ் சுடர்ப்பரிதி போன்றான்
அடருடைய வீர னமைந்து. (11)

சென்றுகள மெய்திச் சிறையொடு துண்டங்க
ளொன்றியவால் கால்மேனி யொப்பவே பின்றவிலாத்
தானையன்றி லாமுருவிற் சார்ந்து வரநின்றான்
வானையன்று வென்றபொலி வான். (12)

புரந்தரனை வென்று புணரிக் கடுத்த
வுரந்தவிர்க்கு மூழியொலி யோதை கரந்த
வலம்புரிகை வாங்கி வரைந்து தெழிக்க
வலம்புரிகை வானவர்கட் காம். (13)

Koviloor Digital Library

சங்கத் தொலியடுக்கத் தாவில்லா வானரர்கள்
சிங்கத் தொலியடுக்கும் செய்கையினர் எங்குற்று
ரொன்றாகு மென்ன விரியச் சிலையொலித்தான்
பன்னாக மன்னன் பகைத்து. (14)

படைத்தலைவர் நிற்கப் பலதானை வேலை
உடைத்தலையா யோடுதலை யுற்றார் கிடைத்தரக்க
ரார்த்த முழக்க மடைத்த திசையெல்லாஞ்
சேர்த்த களத்திற் சிறந்து. (15)

செங்கதிரோன் சேயுஞ் சிறந்த வனுமனுடன்
அங்கதனுஞ் சீரிளைய வண்ணலுட னிங்கிவர்கள்
நின்றடுத்தார் கண்டாம் நிகரில் கவிவீரர்
சென்றிடத்தார் கண்டார் தெளிந்து. (16)

மாருதிபொற் றோளேற வள்ள லிளையவரன்
ஒருதிற லங்கதன்றோ ளூற்றடுக்க வேரிமலர்
மாரிசொரிந் தாரமரர் மானவர்கண் மேனிமிரும்
சாரிதிரிந் தாரிவர்க டாம். (17)

விடைமேல் விகங்கமன்மேல் வில்லார் விளங்கும்
கடைமேற்காண் காட்சி கடுத்தார் தடைமேவா
மாருதியு மங்கதனும் வார்ந்தெடுத்துத் தாங்கநின்ற
வீரவரர் சேரும் விதம். (18)

நீலன் முதலாம் நெடிய படைத்தலைவர்
தாலமலை யாற்றாக்கச் சார்காலை ஞாலம்
விசும்படுத்தார்க் காத்த விசயன் புதல்வன்
அசும்படுத்தார்க் கண்டறைவா னாங்கு. (19)

கடவுட் படையைக் கருதலன்றான் விட்டாற்
தடையுட் படலின்றித் தாழ்வீர் படையுள்ள
தெம்பாலி னல்கி யிருப்பீ ரெனவுரைத்தான்
நம்பாலி னன்பா னயந்து. (20)

Koviloor Digital Library

அருண்முறையி னின்றதற்பி ளுண்டகையா ரர்ழி
யுருண்முறைதேர் யானைபரி யோங்கு மிருணிருதர்
தம்மேல் வழங்குஞ் சரவசனி யாற்றேவர்
கம்மே லழுங்குங் கவன்று. (21)

இமைத்துவுரு முன்ன மிராக்கதர்க டம்மைக்
குமைத்தவரர் கொள்கை குறித்தா லுமைக்குரிய
பாகத்தான் முன்னம் பகைப்புரத்தைத் தீர்த்தவெண்ணீற்
ருகத்தான் முன்னமடுத் தாம். (22)

தேரிற் சிலையனிந்த்ர சித்தென் றுரைக்குமொரு
வீரத் தலைவனந்தில் வீந்தகண்டான் காரிற்
கரியான்செய் பூசற் களத்திற் படைகள்
அரிதான செய்கை யடுத்து. (23)

ஆனைபட்ட தென்னவென்று னுமிரத மிற்றவென்றுன்
மானமுட்டும் வாசி மறிந்தவென்றுன் ஏனை
அரக்கரிலை யோவென்று னும்பிணத்தைக் கண்ட
விரக்கமிலை யாக வெடுத்து. (24)

செய்கின்றூர் போரிருவர் சேனை மடிந்தனவு
மைகொண்ட வெள்ள மறுபதென்றுல் வைகின்றூர்
அல்லாது வில்லா லமையுமோ சாலமிது
வல்லாதென் னென்றுன் மதித்து. (25)

அம்பின் மழைநோக்கு மாற்றுதிரங் கண்டுநிற்கும்
வெம்பும் பிணக்குன்றை மேனேக்கும் கொம்பிற்ற
சிந்தூரத்தை நோக்கும் சிறந்ததிறல் வீரரடு
கந்தரத்தை நோக்குங் கனன்று. (26)

மலைகடமை நோக்கிவரும் வானுயர விற்ற
தலைகடமை நோக்கிச் சலிக்கும் நிலைகடவு
வீரச் சிலைநோக்கும் வின்னு ணிடிநோக்கும்
பாரச் சிலையான் பரிந்து. (27)

Koviloor Digital Library

ஆயிரமாந் தேரை யடலானை யாம்பரியை
ஆயிரமா மூவ்வி யறுத்துமப்பா லோயாக்
கணையடுத்து நோக்கும் கருதவரு வீரர்
இணையடுத்து நோக்கா வெமன். (28)

அறுபதெனும் வெள்ளத் தரக்கர் படைகள்
எறிவனவு மெய்வனவு மேற்ற பொறிவனந்தான்
வெந்ததெனச் சாம்பராய் வீந்த நிலைகண்டான்
சிந்தைமிக நொந்தான் சினந்து. (29)

வயிரலைத்து வந்து மகளிர் கணவர்
செயிரலைத்த மேனியொடு சேர்ந்து குயிறலைத்து
வீழ்ந்ததெனச் சோர்ந்து விளியுஞ் செயனோக்கும்
தாழ்ந்ததெனச் சிந்தை சலித்து (30)

அங்கதர்கள் கோடியுள ராகு மனுமனென்பார்க்
கிங்கதமாம் பூமியிட மில்லென்பா னெங்கும்
மனிதரிவ ரன்றி வரத்துண்டோ வென்னும்
புனிதரவர் வென்றி புகழ்ந்து. (31)

ஆர்க்குஞ் சுரர்நோக்கு மன்றுபொழி பூநோக்கும்
தூக்கித் துடிக்குந்தன் றேர்னோக்கும் பார்க்கின்ற
திக்கடுத்த நெய்த்தோர் செறிவெள்ளஞ் சேர்பிணத்தை
மிக்கெடுத்த னோக்கும் விரைந்து. (32)

ஆயிர கோடித்தே ராமரக்கர் தாமொழிய
மாயப் படைமாய்த்த வாகண்டும் போய
குரங்குபுகு செய்கையிலை கோரன் புரிந்த
கரங்குபுகு செய்கை கடுத்து. (33)

தளப்பரிய சேனை தலமடுத்த தீர
அளப்பரிய தேரினுள்ளா ராகத் துளக்கமிலார்
போர்த்தொழிலை நோக்கிப் புரிதோளைக் கொட்டியுடன்
ஆர்த்தொழியான் மாருதிவந் தான். (34)

Koviloor Digital Library

ஆரிடையி ஞர்த்த வசனி யதுகேளா
தேரிடையின் வீழ்ந்தார் சிலர்படையைப் பாரிடையின்
வீழ்த்தி விழுந்தார் விரிந்த நகரினுளார்
தாழ்த்தி விழுந்தார் தவித்து. (35)

அஞ்சினர்கள் போமின்றே ரார்ப்பொலியின் வேர்த்திழிந்தீர்
வெஞ்சினமற் றீர்புரிவீர் வீரமுடன் றுஞ்சினர்கள்
போமென் றுரைத்துப் புனிதரிரு வர்க்கொருவன்
ஆமென் றுரைத்தான் அடர்த்து. (36)

அக்கணத்தி ஞர்த்துமண்டி யாயிர கோடித்தேர்
புக்கனத்தத் தாற்கிழிந்த பூமியென்னத் திக்கணைத்த
யானைதலைக் காநடுக்க மண்டர் பயமடைந்தார்
மீனதலத் தான விரைந்து. (37)

மாற்றமொன்று தம்பி வளைவில்லைச் செங்கரத்தி
னேற்றிநின்று வெம்பி யெடுத்துரைப்பா ஞற்றல்
அரவா லசைப்ப வமர்தோற்று னென்று
கரவா விசைக்குமுல கம். (38)

காக்கிலேன் காதல் கடுத்துவரு நண்பர்களை
ஆக்கிலேன் சாத லடுக்கநின்றேன் மேக்குயரும்
வென்றியுற்றுன் றன்னை விளியத் தொலைத்துமிலேன்
கன்றியுற்றே னென்றுன் கனன்று. (39)

இந்திரனோர் வென்றவனை யேற்ற வெனதுசரம்
மந்திரநேர் வன்றலையை மாற்றுதேல் வெந்தொழிலைச்
செய்கையுடைத் தான்விருந்தாய்ச் சேர்மைந்த ரிற்கடையாம்
செய்கையுடைத் தென்றுன் சினந்து. (40)

நின்சிரத்தை யில்லா னெறியடுத்த நீர்மையிலான்
தன்சிரத்தை யென்சரத்திற் றள்ளிஞற் பொன்சேர்
கழலுடைய வீர கருது மடிமை
நிழலுடைய தென்று னினைந்து. (41)

Koviloor Digital Library

நீண்ட வுலகுதுதி நேர வெனதுசரம்
ஆண்ட தலையறுக்க லாகாதேற் பூண்ட
வியனிருக்கும் நின்னடிமை வேண்டிப் புரிதல்
பயனிருக்கா தென்றான் பணிந்து. (42)

வல்லசிலை கொண்டதம்பி வாய்ந்துரைத்த வெல்லைதனி
லல்லலிலை யென்றமர ரார்த்தனராம் நல்ல
தரமார்த்த தொல்லுலகு தானார்த்த விச்சொல்
பரமார்த்த மென்று பரிந்து. (43)

முறுவல் முகத்தான் மொழிமலர்க்கண் முன்னோன்
அறிவ வடற்கமைந்தா யாயி னிறுதியுடன்
காவலியற் றீசர் கருத்தும் வெரிவுமெனிற்
றூவலியற் றூர்க்கென் தரம். (44)

சொல்லிதனைக் கேட்டுத் தொழுதடுத்துச் சுற்றிவரு
பல்பெருந்தே ரோடரக்கர் பண்ணைதமைக் கொல்வதனைக்
காண்டி யெனவெழுந்தான் காணு மமரரெலாம்
வேண்டியன கூற விரைந்து. (45)

அங்கதன்ற னூர்ப்பை யசனி யெனக்கொண்டு
மங்குலதிர வயவன்றேர்ச் சிங்கம்
நடுங்கடலி னுதன்ற னற்சங்கந் தானும்
அடுங்கடலி னூர்த்த தடுத்து. (46)

எழுமரங்கள் சக்கரங்க ளீட்டியெறி யீட்டி
முழுமரங்கொ றண்டு முசுண்டி யெழுவயில்கள்
கப்பணங்கள் கற்கள் கருது மழைக்கிரட்டி
வெப்பணங்க விட்டார் விரைந்து. (47)

மீனெல்லாம் விண்ணின் விரைந்தொருங்கு வீழ்ந்தனவாம்
வானல்லா மண்ணும் மறையவந்த தானெல்லாம்
போய்த்தகர்ந்து சாய்ந்த புரதகன னுந்தம்பி
வாய்த்தகணை வெம்மை வரைந்து. (48)

Koviloor Digital Library

ஆயிரந்தே ரோர்தொடையி னச்சிற்ற வீழ்ந்துகெடும்
பாய்பரிகள் பட்டுடனும் பாகர்படும் நாயகர்கள்
நீண்டதலை பட்டு நிகரில் புகையினொடு
தாண்டுதலைத் தீயாம் தகைந்து. (49)

அடியற்றுத் தேரினிடை யச்சிற்று முற்றும்
வடியற்று வில்வாசி மாய்ந்து கொடியும்
குடையினொடு வீரர் குறிக்கு முரசும்
முடியினொடு வீழும் முறிந்து. (50)

இன்ன வுறுப்பி னிவைபெரிய தேர்பரிகள்
மன்னர் படையுடையர் மற்றுமுளோ ரென்னவொரு
தன்மை மயங்கித் தகர்ந்து பகர்வரிய
வன்மை மயங்கியுற்ற வாம். (51)

தந்தையர்க டேரிற் றனையர் வலியதலை
முந்தையவாய்த் தந்தையர்கள் முற்றுசிரம் சிந்தும்
தனைய ரிரதத்திற் சார்ந்தவம்பி னோடு
புனையவரும் வானிற் புகுந்து. (52)

செங்குருதி தன்னிற் றிகழ்ந்துவரு செங்கண்மீன்
கொம்பினொடு முந்திதிரி கோட்பென்னத் தும்பையணி
மாலையினர் கைதுணி வாங்கம்பி னோடுதுணி
வேலைசிலை யோடற்ற வே. (53)

தடியுங் கொடுஞ்சரத்தாற் றள்ளுற்ற செம்மை
மடியுங் கொடிகள்குடை மற்றும் படிதல்
கடலிரத்த வெள்ளத்துக் காணும் பரவை
படிதலொத்த தாகும் படர்ந்து. (54)

சிந்துரங்க ளின்பருமம் சேர்பகழி யுந்தேரும்
உந்து சிலைபடைக ளூற்றகொடி யிந்தனமாய்க்
கண்டயின் மண்டிவெந்து காணும் பிணம்விழுங்கித்
தொண்டையும் பேயின் குலம். (55)

Koviloor Digital Library

சில்லி யுடைந்து சிதறும் பலதேர்கள்
வல்லி தொடுக்க மருள்புரவி புல்லிமண்ணிற்
சேர்ந்திரிந்த போராற் சிறந்தவில்லி சாரதியும்
வார்ந்துபடப் போன வளம். (56)

ஆனவிடை வள்ள லரிமுகத்த வாம்பகழி
சோனைபட வுன்னிச் சொரிந்ததனால் வான்மானம்
தேக்கி மடிந்தவெனத் தேர்மடிந்த தாலொருதேர்
தாக்கிநின்றா னிந்திரசித் தன். (57)

பல்விலங்கி னோடு பரிபூண்ட தேர்ப்பரவை
வல்விலங்க லாக மடிந்தகண்டு வில்லிலக்கு
வீரர் தமை நோக்கி வெகுண்டா னிராவணிதான்
ஆரியன்பாற் சொன்னா னடர்த்து. (58)

இருவ ரெதிர்பொருதற் கேற்றவரோ வின்றே
லொருவ ருயிர்தருதற் கொப்போ பொருதிவரு
சேனையொடு பொன்றுதிரோ சேர்ந்தபடி செய்வனென்றான்
வானையடு வீரன் வரைந்து. (59)

வாளிற் சிலைத்தொழிலின் மற்றும் வழங்கவரும்
ஆளும் படைக்கலத்தி னும்மரிற் கோளுற்ற
வுன்னோடு நின்றுன் னுயிர்கொள்வே னென்றுரைத்தான்
மன்னோடு நின்றதம்பி வாய்ந்து. (60)

முன்பிறந்தா முன்னை முறைதவிர வுந்தனுக்குப்
பின்பிறந்தா னாக்கிப் பிறந்தோயை முன்பிறந்தா
னாக்கிமுடிப் பேணா னலதேலி ராவணியென்
றாக்கிமுடி பேர்க்கெனையென் றான். (61)

இலக்குவனென் பேரென் னிணையில் கணைகட்
கிலக்குவரு மென்ற வியல்பா மிலக்குவனென்
றாதலொரு வர்க்குமினி யாகாது நீமுனையிற்
சாதலொரு வாதென்றான் சார்ந்து. (62)

Koviloor Digital Library

அறுபதெனும் வெள்ளத் தரக்கர்தமை யம்பால்
இறுவதெனச் செய்நீ ரிரங்க வுறுவதிலா
எழ்பத்தாம் வெள்ள மிமைப்பினிரத் தக்கடலிற்
தாழ்வித்த லென்கடமை தான். (63)

கும்பகன்ன னல்ல குறித்தகணை கொண்டடித்த
தம்பியல ராவணனூர் தன்மைந்தன் தம்பியொடு
சிற்றப்ப னுக்குமுங்கள் சேர்ந்த விரத்தமதால்
வெற்றிப் பலிக்கடன்செய் வேன். (64)

அரக்கரெனப் பேரா யடுத்தவர்கட் கெல்லாம்
புரக்கவரு வீடணமால் போந்தான் கரக்குமுந்தைக்
காக்குங் கடனு மவனே செயற்காகும்
நீக்குங் கடனிலென்று னோர்ந்து. (65)

ஆனதொரு காலை யரக்க னழன்றலைந்தான்
வானமொடு மாசை மறையவந்த பேனமுற்ற
வேலை பருகும் விசயத் தடுபகழி
யாலமென விட்டா னடர்த்து. (66)

அங்கதன்ற னுகமதி னுயிரம தற்கிரட்டி
வெங்கதன்றென் மாருதிமேல் வீசினன் சிங்கமன்ன
வீரருடல் சோர மிகுகணையி னுனிறைத்தான்
சாரவரு மிந்திரசித் தன். (67)

இளையவரன் மேலு மிராமன் புயத்தும்
விளைய வருவீரர் மேலும் உளையும்
சரஞ்சொரிந்தா னுழியொன்று சாரவரு வில்லு
முரஞ்செறிந்த நாழிகை யொன்று. (68)

பச்சிமத்தி னும்முகத்தும் பாங்கும் வருபகழி
உச்சிமுற்றும் வெய்யகதி ரொத்துமிழ வச்சமுற்றுக்
கண்புதைத்தார் தேவர் கருது வலிகண்டா
ரெண்பதைத்தார் சிந்தை யிரிந்து. (69)

Koviloor Digital Library

மெய்யடுத்துப் பட்டவெலாம் வீய வுடன்றீத்து
நெய்யடுத்த நேமிதனை நேரெனன அய்யற்
கடுத்ததம்பி யம்பா லறிவில்லான் பொய்போற்
கடுத்ததும்பத் தீர்த்தான் கனன்று. (70)

பின்னடுத்து நின்றான் பிரியான் பெருந்தகையும்
மன்னறத்தாற் றன்கணையை மாற்றினான் உன்னி
இருந்தா னிருவ ரெடுத்த கணையால்
வருந்தா தவரார் மருண்டு. (71)

மாடெரிந்த வீரர் வழங்குகணை மாரியினால்
காடெரிந்த தீர்ந்த கனவரைகள் வீடெரிந்த
வேலை யெரிந்ததென்றால் வேறென்னை பேரூழிக்
காலையெரி வீயும் கடுத்து. (72)

படங்கொ ளணைதீர் பருவலிக்கைத் தம்பி
விடங்கொள் கணையை விலக்கி யிடங்கொள்
அரக்க னடற்றே ரளவின் மடங்கல்
கரக்க வடர்த்தான் கனன்று. (73)

தேரழிய வீறடுத்த சேமத்தேர் போமத்தன்
உளரழிய நின்ற வொளியொத்தான் காரழியாக்
கொண்டலறப் பாணமழை கொட்டினான் றேவரெலாம்
கண்டலறச் சிந்தை கடுத்து. (74)

அற்றவைய நின்ற அரக்கனவ னங்கதன்றன்
கொற்றவையார் தோளுங் குறித்ததம்பி வெற்றியந்தோள்
மேலுங் கணைபொழிந்து வெற்றிவளை முற்றுவித்தான்
தாலம் நடுங்கத் தனித்து. (75)

சங்கங் குறித்த தசமுகன்சேய் தாங்கிவரு
பொங்குங் கவசம் புரளவே செங்கை
வலித்தசிலை தீர வனைந்தகணை தொட்டான்
நலித்தசிலைத் தம்பி கடுத்து. (76)

Koviloor Digital Library

கண்டமுகில் வண்ணன் கமல விழிகலுழக்
கொண்டமுகிழ் புன்முறுவல் கூரவே யண்டமுண்ட
தன்வாயா லார்மினெனச் சாற்ற வுடனார்த்தார்
மன்வாயார் வானரர்கண் மற்று. (77)

கண்ணிமைக்கு முன்போய்க் கரந்தான் விசும்பினிடை
யண்ணலவ னுக்கை யறியானப் பண்ணவற்குத்
தம்பியுரை செய்தான் றடையி லயன்படையால்
வெம்பியுறச் செய்வான் விதம். (78)

ஆன்றான் பகர அறவ னெடுத்துரைக்கு
மீன்றான் பகழிவிடி னேற்றுலக மூன்றும்
சுடுமொருவ னல்முடிவு தோன்றப் புரிதல்
அடுமொருவன் செய்கையென்று னய்ந்து. (79)

மறைந்துபடர் வஞ்சன் மனத்தை யறிந்தான்
அறிந்துபடை தான்றொடுக்க வானன் பிறிந்துவரு
சிந்தைகொண்டு சென்றான் சிறந்த கடவுளர்கள்
விந்தைகொண்டு நின்றார் விழைந்து. (80)

செஞ்சரத்தின் செம்மழைதான் சேர்விசும்பிற் செல்லாது
மஞ்சடுத்தான் மஞ்சுளத்தான் மாற்றத்தான் அஞ்சல்
அகந்தாங்கு வான்சென்ற வற்ற மறிந்தார்
நகந்தாங்கு தோள்வா னரர். (81)

உடைந்த கவிச்சேனை யோத வுவரி
யடைந்த கவினிரைத்தா ராடித் தொடர்ந்து
கடைந்தாங் கடல்போற் கலங்கு மிலங்கை
யடைந்தா னவதி யடுத்து. (82)

எற்கொள்வான் பாண மிவரடுத்து மேல்விடற்கு
முற்கொள்வான் நாண முனிந்துவரு சொற்கொண்ட
வேள்விசயங் கொள்ள விரைந்தா னவையெண்ணார்
வாள்விசயங் கொள்ளும் வரர். (83)

Koviloor Digital Library

அனுமனங்க தன்றோளி னூர்த்தா ரிரங்கித்
தனுமனங்கொள் சாலி தளர்த்தி மனுமனங்கொள்
கோதை துறந்து குறித்திருந்தார் தேவர்கட்காம்
வாதை துரந்துவந்த வர். (84)

ஆர்த்துவரு சேனை யமலை விசும்பலைப்ப
வீர்த்துவரு தேரோ டிரவிசென்றான் றீர்த்தன்மேல்
நான்முகன்ற னத்திரத்தை நாட்டுஞ் செயல்தனைத்
தான்முகங்கா ணாது தனித்து. (85)

இரவு பகலு மியற்று செருவில்
உரவு படைமெலிந்த வாண்டான் வரவடுத்துத்
தாழ்த்துவரும் வீடணு தானேகி வாவென்றான்
வாழ்த்துவரன் சிந்தை மதித்து. (86)

இன்ன தருளை யியற்றுவே னென்றெழுந்து
தன்னதம ரோடரக்கன் தான்சென்றான் கன்னலொன்றின்
வேலைகடந் தாக்கும் விமல னருளளிக்கும்
வேலைகடந் தாக்க விழைந்து. (87)

தெய்வப் படைகட்குச் சேரு முறைதிருந்த
மெய்வைப்பாம் பூசை விதித்தியற்றிச் செய்யசெயல்
ஆற்றிக் களத்தடுப்பே னென்றபடை காவென்று
சாற்றிக் கரங்கடந்தான் றான். (88)

தந்தைதனைக் கண்டு தகுந்தசெயல் சாற்றிவரன்
சந்தப் படைதொடுக்கச் சார்ந்ததனைச் சிந்தைபடச்
செப்ப வவன்றிகைத்தான் செய்வதெனை யென்றுரைத்தா
னிப்பழியைக் கொண்டா னிரிந்து. (89)

தன்னைக் கொலற்குச் சமைந்த வெதிரிகளை
முன்னைக் கொலற்கரிஞர் முன்னுரைத்தார் அன்னவர்கள்
போர்மறந்தார் சிந்தை புகுந்து வரன்படையைக்
கார்மறைந்து காட்டல் கடன். (90)

Koviloor Digital Library

தொடப்ப தறிந்தாற் றொடுத்த படையாற்
றடுப்ப தறிந்து தடுப்பா ரிடுக்கொன்று
மாகாது வேள்விபுரிந் தன்னவரைத் தீர்ப்பனென்றான்
மாகாது வேள்விசய மன். (91)

என்னை யவர்மறத்தற் கேற்ற சமர்ப்படைய
தன்னை யவர்திறத்துச் சார்ந்தனுப்பிற் பின்னைநின்ற
செய்வே னெனுமுறையைத் தேர்ந்துரைத்தான் மோகரற்கு
வைவே லரக்கன் வரைந்து. (92)

வெள்ள மொருநூறு வெஞ்சினத்த சேனையுடன்
தென்னு மகம்பனொடு தோரக்க ரெள்ளரிய
போரைக் குறித்துப் புகுவீ ரெனவுரைத்தான்
சீரைக் குறிக்காத் திறன். (93)

மாயை யெனச் சொல்லும் வல்லமையி னெல்லைகண்டு
தீய விருட்பரப்பைச் செய்தடுத்து நீயொருதன்
மூன்றுலகு நின்று முனைவா ருயிர்குடித்தங்
கேன்றலவ வென்றா னெடுத்து. (94)

என்றியற்றல் கேட்ட விழிவா னுவப்பெய்தி
நின்றியற்று வீரர் நெருங்கிவரக் குன்றியற்றும்
தேரேறிச் சென்றான் சிறந்த படையுடனே
போரேறிச் செய்வான் பொறுத்து. (95)

கோடியொரு கோடி குறித்தநூ றாயிரத்த
வாடலி யானை யடற்றேரும் நாடிவரும்
காற்றாய்த் திரிந்தடற்கும் கற்கியொடு காலாளும்
கூற்றாய்த் திரியக் குறித்து. (96)

சங்கார தத்தும் தழங்கி வருபேரி
சிங்கார தத்துஞ் சிறந்தவொலி வங்கக்
கடலடுத்த தென்னக் கருதுபடை வீரர்
அடலெடுத்து வந்தா ரதிர்த்து. (97)

Koviloor Digital Library

புக்கவுடன் போர்ப்படைகள் பொங்கும் பறந்தலைக்கண்
தொக்கவுடன் வானரங்க டோன்றியே யொக்கவுடன்
ஆர்த்தனவாம் வீரத் தடுபடைக டாம்விலக்கிச்
சீர்த்தனவா நின்று தெழித்து. (98)

குன்றடுத்த கோடியொடு கோடிக்கு மேற்குறித்து
வென்றடுத்த வானரர்கள் வீசலினு லொன்றி
யரக்கரவர் தீர்ந்தா ரரக்கர் படையாற்
குரக்குவரர் மாய்ந்தார் குறைந்து. (99)

யாவரென வானரரை யாராயி னன்னவர்க்
டேவரென வானுலகு சேர்ந்திருந்தார் மேவிநிறை
காதரவாய் மாதரெலாங் கண்டணைக்க நின்றதனு
னுதரவ ரானுர் நயந்து. (100)

கரக்கவரு மாயம் கடனுகும் வஞ்சம்
இரக்கந் தருமநெறி யில்லா வரக்கர்தமைத்
தேவரென வாக்குஞ் சிறந்த சரப்பெருமை
யாவதெனக் சொல்வா மறிந்து. (101)

அந்தகனுக் காம்படையை யாமந் திரத்தமைத்தான்
இந்தா மெயிற்றரக்கர் யானைவையம் வந்து
கலக்கவரு தானைக் கடலின் முகத்தி
னிலக்குவனு நின்று னெதிர்த்து. (102)

கும்பகன்ன னிட்ட குலவயிரத் தண்டமொன்றங்
கும்பர்கன்னச் செய்த துலப்பிலவா யிம்பர்
அமைப்பதனைக் கண்டா னடன்மா ருதிதான்
குமைப்பதனைக் கொண்டான் குறிப்பு. (103)

காற்றே கனலோ கடுவோ கடலரக்கர்
கூற்றே கொலைசெய் கொடுவரியோ வேற்ற
தனியுருவங் கொண்டு தடிந்ததென மாறுய்
முனையுருவக் கொன்றன் முனிந்து. (104)

Koviloor Digital Library

வெங்கண் மதமலைமேல் வெற்றிப் பரிதேர்மேல்
அங்கண் படைவீர ராந்தலைமே லெங்கு
முளமேவி நின்ற வொருமா லெனத்தான்
களமேவி நின்றான் கனன்று. (105)

கிளர்ந்தா ரொழியக் கிளைத்தான் கனலாய்க்
களர்ந்தா ளுருகுழம்பாய்க் காட்டி வளர்ந்தான்
நிலைகிட்டுந் தேவர் நிகரி லுலகை
அலகிட்டா னென்றா ரயிர்த்து. (106)

மத்தக் கிரியினுறு மத்தகத்தைக் கிண்டியதின்
முத்திற் பொலிவானை முற்றுமெய்யா னுத்தகடை
யுற்றூழியிற் காலா லுடுச்சுழல நின்றிமைக்கும்
பொற்றவரை யொத்தான் பொலிந்து. (107)

இடித்தா னிலம்விசும்பி னேற்றி யெழுந்தான்
பிடித்தான் பெருந்தண்டு பேர்த்துப் பொடித்தான்
மதகரிதேர் முற்று மடித்துக் குழம்பாய்ப்
பதகரிதே யென்றான் பழித்து. (108)

நூறுக வாயிரத்த நோன்மை யுறுகரிகள்
ஆறுக வாயிரத்த மாக்கினு னேறாய்
எழுந்தவரை வீரர்களை யெற்றினான் முற்றும்
செழுந்தவரைக் காக்குந் திறன். (109)

தேரேறி னார்பரியிற் றேர்ந்தேறி னார்கரியாம்
காரேறி னார்சினத்திற் காந்தினார் போரேறிப்
போந்து வளைத்த பொருவிலரைத் தண்டமதாற்
சாந்துபடச் செய்தான் தனித்து. (110)

அரிக்குலத்து மன்னில னங்கதன்வன் சாம்பன்
அரிக்குலத்த சிர்த்தலைவ ராரும் எரிக்குவப்பாம்
போர்க்களத்திற் போனார் புரிந்தொருவ ருக்கொருவர்
சேர்க்கவரார் சென்றார் சிறந்து. (111

Koviloor Digital Library

தொகுமரக்கர் வெள்ளந் துறைதுறையிற் றாவி
நகுமறக்க ணல்லார் நடந்தார் மிகுமப்
படைக்கடலுட் செல்லனுமான் பார்த்தா னகம்பன்
தடைக்கடங்கான் றன்வரவைத் தான். (112)

மலைக்கேற்ற வாயிரமா மாகழுதைத் தேரான்
கொலைக்கேற்ற தாருகனுங் கொண்டல் கலைக்கேற்ற
கந்தவலன் கொல்லக் கடுத்த வரக்கர்குலம்
வந்தவனைக் கண்டான் மதித்து. (113)

ஐந்தருக்க ணிந்திர னுமாழியுற்ற சுந்தரனும்
கந்தரத்தி னீலமுற்ற கந்தரனும் வந்தூரத்த
போரடுப்ப ரேனும் பொருது வலியுடைய
நீரடுப்ப னென்றான் றெழித்து. (114)

யான்தடுக்கே னென்னி லெழுதிரைவ ளாகமுற்றும்
வான்தடுக்கா வல்லரக்கர் வாழ்வையெலாந் தான்றடுத்துக்
கொல்லுமெனக் கொண்ட குறிப்பான் விடைத்தடர்த்துச்
செல்லுமெனச் சேர்ந்தான் சினந்து. (115)

தேரினொடி யானை சிறந்த பரிநெருக்கிக்
காரினொடு கால்கனல்சேர் காலமென வார்தொடர்ந்த
பைம்பொற் குழையான் பகைத்துவரத் தண்டதனை
யும்பர்ச் சுழற்று முருத்து. (116)

எற்றி யெறிந்தவெல்லை யெய்தினவு மெய்தவெய்த
முற்றும் படைகள் முறிந்துசிந்தச் சுற்றி
வயிரமுற்ற தண்டால் வதைத்தா னமரர்
செயிரகற்று சண்டன் றெரிந்து. (117)

அகம்பன்னஃ் காண அளவிறந்த கோடி
நகம்பன்னு மும்பலரி நற்றேர் சகம்பன்னும்
தண்டெடுத்த சீரான் சரிந்து விழச்சாய்த்தான்
விண்டெடுத்த தென்ன வியந்து. (118)

Koviloor Digital Library

படுகளத்தை நோக்கிப் பகுவா யதுக்கிச்
சுடுகனற்கொள் கோவிரதந் தூண்டி விடுகணைக்கண
மாரிமும்மை வீசி வழிமறித்து வந்தடர்த்தான்
மூரிமும்மைத் தீயாய் முனிந்து. (119)

சொரிந்த பகழிமழை தோண்மார்பு தம்மிற்
றெரிந்த வசனியெனச் சேரப் புரிந்தகண்டு
கண்டகன்றன் றேரிற் கழுதையொடு சாரதியும்
தண்டுகொண்டு தாக்கும் தகைந்து. (120)

வில்லாற் சிறந்தண்டு வீர மிவன்மாட்டுச்
செல்லாத் திறங்கண்டு சீற்றத்தான் கல்லாற்
புரிந்தபெருந் தண்டான் புகன்றெடுத்து நின்றான்
அரிந்தவரன்கண் டான் அடர்த்து. (121)

இன்றிவனை விண்ணூட்டி னேற்றி யிலங்கைமன்னை
வென்றிவனை யப்புரிந்து விண்ணோர்க்குத் துன்றுதுயர்
செய்விப்பே னென்று செறுத்து வருமவனை
மெய்வைப்பான் கண்டான் விளித்து. (122)

தாக்கினர் மற்றுமுற்றுஞ் சாரி திரிந்தடுத்தார்
தூக்கினர் தூக்கிச் சுழற்றினர் நீக்கி
நெருக்கினர் சாரி நிறைத்தார் சரித்தார்
தருக்கினர் சோரிசொறிந் தார். (123)

தட்டினர் கட்டித் தழுவினர் மேற்றாவிக்
கிட்டினர் சாரி கிளைத்துவந்தா ரொட்டினர்
காத்தார்க ளொன்றுங் கருதார் சினத்தினுற்றார்
ஆர்த்தார் வெறுத்தா ரடர்த்து. (124)

மெய்யைப் பகைத்தான் மிடியுடையான் மார்பதனிற்
பொய்யைப் பகைத்தான் புகுந்திடித்தான் வெய்யனகத்
தண்டால் விலக்கினன் தாக்குகரத் தோடுதண்டம்
தண்டாமற் கீழ்விழ்ந் தது. (125)

Koviloor Digital Library

கையோ டடற்றண்டு காசினியில் வீழ்ந்தவுடன்
வெய்யோ னிடக்கையின் வீச்சினுன் அய்யனட
லாகத் தடித்தா னசனிமலை வீழ்ந்ததெனச்
சேகிற் றடித்தான் சினந்து. (126)

அடித்தவனை நோக்கி யசனிநிகர் தண்டு
பிடித்தவனில் லென்று பெயர்ந்து முடித்திடக்கை
கொண்டெடுத்த மார்பினிடை குத்தினுன் மெத்திரத்தம்
விண்டடுத்த வாருய் மிக. (127)

மீட்டுஞ் செவிப்புலத்தின் வீசிப் புடைத்துயிரை
வீட்டுஞ் செயல்கண்ட மேலரக்கர் காட்டினுற்ற
கோளரியைக் கண்ட குறுவிலங்கின் கொள்கையெனத்
தானரியா ரோடியடைந் தார். (128)

மாண்டா னகம்பன் மடிந்தார் நிருதரெலாம்
மீண்டார் குரக்குவரர் வெற்றியுற்ருர் தாண்டும்
கொடித்தேரி யானை குதிரைப் படையை
மடித்தேறி ஞனிலக்கு வன். (129)

ஆர்க்கு மடலொலியும் அண்ண லிலக்குவன்தன்
போர்க்குஞ் சிலைநாண் பிறங்கொலியும் சீர்க்குன்ற
மன்ஞர் தெழிப்பொலியு மாகாத தென்னையென்ருன்
மன்ஞன வீரனறு மான். (130)

வீசினவாஞ் சேனைவர வேலையிடைத் தென்மேற்கி
ஞேசனையே யூங்கதவே ஞற்றுநின்ருன் பேசும்
அரச னதற்கிரட்டி யண்ணற் கிளையோன்
விரசு மதற்கிரட்டி மேல். (131)

மற்றவரர் நாலுமைந்து மானவர யோசனைதான்
உற்றவர வெஞ்சமரை யோட்டினுர் கொற்றவனுந்
தம்பிநிலே காணுன் தருதண்ணீர்ப் பாசியெனப்
பம்பிவரு மாயைகண்டான் பாங்கு. (132)

Koviloor Digital Library

இளையதம்பி சூழ விதுவோயா தென்ற
வுளைவுசிந்தை யூன்ற வுலந்தான் களைதலுறத்
துன்பமது நீங்கத் தொடர்ந்த சமரடுத்த
வெம்புகுறி கண்டான் வெகுண்டு. (133)

ஆனைகளின் கொம்புதழை யார மதனோடு
மானமணி பொன்கொழித்து வாரியே மீளும்
படைக்கலங்கள் வீசப் பறியாறு கண்டான்
அடைக்கலங்கொள் தேசான் அரன். (134)

ஆசைகளிற் சுற்றி யலையு மரக்கர் தம்மேல்
வீசுகணை மாரி மிகமுட்டி யோசையுல
கெங்கு முழக்க விசையூழிக் கால்பொழிகல்
எங்கும் விழக்கண்டா னேய்ந்து. (135)

மானச் சிலையரக்கர் மன்னும் படைமாரி
வானத்தின் முட்டி வருமவைதான் கானத்தின்
விண்மீன் விழுவனபோல் வீழ்வதனைக் கண்டடுத்தான்
பண்மேவும் ஞானப் பரன். (136)

சோணிதத்தி னாறுந் துடித்த நிணச்சேறும்
பாணிதத்து மாகடலிற் பாய்ந்துவரக் கோணும்
கவந்தத்தின் காடுகண்டான் காணு மினன்பால்
நவந்தத்தும் நூல்படித்த னன். (137)

சுழித்தெரியுங் காலிற் றுருவித் தொடர்வோன்
தழிக்கொள் குருதி தனைத் தாவிக் கிழித்துவரு
நாணுருமு கேட்டா னலிவருத்தந் தீர்ந்தவனுக்
காணுறமு னார்த்தான் கவிந்து. (138)

ஆர்த்தமலை கேளா வனுகு மனுமனெனும்
வார்த்தையுரை செய்து மகிழ்வள்ளல் பார்த்தவுடன்
வந்துவளங் கொண்டு வணங்கினான் தம்பிசரண்
வந்துவளங் கொண்டமைந்தா வான். (139)

Koviloor Digital Library

அரிகுலத்து வீர ரருக்கன் மகனும்
பிரிகுதற்கென் னெங்குப் பெயர்ந்தார் விரியிருட்கண்
சேனைவெள்ள மெங்கே சிறந்தனுமான் சொல்லென்றான்
ஞானவெள்ளம் பொங்கும் நலன். (140)

போயினவர் போயினவர் பொன்றப் பொருபோரில்
ஆயினவை யொன்று மறிந்திலமால் மேயினவர்
வந்தாற்றல் சொல்வார் வளமுற்ற போரென்றான்
சிந்தாற்ற லில்லாத் திறன். (141)

விந்தைசெய்வாய் வீரர் விரும்பவரு மைந்துடையாய்
சிந்தைசெய்வாய் தெவ்வர் திறல்தீரத் தந்திரத்தைத்
தெய்வப் படையாற் செறிப்பா யிவணென்றான்
மைவைப் படையா னயந்து. (142)

அன்னதனைச் செய்வனென வாயிரநா மன்தம்பி
தன்னதனை யொத்த சரந்தாங்கிப் பொன்னவரை
வில்லினன் தன்படையாய் வீசி யரக்கர்தமைக்
கல்லினன் தன்படையைக் காத்து. (143)

முக்கண்ணன் வாளிசென்று மூங்கி லுறுவனத்தைத்
தொக்கண்ணுந் தீதான் தொலைத்தவென மிக்க
அரக்கரிய நம்மை யடக்கண்ட தேவர்
கரக்கரியர் சூழ்ந்தார் கவிந்து. (144)

தேவடுத்த வேவிடுத்த செய்கைதனைச் சிந்தைசெய்யா
கோவடுத்தான் மாயையின்ம கோதரனுங் காவடுத்த
வானரத்தாம் சேனை வளமாய்க் கலந்துபுல்லத்
தானறத்தாம் வீரனின்றான் சார்ந்து. (145)

யாவர்க்குந் தீதிலவா யான வவைகண்டு
தேவர்க்குந் தேவன் சினந்தீர்ந்தான் காவற்
குரக்குவெள்ளம் வந்து குழுமவது கண்டார்
அரக்கனுள்ளத் தாத ரடுத்து. (146)

Koviloor Digital Library

இலங்கைமன்னை யெய்தி யெடுத்துரைத்தார் நீவிர்
விலங்கவென்னை நூறடுத்த வெள்ளங் குலங்களொடு [யணி
கொல்லவன்று மாவொருவன் கூறவென்றான் கொன்றை
வல்லவன்றன் வாளியென்றார் மற்று. (147)

என்சேய்க் குணர்த்து மெனவேற்ற தூதர்சொல்லை
வன்சேர் குணத்தான் மனம்சேர்த்துக் கொன்சேர்
இலக்குவனு மற்றோரு மெங்கென்றான் றூதர்
கலக்குவன சொற்றார் கவிந்து. (148)

வந்திலனி ராமன் மலையுள்ளான் மற்றையருஞ்
சிந்திலராய் வந்தார் செயலென்றார் மந்திரியாம்
மோதரன்று னெங்கென்றான் முற்றினான் காயமென்றார்
மாதரந்தா னென்றான் மதித்து. (149)

காலமுற்று மென்று கருது மரக்கன்சேய்
ஆலமுற்று நின்று னதையறிந்து மூலமுற்ற
வேள்விக்கு வந்தார் விரும்பரக்கர் பூசுரர்கள்
கேள்விக்கு மேலார் கிளைத்து. (150)

அம்பைமலர் பேர்சமிதை யாக்கி யளவில்லாத்
தும்பைமலர் காரியெள்ளுந் தூவினார் கொம்பொடுபல்
கார்நிறத்த வெள்ளாட்டின் காணுங் குருதியெண்ணெய்
ஏர்தரத்துச் செய்தா ரிசைந்து. (151)

வலஞ்சுழித்து நின்று வழங்கு மெரிதான்
நலஞ்சுழித்து நன்மைதனை நல்கக் குலஞ்சேர்
கொடுமையுடை வீரன் குறித்த முடிக்கும்
கடுமையுடன் சென்றான் கனன்று. (152)

விசும்பை யுலவ விழைமாயை மேலோன்
பசும்பொ னுலகர் பதைத்தார் தசும்புபடு
விண்ணடங்கி நின்றான் விரவார் விசயமுற்ற
வெண்ணடங்க வென்று னிரிந்து (153)

Koviloor Digital Library

அனையனுற்றான் மோதரனு மன்ன தறிந்தான்
வினையனுற்ற னிந்திரனும் வேடம் புனையனுற்றான்
வெள்ளைக் களபத்தின் மேலமரர் சூழவந்தான்
கொள்ளைக் களத்தைக் குறித்து. (154)

அரக்கர் மனிதர்குரங் கானவைக ளெல்லாம்
உருக்கி யுலைப்பமென வுன்னித் தருக்கினுடன்
போரெடுத்து வந்தார் பொருந்து குரங்கினங்கள்
வாரெடுத்தங் கோட வலித்து. (155)

கோடதுற்ற நான்குடைய குன்ற மிசையேறி
ஆடலுற்ற விந்திரன்பா லாந்தேவ ரூடடுத்து
வன்கலாங் கொண்டு மறித்துச் சமர்புரிவ
தென்கொலா மென்று ரிரிந்து. (156)

அனுமன் றனைப்பார்த்தா னுழிவரன் றம்பி
முனிவர்சுரர் முற்ற முனிந்து நனிவருந்திப்
போர்புரியுங் காரணமென் போற்றி யுரையென்றான்
சீர்புரியும் தாரான் றிகைத்து. (157)

இன்ன வியல்பி னிலக்குவனை யேற்றெய்தான்
முன்னவரு மன்னவரன் முற்றுபடை பொன்னிவரு
மால்வரையி னும்குருவி வந்து மறைத்தவெனக்
கால்வரைய நின்றகணை கள். (158)

கோடியுற்ற கோடி கொடுங்கணையாம் கூட்டங்கள்
மூடியுற்ற மேனி முழுகவே யூடியற்ற
லொன்றுணர கில்லா னுணர்வொடுங்க நின்றடைந்தான்
தன்றனையின் தம்பிதரத் தான். (159)

அனுமன்று மிந்திரனே யாக்கினு னின்ன
வெனவுன்று வெற்றற் கெழுந்து தனுமன்றற்
கோடிகணை தைக்கக் குமுறி நிலமடுத்தான்
வாடிநினை வுற்ற மறந்து. (160)

Koviloor Digital Library

அருக்கன் சே யாடகத்தி னுங்குன் றலர்ந்த
முருக்கவன மென்னநெய்த்தோர் மூழ்கத் தருக்கியுற்ற
வெஞ்சரங்க டைக்க விளங்குருக்குக் கண்ணுடையான்
நெஞ்சரங்க வீழ்ந்தா னிலத்து. (161)

அங்கதன்றன் மேனிபதி னுயிரத்த வேயழுத்தச்
சிங்கமிடி யுண்டதெனச் சேர்நிலத்தான் புங்கம்
அடித்தலைத்துச் சாம்பற் கணிமார் துளைக்கப்
படித்தலத்துச் சாய்ந்தான் பதைத்து. (162)

நீலன் கணைக ணிறம்புக்க நேர்சாய்ந்தான்
காலன் தனையிடபன் கண்டுநைந்தான் ஆலப்
பகழிக் கசைந்தான் பனசன் குமுதன்
இகமுற்று வீழ்ந்தா னிரிந்து. (163)

வேலையியங் கத்தடுத்த வீரன் தரைவீழ்ந்தான்
வாலைமயிந் தத்துவிதர் வாழ்வில்லார் காலன்
தொழிற்கவயன் மாண்டான் துதிகே சரியும்
பழிக்கவயம் பூண்டான் பதைத்து. (164)

விந்தமடு தோளான் விநதன் சதவலியும்
வந்தவிடும் பன்கெந்த மாதனனுஞ் சந்தமிக
மன்னுஞ் சுடேணன் மதிக்கும் வலியுடைய
வன்னெஞ்சர் வீழ்ந்தார் மருண்டு. (165)

மற்றைவரை வீரர் வடிக்கணையி னுமழையால்
முற்றவர வீய முழங்கிரத்தம் மற்றும்
திரைக்கிணங்க நேரச் சிறந்த கணைக்குக்
குரக்கினங்கள் கோடிபடுக் கும். (166)

வளைக்குமடல் மிக்க வரன்படைக்கு முண்டோ
வொளிக்குமிட மின்றி யுருமின் வளைத்துவித்தும்
வாளடுக்கும் வாளிகளால் மன்னுமுளை யாற்புடைத்த
கோளடுக்குங் கோடரங்கட் கு. (167)

Koviloor Digital Library

விண்ணடுத்த தாகும் விரிந்த படைவெள்ளம்
கண்ணெடுத்த நல்விருந்திற் கண்டடுத்த பண்ணவர்கள்
மாகளிப்பி னோடு மகியிற் செலற்குரிய
வாகளிப்பா ரக்கணத்தின் வந்து. (168)

பார்படைத்த வன்படைக்குப் பாங்கடுத்துப் பூசைசெய்தீர்
நீர்படற்கு நேரோ நெடியோன்றன் பேர்படைத்த
வீரவர ரென்றால் விளிவேது காரணந்தான்
சேரவரு மென்றார் சிறந்து. (169)

எங்களுக்காம் நன்மை யியற்ற வுலகமதில்
உங்களுக்காம் நன்மை யுடலடைந்தீர் செங்கணுடை
நாயகனுக் காக நணுகிக் களத்தடுத்தீர்
ஆயகருத் தென்றா ரடுத்து. (170)

வெங்கண் குரக்கினொடு மேலுமிளை யோன்விளிந்தான்
பொங்கு மிராமன் புரத்தனென்றான் சங்கமெடுத்
தூதினான் தாதைக் குகந்துரைத்தான் போர்த்திரத்தைக்
காதினான் கேட்டான் களித்து. (171)

இறந்திலனி ராம னெனத்தந்தை கூறத்
துறந்திலனேற் றம்பி துயரச் சிறந்தநண்பர்
சாகத் தரிக்குமோ சார்ந்திருக்கி னென்றுரைத்தான்
மாகத் தரிக்கரியா வான். (172)

அன்னசிந்தை கொண்ட வரக்க னமைந்திருந்தான்
சொன்னமைந்தன் தன்றளியிற் சூழ்ந்திருந்தான் என்னை
அடிமைகொண்ட நாத னடற்படைக்காம் பூசை
கடமைகொண்டு செய்தான் களித்து. (173)

செய்யமலர்க் கைத்தலங்கள் சேப்பத் திரற்படைகட்
கையமிலாம் பூசை யளித்தபின்னர் மொய்பகலாப்
போர்க்களத்தைச் சேரப் புரிந்தான் அவன்திறத்தை
யார்க்களத்தற் காகு மறிந்து. (174)

Koviloor Digital Library

கொள்ளிதங்கு தீமருளக் கொண்டான் கனற்படையை
அள்ளிநுங்கு மாமிருளை யன்றழித்தான் எள்ளியுற்ற
வெங்களத்தைச் சேர்ந்தான் விழித்தா னுலகோர்க்கு
மங்கலத்தைச் சார்ந்தான் மதித்து. (175)

நோக்கினன் பேர்திசையை நோக்கித் திருமனத்தி
னூக்கினன் போர்விசையை யோங்குதிரம் போக்கும்
கிணத்தழுங்கப் புக்கான் நிகரில் தலைவர்
கணத்தழுங்கக் கண்டான் கனன்று. (176)

சுக்கிரிவன் றன்னைத் துணைக்கண் கொடுநோக்கி
நேக்குருகி நின்று நெடிதுயிர்த்துப் பக்கமுற்ற
மாருதியைக் கண்டான் மயங்கின னீயுமிச்சொல்
நேருதியோ வென்றா னினைந்து. (177)

கடலைக் கடந்து கலக்கி யரக்க
ருடலைக் கடைந்த வுனைத்தான் நடலைத்
தொழிலுடையான் வாளி துறக்குமோ வென்றான்
எழிலுடைய வள்ள லெடுத்து. (178)

முன்னையுற்ற தேவர் மொழியு முனிவர்சொல்லும்
பின்னையுற்ற சானகிசொல் பேரறமும் புன்மைத்
தரத்தோங்கு மென்னாற் றகைந்தவோ வென்றான்
கரத்தோங்கு வில்லான் கனன்று. (179)

புன்றொழிற்றான் கொண்டேன் பொறுத்தே னரசையதாற்
கொன்றொழித்தேன் றந்தையரைக் கொள்கையின்றி யின்
இத்தனையாம் வீரர்க் கிடுக்க ணளித்திருந்தேன் [றொருக்கி
மத்தனெனைப் போல்வாரெ வர். (180)

தமையன் றனைக்கொன்று தம்பி தலைமைக்
கமையநல்கி யானதெலா மற்றேன் கமைபிடித்து
நின்றுங் களையிழந்தே னோரா முடற்சுமையை
என்றுங் களைதவிலா தேன். (181)

Koviloor Digital Library

விடைக்கணுறு நாப்பண் விடைகிடந்த தாய்த்தீ
தடைக்கணுகு மங்கநனைக் கண்டான் படைக்கலங்கள்
தாங்குங் கடையேன் தடையி லடைக்கலத்தைத்
தாங்குங் கடமையென்றான் தான். (182)

இரத்தவெள்ள மெங்கு மிசைய நடுவண்
தரத்தசிங்க மென்னத் தனித்துப் பொருத்தமிக்க
நம்பிதனை நற்றவரு நாடற் கரியபுயல்
தம்பிதனைக் கண்டான் சலித்து. (183)

பொருமியகம் பொங்கப் புலர்ந்தான் புகைந்தான்
குருமணித்தன் மேனி குலைந்தான் தருமமன்ன
செங்கண் புடைத்தான் திருவி லுருமிடியால்
பொங்குமர மொத்தான் புரிந்து. (184)

உயிர்த்திலனோர் நாழி யுணர்ந்திலனு மொன்றும்
வியர்த்திலனுக் கண்விழிக்கான் விண்ணோ ரயர்த்திலன்கொல்
என்றஞ்சத் தாளங்கை யேற்றசைய லன்றிநின்றான்
மன்றஞ்சத் தாரையருள் வான். (185)

தாங்குவரார் தம்பி தனைத்தழுவி யேங்குதன்னை
வாங்குவரார் வாயால் வழங்குவரார் பாங்குவர
வுள்ளார்க்குத் தீர்வா றுறவாரு மின்றிநைந்தான்
நள்ளார்க்குத் தாவா னலன். (186)

கவந்தபந்தத் தோடு கணவர்தமைக் காணார்
சிவந்தகண்ணார் தேடித் திரிவார் நிவந்துவரு
சாதகத்தி னீட்டமொடு சாரும் நரியலது
தீதகற்று வாரார் தெரிந்து. (187)

வானகத்து மாதர் வயிரலைத்த கண்மழைநீர்
சோனையுற்ற தேவர் தொடர்ந் தழுதார் எனை
திரிவரிர்ப வெல்லாந் தெரிந் தழுவ காணின்
உருவனித்த னென்பதறிந் தோ. (188)

Koviloor Digital Library

முகைநாண மலருடையான் முக்கணற்கு மிக்க
நகைநாணின் மற்றையரென் னாட்டும் தொகைநாண
நின்றசுரர்ச் சொல்லியெனை நீண்ட பகைபாவம்
அன்றசுரர் கண்கலுழ்ந்த வாம். (189)

அண்ண லறிதுணர்வி னாய வுயிர்ப்பனாகிக்
கண்விழித்துத் தம்பிதனைக் கண்டணைந்தான் விண்ணையுற்றான்
மீளாண்மை யில்லான் விளிந்தா னெனவீழ்ந்தான்
தாளாண்மை வில்லான் றளர்ந்து. (190)

எந்தையினும் வீவி னிருந்தே னுலகெல்லாம்
சிந்தையினும் செல்வம் சிதையாதே னுய்ந்திருந்தாய்
நீயென்று நின்றே னிகரில்லா யென்னுயிரும்
போயொன்று மென்றான் புலர்ந்து. (191)

தாயோநீ தந்தையுநீ தக்க தவநீயே
சேயோனீ தம்பி திருநீயே போயோபின்
அஞ்சுவித்தா யென்னை யடுத்தே னுனைப்பற்றி
யெஞ்சுவித்தா யெற்கா மிசை. (192)

உளறுகொண்ட மேனி யுடையா யுயிர்காணேன்
ஆறுகொண்டேன் மேனி யழுங்கினே னேறுகொண்டே
னுய்வதிங்காய் நின்றே னுடையா யுனையிழந்தும்
மெய்வதங்கே னென்றான் விளித்து. (193)

பயிலுமுற்றாங் காலமறு பத்தினொடு நான்கும்
அயிலுமெற்கே நல்கி யயிலாய் துயிலமுற்று
முன்னாத நீயே யுணராத் துயில்கொண்டா
யென்னாகு மென்றா னெடுத்து. (194)

வேள்விக்குச் சென்றரன்றன் வில்லையிறத் தோர்விடத்தை
வாழ்விக்கு மென்று வருவித்தேன் சூழ்வித்தெற்
சுற்றினவர்க் காக்கஞ் சுடுவித்தே னென்றுரைத்தான்
பற்றினவர்க் காக்கம் பரன். (195)

Koviloor Digital Library

மண்மேற்றாங் காதலினால் மாதர் முதலெவர்க்கும்
புண்மேற்றீத் துன்பம் புகுவித்தேன் பெண்மேற்றான்
காதலினா லென்னை யிவர் காணாத் துயரளித்தே
னாதலினா லென்னையென்றா னேய்ந்து. (196)

மாண்டா னிலக்குவனும் வாழே னொருபோதும்
ஆண்டா னிலனிலத்தை யாள்பரதன் வேண்டா
வினையடுத்தார் நல்லறத்தை வேண்டியென்னை யென்றான்
தனையடுத்தார் நல்லறத்தாம் தாய். (197)

அறந்தாயுந் தந்தைசுற்ற மானவகை யெல்லாந்
துறந்தாயு மென்னைத் துறவாய் அறிந்தாயென்
பின்பற்றாய் வந்தாய் பிறிவாற்றா நீயிறந்தா
யன்பற்றே னென்றா னறிந்து. (198)

சான்றோர்சொல் மாதுந் தரமிலரக் கன்சிறையா
யான்றோ ரறமு மவற்கென்னின் முன்றா
முலகமொன்றோ தீராதே லூற்றவர வீரம்
இலகுமென்றான் வள்ள விரித்து. (199)

வேலை யகழ்க்கும் விராதன் கரனுக்கும்
காலைநிகர் காகமதின் கண்மணிக்கும் மூல
மரத்தேழ் முதலுக்கும் வாலிக்கு மேயென்
சரத்தாழ் வலியென்றான் தான். (200)

இருந்தேனே லிந்திரசித் தென்பான் முதல
பெருந்தேரார்க் கென்னும் பிழைப்பு வருந்தாது
வெல்லுதிற லூற்காய் விழைந்தே னெனதுயிர்க்கும்
கல்லுதிற லென்றான் கனன்று. (201)

மாதானஞ் சுற்ற மறையோர் முதலெவரு
மேதானா ரென்று மிரங்காமற் றாதாபோய்ப்
பொன்முடிசூட் டுந்தானம் போதுவா யென்றுரைத்தான்
மன்முடிசூட் டுந்தாள் வலன். (202)

Koviloor Digital Library

பாசமுற்றச் சுற்றிப் படுத்தும் பகையடுத்து
நாசமுற்ற போதும் நடந்தேனன் நேசமுற்றார்
செய்வனதான் செய்யேன் சிறந்தவரர் தேவர்முற்றும்
வைவனதான் செய்ததென்றான் மன். (203)

கொடுத்தமுடி வீடணர்க்குக் கொற்ற மதனை
முடித்தபடி செய்யேன் முடிவேன் படித்தபடி
பொய்மையிலே நின்றேன் புகழு மிலதென்றான்
மெய்மையிலே நின்றான் மெலிந்து. (204)

என்றென்று விம்மு மிடராங் கடலடுத்துச்
சென்றொன்று மிந்தியமுந் தேய்வெய்தப் பொன்றான்று
தம்பிதனைச் சார்ந்து தழுவித் துயில்வுற்றான்
நம்பிதனை சார்வார் நலன். (205)

கண்டார்கள் விண்ணோர் கமல விழிபுடைத்துச்
கொண்டார்க ளெண்ணே குலைகின்றா ருண்டாகா
துன்பாலிற் றுன்ப முளதாமோ வெங்கண்மிசை
அன்பாலித் துன்பென்றா ராய்ந்து. (206)

உன்னை யறியே முலகின் றிறமறியேம்
பின்னையறி யேமுன்னும் பெற்றியதே நின்னை
வணங்கு நெறியாம் வழியறியே மென்னை
யிணங்குநெறி யென்றா ரெடுத்து. (207)

அரக்கர் குலமறுத்தெ மல்ல லகற்றென்
றிரக்க வரசர்குல மேற்றுப் புரக்கும்
அறத்தை யளிக்கு மருட்கடலே மாயைத்
திறத்தை யழிக்கவென்றார் தேர்ந்து. (208)

ஈன்றுலவு மெம்மிடுக்க ணின்றிப் புரந்தருள்வாய்
மூன்றுலக முற்று முதல்வோனே யேன்ற
மனிதனென்ற மாயம் வழங்காது காப்பாய்
புனிதவென்றார் தேவர் புகழ்ந்து. (209)

Koviloor Digital Library

அண்டம் பலவு மனைத்துயிரு மாக்கியவை
யுண்டங் குலவு மொருமுதலே தெண்டிரைசூழ்
பாற்கடலிற் கண்வளரும் பண்ணவனே வந்தடுத்தாய்
நாற்கடல்சூழ் பாரி னயந்து. (210)

அம்பரிடற் காகியுறு மாபத்தைத் தீர்த்துவரு
மெம்பரனே யெங்கட் கிசைந்தபடி யின்ப
மளித்தருள்வா யென்று ரருட்கடலைக் கண்டு
களித்தருள்வார் நன்று கலந்து. (211)

இன்படுத்த தேத்தி யிமையோ ரிடருழந்தார்
அன்படுத்த வைய னடங்கினன் துன்படுத்த
தூத ரிராவணற்குச் சொல்வா ரடுத்தனர்கள்
பாதகராஞ் சிந்தை பரிந்து. (212)

என்வந்த தென்ன வெடுத்தவரத் தூதர்சொல்வார்
நின்மைந்தன் வாளி நிரப்புதலால் மன்வந்த
தம்பியுயிர் தீர்ந்த தனைக்கண்டு தீர்ந்ததுவாம்
நம்பியுயி ரென்றார் நயந்து. (213)

பிரமாத்திரப் படலம் முற்றிற்று.

பிராட்டி களங்காண் படலம்.

பொய்யார்கள் தூதரெனப் பொங்கு முவகையினன்
செய்யார் நிதிவிசிச் சேர்ந்தபடி கையார்
வரைமேல் முரசேற்றி மன்னகரிற் சாற்றி
விரைவீர்க ளென்றான் விழைந்து. (1)

அந்த நெறிக்காம் அரக்கன் மருத்தனைநீ
மூந்தி யரக்கர் முழுதுடலும் சிந்திவரச்
சொன்னபடி யன்னவத்திற் தோயப் படுத்திடென்றான்
அன்னபடி செய்தா னவன். (2)

Koviloor Digital Library

தெய்வகிகர் மானம் சிறந்தேற்றிச் சானகியை
நொய்மனிதர்க் காட்டி நுவல்கவென வெய்யவர்கள்
அப்படியே செய்தா ரருட்கமலை கொண்டதுய
ரெப்படியான் சொல்வ தெடுத்து. (3)

கண்டாள் கணவன் கவினுமுடல் கண்டமங்கை
யுண்டாள் விடமென் றுயிரோய்ந்தாள் தண்டா
மரைப்பூவிற் சேர்திையை மானப் பதைத்தாள்
விரைப்பூவிற் சேர்தாய் மெலிந்து. (4)

மங்கையழ வானுட்டு மாதரழு தார்மாயன்
தங்கையழ வான்பொறியுந் தானழுதாள் கங்கையழ
நாமா தழுதாள் நகுமரக்கி மாரழுதா
வேமாறு சிந்தை மெலிந்து. (5)

நினைப்புயிர்ப்பு நீத்தாளை நீராற் றெளித்தா
ரினத்தரக்கி மார்களெடுத் தேற்றக் கனத்தகுழல்
கண்டாள் கணவனிலை காணுள் தனதுயிரை
அண்டாள் துயர்க்கடலி னுழ்ந்து. (6)

அடித்தாள் தன்தடத்தி னுனெருப்பிற்
கொடித்தா னெனப்புரண்டாள் கூவித் துடித்தா
ளுயிர்கரப்பச் சோர்ந்தா ளுழன்றாள் சுழன்றாள்
செயிர்கரப்பச் சேர்ந்தா டிகைத்து. (7)

விழுந்தாள் புரண்டாள் வியர்த்தாள் வெதும்பி
எழுந்தா ளிருந்தா ளிரிந்தாள் கொழுந்தாவென்
றேங்கினாள் கோவென் றெடுத்தழைத்தாள் மிக்கதுயர்
தாங்கினாள் கோதிலளென் தாய். (8)

உறமேவு காத லுனக்கே யுடையார்
புறமேது மில்லாரைப் போக்கி மறமே
புரிவாராம் புல்லர் பொருந்த லறமோ
தெரிவாரா ரென்றாள் திகைத்து. (9)

Koviloor Digital Library

முதியார்செய் வேத மொழிந்தபடி யல்லால்
புதியார்செய் யேதம் பொருந்தார் மதியார்
அவர்க்கு விதிவருமோ வம்மாவென் றேங்கும்
தவர்க்கு நிதியுறுமென் தாய். (10)

கொடியே னிவைகாணக் கூடுமோ வையா
முடியா நமனே முறையோ முடியா
தெழுவா ளெனைவிடுத்தா யென்கணவா வென்று
ளழுவாள் துயர்க்கடற்க ணாழ்ந்து. (11)

எண்ணுகு மென்ன விருந்ததுவு மித்தனைநாள்
புண்ணுகு மேனி யொருந்தவோ மண்ணோர்க்
குயிராதல் செய்திமையோர்க் குற்ற வலியே
செயிராத லென்னையென்று டேய்ந்து. (12)

மேவிக் கனன்முன் மிதிலைத் தலைவந்தென்
பாவிக் கரம்பற்றும் பான்மையா லாவிக்கோர்
தீங்கடுத்தா மாமலர்வாழ் தேவிக் கமுதமெனும்
பாங்கடுத்தா யென்றாள் பரிந்து. (13)

உய்யா ளுளைவா ளுயிராதுங் கோசலைமா
னையா விளையோர்க்கு மன்னவையே மெய்யா
வினையெண்ணி விட்ட வெஃறியாள்கை கேசி
தனையெண்ண லென்னையென்று டாழ்ந்து. (14)

தகையான நன்னகரிற் சார்வா யெனவும்
வகையாகு மென்றெடுத்து மான்பின் புகையாடும்
காடுபுகச் செய்து கடிய துயர்தந்தேன்
நாடு புகழென்றாள் நலிந்து. (15)

இன்றீதல் செய்யே யிறத்தல் வருமானே
நன்றீதல் செய்யென்றே நாயடியேன் நின்றீவ
துன்னையுற்ற தாஞ்செருவி னேய்வடுக்கச் செய்வதுவோ
வென்னையுற்ற தென்று ளிரிந்து. (16)

Koviloor Digital Library

மேதாவி யாமிளையோய் மேலை விதியதனுல்
நீதாவு மாகடத்திற் சேருநாள் நீதானுல்
முனமுடிப்பா யென்றவனை முன்கருத்தை முற்றினையோ
சொன்முடிப் பாயென்ரு டுதித்து. (17)

பூவுந் தளிர்தொகுத்த பொங்கணைமே லங்கணை
நீவித் துயிலவைத்த நீகொடியார் ஏவின்
தலைவந்த மெல்லணைமேற் சார்ந்தனையே யென்ருள்
அலைவந்த மெல்லியலென் ஆய். (18)

நெய்யார் பெருவேள்வி நேர்ந்து நிரப்பியதாற்ச்
செய்யார் பெருநாடு தேர்ந்தளித்தல் மெய்யாகும்
வாசகமு மாறியதா மாபாவி யென்னிடத்தாம்
நேசமதா லென்ரு ணினைந்து. (19)

மழுவாள் வரினு மதிக்கா மனத்தேன்
அழுவா னிடர்போக யானும் விழுவேன்தன்
மேனிகண்டன் மீதிலென வீழ்தற் கெழுவாடன்
ஞனிகண்டு சொல்வா ளடுத்து. (20)

மாடுற்று நோக்கி விளைந்த வரக்கியரைப்
பாடுற்று நோக்கிப் பரிந்தணைந்து கூடிச்
செவியிலுரை செய்வாள் திரிசடையா மென்னச்
சவியிலுறு நேயத் தவள். (21)

மாயமான் வந்த வகையுஞ் சனகனன்பும்
போயமா நாகமது பொன்றியதும் நீயமா
கண்டடுத்தா யின்னும் கருதிலையோ மாயமெனக்
கண்டடுத்த நன்மொழியே காண். (22)

கண்ட கனவும் கமலை சினகற்பும்
கொண்டரக்கர் பாவக் கொலைத்தொழிலு மண்டர்கட்கு
நாயகற்காம் வீர நலமும் மறந்தனையோ
வாயவற்கு முண்டோ வழிவு. (23)

Koviloor Digital Library

ஆழியா னாக்கைதனி லம்பொன் றி மில்லாமை
வாழியாய் காண்டிதம்பி வாண்முகந்தான் ஊழி
இரவியெனப் பற்றி மிசைந்த வுயிரும்
கரவிலெனச் சொற்றாள் கனிந்து. (24)

வீய்ந்துள்ளான் வீரனெனில் வேண்டுலக மீரேழும்
தீய்ந்துள்ளாம் சேர்ந்தறத்தாந் தெய்வமென்னும் ஆய்ந்தவரன்
எண்கண்ணான் முன்னுயிர்க ளெல்லாம் வெருவுமன்னை
நின்கண்ணாற் காண்பாய் நினைந்து. (25)

மாருதிக்கு மாரகமோ மங்கை நினைதுவரம்
சீருதிக்கு மாகாதேற் சேர்கற்பென் னேருதிக்கும்
நான்முகன்ற னத்திரத்தி னாலாம் நலிவுகெடும்
தேன்முகந்த கூந்தலென்று டேர்ந்து. (26)

தேவர்களைக் கண்டேன் சிரஞ்சேர்த்த கையுடனே
மூவர்களைக் கண்ட முறையடுத்தும் ஆவலித்தல்
எய்துகின்றா ரஞ்சலன்னை யேற்றகிணைத் திற்கடல்தான்
எய்துகின்ற தென்னையென்று ளேய்ந்து. (27)

மங்கலந்தா னிங்கினரை வாழுமுயி ரில்லவரைக்
கொங்கலர்ந்த மானங் குறிக்கொள்ளா திங்கிவையே
காரணந்தா னென்றாள் கருத்துடைய சானகியும்
ஆரணந்தா னென்று ளறிந்து. (28)

அன்னயமா முன்னுரைத்த வான செயலெல்லாம்
நன்னயமா முன்னருளா னானுயர்ந்தே னின்னம்
இரவொன்று நிற்பே னெடுத்த மரணம்
கரவொன்று மென்றாள் கவன்று. (29)

நாணந் துறந்து நவையில்லா விற்கேற்ற
பூணுந் துறந்தும் பொருசிலையாற் காணும்
விருப்பினுயிர் காத்தலன்றி வேறென்னு மென்றாள்
பொருப்பினுயர் கற்படுத்த பொன். (30)

Koviloor Digital Library

தையலையி ராமனுடல் தைத்திடுவேற் கண்ணுளே
மெய்யலைய மானமதை மேற்கொண்டார் மெய்யுயிரைப்
பூவுலகின் விட்டுப் பொருந்தாச் சடங்கொண்டு
தாவுநமன் றூதரையொத் தார். (31)

பிராட்டி களங்காண் படலம் முற்றிற்று.

மருத்துமலை படலம்.

போயினன் செய்ய புலவர்கோ மானுரையா
லேயினவை செய்யு மிலங்கையர்மன் மேய
வுணவுகொண்டு மீண்டா னுயர்களத்திற் சேர்ந்தான்
தணவுகொண்டு நிற்றலிலா தான். (1)

நோக்கினு னண்டார் நுவலுமூல கம்படைத்தோன்
வாக்கினல் மாண்ட வரன்பகழித் தாக்கினுற்
பட்டழிந்தா ரென்றுன் பகைத்தவிட முண்டவன்போற்
றட்டழிந்தான் சிந்தை தளர்ந்து. (2)

விளைந்தசெயல் காணுன் வெறிதுயிர்த்துச் சிந்தை
யுளைந்துயிர்த்தா ளுவி யுலைந்தான் விளைந்துவரு
பேய்க்கணங்கள் ஞாளி பிரிந்திரிய வந்துகண்டான்
றாக்கணங்கு சேர்வான் றனை. (3)

கண்டடுத்தான் வேளைக் கருது மிளையவரன்
விண்டடுத்த தோளை விழைந்தணைத்துக் கொண்டடுத்த
வீரன்பி னுற்ற விதங்கண்டு சோர்வுற்றுன்
சீரன்பி னுற்றுன் தெரிந்து. (4)

ஆயினவா மின்னேர்க் கழிவோதா மாவியதும்
போயினவா றில்லையெனப் போற்றினுன் நேயநலம்
நீயுநிலை பேணுன் திருமா லுடலிற்புண்
டோயுநிலை காணுன் றுதித்து. (5)

Koviloor Digital Library

அந்தணன்ற னத்திரத்தி னாகும் செயலிதுவும்
இந்திரசித் தெய்தா னிளவற்கா னொந்திரிந்தான்
வள்ளலெனை வெண்ணி மயங்கி யிதுதீர்த்தற்
குள்ளலெனை யென்றா னுருத்து. (6)

உள்ளிதுவாந் துன்பத் துடைய வுறக்கமன்றோ
தெள்ளிதுதான் சேர்ந்தபின்னைச் செய்வதென்னோ வள்ளி
தம்பிக்குத் துன்புவரிற் றங்கா னெனமனது [யனே
வெம்பிக் குழைந்தான் மெலிந்து. (7)

பாசமிற்ற தென்னப் பதுமத் தவன்படையும்
நாசமுற்றும் கம்பி நடுங்காதான் வீசமுற்றும்
போர்க்களத்தின் வீழ்சேனை போன்றதா மென்றுரைத்தான்
சீர்க்களித்த சிந்தைத் திறன். (8)

உணர்வதற்கு முன்ன முயர்ந்த துதவும்
துணைவருற்ற ரன்னவரைச் சூழ்ந்து கொணர்வனெனக்
கொள்ளிக் கரத்தான் குதித்துதிர வெள்ளத்தாம்
கொள்வத்துச் சென்றான் குறித்து. (9)

வாய்மடித்துக் கைமுறுக்கி வன்கண் சினத்தினடு
தீய்மடுக்கக் குன்றந்தோள் நீண்டமழை யாயிரத்த
வானையுற்ற வீரத வமளி மிசையனுமான்
மோனமுற்றல் கண்டான் முனிந்து. (10)

கண்டுயருற கண்கள் கலுழி யெடுத்தணைய
வுண்டுயிரென் றுன்னி யுடற்கணையை விண்டுதிரப்
புண்ணினின்றும் வாங்கிப் புனைந்தகொண்ட லீர்கொணர்ந்தா
னெண்ணிநின்றா னிட்டா னிசைந்து. (11)

உயிர்ப்புதித்த முன்ன முரோமஞ் சிலிர்த்த
வியர்ப்புதித்த கண்விழித்த மேனி பெயர்த்துடனே
வாய்புனலா னேர வரதன் றனைத்துதித்தான்
தேர்ப்புனலாற் கண்க டொடுத்து. (12)

Koviloor Digital Library

அழுகை யுவகை யடுத்த வரக்கற்
றழுவி யுவந்து தரத்தோய் வழுவிலனோ
வள்ளலென்று னன்னோன் வலிய னெனவுரைத்தான்
உள்ளமொன்றி நின்று னுவந்து. (13)

அன்புதம்பி மேலா யறிவை மயக்கவையன்
துன்புதம்பித் தாயிருந்தான் றேன்றியபின் னென்புகுமோ
வென்பதனைத் தேறே னெனவுரைக்கச் சாம்பவனும்
அன்பனிலை சொல்கவென்று னய்ந்து. (14)

அறிந்ததிலை யன்னவனை யாக்கைநின்று மாவி
பிறிந்ததிலை பேணியதோ பெற்றி தெரிந்ததிலை
என்றுரைக்க வன்னோ னிசையான் மரணமென்றான்
நன்றுரைக்கத் தேட நயந்து. (15)

அன்னவனைக் கண்டா லரக்கர்க் கதிபதியே
மன்னவனை வாழ்வுதரும் வாய்மையுளான் என்ன
உடனடுத்துக் கண்டா ருயர்சாம்பன் றன்னை
மடனடுத்தார்க் கண்டாத வர். (16)

எரிகின்ற மூப்பினையந்து மேவடுத்த தானும்
அரிகின்ற துன்பத் தடங்கித் தெரிகின்ற
மம்மர்வரு சிந்தை மயக்கா லடுத்தவர்கள்
எம்மவரென் றெண்ணு மிசைந்து. (17)

அரக்கனோ வென்னை யடுத்தா ளரசோ
விரக்கத் தருளவந்தா ரேவர் வரக்கடவர்
கள்ளரிலை சென்றார் கவின வருபவர்கள்
தள்ளரிய ரென்றறிந்தனைத் தான். (18)

வந்தயலி னின்று மலையருவி மானுமெனச்
சிந்தியகண் ணீரர்களைத் தேற்றியே யந்தமுடன்
காடினவர் வீரர் நலத்தடுத்தீ ராரென்றான்
வீடணனோ னென்றான் விழைந்து. (19)

Koviloor Digital Library

மற்றவைய னின்ற வரதனியா றென்றுரைக்கக்
கொற்றவனு மான்வணக்கங் கூறினு னிற்றிலமா
லய்யவென வேம்ப லடைந்தா னருண்மிகுத்த
செய்யவனும் சாம்பன் றெரிந்து. (20)

விரிந்தவரன் தன்படையும் வேத முதலாம்
அரிந்தமனைச் சென்றடுக்கா வாற்றல் தெரிந்தனமுன்
அன்னுன் செயலை யறிய வுரையென்றான்
மன்னு னுரைத்தான் மதித்து. (21)

அன்னவன்றன் தன்மை யறிந்தா லடலுறுமோ
வின்னவுயி ரொன்று மிருவர்க்கு மின்னதனைத்
தாழவர லென்னையினிச் சார்ந்து மருந்துகொண்டு
வாழவர லுன்னவென்றான் மான். (22)

எழுபதெனும் வெள்ள மிராம னிளையோன்
முழுதுலக நல்லறமு முற்றும் வழுவலிலா
நான்மறையும் வாழும் நயத்த பொழுதிதுவே
தேன்மலருந் தாருடையாய் செல். (23)

பின்புகட லென்று பெயர்ந்தடுக்கின் யோசனையு
மொன்பதி னுயிரந்தா னேக்குறியே லன்பின்
இமயமலை நேருமுன மேற்றபுகை தாண்டிச்
சிமயமுள பொற்கூடஞ் சேர். (24)

இம்மலையை யம்மலையி னேற்பி னிடதமெனும்
செம்மலையா மம்மலைபோற் சேர்ந்தடுக்கி னெம்மலைக்கும்
மேலாம் வடமலையை வெற்பியாய் கடைப்பாய்
மாலாம் பெருமை மறித்து. (25)

மேருவரை தான்கடந்து மேற்புகன்ற யோசனையும்
நேரவர லெகிரி நின்றடுக்கும் மாருதியே
நன்மலையா மப்பாலி னுலா யிரம்புகையிற்
செம்மலையாம் நன்மருந்தைச் சேர். (26)

Koviloor Digital Library

மாண்டாரை யுய்விக்கு மாமருந்தொன் றும்வகிராக்
கீண்டாரைச் சேர்க்குமொன் று கேடில்படை மீண்டேகச்
செய்துறவ தொன்று திருவுருவை யாக்குமொன்று
மெய்துறவை யென்று னிசைந்து. (27)

இன்ன மருந்தொருநான் கேற்ற பயோததியை
யுன்னமரர் மத்தித்தார்க் குற்றடுத்த தன்னனைய
சீமானைப் பூவளந்த செல்வன் கமலமலர்
மாமானை வந்தேன் வலம். (28)

அன்ன பொருளை யடுத்து வலஞ்சூழ்ந்து
தன்ன முரசெடுத்துச் சாற்றினேன் மன்ன
முனிவோ ரெனக்குரைத்தார் மொய்ம்மருந்தின் செய்கை
கனிவோ டெனவுரைத்தான் கண்டு. (29)

இம்மருந்தைக் காப்பனவு மெண்ணிறந்த தெய்வங்கள்
செம்மருங்காம் நேமி செறிந்தனுகும் பொய்ம்மருங்கி
னில்லாதாய் காரியத்தி னேற்றந் தனைநோக்கி
எல்லா மளிக்குமென்று னேய்ந்து. (30)

ஈங்கடுக்கி னின்றே யிறந்தோர் பிறந்திடுவர்
தீங்கடுக்கா தெங்கோனுஞ் சீமானே யாங்கடுத்துச்
செல்வேளை நன்றென்னச் சென்றான் மலர்ப்பகழி
நல்வேளை வென்று னயர்ந்து. (31)

இவ்வுலக மெல்லா மெடுத்த வடிவமுடன்
அவ்வுலகுந் தன்னிடத்தே யாமென்ன எவ்வி
உயர்ந்தா னவன்வடிவை யுற்றறிந்த தேவர்
வியந்தார் மனத்தின் மிகுந்து. (32)

கோளிரெண்டு தாரகைகள் கோத்தமணி யாரமெனத்
தோளிரெண்டு சேரகலஞ் சொல்லவொணு தாளிரெண்டு
தாள்பெயர்க்க வேறு தனியிடமற் றில்லையென
நாள்பெயர்க்க நின்று னயர்ந்து. (33)

Koviloor Digital Library

வாலிசைத்துக் கைநிமிர்த்து வான வெளிமறைத்துக்
காலிலத்தி லூன்றிக் கழுத்தையுடன் சாலச்
சுருக்கிக் கிளம்பினான் தொல்லிலங்கை தானும்
மரக்கலந்தா னென்ன மதித்து. (34)

கிழிந்த மழைக்குலங்கள் கீண்டனவாம் வேலை
பொழிந்த வுடுக்குலங்கள் போன அழிந்தனவாம்
வானவர்கள் மானமவை மன்னு மனுமனைக்காண்
தானவர்கள் மாண்டார் தருக்கு. (35)

பாய்ந்தா னதனாற் பருவரைகள் தாம்வடக்கிற்
சாய்ந்தான தாதை தரத்தினுற்றான் ஓய்ந்தான
வென்றுரைக்கும் வேகத் தெழுந்தான் விசும்படுத்து
நன்றுரைக்கும் வீர னயந்து. (36)

கடல்முன் னிமிர்ந்தொடுங்கக் கால்முன் தவழ
வடல்முன்னும் வேகத் தடுத்தான் திடமுன்னும்
தேவர்கட்கு மான திடுக்கம் திசையடுத்த
காவலர்க்கு மானகலக் கம். (37)

மேகநெறி தாங்கடந்து வெங்கதிரின் மீச்சென்று
மாகநெறிக் கப்பால் வரம்படுத்துப் போகத்தார்
போற்றுநெறி மீப்போய்ப் புனித வானுலகஞ்
சாற்றுநெறி தன்னையடுத் தான். (38)

வானமுற்றார் சொல்வார் வயக்கலுழன் மாயனுற்ற
தானமுற்றான் செல்வனெனச் சார்பிரமன் ஞானமுற்ற
நாடடுப்ப னென்பார் நலந்தரவா மீசனுறை
வீடடுப்ப னென்பார் விரைந்து. (39)

வேண்டுருவங் கொண்டு விளையாடும் வேகமுற்றும்
தீண்டுருவங் கொண்ட திருமாலே யீண்டுருவான்
என்றெடுத்துச் சொல்வா ரிமைப்பதன்முன் சென்றடுப்பான்
நன்றடுத்த ஞான நலன். (40)

Koviloor Digital Library

உருவென்றார் சில்லோ ருருவன்று துன்று
மருவென்றார் பேருலக மாக்கும் கருவென்றார்
காற்றம் பரத்தென்றார் காணா ரிவணிலைமை
ஆற்றம் பரத்தா ரறிந்து. (41)

தொடுத்தவர வானோர் துதிக்கு முனிவர்
அடுத்தமறை யோத வவுணன் கொடுத்தவர
காளளந்தா ஞயகமா நாத னலம்போல
வாளளந்தான் விண்ணை வளைத்து. (42)

தேவரொடு மாமுனிவர் சித்தர் தெரிவையரும்
மூவுலகர் தாமடுத்து மொய்த்தவர்கள் தூவு
மணிதரத்த சாந்து மலருந் தொடுத்தல்
அணிதரத்த வைந்தருவொத் தான். (43)

இமையவரை யுற்றா னிமைப்பி லவரும்
கமையவர மாமுனிவர் கண்டோர் அமையவர
கின்கரும மென்று நிகரின்றி வாழ்த்தவந்தான்
மன்கரும முற்றும் வரன். (44)

வடகுணத்திற் றோன்று மழுவுடையான் வைகும்
தடவரையை நோக்கிமனஞ் சார்ந்து படர்தருவோன்
தன்னைக்கா மாரி தனித்துமைக்குக் காட்டியிவன்
மன்னைக்கான் மைந்தனென்றான் மற்று. (45)

என்னை யவனெழுந்த தென்றுலகத் தாய்கேட்ப
மன்னணிரா மன்றூதன் மாமருந்து தன்னை
எடுத்திலங்கை சென்றங் கிமையோர்க்கு நன்மை
கொடுத்திலங்க வென்றான் குறித்து. (46)

நாமமுற்ற யோசனைக ளண்ணி கடுகிங்கி
ஏமமுற்ற மாயலைக்க ணெய்தியே காமமுற்ற
செல்வரையுங் கண்டு செழிக்கு மிடதமுற்றான்
மல்வரையுந் தீண்டோள் வலன். (47)

Koviloor Digital Library

எண்ணளவை யில்லா ரிருந்து தவம்புரிவார்
கண்ணளவிற் காணுக் கனமுடையான் விண்ணளவும்
மாமலரோன் வைகும் மகாமேரு மீதுசென்றான்
கோமலரும் வீரன் குறித்து. (48)

எவ ரறிவா ரிமையாத நாட்டமுற்ற
தேவரறி யாமலைமேற் சென்றடுத்தா னுவலந்தீ
வென்றகடல் சூழுலகி னேற்ற மிகத்தந்து
நின்றமரங் கண்டா னினைந்து. (49)

அன்னவரை யும்ப ரமலுலகை யாக்குவள்ளல்
நன்னகரை நோக்கி நடுவுற்ற பொன்மலரும்
பீடத்தி னான்முகன்றன் பெற்றிகண்டு முற்றிவந்தான்
கோடத்தி னான்முகந்த கோ. (50)

ஆய வடகீழ்பா லாயிரமாஞ் சேயிரவி
தோயுமென வைம்முகமாஞ் சோபையுடன் சேயிழையாள்
பாகத்தெண் டோளான் பரனை வணங்கியுற்றான்
நாகத்தெண் டோளா னயர்ந்து. (51)

தருவரிய தேவரெலாஞ் சார்ந்து வணங்கப்
பொருவரிய மாமுனிவர் போற்ற மருவிரியுங்
குல்லைமுடி வில்லானுங் கோமானைப் போற்றிசெய்தான்
எல்லைமுடி வில்லா னிசைந்து. (52)

சந்திரனேர் கொற்றத் தனிக்குடைமேற் சாரவரச்
சுந்தரசேர் மாதர் துதித்துவர வந்தரவா
னுடொழுகிப் போற்ற நயர்திருக்கு மிந்திரன்பொற்
றடொழுதான் சிந்தைநலத் தான். (53)

பூவலருங் கற்பகத்துப் பொற்பகத்துப் பொங்கிவளர்
தேவரெலாம் போற்றுஞ் சிகரமதின் மூவுலகும்
சூழ்ந்ததிசை காக்கும் துதியடுத்த காவலர்கள்
வாழ்ந்ததிசை கண்டான் மதித்து. (54)

Koviloor Digital Library

அத்தரத்த மாமலையை யாய்ந்தடுத்து நீங்குவள்ளல்
உத்தரத்தி னூற்றா ளொளியவனு மொத்த
விருளின்றி நின்ற வியல்பதனைக் கண்டு
மருளொன்றி நின்றான் வரைந்து. (55)

ஆதியான் தேருமுன மம்மருந்து கொண்டிரவின்
பாதியான் சேரப் படர்ந்ததற்குச் சோதி
வரனுதய முற்றான் வருவிரைவென் னென்றான்
அரனுதய முற்றா னறிந்து. (56)

காற்றிசைக்கு மேற்செல் கடுமையன்சொல் வானிரவி
மேற்றிசைக்க ணேற்றான் விடிவன்று மாற்றி
வடபாலிற் றோன்றும் வளமில்லை யல்லும்
கடவாதா மென்றான் கணித்து. (57)

இருவர் மிதுனத்தா ரென்றுமன்பி னேற்றார்
ஒருவ ருடனொருவ ரோங்கிப் பொருவரிய
வின்பத்தாற் புண்ணியத்தி னேற்றம் பொருந்திவளர்
அன்பொத்தார்க் கண்டா னடுத்து. (58)

வன்னியுற்ற பொன்மோலி வானோன் மலர்பாகக்
கன்னியுற்ற நாடன் கனராமன் மன்னியுற்ற
கோட்டையூ ரென்னக் குலவுந் திருவுறையும்
நாட்டையுற்றான் வீர னயர்ந்து. (59)

விரியவரு மேருவெனும் வெற்படுத்துச் செல்லும்
பெரியவரன் செல்வமது பெற்றான் அரிய
வுலகெல்லாந் தோன்று மொருவனெனக் கண்டா
னலகில்லா நீல்வரையை யாங்கு. (60)

அற்குன்றாச் சோதி யடுத்தமலை நீங்கினான்
பொற்குன்றாந் தோளான் புலவன்சொல் கற்குன்றாக்
கண்டா னுணர்ந்தான் கடவுள் மருந்துறைகும்
விண்டான தென்றான் வியந்து. (61)

Koviloor Digital Library

பாய்ந்தான கண்டமலை பாதலத்தின் மீதடுத்துச்
சாய்ந்தான கண்டு தலத்தெய்வங் காய்ந்தானை
யார்கருத்தா மென்ன வறிவ னெடுத்துரைத்தான்
சார்கருத்தா முன்னர்த் தனை. (62)

கேட்டன்று வேண்டிற்பின் கேடின்றி யெம்பாலிற்
காட்டென்று போற்றிக் கரந்தகண்ணன் வாட்டென்றும்
நேமியடுத் தாய்மறைந்த நின்றகுன்றைத் தொட்டெடுத்தான்
சாமியறத் தான்றிருத் தூதன். (63)

இங்குநின்றி தின்னமருந் தென்றெண்ணி னாலதனாற்
சிங்குநின்ற காலமெனுஞ் சிந்தையினான் அங்கதனை
வேரோடு மங்கைகொண்டான் வெற்றி யுடனடுத்தான்
சீரோடு மங்குல் செறிந்து. (64)

ஆயிரமாம் யோசனையி னான வகலமுயர்த்
தாயிரமாம் யோசனையா ழம்மலையை யேயென்று
மாத்திரத்தி னோர்கரத்தின் வாங்கினான் பாங்கின்னபாற்
சாத்திரத்தி னோர்தரத்தன் றான். (65)

அத்தலையி னன்னா னனையவரு மத்துணையி
னித்தலையி னாமிருவ ரெய்தினார் கைத்தலையின்
முத்தர்களைக் காக்கு முளரிப் பதம்வருட
வுத்தமனுக் குற்றதுரைத் தும். (66)

கண்டா மடந்தையர்கள் காமநத்து மாமனத்தைக்
கொண்டா முடந்தை குறித்துவரு வண்டார்
கமலமொத்த காட்சி கவினவரு கண்ணை
யமலனொத்து மெல்லவிழித் தான். (67)

நோக்கினா னன்பி னாவலுங் கரடியிறை
வாக்கினான் வீடணனும் வந்தடுத்தார் தூக்குந்
தலையார் தொழுங்கையார் தாமேக்க முற்ற
நிலையா ரழுங்குவார் நேர். (68)

Koviloor Digital Library

எவியலாம் வேலை யியற்றி யருகெய்தும்
நோவியலான் வீடணனை நோக்கினன் மேவும்
புகழுடைய சாம்பனையும் போற்றுங் கருணை
மகிழுடையான் கண்டான் மதித்து. (69)

ஐயன்மீ ருற்ற வழிவுநமக் கிவ்வகையேற்
செய்யப் பிறிதென்னை தீர்ந்தவர்க ளுய்வதற்குச்
செய்யத் தரத்தாம் செயலுரைப்பீ ரென்றுரைத்தான்
வையத் தறத்தான் மகன். (70)

சீதையென்ற பெண்ணாற் சிறந்த செயறேம்பும்
பேதையென்ற வெண்ணமென் பெற்றிதனை யாதென்
றுணர்த்துவேன் காதைதனை யுற்றபழி யோடும்
புணர்த்துவே னென்றான் புலர்ந்து. (71)

மாய வுருவமிந்த மானென் றுணர்த்துமெம்பி
தூய வுறுதிவந்த சொற்கேளேன் நேயமுறு
பெண்ணுரைதான் மிக்க பெரியவுரை யென்றுகின்றேன்
எண்ணுரையா மிப்பழியை யேற்று. (72)

கண்டேனி ராவணனைக் கண்ணாரக் கண்டடுத்தும்
மண்டேனி ராவணமாய் மற்றுயிரைக் கொண்டேனே
புக்கடுத்த நண்பர்களைப் போக்கினே னுக்கங்கிலேன்
மிக்கடுத்த தீமை விழைந்து. (73)

தேவர் படைவிடுத்துத் தீயோனை யிவ்விடையிற்
சாவதனைக் காண்டுமெனுந் தம்பியுரை யாவதனைக்
கொண்டாதல் செய்யேன் குணக்கேட னென்றுரைத்தான்
அண்டா தவர்க்கா மரன். (74)

நின்றிலேன் தம்பியுட னேர்படைக்கு நீதியினு
லொன்றிலாம் பூசனையை யுன்னினேன் பொன்றினார்
நம்மவர்கள் தம்பி நருந்துணையி னுட்டமற்றான்
செம்மையிலா வென்சிறுமை தேர்ந்து. (75)

Koviloor Digital Library

ஈண்டியயா மின்ன மியம்புகின்ற தேழமையாம்
வேண்டியவா யன்றமரின் வீடிவரும் ஆண்டகையர்
அன்பர்களை நாடி யமரர் திருநாட்டி
னின்பமுறல் செய்வனென்று னேற்று. (76)

எம்பியுட னன்பர்களை யேங்கி யிழந்தபின்னும்
வெம்பியுட னன்பிலரை வேரறுத்து மம்பி
னிராவணனைப் போக்கியும்பர்க் கென்புரிவ தென்று
னராவனையைப் போக்கிவந்தா னங்கு. (77)

இளையோ னிறந்தா னினியா ருறவாம்
அளவான சீர்த்தியறி வாண்மை கிளையான
சுற்றந்தா னென்னை சுகமடுத்த தென்னையினி
யற்றந்தா னென்று னயர்ந்து. (78)

இரக்கமின்றி யென்தம்பி யிருற்ற பின்னும்
அரக்கரைவென் றுண்மையுற்றே னுகின் மரக்கணவன்
கள்வனென வஞ்சக் கருது மெனவுலகம்
விள்வதுமா மென்றான் வியந்து. (79)

தாதைதனைப் போக்கிச் சடாயு தனுவழித்துக்
காதற் றுணைவர் களைக்கருக்கிக் கோதற்ற
தம்பிதனை யின்றிச் சனகிமனம் நின்றதென்ப
ரிம்பருற்று ரென்பா னிகழ்ந்து. (80)

வென்றரக்கர் தம்முயிரை வீட்டி யயோத்திசென்று
மொன்றிருக்கு நேயத்தி னுற்றதம்பி யின்றி
யரசாள லுற்று லதுவும் நலத்த
பரிசாகு மென்றான் பரிந்து. (81)

படிவனிதைக் கேற்ற படியொன்றும் பாரேன்
முடிவனினி யென்று முடுகும் வடிவுடைய
சீமானைச் சாம்பன் றிருவடியிற் றன்வணங்கி
யாமாறு சொல்வா னறிந்து. (82)

Koviloor Digital Library

உன்னை யுணரா யுனது திறமடியேன்
முன்னை யுணர்வேன் மொழிதலென்னே பின்னறிவை
நீயறியா துண்டோ நிகரில்லா யென்றுரைத்தான்
தாயறியுங் கன்றனையான் றான். (83)

அம்புயத்தா னம்புபடை யாமென்ற வெம்மையினு
லும்புயத்தாந் தம்பி யுடலொன்றி வெம்பிக்
களத்தினிடை வீழ்த்துங் கடுமை யுடைத்தா
முளத்தினிடை தேர்ந்தே னுருத்து. (84)

அன்னான் படைதா னமரரொடு தானவர்க
டன்னா ருயிருந் தடிந்திடுமா முன்னை
யடுத்தொன்றுஞ் செய்ய வதற்குவலி யில்லை
வடத்தொன்றும் வள்ளான் மதித்து. (85)

பெருந்திறலின் மிக்கனுமான் பெற்றா னுணர்வும்
அருந்துயரை மாற்றுமவ னாற்றல் மருந்ததனைக்
கொண்டுவரு மின்றே குலைத்த நமனுயிரைக்
கொண்டுவரு மென்றான் குறித்து. (86)

பனிவரையை நீங்கிப் பருப்பதங்க டம்மிற்
றனிவரையை யிக்கணத்தே சார்ந்தா னினியவனு
மோர்கணத்தா னென்று முளக்கவலை யோயுமென்றான்
வார்கணத்தா மெண்கிற் கிறை. (87)

யானுமன்றி யெந்தை யிகலுலகை யீன்றவரன்
தானுமன்றிச் சம்பு தனிநேமிக் கோனுமன்றி
மற்றார்க் கறியா மருந்து வருமென்றான்
செற்றார்க் கரியாந் திறன். (88)

ஆர்கலியை மத்தித்த வன்னாளின் மன்னுவதாம்
கார்நிறத்த னேமிவரங் காப்பதனால் மேருவுடை
யுத்தரத்தா யென்று மொருவர்க்குஞ் சார்வரிதாம்
நத்தறத்தா யென்றா னயந்து. (89)

Koviloor Digital Library

தோன்றிய நான்முதலாத் தொட்டிலரி யாவர்களு
மான்றவர வன்னதனி னாற்றலைக்கேண் மூன்றாம்
உலகும் படைத்தோ னுயிர்நீங்கி னாலு
மிலகும்பி னென்றா னெடுத்து. (90)

சல்லியத்தைத் தீர்க்குமொன்று சந்து பொருத்துமொன்றாம்
எல்லியற்ற நல்லுயிரை யீவதொன்று நல்ல
நிறந்தருவ தொன்று நிகரில்லாய் மற்றும்
சிறந்தமருந் தென்றான் தெரிந்து. (91)

வருநெறியாந் திண்ணமைய மாருதிக்குத் தன்மம்
தருநெறியா மெண்ணமென்னை தாழான் அருமையதோ
வன்றென்றான் போற்ற வமல னவைகேட்டு
நன்றென்றா னாற்ற னயந்து. (92)

பொன்மலைக்கு மப்பாற் பொருந்து மருந்துவளர்
நன்மலைக்குச் சென்றதெனு நல்லுரையால் மன்மலைத்த
லில்லையெனச் சிந்தை யெடுத்தான் வடக்கினொலி
வல்லையெனத் தந்த மதித்து. (93)

கடல்கிளர்ந்து மேற்படரக் கார்வரைக ளெல்லாம்
இடைபரந்து விண்ணேற வேற்றும் தடையி
லுடற்றுசண்ட மாருதந்தா னோங்கும் வடக்கின்
அடற்ப்ரசண்ட யென்னவந்தா னார்த்து. (94)

வேர்த்துணர்ந்தா றோடு விசும்பதனை மீச்செல்லப்
போர்த்தமலை மாமரமுன் போலவே தூர்த்தனவாம்
வேலைவனை சேறுவென வெற்றி யுட னார்த்தான்
மாலைவனை சிந்தை யனுமான் (95)

மலைக ளொடுகடல்கள் மற்று முற்று மண்ணும்
உலையா விசும்பு மொலித்துக் குலையக்
குமுறி வருகொள்கை கொண்டார்த்து வந்தான்
நிமிர வரு மோசை நிறைந்து. (96)

Koviloor Digital Library

எறிபாற் கடல்மருந்தை யேற்றெடுக்கத் தேவா
செறிவாற்றன் மந்தரந்தா சென்றென் றுறுவேற்ற
வெற்பெடுத்து வந்த விசையார் கருடனெனப்
பொற்பெடுத்து வந்தான் பொருப்பு. (97)

பூதலத்து மாசுணத்தாற் போர்செறிந்து போந்திடுநா
ளோதமுற்று வென்றிகொண்ட ஆற்றத்தா னேசமற்ற
நல்லிங்கை யங்கிரியை நாட்டி யெடுத்தெய்தும்
வல்லிலங்கை தந்தையொத்தான் மான். (98)

தோன்றினு னென்றெடுத்துச் சொல்வதற்கு முன்னமடுத்
தான்றினுன் பூவினடி யோங்கருன் வான்றனிலே
நின்றனவாம் வஞ்சகரூர் நேரடுக்கா தாதலினு
னன்றனுமான் வந்தா னயந்து. (99)

[1]வந்து மருந்தினுற்ற வாசமுண்டு வீசலினுற்
சிந்து வருந்து முயிர்சேர்ந்தவராய் அந்தரத்தின்
ஆமருக்கன் மாமகனே டாயவர்கள் மேயசிந்தை
மாமறுக்கந் தீர்ந்தார் மதித்து. (100)

காற்றசைத்துச் சேரக் கடவு டிருநாட்டார்
போற்றிசைத்துச் சாரப் புனிதரெலாம் கூற்றசைத்துத்
தம்முருவங் கூடினுர் சாற்று பெருவலியா
ரெம்மருங்குஞ் சேர்ந்தா ரிரைத்து. (101)

அரக்கரழிந் தாக்கையெலா மாழி கரக்கத்
தருக்கொழிந்து நீந்தகண்ட தான மரக்கலமு
முய்ந்தனவாம் வானரங்க ளுய்ந்தவகை கூறலொன்றே
சிந்தைகளி கொண்ட சிறந்து. (102)

கழன்றனவாம் பாணங் கழன்ற கடும்புண்
தழன்ற குளிர்ந்தவங்கஞ் சார்கண் சுழன்றனவா
நல்லுலகெ லாம்வணங்கு நாத னிளவீர
னெல்லுணர்வு கூடு முகந்து. (103)

1. காற்று.

Koviloor Digital Library

யாவருமொன் ருயெழுந்தா ரார்த்தா ரெழுகடலின்
தாவரிய பேரொலியிற் சார்ந்தவுடன் தேவரெலாம்
வாழ்த்தொலியைக் கேட்ட வரதன் மனங்கண்டு
தாழ்த்தலிலாத் தம்பிபணிந் தான். (104)

ஓங்கிவரு தம்பிதனை யுள்ளுயிர்தான் வந்ததெனத்
தாங்கிவரைத் தோளாற் றழுவினன் நீங்குதுயர்
வள்ள லுலகமுடன் வானவர்கள் மாமறுக்க
முள்ளமெலாந் தீர்ந்தா ருகந்து. (105)

அரம்பையர்கள் பாடி யமுத விசைகொள்
நரம்பியலார் கின்னரர்க ளாடி நிரம்பி
யுலகெல்லா மெய்து முவகை முனிவர்
அலகில்லார் வாழ்த்துரைத்தா ராய்ந்து. (106)

உந்திடிற்றான் சொல்லு மொழிவில்லா வுண்மையையுந்
தந்தளித்தா யன்னதற்குச் சான்றிதெனச் சுந்தரமார்
வில்லிதனைப் போற்றி மெலிந்து வரன்பகழி
புல்லிதெனப் போன புரிந்து. (107)

வேதமவை யார்த்தனவாம் வேதமுற்ற வேதியர்கள்
போதமவை யார்த்த புகழார்த்த தேவர்
கடலார்த்த மேலாங் கனமார்த்த சீதக்
அடலார்த்த தாகவடுத் தார். (108)

ஆயதொரு காலை யமரர் புகழ்ந்தேத்தத்
தாயெனவா மன்பன் றனைத்தழுவி நாயகன்றான்
நந்துதுயர் பொன்ற நயத்த கருணைமொழி
சிந்துவென நின்றான் சிறந்து. (109)

எழுதுகுங்கு மத்திருவி னேந்தி வருகோ
டுழுததிரு மார்பா னுருகித் தழுவிநிற்கத்
தாழ்ந்து வணங்கித் தனைத்தொழுத கையுடைபான்
வாழ்ந்தவனு மாற்குமொழி வான். (110)

Koviloor Digital Library

முன்னடுத்துத் தோன்று முறையடுத்து நீங்கலிலா
வென்னடுத்துத் தோன்றுதுயர்க் கிறடுத்த மன்னடுத்துத்
தோன்றினே முன்னம் துயரடுத்து மாண்டுன்னிற்
தோன்றினே மென்றான் றுதித்து. (111)

அழியுங்கா லத்தா மரிய வுதவி
மொழியுங்கால் முன்றுயிரின் முற்றம் பழிதனையும்
காத்துப் பகைகாத்துக் காமர் மொழிகாத்தா
யேத்துமறை காத்தா யியைந்து. (112)

தாழ விறைப்பொழுது தக்கசெய லங்குற்றால்
வாழியிறை யெம்பியன்பு மாட்டலினு லேழுலகும்
வீயு மவையெல்லாம் வீயாம லூழிவரை
தோயுமவை செய்தாய் துதித்து. (113)

இன்றடுத்து வீதலிலா தெல்லார்க்கும் வல்லமையா
நன்றடுத்த வாழ்நாளும் நல்கினய் பொன்றலுறு
நோயடுத்து வாராது நோக்குமென்ற னேவலினு
னியடுத்து வாழ்வாய் நிரந்து. (114)

மற்றொரு முற்றனுமன் வண்மை யதனலே
பெற்றொரு மாயுள் பெரிதுடையார் சுற்றும்
தொழுதார்கள் வாழ்ந்திருர் தொல்லையுற்ற மேலோர்
முழுதாளு மாசி மொழிந்து. (115)

உய்த்தமருந் தென்று முயிருதவ வொன்னலர்கள்
பொய்த்தமரு மென்றும் பொருந்துவார் மொய்த்தகுன்றை
முன்னிடத்தின் வைத்தல் முறையாகு மென்றுரைத்தான்
தன்னிடத்தின் வைத்த அன்பன் றான். (116)

என்றெடுத்துச் சாம்ப னியம்பவுட னீதரோ
தன்றடுத்த வென்றவரை நாழிகையின் சென்றடுத்து
பின்வனவின் றருகுமென மேலெடுத்து மேற்சென்றான்
மான்வனவின் றருகுமனு மான். (117)

மருத்துமலை படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

களியாட்டுப் படலம்

இன்னதன்மை யாக விராவணன்றான் எற்றமுற்ற
தன்னதன்மை யானமகிழ் தந்ததனால் கின்னரர்கள்
பாடலொடு மாதர்களைப் பாங்காம் படிநிறைத்தான்
ஆடலொடு மாகளி யாட்டு. (1)

அரம்பையர்கள் விஞ்சை யவரரக்கர் மாதர்
குரும்பையடு கொங்கையர்கள் கூடக் கரும்பினிய
சொல்லார் மயிற்குலம்போற் சூழ்ந்தார் மதுநுகர்ந்தார்
நல்லா ரயிற்கண்ணி னார். (2)

மேனகைப்பொன் வாட்கண் விளங்கு திலோத்தமையும்
தேனுகுத்த மாமழலைச் செவ்வியராம் வான
மகளிரெலாம் வந்தார் மருவுந் தரத்தார்
விகலிதமாஞ் சிந்தை மிகுத்து. (3)

கெண்டையொத்த கண்ணார் கிளியா மொழியுடையார்
வண்டையொத்த கூந்தல் வரமாதர் தண்டைக்கால்
நாடகத்தைக் காட்ட நளினக் கரங்காட்டும்
ஆடகத்தைப் போலபிந யம். (4)

நற்பெரிய சிந்தை நயத்தா ரொடுபழகி
அற்புரிய மேலோ ரறிவில்லா ரிற்படுத்துக்
கெட்டிருந்த போலக் கிளிமொழியா ரெல்லாரும்
மட்டருந்தி விட்டார் மதி. (5)

கூந்தல் சரியக் குடத்தனங்கள் மேற்பார்க்கப்
பாந்தட் படத்திற் படம்விலக நாந்தகத்தாம்
கண்சிவக்க நின்று கமழ்பாடல் செய்தடுத்தார்
பண்சிவக்கும் வாயார் பரிந்து. (6)

Koviloor Digital Library

கண்டடுத்த நன்மொழியார் காரடுத்த மென்குழலார்
விண்டடுத்த மாதனத்தா மின்னிடையார் பண்டடுத்த
சச்சரிப்பாண் கொட்டித் தடுமாற்றம் செய்திடுவார்
குச்சரிப்பாண் செய்வார் குறித்து. (7)

வீணையெழல் வேரு மிடற்றெருலியும் வேறடுக்கப்
பாணியெழல் வேறடுத்த பண்காட்ட நாணம்
குடியோட நின்று குதிப்பார் துதிப்பார்
வடியோடு வேற்கண் மடர். (8)

முத்தின்மொய் கொண்ட முறுவ லிளமையரோ
டித்தன்மை வேந்த னிருந்தவெல்லை யத்தன்மை
வானரத்தாம் சேனை மதிமருள வார்த்தவொலி
தானரற்றும் காதைத் தடிந்து. (9)

ஆடல் களிப்பி னமலை யமிழ்தான்ற
பாடல் களிக்கவரு பண்புற்ருர் ஊடல்
கடைக்கண்ணி னேக்கம் கருதுமிவை யெல்லாம்
விடக்கண்டார் சிந்தை வெறுத்து. (10)

தறிபொருந்து யானை தளர்ந்து நடுங்கத்
துறுபுரவி தூங்கத் துணுக்கம் செறியரக்கர்
கொள்ள விருவர்சிலைக் கூற்ரோசை கேட்டவுடன்
உள்ளநடுக் கென்னுரைப்பா மோர்ந்து. (11)

முத்தநகை மூரல் முகத்தியர் கண்வேலாற்
குத்துநகை மாதரெலாங் கோடரமாய்ப் பத்துவாழ்
மாமுகமாங் கோமதிக்கு மன்னு பகலொத்த
கோமருவு மவ்விரனின் கோள். (12)

ஈதிடையா வந்தா ரிகலடுத்த தூதுவர்கள்
ஊதுடையார் வண்டுருவி னுற்றவெலாம் தீதிலராய்
அந்தரத்திற் சேர்பகைவ ரான்றமொழி கேட்டவுடன்
மந்திரத்திற் சேர்ந்தான் மருண்டு. (13)

களியாட்டுப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

மாயா சீதைப் படலம்.

மைந்தனுற்றார் மற்றுளவர் மாமோ தரன்வகையார்
தந்திரத்தார் தாம்தழுவத் தக்கோராம் பந்தியர்கள்
எம்மருங்குஞ் சூழ விருந்தார் தமக்குரைத்தான்
தம்மருங்கு நன்மையிலா தான். (1)

நங்கிளைகள் தீர்ந்தவெலாம் நண்ணு வதற்கின்றி
வெங்கிளைகொ டைமையதான் வேலையிட்டோ மிங்குளவை
மாளற் கிடையூறு வாராது பங்கயத்தான்
வாளிக் கிடையூறு வந்து. (2)

இலங்கையினின் றேகி எழின்மேரு பின்னு
வலங்கை மருந்துதந்த வல்லான் அலங்கலந்தோள்
மாருதிதா னென்று வழக்கின்றிச் சொல்லடுக்கும்
ஒருதிமுன் செய்கை யுகந்து. (3)

நீர்கடக்க வாங்கி நிகரி லிலங்கைதனைப்
பார்கடக்க வீசிலெவர் பாங்கிருப்பார் போர்கடக்கச்
செய்வதெங்கே யன்னுன் திறல்மேரு வைத்தழுத்தின்
உய்வதெங்கே யென்று ஹுருத்து. (4)

முறைகெடத்தான் வேண்டின் முடிய வடுக்கும்
குறைகடத்தும் நற்குணத்தான் கூறு மிறைவருற்றார்
மூவரென்ப தென்னே முதலா மனுமனுடன்
ஆவரென்பார் நால்வ ரடுத்து. (5)

இறந்தவர்க டர வினியோர் பிறவி
பிறந்தவர்க ளாம்பிழைக்கும் பெற்றி மறந்தவர்கள்
என்றாலும் சானகியை எற்றறத்தோர்க் கீய்ந்திடிற்றான்
நன்றாரு மென்று னயந்து. (6)

Koviloor Digital Library

மறிகடலை மண்டிமன்னை வானோடு வாரும்
எறிபடையர் போயிலங்கை யேற்ற சிறுவனுடன்
நீயுமன்றி யேல நிலைத்தா ரெவரென்றான்
ஆயுமன்றின் மாலி யலைத்து. (7)

வாலிதனை வாளியொன்றின் மாற்றி மறிகடலைக்
கோலிவென்று கும்பகன்னற் கொன்றவனை ஆலிமொக்குள்
அன்ன வரக்கரோ வாம்போரில் வெல்பவர்கள்
மன்ன வரைப்புயத்தாய் மற்று. (8)

என்றெடுத்து மாலியவான் எற்ற விகலரக்கன்
குன்றெடுத்த தோள்கள் குலுங்கநக்குக் கொன்றடுத்துச்
சிறுமொழி தந்தான் சிறந்த நலமோர்வார்
கூறுமொழி கொள்ளாக் குணன். (9)

கட்டுரையைக் கேட்டான் கனல்விழித்து நோக்கினான்
பட்டரக்க ரெஞ்சிப் படைக்கலம்போய்க் கெட்டிடினும்
அன்னமன்னு டன்னை யடுத்துவிட வோபிடித்தேன்
மன்னர்மன்ன னென்றான் மறுத்து. (10)

மைந்தனென்னை மற்றவரென் வாழ்க்கை வளம்வேட்டி
ருய்ந்தனிர்போம் நாளை யுறத்தோங்கிச் சிந்தி
மனித்தரொடு வானரரை வாட்டுவே னென்றான்
தனித்தமகன் சொல்வான் தடுத்து. (11)

உளமலரா வொன்றை யுணர்ந்தனையான் சொல்வன்
தளமலரான் தந்தபடை சார்தி யளவிலதாய்
விட்டதிரா மன்றனிடை மேவா திளவலையும்
பட்டதிரா தென்றான் பரிந்து. (12)

மானுடவ னல்லன் வரவா னவனல்லன்
மேன்முனிவ னல்லன்றான் வீடணன்சொ லேனவனே
எண்ணடுத்துத் தீர்ந்தா ரிசைக்கு மொருவனென்றே
பண்ணடுத்த தென்றான் பரிந்து. (13)

Koviloor Digital Library

அனையவெலா நிற்க வலைபகர லாண்மை
வினையமல வீழ்ந்ததுவும் வீழ்க வினையலகீ
ஈண்டு நிகும்பலைபோய் முற்றுவிப்பேன் முற்றுமென்றான்
தாண்டுபரித் தேரான் தகைந்து. (14)

அன்னதுதான் வன்மையென வாண்டரக்கன் மீண்டுரைத்
நன்னர்மக னும்பிசொல நண்ணலர்கள் முன்னிவந்து [தான்
முற்று வலைபுரிவர் மோசமுறு மென்றுரைத்தான்
பற்றார் வலையையடர்ப் பான். (15)

சானகியாம் சாயை சமைத்தவுடன் தன்மைகண்ட
மானவரன் மாருதிமுன் மாற்றியே யானுநெடுஞ்
சேனையொடு மையோத்தி செல்வ தெனக்காட்டி
ஏனைமக மாற்றுமென்று னேய்ந்து. (16)

இத்தலையின் மாண்டா ளினிப்பயனிங் கில்லையென்பா
ரத்தலையிற் றம்பி யடுத்தோரு முத்தமத்தா
மாநகரி னுள்ளார் மடியாது காப்பதற்கே
சேனையுடன் செல்வார் தெளிந்து. (17)

போகலைச்செய் யாரெனினும் போற்று மனுமானல்
ஆகலைச்செய் தன்றி யடுக்ககிலார் ஏகிக்
கருமமுற்றி யானெய்திக் காட்டுவேன் வெற்றி
பெருமைமுற்று மென்றான் பிரித்து. (18)

அன்னவள நன்றென் றரக்க னமையவஞ்சொற்
பொன்னவளா மாயமுற்றப் போயினான் தன்னனைய
வள்ளலொன்றிச் சுக்கிரிவன் மற்றின் னகர்சுடற்காம்
உள்ளலொன்று மென்று னுருத்து. (19)

அத்தொழிலைச் செய்த லமைதி யெனவுரைக்க
தத்தொழியா தாமிலங்கைச் சார்படுத்துப் பத்துடையேழ்
சார்ந்த கவிப்படைக டாங்குலையி னேங்குகொள்ளி
யார்த்தகவின் வந்தா ரடுத்து. (20)

Koviloor Digital Library

எண்ணினவாங் கோடி யெடுத்த படைமுழுதும்
மண்ணினவாங் காவற்றின் மாமதில்வாய் வெண்ணினமா
மேகமின்னல் வீசி விரிந்த விதம்போல
வேகமன்னச் சூழ்ந்தா ருருத்து. (21)

வஞ்சனைசேர் மன்னனெஞ்சி வாழும் வளநகரிற்
குஞ்சரமார் வீரர்விடு கொள்ளியவை அஞ்சனமா
வண்ணன் கடலினிடை வாளிகளை விட்டவென
வெண்ணுங் கடமை யிசைத்து. (22)

கையர்வினை மீச்சென்ற காவல் மதிலிலங்கை
செய்யகனை தீச்சென்று சேர்ந்ததுதான் அய்யனெடுங்
காராகு மாழி கணைபொழியத் தீயெரிந்த
சீராகு மூழி செறிந்து. (23)

பரற்றுறு பல்பழுவம் பாங்கெரியாற் பற்ற
நிரற்றுபர வைக்குலங்க ணீளம் உரற்றினவாய்
விண்ணி னொலித்தெழுதல் வெற்றி யிலங்கைநகர்
எண்ணினலித் தெழலாமே. (24)

மூவுலகத் தேவர் முதலோ ரெவர்களுந்தான்
காவலனென் றேத்துதிறற் காகுத்தன் தீவலத்த
வில்வாளி போக்கச் சிறந்தபெருங் கோபுரங்கள்
செல்வார் மலையான தே. (25)

இத்தலையி னின்னசெய வேற்றிசைக்கு மெல்லைதனிற்
கைத்தலையிற் காட்டிக் கனன்றெழுந்தா னுய்த்த
பெருங்கிரியை வைத்த பெருமா னனுமான்
முருங்கெரியி னுற்றான் முனிந்து. (26)

அறைகழலான் வீர வனுமானு மார்த்தான்
உறையரவங் காதேற்ற வோங்கூர் சிறையார்
கருடற் கொடுஞ்சிற்றங் காதடுத்த தீதாம்
அரவக் குலமா மடுத்து. (27)

Koviloor Digital Library

மேற்றிசையாம் வாயில் விரைந்து வருவெங்கட்
கூற்றிசையு மாருதியைக் கூடினன் மாற்றிசையா
மாயைமுற்றச் செய்யும் வலத்தா னலத்தடுக்கான்
தீயைமுற்றுஞ் செய்கைத் திறன். (28)

சானகியாஞ் சாயல் சமைத்தான் தனித்தாக
மானனையாள் வார்குழலை வார்ந்துபற்று ஊனகுவாள்
கொண்டான் குறித்தொருகை கூடினன் கூற்றமென
விண்டான் விரைந்தான் விசைத்து. (29)

வந்தி யிவளால் வருந்தி மலைக்கலுற்றீர்
எந்தை யிகழ்ந்தா னிவளாவி சிந்திடுவேன்
என்று செறுத்துரைத்தா னேற்றனுமான் கண்டவுடன்
ஒன்று மறுத்துரைக்கா னேய்ந்து. (30)

கண்டிவளே யென்தாய் கருத வருவதுயென்
விண்டிலதோ வாழ்வென்று விம்மினன் மண்டி
இடைதீருங் கோளரியான் என்செய்வே னென்றான்
படைதீருங் கோளரியான் பார்த்து. (31)

யாதினித்தான் செய்வ தடுக்கா தெவையுமினி
நீதிநிற்றல் சொல்வறுதா னேரென்னக் கோதில்லா
நற்குணத்தாய் மாதை நலிந்தா லதுபுகழோ
துற்குணத்தாம் செய்கையுடைத் து. (32)

நான்முகத்தா னல்வழியி னல்லறத்தை நாடிவந்தாய்
நான்முகத்தா றெல்லாம் நவன்றறிவாய் மான்முகத்தால்
மாதை வதைத்தால் வரும்பழியை யெண்ணலிலாய்
மேதை வதைத்தாய் மிருத்து. (33)

மண்குலைய நின்றதொன்றோ வானம் நடுநடுங்கி
எண்குலைய நின்றதொன்றே யேற்றறியாய் பெண்கொலைதா
செய்தல் பிழை யொன்றோ தீராப் பழியாகும் [ன்
கைதல் பிழையென்று நாடு. (34)

Koviloor Digital Library

என்வயிற்று னல்கி யிகழின்றி யேகுதிநீ
நின்வயிற்று னிவ்வுலக நேர்மையாய் அன்வயிற்றால்
ஏதுமறி யாம லிகழ்தல் புகழ்க்கழிவாம்
தீதுமதி யாதென் றெரிந்து. (35)

என்றனனு மாருதியு மிந்திரசித் தன்புகல்வான்
ஒன்றனகே ளென்றந்தை உளருடனே பொன்ற
லதுதிரு மிக்கபுக ழாகு மிதனின்
விதிவேறி லென்றான் விரைந்து. (36)

எந்தையொடு மிந்த விலங்கை தனிலுள்ளோர்
உய்ந்திடவும் வானவர்க ளோடவுந்தான் சிந்திடுவேன்
என்றுனையா னின்றிசைத்தா னேற்றுவரு மாயைதனிற்
தன்றுணையா ரென்றதரத் தான். (37)

போமினியென் மாயவினை போயது போலாக
ஆமெனின யோத்திதனை யண்மியே காமின்
களங்கரியாய்ச் செய்து கடிதிவணின் மீள்வன்
உளங்கரியீ ரென்று ரெருத்து. (38)

தம்பியர்க டம்முடனே தாயர் தரத்துற்றோர்
உம்பர் தடுக்கினுந்தா னுய்வதெங்கே வெம்பும்
கடுங்கனலை விசுங் கணைகட்கு முன்னம்
நடுங்கலிலைத் தாமதனை நாடு. (39)

இப்பொழுதே யேகற் கிடையூ றடுத்ததென்னே
புட்பகவி மானமதிற் போகலுற்றேன் றப்புவரோ
அன்னோர்க ளென்கை யடுபகழி சென்றடுக்கின்
என்றுரகு மென்று னிரித்து. (40)

ஆளுடையா யென்னை யருளா யருளென்று
வாளுடைய கண்ணுள் வழங்கியுந்தான் வானின்
எதிர்த்தாக வப்பூமிக் கேற்றகடற் சேனை
செதிர்த்தாகச் சென்றான் றெழித்து. (41)

Koviloor Digital Library

தென்றிசைக்க ணின்று திசைக்க வடதிசைக்கண்
பொன்றிகைக்கும் புட்பகத்திற் போயினு ரென்றும்
உணர்ந்திலனு மாருதிதா னேய்ந்தா னடுத்த
கணந்தனிலாய் வீழ்ந்தான் கரைந்து. (42)

போயவன்றான் மாறிப் புகுந்தா னிரும்பலைக்கண்
தூயவன்றா னெஞ்ச சுருண்டலைந்தான் ஆய்வும்
ஒடுங்கு மனத்தா னுணர்வு மொடுங்கி
யடங்குஞ் சினத்தா னழிந்து. (43)

அன்னமே பெண்ணி னருங்கலமே யாழிவந்த
என்னம்மே தெய்வமிலா தேதென்னும் சின்னஞ்
செயக்கண்டுந் திரேன் சிறந்தேனு னென்னும்
வயக்கொண்ட வீரன் மருண்டு. (44)

எழுந்தவன்மேற் பாய்ந்திழுக்க வெண்ணுமிட ருந்தி
விழுந்தவன்மே லேறலின்றி வெந்தீக் கொழுந்துபட
வானிலெழும் வீழ்ந்து மயங்கு மிளையமொழி
ஆனியெழச் சொல்லும் அயர்ந்து. (45)

முடிந்த நமதென்ன மூவுலகுங் கங்குல்
விடிந்த தெனவென்ன வெப்பம் படிந்துவினைச்
செய்கையுற வாகும் சிறியோன் தடிந்தனனே
யுய்கையற வென்று னுருத்து. (46)

பெருஞ்சிறையாங் கற்புடைய பெண்மணியைக் கொல்ல
விருஞ்சிறையில் புட்போ லிருந்தேன் அருஞ்சிறைதான்
மீட்டவண்ணம் நன்றென்றான் வீர னடிமைதனை
நாட்டுமண்ணல் சிந்தை நலிந்து. (47)

பாதகன்தான் தெய்வநிலைப் பத்தினியை யுத்தமியைத்
தீதகன்ற நற்குலத்துத் தேவியெனும் சீதைதனை
மீட்பிக்க வந்தேனே வெங்கொலையி னிங்குலையத்
தாட்பிக்க வந்தேனே தான். (48)

Koviloor Digital Library

வஞ்சிதனைக் காணான் மறந்தா னுயிரென்னும்
செஞ்சிலையா னுள்ளந் தெருட்டியயான் அஞ்சொலியைக்
கொன்றான தென்றான கூற்றுக்கு மேற்றுநின்றேன்
நன்றான தென்றான் நலிந்து. (49)

அருங்கடலைத் தாண்டி யனல்மடுத்திவ் வூரைத்
தருங்கடனும் நன்மருந்தைத் தந்து குரங்குனைப்போல்
நாட்டந்தா னென்ற நன்மை கடற்கரைத்த
கோட்டந்தா னென்றான் குறித்து. (50)

புல்லுயிரைப் போக்காப் புலையே னலையேய்ந்தாள்
நல்லுயிரைப் போக்கா நலமடையேன் கொல்லுவதுங்
கண்டுநின்றே னென்போற் கடைகெட்டா ரில்லையெனக்
கொண்டுநின்றே னென்றான் குலைந்து. (51)

என்னதுண்டு மிண்டனவ னேற்பே னயோத்தியெனச்
சொன்னதுண்டு போன சுவடுண்டு பின்னடுத்துச்
சென்றேங்கில் மன்னன்பாற் சென்றுரைப்பா ரில்லையென
நின்றேங்கி வீழ்ந்தா னிலத்து. (52)

உற்ற துணர்த்தி யுரிய திறலானே
டிற்றினிது மாள்வே னெனவெண்ணிச் சொற்றதனைச்
செய்வான் பிறிதிலையாய்ச் சேர்ந்த துணிவுடனே
கைவான்கான் மைந்தனங்கா னன். (53)

சிங்கமெனும் வீரன் செறிகழலிற் சேர்ந்தடுத்தான்
அங்கமன மாவி யலக்கணுற்றான் பொங்கும்
பொருமலினன் கண்ணீர் புரத்தருவி நேரச்
செருமலிவான் வீழ்ந்தான் றிகைத்து. (54)

வீழ்ந்தவனை வீரன் விளைந்தசெய லென்னையெனத்
தாழ்ந்தெடுக்கப் பற்றித் தரியாதான் ஆழ்ந்ததுன்பத்
தாளையரக் கன்சேய் தடிந்தான்வாள் கொண்டெய்து
மீளவிழுந் தானன் மெலிந்து. (55)

Koviloor Digital Library

துடிக்கா னுயிர்ப்புமிலன் துள்ளிவரு கண்ணீர்
பொடிக்கான் புகலான் பொருமான் வெடித்துவிம்மிப்
பாரடுத்து வீழான் பரமன் திரமதனை
யாரெடுத்துச் சொல்வா ரறிந்து. (56)

சொற்பரிதல் கேட்டுத் துணுக்குற் றுணர்வின்றி
நற்பெரிய வாடையுற்ற நன்மரம்போற் கற்பகமாம்
வள்ளலொத்த தாமரைத்தாள் வந்துவரை யாய்வீழ்ந்தா
ருள்ளலொத்த வானரத்தா ரோய்ந்து. (57)

சித்திரமாந் தன்மையுற்ற சேவகன்றீர்ந் தானுணர்வு
மித்திரரை நோக்கான் வினவுதம்பிக் குத்தரந்தான்
சொல்லா னபிமானந் துற்றவாள் மார்பினுற
வில்லான் விழுந்தான் வெயர்த்து. (58)

நாயகனைக் கண்டுமுற்ற நாணந் தனைப்பார்த்தும்
ஆய கரும மழிந்தகண்டுந் தாயிழந்த
கன்றடுத்த தம்பி கலங்கித் தலத்தானுன்
னன்றடுத்த சிந்தை நலிந்து. (59)

தொல்லையுணர் வீடணனுஞ் சோர்ந்து துளங்கினு
னெல்லையிலாத் துன்பத்தை யேற்றதனுற் கொல்லற்
கடுக்குமென வையத் தடுத்தா னிவளால்
அடுக்குமினல் முற்று மறிந்து. (60)

சீதமுற்ற நீர்தெளித்துச் சேவகனை மேவகத்துப்
போதமுற்றும் நீர்மை புரிந்துபூம் பாதமுற்றும்
மெய்பற்றித் தீண்டவுடன் வேதமுத லாம்வரதன்
ஐபற்றுங் கண்விழித்தா னங்கு. (61)

உளற்றவார் கண்ணீரோ டுற்றெழுந்தா னுற்றதெண்ணி
ஆற்றுவா னல்லன் அயர்கின்றான் தேற்றவான்
தம்பி செயலின்றிச் சாய்ந்தான் தனிமுதலாம்
நம்பிசெயல் கண்டு நலிந்து. (62)

Koviloor Digital Library

தையலருள் செய்ய தவத்தி நிறைகற்பின்
தெய்வமுந்தன் தேவிதனைத் தீண்டியே வெய்யகுணன்
கொன்றனே யென்றாற் குறித்த வறத்துறவு
நன்றான தென்றா னகைத்து (63)

அரக்க ரமரரெனை யந்தணர்தா மென்னை
குருக்க ளமர்முனிவர் கோமளன் செருக்குற்று
நின்றார் சிதைவர் நிகருலக மூன்றினையும்
ஒன்றா யெரிமடுக்கா தோ. (64)

புக்கடுத்திவ் வூரைப் பொடித்தரக்கர் பொன்றவட்டுத்
திக்கடுத்த வானோர் திறந்திர்க்கத் தக்கவர்நாம்
கண்ணீ ரொடுமெடுத்த கைதூக்கி நிற்றுமெனில்
எண்ணீர்மை யென்றா னிகழ்ந்து. (65)

அங்கும் அறமருளி யான்ற வரசிழந்து
மங்கைதனை வஞ்சனுற வாழ்ந்திருந்தோ மிங்குமிந்தத்
துன்படுக்க நிற்றுமெனிற் றொல்லைச் சிறைப்படுத்தி
வன்படுக்கச் செய்வார் மறம். (66)

மன்றலுற்ற கோதை மறிக்கப் புரிந்தவரைக்
கொன்றலுற்ற வாகை குறித்திலமேல் பொன்றலுற்றார்
என்றுரைப்பார் முந்தை இகலென்று மென்றுரைத்தான்
நன்றுரைப்பார் சிந்தைமன்றா னன். (67)

அனையவுரை கூற வருக்கன்சே யீதோர்
கனவுகண்ட தென்னக் கவிந்து வினையமெனை
வல்விளக்கின் விட்டிலென மாய வரக்கர்களைக்
கொல்வழக்கா மென்றான் குறித்து. (68)

இலங்கு மிலங்கை யெடுத்தின் றரக்கர்
பொலங்குழையார் பாலரொடு போக்கிக் குலங்குழையக்
கொல்வேம் கொடுந்தொழிலைக் கொண்டார் சுரர்களெனில்
வெல்வேம் விரைந்தென்றான் வேந்து. (69)

Koviloor Digital Library

அறங்கெடத்தான் செய்வ தமையுமெனில் யாமே
புறங்கிடர்தென் மூன்றும் புவனங் கறங்கிடத்தாம்
தேவர்குலங் கட்டுமெனுத் தென்னிலங்கை தன்னிலங்கு
வாவலுற்றான் சிந்தை மருண்டு. (70)

மற்றுமுள வீரரெலா மன்னன் முனம்வாவி
எற்று மரக்கர்களை யின்றெடுத்துப் பற்றுமென
வுற்றதனைக் கண்டரக்க னேங்கு மயோத்தியின்மேல்
உற்றதனைச் சொற்றா னுணர்ந்து. (71)

தாயரொடு தம்பி தவம்புரியு நன்னகரிற்
போயதொரு மாற்றம் புகச்சீதைக் காயதொரு
துன்பந் தணிந்தான் றுதிக்கு மடியவர்கட்
கின்பந் தணிந்தா னிலன். (72)

அழுந்தியபால் வெள்ளத் தனர்தரது நீங்கி
எழுந்ததெனத் துன்பவுந்தி யேறிக் கொழுந்துறுதீக்
கோபக் கடலடுத்த கோமான் மனதடுத்த
வாபத் தொடுமுரைத்தா னங்கு. (73)

திருமிந்தச் சீதையொடு தீமை சிதைவதன்றே
வேரி னெடுமடிக்கும் வெற்றிகொண்ட யாரிற்
றொடரளிக்கு மென்றறியேன் தாயதம்பி யர்க்கும்
படரளித்தே னென்றான் பரிந்து. (74)

நினைகணக்கிற் செல்லும் நிகர்மானம் சின்றான்
வினைகணத்தின் முற்றும் வினையேன் மனைகணத்திற்
போனதங்கா மிங்கு புகழ்மனையும் போனதினி
ஆனதெங்கா மென்றா னறிந்து. (75)

தாதைக்கும் எற்ற சடாயுவுக்கும் தாரமுற்ற
சீதைக்கும் கூற்றைச் செறிதீமை பேதைக்காம்
தாயர்க்குத் தம்பியர்க்கும் சார்ந்து முடித்ததென்றான்
தீயர்க்குத் தீயாந் திறன். (76)

Koviloor Digital Library

உற்ற துணரா ருணர்ந்துறத்து நேர்ந்திடினும்
வெற்றிதரு பாசத்தால் வீழ்த்துவனேல் மற்றவர்க்குப்
புள்வேந்தன் சாரான் பொருவின் மருந்துநல்கக்
கள்வேய்தார் மாருதிபு கான். (77)

மாக மடுப்பதற்கு வல்லை வரத்தோளா
யேகு முபாய மிசையென்னும் சாகும்
இலங்கைப்போ ரெல்லா மெழுந்த சழக்கன்
கலங்கப்போம் பின்னையென்றான் காய்ந்து. (78)

அவ்விடத்தாந் தம்பி யனகன் பரதனையும்
எவ்விடத்தா னிந்திரசித் தேற்றவனோ தெவ்விடத்தாய்
மூன்றுலகு மென்னு முதலோன் வலியறியா
தேன்றகவ லென்றா னெடுத்து. (79)

தீக்கொண்ட வஞ்சன் திசைமுக னத்திரத்தின்
வீக்கொண்டு வீழ வினையேனோ கூய்க்கொண்டு
பாசத்தா னாமனைப் பண்ணுமவன் முன்பாதன்
தேசுற்றா னென்றான் தெரிந்து. (80)

அக்கணத்தி னுமனுமன் அய்யவெந்தன் றோளடுத்தால்
இக்கணத்தி னுமாக ரெய்துவேன் திக்கனைத்தும்
செல்வே னுடனடுத்துத் தீர்ப்பேன் பகையென்றான்
மல்வேய்ந்த தோளான் மதித்து. (81)

எழுபதெனும் வெள்ளமுட னேற்றிலங்கை தன்னைத்
தழுவிவர வென்றிடினுஞ் சார்வேன் பொழுதிறைதான்
தாட்பதுமென் புட்பகம்போய்ச் சாரு முனமடுப்பேன்
வேட்பதுமென் னென்றான் விரித்து. (82)

கொல்லவந்தா னிதி குறித்து விலக்குவதாயச்
சொல்வினின்றேன் கொன்றான் றுளங்கினே னெல்லை
தரைவீழ்ந்தே னென்னாற் றடிப்பரிதாய்ச் சென்றான்
உரைதாழ்ந்தே னென்றா னுருத்து. (83)

Koviloor Digital Library

மனத்தின் முனஞ்செல்லு மானத்தின் முன்போய்
நினைப்பின் முனம்பார்த்து நிற்பே னினிச்சிறிதும்
தாழாதென் றோளிற் றரிப்பீ ரெனவுரைத்தான்
ஊழாகச் சிந்தை யுருத்து. (84)

ஏறநின்றார் வீர ரெழுக விறைஞ்சி யெந்தாய்
கூறநின்ற துண்டுதுன்பக் கோளுற்றேன் தேறநின்ற
செய்கை மயங்கித் தெளிந்தே னிதுமாயச்
செய்கை மயங்கலென்றான் றேர்ந்து. (85)

பத்தினியைப் பார்த்துப் பதகன் படுப்பனெனில்
முத்திறத்த மூதுலகு முன்முடியும் அத்திறந்தான்
ஆனதுமெய் யன்று மயோத்தி தனையடுத்துப்
போனதுபொய் யென்றான் புகழ்ந்து. (86)

இமையுற்ற முன்னடுத்தங் கேந்திழையைக் கண்டிங்
கமைவுற்ற பின்னரடுத் தாகும் சமைவுற்ற
தென்றுரைத்தான் விடணமா லேற்றவள்ளல் நன்றென்றான்
சென்றடுத்தான் சிந்தை தெளிந்து. (87)

வண்டுருவங் கொண்டான் மனவிசையிற் சென்றடுத்தான்
விண்டுருவுந் தண்டலைக்கண் வீற்றிருக்கக் கண்டனனும்
ஆவிதனை யுண்டிலையென் றான்றமைந்த சித்திரமாந்
தேவிதனைச் சிந்தை திகைத்து. (88)

தீர்ப்பதுதான் துன்பஞ் சிறந்த வுயிரையெனப்
பார்ப்பதுதான் முச்சடையாள் பன்னவுடன் கார்ப்பெரிய
மேகத்தாஞ் செல்லொலிபோல் வில்லொலியி னல்லியலி
னாகத்தாட் கண்டா னடுத்து. (89)

வஞ்சனையென் றுன்னி மகிழ்ந்து சிறந்தவர
நெஞ்சனைய சந்தேக நீங்கினான் வெஞ்சிலையி
னின்றபடை கொண்டா னிகும்பலையா னென்றடுத்துச்
சென்றபடை கண்டான் றிகைத்து. (90)

Koviloor Digital Library

வேள்விக்கு வேண்டும் விரகடுத்த நெய்யுடனே
வாழ்விக்குந் தேவர் மனங்கண்டான் சூழ்வித்த
வண்ணமிக நன்றென்று வந்தா னடிபணிந்தான்
எண்ணமிக வென்று னெடுத்து. (91)

இருந்ததியற் றேவி யெழிலடுத்துக் கண்டேன்
அருந்ததியை மாயத் தரக்கன் பெருந்திறலாற்
சென்று னிகும்பலையிற் செய்வேள்வி முற்றிவிடிற்
பொன்றுனி தென்றுன் புகழ்ந்து. (92)

என்ற வுடனுலக மேழடுத்த தீவினுடன்
ஒன்ற வுடைகடலி னேதையென நன்றடுக்கு
மென்ன வமர ரெடுத்தார்த்தார் வானரங்கள்
மன்னவுட னுர்த்த மலிந்து. (93)

வீரனையந் தீர்ந்தபின்னர் வீடணனை மெய்யோடும்
ஆர்வமுய்யச் சேர்த்தணைத்திங் காந்துன்பந் தீர்வதற்கென்
னீயுண்டுதேய்வ நிலையுண் டனுமனுண்டு
கோயுண்டோ வென்று னுனித்து. (94)

என்ற வுடனிறைஞ்சி யேற்ற மகமுற்றின்
வென்றி யரக்கர்பங்காம் வீரனுடன் சென்றவன்ற
னவியுண்டு வேள்வி யடுத்துச் சிதைப்பனென்றுன்
தேவியுடைடு கண்டுவந்தான் றேர்ந்து. (95

மாயா சீதைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

நிகும்பலைப் படலம்.

தம்பி தனைத்தழுவித் தாமரையின் மாமறையோன்
வெம்படையை நீக்கும் விசயத்தவ் வம்பதனை
நீயும் துறக்க நினைக்க லதனைவிடிற்
காயும் துறக்கமுதற் காண். (1)

முக்கணனா ராதி முதலோன் படைவிடுக்கின்
அக்கணமே யன்னதனை லாற்றியே தக்கபடி
செய்துவரி வில்வலியாற் சேரான்றன் சேகரத்தை
கொய்துவர வென்றான் குறித்து. (2)

வல்லனவா மாயை வகுத்த வலிகண்டு
கல்லனயம் நல்லறத்தின் காவலினாற் பல்பெரும்போர்
செய்துழைப்பா யல்லை செறிவுகண்டு கொல்லுதியால்
வெய்திழைப்பான் றன்னையென்றான் வேந்து. (3)

பதைத்தவன்றா னையப் பலபகழி மாரி
விதைத்தவன்றன் மெய்யை விதிர்த்து வதைத்தற்
றொழிலடுத்துச் செய்வாய் துதிக்கும்போ ரென்றான்
எழிலடுத்த மெய்ய னிசைந்து. (4)

தொடுப்பதன்முன் வாளி தொடுத்தவைக ளூறித்
தடுப்பதன்முன் தாக்கித் தடுத்துக் கடுப்பினுற்ற
பாணத்தைப் போக்கிப் பழிபடுவான் றன்னுயிரைச்
சேணுற்ற தாக்கு சிறந்து. (5)

என்பனவா மெல்லா மியம்பி யியல்புடைய
முன்பனவ னேக்கியைய மூன்றுலகுந் தன்பணியால்த்
தாங்கும் வலத்தான் தனிச்சிலை யீதாகும்
வாங்கும் வலத்தாய் மதி. (6)

Koviloor Digital Library

இச்சிலையின் சீர்த்தி யியம்புந் தமிழ்முனிபா
லச்செனமுன் கேட்டனையா லாழியண்ணல் கைக்சிலையாம்
மேனாள் விரிஞ்சன் விறல்வேள்வி கொண்டவது
தானாகு மென்றுகொடுத் தான். (7)

ஆணிகொடுத் தானுலகுக் காழியான் ஆர்த்தெடுத்த
தூணிகொடுத் தானுருதி சொல்லினான் தானுவொத்த
தோற்றத்தான் மன்றுள் தொழுதான் சுரர்களெலாம்
ஏற்றத்தான் சென்று னிசைந்து. (8)

மங்கலத்தார் தேவரொடு வான்மகளிர் வாழ்த்தெடுப்பப்
பங்கமற்று மாசி பரர்கூறத் திங்களுற்ற
மோலிவரன் முப்புரத்தை முற்றுவிப்பா னென்னவந்தான்
கோலிவரும் தம்பி கொதித்து. (9)

மாருதியே மேலவராம் வானரர்கள் வாழ்த்தெடுப்பச்
சேருதியே லென்றுவள்ளல் செப்பவுடன் வாரிசநேர்
பாதமகத் தும்புரத்தும் பாங்காச் சிரஞ்சேர்த்தான்
ஏதமகத் துந்தரத்தா னே. (10)

பொலங்கொண்டன் மேனிப் புனிதனுற்ற கண்ணீர்
நிலங்கொண்டு நின்றவனை நேர்ந்து வலங்கொண்டு
வில்லிடத்திற் கொண்டான் வீரவான் பெருந்தலையைக்
கல்லிடத்திற் கண்டான் கனன்று. (11)

தான்பிரிகி லாதவரத் தம்பி தனைப்பிரிதல்
ஊன்பிரிகி லாத வுயிர்பிரிதல் வான்பெரிய
வேள்விக்குச் சென்றநாள் வேந்த னிருந்ததனைத்
தாழ்வித்த வின்றியிருந் தான். (12)

சேனா பதிமுதலாஞ் சேவகர்கள் சேர்ந்தடுத்தார்
ஆனார் நிமிர்கொள்ளி யங்கையினார் கானார்
தரும்பலக்கண் பொன்மலைகள் சார்ந்தநெறி நீங்கி
திரும்பலக்கண் வந்தார் திரந்து. (13)

Koviloor Digital Library

உண்டாய தோரா லுலகுக் கொருமுதல்வன்
கொண்டாய தோங்கிவரு கொள்கையென விண்டான்
விழுங்க விரிந்ததனை வேறடுத்துக் கண்டார்
அழுங்குங் கடலரக்க ரை. (14)

நேமித் துணைப்பெயரா னேர்ந்த நெடுயூகஞ்
சேமித் துணைத்துநின்ற தீவினையோன் ஓமத்
தனலாம் வடவைக் கடுத்த கடலின்
புனலாம் படியாம் பொருத்து. (15)

காரா யிரமாங் கடயானை தேர்பரிமா
தாரா யிரமாத் தழுவியதான் நீராழி
தன்னோடொ ராழி தழுவியது போலக்
கொன்னு ரளவுகுறிக் கும். (16)

வண்ணடுத்த கார்மேனி வாழியதின் மேன்மழைவாழ்
விண்ணடுத்த செம்மயிர்கள் வீசுதலால் அண்ணல்
கரியான் பகழி கடனிறைந்த பான்மை
விரியான தென்பா மிகுந்து. (17)

வழங்கார் சிலைநாணே வானி னடுத்த
பழங்கார் முகமாம் பணிலம் தழங்காக்
கடலொத்த வாகும் கவின்முரச மெல்லாம்
அடல்சத்த மின்முகில்க ளாம் (18)

வலியாக்கும் வள்ளறிரு வாய்மொழியின் வந்து
கலியாக்கும் கார்க்கடலிற் காந்திச் சலியாத
சேனைக் கடலேற்றுத் திரா வலியுடைய
தானைக் கடலார்த்த தாம். (19)

ஆர்த்தா ரெதிர்த்தா ரரக்கர் குலவீரர்
போர்த்தார் முரசம் புடைத்தடர்த்தார் தூர்த்தார்கள்
கற்படையைச் சூன்முகிலிற் காணுங் கவிவீரர்
விற்படையைச் சூழ்ந்து விரைத்து. (20)

Koviloor Digital Library

மின்னும் படையடுத்து வீசலினல் வெம்படைமேல்
பன்னுங் கவிகள் படிந்துளவை துன்னுந்
துறைநீர்கொள் வாவி தொடர்ந்துவரு மன்னம்
நிறைநீர்மை யாகும் நிரந்து. (21)

வில்லு மழுவும் மிடலோ ரெழுவுடனே
பல்லுந் தலையும் படியதனிற் செல்லும்
படிசிந்திச் சென்ற பருங்கல் மரமும்
முடிசிந்தும் வானரங்கள் முன். (22)

வென்றிப் படையுடைய வீரனைத்தான் வீடணனீ
நின்றிப் படித்தாழ்தல் நீதியோ சென்றிக்
கடிவேள்வி யைச்சிதைத்தல் காணு வரையின்
முடிவேத மென்ருன் முனைந்து. (23)

தேவாசுரருந் திசையடுத்த நான்முகனும்
மூவா முதலீசன் மூவுலகின் கோவான
கொற்றவனே டாமுதல்வர் கூடா தவரில்லை
வெற்றிதரு மென்ன மிகுந்து. (24)

அக்காலை யப்படையு ளானு னிலக்குவனும்
புக்கால மம்பு பொழிந்தனனு லுக்கார்
அரக்கர் தமது ரடுக்கார் நமனுர்
புரக்கும் புரத்தார் புகுந்து. (25)

தேரு மதகரிகள் தேரடுத்த பாய்பரிமா
நூரு யிரகோடி நூழில்படச் சேரூர்
குருதிக் கடலிற் குவிந்து திடராய்
வருதிக் கடலோர்ந்த வாம். (26)

வாமக் கரித்தானம் வார்ந்திழிந்த வார்குழியின்
இமொய்த்த வாமரக்கர் செம்மயிரின் தாமத்
தலைபுக்க தாமெரியின் தாங்கிவரு மோம
நிலைபுக்க தாகு நிரந்து. (27)

Koviloor Digital Library

வன்றானை தன்னையடு வார்கணையின் மாரியினால்
தன்றாதை வையமொன்றாற் றான்பலதேர் கொன்ற
வெணமதர்த்த பேரணியை யெய்து குறைத்தான்
சினமதர்த்தன் தம்பி தெரிந்து. (28)

மலையனுங்கமாமழைகள் வானடுத்த மீன்கள்
அலையவெங்கா லாலழிந்த வாகத் தலைகள்
உடல்க ளிவை யெல்லாம் ஓமக் கனலின்
மிடல்கணையின் வீழ்ந்த மிகுத்து. (29)

வாரணத்தை யொத்த வலன்றுணிப்ப வான்படர்செய்
தாரணித்த தாந்தலைக டாக்குதலால் ஆரணத்தாம்
மந்திரத்தி னலமைத்த மன்பூ ரணகும்பம்
சிந்திரத்த மான தெரித்து. (30)

காறலையொ டுந்துணிந்து காய்கதிரி னுகிவரு
கோறலையிற் கொன்மறுக்கங் கூடினர் வேறலத்தி
னான்றித் துளங்குமெய்யா ருற்ற குடல்சரிய
வேன்றுற்று வீழ்ந்தா ரிரிந்து. (31)

பொங்குமுடல் பீறும் புதல்வர்களைப் போக்கில்லார்
தொங்குகுடல் தோண்மிசையிற் சோரவே யங்குலையத்
தள்ளி யழுவார் சரிந்து குடல்சோரத்
துள்ளி விழுவார் சுரித்து. (32)

மூடிவரு மெய்யடுத்து முற்றும் நரவுடனே
சாடிபொரி யோடு தகர்ந்துதள்ளக் கோடி
பலகுழுக்க ளாகப் பரந்ததலை யாக்கை
சிலமுழுக்க வாகும் நெரிந்து. (33)

காலாய்க் கடுவாய்க் கலிங்கமுற்ற கம்மியர்கள்
தூலா யுடல்தொடர்ந்த நோயென்னப் பாலார்
பிறையாய்க் கலந்து பிறங்கிவரு சேனை
நிறையாய்த் துணித்தா னினைந்து. (34)

Koviloor Digital Library

கண்டனனு மெத்திசையுங் கண்ணெடுத்து விண்ணெடுத்த
மண்டலமா மன்னுகடல் மாப்படையை விண்டெரிகால்
வீரத் தொடுபொருத வீழ்ந்தலைந்த தண்டலையாய்ச்
சாரக் கிடந்ததனைத் தான். (35)

மிடல்கரியி னும்பிணத்தின் விண்ணிற் றொடரும்
திடல்புரவி தேரடுத்துச் சிந்தும் உடலும்
தலையுதிரத் தாங்கடலும் தானன்றி வேறு
நிலையுதிரக் கண்டா னினைந்து. (36)

நூறுநூ றாயிரமா நோன்கழல்க ளார்த்துவரு
மாறரக்கர் தம்மையொரு வன்வாளி கூறுகூ
றாக்கிவரு சோரி யடித்துவரு மாறல்லால்
ஆக்கைவரக் காணு னடுத்து. (37)

நஞ்சினுங்கார் வெய்யார் நடுக்கிவரு நாவுலர்ந்தார்
அஞ்சிகொந்தார் சில்லோ ரடைகின்றூர் வெஞ்சினங்கொள்
வீரத் தடுத்தவர்கள் மீளாது துஞ்சினூர்
சோரக் குடலுந் துடித்து. (38)

ஓமக் கனலவிந்த தூற்ற கலப்பையொடு
காமர்த் தருப்பைபிற கட்டறவே நாமத்தாம்
மந்திரமுந் தான்மறந்து மற்றும் வருகோபக்
கொந்தழலிற் கொண்டான் குறிப்பு. (39)

அக்கணத்தி னுங்களத்தி னுகுமப்பு மாரியினுல்
உக்கவர்க டர வுயிருள்ளோர் தொக்கார்
அரக்க ரவனை யடுத்துச் சுழன்றூர்
குரங்கு வரரடிக்கக் கொண்டு. (40)

ஆயிரத்தி னுலடங்கா வாழியுற்ற மாப்படைகள்
ஏயிரத்தா றுகவுட னிற்றதுவுந் தூயன்
நிலைவலியுங் கண்டான் நிலைத்துவரு துன்ப
நிலைவலியுங் கொண்டா னினைந்து. (41)

Koviloor Digital Library

மெய்குலைத்து மேதினியா மேன்மடந்தை விம்மியுறச்
செய்கொலைத்தன் ஞர்தொழிலுந் தீயவர்கள் மொய்குலத்தி
னுற்றிறுதி கண்ட வுயர்முனிவர் கோடமுடன்
முற்றறுதி கண்டான் முனிந்து. (42)

மானமும் பாழா வருத்தமைத்த வேள்வியுற்ற
மோனமும் பாழா முடிவில்லாச் சேனை
படச்சிதைவான் மந்திரமும் பாழான கண்டு
வடச்சிதைவான் சொல்வான் மருண்டு. (43)

வெள்ளமிக்க சேனைகொண்ட வெள்ளமிரு பத்தைந்தில்
உள்ளதக்கு ரோணிபத்தா யோய்ந்தனவா மெள்ளரிய
வேள்வியினி யானதெங்கே வேண்டாது காண்டகைய
ஆள்வினையும் போனதென்ற ளுய்ந்து. (44)

தொடங்கி வருவேள்வித் தூமக் கனலும்
அடங்கிவரு விஞ்சை யவிந்த திடங்கவரும்
வெஞ்செருவின் வென்றி விழையாதா மென்பதுவும்
எஞ்சலின்று மென்று னெடுத்து. (45)

ஆங்கிளைய செய்கை யழிந்தான் மனிதற்கண்
டேங்கிகையு மென்ப திழிவன்றோ வோங்கிநின்ற
மாவரத்தாஞ் செய்கை மதித்தலொடு பேராற்றல்
தாவரத்தாஞ் செய்வதெனைத் தாம். (46)

மந்திரத்தாம் வேள்வி மடிந்த தெனநாடிச்
சிந்திரத்தா மாகித் திறம்புதலென் அந்தரத்தார்
ஆமனிதர்க் காற்று னடலிற் றிறற்கேயாம்
சேமநிக ராற்றலென்பார் சேர்ந்து. (47)

என்றுன் பகர்கின்ற வெல்லை தனிலடுத்துக்
குன்றும் மரம்பிணைத்தின் கூட்டமுடன் பொன்றும்
கரியெடுத்துப் போக்குங் கவிப்படையைக் கண்டு
புரியடிக்கும் வல்லரக்கர் போய். (48)

Koviloor Digital Library

ஒதுங்கினவாம் கீழி ணொருவர்க் கொருவர்
பதுங்கினவாய்ச் சோரும் பழியார் பிதுங்கும்
குடலுடையார் பட்டார் குவிந்தா ரரக்கர்
அடலுடையார் சீற்றத் தவிந்து. (49)

வீரன் கணைகுரங்கு வீசுகின்ற கார்வரையும்
காரா மரக்கர்க் கடல்வீழ்ந்த போரில்
நெடுங்கால் பொரப்பொழியும் நேர்மழையின் தாரை
மடங்காக் கடல்வீழ்ந்த வாய். (50)

திரைக்கடற்கு நேர்படைகள் சிந்தி யிரிய
வரைக்கடத்தாற் றீத்தவனு மான்தான் அரக்கன்
தனையடுத்தான் சொற்றான் தகைந்துவரு மாற்றம்
வினையடுத்த செய்கை விளைத்து. (51)

நானுனைத்தான் கெஞ்சும் நயமொழியைக் கேளாது
சானகித்தாய் தன்னைத் தடிந்தனையே மானமுற்றுச்
சேர்ந்துமிஞ்சு முத்தரத்திற் சென்றனையே வென்றனையே
வோர்ந்தவஞ்ச மென்றா னுருத்து. (52)

தடந்திரையாய்ச் சுற்றிவரு சக்கரமா யூகம்
கிடந்திரைய நாணொலியுங் கேட்டாய் தொடர்ந்திங்
கயோத்திதனிற் சென்றதெப்போ தங்குளரை நூறிச்
சயோத்தியமாய் வந்தறிப்போ தா. (53)

எந்தளிக்கும் ஞால மிசைமிகுத்துத் தாங்கிநின்ற
பாந்தளிற்றிண் டோளான் பரதனெனும் வேந்தனைத்தான்
கண்டுநின்று வில்வலமுங் காட்டித் திரும்பினையே
விண்டுநின்ற தோளாய் வியப்பு. (54)

அம்பரத்திற் சம்பரன்ற னாவி தனைவாங்கி
யும்பர்நத்து நன்மைபுரி யொண்டவன்சேய் நம்பியர்கள்
மூவர்க்குந் தம்பிகண்டும் மூண்டடுத்த வாண்மையதே
தேவர்க்குந் தக்கதென்றான் றேர்ந்து. (55)

Koviloor Digital Library

தீயொத்த வாளியுடல் சேரச் சொரிசோரி
காயத்தின் வாய்செவியிற் கண்ணூடு பாய
விலங்கைபுக்கு வஞ்ச மெடுத்துவரு மாயம்
கலங்கிநிற்கு மென்றான் களித்து. (56)

பாசமோ வேதா படைக்கலமோ சம்புபடை
நேசமோ விண்டெர நின்றதுவோ வீச
விரும்புகின்றீர் சால வெருவினோ மும்மை
விரும்புகின்றார் காலன் விரைந்து. (57)

வரங்கொண்ட வாறும் வளமாயச் சீறும்
பரங்கொண்ட பாழ்படையின் பாடும் உரங்கொண்டு
நின்றமையு நிற்க நினது சிரந்தடிதல்
இன்றமையு மென்றா னிகழ்ந்து. (58)

விடந்துடிக்குங் கண்டன் விரிஞ்சன் பரந்த
படந்துடிக்கும் நாகப் பரனும் சடந்துடிக்கத்
தாங்கினுந்தான் றுஞ்சல் சரத மெனவுரைத்தான்
ஓங்கினன்பால் விஞ்சையுணர்ந் தோன். (59)

சொல்வலத்தா னுன்னைக் குறித்துவரு சூளுரைத்த
வில்வலத்தான் சேனையெலாம் வீட்டினான் நல்வலத்த
நானோசை யோமத்தி னூட்டுறப்பாய்க் கேட்டனையோ
ஆனோசை யில்லா யறி. (60)

மூவுலகுங் காக்கு முகற்றம்பி பூசறனைத்
தேவுலக ராக்குந் திறத்துள்ளோர் எவர்களும்
காணநின்றார் சாதல் கருதிவரு வீமமதைப்
பூணநின்று யாதல்புகல். (61)

அன்னவகை கேளா வனலுயிர்த்த விற்றோளான்
மின்னுபகு வாயான் வெகுளியான் முன்னரிகழ்
மாற்றம் புகலும் வழக்கென்னை யென்றுரைத்தான்
சீற்றம் புகலுந் திறன். (62)

Koviloor Digital Library

மூண்டபோர் தோறு முடிந்த செயலுடையீர்
மாண்டபோர் வேறுமறந்தி ரோ :மீண்டவா
வென்ருகு நீவி ரிறந்தால் மருந்துளவோ
புன்றூர்க் கென்றும் புகழ். (63)

இலக்குவன்று னென்னை யிராமன்று னென்னை
விலக்கவன்றும் வன்குரங்கின் வெள்ளம் நிலக்கணுற்று
மாறுவதோங் கண்டு மனித ரிரிவதன்றி
மீளுவதோ வென்றான் விளித்து. (64)

யானுடைய வில்லுமுட னுண்டபொற்றோ ளீண்டிருக்க
ஊனுடைய சீவனினி யுய்வதுண்டோ கூனற்
குரங்கினொடு மானுடவர்க் கொல்வதொன்றோ தேவர்
தரங்குறைவ ரென்றான் தடுத்து. (65)

வேட்கின்ற வேள்வி விளிந்த விதமெண்ணிக்
கேட்கின்ற கேள்வி கிளத்துவீர் தாட்கின்ற
தில்லைத் தடித்திடியா யேற்றுத் தலையறுக்கும்
வில்லைத் தடுப்பவரார் மிக்கு. (66)

மற்றிதாம் நம்மவர்போல் வாய்ச்சொல் லெடுத்துரைக்கேன்
வெற்றிதாம் மூன்று விரைந்துதந்தீர் உற்றிதாய்
நாளுருத்தாங் காலத்து நாடி யொருமுறையும்
வனுருத்தா னில்லைமடிந் தீர். (67)

நின்மின்க ளென்று நெருப்பைத் தரவிழித்து
மின்மின்கொள் சாலி விரைந்திட்டுப் பொன்மின்கொள்
கோதைகையிற் பூட்டிக் குறித்தவில்லை நாண்பூட்டி
ஊதைவையத் தேற்று ஞருத்து. (68)

ஊதினான் சங்க முயர்ந்த மகளிரொண்கண்
மோதினார் எங்கு முடிவென்னக் காதினான்
வாரோங்கு வார்கலைக வள்ளல் வரன்பெரும்போர்
தாரோங்கு மென்றான் சலித்து. (69)

Koyiloor Digital Library

இழைத்த கனயாக மெங்கள் தவத்தால்
பிழைத்த தினிப்பிழையான் பேளுன் அழைத்தவிதி
தம்பிகளை தன்னுற் சரத மரணமென்ருர்
உம்பர்கண் நன்ரு யுகந்து. (70)

நாண்டொழிலி ஞேசைசெவி நாடி நடக்கவுடன்
ஆண்டொழிலார் கையினிற்கல் லாமரங்கள் பூண்ட
மறிந்துவிழுந் தாமினிமேல் மாண்டனமென் ' றன்னி
அறிந்துவிழுந் தார்குரங்கா வார். (71)

படைத்தலைவ ரன்றிப் படைவீரர் காற்ருற்
புடைத்திரியும் வேலைப் புனல்போல் உடைத்திரியப்
பேராற்றல் கொண்டனுமான் பேர்த்தான் கிரியொன்றை
நேராற்றல் கொண்டா னிமிர்ந்து. (72)

நில்லடா நில்லுநில்லு நீவாசி பேசியென்னை
கல்லடா நின்றவென்னைக் காண்கலையோ கொல்லவா [ருன்
மென்றுநயத் தெண்ணினையோ வேற்றமுனக் கென்னையென்
நன்றுநம ஹுக்கும் நமன். (73)

வில்லெடுத்த வாரிதியாம் வீர வரனேரே
கல்லெடுத்த மாருதியைக் கண்ணெடுத்து மல்லெடுத்த
பொற்புயத்தான் வல்லமையைப் போற்றினர் தேவரெலாம்
அற்புயர்த்தாந் தாதை யறிந்து. (74)

வீசினன் குன்றதனை வெம்பொறிகள் விண்ணடுக்கப்
பேசினன் வீரம் பிறங்கெரியாய்க் கூசி
உலகலைந்து சோர வுயரரக்கர் சேர
நிலைகலைந்து நின்ருர் நினைந்து. (75)

எண்டங்கு தோளா னெடுத்தவர மாருதியும்
அண்டங் குலுங்க வசனியஞ்ச விண்டங்கு
வீசியெறி யெல்லை வெறுந்துகள தாக்கினன்
வாசியறி வில்லான் மதித்து. (76)

Koviloor Digital Library

மற்ருெருகுன் றேற்க வருவான்றன் மார்பினிலும்
கற்றருகால் கையிற் கனற்கண்ணிற் சுற்றும்
அரிமுகத்த தாம்பகழி யையிரண்டு கோடி
எரிமுகத்தான் விட்டா னிரித்து. (77)

ஆய்தரத்தி ஞனயர அங்கதனே டாமுதல்வர்
காய்சினத்த ரோடு கதிர்மைந்தன் தீயவன்பாற்
தோன்றினனைக் கண்டு சுரிக்குங் கனலனையான்
ஆன்றசினங் கொண்டுரைத்தா ஞங்கு. (78)

அனுமனிந்தை காணீர் அவனின் வலியீர்
தனுமனெந்தன் வன்மை தவரோ மனிதனெங்கே
காட்டிமலை வில்லார் கடமடுப்பீ ரென்றுரைத்தான்
நாட்டுமலை வில்லான் நகைத்து. (79)

என்றுரைத்துத் தம்பிதனை யேற்ரு னெழக்கண்டு
குன்றுரைத்து வீசுங் குழாந்தோறும் சென்றுரைத்த
பாணமழை மேருவையும் பாங்குருவுங் கோடியினுற்
கோணிவலி யோய்ந்த குரங்கு. (80)

படுகின்ற தன்ரூ படைபகழி மாரி
விடுகின்ற மேனிருத மேகம் முடுகென்ருன்
வல்லரக்க னந்தா மறைதே ரிலக்குவனும்
சொல்விருக்க வந்தான் றுடர்ந்து. (81)

வந்தா னெடுந்தகையும் மாருதிதான் வந்தடுத்தான்
எந்தாயென் ருேளேற்ற லேற்றதென்ருன் அந்தாக
வென்றுவந்தா னைய னியைந்த புயத்திருந்தான்
நன்றுவந்தான் சாரி நயந்து. (82)

காரா யிரமாங் கனலா மெனுங்கொடியோன்
ஓரா யிரம்பரித்தே ரோட்டினுன் பேரா
யிரமுடையா னென்ன விசைந்தான் திசையிற்
தரமுடையான் மாருதியுந் தான். (83)

Koviloor Digital Library

தீயொப் பனவுருமாய்ச் சேர்ந்துயிரை வேட்டனவும்
பேயொப் பனபிணியாய்ப் பேசுவன மாயக்
கொடுவினையை யொப்பனவுங் கூற்றொப்பான் தம்பி
கடுவினையின் விட்டான் கணை. (84)

அவ்வம்பை யவ்வம்பா லாக்கி யறுத்தரக்கன்
எவ்வம்பை யேற்குமுல கென்றெய்தான் எவ்வம்
பரமுற்ற வெண்டிசையும் பாங்கடுத்த வேலை
சரமுற்ற மாமழையாந் தான். (85)

ஆயோன் அளவில் அயிலார் அடற்கணைகள்
தீயோங்க விட்டான் சிறந்தவனு மீயோங்கும்
அத்துணையாம் வாளி யடுக்கினன் பெற்றிதரும்
அத்துணையிற் சாரிவந்தா னார்த்து. (86)

கல்லு நெடுமலையுங் காமரனுங் காணவரு
புல்லு மடுபொடியும் போந்தொன்றாச் செல்லுநெறி
சென்றடுத்த கால்புரையத் தேருமனு மான்றேளும்
குன்றடுத்த தென்னவடுக் கும். (87)

இருவீரர் தம்மையுந்தா மின்னாரென் றுன்னிச்
செருவீரர் காணார் திகைத்தார் ஒருவீரர்
தானொப்பா ரில்லையெனச் சார்ந்தவறத் தாருரைப்ப
வானப்பும் பாண மழை. (88)

விண்ணிறைத்த வோங்கு விசிகந் தமையிமையோர்
கண்ணிறைத்த வாங்கு கவலுற்றார் எண்ணிறைத்த
காலுடையுஞ் செல்லாக் ககனந் தனிலான
மாலுடையோர் பாண மழை. (89)

எறிந்தேறு மாதிசைக ளேற்ற விடியாய்
நெறிந்தேறி னணிநெடு நேரும் சிறந்தேறும்
தாரகைகள் தீரும் தனியுலகு தீயடுக்கும்
காரகையும் மாபுகையைக் கண்டு. (90)

Koviloor Digital Library

ஏமத் தடுகெவச மேற்ற விருவோர்கள்
வாமப் பெருந்தோள் வதனத்தும் காமக்
குலமடவார் கண்போற் குறிக்கும் விசிகம்
வலமுடையார் விட்டார் மதித்து. (91)

எந்நாளி னெத்தேவர் எத்தான வர்க்கேயும்
அந்நார் செருவென் றமரர்சொலப் பொன்னூர்
சிலையினிரு காலுஞ் செறிந்துவரு முன்னாட்
கலையினிரு காலுமெனற் காம். (92)

வேகு முலகமென வீசு கணைபொழிந்தார்
போகு மலரி பொரிந்தவாம் சோகமொடு
திக்கடுத்த யானை செவிநா ணுருமொலியால்
மிக்கடுத்த தாம்பயமென் மேல். (93)

மீனுக்க வானம் வெயிலுக்க வாஞ்சுடரும்
மானுக்க மாமதியும் வான்மழையைத் தானுக்க
எங்குமுரட் பாண மெரிந்தடுக்கு மேயிதனாற்
பங்க முறுரேவர் பதைத்து. (94)

அக்காலை வெங்கணைக ளையைந் தரக்கனவன்
தக்கானுந் தம்பிதன்மேற் சாற்றினான் கைக்கார்
முகம்வளைத்து மெய்க்கவச முற்றப் பொழிந்தான்
சகம்வளைத்துப் போற்றுந் தவன். (95)

தெரிந்தான் சிலகணையாற் றேர்பூண்ட மாவும்
இரிந்தோடச் செய்தா னிமையோர் பரிந்தோட
வாளியரக் கன்பொழிந்தான் மாருதிதோண் மேலிரத்தம்
தூளியரக் கப்பொழிந்த து. (96)

குருதிப் புனல்சொரியுங் குன்று யனுமான்
பருதிக் கிணைவருதல் பார்த்தான் ஒருதிக்கும்
ஓங்கா வகையா யுயர்தே ரினையுதிர்த்தான்
டாங்காகும் தம்பி பகைத்து. (97)

Koviloor Digital Library

அத்தே ரழிந்தகண்டா ரார்த்தா ரிமையோர்கள்
பித்தேற நின்ற பெருமையான் தத்தாவோர்
தேரேறித் தம்பி தியங்கவரு பத்தம்பு
போரேற விட்டான் புகைந்து. (98)

பதைத்தா னுடனிலைத்தான் பன்னும் பகழி
விதைத்தான் விலக்காமுன் வேய்ந்தான் மதத்தால்
வருவான்றன் மார்பில் வடிக்கணையொன் றேற்றும்
செருவான்ற தம்பி செறுத்து. (99)

கவசத்தை மார்பைக் கனன்றுகணை செல்ல
அவசத்தைக் கண்டிமையோ ரார்த்தார் துவசத்தை
யோர்கணையாற் போக்கி யுவன்மணித்தோ ளைத்துளைத்தான்
கூர்கணையாற் றம்பி கொதித்து. (100)

உள்ளாடித் தீயா யுதிரப் புனலொழுகத்
தள்ளாடி மேருவெனச் சாய்ந்திருந்தான் தொள்ளா
யிரங்கணையாற் சாலிகையு மெற்றித் துளைத்தான்
வரங்கணையச் செய்யும் வலன் (101)

வில்லென்றான் மாலினொடு வேதன் சிவன்தனுவே
கொல்லென்றான் சாலி குலைந்துலைய வெல்லும்
தரமின்றா மென்ப தனையு மறிந்தான்
உரமின்றாய் நின்றா னுலைந்து. (102)

அத்தன்மை கண்டா னவன்சிறிய தாதைவரன்
முத்தன்மைத் தம்பி முகநோக்கி எத்தன்மைத்
தேவர்தமை வென்ற திறலான் மனந்தளர்ந்தான்
சாவதமை வென்றான் தகைந்து. (103)

கூற்றாஞ் சிலைக்குங் கொலைவா ளெயிற்றரக்கன்
ஏற்றாஞ் சிலைக்கு மெடுத்தவொளிக் காற்றின்
படைவிடுத்தா னன்ன படைவிடுத்துத் தம்பி
விடைகொடுத்தான் சிந்தை வெகுண்டு. (104)

Koviloor Digital Library

அனற்படையை விட்டா னவனதனை லட்டான்
புனற்படையை விட்டான் பொடித்தான் கனத்த
கதிரோன் படைதுறந்கான் காத்தா னதனுற்
சதிரோங்குந் தம்பி தடுத்து. (105)

இதுகாத்தி யென்று விகல்விசிக மெய்தான்
அதுகாத்தா னப்படையை யாக்கிச் செதுகாப்
படைதொடுப்பே னென்று பரிந்தான் பிரமன்
படைதொடுத்தான் சாய்ப்பதற்குப் பார்த்து. (106)

வானின் றலையா மலரோன் முதலமரர்
கோனன் றலையா குலமுனிவர் மேனின்றார்
எண்டா னடுத்த விளையோற்கு நன்மைசொற்றார்
கொண்டான வன்மை குறித்து. (107)

ஊழிக் கடைக்க ணுலக முழுதுண்ணும்
ஆழிக் கடைக்கனலு மாஞ்சுடரும் பாழிச்
சிகைவிரித்தா லன்னச் சினந்துவரல் பார்த்தான்
நகைவிரித்தான் தம்பி நயந்து. (108)

மட்டார் மலரோன் மறைவாளி முன்மறைந்து
விட்டான் அதைநேரில் விட்டனனே வொட்டான்
மறைமலர்க்கோன் வாளியினுல் வாட்ட மதித்தான்
விரைமலர்த்தார் வீரன் விரைந்து. (109)

நன்று தவனுயர்மா நாதன் மொழிநவின்றான்
பின்று தவனுயிரும் பேர்க்ககிலான் ஒன்றும்
முதனுன் முகன்படையை முன்மாய்க்க விட்டான்
அதனுற் சுரர்கண்மகிழ்ந் தார். (110)

உருமேரு வந்தெதிர்க்கி னூழி நெருப்பு
வருமே லெதிர்ந்தென்ன மாய்த்த திருமால்
தனக்கிளைய தம்பி தருமுலகைத் தீய்க்கும்
சினக்கிளையின் வாளி தெழித்து. (111)

Koviloor Digital Library

படைபடரா வாறு பகலோன் மருமான்
இடைபடர வாளி யிசைத்தான் தொடைபடரும்
மன்படையின் வேகமதை மாற்றியுடனேற்ற
பொன்படையின் தூணி புக. (112)

விண்ணுடர் கண்டார் வியந்தார் விசயற்கும்
ஒண்ணாத துண்டோவென் றேங்கினார் கண்ணார்
நுதற்பெருமா னன்னதனை நோக்கிச் சுரர்க்கங்
கிதத்துரைத்தான் செய்கை யெடுத்து. (113)

மாயோ னடும்படையை வாங்கி வளையெயிற்றன்
நீயோ நெடும்படையி னீக்குவாய் போயோ
விசும்படைவா யென்று விடுத்தா னுலகம்
அசும்படைவா மென்ன வடர்த்து. (114)

சேமித்தார் தேவர் சிரத்தேந்து செய்கையினார்
காமத்தார் நற்றவத்தார் நாடினார் காமித்தல்
கண்டடுத்தான் மேலோன் கருதுமரி யென்றுசென்றான்
விண்டடுத்த தென்ன விரைந்து. (115)

நீக்குந் தரத்துலகு நீரவெனத் தான்பரமா
நீக்குந் தரத்தை நினைந்தடுத்தான் வீக்குந்
தரமின்றி வந்து தனித்து வலங்கொண்
டுரமின்றிச் சென்றபடை யோய்ந்து. (116)

எத்தாடி னாரிமையோ ரேற்ற கவிவரர்கள்
கூத்தாடி னார்முனிவர் கொண்டாடிக் காத்தா
யுலகனைத்தா மென்றா ருவந்தார் பிரமர்
திலகனைத்தாம் போற்றித் தெரிந்து. (117)

அவனன்ன கண்டா னயிர்த்தான் கடவுள்
இவனென்னக் கொண்டா னிசைத்தான் எவனென்ன
நன்றாக வெண்ணல் நகைப்பாம் சிவன்படையாற்
கொன்றாக வென்றான் குறித்து. (118)

Koviloor Digital Library

பார்ப்பான் தருமூலகின் பார மொருபகலே
தீர்ப்பான் படைவிடற்குச் சிந்தித்தான் தூர்ப்பான்
எனக்கொண் டிமையவர்க ளேங்க வுலகம்
மனக்கொண்டு சிந்தைசெய்த வாம். (119)

நானே சிவனிடத்து நற்றவத்தி னுற்றடைந்தேன்
தானே பிறரறியாத் தன்மையுற்ற தானு
லிவனுயிரைக் கோடற் கிலையய மென்னு
திவனுயிர்த்தான் விட்டிடற்கா மென்று. (120)

மனத்தாற் சுடர்தீப மற்றும் புரிந்தான்
நினைத்தா னுயிர்கொண்டு நேரச் சினத்தான்
நெடுஞ்சிலையிற் பூட்டி நிகரின்றி விட்டான்
கொடுஞ்சிலையிற் கூற்றைக் குறித்து. (121)

சூல மழுவுஞ் சுடுகணையும் நீலமுற்ற
ஆல மரவ மசனியொடு காலன்
தனதுருவும் பூதத்தாம் சாலமொடு பேயும்
மனதுருவும் பூதத்து வார்க்கு. (122)

ஊழிக் கனலு முடனே துடர்ந்தடற்றும்
சூழிக் கடுங்காற்றுந் தூர்த்தடர்க்கும் எழிற்கும்
அப்புரத்த மாகடலே யான தெனவுலகை
அப்புமிரு ளெங்கு மடுத்து. (123)

இரிந்தார்க டேவ ரிருடிக் குலத்தார்
பரிந்தார்க டேரார் பயந்தார் குரங்கெல்லாம்
கொண்ட மட மெம்மாற் குறிக்குந் தாமுளவோ
விண்டசுடர் தாமிரண்டு மேல். (124)

பார்த்தான் விபீடணனும் பண்ணும் பயமடுத்து
வேர்த்தா னிருவிலக்கும் வீரமுண்டோ தீர்த்தவென்
றேங்கி யழைத்தா னிளங்கோ ளரிசிரித்தான்
ஏங்கி யுழைத் தார்குரங்கா வார். (125)

Koviloor Digital Library

அவைய மெனச்சு ழனேவோர்க்கு மாங்கே
அவைய மளித்த அறிவன் உவயவுல
குற்றபய மெல்லா மொழிப்பே னெனச்சிவன்றன்
முற்றுபடை கொண்டான் முனிந்து. (126)

அப்பொற் படைமனத்தா லர்ச்சித் ததையழிப்பா
யிப்பொற் படையொன்றை யேற்றென்று துப்பொப்ப
தோர்கணையைக் கூட்டிவிட்டா னோர்ந்து விழுங்கியதா
மோர்கணையை வீட்டி யெடுத்து. (127)

விண்ணார்த்த மண்ணார்த்த மேலா மணிமுரசின்
கண்ணார்த்த தாங்கடல்போற் காண்கலையோ ரெண்ணார்த்த
வாகாங் கவியார்த்த வல்விசயப் பெண்ணார்த்த
பாகாஞ் சவியறத்தைப் பார்த்து. (128)

இறுகாலை யாமுலகை யேற்றான் படையை
மறுகா வலித்துடனே வாங்கத் தெறுகாலன்
என்னக் கொடியா னிதுகண் டகந்திகைத்தான்
பன்னப் படியான் பரிந்து. (129)

தெய்வப் படைகள் சிதைந்த செயல்கண்டும்
எய்வித்த கத்தா லெழுவிசையக் கைவித்த
கத்தாற் சிலகணைகள் காலெனவாய் வித்தினன்
தத்தாற் சிலமாயத் தான். (130)

வெய்யோன் மகன்முதல வீரர் மிகுமலையாற்
கையோய்வி லாதார் கடல்சிருந்தர் உய்யாரென்
றெண்ணிக் கணைதொடுத்தா னேற்றசிறு தாதைதனை
கண்ணிக் கடுத்தா னலிந்து. (131)

முரட்டடந்தண் டேந்தி முறையின்றி நின்று
பிரட்டடர்ந்து மாறுடவர் பின்சென் றிரட்டுமுர
சென்ன விசைக்குமுனை யேங்கத் தலைதுணிப்பேன்
மன்ன விசைக்குறித்தென் மற்று. (132)

Koviloor Digital Library

விழிசேர் முதல்வர் வெறும்பி யொதுங்க
வழிசே ருலகம் வரைந்தும் பழிசேர்ந்த
வாழ்வைப் பொருந்தார் வளமான வீரருன்போல்
தாழ்வைப் பொருந்துவரார் தான். (133)

நீருள்ள மட்டும் நிறைமீனைப் போலரக்கர்
சீருள்ள மட்டும் சிறந்திருப்பார் உளருள்ள
நீயொருவ னின்றாய் நினக்குத் துணையாவர்
பேயொருவல் செய்யாது பேசு. (134)

முந்தையார் மூதுலக முன்னோர் தமக்கெல்லாம்
தந்தையார் தந்தை தமைச்சாய்த்துக் கந்தனார்
தந்தையொடு சந்தமலை சாய்த்த திறலெந்தைக்
கெந்தவட லென்றா னெடுத்து. (135)

மலர்த்தவிசின் மேலான் மறையோர்க் கதிபன்
குலத்தனென வுன்னைக் குறிப்பார் நலத்தனிலா
நீமனிதர்த் தாழ்வாய் நிகரடுக்கா மானமெலாம்
ஆமென லு மெங்களுட னும். (136)

சொல்வித்தும் நங்கை துணைக்கொங்கை காதரிந்தும்
எல்வித்தும் நம்முனொடு மெங்களையுங் கொல்வித்தும்
மாற்றலரைப் போற்றி மதித்தாய் பயனென்னை
எற்றலுறு மென்றா னிகழ்ந்து. (137)

எரணிந்த திண்டோளி ராவணனி ராமனம்பால்
பாரணிந்து வீழப் பதைத்துடனீ நேரணிந்து
வீழ்ந்தழுக நின்றனையோ வேண்டிப் புகழுதியோ
தாழ்ந்தகுண நின்செயலென் தான். (138)

உளனுடம்பி னீக்கி யுயிர்மருந்தி னுலடுத்த
மானுடரி லங்கைமன்னை மாட்டுவரே தானுடைய
செல்வத்தைத் துய்க்குந் திறலுண்டையை நீயென்றான்
கல்வைத்த தோளான் கனன்று. (139)

Koviloor Digital Library

அவ்வுரையைக் கேட்ட வனகன் சிரந்துளக்கிச்
செவ்வுரையாம் புன்முறுவல் சேர்ந்தாக்கி யிவ்வுரைதான்
கேட்டியெனச் சொற்றான் கிளைக்கும் அறமதனை
நாட்டியன நல்வீட ணன். (140)

அறந்துணையே யல்லா லருநரகை யாக்கும்
மறந்துணையே யாம்பழியின் வாழேன் துறந்துணையேன்
மெய்ம்மை தனையிலங்கை வேந்த னொடுபிறந்தும்
பொய்ம்மைதனை யில்லேன் புரிந்து. (141)

உண்டிலேன் கள்ளை யுரைக்கேன்பொய் வல்லமையாற்
கொண்டிலேன் மாயங் குறித்தறியேன் பெண்டிர்
திறத்தாற் றிரம்பினரைத் தீர்த்தல் பிழையோ
மறத்தாற்றி னின்றாய் மதி. (142)

மூவுலக மேத்து முதலோன் பரம்பொருளான்
தேவிதனைக் கற்புநிலைத் தெய்வத்தை நோவசெய்தல்
தீதலியான் செய்கையெனச் சிறியெனைப் போவென்றான்
ஆதலியான் வந்தே னறிந்து. (143)

வெம்மைகொண்டு தன்மம் விரும்பாத நுங்கட்கே
செம்மைகொண்ட நன்மை சிறந்தடுக்க எம்மைப்
பழியடுக்கே நோக்கப் பழிக்கான செய்கை
வழியடுக்கே னென்றான் வரைந்து. (144)

அறமதனைப் பாவ மழிக்காதா மென்ற
திறமதனைத் தேர்ந்தறத்தைச் சேர்ந்தேன் புறமாம்
புகழான தேனும் பொருந்தவெனச் சொற்றான்
இகழான தேது மிலன். (145)

பெறுஞ்சிறப்பெல் லாமென் பிறைவாளி பெற்றால்
இறுஞ்சிறப்பா மெங்கடுப்பை யென்னு வுறுங்கழுத்தை
நோக்கினிமைப் பில்லா நொடித்த கணைவிட்டான்
வாக்கினிமை யில்லா மடன். (146)

Koviloor Digital Library

அக்கணவன் மிக்கசனி யால மடுத்துண்ட
முக்கணவன் சூலமென முன்னோக்கி யக்கணமே
புக்கணைய விட்டான் புலவோர்க் கருடம்பி
கைக்கணையின் கூற்றுற் கனன்று (147)

கோலொன்று தீரக் கொடிய சினக்கூற்றன்
வேலொன்று விட்டான் வெயிலென்ன நூலொன்று
கேள்விசயங் கொண்டதம்பி கீழாக்கி னன்கணையால்
வேள்விசயங் கொண்டு விரைந்து. (148)

வேல்விடுத்தா னென்ற வெகுளி மிகமுடுக்கக்
காலெடுத்துச் சென்று கரத்தண்டால் கோல்பிடித்த
பாகனொடு பாய்பரிகள் பாறப் பகைத்தடித்தான்
சேகினொடு சேரான் தெரிந்து. (149)

அழிந்ததனித் தேரிடைஎ ஆயிரத்த கோடி
பொழிந்ததனித் தம்பி புயத்து மொழிந்துவரு
பேருரத்தின் மேலும் பிறங்கிரத்தத் தாமருவி
நேருறக்கண் டார்த்தா னினைந்து. (150)

ஆர்த்தவனப் போழ்தி னழிவில்லாத் தேரன்றிப்
போர்த்தவட லில்லையெனப் பொங்கினன் காத்தார்
இமையாத முன்ன மிராவணன்முன் னின்றான்
அமையாத முன்ன மடைந்து. (151)

நிகும்பலைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

இந்திரசித்து வதைப் படலம்.

விண்ணிற் கரந்தான் விளைக்குங் கொடுமையென்பார்
கண்ணிற் கரங்காய்க் கவல்போழ்திற் புண்ணிற்றும்
ஆக்கரத்தஞ் சோர வடுத்தமகற் கண்டுதெவ்வைத்
தாக்கரக்கன் சொல்வான் தடுத்து. (1)

தொடங்குமக முற்றுதன் றேளடுத்த பாணம்
அடங்குமகம் எற்கரிய வாக்கும் நடுக்குமகம்
சாலத் தளர்ந்தடுத்தாய் தார்க்கியன்முன் வல்லரவாய்
மேலொத்த சொல்லென்றான் வேந்து. (2)

சூழ்வினையென் மாயை துலைத்தவனுந் தம்பிகள்ளார்
வேள்வினைய நூறி வெகுண்டடுக்க வாள்வினையின்
ஆற்றினேன் புக்க தறிந்துபடை மூன்றும்விட்டேன்
மாற்றினான் மிக்க வலத்து. (3)

நிலஞ்செய்து கோவாம் நெடியோன் படையும்
வலஞ்செய்து கோவாம் வழக்கென் குலஞ்செய்த
பாவத்தா லிப்பகையாம் பாணமொன்றின் மூவுலகும்
தாவத்தாந் தம்பிதொலைத் தாம். (4)

முட்டிலபோர் தன்னின் முதலோன் படையவர்தாம்
விட்டிலர்போ ரன்னதனுல் மீண்டதியான் கிட்டியபோர்
போதுந் தடுத்தார் புனிதர் நமக்களித்தார்
வீறுந் தரத்தை விரைந்து. (5)

ஆதலினு லஞ்சினதா யாக்க லதியாசை
சீதைதரத் தில்லையெனிற் சிற்றமுறார் போதல்
புரிவார் பிழையும் பொறுப்பார்க ளென்று
பரிவா யுரைத்தான் பணிந்து. (6)

Koviloor Digital Library

இயம்பலுங்கன் னெஞ்ச னெயிற்றி நிலவாய்ப்
புயங்குலுங்க நக்கொழிதி போரை மயங்குவதென்
ஆற்றலுடை மானுடவர்க் கஞ்சலெலை யான்றருவேன்
மாற்றலுடை மாசயத்தின் மாண்பு. (7)

முன்னை யிறந்தார் முடிப்பார் பகையென்றும்
பின்னை யிருந்தார் பிடிப்பரென்று முன்னைத்
தருதியென்று மன்றூற் றனித்தென் வலத்தைக்
கருதியென்றான் சிந்தை கனன்று. (8)

பேதைபுகல் மைந்த பெயர்ந்துலகம் பேராத
காதைபுக ழோடமரர் காண்பவராய் மீதுபுகு
மொக்குளுடல் விட்டிடற்கா மோதிருப தாம்புயத்தேன்
இக்குமொழி யாளைவிடற் கென். (9)

வென்றளனி லென்றாலும் வேத முளபோதும்
நின்றளனி ராமன்பேர் நிற்குமெனிற் பொன்றல்
அகத்துவதே துள்ளா ரடுத்தநாண் மாள்வர்
புகழ்க்கிறுதி யுண்டோ புகல். (10)

விட்டலின்று சீதையென்றால் விண்ணோர் விரைந்துநண்ணிக்
கட்டலன்றி யானென்றல் காண்குவரோ பட்டேன்
எனினடுக்கேன் றிக்கை யெறிந்தே னிலங்கை
தனினடுக்கான் சூரனென்றான் றான். (11)

சொல்லிப் பயனென் றொடர்ந்துன் னிருக்கைநண்ணிப்
புல்லிப் பகைச்சிரமம் போக்கியே எல்லி
கழித்திடென்று தன்றேர் கடுகிவர வென்றான்
செழித்தசிந்தை போரிற் சினந்து. (12)

எழுந்தவனைப் போற்றி யிறைஞ்சினு னெந்தாய்
ஒழிந்தவினை சீற்றத் துறுதி கழிந்தபின்னர்
நல்லவாக் காண்டியென நண்ணு மிரதமிசை
அல்லலான் சென்று னறைந்து. (13)

Koviloor Digital Library

படைக்கலத்தாம் விஞ்சை படைத்த பலவும்
கொடைக் கரத்தான் வேட்டோர்க் கொடுத்துக் கடைத்
நாட்டமுற்ற தந்தைதனை நாடிக் கலுழவரு [தொழிலான்
நாட்டமுற்ற நீருடன்போ னான். (14)

இலங்கை நிருதரெலா மேற்றழிந்தா ரென்று
கலங்கி வருவாரைக் காமின் வலங்கொண்ட
மன்னவனை யான்போய் மனிதர்க் கடப்பனென்றான்
அன்னவனை யெண்ணி யழிந்து. (15)

வணங்குவார் வாழ்த்தி வடிவுதனை நோக்கி
யுணங்குவா ருள்ள முருகுவார் கணங்குழையார்
ஈண்டவஞ்சி நின்றவர்கண் ணேற்றநெடு வேல்பாய
மாண்டவஞ்சன் சென்றான் மருண்டு. (16)

ஏயகத்தான் வில்லா னிலக்குவனு மேறடுத்த
தாயகத்தான் வீடணன்பாற் சொல்வேலை நாயகத்தாம்
பேரரவத் தாயிரமாப் பேசு பரிபூண்ட
தேரரவங் கேட்டான் சிறந்து. (17)

குன்று நெரியக் குவடுடைத்தா மேருவரை
சென்றதெனப் பொன்றிணியும் சேகரத்தா யொன்றும்
புவன மதிரப் புரிந்து வருதேர்
கவனமதி கம்பரியாற் காண். (18)

ஆர்த்தார் நிருத ரனிகமதைக் கண்டமரர்
வேர்த்தார் கவிக்குவத்தார் வீரிட்டார் திர்த்தனுடன்
வில்வளைத்துப் பாணமழை வித்தினன் வெற்றிவரு
கல்வளைத்த தோளிற் கடுத்து. (19)

வீடணனுஞ் சொல்வான் விரைந்திவனை வீட்டினன்றிக்
கூடலமால் வெற்றியெனக் கோமானு மாடற்
சிலைவளைத்தா னன்ன திறலோன்றன் வில்லாம்
மலைவளைத்தான் பாங்கர் மதித்து. (20)

Koviloor Digital Library

ஆயிடையிற் றம்பி யருளான் கவசமறத்
தூயிடையி லாக்கணைகள் தூற்றினான் சேயோர்
இருதவரும் வீசுகணை யேற்றுவரு தியால்
வருதவருங் கூசினார் மற்று. (21)

வில்வலியா லின்னவனை வெல்லலரி தென்றரக்கன்
செல்வலிய வேலொன்றைச் சேர்த்தினான் கொல்வலியான்
மாமுனிவர் சொல்லாய் மறுக்குங் கணையதனாற்
றிமுனியச் செய்தான் றெழித்து. (22)

ஆணிநிலை யாம்விசிக மாயிரத்த கோடியினால்
தானுநிலை யாமுடலிற் றாக்கினான் தூணி
தனைமுடித்தான் மெய்யேற்ற தான வனகர்
வினைமுடித்த வீரன் விரைந்து. (23)

தேருளதா மென்னிற் சிறந்த வலி தொலையான்
போருளதா மென்று பொருவில்லான் சீருளதார்ச்
சாரதியைத் தீர்த்தான் தகைசேர் புரவியையும்
வாருதிரப் பார்த்தான் வரைந்து. (24)

செய்வினையா னைவான் சிறக்காத் தவத்தைநண்ணி
அவ்வினையா னைவா னறிவென்றாய் வெவ்வினைய
காமம்விற்கும் பொய்மகளிர் கற்புநிலை யும்போன்ற
நாமவிற்கொள் பொற்றோர் நலம். (25)

துள்ளியுற்ற மாவிரதந் தூண்டினான் தானாக
அள்ளியுற்ற தன்னாக மாவமாய் வள்ளியன்மேல்
மாருதிமேன் மற்றை வரைசேர்வார் தோண்மேலும்
தாருதிரப் பாணநிறைத் தான். (26)

வீரரென்பா ரெண்ணின் விறல்நிற்கும் வீரனிவன்
பேரரென்பா ரேவரிந்தப் பெற்றியினார் சூரரென்பார்
சொல்லிநிற்பார் தஞ்சவரிற் சோர்வா ரெனத்தேவர்
புல்லிநிற்பார் பூவைப் பொழிந்து. (27)

Koviloor Digital Library

எய்த பகழியெலா மென்மே லெடுத்தெய்யும்
கைதவரா னுள்ளங் கலங்காதான் மொய்கணைகள்
கோடியென்றூற் குன்றான் குறிக்குமிவ னோடாண்மை
வீடியின்று மென்றான் விரைந்து. (28)

தேர்கடவி வானடுத்துச் சென்றாலுஞ் செல்லுமுடன்
போர்கடவி மாயம் புணர்க்கினுமாம் கார்கடந்து
வஞ்சமறான் செய்வான் வழக்கேது மெய்ப்பகலிற்
றுஞ்சுமிரா விற்படுக்கா து. (29)

என்றிலங்கை வேந்த னிளையோற் கியம்பவின்னே
பொன்றிலங்க லன்றியொரு போக்குண்டோ சென்றுழியிற்
செல்லுஞ் சமயவலி தீர்ந்தான் சயமேதாம்
கொல்லுஞ் சமயமென்றான் கோ. (30)

செம்புனலாஞ் செக்கர் திசையிற் செறிகையினும்
அம்பென்ற தாங்கிரண மாயிரத்தும் வெம்புபொற்றேர்
உம்பரிடை தோன்று முரியோ னரக்கனென
வெம்பரிதி வந்தான் வியந்து. (31)

விடிந்த பொழுதும் விளங்கினன் வெய்யோன்
விடுஞ்சுடரின் முன்னிருள்போல் வீயுங் கொடுஞ்சினத்து
மாய வரக்கர் வலியென்று நன்றிமையோர்
நேயமகிழ் கொண்டார் நிரந்து. (32)

ஆரழியாச் சூலத் தரனருளி னீந்தகொற்றத்
தேரழியா தேனுஞ் சிலையழியான் போரழியான்
வெய்யோ னெனவுரைத்தான் வீரன்முன் வீடணனும்
செய்யோ னிலமை தெரிந்து. (33)

பச்சைமா வீயா பரம்பூண்ட சில்லியதும்
நிச்சயமா மென்று நினைந்துவில்லின் விச்சைகொண்ட
மேலப் பரத்தான் விளங்காழி யச்சிறெடு
சாலப் பிரித்தான் தகைந்து. (34)

Koviloor Digital Library

மணிநெடுக்தே ரின்ன வகையிற் பிரிய
அணியும் பரியாற்ற லற்ற கிணிமரந்தான்
கோடரியாற் றாக்கக் குறைந்த கிளைப்பரவை
காடறியுஞ் செய்கை கடுத்து. (35)

அழிந்தான தேரி னடுபடைபை யள்ளிப்
பொழிந்தா னிளையோன பொடித்தான் மொழிந்தானும்
விண்ணைமுட்டி மூவுலகும் வீய வெனவார்த்தான்
வண்ணமொட்டித் தேரூ வகை. (36)

மல்லடுத்த தோளான் மழைமாரி யாய்க்கரத்தாற்
கல்லெடுத்த மாரியெங்கும் காட்டினுன் செல்லும்
திசையறியார் வானரர்கள் சிந்தி யழிந்தார்
வசையறியார் சிந்தை வறந்து. (37)

காண்கிலனுங் கல்மாரிக் காலன்றிப் போர்வீரன்
சேண்கலந்து நின்ற திறமதனை மாண்கலந்த
மாய னயவடிவாய் வாளிமழை யாக்கினுன்
சேயனைய தம்பி சிறந்து. (38)

மறைகொண்ட மாகமதின் மாயம் குறைந்து
கறைகொண்ட மேகமெனக் காட்ட நிறைகொண்டான்
கண்டான பின்னுங் கருதினு னின்னதனை
விண்டான தோளான் வியந்து. (39)

சிலையறு தென்னிற் றிறலான் புயமா
மலையறு தென்ன மதித்துக் கலையறுத்
திங்களொத்த வாளியினுற் செங்கைதனை வில்லினொடு
செங்களத்து வீழ்த்தான் சினந்து. (40)

பாகமதி யென்னப் படருங் கணைபடவும்
வேகவளி யெற்ற விளிகாளின் மேகமவை
ஆகாயத் திட்டவில்லோ டற்று விழுந்ததென
வாகாய கைவீழ்ந்த வாம். (41)

Koviloor Digital Library.

படிசுமந்த நாகமது பற்றுபிறை போல
கடிசுமந்த பொன்விரலாற் கட்டிப் பிடித்த
சிலையோடும் போரெழிற்றோள் சேர்ந்து விழத்தீர்ந்த
மலையோடு மாமரங்கண் மற்று. (42)

அந்தரம் பொன்னின்ற வமர ருக்கனொடு
சந்திரன்பொன் மேரு தரைவீழா விந்திரசித்
தன்பொற்றோள் வீழ்ந்தவெனிற் றாரணியோர் வாழ்க்கையினி
என்பெற்று மென்று ரெடுத்து. (43)

மொய்யறத்தின் மூர்த்தியன்ன மொய்ம்புடையோ னம்பதனாற்
பொய்யறத்தான் கைவிழுந்த போர்கண்டு மையல்
மனமுடைய வல்லரக்கர் மன்னும் பயத்தால்
இனமுடைய ராகா ரெடுத்து. (44)

அன்னபொழுதின் அரிக்குலத்தா ரார்த்தெழுந்து
மின்னெயிற்றி ராக்கதர்கள் மீளாமற் கொன்னகத்தாற்
பல்லான் மரங்களாற் பாங்குபெறு பொன்னாட்டை
நல்லார் குடியேற்றி னார். (45)

காலங்கொண் டேற்ற கருமேகச் செம்மையினான்
ஆலங்கொள் கண்ட னருளியமெய்ச் சூலங்கொண்
டுன்னுயிரை மாய்ப்பனெனன வோடினான் மூடனவன்
தன்னுயிரை மாய்ப்பான் தனித்து. (46)

காற்றரு மேரென்னக் கனலாய்க் கடைநாளிற்
கூற்றருமேற் கொண்டுவரு கொள்கையெனத் தோற்றிவரும்
அன்னவனைக் கண்டா னடுத்துத் தலைதுணிக்க
இன்னவினை கொண்டா னியைந்து. (47)

மறைகடவா வாய்மை மறையோர் மனத்தாம்
இறைகடவுள் எற்றவள்ள லென்னிற் பிறைகடவா
யின்னவனைக் கோறி யெனவோர் பிறைவாளி
தன்னைவனை தம்பிதொடுத் தான். (48)

Koviloor Digital Library

நேமி குலிசம்வேல் நெற்றியங்கி யுற்றகண்ணன்
நாமவேல் தந்தைபடை நாணமுறத் தீமிகுந்து
சென்றுதலை தீர்க்கத் திருத்தேவர் பூப்பொழியப்
பொன்றுதலை யாக்கும் பொறுத்து. (49)

அற்றதலை மீதோங்கி யண்டத் தணுகுமுனம்
பற்றுதலைச் சூலமொடும் பாணமொடும் எற்றிவரு
காற்று லிடியின் கலந்தபுயல் வீழ்ந்ததெனத்
தோற்று வுடல்விழுந்த து. (50)

விண்டலத்துத் திங்கடுவ மின்னடுத்து வீசியெனக்
குண்டலமி ரண்டினொடுங் குஞ்சியொடு சண்டக்
கதிரோன் தழலினொடு காய்ந்துவிழுந் தெனனத்
துதிசேர் தலைவீழ்ந்த து. (51)

உயிர்போகுங் காலை யுடனுணர்வி னோடு
செயிர்போயந் தக்கரணம் சிந்துஞ் செயல்போல
ஆற்று ரரக்க ரடைந்தா ரிலங்கைதனில்
எற்றார் படைவிட் டிரிந்து. (52)

வில்லாள ருக்கெல்லா மேலோன் விளிதலொடு
செல்லா தரசென்னத் தேவரெலாம் வில்லாருந்
தூசுகொண்டு வீசித் தொடங்குதல்கொல் லாவிரத
ஆசிகொண்ட தேவரையொத் தார். (53)

வரந்தருமவ் வண்ணல் மறிக்கரத்து வள்ளல்
புரந்தரனும் பாரிற் பொருந்தி நிரந்தரமாய்
நின்று ரருள்நிறைந்த நெஞ்சர் கரவிலராய்
அன்றுருங் கண்டா ரடுத்து. (54)

அறந்தலைமை நின்றார்க் கழிவிலையாம் வார்த்தை
சிறந்த சரம்பாயச் சிந்திப் பரந்தலைக்கண்
பாதகரால் வீழும் பருங்குரங்கு தேவர்சொலால்
நீதகல வந்த தெழித்து. (55)

Koviloor Digital Library

ஆக்கைசிந்த வீழ்ந்த வரக்கன் தலையங்கை
தூக்கிவந்தான் வாலிமகன் தூசுசெல்ல மேக்குயர்ந்த
தேவர்திரள் வீசச் செழித்தமலர்ப் பந்தரிடை
மூவர்தீறல் வீரன்வந்தான் முன். (56)

வீங்கியவாந் தோளன் மெலிந்த பழியுடையான்
ஓங்குவகை யுள்ளத்த னும்பர்கோன் தேங்குகடல்
தன்னைத் திரித்தான்சேய் தாங்கு தலைகண்டான்
பொன்னைத் தரித்தான் புகழ்ந்து. (57)

எல்லிவான் மாமதியி னேற்ற கறையென்னப்
புல்லும் வடுவாற் புலர்ந்துநின்றேன் சொல்லும்
தருமமுற்று நல்கத் தடுத்ததுயர் தீர்ந்தேன்
பெருமையுற்றே னென்றான் பெருத்து. (58)

தென்கடல்சூழ் திண்மதிலார் தென்னிலங்கை மன்புதல்வன்
வன்றலையை நீயெடுத்து வந்தனை யென்றலையை
நானெடுக்க லானே னயந்த குடையெடுப்பேன்
வானடுக்க லானதென்றான் மன். (59)

வானந் தலையெடுக்க மண்ணுந் தலையெடுக்க
ஞானந் தலையெடுக்க நன்றாகும் தேனுந்து
தாருடையாய் நீயோன் றலையெடுத்தா யென்றசுரர்
சீருடையார் போற்றினர் தேர்ந்து. (60)

வள்ளல் மருகு மனத்தானு மாயமுற்ற
கள்ளத்தைத் தம்பி கடக்குமெனு முள்ளத்தான்
தன்வரவு காண்பரதன் தன்னைநிகர் தான்கண்டான்
பொன்வரவு காணும் புயன். (61)

விழுந்தகண்ணி னீரும் மிகுங்களிப்பும் வீங்க
எழுந்தகண்ணன் சேவடிக்க ணிட்டான் கொழுந்துவிடு
செக்கரெனக் கற்றை செறிந்த வெயிநீட்டத்
தக்கதலை தன்னையங்க தன். (62)

Koviloor Digital Library

தலையதனை நோக்குந் தனித்தம்பி பொற்ருேள்
மலையதனை நோக்கு மகிழும் நிலையதனும்
தேவர்செய்கை நோக்கும் சிறந்த கொலைநோக்கும்
மூவர்செய்கை யாக்கும் முதல். (63)

காளத்தைச் செக்கர் கலந்ததெனக் கார்க்குன்றின்
நாளொத்த வெய்யிலென நன்மார்பு தோளொத்து
முள்ளவுதி ரந்தன்மே லோங்க வெடுத்தணைத்தான்
கள்ளமுதிர் சிந்தை கலக்கான். (64)

கம்பக் களியானைக் காவற் சனகன்மகிழ்
கொம்புக் களியான கொள்கையேன் தம்பி
யுடையான் படைக்கஞ்சா னுற்றதெனும் வார்த்தை
யுடையேனு னென்ரு னுவந்து. (65)

தூக்கியதாம் தூணிகொண்டு தோண்மார்பு சுற்றிவர
வீக்கியதாஞ் சாலி விலக்கியே தாக்கும்
பகழிபட்ட காயமெலாம் பார்த்துமே லொத்திப்
புகழிபத்து வீரன்விளம் பும். (66)

ஆடவர்க்குள் வீரனின்னு லன்றனும னலன்று
வீடளிக்கும் தெய்வத்தின் மேலன்று வீடணன்ருன்
தந்தவெற்றி யென்ருன் தனது சரணடுத்தார்
பந்தவெற்றி தீர்க்கும் பரன். (67)

இந்திரசித்து வதைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

இராவணன் சோகப் படலம்

உற்றதனைக் கண்டா ரொடுங்கினர் தம்முயிரிற்
பற்றதனைக் காணார் பரிந்துழைத்தார் எற்றவரு
சீதக் குருதித் திரைகடந்து தூதுவர்கள்
ஓதக் கருதிவந்தா ரோய்ந்து. (1)

அன்றிலங்கு பேடைகளே யாமென்ன வீழ்ந்தடுத்து
முன்றிலெங்கு மாதர் முழங்கியழ வின்றிலங்கை
தீர்ந்ததென வேங்கிச் செரிந்தா ரரக்கனுற்ற
வார்ந்தபெருங் கோயில் வலத்து. (2)

பல்லினத்து வாயும் பரிந்தமனம் பாதமொடு
நல்லினத்த சீவ னடுங்குவா ரில்லை
யுனதுமக னென்று ரொடுங்கு முளத்தார்
தனதுநிலை காணார் தவித்து. (3)

மாடிருந்த வானவரு மாதவரும் வேதியரும்
ஆடலுடை மாதர்முத லானவரும் வீடுமினி
இவ்வலைப்பா ரென்றுமன மேங்கி யொளித்தனர்கள்
தெவ்வலைப்பான் சிந்தை தெரிந்து. (4)

சுடர்க்கொழுந்து முற்றத் துறுபுகையு மண்டத்
தொடக்குகையின் வாளுருவித் தூதர் மிடற்றினுறு
வீசி விழுந்தான் வெறியார் கடற்றிறைபோல்
எசுகரஞ் சோர விடித்து. (5)

வாய்ப்பிறந்தும் வல்லுயிர்ப்பின் வந்தும் வலுவுடனே
காய்ப்புறுந்தோ றங்கண்ணிற் காந்திமிக வாய்ப்புறத்தான்
இவ்வுலக மூடு மிகற்றீப் பிறந்ததென
எவ்வுலகு மச்சமுற்ற தே. (6)

Koviloor Digital Library

படம்பிறங்கு பாந்தளொடு பாரு மடங்க
இடம்பிறங்கி யேற்றுவலத் தீடா முடம்பு
கிடந்துழைத்த நீர்மையினுற் கேடார் விடத்தாம்
தடந்தழைத்த மாகடலொத் தான். (7)

திருகு சினத்தாற் றேறுதியாந் துன்பு
பெருகிவரு காதல் பிறழ விருபதெனும்
வல்லெரிநேர் கண்கள் வலிந்துருக்கு செம்பென்ன
நில்லரிதா யோடியது நீர். (8)

கடித்துவரு பற்குலங்கள் கற்குலங்க ளென்ன
இடித்து வருமுருமா யெங்கும் அடித்துவரு
கைத்தலங்க ளாழிநீர் கான்றன வாய்தோறும்
கத்துகட லொத்த கனன்று. (9)

மைந்தவோ வென்றலறு மாமகனே யோவென்னும்
எந்தையே யென்னுயிரே யென்றழைக்கு முந்தினேன்
நானுளனே வென்னும் நகுபுண்ணின் வேலுழக்கத்
தானுளனே வெம்புந் தவித்து. (10)

புரந்தரன்றன் போருமினிப் போயிற்றே வென்னும்
அரந்தைதரு வானவரு மார்ப்பார் கரந்தைமத்துஞ்
சூடியனும் பாற்கடலார் சோரன் பகையுமினி
வீடியதோ வென்னும் விளித்து. (11)

நீறுகொண்ட மேனியனு நேமியனு நீங்கினுர்
மாறுகுன்றும் வேலே மறைந்துள்ளார் உளறுமினி
நீங்கினரா யேறும் நிலவு கருடனிலு
மோங்கினரா மென்று னுருத்து. (12)

வானமுற்ற மானமொடு வானவர்க ளீட்டமுந்தான்
போனதிக்கை யாரறிந்தார் போயினுர் தானமுற்றச்
சார்கிலார் மானுடவர் தாவுடைய வெற்றிகொண்டோ
சார்குவா ரென்னுஞ் சலித்து. (13)

Koviloor Digital Library

கெட்டொழிந்த தூதர் கிளத்தியவா றுகவொரு
மட்டொழிந்த மானுடனால் மன்புதல்வன் பட்டொழிந்தான்
என்றெடுத்துப் பன்முறையு மேற்ற முடனலறும்
குன்றெடுத்துப் பண்ணளித்த கோ. (14)

எழுமிருக்கு மேங்கி யிருக்கு மிசைக்கும்
அழுமரற்று மாவி யயர்க்கும் விழுமாய்
விழிக்கு முகிழ்க்கும் வியப்படையும் வாயாற்
பழிக்கும் புரளும் படிந்து. (15)

அய்யனெனு மோர்சிறந்தான் ஆனே னினியரசு
செய்யவெனே யென்றோர் சிரஞ்செப்பும் கையனுனைக்
காட்டுதலைச் செய்த கடும்பழியே னென்றுரைக்கும்
நாட்டுதலை யொன்று நலிந்து. (16)

எழுவினுறு கோல மெழுதியதென் தோளால்
தழுவியுறே னென்றோர்தலை சாற்றும் உழுவையுற்ற
போத்தை யுழையுயிரைப் போக்கி யதுபோல
வாய்த்தவெனு மோர்தலைதான் மற்று. (17)

நீலுற்ற கண்ட னிகரடுக்கா நேமிவரன்
மேலுற்று வீசும் விரற்படையைத் தோலுற்றுங்
காட்டிலையாய்த் தீர்த்த கனமே யுனதோலம்
ஓட்டிலையென் றோர்தலைசொல் லும். (18)

துஞ்சனே றுண்டோ துணையே தெனக்கென்னும்
வஞ்சனே றென்னும் வரவென்னும் நெஞ்சுதான்
கோவ நெடுந்தனியே நொந்தழைத்தே னென்றுரைக்கும்
தாவமடுந் தீயோன் றலை. (19)

காகமுற்று மாடுங் களத்தினிடை காண்பேனோ
மாகமுற்ற மன்னன் மவுலிபொரித் தோகைமிக்க
மாதவத்த ருச்சி வளருந் திருப்பதத்தாய்
நீதடுத்த தென்னுஞ் சிரம். (20)

Koviloor Digital Library

சேவியற்கண் ணரியக்கர் தேவியர்க ளோவியத்தார்
மேவியற்க ணவியுற்ருர் வீரநின் றன் ஆலமுற்ற
விற்குரலைக் கேட்டு விளங்குதிருத் தாலிதொடல்
நிற்குமெனு மோர்சிறந்தா னேர்ந்து. (21)

கூற்றமுந்தன் கூருயிரைக் கொள்ளக் குறிப்பதெனும்
உளற்றமுண்டோ வென்னை யொளித்துறைய வேற்ற
வுலகெங்கே யென்னு மொருதலைதா னுற்ற
புலனெல்லா மோயும் புலர்ந்து. (22)

இன்னவகை யேற்றியழைத் தேங்கி யிரங்கியுழைத்
துன்னவரு மாத்திரையி ளேடினன் மின்னுதலைக்
கானடுத்த போர்க்களத்தைக் கண்டு மகனுடலைத்
தானடுத்துத் தேடும் தவித்து. (23)

தேவர் முதலான சேவகர்க ளாமவர்கள்
யாவர்களு மேவினர்க ளாத்தொடர்ந்தார் மூவகைய
பேருலகு மென்றும் பெரிதுமெனப் பேதுறுவார்
ஆருமவ னுணையகத் தார். (24)

அழுதடுத்த வாற்சிலவா மன்பினர்கள் போலத்
தொழுதடுத்த வாற்சிலவாம் தூங்கும் உழுதகொடும்
ஆனைப் பிணத்தொளிக்கு மாங்கழுது புள்ளுமுட
னேனைக் கணங்க ளிரிந்து. (25)

கோடிக்கும் கோடி குதிரைப் படையுடைத்தாம்
ஆடற் படையரக்க ராக்கைகளும் தேடி
யுருட்டினன் யானையுட னுற்றவைய மெல்லாம்
குருட்டின னென்னக் குலைந்து. (26)

மெய்கிடந்த கண்டான் விழிவழியி னீர்பெருக
நெய்கிடந்த வங்கிபுரை நெஞ்சுடையான் மொய்கிடந்த
வில்லினொடு கைகிடந்த வீரத்தைக் கண்டழுதான்
அல்லினொடு சேர்மேனி யான். (27)

Koviloor Digital Library

பொங்கதங்கொள் தோளடுத்த புட்டில் பொலிவுடனே
அங்கதங்க ளம்பு மலங்கிடத்தான் வெங்கண்
உரமொத்த மெய்யா னுடனடுத்துச் சோர்ந்தான்
சிரமொத்துத் தாங்கினன் சேர்ந்து. (28)

கற்றுரந்த மார்பிற் கழுத்திற் றழுவிவரும்
சுற்றுசென்னி சூட்டுஞ் சுழல்கண்ணோ டொற்றுமுட
னோர்ந்திட் டுருகு முளைக்குங் களைத்துநிற்கும்
நேர்ந்திட்ட செய்கை நினைந்து. (29)

கைகண்டான் பின்னுங் கருங்கடலைக் கண்டதென
மெய்கண்டான் மீது விழுந்தழுதான் பெய்கண்டான்
தாரை யருவி தரச்சார்ந்து மேக்குயரும்
வீரை பெருக விரைந்து. (30)

பறித்தெறியு மார்பிற் பகழிதனைப் பல்கால்
முறித்தெறியு மூர்ச்சை முயங்கும் எறித்த
கதிரோ டலகெவையுங் காந்திக் கரிக்கும்
சதிரோ டலவான் தளர்ந்து. (31)

தேவ ரொடுமுனிவர் சித்தரெலுஞ் சீரியர்கள்
ஏவரொடு நின்று னிடமின்றி மூவ
ரொடுமறிய மூவுலகு முற்றெரிக்க வெண்ணும்
இடமறியாக் கோபத் தெடுத்து. (32)

கண்டிலனும் வன்றலையைக் காந்தி வருமனிதன்
கொண்டிலனோ கொண்டான் குறித்தென்று புண்டிறந்த
நெஞ்சன் சினத்தி னெருப்பெடுத்த தோற்றமுற்றான்
வஞ்சன் மனத்தின் மருண்டு. (33)

நிலைமாறு யானைபொடு நெற்றியுற்ற கண்ணன்
மலைமாறச் செய்தேன் மனிதன் தலைமாறான்
சேகரமு மாருயிருஞ் சேர்த்துக் கொடுபோனான்
மோகரமுன் கொண்டேன் முனிந்து. (34)

Koviloor Digital Library

எரிக்குணவாய்ப் பொன்னளகை இந்திரன்ற னூரும்
பொரித்துலக மூன்றும் பொடித்தேன் நரிக்குணவாய்
என்மகனை யாக்கினே னென்ரு னுலகமெலாம்
தன்மதனை யாக்குந் தரன். (35)

பூண்ட பகையாயென் புத்திரனைக் காய்ந்தவரும்
மாண்ட குரங்கும் மனிதருமோ ஆண்ட
தராதலத்தின் வீரரவர் தாமோ மடியும்
இராவணற்கோ வென்ரு னெடுத்து. (36)

கந்தர்ப்பர் சால கடங்கருடைக் கன்னியர்கள்
சிந்தொக்குஞ் சொல்லாருன் தேவியர்கள் வந்தெம்
கணவனெங்கே யென்ருற் கவன்றென் னுரைப்பேன்
மணவநங்கன் போல்வாய் மதித்து. (37)

சினத்தினெடு மிந்திரன்றன் செல்வமுதன் மேவி
நினைத்தமுடித் தென்னெருபெண் ணீரா லெனக்குடனி
செய்யத் தகுந்தவெலாஞ் சிந்தைகன்றி யானுனக்குச்
செய்யத் தகுந்ததென்ருன் றீய்ந்து. (38)

என்பனவும் பன்னி யெடுத்தழைத்தா னேங்கியுடன்
அன்பனுடல் தாங்கி யரக்கியர்கள் வெம்பியழப்
பொன்மனைத்தேம் புக்கான் புலம்பி யழுபூசல்
என்மனத்தாற் சொல்வ தெனைத்து. (39)

கண்களைத்தாம் சூல்வார் கழுத்தைத் தடிந்திடுவார்
புண்கொளத்தா மீரலதைப் போக்குவார் பண்கொளற்காம்
நாவைப் பறிப்பார் நலமி லரக்கியர்கள்
தாவைப் பரிப்பார் தகைந்து. (40)

மாதிரத்து மைந்தன் மகுட மணிசென்னி
போதலுற்ற யாக்கை புகக்கண்ட போதடுத்த
வேலையொன்று கண்ணூர் விரவி யழுமோசை
வேலையொன்ரு காணு மிகும். (41)

Koviloor Digital Library

ஆவியினும் காத லரக்கியர்கள் மற்றுமுள்ள
தேவியர்கள் சூழ்ந்து தெழித்தரற்றி மேவிவரக்
கோவியற்கை யில்லான் குலமனைக்குட் சென்றடுத்தான்
பாவியர்க்கு நல்லான் பரிந்து. (42)

கரும்பைத் தருமொழியாள் காமருபூக் கையாற்
குரும்பைத் தனம்புடைத்துக் கொண்டும் அருங்கலந்தான்
தாங்கிவந்த தாலிடையாள் தானமயன் தந்தசெல்வி
யேங்கிவந்தாள் சிந்தை யிடைந்து. (43)

தலையுகந்த கையாள் தழன்மிதிக்குந் துய்யாள்
நிலையுகந்த நேசத்தி னேர்வாள் கொலையுகந்த
வேடனுயிர் கொண்மயில்போல் வீழ்ந்தாள் மகனுடலிற்
றோடவிழுங் கோதை தொடர்ந்து. (44)

உயிர்ப்பு முணர்வு முயிருமிலை யென்னப்
பெயர்ப்பு மிலயாக்கை பேசாள் வெயர்த்து
நெடும்போது விம்மாள் நிமிர்ந்தறிதிற் றேறி
யடும்போது போலரற்று மாம். (45)

கலையால் விதுவென்னக் கண்வளரு ங்காலம்
சிலையா லரியைச் செகுத்தாய் தலையில்லா
வாக்கைதனைக் காண வளியேன் தவமிதுவோ
தாக்குடையா யென்றாள் தவித்து. (46)

அய்யா அழகா அரும்புதல்வா ஆழியுடைக்
கையான் மழுவானைக் காய்ந்தவலி மெய்யுடைய
நின்முகத்தைக் காணாது நேர்வேனோ வென்றழுதாள்
மன்முகத்தைக் கண்டு மருண்டு. (47)

தாளரியி னும்சதங்கை தாங்கித் தவழ்போதிற்
கோளரிக டாமிரண்டு கொண்டுபெற்றி மூளப்
பொருத்தி விளையாடும் போதுகண்டே னின்றுந்
திருத்தியுறக் கண்டேன் தெரிந்து. (48)

Koviloor Digital Library

மூன்றுலகுந் தோன்றி முதன்மைப்போர் பூண்டவனே
என்றுலவு மிம்மனித ரேற்றழித்தார் தோன்றும்
பகையைச் சிறிதென்று பன்னுவது மென்னே
நகையைத் தருவதென்ற னள். (49)

பஞ்சினத்து நீயாய்ப் பரவை யரக்கரெலாம்
வெஞ்சினத்து மானுடரின் மீண்டதிலே யஞ்சினேன்
சீதையுள்ளம் வந்தகடு தென்னிலங்கை வேந்தனையும்
வாதைகொள்ளு மென்றாள் மருண்டு. (50)

என்றழைத்தா ளேங்க விருந்துயர மானவெலாம்
பொன்றழைத்த சீதையினாற் போந்ததென வன்றழைக்கல்
நெஞ்சத்தை வாளால் நெரிப்பனென வோடினான்
வஞ்சத்தை மீளான் மருண்டு. (51)

ஓடுமென்னைக் கண்டான் உயரும் பழியையுச்சி
சூடுமென்ன மோதரனும் தோன்றினான் மாடுசென்று
பாதத்தில் வீழ்ந்தான் பரவும் புகழ்மன்னா
ஏதத்திற் தாழ்ந்ததென்னா மென்று. (52)

நீருமுள தீயும் நிரம்பிவரு கால்காயம்
பாருமுள வன்றும் பழிகொண்டாய் போரு
முளவெல்லாம் வென்றா யொருங்குபுகழ் கொண்ட
அளவில்லா யென்றா னடுத்து. (53)

தெள்ளியபோர் வீரர் சிரமும் திசைக்கரிகள்
வெள்ளியதாங் கொம்புமுடன் வீசியவாள் வள்ளியதா
மாமருங்குல் செவ்வாய் வனிதைமேல் வைக்கின்மிகக்
கோமளந்தா னென்றான் கொதித்து. (54)

மங்கை குலத்துள்ளாள் மாதவத்தி யோதவத்தன்
சங்கையின்றிக் கொன்றான் தசமுகனென் றெங்குமுற்ற
கண்ணனன்றும் பூங்கமலன் கைகொட்டித் தான்சிரிப்பார்
எண்ணனன்றா மென்றா னெடுத்து. (55)

Koviloor Digital Library

நிலத்தியல்பு மன்று நெறியன்று நீதித்
தலத்தியல்பு மன்று தரமும் குலத்தியல்பும்
அன்றும் புலத்தியமா வண்ணல் வழிபூண்டாய்
நன்றும் புலத்ததென் றனன். (56)

இன்றிலங்கு வாளா லெறிந்தின்றி ராமனையும்
வென்றிலங்கை யெய்தி வெதும்புவையோ பொன்றினள்
சீதையெனப் போவார் செறிந்த சயமென்னும்
வாதையெனச் சொற்றான் மதித்து. (57)

என்னலுந்தன் கூர்வாளை யேற்ற நிலத்திட்டு
மன்னனுந்தன் மாற்றலரை மாற்றியே யன்னோர்
சிரங்கொண்டு சேர்வேன் செறிதயிலத் தோணி
யுரங்கொண்டு சேர்மினென் றோர்ந்து. (58)

அத்தொழிலைச் செய்தா ரதுசமய மாசையெல்லாம்
தத்தொழியாத் தானைவரச் சார்தூதர் ஒத்தனராய்
வல்லை வணங்கி யைய வான்சேனை நிற்பதற்கிங்
கில்லையிட மென்றா ரெடுத்து. (59)

இராவணன் சோகப்படலம் முற்றிற்று.

படைக் காட்சிப் படலம்.

எம்பலுற்ற மன்படைதா னெவ்வுழியி னேற்றதென்றான்
கூம்பலுற்ற கையார் குறிக்கவற்றோ வாம்புனலார்
ஏழு கடலிறுதி யேற்றுவரு தானைக்கும்
வாழுமிட மேதென்றார் மற்று. (1)

மண்ணடந்த தானை வளர்தூளி மண்டிவர
விண்ணைஅடைந்த தானை வியப்படையக் கண்ணடங்காக்
கற்பமுற்று மூடிவரு கார்போ லிலங்கையெனும்
வெற்புமுற்று மூடும் வியந்து. (2)

Koviloor Digital Library

உலகி னுடனுலக முற்றொருங்க லென்னை
தொலைவரிய தானைமென்மேற் சூழ நிலவரசன்
மீனீங்கி நின்றான் விரவுமினன் றன்வழியைத்
தானீங்கிச் சென்றான் தளர்ந்து. (3)

மேற்படத்தான் காயமுட்டி மேருவின்மேல் விண்டதெனு
நாற்பெரிய வாயில் நடந்தபடை கார்க்கடலை
மற்றோ ரிடைச்செலுத்து மாண்பா யுலகமெலாம்
பற்றோடச் செய்த பரந்து. (4)

நெருக்குடைய வாயில்புக நீள்கால மென்ன
இருக்கு மதிலும்ப ரெய்தி அரக்கன்
இலங்கையுற்ற வண்டங்க ளேற்றகரு மேகக்
குலங்களுற்று வந்ததெனக் கொண்டு. (5)

அன்ன பொழுதரக்க னுங்கோ புரத்தெய்தி
மன்னபடை தன்னை வழிபிரித்து நன்னயமாய்க்
காண்பனென வந்தான் கடலேழு மோர்தரத்திற்
காண்பனென வந்த கடுத்து. (6)

மாதிரந்தா னென்றோ மறுத்துந் திசைமண்டி
யோதுரந்தா ரோ யுயர்படையை வேதாந்தம்
கூறும் பொருளைக் குறிப்பதுபோற் றூதர்சொல்வார்
தேறும் பொருளைத் தெரிந்து. (7)

சாகத்தி விற்செறிவர் தானவர்கள் தாம்சமைத்த
யாகத்தி யிற்பொலிவர் நாட்டுசுரர் மோகப்
படுமுடியாம் மாயையினூர் பன்னவரு மேகந்
தொடுமுடியா ரென்றார் துதித்து. (8)

குசையடுத்த தீவுடையார் கூற்றுக்கு மேற்ற
வசையடுக்க வெம்மை வளர்த்தார் இசையமரர்
செல்வத் தொடுமிருக்கை சேரவழிந் தாரிவரால்
மல்வைத்த தோளாய் மதி. (9)

Koviloor Digital Library

இலவத்தீ வுற்றா ரிவர்பண் டிமையாப்
புலவர்க்குத் தீங்குசெயும் போரார் நிலவைச்
சடைவைத்தான் றன்வரத்தாற் சார்வலியார் கோபக்
கடைவைத்தா ரென்றார் கருத்து. (10)

அன்றிற் றீவுற்றார் அமர ருரைவிடமாம்
குன்றைக் கடலழுத்தக் கூடினார் சென்றிந்தத்
தன்மை தவிர்திரெனத் தந்தை சொலத்தீர்ந்தும்
வன்மை தரிராத வர். (11)

பவளத்தீ வுற்றுறைவார் பண்பழிந்த வெள்ளி
குவளைத்தீக் கண்ணரக்கி கூட்டால் அவளிடத்துத்
தோன்றினவர் மிக்க தொகையுடையார் வென்றிவரர்
வான்றிரிவ ரென்றார் வரைந்து. (12)

மாகந்த மாதனமா மன்னு கடற்கப்பால்
வாகந்த மாகிரியின் வாழ்வுடையார் ஆகந்தாம்
ஆலத் துடன்பிறந்தார் அன்னார்க் களவேதாம்
கோலத் துடன்குறித்துக் கொள். (13)

மலையமென்ற தாம்பொதிய மாமலையின் வாழ்வோர்
நிலையமென்றுஞ் சாகரத்தீ நேர்வார் அலையின்
உலகலையு மென்றுதந்தை யோத வுரைவார்
கலகமென்று மில்லார் களாய். (14)

முற்கரத்த கையுடையார் மூவிலைய வேலுடையார்
சக்கரத்தர் சாபத்தர் தாம்தலைவர் புட்கரத்தாம்
தீவிலுற்றா ரென்றுஞ் சிறந்த தவமுடையார்
ஏவிலுற்றா ரென்றா ரெடுத்து. (15)

மறலிதனைத் தாயுரையால் மாசக் கரத்தின்
விறலிறவாய்ச் செய்தசிறை வீர ரிறலியமாத்
தீவி னுறைவார் சிறந்த வலிக்கேது
பூவி னுறைவார் புகல். (16)

Koviloor Digital Library

வேதாளக் கையார் விளங்கும் புவிவிரிவு
போதாது நங்கட்குப் போற்றுதற்குப் பாதாளம்
உற்றுறைவீ ரென்ன வுயர்நான் முகன்பணியால்
மற்றுறைவார் வந்தார் மதித்து. (17)

நிருதி குலப்புதல்வர் நின்குலத்து வீரர்
கருதி னுலகெடுக்கும் கையார் குருதியது
பெற்றிலரே லேழ்கடலும் பேரக் குடித்திடுவார்
கற்றிலரே மாயக் கடல். (18)

பாரணைத்த பன்றிதனைப் பார்த்தபண்பாற் பண்சிறந்த
காரணத்தால் வந்தார் கணக்கில்லார் வாணரத்தின்
மன்னுகு மிந்திரனை வானவரோ டுந்துறந்த
சன்னுக வீரரிவர் தாம். (19)

மறக்கனுடைக் கோப மலையெனவாய் நின்றோர்
அறக்கணிலார் பாதலத்தி னுய்ந்தோர் உறக்கமிலான்
ஆயிரப்ப ணத்தனந்தன் ஆக அடல்காட்டும்
ஏயிருக்கும் வில்லா ரிவர். (20)

காளிதனை யாலடுத்த கண்ணுதலான் கண்டவெல்லை
ஆளிதனைப் போலடுத்த வாகரத்தர் கூளிகட்கு
நல்லுணவை யாக்க நணுகுஞ் சமருடையார்
மெல்லுணர்வா ரென்றூர் விரித்து. (21)

பாவமுற்ற காலம் பரித்து வருபழையோர்
தீவமுற்ற கண்ணுர் செருக்குடையர் கோவமுற்றூற்
தாயைத் தகர்க்குஞ் சழக்க ரிவர்மதனை
ஆயத் தகுந்தார் அரிது. (22)

சீற்ற நுதலியதாற் றீர்ப்பான் வருமரன்றன்
ஏற்ற நுதலியற்க ணேற்றவராய்க் கூற்றம்
உடனுக்கச் செய்யு முரவோ ரிவர்தம்
மடனுக்குச் செய்யுவமை மாறு. (23)

Koviloor Digital Library

காலன்றன் மார்பிறுதற் கண்ணன் கழல்படலும்
மேலந்த செய்த்தோரின் வேய்ந்துதித்தார் சூலந்தாம்
கையேற்றும் வீரர் கதத்தால காலமென
மெய்யேற்று ரென்றூர் விரித்து. (24)

வடவைத்தீ தன்னுடனே வாசுகியாற் கான்ற
விடவத்தி தன்னிலுற்ற வீரர் கடவும்
திரிபுரத்தீ யுற்றுத் திரிந்தா ரிவர்கள்
விரிவுரத்தாய் காண்பாய் விழைந்து. (25)

இனைய ரெடுத்த வியல்பளவை யில்லார்
நினைய வெடுத்துரைக்க நேரார் வினையமொடும்
இன்னூர் வரந்தவத்தி னேற்றமிக்கா ரென்றெடுத்துச்
சொன்னூர்கள் தூதர் துதித்து. (26)

ஒருவ ரமையு முடனுங் குரங்கோ
டிருவர் தமையுமெடுத் தெற்றப் பொருவரெனில்
இவ்வளவாம் வீரர்க் கிகலே தெனவுரைத்தார்
தெவ்வளவு தேருச் சிறூர். (27)

எத்திறத்த தாமிதனுக் கெண்ணுந் தொகைவகுத்த
அத்திறத்தைச் சொல்கவென அந்தவர்தாம் ஒத்தவெள்ளம்
ஆயிரமா மென்றுரைத்தா ரன்னுளி னின்னுளிற்
பாயிரயா மென்றூர் பரிந்து. (28)

படைத்தலைவர் தம்மையென்பாற் பாங்கிற் கொணர்வீர்
கிடைத்தலையன் னூர்பாற் கிளத்தி உடைத்தலைமைப்
பூசனையி லாக்கிப் புகன்று விடுப்பனென்றுன்
யோசனையி லாக்கா னுகந்து. (29)

தூதருற்ற கூறத் தொடரும் படைத்தலைவர்
ஓதமுற்ற தென்ன வுகந்தடுத்தார் போதெடுத்துத்
தூவி வணங்கினூர் தோல்லை யிராவணனுல்
ஆவி வணங்கினரா வார். (30)

Koviloor Digital Library

அனையவெற்றி வீர ரவன்றாள் வணங்கி
வினையமுற்று வீற்றிருக்கும் வேலை நினையமுற்று
நல்குறவா முங்கள் நயத்தபெண்டிர் மக்கள் சுற்றம்
நல்குரவில் லென்றான் நயந்து. (31)

பெரியபுய னீயாம் பிறங்கும் வரத்தேம்
உரியபொருண் மற்றென் னுயர்ந்தேம் இரியவரத்
தேவர்தரங் கண்டோம் சிறந்த பகையிலமற்
றேவர்தர மென்றா ரெடுத்து. (32)

மாதரொடு மைந்தர் மருங்குவரு மற்றெவரும்
பேதமையார் நீவருத்தம் பேணலுற்றாய் யாதுசெயல்
என்றவர்க்குச் சொற்றா னியற்கையெழிற் சீதையினாற்
றன்றமர்க்கு வந்தவருத் தம். (33)

கும்பகன்ன னம்பி குலக்குமர னிந்த்ரசித்து
வெம்பு சினத்தரக்கர் மேலோரை யம்பெடுத்துக்
கொன்றார் சிறுமனிதர் கூறுபடை வானரமே
நன்றான தென்றார் நகைத்து. (34)

உலகதனைச் சேடனுச்சி யுற்றடுக்க வன்றேழ்
மலைகடலை மாற்றவன்று வாங்கி யலைகடவு
வேலை குடிக்கவன்று வீண்குரங்கின் மேலேவிச்
சாலவுடல் சாட்டனன்று தான். (35)

என்னக் கரமெறிந்தா ரேற்ற விடியினக்கும்
மின்னெயிற்றர் தம்மை விலக்கியே வன்னியென்பான்
புட்கரத்தீ பத்தநிபன் புன்மா னுடர்செயலை
உட்கரக்கா தோதென்று ணேர்ந்து. (36)

மற்றவுரை கேட்டவுடன் மாலியவான் வந்தடுத்தங்
குற்றவரை வார்மனித ரூற்றமுடன் வெற்றிவரை
வானரத்தார் வன்மை வளத்தின் வரைந்துரைத்தான்
வானறத்தார் தன்மை வயம். (37)

Koviloor Digital Library

ஆழியன்ன நீவி ரறிதிர் கடலனைத்தும்
வாழிமன்னத் தாண்டு வலன்வாலி யேழுகுன்றம்
வாங்குவலத் தான்வலியை வாளியொன் றிற் றாளிகொண்ட
தோங்குவலத் திரறியீ ரோ. (38)

விராதனொடு மாரீசன் வீந்தா னுலகம்
பராவுகரன் றூடணனும் பட்டார் திரிசிரனும்
சேனைக் கடலுடனே தீர்ந்த வொருகணத்தின்
வானைக் கடவினன் மாய்ந்து. (39)

இங்குவந்து கேட்பதெனை யேற்ற திரைப்பரவை
அங்குவெந்த தீதை யறியீரோ சங்கரன்றன்
வில்லொடித்த சத்தம் விரைந்தும் செவிக்கிலையோ
சொல்லெடுத்தீ ரென்றான் துணிந்து. (40)

ஆயிரவெள் ளஞ்சேனை யாகு மிலங்கைதனிற்
தீயிரங்கு போரரக்கர் சேர்ந்தவர்தாம் போயமனும்
அந்தமில்லா னூரி னடைந்த திருவர்கையின்
சந்தமில்லாங் காருக்கத் தான். (41)

குற்ற கொடுஞ்சிலையான் கும்பகன்ன னுங்கண்மன்னன்
பெற்றமக்க ளோடு பிரகத்தன் மற்றையரு
மிந்திரசித் தன்முதலா மெல்லாரும் போயானு
மித்தமன்னு மானே மிவண். (42)

மூலத்தாம் தானையுண்டு மும்மையுற்ற நூறமைந்த
கூலத்தாம் சேனை குறித்ததின்று காலத்தாம்
செய்கையினீர் வந்தீர் செறிவார் சரிதமிது
மெய்கவியின் வீரம் வியப்பு. (43)

ஒருகுரங்கா யுற்றிலங்கை யோங்கெரியை யூட்டித்
திருகுறங்கா தக்கனையுந் தேய்த்துப் பொருதுசென்ற
தூது கடந்து துயரார் படைக்கடலும்
காது கடலுங் கடந்து. (44)

Koviloor Digital Library

கண்டிலிரோ கண்ணுற் கடலைமலை யாலடைத்து
மண்டிவரு வானரர்செய் மார்க்கமதைக் கொண்டவெள்ள
மோரெழுப தாகு முயர்மருந்து தந்ததொன்றும்
மேருவரைக் கப்பால் விரைந்து. (45)

இதுவியற்கை யோசீதை யேற்ற தவத்தாள்
பொதுவியற்கைக் கற்பாள் பொருட்டால் விதிவிளைந்த
வில்லியர்தாம் வெல்கநீர் வெல்க முதுமொழியாய்ச்
சொல்லியதா மென்றான் துணிந்து. (46)

வன்னிமன்னை நோக்கி மடிந்தா ரிவரெல்லாம்
என்னிகனி செய்யா திருந்ததெனப் புன்மையது
நோக்கினு மென்று னுவலு மதுநேரோன்
றூக்கினன் வன்னி யகத்து. (47)

மூதுணர்ந்த மேலோன் மொழியடுத்து நோக்கினது
சீதைதனை விட்டவரைச் சேர்தலதே யாதிதனிற்
செய்தலினிச் செய்தல் செயலழிவா மென்றுரைத்தான்
நைதலினிச் சிந்தை நலிந்து. (48)

விட்டமெனின் மாதை மிகுசமத்தி லஞ்சினதாம்
பட்டவரைக் காணேம் பழிதானும் முட்டிக்
குலத்தோ டவர்முடியுங் கொள்கைசெய்வ தென்றான்
குலத்தோடு தீர்வான் குறித்து. (49)

என்றெழுந்தார் வீர ரிருத்திநீ யாமடுத்துச்
சென்றவரு டற்குருதி தேக்கியே வென்றுடனே
மீளுதுமேல் வெள்குமெனின் வீரமில வாங்குரங்கா
யாளுதுமென் றோங்கிநடந் தார். (50)

படைக் காட்சிப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

மூலபல வதைப் படலம்.

வானரத்தாம் சேனை மடிய வொருவழியாம்
ஊனறத்தான் செய்வே னொருங்கடுநீர் ஆன
இருவரையுங் கோறு மெனவுரைத்து நின்றான்
பொருவரையு மேறும் புயன். (1)

எனவுரைக்கத் தாமே யெழுந்தூர்தி ஏறிக்
கனைகடற்று நேர்சேனை கண்டு வினையமுற்ற
மூலத்தாந் தானை முதலேக வென்றுரைத்தான்
ஆலத்தாந் தானத் தவன். (2)

ஏவ வருதானை யேற்றெழுகத் தானெழுந்தான்
தேவர் புகழ்தேய்த்த சில்லித்தேர் பூவைவண்ணன்
சேனைதனைத் தீய்க்கவெனச் சென்றான் முனிவினொடு
வானதனைத் தாக்கும் வலன். (3)

எழுந்திடுக சேனையென வேற்றமுறா செற்றிக்
கழுந்துடைய வில்லார் கலந்தார் அழுந்துபடை
மண்முழுது மாகி மருவு திசையேற்று
விண்முழுது மாகும் விசைத்து. (4)

அடங்குமாம் வேலைநிலை யண்ட மலைகள்
அடங்கு முயிரனைத்து மாபோல் அடங்குதலில்
மாயன் குறளுருவாய் மன்னுபடை சூழ்ந்ததுவாம்
ஆயவுல கெங்கு மடைத்து. (5)

அறத்தை யருந்தி யருளைப் பருகி
மறத்தைப் புணரு மணாளர் திறத்துக்கார்
மேனெருப்பாம் பங்கி விரிந்தார் சினத்தடுத்த
மாநெருப்பார் வந்தார் மருண்டு. (6)

Koviloor Digital Library

நீண்டதடந் தோளா னிகர்வேலை யைக்கலக்கி
ஈண்டவரு மீனை யெடுத்தண்டு மாண்ட
உருமைச் செவிதூக்கி யோங்கு மழையை
விரிபடமாய்க் கொள்வார் விழைந்து. (7)

மால்வரைகள் மாபரலா மன்னுமழை யாய்ச்சிலம்பக்
கால்வரையிற் சேர்சிலம்பாக் காண்கழலார் மேல்வரையிற்
சேருற்ற மாகலுழன் சேர்ந்துவரு காற்றென்னப்
பேருற்ற வேகத்தார் பேர்ந்து. (8)

உண்ணுமுறை யானகன வூன்முறைதான் தப்பினுடன்
பண்ணுமுறை யானையிடும் பாழ்வயிற்றூர் தண்ணீர்
முறைதப்பிற் கையாற்கொண் மூவைப் பிழிந்து
நிறைதப்பிக் கொள்வார் நிரந்து. (9)

உறைந்ததிறல் மந்தரமா யோங்குவரை போர
எறிந்ததிறல் வேல்கரத்தி னேற்றூர் செறிந்த
மலைசுழற்றுந் தண்டார் மதிசொரியு மேனி
அலைசுழற்றுங் காலுடையா ராம். (10)

சூலத் துடனே தொடங்கு மடல்வேலும்
சாலத் தடற்றண்டு சக்கரத்திற் காலனொடு
மால்சிவன்சேய் நோரா வரத்தின் வலியுடையார்
ஆல்சிவந்த கண்ணு ரவர். (11)

ஒருவரெனில் வல்லா ருலகைத் தடுக்க
இருவரெனி லேழுலகு மேற்பார் திரிவரெனில்
நீண்டநில மெங்கு நிறைவர் கடல்கலக்கும்
ஆண்டனில மென்னவடைந் தார். (12)

மேகங்க ளெத்தனையோ மேவுங் கரிகளவை
நாகங்க ளென்ன கலிதேர்கள் ஆகும்
கடலலைகள் போற்பரிகள் காணு மணனேர்
உடலுடைய தானை யுருப்பு. (13)

Koviloor Digital Library

இன்னகட யானை யிரத மிவுளியிவை
பன்னுபடை யோடு பலவணியும் பொன்னும்
மணியிடைந்த வன்றி வறந்தன்வி லாத
வணியிடைந்த சேனையடுத் தாம். (14)

இப்பெரிய சேனை யெழுந்திரைக்கத் தூளியதா
லொப்பரிய வானுமுயர் தூப்பாய்த் தப்பரிய
யானைமதத் தாலுவரி யானநிறம் வேறுபடிற்
சேனைமதிப் பென்னுந் திறம். (15)

மலையுலைவில் வேலையொடு மற்றபொருள் வானோர்
நிலையுலக மான நிரம்ப வுலையா
தமிழ்ந்த வொருவன்வா யொத்த திலங்கை
நிமிர்ந்தவர வாயில் நிறைந்து. (16)

கடமார் களிறிரதங் காலாள் பரியாற்
படமா ரனந்தன் பதைத்தான் விடமேற
வோடு மமரரென வுற்ற குரக்குவெள்ளம்
ஓடு மமர்விட் டொளித்து. (17)

ஆர்த்தாற்ற பேரோசை யண்டிவரு தேரோசை
கார்த்தரத்து மாமுழக்கம் காமர்பரி போர்த்துழனி
பல்லியத்தி னொலிகள் பன்னு முலகெங்கும்
செல்லியற்ற நின்று செறிந்து. (18)

படியதனைப் பார்த்தார் பருங்கடலைப் பார்த்தார்
முடிவதனைப் பார்த்தார் முழுதும் கொடியவரு
வெள்ளிடையைக் காணார் விரவார் படைகண்டார்
உள்ளிடைவார் வானோர்க ளோய்ந்து. (19)

உலகில்லாம் பொல்லா வுருவத் தரக்கர்
அலகில்லா ராகு மமர்க்கு விலகவரு
வேலைமுத லெங்கும் விரவி நிறையுமென்றார்
கோலமுறு தேவர் குறித்து. (20)

Koviloor Digital Library

நடுங்கி யான்பாலி நண்ணுசுரர் நம்ப
வொடுங்கி யுறைவிடத்தை யோரோம் பிடுங்கி
யுயிரொடுக்கு வாரிவரை யோயவைப்பா ரேவர்
செயிரடுக்கு மென்றூர் திகைத்து. (21)

ஒருவர்தமக் காயிரமா யுற்ற விராமர்
இருபதுற்ற வாண்டு மிசையார் பொருபடையைக்
கொல்வதுதா மென்னும் குறித்த தமதுயிர்க்கு
வல்லமைதே டத்தான் வரும். (22)

என்றிறைஞ்ச நம்ப னினிநீர் கவல்வதெனை
யொன்றுமஞ்சல் போரரக்க ரோய்வடுக்குங் கொன்றவஞ்சம்
நீக்கும் பரன்படையை நேர்விதிதான் தந்ததென்றான்
தாக்குமரன் சூல தரன். (23)

பற்றுவலி வல்லரவு பாய்ந்து வரப்பொருமி
இற்றவெலி யென்ன விரிந்தயர்ந்து மற்றடுத்த
வானரங்கள் வீரர் வலிநோக்க லின்றியெங்குந்
தானரங்குஞ் சிந்தை தவித்து. (24)

அணைதேடிப் போனசில வாழிதனை நீந்தப்
பிணைதேடிப் போனசில பேர்வ துணையோடு
புக்கழுந்தித் தோன்றூது போன சிலவான
தக்கவுந்தி சார்ந்தசில தான். (25)

அடைத்துநின்ற போரணைதா னுக்கு முயிரை
உடைத்துவரி னென்செயலென் றேடும் கிடைத்தபடை
யெங்குமுற்ற தாகுமினி யெங்காவ தென்றிரியுஞ்
சங்கமுற்ற வானரங்க டாம். (26)

அரியரசு மங்கதனு மான்ற வனுமான்
பிரியகிலார் மற்றையர்கள் பேணூர் இரியலுற்றூர்
மற்றுடையர் வேலை வரைகடந்தார் கண்டனன்றன்
பற்றுடையார்க் காக்கும் பரன். (27)

Koviloor Digital Library

இக்கொடிய சேனைவெள்ள மெங்கா மியம்பென்றான்
தக்கசெயல் வீடணன்றான் சாற்றுவான் திக்கனைத்தும்
தாங்கரிய தாகிவரு தானப் படையென்றான்
பாங்கரியல் கொண்டான் பரிந்து. (28)

எழினுற்ற கீழ்தலத்தா யேறி யிடமிலையாய்
ஊழியுற்ற மாகடலா யோங்கிவரும் பாழியுற்ற
மூலத் தாச்சேனை முன்னுலகி னில்லையினி
ஆலத்த ரக்கர்களென் றான். (29)

ஈண்டுவந்தா ரண்டத் திராக்கதராம் பேருடையார்
மூண்டுவந்த தீவினையின் முற்றுதலார் மாண்டு
விழுமதியி னூழ்தூண்ட வேய்ந்தடுத்த தென்றான்
முழுமதியான் வீடணனு முன். (30)

கேட்டவண்ணல் புன்முறுவல் கேழ்தரத்தான் காலனவை
காட்டவண்ண மோர்கணந்தான் காண்படையா லோட்டமுற்ற
தானை தனைச் சேறென்றான் தக்கபுக ழங்கதனும்
மானவனை வள்ளல் மதித்து. (31)

சென்றடுத்தான் தானைதமைச் சீறி யிறைகெடுவீர்
நின்றடுத்துக் கேட்டபின்னர் நீங்குமென வொன்றுமினிக்
கேட்கிலே மென்றார் கிளைத்து படைத்தலைவர்
மீட்கலராய் நின்றார் விரைந்து. (32)

மீண்டு கடற்கரையின் மேவு மொருவெற்பின்
ஈண்டினரை யென்குறித்தி ரென்றவுட னண்டவா
நாயகநீ கண்டிலையோ நாமாண்டு செய்வதெனை
தூயகநீ கொள்வாய் துணிந்து. (33)

ஒருவனிந்தா சித்த னொருத்து வதைத்த
செருவினிந்தை தீது சிறிதோ பொருவிலவாய்
இன்னபடை வீரர்க் கிருவ ரெதிராமோ
என்னபடை யெய்வா ரிவர்க்கு. (34)

Koviloor Digital Library

புரங்கடந்தோன் மற்றும் புலவ ரெவரும்
வரங்கடந்து மீண்டார் மதியார் குரங்குகொண்டு
போர்புரியு மானுடரோ போற்றுஞ் சயமுடையார்
சீர்புரிவா ரென்றார் திகைத்து. (35)

ஊழிவரு தேவ னுருத்திரனு மற்றையரும்
ஆழிவான் தேவர்க் கதிபதியும் பாழி
விடுத்தோட லன்றி விரியவரு போரின்
அடுத்தோரே லென்னு மவர்க்கு. (36)

என்னு மெழுபதென வேற்றவெள்ளத் தாளொருவன்
தின்னு மெனலென் சிறியேமால் முன்னிப்பா
ரெல்லாம் படைத்தவ னேற்று வருசேவர்
எல்லா முரைக்கா மிவர்க்கு. (37)

நாயகன்கம் பத்துகரம் நாலைத் துடைத்தாகும்
ஆயகண்டோ மின்னவர்போ லாகுமோ வாயிரமாஞ்
சேகரத்தா ராமிரட்டி செங்கையுடை யார்கணக்கி
லாகரத்தார் செய்வதென்னை யாம். (38)

கும்பகன்ன னென்பான் குறிக்கு மிவர்கைக்கொள்
அம்பதனைத் தாங்கா னவன்செய்த வம்பதுதான்
எத்தனையா மையா விளவரசே யெங்களிடை
வைத்தனையாய் சித்த மதித்து. (39)

அனுமனடல் வல்லரச னுற்ற விருவர்
தனுமறையுந் தங்களுயிர் தாங்கார் கனிகாய்
உணவடுக்கு நம்மா லுறுதுபோ ரென்றார்
கணமடுக்கும் வீரர் கரைந்து. (40)

தாமிருக்கிற் றம்புகழைச் சார்வார் திருவினொடும்
காமிருக்கி னம்கிளைக்கு நன்மையாம் போமிருக்கீ
றென்றுவிடை தந்தருளற் கேற்ற வானீயே
கொன்றுவிடற் கென்னையென்றார் கூர்ந்து. (41)

Koviloor Digital Library

சாம்பனைத்தேர் வாலி தனைய னெடுத்துரைப்பான்
பாம்பணைத்தே வன்னலெனப் பண்டெடமக்குத் தாம்பணைத்துச்
சொற்றவனு மாறுதியோ சோகத் தடுத்தனையேன்
மற்றவனு மாருதிபோல் வாய். (42)

தேற்றுவாய் சொல்லாற் றெருட்டுவாய் நல்வழியி
னாற்றுவாய் நீயுமஞ்சி யாவிதனைப் போற்றுவாய்
என்றூற் புகழென் னெடுத்தபழிக் கென்றிரிபு
பொன்றாப் புகழோய் புகல். (43)

அஞ்சிப் பழிபூண்டா மம்புவிக்க ணேயாவி
துஞ்சிப் படாத தொடர்புண்டோ நஞ்சிட்டா
லன்னசெய லென்னே அடுத்து வருவீரர்
தன்னிலையிற் சாதல்சா தம். (44)

தானவர்க ளோடு தனித்தேவர்க் கொண்ணாத
மானவல னுந்திகடை வாலியம்பாற் போன
செயலுங் கடலடைந்த திங்குந் தெரிந்தும்
மயலுங்கட் கென்னையென் றான் மற்று. (45)

எத்திறத்த போரக்க ரென்றாலுந் தன்மமிலார்
மெத்தறத்தைப் பாவம் விறலுறமோ மித்தரைப்போல்
நீர்பெயருந் தன்மை நிரையல்ல வென்றுரைத்தான்
நார்பெயரான் சொல்வா னலிந்து. (46)

நாணத் திறைதாழ்ந்து நன்னு பொருளுரைப்பான்
றூணத் தறைதோளாய் தோன்றரக்கர்க் காண
அரங்கிடையா டுற்ற வவற்காகா தென்னிற்
குரங்கிடையா குற்றமடுக் கும். (47)

தேவரொன்னார் தானவர்கள் சேர்ந்து செருச்செய்தார்
ஏவரொன்றுற் காணற் கியையாதார் மூவகைய
பேருலகின் வீரரிவர் போரற்ற லாராற்றும்
சூருலவு கூற்றமுமஞ் சும். (48)

Koviloor Digital Library

மாலி தனைக்கண்டேன் மாலியவான் போர்கண்டேன்
காலி னிரணியனைக் கண்டதுண்டா மாலவிடங்
கண்டேன் மதுவைக் கயிடவனை யின்னவர்போல்
அண்டா வலியுடையா ரார். (49)

வலியுடையார் பெற்ற வரமுடையார் மாயம்
மெலிவுடையார் மிக்க விறலார் கலியிற்
கொடியார் படைக்கரத்தார் கோவடையுந் தேவர்
அடியா ரெனவடுப்பா ராம். (50)

ஆகினைய வுண்டா மமரிற் பயந்தோடல்
சாகினைய மாகாகிற் றள்ளுமாம் எகுதுமால்
இன்னும் பழிப்பிதினென் னேற்றகண்ணன் போற்றமுகம்
பின்னும் விழிப்பதென்னும் பேர்ந்து. (51)

என்றறத்தான் சாம்ப னியம்ப வதுகேட்ட
வன்றிறத்தான் வாலி மகன்வலத்தான் கின்று
கிகழ்த்துவா னன்னார்க்கு நேயத் தடுத்த
புகழ்த்துணையாம் சொல்லைப் புனைந்து. (52)

எடுத்தலொடு சாய்த்த லெதிர்த்த லெதிர்த்தார்ப்
படுத்தலிவை வீரர்க்குப் பண்பா யடுத்தவென் றும்
அன்றியொன் று கூற வடுக்கு மெனவெடுத்து
வென்றியொன் று கூறும் விரைந்து. (53)

ஒன்றுமஞ்ச லைய வொருங்கடுத்து நிற்பதன்றி
வென்றுமிஞ்ச நம்மளவோ வேதியர்தே கொன்றுவஞ்சர்
போர்கடத்தல் செய்யிற் பொருந்து வதுசாதம்
சீர்கடத்தல் செய்வதெனை தேர்ந்து. (54)

ஈண்டவழி நீங்கநிற்ப தென்னே யியன்றடுத்துப்
பூண்டபழி நீங்கவற்பிற் போவதெனு மீண்டவழி
யன்னார்க ளங்கதனே டாங்கடுத்தார் தம்பிக்குச்
சொன்னு னிராமன் தொகுத்து. (55)

Koviloor Digital Library

அத்தனிவினை மெத்து மரக்க ரவுணருளா
ரொத்தவரைய ரென்றூலு மென்சிலைமுன் றொத்து
கனல்வீழ்ந்த பஞ்சின் கடமை தனைநேர்
எனலாழ்ந்து சொல்வ தெனைத்து. (56)

காக்குதலைச் செய்யாக் கலக்கத்தாற் சேனைவளம்
போக்குதலைச் செய்யாது போற்றிடுவீர் தாக்கும்
படைமுற்று மாளப் படுத்திடுவ னென்றான்
விடையுற்ற வீரனெனும் வேள். (57)

இப்புறத்திற் சேனை யெடுத்தேவுந் தீயவனும்
அப்புறத்திற் றானை யறிந்தடுத்தாற் றப்பறத்தான்
கொன்றுகளை வானவனைக் கோத்தம்பி நீயலது
வென்றுகளை வாரார் விளம்பு. (58)

மாருதியும் நீயும் வளவரசும் வல்லையுற்றுப்
பேருதிரா வென்தனிமை பேணுதீர் சோருதிரேற்
தோற்றனநம் பக்கலென்றான் தூயோ னிளையவரன்
ஏற்றனவெம் பக்கலென்றான் ஏய்ந்து. (59)

அன்னதுதா னுகு மதுவன்றி யாமடுத்தால்
என்னதுதா னுகு மிதுபடையேற் சென்னி
சுமந்தகையர் தேவர் துதித்த வெனயாம்
அமைந்தவில்லைப் போற்றவென்று னய்ந்து. (60)

என்றவன்று னேக வியைந்த வனுமனென்தாய்
புன்மொழிலேன் றேளேறிப் புக்கலறம் அன்றியுந்தான்
நாயே னுனதுபின்னர் நாடி யடுக்கினன்றும்
சேயே னடிமையென்றான் றேர்ந்து. (61)

அய்ய வுனக்கரிதென் னுமரக்கன் சேமவிற்கொண்
டெய்யு மிலக்குவனே டேற்றானேல் செய்யும்
அமர்க்களத்தில் வெற்றி யடுக்குமோ நீதான்
சமர்க்கடுத்து நிற்கிலையேற் றான். (62)

Koviloor Digital Library

வர்கொண்ட குஞ்சியுடை யிந்திர சித்தென்பான்
போர்கொண்ட மேனுள் புகுந்தவினை யார்கொண்ட
வெற்றியினுற் றீர்த்தோம் விறல்கொண்ட நீயிருக்கின்
வெற்றியினு மென்ருன் விழைந்து. (63)

சேனைதனைக் காத்துத் திருநகரைத் தீர்ந்துவந்த
யானைதனைக் காத்தரசை யாக்கியே ஏனை
யுலகனைத்துங் காக்கவென்ரு னுற்றனுமான் றம்பி
இலகனைத்தான் காத்தான் றெளிந்து. (64)

வீடணநீ தம்பியுடன் வேண்டிநின்று வெம்மையொடு
கூடினமா மாயங் குறித்தறிந்து நீடியகந்
தானைதனைத் தாங்கலையேற் சாராது வென்றியென்ருன்
வானைதனைத் தாங்கும் வலன். (65)

சூரியன்றன் செல்வனத்தன் றாய வுரைகேட்டான்
ஆரியன்பின் சென்ற அனைவோரும் காரியமா
மென்னக் கடற்படையை யேற்றுகின்ருர் வீரவான்
பின்னர்ச்செய் நன்மையுரைப் பேம். (66)

வில்லைத் தொழுதெடுத்தான் மேருவெனு மார்பதனிற்
கல்லைத் தொழுங்கவசங் கட்டினுன் சொல்லாங்
கணைநிறையுந் தூணிபுறங் கட்டினு னிட்டார்
பணைநிறையைப் பார்ராப் பரன். (67)

யோசனை நூறடுத்தங் கோங்கி வருசேனை
தூசிவந்த தண்ணல்தனைச் சூழ்ந்தடுத்து வீசுபடை
அம்பு மிடைய வடுத்த சுரர்களெலாம்
வெம்புமிடர் கொண்டார் விரைந்து. (68)

கண்ண வெளியேங் கவசமே கார்க்கடலின்
வண்ண வறத்தின் மறைவாழ்வே யொண்ணுமோ
நீயலா விப்படையை நேர்வரெவ ரன்பர்மனக்
கோயிலா யென்ருர் குறித்து. (69)

Koviloor Digital Library

முனிவர் முதலறத்தின் முற்றினோர் முற்றும்
தனிமை யரக்கர்தாந் தாங்கார் பனிவந்த
கண்ணவராய் நன்மனதுங் காட்டி யெடுத்துரைத்தார்
நண்ணவரு மாசி நயந்து. (70)

மற்றறத்து னின்ற வரவா னவரெல்லாம்
கொற்றமுற்ற வில்விசயங் கூறினார் துற்ற
படைக்கைய ராமரக்கர் பாமரர்கள் சொற்றார்
கொடைக் கையன் செய்கை குறித்து. (71)

இரிந்தவரு சேனைசிந்தி யாருமின்றி நின்றும்
விரிந்தபடைக் கஞ்சாது மிஞ்சிச் சரங்கொண்ட
சேவகந்தான் கண்டால் சிறந்தவா மாவியுரை
பாவுகந்தா னென்றார் பரிந்து. (72)

புரங்கண்ட புங்கவற்கும் பொற்பிரத முண்டு
வரங்கொண்ட மாயன் வருநாள் விரைந்துபுள்ளின்
மீதுவந்து நம்மையட்டான் வீர னிவன்தனியான்
ஓதுவதென் னென்றா ருகந்து. (73)

தேரடுத்த மாயாளி சியம் சிறந்தவரு
காரடுத்த யானை கடற்படையை நேரடுத்து
வாருமென்று வந்தழைக்கும் மா னுடர்க்கு நம்வலிதான்
தீருமென்றார் சிந்தை திரிந்து. (74)

என்றடாத்துச் சீறி யியற்கைவலிச் சிங்கமதைக்
குன்றடுத்த சேனைவளங் கூடுதலும் நன்றிதென்று
ஞாலமெல்லா நாகர் நடுங்கும் படிநின்றான்
கோலவில்லை நாணொலித்துக் கொண்டு. (75)

கதம்புலர்ந்த வீரர்மனம் காவல்வா யானை
மதம்புலர்ந்த மாவாய் வறந்த விதம்புலர்ந்த
செய்கைதமைச் சொல்லும் சிறந்த புலவரெவர்
உய்கையினி யொன்றார்க்குண் டோ. (76)

Koviloor Digital Library

இன்னிமித்த மாக விடந்துடித்த திப்படைக்குத்
துன்னிமித்த மென்றுசுரர் துள்ளினர் அன்னிமித்த
முற்றவொல்லார் கண்ணரங்க வோங்குவா வாளிகளை
வெற்றிவில்லான் வீசும் விரைந்து. (77)

யாளியின்மே லாண்மேலும் யானையடற் றேர்மேலும்
மீளிகொண்ட வீரர் விறன்மேலும் தூளிகொண்ட
காயமதின் மேலும் கலங்காதார் சிந்தையினும்
மாயவரன் வாளி மழை. (78)

மலைவிழுந்த வாவிழுந்த மால்யானை மள்ளர்
தலைவிழுந்த வாசித் தலையும் சிலைவிழுந்த
திண்ணியவாங் கேதனமுந் தீர்ந்த பிறையெயிறு
நண்ணிவிழுந் தேங்கும் நலிந்து. (79)

வாடைக்கால் வீச வருமேக மாலைபொழி
கோடைக்கால் மாரியெனக் கூறவே ஆடலுற்ற
தேர்பரிமா வீரர் திறத்தைச் சிதைத்தடர்த்த
கார்பரவு வள்ளல் கணை. (80)

விழித்தகண்கள் சென்னியொடு வேல்பிடித்த கைகள்
தெழித்துரப்பு வாய்கள் திரள்தோள் கழித்துவரு
வாளி சிதைத்ததல்லால் மற்றோர் பொறிப்படைகள்
ஆளிவாற் கென்னைசெயற் காம். (81)

தொடுத்தவா வாளியொடு தோள்கள் விழுமால்
எடுத்தகாம் வாளிஞெடு மிற்றுப்படித் தலத்தாம்
காகுத்தன் தன்னைக் கலங்க வடர்த்ததெனை
வாகொத்த வீரர் வளைத்து. (82)

குரந்துணித்த கண்சிதைந்த கூரியவாஞ் சிந்தை
உரந்துணிந்து வீழு முடனே சரந்துணிக்க
வொன்றொன்று நூறு யுதிர்ந்து பிதிர்ந்தனவாம்
நன்றொன்று வாசி நகர்ந்து. (83)

Koviloor Digital Library

ஊரவரா முன்பே யுயர்ந்த பிணங்களினூல்
பேரவரா தாயிரமாம் பேர்சரங்கள் தூரவரு
நூறடுத்த கூறாய் நுறங்கு தலையன்றி
வேறடுத்த தென்செயுந்தேர் மேல். (84)

எட்டுத் திசையானை யேங்கச் சினந்துவரும்
பட்டத் திசையுநெற்றி பாங்கடுத்து முட்டி
வரைபொடிக்கு மால்யானை வார்ந்துவிழச் செய்யும்
கரைபொடிக்கும் வீரன் கணை. (85)

வாவிகொண்ட புண்டரிக மன்னவர வாளியொன்றே
ஏவினுண்ட கோடி யியைந்துகொல்ல ஆவிகொண்ட
காலனுடைக் கைக்கடுமை காகுத்தன் வேகத்தின்
மேலினுடைத் தென்பார் வியந்து. (86)

கொடிக்குலந்தேர் யானை குலப்பரிமேற் கோடை
இடிக்குலஞ்சேர் காடா யெரிந்த முடிக்குலங்கள்
கோடிக் கணைகோடிக் கொண்டு சிதைத்துவரும்
ஆடற் கணைகளனந் தம். (87)

அற்றவேல் வாளினொடு மாயுதங்கண் மீதெழுந்தா
முற்றவே கத்தோடு முந்தியுற்றுத் துற்றவெம்மை
கொள்ளச் சுருக்கியதாற் கொண்டடுதத மீன்மறிந்து
தள்ளக் கரையடைந்த தாம். (88)

போரறிந்த மன்றுரந்த புங்கமுகு வாளிபொங்கி
ஊரெரிந்த தென்னமின்னி யோடலால் நீரெரிந்த
வண்ணம் நெருப்பெரிந்த வான்தேரி னொடுமொளி
எண்ணும் யெரிந்த தெடுத்து. (89)

பிடித்தவா ளோடு பெருந்தோ ளரவாய்த்
துடித்துவிழும் யானைப்போர்ச் சூரர் மடித்தவாய்ச்
செந்தலைகள் வீழும் சினந்தவிடி யான்மலையாம்
தந்தலைகள் வீழும் தகைத்து. (90)

Koviloor Digital Library

கோரமிக்க வாளி குறிக்கவரு சீயமொடு
போரடுத்த தேர்கோடி பொன்றிடுமால் நாரமிக்க
வாளியொடு மங்கிகொண்ட மாவாளி பொங்குதலால்
கூளியொடு மங்குசிதைக் கும். (91)

ஆழிபெற்ற தேரழுந்து மாளழுந்து மாவோடச்
சூழிபெற்ற யானை சுரிக்குமால் பூழிபெற்ற
வெங்களத்தி னேடும் விரிவாய சோரிவெள்ளம்
தங்களத்திற் சாருந் தணிந்து. (92)

அற்றெழுந்த வன்சிரங்க ளம்பி னொடுமேலே
பற்றமென விண்ணோர் பதங்குவார் சுற்றும்
தலைக்குலங்கள் கன்மாரி தானென்ன வோடி
அலைக்கமங்கு வாருலக ராய்ந்து. (93)

தெய்வப் படைக்கலங்கள் சீறிவிடு வார்சிலவர்
மெய்வைத்த கன்மலையை விண்மழையாய்ப் பெய்வர்சிலர்
எற்றம் படைக்கலங்க ளெற்றி யடிப்பர்சிலர்
மாற்றம் படைவழங்கு வார். (94)

ஆர்ப்ப ரடர்ப்ப ரடுத்தபடை யள்ளியள்ளித்
தூர்ப்பர் தூப்பர் துயர்தோன்றப் பார்ப்பர்மிக்க
கார்ப்பருவ மேகங் கதிரோனைச் சூழ்ந்தவென
நேர்ப்படுவர் வீழ்வர் நிலத்து. (95)

எறிந்தனவு மெய்தனவு மெற்றினவும் போன
முறிந்தனதேர் மாகசங்கள் முற்றும் நெறிந்தகுஞ்சி
வீரர் சிரங்கள் விசையன் பகழியினால்
சேருமொன்றாய் வீரம் சிதைந்து. (96)

சொல்லறுக்கும் வீரர் தொடிக்கை களைத் துணிக்கும்
வில்லறுக்கு மெய்தலையை மேல்வீசும் நெல்லறுக்கும்
நீர்நாடன் வாளி நினைக்கிற் றொலைக்குமென்றாற்
போர்நாடு வார்யார் புகழ்ந்து. (97)

Koviloor Digital Library

காலிழந்தும் வாலிழந்துங் கைகழுத்தி னேடிழந்தும்
மேலிழந்த மாமருப்பாய் வீழ்ந்தனவாந் தோலிந்த
செய்கைதனைச் சொல்லுந் திறமுடைத்தோ தேவர்கட்கும்
உய்கைதனை யெங்குரைப்பா மோர்ந்து. (98)

வேலடுத்த கோடிபடை விண்மே னிமிர்விசிகம்
மாலெடுத்த கோடிப்படை மால்யானை நாலடுத்த
மாப்படைக ளோர்நொடியில் மாளச் சிதைத்துவந்தான்
தீப்படையாம் வாளி செறித்து. (99)

ஒருவில்லி தன்னை யொருகா லுலகைப்
பொருவில்லி கோடி பொழிவார் பொருவில்லார்
பாணமழை போக்கிப் பருத்த தலைமலையாய்க்
காணவிழை வாக்கும் கடுத்து. (100)

ஆறு யிரமிபத்தி னுட்பவலி கொண்டவரை
மாறு யொருகோல் மடிக்குமெனில் ஏறுகு
மன்னுவான் வாளி வரத்தைப் புகழ்ந்துரைத்தற்
கென்னுவா னானு மிசைந்து.. (101)

மழுப்படைக ளரும் வடிவேல்கள் சோரும்
எழுப்படைகள் தோமரத்தோ டரும் கொழுத்த
மதவெங் கரியிரத மாபடைகள் தீரும்
கதவெங் கணையாற் கரிந்து. (102)

ஒருகாலை தன்னி லுலகவுயி ருண்ணும்
வருகால தூதரவர் மன்னும் பொருகா
லுடையானு ருய்கை யுளைத்தா ரிளைத்தார்
தடையானுர் செய்கை தணந்து. (103)

பட்டுலருஞ் சட்டகத்தைப் பாய்செம் புனல்படலால்
மட்டுலவு மேனிகடை மன்னுநாட் சுட்டுலகை
உண்ணுஞ் சுடரோ னொளியிற் பொலிந்திருந்தான்
பண்ணுஞ் சுடராம் பான் (104)

Koviloor Digital Library

தீயொத்த வாளிமழை சிந்தச் சிரம்பலபோய்
மாயத்தார் பட்டும் மறங்குறையா ரீயொத்தார்
மாருத வீரர் வழங்கு நறவொத்தான்
தேனிருதண் டாரகலத் தே. (105)

பிரிந்தா ரிரிந்தார் பிழைத்தா ருழைத்தார்
புரிந்தார் பலருருண்டார் பொங்கி எரிந்தார்கள்
முற்றுண்டா ரெல்லா முழுவலியி னான்சரத்தால்
எற்றுண்டார் சிந்தை யிரிந்து. (106)

மணிவலயம் குண்டலங்கள் வாகார் மகுடம்
அணிவலத்த கண்டிமுத லாகத் துணிகொண்டோர்
பேருடலிற் சிந்திப் பிறங்கி வருசுடர்கள்
காருடலின் மின்கடுத்த காண். (107)

முன்னே யுளன்பின் முகத்தே யுளனகத்தின்
தன்னே யுளன்மலையான் தார்த்தலையான் கொன்னே
நிலத்தான் விசும்பான் நெடிதுவரு சாரி
சொலத்தான் முடிவோ சுரர்க்கு. (108)

எந்நோரான் எந்நோரான் என்றே யெவருமெண்ணப்
பொன்னேராங் கோளரியான் போய்ப்பொருவான் ஒன்னார்
படைகடலா மென்னப் பகரினுந்தா னன்னார்
உடைநிழல்போற் சாரி யுறும். (109)

நானா விதசாரி நாட்டு வதுநவிலார்
போனான் புகுந்த புலன்கொள்ளார் ஆனா
வினைதுறந்தா ருள்ளம் விளங்கினான் செய்கை
தனையறிந்தா ரேவர்தரத் தார். (110)

சண்டப் படுங்காற்றிற் சாய்ந்து தரைவீழ்ந்து
துண்டப் படுமலைபோற் றோன்றியே யண்டத்
தினையளந்தான் வாளித் திறத்தா லரக்கர்
வினையளந்தார் வீழ்ந்தார் விளிந்து. (111)

Koviloor Digital Library

களியானை தேருங் கடும்பரிகா லாளும்
தெளியாளி சீயமுடன் சேர்ந்து வெளியான
வானடத்த லில்லா வகைசேர் பிணமலைமேல்
தானடத்தான் பாற்கடற்சார்ந் தான். (112)

வென்றிமரு ணீரர் விளங்கெயிறி னோடுமதக்
குன்றின் மருப்புங் குவிந்தனதாம் என்றும்
அமைந்த விளம்பிறைக ளானவொன்று சேர்ந்து
சமைந்தவித மொக்குந் தரத்து. (113)

ஓவில்லார் தம்முடலி னுந்துமுதி ரப்புனல்தான்
பாவுகடல் சூழுலகு பாவுதலால் தீவுதொறும்
மேவியுறை செய்கையார் மேன்மலையி னேறிநின்றார்
தாவிவரு சோரி தடுத்து. (114)

விண்ணிறைந்த தான விரவுமுயிர் வேலையெலாம்
புண்ணிறைந்த தான புனல்நிறைந்த மண்ணிறைந்த
பேருடலாம் வானவர்கள் பெட்பச் சிறந்தனவாம்
வீரனுடை விற்றொழிற்கல் வி. (115)

செறுத்தவர வீரர்படை சிந்தினவை யெல்லாம்
பொறுத்துவரு சோரிகடல் புக்க இறுத்தவர
நீரிற் செறிந்தவெங்கும் நேர்மீ னுலந்தனவாம்
போரிற் செறிந்தபடை போல். (116)

ஆயிரமாம் வெள்ள மரைநொடியி னுமழிந்து
போயிறமா வீரன் புரிந்தனனும் பாய்தல்
ஒருமுகமா மென்ன வுரைத்தான் சுரர்க்கு
வருமுதவி செய்வான் மதித்து. (117)

கோல்விழுந்த வாயழுந்தல் கூடாத முன்னடுத்து
மேல்விழுந்து தாக்கவிவன் வீயுமால் கால்விழுந்த
மாமழையாங் காட்சியீர் மானுடவர்க் காகமனைத்
தாமழையா தென்னையென்றான் தான். (118)

Koviloor Digital Library

ஒல்வதே யிவ்வொருவன் உற்றவா யூகமெலாம்
கொல்வதே நின்றகுன்றாய்க் கூடியாம் வெல்வதே
இல்லாமற் பல்லை யிளித்திருத்த லென்னையென்றான்
வல்லாளன் வன்னி வரைந்து. (119)

உற்றுமுற்றி ராக்கதர்கள் ஓடிப் படைகடமைச்
சுற்றுமுற்று மாய்வளைத்துத் தூவினார் ஒற்றை
வரைவாய்ப் பொழியவரு மாமழைகள் கூடி
விரைவாய்ப் பொழியும் விதம். (120)

குறித்தெறிந்த வெய்தனவுங் கூரிற்று வீழத்
தறித்ததேர் யானைதரை தாக்கி மறித்துவரு
வாசி துணித்து வருபடைகள் சிந்திவிழ
வீசிவரும் பாணம் விரைந்து. (121)

நெய்கொண்ட சோரி நிறைந்த நெடியகடல்
மொய்கொண்ட செய்திறத்தின் முற்றுதலாற் செய்ய
படம்புனைந்து மங்கலத்திற் பாலிப் பவள்போற்
றடம்புனைபூ மங்கைசிறந் தாள். (122)

உப்புத்தேன் நெய்யு முயர்வாந் தயிர்பாலும்
அப்புத்தான் மெய்யாகு மாழிகள்தான் றப்புப்போற்
செங்குருதி சுற்றச் சிறந்தபெயர் மாற்றினவாம்
பொங்குறுதி கொண்டவரன் போர். (123)

ஒன்று தொடையி லொருகோடி வான்கணைகள்
சென்றுதொடத் தப்பாய்ச் சிறந்தபிறை அன்றே
அடுத்த தெனச்சிலைதா னாகியதேல் மாண்ட
கடுத்தவரக் கர்க்கெண் கணக்கு. (124)

எடுத்தா ரிசைத்தா ரெதிர்ந்தா ரெதிரே
தடுத்தார் சலித்தார் சரிந்தார் கடுத்தவரும்
சுற்றித் துடந்தார் துரித முடன்கிடந்தார்
பற்றற் றலகிற் படுத்து. (125)

Koviloor Digital Library

தோன்ற வருபகழி தூயபதி னாயிரம்போய்
ஏன்றபதி னாயிரரை யேற்றடிக்கும் ஆன்றவர்கை
வேல்வளைகோ லாயுதங்கள் வீணா புகுவதன்றி
மால்வளையாற் கென்புரிவ மற்று. (126)

தூசியொடு கூழைவரை தோன்றும் படையணிக்கிங்
கூசிநுழை யாவகையி னெண்சரத்தால் வீசுதலால்
சூழ்ந்தகள்ளப் போரரக்கர் தோன்றாது மாள்வதலால்
வாழ்ந்தவள்ளற் கென்வழக்கா வாம். (127)

உளனார் வடிக்கணைக ளூழியன லொத்தவுலர்
காணா மரக்கர் கடற்சேனை மான்பகழி
வீசுவலை யொத்த விரிகடலார் மீனையொத்த
மோசமலை யாமரக்கர் மொய்ம்பு. (128)

ஊழியொத்த மாருதத்தை யொத்தானி ராமனுடன்
பூழியொத்தார் மாமலையைப் போலரக்கர் எழுலகு
முற்றுயிரைத் தீர்க்கு முருங்காழி வள்ளலொத்தான்
மற்றுயிரொத் தாரரக்கர் மாய்ந்து. (129)

மூலத் தரனெல்லா நூற்றுவிக்குங் காலமொத்தான்
சாலச் சராசரமாந் தாரரக்கர் ஓலக்
கடலெழுமா வாலமொத்தான் கண்ணன் அரக்கர்
அடலெழுமீ னொத்தா ரழிந்து. (130)

வஞ்ச வினைபுரிந்து மன்றிற் கரிபொய்க்கும்
நெஞ்சர்குல மொத்தார் நிருதர்வள்ளல் மிஞ்சறனும்
நஞ்சனெடு நீரானான் நல்லோன் அவைபருகும்
பஞ்சவறி யோரரக்கர் பாழ்த்து. (131)

வெள்ளமெலா மாண்டுவரு வேலை யிலங்கைவெளி
பள்ளமெலாஞ் சோரி பரந்தெழத்தா னுள்ளமலைந்
துற்றோடி னாருலைந்தா ரோங்கரக்கி மார்களெலாம்
பற்றோடி னாருலந்தார் பார்த்து. (132)

Koviloor Digital Library

நீங்கினர்க ளாநெருங்கி நீளு மலைபோல
வீங்கு பிணக்குன்றின் மேலடுத்தார் தாங்குதலைக்
கொண்ட படை வீரர்சத கோடி படைத்தலைவர்
அண்டமுடைத் தென்னவந்தா ரார்த்து. (133)

தேர்மதமா யாளி திறல்வாசி யேமுதல்
ஊரு மவைசேர வுந்தினர்கள் காருருமே
றென்னக் கடும்படைவிட் டேற்றடுத்தார் வீரவரர்
மன்னர்க்கு மன்னை வளைத்து. (134)

வம்மினட வம்மின் வரங்களொடு நும்முயிருந்
தம்மினட வென்று தடுத்தடர்த்தான் வெம்மினெனச்
செய்யகணை விட்டான் திறலரக்கர் தம்மையட்டான்
பையரவிற் றுஞ்சும் பரன். (135)

அக்கணையை மாற்றி யடலரக்கர் வீரமொடு
புக்கணைய வாளி பொழிந்தார்த்தார் முக்கணனைப்
போற்றியிமை யோர்கள் புரிவில்லார் தம்செயலைச்
சாற்றியிவை யோர்வார் தளர்ந்து. (136)

படைத்தலைவ ரோரொருவர் பாழரக்க ளுைத்தார்
கிடைத்தலைவர் கேடில்லார் கிட்டி அடைத்தனரை
வல்லமையான் வள்ளல் வரத்தினனென் றுலுமொற்றை
வில்லமைவோ வென்றார் வெறுத்து. (137)

எய்தகணை யெய்துமுன மேற்றறுப்பா ரேழுலகும்
பெய்தகணை செய்துளைப்பார் பேராதார் வைதகற்றின்
அல்லாற் கணையா லடுத லரிக்குமுற்கும்
ஒல்லாதா மென்று ருலைந்து. (138)

அஞ்சியயர் வென்னை யவர்தஞ் செயலெவையும்
பஞ்சியெரி யென்னப் பரிந்துரைத்தேன் நஞ்சம்
அமுதத்தை வென்றிடினும் அல்லரக்கர் வெல்லார்
சமர்முற்றும் என்றான் தனித்து. (139)

Koviloor Digital Library

அரக்கருளார் வீடணனை யல்லாது வேறார்
இரக்கமுல காந்தரும மேர்குங் கரக்கமுழை
தேடியுலை கின்றிலிராற் தீர்ப்பான் பகையென்றான்
ஆடியுலை தேவர்க் கரன். (140)

என்றான்றான் சாற்ற விசைய வரன்புகல
நன்றறிந்தார் தேவர் நமையாள்வான் றுன்று
சிலைவளைத்து வாளிமழை சிந்தி யரக்கர்
தலைவளைத்தான் மாமலையாய்த் தான். (141)

இனைய செருநிகழு மெல்லைதனில் வீரர்
வினைய முடையார் விளிய வனைய
படைநெளிக்கத் தேவர் பரவு மலரால்
இடைதுளிக்கச் செய்தா ரெடுத்து. (142)

இரியலுற்ற தம்படையை யேற்ற நிருதர்
எரியலுற்ற கண்ணா ரிகழ்ந்து கரியரிதேர்
காலாளாம் வீரர்வரக் காந்தி விழித்தடர்த்தார்
மேலாளாம் வீரர் விளித்து. (143)

உலகு செவிடுபட வோங்குமழை நீங்க
மலைகுலையத் தேவர்தலை மாழ்க விலகுபடை
பேராத் திமிரம் பிறங்குவது போல்வளைய
நேரா யடுத்தார் கிரந்து. (144)

அழகிதென வண்ண லடைந்தா னுவகை
பழகிவரு பாணிவில்லிற் பாணம் மழையாய்ப்
பொழிந்தா னமரர் புதுமழையாய்ப் பூவைப்
பொழிந்தார் தாம்பொருந்து பு. (145)

அண்ணல் விடுபகழி யானையிரத மயல்
பண்ணும் புரவி படைத்தொகுதி யெண்ணு
மவையெல்லாந் தீர வடர்த்தெங்கு மான
நவையெல்லாந் தீர்க்கு நயந்து. (146)

Koviloor Digital Library

சுருக்கமுற்ற சேனை சுருக்கத்தா லின்னே
கரக்கமுற்று மென்று கருதி அரக்கர்முற்றச்
செல்லரிய வாகிச் சிறந்த சரக்கூடம்
வில்லறிவான் செய்தான் விரைந்து. (147)

மாலியொடு மாலியவான் மால்வரையின் மாமேனி
போலு மதுகயிடன் போன்றுள்ளார் சாலிகைசேர்
ஆக்கையுளார் முற்று மடுத்தசர வேலிதனை
நீக்ககிலார் நின்றார் நினைந்து. (148)

மாண்டார்கள் போகவினி மற்று ளவரெல்லாம்
மீண்டா ரொருதிசைக்கண் வீந்தவராய் மூண்டறத்தான்
முற்றூழிக் கால முருங்குஞ் சுடர்சுடலால்
வற்றூழி யென்ன வறந்து. (149)

புரஞ்சுடற்கார் தேவனொடு புள்ளினுற்ற பாகன்
அரஞ்சுடரும் வச்சிரக்கை யாற்கும் உரஞ்சேர்
நமது வலிவரந்தான் நாட்டாது வீரன்
தமதுவலி யென்றார் தகைந்து. (150)

ஆயிரமாம் வெள்ள மடுத்துவரு மாழியுடை
மாயிருஞா லம்மறிக்கும் வன்மையோர் ஆயும்
பெரும்படைபை யோர்வில்லான் பேர வடர்த்தான்
அரும்படையா னென்றா ரறிந்து. (151)

இடைபட்டு நீங்கு மிமையோர் படைகள்
தடைபட்டு மோங்குபடை சாரும் கடைபட்ட
தென்றா லரக்கர்பிறப் பென்னுகு மென்றுரைவார்
பொன்றா வரக்கர் பொரிந்து. (152)

பண்டை யுலகுதந்த பாங்கனொடு பண்ணமைந்த
குண்டை யுலவுமரன் கூடினார் அண்டர்
அவரோடு காண அரியாகு மென்றார்
தவரோடு காணுந் தவன். (153)

Koviloor Digital Library

கொன்றான் படையெல்லாம் கோடி யினிமற்றும்
அன்றாற் பதுமமென வாயிற்றும் நின்று
நினைவலத்த தென்னையென நேரில்லா வன்னி
புனைவலத்தான் சொல்வான் பொறுத்து. (154)

கண்விழித்த லுண்டோ கருது மிராவணன்பால்
எண்பழிக்கும் நாம்படுதற் கேய்ந்திலமாற் பண்ணும்
புகழுடம்பு போம்வழியிற் போவதுதா னல்லால்
இகழுடம்பா லென்னையென்றா னெய்ந்து. (155)

இடுக்கினித்தான் வேறுமுறை யெண்ணுவே மென்னில்
அடுக்கிகிற்கும் வாளியா ணற்றோம் எடுத்த
ஒருமுகத்தி னெய்தி யுயிர்கொடுப்போ மென்றான்
பொருமுகத்திற் பின்னடுக்கான் போந்து. (156)

இளக்கரிய நேர்வரைக ளீர்க்குமா றெல்லாம்
அளக்கரிடை யென்ன வழலார் விளக்கிற்
பதங்கம்வீழ்ந் தென்னப் படுவிதிதா னுந்த
மதங்கொண்டு வீழ்ந்தார் மருண்டு. (157)

மழுவெழுவாந் தண்டு வலயமொடு நாஞ்சில்
எழுகுலிசங் காலவயி லீட்டி கழுமுதல
வாம்படைகள் விட்டார் அடுத்து வரச்சூழ்ந்தார்
நாம்படவா மென்று கலிந்து. (158)

காந்தர்ப்ப மென்னுங் கடவுட் படையதனை
வேந்தர்க்கு வேகதன் விடுத்தவுடன் பாந்தட்
காசாய்ப் பரவையென வண்டா நெருப்பை
விரசிப் பொழிந்தடுத்த வேய்ந்து. (159)

மூன்றடுத்த கண்ணு முகமடுத்த வைந்தெனவாய்
ஆன்றடுத்த நெய்யொடுதீ யாடினவாய் வான்றொடுத்த
வாளி புரஞ்சுடற்கு வந்ததெனுந் தோற்றத்த
கோளினொடு வந்த குறித்து. (160)

Koviloor Digital Library

அய்யிரண்டு கோடி யரக்க ரடுவேந்தர்
மொய்திரண்ட வீரான்றி முற்றுறத்தான் எய்யென்னும்
காலத்தா னீந்ததென்ப கண்டகனி ராவணன்றன்
மூலத்தாஞ் சேனை முரிந்து. (161)

மாப்பெரிய தீவினொடு மாதிரமு முற்றவரு
பாப்பரிய பாதலத்தும் பல்வகைய காப்பரிய
மாமலைக ளும்பிறவும் மற்றுமுற்றுங் காப்பவர்கள்
தாமலைவார் சிந்தை தளர்ந்து. (162)

மாத்தடமா மேரு வளைத்து வருசுடரைக்
கோத்தகன்ற மார்பணியுங் கொள்கையார் பூத்தவிசு
வந்தோன் புரிந்த வரமடுத்த மாண்புடையார்
நந்தா வலியர்நண் ணினார். (163)

நம்மு ளொருவனையே நன்கடுத்து வெல்லுமெனில்
வெம்முனையி ராவணனை வெற்றிகொள்ளும் இம்மென்
றுடனெழுந்து சேருதுமோ வொவ்வொருவ ராகத்
திடனெழுந்து செய்வோம் செரு. (164)

எல்லோரு மொன்றி யெடுத்தின் னெடியோனை
வல்லோமாய்ப் போரின் மலையோமேல் வெல்லோம்
எனவெடுத்து வன்னி யிசைத்தா னதுவே
தினவெடுத்த தோளார் செயல். (165)

அன்னாரகள் தாமுடனே யார்கலியே யென்றார்த்து
மின்னார்வா னிற்றதென மின்சங்கங் கொன்னேதா
னூதித்தோள் கொட்டி யுலகை நடுக்கிவந்தார்
சேதித்தோன் முன்னம் செறுத்து. (166)

ஆர்த்தார்க ளன்னா ரடுத்த வுடனாற்றல்
தீர்த்தானுந் தன்சிலைநாண் சேர்த்தெறிந்தான் பேர்த்தவொலி
முற்றுடைத்தா மையன் முனைச்சங்க மார்த்ததெனப்
பற்றுடைத்தா மெங்கும் பரந்து. (167)

Koviloor Digital Library

பல்லா யிரகோடிப் பாங்கார் பலகலைநூல்
வல்லார்கள் மெய்ம்மை வழங்கலிலார் எல்லா
வுலகங் களுமேற்ற வோங்குவரை வில்லார்
கலகங்கட் காகாத்தார் காண். (168)

வென்றா ருலகங்கள் விண்ணவர்க ளோடடர்த்த
தொன்றோதான் தானவர்கள் யூகமெலாங் கொன்றார்கள்
கூற்றமென்ன எவ்வுயிருங் கூறு படத்தின்றார்
மாற்றமென்னை சொல்வா மதித்து. (169)

வளைத்தார் கயமதனை வன்றொழுவி லென்ன
விளைத்தார் பெரும்போர் விதத்தால் துளைத்தார்
உருமே றெனக் கொதித்தா ருற்றபோர் கண்டார்
திருமேவு தேவர் திகைத்து. (170)

விட்டிய வாய்வழங்கும் வெம்படைக்க ணாகநிமிர்
சுட்டிய நின்ற சுடர்ச்சுடருங் கட்டியு
யொன்றாய்க் கலந்தெழலா லோங்கு முலகெவையும்
நின்றாகுந் தீயாய் சிறந்து. (171)

தேரார்ப்பும் வீரர் தெழிப்பார்ப்புங் குஞ்சிவரு
தாரார்ப்பு மாகழல்கள் தாக்கார்ப்பும் போரார்
சிலைவாக்கும் நாணொலியும் சேர்ந்துகா ரார்ப்பை
மலைவாக்கும் செய்கை மறித்து. (172)

எல்லாரும் வல்ல விராவணன்றா னென்னவுளார்
வெல்லா வுலகில்லை மெய்வலியரா ஒல்லார்
படையடுத்து வந்ததெனப் பாங்குடைய வீரன்
விடைகொடுத்து வந்தான் விரைந்து. (173)

ஊழிக் கனல்போ லுறுத்தவர்க ளுந்தியபோர்
ஆழிக் கனற்படையம் பற்றகலப் பாழிக்
கடைநாள் விடுமழைபோற் காந்திவரு வாளி
யுடையான் வழங்கினா னேர்ந்து. (174)

Koviloor Digital Library

சூரோடு வந்து தொடர்ந்த சுடர்க்கணைகள்
தாரோடு மார்பைத் தடிந்திடலுந் தேரோ
டடுத்து மடிந்தா ரருக்கனவ னூரோ
டெடுத்து மடிந்தா னென. (175)

பாரூடு மாகளத்துப் பாங்கொருவன் தான்பகலின்
கூறூடு நாலிலொரு கூறிடையே நூறுன
யோசனைக்கு மேற்களத்தி னுற்று வருசாரி
பேசநிற்கு மென்னும் பெலன். (176)

இங்கே யுளனுகு மிங்குளனு மென்றுரைக்க
எங்கேயு மாக விசைந்தடுத்துப் பொங்கோத
வெஞ்சாரதை விட்டு விளியத் தொடர்த்தடர்த்தான்
குஞ்சரத்தை நட்டளித்த கோ. (177)

ஒருவன்ரு னென்னு முணர்ச்சி யிலவ
ரிரவன் றிதுபகலா மென்பர் கரவன்
றிராமன் கணக்கிலவா யெங்கும் நிறையும்
அராவணையா னுனறிந்து. (178)

தேர்மேலார் மாவுடையார் செய்ய தறுகண்ணுர்
கார்மேலா ரேழு கடன்மேலார் பார்மேலும்
உம்பர் பரந்துறுத்த வொப்பி லவர்மேலும்
இம்பரிரா மற்கா மிடம். (179)

என்னும் படியாகி யெங்கணுந்தான் தங்கிடமாய்த்
துன்னுஞ் சுழலார் சுடரெனவே முன்னெடுதான்
பின்னும் பிரியான் பெரிதுடற்றி வந்தடுத்தான்
மன்னன் மகனும் வரன். (180)

உளனுர் படையுருவ வுற்றவுரு வங்கடொரும்
கூனுர் படைசிலைய கோட்பதனல் வானேறுங்
தேருடையார் மாமலையாந் தேர்மேலுந் தோன்றுதலால்
சீருடைய தேர்தனதாஞ் சேர்ந்து. (181)

Koviloor Digital Library

காயுஞ் சிலையுங் கணைப்புட்டி லொன்றேனும்
தூயெழுந்த பாணமெங்குந் தோன்றுதலால் ஆயிரங்கை
செய்த செயலமலன் செய்கையுடைத் தாயிரங்கை
ஐயமின்றிக் கையிரண்டி னும். (182).

பொய்யோர் முகத்தாற் புணர்த்த மனிதனெனல்
மெய்யோர்ந்தோ மாயிரமா வெள்ளந்தான் செய்யும்
வினையோர் முகத்தின் விளங்குமோ வன்றும்
அனையோன் முகமனந்த மாம். (183).

கண்ணுதலு நான்முகனுங் காணுங் கடவுளரு
மெண்ணுதலுக் கேலாக்கோ லெய்ததென்பா ரெண்ணும்
கணிக்கவரு மோவென்பார் கண்ணுடையான் செய்கை
பணிக்கவரு மோவெனபார் பார்த்து. (184).

குடைகொடிக ளோடு குறித்தபடை கொண்டு
மிடைபடைகட் கெல்லாம் விரிந்து தடைபடலில்
வாளிமுனிந் தெய்தடர்த்த வள்ளல்தர மென்னையென்றார்
நாளூரமுனி வோர்க ளயந்து. (185)

கோடிபத்தா மள்ளர் குறித்தார் விடைத்தடர்த்தார்
ஓடியுள்ள பக்கமுயி ரோடிடலும் நாடியுற்றுச்
சாடுவதும் விண்ணவர்கள் தம்படையி னாலென்று
மூடுவது செய்தார் முரண்டு. (186)

விண்டுபடை யாதிவரன் வெற்றிப் படையீறாய்க்
கொண்டுபட விட்டார் குலைந்ததண்டம் கண்டதனை
அன்னதனால் மாற்றினா னண்டபரி பூரணனும்
மன்னர்தனிச் சேயன் வரைந்து. (187).

தான்தொடுத்த போதுந் தடுப்பரிய தாமூலகம்
வான்தடுத்த தீயின் மருளுமெனத் தான்தெரிந்த
வள்ளல்கணை கோடியினால் மற்றோர் தலைமலைகள்
உள்ளபடி செய்தா னுருத்து. (188)

Koviloor Digital Library

ஆயிரமாம் வெள்ளம் அடுகளத்தின் வீந்தவிய
மாயிருவாம் பூபாரம் வாங்கினன் மீயுயரும்
அண்டத்தாம் செய்கையெலா மாகி நிறைந்தமையும்
தண்டத்தாம் கோதண்டத் தான். (189)

நினைந்தார் புலவரெலாம் நீத்தார் துயரம்
புனைந்தான் வலாரிமகிழ் பூத்தான் வனைந்தனவாம்
வேதம் வரம்புடைத்தாம் மிக்க பரம்நீத்தான்
போதத் தனந்தன் புகழ்ந்து. (190)

தாய்படைத்த செல்வமுற்றுந் தம்பி தனக்கீந்து
வேய்படைத்த கானம் விழைந்தேகி ஆய்படையால்
ஆர்க்குந் துயர்தீர்த்த வண்ணல் தனைப்புகழ்ந்தார்
ஏர்க்குந் துறவோ ரெடுத்து. (191)

தீமொய்த்த கண்ணரக்கர் தீரத் தொலைத்தடர்த்துப்
பூமொய்த்த கையமரர் போற்றநின்றான் ஈமத்துத்
தங்கும் கறைமிடற்றுச் சாமி தனையுமொத்தான்
எங்கும் கழுதோ டியைந்து. (192)

அண்டுங் களமும் அவிந்த வரக்கருயிர்
கொண்டவுரு வத்திறுதி கூடவே மண்டியநாள்
மன்னுயிரை வாரியுண்ட மட்டில் வடிவுடைய
தன்னுருவ மூர்த்தியையொத் தான். (193)

ஆகுலந்தீர் தேவரெலா மள்ளிப் பொழிந்தவெள்ளச்
சேகரப்பூ வால்வருத்தந் தீர்ந்தவுடன் மாகொலைசெய்
வள்ளல் களம்விட்டு வல்லரக்கன் தம்பியுடன்
தள்ளறுபோர் செய்திடம்வந் தான். (194)

இவ்வழியி னேர்ந்த தியம்பினு முன்னிரிந்த
செவ்வழியி னேர்ந்தபடை சென்றதுவும் வெவ்வழிய
வல்லரக்கன் செய்த வழக்கு மிளையோன்போர்
வல்லமையும் சொல்வா மதித்து. (195)

Koyiloor Digital Library

பேராம் படைத்தலைவர் பேர்ந்த படைகளுடன்
சீராம் படிவாழ்க்கை தேறினார் நேராக
வந்தபழி மாய்ந்திடனே வானடுத்து வாழ்துமென
வந்தவழி வந்தா ரடர்த்து. (196)

மூலபல வதைப் படலம் முற்றிற்று.

வேலேற்று படலம்.

வில்லி யுடனே சிறந்தபரி யாயிரத்தாய்
எல்லிகதிர் மண்டிலத்தை யேற்றிமைக்கும் செல்லுந்தேர்
மேலேறிச் சென்றான் விசும்படுத்த தேவர்களை
மாலேறி வென்றான் மருண்டு. (1)

அரக்கர்வெள்ள மாயிரத்தை யான்ற வமரில்
துரக்க மனிதரிடைத் துய்த்து வெருக்கொள்ள
வானரத்தை மாய்க்க வருதேர் படையுடையான்
தானாரத்தி ராவணன்வந் தான். (2)

நூறடுத்த கோடி நொரிற்பரிதே ரத்தகைய
ஆறடுத்த மாமதமா வானதின்மேல் ஏறும்
பதாதியவை முன்னிரட்டி பாங்கடுக்க வந்தான்
மதாசலமால் மாற்றும் வலன். (3)

மூன்றடுத்து முன்னம் மூனையுலகு முற்றினுந்தா
மேன்றடுத்த வீர ரிசையவென யான்றடுத்த
பேரிகுரற் சங்கம் பெருங்கா களமுடனே
வாரிகுர லார்க்கவரு வான். (4)

அனையகய வஞ்ச னரக்க னவுணர்
வினையனையான் வானவரை வென்றோன் தனையெவையும்
போக்கும் நெருப்பைப் பொருப்பதனைச் சூழ்கடலைத்
தாக்கும் வலிமுகர்கண் டார். (5)

Koviloor Digital Library

கண்டுகைக ளோடு கலந்து வருகற்கள்
கொண்டுவரு தோள்கொட்டிக் கூடியே அண்டமுற்ற
கோலங்கள் பீறக் குறித்து வருபோரிற்
கூலங்கொள் வானரமார்க் கும். (6)

அரக்கர் படையு மடுத்துயிரை நோக்காக்
குரக்குப் படையுமெதிர் கோத்து நெருக்கிவர
நெய்த்தோர் பெருகி நிகரில்லா நீத்தமென
வைத்தோங்கும் வேலை மடுத்து. (7)

அற்ற தலையி னறுகுறைபோ யண்டமதை
முற்றுகதிர் மண்டிலம்போல் முற்றவே சுற்றிவரு
மேகத்தின் வான்குருதி மேலும் துளிப்பதனால்
மாகத்தும் போர்க்களமா மால். (8)

எழினுைப்பு மேழா யிசைக்கு முலகமெலாம்
ஊழியொப்ப தோருலவி னேங்கவே நூழிலவை
யாக்குபடை தன்னை யடர்த்தானி ராவணன்றான்
தாக்குபடை போக்கித் தகைந்து. (9)

மரமோடு கல்லும் மழுகழுவாள் சூலம்
அரமோடு வேன்முதல வாக்கிச் சிரமோடு
சிந்தச் சிதைக்குந் திறற்படையை வல்லரக்கர்
முந்தச் சிதைத்தார் முனிந்து. (10)

அழல்கட் களிற்றை யடுத்துப் புடைத்துச்
சுழல்கட் பரித்தேரைத் தூற்றித் தழல்திறத்த
சோரியெங்கு மாறு தொடுகடலிற் போயடுகைத்
தாரியங்கு தம்பிவிரைந் தான். (11)

வில்லெடுத்த கூற்றமென வீரப் பெரும்படையைக்
கொல்லலுற்று னெங்குங் குறைத்தலையாய் ஒல்லும்
உருமடுத்தா லன்ன வுயர்பகழித் தம்பி
புரமெடுத்தா னென்னப் பொலிந்து. (12)

Koviloor Digital Library

கண்டுநின்ற வல்லரக்கன் கால மிறைகழிப்பின்
உண்டுநின்றும் போரரக்க ரோங்குயிரை மண்டி
அடர்த்தோர் கணத்தி னழிப்ப னெனத்தான்
கடுத்தான் நடுத்தான் கனன்று. (13)

உளைதைமுற்றச் சீறி யுருமடுத்த தாயுருவிப்
பூதரத்தோ டண்டம் பொதுப்பனவாய் மாதிரத்தை
வெற்றிடையில் லாது வெருட்டுஞ் சுடுகணைகள்
மற்றிடைய விட்டான் மருண்டு. (14)

ஆளிதனைப் போன்று னரக்க னடுகளத்தின்
ஞாளிதனைப் போற்குரங்காம் நள்ளிருளிற் காளிதனைப்
போன்று னரக்கன் பொருவெள் ளிடைப்பூளை
போன்றார்கள் வானரர்கள் போய். (15)

இரிதலுற்ற சேனைதமை யேற்றதம்பி கண்டான்
பரிதலுற்ற நெஞ்சமொடு பாங்கே திரிதலுற்ற
மாருதிமன் தோளாகும் வையத்தின் வந்தரக்க
நேருதியென றேற்று னிவந்து. (16)

ஏற்றடுத்த வல்லரக்க னேய்ந்தெரியும் பாந்தளென
நூற்றடுத்த கோடிகணை நூக்கினான் காற்றடுத்த
பஞ்சாதல் செய்தான் பகழிப் பெருக்கதனுல்
அஞ்சாத தம்பி யடர்த்து. (17)

விலக்கினான் தோண்மார்பும் வீர விசிகம்
இலக்கினா னெய்ததனை யேற்றான் கலக்கமுறாத்
தம்பிகனன் றாகத் தடுத்தா னரக்கனைத்தான்
வெம்பிகனன் றாக வெகுண்டு, (18)

காக்கவரா லாகாக் கடுப்பிற் றொடுகணைகள்
ஆக்கவரு போரி லரிதிவனை நூக்கலினி
என்செய்வ தென்ன விசைத்தானி ராவணன்றான்
மன்செய்த வீர மதித்து. (19)

Koviloor Digital Library

கடவுட் படைதொடுக்கிற் காக்கத் தடுக்க
விடவுட் படச்செய்து வெல்லும் அடலுற்ற
தன்றமைய னென்னத் தடுக்கா வலியுடையான்
வென்றமைய்யு மென்றான் விரித்து. (20)

மோகப் படையுண்டு முன்னோன் வகுத்தமுன்னாள்
ஆகப் படையை யடர்த்தெடுத்துப் போகமுற்றம்
விஞ்சையொப்ப யேவி விரிந்த களத்தினிடை
எஞ்சுவிப்பே னென்றா னெதிர்த்து. (21)

என்பதுன்னி விஞ்சைதனை யேற்ற மனத்திசைய
முன்பதுன்னி விட்டான் முடுகிவர அன்பதுன்னும்
வீடணன்றான் மாயன் விறற்படையா லன்னதனைப்
பாடணையச் செய்யவென்றான் பார்த்து. (22)

வீடணன்றான் சொன்னதனால் விண்டுபடை விட்டடுத்து
மூடணங்காம் மோகமதை முற்றினான் மாடுநின்றான்
கேடுநம தென்றதனைக் கேட்டரக்கன் கோபத்தால்
சாடுநமன் போன்றான் தகைந்து. (23)

மயன்கொடுத்தான் முன்னம் மகனோடு வேள்வி
அயன்படைத்தா னூழிமுத லாகப் பயன்படைத்த
ஆயுதங்கட் கெல்லாம் அழியாது தம்பியின்மேல்
தேயுதங்க விட்டான் செறுத்து. (24)

விட்ட வுடனொருவன் வீயத் துலைத்தடர்க்கும்
பட்டவுட னன்முகனும் பாடடுக்கும் வட்டமுற்ற
வேலை வலங்கொண்டு வீசினான் தம்பியின்மேல்
ஆலமெனச் சிந்தை யடைந்து. (25)

எறிந்ததனை வீடணன்கண் டேற்ற நிலையை
அறிந்ததனா லென்னை யழிக்கும் பரிந்துபின்னர்ச்
செய்வதிலை யுன்ன திறத்தா லுயிர்நீங்கும்
உய்வதிலை யென்றா னுளைந்து. (26)

Koviloor Digital Library

எய்த தவத்தகனை யேவும் படைகளெலாம்
செய்த தவத்தவனைச் சீரில்லான் வைததொரு
வைவி னொழிந்த வருவீ டணன்மாண்டான்
உய்விலெனரு ரும்ப ருலைந்து. (27)

தோற்ப னெனினுந் தொடரும் புகழ்தருமம்
ஏற்ப னடைந்தோற் கிகலின்றி நீப்பன்
பழியேலை யொன்று படாம னென்றான்
இழிவேலைத் தம்பி யெதிர்த்து. (28)

இலக்குவன்முன் வீடணன்போ யேற்கு மிவரை
விலக்குவன்முன் னங்கதன்றான் மேலே நலக்குரிய
வானரமன் முன்னும் மருத்துமகன் முன்செல்லும்
தானறவர் பாடினன தான். (29)

முன்னின்றார் பின்னு முடுகி யடுத்தவரை
நின்னின் னெனத்தம்பி நேர்நின்று மன்னின்ற
வேலைவிண்ணோர் சண்புடைக்க வெற்றியக லத்தேற்ற
காலைநண னிற்றா முதுகிற் காய்ந்து. (30)

எங்குசெல்வா யென்றோடி யேற்றான் விபீடணனும்
பொங்குசெல்வன் புல்லரக்கன் பொற்றேரை மங்குலெட்டப்
பாய்பரிகள் சாரதியும் பாறப் புடைத்தடர்த்தான்
ஆய்பரிசு கொண்டதண்டத் தால். (31)

செய்விசும்பி னின்றுமிகு சீற்றத் தொடுமரக்கன்
பாய்விசிகம் பத்துடலிற் பாய்ச்சியே ஆயிரமாம்
பாண மனுமான்மேற் பாய்ச்சி யவன்சென்றான்
காண விலங்கைநகர்க் கண். (32)

தேடி வருந்தன்னைத் தேற்றுந் திருவுடையான்
வாடி வருந்தச்செய் வஞ்சனையாய் ஓடிவழி
சேர்வதெங்கே யென்று செறுத்தான் விபீடணனும்
கார்வதங்குல் கையான் கடுத்து. (33)

Koviloor Digital Library

வென்றதனும் நன்மையெற்காம் வீடணனு கும்பசவைக்
கொன்றதனு லென்னையெனக் கோளரக்க னின்றொன்
றுரைக்கான நொடிவரையி னுற்று னிலங்கை
வரைக்கான் புயத்தான் மகிழ்ந்து. (34)

அரக்கனுற்றான் வீடணனு மன்றாற்றி வீழ்ந்தான்
இரக்கமுற்றான் தம்பியடி யேற்றக் கரக்கமுற்றுக்
காதலுடைத் தானன் கலுழ்ந்தான் குரக்குவெள்ளம்
சாதலுடைத் தான தளர்ந்து. (35)

பொன்னிரும்பாற் பொன்றப் புகலின்றி யிவ்விடையின்
என்னிருந்து செய்வ திறப்பனென நின்னிலென் று
வந்தடுத்தான் சாம்பன் மதியிற் சிறந்தவலன்
கொந்தடுத்த தாரான் குறித்து. (36)

அனுமனிற்க நாமிங் கலைவ தறிவோ
வினைமனத்தி னுந்துணையி னேர்வான் புனையும்
மருந்தளித்து நம்மை மகிழ்விப்பா னீவிர்
வருந்துளத்தை மாற்றுமென் றான மான். (37)

மருத்தின் மகன்மார்பின் வன்கணையை வாங்கி
இருத்தியோ தம்பிதனை யிங்ஙன் வருத்திநின்ற
மையனனி தீர மருந்தி கெனவுரைப்ப
ஐயனனு மான்கடந்தா னுங்கு (38)

உய்த்தமரு நற்றிசையி னேடி யொருநொடியின்
மெய்த்த மருந்துதந்த வீரனவன் வைத்ததொரு
பொன்போல நின்ற பொருப்பைக் கொடுவந்தான்
அன்போடு நன்மை யறிந்து. (39)

தந்தான் மருந்துதனைத் தாக்கிவரு வாதமுன்னு
வந்தான் மருந்தனையான் மாற்றுமென்றால் நொந்தாரை
நோய்தீர்த்தற் கென்னும் நொடிவரையிற் றுனெழுந்தான்
சேய்தீர்த்தன் தம்பி சிறந்து. (40)

Koviloor Digital Library

எழுந்தனுமான் றன்னை யிறுகத் தழுவி
விழுந்திலனு வீடணனு மேலோன் கொழுந்தியினி
மீண்டா னரக்கன் வினைதீர்ந்து போயதென்றான்
ஆண்டாளும் செய்கை யறிந்து. (41)

தரும மெனவறிஞர் சாற்றும் பொருளைக்
கருமமெனு மாருதியாய்க் காட்டும் அருமையென்னும்
நல்லறந்தான் வெல்லுமென நாடியிராமனிடை
சொல்லறிந்தார் வந்தார் துதித்து. (42)

ஒன்றோ பலவா முயர்பிணத்தி னோங்கலெங்கும்
குன்றாத சோரி குரைகடலாம் என்றாக
வள்ளலெனை யாள்சரணம் வந்து வணங்கிநின்றார்
உள்ளலெனை யென்றா னுகந்து. (43)

உற்றதனைக் கேட்டா னுணர்வடுத்த பொன்னனுமான்
வெற்றிதனை நாட்டி வியந்தவள்ளல் பெற்றனனென்
உன்னைப் பொருளா யுயர்ந்தநிலை யாயுளினாற்
பன்னப் பெறுவையென்றான் பார்த்து (44)

புயல்பொழியுங் கண்ணான் பொருவில்லாத் தம்பி
உயிரொழிய நின்ற வுடலான் துயரடுத்தும்
மீளாக் கதிபடைத்த வேந்தனெனு முன்னவன்றன்
தாளாக்கி னான்சிரத்தைத் தாழ்ந்து. (45)

இளவறனை நோக்கி யிரவிகுலத் தேற்ற
அளவறனை யாக்கி யளித்தாய் துளவடுத்த
மாலையா யிவ்வுலகின் மன்னு புகழ்சிறந்த
வேலையா மென்றான் விழைந்து. (46)

புரவின் பொருட்டுடலைப் பொன்ற வரிந்த
அறவன் பொருவ வமைந்தாய் பிறவினைதான்
என்னாகு முன்போ லெவருளரா மென்றுரைத்தான்
மன்னாகு முன்னோன் மகிழ்ந்து. (47)

Koviloor Digital Library

சாலிகைய தாமுதல தாங்கி யவ்வெல்லாம்
நீலிசையு ஞாயிரோததான் நேர்நீக்கிக் கோல
அனுமான்கை யாக்கி அடுத்ததொரு குன்றின்
தனுமான் விளங்கினான் தான். (48)

வேலேற்று படலம் முற்றிற்று.

வானரர் களங்காண் படலம்.

ஆயபின்னர் வானரமன் னான்ற படைத்தலைவர்
மேயினரி ராமனடி வீழ்ந்திறந்த தீயகளம்
நோக்கி நடுக்கமுற்றார் நோன்மை யுறுநாணம்
தாக்கி யடுக்கத் தகைந்து. (1)

மூண்டெழுந்த சேனைவெள்ள மூன்றலகு மேலடுத்து
நீண்டதனைக் கொன்றதெந்த நேரென்னத் தாண்டுபரித்
தேரென்றின் சேயுரைக்கச் சீராக்கர் வேந்தனொடும்
பாரென்றான் வள்ளல் பரிந்து. (2)

தொழுவார் தலைவர் துரிதமுடன் சென்றார்
வழுவாத வீடணமால் வந்தான் கழுகு
பருந்தினொடு பாரும் பருமிதத்த பேயும்
விருந்தினிடல் கண்டார் வியந்து. (3)

ஏங்கினா ரேங்கி யிரைத்தா ரெழுந்துள்ளம்
வீங்கினார் விம்மி வெதும்பினார் ஆங்கவர்கள்
உற்றதன்மை யாவ ருரைப்பார் வியந்திருந்தார்
மற்றதன்மை சொல்வாம் வரைந்து. (4)

ஆயிரத்தி னாம்பருவ மானாலுங் காண்பதற்கு
மேயினற்றோ விம்மிதிற்ப வேண்டுமலாற் பாயும்
திரைப்பரவை யெழுந் தெரிவோர்க ளென்ன
உரைத்தியென்றார் வீடணனை யோர்ந்து. (5)

Koviloor Digital Library

காகமுற்ற பந்தர் களமெங்குஞ் சூழவதின்
போகமுற்ற வம்பி னுடலொன்றி மேகமுற்றும்
மின்னலொடு சேர்ந்து வெளியிற் கிடப்பனபோல்
துன்னுசயங் காணீர் துணிந்து. (6)

வென்றியுடைச் செங்கண் விசையரக்க ரேவினவாய்
ஒன்றியுடைந் தம்பா லுயிர்துறப்பப் பொன்றுசிங்கம்
காகவடுக் கிற்பொலிவ நன்மலையின் மேற்றுஞ்சும்
பாகமடுக் குஞ்செயல்தாம் பார். (7)

அளியுற்ற கண்ணு னழகன்போர் வாளி
களியுற்றார் வாண்முகத்திற் காணல் புளினத்தின்
கண்ணகலும் வாரி கடல்பூத்த தாமரையின்
எண்ணரிய காடா மிசைந்து. (8)

தீவாய்ந்த வாளியினாற் சேர்ந்த குதிரைபொன்றக்
கோவாய்ந்த பாய்போற் கொடிகூட மாவாய்ந்த
திண்டேரி ரத்தவெள்ளஞ் சேர்ந்துநதி மண்டுதல்தான்
கொண்டேறுங் கப்பல்குறிக் கும். (9)

ஒழுகிப்பாய் மும்மதத்த வோங்கலுயி ரோடப்
பழகிப்பாய் முன்னீரிற் பாய வெழுகின்ற
செம்புனலாற் சேரும் செறிகடலின் மீனமெனப்
பம்புவதைப் பாரீர் பரிந்து. (10)

கடக்காராய்ப் பொங்கு கவந்தத் தொடுகை
தொடக்காகும் பேயிலயத் தோடு மடக்கில்லாக்
கூத்தமைப்பான் கண்ணுளர்போற் கூடி நடிக்குமதைப்
பார்த்தமைப்பீ ரென்றான் பரிந்து. (11)

காமப்போர் முற்றி நகைகாறு கோபமொடு
பாமக்கடலார் படுவாய்கள் தூமத்தாம்
வெங்கனலிற் றேன்றும் வியப்பதனைக் காண்கவென்றான்
அங்கனகப் பூணு னமர்ந்து. (12)

Koviloor Digital Library

பின்னுமுற்ற வோடை பெருத்த மதவேழம்
கன்னமூ லத்தாம் கவரிகடாம் மன்னியநீர்
தாமரைமா னும்வதனந் தன்னிலன்ன முற்றதுபோ
லாமதனைக் காண்கவென்று னய்ந்து. (13)

ஒளிமுற்றும் வேழத் தொளிரவரும் வெண்கோ
டளிமுற்றும் செம்புனலி னாழ்தல் துளிமுற்றும்
மேகக் குழுவின்கண் மின்னடுத்த வெண்பிறைபோல்
வாகொத்த காண்பீர் வரைந்து. (14)

என்றெடுத்துக் காட்டி யிவைமுழுதுங் காணவெனில்
நன்றெடுத்த கோடி நலத்தநாள் சென்றடுத்துக்
கண்டாலு மாகா களத்தின் பெருங்காட்சி
விண்டாலென் னென்றான் வியந்து. (15)

தண்டாத கீர்த்தித் தயாதரா மன்கணையால்
அண்டாப் பெரும்படைதா னற்றதனைக் கண்டு
வியப்புற்றார் வீருற்றார் வீடணமா லோடும்
சயப்பற்றார் வீரனைச்சார்ந் தார். (16)

ஆரியன்றாள் போற்றி யவன்பாங்க ரிற்சிறந்த
போரியன்ற வேற்றம் புகழ்ந்தவரு பேருயிர்ப்பாய்
நின்றிருந்தார் மேலும் நிகழ்ந்த பரிசதனை
நன்றறிந்து சொல்வாம் நயந்து. (17)

வானரர் களங்காண் படலம் முற்றிற்று

Koviloor Digital Library

இராவணன் களங்காண் படலம்.

அலக்கணெய்தித் தேவ ரழிந்துமனம் வெம்ப
உலக்கவர வானரரை யோட்டி இலக்குவனை
வீட்டி யிராவணன்றான் மேலாங் களிப்புடனே
கோட்டியிரான் சென்றான் குறித்து. (1)

பொருந்து பெருங்கோயில் போயதற்பின் போரின்
வருந்தினர்க்குத் தம்மன்பின் வந்தார்க் கருந்துதற்குத்
தக்க விருந்து சமைப்பான் கருதியவன்
மிக்க விருந்தான் விழைந்து. (2)

வானநாட் டாரை வருக வெனவந்தார்
ஏனைநாட் டாருமுடன் ஏற்றனராம் தானமாய்
உண்டடுக்கும் போகம் ஒருங்கமைத்தி றென்றுரைத்தான்
பண்டடுத்த சோகம் பறந்து. (3)

ஏறவிஞெறுவி மூறு நவையற்ற நல்ல
பிறவிழையுஞ் சாந்தாடை பேணும் திறமுடைய
நாவைப் புனல்சேக்கை நன்றாக்க வென்றுரைப்பான்
வானைப் புரட்டும் வலன். (4)

நானமுற்ற நெய்யதனை நன்குரைத்து நல்லபுனல்
ஆனமுற்ற வாட்டி யமுத மொத்த பானமதை
ஊட்டியணை மீதி லுடனடுக்க வானமுற்ற
நாட்டியர்கள் வந்தார் நயந்து. (5)

பாடுவார் கானம் பயில்வரு பாவகத்தி
னாடுவார் பேரமளி யன்புறவே கூடுவார்
மிக்க களிப்படைவார் மேலான பண்ணையர்கள்
தக்கனி கொண்டுசிறந் தார். (6)

Koviloor Digital Library

அரசரே யாதி யடியவர்க ளந்தம்
வரைசெய் யரக்கரவர் வந்தார் விரைவினொடு
மிந்திரபோ கந்தருவா ரேற்றபடி செய்தனமைத்தார்
அந்தரத்தார் சிந்தை யறிந்து. (7).

இன்ன தன்மை யாக வியைந்த விராவணன்முன்
அன்ன தன்மை தூத ரடிபணிந்தார் சொன்னதன்மைச்
சேனையர்கள் சென்ற செயலைச் செவியினிடை
ஏனையர்கள் செப்பு மிரிந்து. (8).

நடுங்குகின்றமேனியினர் நாவுலர்ந்து தீர
வொடுங்குகின்ற தான வுயிர்ப்பா ரிடுங்குகின்ற
கண்ணுடையார் மிக்க கவலைப் படுமுளத்தார்
எண்ணுடையார் சொல்வா ரிசைந்து. (9)

இன்றியார் வந்துவிருந் தேற்பா ரிமையர்தந்த
வென்றியாய் நந்தம் விரிசேனை இன்றியாய்ப்
போனவிரா மன்கைப் புரிவில்லின் யாமமொன்றின்
வானவரா மென்றூர் மருண்டு. (10).

வலிக்கடனுல் வானோர்கள் வந்துசெய்வ வெல்லாம்
பலிக்கடனு வல்லரக்கர் பாங்காம் ஒலிக்கடலால்
ஓங்குமுல கத்தரக்கர் ஒய்ந்தார்க ளின்றளவில்
தாங்குமுலந் தோளவென்றூர் தான். (11)

ஈட்டு முவகை யிசைந்திருந்தா னிம்மாற்றம்
கேட்டு வெகுளிமயல் கிட்டவே யூட்டரக்குச்
செங்கண் நெருப்புயிர்ப்பான் தீட்டு படிவமென
வங்கண் திகைத்தறைவா னுங்கு. (12)

என்னின் வலியா ரிராக்கதர்கள் வீவதுண்டோ
உன்னி னெலிமணலு மொப்பரியார் பின்னொருவர்
இல்லாது மாண்டா ரெனப்பேசும் பொய்யுரைதான்
செல்லாது மாண்டிரென்றான் தேர்ந்து. (13).

Koviloor Digital Library

கேட்டவா மாலி கிளத்தவரு தூதுவர்போய்
நாட்டவாரார் மன்னுலகை நாட்டுவதும் வீட்டுவதும்
ஓரிமைக்கு முன்ன முளத்தமைக்கும் வில்லியர்க்கென்
னரிமைக்கு மென்றா னெடுத்து. (14)

அளப்பற் றுலக மமைத்தளித்து வீட்டும்
உளப்பற் றுலவாதா னுண்மை வளப்பத்தாம்
தம்பிவியன் வீடணன்சொற் றுமறையா மென்றறியா
நம்பிவியந் தென்னும் நலன். (15)

ஒன்றுலக மூண்ணூ முலகத் துயிர்க்கொன்று
நின்றுலவும் வன்னெருப்பு மேருமுயர் குன்றும்
மரம்புல்லும் மாய்க்கும் வலத்தன் பகழித்
தாம்புல்லற் கென்தெரித்தென் றான். (16)

பட்டதுமெய் யுன்னைப் பரிந்தடுத்த செல்வமெலாம்
விட்டதுமெய் வேறும் வினையடுத்த கெட்டதுமுன்
கேளிரெல்லா முன்னால் கெடுத்தா யெனக்கேட்ட
மீளிசொல்வான் கோப மிகுந்து. (17)

இலக்குவனை வேலா லெறிந்துயிரைத் தின்றேன்
விலக்குவனும் கண்டால் விளியும் கலக்குவதென்
வெற்றியென்ன தென்றான் விசயன் திறமறியாக்
கற்றிரண்ட தோளான் கனன்று. (18)

ஆண்டறிந்த தூத ரடுத்தவது மெய்யே
மீண்டறிந்தான் மாருதிசெய் மெய்மருந்தால் வேண்டும்
மருந்துவெற்பை வீசினான் வள்ளலுடன் சேர்ந்தார்
திருந்துபொற்ப ரென்றார் திகைத்து. (19)

தேற்றமற்றா னுதலினாற் சிந்தை மயல்தீர
ஏற்றமுற்ற கோபுரத்தி னேறினா னூற்றெடுத்த
சேனைவெள்ளந் தீர்ந்த செருக்களத்தை நோக்கினான்
மானவெள்ளந் தீர்ந்தான் மலைத்து. (20)

Koviloor Digital Library

காவியொத்து நீண்ட கருவிழிக ளல்லியென
ஆவியொத்த நாயகர்மே லாசையினால் கோவியர்க்கை
மங்கையர்கள் கூடி மருண்டழுகும் பேரோசை
சங்கையறக் கேட்டான் சலித்து. (21)

எண்கடந்த யானை யெடுத்த பிணமலைமேல்
மண்கடந்த சோரி மலைத்தலைத்துக் கண்கடந்து
செல்வதனை மாற்றித் தெரிவையர்கண் ணீர்வெள்ளம்
செல்வதனைக் கண்டான் செறுத்து. (22)

முற்றியலும் வில்லான் முரண்கணைக ளாற்பிளந்து
முற்றரக்க ராக்கை முழுப்பிணங்கள் பற்றிவரு
மோரிக் குலம்பாட வுற்றடுத்த பேய்நடனம்
பாரிக்கக் கண்டான் பதைத்து. (23)

விண்ணடுத்த நாயகர்கள் வெய்யபுயத் தைக்கணங்கள்
புண்ணடுத்த தாக்கிப் புரட்டுவதை மண்ணடுத்துக்
கண்டுளித்தங் கேங்கும் கவினு ரரக்கியரைக்
கண்டுளத்திற் கொண்டான் கவல். (24)

குமிழியென நெய்த்தோர் கொதித்தகன்ற கண்ணான்
தமிழிதெனு மன்கணையாற் சாய்ந்தார் அமிழ்குருதி
வெள்ளமுடன் றேறியது வேலை சிவக்குதலை
கள்ளமுடன் கண்டான் கனன்று. (25)

விண்பிளக்க வார்க்கும் விசயக் குரங்குகண்டான்
தண்பிளக்க வாடுகவந் தங்கண்டான் எண்பிளக்க
வானீங்கு தேவர் மதங்கண்டான் கோபுரத்தைத்
தானீங்கி வந்தான் தனித்து. (26)

நகைபிறக்கும் வாயனுடன் நாக்குகடை நக்கிப்
புகைபிறக்கு மூக்கன் பொறிக்கண் மிகைபிறக்கும்
வெஞ்சினத்தீ நெஞ்சன் விளங்கு மாசவைக்கு
கஞ்செனத்தான் வந்தா னவிந்து. (27)

இராவணன் களங்காண் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

தேரேறு படலம்.

பூதரமென் மேனி புகைபுருவச் செந்தீக்கண்
மோதரனென் பானை முகநோக்கி எதாம்
அணிமுரலச் சேனை யனைத்தும் வரற்கு
மணிமுரசெற் றென்றான் வரைந்து. (1)

எற்ற முரசமுட னெத்தனையோ கோடிகொண்ட
கொற்றமுரட் சேனை குழுமியதாஞ் சுற்றுதிண்டேர்
ஆனைபரி மாமுதல வாரிலங்கை யூர்வரளத்
தானைசெறிந் தானகளந் தான். (2)

ஈசனைவாழ் முக்க ணிறையை யிருமைதரு
பூசனை தான் செய்து புகல்தானம் வீசியபின்
வேட்டனவெ லாமளித்து வேண்டிவரு போர்க்கோலம்
நாட்டமுடன் கொண்டான் நயந்து. (3)

அருவி செறிகுன்றின் ஆயிரமாஞ் சூரர்
உருமினொடு வந்துநித்த தொப்பச் செருவடுத்த
இந்திரனாற் றந்த வெழிற்கவசம் பூட்டினான்
மந்திரமாந் தோளை வரைந்து. (4)

மந்திரத்தைச் சூழ்ந்து வருமா சுணமென்னச்
சுந்தரத்தாம் கச்சிடையிற் சூழ்ந்தாக்கி எந்திரத்தாம்
கிம்புரியும் சாத்திக் கிளரும் கடிசூத்ரம்
பம்புமிடை சாத்தினான் பாங்கு. (5)

மறைவிரித்த தாமன்ன மானக் கலுழன்
சிறைவிரித்த தாம்கொசுவஞ் சேர்த்தி முறைவிரித்த
கோசிகப்பட் டாடை குலவு முடையணிந்தாங்
கேசிகப்ப நின்றா னிசைந்து. (6)

Koviloor Digital Library

மழைக்குலத்தி ேனாடிசைய வானுருமை வாரி
இழைத்தொடுத்த மாமணியி னேற்றி முழைக்கிடந்த
சிங்கமுழங் கும்போற் செறியுஞ் சதங்கையிட்டான்
சங்கமுழங் கும்போர்த் தான். (7)

உருமிடித்த காலை யுரகத்தைப் போல
இருநிலத்த வெல்லா மிரியப் புரியும்
பொலங்கழலைப் பூட்டினான் போரடுக்கிற் பொங்கும்
கலங்கழலைப் போல்வான் களித்து. (8)

நாலஞ்சாங் கையி னனந்தலையி னுமனந்தன்
ஆலஞ்சார் மையி னடல்விளங்கும் கோலஞ்சார்
கோதையொடு புட்டிலணி கொண்டான் கருதலரை
வாதையொடு கட்டிலணி வான். (9)

கடல்கடைந்த மால்வரைபோற் காணும் புயத்தி
னடல்கடைந்த தோள்வலய மாக்கிச் சுடர்கடந்த
குண்டலங்கள் காதிற் குலவப் பெருந்திறலான்
விண்டலங்க நின்றான் விரைந்து. (10)

வேலையுற்ற வெய்யவர்கள் மேலும் மிகுத்துவரு
காலையுற்ற தென்னக் கதிர்சூழும் மாலைபத்தின்
மேன்மதியஞ் சூழ்ந்ததெனை வெண்முத்தி னாற்சிறந்த
கோன்குடைமேற் கொண்டான் குறித்து. (11)

குன்றின் முழைபோற் குலவுபகு வாய்களிலே
துன்று வளையெயிறு தோன்றுதரூன் மன்றலணி
நீலப் புயலி நிகர்பணிக டோன்றுவபோற்
சாலப் புகலவருந் தான். (12)

சேரவிட்ட நன்முத்தின் சேக்கை சுவணமணி
வீரபட்டம் நெற்றி விளங்குதல்தான் நீரமுற்ற
திக்கசங்க ணெற்றிமிசை சேரோடை தாமென்னத்
தக்கசங்கஞ் சொல்லத் தகும். (13)

Koviloor Digital Library

புலவியுற்ற மங்கையர்கள் பொன்னடியைப் போக்கித்
தலைமையுற்ற தேவர்கட்குந் தாழா நிலைமையுற்ற
சேகரங்கள் பத்திற் சிறந்த முடியிரண்டில்
மாகரங்கொள் சூரியரா மால். (14)

நாகர்நிலம் நான்முகன்ற னூடும் நலந்தரவாம்
பாகமெலாம் வென்றமரர் பண்பணிந்த வாகைகொண்ட
மாலையொடு தும்பை மலர்மாலை யுஞ்சூட்டி
வேலையென நின்றான் விளித்து. (15)

அகழியெனும் வேலை யளக்கர் மணலை
கிகழவரு மீனை நினைப்பை இகழ்வில்லாப்
பூதங்கள் பொன்றிடினும் பொன்றா தெனச்சிறந்த
ஏதங்குந் தூணிகொண்டா னேய்ந்து. (16)

வருகதே ரென்னவந்த வையமொடு வானும்
உரகர்முத லேறினுந்தா னுச்சி செருகுபூ
வன்னபுனை வேய்ந்தவா மாந்தூரக மின்மறனினும்
மன்னனிலை வேதுரங்க மாம். (17)

ஆயிரமா நல்லமுதத் தாயலரி மாவழியிற்
பாயிரமா வந்த பரியொடுநீர் வாய்மடுக்கும்
மாவடவைத் தீவயிற்றின் வன்காற்றி னுபகற்குத்
தாவடலிற் சார்பரியுந் தாம். (18)

பாரடுத்துச் செல்லும் படர்வானிற் பாய்ந்துவரும்
நீரடுத்துச் சேர்நெருப்பி னேரோடும் போரடுத்துத்
தக்க பிரமனகர் சாரு மதுவொன்றோ
தொக்கபிற வெங்குந் தொகும். (19)

எண்டிசையின் வாழ்களிற்றி னேற்றமணி யாயிசைத்தல்
கண்டிசையின் வாய்த்த கவினடுக்கும் அண்டம்விற்கும்
காசினங்க ளாலே கவினு மிசைகளினுந்
தேசினெங்குஞ் சோதியுடைத் தே. (20)

Koviloor Digital Library

முனையடுத்த தேவர் முதலவர்க ளண்டத்
தினையடுத்து மேவு மெவரும் வினைதடுத்த
வெய்ய படைக்கலங்கள் வேலை யெனவேற்ற
வையமது மேலாம் வரை. (21)

கண்ண னடுநேமி கண்ணுதல்சூ லங்கமலத்
தண்ணல் கலச மழிந்திடினும் நண்ணுவது
தேவ ரியலரியாச் செய்கை படைத்துளவாம்
ஓவரிய வென்றியுரை யுள். (22)

அனையதிருத் தேரை யர்ச்சனைசெய் தாற்றி
எனைய திருமறையோர்க் கேற்ற வினையமுற்ற
கன்னிதிக்கு மிக்க நவநிதிக ளுங்கொடுத்தான்
என்னிதிக்கு மிக்கா னிசைந்து. (23)

ஏறினன் கைதொழுதா ரிந்திரனே யாமுதல்வர்
தேறினர் தாமுந் திகைத்தயர்ந்தார் வேறு
புகல்வதெனை யைம்புலனைப் போற்றாத் தவரும்
அகல்வதெனை யென்றா ரயர்ந்து. (24)

மன்றற் குழற்சனகி மாமலர்க்கை யால்வயிறு
கொன்றத் துயர்க்கடலிற் கூடிநிற்றல் அன்றேல்
மயன்மகட்கா மச்செய்கை மற்றிரண்டி னொன்று
செயன்மனத்தா மென்றான் தெரிந்து. (25)

பலதலைகள் மோலியொடு பாங்காப் பலதோள்
அலகரியா நீள்படையோ டாக வுலகளந்தான்
போல்வளர்ந்து நின்றான் பொருப்பிற் புயமுடையான்
ஆல்வளர்ந்த தென்ன வடர்த்து. (26)

விண்டிருகூ றாக விசும்பு வெடித்திடத்தான்
மண்டிறக்க மாபகலோன் வாட்டமுறக் கண்டு
மதியமுதஞ் சிந்த வளர்தோள் புடைத்தான்
துதியமுதர் கொள்ளத் துயர். (27)

Koviloor Digital Library

நணித்தாஞ் சமமென்ற நல்லுவகை தன்னால்
திணித்தாஞ் சிலைநாண் டெரித்தான் மணிக்குழையார்
வானவர்கள் தானவர்கள் மாமகளிர் மங்கலநாண்
தானவர்கை தொட்டார் சலித்து. (28)

சுரிக்குமண்டங் தூங்குநீர் தூங்காது வீங்க
இரிக்கு முயிர்நடுங்கி யேங்கப் பரித்திலனு
வன்தலையான் சந்தவெளி வந்தான னந்தனெனக்
கொன்தலையான் வந்தான் கொதித்து. (29)

தோன்றினான் தோன்றுஞ் சுராசுர ரேயாதி
மூன்றினும் நாட்டார் முடிவுபெற வூன்றினான்
போரென்று கண்கள் புலிங்கமுதி ரம்பெருகத்
தேரொன்றி வந்தான் தெழித்து. (30)

உலகின் மறுக்கும் உயர்ந்தோ ரிரிவும்
மலைவானு மற்று மறுக்கும் அலைவான
வேலைச் சலிப்பும் விளங்குந் தலைவர்முதற்
சாலத் தலத்தர்கண்டார் தாம். (31)

பீறித்தா மண்டமெனப் போரா குலம்பிறக்க
வேறிட்டோர் கம்பலைதான் மேல்வீங்க மாறுற்ற
காலத்தாம் செய்கையெனக் கண்டெழுந்தார் யோகியர்கள்
சீலத்தாம் செய்கை திகைத்து. (32)

சுடர்தயங்க மாவடுக்கள் சோர்ந்துதிர மேருத்
திடர்விசும்பிற் செல்வ சிவண அடர்தயங்கு
சேனை யொடுமேரக்கன் தேரடைந்த கம்பலையால்
வானை யடு மருக்கம் வாய்ந்து. (33)

எழுந்தானி ராவணனி ராக்கதராந் தானைக்
கொழுந்தான முற்றிவரக் கூடி அழுந்தாத
கம்பலந்தான் தீரும் நடுங்குவார் தேவரென்றான்
வம்பலந்தான் வீடணனு மன். (34)

Koviloor Digital Library

தொழுங்கரத்த வாய்குழறிச் சோர்ந்தமெய்ய ராகி
அழுங்காற்று விண்ணோர்க்கன் றாகிச் செழுந்தாத்த
பாலத்தி னின்றெழுந்த பான்மை யெனவெழுந்தான்
நீலத்தி னின்றவண்ண னேர்ந்து. (35)

கடக்களிறு மென்னவரு கண்ணனொரு காலன்
விடக்கயிறும் வாளை விசித்தான் மடக்கொடியாள்
தன்றுயர்க்கும் வானோர் தனித்துயர்க்குந் தீர்வென்றான்
வென்றுயர்க்கு சீமான் விழைந்து. (36)

தன்னிடத்தா யெவ்வுலகுந் தாங்கும் பெரியோனை
மின்னிடத்த பொற்கவச மேற்றாங்கப் பொன்னாவம்
சுற்றிவர வென்னிற் றொடுத்தான் றனுவுடனே
வெற்றிவர வுன்னி விழைந்து. (37)

மூண்டசெரு வின்று முடியு மினிவெற்றி
ஆண்டகைக்காந் தேவரினி யச்சமின்றிப் பூண்ட
மணியாழி நந்தேர் வாவிடுமி னென்றான்
கணியாழி நஞ்சேர் களன். (38)

தேவாது கேட்டார் செயற்குரிய தென்றுவந்தார்
காவாத வுற்கே கடனென்றார் மூவுலகு
மோர்கணத்தின் முற்றிவரு மொண்டேர் வரவென்றான்
சீர்கணத்துந் தேவேந் திரன். (39)

மாதலிமான் தந்தான் மகோத்தியாற் சூழவரு
பூதலமா மீதெழுந்த பொற்றேரைச் சீதமதி
மண்டிலமு மேனை வளமடுத்த பாதமெனக்
கொண்டிலக நின்றதுடன் கோ. (40)

குலக்கிரிக ளேழ்வலியாற் கொண்ட கொடிஞ்சும்
அலக்கரிய பார்வலியா மச்சும் கலக்கரிய
மாவால மெட்டின் வலிக்கயறு கட்டியதாய்
தாவாவம் வானைமுட்டுந் தான். (41)

Koviloor Digital Library

ஆண்டினொடு நாளிருது வாகிவரு திங்களெனப்
பூண்டினமாம் பொன்னாற் புரிதட்டும் மீண்டனவாம்
தாரகைகள் மாமணியாய்த் தாங்கிவரு சீருடைத்து
நோரகையுங் குன்றை நிகர்த்து. (42)

மாதிரத்தைத் தாங்கு மணிச்சுவர்க ளாவகுத்துக்
கோதரத்த மாமழையைக் கோடித்து மீது
பதாகையென வீசியது பண்பூத மைந்தாம்
அதாகவலி கொண்ட தடுத்து. (43)

மாத்தொ டுலகினிடை மற்றுமுள வாரித்
தாத்திற் றொடுத்தகொடி சார்ந்து வாத்தினொடு
நின்றகடல் காலமொத்து நேரு மொலியதனை
என்றுமுள வாகு மெடுத்து. (44)

பண்டரித னுந்தி பரவு மயன்வதிந்த
புண்டரிக மொட்டனைய பூமொட்டாம் மண்டலத்தை
யுண்டோன் சயனமெனா வோங்கு மகலத்தாய்
விண்டோங்கி நிற்கும் வியந்து. (45)

வேதமவை நான்கமைத்த வேள்விகளும் வெவ்வேறு
மோதமவை யேழு முலகேழும் பூதமைந்தும்
முன்னெறிக ளோடு முதலா மிவையெல்லாம்
என்றபரி யாமா லிசைந்து. (46)

வந்ததனை வானோர் வணங்கி வலியோய்நீ
எந்தைதா வந்தா யெமையளிப்பாய் தந்துதவு
வென்றியெனச் சொற்றூர் விதமழையாய்ப் பூப்பொழிந்தார்
அன்பிரத மாதலிதன் தான். (47)

வினைப்பகைபோய் மேலே விசும்புருவி மானம்
மனத்து விசைகொண்ட மான வினைத்துலகும்
போற்ற வடைந்த புரிதவர்க்கு நல்லவன்பால்
ஏற்ற முடைத்தா யிசைந்து. (48)

Koviloor Digital Library

அலகடுத்த வாழியொன்றி னாமிரத மன்றால்
உலகடுத்த வூழியொளி யொன்றா னிலையடுத்த
மேருவரை யன்று விசையத் தொருமூவர்
சாரவரு மானமிதோ தான். (49)

என்னவர வின்ன விடையேற்ற தென்னையென
மன்னவர்கள் மன்னவரன் மாதலியைப் பொன்னொளிசேர்
தேருடையார் யாரென்றான் செப்புவா னொப்பரிய
சீருடையான் சிந்தை தெரிந்து. (50)

முப்புரத்தைத் தீர்த்தோன் முகனான்கான் முன்னாளி
னொப்புரத்தாற் செய்த தொளிபல்லோர்க் கொப்புடைய
தாழிதிரி காலு முலையா வலியுடைத்தோர்
ஆழிவா விந்திரற்கென் றான். (51)

அண்ட மிதுபோ லனந்த மனைவபுனைந்து
கொண்ட பொழுதங் குவலையங்க ளுண்டோன்
வயிரடுக்கும் வானோர்க்கு மன்னும் பெருமைக்
குயிரடுக்கு மென்றா னுகந்து. (52)

கண்ணுமன மென்னக் கடுங்கா லிவைகண்டால்
எண்ணுவன முன்ன மெடுத்தோடும் மண்ணும்
நெடுநீரி னோடும் நெருப்பினிலு மோடும்
தடுமாறா வித்தேர்த் தடம். (53)

தேவர் முனித்தலைவர் தேசார் சிவனுமுன்னாள்
மூவுலகு செய்தவரன் முன்னிலையி னேவச்
சுரர்க்கரச னீந்தான் துரியவெனச் சொற்றான்
வரக்கருணை மாதலியா வான். (54)

அய்ய னிவைகேட் டரக்கன் புரிமாயச்
செய்கை யெனச்சிறிது சிந்தைகொண்டான் வையத்திற்
பூண்டபரி வேதம் பொருந்த வுரைத்ததனை
ஆண்டபரன் கேட்டா னறிந்து. (55)

Koviloor Digital Library

இல்லையினி யையமெனை வெண்ணும் கருணையனும்
நல்லபுரி நாமம் நவில்கென்ன வல்லமையார்
சீர்வரத மாதலிப்பேர் செப்புவா ரொன்றுரைத்தான்
தேர்வரதன் மாதவன்முன் றேர்ந்து. (56)

மாருதிக்கும் தம்பியினை வாளரிக்கும் சாற்றியிதி
னீருதிக்குஞ் செய்கை நிகழ்த்தவென ஆரியனை
வந்தனித்தா ரையமில வானரசன வையமென்றார்
செந்தனித்தார் வள்ளலுளந் தேர்ந்து. (57)

விழுந்துபுரள் தீவினைதான் வேர்பறிய மேலோர்
தொழுந்தகைய நல்வினைதாம் துள்ள வழுந்துதுயர்
போயமரா ரந்தணர்கள் பொற்கை தலையேற
மீயமரும் வள்ளல் விரைந்து. (58)

தேரேறு படலம் முற்றிற்று.

இராவணன் வதைப் படலம்.

ஆழியந்தேர் வீர னடுத்தேற வாசிசொல்லிப்
பூழியுந்த நோக்கிப் புலவரெலா மூழிவெங்கால்
என்னவருந் தார்க்கியனை யேற்றா னுமன்றான்
தன்னைவரங் கொண்டுதுதித் தார். (1)

எழுகதே ரின்றே இசையார் வலிபோய்
விழுகநேர் வெல்கவற வேந்தன் அழுகவாம்
போராக்கி மார்களெனப் போற்றப் புலவரெலாம்
சீர்பெருக்க வந்தமணித் தேர். (2)

அன்னசெய்கை கண்ட வரக்க னமரர்தந்தார்
மன்னவைய மென்று மனங்கடுத்தான் தன்னசெய்ய
தேரையிரா மன்மீது செல்ல விடவென்றான்
சீரையிரான் சாரதியைத் தேர்ந்து. (3)

Koviloor Digital Library

இரிந்தகவிச் சேனை யிமையோர்தே ரீந்தார்
அரிந்தமனே வெல்லுமென வஞ்சார் திரிந்தனவாம்
கல்லுரமாச் சிந்திக் கடுத்தார் குரக்குவரர்
செல்லுரமுஞ் சிந்தத் தெழித்து. (4)

வார்முரசி னோதை வயவர் புடைப்போதை
போர்முரணார் சுற்றிவரு போரோதை ஆர்தலினால்
ஆரும்பார் வீழ வடுக்கு மிவரிரதம்
சீரும்பர் போற்றச் சிறந்து. (5)

மாதலியை நோக்கி வரத னெடுத்துரைப்பான்
காதலிவை கேட்டி கருதலன்றன் ஏத
மிகுதிதனைப் பார்த்து விடவிரத மென்றான்
தகுதிதனைப் பார்க்குந் தரன். (6)

வள்ளலுள்ள மாவிதயம் மாற்றார் மனத்தினொடும்
எள்ளரிய வெல்லா மினிதெண்ணிக் கள்ளமிலாக்
காலத்தை நோக்கிக் கருதி நடப்பதன்றோ
சீலத்தை நோக்கவென்றான் றேர்ந்து. (7)

தோன்றினனி ராமன் துரித வரத்தேர்மேல்
என்றிருவர் போரு மெடுத்த பின்னர்ச் சான்றெனவாய்
கிற்றனம கோதுடைத்தா நீவிடை தாவென்றான்
தெற்றெனம கோதரன்றான் றேர்ந்து. (8)

அம்புயத்தாங் கண்ணனையா னாளரியி னேறுவரு
தம்பியைத்தான் நீர்த்ததெனத் தோன்றுவேன் தம்பி
தனைத்தடுத்தி யென்னிற் றருங்கொற்ற மென்றான்
சினத்தடுத்த வீரன் றெழித்து. (9)

மீண்டவன்றான் தம்பி விசைய னிடைமேவ
ஆண்டவன்றே ராண்டுவர வாங்கடுத்தான் மூண்டவனை
கோபத்தாம் மோதாலும் கூறிவிடு நேரென்றான்
மாபற்றுஞ் சாரதிசொல் வான். (10)

Koviloor Digital Library

எண்ணரிது கோடி யிராவணர்வந் தேற்றிடினும்
நண்ணரிது கோடி நடப்பதன்றிக் கண்ணன்
தனையடுத்துத் தாக்கல் தகாதனவா மென்றான்
முனையெடுத்துச் சொல்வலவன் முன். (11)

என்றவுடன் சீறி யெழுந்தா னானையெடுத்து
இன்றவுடன் றீரும் சினமென்றான் குன்றன்ன
தோற்றத்தாம் தேரைத் துணிந்து நடத்தினான்
சீற்றத்தாம் போர்விளைந்த தே. (12)

பொற்றடந்தேர் மாயானை பொன்மலைத்தோள் வீரரென
மற்றடர்ந்த சேனைவள மாகடறான் வற்றவரு
வள்ளலடும் பாண வடவை பருகியவாய்
உள்ளதொரு தேரே யுறம். (13)

அசனிக் கொடியி னரவத்தேர் மீதும்
இசையுற்ற பாக னெழிற்றோள் விசையுற்ற
பாணமெத்த வித்தினான் பாங்கடுத்த வள்ளலிவன்
ஆணவத்தை யெத்தினா னாய்ந்து. (14)

வில்லொன்றாற் கையொன்றால் வீரப் புயமொன்றால்
செல்லொன்று பாணவரஞ் சேர்த்தினான் சொல்லொன்றாற்
செய்கையொன்றாற் றீர்ந்தான் றிருமால் முனமெய்தி
உய்கையின்றி வென்றி யுலர்ந்து. (15)

மாதரத்து மோதானை மன்னடுதல் கண்டடர்த்து
மாதிரத்தை வென்ற வலியரக்கன் சூதனைத்தான்
செல்லவிடு தேரென்றான் சீமானு முன்னடுத்தான்
வல்லமையான் சொல்வான் மதித்து. (16)

பனிப்பட்ட தென்னப் படர்சேனை பாறித்
தனிப்பட்டா லன்றியிவன் தாழான் எனத்தொட்ட
வில்வளைத்த போழ்தின் விரிந்த கடற்சேனை
அவ்வளைத்த லாதவன்முன் னாம். (17)

Koviloor Digital Library

அடலுற்ற வல்லரக்கற் கப்போழ்தி னண்டம்
கடல்வற்றக் காலுடற்றுங் காலை யிடலார்
மலைக்குலங்கள் தாம்சலித்த வண்ணமிடத் தோள்கள்
சலிக்குமங்கண் காட்டும்வருந் தா. (18)

உதிரத்தா மாரி யுலகிற் சொரிந்த
அதிரத்தாம் வான மசலம் பிதிரத்தான்
உளர்கோள் கதிரவனை உற்றடுத்துச் சூழ்ந்தனவாம்
சீர்கோளி ராற்குச் செறிந்து. (19)

வாவுகின்ற வாசி வலித்து நடுங்கினவாம்
ஏவுகின்ற வின்னு ணிடையிற்ற நாவா
யுலந்தனவா மாலை யுதிரப் புலாலைக்
கலந்தனவா மெங்குங் கவிந்து. (20)

எழுதலுற்ற வீணை யியைந்த பதாகை
கழுதடுத்து மொய்த்தவரு கண்ணீர் ஒழுகின்ற
பீடுடைமா மேலும் பெருந்தொழுவி னின்றனபோற்
சோடுடைமா நின்ற குறித்து. (21)

இன்னிமித்த மாக விமையோர்க்கு நன்மைபுரி
தன்னிமித்த மாகந் தொடர்ந்தனவா மன்ன
வறிந்திலனு வாற்றுமோ வாங்கா மனிதன்
அறிந்தவனோ வென்று னடர்த்து. (22)

வீங்குதிறற் றோடுத்த வேகத்தின் வேலைதனி
யோங்கிவரு நாளி னுலகென்னத் தாங்கிவரும்
ஆற்றவிலா ராகி யடுத்திருபா னீங்கினர்
தோற்றிவரு வீரர் துயர்த்து. (23)

கருமங் கடைநாளிற் கண்ணுற்ற ஞானம்
அருமையுறு விஞ்சை யவிஞ்சை பெருமையிலாப்
பாவத் தொடுதருமம் பாங்கா யடுத்ததென
மேவத் தொடுத்தார் விரைந்து. (24)

Koviloor Digital Library

சிரமடுத்த வாயிரத்தாஞ் சேடனொடு கொற்றத்
தாமடுத்த தார்க்கியனு மொத்துப் பொரவடுத்த
போலப் பொருந்தினர் பொங்குமிர வும்பகலும்
போலச் சிறந்தார் புனைந்து. (25)

வென்றித் திசையானை மீறி வெகுண்டிரண்டங்
கொன்றத் திரிந்தனவு மொத்தனவாம் அன்றி
காசிங்கத் தோடு நகுமா டகனும்
பாசங்க முற்றார் பகைத்து. (26)

கண்டசங்க நான்முகனுங் கைவிதிர்த்து மெய்நடுங்கி
விண்டசங்கத் தொல்லண்டம் வீறிடவே யண்டர்
அமரத்தார் போற்றும் அருளி லரக்கன்
தமரத்தாம் சங்குதொனித் தான். (27)

சொன்னசங்கி னோசை துளங்கு மிசையதனுல்
என்னசங்கென் றேற்ற விமையவரர் அன்னசங்கம்
வான்முழக்க மாற வரைந்துவரு பாஞ்சசன்யம்
தான்முழக்க நின்று தனித்து. (28)

ஐயன் படையான தைந்து மடித்தொழிலைச்
செய்யச் சிறந்தனவாந் தேவருடன் மெய்யனவை
கண்டிலனும் வேதம் காந்துவரு தன்னிலைமை
கண்டிலது போலக் கலந்து. (29)

ஆசை விசும்புமலை யாழி யுடனை
தேச மலையினொடு தேவர்களும் கூசிவரக்
காதலின விந்திரன்றன் கம்பு தனைமுழக்கும்
மாதலியாம் பாகன் மகிழ்ந்து. (30)

துமிலத்தாம் வாளி தூர்ந்தா னரக்கன்
அமலத்தான் மேனிதனி லாமுன் விமலத்தாம்
வானட்டு மங்கையர்கள் மன்மதன்றன் வாளிபடத்
தானட்ட மின்றியலந் தார். (31)

Koviloor Digital Library

சென்றுற்ற தேரிரண்டு சேர்ந்து சிறந்தவரு
குன்றுற்ற மாக்கள் குதிப்பனவாம் ஒன்றுற்றொன்
றுற்றெறிய நோக்கி யுறுத்துச் சினந்துவரும்
வெற்றிதனை வேண்டி மிகுத்து. (32)

கொடியேறு வீணையொடு கொற்ற மிகுத்த
இடியேறும் நின்றங் கிடித்தல் படியேறு
விண்ணுங் கடலும் விரைந்து பலமுறையும்
கண்ணுங் கடமைமுடி நாள். (33)

எழினுற்ற வேலை யிசைந்தார்ப் பெடுத்தெனலாம்
வீழியுற்ற கண்ணரக்கன் வில்லொலிதான் ஆழியுற்றான்
வில்லினொலி யண்ட மிடைந்தாழி யண்டிவரு
செல்லினொலி யண்டும் சிறந்து. (34)

ஆங்குநின்ற வீர வனுமான் முதலான
வீங்குவென்றி வீரர் விழைந்தனரா யேங்கும்
மனமடுத்து நின்ற வழக்கல்லா லொன்றும்
சினமடுத்து நில்லார் தெரிந்து. (35)

ஆவதெனை யென்ப தறியா ருரியாரில்
ஏவரினி வெல்வரென வேங்குவார் தேவர்
பொருமுவார் மீள்வார் புரியுந் தொழிலை
வெருவுவார் சிந்தை மெலிந்து. (36)

சேணவந்தான் சேரத் திசைநோக்குந் திண்சரங்கள்
பூணமுந்தி வந்தனவாம் பூமழைதான் காணவந்த
தேவர்தரி யார்கை சிறந்தபயந் தாங்கிநின்றார்
ஆவதறி யாம லயர்ந்து. (37)

நீண்டதிர்த்த மின்னினொடு நீள்வான வில்லிரண்டு
பூண்டெதிர்த்து நின்றனவும் போன்றனவாம் ஆண்டவில்லி
தன்வில்லும் மாயத் தரக்கன் தனிவில்லும்
மன்வில்லாய் நின்ற மதித்து. (38)

Koviloor Digital Library

செருப்புரியும் வல்லரக்கன் சீற்றத் தொலியும்
பொருப்புரிமை வில்லொலியும் போர்ப்பக் குரைக்கின்ற
வேலையொடு மேகம் விரிந்த குழாங்கொண்டு
சாலவிடித் தார்க்குமெனல் தான். (39)

மண்ணடுத்துச் சென்றாலும் வானடுத்துச் சென்றாலும்
எண்ணடுத்தி ராவணன்றே ரேய்ந்துவரும் பண்ணடுத்த
தேவருடன் போற்றத் திறல்வள்ளல் தேருமுடன்
மேவுமிட மெங்கும் விரைந்து. (40)

கொற்றமது பிற்படத்தான் கொள்வதென்னை கோளில்லாச்
சிற்றயனைத் தேவர்தரு தேரோடும் பற்றிப்
பிடித்தற்கெ னிப்படியிற் போரச் சுழற்றி
யடித்தற்கென் னென்று ணடர்த்து (41)

தடித்துவைத்த தன்னகணை தாக்குதல்தான் மேலும்
வடித்துவைத்த மானுடற்கே வன்மை யொடித்துவையந்
தன்னைப் பொடித்து தனித்துவரு வில்லினொடு
மன்னைப் பிடிப்பனென்றான் மற்று. (42)

பதைக்கு மனமும் படருஞ் சினமும்
விதைக்கும் நெருப்பு விழியன் குதைக்கின்ற
வில்வளைத்துப் பாணமழை வித்தினு னெத்திசையும்
செல்வளைத்த தென்னத் தெழித்து. (43)

உருமொத்த வாங்கணைக ளூற்றமுற்ற கூற்றின்
மருமத்திற் பாய்ந்தடுக்கும் வானோர் திருமித்த
மாவரையைச் சுற்றும் வகைவா சுகிக்கிணையாய்த்
தீவரைவில் வாது செறித்து. (44)

துண்டத்தா மேரு துளைத்துத் துணையடுக்கா
அண்டத்தா மத்துளையென் றுந்தசத்தாம் கண்டத்தான்
கார்முகத்தின் வாளி கரியக் கணைபொழிந்தான்
போர்முகத்தாம் வள்ளல் புரிந்து. (45)

Koviloor Digital Library

உடையான் முயன்ற வொருகாரி யந்தான்
இடையூறி னுலழிந்த வென்ன விடையேற்றான்
போலச் சிறந்த புனிதன் சரமழையாற்
சாலச் சிதைந்த சரம். (46)

விண்போர்த்த மண்போர்த்த மேலுந் திசைபோர்த்த
கண்போர்த்த தாமிமையோர் காண்பரிதா எண்போர்த்த
மேலைத் தவரிடுக்கண் மேவினு றென்றுலகர்
சாலத் தளர்ந்தார் தகைந்து. (47)

வல்லாராந் தேவர் மறையோர் காந்தஞ்சி
எல்லாருந் தங்கரங்கொண் டேத்தினார் வில்லாளன்
கண்டான் கறுத்தான் கடிந்து விலக்குதற்குக்
கொண்டான் கருத்திற் குறித்து. (48)

செந்தீயின் வாணர்க்குச் சேர்ந்த சிறுவிலைநாள்
முந்தியும் நல்வினைபோல் முன்னவன்தான் சிந்தும்
வடித்தகணை சென்றரக்கன் மாரிக் கணையைப்
பொடித்தகணந் தன்னிற் புகுந்து. (49)

நூறு யிரம்பகழி நுட்பமுடன் விட்டதனைக்
கூறாய் விரலோன் குறித்தடர்க்க நீறாய்க்
கனல்சிந்தி யெங்கும் கலந்த கனமார்
மினல்சிந்து மாபோல் விரைந்து. (50)

வில்லாற் சரந்துறந்த வீர னுடனடுத்து
வல்லா னெழுத்தோ மரமுலக்கை தொல்லார்
மிடன்மிக்க சக்கரம்போர் வேன்முதல வெல்லாம்
அடன்மிக்க வீசினு னார்த்து. (51)

வேலு மழுவும் விரைந்தா யிரவிசிகம்
ஏலும் படைநொடியி னேற்றவெலாம் காலாய்க்
கனலாய்ப் புனலாகிக் காணும் பெருமான்
அனலாய்ப் பொடித்தா னறிந்து. (52)

Koviloor Digital Library

ஒத்துச் செருவிளைக்க வோங்க லெனுமரக்கன்
பத்துச் சிலைவளைத்தான் பன்முகிலாக் கொத்துப்
படக்கணைகள் வித்தினன் பன்னப் படவாம்
கடக்களிறு மென்னக் கனன்று. (53)

ஈசன் சரமு மெடுத்தெரிசிந் துந்தறுகண்
நீசன் சரமும் நிறைந்ததனுல் தேச
முதலமண்டு மைம்பூத முற்றும் பொருந்தா
விதலைகொண்ட வான மிகுந்து. (54)

மந்தரத்த பொற்கிரியோ மாருதிகை மாமருந்தாம்
செந்தரத்த பொற்கிரியோ சேர்ந்தன்று கந்தருப்பர்
நன்னகரந் தானென்ன நாடி யரக்கன்றேர்
அன்னகரந் தந்தரத்தி னும். (55)

எழுந்துயர்ந்த தேரா னிலங்கை யரசன்
பொழிந்துயர்ந்த பாணமழை போக அழிந்து
கவிக்குலங்கள் போனவெனக் கண்ணன் கருதப்
புலக்குலங்கா வீழ்ந்த பொரிந்து. (56)

முழவிடுதோ ளோடு முடியார் தலைகள்
விழவிடுவேன் சேமம் விசும்பா பெழவிடுவாய்
தேரையென்றான் வள்ளல் சிறந்த கவிவரர்கள்
பாரையொன்ற வுள்ளம் பரிந்து. (57)

அந்தினன்றே யென்ன வறிந்தவர மாதலியும்
உந்தினன்றே ரென்றாழி யூதைதனை இந்துவுற்ற
மண்டிலத்தின் மேலிரவி மண்டலந்தான் வந்ததென
எண்டவத்தார் கண்டா ரிசைந்து. (58)

இரிந்த மழைக ளிரிந்த திசைகள்
பரிந்த வுடுக்குலங்கள் பற்று நெரிந்தனவாம்
நீண்டவரை பாரும் நிகரடுத்த சாரிமிகப்
பூண்டவிரு தேரும் பொருத்து. (59)

Koviloor Digital Library

வலமிடத்தி லாக மருகிவரும் வானோ
நிலமடுக்கும் வேலை நிமிரும் குலவரைகள்
எல்லாமன் றேங்கவரு மேற்றகுலா லன்றிகரி
யொல்லாதென் றேங்கு முயர்ந்து. (60)

எழுந்தவரன் றேரு மிகலரக்கன் றேரும்
உழுந்துவரு முன்னுலகி னெங்கும் செழுந்தவரும்
தேவரிவை காணச் சிறப்பின் வருமென்றால்
யாவரிவை காண்பா ரடுத்து. (61)

உக்கா வுடுவு முருளைகள்தான் தாக்கலினால்
நெக்கா மலையும் நெருப்படுக்காத் திக்கான
தில்லையென்றாற் பாணமழை யெங்கும் நிரந்தவகை
சொல்லவென்றா லென்னுந் தொகை. (62)

இந்திரனுக் கேற்றவுல கென்ப ரியைந்துடனே
சந்திரனுக் கேற்றநிலந் தாமென்பர் அந்தணன்றன்
மாவுலக ரென்பர் மலைமந்த ரத்தரென்பர்
தேவுலகர் சிந்தை திகைத்து. (63)

பாற்கடலின் மத்தியென்பர் பல்வகைய தாச்சிறந்த
மாக்கடலி னெங்கும் வருமென்பர் மேக்கடுத்தா
ரென்பர் கிழக்குள்ளா ரென்றெடுத்து நன்றுரைப்பார்
பொன்பரவு தேவர் புகழ்ந்து. (64)

மீண்டனவோ வென்பார் விசும்பு மிகவெடுத்துக்
கீண்டனவோ வென்பர் கிளைக்குமென்பர் பூண்ட
புரவியோ காற்றென்பார் பொன்னிரத காந்தி
இரவியோ வென்பா ரெடுத்து. (65)

ஏழுகொண்ட மாகடலு மேற்ற பெருந்தீவும்
ஏழுகொண்ட யானைமலை யேழுந்தாம் சூழவரும்
அண்டத்துப் பித்தியெல்லை யாகி வருங்காற்றாய்
எண்டத்து மென்பா ரிரிந்து. (66)

Koviloor Digital Library

ஒறுத்துலக முற்று முழலவரு போழ்தின்
இறுத்திலவி ராவணனேற் றெய்த தறுத்ததுவுங்
காத்ததுந்தா னல்லாற் கமலக்க ணெங்கைபின்னர்
ஏத்ததுந்தான் செய்த தெனைத்து. (67)

விலங்கலொடு வேலை மேலினொடு கீழும்
இலங்கொளிய தாமுலக மெல்லாம் கலங்கத்
திரிந்திலங்கை வந்தடுத்தார் தேரடுத்த போரில்
விரிந்திலங்கு வீரர் விழைந்து. (68)

உய்த்துலக முற்று முழன்று வருசாரி
மொய்த்த கடல்மண்ணில் மும்மையால் வித்தகர்கள்
முற்றும் கடவு முழுவிரதத் தாம்பரிகள்
சற்றும் வியர்த்திலவாந் தாம். (69)

இந்திரன்றன் தேரி னியல்பிற் சிறந்துவரும்
உந்தரிய வல்ல வுருமேற்றைச் சந்திரனை
யொத்த சரத்தா நுதிர்த்தா னரக்கனடு
வெத்தி தனக்கா விரைந்து. (70)

சாய்ந்ததொரு வல்லுருமு தாழ்ந்த கடலடுத்துப்
பாய்ந்தவுரு மாமுழக்கிப் பாய்தலுந்தான் காய்ந்துவரு
பேரிரும்பின் கட்டி பிறங்கிய நீரொன்னச்
சீரிரும்பொன் னீர்சுருங்குஞ் சேர்ந்து. (71)

சேமானி ராமன் சிதையாத தேர்ப்பரியைத்
தாமாகுங் கூர்ங்கணையாற் றாக்கினன் கோமானு
மாதலிபொன் மார்பின் வலியசரம் பன்னிரண்டு
பேதலியான் விட்டான் பெயர்த்து. (72)

மண்டிலமாம் வில்லதுவு மானமுற்ற வில்லினொடு
கொண்டிலக வேற்றுவரு கூர்ங்கணையாம் உண்ட
கடும்புயலா மண்டுதலாற் கண்டிலரி ராமன்
தடம்புயனோர் தேவர்களுந் தான். (73)

Koviloor Digital Library

தோற்றா ரமரென்ற தோற்ற மடுத்ததனால்
ஆற்றா ரமராச்ச மாயினார் வேற்றரக்கன்
ஆர்த்தார் கணைபொழிந்தான் ஆங்காற் றியக்கமின்றி
வேர்த்தார் திறத்தார் வெருண்டு. (74).

அங்கியுந்தான் பேரொளியை யாற்றா தா மார்சலியும்
பொங்கியுந்தான் மாவிசும்பிற் போகிலவாம் வெங்கதிர்கள்
தண்கதிரு மீண்ட தனிமால் வறண்டதுடு
வண்கதிசெல் லாது வறந்து. (75).

திசைவிலங்கா யானை செருக்கதனைச் சிந்தும்
அசைவிலங்காங் கார்க்கடலு மஞ்சும் விசாகத்தைச்
செவ்வா யடுத்த தெனமேரு வுங்குலுங்கும்
எவ்வா யடுக்கா திடர். (76).

வானரத்தார் வீரர் வானிளைய மைந்தனுந்தாம்
என்றத்தான் வீரனைக்காண் கில்லமெனக் கானக்
கரியாய்க் கலங்கிக் கடலடுத்த மீன்போல்
விரிவாய்ச் சுழன்றார் மிகுத்து. (77)

நீலுடைய தாவரக்க னேரின்றி யெய்தவைதான்
மாலுடைய மாதலிபொன் மார்புதைத்த கோலும்
இலக்குவன்மார் பேற்ற விலங்கிலைவேல் போலும்
கலக்குவன்மை செய்த கனன்று. (78).

எய்தசர மெல்லா மிமைப்பின் முனமாகக்
கொய்தகற்றி வெங்கோலின் கோவையா னெய்தா
யரக்கன் றனைநெருக்க வான்ற வமரர்
சிரக்கம்பஞ் செய்தார் தெழித்து. (79).

தூணிறையை யொத்துத் தலங்கு புயந்தோறும்
கோணுஞ் சிலைகள் குறையவே சேனார்
கணைவிடுத்துத் தீர்த்தான் கருதலரை யென்றும்
இணைவிடுத்துத் தீர்க்கு மினன். (80)

Koviloor Digital Library

படையுற்ற தேவர் பருவரலி னீங்க
இடையுற்ற திக்குமகிழ்ந் தேற அடையுற்றான்
தார்க்கியனி ராமன் றனித்தேர்க் கொடியினிடை
ஏர்க்கநின்றான் சிந்தை யிசைந்து. (81)

சாலி யுருவித் தடித்தன்ன வான்கணைகள்
நீல நிறத்தி னிறைநெய்த்தோர் மேலடுத்துப்
பொங்கத் தொடுத்தான் புகலடைந்தோர் புன்பிறந்தை
மங்கத் தடுத்தான் மதித்து. (82)

திக்கடுத்துச் செல்லும் செறிந்த துகிலினொடு
மிக்கடுத்த வான்கொடியை வீட்டினான் கைக்கடுத்த
வில்வலியைக் கண்டான் வெகுண்டா னரக்கனுடன்
மல்வலிய தோளை மதித்து. (83)

பண்ணடுத்த பொற்றேரிற் பாங்காங் கருடவான்
விண்ணடுத்த கேதனமாய் வீற்றிருந்தான் எண்ணும்
இமையோங்கு தேவ ரினியாம் நமது
கமையோங்கு மென்றார் களித்து. (84)

ஆய வமைதி யறிவுக் கறிவான
நாய கனைநலிய நாடுவான் தீய
இருளுற்ற தாமதமா மென்றபடை விட்டான்
மருளுற்ற சிந்தையத மன். (85)

தீய்முகத்த வாகுஞ் சிலவுதிரந் தோய்முகத்த
பேய்முகத்த தாஞ்சிலவும் பேசநின்ற ஆய்முகத்த
வல்லரவாய் வத்திரமாய் வாட்டச் சிலகிளம்பும்
அல்லுறவா மாய மடுத்து. (86)

ஓர்திசையி னின்றமற்ற மோர்திசையி னந்தமுற்றுஞ்
சார்திசையிற் சார்ந்துவரு சார்புடைத்தா யோர்திகழும்
அங்கி பரிதிமதி யான்றகிர ணங்களைந்தும்
எங்குமிரு ளாகு மிரிந்து. (87)

Koviloor Digital Library

இனைய நிகழ்வுழிதா னேழுலகு மாகும்
கனையிருளிற் றேவர் கலங்க வினையரிய
தாங்தொழிலைக் கண்டா னனகர்க் கதிபதியான்
வேங்தொலைக் கொண்டான் விரைந்து. (88)

கண்ணுதலா னத்திரத்தைக் கண்ணன் மனத்தெண்ண
நண்ணுதலான் மாயம் நழுவியதாம் எண்ணும்
கனவடுத்த் காலை கலந்த வுணர்வாய்
இனமடுத்த மோக மிரிந்து. (89)

விரிந்த படைவீந்த மெய்கண்ட பொய்யாய்
எரிந்தகடைட் யான்சினத்தை யேற்றான் அரிந்தமன்றன்
மேனிதனிற் காய்கணையை வேய்ந்தான் கலங்கினர்
வானதனிற் றேயமரர் மற்று. (90)

ஆர்த்திகொண்டு நின்றான் அசுரப் படையமரர்
சீர்த்திகொண்டு கின்ற தெரிந்துவிட்டான் மூர்த்திகொண்ட
இந்திரனுங் கண்ணிமைக்க வேற்றவுல கம்நடுங்க
வந்ததுவாங் கொந்தழலின் வாய்ந்து. (91)

ஆசுரமென் னும்படையா மன்னளிற் றேவர்களை
ஏசுறமென் றெவ்வுலகு மேற்றுவென்ற பூசுரர்க்கு
நல்லிருக்காம் வேந்தை நலிய வெனவிட்டான்
வல்லரக்கன் றேர்ந்து மதித்து. (92)

றங்கு முலகை நொடிவரையி னுமென்ன
யெங்கு மூலையவைய ரேங்கினர் அங்கி
நெடும்படையிற் றீர்த்தான் நிகரில்லா வள்ளல்
அடும்படையை யக்கணத்தி னுய்ந்து. (93)

கூற்றுக்கும் கூற்றாங் கொடுங்கடலெ லாங்குடிப்ப
மாற்றுப்பொன் மேரு வரைபொடிப்ப காற்றைப்பின்
சென்றிறலாச் செய்யுந் திறத்த கணைகோடி
வன்றிறலான் விட்டான் மறித்து. (94)

Koviloor Digital Library

என்ன கடுப்பென்பா ரேற்றவில்லை மாயமென்பார்
அன்னகணைக் காமிடமு மற்றதென்பார் முன்னமிவ
னித்தனைபோ ரெத்திறத்து மேற்ற தில்லையென்பார்
சித்தனையுந் தேவர் தெரிந்து. (95)

மறையுடைத்தாம் நாயகன்றான் வானை மறைத்த
சிறையுடைத்தாம் வாளியிமை தீரப் பிறைமுகத்துப்
பாணத்தாற் றீர்த்தான் பரமன் கருணைதனைச்
சேணுற்றார் பார்த்தார் சிறந்து. (96)

அயன்படைத்த வண்டத் தருந்தவத்தா மாற்றல்
பயன்படைத்த யாவரினும் பல்போர் நயம்படைத்தான்
நாடிமயன் றன்படையை நாட்டித் தொடுத்துவிட்டான்
கூடிமையோர் கண்டார் குலைந்து. (97)

விட்டான் விடுபடையால் வேறோடு மீதுலகும்
கட்டா னெனவமரர் காந்தினார் கெட்டோ
மெனவா னரத்தலைவ ரேங்கினா ரின்ன
கனவா னறிந்தான் கடுத்து. (98)

பாந்தள் முடியிற் பரவுந் தலைக்கணுற்ற
மாந்தற்கு வாழ்விலையாய் வந்ததனைக் காந்தர்ப்ப
மென்னுங் கணையி னெரித்தானி ராமனவன்
மன்னுங் கணையை மதித்து. (99)

தாருகன்முன் தேவா தமைக்குமைத்த தாந்தனிமா
மேருகந்த ரம்புனையு மேன்மையதா மோருந்
தரத்தன்ற தாமமரர் தன்வலியைத் தீர்த்த
வரத்தண்டை விட்டான் வரைந்து. (100)

பண்டுகண்ட தாம்பிரமன் பன்னுங் கனகன்பார்
தொண்டுகொண்ட தாமதமுன் தொட்டதுதான் உண்டதனல்
அந்தரம்பற் றென்ன அடர்ப்ப னெனவிடுத்தான்
கந்தரம்பத் தில்லான் கனன்று. (101)

Koviloor Digital Library

கண்டலமா வாழ்கமலக் கண்ணன் கதையதுதான்
மண்டலமா மோதி வருமென்று புண்டரிக
மொட்டன்ன வாளியினுல் மோதுண்டை நூருக
அட்டன்ன செய்தா னறிந்து. (102).

சேயையன்ன வீரன் சிலைவலியைக் கண்டடர்த்தான்
பேயையன்ன வாளிகளாற் பேரென்ன மாயைப்
படைதொடுப்பே னென்று பரிந்தா னெரிந்த
கடைதொடுப்பான் செய்கையரக் கன். (103).

பூசனைக்காஞ் செய்கை புரிந்து முறைமையினுல்
ஈசனைத்தான் கன்மனதி னெண்ணியே ஆசைபத்தும்
அந்தரம்பற் றுனதென வார்த்தா னதிர்த்துவிட்டான்
கந்தரம்பத்தானுன் கனன்று. (104).

மாயைமுற்றும் வாய்க்கும் வயப்படையை விட்டிடலும்
காயமுற்ற வெல்லாங் கருத்துறவாய் நேயமுற்று
வந்தடைந்தார் முன்பமரில் மாண்ட வரரெல்லாம்
கொந்தடைந்த கோபமுற்றக் கொண்டு. (105).

இந்திரசித் தன்வலியி னேற்ற வவர்க்கிளையோர்
தந்திரத்த ராந்தலைவர் தாரமைச்ச ரந்தரத்தை
வந்து மறைத்தார் மழையிரிய வார்த்தடுத்தார்
சிந்து மறைத்தரய்ச் செறிந்து. (106).

குடச்செவிய ஞதி குலவிவரு வீரம்
படைத்துவரு மேனைப் பகைவர் விடைத்தெழுந்த
யானைபரித் தேரினெடு மான களத்தடுத்தார்
வானைமறைத் தாக வளைத்து. (107).

ஆசில்லா வெள்ளமென வான்றோ ரறைந்தபடி
காசில்லாப் பட்டபடை காணவே ஏசில்லார்
பெற்ற வரத்தாற் பெரிதடுத்த வென்றுவைம்
முற்றவரச் சுற்று மூரன்று. (108).

Koviloor Digital Library

சென்றடுத்தா ரெங்கினுமாய்த் தேவர் முனிவர்சிந்த
வென்றடுத்த வெங்களையோ வென்றடுத்தீர் நன்றடுத்துக்
காட்டுதுமின் றென்னக் கடுத்துநின்ற கொற்றவர்கள்
வாட்டுதுமின் றென்றார் வரைந்து. (109)

பாரிடங்க ளாகப் பறந்து வருதிறலார்
பாரிடங்கொள் ளாது பரவிவரக் காரிடங்கொள்
மின்போற் படையுடையார் வீசுகரத் தாரடுத்தார்
என்போற் படையரெவ ரென்று. (110)

இனையமுற்றுங் கண்ட விராமன் சிறந்த
வினையமுற்ற மாய விதியோ வனைகழலார்
பேரரக்கர் தம்வரத்தின் பெற்றியோ சொல்லென்றான்
சீரிரிக்கு மாதலியைத் தேர்ந்து. (111)

கொல்லத் தெருவினிடை கூரூசி வித்ததென
வல்லரக்கன் செய்த வழக்காகும் நல்லார்
கருப்புக்கா வண்ணமருள் கண்ணவிவை யென்றான்
செருப்புக்கான் செய்கை தெரிந்து. (112)

வீக்குவா யிம்மாயம் வெவ்வரக்க னும்விடத்தை
மாய்க்குவாய் வானவரை வாழ்விப்பாய் தீய்க்கும்வினை
நின்பெயரை யோதி னினைக்காது போமென்றால்
வன்பெயரு மாயையென்னை மற்று. (113)

வரத்துற்ற தென்றிடினு மாயவலி மேலும்
உரத்துற்ற தென்டினு மோடத் தூரத்தியென
ஞானக் கணைதொடுத்தான் ஞானத் தவரிதயத்
தானக் கணக்கையறிந் தான். (114)

ஞானத்தாம் பாணந்தான் நண்ணி வருமாயம்
தானத்தாம் ஞானத்தைஞ் ஞானந்தான் போனதெனக்
கண்டான தனைக் கருத்திற் பெருமயக்கம்
கொண்டா னிதனைக் குறித்து. (115)

Koviloor Digital Library

நீலங்கொள் கண்டனடு நெற்றியங்கி யுற்றகண்ணன்
காலங்கொள் மூலக் கடவுடந்த சூலம்
தனைக்கொண்டான் வெற்றி தனக்கென்று மண்டும்
மனக்கொண்டான் வீணன் மருண்டு. (116)

கண்டா குலமுற்றுக் காதுந் தொழிலுடைத்துக்
கண்டா குலந்தேவர் கண்டுநின்று அண்டாத்
தனஞ்சயனை யாக்குந் தகைமைதனைக் கண்டு
மனஞ்சலியார் யார்தான் மருண்டு. (117)

எரிநிற்கு மூன்றுதலை யேற்ற செயல்செய்
யெரிநிற்கு மென்ன விசைக்க விரிவுற்ற
எவ்வுலகு மஞ்ச விரித்து வருமென்றால்
இவ்வுலகர் செய்வ தெனைத்து. (118)

செல்வா யெனவிடுத்தான் தீர்த்தற்கு வாய்த்தசெயல்
ஒல்வாய்நீ வேறொருவர்க் கொண்ணுதாம் வல்வாய
சூலமெனுங் காலத் தமிப்பா யெனத்துதித்தார்
ஓலமென வானோ ரொலித்து. (119)

வேகத்தாய் செல்வாய் விரைந்து வருமதனை
மாகத்தார் காண மடியவென வேகத்தான்
விட்டகணை ஞானியர்மேல் மெல்லியர்தம் பார்வையென
கட்டமுற வாகும் நலிந்து. (120)

எய்யெனவாந் தேவருடை யேற்ற படையெல்லாம்
பொய்யெனவாய்ச் சிந்தப் புவிதந்தான் செய்யனவாம்
சாபத்தை யொத்துவரு தன்மைகண்டு தான்பரமாய்த்
தீபத்தை யொத்தான் றெரிந்து. (121)

மறந்தாகாச் செய்கை மறந்ததென மேலோர்
சிறந்தாகாத் துன்பநிலை சேர்ந்தார் அறந்தானும்
எஞ்சிநின்ற வீரன் எடுத்தபர மாகி நின்றான்
அஞ்சிநின்றார் தேவ ரயிர்த்து. (122)

Koviloor Digital Library

சங்காரத் தாங்கண்டை சாரத் தழல்சிந்தப்
பொங்காரத் தாமார்பிற் புக்கவர வுங்காரம்
பண்ணப் பொடியாப் பருவலிகொள் சூலவரம்
சுண்ணப் பொடியாய்த் தொகும். (123)

ஆர்ப்பார்க ளச்சமற்றார் ஆனு வலர்மாரி
தூர்ப்பார்கள் துள்ளித் தொழநின்றார் தீர்ப்பாயநீ
தீமையெனச் சொற்றார் சிறந்த வரவானோர்
வாய்மையினைச் சிந்தை மதித்து. (124)

வென்றேனென் றுள்ளம் வியந்தான் விடுசூலம்
பொன்றாத போகாப் பொருள்கொண்டான் ஒன்றாத
உங்காரத் துக்க வுவந்தான் விபீடணன்சொல்
சிங்காது சிந்தைகொண்டான் தேர்ந்து. (125)

சிவனோ வரனோ திருமாலோ வல்லன்
அவனோ வரனேவ வார்த்தான் தவனோதான்
செய்துமுத லாகுந் திறமேது வேதமுடி
யெய்துமுத லென்றா னெடுத்து. (126)

யாரேனு மென்னை யடுமென் தனியாண்மை
பேரேனும் வன்மை பெறற்கென்னும் நேரேயாய்
நின்றால் விளியும் நிலைவரினும் போர்தவிலேன்
என்றான் மனத்தி னிசைந்து. (127)

நிருதித் திசையான் நிகர்படையை நெஞ்சிற்
கருதித்தன் கைவந்த காலன் விருதிற்காம்
வில்விற் றொடுத்துவிட்டான் வீரத் திறலுடையான்
செல்லிற் சிறந்து தெழித்து. (128)

வையமது அஞ்ச வலநாகம் நெஞ்சுதுஞ்ச
அய்ய நிலையோ டளவில்லா மெய்வாயும்
பெற்றனவா மேருப் பெருங்கிரியுஞ் சீரிதென
உற்றனவாந் தன்மை யுடைத்து. (129)

Koviloor Digital Library

வாய்வாய்க டோரு மடங்கா விடவாரி
போய்வரர்தீக் கண்ணிற் பொழிகின்ற மீவாய்ந்து
வெள்ளிடையில் லாது விழைந்து வருபேயின்
கொள்ளிடமே யெங்கினுமா கும். (130)

கடித்துவரு ஞாலம் கடனதனி னேடு
குடித்துவரு மென்றுலகு குன்ற முடித்தரக்கன்
தீர்த்தான் முழுதுமெனத் தேவர்சிந்தை நொந்திரிந்தார்
ஆர்த்தா னரக்க னறிந்து. (131)

அவ்வா ரரவ மகல்வாய் களிறுலே
கவ்வாத முற்றுவரை காண்பதெங்கே எவ்வாயும்
வெய்யபட யெய்தான் விரிகா ருடமென்னும்
செய்யபடை தன்னைச் செறுத்து. (132)

விட்டடர்த்த பாணமதின் வீரக் கருடர்களாய்
மட்டெடுத்த லின்றி வரைந்தெங்கும் தொட்டெடுத்த
துண்டத்தாம் வாளாற் றுலங்க வருமுகிரிற்
கண்டத்தாய்ச் செய்த கடுத்து. (133)

எவ்வகைய தாமுரக மெங்கு மிரிந்தனவாய்
அவ்வகைய தாமொன் றறியாமல் செவ்வகைய
ஈச னணியரவு மேற்றகவ்வை யென்றுரைக்கின்
பேசுவதென் வேறு பிரித்து. (134)

ஆயிடையின் வல்லரக்கன் ஆய்ந்தழலு நெஞ்சுடையான்
தீயிடையாம் வல்லுயிர்ப்பன் சீற்றத்தான் மாயிருவாம்
ஞாலம் விசும்புவைப்பும் நண்ணக் கணைதொடுத்தான்
ஆலம் வெருவ வடர்த்து. (135)

அங்கணைய வாங்கணைக ளான்ற வயிலினுற
வெங்கணைக ளால்விசையின் வீழ்ந்தனவாம் புங்கம்
தலைவரையிற் றோன்றாது சார்மார்பிற் பட்டு
நிலையழியச் செய்த நிரந்து. (136)

Koviloor Digital Library

ஒக்கநின்று போர்தா னுழக்கி வருகாலை
முக்கணன்றன் மால்வரைத்தோண் மொய்ம்பற்கு நெக்கன [வாம்
விஞ்சைநிலை தீர்ந்து விசைய னிராமற்கு
விஞ்சுநிலை சார்ந்த விரைந்து. (137)

வேதியர்வே தத்துமெய்யன் வெய்யவர்கள் வெய்யதொழிற்
காதியற்கு வந்த தறிந்தடுத்தான் மோதி
நிமிர்ந்ததலை தள்ளினன் நேர்பகழி தன்னால்
திமிர்ந்தபுயத் தண்ணல் தெரிந்து. (138)

மேரு முடியதுதான் வீசிவரு காலெரியப்
போரிடையாய்ப் போய்ப்புணரி புக்கதென வாரியன்றன்
பாணம் படவரக்கன் பண்ணுதலை நீர்வீழ்ந்த
காணுந்தி யோடு கனன்று. (139)

குதித்தார்கள் பாரடுத்துக் குன்று பிளக்க
மிதித்தார்கள் தூசெடுத்து வீசித் துதித்தார்கள்
பாடினா ராடிப் பணிந்துசுரர் வள்ளலடி
சூடினா ரோடிச் சுழன்று. (140)

இறந்த வுயிர்தருமத் தீட்டி னடுத்துப்
பிறந்த தெனைத்தலைதான் பேர்த்தும் மறந்திலதாய்
வந்தெழுந்த வாய்மடித்து வாழுந் தவமதனால்
பந்தெழுந்த தென்னப் பரிந்து. (141)

கொய்தசிரங் கொய்திலவாங் கொள்கையது கொண்டடுத்தங்
கெய்த சினத்தி னிகழ்ந்தேதத்துச் செய்தசினத்
துற்றவரு செல்வனைக்கண் டோங்கிப் பழித்ததுதான்
அற்றவரு செய்கை யறிந்து. (142)

இடந்த கிரிக்குவடா மென்னவடுத் தெங்கும்
படர்ந்த கடல்பருகு பண்பாய் விடந்தந்த
கண்ணுதுவாய் வேலைக் கனமாக வார்த்ததுவாம்
வண்ணத் தலையு மதித்து. (143)

Koviloor Digital Library

விழுத்தினன்கம் மெங்கும் வெகுளியது மீக்கொண்
டழுத்தினன்றோன் தன்னி லடலே வழுத்து
முயிர்க்குயிரா நாத னுபனிடத்தாஞ் செல்வன்
அயிர்க்குனர்கள் சிந்தையறி யான். (144)

தலையற்றா லாகுந் தவமுற்ற தென்று
சிலையுற்ற கையைச் சிதைத்துக் கலையுற்ற
திங்களெனச் சேர்த்தான் றிருமா தவனுகும்
பொங்களிசேர் தாரார் புயன். (145)

கொற்றச் சரத்தாற் குறைத்து வருகையைப்
பற்றிக் கிடந்தசிலை பாங்குறவே மற்றும்
பிடித்தொருகை வந்த பிறங்குந் தவத்தாற்
தடித்தொருகை சார்ந்ததெனத் தான். (146)

பொன்கையிற் றார்தியான் போர்வலியைப் போக்குவான்
மின்கையிற் கொண்டவில்லை விட்டிலவாம் வன்கையைத்
தன்கையின் வாங்கினன் சாய்ந்தா ரமரரெலாம்
கொன்கையான் செய்கை குறித்து. (147)

விளங்கொளிய வாளரக்கன் வீசி யதனுல்
தளங்கிளருங் கைமார்பிற் றாக்க வுளம்பெரியான்
மிக்கவலி மாதலிதான் மேலான வாய்வழியே
கக்கவருஞ் சோரி கனன்று. (148)

மாமரத்தார் கையால் வருந்துவான் றன்னையொரு
தோமரத்தாற் கொல்லவெனத் தூண்டினன் காமரத்தால்
வேள்வாங்கு வில்வீரம் வீணுக்கு மேலோன்கை
வாள்வாங்கு வீரன் மதித்து. (149)

மாண்டதுவா மின்றோடு மாதலிதன் வாழ்வென்ன
மூண்டபடை சிந்த முடுக்கினன் ஆண்டவில்லி
அய்முகத்தாம் பாணத்தா லந்திலடு தோமரத்தை
நொய்முகத்தாச் செய்தானுவன்று. (150)

Koviloor Digital Library

ஒய்வகன்ற தாக வொருதலைதா னூறறவே
போயகன்ற மானப் பொருகணைதான் ஆயிரமாத்
தொட்டா னருட்கடலான் தோன்றல் கரக்கடுமை
ஒட்டா னறிய வுருத்து. (151).

நீர்த்தரங்கந் தோறும் நெடிய நிலந்தோறும்
சீர்த்தவரை தோறும் திசைமுழுதும் யாத்த
விடமெங்கும் பல்தலைகள் ஏற்றசனி யென்ன
மடமொன்றி வீழ மறிந்து. (152).

தகர்ந்து வரைபோகத் தாக்கினவை யாகி
மிகுந்தவரை வான்மீன் விழத்தான் புகுந்த
மகர வரையிரிய மாகடலின் வீழ்ந்து
பகரவரு நீர்குடிக்கும் பாங்கு. (153).

பொழுதடுத்து நீட்டவந்த புண்ணியம்போம் பின்னர்
பழுதடுக்கு மாமற்றைப் பண்பு தொழுதடுத்துச்
சூழ்வனமுன் னின்று துதிக்குங் கழுதுகளும்
தாழ்வனமுன் கண்கள் தமில். (154).

வாளினொடு வேலுலக்கை வச்சிரத்த தண்டினொடு
கோளினொடு தாக்குமழுக் கூட்டமுடன் தோளாகும்
பத்திகடோ ருஞ்சுமந்த பாங்காம் படைகடமை
நத்தியுற மாவிசி னன். (155).

அனைய வகை யாக வாண்டகையாம் வீரன்
வினைய மினியாது வெல்லும் நினைவாய்
அரக்கனவன் மேனி யனைத்தும் புனைவன்
கரக்கவென விட்டான் கணை. (156).

மஞ்சரங்கு நெஞ்சினொடு மாமலையாந் தோள்களுந்தான்
நஞ்சரங்கு கண்ணினொடு நாவுடனும் வஞ்சன்
உடம்புருவப் பஞ்சரமா யுற்றுவரு வாளி
இடம்பரவச் செய்தா னெடுத்து. (157).

Koviloor Digital Library

வாய்நிறைந்த கண்கள் மறைந்த சிறந்தவா
மீய்நிறங்க ளெங்கு மிடைந்தனவாம் வேய்நிறைந்த
அண்டப் புறத்தி னகலாக் கணைமழையே
விண்டப் புறத்தின் மிகும். (158)

மயிர்க்கால்கள் தோறும் வளைத்தகணை மாரி
உயிர்க்கானி செய்தருவி யோடச் செயிர்க்காகும்
சீற்றஞ் சிதையத் திறலுஞ் சிதைவுபட
மாற்றஞ் சிதைந்தான் மருண்டு. (159)

வாரிநீ ரென்ன வளைத்து வருபெரிய
சோரிநீ ராலுணர்வு சோர்ந்தனனுத் தேரில்
இருந்தான் முன்தேவ ரிணையூரி னெங்கும்
வருந்தாப் பவனிவந்த வன். (160)

ஆர்த்துவரு மும்ப ரளவின்றி யாடினர்
வேர்த்துவரு தீவினையும் வேர்பரிந்த போர்த்தவுயிர்
பொய்த்தனனென் றுன்னிப் புனைவலத்த சாரதியும்
வைத்தனன்பின் தேரை மறித்து. (161)

கைதுறந்த தாம்படையன் கண்ணகன்ற வண்ணமுறு
மெய்துறந்த வெற்றுணர்வின் வீழ்தலுந்தான் எய்திறத்தை
நீங்கினு னையன் நிகரி லிமையோரைத்
தாங்கினுன் செய்யவறத் தான். (162)

தேறுற்ற பின்னைச் செயற்கரிய போர்புரியும்
ஊறுற்ற வின்னே யுயர்தவனை நூறுற்றும்
என்றுரைத்தான் மாதலியு மேற்றமுற்ற சேவகன்தான்
நன்றுரைத்தான் செய்கை நயந்து. (163)

படைபோய் மயங்கும் பலமுடையான் றன்னை
இடைநூறி னீதி யிகலும் நடைபோய்
உயிர்கோட லன்மை யுளதோ விகுத்த
செயிர்கோட லென்றான் சிரித்து. (164)

Koviloor Digital Library

கூவிரஞ்சேர் பொற்கொடிய கொற்றமிக்க தேரோடு
போவாஞ்சி ஞரன்ன போழ்தின்கண் ஏவாஞ்சி
யஞ்சலிசெய் யாதா ரமராஞ்ச வல்லரக்கன்
துஞ்சலிலான் வந்தான் றொடர்ந்து. (165)

உறக்கமது நீங்கி யுணர்ச்சியுற்றா னென்ன
மறக்கண்ணன் காணவிரா மன்றான் சிறக்கநின்ற
தேரதுமுன் கானான் திறத்தடுத்த சீற்றத்தான்
சாரதியைச் சீறும் தகைந்து. (166)

தேரைத் திரித்தனையாற் தேவர் திறளரிய
வீரத் திறலாற்கு வெண்ணகைதான் பேரப்
பிழைத்தா யெனச்சீறிப் பேசினான் வீரம்
தழைத்தான கோபத் தவன். (167)

தஞ்சநா னுன்னைத் தளராது தேற்றவினால்
வஞ்சனீ செல்வத்து வைகினையால் அஞ்சினான்
என்றவுரை தந்தா யினியுன் னுயிர்க்கிறுதி
யொன்றவரு மென்றா னுருத்து. (168)

வாளைக் கணித்து வழங்க நினைத்தவுடன்
தாளைக் கணித்துத் தலைதாழ்த்து மூளும்
முனிவொழிதி யென்செயலை முற்றுவித்தே னென்றான்
நனியொழியாத் தேர்நடத்தி னான். (169)

ஆண்டொழிலி னுந்துணிவை யாய்ந்திலையா லாண்டிறைநீ
ஈண்டொழியின் மாண்டதுவா மென்றடுத்து மீண்டிடரை
மாற்றுவே னென்ன வரைந்து திரும்பியதும்
சாற்றுவே னென்றே ழிலாந் தான். (170)

ஒய்வூற்ற நோக்கி யுயிர்ப்பொறைக்கு வந்தடுத்த
சாய்வாற்றல் சாரதிக்காந் தன்மைத்தே மாய்வாற்றல்
நிச்சயமாம் வாளதனால் நீகாய்த நேர்மையன்றால்
அச்சமிலா யென்றா னடுத்து. (171)

Koviloor Digital Library

என்றிறைஞ்ச வெண்ணி யிசைந்தா னிரங்கினுன்
வென்றிவஞ்சன் தேரை விடவென்ருன் சென்றெதிர்த்த
தேருடனுந் தேரும் சிறந்த விராமனைக்கண்
ணேருடனே நின்ரு னினைந்து. (172)

கூற்றடுத்த வெய்யகணை கோடிக்கு மேலெடுத்துத்
தூற்றடுத்து முன்வலிமேற் ருேன்றினுன் வேற்ருேர்
அரக்கனென வாண்மையுட னுற்றினு னும்போர்
காக்கநின்ருர் தேவர் கலந்து. (173)

எல்லுண்டா மென்னி லிருக்கும் நெருப்பென்ற
சொல்லுண்டா மென்னத் தொடுத்தடுத்த வில்லுண்டா
மென்னிற் றெறுதற் கியைந்த கணைபொழிந்தான்
தன்னிற் றெருளை யறிந் தான். (174)

நாரணன்கை யத்திரமாய் நாடி நயப்புற்றுப்
பாரணங்கைத் தாங்கும் படையதனுல் வாரணங்கள்
தம்மைவென்ருன் வார்சிலையைத் தானிருதுண் டாக்கினுன்
மும்மைகொண்ட வீரன் முனிந்து. (175)

அயன்படைத்த சேமவில்லை யாயிரம்பே ரண்ணல்
வியன்படைத்த வத்திரத்தின் வீழ்த்த வுயர்ந்து
குதித்தனர்க ளும்பர் குறிக்கும் பயனை
மதித்தனர்கள் சிந்தை மகிழ்ந்து. (176)

மாறியுடன் மாறி வரிசிலைகள் வாங்கினுன்
நூறியுட னுயிரந்தா னூறவே வேறு
திசைபொறித்த வெங்கணைகள் தேற்றமுடன் வீசி
விசைபறித்து வெட்டினுன் வேந்து. (177)

இருப்புலக்கை வேல்தண்டோ டிட்டிகோ லென்னச்
செருப்புலக்கும் கப்பணங்கள் சோத் திருப்புலக்க
வுய்த்தானென் டிக்கானை யோங்கு மருப்பதனை
வைத்தானென் மார்பன் மருண்டு. (178)

Koviloor Digital Library

அவையனைத்துந் தீர வறுத்தான் றிசையிற்
குவையனைத்து மேறக குவித்தா னிவையனைத்தும்
வெல்லாவென் றெண்ணி வியந்தான் வியனந்த
வில்லான் மனதின் விதித்து. (179)

நாரத்தா நாதனுந்தி நாடிவரு நான்முகன்றன்
பாரத்தாம் பாணமதைப் பாதகன்றன் மாரிதெய்வ
னென்றெண்ணு நல்லுலக மேற்ற நலமடைய
மன்றெண்ணும் வீரன் மதித்து. (180)

மூர்தியுல கீன்ற முதற்பெயரி நன்மைகொண்ட
அந்தணன்ற னத்திரத்தை யர்ச்சித்தான் சுந்தரஞ்சேர்
வின்னாணிற் பூட்டி விரைந்து விடனினைந்தான்
மன்னனை வீரன் மகிழ்ந்து. (181)

புரஞ்சுடற்குப் பண்டு புரிந்த பணைத்த
மரந்துளைத்து வாலியுர மாற்றித் தரஞ்சுடரா
நெஞ்சரக்க னேருரத்தை நீக்கும் நிகரில்லாச்
செஞ்சரத்தை விட்டான் றெரித்து. (182)

காலார் கனலுங் கடையடுத்துக் காணாது
மாலார் வடிக்கணைதான் மாமுகங்க ளாலாகக்
கொண்டு நடந்த குறிக்குமயன் மந்திரத்தைப்
பண்டு நடத்தப் பரிந்து. (183)

அக்காரத்தி னருகு மயன்படையு மாண்டகைதன்
சக்கரத்தி னருகுந் தகையுடைத்தாய்ப் புக்கதுவாம்
அக்கொடியோன் மார்பை யடர்த்துப் பிளந்தளந்த
திக்கொடிய நின்று செறுத்து. (184)

முக்கோடி நாளு முயன்ற தவமுதன்மை
எக்கோடி யாரும்வெலா வேற்றமுடன் திக்கோ
டுலகனைத்தும் வென்று முயிர்பருகிச் சென்ற
திலகனுய்த்த பாணந் தெரிந்து. (185)

Koviloor Digital Library

ஆர்க்கின்ற வானவரு மந்தணர்சொல் லாசியுடன்
தூர்க்கின்ற பூமழையாற் றேயமுற்றுக் கார்க்குன்
றனையான் கணைப்புட்டி லண்டி யடுத்த
வினையானை வென்று விளைந்து. (186)

கார்மழையி னின்றுருமு கான்றவெனத் தோணின்று
தார்மணிகள் சேரத் தகரவே போரார்
விழியுடைய தீயான் வியன்றேரி னின்றும்
பழியுடையான் வீழ்ந்தான் படி. (187)

வெம்மடங்கல் கொண்டசினம் வீய வினைவீயத்
தெம்மடங்கக் கொண்ட செயலடங்கத் தம்மடங்கு
முன்னோர் செயலடங்க மோதிவரு நாடம்மின்
அன்னான் முகம் பொலிந்த வாம். (188)

பூதலத்த தாக்கு பொலன்றேரை யென்றவுடன்
மாதலிப்பே ரான்கடவ மண்டலத்தாய் மீதலைத்த
தாரை விசும்பளப்பத் தான்கிடந்தான் மேனிமுற்றும்
வீரைவண்ணன் கண்டான் வியந்து. (189)

தேரைக்கொண் டார்விசும்பிற் செல்ல விடுத்தபின்னர்
பாரிற் படைத்தலைவர் பாங்குவரப் போரிற்
புறம்பார்த்த வீரன் பொருதி விழுந்த
திறம்பார்த்தான் சீமான் சிறந்து. (190)

செல்வப் பொதுநிலையின் சீரெடுத்துப் பேசுவதென்
மல்வைத்த தோளுடையான் வாழ்வென்னை வல்ல
மலைமேனின் றுடுமென வானரங்க ளேறித்
தலைமேனின் றுடுமெனிற் றுன். (191)

அன்னான் மணிமார்பி னுந்திசையா னைக்கொம்பு
கொன்னா ரனுமன்கைக் குத்தினாற் பின்னான
செய்கை யதனாற் செறிந்த வடுவதனை
அய்ய னறிந்தா னளந்து. (192)

Koviloor Digital Library

மங்கை பொருட்டால் வளர்ந்து வருசீற்றம்
பொங்குருவிற் புண்ணும் புறங்கண்டான் துங்க
மலர்க்கண்ணு னெந்தை வளர்புன் முறுவல்
அலக்கண்ணுஞ் சிந்தை யடுத்து. (193)

வென்றியுடன் மூவுலகு மெய்மையுடன் மேவினுந்தான்
பொன்றியுறு தோளைப் பொதுநோக்கிற் குன்றிமிக
வாசுற்ற வீர மனையான் புறத்தழும்பாற்
தேசுற்ற தென்னையென்றான் றேர்ந்து. (194)

கார்த்தவா வீரியனுற் கட்டுண்டான் முன்னமென
வார்த்தைவரச் கேட்ட மனத்தேற்குப் போர்த்தலையிற்
பின்காட்டு புண்ணின் பெருந்தழும்புங் கண்டவெற்றி
என்காட்டு மென்று னிகழ்ந்து. (195)

மாண்டொழிந்தும் பேருலகின் வாழு மிசைநிலைக்கப்
பூண்டிருத்தல் வீரர் புகழாகும் வேண்டிவரு
போரிற் புறமுற்ற புன்றொழிலாற் பெற்றவென்றி
சீரிற் புறமென்றான் றேர்ந்து. (196)

அவ்வுரையைக் கேட்ட வருவிக்கண் வீடணன்றான்
வெவ்வுயிர்ப்பி னீண்டு வெதும்புவான் செவ்வி
தொடர்ந்தசெயல் செப்பலையாற் றூயவென முன்னம்
நடந்தசெயல் சொல்வான் நலிந்து. (197)

ஆயிரமாந் தோள னடல்வாலி தாமடுத்து
மேயினவாம் வென்றிவிண்ணோர் வெஞ்சாபம் தாயினல்லால்
மேற்றந்தாங் காதலினால் வீர னினக்கடுத்த
சீற்றந்தான் சாதலென்றான் தேர்ந்து. (198)

நாடுளதா மோடியடு நண்ணலரைக் காணுது
பீடுளதாங் குன்றமெனப் பேர்யானைக் கோடுளது
கவ்விப் புறம்போய்க் கடுத்த தழும்பன்றித்
தெவ்வர் படையென் செயும். (199)

Koviloor Digital Library

அப்பணைதான் மார்புக் கணியாக்கும் வீரவரன்
கைப்பணைசேர் போரினடு காலனவன் றுப்பணையும்
வாளிக்கு மேற்றமிக்க வன்கால்சேய் குத்தாகும்
கோளிற்கும் போனதென் றான் கூர்ந்து. (200)

அவ்வடுவே யன்றி யடலண்டத் தப்புறத்துந்
தெவ்வடுபோர் செய்வதெனை சீரிலனை வெவ்விடந்தான்
ஈசனையுற் றாலு மிவனை யொருபடையும்
ஏசினவை செய்வ தெனைத்து. (201)

வென்றியாய் வேறென்னும் வேலைசூழ் ஞாலமுண்ட
பன்றியாய்க் கொன்ற பான்முதலோர் என்றிடுக்கண்
தீர்வலியா மென்பாருன் செய்யவலி தீர்த்ததன்றி
யார்வலியா மென்றா னறிந்து. (202)

அன்னதோ வென்னு வமலனக நாணிங்கித்
தன்னதோ ளேக்கித் தகவன்றா லென்னதோ
மாண்டா ரிடைவயிரம் வைத்தலெனை நற்கருமம்
பூண்டாள வென்றான் பொருந்து. (203)

அவ்வகைதான் சொற்றவள்ள லான்ற வுலகரொடும்
எவ்வகையு நன்மை யிசைந்தடுக்கக் கவ்வையது
தீர்ந்தார்கள் வாழுஞ் செயலடுத்துக் காண்பதற்குச்
சார்ந்தான் கருணைமனத் தான். (204)

தாழ்ந்தவனும் வல்லரக்கன் தன்செயலை மாற்றவல்லை
வாழ்ந்தவனி யின்றேன் வரன்முறையை யாழ்ந்த
கருணையுற் றுச் செய்யவெனுங் கண்ணனுரை கேட்டான்
மரணமுற்றான் மேல்வீழ்ந்தான் வந்து. (205)

ஓவரிய பூவுலகி னுற்றவர்கள் பற்றடுக்கத்
தேவரியல் மாமுனிவர் சிந்தைசெயத் தாவரிய
அற்புதத்தா னல்லறிவி னாற்றலினு லேற்றமுளான்
பொற்புறத்தா னின்றரற்றும் போர்ந்து. (206)

Koviloor Digital Library

உண்ணா துயிர்கண்ணு மோர்நஞ்சாஞ் சானகியைக்
கண்ணாலே நோக்கக் களம்பட்டா யெண்ணாதேன்
எண்ணியசொ லின்றினித்தா னேற்றவோ வாற்றலுடை
யண்ணாவோ வென்றாற்று மாய்ந்து. (207)

ஓராசை போற்று முலகுக் கொருதாய்மேற்
பேராசை மாற்றவென்றேன் பெற்றிலையே பேராசைப்
பட்டெழுந்த சேனையெலாம் பாறப் படுத்தனையே
மட்டெழுந்த தாராய் மருண்டு. (208)

அன்றெரியாம் வேதவதி யன்னை யிவளென்றேன்
குன்றறியுந் தோளாய் குறித்திலையாய்ப் பொன்றினையே
வள்ளலிரா மன்புகழை வாழ்த்தறிந்து சென்றனையேல்
எள்ளலிரா தென்றா னெடுத்து. (209)

மன்றலணி மாமலரான் மாமுளரிக் கண்ணுடையான்
அன்றளித்த நல்வரங்க ளானதென்னை இன்றளித்தல்
தேர்ந்தனையோ வீரன் றிருமா லெனுந்தாரத்தைச்
சார்ந்தனைய னூடணன்றென் றான். (210)

வீரநா டுற்றாயோ மேற்பரம னாட்டினையோ
பேரா டுங்கயிலை பெற்றனையோ ஆரா
உன்னுயிரை யஞ்சா துறுத்த நமன்கொள்ளான
மன்னுயிரைப் போல மதித்து. (211)

கொல்லாத மைத்துனனைக் கொன்றா யெனக்கடுத்துப்
பொல்லாத நீலிபழி பூண்டனளே நல்லாரும்
தீயவரே யாமுனக்குச் சேரிடத்தி னென்செய்வாய்
தூயவரைச் சேராய் துணிந்து. (212)

*பார்மான் கலைமான் புகழ்மான் தழுவியகை
சீர்மாயு மென்றாகற்பிற் றேர்மானை நோய்த்
தழுவகினைந் தாருயிரைத் தந்தபித்தா கிற்கின்
றழுவதெனை யென்றான் அறிந்து. (213)

Koviloor Digital Library

என்றேங்கு வானை யெடுத்தணைத்துச் சாம்பவனும்
குன்றேங்கு தோளான் குறித்துரைத்தான் அன்றே
அறிந்தா ளரக்கனிலை யன்னான்றன் தேவி
மறிந்தாளாய்ச் சிந்தை மதித்து. (214)

அனந்தனு ராயிரத்தி னமரக்கி மார்கள்
புனைந்த குழல்விரித்த பூசல் இனந்தொடர்ந்து
நோவரச் சென்றாள் நினைந்த மறந்தசெயல்
சேரவா நெஞ்சான் திகைத்து, (215)

இரக்கந் தரும மெடுத்த வுயிர்தான்
புரக்குங் குலத்துவந்து பூண்ட பரக்கழியா
மென்னவரும் தீதை யெடுத்த வரக்கியர்கள்
யன்னவரு மோதை பரந்து. (216)

நூபுரங்க ளேங்க நுவலுஞ் சிலம்பலம்பக்
கோபுரங்க ளேறிக் குடிலத்தார் மாபுரந்தான்
வீணடுக்க விண்ணின விரைந்துலது போவர்சிலர்
மாணடுக்குந் தேவரம்பை மார். (217)

அழைப்பொலியி னுழுழக்க மாகவணி மின்னின்
குழைப்பொலிவாம் நல்லணிகள் கோல வுழைப்பொலிவுண்
கண்ணீரின் தாரை கலங்க மழைக்குலம்போல்
மண்ணீரின் மாழ்கு மறிந்து. (218)

தலையடுத்துத் தாங்குகையார் தாரைநீர் கால
முலையடுத்துத் தூங்கு முகத்தர் அலையடுத்த
மாகடல்வி ழன்னமென வந்துமலைத் தோள்விழ்ந்தார்
பாகட்டுருஞ் சொல்லார் பரிந்து. (219

தழுவினார் மிக்க தலையினொடு தாளும்
எழுவினும் தோண்மார்ப மெங்கும் குழுவினர்
கூடி யழுதார் குறையா வரக்கியர்கள்
நாடியவ னுகநண்ணி னூர். (220)

Koviloor Digital Library

வருத்தமுற்று மால்புலவி மன்னுவதை யன்றிப்
பொருத்தமுற்ற வாழ்விற் பொருந்தா ரொருத்தர்முனம்
மற்றொருத்தர் வீழ்ந்து மயங்கினு ரன்னவன்ருேன்
பற்றொறுத்தல் தம்மிற் பரிந்து. (221)

இயக்கியர்கள் வல்லரக்க ரேழையர்கள் மற்றும்
மயக்கியலார் சித்தர்விஞ்சை மாதர் முயக்கும்
முறைநீங்கி யன்பதனுல் முன்னடுத்து வீழ்ந்தார்
சிறைநீங்கு மாமயிலிற் சேர்ந்து. (222)

அறந்தலையாம் சிந்தை யமர்சீதை தன்னை
மறந்திலையோ வெங்களுக்குன் வாயைத் திறந்திலையே
கண்விழித்து நல்லருளைக் காட்டிலையே தேட்டமிலாய்
விண்விழித்த தென்னையென்ருர் வீழ்ந்து. (223)

தாங்கமுறு வேலை தடித்துவீழ்ந் தென்ன
உரங்கிளரும் வீரனுரு வுறருள் மாங்கள்
மலைக ளுருக மயன்மகள்வீழ்ந் தேங்கும்
கலைக ளுருகக் கசிந்து. (224)

அன்னையோ வென்னை யடியே னரக்கர்மன்னர்
பின்னையோ வென்முடிவும் பெற்றியிதோ முன்னே
விழுந்த முடித்தலையோ வீணுனே னென்ருள்
அழுந்த முடித்தனுன்பத் தாள். (228)

வெள்ளெருக்க மார்சடையான் வெற்பெடுத்த தோண்மேல்கீழ்
ளெள்ளிருக்கு நல்லிடந்தா னில்லையென வள்ளல்
சரந்துளைத்த கண்டாற் சனகிதிறத்தாசை
கரந்துளைக்கு மென்ருே கருத்து. (226)

ஆரத்தா மார்பை யகன்முழைக ளாத்திறந்த
வீரத்தாம் வாளியினுல் வீழ்ந்தனனே தீரத்தாம்
மானுடவர் வன்மை மதிப்போ வெனவுரைத்தாள்
தேனுடையின் சொல்லாள் திகைத்து. (227)

Koviloor Digital Library

காந்தையர்க்குட் சானகியார் கற்பு மவர்பொற்பும்
ஏந்துபுய மன்சாத லேற்றதுவும் காந்திவரு
சூர்ப்பநகை மூக்குஞ் சரர்க்கரச னிந்திரற்கே
ஏற்ப்புநல மென்று ளிரிந்து. (228).

தேவர்க்கு மேலாச் சிறந்த பெருந்திருவார்
மூவர்க்கு மேலா முதல்வலியி ராவணற்குப்
போரரியே றென்னப் புனித மனிதனுற்ற
சீரறியே னென்று திகைத்து. (229).

அரைகடையா முக்கோடி யாயுளுடை வீரத்
திரைகடவு பாற்கடலைச் சீதைப் பிரைகடந்த
செய்கைதனைத் தேறேன் சிறந்தென் னுயிர்க்காகும்
உய்கையினி யில்லையென் றுளோய்ந்து. (230).

உலகெல்லாம் போற்ற வுயர்குலத்தி னுற்றோன்
அலகில்லா வீரவா னாகி யுலவில்லான
மாரா னிலக்கை மனித்த ரழித்தனரே
கோரமுட னென்றான் கொதித்து. (231).

ஆரா வமுதா யலைகடலிற் கண்வளரும்
நாரா யணனுமி ராமனையே யோராதே
கொண்டகன்றாய் தேவிதனைக் கோவான நின்னுடலும்
விண்டகன்று யென்றான் மெலிந்து. (232).

என்றழைத்தா னேங்கி யிரிந்தா னெழுந்தவன்றன்
பொன்றழைத்த மார்பிற் பொருந்தினன் றன்றழைத்த
அத்தத்தாற் சூழ்ந்தா ளறிந்தா ளுயிர்துறந்தாள்
சித்தத்தாம் நன்மை சிறந்து. (233).

வானமுற்ற மங்கையரு முற்றுஞ் சிறந்தவெந்தத்
தானமுற்ற மங்கையருஞ் சார்ந்தடுத்தார் ஆன
மடந்தையர்கள் கற்புடைய மாதைப் புகழ்ந்தார்
அடைந்தயராச் செய்கை யறிந்து. (234).

Koviloor Digital Library

பின்னையுற்ற வீடணனும் பேரொழிற்றம் முன்னவனை
வன்னியுற்ற தான வரன்முறையைச் சொன்ன
விதிமுறையிற் செய்து விளங்கினா னன்றோன்
கதிமுறையிற் சேரக் கலந்து (235)

இந்தனத்தாம் சந்தனத்தா லேற்ற படியிட்டும்
சந்தனத்தா மானமதிற் சாத்தியே யெந்தனத்து
மோசையெங்குங் கீழா யுயர்ந்தசங்க நாதமவை
ஆசையெங்கு மார்க்கவைத்தா னங்கு. (236)

கொற்றக் கொடியும் குறித்து வருகொடையும்
முற்றக்கொ டைமவிதி முற்றுவித்துச் சுற்றிவரு
மாந்தர் தொடர மதியுடைய மாவரதன்
சேர்ந்தவிதி செய்தான் செழித்து. (237)

கடன்கள் கழித்துக் கணவ னுடனே
உடன்கொள் மயன்மகளை யொன்ற அடங்கவைத்து
வெங்கனலை யாக்கினான் வேத விதிப்படியாய்ப்
பொங்கநல முள்ளான் புனைந்து. (238)

மற்றை யவர்க்கும் வரன்முறையி னலமைத்தான்
கற்றையவிர் தீயாற் கமலத்தால் முற்றம்
இவனல்லா தில்லை யெனப்புரிந்து வள்ளல்
தவநல்ல சேவடிசார்ந் தான். (239)

வந்தடியில் நொந்து வணங்கி யவனைவள்ளல்
சிந்தையடர் வெந்துயரந் தீர்த்தையய முந்தையடுத்
தெய்துமுறை யென்ன யிடர்ப்பாசம் நீக்கினான்
செய்தமறை செய்வான் தெரிந்து. (240)

இராவணன் வதைப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

மீட்சிப் படலம்.

வருந்தவத்தை யென்னே மனுநீதி வாய்மை
பொருந்தவுற்ற பொற்பவெனப் போற்றும் அருந்தவத்தின்
நற்பயனல் வந்த நலற்குரைத்துத் தம்பியுடன்
விற்புயவேள் சொல்வான் விழைந்து. (1)

சோதியான் மைந்தன் துதிமருவு வாயுசுதன்
ஆதியாம் வானரரோ டாங்கேகி நீதியாம்
நற்றுறையான் வீடணற்கு நன்மைமுடி சூட்டவென்றான்
முற்றறிவார் சிந்தையுற்ற முன். (2)

என்றெடுத்துக் கூறி யிளவலொடி யாவுரையும்
வென்றெடுத்த வீரன் விடையருள நின்றடுத்த
தேவர்நன்றி தேரும் திருவார்தம் செய்கைதனை
ஓவலின்றிச் செய்தா ருகந்து. (3)

சூழ்கடலின் தோயம் தொகையடுத்த தீர்த்தமற்றும்
நீள்முடியும் பின்னு நிறைநீர்மை பாழி
யரிதுற்ற பீட மடுத்த பிறவும்
பரிவுற்ற தேவரளிப் பார். (4)

வாச மலரோன் வழங்குரையின் மான்முகனும்
காசு நிதிகொண்டு கங்கைபுனை யீசன்
முதலோர் வியப்ப முழுப்பணியி னாகத்
ததிநேர்ந்து மண்டபஞ்செய் தான். (5)

மொய்கொண்ட வேத முறையடுத்து விண்ணவர்கள்
கைகண்ட தீர்த்தங் கலந்தாட்ட மெய்கொண்டா
னிணைகொண்ட தம்பி யடுத்து முடிபுனைந்தான்
காணிகொண்ட சிந்தை கலந்து. (6)

Koviloor Digital Library

கரியபெருங் குன்று கதிரெடுத்துச் சூடிப்
பெரிய மணித்தவிசார் பெட்பின் அரியணையிற்
தேவர் புகழத் திருவினொடு வீற்றிருந்தான்
எவர் புகழா ரெடுத்து. (7)

தேவர்பொழி பூமழையும் சித்தர்முத லெத்தவரும்
மேவிவரு காதல் விரைமலரும் மூவர்
முனிவரா மேலோர் மொழியவரு மாசி
நனிவரமு மிக்காம் நயந்து. (8)

முடிபுனைந்து கொண்ட முதலா னிருதன்
அடிவணங்கித் தம்பிதனை யாண்டோர் நெடிதுற்ற
காத லவர்க்குக் கனநீர்மை செய்தனலற்
கீதுமொழி சொற்றா னெடுத்து. (9)

விலங்கலது நாண மிடையுற்ற தோளாய்
இலங்கைநகர் யானடுக்கு மெல்லை கலங்கா
நெடுங்காவல் செய்யவென நேர்ந்தான் வரதன்
தடங்காண் சரணமலர் தான். (10)

குரக்குவர வீரனிளங் கோளரியி னோடும்
அரக்க ரரச னடுக்கப் பொருக்கெனத்தான்
புக்கவரைப் புல்லிப் புனையுந் திருமார்பன்
மிக்கவுரை சொல்வான் விழைந்து. (11)

உரிமை யுலக மொருமூன்றும் போற்றப்
பெருமையுல வாநீதி பேரா திருமை
அரசாள வென்றான் அறமடுத்த நீதி
அரசாளும் வள்ள லவற்கு. (12)

பன்னவரு நீதிநலம் பற்பலவுங் கூறிமற்றும்
உன்னவரு யோதி யுயர்நிலையோய் மன்னவரும்
வாழ்வொன்று மென்றுரைத்து மாருதியை நோக்கிவள்ளல்
தாழ்வின்று நன்மையுரைத் தான். (13)

Koviloor Digital Library

இப்புறத்தி னின்னசெய லெய்துற்ற காலைதனில்
அப்புறத்தை யுன்னி யனுமனைத்தான் றப்புறமுஞ்
செய்யவாய்த் தோகை செழிக்கவுரை செப்புதற்கு
மெய்யவாய் செல்கவென் றான் வேந்து. (14)

வணங்கியல மில்லாத மாருதிதான் மற்றும்
அணங்கியலும் காவினிடை யண்டி யுணங்கிநின்ற
கொம்புக் குயிரளிக்குங் கொள்கை யெனவுரைத்தான்
அம்புக் குயர்ந்தவிழி யாட்கு. (15)

பாடினன் வள்ளல்பெயர் பன்முறையு நன்மையுடன்
கூடினன் சாரிகொண்டு குப்புற்றான் ஆடினன்
செங்கைசிரங் கொண்டு திருமாதின் முன்னுரைத்தான்
மங்கைசிரங் கொள்ள மகிழ்ந்து. (16)

ஏழையுற்ற சோபனந்தா னேந்திழையே சோபனமாம்
வாழியுற்ற சோபனந்தான் வாய்த்ததுவே பாழி
அரக்கன்தார் வீர னருட்கணையின் மாய்ந்தான்
தரக்கந்தா னெங்குமெனறான் சார்ந்து. (17)

தலைகிடந்த நேரும் தாணிதனைத் தாங்கும்
மலைகிடந்த நேர மணித்தோள் அலைகிடந்த
ஆழி கிடந்தனவாய் ஆன வுடல்கிடந்த
பாழிநிலத் தென்றான் பரிந்து. (18)

ஒருகலைசேர் வெண்மதிதா னுற்றநா ளெல்லாம்
வருகலைக ளொவ்வொன்றாய் வாரா திருகலைகள்
எல்லா மொருநா ளியைந்தடுத்த வொத்தனவாம்
வல்லாண் முகமா மதி. (19)

ஆம்பலெனும் வாயினொடு மானனமாம் பூமலராத்
தேம்புமிடை நோவத் திரடனங்கள் தாம்பனிப்ப
ஆசையுற்ற நேயத் தடுத்தா ளகிகான்று
தேசையுற்ற மாமதியாய்த் தேர்ந்து. (20)

Koviloor Digital Library

புந்தியோ பேருவகை போற்றும் பொருமலதோ
வுந்தியோ வோங்கு முயர்தோளோ முந்தும்
கலையுடைத்தரந் தேரோ கதிர்கலோ முந்தி
நிலையுடைத்தா யோங்கு நினைந்து. (21)

குனித்து வருபுருவங் கொம்மையுற்ற வேர்வை
பனித்துவரு கொங்கை பணைத்த நுனிப்பதொன்று
சொல்வதொன்று யுற்றான் துதிக்குங் களிப்பதுவும்
வெல்வதொன்றுங் கள்ளோ வியப்பு. (22)

அனைய திறத்தா னனுமானை நோக்கி
இனைய திழத்தாமி தென்ற நினைவின்றிப்
பார்த்திருந்தாள் பன்னும் பரந்தாமன் சிந்தையுள்ளே
வீற்றிருந்தா ளென்தாய் விழைந்து. (23)

யாதுயர்ந்த தெண்ணி யடுத்துரைப்ப தென்றலவரு
மீதுயர்ந்த தாமுவகை விம்மலே தூதயர்ந்த
தென்றெடுத்த வெண்ணத் தியல்போ வெனவுரைத்தான்
வென்றெடுத்த வீரன் வியந்து. (24)

மேக்கடுத்து நீங்காத வெள்ள வுவகையினால்
ஏக்கமுற்றே றென்றியம்பற் கில்லையாய் நோக்கிக்
களித்திருப்ப தன்றிக் கருத்துவே றாக
ஒளித்திருப்ப தென்னையென்று ளோர்ந்து. (25)

முன்னடுத்து நீக்குவேன் மொய்சிறையை யென்றபடி
பின்னடுத்து வாக்குவகை பேசுமுனக் கென்னடுத்த
பேற்றினா லீவதெனப் பேர்நினைவிற் பேசுவளம்
மாற்றினே னென்றான் மலைத்து. (26)

உலகமொரு மூன்று முதவற் குவந்தும்
விலையிலையா மென்று வியந்தேன் நிலையிலது
மாக நினைந்தே னடுத்துனையென் சேகரத்தி
னாக நினைந்தே னறிந்து. (27)

Koviloor Digital Library

ஆதலினு லொன்றும் அறிந்துதவ வாற்றகிலேன்
காதலினு லன்ன கருத்துடையேன் வேதமணி
வேகடஞ்செய் தென்ன வியன்றூத வென்றுரைத்தாள்
மாகடஞ்செய் கொங்கைமட மான். (28)

எனக்களிக்கும் நல்வரந்தா னென்தாயே யின்னே
மனக்களிப்பு நல்கும் வரதன் தனக்களிக்கும்
அன்னதினு மேலா மவையென்னே யென்றுரைத்தான்
பொன்னதினு மேலாம் புலன். (29)

எனவுரைத்து முச்சடையா ளென்றூய் நலத்த
கனவுரைத்து நிற்காத்த கண்ணுள் தனையொழித்தும்
இவ்வரக்கி மாரை யெடுத்தெற்றற் கென்னேயென்றுன்
செவ்வரக்கிற் கண்கள் சிவந்து. (30)

உரையி லுரையை யுரைத்துன்பா லோங்கி
விரைய விழுங்கவென்ற மெய்யில் வரையனைய
மேனித்னே வள்ளுகிரால் வீத்து மறலிக்கிட்
டானிதனைச் செய்வனென்று ளுர்த்து. (31)

குடலைக் குதைத்துக் குருதி குடித்தும்
உடலைக் குமைக்க வுருத்தான் அடலரக்கி
மாரடுத்துத் தாயே வரசரணந் தஞ்சமென்றூர்
சீரடுத்துத் தாயுரைப்பா டோர்ந்து. (32)

அன்னையவள் கேட்டவுடன் அஞ்சன்மி னெனறளித்து
மன்னுமனு மானேயலை மாநோக்கி என்ன
இவரிழைத்த தீமை யிகலரக்கன் சொல்லால்
தவறிழைத்த தென்றனனென் தாய். (33)

யானிழைத்த தீவினையி னுண விடரிவைகள்
தானிழைத்த லன்றித் தவறெவர்க்காம் கூனி
தனிற்கொடிது செய்தலிலர் தாங்கும் வலத்தாய்
சினக்கொடிது செய்யலென்றுள் தேர்ந்து. (34)

Koviloor Digital Library

எனக்கருளு நல்வரந்தா னித்தீ வினையார்
தனக்கருளு நன்மையெனத் தாங்கி மனக்கடுத்த
நோய்செய்யா தென்றாள் நுவலுங் கருணைபொழி
தாய்செய்யாள் தன்மைபடைத் தாள். (35)

என்றுரைத்தல் கேட்டா னிறைஞ்சி யனுமானும்
நின்றுரைத்து நேர நிகரில்லான் தன்றுணையாந்
தேவி தனைச்சிறப்பாய்ச் சேர்க்கவென்றான் வீடணனும்
கோவிதனைச் செய்வான் குறித்து. (36)

என்னவருள் காலை யிருளும் வெயிலுங்கார்
மின்ன வருமியர்க்கை வீடணன்றான் பொன்னினுற்ற
காற்றளிரைச் சூடிக் கருத்தி னொடுசென்றான்
ஏற்றளியான் நன்மை யிசைந்து. (37)

வேண்டுஞ் செயல்முடிந்த வேதியர்கருத் தேவனின்னைக்
காண்டுஞ் செயற்கும்பர் காதலித்தார் பூண்டுஞ்சு
கோலம் புனைந்து குறுக வெனவுரைத்தான்
சீலம் புனைந்தான் தெரிந்து. (38)

யானிருந்த தன்மை யிமையோர் குழுவுடனெங்
கோனிருந்த மாமுனிவர் கோதிலவர் வானுயர்ந்த
கற்படுத்த மாதர்களுங் காண்டல் நயமென்றாள்
பொற்படுத்த மாதர்புகழ் பொன். (39)

என்றிரைவி கூற வியைந்த விராக்கதர்மன்
குன்றிறைஞ்சு தோண்மன் குறிப்பென்றான் நன்றென்று
நாயகியாள் கூற நயந்த வறமாதர்
நேயமொடு வந்தார் நிரந்து. (40)

மேனகைமான் வானரம்பை மேலா முருப்பசியாம்
தூநகைமான் மஞ்சனநீர் தோற்றமுடன் நானநெய்யும்
நற்கலவை தாங்கி நயந்தார் சிறந்து வந்தார்
அற்கலவை யைபாலை யாய்ந்து. (41)

Koviloor Digital Library

காணியைப்பெண் கட்கெல்லாம் கற்பினுற்ற பொற்பினுக்கோர்
ஆணியைப்பண் நல்லறத்திற் காந்தாயை வேணிதனை
அல்லைப் பிரித்த தமைய வறமாதர்
மெல்லப் பிரித்தார் விழைந்து. (42)

பாகென்ற சொல்லாள் பவளவிதழ்ப் பல்விளக்கிச்
சேகின்றி மஞ்சனத்தின் செய்கைசெய்தார் தோகையர்கள்
மங்கலசங்கீத மறைபாட வானமுற்ற
வங்கலசக் கொங்கைநங்கை யார். (43)

தாரகைக்கா மென்னத் தயங்கு நவமணியாற்
சீரமைத்த வாரத் திறள்சாத்தி வாரகைக்கும்
கொங்கைக்கு நற்கலவைக் கோல மிகவரைந்து
மங்கைக் கணிபுரிந்தார் மற்று. (44)

அவையவங்கட் கேற்ற வணிபொருந்த வாக்கி
நவையவங்கொள் நல்லாடை நண்ணச் சுவையமைந்த
சிந்தூரத்தாம் வாயினிடை தேம்பாகு தீற்றினார்
மந்திரத்தாற் காப்பு வரைந்து. (45)

மண்டிலத்தி னுமதியின் மானிருந்த தாமானம்
விண்டலத்தார் போற்ற வியந்தேறிக் கொண்டு
வரச்செய்து வீடணன்றான் மாநாகர் போற்றும்
தரச்செய்கை மாலையடைந் தான். (46)

இப்புறத்தி னுமுனிவ ரேற்றவர மங்கையர்கள்
துப்புறழ்வாய் விஞ்சையர்க்காந் தோகையர்கள் செப்புரத்து
மூவுலகி னுள்ளார் முதன்மால் புனைந்தடுத்தார்
பூவுலவுந் தாய்பாற் புகழ்ந்து. (47)

அருங்குலத்தாம் கற்புக் கணியை யடுத்து
மருங்குவாற் கான வழியில் நெருங்குதலைக்
கண்டு நிருதர் கலந்தோச்ச கம்பலையை
மண்டுகடல் கொண்டதுவ மம். (48)

Koviloor Digital Library

அவ்வழியி ராம னலர்ந்த கமலவிழி
செவ்வழியி நோக்கிச் செயிர்த்தனனு மிவ்வொலிதான்
என்னையெனச் சீற்றத் தெடுத்த மொழிகேட்டுப்
பின்னையுரைத் தார்முனிவர் பேர்ந்து. (49)

முனிவர் மொழிகேட்டு முன்னு மிதழ்கள்
நனிதுடிக்க வீடணனை நாடித் தனிநோக்கிக்
கற்றுணர்வாய் மேலோய் கடந்த செயலென்றான்
முற்றுணர்வான் சிந்தை முனிந்து. (50)

கடுந்திறலாற் போர்செய் களங்காண நேரும்
நெடுந்திருவார் தேவரொடு நின்றார் அடைந்துவகை
கொண்டடுத்த பேரைக் குறித்தடர்க்க யாருரைத்தார்
விண்டடுத்த தோளவென்றான் வேந்து. (51)

பரசுடையோ னேமிப் பகவன் பிரமன்
அரசுடைய தேவியரை யன்றி விரசுவரோ
நூல்வலத்தா யென்ன நுவலா மொழிபுனைந்தாய்
சீல்வலத்தில் லென்றான் சினந்து. (52)

ஆதலாற் கோவே யடுப்பதன்று சாதுகையார்க்
கேதமாம் செய்கை யெனப்புகன்று வேதவரன்
நிற்பவனன் முன்னிலையி னின்றான் விபீடணனும்
பொற்பவனன் முன்னிலையொப் பும்.' (53)

அருந்ததியாம் நங்கை யமர்களத்தி லாடற்
பருந்ததியாம் பேய்கள் பசிதீர் விருந்தருள்விற்
செய்தவிழாக் கண்டு சிறந்த வுரைசெய்வாள்
மைதிகழும் கண்ணி மதித்து. (54)

சீலமுடன் காட்டிச் சிறந்தவரன் சேவகத்தாம்
கோலமுடன் காட்டிக் குலங்காட்டிக் காலமுடன்
காட்டுங் கற்பென்ற கடலார் கவிக்குநன்னுள்
காட்டுங்கற் பென்றாள் கணித்து. (55)

Koviloor Digital Library

எச்சிலையாஞ் சட்டகசின் றேகு மூயிரெனினும்
நச்சிலையா மென்றுவந்த நங்கையெதிர் பச்சிலையாம்
வண்ணத்தான் வாய்பவளம் வார்கைச் சிலையினொடு
கண்ணுற்றான் சிந்தை கனன்று. (56)

மானமதின் மீதரம்பை மாதரொடு வந்தடைந்தாள்
போன வுயிரடுத்த பொற்புடலாள் ஆனனந்தான்
காட்டப் புவியடுத்தாள் காணுஞ் சுரருளத்தை
நாட்டப் புவிமகளா னள். (57)

பிறப்பினுந்தா னற்றுணையாம் பேரார் பிறவி
துறப்பினுந்தா னற்றுணைச் சூழ்ந்து பிறப்பினித்தான்
நன்றென்று கொண்டுவந்தா ணூட்டும் அடியனுளம்
மன்றென்று கொண்டுவந்த மா. (58)

கற்புக் கரசிதனைப் பெண்மைக்கோர் காப்பதனைப்
பொற்புக் கழகைப் புகழ்வாழ்வைத் தற்பிரிந்து
தானருளைச் செய்யுந் தரத்தறத்தைச் சார்பவளை
மானருளான் கண்டான் மதித்து. (59)

சுணங்காரு நற்றனத்திற் றூங்கிநிறை யாலி
அணங்காருங் கண்ணி னடுக்க வணங்கும்
மயிலைப் பணங்கிளரும் வாளரவிற் சீறும்
புயலைப் பொருவும் புயன். (60)

ஊண்டிறத்தை யுண்டாய் ஒழுக்க மொடுங்கநின்றும்
மாண்டிலையே வல்லரக்கன் மானகர்வாய் ஆண்டுறைந்தும்
அச்சந்தீர்ந் திங்ங னடைந்தா யளப்பறிவோ
எச்சந்தீர்ந் தென்றா னிரித்து. (61)

உன்னைப் பொறுப்பாக்கி யோங்கு கடறார்த்துப்
பின்னைப் பொருப்பாக்கர் பேர்அறத்தான் முன்னைப்
பகைகடந்தே னல்லேன் பழியெனக்குச் சேரா
வகைகடந்தே னென்றான் மதித்து. (62)

Koviloor Digital Library

மருந்தி னரியதனை மன்னு முயிரை
யருந்தி நறவுண் டமைந்தாய் இருந்த
வினிதமைக்கும் நல்லவிருந் தேற்கவுண்டோ வென்றான்
தனிதமிக்க வில்லான் றகைந்து. (63)

கலத்திற் பிறந்த கவின்மணியிற் காந்தும்
நலத்திற் பிறந்தநன்மை நாட்டுங் குலத்திற்
பிறந்திலைநீ டேம்போற் பேணு நிலத்திற்
பிறந்தலைந்தா யென்றான் பிரித்து. (64)

பெண்மை விழுப்பம் பிறப்பொடு கற்பென்னும்
திண்மை யொழுக்கந் தெளிவுடனே யுண்மையதும்
நீயொருத்தி தோன்ற நிகர்வண்மை நேர்மையிலான்
காய்திறத்த மன்புகழாங் காண். (65)

அடைப்பரந்த வைம்புலனை யாணி யொழுக்கம்
புடைப்பரந்த மாதவத்தைப் போற்றிப் படைப்பார்
இடையோங்கு பொற்புடைந்தால் வற்றவுயிர் தீர்ப்பர்
நடையோங்கு கற்புடைமா னார். (66)

எதியான் சொல்வ தெடுத்த வுணர்வதனைச்
சேதியா நின்றதுந்தன் செய்கையது சாதி
யதனா லடுத்த தறிவிலிபோ வென்றான்
மதனா லெடுத்தவில்லான் மற்று. (67)

முனிவருற்றார் தேவர் முதலோர் நிருதர்
புனிதமுற்ற மங்கையர்வான் பொற்பார் தனிதமுற்ற
வானரத்தார் மற்றுமுற்றார் வாய்திறந்து பூசலிட்டார்
வானறத்தார் மாதை மதித்து. (68)

கண்ணிணையி னுமுதிரங் காலும் புனல்பெருக
மண்ணிணையி னோக்கு மலர்மகளும் புண்ணினிற்கோ
விட்டதெனப் பொம்மலா லேற்ற செயல்குன்றிப்
பட்டதென நின்றான் பரிந்து. (69)

Koviloor Digital Library

பருந்துயரும் வெஞ்சுரத்திற் பாணியின்றித் தாகம்
வருந்துயரி னெஞ்சுலர்ந்த மான்தா னிருந்தடத்தை
கண்டடுத்த காலை கடுத்ததடை யானதெனக்
கண்டெடுத்த நன்மொழிக்காங் காண். (70)

உற்றலகை நோக்கி யுயாடிக்கு நேரடுத்து
முற்றலவு கண்ணுலி மொய்த்துகத்தா னிற்ற
செயலிதுவென் வாழ்க்கை சிறந்ததெனச் சொற்ருள்
புயலிதுவென் வார்கூந்தற் பொன். (71)

மாருதி யென்றவான் வள்ள லிடைவந்து
சாருதி யென்றவுரை தாழ்வுடைத்தோ யாரினுந்தான்
மேன்மையுள வீரன் விரும்பவரு சொல்லிலையேற்
பான்மையுள தாதென் பயன். (72)

எத்தனையா மென்னலமு மென்று முளகற்பும்
இத்தனையாங் கால மிருந்தவெலாம் பித்தாய்
அவம்புரிந்த தன்றே அமலனரு ளின்றேற்
தவம்புரிந்தென் னென்ருளென் தாய். (73)

பார்க்கரிய பத்தினியாய்ப் பங்கயத்துப் பொங்கயற்கும்
பேர்க்கரிய சித்தநயப் பேதையேன் சீர்க்குறவாங்
கண்ணனிலை யென்ருற் கடவு ளெவர்தேர்வர்
எண்ணமிலை யென்ரு ளிரிந்து. (74)

பங்கயத்தன் பாங்காம் பரம விடைப்பாகன்
சங்கையத்தந் தாங்குந் தனிமுதலும் அங்கைநெல்லி
போலனைத்துங் கண்டும் புரியாது மங்கையர்தம்
மாலனைத்து மென்ருள் மருண்டு. (75)

ஆதலிற்ருன் மீட்டும் அவர்க்கின்றிக் கற்பெவர்க்குக்
காதலிற்ருன் காட்டுங் கடமையேன் சாதல்
அதிற்சிறப்பா மென்னும் அனகன் பணியே
விதிச்சிறப்பா மென்ருள் விரைந்து. (76)

Koviloor Digital Library

இளையவிற்கை வல்லா யிடுதிதீ யென்ன
வளையொலிக்கை நல்லாள் வழங்க உளையும்
மனத்தானு நோக்க மலர்க்கண்ணாற் கூறும்
சினத்தானு மாக்கந் தெரிந்து. (77)

எங்கும் பொருமலுட னேற்றுவரு கண்ணீரான்
வாங்கு முயிரடுத்த மைந்தனுளந் தாங்கும்
விதிவத்தாச் செய்து மிகுத்த வெரிமுன்
பதுமத்தா ளெய்தும் பரிந்து. (78)

தீயிடையி னாகச் சிறந்த பெருந்தவர்க்கும்
தாயடைய யாருந் தரிக்காதார் வாயிடையாம்
நான்மறைக ளோடு நயந்துவரு நல்லறமும்
தான்மறையு மென்றார் தளர்ந்து. (79)

வலமுற்ற போது மறுகி வாவான்
உலகத் துயிர்களிட வோலம் அலமுற்ற
இச்சலமாற் கேதா மெனப்புகழ்ந்து கூறினார்
நிச்சலமா னோர்க ளிரந்து. (80)

இந்திரமான் தேவிமுத லேழையர்க ளேங்கினார்
அந்தரமா னார்க ளரற்றினார் கொந்தளிராம்
கையணியாற் கூரியவேற் கண்புடைத்து நின்றழுவார்
மையணிகண் மானை மதித்து. (81)

நடுங்குகின்றார் நான்முகனே நாட்டமுற நாதர்
படங்குறைந்த பார்சுமந்த பாம்பும் விடம்பிறந்தா
மென்ன வெதும்புமுல கேற்ற சுடர்திரியும்
அன்னகட லெங்கும் அலைத்து. (82)

கனத்தினாற் காக்காக் கதிரார் தனத்தாள்
மனத்தினல் வாக்கால் மருண்டாற் சினத்தினாற்
சுட்டிடுவாய் செல்வவெனத் தோன்றித் துதித்தடுத்தான்
மட்டிடுவார் கூந்தல் மயில். (83)

Koviloor Digital Library

நீந்தரிய தண்புனலி னேருற்ற தாமரையாம்
ஏந்தரிய தன்கோயி லெய்துவதாய்ப் பாய்ந்தவுடன்
கற்பினுற்ற தீயாற் கனவன்னி மேனியெலாம்
வெற்பினுற்ற தீயாய் மிகும். (84)

அழுந்தாழு னங்கை அவனறிந்து கொண்டான்
எழுந்தாழு னங்கை யெடுத்தான் தொழுந்தான
ஞானத் தெழுந்த நலத்தைத் துதித்துவந்தான்
வானத் தெழுந்து மதித்து. (85)

ஊடினவாம் சீற்றத் துதித்த தாவேர்வை
வாடினவா மின்றால் வழங்கலென்னை பாடிவரு
வண்டினொடு தேனடுக்க மாமலர்க ணீர்தோய்ந்த
பண்டரவாய் நின்றான் பரிந்து. (86)

திரிந்த வுலகமெலாஞ் செவ்வையொடு நின்ற
பரிந்த வுயிர்கள் பயந்தீர்ந் தருந்ததியே
யாமுதல மங்கையர்க ளன்றடுத்து வென்றியுற்றார்
நாமுதலாள் கொண்டாள் நலம். (87)

கனிந்துவரு கற்பாங் கடவுட் கனலை
நினைந்துவரு மென்னிடத்தி னேர்ந்தாய் அணிந்தனையாம்
அங்கியான் நின்றேன் அறிந்தும் முனிந்தடுத்துச்
சங்கியா நின்றதெனைத் தாம். (88)

இன்ன வியம்ப விராம னவனைப்பார்த்
தென்னை யியம்பிற் றெரியேற்ற புன்மைத்
தாத்தவளை யாருரையாற் றாங்கிவந்தா யென்றான்
காத்தவளை வில்லான் கடுத்து. (89)

அங்கியான் தாயாம் அமலை யருள்கற்பாற்
பொங்கியாந் தீயாற் பொறுக்ககிலேன் இங்கணைந்தேன்
என்னியர்க்கை கண்டு மெடுத்து வருசங்கை
உன்னியர்க்கை கொண்ட அவப்பு. (90)

Koviloor Digital Library

வேட்பதுவும் பெண்கள் விலங்கினு ரென்னினலம்
கேட்பதுவு மையத்தாங் கேடறவே மீட்பதுவும்
என்னிடத்தா மென்ற வியல்பைப் புகல்மறையும்
உன்னிடத்தா மென்றா னுகந்து. (91)

ஐயுற்ற வாம்பொருளை யாசின்றி யாக்கியவை
கையுற்ற நெல்லியெனக் காட்டுமெந்தன் மெய்யுற்ற
கட்டுரைதான் வேறா கமலனெனு மாருந்தன்
மட்டுரைதா னென்றான் மதித்து. (92)

தேவரொன்ற மாமுனிவர் சேரு முலகவர்கள்
மேவிநின்று போற்ற விரும்பியே கோவே
மனஞ்சகியா தென்னையென்றான் மன்னு புகழ்சேர்
தனஞ்சயனுஞ் சிந்தை தளர்ந்து. (93)

பெய்யுமே வானம் பிளப்பதன்றி வேறென்னும்
உய்யுமே தன்மநெறி யோய்வின்றி நையுமே
நேருலக மம்மை நிறையுணர்வு சீற்றமுற்றாற்
சீருலவ லெங்கென்றான் தேர்ந்து. (94)

பாடற்ற பன்மைமொழி பன்னியவ னின்னவகை
ஆடற்ற தேவரொடு மார்த்தெழுந்து சூடற்ற
மேனியுளன் தோகையைத்தான் வேண்டிக் கொணர்ந்தவுடன்
ஞானியுளன் தானுரைத்த னன். (95)

அழிப்பில்லாம் சான்றலகுக் கானவா னுன்னால்
இழிப்பிலவாம் சொல்லிருக்கி னேதும் பழிப்பிலவாம்
என்றான் கருணையுட னேற்றான் பெரியர்மன
நின்றான் தருணம் நினைந்து. (96)

உணர்த்துவா யுண்மை யொழிவின்று காலம்
புணர்த்துமா மாயைப் பொருளை யிணர்த்துழாய்
மாலையிரா மற்கு வரதவெனத் தேவர்சொலக்
கோலவரன் சொல்வான் குறித்து. (97)

Koviloor Digital Library

மன்னர் குலத்தொருவன் மானுடவ னென்றான்னு
தன்னைப் பரமா யுணர்பெரியோய் என்னைப்
படைத்தவனு நீயென் படைப்புக்குள் ளாகிக்
கிடைத்தவனு நீயென்றான் கேட்டு. (98)

எனக்கும் கனத்த விமையோர்க் கிறைவன்
தனக்கு முனிவர் தமக்கும் மனத்தினிருந்
தெல்லா முடிக்கு மிறைவ னினையலது
வல்லாரா ரென்றான் மதித்து. (99)

ஐயஞ்சாந் தத்துவங்க ளான தெரிந்தவற்றின்
மெய்யெஞ்சா மேலடுத்த மேலவனீ பொய்யெஞ்சா
நூலெடுத்து நின்பெருமை நோக்கற் கெளிதாமோ
ஆலடுத்தா யென்றா னறிந்து. (100)

தோன்ற லுனக்கிலையாற் றோன்றுவது நின்கண்ணே
ஆன்ற முதற்பகுதி யாகுமின்னு மேன்றவரு
பூதங்க ளெல்லாம் பொருந்தி யிலயமுறும்
ஆதங்க முற்கிலையென் றான். (101)

மின்னெடுத்துக் காட்டுதல்போல் வீய வருமுலகம்
தன்னிற் றருமந் தனைக்காட்டி யென்னைத்தான்
காட்டி யளித்தாய் கலைமதியை மாமனத்து
நாட்டி யளித்தாய் நலம். (102)

என்னுருக்கொண் டிவ்வுலகை யீன்று பரம்பொருளா
யுன்னுருக்கொண் டோம்பி யுமைபாகன் றன்னுருக்கொண்
டன்றருளா தாக்கிப்பின் ஆக்குந் திருவுடையா
யின்றருள்வா யென்றா னெடுத்து. (103)

திருக்குமலி செல்வச் செருக்கிற் செழித்துத்
தருக்குமலி தானர் சமரி லிரிக்கநொந்த
வெங்கடனமக் காத்தற் கியைந்த திருவுடையாய்
தங்கடமை யாற்றலென்றான் றான். (104)

Koviloor Digital Library

இனையதராத் தாக யெவையுலகு மீன்ற
புனையுதராத் தாயைப் புகழ்தல் நினையவென்று
காட்டியுரை தந்தான் கமலத் தறக்கடவுள்
நாட்டியுரை சிந்தை நயந்து. (105)

என்ன வருபோதி னேறுடைய வீரனுரை
யுன்னை யுணர்வா யுயர்பரமாய் முன்னைவரும்
ஆதியென்பா னீயே யமலை கமலையவள்
சீதையென்பா ளென்றான் சிறந்து. (106)

துறக்கு நிலையல்லன் தொல்லை யுலகம்
பிறக்கு நிலையாள் பிழைக்கின் இறக்கும்
பலவுயிரு மற்றதனாற் பற்றுடையா யென்றான்
நிலவுதரு பொற்சடையா னேர்ந்து. (107)

பின்னலத்தாற் சொல்வான் பெருந்தகைமுன் தற்பிரிந்த
வின்னலத்தாற் பொன்னுலக மேற்றிருந்த மன்னிலத்து
வந்தடுக்க நீவணங்கி மன்னுதயர் தீரென்றான்
கொந்தடுத்த வேணியண்ணல் கூர்ந்து. (108)

ஆதியண்ணல் தன்னருளா லான்றவர சர்க்காசன்
காதன்மைந்தற் காணும் கருத்துடனே பூதலத்திற்
புக்கான் புகுதப் பொருவில் திருமகனும்
மிக்கான் வணங்கும் விழைந்து. (109)

வீழ்ந்து மகனை விரைந்தெடுத்து மார்பணைத்தான்
ஆழ்ந்து வருகண்ணீ ராட்டினான் வாழ்ந்தசிந்தை
மன்னடுத்து வாழ்த்தி மகிழ்ந்து கருணையுடன்
பின்னடுத்துச் சொல்வான் பிரித்து. (110)

அன்றவரை கைகேயிக் கானவர மாமயில்வேல்
இன்றவரை நெஞ்சி லிருந்ததென்னைக் கொன்றபினும்
நீங்காது நீங்கியது நேயத்துன் னுகமெனும்
பாங்கான காந்தம் பறித்து. (111)

Koviloor Digital Library

மைந்தர்தமைப் பெற்று மகிழ்ந்து வருதரத்தார்
சுந்தரத்தோ ளாயென் றுணைத்தாளின் பைந்துகட்கு
மொவ்வா ரெனப்படைத்தே னேங்கு புகழென்றான்
செவ்வாறு கொண்டமனன் றேர்ந்து. (112)

பண்டுதொழுந் தேவர் பரம முனிவரெனைக்
கண்டுதொழுங் காட்சி கருதுவாய் புண்டரிகத்
துள்ளவனோ டென்னை யுயராச னத்துவைத்த
வள்ளலெலனோ வென்றான் மகிழ்ந்து. (113)

என்றுமைந்தன் றன்னை யெடுத்தணைத்துச் சானகிபாற்
குன்றுவந்த தோளான் குறுகவே தன்றுவந்தப்
பாதத்தைப் போற்றப் பரிந்தெடுத்துச் சிந்தைகொண்ட
வேதத்தை மாற்று மிசைந்து. (114)

நங்கைமற்றுன் கற்பதனை நாட்ட வுலகினிடை
அங்கிபுக்கி டென்ற தகத்தடையேல் சங்கையுற்றோர்
கொள்வார் சாதங் குறித்த வுலகநடை
கள்வார் குழலாய் கருத்து. (115)

பொன்னைத்தீப் பெய்தல் பொருணயத்தைக் காட்டுதற்காம்
என்னத்தான் கொள்ள விசைந்தனுவா முன்னைத்தான்
காட்டினன் பூவினிடை கற்புக் கரசியென
நாட்டினன் வீரன் நயந்து. (116)

பெண்பிறந்த பெற்றி பிறியா வருந்ததிக்கும்
பண்பிருந்த நற்றவத்தாம் பாவையே மண்சிறந்த
தென்னப் பிறந்தா யினித்தங்கி தன்னிலுற்றாய்
பொன்னிற் சிறந்தாய் புகழ். (117)

என்னவுரைத் தன்னை யியைந்த மனத்தினிடை
யுன்னவரு நன்மை யுகந்தறிந்து மன்னும்
இளவல்தனைத் தான்றழுவி யேற்று மகிழ்ந்தான்
அளவதனைக் காணு அறன். (118)

Koviloor Digital Library

கண்ணித்த மாந்தரை காணுஞ் சடைக்கற்றை
மண்ணித்த மொத்தவர மைந்தனைத் தானெண்ணீர்த்தாய்
நீக்கற்கா காப்பிறவி நெஞ்சினுற்ற புண்ணுடனே
போக்கற்கா மென்றான் புரந்து. (119)

புரந்தரனை வென்றோற் பொரவென்ற வுந்தன்
பரந்தருதோ ளாற்றல் பலரும் நிரந்தரமாய்ச்
சொல்லலுற்றா ரிவ்வுலகிற் றூயோரெ லாமுன்னு
நல்லறத்தை யென்றா னயந்து. (120)

என்றபின்னு மன்ன னிராம வுனக்கிவ்
வொன்றபன்ன வென்ன வினையானும் சென்றபரங்
கண்டதினுற் றீரக் கருதினே னிங்குகண்டேன்
விண்டதிட ரென்றான் விழைந்து. (121)

ஆயினுந்தா னுற்கமைந்த தானதொன்று கேளென்னத்
தீயரொன்று நீதுறந்த தெய்வஞ்சேய் தாய்தம்பி
யாகவரு ளென்றா னதுகேட் டுலகருடன்
மாகவருங் கொண்டார் மகிழ். (122)

வரதனவை கேட்க வழங்குவான் மன்னும்
பரதனவை மீட்கப் பதகி விரதமுடி
தந்தடுத்தாள் மேல்விளிவு தானுகு மென்றுரைத்தான்
நந்தடுத்தா னடுத்தானன். (123)

ஊன்பிழைக்கா நல்லுயிரை யோம்பு மரசதுதான்
வான்பிழைக்கா மென்னு மதிபிழைத்து யான்பிழைத்த
தல்லாற் சலந்தீர்ந்த வன்னைபிழை யென்னையென்றான்
நல்லான் சலந்தீர்ந்த னன். (124)

எவ்வரங்க ளுங்கடந்தா னேற்ற பொருளிசைப்பத்
தெவ்வரங்கு கான்செலுத்துந் தேவிக்கீ யவ்வரந்தா
முற்றதிரண் டென்றா முயர்ந்தவர மாற்றினர்க்குச்
சொற்றதிரண் டென்றார் துதித்து. (125)

Koviloor Digital Library

வரமளித்த வள்ளல் வரத னிளையோன்
தாமளித்த பொன்னைத் தணந்தாங் குரமளித்த
மானத்தி னேறி மகிழ்ந்தான் புகழ்க்காக
வானத்தி னேறும் வான். (126)

கோட்டுஞ் சிலைக்கைக் குரிசி றமையமரர்
வேட்டுஞ் சிறந்த விசையவரம் கேட்டியா
லென்னவரு போரி னிறந்த குரங்கினங்கள்
மன்னவர வென்றான் மதித்து. (127)

பின்னும் குரங்கினங்கள் போரார் கடல்கடந்து
மன்னும் வரைகான மற்றின்ன துன்னிடங்கள்
காய்கனிவாய் கந்தங் கருதுநீ ராக்கவென்றான்
சேய்கனிவாய் மைந்தன் சிறந்து. (128)

வரந்தருவார் வானோர் மழுவான் முனிவர்
புரந்தானோர் மற்றோர் புகழ்ந்தாங் கரந்தைப்
பிறப்பறுக்கு நாதவுந்தன் பேரருளா லன்ன
சிறப்பிருக்கு மென்றார் தெரிந்து. (129)

முந்தைநா ளுற்ற முறையிற் கடைமுடிந்த
அந்தநாள் மாண்ட வடற்கவிகள் சிந்தையொடு
கண்களிக்க வந்தசெருக் கண்டு வணங்கினவாம்
பண்களிக்கும் வள்ளலடிப் பாங்கு. (130)

கும்பகன்ன னோடு குலவீர னிந்த்ரசித்தன்
வெம்பு சினத்தரக்கர் மேலரசன் அம்புபட்டு
மாண்டவெழில் வீரர் வளத்தார்ப்பத் தேவர்வள்ளற்
காண்டுமொழி சொல்வா ரறிந்து. (131)

இடையுவாத் தன்னி லிலங்கைச் சுவேலம்
தடையிலாச் சேனையொடு சார்ந்து படையவாம்
வல்லரக்கர் தம்குலத்தை மாய்த்துக் கடையுவா
வில்லரக்கற் கட்டாய் விழைந்து. (132)

Koviloor Digital Library

வஞ்சரில்லை யண்டத்தின் மற்று மெனமடித்த
கஞ்சமலர்க் கண்ணவன்னை காதலித்த வஞ்சொடஞ்சு
நான்கென்னு மாண்டு நயந்துவரு பஞ்சமிப்பேர்
வான்கொள் திதியின்று வாம். (133)

இன்று பரத னிலையந்தவனைக் கண்டிலனேற்
பொன்று மெரியிற் புரப்பதற்கு வென்றிவா
போதியெனப் போற்றிப் புகுந்தார்கள் விண்டேவ
ராதியென வையனறிந் தான். (134)

ஆண்டு பதினான்கு மாகுமெனின் வாகையெனும்
மாண்டபதி யாம்பரதன் மாளுமெனி லீண்டேக
லூர்தியெங்கா மென்ன வொளிர்மான முண்டென்றான்
சீர்தியங்கா வீடணமா றோர்ந்து. (135)

பாங்குநிதி யோடு பறித்தான் தனதனிடை
ஓங்குமதி வானரர்க ளென்றோதா னீங்குளவ
ரெல்லாரு மேற விசையு நகரின்றே
வில்லாய் புகற்காம் விழைந்து. (136)

இயக்க ராசுக்கன் றீந்தான் மறையோன்
துயக்கிலவர் சிந்தையெனத் தூய்து வியக்கவெங்கும்
மண்டுதிறற் புட்பகவி மானமுண்டென் றுன்வள்ளல்
கொண்டுவா வென்றான் குறித்து. (137)

அண்டமுற்ற கோடி யனந்தமெடுத் தாயருக்கர்
விண்டலொத்த வேகம் விழைதாத்த விண்டலத்தாம்
புட்பகமா மானம் பொருந்தச் சிறந்தளித்தான்
நட்பகமா மன்வீட ணன். (138)

அனையபுட்ப மான மவனி யணுக
இனியநட்பார் வல்ல லினிநம் வினையமுற்றும்
என்றெழுந்தான் விண்ணோ ரெடுத்த மலர்பொழிந்தார்
அன்றெழுந்த பாற்கடலென் றாய். (139)

Koviloor Digital Library

வணங்குந் திரிசடையை வான்கற்பி னெம்மோய்
குணங்கொண் டிலங்கை குலவு மணங்கென்ன
வீற்றிருந்தா ளென்று விசைய னிடைவந்தாள்
ஏற்றிருந்தாள் மானத் திடை. (140)

வீடணனை நோக்கி விமல னெடுத்துரைப்பான்
தோடணைதார் மோலிவர சொல்வதெனை மாடணைவார்க்
கின்பமுற்றச் செய்தாய்ந் தெடுத்த வரசியற்றி
மன்பதைக்குச் செய்வாய் மகிழ். (141)

நீதியா றெல்லாம் நினையும் நினைவுடையாய்
ஆதியா மாமறையோர்க் காங்குலத்தாய் போதி
இலங்கைநகர் காக்க வெனவுரைத்தான் தெவ்வர்
கலங்கநகு வீரன் கசிந்து. (142)

சுக்கிரிவ நின்வலத்தாற் றேன்றுந் தசக்கிரிவன்
மிக்கிரிய நின்ற விரற்படைகள் துய்க்கச்
சுகத்தாம் அரசுபுரி தூயவெனச் சொற்றான்
அகத்தாம் பிரமத் தவன். (143)

வாலிமகன் சாம்பன் வயநீல னும்பனசன்
மேலும் படைத்தலைவர் வீரவரர் காலினுற்று
வேலை கடந்த விசையன் முதலோர்குச்
சாலமொழி தந்தான் தகைந்து. (144)

ஐயன் புகன்ற வருண்மொழியி னுற்றுளங்கி
மெய்யன்பர் கண்களினீர் வேலைபுகச் செய்யமறைத்
தாள்முடியிற் சேர்த்திச் சலிக்கு நிலையுடையார்
நாள்முடிவைச் சொற்றார் நலிந்து. (145)

மாமுடியா மய்யோத்தி மாநகர்க்கு வந்தெய்திக்
கோமுடியைச் சூடநின்ற கோமனங்கண் டாமளவு
மிந்தவிடை யெங்கடாத் தேர்க்கா தெனப்புகன்றார்
சந்தவிடை வீரர் தடுத்து. (146)

Koviloor Digital Library

அன்பினவர் பன்னு மனக மொழியினொடு
துன்பினவை நோக்கித் துளங்கலெனை முன்பதனை
நானினைத்த துண்டு நயந்த நுமதுசெயல்
தானினைத்துச் சொற்றதென்றான் சார்ந்து. (147)

ஐயனுரை கேட்ட வரிகுலத்து நல்லரசும்
அய்யமிலாச் சேனை யரக்கர்முதல் வையமதை
ஆளுமுத னாத னடிக்கமலஞ் சிந்தைகொண்டன்
னாளமுத முண்டவ ரானார். (148)

அனையதாச் சேனை யரசை யனிலன்
தனையன் படைத்தலைவர் தம்மை வனையுற்ற
பொற்கழலார் வீடணனைப் போந்தேற வென்றுரைத்தான்
சொற்கழலார் சிந்தைநலத் தோன். (149)

சொன்னவுரை பிற்படத்தான் சூரன் மகன்தலைவர்
மன்னவரை வெள்ளமுற்ற வானரங்கள் கன்னி
மதிவிலங்கை வேந்தனொடு வந்த படையும்
அதிநலங்கொள் புட்பகத்தா ராம். (150)

பத்துநா லென்னப் பகரு முலகுபல
மெத்துவா ரேற வெளியிருமால் முத்த
ரிதனிலமை சொல்வதலா லேற்றா ருரைப்பார்
பொதுமிலமைப் புட்பகப்பொற் பு. (151)

எழுபது வெள்ள மிரவிசுதன் மற்றும்
வழுவி லிலங்கை வரமன் தழுவியசீர்த்
தம்பியொடு சானகியாம் தைய லிவர்போற்ற
நம்பியுடச் சந்திரா னனன். (152)

அண்டமதா மான மதினும்ப ருற்றவையன்
எண்டமதா மான வியல்பினொடு பண்டையுற்ற
நான்மறைக்கு மெட்டா நயத்த பரம்பொருளாய்த்
தான்சிறக்கும் சோதிவெள்ளந் தான். (153)

Koviloor Digital Library

செங்கதிரின் சேயுஞ் சிறந்த விலங்கைமன்னும்
பைங்கழலார் வீரப் படைத்தலைவர் பொங்குபடை
எல்லாருங் கொண்டா ரியல்மா னுடவடிவம்
கல்லான் மொழியை நயந்து. (154)

குடக்கிலைய மாகிக் குணக்கி னுதிப்பான்
வடக்கினைய னம்கடுப்ப மானம் தடைக்கிலவாய்த்
தாவிவிண்ணிற் சார்ந்து தகைந்துவரு வேலையையன்
தேவியெண்ணைப் பார்த்துரைப்பான் சேர்ந்து. (155)

இலங்கை வலஞ்செய்திங் கேகவென மானம்
வலங்கொள்ளுங் கீழ்வாயின் வந்த புலங்கொள்ளும்
நீலன் பிரகத்த னீங்க வடர்த்ததென்றான்
மாலன் பாகத்தான் வாய்ந்து. (156)

தெற்கடுத்து நேரில் சிறந்துவா வங்கதன்றான்
மற்கடுத்த தோள்வலவன் மாபக்கன் மிக்கடுத்த
வல்லமையை வாட்டி வலிந்றுத்தும் வாயிலென்றான்
அல்லமையுங் கூந்த லவட்கு. (157)

குடவாயில் வந்தவுடன் குன்றெறிந்தோற் கட்ட
அடலானைத் தம்பி யழித்தான் வடவாயில்
நின்றவுடன் சொல்வான் நிகரி லிராவணனைக்
கொன்றவிட மென்று குறித்து. (158)

நன்னுதலாய் நீபிரிந்த நாளான பின்னடுத்த
தென்னுதலாய் என்றின்சேய் ஏற்றபின்னர்ச் சொன்னவா
மாருதிவந் துன்னை மனம்தெருட்டி வந்தகட்டும்
வாரிதியிற் சேதுவென்றான் மன். (159)

மற்றிதன்றன் தூய்மை மலரயற்குஞ் சொல்லரிதாம்
பொற்றொடியே யானே புகலுவன்கேள் பெற்றதாய்
தந்தைமுந்தாங் தேசிகரைத் தான்பிழைத்தா ரென்றாலும்
வந்தெதிர்ந்தாற் றேவர்களா வார். (160)

Koviloor Digital Library

இந்திரனுக் கஞ்சி யிருங்கடலை நீங்காத
மந்திரத்தா குங்கந்த மாதனமு மிந்த
விடையிற் சிறக்கு மெடுத்தவரச் சேது
நடையிற் சிறக்குமென்ற னன். (161)

கங்கை யமுனை களிந்தை விருத்தகங்கை
பொங்கப் படிந்திடத்தான் புன்மைவிடும் சங்கெறியும்
வேலைதட்ட சேது விழைந்துகண்டோர் புன்மைதமைச்
சாலநட்ட மாக்குந் தரத்து. (162)

ஆவைக் குருவை யரிய மறையவரைப்
பாவையொடு பாலர் பயந்தவரை மேவினவரக்
கொன்றோரும் சேது குறித்துப் படிந்தனரேல்
நன்றோரும் தேவரென நாட்டு. (163)

மரக்கலங்கள் போக வரிசிலையாற் கீறித்
தருக்குபஞ்ச பாதகருஞ் சாரின் பெருக்கியதாம்
சேர்பிறவி தீர்ந்து சிறந்த நலமடைவார்
சார்புறுமித் தீர்த்தநலத் தால். (164)

நெற்றியங்க ணின்மலந்த னீள்சடையி னின்றகங்கை
பற்றியங்கு சேதுவெனப் பாங்கடுக்கப் பெற்றிலமா
லென்னத் தவம்புரிந்தா லேற்ற மகிமைதனைப்
பன்னத் தவம்புரிந்தார் பார். (165)

தெவ்விடத்தாம் வில்லுடையான் சேதுப் பெருமைதனை
வெவ்விடத்தாங் கண்ணாய் விளம்பினே னிவ்விடத்தான்
போற்றும் வருணன் புகுந்தான் சரணென்றான்
சாற்றுந் தருணத் தவட்கு. (166)

இதுதான் தமிழ்முனிவ னேற்றகுன்று முன்னும்
அதுதான் மணியோங்க லாகும் அஃதுதான்
அனந்தவெற்பா மன்ன தனுமா னடுத்துப்
புனைந்தவெற்பா மென்றான் புகழ்ந்து. (167)

Koviloor Digital Library

வாலி கடந்தவினை வன்மையா னன்மகிசூழ்
வேலை கடந்தவனை வீட்டியே நூலிகவா
மேலவரைப் போலும் விரற்றபனன் மைந்தனுரை
சாலவரை யென்றான் றடுத்து. (168)

கிட்கிந்தை யென்றாற் கிளைக்கு மெனதுபெண்மை
மட்குந்தா ளைய மகளிரின்மை கட்கொந்தார்
கூந்தலவர் சேரக் குறிக்கு மயோத்திவரல்
ஏய்ந்ததர மென்றா ளெடுத்து. (169)

அம்மொழியைச் சுக்கிரிவற் கண்ண லெடுத்துரைப்ப
மெய்ம்மொழியன் மாருதியை வீரநீ மைமலியும்
கூந்தலரி வாய்ந்தவரைக் கொண்டு வரவென்றான்
ஆய்ந்தலரி மைந்த னடுத்து. (170)

வரிசை வழாமையுற்ற மாதர்வெள்ளந் தம்மைப்
பரிசிற் கொணர்ந்தான் பரிந்தான விலைசெறியும்
கூந்தலவர் வேந்தன் குரைகழலிற் றும்வணங்கிச்
சேர்ந்தனர்கள் தாய்சரணத் தின். (171)

மங்கலத்தா ளுகு மரபிற் கலப்பையெலாம்
அங்கலத்தார் கொண்டா ரடுத்துவா நங்கை
உவந்துநவை யில்லையென்றா ளோங்கும் விமானம்
கிவந்துவரு மேலாய் நிரந்து. (172)

போதா விசும்படுத்துப் புட்பகந்தான் போதலொடும்
சூதார் தனத்தாய்முன் தோன்றுவது கோதா
விரிமற்ற தன்மாடு வீங்குகுன்று நின்னைப்
பிரிவித்த தென்றான் பெயர்ந்து. (173)

சிரமுற்று வாசவண்டு சேருந் திருவே
தாமுற்ற தண்டகந்தான் சார்வாம் வரமுற்ற
சித்திரகூ டந்தான் திகழும் பரத்துவசன்
சுத்திடமி தென்றா னயந்து. (174)

Koviloor Digital Library

மின்னைநிகர் மாதவட்கு வீரன் விளம்புமெல்லை
தன்னைநிகர் மாதவத்தன் தானுணர்ந்தான் என்னையருள்
நாயகனைக் காணவென நற்றவர்க ளோடடுத்தான்
மாயவினை காணு வரன். (175)

ஆதபத்தி ரம்பெருமை யான்ற கமண்டலமும்
போதமுற்ற தண்டும் பொலியவே வேதமுற்ற
நற்பயத்தா மேனிகொண்டு நாடிவரு மாதவனை
விற்புயத்தான் கண்டான் விரைந்து. (176)

எள்ளளவும் நற்கருணை யில்லா அரக்கருயிர்
கொள்ளையென வன்மறவி கொள்ளவட்ட வள்ளல்தனிப்
புட்பகத்தைப் பூநாட்டிப் போத வரநினைந்தான்
நட்பகத்தைப் பூநாட்டி னன். (177)

உன்னுமுன் சிந்தை யுலகையெடுத் தும்பருற்ற
பொன்னாடு வந்ததெனப் புட்பகந்தான் நன்னாடு
சாரக் கருணைவள்ளல் தாபதன்பா தம்பணிந்தான்
சேரத் தருணம் சிறந்து. (178)

அடியிற் பணிந்தவுட னாசி வழங்கிச்
சடிலத் துகளொழியத் தன்கண் படியருவி
போற்றப் புகழ்ந்து புனிதன் புகழளித்தா
னூற்றற் றிறத்தை யறிந்து. (179)

கருகு குழற்சனகி காவலுற்ற தம்பி
அருகுவா ஆசி யமைத்தான் உருகிவரு
போதமுற்ற நீரான் பொழிந்தான் கருணைமொழி
சாதமுற்ற நீக்குந் தரன். (180)

வானரமன் வீடணனும் வள்ளலொடு மற்றையுற்ற
ஏனைவரற் காசி யியம்பியே ஞானமுற்ற
நாயகனை நங்கையொடு நன்மனையி னடியுற்றான்
ஆயதவர் சூழ வளித்து. (181)

Koviloor Digital Library

பன்னகநற் சாலைதனிற் பாங்கான வர்ச்சனைகள்
சொன்னகநட் பாற்புரிந்து தூயோனும் மன்னவனை
நோக்கியுரை செய்வான் நுவலுந் தவத்தவத்தை
போக்கியுறை மேலோன் புனைந்து. (182)

முனிவரகத் தேவரொடு மூவுலகத் துள்ளார்
துனிபெருகத் தோம்புரியுந் தொல்லோர் நனிமடியக்
காடுகின்ற வில்லுடைய கோமா னுனதுசெயல்
நாடுகின்ற வில்லுடைய னுன். (183)

விராதன் கரன்மான் விறலார் கவந்தன்
மராமரமும் வாலிவர மார்பும் இராவணனும்
கும்பகன்ன னேற்றமொடு கூரார் பகழியொன்றால்
நம்பகன்ன வைத்தாய் நலித்து. (184)

சித்திரகூ டத்திருந்து தென்திசைக்கட் டுமைதொலைத்
தித்திசை சேர்ந் தெம்மில்வி னேற்றவரை வித்தகத்தாய்
யான்மறக்கே ளித்தினத்தி லென்னோடு பொன்விருந்தாய்த்
தான்சிறக்க வென்றான் தவன். (185)

கரதலத்தின் வெற்றியுற்ற கார்முகத்தை வாங்கிச்
சாதமுற்ற தேவர்தன்மைத் தாக்கும் மரகதத்தாம்
மேனிபொற்பாம் வள்ளால் விழையும் பரதனியல்
கானிசைப்பே னென்றான் நயந்து. (186)

வெயர்த்துவரு மேனி விழிபொழியு நீரான்
செயிர்த்துவரு மூவினையைச் செற்றோன் அயிர்த்துவர
நோக்கினுற் றெண்திசையை நோக்குந் திருவுடையான்
ஆக்கினு னல்ல லகத்து. (187)

இந்தியங்க ணீத்து மிருங்காய் கனிநுகர்ந்து
பந்தியம்புற் பாயன் பதிபுகான் நந்திப்
பதியுற் றிருந்தான் பரதனின் னுமம்
விதியுற் றறிந்து வியந்து. (188)

Koviloor Digital Library

என்றுரைத்தி ராக்கதவேந் தேற்ற விருபதெனும்
குன்றுரைத்த தோளுங் குவடேய்க்கு மென்றுரைத்த
மோலித் தலைபத்து முன்னிறுத்த வீரனைச்
சாலப் பிரிந்ததுண்டோ தான். (189)

மின்னே ருழையான் விரையு மலர்த்தவிசான்
னின்னோர் புகழ்தவத்தி னீர்மையா யுன்னோர்
வணங்கி யருள்பெற்ற மற்றென்னைப் போல
விணங்கியரா ரென்று ரெடுத்து. (190)

அவ்வுரைமுன் கேட்ட அறிவ னருளேக்கி
எவ்வரமுந் தந்தே னிசையென்னக் கவ்வையின்றும்
வென்றிக் கவிக்குலத்து வீரர்பெற்று வாழ்வதற்கு
நன்றிக் கருணைசெய்யென் றான். (191)

அரியினங்கள் சென்ற அடவி யனைத்தும்
சொரியினங்கார் காய்கிழங்கு துன்றி விரிபுனலும்
தேன்மிகுந்தோர் தோற்றஞ் செழிக்க வருளென்றான்
வான்மிகுந்தோர் போற்றும் வலன். (192)

அருந்தவத்தன் மெய்யன் அளவில் படைக்கு
விருந்தமைத்தல் செய்ய விழைந்து புரிந்துவரும்
ஆகுதியைச் செய்யும் அளவிற் சுரர்நாடங்
காகுதிறல் செய்த தடுத்து. (193)

அரசுரிய ராதி யடியாரந்த மாகக்
கரைசெறியாப் போகமது கண்டங் காசியலின்
செய்கை தனக்குச் சிறந்தமைக்கும் வேலையண்ணல்
உய்கையனு மாற்குரைக்கு மோர்ந்து. (194)

இன்றுபதி நான்வருமுன் னேற்றவரு மாருதிநீ
சென்றுவிதி செப்பிவிளை தீயவித்து நன்றிளையோன்
நீர்மைகொண்டா னேர்மைகண்டு நீமகிழ்ந்து வாவென்றான்
சீர்மைகொண்டா னுழிகொண்டான் றேர்ந்து. (195)

Koviloor Digital Library

தந்தையுடை வேகமொடு தன்னாய கன்சிலையின்
முந்தையுடைச் சாயகமு முன்னடுக்கா சிந்தைபின்னாச்
செல்வான் குகனுக்கும் தேர்ந்தோன் வரவுரைத்துச்
செல்வான் ககனத்திற் சேர்ந்து. (196)

இன்றிசைக்கண் மெய்யொன்றி ராமன் கருணைவள்ளல்
தென்றிசைக்கண் செய்நன்றி செப்பினோம் நன்றிசைக்கு
மேலா மயோத்தி விழைந்த செயலதனை
மாலா மதித்துரைசெய் வாம். (197)

நந்திப் பதிக்க ணயந்துவரு நாடோறும்
சந்திப்ப தின்றித் தனதுமுன்னோன் வந்திப்பான்
அங்கழலைப் போற்றி யகத்திந்தி யங்களைந்து
பொங்கழலைப் போன்றான் புனைந்து. (198)

துன்புருக்க நின்று துரிதத் திருக்கவொணா
என்புருக்குந் தன்மையதா யேங்கியே முன்புருக்கொண்
டோர்வழியின் முற்றா வொருவன் புருக்கொண்ட
சீர்வழியின் முற்றுந் தெரிந்து. (199)

நினைந்த பொழுதக்கண் ணினீரடுத்துச் சேர
இனத்த பொழில்நாட் டிருந்தும் கனத்தகந்தம்
காயுமற்று முண்டு கருத்திற் கமலசரண்
நேயமுற்று நின்றான் நினைந்து. (200)

நோக்கிற்றான் தென்றிசையை நோக்குஞ் செயலொன்றே
ஏக்குற்றான் ஏக்குற் றிரவிகுலன் வாக்குற்றான்
பொய்யான் வருமென்று போற்று முயிருடைந்து
நைவான் வருந்தியந்த நாள். (201)

உண்ணுகின்ற நீர்க்கு முயிர்க்கு முயிராக
எண்ணுகின்ற கீர்த்திவள்ள லேற்றுமுடி மண்ணுகின்ற
நீர்க்குவரம் புள்ளம் நினைத்தன்றிக் கண்ணினுறு
நீர்க்குவரம் பில்லான் நினைந்து. (202)

Koviloor Digital Library

அனையபொன்னான் விற்பாதன் அன்றலங்கல் தன்னாற்
புனையுமுன்னோன் பாதயுகம் பூசை யினையவரு
காலம் நினைத்தனனும் கண்ணன் மனைக்குவரு
காலம் நிலைத்த கணக்கு. (203)

ஆண்டுவரவாகும் அடுத்தென்ன வெண்ணவுடன்
மாண்டவரர் சோதிடரை வல்லைதனி வீண்டுத்
தருகவென வேய்ந்தார் தனியரச னின்னாள்
வருகவென வாய்ந்தார் மதித்து. (204)

என்றுரைத்த போதி னிராமன் வனத்தினிடை
சென்றடுத்த போதெனத்தான் செல்வத்தை வென்றடுத்த
வீரனுடன் வீழ்ந்தான் மிகைத்தடித்துக் கொன்றதெனச்
சோரவுடல் தாழ்ந்தான் துடித்து. (205)

மீட்டெழுந்து பண்ணின் விரிந்தசெந் தாமரையின்
காட்டைவென்ற கண்ணிற் கலுழியுக நாட்டும்
உயிரதனை யூச லுடனாட்டச் சிந்தை
செயிரதனைக் கொண்டான் திகைத்து. (206

எனக்கியம்பு நாளு மெனதின்னல் தானு
தனக்கியைந்த தாய்நேயந் தாங்கி வனத்துவைகல்
செய்யான் தனக்கடுத்த தீயபகை யுண்டென்று
மெய்யான் மதித்தான் மெலிந்து. (207)

மூவகைத்தா முற்றிவரு மூர்த்தியர்தாம் முன்வரினும்
பூவகத்திற் கோவிற் புறத்தினிற்றான் எவர்நிற்பர்
என்னுடைய ஐயன் யெதிர்க்கி னெனவுரைத்தான்
தன்னுடைய ஐயம் தணிந்து. (208)

என்னையினும் பொன்னரசி னிச்சை யுளனாகும்
அன்னயின னாகின் அமலமிகு மன்னனவன்
ஆகனன்றென் றெண்ணி அடுத்திருந்து பார்த்தனனே
சேகனென்றென் சிந்தைத் திறம். (209)

அனைத்திலங்கொன் றென்னை யடுத்ததெனா மாக
வனத்திலங்க வையம் வருக நினைத்துத்
துயர்கொடுத்துச் சோரேன் துகளின் மனத்தை
உயிர்கொடுத்துச் சேர்வே னுரம். (210).

என்னமிகப் பன்னி யிளவறனை யென்னுழையிற்
றன்னவரச் சொல்லென்னத் தூதர்சென்றா ருன்னவரக்
கூயினா னும்முனெனக் கூறு முனமடுத்தான்
சேயினான் தம்பி சிறந்து. (211).

தொழுதுநின்ற தம்பிதனைத் தோய்கண்ணீ ராகம்
எழுதிநின்ற மார்ப னெடுத்து முழுதவரம்
வேண்டுவதுன் பாலின் விசய மருத்தலின்றி
ஈண்டுதா வென்றா னிசைந்து. (212).

என்முடித்த தாகு மியைந்த வரமென்னிற்
சொன்முடித்த நாளினண்ணல் தோன்றிலனால் மின்னும்
நெருப்பினின்றே பொன்றுவனா னீமன்னா மென்ற
விருப்பினின்றே னென்றான் விரைந்து. (213)

கேட்டதவத் தோன்றல் கிளருந் தடக்கரத்தாற்
தோட்டசெவி பொத்தித் துணுக்குற்றான் வீட்டநஞ்ச
முண்டானை யொத்தான் உயங்கினான் நாட்டமுடன்
எண்டானை யுற்றான் இரிந்து. (214).

விழுந்துயர்ந்த விம்மலினான் வெய்துயிர்த்து நொந்தான்
எழுந்துனக்கு நான்பிழைத்த தென்னை அழுந்துமனத்
துன்புற்றா யென்றான் துரியவள்ளல் சேவடிக்கண்
அன்புற்றா னன்பன் அறிந்து. (215).

கானாளப் பூமகளைக் கைவிட்டா னைக்காத்துப்
போனானோர் தம்பி புகல்கெடுப்போ யானா
வுயிரடையே னென்றா னொருதம்பி யானோ
செயிருடையே னென்றான் றிகைத்து. (216).

Koviloor Digital Library

மன்னிற்பின் மன்னகரம் வாழ்ந்தான் பரதனெனுஞ்
சொன்னிற்பி னென்னையெனச் சூழ்புறத்தா யுன்னிற்பின்
உற்றிருக்கு மென்னி னொருகுடையி னிவ்வரசிற்
பற்றிருக்கு மென்றான் பதைத்து. (217)

முத்துருக்கொண் டென்ன முழுமுளரிச் செங்கணுடைச்
சத்துருக்கன் பன்னவள்ளல் தாழ்ந்ததுதான் ஒத்திருக்கும்
என்மனத்தென் றன்னி யெரிபோ யமைக்கவென்றான்
தன்மனத்தன் தம்பி பரதன். (218)

அப்பொழுதா மிச்சொ லயோத்தி வரவரிதாய்
ஒப்பெழுதாக் கோசலையா முத்தமியா ளிப்பொழுதே
எல்லா மிறக்கு மெழிலார் பரதனுடன்
இல்லாதென் றேங்கும் நினைந்து. (219)

மந்திரியர் தந்திரத்தார் வாழு நகர்மனிதர்
சுந்தரியர் மற்றுந் தொடர்ந்துவா விந்திரனே
முற்றமரர் போற்ற முழுதாற்றி வந்தடைந்தாள்
பற்றமரு நற்றாய் பரிந்து. (220)

எரியமைக்குந் தான மியைந்துநின்ற சேயை
விரியமைத்த வேணிபுரம் வீழச் சொரியும்
நெடுங்கண்ணாள் சேர நினைந்து தொழுதான்
தடங்கண்ணான் தம்பிபர தன். (221)

மன்னிழைத்த செய்கையொடு மைந்த னிழைத்ததுவும்
முன்னிழைத்த மன்விதியின் மோகரந்தான் பின்னிழைத்த
செய்கையது மப்பெற்றி தேறிவரு நற்குணத்தாய்
செய்கையிதென் னென்றாள் தெரிந்து. (222)

நீயுமன்ன தென்னி னெடுநா டெரியதனிற்
பாயுமன்னர் சேனை பரிந்தெரியாம் தாயரெண்ணில்
எம்மையொன்றே வன்றறமு மேற்ற வெரிபாயும்
செம்மையொன்றா தென்றாள் திகைத்து. (223)

Koviloor Digital Library

தருமமென்ற நீதியினுந் தற்பயனே யுந்தன்
கருமமன்றிக் கண்டிலமாங் கண்ணால் அருமையொன்று
நீயுணர்வா யல்லை நிகர்பெருமை யூழிமுற்றும்
ஆயுணர்வி னென்றா னனே. (224)

எண்ணிலவாங் கோடி யிராமர்க ளென்றாலும்
அண்ணல் நினதருளுக் காவரோ புண்ணியந்தான்
என்னுலவு நின்னுயிரை யெண்ணலையேன் மண்ணினொடு
பொன்னுலகும் போமென்றாள் பொன். (225)

இன்றடுத்த தில்லா தெனிலடுத்த நாள்விரைவின்
வென்றெடுத்த வில்லான் விழைந்தடுக்கும் பின்றுமெனில்
சாவுளதா மன்ன தடுப்ப ரெவரென்றாள்
கோவுளதாய் நன்மை குறித்து. (226)

ஒருநலத்தான் மாண்டதனா லூழியுற்று வாழும்
பெருநிலத்துத் துன்பம் பெரிதாம் கருவினொடு
மாண்டிறத்தான் காணுதியோ மன்னு கலைநீதி
பூண்டிறத்தா யென்றான் பொருத்து. (227)

இறக்கையதுஞ் சிற்சிலர்க ளேகலது மோகம்
பிறக்கையதும் பாசமெனப் பின்னும் மறக்கையதே
என்மகனே வன்மை யியைந்த துறவறந்தான்
நன்மைதரு மென்றாள் நயந்து. (228)

மைந்தனென்னை பின்னு மறத்துரைத்தா னென்றருளேல்
எந்தைமெய்மை யிக்குலத்தி னேற்றமொடு நைந்தகல
இச்சையிலை நல்லுயிர்மே லேற்றசப தம்புரிவேன்
அச்சமிலை யென்றா னடுத்து. (229)

யானுமுடன் மெய்யினுக்கா யாண ருயிர்கொடுத்து
வானுமுட னெய்தாசன் மைந்தனென்பேன் கானுளெய்தும்
காகுத்தற் காகுங் கடமை யெனக்கிலையோ
சேகற்றா யென்றான் தெரிந்து. (230)

Koviloor Digital Library

தாய்சொற்றும் கேட்பதுவுந் தந்தையுரை கேட்பதுவும்
பாசத்தா மன்பைப் பறிப்பதுவும் ஈசற்குத்
தான்கடனும் யானிழைக்கேன் தக்க செயல்புரிவேன்
வான்கடனு மாண்டு மதித்து. (231)

என்றடுத்துத் தீயைவல மேற்றி யிரைத்தெழுந்தான்
ஒன்றடுத்த பூச லுலகருடன் பின்றடுத்துப்
பூசைபுரி நேசற்குப் பொற்குன்று போலடுத்தான்
தேசுபுரி வேய்மாரு தி. (232)

ஐயடுத்து வந்தா னனக னடுத்துவந்தான்
மெய்யடுத்த பின்னுயிர்தான் வீடுமே லுய்யுமோ
அன்னவன்தா னென்று னடுத்தா னெரிகரியாய்
மன்னவன்கை கொண்டு மதித்து. (233)

ஆக்கி யனகன் அறிவன் மலர்த்தாளைத்
தாக்கித் தலைவைத்துத் தாழ்ந்துகரம் வாக்கிற்
புனைத்துநின்று மாற்றம் புகல்வே னெனத்தான்
மதித்துநின்று சொல்வழங்கு வான். (234)

இன்னமுற்ற நாழிகையு மெண்ணேந் துளதைய
உன்னைமுற்றும் வந்திங் குரைத்தநாள் அன்னமுற்று
தென்னிலடி நாயே னிகலெரியின் வீழ்வனென்றான்
தன்னிலடி யானுந் தரன். (235)

ஒன்றுளதா மைய வுனதடிமை சொல்லதனுல்
பின்றுளதா நேமி பிகர்குணக்குக் குன்றுளதா
முன்னயமாங் குன்றின் முறையுலகு நீயுமுடன்
நன்னயமாம் பொன்ற லென்றனன். (236)

சங்கையத்தந் தாங்குந் தனிமுதற்குச் சார்விருந்து
பங்கயத்த ஞேங்கும் பாத்துவசன் அங்கியற்ற
வைகுவா னன்றி வரவைத் தடுத்தலுண்டோ
உய்குவான் கேட்டி யுகந்து. (237)

Koviloor Digital Library

அண்டமுடை நாத னருளி யளித்துள தாம்
உண்டதடை யாளம் உனக்கதுநான் கொண்டடைந்தேன்
போதத்தாஞ் சிந்தைப் புனிதவெனப் போற்றினன்
வாதத்தா மைந்தன் வரைந்து. (238)

காட்டிவரு மோதிரந்தான் கண்ணினுற் காண்டலுமே
ஊட்டிவரு வல்விடத்தா லோய்பவர்க்கு நாட்டிவரும்
நன்மருந்தை யொத்த நலத்த வுலகுக்கும்
பொன்மருங்காம் தம்பிக்கும் போந்து. (239)

அழுகின்ற வாயெல்லாம் மார்த்தெழுந்து சாரும்
விழுகின்ற கண்மாறும் வெள்ளம் உழுகின்ற
சேகரங்க ளெல்லாஞ் சிறந்து நிமிர்ந்துவரும்
ஆகரங்க ளெல்லா லடுத்து. (240)

மோதிரத்தை வாங்கி முகத்தி லணைத்துவரும்
ஆதரத்தைத் தாங்கவுட லாமோவென் றோதறத்தர்
நாணமுற்ற வோங்கினன் நற்றாத னைத்தொழுதான்
காணமுற்ற மேலோன் கசிந்து. (241)

ஆதிதனி லாந்துயர மல்லாது வேறருந்தான்
உளதப் பறக்கு முடலன்றி எதிவன்றன்
வேறொருவ னென்ன விளங்கும் வயிரத்தோள்
கூறுவதென் றுகும் குறித்து. (242)

அழும்சிரிக்கு மாருதியை யாழிக் கரத்தாற்
தொழுந்துதிக்குந் துள்ளுந் துளங்கி விழுந்துதிக்கும்
எங்கும்போய் வீங்கு மெழுந்துகுழு வோடாடும்
தங்கும் பாய்ந் தோடும் தளிர்த்து. (243)

ஆடுமின்க ளென்னும் அருளோங்கு மையன்பா
லோடுமின்க ளென்னு முடனேங்கிப் பாடுமின்கள்
பாடுமின்க ளென்றுரைக்கும் பண்ணவனுந் தூதன்றோள்
சூடுமின்க ளென்னுந் துதித்து. (244)

Koviloor Digital Library

வஞ்சனையைச் செய்து மதியற்ற கைகேசி
துஞ்சனய மென்றுதன தோள்கொட்டும் குஞ்சிதமாய்த்
தன்னடிகள் மண்டிலத்திற் றூனுக்கி யஞ்சனக்குன்
றென்னநட மாடு மெடுத்து. (245)

வேதியரைப் போற்றுமுடன் வேந்தர் தமைப்போற்றும்
தாதியரைப் போற்றித் தனிவணங்கும் ஏதுமொன்று
தானுணரா நிற்குந் தனிக்காதல் கள்ளடுத்துக்
கோனுணரா நிற்குங் குறித்து. (246)

அத்திறத்த வண்ண லனுமன் றனைநீதான்
எத்திறத்த வண்ண மியைந்தவான் முத்திறத்த
மூர்த்தியுற்ற மூவரிலோர் முன்னவனென் றென்மனதின்
ஆர்த்தியுற்றே னென்றான் அறிந்து. (247)

மறையோர் வடிவு மதிக்கும் படியாம்
இறையோ னெனமனந்தா னெண்ணும் துறைதான்
எனக்கியம்ப வென்றுரைத்தா னேற்ற வனுமான்
தனக்கியைந்த நன்றுமொழிந் தான். (248)

காற்றி னுக்கு மானதமாக் காணுங் கவிக்குலத்து
நோற்றிருந்தாட் கேற்றுதித்து நும்முன்னுற் காற்றும்
அடித்தொழிலேன் மாற்றினே னன்ன வுருவம்
மடித்தொழியா நற்குரங்கா மால். (249)

அடித்தா மரைத்தொழிலா னற்ப வுருவைக்
கடித்தா மரைக்கண்ணிற் காணப் பிடித்துவரு [ஞட்டார்
பொய்யுருவைப் போக்கிநின்றான் பொன்முடியைப் பொன்
மெய்யுருவக் காணு விதம். (250)

வெஞ்சிலைய வீரர் விரிஞ்சன் மகனுமடுத்
தெஞ்சலிலா நன்மையென வெண்ணினுர் துஞ்சிலதா
மென்றுலுஞ் சேனை யெடுத்தபயத் தாம்பொறியை
யொன்றுனைக் கண்டகங் குவந்து. (251)

Koviloor Digital Library

ஈங்குமின்று யாமிசைக்கு மேற்ற முளமாற்றம்
தூங்குகுண்ட லச்செவியிற் சூழ்வாத்தான் ஒங்கலவா
மாதலினுல் யாக்கை படக்க விரைந்தென்ன
வோதலினுற் கொண்டா னுகந்து. (252)

சுருக்குமுரு வாய்த்தொழுது தோன்றிமுன் னின்ற
அருக்கனருள் மாணவனுக் கன்பாற் பொருக்கும்
நிதிபுனைபொற் பூணனிக நேரின்றித் தந்தான்
நதிபுனை பொற் ருண்மனத்தி னுன். (253)

கோவினெடு தூசு குலமணிப்பூண் கோமளமார்
மாவினெடு மாபரித்தேர் மால்யானை தாவிவரு
நீருடுத்த பூமி நிகரின்றித் தான்கொடுத்தான்
சீருடுத்த தூதற்குத் தேர்ந்து. (254)

இளவலைப்பார்த் தண்ணற் கெதிர்கொளற்கு நம்பும்
வளைமதிற்பே ரய்யோத்தி மாக்கள் கிளைமதிக்கச்
செல்லை முழக்கொன்றுந் திருவார் முரசமதை
வல்லைமுழக் கென்றுன் மகான். (255)

தோரணப்பொற் பேர்றித் துகிலதனை மேற்பொதிந்து
பூரணப்பொற் கும்பம் பொலியவைத்து வாரணத்தி
ஞேடிவுளி தேரு முவந்தணிக வென்றுரைத்தான்
நாடியுள நன்மை நயந்து. (256)

பாத்துவன்றன் சாலைவரை பைம்பொன்னுல் நீண்ட
சிரத்த மதிலிருந்து சேர வுரத்த
தாளத்தாம் பந்தர் சமைக்க வுரைத்தான்
சாளத்தாம் சிந்தைத் தரன். (257)

அவ்வுரையைக் கேட்ட அறிவடுத்த வேலையினுன்
கவ்வையிலாச் சொல்லாற் கனமருவு வெவ்வெயிலார்
வீதியெங்குந் தேற விளங்கும் பறைசெழித்த
சோதிதங்குந் தூநகர்ச்சூழ்ந் து. (258)

Koviloor Digital Library

வானையெதி ராசை வரைந்துவரு வான்புகழார்
கோனையெதி ராசை குறிக்குநகர்த் தானை
யாசை ரெழுகவென வான்ற முரசம்
விரசியெழ வந்தார் விரைந்து. (259)

முரசொலிதான் கேட்டு முழங்கு நகரார்
அரசரொடு மந்தணர்க ளானார் கரைசெயற்குத்
தாங்கா வுவகை தலைக்கொள்ள வந்தடைந்தார்
பாங்காங் கடல்போற் பரந்து. (260)

அனகனெதிர் கொள்ள அறைந்ததிறற் பேரி
கனகமது நல்கூர்ந்தார் கையாய்ச் சனகன்
மகத்துவகை மாநகர்செல் மன்பேரி யென்ன
அகத்துவகை கொண்டார் அறிந்து. (261)

அறுபதி னு மாயிரத்த வக்ரோணி சேனை
செறிபதியா மாந்தர் சிறந்தோர் உறுபொருளைக்
காணவரு மேலோர் கருத்து மிகமகிழ்ந்தார்
சேனைமரர் சிந்தையெனத் தேர்ந்து. (262)

அன்னையவர் மூவ ரமரர் புகழ்ந்தேத்தப்
பொன்னையிவர் பூஞ்சிவிகைப் போயினார் தன்னையறி
மாமுனிவர் சூழவனு மாஅமலர்க்கை பற்றிவந்தான்
கோமுனிவில் சிந்தை குளிர்ந்து. (263)

திருவளரும் சேவடியே செம்பொன் மவுலி
இருபுரமுஞ் சாமரைக ளேற்ற வெருவுங்
கடல்முழக்க மென்னக் கவினியங்க ளார்ப்பக்
குடைநிழற்ற வந்தான் குளிர்ந்து. (264)

எல்லோன் குடக்கா னெழில்சேர் பரதனருள்
வில்லோனைக் காண விரைந்தடுத்தான் அல்லிக்
கமலமெனுந் தாளிற் கனற்றுஞ் சுடரைக்
கமலமெனக் காட்டிக் கடந்து. (265)

Koviloor Digital Library

அவ்வழிக்கண் மாருதிதன் னங்கை மலர்பற்றிச்
செவ்வழிக்கண் மாலாந் திருநாதன் எவ்வழிக்கண்
சேர்ந்தான் பரதன் செயலை யுரையென்றான்
தேர்ந்தான் பரதன் சிறந்து. (266)

என்றவுடன் மாருதியு மேற்றவா னெம்பிரான்
மன்ற லயோத்தி வளநகர்வாய் நின்று
மனைநிரம்பி மீண்டபின்னர் வாழ்வுரைப்பே னென்றான்
குணநிரம்பு மேலோன் குறித்து. (267)

சித்திரகூ டத்தைவிட்டுத் தீர்ந்தபின்னர் சேகரந்தான்
பத்துடையா னோடுவிளை பண்பதுவு மித்தலையின்
வந்தியா வுந்தான் வகையி னுரைப்பனென்றான்
சந்தியா வந்திடைவந் தான். (268)

குன்றுறழும் வில்லாா குரிசிலவ னெம்பிரான்
தென்றிசையிற் சேர்மலையைத் தீர்ந்தபின்னர் வென்றிசெயு
மேனலத்த வீரன் விராதன் றனைப்படுத்துத்
தானலத்த தண்டகம்வந் தான். (269)

ஆங்கடுத்த மேலோ ரரக்கர் தமக்காற்றேம்
பாங்கடுத்த நற்றவமும் பாழென்றார் தீங்கடுத்துச்
செய்தவரை யொல்லை செருப்பதுதான் திண்ணமென்றான்
எய்தவரை வில்லான் எடுத்து. (270)

ஆறிெனாடு நான்கும் அடுத்தசமை யாண்டிருந்தான்
வீறிெனாடு மாமுனிவர் வேண்டியதான் மாறில்
தமிழ்தந் தருள்முனிபொற் றாளிற் பணிந்தான்
அமிழ்தந் தருமொழியா னங்கு. (271)

குடங்கை குவித்துக் குரைகடலைக் கொண்டோன்
தடங்கை தனக்குத் தனுவும் கடுங்கணைசேர்
புட்டில் கவசம் புகழ்சுரிகை யுங்கொடுத்தான்
மட்டில் தவத்தான் மகிழ்ந்து. (272)

Koviloor Digital Library

அப்புரத்திற் சேர்ந்தெருவை யாமரலைக் கண்ணுற்றான்
இப்புறழ்வாய்த் தோகையுடன் சோர்வில்லான் மெய்ப்புகழ்
தம்பியுடன் வீரன் சமைந்திருந்தான் பஞ்சவடி [சேர்
வம்பியலும் சோலை வளத்து. (273)

பல்லியநா டரப் பதகி யரக்கியுற்று
மெல்லியலைச் சீற வெகுண்டிளையோன் நல்லியலைத்
தேற்றாள் செவிமூக்கும் சேதித்தான் கொங்கையுடன்
ஆற்றாள் கார்குறைத்தா ளாங்கு. (274)

கானுடனே மூவர் கனன்றகனல் மூன்றாய்
விரவிவரு சேனையுடன் மீளார் வரவிமலன்
வின்னோக்கா முன்னம் விரிதூலத் தீயொத்தார்
அன்னோக்காள் தென்னிலங்கை யான். (275)

இருபதுற்ற கையாற் கிசைக்க வெழுந்தான்
பொருதலுற்ற வஞ்சனைமான் போக்கித் தருபதத்த
தாபதன்போல் வந்து தகுந்தநிலத் தோடெடுத்தான்
தீபதங்க மென்னத் தெரிந்து. (276)

போகின்ற காலை பொருதெருவை மன்னையட்டு
வேகின்ற தாஞ்சிறையின் மேவவைத்தான் ஏகின்ற
வஞ்சமான் மாரிசனை மாய்த்தவள்ளல் தம்பியொடும்
தஞ்சமாம் தந்தையைக்கண் டான். (277)

அன்னவற்கு வேண்டு மரிய கடனாற்றி
நன்னுதலைத் தேண்டி நடக்குமையன் மன்னும்
கவந்தனுரு மாற்றிக் கருதும் சவரி
தவந்தனுவாள் பூசனைசார்ந் தான். (278)

ஆங்கவனை சொல்லா லரியரசன் சுக்கிரிவன்
பாங்கவனை கட்டுப் பகைதீர வோங்கம்
மாவலியை வாலியுடன் மாத்தி யரசும்
பொருவலியுந் தந்தான் புனைந்து. (279)

Koviloor Digital Library

மாரிவந்து நீங்க வயக்குமுத னீலனொடு
சேரிடபன் சாம்பன் திறற்பனசன் நேரவரு
வாலிமைந்தன் மற்றும் வளமார் படைத்தலைவர்
கோலிமைந்தார் வந்தார் குறித்து. (280)

எழுபது வெள்ளத்தி னேற்றவரி பொங்கிக்
குழும வரசன் குறித்துத் தழுவுதிசை
வெள்ள மிரண்டடுக்க மேலவரை யேலவிட்டான்
கள்ளமுரி யான்செயலைக் கண்டு. (281)

தென்றிசையி ரண்டுவெள்ளஞ் சேனை யுடனடுத்த
வன்றிறலார் வாலிமைந்தன் வார்த்தையினால் குன்றூர்
இலங்கைபுக்கேன் நற்றிருவை யெய்திவந்த பின்னர்
வலங்கொள்படை வேலைவந்த வாம். (282)

அறிவினுற்ற வீடணமால் அல்லரக்கன் தம்பி
நெறியினுற்றான் தாயைவிடல் நேர்மை உறுதியெனச்
சொன்னதனாற் சீறத் துறந்து கருணைவள்ளல்
பொன்னடியைச் சார்ந்தான் புகல். (283)

ஆங்கடுத்தாற் காக்கி யபய முடியரசு
பாங்கடுக்கா தாம்வருணன் பண்பறிந்தான் ஓங்கும்
நயனஞ்சி வந்தான் நளனையுடன் வெந்த
பயனஞ்சி வந்தான் பரிந்து. (284)

மற்றோன் சரணமென வள்ளல் வழங்கியபின்
வெற்றிவரர் வானரர்கள் வேலைதட்டல் முற்றி
இலங்கையுறச் சூழ்ந்தா ரிமையோ ரரசும்
நலங்கையுற வாழ்ந்தா னயந்து. (285)

மலைபற்றுந் தோளு மதக்கோடார் மார்பும்
தலைபத்துந் தம்பியுடன் சாரும் கொலைபற்றும்
வல்லரக்கர் வீழ மடித்தான் தொடிக்கரத்து
வில்லிருக்கும் வீரன் விழைந்து. (286)

Koviloor Digital Library

இலக்கா மிலக்குவனே யிந்திரசித் தோடு
விலக்கா வலத்தினரை வீட்ட அலக்கணுற்ற
தேவர்மல ராப்பொழிந்தார் செய்தார் தவமுனிவர்
மேவமல ராசி விழைந்து. (287)

கோவகையார் சித்தர் குழுக்க ளொடுமீண்டி
மூவகையா மேவுலகோர் மொய்ப்பவே பூவைவண்ணன்
சொல்லால் வீடணனுக் தோய முறைசெய்தான்
வல்லார் அரக்கர்க்கு வாய்ந்து. (288)

நான்முகத்தான் மற்றை நலமடுத்த தேவரொடு
வான்முகத்தார் போற்ற மகிழ்வள்ளல் தேன்முகத்த
கொங்கழைத்த கூந்தற் கொடியை யரியுரையால்
அங்கழைத்தான் சீற்ற மகன்று (289)

மெய்க்குயிரை யீந்த விறல்வேந்த னங்கெய்தித்
தக்கசரண் வீழ்ந்தவரைத் தாங்கினன் மிக்கவரு
கண்ணீரா லாட்டிக் கருது வரங்கொளென்றான்
விண்ணோரார் போற்ற விழைந்து. (290)

என்னைநம்பி யாக விசைத்தாள் மகனுமுடன்
அன்னைதம்பி யாக வருவென்றான் மன்னன்
வரங்கொடுத்துச் சென்றான் வழங்கினர் தேவர்
தரங்கொடுத்த வானரர்வந் தார். (291)

வெள்ள மெழுபதெனும் வீர ருடன்தலைவர்
உள்ளவரும் வானரமன் னேங்கவே கொள்ளும்
விமானமதை யீந்தான் வீடணனும் வேந்தன்
சமானமதை யேந்தான் தான். (292)

ஆரியன்தான் பின்னை அருளி னினைந்துவரு
சூரியன்சேய் தோன்றல் துணைவருடன் பேரிலங்கை
வேந்தாம் படையோடு மேலாம் விமானமதிற்
சார்ந்தான் பரத்துவனைத் தான். (293)

Koviloor Digital Library

அன்பிற் சிறந்தவா ஞழி நினக்களித்துத்
துன்பைத் துறந்துவாச் சொற்றனனு லென்பதனைச்
சொற்ருன் கடல்தாவித் தொல்லிலங்கை வல்லெரிக்குப்
பற்ருக வைத்தான் பரிந்து. (294)

காலின் மகனுரைக்கக் கண்ணீர் வாப்பாதன்
வேலி மதிலிலங்கை வேட்டங்கொள் நீலமுகில்
பின்னடுத்த மேன்மைபெற்ருன் பேரான தம்பியெற்கிங்
கென்னடுத்த தென்ரு னிகழ்ந்து. (295)

இராவண வேட்டத்தி னெம்பிரா னெய்தித்
தராதலமான் மாமகிழத் தாங்கும் அராவுமௌலிக்
கேய்ந்த சிகாமணியை ஏற்றிஞ னென்னவெய்யோன்
வாய்ந்தகுணக் குற்ருன் மகிழ்ந்து. (296)

காலைவந்த பின்னை கமலாக்கன் ருள்பணிந்து
சாலவந்தின் சேயே தவறுண்டாங் கோலவுந்தன்
வாய்மைக் குலைவுண்டோ வள்ளலெங்கா மென்றுரைத்தான்
தாய்மைக் குலகாந் தரன். (297)

எழுபதுடை வெள்ள மிசைந்திலங்கை வேந்தைத்
தழுவுபடை வெள்ளஞ் சரிக்கின் அழுவநீர்
வேலைவா வென்ன மிருந்தாவ மில்லையென்ருற்
சாலவா னன்றிவணென் ருன். (298)

ஓசனையுந் தாமிரண்டா முற்ற பாத்துவன்கா
வீசுதிரைச் சேனை மிகுந்தசத்தம் பேசலின்ரும்
எம்பிரான் சிந்துவுட னேற்றிருப்ப தெங்கென்ருன்
தம்பிரான் சிந்தை தளர்ந்து. (299)

பாத னுரைக்கப் பணிந்துரைப்பா னெம்மான்
விரதமுனி விண்ணவரை வேண்டி வாதன்
விருந்தளிப்ப வுண்டு விழைவின் மயங்கி
இருந்தளிக்கு மென்ரு னெடுத்து. (300)

Koviloor Digital Library

இனியோங்கு மோர்கணத்தி னெய்ந்தருளுஞ் சேனை
பனியோங்கு கண்ணீயே பார்த்தி எனவுரைத்தான்
மாமுனிபால் வந்த மலர்க்கண்ணன் செய்கைதனை
நாமுமினிச் சொல்வாம் நயந்து. (301)

அருந்தவன்தா னையற் கறுசுவையை யாக்க
விருந்தருந்தி நன்றளித்த வேலை கருங்கடலாஞ்
சேனையுடன் வந்தான் சிறக்கும் கிராதர்பதி
கானையுடன் கண்டு களித்து. (302)

தொழுதான் மனங்கண் டுளங்கினான் சூழ்ந்தான்
அழுதா னடிக்கமலத் தாழ்ந்தான் தழுவியுடன் [தான்
மார்பணைத்தான் மக்கள்சுற்றம் வாழ்வுடைத்தா மென்றுரைத்
சார்பணைத்தார் சிந்தைத் தான் (303)

அருளுளது நாயேற் கவரெல்லா மென்னை
பொருளுளது நின்னுடனே போந்து தெருளிளைய
வீரனைப்போற் செய்கை விழையா மனமுடையேன்
சாரநிற்பேன் சுற்றமென்றான் தான். (304)

ஆயனவாய்ப் பன்னி யழுங்குவான் றன்னையைய
நீயனவாய்ச் சொல்வதென்ன நேர்பாதன் போயிருத்தி
என்றான் புளிஞர்க் கிறையிளையோன் தாள்வணங்கிப்
பொன்றாள் புனைந்தான் புகழ்ந்து. (305)

தொழுதவனை நோக்கித் துணைவரையு நோக்கி
முழுதுணர்வான் வீரன் மொழிவான் தழுவுகங்கைப்
பேர்கரைக்கு நாதன் பிறங்கு குகப்பெயரான்
சீர்கரக்கா னென்றான் சிறந்து. (306)

அண்ணலுரை கேட்ட அரிக்குலத்து மன்முதலா
நண்ணலுறு நற்றுணைவர் நட்டனராம் கண்ணகன்ற
ஞாலமறை கங்குலதை நாடிப் பொதிவான்போற்
சாலமறைந் தானிரவி தான். (307)

Koviloor Digital Library

அலங்கலந்தோள் மேலோனு மந்தி புரிந்து
பொலங்குழையா ளோடுதயில் போழ்தி னிலங்கிவரு
சீர்த்தாண்ட சேனைகுகன் சேயதம்பி தானுநின்றார்
மார்த்தாண்டன் வந்தாம் வரை. (308)

கதிருதித்த காலை கடன்முடித்துக் கண்ணன்
முதிர்தவத்த மாமுனிதான் முன்னி விதியளித்த
மானத்தி லேறி மகிழ்ந்தான் துணைவருடன்
ஞானத்தி லேறும் நலன். (309)

தாவிப் படர்மானந் தாமாகஞ் செல்வேலை
மேவிப் படர்தான மேவாத வோவியமாம்
பொன்னகர யோத்தி புனையு நகர்காண
அன்னவர்கள் கண்டா ரடுத்து. (310)

பொன்மதிலாற் சூழும் புரியடுத்துத் தோன்றவுடன்
நன்மதியோர் தம்மையுற்ற ஞானவரன் சொன்மதித்தற்
கேலா வயோத்திநக ரென்றவுடன் மேலோர்கள்
மாலா யெழுந்தார் மகிழ்ந்து. (311)

அன்ன வளவை யகல்விசும்பா மன்னதெனத்
துன்னு கதிரவன்றான் தோன்றுமெனப் பொன்னணியும்
புட்பகவி மானம் பொருவி லரசனுடன்
நட்பகவத் தோன்றும் நயந்து. (312)

அண்ண லுடன் காண்டி யலர்ந்த கமலமெனக்
கண்ணனொடு வானரங்கள் கற்புடைய பெண்ணும்
தருகின்ற நன்மைத் தரத்தம்பி யோடும்
வருகின்ற தென்றான் மதித்து. (313)

ஏழிரண்டா யேற்ற வியலுலக மேறினுந்தான்
பாழிப் புரத்தாம் படியாகச் சூழொளிசேர்
மானத்திற் றோன்றினான் வள்ள லெனவுரைத்தான்
ஞானத்திற் றோன்றும் நலன். (314)

Koviloor Digital Library

பொன்னொளிசேர் மேருப் பொதும்பரிடை புக்கதொரு
மின்னொளிய மேகமென வீரனுற மன்னன்
எதிர்வருவா ரார்ப்பிலங்கை யேற்றடுத்த தென்றான்
அதிசயந்தான் சொல்வதெனைத் தாம். (315)

உளனுடைய யாக்கைவிட்டு முண்மை தனைவேண்டி
வானுடைய தந்தைவர வாழ்ந்ததெனக் கானிடையாங்
கண்ணன் றனைத்தம்பி கண்டு கருத்துற்றான்
எண்ணுமுயி ரென்ன விசைந்து. (316)

கெட்டபொருள் வந்து கிடைப்ப வதன்முன்பு
பட்டதுயர் போயதெனப் பையுள்போய் வட்டவான்
மானவனைப் போற்றலுன்னி மாருதியைக் கைவிட்டான்
ஞானவனை வானபொன்ம னன். (317)

அக்கணத்தா ளுமனுமா னவ்விடையி னின்றேகித்
தெக்கணத்தா மானமதைச் சென்றெய்திச் சக்காத்தாம்
அண்ணலடி வீழ்ந்தான் அளவில்கண் ணீர்பெருக
எண்ணமுடன் வாழ்ந்தா னெதிர். (318)

உருப்பவிருந் தீயி னொளிப்ப வடுத்த
பொருப்பவிருந் தோளாற் பொருந்தித் திருப்பொலியும்
மார்புடையாய் நின்றன் வரவுரைத்துப் போற்றினேன்
சார்புடையான் தம்பிசிறந் தான். (319)

என்றுரைத்த மாருதியை ஏற்றிருகப் புல்லினான்
ஒன்றுரைப்ப தென்னை யுனக்கென்றான் குன்றிணைத்த
தோளுடையான் வள்ளல் துயரந் துறந்திருந்தான்
நாளுடையான் செய்நலத்தி னால். (320)

ஈடுற்ற வன்றனையி ராமன் திருவடியைச்
சூடுற்ற சென்னி தொழுதகான் உளடுயிரும்
உண்டோ வெனத்தா னுலந்துவரு யாக்கையினன்
கண்டான் விமானங் களித்து. (321)

Koviloor Digital Library

தோன்றும் பரதற் றெழுதடுத்துத் தொல்லறத்தின்
சான்றும்பர் போற்றுந் தனிமுதலே யீன்றான்
பகைவனைப்பா ரென்றான் பரிந்த வனுமான்
நகைவனப்பா நன்முகத்தா னன். (322)

காட்டத்தான் மாருதியும் கண்ணெடுத்துக் கண்டவண்ணல்
காட்டத்தான் செய்கைதனை நாடுங்கால் வாட்டும்
உயிரடுத்த தந்தை யொளியுருவங் கண்ட
வயமடுத்தான் சிந்தை நலிந்து. (323)

அவ்வயின யோத்தி யனகருட னக்ரோணி
தவ்வலிலாச் சேனைகளுந் தாயரொடு மிவ்வயினு
வந்தவரைக் காண்பனென வள்ளலுன்ன மானமது
வந்ததரை யண்டி மதித்து; (324)

எவ்வுயிர்க்கு நாத னிராம னிவர்ந்து வரு
செவ்வுயிர்க்கும் மானநிலஞ் சேர்தலுந்தா மவ்வவர்க்கு
வந்தணுகுந் தெய்வநிலை மான மெனலான
சிந்தைமகிழ் தந்த சிறந்து. (325)

தாயருக்குச் சார்ந்த தகைத்தாங் குழவியொத்தான்
மாயையுற்றார்க் காஞன் மனோலயமாய் ஆயிழையார்
கண்ணுளர்க்குப் பாவையொத்தான் காணு முயிரொத்தான்
எண்ணுளவர்க் கெல்லா மிசைந்து. (326)

எளிவந்த சீவர்கட்கங் கீன்றதர் யொத்தான்
அளிவந்தோர்க் காமமுத மானன் தெளிவந்த
நங்கையர்க்கு மிக்கஎளி நல்கு மதுவொத்தான்
செங்கமலக் கண்ணன் சிறந்து. (327)

ஆவியவ னனதனு லன்னு னுடனிங்க
மேவுநக ரங்கவன்று மென்மேலும் ஓவியந்தான்
நல்லுயிரைப் பெற்றதென நாடினர் நங்கையரும்
மல்லுயிர்க்கு மைந்தர்களும் வந்து. (328)

Koviloor Digital Library

சுண்ண மொடுசாந்துந் தோன்றுவளை முத்திஞெடு
வண்ண விலாழிமலர் மால்யானை நண்ணுமத
வாம்புன லு மோடி மறிகடலின் மேலோங்கித்
தாம்படிந்து நிற்குந் தகைந்து. (329)

அனையவரு மன்னதிற லாகியயர் வேலை
தனையளித்த தாயர்தம்பி தாமும் புனையவரு
நூன்முனிவ ன்ருனு நுனித்தவிமா னத்தேறத்
தான்முனிதான் வள்ளல்பணிந் தான். (330)

எடுத்தானி ராமனையன் றேற்ருசி கூறி
அடுத்தான் அணைத்துமிக்க அன்பால் விடுத்தவுடன்
தம்பிபணி யேற்ருன் தனித்தாசி கூறிஞன்
நம்பிபணி யேற்றவனன் ஞன். (331)

கைகையன்மான் ருளிற் கசிந்து பணிந்துமுனம்
மொய்குழலார் தாயர்தமை முற்பணிந்த அய்யன்
தனையாசி கூறித் தமகண்ணி னீரால்
புனைமாசு போக்கிஞர் போந்து. (332)

அன்னமுன்னர்ச் சொன்னமுறை யாக வடிபணிந்தாள்
தன்னிகரில் தம்பிவரத் தாயர்தங்கள் பொன்ஞர்
அடித்தலத்தின் வீழ அவரெடுத்துப் புல்லி
வடித்தாசி சொற்ருர் மகிழ்ந்து. (333)

சேவடிகள் தாமிரண்டு சேர்ந்த அடியுறையாய்ப்
பூவடியிற் சேர்பரதற் புல்லியே நாவிடையிற்
சொல்வளத்தான் தேருன் சுரர்பகை வராவிபொன்ற
வில்வளைத்தான் நின்ருன் வியந்து. (334)

தழுவிநின்ற மாமலைக்கண் தத்தருவி மான
விழுமலர்க்கண் வெள்ளத்தின் வீரன் வழுவறத்தான்
மாசுண்ட தாம்சடையின் மாலை கழுவியுச்சி
வாசமது செய்தான் மதித்து. (335)

Koviloor Digital Library

அனையதோர் காலம் அலர்பொற் சடையான்
வனையிந்தி ரற்கட்ட மாயன் தனையன்று
வென்றபரன் பாதுகைக்கி வேண்டி முடிதரித்தான்
மன்றசரண் வீழ்ந்தான் மகிழ்ந்து. (336)

மூவர்க்குந் தாமிளைய மூர்த்தி முகிழ்த்தகையன்
தேவர்க்குந் தேவன் சிறந்ததம்பி பூவர்க்கத்
தாளிற் பணிந்தான் தழுவி யவரணைத்தார்
வெளிற் சிறந்தார் வியந்து. (337)

பின்னிணையி னண்ணல் பெருந்தவத்தி னாற்சிறந்த
தன்னிணையில் தம்பியர்க்குத் தானேயா யின்னுயிர்போல்
வந்த துணைவர்களை வாழ்த்தியுடன் காட்டினான்
சந்தமலர்த் தாள்கள்பணிந் தார். (338)

குரக்கினத்து நல்லரசைக் கொற்றப் பனசன்
செருக்கிளரும் நீலன் திறத்தார் அரக்கருக்கு
வாய்த்த வரசை வரன்முறைதான் கூறிநின்றான்
ஆத்தன் பரதற் கறிந்து. (339)

மந்திரத்தா ரோடு வயங்கவருதானைத்
தந்திரத்தா ரோடுந் தமருடனே செந்திருத்தார்
மன்னவருஞ் சூழ்ந்தடுக்க வந்தான் சுமந்திரனும்
பொன்னவனைப் போலப் பொலிந்து. (340)

அழுகை யுவகை யமர்செய் தடுக்கத்
தொழுத சுமந்திரனைத் தோன்றல் தழுவிநிற்கத்
தம்பியரு மன்ன தகைத்தானார் மந்திரியும்
நம்பியருள் கொண்டான் நயந்து. (341)

ஏறுதலாம் சேனையெலா மேற்ற விமானமென
ஆறுதலான் கூற அடைந்தவெள்ளம் உளறும்
பாவை யெழிலியிடை பாங்காகு மாபோல்
விரவியெழும் வந்து விரைந்து. (342)

Koviloor Digital Library

உரைசெ யுலகமெலாம் உண்டா னுதரம்
கரைசெய் குறுமுனிகை காணு விரைசெய்யும்
புட்பகத்தைக் கண்டார் புகழ்ந்தார் சுராடுத்து
நட்பகத்தைக் கொண்டார் நயந்து. (343)

அசனிக் குழுவுடனே யாழியுமார்த் தென்ன
விசைமுரசு சங்கினொடு வேதம் இசைகுாலும்
எற்றடுத்துப் பொங்கி யிசைத்த வரவானோர்
மாற்றமுற்று மாற்று மருண்டு. (344)

அவ்வயினு மான மயோத்தி நகர்நோக்கிச்
செவ்வையின்மீச் செல்லல் செகமடந்தை இவ்வுலகத்
துள்ளோர்க ளிந்திரற்கே யேற்றவா மேலோரென்
றுள்ளாகிக் காட்டலுவக் கும். (345)

ஆன அளவைதனி லந்தரத்தார் கோனுடனே
வானோர் திருநகரம் வந்ததென மேனிறைந்த
பண்ணவர்கள் பூமழையாற் பாங்கடுத்த புட்பகந்தான்
மண்ணவர்கள் போற்றவந்த வாம். (346)

மீட்சிப் படலம் முற்றிற்று.

திருமுடி சூட்டு படலம்.

நம்பி பரதனொடு நந்திப் பதியைநண்ணி
வம்பலரும் பொற்சடையை மாற்றினார் தம்பியரும்
தாங்குநன்மை செய்யுந் தரத்தாற் புனல்படிந்து
பாங்குநன்மை செய்தார் பரிந்து. (1)

பிருதித் திசையுற்ற நேயநகர் நீங்கி
மருவும் அயோத்தி வரற்காச் சுருதியொத்த
வெள்ளை சிறந்த விசயப் பரித்தேர்மேல்
வள்ளல் சிறந்தான் மகிழ்த்து. (2)

Koviloor Digital Library

ஊழிவரக் காணு முயர்வுடைய பொற்றேரின்
ஏழுயர்மா வன்ன விலக்குமணன் வாழ்கவிகை
மேலெடுக்க மால்கவரி வீரனெடுக் கப்பாதன்
கோலெடுக்க வந்தான் குறித்து. (3).

வீடணனு மற்றை விசையவான் சுக்கிரிவன்
கோடணையும் பொற்றை குலவிவரத் தோடணைதார்
அங்கதன்முன் செல்ல அனுமான் வரவந்தான்
செங்கமலை நாதன் சிறந்து. (4).

ஆறுபத்தேழ் கோடி யமைந்த படைத்தலைவர்
வீறுபெற்ற யானைகளின் மேவினர் தேறலுற்ற
தாரடுத்த மார்பர் தகைமையுற்ற மானுடராய்ச்
சீரடுத்து வந்தார் தெரிந்து. (5).

எட்டினொடு பத்தமைந்த வேற்றமிகு பூமிமன்னர்
பட்டமுற்ற யானை பருந்தேரார் வட்டக்
குடையினொடு சாமரைகள் கொண்ட தாத்தார்
படையினொடு வந்தார் பரிந்து. (6).

வானரத்தார் பெண்களெலாம் வானவர்க்காம் பெண்களென
ஊனமற்று மெண்பிடிமா வூர்ந்துவந்தார் மீனினந்தா
மாமதியைச் சூழ்ந்ததெனை மாதர்வர மானமிசை
தாமதியாய்ச் சானகிவந் தாள். (7).

தேவரொடு மாமுனிவர் சேர்ந்து திசைசிந்தும்
ஓவலிலா மாரியென வோங்கவே பூவலர்தாம்
வேறுமுல கெங்கும் விளங்குதலாற் பூவுலகாய்க்
கூறுமுல கென்பர் குறித்து. (8).

கோடைகொண்ட மேகமெனக் கூறுபதி னொலாண்டு
பாடுகொண்ட மாமதயில் பாயானை காடுகொண்ட
அண்ணலெய்த மாமதந்தான் அண்டி மிகப்பொலிந்து
கண்ணலெய்தும் நாட்டம் நயந்து. (9).

Koviloor Digital Library

ஆரகத்தார் மேற்கலித்தல் தூய வெழிலி
அரவத்தா மென்ன அலைக்கும் மாமுற்றும்
பூத்த பருவமெனப் பொன்னூர் பசலைகொண்டார்
ஏத்து மடவா ரிசைந்து. (10)

ஆய விரைவி னயோத்தி தனையண்மித்
தாய ரிறைமுனியைத் தாழ்ந்தருளி நாயகமாம்
கோயிலெய்திப் பூமகளும் கோல மலர்மகளும்
தாயிலெய்தக் கண்டான் தனித்து. (11)

வாங்குந் துயிலின் மனமின்றிப் பல்காலும்
தாங்கும் புருடரொடு தையலரும் வீங்குவகை
சார்ந்துவரு தன்மையினாற் றூங்குந் துயிலதுதான்
சோர்ந்துவருந் தன்னறியா து. (12)

வேசியர்கள் கொண்டவுடை வேதியர்கள் சுற்றமுற்றும்
பாசிழையா ராடைமுன்னோர் பாங்குகொள்ள வாசக்
கலவைமுதற் பூசினவர் காணு திரட்டி
இலகுமில்லார் மேனி யெடுத்து. (13)

விண்ணடுத்தார் தெய்வ வெறியடுத்து வேறடுத்த
மண்ணடுத்தார் மேனி மணத்தலினாற் பண்ணடுத்த
மாதர்க்கும் பூவார் மடந்தையர்க்கு மூடலது
மீதுற்ற தாகும் விளைந்து. (14)

ஆயவளத் தண்ண லமலன் பாதற்குத்
தூயவள வீடணமால் சூரன்சேய் மேயவரை
நம்முடைய வில்வளத்தை நன்றடுத்துக் காட்டவென்றான்
தெம்முடைய வில்வளைத்த தே. (15)

என்றவுடன் வள்ளலடி யேற்றி வார்களொடுஞ்
சென்றவுடன் பன்மாடச் செல்வமெலா நன்றுகண்டு
தேவரொடு பூமகளும் சேர்ந்துறைசெய் குன்றெனவாம்
காவல்பரன் கோயிலிற்புக் கான். (16)

Koviloor Digital Library

வயிரமொடு மாணிக்க மன்னு மணிகள்
செயிரறவாம் பொற்சுடர்கள் சேர உயிர்துளக்க
மிஞ்சுஎத்தி னுங்களியால் மேவு மிமைப்பிலராம்
மஞ்சுஎத்தைக் கண்டு மகிழ்ந்து. (17)

விண்டார மார்பின் விளங்கு மணியெனவாய்க்
கண்டார மரபரதன் கட்டுரைப்பான் கொண்ட
இசைமுகத்தான் இக்குவா கேற்ப வளித்தான்
திசைமுகத்தா னென்றான் தெரிந்து. (18)

பங்கயத்தான் முன்னம் பரிந்தளித்த தாகுமெனின்
சங்கையத்தந் தாங்குந் தனித்திருவே யிங்கிருக்கும்
போற்றுஞ் செயற்காம் பொருத்த மெனத்துதித்து
மாற்றுஞ்செய் மண்டபத்தார் மற்று. (19)

அரதனமின் மாடமதை யண்மியகத் தெண்ணிப்
பரதனையன் பால்வணங்கிப் பார்த்தா னிரவிமகன்
கண்ணற்குச் சூட்டவருங் காப்புநாள் தன்னையின்னே
எண்ணற்கு நாட்டமிலா தென். (20)

எழ்கடலின் றோய மிருநதிக ளின்றீர்த்தம்
தாழ்விலவாய் வந்தெய்தத் தாழ்ந்ததென ஆழியென்றின்
மைந்தனண்டி வந்தின் மகன்வதனம் பார்த்தவுடன்
சிந்தைகொண்டு சென்றான் தெரிந்து. (21)

கோவினன்றும் பொற்கணிதர்க் கொண்டுவர வென்றவுரை
எவினன்றேர் வல்லார்க் கிசைத்தவுடன் பூமகன்சேய்
மாதவன்வந் தெய்த வரத னடிபோற்றிப்
போதவன்றான் கொண்டார் புகழ்ந்து. (22)

அரியணையை மாபரத னுக்க வதினும்
பெரியவனை நோக்கிப் பெருபூ வுரியமகள்
நன்மையான் நாதனிடை நண்ணு வதற்குரிய
தன்மைநாள் சாற்றென்றான் சார்ந்து. (23)

Koviloor Digital Library

பூமகன்சேய் சொல்வான் புனிதன் றனை நோக்கி
மாமகளும் பூமகளும் வாழ்வுபெறக் கோமகனும்
வேளையொத்த வீரன் விரும்பி யுலகாள
நாளையொத்த நாளென்ற னன். (24)

இந்திரன்றன் நற்குருவு மேனை யவர்போன்ற
மந்திரத்தி னோர்க்கும் வரைந்துவிட்டார் சந்திரன்போற்
றாங்குகுடை நாதன் தசரதரா மன்மோலி
தாங்குகொடை நாளைத் தரித்து. (25)

அடுக்குலக மூன்று மடற்றூதர் கூவ
வடுக்கு மயோத்திவந்தா ரென்றால் ஒடுக்கமிலாக்
கம்பலைதான் சொல்லக் கடுக்குமோ நான்முகற்கும்
கம்பலத்தாற் சொல்வதெங்ங னம். (26)

அவ்வயினும் மாமுனிவ னண்ண லருக்கன்சேய்
செவ்வையினும் சாம்பன் திறலரக்கன் எவ்வமிலா
அங்கதனும் வீரருட னய்யனிடை வந்துரைத்தான்
மங்களமாம் நாளை மதித்து. (27)

நாளை மவுலிபுனை நன்மை தருநன்னாள்
காளை கிரிச்சங் கழித்திடென்றான் வேளைப்
பொடியா விழித்தநுதற் புங்கவனைப் போலும்
நெடியான் முனிவ னினைந்து. (28)

நான்முகத்தா னேவ நயத்தமய னென்றேனும்
நூன்முகத்தான் வந்து நுனிப்பரிதாய் வான்முகத்தாம்
இந்திரன்றன் பொற்சபைக்கு மேற்ற மளித்ததுவாய்ச்
சந்திரன்முன் பொற்பினளித் தான். (29)

சூழ்கடலிற் றோயம் துலங்கு மெழுவகைத்தாம்
ஆழ்கிணறு சேறாற்றோ டமைந்தவெலாம் தாழ்வின்றித்
தந்தானுன் முந்தனுமான் தந்தையெனும் வந்தினிலு
மைந்தானுன் சிந்தை மகிழ்ந்து, (30)

Koviloor Digital Library

எற்றிசையாம் பொற்குடங்க ளெண்ணுமிபத் தேற்றிமன்னர்
நாற்றிசைசூழ் பூங்குடையார் நண்ணினர் தோற்றமியம்
காகளங்க ளார்ப்பக் கவினும் சரயுநன்னீர்
வாகுளங்கொண் டுய்த்தார் வரைந்து (31)

மாணிக்கத் தாம்பலகை மாவயிரக் கால்சேர்த்தி
ஆணிப்பொ னுச்சி யமைதவிசின் எனுற்ற
பொற்பளிக்கு மாடமதிற் பொன்னுடனே வீற்றிருந்தான்
வெற்பளிக்கு மாடநகர் வேந்து. (32)

மங்கலங்கள் பாட மறையொலிக்க வான்முழவம்
சங்கலம்பச் சார்ந்தவியந் தாமொலிப்பக் கொங்கலர்தார்
நாயகனைத் தேவர் நலத்த வபிடேகம்
நேயமொடு செய்தார் நினைந்து. (33)

மாதவர்கள் மாமறையோர் மந்திரத்தார் மற்றுமுள
மூதறிஞர் மூத்தோர் முதலாட்டச் சோதியான்
தன்மகனும் பொன்னிலங்கை சார்வேந் தனுமனும்பின்
மன்னபிடே கம்புரிந்தார் மற்று. (34)

மரகதத்தா மன்னுமலை மாமலர்கள் பூத்துத்
திரைகெழுகங் கைத்திவலை சேர்ந்து விரைகுழலார்
மங்கையொன்ற வீற்றிருக்கு மாமகிழ்ச்சி கண்டவர்கள்
பங்கமின்றித் தீர்வார் பவம். (35)

தெய்வநீ ராடற் செயல்வதிட்டன் செய்தடுக்கத்
துய்ய சுமந்திரனுந் தோன்றலுடன் செய்யவர
மந்திரியர் போற்ற மறைச்சடங்கி னன்மையெலாம்
செந்திருவார் செய்தார் சிறந்து. (36)

மன்கோட்டை யூரான் மகுட தனவசியன்
பொன்கோட்டு முத்தையா புண்ணியச்சேய் தென்கோட்டும்
தண்டா ரிராமவள்ளற் சார்ந்தமுன்னோர் தந்தமௌலி
கொண்டான் வதிட்டன் குறித்து. (37)

Koviloor Digital Library

அரியணை தாங்கும் அனுமான் அங்கதன்வா ளேந்தப்
பரதன் குடைகவிக்கப் பாங்கா மிருவர்களு
மாகவரி வீச மவுலிபுனைந் தான்வசிட்டன்
மாகவரி போற்ற மகிழ்ந்து. (38)

வெள்ளியுடன் பொன்னும் விதிமுறையைக் கொண்டடைந்த
வொள்ளியநாள் தன்னி லுலகமெலாம் கொள்ளுநிலை
மாமோலி சூடினான் மாபூமி யென்றிவர்கள்
பாமாலை சூடும் பரன். (39)

சித்தமொத்தார் போற்றவரு தெய்வநகர்ச் செல்வமுன்ன
உத்தமத்தான் சென்னி உயர்மவுலி வைத்ததுதான்
நித்தமென மூவுலக நேர்ந்தவரர் தத்தமுச்சி
வைத்ததெனக் கொண்டார் மகிழ். (40)

பன்னெடுநாள் நோற்ற பலனாற் றனக்கேற்ற
மன்னெடுநா தன்பிரிய மாழ்கினாள் தன்னெடிய
தாமகனை நீங்கத் தழுவினாள் கைநீட்டி
மாமகனைப் பூவா மகள். (41)

விரதமுனி சொற்ற விதியதனை நோக்கி
வரதனிளை யோர்க்குமுடி வைத்துப் பரதனைத்தன்
செங்கோலைத் தாங்கும் திருவளித்து வீற்றிருந்தான்
பொங்கோலப் பாற்கடலான் போந்து. (42)

திருமுடி சூட்டு படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

விடை கொடுத்த படலம்.

பூமகட்கு மாமை பொலிபசும் பொன்சேர்த்தி
மாமணித்தூண் செய்தமணி மண்டபத்தின் கோமணியார்
பொற்சிவிகை மீது புகழ்கொண்டல் மின்னுமென
மற்புயத்தான் வந்தான் மகிழ்ந்து. (1)

விரிகடலிற் பூத்தவெழின் மின்போலு மாரம்
எரிகதிரைப் போன்மகுட மேய்ப்பக் கருமுகில்தான்
செந்தா மரைபூத்துச் சேர்ந்ததென வீற்றிருந்தான்
சந்தார் மறைப்பொருளா தன். (2)

மரகதமாம் மாமலையின் வாணிலா வென்ன
இருகுழையார் வேற்க ணிளையோர் கரகமலம்
பூத்தகவர் சாமரைதாம் பொற்பச் சிறந்திருந்தான்
நாத்தகவான் மேலான் நயந்து. (3)

நல்லுலகத் தென்றும் நகைநிழலைத் தாம்புரிதல்
சொல்லுவதென் சந்திரனேர் தோன்றுகுடை தொல்லை
அரக்கர்கோன் றன்னை யடும்புகழ்மீ தேறி
விரிக்குமென வீற்றிருந்தான் வேந்து. (4)

மங்கலம்பல் கீதமுடன் மாமறையோ ராசிசொலச்
சங்கலம்பத் தண்ணுமைக டாந்தெழிப்பப் பொங்கு
மியங்கலிப்ப மங்கையர்க ளேற்றநடஞ் செய்ய
வயம்பலிப்ப வீற்றிருந்தான் மன். (5)

திரைமருவு செங்கதிர்போற் சேர்மகுட கோடி
கரைதெரியாச் சோதிவெள்ளங் காட்ட வரைமருவு
மாடமுற்ற வாயில் வுரைந்து நெருக்குமன்னர்
தாடோழத்தான் சேக்கவிருந் தான். (6)

Koviloor Digital Library

மந்திரியர் சுற்றம் மறையவர்கள் வாழ்த்தெடுப்பத்
தந்திரியர் தம்பியர்கள் சார்ந்துவர விந்திரற்குத்
தானுவமை யேய்ப்பத் தசரதரா மன்கொலுவிற்
பானுவென வீற்றிருந்தான் பாங்கு. (7)

மயிந்தன் துமிந்தனொடு மற்றடுத்த கும்பன்
சயந்தன் சதவலிமான் சாம்பன் நயந்துவரு
சங்கத்தாம் வானரர்கள் சார்ந்தறுபத் தேழ்கோடி
அங்கத்தார் போற்றவமர்ந் தான். (8)

தேனரற்றுந் தாரான் சிறந்த பெருந்தகையான்
வானரத்தார் மன்னன் வணங்கிநிற்ப வேனை
அரக்கருளா ரண்ண லருளறிந்து போற்றத்
தரக்கருணை வீரனிருந் தான். (9)

வெற்றிப் படையான் வெறிப்புலியின் வெவ்வாலைச்
சுற்றிப் படைத்துச் சுழல்கண்ணன் கற்றிரண்ட
தோளுடையான் தூயகுகன் தோன்றித் துதிக்கநின்றான்
ஆளுடையான் வீர னறிந்து. (10)

வள்ளலவர் தம்மேல் வளமுற்ற காதலினால்
உள்ளமுவந் தாங்கருணை யோங்கவே தெள்ளுபுகழ்
வீரரெலாம் வீற்றிருக்க வென்று கருணைமொழி
சீரெழிலி சொற்றான் சிறந்து. (11)

நன்னெறிசார் சான்றோர் நயந்த மறைக்கிழவர்
சொன்னெறியார் நற்புலமை தோன்றுவரர் பன்னெறியிற்
றொன்றுதொட்டுத் தோன்றும் அதிசே ரரசருடன்
வென்றிநட்டு வீற்றிருந்தான் வேந்து. (12)

தேம்பணையார் செல்வத் திருநகர யோத்திவந்த
பாம்பணையான் பாதம் பணிந்தவராய் வாம்பரவை
ஞாலத் தவர்களிக்க நாட்டு மிரண்டுமதி
சாலத் தவழ்ந்ததுபின் தான். (13)

Koviloor Digital Library

நேர்ந்தறத்தார் வாழ்த்த நிகரி லயோத்திவந்து
சார்ந்தரக்கர் தாழ்த்த தனிவில்லான் ஏந்துபுகழ்ச்
செய்யா னமர்ந்த திரற்புயத்தான் செய்ததனை
உய்வா மகிழ வுரைத்து. (14)

மறையவர்கட் கெல்லா மணிமுத்தும் பொன்னும்
நிறையவளப் பூச்சுரபி நேயம் குறையிதென்று
கேட்டோர்க்கு மீந்து கிருபைக் கடல்வரதன்
வேட்டோர்க்கு மீந்தான் விழைந்து. (15)

அய்யன் அரசர்தமை அன்பார்ந்த நோக்கமுடன்
வையம் நறுஞ்சிவிகை மாமணிப்பூண் கொய்யுளைமா
மாபரித்தேர் யானை வளமா யளித்துவிடை
மாபரித்தான் தந்தான் மகிழ்ந்து. (16)

சம்பரனை வென்று தயரதமால் சார்காலை
உம்பர்மன்ன னீந்த வொளிக்கடகம் கொம்புடைய
மாமலைத்தேர் மாமுதல மார்த்தாண்டன் சேய்க்களித்தான்
மாமலைத்தேர் தார்ப்புயத்து மன். (17)

அங்கதமில் கொற்றத்தா னண்ண லகிலமெலாம்
அங்கதனென் பேரை யழகுசெய்வான் அங்கதமுன்
இக்குவா கென்னு மிறைக்கயனுற் றந்ததனைத்
தக்கவா கென்றுகொடுத் தான். (18)

பின்னுமவற் கையன் பெருவிலையா ரத்தினொடு
வன்னமுற்ற தூசு மதமலைமா பொன்னளித்தான்
உன்னையொப்பா ரில்லா யுயர்கதிரோன் சேயுடனே
மன்னையொப்பா யென்றான் மகிழ்ந்து. (19)

மாருதமன் சேயை மகிழ்ந்தினிது நோக்கிவள்ளல்
ஆருதவி செய்வார்நின் னுண்மையலா னேருதவி
செய்யவுண்டோ விந்தை சிறந்தணைக்க வாவென்றான்
வையமுண்டோன் சிந்தை மதித்து. (20)

Koviloor Digital Library

என்றவுட னணி யிகலோன் வணக்கமுடன்
நின்றவனை வென்றிவா னோர்நோக்கிப் பொன்றிணிந்த
மாவயிரப் பூணும் வளமுடைய மென்றூசும்
கோவயிரன் தந்தான் குறித்து. (21)

பூமொழிமா பூமருவிப் பொன்மிதிலை பூத்துவந்த
தேமொழிமா நாதன் றிருநோக்காற் பாமொழிவாள்
தந்தமுத்து மாலைதனைத் தந்தளித்தாள் வந்துதனக்
கந்தமுற்ற தாக்கு மவற்கு. (22)

சந்திரனைச் சேர்ந்துவரு தாரகைக ளாமென்னச்
சுந்தரஞ்சேர் முத்தாரந் தோய்கலன்கள் கந்தடர்க்கும்
யானைபரி தேர்முதல யாவுமளித் தான்சாம்பன்
மானவரன் சிந்தை மதித்து. (23)

நவமணியு முத்து நறுமாலை தூசும்
உவமையற்ற யாவு முவந்து பவனன்
தனக்கினிய நண்பன் தனக்கினிய மைந்தன்
தனக்கினிதாய் வள்ளலளித் தான். (24)

பதவலிமைப் பைந்தார்ப் பரிபணைத்திண் கோட்டு
மதவலிமை யானையொடு மற்றும் சதவலியாம்.
வீரற்குத் தந்தான் விமலவர னைப்படைப்புச்
சாரர்குத் தந்தவர தன். (25)

பேசரிய நன்மைப் பெருவிலையி னுமிழைகள்
ஆசரிய யானைபரி யாவ்முதல கேசரியாம்
நன்மையுற்ற வீரற்கு நாட்டமுட னளித்தான்
விண்மையுற்ற வீரன் விழைந்து. (26)

வளனணியும் பூவும் மதகளிறு மாவும்
நளன்குமுதன் தாரனொடு நண்பர்க் குளமகிழத்
தந்தளித்தான் வீரன் தனகனக வாகனங்கள்
கொந்தளித்த தாரும் குறித்து. (27)

Koviloor Digital Library

அவ்வகையி னறுபத்தேழ் கோடி யரிவேந்தர்க்
கெவ்வகையு நல்கி யிதங்கூறிப் பவ்வமெனும்
வானரத்தாம் வீரர்கட்கு வாழ்வளித்தான் பூவளித்து
வானறத்தாந் தேவர்மகிழ் வான். (28)

மின்னு மவுலிகொண்ட வீடணனும் பீடுடையான்
தன்னை வரனோக்கிச் சாருமன்பால் கின்னையொப்பார்
எவ்வுலகி னுண்டென் றிசைத்தான் கருணைவள்ளல்
தெவ்வுலகிற் றீய்க்குந் திறன். (29)

என்றுரைத்துத் தேவர்தர யேற்ற மணிக்கடகம்
வன்றிறத்த மாகரிகள் மற்றுமூன பொன்றரித்த
வாசமலர் சாந்தம் வரைந்தளித்தா னன்பரிடம்
நேசமலர் காந்தன் னினைந்து. (30)

சிருங்கிபுர மென்ற செழுநகரத் தானை
மருங்குரைப்ப தென்றுணைவர் மாட்டென் றருங்கனகம்
மாமணித்து சாமிழைகள் மற்றுங் களிறுபரி
தாமளித்து மேல்விடைதந் தான். (31)

அனுமானை யங்கதனை யண்ணல்சுக்கி ரீவ
மனுமானைச் சாம்பவனை வள்ளல் நினைவான
நும்மையுற்று நீங்கல் நுவலரிதாம் நும்மவெலாம்
எம்மையுற்ற தென்று னெடுத்து. (32)

இலங்கை யரசற்கு மிவ்வகையே கூறி
அலங்க லரச னருள நலங்கொண்ட
பேரறிவார் சிந்தை பிறழாது வள்ளல்மொழி
சீரறிவா மென்றார் தெரிந்து. (33)

பரதனிளங் கோவைப் பரமார் முனியைச்
சாதமிகு தாயர்தமைத் தாழ்ந்து வாதமிக்க
சானகியார் தான்பணிந்து தக்கவிடை கொண்டுசென்றார்
வானகரார் போற்றும் வலர். (34)

Koviloor Digital Library

குகனைப் பதிவிட்டுக் குன்றைவலங் கொள்வான்
மகனைப் பதிவிட்டு மன்னும் ககனத்தின்
எய்தி யிலங்கையுற்று னேழுலகு மேற்றவென்றும்
மெய்திகழும் வீடணனும் வேந்து. (35)

அய்யனவர்க் காக்கம் அருளித் துணைவரொடும்
வையகலச் செங்கோன் மனுமுறையாற் செய்யசிந்தை
மாமகளும் பூமகளும் வாழ்வுதரு நேயமுறக்
கோமகிழக் காத்தான் குளிர்ந்து. (36)

உம்பரோ டிம்ப ருலகமோ ரேழுடனேழ்
எம்பெருமா னென்றிறைஞ்சி யேவல்செயத் தம்பியர்கள்
போற்றப் புரந்தான் புராதனர்கள் போற்றறத்தை
ஆற்றப் பிறந்தா னறிந்து. (37)

இராவணனை வீட்டி யிராமனு நாட்டும்
தராதலத்தைக் காத்த தகைசேர் பராபரத்தைச்
சிந்தைசெய்வோர் தேவர்க்கும் தேவராய் வாழ்வரெனச்
சந்தைசெய்யு மாமறைகள் தாம். (38)

அண்டர்தமைப் போற்ற அவனிவந்து பேரரசாய்
அண்டர்தமை மாற்று மரிராமன் புண்டரிகப்
பாதத்தைப் போற்றப் பரிந்தன்பு கொண்டவர்தாம்
சாதத்தைப் போற்று தவர். (39)

போதத்தா ருள்ளே பொருந்திப் புரந்தருள்வான்
பேதத்தா ருள்ளே பெறற்கரியான் சீதத்தார்
மார்புடைய வள்ளல் வரசரணந் தஞ்சமென்றாற்
சார்படையா னேமன் சதித்து. (40)

தாசரதி வள்ளல் தறுவாண்மை கூறநின்ற
மாசரிதங் கூறும் வரத்தார்தாம் பேசரிதாம்
கல்விக்கு வித்தாய்க் கலக்கிவரு சஞ்சிதத்தை
வெல்விக்கும் சித்தாம் விரும்பு. (41)

Koviloor Digital Library

மாமுனிவன் வேள்வி மடித்த வரக்கர்தமைத்
தாமுனிவ னாகியடு தற்பரன்றன் மாமுனியாத்
தாமரையா மன்றல் சரணம் பரமென்றல்
மாமறையா மென்றார் மதித்து. (42)

இம்மைக்கு நல்வளத்தை யீந்து பரமாகி
அம்மைக்கு நன்மை யருள்வள்ளல் செம்மைக்
குருவடிவாய் நின்று குறித்தருளை நல்கும்
திருவடியாய் வாழி செழித்து. (43)

விடைகொடுத்த படலம் முற்றிற்று.

ஆக படலம் 38—செய்யுள் 4084.

உயுத்தகாண்டம் முற்றிற்று.

ஆக காண்டம் ஆறுக்கு செய்யுள் 9379.

அண்ணாமலையார் துணை.

Koviloor Digital Library

பிழை திருத்தம்.

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
12	16	1	மாலர்கள்	மாமலர்கள்
15	1	4	மதிக்கின்றவர்	மதிக்கினவற்
21	28	2	முதற்தேறவர்	முதற்றேவர்
40	5	3	படக்கருதி	படக்கருகி
41	12	4	லுள்ளிக்கல	ளுள்ளிக்கல
48	21	2	மறைப்போருளாம்	மறைப்பொருளாம்
52	25	4	மோலோர்	மேலோர்
66	25	4	தாரைவெல்லவ	தாரைவெல்வ
80	62	2	ணீக்க	னீக்க
103	37	3	கழ்கள்	கழல்கள்
105	49	1	மன்னினைஞர்	மன்னிளைஞர்
112	27	4	வினைக்க	விளைக்க
122	36	2	முன்செய்	முன்சேய்
135	41	1	சொற	சொற்
149	62	4	சர்ந்த	சாந்த
160	39	2	ளினியுன்	னினியுன்
181	185	1	நாதன	நாதன்
202	56	3	தான்	தாள்
204	4	1	மழைமயிலும்	மழைபயிலும்
222	45	3	சாய்தது	சாய்த்து
233	124	3	வீனறளித்த	வீன்றளித்த
240	37	3	புனலைங்	புனலைக்
268	1	2	தோனறு	தோன்று
269	10	2	கோளுமுவை	கோளுழுவை
271	24	2	தோற்ற	தேற்ற
289	57	2	வண்ணண	வண்ணன்
315	135	2	னென்கின்ற	னெகின்ற
326	70	4	வீழந்த	வீழ்ந்த
335	136	2	கொங்கையினை	கொங்கையிணை

Koviloor Digital Library

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
339	125	1	மாயமவர்	மாயவமர்
355	63	1	சமகில்	சமரில்
ஷை	66	1	துபைப்ரடா	துரைப்பா
366	172	2	வுற்றுபுயிருந்	வுற்றுயிருந்
369	187	3	நுகர்லாரை	நுகர்வாரை
ஷை	193	3	தோச்சிக்கு	தேர்ச்சிக்கு
395	123	1	திண்டை	திண்டே
399	155	3	வந்தவிழி	வந்தவழி
402	172	2	மறையக்	மறையச்
411	11	3	காற்றும்	காற்றும
414	32	4	சென்றுளொன்	சென்றுரொன்
415	42	4	லெதிர	ளெதிர்
429	40	1	நீமுயலுக்	நீமுயலுங்
446	10	2	யொவ்வர	யொவ்வா
484	110	4	கொல்விலஙகு	கொல்விலங்கு
500	17	2	ளெல்ளரிதாய்	ளெள்ளரிதாய்
503	36	1	மாலையேன	மாலையென
504	44	2	கிழவியிசை	கிளவியிசை
521	51	1	இணைய	இனைய
537	25	3	மலர்க்	மலர்ச்
552	16	4	செயித்து	செயிர்த்து
570	11	3	குற்ற	ருற்ற
573	29	1	உண்ணை	உன்னை
574	36	2	வெலரக்க	வேலரக்க
593	74	3	ளார்த்துக்தி...... ளயங்கார	ளார்த்துக்கதித்.... ளங்கார
594	80	4	ணடர்த்து	னடர்த்து
599	22	4	தலைக்கா	தணக்கா
616	137	2	இந்திரங்றுன்	இந்திரன்றுன்
618	151	4	முடல்	மூடல்
ஷை	153	4	லெந்து	லெந்த
620	167	3	ஞெணிபாற்	ஞெளிபாற்
624	199	4	மெண்றுன்	மென்றுன்
656	27	2	ருறுக்கு	குறிக்கு

Koviloor Digital Library

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
669	4	3	புகலோன்	புகலேன்
670	9	2	ரந்தமிலி	அந்தமிலி
672	26	3	கொண்டான்	கொண்டாள்
677	58	1	இணையு	இனையு
692	26	3	குடமுடையார்	குடலுடையார்
701	22	2	ரக்கர்	ராக்கர்
௸	26	2	மிழந்த	டிழந்த
727	34	3	புகை	நகை
734	23	1	யிறுது	யிறுதி
738	52	4	விழித்தாரை	விழித்தாரை
741	68	1	நோன்மையிவான்	நோன்மையிலான்
750	132	2	யாற்பியன்ற	யற்பியன்ற
௸	௸	3	கற்பினல்ந்	கற்பினலந்
753	11	1	யுள்ளூ	யுள்ளு
756	33	1	வில்னு	வில்லு
௸	36	3	பாடித்தீரப்	பாடித்தீப்
757	38	1	மொலிவாம்	பொலிவாம்
768	59	1	யணித்த	யளித்த
781	40	2	ெறுங்கத்	ேறுங்கத்
799	44	1	முதுநான்	முகநான்
802	68	2	சரங்ந	சரங்க
805	88	4	வனைகி	வகி
830	87	2	நினைதன்	நினைந்தன்
833	106	2	பெருது	பெருத்து
834	116	4	மாநகாரந்	மாநாகந்
௸	118	1	வன்றெு	வன்றே
840	3	1	மாரத்தி	மாத்தி
842	15	4	வன்பினனித்	வன்பினளித்
843	26	4	யெடுத்ததாம்	யெடுத்தாம்
845	39	1	முணிவர்	முனிவர்
864	15	4	ஞட்டு	ஞட்டு
865	20	2	பாந்தன்	பரந்தன்
882	9	4	மிய்பு	மியைப்பு
884	25	2	பொந்த	பொருந்த

Koviloor Digital Library

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
888	4	1	பூமைந்தின்	பூதமைந்தின்
896	18	[illegible]	[illegible]	பிளர்ந்து
898	30	4	வீழத்தி	வீழ்ந்தி
904	21	1	மியை	மிமை
918	48	1	ஞெக்கி	ஞேக்கி
921	68	4	தொள்கை	கொன்னகை
940	201	1	மோலோனை	மேலோனை
950	29	4	[illegible]கும்	லடுக்கும்
961	37	1	லெல்வார்	வெல்வார்
962	43	3	கினையா	கிணையா
955	65	3	கொலும்	கோலும்
1014	36	4	வேப்பேன்	வைப்பேன்
1020	78	3	லிவன்	விவன்
1023	99	3	நீதத்ம்	நீத்தம்
1068	170	1	கோடிகளை	கோடிகணை
1131	199	2	மூன்ற	மூன்ற
1135	12	2	யொருந்த	பொருந்த
1149	77	4	ராவனையை	ராவணையை
1153	108	2	தேவர்	சீதக்
ஷை	ஷை	3	சீதக்	தேவர்
1156	12	4	விரனின்	விரவின்
1163	42	2	ஒருன்றும்	ஒனென்றும்
1190	136	4	மெங்கனுடனும்	மெங்களுடனும்
1204	8		றேறுதியாங்	றெறுதியாங்
1205	17	2	ரோர்தலை	றொர்தலை
1213	11	4	தரிராதவர்	தவிராதவர்
1231	89	1	புங்கமுரு	புங்கபிகு
1263	15	2	வென்ரமரர்	வென்றமரர்
1266	36	4	வென்றுயர்க்கு	வென்றுயர்க்குஞ்
ஷை	40	1	மகோத்தியார்	மகோததியார்
1309	41	4	யைபாலை	யைம்பாலை

கோவிலூர் ஆதீனம் ...-6-...